ஸ்ரீமத் பாகவத ஸாரம்

॥ श्रीमद्भागवतसारः ॥

இரண்டாம் பாகம்

''பிரம்மஸம்ஸ்பர்சம்'' என்னும் உரையுடன் கூடியது

உரை ஆசிரியர்

'' அண்ணா ''

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

மயிலாப்பூர் :: சென்னை - 4.

ஸ்ரீமத் பாகவத ஸாரம்

॥ श्रीमद्भागवतसारः ॥

"பிரம்மஸம்ஸ்பர்சம்" என்னும் உரையுடன் கூடியது

இரண்டாம் பாகம்

(ஸப்தாஹக்கிரமத்தில் ஐந்து, ஆறு, ஏழாவது நாட்களின் கதை)

உரை ஆசிரியர்

"அண்ணா"

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

மயிலாப்பூர் : : சென்னை-4

இது சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துத் தலைவரால்
பிரசுரிக்கப்பட்டது.

முதல் வெளியீடு 1966

I–MMCC - 12 - 1966

விலை ரூ. 12-50

இது சென்னை பீரீடம் பிரஸ்ஸில் அச்சிடப்பட்டது.

ஸ்ரீமத்பாகவத ஸாரம்
இரண்டாம் பாகம்

பொருளடக்கம்

பக்கம்

குறிகளின் விளக்கம் v

ஐந்தாவது நாள் கதை (10.7—10.54)

ஸ்கந்தம் 10—தொடர்ச்சி

21. கோகுல லீலை—சகடபங்கம்—திருணவர்த்த வதம்—நாமகரணம்—விசுவரூபதரிசனம் — யமளார்ஜுன விமோசனம் — பிருந்தாவன யாத்திரை. அத். 10.7—10.11. 3

22. பிருந்தாவன லீலை—(1) வத்ஸாசுரவதம் — பகாசுரவதம் — அகாசுர வதம்— வத்ஸாபஹாரம் — காளீயதமனம் — பிரலம்பாசுரவதம். அத். 10.11—10.18. 22

23. பிருந்தாவன லீலை—(2) ருதுவர்ணனை — வஸ்திராபஹரணம் — யஜ்ஞ பத்னீ உபாக்கியானம் — கோவர்த்தனோத்தரணம். அத். 10.19—10.28. 48

24. பிருந்தாவன லீலை—(3) ராஸக்கிரீடை. அத். 10.29—10.33. 78

25. பிருந்தாவன லீலை—(4) அக்ரூராகமனம். அத். 10.34—10.41. 98

26. மதுரா லீலை—(1) கம்ஸவதம் — தாய்தந்தையரை வணங்குதல் — உக்ரஸேன பட்டாபிஷேகம்-குருகுலவாஸம். அத். 10.42—10.45. 114

27. மதுரா லீலை—(2) உத்தவர் தூது—அக்ரூரரை ஹஸ்தினபுரம் அனுப்புதல்—ஜராஸந்த யுத்தம்—முசுகுந்தஸ்துதி. அத். 10.46—51. 130

28. துவாரகா லீலை—ருக்மிணீ கல்யாணம். அத். 10.52—54. 157

ஆறுவது நாள் கதை (10.55—11.13)

29. துவாரகா லீலை—(2) பிரதியும்னன் வரலாறு — ஸ்யமந்தகோபாக்கியானம்—ஜாம்பவதீ, ஸத்யபாமா, காளிந்தீ, முதலியவர்களின் பாணிக்கிரஹணம் — நரகாசுரவதம் — பாரிஜாதாபஹரணம். அத். 10.55—10.59. 178

30. துவாரகா லீலை—(3) ஸ்ரீகிருஷ்ண கிருஹஸ்ததர்ம வர்ணனை-பாண்டவர் ராஜசூயயாகம். அத். 10.60—10.75. 200

31. துவாரகா லீலை—(4) சால்வன், தந்தவக்திரன் முதலியோர் வதம் — குசேலோபாக்கியானம்—குருக்ஷேத்திர ஸமாகமம்—பகவத்தத்வ நிருபணம். அத். 10. 76—10.90. 244

32. துவாரகா லீலை—(5) சுபத்ராகல்யாணம் — சுருததேவானுக்ரஹம்—விருகாசுரன் கதை—யதுகுலத்திற்கு பிராம்மணசாபம்-நவயோகி ஸம்வாதம். 11.1—11.5. 282

ஸ்கந்தம் 11

33. துவாரகா லீலை—(6) உத்தவ கீதை: அவதூத ஸம்வாதம் — ஹம்ஸாக்கியானம். அத். 11.6—11.13. 337

ஏழாவது நாள் கதை (11.14—12.13)

34. துவாரகா லீலை—(6) உத்தவகீதை—தொடர்ச்சி:—தியான மங்களம்—ஸித்திகளும் விபூதிகளும்—வர்ணாசிரம தர்மம்—யோகமார்க்கம்—பிக்ஷுகீதை—சரம உபதேசம்—பகவதாரோஹணம். அத். 11.14—11.31. 371

ஸ்கந்தம் 12

35. உபஸம்ஹாரம்—கல்கி அவதாரமும் யுகதர்மமும்-பிரளய வர்ணனம்—பரமார்த்தோபதேசம் — பரீக்ஷித்தின் தேஹத்தியாகம் — வேத விபாகமும் புராண லக்ஷணமும் — மார்க்கண்டேயர் மாயா தரிசனம்—பகவத் ஸ்வரூப வர்ணனம்—புராணங்களும் ஸ்ரீமத் பாகவதத்தின் மஹத்துவமும். அத். 12. 1—12.13. 430

அனுபந்தம்—1.
ஸம்க்ஷேப பாகவத மாஹாத்மியம் 497

அனுபந்தம்—2.
பாகவத சுலோகங்களின் முக்கியமான அடிகளின் அகராதி 523

அனுபந்தம்—3.
பாகவத விஷய அனுக்ரமணிகை 529

குறிகளின் விளக்கம்

கொட்டை எழுத்துக்களின் உச்சரிப்பு

க	ग	கங்கை என்பதில் போல
ட	ड	குடம் ,,
த	द	பாதம் ,,
ப	ब	இன்பம் ,,
ரு	ऋ	எருது ,,

மற்றக் குறிகள்

அ—அவயவப்பொருள்
ऽ அ தொக்கி நிற்பதைக் குறிக்கும்
உ-ம்.—உதாரணம்
ஒ.—ஒப்பிடுக
கீ.—பகவத் கீதை
சங்.—ஸ்ரீசங்கராசாரியார்
ஸ்ரீ.—ஸ்ரீதரர் வியாக்கியானம்
பா.பே.—பாடபேதம்
வி.ஸ.—விஷ்ணு ஸஹஸ்ரநாமம்
ரா.கி.—ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேச மொழி
நா. ப. ஸூ.—நாரத பக்தி ஸூத்ரம்

ம.பா.—மஹாபாரதம்
பாக.—ஸ்ரீமத் பாகவத ஸாரம்
ஈச. உப—ஈச உபநிஷத்து
ஐ. உப.—ஐதரேய ,,
கே. உப.—கேன ,,
கட. உப.—கட ,,
ப்ரச்ன உப—ப்ரச்ன ,,
மு. உப.—முண்டக ,,
தை. உப.—தைத்திரீய ,,
சா.உப.—சாந்தோக்கிய ,,
ப்ரு. உப.—ப்ருஹதாரண்யக

ஸ்ரீமத் பாகவதஸாரம்

ஐந்தாவது நாள் கதை (10·7—10·54)

(சகடாசுரவதம் முதல் ருக்மிணீ கல்யாணம் வரை)

21. **கோகுல லீலை**—சகடபங்கம்—திருணாவர்த்த வதம்—நாமகரணம்—விசுவ ரூபதரிசனம்—யமளார்ஜுன விமோசனம்—பிருந்தாவன யாத்திரை.
அத். 10.7—10.11.

22. **பிருந்தாவன லீலை**—(1) வத்ஸாசுரவதம்—பகாசுரவதம் — அகாசுரவதம் —வத்ஸாபஹாரம்—காளீயதமனம்—பிரலம்பாசுரவதம்.
அத். 10·11—10.18.

23. **பிருந்தாவன லீலை**—(2) ருதுவர்ணனை — வஸ்திராபஹரணம் — யஜ்ஞ பத்னீ உபாக்கியானம்—கோவர்த்தனோத்தரணம். அத். 10·19—10.28.

24. **பிருந்தாவன லீலை**—(3) ராஸக்கிரீடை. அத். 10·29.—10.33

25. **பிருந்தாவன லீலை**—(4) அக்ரூராகமனம். அத். 10·34—10.41.

26. **மதுரா லீலை**—(1) கம்ஸவதம்—தாய்தந்தையரை வணங்குதல் — உக்ர ஸேன பட்டாபிஷேகம்—குருகுலவாஸம். அத். 10·42—10.45.

27. **மதுரா லீலை**—(2) உத்தவர் தூது—அக்ரூரரை ஹஸ்தினாபுரம் அனுப் புதல்—ஜராஸந்த யுத்தம்—முசுகுந்தஸ்துதி. அத். 10·46—51.

28. **துவாரகா லீலை**—ருக்மிணீ கல்யாணம். அத். 10·52—54.

॥ श्रीमद्भागवतसारः ॥

गोकुल-लीला

राजोवाच—

येन येनावतारेण भगवान् हरिरीश्वरः ।
करोति कर्णरम्याणि मनोज्ञानि च नः प्रभो ॥ ७.१ ॥

यच्छृण्वतोऽपैत्यरति-र्वितृष्णा सत्त्वं च शुद्ध्यत्यचिरेण पुंसः ।
भक्तिर्हरौ तत्पुरुषे च सख्यं तदेव हारं वद मन्यसे चेत् ॥ ७.२ ॥

अथान्यदपि कृष्णस्य स्तोकाचरित-मद्भुतम् ।
मानुषं लोक-मासाद्य तज्जाति-मनुरुन्धतः ॥ ७.३ ॥

श्रीशुक उवाच—

कदाचिदौत्थानिक-कौतुकाप्लवे जन्मर्क्षयोगे समवेतयोषिताम् ।
वादित्र-गीत-द्विज-मन्त्र-वाचकै-श्चकार सूनोरभिषेचनं सती ॥ ७.४ ॥

ஸ்ரீமத் பாகவதஸாரம்

ஐந்தாவதுநாள் கதை

கோகுல லீலை

அரசர் கூறியது—

7. 1-2. பிரபுவே! ஜகதீசுவரனுன பகவான் ஹரி எந்தெந்த அவதாரத்தால் மனதுக்கினியதும் செவிக்கினியதுமான லீலைகளைச் செய்தாரோ, எதைக் கேட்கும் புமானுக்கு மனச்சலிப்பும் வெறுப்பும் நீங்குமோ, அந்தக்கரணம் விரைவில் பரிசுத்தமாகுமோ, ஹரியிடம் பக்தியும் அவனடியாரிடம் நட்பும் உண்டாகுமோ, அந்த ஹரியின் பிரபாவத்தைத் திருவுளமிருப்பின் எங்களுக்குக் கூறியருளுதல் வேண்டும்.

7. 3. மானிடவுலகில் அவதரித்து அப்பிறவிக்குரிய செயல்களைச் செய்த ஸ்ரீ கிருஷ்ணனுடைய அற்புதமான பால லீலைகளையும் மற்ற விஷயங்களையும்கூட (கூறவேண்டும்).

ஸ்ரீ சுகர் கூறியது—

7. 4. ஒருநாள் (குழந்தை) கவிழ்ந்து கொண்டபோது ஜன்ம நக்ஷத்திரமும் கூடியிருக்கக் கோபஸ்திரீகளையெல்லாம் அழைத்து வாத்தியமும் கீதமும் வேதியர்களின் மந்திர கோஷமும் முழங்கக் குழந்தைக்கு யசோதைப் பிராட்டி மங்களஸ்நானத்தைச் செய்வித்தாள்.

---

7. 2. **ஹாரம்**—ஹரேச் சரிதம் மனோஹரம் வா

7. 1. **कर्णरम्याणि ।** 7. 3. **मानुषं देहमासाद्य ।**

7. 4. **मन्त्रवाचनैः ।**

பா. பே.

औत्थानिकौत्सुक्यमना मनस्विनी समागतान् पूजयती व्रजौकसः ।
नैवाश्रृणोद्वै रुदितं सुतस्य सा रुदन् स्तनार्थी चरणावुदक्षिपत् ॥७.६॥

अधः शयानस्य शिशो-रनोऽल्पक-प्रवालमृद्वंघ्रिहतं व्यवर्तत ।
विध्वस्त-नानारस-कुप्य-भाजनं व्यत्यस्त-चक्राक्ष-विभिन्न-कूवरम् ॥ ७.७ ॥

दृष्ट्वा यशोदाप्रमुखा व्रजस्त्रिय औत्थानिके कर्मणि याः समागताः ।
नन्दादयश्चाद्भुत-दर्शनाकुलाः कथं स्वयं वै शकटं विपर्यगात् ॥ ७.८ ॥

ऊचु-रव्यवसितमतीन् गोपान् गोपीश्च बालकाः ।
रुदतानेन पादेन क्षिप्त-मेतन्न संशयः ॥ ७.९ ॥

न ते श्रद्दधिरे गोपा बालभाषित-मित्युत ।
अप्रमेयं बलं तस्य बालकस्य न ते विदुः ॥ ७.१० ॥

---

7. 6. கவிழ்ந்துகொண்ட உத்ஸவத்தைக் கொண்டாடும் பரபரப்பில் பெருமித மடைந்திருந்தவளும், கூடியிருந்த கோபஸ்திரீகளுக்கு மரியாதை செய்வதில் ஈடுபட்டிருந்தவளுமான யசோதை தன் மகன் அழுகையைக் கேட்கவில்லை. பால்குடிக்க விரும்பியவனாய் அவன் பாதங்களை உயரக்கிளப்பி உதைத்துக்கொண்டான்.

7. 7. ஒரு வண்டியின் கீழ் நகர்ந்து குழந்தை சயனித்துக் கொண்டிருந்ததால் இளந்துளிர் போன்று மெதுவான சிறு பாதங்களால் உதைக்கப்பட்ட அவ்வண்டி குடை சாய்ந்து வீழ்ந்தது. ரஸமான பொருட்களடங்கிய குப்பிகளும் பாண்டங்களும் நொறுங்கிச் சக்கரமும் அச்சும் குடமும் சிதறின.

7. 8. குழந்தை தவழ்ந்துகொண்ட உற்சவத்திற்காகக் கூடியிருந்த கோபிகைகளும் யசோதை முதலானவர்களும், நந்தகோபர் முதலிய ஆடவர்களும் இந்த அற்புதத்தைக் கண்டு எப்படி இந்த வண்டி தானாகவே குடைசாய்ந்தது என்று ஆச்சரியப்பட்டு மனங்கலங்கியவராயினர்.

7. 9. மனங்குழம்பி நின்ற கோபர்களையும் கோபிகைகளையும் நோக்கி அங்கிருந்த பாலர்கள் "அழுதுகொண்டிருந்த இந்தக் குழந்தையின் காலால்தான் இது உதைத்துத் தள்ளப்பட்டது. (நாங்கள் கண்டோம்). சந்தேகமில்லை" என்றனர்.

7. 10. இது அறியாத சிறுவர்களின் பேச்சு என்று அந்த கோபர்கள் நம்பவில்லை. அந்தக் குழந்தைக்கு அளவு கடந்த பலம் உண்டு என்பதை அவர்கள் அறியவில்லை.

---

7. 7. ஒ. நாள் களோர் நாலைந்து திங்களளவிலே
தாளை நிமிர்த்துச் சகடத்தைச் சாடிப்போய்
வாள் கொள் வளையெயிற் றுருயிர் வவ்வினான்
தோள் களிருந்தவா காணீரே சுரிகுழலீர்வந்து காணீரே. —பெரியாழ்வார்.

வண்டியில் ஒளிந்துகொண்டு உம்மைக் கொல்லவந்த அசுரன் உம்மால் இவ்விதம் கொல்லப்பட்டான். அந்த அசுரனுடைய பொடிகூடக் காணப்படவில்லை. அது ஏன் என்றால், நிச்சயமாக அவன் சுத்த ஸத்துவரூபியான உம்மிடம் லயித்து விட்டானல்லவா?

—நாராயணீயம். 42. 10

रुदन्तं सुतमादाय यशोदा ग्रहशंकिता।
कृतः स्वस्त्ययनं विप्रैः सूक्तैः स्तनमपाययत् ॥ ७.११ ॥

पूर्ववत् स्थापितं गोपै-र्बलिभिः सपरिच्छदम्।
विप्रा हुत्वार्चयांचक्रु-र्दध्यक्षत-कुशांबुभिः ॥ ७.१२ ॥

येऽसूयानृत-दंभेर्ष्या-हिंसा-मान-विवर्जिताः।
न तेषां सत्यशीलाना-माशिषो विफलाः कृताः ॥ ७.१३ ॥

इति बालकमादाय सामर्ग्यजु-रुपाकृतैः।
जलैः पवित्रौषधिभि-रभिषिच्य द्विजोत्तमैः ॥ ७.१४ ॥

वाचयित्वा स्वस्त्ययनं नन्दगोपः समाहितः।
हुत्वा चाग्निं द्विजातिभ्यः प्रादादन्नं महागुणम् ॥ ७.१५ ॥

विप्रा मन्त्रविदो युक्ता-स्तैर्याः प्रोक्ता-स्तथाऽऽशिषः।
ता निष्फला भविष्यन्ति न कदाचिदपि स्फुटम् ॥ ७.१७ ॥

एकदाऽऽरोह-मारूढं लालयन्ती सुतं सती।
गरिमाणं शिशोर्वोढुं न सेहे गिरिकूटवत् ॥ ७.१८ ॥

---

7. 11. அழுங் குழந்தையை எடுத்தணைத்துக்கொண்டு, கிரகபீடை யிருக்குமோ என்று சங்கித்து யசோதை பிராம்மணர்களைக்கொண்டு ஸூக்தங்களால் ஸ்வஸ்தி வாசனம் செய்வித்து ஸ்தன்யபானமும் செய்வித்தாள்.

7. 12. வழக்கம்போல் கோபர்களால் பலிகளுடனும் பரிவாரங்களுடனும் ஸ்தாபிக்கப்பட்டதை பிராமணர்கள் ஹோமம் செய்து தயிர் அக்ஷதை குசோதகம் முதலியவற்றால் பூஜித்தார்கள்.

7. 13-15. பொறாமை, பொய், இடம்பம், குணத்தையும் குற்றமாய்க் கூறுதல் இம்சை, அபிமானம் முதலியவை யில்லாதவர்களாயும் ஸத்ய சீலர்களாயுமிருப்பவர்களின் ஆசிர்வாதம் வீண்போகாதென்ற நம்பிக்கையுடன் குழந்தையை எடுத்துவந்து ருக்யஜுஸ்ஸாம வேதங்களால் மந்திரிக்கப்பட்டதும் பாவனமான மூலிகைகள் சேர்க்கப் பட்டதுமான ஜலத்தால் பிராமணர்களைக்கொண்டு அபிஷேகம் செய்வித்து ஸ்வஸ்தி வாசனம் செய்வித்து, அக்னியில் ஹோமம் செய்து ஸாவதானமாக நந்தகோபர் பிராம்மணர்களுக்குச் சிறப்பான வகையில் அன்னதானமும் செய்தார்.

7. 17. மந்திரங்களையுணர்ந்தவர்களும், அனுஷ்டானத்துடன் கூடியவர்களுமாகிய பிராம்மணர்களால் சொல்லப்பட்ட ஆசீர்வாதங்கள் ஒருபோதும் வீணாகப் போகமாட்டா என்பது நிச்சயம்.

7. 18. பின் ஒருசமயம் யசோதை தன்மடியில் குழந்தையை வைத்துச் சீராட்டிக் கொண்டிருக்கையில் (திடீரென) குழந்தை மலைபோல் கனக்கவே அதை அவள் தாங்க முடியவில்லை.

---

7. 11. कृत्वा स्वस्त्ययनं। 7. 14. बालकमानीय।
7. 17. कदाचिदपि ध्रुवम्। பா. பே.

भूमौ निधाय तं गोपी विस्मिता भारपीडिता ।
महापुरुष-मादध्यौ जगतामास कर्मसु ॥ ७.१९ ॥

दैत्यो नाम्ना तृणावर्तः कंसभृत्यः प्रचोदितः ।
चक्रवात-स्वरूपेण जहारासीन-मर्भकम् ॥ ७.२० ॥

गोकुलं सर्व-मावृण्वन् मुष्णंश्चक्षूंषि रेणुभिः ।
ईरयन् सुमहाघोर-शब्देन प्रदिशो दिशः ॥ ७.२१ ॥

तृणावर्तः शान्तरयो वात्या-रूपधरो हरन् ।
कृष्णं नभोगतो गन्तुं नाशक्नोद्भूरि-भारभृत् ॥ ७.२६ ॥

तमश्मानं मन्यमान आत्मनो गुरुमत्तया ।
गले गृहीत उत्स्रष्टुं नाशक्नो-दद्भुतार्भकम् ॥ ७.२७ ॥

गलग्रहण-निश्चेष्टो दैत्यो निर्गत-लोचनः ।
अव्यक्तरावो न्यपतत् सहबालो व्यसुर्व्रजे ॥ ७.२८ ॥

तं स्वस्तिमन्तं पुरुषाद्-नीतं विहायसा मृत्युमुखात् प्रमुक्तम् ।
गोप्यश्च गोपाः किल नन्दमुख्या लब्ध्वा पुनः प्रापुरतीव मोदम् ॥ ७.३० ॥

---

7. 19. பாரத்தால் பீடிக்கப்பட்ட யசோதை ஆச்சரியமடைந்து அவனைப் பூமியில் விட்டுவிட்டுப் பரம புருஷனைத் தியானம் செய்துகொண்டு உலக வேலையில் ஈடுபட்டாள்.

7. 20. கம்ஸனுக்குப் பணிந்தவனும் கம்ஸனால் ஏவப்பட்டவனும் திருணாவர்த்தன் எனப் பெயர் பெற்றவனுமான அசுரன் சுழல்காற்று வடிவில் வந்து உட்கார்ந்திருந்த குழந்தையைத் தூக்கிச் சென்றான்.

7. 21. எல்லோருடைய கண்களிலும் புழுதியை வாரியிறைத்து திக்குத்திசைகளை யெல்லாம் கொடிய சப்தத்தால் நிரப்பிக்கொண்டு அவன் கோகுலம் முழுவதும் வியாபித்து நின்றான்.

7. 26. சுழல்காற்றுருவமெடுத்துக் கிருஷ்ணனைத் தூக்கிக்கொண்டு ஆகாயத்தில் சென்ற திருணாவர்த்தன் தான் சுமந்த பாரத்தின் மிகுதியால் வேகங் குறைந்து மேலே செல்லச் சக்தியற்றவனானான்.

7. 27. மிகவும் பளுவாக இருந்ததால் அவ்வற்புதக் குழந்தையைப் பாராங் கல்லோ என்று எண்ணி விட்டு விட விரும்பியபோதிலும் தன் கழுத்தில் இறுகப் பிடிக் கப்பட்டிருந்தமையால் விட முடியவில்லை.

7. 28. கழுத்தில் இறுக்கப்பட்டதால் செயலற்றுக் கண்பார்வை யிழந்துக் குரலும் வெளிவராமல் உயிர் துறந்து அவ்வசுரன் கோகுலத்தில் (குழந்தையுடன்) வீழுந்தான்.

7. 30. ஆகாயமார்க்கத்தில் அசுரனால் கொண்டுபோகப்பட்டு மரணத்தின் வாயிலிருந்து விடுபட்டு க்ஷேமமாய் வந்த அக்குழந்தையை மீண்டும் அடைந்து கோபிகளும் நந்தர் முதலிய கோபர்களும் பரம சந்தோஷமடைந்தார்கள். இது வெகு ஆச்சரியமானது.

---

7. 20. प्रचोदितः । 7. 21. प्रदिशो दश ।
7. 30. लब्ध्वा सुतं ।

दृष्ट्वाद्भुतानि बहुशो नन्दगोपो बृहद्वने।
वसुदेववचो भूयो मानयामास विस्मितः ॥ ७.३३ ॥

गर्गः पुरोहितो राजन् यदूनां सुमहातपाः।
व्रजं जगाम नन्दस्य वसुदेव-प्रचोदितः ॥ ८.१ ॥

सूपविष्टं कृतातिथ्यं गिरा सूनृतया मुनिम्।
नन्दयित्वाब्रवीद् ब्रह्मन् पूर्णस्य करवाम किम् ॥ ८.३ ॥

महद्विचलनं नृणां गृहिणां दीनचेतसाम्।
निःश्रेयसाय भगवन् कल्पते नान्यथा क्वचित् ॥ ८.४ ॥

त्वं हि ब्रह्मविदां श्रेष्ठः संस्कारान् कर्तु-मर्हसि।
बालयो-रनयोर्नृणां जन्मना ब्राह्मणो गुरुः ॥ ८.६ ॥

गर्ग उवाच—

यदूनामहमाचार्यः ख्यातश्च भुवि सर्वतः।
सुतं मया संस्कृतं ते मन्यते देवकीसुतम् ॥ ८.७ ॥

---

7. 33. பிருஹத்வனத்தில் பலவாறான அற்புத நிகழ்ச்சிகளை நந்தகோபர் கண்டு ஆச்சரியமடைந்து வசுதேவருடைய வார்த்தையை மீண்டும் கொண்டாடினார்.

8. 1. அரசே! யாதவர்களுடைய புரோகிதரும் சிறந்த தபஸ்வியுமான கர்க்க மகரிஷி வசுதேவரால் அனுப்பப்பட்டு நந்த கோகுலம் சென்றார்.

8. 3. வரவேற்கப்பெற்று ஆசனத்திலமர்ந்த முனிவரைப் பிரியமான சொற்களால் மகிழ்வித்து நந்தகோபர் கூறுவார். 'பிரம்ம ரிஷியே! பரிபூர்ணரான தங்களுக்கு நாங்கள் என்ன செய்யப்போகிறோம்?

8. 4. 'பகவானே! மகான்களுடைய வரவு குடும்ப வாழ்க்கையில் மனம் நொந்த மானிடர்களின் உயர் நலத்திற்காக ஏற்படுகிறதேயன்றி வேறு காரணத்தால் ஒரு போதும் இல்லை.

8. 6. 'தாங்கள் பிரம்ம ஞானிகளில் சிறந்தவராகையால் இக்குழந்தைகளுக்கு ஸம்ஸ்காரங்களைச் செய்விக்கத் தக்கவர். பிராம்மணன் பிறவியாலேயே மனிதர்களுக்குக் குருவாகிறான்.'

கர்க்கர் கூறியது—

8. 7. யது குலத்தோரின் ஆசாரியன் என்று உலகெங்கும் நான் அறியப் பட்டவன். ஆகையால் என்னால் ஸம்ஸ்காரம் செய்யப்பட்டால் உமது குமாரனை (கம்ஸன்) தேவகியின் பிள்ளையென்று எண்ணுவான்.

---

7. 33. दृष्ट्वोत्पातानि। பா. பே.

कंसः पापमतिः सख्यं तव चानकदुन्दुभेः।
देवक्या अष्टमो गर्भो न स्त्री भवितु-मर्हति ॥ ८.८ ॥

इति संचिन्तयञ्छ्रुत्वा देवक्या दारिकावचः।
अपि हन्ताऽऽगताशङ्कस्तर्हि तन्नोऽनयो भवेत् ॥ ८.९ ॥

नन्द उवाच—
अलक्षितोऽस्मिन् रहसि मामकैरपि गोव्रजे।
कुरु द्विजाति-संस्कारं स्वस्तिवाचनपूर्वकम् ॥ ८.१० ॥

श्रीशुक उवाच—
एवं संप्रार्थितो विप्रः स्वचिकीर्षित-मेव तत्।
चकार नामकरणं गूढो रहसि बालयोः ॥ ८.११ ॥

गर्ग उवाच—
अयं हि रोहिणीपुत्रो रमयन् सुहृदो गुणैः।
आख्यास्यते राम इति बलाधिक्याद् बलं विदुः॥
यदूना-मपृथग्भावात् संकर्षण-मुशन्त्युत ॥ ८.१२ ॥

---

8. 8-9. கம்ஸன் பாவ மனது படைத்தவன். தேவகியின் பெண்ணின் வார்த்தையைக் கேட்டு "தேவகியின் எட்டாவது கர்ப்பம் பெண்ணுயிருப்பது இயலாது" என்று எண்ணியும் உமக்கும் வசுதேவருக்கும் உள்ள சிநேகத்தையும் எண்ணியும் சந்தேகம் கொண்டு குழந்தையைக் கொன்ருலும் கொன்றுவிடுவான். அதனுல் நமக்கு அநியாயம் விளையும்.

நந்தர் கூறியது—

8. 10. (அப்படியாயின்) இங்கு கோகுலத்தில் இரகசியமாக என்னைச் சேர்ந்தவர்களுக்குக்கூடத் தெரியாமல் ஸ்வஸ்திவாசனம் முதலிய துவிஜர்களுக்குரிய ஸம்ஸ்காரத்தைச் செய்வியுங்கள்.

ஸ்ரீ சுகர் கூறியது—

8. 11. இங்ஙனம் வேண்டப்பெற்ற கர்க்க மகரிஷி தான் எண்ணியிருந்தபடி இரண்டு குழந்தைகளுக்கும் நாமகரணத்தை இரகசியமாக யாரும் அறியாமல் செய்வித்தார்.

கர்க்கர் கூறியது—

8. 12. 'ரோகிணியின் புத்திரனை இவன் தனது குணங்களால் சிநேகிதர்களை இன்புறச் செய்துகொண்டு ராமன் என்ற பெயருடன் விளங்குவான். பல மிகுதியால் பலன் எனவும் கூறப்படுவான். யாதவர்களின் ஒற்றுமையை வளர்க்கப் போவதால் ஸங்கர்ஷணன் எனவும் கூறுவார்கள்.

---

8. 9. ऽनयो महान्। பா. பே.

प्रागयं वसुदेवस्य कचिज्जात-स्तवात्मजः ।
वासुदेव इति श्रीमानभिज्ञाः संप्रचक्षते ॥ ८.१४ ॥

बहूनि सन्ति नामानि रूपाणि च सुतस्य ते ।
गुणकर्मानुरूपाणि तान्यहं वेद नो जनाः ॥ ८.१५ ॥

एष वः श्रेय आधास्यद् गोपगोकुलनन्दनः ।
अनेन सर्वदुर्गाणि यूय-मञ्ज-स्तरिष्यथ ॥ ८.१६ ॥

तस्मान्नन्दात्मजोऽयं ते नारायण-समो गुणैः ।
श्रिया कीर्त्यानुभावेन गोपायस्व समाहितः ॥ ८.१९ ॥

इत्यात्मानं समादिश्य गर्गे च स्वगृहं गते ।
नन्दः प्रमुदितो मेने आत्मानं पूर्ण-माशिषाम् ॥ ८.२० ॥

कालेन व्रजताल्पेन गोकुले रामकेशवौ ।
जानुभ्यां सह पाणिभ्यां रिङ्गमाणौ विजह्रतुः ॥ ८.२१ ॥

---

8. 14. 'உமது குமாரனுகிய இந்தச் சீமான் முன்னொருகாலத்தில் வசுதேவருக்குப் பிள்ளையாகப் பிறந்தவன். அதனல் அறிவாளிகள் இவனை வாசுதேவன் என்று சொல்லுகிருர்கள்.

8. 15. 'உமது குமாரனுக்கு குணங்களுக்கும் செயல்களுக்கும் இணங்க பல பெயர்களும் வடிவங்களும் உண்டு. அவைகளை நான் அறிவேன். மற்ற ஜனங்கள் அறியமாட்டார்கள்.

8. 16. 'இவன் கோபர்களுக்கும் கோகுலத்திற்கும் ஆனந்தமளிப்பான். உங்களுக்கு உயர்நலத்தை யளிக்கப்போகிருன். இவனல் நீங்கள் எல்லாக் கஷ்டங் களையும் எளிதாகத் தாண்டப்போகிறீர்கள்.

8. 19. 'நந்தரே! உமது புத்திரனுகிய இவன் குணங்களாலும் ஐசுவரியத் தாலும் கீர்த்தியாலும் பெருமையாலும் நாராயணனுக்கு ஒப்பானவன், ஆகையால் முழுகவனத்துடன் நீர் காப்பாற்றவேண்டும்.'

8. 20. இங்ஙனம் தனக்குக் கூறிவிட்டு கர்க்க முனிவர் தமது வீடுசென்றபின் நந்தகோபர் மனமகிழ்ந்து தன்னை ஸர்வாபீஷ்டங்களும் நிறைந்தவராக எண்ணினுர்.

8. 21. சிறிது காலம் சென்றபின் பலராமனும் கிருஷ்ணனும் கைகளாலும் முழங் கால்களாலும் தவிழ்ந்து விளையாடத் தொடங்கினுர்கள்.

---

8. 15. ஒ. அநேகமூர்த்தி-ரவ்யக்த: சதமூர்த்தி: சதானன: ।
—விஷ்ணுஸஹஸ்ரநாமம்.

---

8. 16. आधास्यत्येष वः श्रेयो । பா. பே.

तन्मातरौ निजसुतौ घृणया स्नुवन्त्यौ
पङ्काङ्गराग-रुचिरा-वुपगुह्य दोर्भ्याम् ।
दत्त्वा स्तनं प्रपिबतोः स मुखं निरीक्ष्य
मुग्धस्मिताल्प-दशनं ययतुः प्रमोदम् ॥ ८.२३ ॥

ततस्तु भगवान् कृष्णो वयस्यै-र्व्रजबालकैः ।
सहरामो व्रजस्त्रीणां चिक्रीडे जनयन्मुदम् ॥ ८.२७ ॥

कृष्णस्य गोप्यो रुचिरं वीक्ष्य कौमार-चापलम् ।
शृण्वत्याः किल तन्मातुरिति होचुः समागताः ॥ ८.२८ ॥

वत्सान् मुञ्चन् क्वचिदसमये क्रोशसंजातहासः
स्तेयं स्वाद्वत्त्यथ दधिपयः कल्पितैः स्तेययोगैः ।
मर्कान् भोक्ष्यन् विभजति स चेन्नात्ति भाण्डं भिनत्ति
द्रव्यालाभे स गृहकुपितो यात्युपक्रोश्य तोकान् ॥ ८.२९ ॥

हस्ताग्राह्ये रचयति विधिं पीठकोलूखलाद्यै-
श्छिद्रं-ह्यन्त-र्निहित-वयुनः शिक्य-भाण्डेषु तद्वित् ।
ध्वान्तागारे धृतमणिगणं स्वांगमर्थ-प्रदीपम्
काले गोप्यो यर्हि गृहकृत्येषु सुव्यग्र-चित्ताः ॥ ८.३० ॥

---

8. 23. அவர்களுடைய தாய்மார்கள் சேற்றில் அளைந்துவரும் தங்கள் குழந்தைகளை இருகைகளாலும் அணைத்தெடுத்து அன்பின் மிகுதியால் பால் பெருகக் குழந்தைகளுக்குப் பால் கொடுத்து அவர்கள் பருகும்போது மந்தஹாஸத்துடனும் முளைக்கும் பற்களுடனும் விளங்கிய முகங்களைப் பார்த்துப் பரமானந்தமடைந்தார்கள்.

8. 27. பிறகு பகவானான கிருஷ்ணன் பலராமனுடனும் சிநேகிதர்களான இடைச் சிறுவர்களுடனும் கூடி கோபஸ்திரீகளுக்கு மகிழ்ச்சியைப் பெருக்கிக்கொண்டு விளையாடினார்.

8. 28. கோபிகள் கிருஷ்ணனுடைய அழகிய பாலலீலையைக் கண்டு ஒன்றுகூடி அவனுடைய தாயின் காதில் படும்படி பின்வருமாறு கூறினர்.

8. 29. 'வேளையல்லாதபோது சிலசமயம் கன்றுகளை அவிழ்த்துவிடுகிறான்; கோபித்தால் சிரிக்கிறான்; திருட்டு உபாயங்களால் திருடிய தயிரையும் பாலையும் ருசித்துச் சாப்பிடுகிறான்; சாபபிட்டுக்கொண்டே குரங்குகளுக்குப் பங்குகொடுக்கிறான்; ஒரு குரங்கு சாப்பிடாவிட்டால் சட்டியை உடைக்கிறான்; சாப்பிடும் பொருள் அகப்படாவிட்டால் அந்த வீட்டின்மேல் கோபங்கொண்டு குழந்தைகளை அழவைத்து விட்டுப் போய்விடுகிறான்,

8. 30. 'எந்த சமயத்தில் கோபிகள் வீட்டுவேலைகளில் ஆழ்ந்திருக்கிறார்களோ அப்போது இவன் கைக்கு எட்டாத இடத்தில் உள்ளதை எடுக்கப் பலகை உரல் முதலியவற்றால் வழி செய்துகொண்டு உறியிலுள்ள சட்டிகளில் ஓட்டை போடுகிறான்; இருட்டறையில் இரத்தினாபரணங்கள் பூண்ட தனது திருமேனியே பொருள்களைக் காட்டும் தீபமாக்கிக் கொள்ளுகிறான்.'

---

8. 30. ௯. பீடே பீடநிஷண்ண பாலககளே திஷ்டன் ஸ கோபாலகோ
யந்த்ராந்தஸ்தித துக்தபாண்ட-மபஹ்ருஷ்யாச்சாத்ய கண்டாரவம் ।
வக்த்ரோபாந்த-க்ருதாஞ்ஜலி: க்ருத்சிர: கம்பம் பிபன் ய: பய:
பாயா-தாகத-கோபிகா-நயனயோர்-கண்டூஷ பூத்காரக்ருத் ॥
—கிருஷ்ண கர்ணாம்ருதம் ॥

---

8. 23. पङ्काङ्गराग-रुचिरावुपगृह्य । பா. பே.

एकदा क्रीडमानास्ते रामाद्या गोपदारकाः ।
कृष्णो मृदं भक्षितवानिति मात्रे न्यवेदयन् ॥ ८.३२ ॥

सा गृहीत्वा करे कृष्ण-मुपालभ्य हितैषिणी ।
यशोदा भयसंभ्रान्त-प्रेक्षणाक्ष-मभाषत ॥ ८.३३ ॥

कस्मान्मृद-मदान्तात्मन् भवान् भक्षितवान् रहः ।
वदन्ति तावका ह्येते कुमारास्तेऽग्रजोऽप्ययम् ॥ ८.३४ ॥

श्रीकृष्ण उवाच—

नाहं भक्षितवानंब सर्वे मिथ्याभिशंसिनः ।
यदि सत्यगिर-स्तर्हि समक्षं पश्य मे मुखम् ॥ ८.३५ ॥

यद्येवं तर्हि व्यादेहीत्युक्तः स भगवान् हरिः ।
व्यादत्ताव्याहतैश्वर्यः क्रीडामनुजबालकः ॥ ८.३६ ॥

---

8. 32. ஒரு சமயம் பலராமன் முதலிய இடைச் சிறுவர்கள் விளையாடுகையில் கிருஷ்ணன் மண்ணைத் தின்ருன் என்று தாயான யசோதையிடம் அவர்கள் சொன்ஞர்கள்.

8. 33. குழந்தைக்கு நலனை விரும்பிய யசோதை கிருஷ்ணனைக் கையில் பிடித்துக்கொண்டு அதட்டி, பயத்தால் மருண்ட கண்களையுடைய அவனைப் பார்த்துப் பின்வருமாறு கூறிஞள்.

3. 34. 'அடக்கமற்றவனே! ஏன் ரகசியத்தில் நீ மண் தின்ருய்? உன் சிநேகிதர்களான இப்பிள்ளைகள் சொல்லுகிருர்களே, இந்த உன் தமயனும் சொல்லு கிருனே!'

ஸ்ரீ கிருஷ்ணன் கூறியது—

8. 35. 'அம்மா! நான் தின்னவில்லை. எல்லோரும் பொய்யாகக் கோள் சொல்லுகிருர்கள், அவர்கள் உண்மை சொல்லுபவர்கள் என்ருல் என் வாயை நீயே நேரில் பார்.'

8. 36. 'அப்படி ஆஞல் வாயைத்திற' என்று சொல்லப்படவே மனிதக் குழந்தையாக லீலை புரிபவரும் குறைவுபடாத ஈசுவரத் தன்மையுடையவருமான அத்த பகவான் ஹரியானவர் வாயைத் திறந்தார்.

---

8. 34. ஒ. க்ருஷ்ணேனம்ப கதேன ரந்து-மதுனு ம்ருத்பக்ஷிதா ஸ்வேச்சயா
தத்யம் க்ருஷ்ண க ஏவ-மாஹ முஸலீ மித்யாம்ப பச்யானனம் ।
வ்யாதேஹீதி விதாரிதே சிசுமுகே த்ருஷ்ட்வா ஸமஸ்தம் ஜகத்
மாதா யஸ்ய ஜகாம விஸ்மயபதம் பாயாத் ஸ ந: கேசவ: ॥
—க்ருஷ்ணகர்ணம்ருதம்

सा तत्र ददृशे विश्वं जगत् स्थास्नु च खं दिशः ।
साद्रि-द्वीपाब्धि-भूगोलं स वाय्वग्नीन्दु-तारकम् ॥ ८.३७ ॥

एतद्विचित्रं सह जीवकाल-स्वभाव-कर्माशय-लिंग-भेदम् ।
सूनोस्तनौ वीक्ष्य विदारितास्ये व्रजं सहात्मान-मवाप शंकाम् ॥ ८.३९ ॥

किं स्वप्न एतदुत देवमाया किं वा मदीयो बत बुद्धिमोहः ।
अथो अमुष्यैव ममार्भकस्य यः कश्चनौत्पत्तिक आत्मयोगः ॥ ८.४० ॥

इत्थं विदित-तत्त्वायां गोपिकायां स ईश्वरः ।
वैष्णवीं व्यतनोन्मायां पुत्रस्नेहमयीं विभुः ॥ ८.४३ ॥

सद्यो नष्टस्मृति-र्गोपी साऽऽरोप्यारोहमात्मजम् ।
प्रवृद्ध-स्नेह-कलिल-हृदयासीद् यथा पुरा ॥ ८.४४ ॥

---

8. 37. அந்த யசோதை குழந்தையின் வாயில் ஸ்தாவரமும் ஜங்கமமும் ஆன உலகனைத்தையும் கண்டாள். வாயு, அக்கினி, சந்திரன் நக்ஷத்ரம் இவைகளுடன் கூட வானையும்திசைகளையும், மலை தீவு கடல் இவைகளுடன் பூகோளத்தையும் கண்டாள்.

8. 39. தன் குழந்தையின் சரீரத்தில், திறந்த வாயில், ஜீவன் காலம் ஸ்வபாவம் கர்மம் ஆசயம் இவற்றால் வேறுபட்ட அடையாளங்களுடன் விசித்திரமாய் விளங்கும் இவ்வுலகையும், கோகுலத்தையும் தன்னுடன் கூடப் பார்த்துச் சந்தேகங்கொண்டாள்.

8. 40. 'இது என்ன கனவா, அல்லது தேவ மாயையா, அல்லது என் புத்தி மோகமா? அல்லது இந்த என் குழந்தைக்கு இயற்கையாகவோ ஏற்பட்டுள்ள ஒரு ஆத்ம சக்தி தானோ? இது ஆச்சரியம்.'

8. 43. இப்படி யசோதை தத்துவத்தை யாராய்ந்தபோது ஸர்வவியாபியான அந்த ஈசுவரன் புத்திரவாஞ்சை என்ற விஷ்ணு மாயையை உண்டாக்கினார்.

8. 44. உடனே தத்துவத்தை மறந்து அந்த யசோதை மகனை மடியில் தூக்கி வைத்துக்கொண்டு முன்போலவே புத்திரன் என்ற ஆசை நிறைந்த மனமுடையவளானாள்.

---

8. 37. ஒ. விண்கண்டாள் விண்வளைக்கும் வெங்கதிருந் தண்சுடரும் விளங்கக் கண்டாள்
மண்கண்டாள் மண்வளைத்த மாகடலும் பேருயர்மால் வரையுங் கண்டாள்
தண் கொண்ட வெண் டோட்டுத் தவள நெடுவரை கண்டாள் தனையுங் கண்டாள்
பண்கொண்ட வண்டரற்றும் பசுந்துளபோனிவ னெனவே பரவினாளால்.
—ஆரியப்பப்புலவர் : பாகவதம்.

8. 40. ஒ. வாயில் வையகங் கண்ட மடநல்லார்
ஆயர் புத்திரனல்ல னருந்தெய்வம்
பாய சீருடைப் பண்புடைப் பால கன்
மாய னென்று மகிழ்ந்தனர் மாதரே. —பெரியாழ்வார்.

ஒ. தாழ்குழலார் வைத்த தயிருண்ட பொன் வயிறு
இவ்வே ழுலகு முண்டும் இடமுடைத்தால் சாழலே.
—திருமங்கையாழ்வார்.

8. 44. யசோதை பூர்வபுண்ணியத்தால் பெற்ற பாக்கியம் இது போன்றது. அவள் முன் ஜன்மத்தில் அஷ்டவசுக்களில் ஒருவருடைய பத்னியாக இருந்தவள்.

एकदा गृहदासीषु यशोदा नन्दगेहिनी।
कर्मान्तर-नियुक्तासु निर्ममन्थ स्वयं दधि ॥ ९.१ ॥

तां स्तन्यकाम आसाद्य मथ्नन्तीं जननीं हरिः।
गृहीत्वा दधि-मन्थानं न्यषेधत् प्रीतिमावहन् ॥ ९.४ ॥

तमंकमारूढ-मपाययत् स्तनं स्नेह-स्नुतं सस्मित-मीक्षती मुखम्।
अतृप्त-मुत्सृज्य जवेन सा यया-वुत्सिच्यमाने पयसि त्वधिश्रिते ॥ ९.५ ॥

संजातकोपः स्फुरितारुणाधरं संदश्य दद्भि-र्दधिमन्थ-भाजनम्।
भित्वा मृषाश्रु-र्दृषदश्मना रहो जघास हैयंगव-मन्तरं गतः ॥ ९.६ ॥

उत्तार्य गोपी सुश्रृतं पयः पुनः प्रविश्य संदृश्य च दध्यमत्रकम्।
भग्नं विलोक्य स्वसुतस्य कर्म तज्जहास तं चापि न तत्र पश्यती ॥ ९.७ ॥

उलूखलोङ्घ्रे-रुपरि व्यवस्थितं मर्काय कामं ददतं शिचि स्थितम्।
हैयंगवं चौर्य-विशंकितेक्षणं निरीक्ष्य पश्चात् सुतमागमच्छनैः ॥ ९.८ ॥

---

9. 1. ஒரு சமயம் வீட்டு வேலைக்காரிகள் வேறு வேலைகளில் ஈடுபட்டிருந்தபோது நந்தபத்தினியான யசோதை தானே தயிர் கடையலானாள்.

9. 4. கிருஷ்ணன் பால் குடிக்க விரும்பியவனாய்த் தயிர் கடையும் தாயிடம் சென்று தயிர் மத்தைப் பிடித்துக்கொண்டு அவளுடைய அன்பை வளர்ப்பவனாய்க் கடையவொட்டாமல் தடுத்தான்.

9. 5. புன்சிரிப்புடன் கூடின அவனுடைய முகத்தைப் பார்த்துக்கொண்டு யசோதை தன் மடியில் ஏறி உட்கார்ந்த அவனுக்கு அன்பினால் பால் சுரந்த ஸ்தனத்தைக் கொடுத்தாள். அப்போது அடுப்பில் வைத்திருந்த பால் பொங்கி வழியவே திருப்தியடையாத குழந்தையைக் கீழே விட்டுவிட்டு விரைந்து சென்றாள்.

9. 6. அதனால் கோபமடைந்து துடிப்புடன்கூடிய சிவப்பான உதட்டைப் பற்களால் கடித்துக்கொண்டு தயிர் கடையும் சட்டியை அம்மிக் குழவியால் உடைத்து விட்டு மாயக் கண்ணீருடன் உள்ளே சென்று மறைவில் வெண்ணெய்யைத் தின்றான்.

9. 7. யசோதை நன்றாகக் காய்ந்த பாலை இறக்கி வைத்துவிட்டுத் திரும்பிவந்து தயிர்ப் பாத்திரம் உடைந்திருந்ததைக் கண்டு அது தன் பிள்ளையின் செய்கை யென்றறிந்து அவனையும் அவ்விடத்தில் காணாமல் சிரித்தாள்.

9. 8. உருட்டப்பட்ட உரலின்மேல் உட்கார்ந்துகொண்டு உறியிலிருந்த வெண்ணெய்யை எடுத்துக் குரங்கிற்கு இஷ்டம்போல் கொடுப்பவனும் திருட்டினால் பயந்த நோக்குடையவனுமான புத்திரனைப் பார்த்து மெதுவாகப் பின்புறம் வந்தாள்.

---

9. 8. ஒ. முழுதும் வெண்ணெயளைந்து தொட்டுண்ணும்
முகிழிளம் சிறுத்தாமரைக் கையும்
எழில்கொள் தாம்பு கொண்டடிப்பதற் கெள்கும் நிலையும்
வெண் தயிர் தோய்ந்த செவ்வாயும்
அழுகையு மஞ்சி நோக்கு மன் னோக்கும்
அணி கொள் செஞ்சிறுவாய் நெளிப்பதுவும்
தொழுகையு மிவை கண்டவசோதை
தொல்லை யின்பத் திறுதி கண்டாளே. —பெரியாழ்வார்.

---

9. 6. स जातकोपः। 9. 8. ददतं शुचिस्मितम् பா. பே.

कृतागसं तं प्ररुदन्त-मक्षिणी कषन्तमञ्जन्मषिणी स्वपाणिना ।
उद्वीक्षमाणं भयविह्वलेक्षणं हस्ते गृहीत्वा भिषयन्त्यवागुरत् ॥ ९.११ ॥

त्यक्त्वा यष्टिं सुतं भीतं विज्ञायार्भक-वत्सला ।
इयेष किल तं बद्धुं दाम्ना-तद्वीर्य-कोविदा ॥ ९.१२ ॥

न चान्त-र्न बहि-र्यस्य न पूर्वं नापि चापरम् ।
पूर्वापरं बहिश्चान्त-र्जगतो यो जगच्च यः ॥ ९.१३ ॥

तं मत्वात्मज-मव्यक्तं मर्त्यलिंग-मधोक्षजम् ।
गोपिकोलूखले दाम्ना बबन्ध प्राकृतं यथा ॥ ९.१४ ॥

तद् दाम बध्यमानस्य स्वार्भकस्य कृतागसः ।
द्व्यङ्गुलोन-मभूत्तेन सन्दधेऽन्यच्च गोपिका ॥ ९.१५ ॥

यदाऽऽसीत्तदपि न्यूनं तेनान्यदपि सन्दधे ।
तदपि द्व्यंगुलं न्यूनं यद् यदादत्त बन्धनम् ॥ ९.१६ ॥

---

9. 11. தவறு செய்தவனும் மையிட்ட கண்களைத் தன் கையினால் கசக்கிக் கொண்டு அழுபவனும் பயத்தினால் சலிக்கின்ற கண்களை உடையவனும் மேலே பார்க்கிறவனுமான அவனைக் கையில் பிடித்துக்கொண்டு பயமுறுத்தி அதட்டினாள்.

9. 12. குழந்தையிடம் அன்பு மிகுந்த அவள் குழந்தை பயந்துவிட்டான் என்று அறிந்ததும் தடியை எறிந்துவிட்டு அவனுடைய பெருமையை உணராதவளாய் அவனைக் கயிற்றால் கட்ட எண்ணினாள். ஆச்சரியம்,

9. 13. எவனுக்கு உள்ளுமில்லையோ வெளியுமில்லையோ, முன்னுமில்லையோ பின்னுமில்லையோ எவன் உலகிற்கு முன்னும் பின்னும் உள்ளும் வெளியுமாகவும் உலகமேயாகவும் இருக்கிறானோ ;

9. 14. வெளிப்படையாகத் தோன்றாதவனும், இந்திரியங்களுக்குப் புலப்படாதவனுமான அவனை மானிட உருக் கொண்டதால் தனது குழந்தையாக எண்ணி யசோதை சாதாரணக் குழந்தையைப்போல் கயிற்றால் உரலில் கட்டினாள்.

9. 15. பிழை செய்த தன் குழந்தையைக் கட்டுவதற்கு அக்கயிறு இரண்டங்குலம் குறைவாக இருக்கக் கண்டாள். அத்துடன் யசோதை வேறொரு கயிற்றைச் சேர்த்து முடிந்தாள்.

9. 16. அதுவும் குறைவாயிருந்ததால் அத்துடன் வேறொன்றையும் சேர்த்தாள். அதுவும் இரண்டங்குலம் குறைந்தது. எங்கெந்தக் கயிற்றை எடுத்தாளோ அது எல்லாம் குறைவாகவே இருந்தது.

---

9. 12. கண்ணன் பயப்பட்டதை நினைத்தால் நமது பயம் போகும். அவன் கட்டுண்டதை நினைத்தால் நமது கட்டு விலகும். இதனால் எதை நினைக்கிறோமோ அப்படியாவோம் எனும் 'த்த்க்ரது நியாயம்' உபநிஷத்தாகிய அரணியத்தில் போய் ஒளிந்துகொண்டு விட்டது என்று கூறினார் வேதாந்த தேசிகர்.

9. 16. பகவானை அளப்பதற்கு எல்லாச் சாதனமும் குறைபாடுடையதே.

ஓ. நாஹம் வேதைர்-ந தபஸா ந தானேன நசேஜ்யயா | —கீ. 11. 53

स्वमातुः स्विन्नगात्राया विस्रस्त-कबरस्रजः।
दृष्ट्वा परिश्रमं कृष्णः कृपयाऽऽसीत् स्वबन्धने ॥ ९.१८ ॥

नेमं विरिंचो न भवो न श्रीरप्यंगसंश्रया।
प्रसादं लेभिरे गोपी यत्तत् प्राप विमुक्तिदात् ॥ ९.२० ॥

नायं सुखापो भगवान् देहिनां गोपिकासुतः।
ज्ञानिनां चात्मभूतानां यथा भक्तिमतामिह ॥ ९.२१ ॥

कृष्णस्तु गृहकृत्येषु व्यग्रायां मातरि प्रभुः।
अद्राक्षी-दर्जुनौ पूर्वं गुह्यकौ धनदात्मजौ ॥ ९.२२ ॥

ऋषे-र्भागवत-मुख्यस्य सत्यं कर्तुं वचो हरिः।
जगाम शनकैस्तत्र यत्रास्तां यमलार्जुनौ ॥ १०.२४ ॥

देवर्षि-र्मे प्रियतमो यदिमौ धनदात्मजौ।
तत्तथा साधयिष्यामि यद्गीतं तन्महात्मना ॥ १०.२५ ॥

---

9. 18. தலையவிழ்ந்து அணிந்த பூவும் சரிந்து உடல் வியர்த்து நின்ற தன் தாயின் கஷ்டத்தைக் கண்டு கிருஷ்ணன் அன்பினால் தன்னைக் கட்டுவதற்கு உட்பட்டான்.

9. 20. முக்தியளிக்கும் அவனிடமிருந்து யசோதை எந்த அனுக்கிரகத்தைப் பெற்றாளோ அதைப் பிரம்மதேவனும் அடையவில்லை, சிவனுமடையவில்லை, அவனுடைய மார்பிலுறையும்லக்ஷ்மீதேவியும் அடையவில்லை.

9. 21. கோபியின் பிள்ளையாக வந்த இந்த பகவான் இங்கு பக்தர்களுக்கு எப்படி எளிதில் அடையக்கூடியவனோ அப்படித் தனது உயிரே பேரன்ற ஞானிகளாயினுங்கூட உடல் படைத்தவர்க்கு அடையக்கூடியவனல்லன்.

9. 22. தாயார் மறுபடி வீட்டுவேலைகளில் ஈடுபட்டிருக்கையில் பிரபுவாகிய கிருஷ்ணன் முன்பு குபேர குமாரர்களாயிருந்து இப்பொழுது மருத மரங்களாய் நிற்பவர்களைக் கண்ணுற்றான்.

10. 24: பாகவத சிரேஷ்டரான நாரத மகரிஷியின் சொல்லைச் சத்தியமாக்குவதற்குக் கிருஷ்ணன் அவ்விரண்டு மருத மரங்கள் நின்றவிடத்தை நோக்கி மெதுவாகச் சென்றான்.

10. 25. 'தேவரிஷி எனக்கு மிகவும் பிரியமானவர். இவர்களும் குபேரனுடைய பிள்ளைகள். ஆகையால் அந்த மகாத்மாவால் எது சொல்லப்பட்டதோ அதை அப்படியே செய்கிறேன்'.

---

9. 20. (விரிஞ்ச: புத்ரோபி பவ: ஸ்வாத்மாபி ஶ்ரீர்ஜாயாபி) புத்திரனாயிருந்தும் பிரம்மாவும், தன்னுடலிற் பாதியாயிருந்தும் சிவனும், தன் மனைவியாயிருந்தும் லக்ஷ்மியும் அவ்வளவு அனுக்கிரகத்தைப் பெறவில்லை. —ஸ்ரீதரர்.

9. 21. பக்த்யா த்வனன்யா சக்ய அஹமேவம்விதோsர்ஜுன । —கீ. 11. 54.

'நடாத கம்பத்தை ஆடாதே நிறுத்தித் தொடாதே பிடித்து அறுகாத நூலாலே விடாதே கட்டினால் ஓடாதே நிற்பேன்' என்று கண்ணன் கோபிகளிடம் கூறினான்.

—கீதோதயம் ; வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார்.

इत्यन्तरेणार्जुनयोः कृष्णस्तु यमयो-र्ययौ ।
आत्म-निर्वेशमात्रेण तिर्यग्गत-मुलूखलम् ॥ १०.२६ ॥

बालेन निष्कर्षयतान्व-गुलूखलं तद्
दामोदरेण तरसोत्कलितांघ्रिबन्धौ ।
निष्पेततुः परमविक्रमितातिवेप-
स्कन्ध-प्रवाल-विटपौ कृतचण्डशब्दौ ॥ १०.२७ ॥

तत्र श्रिया परमया ककुभः स्फुरन्तौ
विद्धावुपेत्य कुजयोरिव जातवेदाः ।
कृष्णं प्रणम्य शिरसाखिल-लोकनाथं
बद्धांजली विरजसा-विद-मूचतुः स्म ॥ १०.२८ ॥

नमः परमकल्याण नमः परममंगळ ।
वासुदेवाय शांताय यदूनां पतये नमः ॥ १०.३६ ॥

अनुजानीहि नौ भूमं-स्तवानुचर-किंकरौ ।
दर्शनं नौ भगवत ऋषे-रासीदनुग्रहात् ॥ १०.३७ ॥

---

10. 26. என்று கிருஷ்ணன் இரட்டையான மருத மரங்களின் இடையில் சென்றான். அப்படி அவன் செல்லுகையில் உரல் குறுக்காக மாட்டிக்கொண்டது.

10. 27. இடுப்பில் கயிற்றுடன் கூடிய கிருஷ்ணனால் தன் பின்னால் வரும் உரல் வேகமாக இழுக்கப்படவே அவனுடைய பராக்கிரமத்தால் பெருங்கிளைகளும் சிறு கிளைகளும் இலைகளும் அலங்கோலமாய் அசைய வேர்ப்பிடிப்பு அறுபட்டுப் பெரிய இரைச்சலுடன் மரங்கள் வீழ்ந்தன.

10. 28. இருமரங்களிலுமிருந்து அக்கினி தேவனைப்போல் ஒளியின் மிகுதியால் திசைகளைப் பிரகாசப்படுத்திக்கொண்டு பாவம் நீங்கிய இரு சித்த புருஷர்கள் எழுந்து கைகூப்பிக்கொண்டு உலகனைத்திற்கும் நாதனை கிருஷ்ணனைத் தலைவணங்கிப் பின் வருமாறு போற்றினார்கள்.

10. 36. 'பரம கல்யாணமூர்த்தியான உமக்கு நமஸ்காரம். பரம மங்கள வடிவினரான உமக்கு நமஸ்காரம். சாந்தரும் யதுபதியும் வசுதேவ குமாரருமான உமக்கு நமஸ்காரம்.

10. 37. 'அளவிடற்கரிய பெருமை வாய்ந்தவரே! உங்களுடைய அடியார்களின் அடிமைகளாக எங்களை அறியவேண்டும். எங்களுக்கு பகவானுடைய தரிசனம் நாரத மகரிஷியின் அனுக்கிரகத்தால் கிடைக்கலாயிற்று.

---

10. 27. निष्कर्षयता उदूखलं । दामोदरेण बलिनो । பா. பே.

एवं सपशवो गोपा–स्तोकाश्लेष–सुनिर्वृताः ।
कृच्छ्राच्छनै–रपगतास्तदनुस्मृत्युदश्रवः ॥ १३.३४ ॥

व्रजस्य रामः प्रेमर्द्धे वीक्ष्यौत्कण्ठ्य–मनुक्षणम् ।
मुक्तस्तनेष्वपत्येषु ह्यहेतुविदचिन्तयत् ॥ १३.३५ ॥

किमेतदद्भुत–मिव वासुदेवेऽखिलात्मनि ।
व्रजस्य सात्मन–स्तोकेष्वपूर्वं प्रेम वर्धते ॥ १३.३६ ॥

इति संचिन्त्य दाशार्हो वत्सान् सवयसानपि ।
सर्वानाचष्ट वैकुण्ठं चक्षुषा वयुनेन सः ॥ १३.३८ ॥

नैते सुरेशा ऋषयो न चैते त्वमेव भासीश भिदाश्रयेऽस्मिन् ।
सर्वं पृथक्त्वं निगमात्कथं वदेत्युक्तेन वृत्तं प्रभुणा बलोऽवैत् ॥ १३.३९ ॥

---

13. 34. இங்ஙனம் இடையர்கள் மக்களைத் தழுவியதால் மட்டிலா மகிழ்ச்சியடைந்தபின் அவர்களை விட்டுப் பிரியமாட்டாதவர்களாய் நினைந்து நினைந்து கண்ணீர் விட்டார்கள்; பசுக்களும் தம் கன்றுகளுடன் அவ்விதமே இருந்தன.

13. 35. ஊட்டு மறந்த கன்றுகளிடம் தாய்ப் பசுக்களுக்கும் பால் மறந்த பிள்ளைகளிடம் பெற்றோர்களுக்கும் விவரிக்கமுடியாத வகையில் அன்பு பெருகிய அதிசயத்தைக் கண்ணுற்று பலராமர் இதற்குக் காரணந் தெரியாமல் யோசிக்கலானார்.

13. 36. 'அனைவருக்கும் ஆத்மாவாகிய கிருஷ்ணனிடத்தில் ஏற்படும் பிரேமையைப்போல் (கோபர்களுக்கும் கோபிகைகளுக்கும் பசுக்களுக்கும்) இடைச்சேரி முழுவதிற்கும் எனக்கும்கூடச் சிறுவர்களிடமும் கன்றுகளிடமும் இதுவரையில்லாத அன்பு பெருகுகிறதே, இது என்ன ஆச்சரியம்!'

13. 38. பலராமன் இவ்விதம் ஆலோசித்து ஞானக்கண்ணால் எல்லாக் கன்றுகளையும் சிநேகிதர்களையும் ஸ்ரீ கிருஷ்ணனாகவே கண்டார்.

13. 39. 'ஈசா! (நான் முன் உணர்ந்தபடி) இச் சிநேகிதர்கள் தேவர்களுமல்லர்; இக் கன்றுகள் ரிஷிகளுமல்லர்; வேற்றுமைக்கிருப்பிடமான இவர்களிடம் நீர் ஒருவரே பிரகாசிக்கின்றீர். நீர் இவ்வாறாகப் பிரிந்தது எங்ஙனம்? எல்லாவற்றையும் கூறியருளுதல்வேண்டும்' என்று கேட்க ஸ்ரீ கிருஷ்ணனால் சுருக்கமாக அது இவ்வாறென்று விளக்கப்பட்ட விருத்தாந்தத்தை பலராமன் அறிந்தார்.

---

13. 39. ஒ. ஆடுகின்றவனும் நீ, ஆடல் கண்டவனும் நீ.

ஒ. அவனேயவனு மவனுமவனு
மற்றெல்லாமு மறிந்தனமே. —நம்மாழ்வார்.

---

13. 34. ततः प्रवयसो गोपाः । பா. பே.

इत्यन्तरेणार्जुनयोः कृष्णस्तु यमयो-र्ययौ ।
आत्म-निर्वेशमात्रेण तिर्यग्गत-मुलूखलम् ॥ १०.२६ ॥

बालेन निष्कर्षयतान्व-गुलूखलं तद्
दामोदरेण तरसोत्कलितांघ्रिबन्धौ ।
निष्पेततुः परमविक्रमितातिवेप-
स्कन्ध-प्रवाल-विटपौ कृतचण्डशब्दौ ॥ १०.२७ ॥

तत्र श्रिया परमया ककुभः स्फुरन्तौ
सिद्धावुपेत्य कुजयोरिव जातवेदाः ।
कृष्णं प्रणम्य शिरसाखिल-लोकनाथं
बद्धांजली विरजसा-विद-मूचतुः स्म ॥ १०.२८ ॥

नमः परमकल्याण नमः परममंगळ ।
वासुदेवाय शांताय यदूनां पतये नमः ॥ १०.३६ ॥

अनुजानीहि नौ भूम-स्तवानुचर-किंकरौ ।
दर्शनं नौ भगवत ऋषे-रासीदनुग्रहात् ॥ १०.३७ ॥

---

10. 26. என்று கிருஷ்ணன் இரட்டையான மருத மரங்களின் இடையில் சென்றான். அப்படி அவன் செல்லுகையில் உரல் குறுக்காக மாட்டிக்கொண்டது.

10. 27. இடுப்பில் கயிற்றுடன் கூடிய கிருஷ்ணனால் தன் பின்னால் வரும் உரல் வேகமாக இழுக்கப்படவே அவனுடைய பராக்கிரமத்தால் பெருங்கிளைகளும் சிறு கிளைகளும் இலைகளும் அலங்கோலமாய் அசைய வேர்ப்பிடிப்பு அறுபட்டுப் பெரிய இரைச்சலுடன் மரங்கள் வீழ்ந்தன.

10. 28. இருமரங்களிலுமிருந்து அக்கினி தேவனைப்போல் ஒளியின் மிகுதியால் திசைகளைப் பிரகாசப்படுத்திக்கொண்டு பாவம் நீங்கிய இரு சித்த புருஷர்கள் எழுந்து கைகூப்பிக்கொண்டு உலகனைத்திற்கும் நாதனை கிருஷ்ணனைத் தலைவணங்கிப் பின் வருமாறு போற்றினார்கள்.

10. 36. 'பரம கல்யாணமூர்த்தியான உமக்கு நமஸ்காரம். பரம மங்கள வடிவினரான உமக்கு நமஸ்காரம். சாந்தரும் யதுபதியும் வசுதேவ குமாரருமான உமக்கு நமஸ்காரம்.

10. 37. 'அளவிடற்கரிய பெருமை வாய்ந்தவரே! உங்களுடைய அடியார்களின் அடிமைகளாக எங்களை அறியவேண்டும். எங்களுக்கு பகவானுடைய தரிசனம் நாரத மகரிஷியின் அனுக்கிரகத்தால் கிடைக்கலாயிற்று.

---

10. 27. निष्कर्षयता बदूखलं । दामोदरेण बद्धिनो । பா. பே.

एवं सपशवो गोपा-स्तोकाश्लेष-सुनिर्वृताः ।
कृच्छ्राच्छनै-रपगतास्तदनुस्मृत्युदश्रवः ॥ १३.३४ ॥

व्रजस्य रामः प्रेमर्द्धे वीक्ष्यौत्कण्ठ्य-मनुक्षणम् ।
मुक्तस्तनेष्वपत्येषु ह्यहेतुविदचिन्तयत् ॥ १३.३५ ॥

किमेतदद्भुत-मिव वासुदेवेऽखिलात्मनि ।
व्रजस्य सात्मन-स्तोकेष्वपूर्वं प्रेम वर्धते ॥ १३.३६ ॥

इति संचिन्त्य दाशार्हो वत्सान् सवयसानपि ।
सर्वानाचष्ट वैकुण्ठं चक्षुषा वयुनेन सः ॥ १३.३८ ॥

नैते सुरेशा ऋषयो न चैते त्वमेव भासीश भिदाश्रयेऽस्मिन् ।
सर्वं पृथक्त्वं निगमात्कथं वदेत्युक्तेन वृत्तं प्रभुणा बलोऽवैत् ॥ १३.३९ ॥

---

13. 34. இங்ஙனம் இடையர்கள் மக்களைத் தழுவியதால் மட்டிலா மகிழ்ச்சியடைந்தபின் அவர்களை விட்டுப் பிரியமாட்டாதவர்களாய் நினைந்து நினைந்து கண்ணீர் விட்டார்கள்; பசுக்களும் தம் கன்றுகளுடன் அவ்விதமே இருந்தன.

13. 35. ஊட்டு மறந்த கன்றுகளிடம் தாய்ப் பசுக்களுக்கும் பால் மறந்த பிள்ளைகளிடம் பெற்றோர்களுக்கும் விவரிக்கமுடியாத வகையில் அன்பு பெருகிய அதிசயத்தைக் கண்ணுற்று பலராமர் இதற்குக் காரணந் தெரியாமல் யோசிக்கலானார்.

13. 36. 'அனைவருக்கும் ஆத்மாவாகிய கிருஷ்ணனிடத்தில் ஏற்படும் பிரேமையைப்போல் (கோபர்களுக்கும் கோபிகைகளுக்கும் பசுக்களுக்கும்) இடைச்சேரி முழுவதிற்கும் எனக்கும்கூடச் சிறுவர்களிடமும் கன்றுகளிடமும் இதுவரையில்லாத அன்பு பெருகுகிறதே, இது என்ன ஆச்சரியம்!'

13. 38. பலராமன் இவ்விதம் ஆலோசித்து ஞானக்கண்ணால் எல்லாக் கன்றுகளையும் சிநேகிதர்களையும் ஸ்ரீ கிருஷ்ணனாகவே கண்டார்.

13. 39. 'ஈசா! (நான் முன் உணர்ந்தபடி) இச் சிநேகிதர்கள் தேவர்களுமல்லர்; இக் கன்றுகள் ரிஷிகளுமல்லர்; வேற்றுமைக்கிருப்பிடமான இவர்களிடம் நீர் ஒருவரே பிரகாசிக்கின்றீர். நீர் இவ்வாருகப் பிரிந்தது எங்ஙனம்? எல்லாவற்றையும் கூறியருளுதல்வேண்டும்' என்று கேட்க ஸ்ரீ கிருஷ்ணனால் சுருக்கமாக அது இவ்வாறென்று விளக்கப்பட்ட விருத்தாந்தத்தை பலராமன் அறிந்தார்.

---

13. 39. ஒ. ஆடுகின்றவனும் நீ, ஆடல் கண்டவனும் நீ.

ஒ. அவனேயவனு மவனுமவனு
மற்றெல்லாமு மறிந்தனமே. —நம்மாழ்வார்.

பா. பே.

13. 34. ततः प्रवयसो गोपाः ।

तावदेवात्मभू-रात्म-मानेन त्रुट्यनेहसा ।
पुरोवदाब्दं क्रीडन्तं ददृशे सकलं हरिम् ॥ १३.४० ॥

ब्रह्मा उवाच—

यावन्तो गोकुले बालाः सवत्सास्सर्व एव हि ।
मायाशये शयाना मे नाद्यापि पुनरुत्थिताः ॥ १३.४१ ॥

इत एतेऽत्र कुत्रत्या मन्मायामोहितेतरे ।
तावन्तो यावदद्याब्दं क्रीडन्तो विष्णुना सह ॥ १३.४२ ॥

एवमेतेषु भेदेषु चिरं ध्यात्वा सहात्मभूः ।
सत्याः के कतरे नेति ज्ञातुं नेष्टे कथंचन ॥ १३.४३ ॥

एवं विमोहयन् विष्णुं विमोहं विश्वमोहनम् ।
स्वयैव माययाऽजोऽपि स्वयमेव विमोहितः ॥ १३.४४ ॥

तावत्सर्वे वत्सपालाः पश्यतोऽजस्य तत्क्षणात् ।
व्यदृश्यन्त घनश्यामाः पीतकौशेय-वाससः ॥ १३.४६ ॥

---

13. 40. ஒருவருஷமானதும், பிரம்ம தேவர் தன் கணக்குப்படி ஒரு கணப் போது கடந்து திரும்பிவந்து முன்போலவே தன் சூழலுடன் ஒரு வருஷமாய் விளையாடுகிற ஸ்ரீ ஹரியைப் பார்த்தார்.

பிரம்மா கூறியது—

13. 41. 'கோகுலத்தில் கன்றுகளுடன் சிறுவர்கள் எவ்வளவு உளரோ அவ்வளவுபேரும் என் மாயையாகிற சயனத்தில் உறங்குகிறார்கள். இது நிச்சயம். இப்பொழுதுகூட மீண்டும் எழுந்திருக்கவில்லை.

13. 42. 'எனது மாயையால் மயங்கியவர்களைத்தவிர ஸ்ரீ கிருஷ்ணனுடன் ஒரு வருஷமாக அங்கே விளையாடுகிறவர்களும் அவ்வளவுபேர் உளர். அங்ஙனம் உள்ள இவர்கள் எங்கிருந்து வந்தனர் ?'

13. 43. அந்தப் பிரம்மதேவர் இவ்வாறு வெகுநேரம் ஆலோசித்தும் இவ்விரு பிரிவுகளில் உண்மையானவர்கள் எவர்களென்றும் அல்லாதவர்கள் எவர்களென்றும் அறிய முயன்றும் முடியவில்லை.

13. 44. இவ்வாறு பிரம்மதேவர் மயக்கமற்றவரும் உலகனைத்தையும் மயக்கு விப்பவரும் ஆகிய விஷ்ணுவை மயக்குவிக்க முயன்றும் தானே மயக்குற்றார்.

13. 46. அப்பொழுது பிரம்மதேவர் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அதே நொடியில் எல்லாக் கன்றுகளும் சிறுவர்களும் நீருண்டமேகம்போல் கருத்தவர் களாகவும் மஞ்சட் பட்டாடையணிந்தவர்களாகவும் காணப்பட்டனர்.

---

13. 40. பிரம்மா தன்னுலகம் சென்றபோது, தன் ஸ்தானத்தில் தன் வடிவில் அங்குங் கண்ணனே இருக்கக் கண்டு மயங்கினார்.

நம்முடைய வருஷம் பிரம்மாவுக்கு ஒரு நொடிப்போது. நம்முடைய ஒருநாள் சில கிருமி களுக்குப் பல தலைமுறை வாழுங்காலமாகும்.

---

13. 43. सत्याश्रया एत इति ज्ञातुं नेशे ॥ பா. பே.

चतुर्भुजाः शंखचक्रगदाराजीवपाणयः ।
किरीटिनः कुण्डलिनो हारिणो वनमालिनः ॥ १३.४८ ॥

एवं सकृद् ददर्शाजः परब्रह्मात्मनोऽखिलान् ।
यस्य भासा सर्वमिदं विभाति सचराचरम् ॥ १३.५५ ॥

ततोऽर्वाक् प्रतिलब्धाक्षः कः परेतवदुत्थितः ।
कृच्छ्राच्छनै-र्म्लीयदृष्टी-राचष्टेदं सहात्मना ॥ १३.५८ ॥

सपद्येवाभितः पश्यन् दिशोऽपश्यत्पुरः स्थितम् ।
वृन्दावनं जनाजीव्य-द्रुमाकीर्णं समाप्रियम् ॥ १३.५९ ॥

तत्रोद्वहत्पशुपवंशशिशुत्वनाट्यं ब्रह्माद्वयं परमनन्त-मगाधबोधम् ।
वत्सान् सखीनिव पुरा परितो विचिन्वदेकं सपाणिकवलं
परमेष्ठ्यचष्ट ॥ १३.६१ ॥

दृष्ट्वा त्वरेण निजधोरणतोऽवतीर्य पृथ्व्यां वपुः कनकदण्डमिवाभिपात्य ।
स्पृष्ट्वा चतुर्मुकुटकोटिभि-रङ्घ्रियुग्मं नत्वा मुदश्रु-सुजलै-
रकृताभिषेकम् ॥ १३.६२ ॥

---

13. 48. நான்கு புஜங்களையுடையவர்களாகவும், சங்கு, சக்கரம், கதை, தாமரைப்பூ இவற்றைக் கைகளிலேந்தியவர்களாகவும், கிரீடமும் குண்டலமும் ஹாரமும் வனமாலையும் அணிந்தவர்களாகவும் (காணப்பட்டனர்).

13. 55. எவருடைய ஒளியால் இந்த சராசரப் பிரபஞ்சம் முழுதும் பிரகாசிக்கின்றதோ அந்த பரப்பிரம்மஸ்வரூபமாகவே எல்லோரையும் பிரம்மதேவர் ஒருங்கே பார்த்தார்.

13. 58. பிறகு பிரம்மதேவர் வெளிப்பார்வையை அடைந்தார். இறந்தவன் எழுந்திருந்தாற்போல் எழுந்திருந்து மெதுவாகக் கண்களைத்திறந்து தன்னையும் உலகையும் கண்டார்.

13. 59. திசைதோறும் சுற்றி நோக்கி ஜனங்களுக்கு ஜீவாதாரமான மரங்கள் நிறைந்ததும் எங்கும் பிரியமான பொருள்கள் நிறைந்ததுமான பிருந்தாவனம் தன்னெதிரில் இருக்கக் கண்டார்.

13. 61. அவ்விடத்தில் ஆயர்குலத்துக் குழந்தையாக நடிப்பவரும் இரண்டற்ற பரப் பிரம்மமும் அளவற்றவரும் ஆழங்காணமுடியாத அறிவுடையவருமான ஸ்ரீ கிருஷ்ணனை முன்போலவே கன்றுகளையும் சிநேகிதர்களையும் நாற்புறமும் தேடிக் கொண்டு கையில் அன்னக் கவளத்துடன் திரிபவராக பிரம்ம தேவர் கண்டார்.

13. 62. அப்படிப் பார்த்தவுடன் விரைவாகத் தனது வாகனத்திலிருந்து இறங்கி தங்கத்தடிபோல் தனது உடலைப் பூமியில் கிடத்தி நான்கு கிரீடங்களின் நுனிகளால் ஸ்ரீ கிருஷ்ணனுடைய இரு பாதங்களைத் தொட்டு வணங்கி ஆனந்தக் கண்ணீரால் அபிஷேகம் செய்தார்.

---

13. 47. ஒ. கிரீடினங் கதினஞ் சக்ரிணஞ் ச தேஜோராசிம் ஸர்வதோ தீப்திமந்தம். பச்யாமி த்வாம் துர்நிரீக்ஷ்யம் ஸமந்தாத் தீப்தானலார்க்கத்யுதி-மப்ரமேயம் ॥ —கீ. 11. 17

शनैरथोत्थाय विमृज्य लोचने मुकुन्दमुद्वीक्ष्य विनम्रकन्धरः ।
कृतांजलिः प्रश्रयवान् समाहितः सवेपथु-र्गद्गदयैडतेरया ॥ १३.६४ ॥

ब्रह्मोवाच—

पश्येश मेऽनार्यमनन्त आद्ये परात्मनि त्वय्यपि मायिमायिनि ।
मायां वितत्येक्षितु-मात्मवैभवं अहं कियानै-च्छमिवार्चिरग्नौ ॥ १४.९ ॥

अतः क्षमस्वाच्युत मे रजो भुवो ह्यजानत-स्त्वत् पृथगीशमानिनः ।
अजावलेपान्ध-तमोऽन्धचक्षुष एषोऽनुकंप्यो मयि नाथवानिति ॥ १४.१० ॥

उत्क्षेपणं गर्भगतस्य पादयोः किं कल्पते मातुरधोक्षजागसे ।
किमस्ति-नास्ति-व्यपदेश-भूषितं तवास्ति कुक्षेः कियदप्यनन्त ॥ १४.१२ ॥

अद्यैव त्वदृतेऽस्य किं मम न ते मायात्व-मादर्शित-
मेकोऽसि प्रथमं ततो व्रजसुहृद्-वत्साः समस्ता अपि ।
तावन्तोऽसि चतुर्भुजा-स्तदखिलैः साकं मयोपासिता-
स्तावन्त्येव जगन्त्यभू-स्त-दमितं ब्रह्माद्वयं शिष्यते ॥ १४.१८ ॥

13. 64. பிறகு, மெதுவாக எழுந்திருந்து, கண்களைத் துடைத்துக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த்துத் தலைகுனிந்தவராய் வணக்கத்துடன் நடுங்கிக் கைகளைக் கூப்பிக்கொண்டு தழுதழுத்த சொற்களால் ஏகாக்கிரசித்தத்துடன் துதிக்கலானார்.

பிரம்மா கூறியது—

14. 9. ஈசனே! என் பிழையைப் பாரும். அனைத்திற்கும் முதல்வரும் முடிவற்றவரும் மாயாவிகளுக்கும் மாயாவியும் பரமாத்மாவுமான உம்மிடம்கூட மாயையைச் செலுத்தி என்னுடைய திறமையைப் பார்க்க விரும்பினேனல்லவா? அக்கினி போன்ற உம்மிடமிருந்து தோன்றிய சுடர் போன்ற நான் உம்முன் எம்மாத்திரம்!

14. 10. அச்சுதா! ஆகையால் ரஜோகுணத்தில் உதித்தவனும் 'நான் சிருஷ்டி கர்த்தா' என்ற கருவமாகிய காரிருளால் கண் குருடாகியவனும் உமது மகிமையை முற்றிலும் அறியாதவனும், உம்மைத் தவிர 'நானும் ஈசன்' என்ற அபிமானமுடையவனுமான என்னுடைய குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும். இவன் நம்முடையவன்' என்று கிருபை புரியவேண்டும்.

14. 12. தாயின் கருவிலுள்ள சிசுவின் கால் அசைவு தாய்க்குக் குற்றமாகுமா? ஸ்தூலமோ ஸூக்ஷ்மமோ காரியமோ காரணமோ எது எது உண்டோ அது எல்லாம் உமது வயிற்றிலல்லாமல் வெளியிலா இருக்கிறது?

14. 18. இப்போதே உம்மையல்லாத இவ்வுலகம் பொய் என்பது உம்மால் எனக்குக் காண்பிக்கப்படவில்லையா? முதலில் நீர் ஒருவராயிருந்தீர். பின்பு ஆயர் பாடி நண்பர்களாகவும் கன்றுகளாகவும் (புல்லாங்குழல் கொம்பு முதலிய) எல்லாமாகவும், அதன்பின் என்னுடன்கூட எல்லோராலும் சேவை செய்யப்பட்ட நான்கு கைகளுடைய உருவத்துடன் அவ்வளவாகவும் தோன்றினீர். பிறகு அவ்வளவு உலகங்களாகவும் தோன்றினீர். முடிவில் அளவு படாததும் இரண்டற்றதுமான பிரம்மஸ்வரூபமே எஞ்சி நிற்கின்றது.

एवंविधं त्वां सकलात्मनात्मनि स्वात्मान-मात्मात्मतया विचक्षते।
गुर्वर्कलब्धोपनिषत्-सुचक्षुषा ये ते तरन्तीव भवानृतांबुधिम् ॥ १४.२४ ॥

अज्ञानसंज्ञौ भवबन्ध-मोक्षौ द्वौ नाम नान्यौ स्त ऋतज्ञ-भावात्।
अजस्र नित्यात्मनि केवले परे विचार्यमाणे तरणाविवाहनी ॥ १४.२६ ॥

त्वामात्मानं परं मत्वा परमात्मानमेव च।
आत्मा पुन-र्बहिर्मृग्य अहोऽज्ञजनताज्ञता ॥ १४.२७ ॥

अन्त-र्भवेऽनन्त भवन्तमेव ह्यतत्त्यजन्तो मृगयन्ति सन्तः।
असन्तमप्यन्त्यहि-मन्तरेण सन्तं गुणं तं किमु यन्ति सन्तः॥ १४.२८ ॥

अथापि ते देव पदांबुजद्वय-प्रसादलेशानुगृहीत एव हि।
जानाति तत्त्वं भगवन् महिम्नो न चान्य एकोऽपि चिरं विचिन्वन् ॥ १४.२९ ॥

अहो भाग्य-महो भाग्यं नन्दगोपव्रजौकसाम्।
यन्मित्रं परमानन्दं पूर्णं ब्रह्म सनातनम् ॥ १४.३२ ॥

---

14. 24. இவ்வாறாக ஸகல ஜீவராசிகளுக்கும் தத்தம் ஆத்மாவாயிருக்கிற உம்மை எவர்கள் சூரியனைப்போல் பிரகாசிக்கும் குருகிருபையால் உபநிஷதங்களாகிற சிறந்த கண்களைக்கொண்டு தமக்குத் தாமாகவே பார்க்கிறார்களோ அவர்கள்தான் ஸம்ஸாரமாகிற மாயைக் கடலைத் தாண்டுவார்கள் போலும்.

14. 26. இரவும் பகலும் சூரியனைத்தவிர இல்லாதவாறு விசாரிக்கும்போது இரண்டற்றதாகவும் நித்ய ஞானஸ்வரூபமாகவும் உள்ள பரமாத்மாவினிடம் அஜ்ஞானத்தால் தோன்றுவதும் ஸம்ஸாரபந்தம் மோக்ஷம் எனப் பிரசித்தமாய்க் கூறப்படுவதுமான இவ்விரண்டும் ஸத்யஜ்ஞானஸ்வரூபியான பரமாத்மாவைவிட வேறன்று.

14. 27. பரமாத்மாவாகிய உம்மை வேறாக நினைத்து, வேறாயுள்ள உடல் முதலியவற்றைத் தாமாக நினைத்து வெளியில் மீண்டும் ஆத்மா தேடற்குரியது என்று கருதும் அறிவீனர்களாகிய ஜனங்களின் அறிவீனமே ஆச்சரியம்.

14. 28. ஸர்வஸ்வரூபியே! நல்ல ஞானம் படைத்தவர்கள் சரீரத்தில் ஜடமானவற்றை 'இது அல்ல இது அல்ல' என்று தள்ளிக்கொண்டே சரீரத்திலேயே பரமாத்மாவாகிய உம்மைத் தேடிக் காண்கிறார்கள். அருகில் உள்ள கயிற்றில் தோன்றிய பொய்ப் பாம்பை அறிவினால் அப்புறப்படுத்தாமல் அதைக் கயிறாக விவேகிகளாயினும் காண்பார்களா ?

14. 29. பகவானே! தேவதேவனே! (ஞானிகள் தமக்குள்ளே தேடி அடைவர் என்பது உண்மை) எனினும் உம்முடைய திருவடித் தாமரைகளைச் சேவித்து ஒரு துளியாவது பிரஸாதம் அனுகிரகிக்கப் பெற்றவன் எவனோ அவனே பகவானாகிய உமது மகிமையின் உண்மையை அறிவான். மற்றவன் தனித்திருந்து எவ்வளவு காலம் தேடினாலும் அறியமாட்டான்.

14. 32. பரமானந்தஸ்வரூபரும் பரிபூர்ணரும் முன்னைப் பழம் பொருளும் பரப்பிரம்மமும் ஆகிய உம்மைத் தோழராகப் பெற்ற நந்தகோகுல வாசிகளின் பாக்கியமே பாக்கியம்.

तद्भूरि-भाग्य-मिह जन्म किमप्यटव्यां यद्गोकुलेऽपि
कतमांघ्रि-रजोऽभिषेकम् ।
यज्जीवितं तु निखिलं भगवान् मुकुन्द-स्त्वद्यापि यत्पदरजः
श्रुतिमृग्यमेव ॥ १४.३४ ॥

एषां घोषनिवासिना-मुत भवान् किं देव रातेति न-
श्चेतो विश्वफलात् फलं त्वदपरं कुत्राप्ययन् मुह्यति ।
सद्वेषादिव पूतनापि सकुला त्वामेव देवापिता
यद्धामार्थ-सुहृत्-प्रियात्मतनय-प्राणाशया-स्त्वत्कृते ॥ १४.३५ ॥

तावद्रागादयः स्तेना-स्तावत् कारागृहं गृहम् ।
तावन् मोहोऽङ्घ्रि-निगडो यावत् कृष्ण न ते जनाः ॥ १४.३६ ॥

प्रपंचं निष्प्रपंचोऽपि विडंबयसि भूतले ।
प्रपन्न-जनतानन्द-सन्दोहं प्रथितुं प्रभो ॥ १४.३७ ॥

जानन्त एव जानन्तु किं बहूक्त्या न मे प्रभो ।
मनसो वपुषो वाचो वैभवं तव गोचरः ॥ १४.३८ ॥

---

14. 34. இன்றும் எந்த பகவானுடைய பாததூளியானது வேதங்களால் தேடப் படுகிறதோ (ஆனல் காணப்படவில்லையோ) அந்த பகவானுகிய முகுந்தர் கோகுல வாசிகளுடைய வாழ்வு முழுவதும் வியாபித்திருக்கிருர். ஆகையால் இவ்வுலகில் இந்த பிருந்தாவனத்தில் கோகுலத்தில் உள்ள எவருடைய பாததூளியாலாவது அபிஷேகம் செய்விக்கப்பெற்று (பசு பக்ஷி செடி கொடி முதலிய) எதாவதொரு பிறவி ஏற்படினும் அதுவே சிறந்த பாக்கியமாகும்.

14. 35. தேவரே! பூதனை என்பவள் தாயின் வேஷம் போட்டதற்காக அவள் வம்சத்தாருடன் உம்மை அடைந்தவளானுள். அப்படியிருக்க எந்த கோகுல வாசிகள் தங்களுக்குப் பிரியமான வீடு, பொருள் உறவு, உடல், மக்கள் உயிர், மனது அனைத்தையும் உமக்கே அர்ப்பணம் செய்திருக்கின்றனரோ அவர்களுக்கு ஸர்வபல ரூபியாகிய உம்மையே தருவதன்றி வேறு என்ன பலனை நீர் அளிக்கப்போகிறீர் என்று, தேவரே, எங்கள் மனது எவ்வழியும் செல்லமாட்டாமல் மயங்குகிறது.

14. 36. கிருஷ்ணு! ஜனங்கள் எதுவரையில் உம்மைச் சார்ந்தவராக ஆகவில்லையோ, அதுவரை அவர்களுடைய ஆசை முதலியவைகள் திருடர்களுக்குச் சமானமாகும்; அதுவரை வீடுச் சிறைக்கொப்பாகும்; அதுவரை மதிமயக்கம் கால் விலங்காகும்.

14. 37. பிரபுவே! பிரபஞ்சத்தில் பற்றற்றவராயிருந்தாலும் நீர் உம்மைச் சரணடைந்த ஜனங்களுக்குண்டாகும் ஆனந்தப் பெருக்கை வளர்க்கவே பூவுலகில் பிரபஞ்ச நாடகத்தை நடிக்கின்றீர்.

14. 38. பிரபுவே! அதிகம் சொல்லுவதால் என்ன பயன்? உம்மை அறிவோம் என்பவர்கள் அறியட்டும். என் மனதிற்கும் வாக்கிற்கும் காயத்திற்கும் உமது வைபவம் எட்டவில்லை.

---

14. 34. ஒ. ஆஸாமஹோ சரணரேணு ஜுஷாமஹம் ஸ்யாம் ப்ருந்தாவனே கிமபி குல்மலதெளஷதீனும்,
—பாத்தவர் : பாக. 10. 47. 61.
14. 38. ஒ. யதோ வாசோ நிவர்த்தந்தே। அப்ராப்ய மனஸா ஸஹ।
—தை. உப. 24.
ஒ. அவிஜ்ஞாதம் விஜானதாம்। விஜ்ஞாத மவிஜானதாம்.
—கேன. உப. 23.

---

14. 37. विडंबयसि मायया ।

श्रीकृष्ण वृष्णिकुल-पुष्कर-जोषदायिन्
क्ष्मा-निर्जर-द्विज-पशूदधि-वृद्धिकारिन् ।
उद्धर्म-शार्वरहर क्षितिराक्षसध्रु-
गाकल्पमार्क-मर्हन् भगवन् नमस्ते ॥ १४.४० ॥

इत्यभिष्टूय भूमानं त्रिः परिक्रम्य पादयोः ।
नत्वाभीष्टं जगद्धाता स्वधाम प्रत्यपद्यत ॥ १४.४१ ॥

ततोऽनुज्ञाप्य भगवान् स्वभुवं प्रागिव स्थितान् ।
वत्सान् पुलिन-मानिन्ये यथा पूर्वसखं स्वकम् ॥ १४.४२ ॥

एकस्मिन्नपि याते ऽब्दे प्राणेशं चान्तराऽऽत्मनः ।
कृष्णमायाहता राजन् क्षणार्धं मेनिरेऽर्भकाः ॥ १४.४३ ॥

किं किं न विस्मरन्तीह माया-मोहितचेतसः ।
यन्मोहितं जगत् सर्व-मभीक्ष्णं विस्मृतात्मकम् ॥ १४.४४ ॥

---

14. 40. ஸ்ரீ கிருஷ்ண! விருஷ்ணி குலமாகிற தாமரையை மலர்விக்கும் சூரியனே! பூமி, தேவர்கள், பிராம்மணர்கள், பசுக்கள் இவர்களின் கூட்டமாகிய கடலை மகிழ்ச்சியால் பொங்குவிக்கும் சந்திரனே! அதர்மமாகிற இருட்டை விலக்கும் தீபமே! பூமியிலுள்ள அரக்கரை ஒழிப்பவரே! பகவானே! சூரியன் உள்ளவரை, கல்பகாலம் வரை, போற்றத்தக்கவரே! உமக்கு நமஸ்காரம்.

14. 41. உலகைப் படைக்கும் பிரம்மா எங்கும் நிறைந்தவரும் எங்கும் போற்றப் பட்டவருமான கிருஷ்ணனை நன்கு துதித்து மூன்றுதடவை பிரதக்ஷிணம் செய்து பாதங் களில் நமஸ்கரித்துத் தனது இருப்பிடம் சென்றார்.

14. 42. அதன்மேல் பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் பிரம்மதேவருக்கு விடையளித்து விட்டு முன்பிருந்த கன்றுகளை முன் தமது தோழர்களுடன் விளையாடின மணல் திட்டிற்கு அழைத்துச் சென்றார்.

14. 43. அரசே! தங்களுடைய உயிர்த் தோழனாகிய கிருஷ்ணனை விட்டுப் பிரிந்து ஒருவருஷம் ஆகியிருந்தபோதிலும் சிறுவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனுடைய மாயையில் மயங்கி அதை அரைக்கணமாய் எண்ணினார்கள்.

14. 44. எந்த மாயையில் மயங்கி அடிக்கடி இவ்வுலகம் முழுதும் ஆத்மாவையே மறந்துவிடுகிறதோ அந்த மாயையில் மயங்கிய மதியுடையவர்கள் இவ்வுலகில் எதைத் தான் மறப்பதில்லை?

---

14. 44. நாம் முற்பிறவிகளில் அனுபவித்ததையெல்லாம் இப்படித்தான் பகவா னுடைய மாயையால் மறந்துபோய்விட்டோம். அதனால் முன்னால் இருக்கவே இல்லை என்று கூடச் சொல்லும்படித் தோன்றுகிறது.

बर्हप्रसून-नवधातु-विचित्रितांगः प्रोद्दामवेणु-दल-शृंग-रवोत्सवाढ्यः ।
वत्सान् गृणन्ननुगगीत-पवित्रकीर्ति-र्गोपीदृगुत्सवदृशिः प्रविवेश
गोष्ठम् ॥ १४.४७ ॥

अद्यानेन महाव्यालो यशोदानन्दसूनुना ।
हतोऽविता वयं चास्मादिति बाला व्रजे जगुः ॥ १४.४८ ॥

राजोवाच—

ब्रह्मन् परोद्भवे कृष्णे इयान् प्रेमा कथं भवेत् ।
योऽभूत-पूर्व-स्तोकेषु स्वोद्भवेष्वपि कथ्यताम् ॥ १४.४९ ॥

श्रीशुक उवाच—

सर्वेषामपि भूतानां नृप स्वात्मैव वल्लभः ।
इतरेऽपत्य-वित्ताद्या-स्तद्वल्लभतयैव हि ॥ १४.५० ॥

तद्राजेन्द्र यथा स्नेहः स्वस्वकात्मनि देहिनाम् ।
न तथा ममतालंबि-पुत्र-वित्तगृहादिषु ॥ १४.५१ ॥

---

14. 47. மயில்தோகை, புஷ்பம், வர்ணதாதுக்கள் இவைகளால் அலங்கரிக்கப் பெற்ற திருமேனியுடன் கம்பீரமான புல்லாங்குழல், கொம்பூதி, இவற்றின் கோஷங் களால் உற்சவம் கொண்டெழுந்தருளினதுபோல் கூடவருபவர்கள் தமது புண்ணிய மான புகழைப் பாடக் கோபிகளின் திருஷ்டிக்குப் பரமபாக்கியமாய் விளங்கும் ஸ்ரீ கிருஷ்ணன் கோகுலத்துட் புகுந்தார்.

14. 48. கோகுலம் சென்றதும் சிறுவர்கள் "யசோதைக்கும் நந்தருக்கும் பிள்ளையான இந்தக் கிருஷ்ணனால் இன்று ஒரு பெரிய பாம்பு கொல்லப்பட்டது. அதனிடமிருந்து நாங்கள் காப்பாற்றப்பட்டோம்" என்று சொன்னார்கள்.

அரசன் கூறியது—

14. 49. பிரம்மரிஷியே! தங்களுக்குப் பிறந்த குழந்தைகளிடத்தில்கூட முன் உண்டாகாத அவ்வளவு பிரேமை பிறர் குழந்தையான கிருஷ்ணனிடத்தில் (எல்லோ ருக்கும்) எப்படி உண்டாயிற்று? அதை விளக்கிக் கூறவேண்டும்.

ஸ்ரீ சுகர் கூறியது—

14. 50. அரசே! எல்லாப் பிராணிகளுக்கும் அவரவர் ஆத்மாதான் மிகப் பிரிய மானது. மக்கள் பொருள் முதலிய மற்றவையெல்லாம் அந்த ஆத்மாவுக்குச் சுக சாதனமாக இருப்பதால்தான் பிரியமாகின்றன என்று பிரசித்தம்.

14. 51. ராஜேந்திரரே! ஆகையால் பிராணிகளுக்கு அவரவர் ஆத்மாவிடத்தி லுள்ள அன்பு எப்படிப்பட்டதோ அப்படிப்பட்ட அன்பு மமதைக்கு விஷயமான மக்கள், மனைவி, வீடு முதலியவற்றில் இல்லை.

---

14. 47. ஒ. சாலப் பன்னிரைப் பின்னே தழைக்காவின் கீழ்த்தன் திருமேனி நின்றொளி திகழ
நீலநன் னறுங்குஞ்சி நேத்திரத்தாலணிந்து பல்லாயர் குழாநடுவே
கோலச் செந்தாமரைக் கண்மிளிரக் குழலூதி யிசைபாடிக் குனித்து ஆயரோ
டாலித்து வருகின்ற வாயப்பிள்ளை யழகுகண்டென் மகளயர்கின்றதே.
—பெரியாழ்வார்.

---

14. 50. सर्वेषामपि जन्तूनां ।

பா. பே.

देहात्मवादिनां पुंसा-मपि राजन्यसत्तम ।
यथा देहः प्रियतम-स्तथा न ह्यनु ये च तम् ॥ १४.५२ ॥

देहोऽपि ममताभाक् चेत्तह्यसौ नात्मवत् प्रियः ।
यज्जीर्यत्यपि देहेऽस्मिन् जीविताशा बलीयसी ॥ १४.५३ ॥

तस्मात् प्रियतमः स्वात्मा सर्वेषामपि देहिनाम् ।
तदर्थमेव सकलं जगदेतच्चराचरम् ॥ १४.५४ ॥

कृष्ण-मेन-मवेहि त्व-मात्मान-मखिलात्मनाम् ।
जगद्धिताय सोऽप्यत्र देहीवा-भाति मायया ॥ १४.५५ ॥

वस्तुतो जानतामत्र कृष्णं स्थास्नु चरिष्णु च ।
भगवद्रूप-मखिलं नान्यद् वस्त्विह किंचन ॥ १४.५६ ॥

सर्वेषामपि वस्तूनां भावार्थो भवति स्थितः ।
तस्यापि भगवान् कृष्णः किमतद्वस्तु रूप्यताम् ॥ १४.५७ ॥

---

14. 52. அரச சிரேஷ்டரே! தேகமே ஆத்மா என்று சொல்லும் புருஷர்களுக்குக்கூட தேகம் எப்படி மிகப் பிரியமானதோ அப்படி அந்த தேகத்தையனுசரித்த மற்ற எவையும் பிரியமானவை அல்ல.

14. 53. தேகமும் என்னுடையது என்று மமதைக்கு விஷயமானல் அப்பொழுது நிச்சயமாக இந்த தேகமும் ஆத்மாவைப்போல் பிரியமானதாயிருக்காது. ஏனென்றால் இந்த தேகம் மூப்பை அடையும்போது தான் ஜீவித்திருக்க வேண்டுமென்ற ஆசை வலுவாயிருக்கிறது.

14. 54. ஆகையால் எல்லாப் பிராணிகளுக்கும் அவரவர் ஆத்மாதான் மிகப் பிரியமானது. இந்தச் சராசரமான உலகம் முழுதும் அந்த ஆத்மாவிற்காகாகவே பிரியமாக ஆகிறது.

14. 55. இந்தக் கிருஷ்ணனை எல்லாப் பிராணிகளுக்கும் ஆத்மாவாக நீர் அறிய வேண்டும். அவரே உலகின் நன்மைக்காக இங்கு மாயையால் தேகமுள்ளவர்போல் விளங்குகிறார்.

14. 56. இங்கு ஸ்ரீ கிருஷ்ணனை உள்ளபடி அறிகிறவர்களுக்கு இவ்வுலகில் அசையாப் பொருளும் அசையும் பொருளும் எது எது உண்டோ அது எல்லாம் பகவானுடைய ஸ்வரூபமே அன்றி வேறில்லை.

14. 57. எல்லாப் பொருள்களுக்கும் உண்மையான இருப்பு அதன் காரணத்தில் இருக்கும். அந்தக் காரணத்திற்கும் காரணம் கிருஷ்ணபகவானேயாவார். ஆகையால் கிருஷ்ணனில்லாத வஸ்து என்று எதைத்தான் ரூபிக்க முடியும்!

---

14. 57. भवति स्मृतः ।

समाश्रिता ये पदपल्लवप्लवं महत्पदं पुण्य-यशो मुरारेः ।
भवांबुधि-र्वत्सपदं परं पदं पदं पदं यद् विपदां न तेषाम् ॥ १४.५८ ॥

एतत् सुहृद्भि-श्चरितं मुरारे-रघार्दनं शाड्वलजेमनं च ।
व्यक्तेतरद् रूपमजोर्वभिष्टवं शृण्वन् गृणन्नेति नरोऽखिलार्थान् ॥ १४.६० ॥

ततश्च पौगण्डवयः श्रितौ व्रजे बभूवतुस्तौ पशुपालसंमतौ ।
गाश्चारयन्तौ सखिभिः समं पदै-र्वृन्दावनं पुण्यमतीव चक्रतुः ॥ १५.१ ॥

स तत्र तत्रारुण-पल्लवश्रिया फलप्रसूनोरुभरेण पादयोः ।
स्पृश-च्छिखान् वीक्ष्य वनस्पतीन् मुदा स्मयन्निवाहाग्रजमादिपूरुषः ॥ १५.४ ॥

श्री भगवानुवाच—

अहो अमी देववरामरार्चितं पादांबुजं ते सुमनः फलार्हणम् ।
नमन्त्युपादाय शिखाभिरात्मन-स्तमोऽपहत्यै तरुजन्म यत्कृतम् ॥ १५.५ ॥

---

14. 58. மகான்கள் ஆச்ரயித்ததும் தளிர்போன்று மெதுவானதும் ஸம்ஸாரத்தைக் கடப்பதற்கு ஓடம் போன்றதுமான புண்ணியப் புகழ்வாய்ந்த முராரியினுடைய பாதத்தை எவர்கள் சரணமடைகின்றார்களோ அவர்களுக்குப் பிறவிக்கடல் கன்றின் குளம்படி போலாகிவிடும். அந்தப்பாதமே பரமபதமும் ஆகும். துன்பத்திற்கிருப்பிடமான ஸம்ஸாரம் அவர்களுக்கு இல்லை.

14. 60. ஸ்ரீ கிருஷ்ணன் சிநேகிதர்களுடன்கூடி விளையாடியது, அகாசுரவதம், புல்தரையில் போஜனம், கன்றுகளாகவும் அவற்றை மேய்க்கும் சிறுவர்களாகவும் ஆனது, பிரம்மதேவரின் ஸ்துதி முதலியவற்றைக் கேட்கிறவனும் கானம் செய்கிறவனும் ஆகிய மனிதன் எல்லாப் புருஷார்த்தங்களையும் அடைவான்.

15. 1. பிறகு கிருஷ்ணனும் பலராமனும் (ஐந்துவயதுக்கு மேற்பட்ட) பௌகண்டம் எனும் பருவத்தையடைந்தவர்களாய் கோகுலத்தில் பசுக்களை மேய்ப்பதில் தேர்ச்சி பெற்றவர்களானார்கள். சிநேகிதர்களுடன் பசுக்களை மேய்த்துக்கொண்டு தங்கள் திருவடிகளால் பிருந்தாவனத்தை மிகவும் புண்ணிய பூமியாகச் செய்தார்கள்.

15. 4. (வனத்தில் செல்லுகையில்) அங்கங்கு பழங்களுடனும் புஷ்பங்களுடனும் தழைத்துத் தொங்கும் கிளைகளின் அழகிய சிவந்த தளிர்களால் தங்களுடைய பாதங்களைத்தொடும் மரங்களைப்பார்த்து மகிழ்ச்சியுடன் ஆதி புருஷனாகிய ஸ்ரீ கிருஷ்ணன் தமயனை நோக்கிப் புன்முறுவலுடன் பின்வருமாறு கூறினார்.

ஸ்ரீ பகவான் கூறியது—

15. 5. தேவசிரேஷ்டா! இம்மரங்கள் புஷ்பங்களையும் பழங்களையும் காணிக்கையாகக் கொண்டு எதனால் தங்களுக்கு மரமாகிய பிறவி ஏற்பட்டதோ அந்தப் பாவத்தைப் போக்கிக்கொள்ளுவதற்காகத் தேவர்களால் பூஜிக்கப்பட்ட உமது பாதகமலத்தைக் கிளைகளால் நமஸ்கரிக்கின்றன.

---

14. 60. சாட்வல ஜேமனம்—சாட்வலே போஜனம்.

15. 4. ஒ. மரங்கள் நின்று மது தாரைகள் பாயும் மலர்கள் வீழும் வளர் கொம்புகள் தாழும்
இரங்கும் கூம்பும் திருமால் நின்ற பக்கம் நோக்கியவை செய்யும் குணமே.
—பெரியாழ்வார்.

धन्येयमद्य धरणी तृणवीरुधस्त्वत्-पादस्पृशो द्रुमलताः करजाभिमृष्टाः ।
नद्योऽद्रयः खगमृगाः सदयावलोकै-र्गोप्योन्तरेण भुजयोरपि
यत्स्पृहा श्रीः ॥ १५.८ ॥

श्रीशुक उवाच—

एवं वृन्दावनं श्रीमत् कृष्णः प्रीतमनाः पशून् ।
रेमे संचारयन्नद्रेः सरिद्रोधस्सु सानुगः ॥ १५.९ ॥

क्वचिच्च कलहंसाना-मनुकूजति कूजितम् ।
अभिनृत्यति नृत्यन्तं बर्हिणं हासयन् क्वचित् ॥ १५.११ ॥

मेघगंभरिया वाचा नामभिर्दूरगान् पशून् ।
क्वचिदाह्वयति प्रीत्या गोगोपाल-मनोज्ञया ॥ १५.१२ ॥

क्वचित् क्रीडापरिश्रान्तं गोपोत्संगोप-बर्हणम् ।
स्वयं विश्रामयत्यार्यं पादसंवाहनादिभिः ॥ १५.१४ ॥

---

15. 8. இந்த பூமியானது இப்போது மகாபாக்கியம் படைத்ததாய் விளங்குகிறது. உமது பாதத்தைத் தொடுகின்ற புற்பூண்டுகளும் நகங்களால் கிள்ளப்பட்ட மரங்களும் கொடிகளும் அன்புடன் பார்க்கப்பெற்ற பறவைகளும் மிருகங்களும் நதிகளும் மலைகளும் பாக்கியம் படைத்தவை. லக்ஷ்மீதேவி விரும்பும் மார்பையடைந்த கோபிகளும் மகாபாக்கியசாலிகள்.

ஸ்ரீ சுகர் கூறியது—

15. 9. இவ்வாறு பரமபாக்கியம் நிறைந்த பிருந்தாவனத்தில் மனம் மகிழ்ந்த ஸ்ரீ கிருஷ்ணர் சிநேகிதர்களுடன் மலையடிவாரங்களிலுள்ள ஆற்றங்கரைகளில் பசுக்களை மேய்த்துக்கொண்டு விளையாடினார்.

15. 11. சிலசமயங்களில் ஹம்ஸங்களின் தொனியைப் பின்பற்றிக் கூவுவார். சிலசமயங்களில் தன் சிநேகிதர்களுக்குக் களிப்பூட்டிக்கொண்டு ஆடும் மயிலுக்கு எதிரில் நின்று ஆடுவார்.

15. 12. சிலசமயங்களில் பசுக்களையும் இடையர்களையும் மகிழ்விக்கும் மேகம் போன்ற கம்பீரமான வாக்கால் தூரத்தில் சென்றுவிட்ட பசுக்களை அன்புடன் பெயரிட்டுக் கூப்பிடுவார்.

15. 14. சிலசமயங்களில் விளையாடிக் களைத்துக் கோபர்களின் மடியில் தலைவைத்து இளைப்பாறும் தமையனுக்குக் கால் பிடிப்படிதுபோன்ற செயல்களால் சிரமத்தைப் போக்குவார்.

15. 15-44. (இவ்வாறு விளையாடுகையில் ஒருநாள் பனைமரங்கள் நிறைந்த ஒரு வனத்திற்குச் சென்றனர். அங்கு கழுதை உருக்கொண்ட தேனுகாசுரன் என்பவன் இருந்தான். பலராமன் வனத்தில் புகுந்து தன் வலிமையால் மரங்களை உலுக்கிப் பழங்களை விழச்செய்தார். சந்தடி கேட்டு அசுரன் ஓடிவந்து பலராமனைப் பின் கால்களால் உதைக்க முயன்றான். அப்போது பலராமன் அவன் கால்களைப் பிடித்துச் சுழற்றிப் பனைமரங்களின்மீது வீசினான். அவன் உயிர் துறந்தான். அவனுடைய உறவினர்களான மற்ற அசுரர்கள் பின்னர் எதிர்த்துவர அவர்களையும் ஸ்ரீ கிருஷ்ணரும் பலராமனும் கொன்று விழ்த்தினர்.)

15, 9. **एवं वृन्दावने कृष्णः श्रीमान् ।** 15. 11. **हासयन् सखीन्** பா. பே.

एवं स भगवान् कृष्णो वृन्दावनचरः क्वचित्।
ययौ राममृते राजन् कालिन्दीं सखिभि-र्वृतः ॥ १५.४७ ॥

अथ गावश्च गोपाश्च निदाघातपपीडिताः।
दुष्टं जलं पपु-स्तस्या-स्तृषार्ता विषदूषितम् ॥ १५.४८ ॥

विषांभस्तदुपस्पृश्य दैवोपहत-चेतसः।
निपेतु-र्व्यसवः सर्वे सलिलान्ते कुरूद्वह ॥ १५.४९ ॥

वीक्ष्य तान् वै तथा-भूतान् कृष्णो योगेश्वरेश्वरः।
ईक्षामृतवर्षिण्या स्वनाथान् समजीवयत् ॥ १५.५० ॥

कालिन्द्यां कालियस्यासीद् ह्रदः कश्चिद्विषाग्निना।
श्रप्यमाणपया यस्मिन् पतन्त्युपरिगाः खगाः ॥ १६.४ ॥

तं चण्डवेग-विषवीर्य-मवेक्ष्य तेन दुष्टां नदीं च खलसंयमनावतारः।
कृष्णः कदंबमधिरुह्य ततोऽतितुंग-मास्फोट्य गाढरशनो
न्यपतद् विषोदे ॥ १६.६ ॥

---

15. 47. அரசே! இவ்விதம் பிருந்தாவனத்தில் சஞ்சரித்த பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஒருநாள் பலராமனில்லாமல் சிநேகிதர்களுடன் யமுனைக்குச் சென்றார்.

15. 48. அப்போது வெயிலின் கொடுமையால் களைத்து வருந்திய இடையர்கள் அந்நதியின் ஒரு பகுதியில் விஷத்தால் கெட்டிருந்த ஜலத்தைப் பருகினர். பசுக்களும் பருகின.

15. 49. குருசிரேஷ்டரே! விதிவசத்தால் மதியிழந்து அவ்விஷ ஜலத்தைப் பருகிய அவர்களனைவரும் உயிரிழந்து நீரின் அருகிலேயே விழுந்தனர்.

15. 50. யோகீசுவரர்களுக்கும் ஈசுவரனாகிய கிருஷ்ணர் தம்மையே நம்பிய அவர்கள் உயிர் நீங்கி விழக்கண்டு அமிருதத்தைப் பொழியும் தனது பார்வையால் அவர்களைக் கடாக்ஷித்து உயிர்ப்பித்தார்.

16. 4. (விஷத்திற்குக் காரணம்) காளியன் என்னும் ஒரு கொடிய ஸர்ப்பம் வசித்த மடு ஒன்று யமுனையில் இருந்தது. அது விஷத்தீயால் கொதிப்படைந்திருந்ததால் அதற்கு மேலே பறந்து சென்ற பறவைகளும் மடிந்து விழுந்து கொண்டிருந்தன.

16. 6. அப்பாம்பின் விஷ வீரியத்தையும் அதனால் யமுனை நீர் கேடுற்றதையும் கண்டு துஷ்டர்களையடக்க அவதரித்த கிருஷ்ணன் இடுப்பில் துணியை இறுகக் கட்டிக் கொண்டு மிகவுயர்ந்த ஒரு கதம்ப மரத்தின்மேல் ஏறிக் கைதட்டிக் கொண்டு விஷ ஜலத்தில் குதித்தார்.

---

15. 49. मूर्च्छिता वै कुरूद्वह। பா. பே.

तं नागभोग-परिवीत-मदृष्टचेष्ट-मालोक्य तत्प्रियसखाः पशुपा भृशार्ताः।
कृष्णेऽर्पितात्म-सुहृदर्थ-कलत्र-कामा दुःखानुशोक-भय-
मूढधियो निपेतुः ॥ १६.१० ॥

तत्प्रथ्यमान-वपुषा व्यथितात्मभोग-स्त्यक्त्वोन्नमय्य कुपितः स्वफणान् भुजंगः।
तस्थौ श्वसन् श्वसनरन्ध्र-विषां-बरीष-स्तब्धेक्षणोल्मुक-
मुखो हरिमीक्षमाणः ॥ १६.२४ ॥

एवं परिभ्रमहृतौजस-मुन्नतांस-मानम्य तत्पृथुशिरः स्वधिरूढ आद्यः।
तन्मूर्ध-रत्न-निकर-स्पर्शातिताम्र-पादांबुजोऽखिल-कलादिगुरु-र्ननर्त ॥ १६.२६ ॥

तच्चित्रताण्डव-विरुग्ण-फणातपत्रो रक्तं मुखैरुरु वमन् नृप भग्न-गात्रः।
स्मृत्वा चराचरगुरुं पुरुषं पुराणं नारायणं
तमरणं मनसा जगाम ॥ १६.३० ॥

श्री भगवानुवाच—
नात्र स्थेयं त्वया सर्प समुद्रं याहि मा चिरम्।
स्वज्ञात्यपत्य-दाराढ्यो गोनृभि-र्भुज्यतां नदी ॥ १६.६० ॥

---

16. 10. (அப்போது பாம்பு வந்து கிருஷ்ணனுடைய உடலைச் சுற்றிக் கொண்டது). அப்படிச் சுற்றப்பட்டதால் செயலற்றிருக்கும் கிருஷ்ணனைப் பார்த்து அவரிடம் உடல் சுற்றம் பொருள் பெண்டு பிள்ளைகள் ஆசைகள் எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்துவிட்டவர்களும் பிரிய நண்பர்களுமான இடையர்கள் மிகவருந்தித் துக்கத்தாலும் கவலையாலும் பயத்தாலும் மதிமயங்கியவர்களாய்க் கீழே விழுந்தார்கள்.

16. 24. பின்னர் ஸ்ரீ கிருஷ்ணன் தமது உடலைப் பருக்கும்படி செய்ததால் வருத்த மடைந்த அந்தப் பாம்பு கிருஷ்ணனை விட்டுக் கோபத்துடன் தனது படங்களை உயரத் தூக்கிக்கொண்டும் பெருமூச்சு விட்டுக்கொண்டும் மூக்குத் துவாரங்களில் விஷத்தை யுடையதாய் அசைவற்ற கண்களுடன் வாயில் நெருப்பைக் கக்கிக்கொண்டும் கிருஷ்ணனையே பார்த்துக்கொண்டு நின்றது.

16. 26. (அப்போது கிருஷ்ணன் நாற்புறமும் சுற்றத் தொடங்கினார். காளியனும் கிருஷ்ணனைக் கடிக்கத் தருணத்தை எதிர்பார்த்துக்கொண்டு சுற்றலானான்.) இவ்விதம் சுற்றுவதனால் சற்று பலங்குறைந்தவனும் உயர்ந்த கழுத்தையுடையவனுமான அவனைப் பணியவைத்து அவனுடைய பருத்த தலைகளின்மீது ஏறி அவனுடைய சிரசிலுள்ள ரத்னங்களின் சேர்க்கையால் அதிகமாய்ச் சிவந்த தாமரைபோன்ற பாதங்களை யுடையவரும் எல்லாக் கலைகளுக்கும் ஆதிகுருவுமான மூலபுருஷன் நர்த்தனம் செய்தார்.

16. 30. அரசே! அந்த விசித்திர நடனத்தால் ஒடிந்த குடைபோன்ற படங்களை யுடையவனும் வாயினின்று மிகுதியாக இரத்தத்தைக் கக்குகிறவனும் உடல் முறிந்த வனுமான காளியன் புராண புருஷனும் சராசர குருவுமான அவரை நாராயணன் என நினைத்து மனதினால் சரணமடைந்தான்.

श्रीशुक उवाच—

एवमुक्तो भगवता कृष्णेनाद्भुत-कर्मणा ।
तं पूजयामास मुदा नागपत्न्यश्च सादरम् ॥ १६.६४ ॥

सकलत्र-सुहृत्-पुत्रो द्वीपमब्धे-र्जगाम ह ।
तदैव सामृतजला यमुना निर्विषाभवत् ।
अनुग्रहाद्भगवतः क्रीडा-मानुष-रूपिणः ॥ १६.६७ ॥

पशूंश्चारयतो गोपै-स्तद्वने रामकृष्णयोः ।
गोपरूपी प्रलम्बोऽगा-दसुर-स्तज्जिहीर्षया ॥ १८.१७ ॥

तं विद्वानपि दाशार्हो भगवान् सर्वदर्शनः ।
अन्वमोदत तत्सख्यं वधं तस्य विचिन्तयन् ॥ १८.१८ ॥

तत्रोपहूय गोपालान् कृष्णः प्राह विहारवित् ।
हे गोपा विहरिष्यामो द्वन्द्वी-भूय यथायथम् ॥ १८.१९ ॥

ஸ்ரீ பகவான் கூறியது—

16. 60. பாம்பே! நீ இவ்விடத்தில் இருக்கக்கூடாது. இந்த நதி மனிதர்களுக்கும் பசுக்களுக்கும் பயன்படட்டும். உன் உற்றருடனும் மனைவிகளுடனும் மக்களுடனும் விரைவில் சமுத்திரம் போய்ச் சேர்வாயாக.

ஸ்ரீ சுகர் கூறியது—

16. 64. அற்புதச் செயலுடைய பகவான் கிருஷ்ணனால் இவ்வாறு பணிக்கப்பட்ட அவன் மகிழ்வுடனும் ஆதரவுடனும் பகவானைப் பூஜித்தான். நாக பத்தினிகளும் பூஜித்தார்கள்.

16. 67. பின்பு மனைவிகளுடனும் உற்றருடனும் மக்களுடனும் ஸமுத்திரத்திலுள்ள தீவிற்குச் சென்றான். லீலையாக மனித உருவெடுத்த பகவானுடைய அனுக்கிரகத்தால் அப்பொழுதே அந்த யமுனா நதி விஷம் நீங்கி அமுதம்போன்ற ஜலமுடையதாக ஆயிற்று.

18. 17. கோபர்களுடன் பலராமனும் கிருஷ்ணனும் பிருந்தாவனத்தில் மாடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும்போது பிரலம்பன் என்ற அசுரன் பலராமனைத் தூக்கிச் செல்லவேண்டுமென்ற எண்ணத்துடன் கோபவேஷத்தில் அங்குவந்தான்.

18. 18. எல்லாமறிந்த ஸ்ரீ கிருஷ்ணபகவான் அதை அறிந்திருந்தும் அவனைக் கொல்ல எண்ணியவராய் அவனுடன் நட்புக்கொள்ளக் கருதினார்.

18. 19. விளையாட்டுமுறைகளில் வல்லவரான கிருஷ்ணன் இடையர்களை அங்கு அழைத்து "கோபர்களே! பொருத்தமான முறையில் இரண்டு கட்சியாகப் பிரிந்து விளையாடுவோம்" என்று கூறினார்.

பதினேழாவது அத்தியாயம் கிருஷ்ணன் கோகுல வாசிகளைக் காட்டுத் தீயிலிருந்து காத்ததைக் கூறுகிறது.

---

16. 64. मुक्तो भगवता राजन् कृष्णे । பா. பே

तत्र चक्रुः परिवृढौ गोपा रामजनार्दनौ ।
कृष्णसंघट्टिनः केचिदासन् रामस्य चापरे ॥ १८.२० ॥

आचेरु-र्विविधाः क्रीडा वाह्य-वाहक-लक्षणाः ।
यत्रा-रोहन्ति जेतारो वहन्ति च पराजिताः ॥ १८-२१ ॥

उवाह कृष्णो भगवान् श्रीदामानं पराजितः ।
वृषभं भद्रसेनस्तु प्रलंबो रोहिणीसुतम् ॥ १८.२४ ॥

अविषह्यं मन्यमानः कृष्णं दानवपुंगवः ।
वहन् द्रुततरं प्रागा-दवरोहणतः परम् ॥ १८.२५ ॥

अथागतस्मृति-रभयो रिपुं बलो विहायसार्थमिव हरन्तमात्मनः ।
रुषाहनच्छिरसि दृढेन मुष्टिना सुराधिपो गिरिमिव
वज्ररंहसा ॥ १८.२८ ॥

दृष्ट्वा प्रलंबं निहतं बलेन बलशालिना ।
गोपाः सुविस्मिता आसन् साधु साध्विति वादिनः ॥ १८.३० ॥

इति दशमस्कन्धे प्रलंबवधो नाम
अष्टादशोऽध्यायः ॥

---

18. 20. அதைக்கேட்டுக் கோபர்கள் பலராமனையும் கிருஷ்ணனையும் கட்சிகளுக்குத் தலைவர்களாக்கிக் கொண்டார்கள். சிலர் கிருஷ்ணன் கட்சியிலும் பிறர் பலராமன் கட்சியிலும் சேர்ந்துகொண்டார்கள்.

18. 21. அவர்களில் ஒருவரையொருவர் தூக்கிச்செல்வது போன்ற பல விளையாட்டுகளை ஆடினார்கள். அதில் ஜயித்தவர்கள் தோற்றவர்கள்மேல் ஏறுவார்கள். தோற்றவர்கள் தூக்குவார்கள்.

18. 24. கிருஷ்ணன் தோல்வியடைந்து ஸ்ரீதாமாவைச் சுமந்தார். பத்ரசேனன் விருஷபனைச் சுமந்தான். பிரலம்பன் பலராமனைச் சுமந்தான்.

18. 25. ஸ்ரீ கிருஷ்ணனை எதிர்க்க முடியாதென்று எண்ணிய அந்த அசுரவீரன் பலராமனைத் தூக்கிக்கொண்டு இறக்குவதற்கு ஏற்பட்டிருந்த எல்லையைத் தாண்டி வெகு வேகமாக ஓடினான்.

18. 28. அப்போது நிலைமையை உணர்ந்தவரும் பயமற்றவருமாகிய பலராமன், கிடைத்ததை ஆகாயமார்க்கமாய்க் கவர்ந்து செல்பவனைப்போல் தன்னைத் தூக்கிச் செல்லும் எதிரியைக் கோபத்துடன் வஜ்ராயுதத்தால் மலையை அடிப்பதுபோல் திடமான முஷ்டியால் அவன் தலையில் குத்தினார்.

18. 30. அங்ஙனம் பலசாலியான பலராமனால் பிரலம்பன் அடித்து வீழ்த்தப்பட்டதைக் கண்டு கோபர்கள் 'நல்லது, நல்லது' என்று கூவுபவர்களாய் ஆச்சரியம் மிகுந்தவர்களானார்கள்.

இங்ஙனம் தசமஸ்கந்தத்தில் பிரலம்பவதம்
எனப் பெயர் பெற்ற பதினெட்டாவது
அத்தியாயம் முற்றிற்று.

बृन्दावन-लीला ॥ २-२२ ॥

श्रीशुक उवाचः—

ततः प्रावर्तत प्रावृट् सर्वसत्त्व-समुद्भवा ।
विद्योतमान-परिधि-विस्फूर्जित-नभस्तला ॥ २०.३ ॥

सान्द्रनीलांबुदै-र्व्योम सविद्युत्स्तनयित्नुभिः ।
अस्पष्टज्योति-राच्छन्नं ब्रह्मेव सगुणं बभौ ॥ २०.४ ॥

अष्टौ मासान् निपीतं यद् भूम्याश्चोदमयं वसु ।
स्वगोभि-र्मोक्तु-मारेभे पर्जन्यः काल आगते ॥ २०.५ ॥

तडित्वन्तो महामेघा-श्चण्ड-श्वसन-वेपिताः ।
प्रीणनं जीवनं ह्यस्य मुमुचुः करुणा इव ॥ २०.६ ॥

---

22. 2. பிருந்தவான லீலை

ஸ்ரீ சுகர் கூறியது—

20. 3. பிறகு எல்லா உயிர்களின் உற்பத்திக்கும் காரணமானதும், மின்னலால் திக்குகளைப் பிரகாசிக்கச் செய்வதும், வானத்தை இடிமுழக்கத்தால் நிரப்புவதுமான மழை காலம் ஆரம்பமாயிற்று.

20. 4. மின்னலும் இடியும் கூடிய கார்மேகங்களால் மறைக்கப்பட்டு சூரியனும் சந்திரனும் நக்ஷத்திரங்களும் தெளிவாய்க் காணப்படாமல் இருந்த ஆகாயம் முக்குணங்களால் மறைக்கப்பட்ட பிரம்மம் போல் விளங்கிற்று.

20. 5. சூரியன் எட்டுமாதங்களில் தன் கிரணங்களால் பூமியிடமிருந்து குடித்த நீராகிய செல்வத்தைக் காலம் வந்ததும் (வரி வசூலித்த அரசன் பிரஜைகளுக்கு அதைப் பயன்படுத்துவதுபோல்) விடுவதற்கு ஆரம்பித்தான்.

20. 6. சண்டமாருதத்தால் அலைக்கப்பட்டவையும் மின்னல்களுடன் கூடியவையுமான பெரு மேகங்கள் (உலகின் துன்பத்தால் மனமிளகிய) கருணையாளர்களைப் போல் இவ்வுலகிற்கு உயிருட்டி மகிழ்விக்கும் நீரை வருஷித்தன.

பத்தொன்பதாவது அத்தியாயம்: மாடுமேய்க்கப் போனபோது கோபர்களையும் பசுக்களையும் காட்டுத்தீ சூழ்ந்துகொண்டது. கிருஷ்ணன் கோபர்களைக் கண்களை மூடிக் கொண்டு பயப்படாமல் இருக்கச் சொன்னார். கண்களைத் திறந்தபோது ஆபத்து நீங்கி வேறிடத்தில் தாங்கள் இருக்கக் கண்டனர்.

20. 5. **பர்ஜன்ய :—**ஸூர்ய : । **ஸ்வகோபி :—**நிஜரச்மிபி : ।

तपः-कृशा देवमीढा आसीद् वर्षीयसी मही ।
यथैव काम्यतपस-स्तनुः संप्राप्य तत्फलम् ॥ २०.७ ॥

निशामुखेषु खद्योता-स्तपसा भान्ति न ग्रहाः ।
यथा पापेन पाखण्डा नहि वेदाः कलौ युगे ॥ २०.८ ॥

श्रुत्वा पर्जन्य-निनदं मण्डूका व्यसृजन् गिरः ।
तूष्णीं शयानाः प्राग्यद्वद् ब्राह्मणा नियमात्यये ॥ २०.९ ॥

आसन्नुत्पथ-वाहिन्यः क्षुद्रनद्योऽनुशुष्यतीः ।
पुंसो यथा स्वतन्त्रस्य देहद्रविणसंपदः ॥ २०.१० ॥

हरिता हरिभिः शष्पै-रिन्द्रगोपैश्च लोहिताः ।
उच्छिलीन्ध्रकृतच्छाया नृणां श्रीरिव भूरभूत् ॥ २०.११ ॥

क्षेत्राणि सस्यसंपद्भिः कर्षकाणां मुदं ददुः ।
धनिना-मुपतापं च दैवाधीन-मजानताम् ॥ २०.१२ ॥

---

20. 7. ஒரு ஆசை நிறைவேறுதற்காகத் தவம் செய்பவனுடைய உடல் மெலிவுற்றுப் பின் அவ்வாசையின் பூர்த்தியை யடைந்ததும் எங்ஙனம் புஷ்டியடையுமோ அவ்வாறே வெயிலால் உலர்ந்து பின் மழையால் நனைந்த பூமி செழிப்புடையதாயிற்று.

20. 8. எவ்வண்ணம் கலியுகத்தில் பாவத்தின் மிகுதியால் வேதங்கள் விளங்காமல் பாஷண்ட நூல்கள் விளங்குகின்றனவோ அவ்வாறே இராக்காலங்களில் இருளின் மிகுதியில் நக்ஷத்திரங்களும் கிரகங்களும் பிரகாசிக்காமல் மின்மினிப் பூச்சிகளே பிரகாசிக்கின்றன.

20. 9. நித்திய கர்மம் முடிந்ததும் பிரம்மசாரிகள் (குருவினுடைய கட்டளையைக் கேட்டு) எவ்வண்ணம் வேதமோதுவார்களோ அவ்வண்ணம் முன் சந்தடியின்றிச் சயனித்திருந்த தவளைகள் மேகத்தின் சத்தத்தைக் கேட்டு ஒலிகளைக் கிளப்பின.

20. 10. தன்னிஷ்டப்படி திரியும் அல்ப மனிதனுக்கு உடல் கொழுப்பும் செல்வப் பெருக்கும் ஏற்பட்டால் அவன் எப்படி கட்டுக்கடங்காமல் சஞ்சரிப்பானோ அப்படி வறண்டு கிடந்த சிற்றாறுகள் கரைபுரண்டு ஓடுபவை ஆயின.

20. 11. பூமியானது அரசர்களுடைய சேனைஸம்பத்துப்போல் பசும்புற்களால் பசுமையாகவும் இந்திரகோபப் பூச்சிகளால் சிவந்ததாகவும் காளான்களால் குடை பிடிக்கப்பட்டதாகவும் ஆயிற்று.

20. 12. வயல்கள் பயிர்களின் செழிப்பால் விவசாயிகளுக்கு மகிழ்ச்சியளித்தன. தெய்வாதீனத்தை உணராத பணக்காரர்களுக்கு மழைகாலம் துன்பத்தையும் அளித்தது.

---

20. 10. क्षुद्र-नद्योम्बुपूरिताः । 20. 12. सस्यवृद्धानि । பா. பே.

जलस्थलौकसः सर्वे नववारि-निषेवया ।
अबिभ्रद्रुचिरं रूपं यथा हरि-निषेवया ॥ २०.१३ ॥

सरिद्भिः संगतः सिन्धु-श्चुक्षुभे श्वसनोर्मिमान् ।
अपक्वयोगिन-श्चित्तं कामाक्तं गुणयुग्यथा ॥ २०.१४ ॥

गिरयो वर्षधाराभि-र्हन्यमाना न विव्यथुः ।
अभिभूयमाना व्यसनै-र्यथाधोक्षजचेतसः ॥ २०.१५ ॥

मार्गा बभूवु-स्सन्दिग्धा-स्तृणैश्छन्ना ह्यसंस्कृताः ।
नाभ्यस्यमानाः श्रुतयो द्विजैः कालहता इव ॥ २०.१६ ॥

लोकबन्धुषु मेघेषु विद्युतश्चल-सौहृदाः ।
स्थैर्यं न चक्रुः कामिन्यः पुरुषेषु गुणिष्विव ॥ २०.१७ ॥

धनु-र्वियति माहेन्द्रं निर्गुणं च गुणिन्यभात् ।
व्यक्ते गुणव्यतिकरेऽगुणवान् पुरुषो यथा ॥ २०.१८ ॥

---

20. 13. ஹரிபக்தர்கள் ஹரியின் சேவையால் திவ்யரூபத்தை யடைவதுபோல் நிலத்திலும் நீரிலுமுள்ள எல்லாப் பிராணிகளும் புதுநீரால் ஒளிமிக்க வடிவையடைந்தன.

20. 14. பக்குவமடையாத யோகியின் மனம் விஷயங்களுடன் சேர்ந்தபோது காமத்தினுல் கவரப்படுவதுபோல், நதிகளின் ஸங்கமத்தாலும் காற்றினுலும் அலைக ளாலும் கடல் கலங்கிற்று.

20. 15. பகவானிடம் சித்தத்தை வைத்தவர்கள் விசனங்களால் ஆக்கிரமிக்கப் பட்டபோதிலும் எப்படி வருத்தப்படுவதில்லையோ அப்படி மலைகள் மழைத்தாரைகளால் அடிக்கப்பட்டும் அசையவில்லை.

20. 16. வேதங்கள் துவிஜர்களால் அப்பியசிக்கப்படாமல் நாளடைவில் மறக்கப் பட்டு மங்கிப் போனதுபோல் பாதைகள் சீர்கெட்டுப் புல்மூடி வழிதெரியாமல் சந்தே கிக்கும்படி ஆயின.

20. 17. குணவான்களான புருஷர்களிடத்திலும் காமினிகளான ஸ்திரீகள் நிலை பெருததுபோல் உலகுக்கு நன்மை செய்யும் மேகங்களிடை மின்னல்களின் உறவு சலனமடைந்தது.

20. 18. முக்குணங்களால் உருவமடைந்த பிரபஞ்சத்தில் குணமற்ற ஆத்மா இருப்பதுபோல் நாணில்லாத இந்திர வில்லானது மேககர்ஜனையுள்ள ஆகாயத்தில் விளங்கிற்று.

---

20. 18. நிர்க்குணம்—ஜ்யாரஹிதமபி ।

---

16. 17. गुणेष्विव । பா. பே.

प्रावृट्श्रियं च तां वीक्ष्य सर्व-भूतमुदावहाम् ।
भगवान् पूजयांचक्रे आत्मशक्त्युपबृंहिताम् ॥ २०.३१ ॥

एवं निवसतो-स्तस्मिन् रामकेशवयो-र्व्रजे ।
शरत् समभवद् व्यभ्रा स्वच्छांब-परुषानिला ॥ २०.३२ ॥

शरदा नीरजोत्पत्त्या नीराणि प्रकृतिं ययुः ।
भ्रष्टानामिव चेतांसि पुनर्योगनिषेवया ॥ २०.३३ ॥

व्योम्नोऽब्दं भूतशाबल्यं भुवः पङ्कमपां मलम् ।
शरज्जहाराश्रमिणां कृष्णे भक्ति-र्यथाऽशुभम् ॥ २०.३४ ॥

सर्वस्वं जलदा हित्वा विरेजुः शुभ्रवर्चसः ।
यथा त्यक्तैषणाः शान्ता मुनयो मुक्तकिल्बिषाः ॥ २०.३५ ॥

अखण्डमण्डलो व्योम्नि रराजोडुगणैः शशी ।
यथा यदुपतिः कृष्णो वृष्णिचक्रावृतो भुवि ॥ २०.४४ ॥

---

20. 31. எல்லாப் பிராணிகளுக்கும் மகிழ்ச்சியை வளர்ப்பதும் தனது ஆஹ்லாதினீ சக்தியால் விருத்தியடைந்ததுமான அந்த மழைகாலத்தின் மகிமையைக் கண்டு பகவான் அதைப் புகழ்ந்தார்.

20. 32. பலராமனும் கிருஷ்ணனும் இவ்வாறு கோகுலத்தில் வசித்துக் கொண்டிருக்கையில் மேகமில்லாமல் ஆகாயம் தெளிந்து நீர் நிலைகளும் தெளிந்து மந்த மாருதம் வீசும் சரத்காலம் ஆரம்பமாயிற்று.

20. 33. யோகாப்பியாஸத்திலிருந்து நழுவிய யோகிகளுடைய மனம் மறுபடி யோகப் பழக்கத்தால் தெளிவடைவதுபோல் மழைகாலத்தில் கலங்கியிருந்த ஜலம் தாமரைகளைத் தோற்றுவித்துக்கொண்டு சரத்காலம் வந்ததும் தெளிவடைந்தது.

20. 34. கிருஷ்ண பக்தி நாலு ஆசிரமிகளுடைய அசுபங்களையும் விலக்குவது போல் சரத்ருது வானது ஆகாயத்தில் மேக மறைப்பையும் பிராணிகளின் மனத்தில் கலக்கத்தையும் பூமியில் சேற்றையும், ஜலத்தில் அழுக்கையும் போக்கிற்று.

20. 35. ஆசைகளையெல்லாம் விட்டு முனிவர்கள் சாந்தர்களாய் மாசற்றவர் களாவது போல் மேகங்கள் தங்கள் உடைமையாகிற நீரனைத்தையும் வருஷித்து விட்டுச் சுத்த வெண்ணிறமடைந்தன.

20. 44. பூமியில் கிருஷ்ணன் விருஷ்ணிகளால் சூழப்பெற்று விளங்கியதுபோல் ஆகாயத்தில் சந்திரன் அளவற்ற நக்ஷத்திர மண்டலத்தால் சூழப்பெற்று விளங்கினான்.

---

20. 32 **வ்யப்ரா**—விகதானி அப்ராணி யஸ்யாம் ஸா ।
அபருஷ :—**சாந்**தோஸநிலோ யஸ்யாம் ஸா ।

---

20. 31. **सर्वभूतसुखावहाम् ।** பா. பே.

वणिङ्-मुनि-नृप-स्नाता निर्गम्यार्थान् प्रपेदिरे।
वर्ष-रुद्धा यथा सिद्धाः स्वपिण्डान् काल आगते ॥ २०.४९ ॥

कुसुमित-वनराजि-शुष्मभृंग-द्विजकुलघुष्ट-सरः-सरिन्महीध्रम्।
यदुपतिरवगाह्य चारयन् गाः सह-पशुपाल-बल-श्चुकूज वेणुम् ॥ २१.२ ॥

बर्हापीडं नटवरवपुः कर्णयोः कर्णिकारं
बिभ्रद्वासः कनक-कपिशं वैजयन्तीं च मालाम्।
रन्ध्रान् वेणो-रधरसुधया पूरयन् गोपवृन्दै-
र्वृन्दारण्यं स्वपदरमणं प्राविशद् गीतकीर्तिः ॥ २१.५ ॥

इति वेणुरवं राजन् सर्वभूत-मनोहरम्।
श्रुत्वा व्रजस्त्रियः सर्वा वर्णयन्त्योऽभिरेमिरे ॥ २१.६ ॥

---

20. 49. சித்தர்கள் ஆயுளால் தடுக்கப்பட்டு ஆயுளின் முடிவுகாலங் கிட்டியதும் யோகத்தால் சம்பாதித்த திவ்விய தேகத்தை யடைவதுபோல் வணிகர்களும் ஸந்நியாஸிகளும் அரசர்களும் மழையால் தடுக்கப்பட்டிருந்து அது முடிந்து சரத்காலம் வந்ததும் வெளிப்போந்து அவரவர்கள் அடையவேண்டிய பயன்களை அடைந்தார்கள்.

21. 2. புஷ்பித்த மரங்களில் பெருகும் தேனையுண்டு களித்திருக்கும் வண்டுகள், பாடும் பறவைகளின் கூட்டங்கள், மலைகள், ஆறுகள், குளங்கள் முதலியவைகளுடன் கூடிய வனத்தில் யதுபதியான கிருஷ்ணன் புகுந்து கோபாலர்களுடனும் பலராமனுடனும் பசுக்களை மேய்த்துக்கொண்டு குழல்கொண்டு ஊதினர்.

21. 5. எல்லோராலும் கானம் செய்யப்பட்ட கீர்த்தியுடைய கிருஷ்ணன் ஒரு நடிகனைப்போல் அலங்கரித்துக்கொண்டு தலையில் மயில் தோகையும் காதில் கர்ணிகாரப் புஷ்பமும், (இடையில்) சரிகைப்பட்டும், (மார்பில்) வைஜயந்தீ மாலையும் விளங்க, உதடுகளின் வழி பெருகுகின்ற அமுதத்தால் குழலின் துவாரங்களை நிரப்பிக் கொண்டு தமது திருவடிகள் படுவதால் மங்களம் பொருந்திய பிருந்தாவனத்துள் புகுந்தார்.

21. 6. அரசே! எல்லாப் பிராணிகளுடைய மனதையும் மகிழ்விக்கும் குழலோசையைக் கேட்ட இடைப் பெண்கள் அனைவரும் அந்த கானத்தைப் புகழ்ந்து மகிழ்ந்தார்கள்.

---

20. 49. **ஸ்வபிண்டான்**—யோகாதி ப்ராப்யான் **தேவாதி தேஹான்** ।

गावश्च कृष्णमुख-निर्गत-वेणुगीत-
पीयूष-मुत्तभित-कर्णपुटैः पिबन्त्यः ।
शावाः स्नुतस्तनपयः कवलाः स्म तस्थु-
र्गोविन्द-मात्मनि दृशाश्रुकलाः स्पृशन्त्यः ॥ २१.१३ ॥

प्रायो बताम्ब विहगा मुनयो वनेऽस्मिन्
कृष्णेक्षितं तदुदितं कलवेणुगीतम् ।
आरुह्य ये द्रुमभुजान् रुचिरप्रवालान्
शृण्वन्त्यमीलित-दृशो विगतान्यवाचः ॥ २१.१४ ॥

नद्यस्तदा तदुपधार्य मुकुन्दगीत-
मावर्त-लक्षित-मनो-भव-भग्नवेगाः ।
आलिंगन-स्थगित-मूर्मिभुजै-र्मुरारे-
र्गृह्णन्ति पादयुगलं कमलोपहाराः ॥ २१.१५ ॥

---

21. 13. 'பசுக்கள் கிருஷ்ணனுடைய முகத்தினின்று பெருகிய கிருஷ்ணனுடைய வேணுகானமாகிய அமுதத்தைத் தூக்கிய செவிகளின் வழியே பருகிக்கொண்டும் கோவிந்தனுடைய அழகைக் கண்களின் வழியே பருகி மனதால் தழுவி ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கின. பாலூட்டிக்கொண்டிருந்த கன்றுகள் பாலையும் புல் மேய்ந்து கொண்டிருந்தவை புல்லின் கவளத்தையும் நழுவவிட்டு மெய்மறந்து நின்றன' (என்று சிலர் கூறினார்கள்.)

21. 14. 'அம்மா! இந்த பிருந்தாவனத்தில் கிருஷ்ணனைப் பார்ப்பதற்காகவும் அவர் வாசிக்கும் வேணு கானத்தைக் கேட்பதற்காகவும் முனிவர்கள் பறவைகளாக உருவெடுத்து அழகான தளிர்களையுடைய மரங்களின் கிளைகளிலேறிக்கொண்டு கண்களை மூடிக்கொண்டு வேறு சப்தங்களைக் கேட்காமல் கேட்கிறார்கள் போலும் (என்று சிலர் கூறினார்கள்.)

21. 15. 'ஆறுகள் முகுந்தனுடைய வேணுகானத்தைக் கேட்டுக் காமவசப்பட்டுத் தயங்குகின்றனவோ எனும்படி வேகங் குறைந்து, சுழல்களால் தமது மனோ நிலையைக் காட்டிக்கொண்டு, அலைகளாகிற கைகளில் தாமரைப் பூக்களை உபகாரமாக வைத்துக் கொண்டு கிருஷ்ணனுடைய கால்களைக் கட்டிக்கொண்டன' (என்று சிலர் கூறினார்கள்.)

---

21. 13. சாபா :—வத்ஸா : ।

ஒ. திரண்டெழுதழை மழை முகில் வண்ணன் செங்கமல மலர் சூழ் வண்டினம் போலே
சுருண்டிருண்ட குழல் தாழ்ந்த முகத்தா லூதுகின்ற குழலோசை வழியே
மருண்டு மான் கணங்கள் மேய்கை மறந்து மேய்ந்த புல்லும் கடைவாய் வழிசோர
இருண்டு பாடும் துலுங்காப்புடைபெயரா எழுது சித்திரங்கள் போல் நின்றனவே.
மரங்கள் நின்று மது தாரைகள் பாயும் மலர்கள் வீழும் வளர் கொம்புகள் தாழும்
இரங்கும் கூம்பும் திருமால் நின்றபக்கம் நோக்கி யவை செய்யுங் குணமே.
—பெரியாழ்வார்.

21. 14. ஒ. சிறு விரல்கள் தடவிப்பரிமாறச் செங்கண் கோடச் செய்யவாய்
கொப்பளிப்ப
குறு வெயர்ப்புருவம் கூடலிப்பக் கோவிந்தன் குழல் கொடுதினபோது
பறவையின் கணங்கள் கூடுதுறந்து வந்துசூழ்ந்து படுகாடு கிடப்ப
கறவையின் கணங்கள் கால்பரப்பிட்டுக் கவிழ்ந்திறங்கிச் செவியாட்ட
கில்லாவே. —பெரியாழ்வார்.

दृष्ट्वाऽऽतपे व्रजपशून् सह रामगोपैः
संचारयन्तमनु वेणु-मुदीरयन्तम् ।
प्रेमप्रवृद्ध उदितः कुसुमावलीभिः
सख्यु-र्व्यधात् स्ववपुषांबुद आतपत्रम् ॥ २१.१६ ॥

गागोपकै-रनुवनं नयतोरुदार-
वेणुस्वनैः कलपदै-स्तनुभृत्सु सख्यः ।
अस्पन्दनं गतिमतां पुलक-स्तरूणां
निर्योग-पाशकृत-लक्षणयो-र्विचित्रम् ॥ २१.१९ ॥

एवं विधा भगवतो या बृन्दावन-चारिणः ।
वर्णयन्त्यो मिथो गोप्यः क्रीडास्तन्मयतां ययुः ॥ २१.२० ॥

इति श्रीमद्भागवते दशमस्कन्धे
एकविंशो-ध्यायः ॥

---

21. 16. 'கிருஷ்ணன் பலராமனுடனும் கோபர்களுடனும் வேணுகானம் செய்து கொண்டு வெயிலில் பசுக்களை மேய்த்துக்கொண்டிருப்பதைப் பார்த்து அன்பின் மிகுதியால் மேலே கிளம்பி (தம்மைப்போல் உலகிற்கு நன்மைபுரியும்) நண்பனாகிய கிருஷ்ணனுக்குப் பூமாரியுடன் தனதுடலால் மேகம் குடைபிடித்தது.

21. 19. 'தோழிகளே! கோபர்களுடன் ஒவ்வொரு காட்டிற்கும் பசுக்களை ஓட்டிச் செல்லுகிறவர்களும், கால்கயிறுகளைத் தலையில் சுற்றிக் கொள்வது தலைக்கயிறு களைக் கழுத்தில் சுற்றிக் கொள்வதுபோன்ற இடையர் வேஷமுடையவர்களுமான கிருஷ்ணன் பலராமன் ஆகிய இருவருடைய மதுரமான பதமுடைய உத்தம வேணுகானங்களால் உடல்படைத்தவற்றுள், அசையும் பிராணிகள் அசைவற்று நின்ற தாலும், தாவரங்களுக்குப் புளகாங்கிதம் உண்டானதாலும் தாவரம் ஜங்கமத்தைப் போலும் ஜங்கமம் தாவரத்தைப் போலவும் ஆனது ஆச்சரியம்' (என்று சிலர் கூறினார்கள்).

21. 20. இவ்விதமாகக் கோபிகைகள் பகவானுடைய லீலைகளைப் பாடிக் கொண்டே பிருந்தாவனத்தில் சஞ்சரிக்கும் அவருடைய தியானத்தால் அவர் மயமாகவே ஆகிவிட்டார்கள்.

இங்ஙனம் ஸ்ரீமத் பாகவதத்தில் பத்தாவது ஸ்கந்தத்தில்
இருபத்தொராவது அத்தியாயம் முற்றிற்று.

॥ गोपी-वस्त्रापहरण-लीला ॥

श्रीशुक उवाच—

हेमन्ते प्रथमे मासि नन्दव्रज-कुमारिकाः ।
चेरु-र्हविष्यं भुंजानाः कात्यायन्यर्चन-व्रतम् ॥ २२.१ ॥

आप्लुत्यांभसि कालिन्द्या जलान्ते चोदितेऽरुणे ।
कृत्वा प्रतिकृतिं देवी-मानर्चु-र्नृप सैकतीम् ॥ २२.२ ॥

गन्धै-र्माल्यैः सुरभिभि-र्बलिभि-र्धूपदीपकैः ।
उच्चावचैश्चोपहारैः प्रवालफलतण्डुलैः ॥ २२.३ ॥

कात्यायनि महामाये महायोगिन्यधीश्वरि ।
नन्दगोपसुतं देवि पतिं मे कुरु ते नमः ।
इति मन्त्रं जपन्त्यस्ताः पूजां चक्रुः कुमारिकाः ॥ २२.४ ॥

एवं मासं व्रतं चेरुः कुमार्यः कृष्णचेतसः ।
भद्रकालीं समानर्चु-र्भूयान्नन्दसुतः पतिः ॥ २२.५ ॥

கோபீவஸ்த்ராபஹரண லீலை

ஸ்ரீ சுகர் கூறியது—

22. 1. ஹேமந்தருதுவின் முதல் மாதமாகிய மார்கழியில் நந்தகோகுலப் பெண்கள் ஹவிஸ்ஸைமட்டும் ஆகாரமாய்க்கொண்டு காத்யாயனீ பூஜையாகிற விரதத்தை அனுஷ்டித்தார்கள்.

22. 2-3. அரசே! அப்பெண்கள் அருணோதய காலத்திலெழுந்து யமுனை நீரில் ஸ்நானம் செய்து கரையில் மணலால் காத்யாயனியின் உருவத்தை அமைத்து சந்தனத்தாலும் வாசனை மலர்களாலும் பலிகளாலும் தூபதீபங்களாலும் தளிர்களாலும் பழங்களாலும் அக்ஷதைகளாலும் சிறந்த நைவேத்தியங்களாலும் பூஜையைச் செய்தார்கள்.

22. 4-5. 'தேவி காத்யாயனி! மஹாமாயே! மஹாயோகினி! அனைத்தையும் ஆளும் ஈசுவரி! உனக்கு நமஸ்காரம். எனக்கு நந்தகோப குமாரனைப் பதியாகச் செய்தருள்வாய்' என்று இந்த மந்திரத்தை ஜபித்துக்கொண்டு அப்பெண்கள் பூஜை செய்தார்கள்.

22. 5. இவ்வாறு அக்குமாரிகள் கிருஷ்ணனிடம் சித்தத்தை வைத்தவர்களாய், நந்தகுமாரன் தங்களுக்குப் பதியாக வேண்டுமென்ற பிரார்த்தனையுடன் பத்ரகாளியைப் பூஜித்து விரதமனுஷ்டித்தார்கள்.

---

22. 4. **காத்யாயனி மஹாமாயே!**—கன்னிப் பெண்கள் நல்ல கணவரை அடைவதற்கு ஜபித்தற்குரிய சிறந்த மந்திரமாக இது மந்திர சாஸ்திரத்தில் கூறப்படுகிறது.

उषस्युत्थाय गोत्रैः स्वैरन्योन्याबद्ध-बाहवः ।
कृष्ण-मुच्चै-र्जगु-र्यान्त्यः कालिन्द्यां स्नातु-मन्वहम् ॥ २२.६ ॥

नद्यां कदाचिदागत्य तीरे निक्षिप्य पूर्ववत् ।
वासांसि कृष्णं गायन्त्यो विजह्रुः सलिले मुदा ॥ २२.७ ॥

भगवां-स्तदभिप्रेत्य कृष्णो योगीश्वरेश्वरः ।
वयस्यै-रावृत-स्तत्र गत-स्तत्कर्म-सिद्धये ॥ २२.८ ॥

तासां वासांस्युपादाय नीपमारुह्य सत्वरः ।
हसद्भिः प्रहसन् बालैः परिहास-मुवाच ह ॥ २२.९ ॥

अत्रागत्याबलाः कामं स्वं स्वं वासः प्रगृह्यताम् ।
सत्यं ब्रवाणि नो नर्म यद् यूयं व्रतकर्शिताः ॥ २२.१० ॥

एवं ब्रुवति गोविन्दे नर्मणाऽऽक्षिप्तचेतसः ।
आकण्ठमग्नाः शीतोदे वेपमानास्तमब्रुवन् ॥ २२.१३ ॥

---

22. 6. தினந்தோறும் அவர்கள் விடியற்காலையில் தங்கள் தோழிகளை அவரவர்கள் பேரைச் சொல்லி யெழுப்பிக்கொண்டு, ஒருவருக்கொருவர் கை கோத்துக் கொண்டு, கிருஷ்ணனுடைய பெருமையை உறக்கப் பாடிக்கொண்டு, யமுனையில் நீராடச் செல்வார்கள்.

22. 7. ஒரு சமயம் ஆற்றின் கரைக்கு வந்ததும் அங்கே வழக்கம்போல் தங்கள் ஆடைகளை வைத்துவிட்டுக் கிருஷ்ணனைப் பாடிக்கொண்டு ஆனந்தமாக நீராடினார்கள்.

22. 8. யோகீசுவரர்களுக்கு ஈசுவரரும் எல்லாமறிந்தவருமாகிய கிருஷ்ண பகவான் அவர்களுடைய அபிப்பிராயத்தை அறிந்து அவர்களுடைய விரதத்திற்குச் சித்தியளிக்கும் பொருட்டுத் தன் சிநேகிதர்கள் சூழ அங்கு சென்றார்.

22. 9. அவர்களுடைய ஆடைகளை எடுத்துக்கொண்டு விரைவில் ஒரு கதம்ப மரத்தில் ஏறிக்கொண்டு அதைப் பார்த்துச் சிரிக்கும் பாலர்களுடன் தானும் சிரித்துக் கொண்டு பரிஹாஸ வார்த்தைகள் பேசினார்.

22. 10. 'பெண்களே! நீங்கள் இங்கு வந்து அவரவர்களுடைய ஆடைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள். உண்மையாகச் சொல்லுகிறேன்; பரிஹாஸமன்று. ஏனென்றால், நீங்கள் விரதத்தால் களைத்திருக்கிறீர்கள்.'

22. 13. கோவிந்தன் இவ்வாறு பேசுகையில் பரிஹாஸத்தால் மனக்கலக்கமுற்ற அவர்கள் குளிர்ந்த நீரில் கழுத்துவரை முழுகும்படி நின்றுகொண்டு உடல் நடுக்கத் துடன் அவரிடம் பின்வருமாறு கூறினார்.

---

22. 6. **கோத்ரை** :—நாமபி : ।
ஒ. மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர் !
சீர்மல்கு மாய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள் ! —திருப்பாவை.

22. 7. ஒ. கறவைகள் பின் சென்று கானஞ் சேர்ந்துண்போம்
அறிவொன்று மில்லாத ஆய்குலத்து உன்றன்னை
பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா உன்றன்னோடு
உறவேல் நமக்கிங் கொழிக்க வொழியாது
அறியாத பிள்ளைகளோ மன்பினு லுன்றன்னைச்
சிறு பேரழைத் தனவும் சீறியருளாதே
இறைவா நீ தாராய் பறை யேலோ ரெம்பாவாய். —திருப்பாவை.

श्यामसुन्दर ते दास्यः करवाम तवोदितम् ।
देहि वासांसि धर्मज्ञ नोचेद्राज्ञे ब्रुवामहे ॥ २२.१५ ॥

श्रीभगवानुवाच—

भवत्यो यदि मे दास्यो मयोक्तं वा करिष्यथ ।
अत्रागत्य स्ववासांसि प्रतीच्छन्तु शुचिस्मिताः ।
नोचेन्नाहं प्रदास्ये किं क्रुद्धो राजा करिष्यति ॥ २२.१७ ॥

श्रीशुक उवाच—

ततो जलाशयात्सर्वा दारिकाः शीतवेपिताः ।
पाणिभ्यां योनि-माच्छाद्य प्रोत्तेरु-स्तीरमङ्गनाः ॥ २२.१८ ॥

भगवानाह ता वीक्ष्य शुद्धभाव-प्रसादितः ।
स्कन्धे निधाय वासांसि प्रीतः प्रोवाच सस्मितम् ॥ २२.१९ ॥

यूयं विवस्त्रा यदपो धृतव्रता व्यगाहतैतत्तदु देवहेलनम् ।
बद्ध्वाञ्जलिं मूर्ध्न्यपनुत्तयेंहसः कृत्वा नमो वो वसनं प्रगृह्यताम्
॥ २२.२० ॥

---

22. 15. சியாம சுந்தரா! நாங்கள் உங்கள் அடிமைகள். நீர் சொன்னதைச் செய்வோம். தருமமறிந்தவரே! ஆடைகளைக் கொடுத்துவிடும். இல்லையேல் அரசரிடம் சொல்லுவோம்.

ஸ்ரீ பகவான் கூறியது—

22. 17. புன்னகை பூத்த பெண்களே! நீங்கள் என் அடிமைகளாவோ அல்லது என் சொற்படி செய்பவர்களாகவோ இருந்தால் இங்கு வந்து அவரவர் ஆடைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் கொடுக்கமாட்டேன். கிழட்டு அரசர் என்ன செய்வார்!

ஸ்ரீ சுகர் கூறியது—

22. 18. அதன்பின் அப்பெண்கள் குளிரால் உடல் நடுங்கக் கைகளால் அறையை மறைத்துக்கொண்டு நதியிலிருந்து கரையேறினார்கள்.

22. 19. பெண்களின் களங்கமற்ற பாவனையில் மகிழ்ச்சியுற்ற பகவான் ஆடைகளைத் தன் தோளில் வைத்துக்கொண்டு பிரியத்துடன் சிரித்துக்கொண்டு பின்வருமாறு கூறினார்.

22. 20. 'இப்பொழுது விரதம் அனுஷ்டிக்கும் நீங்கள் ஆடையில்லாமல் நீராடியது தேவதைகளை அவமதித்ததாக ஆகும். அந்தப் பாவத்தைப் போக்கிக் கொள்வதற்காக தலைமேல் கைகளைக் கூப்பிக்கொண்டு நமஸ்கரித்து உங்களுடைய ஆடைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.'

---

22. 15. वासांसि सर्वज्ञ । 22. 20. कृत्वा नमोऽधो । பா. பே.

इत्येतद्वचनं श्रुत्वा धर्मयुक्तं महात्मनः।
एकेन पाणिना नेमु-रेकेनाच्छाद्य चांगनाः ॥ २२.२१ ॥

ता वीक्ष्योवाच भगवान् भूयो धर्म्य-मिदं वचः।
एकेन पाणिना यो वै प्रणमेद्देवमच्युतम् ॥ २२.२२ ॥

तस्य दण्डः करच्छेद इति धर्म-विदो विदुः।
तस्मादुभाभ्यां पाणिभ्यां प्रणमेत्स्वामिनं नरः ॥ २२.२३ ॥

तथा च यूयं कुरुत तन्मे प्रियतरं भवेत्।
अंहस्तूभयमेतच्च परिमार्जयितुं यदि।
इच्छा वः पाणियुगलैर्नमस्कृत्य प्रगृह्यताम् ॥ २२.२४ ॥

तास्तथावनता दृष्ट्वा भगवान् देवकीसुतः।
वासांसि ताभ्यः प्रायच्छत् करुणस्तेन तोषितः ॥ २२.२६ ॥

श्रीभगवानुवाच—

संकल्पो विदितः साध्व्यो भवतीनां मदर्चनम्।
मयाऽनुमोदितः सोऽसौ सत्यो भवितु-मर्हति ॥ २२.२७ ॥

---

22. 21. தருமத்தை எடுத்துக் கூறிய பகவானுடைய இவ்வார்த்தையைக் கேட்டுப் பெண்கள் ஒரு கையால் அறையை மறைத்துக்கொண்டு ஒரு கையால் நமஸ்கரித்தார்கள்.

22. 22-23. அவர்களைப் பார்த்து பகவான் மீண்டும் தர்மயுக்தமான இவ்வார்த்தையைச் சொன்னார். எவன் தேவனாகிய அச்சுதனை ஒரு கையால் வணங்குகிறானோ அவன் கையை வெட்டுவது அவனுக்குரிய தண்டனை என்று தர்மந்தெரிந்தவர் கூறுவர். ஆகையால் மானிடன் ஸ்வாமியை இருகைகளாலும் வணங்கவேண்டும்.

22, 24. "ஆகையால் இருவிதமான பாவங்களையும் போக்கிக்கொள்ள விரும்பினால் நீங்கள் அவ்வண்ணம் செய்யுங்கள். அது எனக்கும் மிகவும் பிரியத்தைச் செய்ததாகும். இஷ்டமானால் இருகைகளாலும் நமஸ்கரித்து ஆடைகளைப் பெற்றுக் கொள்ளலாம்."

22. 26, அதற்கிணங்கி அவர்கள் வணங்கியதைக் கண்ட தேவகீ புத்திரனான பகவான் அதனால் சந்தோஷமடைந்து அவர்களுக்கிரங்கி ஆடைகளைக் கொடுத்தார்.

ஸ்ரீ பகவான் கூறியது—

22. 27. நல்ல பெண்களே! என்னைப் பூஜை செய்யும் உங்கள் எண்ணம் எனக்குத் தெரியும். என்னால் அனுக்கிரகிக்கப்பெற்று அது உண்மையாக நிறைவேறும்.

---

22. 26. करुणस्नेहतोषितः। 22. 27. मदर्चने। பா. பே.

न मय्यावेशित-धियां कामः कामाय कल्पते ।
भर्जिता क्वथिता धानाः प्रायो बीजाय नेष्यते ॥ २२.२८ ॥

याताऽबला व्रजं सिद्धा मयेमा रंस्यथ क्षपाः ।
यदुद्दिश्य व्रतमिदं चेरुरार्यार्चनं सतीः ॥ २२.२९ ॥

श्रीशुक उवाच—

इत्यादिष्टा भगवता लब्धकामाः कुमारिकाः ।
ध्यायन्त्य-स्तत्पदांभोजं कृच्छ्रान्निर्विविशुर्व्रजम् ॥ २२.३० ॥

अथ गोपैः परिवृतो भगवान् देवकीसुतः ।
वृन्दावनाद् गतो दूरं चारयन् गाः सहाग्रजः ॥ २२.३१ ॥

निदाघार्कातपे तिग्मे छायाभिः स्वाभिरात्मनः ।
आतपत्रायितान् वीक्ष्य द्रुमानाह व्रजौकसः ॥ २२.३२ ॥

---

22. 28. என்னிடத்தில் சித்தத்தை வைத்தவர்களுடைய காமமானது (பிறவிப் பிணியை வளர்க்கும்) காமமாக இருக்காது. வறுக்கப்பட்ட விதைகளும் பக்குவம் செய்யப்பட்ட விதைகளும் (முளைக்கும் சக்தியுடைய) விதைகளாக இருப்பதில்லை யன்றோ?

22. 29. பெண்களே! ஸதிகளாகிய நீங்கள் எந்த நோக்கத்துடன் இந்தக் காத்யாயனீ விரதத்தை அனுஷ்டித்தீர்களோ அந்த நோக்கம் கைகூடப் பெற்றவர் களாகக் கோகுலம் செல்லுங்கள். வரப்போகும் இரவுகளில் என்னுடன் விளையாடலாம்.

ஸ்ரீ சுகர் கூறியது—

22. 30. இவ்வாறு பகவானால் கட்டளையிடப்பட்டவர்களும் ஆசை நிறைவேறிய வர்களுமான பெண்கள் அவருடைய பாதகமலங்களைத் தியானித்துக்கொண்டு வருத் தத்துடன் கோகுலத்திற்குத் திரும்பினார்கள்.

22. 31-32. பிறகு தேவகீ புத்திரனாகிய பகவான் பலராமனுடன் கோபர்கள் சூழப் பிருந்தாவனத்திலிருந்து வெளிப்போந்து மாடுகளை மேய்த்துக்கொண்டு வெகு தூரம் சென்றபோது வெயிலால் களைப்படைந்து மரங்களடர்ந்த ஒரு தோப்பினுட் சென்று அங்கு தங்களுக்கு நிழலைக் கொடுத்துதவிய மரங்களைப் பார்த்துக் கோபர் களிடம் பின்வருமாறு சொன்னார்.

---

22. 29. உங்கள் ஸங்கல்பம் உண்மையில் நிறைவேறும், உங்கள் பொருள், தேகாபி மானம், அன்பு அனைத்தையும் கொள்ளை கொள்ளவே நான் வந்தவன். என்னிடம் அன்பு வைத்தபின் வேறிடத்தில் ஊன்றினாலும் அது முளையாது.

ஒ. ஒரு இளைஞன் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரைக் காளி கோவிலில் தரிசித்தபோது அவனுடைய பக்குவத்தையும் தேகாபிமானத்துறவையும் சோதிக்கும் பொருட்டு அவனை நோக்கி, "உன் துணியை எடுத்துத் தலையில் கட்டிக்கொண்டு நிர்வாணமாகக் கோவிலைப் பிரதக்ஷிணம் வருவாயா?" என்று வினவினார்.

கோபீவஸ்திராபஹரணக் கதையைச் சொல்லுபவர் சுகர், கேட்பவர் பரீக்ஷித்து, ஆதரித் தோதுபவர்கள் ஞானிகள். அப்படியிருக்கையில் அதில் ஏளனத்துக்கிடமிருக்க இயலாது. சிறிய எண்ணங்களிலும் உள்ள சிறுமை கிருஷ்ணனுடன் சேர்த்துப் பார்க்கும்போது நீங்கும்.

---

22. 29. यमुद्दिश्य । 22. 32. तस्मिंश्छायाभिः । பா. பே.

हे स्तोककृष्ण हे अंशो श्रीदामन् सुबलार्जुन ।
विशालर्षभ तेजस्विन् देवप्रस्थ वरूथप ॥ २२.३३ ॥

पश्यतैतान् महाभागान् परार्थैकान्त-जीवितान् ।
वातवर्षातप-हिमान् सहन्तो वारयन्ति नः ॥ २२.३४ ॥

अहो एषां वरं जन्म सर्व-प्राण्युपजीवनम् ।
सुजनस्येव येषां वै विमुखा यान्ति नार्थिनः ॥ २२.३५ ॥

पत्र-पुष्प-फल-च्छाया-मूल-वल्कल-दारुभिः ।
गन्ध-निर्यास-भस्मास्थि-तोक्मैः कामान् वितन्वते ॥ २२.३६ ॥

एतावज्जन्म-साफल्यं देहिनामिह देहिषु ।
प्राणै-रर्थै-र्धिया वाचा श्रेय एवाचरेत् सदा ॥ २२.३७ ॥

इति प्रवालस्तबक-फलपुष्प-दलोत्करैः ।
तरूणां नम्रशाखानां मध्येन यमुनां गतः ॥ २२.३८ ॥

---

22. 33-34. ஸ்தோக கிருஷ்ணு! அம்சா! ஸ்ரீதாமா! ஸுபலா! அர்ஜுனு! விசாலா! விருஷபா! ஓஜஸ்வீ! தேவப்பிரஸ்தா! வருதபா! இம்மரங்களைப் பாருங்கள். இவை மகா பாக்கியம் செய்தவைகள். காற்று மழை வெயில் பனி இவைகளைச் சகித்துக்கொண்டு நம்மை அவைகளினின்று காப்பாற்றுகின்றன.

22. 35. எல்லாப் பிராணிகளுக்கும் பிழைப்பைத் தருகிற இம்மரங்களுடைய பிறவி ஆச்சரியமானது, மிக உயர்ந்தது. இவைகளிடம் ஒரு பொருளை விரும்பிவந்தவர்கள் நல்லவர்களிடம் வந்தவர்களைப்போல் பயனடையாமல் திரும்பிச் செல்வதில்லை.

22. 36. இலை, புஷ்பம், பழம், நிழல், வேர், மரவுரி, கிளை, வாசனையுள்ள பிசின் பொடி, கட்டை, தளிர் இவையனைத்தாலும் (அண்டியவர்களுடைய) விருப்பங்களைப் பூர்த்தி செய்கின்றன.

22. 37. இதுதான் உடல் படைத்தவர்களுக்கு உண்மையான பிறவிப்பயன். இவ்வுலகில் ஜீவர்களுக்குப் பிராணனாலும், பணத்தாலும், புத்தியாலும், பேச்சாலும் எப்போதும் (இம்மரங்களைப்போல்) நன்மையையே செய்யவேண்டும்.

22. 38. இவ்விதம் சொல்லிக்கொண்டு தளிர் கொத்து பழம் புஷ்பம் இலை இவைகளின் பாரத்தால் தாழ்ந்திருக்கும் கொம்புகளையுடைய மரங்களின் இடையே யமுனையை நோக்கிச் சென்றார்.

---

22. 37. ஒ. சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
ஆந்தனையுங் காப்பரறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந்தனையுங் குளிர் நிழலைத்தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்.

---

22. 36. भस्मास्थि-भोगैः । 22. 35. एतावज्जन्मसामर्थ्यं । परं जन्म ।
22. 37. श्रेय आचरणं सदा । பா. பே.

तत्र गाः पाययित्वापः सुमृष्टाः शीतलाः शिवाः।
ततो नृप स्वयं गोपाः कामं स्वादु पपुर्जलम् ।२२.३९॥

तस्या उपवने कामं चारयन्तः पशून् नृपः।
कृष्णरामावुपागम्य क्षुधार्ता इदमब्रुवन् ॥२२.४०॥

इति श्रीमद्भागवते दशमस्कन्धे
गोपीवस्त्रापहारो नाम द्वाविंशोऽध्यायः॥

---

22. 39. அங்கு பசுக்களுக்கு நீர் காட்டிவிட்டுத் தெளிந்ததும் குளிர்ந்ததும் நன்மை பயப்பதும் ருசியுள்ளதுமான தண்ணீரைக் கோபர்கள் ஆசைதீரக் குடித்தார்கள்.

22. 40. அரசே! பிறகு பக்கத்திலுள்ள ஒரு வனத்தில் பசுக்களை மேய்க்கையில் கோபர்கள் பசியினால் களைத்து பலராமனிடமும் கிருஷ்ணனிடமும் வந்து பின் வருமாறு சொன்னார்கள்.

இங்ஙனம் ஸ்ரீமத் பாகவதத்தில் பத்தாவது ஸ்கந்தத்தில்
கோபீவஸ்திராபஹரணம் எனப் பெயர் பெற்ற
இருபத்திரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

———

यज्ञपत्नी उपाख्यानम्

गोपा ऊचुः—

राम राम महावीर्य कृष्ण दुष्टनिबर्हण।
एषा वै बाधते क्षुन्न-स्तच्छान्तिं कर्तु-मर्हथः ॥ २३.१ ॥

श्रीभगवानुवाच—

प्रयात देवयजनं ब्राह्मणा ब्रह्मवादिनः।
सत्र-मांगिरसं नाम ह्यासते स्वर्गकाम्यया ॥ २३.३ ॥

तत्र गत्वौदनं गोपा याचतास्मद्विसर्जिताः।
कीर्तयन्तो भगवत आर्यस्य मम चाभिधाम् ॥ २३.४ ॥

श्रीशुक उवाच—

इत्यादिष्टा भगवता गत्वायाचन्त ते तथा।
कृतांजलि-पुटा विप्रान् दण्डवत् पतिता भुवि ॥ २३.५ ॥

हे भूमिदेवाः श्रृणुत कृष्णस्यादेश-कारिणः।
प्राप्ताञ्जानीत भद्रं वो गोपान् नो राम चोदितान् ॥ २३.६ ॥

யஜ்ஞபத்னீ உபாக்கியானம்

கோபர்கள் கூறியது—

23. 1. மஹாவீரியமுள்ள பலராமா! துஷ்டர்களையடக்கும் கிருஷ்ணா! இப்போது எங்களைப் பசி வாட்டுகின்றது. அதைப் போக்குவதற்கு நீங்கள் வழி காண வேண்டும்.

ஸ்ரீ பகவான் கூறியது—

23. 3. வேதங்கற்ற பிராம்மணர்கள் ஸ்வர்க்கத்தில் ஆசைகொண்டு ஆங்கிரஸம் என்ற யாகத்தை (அருகாமையில்) செய்துகொண்டிருக்கிறார்கள். நீங்கள் அந்த யாக சாலைக்குச் செல்லுங்கள்.

23. 4. அங்கு சென்று எங்களால் அனுப்பப்பட்டவர்கள் என்று பூஜ்யராகிய பலராமருடைய பெயரையும் என்னுடைய பெயரையும் சொல்லிக்கொண்டு அன்னம் கேளுங்கள்.

ஸ்ரீ சுகர் கூறியது—

23. 5. பகவானால் இவ்வாறு கட்டளையிடப்பட்ட அவர்கள் அதன்படி சென்று வேதியர்கள்முன் பூமியில் தடிக்கம்புபோல் விழுந்து நமஸ்கரித்து கைகளைக் கூப்பிக் கொண்டு யாசித்தார்கள்.

23. 6. 'பூதேவர்களே! நாங்கள் கிருஷ்ணனுடைய வேலைக்காரர்களாகிய கோபர்கள், பலராமனால் அனுப்பப்பட்டவர்கள் என்று தெரிந்துகொள்ள வேண்டும். (அவர்கள் சொல்லியனுப்பியதை) கேட்கவேண்டும். உங்களுக்கு மங்களம் உண்டாகும்.

गाश्चारयन्ता-वविदूर-ओदनं रामाच्युतौ वो लषतो बुभुक्षितौ ।
तयो-र्द्विजा ओदनमर्थिनो-र्यदि श्रद्धा च वो यच्छत धर्मवित्तमाः ॥ २३.७ ॥

इति ते भगवद्याच्ञां शृण्वन्तोऽपि न शुश्रुवुः ।
क्षुद्राशा भूरिकर्माणो बालिशा वृद्धमानिनः ॥ २३.९ ॥

देशः कालः पृथग्द्रव्यं मन्त्र-तन्त्र-र्त्विगग्नयः ।
देवता यजमानश्च क्रतु-र्धर्मश्च यन्मयः ॥ २३.१० ॥

तं ब्रह्म परमं साक्षाद् भगवन्त-मधोक्षजम् ।
मनुष्य-दृष्ट्या दुष्प्रज्ञा मर्त्यात्मानो न मेनिरे ॥ २३.११ ॥

न ते तदोमिति प्रोचु-र्न नेति च परंतप ।
गोपा निराशाः प्रत्येत्य तथोचुः कृष्णरामयोः ॥ २३.१२ ॥

---

23. 7. 'பலராமனும் கிருஷ்ணனும் சமீபத்தில் பசுக்களை மேய்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பசித்து உங்களிடமிருந்து அன்னத்தை விரும்புகிறார்கள். தருமமறிந்தவர்களில் சிறந்தவர்களாகிய பிராம்மணர்களே! அவர்களிடம் உங்களுக்கு விசுவாஸமிருந்தால் யாசிக்கும் அவர்களுக்கு அன்னம் கொடுங்கள்'.

23. 9. இவ்வாறு பகவான் யாசித்ததை அவர்கள் கேட்டபோதிலும் கேட்காதவர்கள் போலிருந்தார்கள். (ஏனெனில்) அவர்கள் அற்ப பலனுக்காக பெரிய கர்மாக்களைச் செய்பவர்களாயும், ஒன்றும் அறியாதவர்களாயினும் எல்லாம் அறிந்த பெரியவர்கள் என்ற அபிமானமும் கொண்டவர்களாயுமிருந்தனர்.

23.10-11. தேசம், காலம், பலவிதத் திரவியம், மந்திரம், தந்திரம், ருத்விக், அக்கினிகள், தேவதைகள், யஜமானன், யாகம், தர்மம் எல்லாம் எவருடைய வடிவமோ அந்த பரப்பிரம்மத்தை, ஸாக்ஷாத் பகவானை, அதோக்ஷஜனைத் தாங்கள் பெரிய மனிதர்கள் என்ற துரபிமானிகளாகிய அவர்கள் மனிதப் பார்வையால் மதிக்கவில்லை.

23. 12. சத்துருக்களைத் தவிக்கச் செய்யும் அரசே! அவர்கள் உண்டு என்றும் சொல்லவில்லை, இல்லையென்றும் சொல்லவில்லை. கோபர்கள் வெறுப்படைந்து திரும்பிப்போய் அதைப் பலராமனிடமும் கிருஷ்ணனிடமும் சொன்னார்கள்.

---

23. 9. ஒ. (அவித்யாயாம் பஹுதா வர்த்தமானா வயம் க்ருதார்த்தா இத்யபிமன்யந்தி பாலா: ।) அவித்தையில் வெகுவாக ஆழ்ந்தவர்களும் அறிவிற் சிறியோருமாகிய இவர்கள் தம்மைக் கிருதார்த்தர்களாய்க் கருதிக் கொள்ளுகின்றனர். —மு. உப. 2. 9.

23. 10-11. ஒ. பொருள்களுக்கு மகேசுவரனையுள்ள என்னுடைய உயர்ந்த தன்மையை அறியாதவர்களாய் மூடர்கள் மனித உடலை அடைந்த என்னை அவமதிக்கிறார்கள். —. கீ. 9. 11.

ஒ. நானே கிரது, நானே யக்ஞம், நானே பிதிருக்களுக்கு இடும் அன்னம், நானே பிராணிகளுக்கு அன்னமும் மருந்தும்; மந்திரமும் நானே, நெய்யும் நானே, அக்கினியும் நானே, ஹோம கர்மமும் நானே. —கீ. 9. 16.

---

23. 10. **तत्त्वर्त्विजोऽग्नयः ।** 23. 11. **मर्त्यात्मानो न ते विदुः ।** பா. பே.

तदुपाकर्ण्य भगवान् प्रहस्य जगदीश्वरः।
व्याजहार पुनर्गोपान् दर्शयँ-ल्लौकिकीं गतिम् ॥ २३.१३ ॥

मां ज्ञापयत पत्नीभ्यः ससंकर्षणमागतम्।
दास्यन्ति काम-मन्नं वः स्निग्धा मय्युषिता धिया ॥ २३.१४ ॥

गत्वाथ पत्नी-शालायां दृष्ट्वाऽऽसीनाः स्वलंकृताः।
नत्वा द्विजसती-र्गोपाः प्रश्रिता इदमब्रुवन् ॥ २३.१५ ॥

नमो वो विप्रपत्नीभ्यो निबोधत वचांसि नः।
इतोऽविदूरे चरता कृष्णेनेहेषिता वयम् ॥ २३.१६ ॥

गाश्चारयन् स गोपालैः सरामो दूरमागतः।
बुभुक्षितस्य तस्यान्नं सानुगस्य प्रदीयताम् ॥ २३.१७ ॥

श्रुत्वाच्युत-मुपायातं नित्यं तद्दर्शनोत्सुकाः।
तत्कथा-क्षिप्तमनसो बभूवु-र्जातसंभ्रमाः ॥ २३.१८ ॥

---

23. 13 ஜகதீசுவரனுகிய பகவான் அதைக் கேட்டுச் சிரித்துவிட்டு உலக நடையைக் காட்டுபவராய் மீண்டும் கோபர்களிடம் கூறுவார்.

23. 14. 'நீங்கள் வேதியர்களுடைய மனைவிமார்களிடம் சென்று பலராமனுடன் நான் இங்கு வந்திருப்பதைத் தெரிவியுங்கள். என்னிடம் பிரியங்கொண்டு எப்போதும் என்னைச் சிந்தித்துவரும் அவர்கள் உங்களுக்கு வேண்டிய அன்னத்தை அளிப்பார்கள்.'

23. 15. கோபர்கள் அவ்வாறே சென்று பத்னீசாலையில் நன்கு அலங்கரித்துக் கொண்டு வீற்றிருக்கும் பிராம்மண பத்னிகளைக் கண்டு நமஸ்கரித்து வணக்கத்துடன் பின்வருமாறு கூறினுர்கள்.

23. 16. 'பிராம்மண பத்னிகளாகிய உங்களுக்கு நமஸ்காரம். எங்கள் வார்த்தைகளை வாங்கிக்கொள்ள வேண்டும். இங்கிருந்து சிறிது தூரத்தில் சஞ்சரிக்கும் கிருஷ்ணனுல் இங்கு நாங்கள் அனுப்பப்பட்டுள்ளோம்.

23. 17. 'அவர் கோபர்களுடனும் பலராமனுடனும் மாடுகளை மேய்த்துக் கொண்டு வெகுதூரம் வந்துவிட்டார். பரிவாரத்துடன் கூடிப் பசித்திருக்கும் அவருக்கு அன்னமளியுங்கள்.'

23. 18. அவருடைய கதைகளால் கவரப்பட்ட மனத்தினரும் எப்போதும் அவரைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் மிக்கவர்களுமாகிய அவர்கள், அச்சுதன் அங்கு வந்திருப்பதைக் கேட்டு மிகுந்த பரபரப்படைந்தார்கள்.

---

23. 14. **லௌகிகீம் கதிம்**—(ந ஹி கார்யார்த்தினோ நிர்வித்யந்தே கோ வா யாசகோ ந பராபூயதே இத்யாதி லோகஸ்திதிம் தர்சயன்) கார்யத்தில் கண்ணுயிருப்பவர் எதிலும் வெறுப்படையார், யாசகர்கள் எவர் செய்யும் அவமானத்தையும் பொருட்படுத்தார் என்னும் உலக மார்க்கத்தை பகவான் உபதேசிக்கிருர். அல்லது தாயுள்ளம் பசித்தவர்க்கிரங்கும் என்னும் உண்மையைக் காட்டுகிருர் எனவும் கொள்ளலாம்.

---

23. 16. **प्रेषिता वयम्।**

चतुर्विधं बहुगुण-मन्नमादाय भाजनैः ।
अभिसस्रुः प्रियं सर्वाः समुद्रमिव निम्नगाः ॥ २३.१९ ॥

तास्तथा त्यक्तसर्वाशाः प्राप्ता आत्मदिदृक्षया ।
विज्ञायाखिल-दृग्द्रष्टा प्राह प्रहसिताननः ॥ २३.२४ ॥

स्वागतं वो महाभागा आस्यतां करवाम किम् ।
यन्नो दिदृक्षया प्राप्ता उपपन्नमिदं हि वः ॥ २३.२५ ॥

नन्वद्धा मयि कुर्वन्ति कुशलाः स्वार्थदर्शनाः ।
अहैतुक्य-व्यवहितां भक्तिमात्मप्रिये यथा ॥ २३.२६ ॥

---

23. 19. ருசிமிகுந்த நான்குவகையான அன்னங்களைத் தனித்தனிப் பாத்திரங்களில் எடுத்துக்கொண்டு கடலை நோக்கி நதிகள் செல்லுவதுபோல் அவர்களனைவரும் பிரியத்துக்குரிய கிருஷ்ணனை நோக்கிச் சென்றார்கள்.

23. 24. வேறு ஆசைகளைவிட்டுத் தன்னைப் பார்க்கவேண்டுமென்று வந்திருக்கும் அவர்களைப் பார்த்துப் புன்முறுவல் பூத்து அவர்கள் உள்ளத்தையறிந்த அகிலபுத்தி சாக்ஷியாகிய பகவான் பின்வருமாறு கூறினார்.

23. 25. 'சௌபாக்கியவதிகளே! உங்களுக்கு நல்வரவு, உட்காருங்கள். நான் உங்களுக்கு என்ன செய்யலாம்? என்னைப் பார்க்கவேண்டுமென்று நீங்கள் வந்தது உங்களுக்கே தகும்.

23. 26. 'தங்களுக்கு எது நன்மை என்று கண்டுகொண்ட விவேகிகள் தங்களுடைய ஆத்மாவும் பிரியனுமான என்னிடத்தில் ஒருவிதமான பிரயோஜனத்தையும் எதிர்பாராமல் இடைவிடாது உண்மையான பக்தியைச் செய்கிறார்களன்றோ?

---

23. 19. ஒ. யதா நத்ய: ஸ்யந்தமானா: ஸமுத்ரே
அஸ்தங் **கச்சந்தி** நாமரூபே **விஹாய** ।
ததா **வித்**வான் நாம-ரூபாத்-விமுக்த:
பராத்பரம் புருஷமுபைதி **தி**வ்யம் ॥ —மு. உப. 3. 2. 8.

23. 26. **குசலா** :—விவேகின: । **ஸ்வார்த்தம்**-புருஷார்த்தம் । **அத்தா**-ஸாக்ஷாத் । **அஹைதுக்யவ்யவஹிதாம்** - பலாபிஸந்திரஹிதாம் । **ஆத்மப்ரியே** - ஆத்மா ச - ப்ரியச்ச தஸ்மின் மயி ।

---

23. 25. **दिदृक्षयाऽभ्येता ।** 23. 26. **स्वार्थदर्शिनः** பா. பே.

प्राण-बुद्धि-मनः स्वात्म-दारापत्य-धनादयः ।
यत्संपर्कात् प्रिया आसंस्ततः को न्वपरः प्रियः ॥ २३.२७ ॥

तद् यात देवयजनं पतयो वो द्विजातयः ।
स्वसत्रं पारयिष्यन्ति युष्माभि-र्गृहमेधिनः ॥ २३.२८ ॥

यज्ञपत्न्य ऊचुः—

मैवं विभोऽर्हति भवान् गदितुं नृशंसं
सत्यं कुरुष्व निगमं तव पादमूलम् ।
प्राप्ता वयं तुलसिदाम पदावसृष्टं
केशै-र्निवोढु-मतिलंघ्य समस्त-बन्धून् ॥ २३.२९ ॥

श्रीभगवानुवाच—

न प्रीतयेऽनुरागाय ह्यंगसंगो नृणामिह ।
तन्मनो मयि युंजाना अचिरान्मामवाप्स्यथ ॥ २३.३२ ॥

---

23. 27. 'பிராணன், புத்தி, மனது, உறவினர், உடல், மனைவி, மக்கள் முதலிய எல்லாம் எந்த ஆத்மாவின் சம்பந்தத்தால் பிரியமானவைகளாக ஆகின்றனவோ அந்த ஆத்மாவைவிடப் பிரியமானது வேறு எதுதான் உண்டு?

23. 28. 'ஆகையால் யாகசாலைக்குச் செல்லுங்கள். உங்களுடன் கூடி கிருஹஸ்தர்களாய் விளங்கும் உங்கள் பதிகளாகிய பிராம்மணர்கள் தங்கள் யாகத்தை முடிக்கப் போகிறார்கள்.'

யஜ்ஞபத்னிகள் கூறியது—

23. 29. 'பிரபுவே! இங்ஙனம் கடுஞ்சொல் பேசுவது உமக்குத் தகாது. உமது பிரதிக்ஞையை உண்மையாகச் செய்யும். உமது பாதங்களிலிருந்து நழுவிய துளசி-மாலையைத் தலையில் தாங்கவேண்டும் என்ற ஆசையால் பந்துக்களையெல்லாம் மீறிக்கொண்டு நாங்கள் உம்மை வந்தடைந்தோம்.'

ஸ்ரீ பகவான் கூறியது—

23. 32. மானிடர்க்குப் பிரீதி வளர்வதற்கு இங்கு உடல்களின் கூட்டுறவு அவசியமில்லை. ஆகையால் மனதை என்னிடம் வைத்தால் விரைவில் என்னை அடைவீர்கள்.

---

23. 27. ஒ. ந தேஹம் ந ப்ராணான் ந ச ஸுகமசேஷாபிலஷிதம்
ந சாத்மானம் நான்யத் கிமபி தவ சேஷத்வ-விபவாத் ।
பஹிர்ப் பூதம் நாத க்ஷணமபி ஸஹே யாது சததா
விநாசம் தத் ஸத்யம் மதுமதன விஜ்ஞாபனமிதம் ॥
—ஸ்தோத்ர ரத்னம். ஆளவந்தார்.

யத் ஸம்பர்க்காத்—யஸ்ய அத்யாஸேன ।

ஒ. ந வா அரே பத்யு: காமாய பதி: ப்ரியோ பவதி,
ஆத்மனஸ்து காமாய பதி: ப்ரியோ பவதி । —ப்ரு. உப. 4. 5. 6.

23. 29. நிகமம்-ப்ரதிஜ்ஞாம் । ந மே பக்த: ப்ரணச்யதீதி ।
ந ச புனராவர்த்ததே ந ச புனராவர்த்தத இதி ।

श्रवणा-द्दर्शनाद् ध्यानान्मयि भावोऽनुकीर्तनात् ।
न तथा सन्निकर्षेण प्रतियात ततो गृहान् ॥ २३.३३ ॥

श्रीशुक उवाच—

भगवानपि गोविन्द-स्तेनैवान्नेन गोपकान् ।
चतु-र्विधेनाशयित्वा स्वयं च बुभुजे प्रभुः ॥ २३.३५ ॥

एवं लीलानरवपु-र्नृलोकमनुशीलयन् ।
रेमे गोगोपगोपीनां रमयन् रूपवाक्कृतैः ॥ २३.३६ ॥

अथानुस्मृत्य विप्रास्ते अन्वतप्यन् कृतागसः ।
यद् विश्वेश्वरयो-र्याच्ञामहन्म नृविडंबयोः ॥ २३.३७ ॥

दृष्ट्वा स्त्रीणां भगवति कृष्णे भक्ति-मलौकिकीम् ।
आत्मानं च तया हीन-मनुतप्ता व्यगर्हयन् ॥ २३.३८ ॥

धिग्जन्म नस्त्रिवृद् विद्यां धिग्व्रतं धिग् बहुज्ञताम् ।
धिक् कुलं धिक् क्रिया-दाक्ष्यं विमुखा ये त्वधोक्षजे ॥ २३.३९ ॥

---

23. 33. சிரவணத்தாலும், தரிசனத்தாலும், தியானத்தாலும் கீர்த்தனத்தாலும் என்னிடம் பக்தி வளர்வதுபோல் என் பக்கத்தில் இருப்பதால் வளர்வதில்லை. ஆகையால் நீங்கள் வீட்டுக்குச் செல்லுங்கள்.

ஸ்ரீ சுகர் கூறியது—

23. 35. பிரபுவாகிய கிருஷ்ண பகவான் நான்குவிதமான அன்னத்தையும் கோபர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துச் சாப்பிடச் செய்து தாமும் சாப்பிட்டார்.

23. 36. லீலையாக மனித உருக் கொண்ட பரமாத்மா சாமானிய மனிதர்களைப் போல் நடித்துத் தமது ரூபத்தாலும் பேச்சாலும் உண்டான சரித்திரங்களால் கோபர்களும் கோபிகைகளும் பசுக்களும் மகிழும்படி விளையாடினார்.

23. 37. பின்னர் வேதியர்கள் (பலராமன் கிருஷ்ணன் இவர்களுடைய பெருமையை) யோசித்துப் பார்த்து 'மனிதர்களைப்போல் நடிக்கும் உலக நாயகர்கள் யாசித்ததை மறுத்துவிட்டோமே, அதனால் நாம் பாவம் செய்தவர்களாய் விட்டோம்' என்று பரிதவித்தார்கள்.

23. 38. ஸ்திரீகளுக்குக் கிருஷ்ண பகவானிடத்தில் உலகில் காணுதற்கரிய பக்தி ஏற்பட்டதையும் அது இல்லாத தங்களையும் பார்த்து மிகுந்த வருத்தமடைந்து தங்களை நொந்துகொண்டார்கள்.

23. 39. ('நல்ல பிறப்பு, உபநயனம், யஜ்ஞதீக்ஷை என்ற) மூன்று ஸம்ஸ்காரங்களைப் பெற்ற பிறப்பையும் வேத வித்தையையும் சுடவேண்டும்; விரதத்தையும் சுடவேண்டும். பலவிஷயங்களைக் கற்றதையும் சுடவேண்டும். குலத்தைச் சுடவேண்டும்; கருமங்களையனுஷ்டிக்கும் திறமையைச் சுடவேண்டும். ஏனென்றால் அதோக்ஷஜரிடத்தில் நமது மனம் செல்லவில்லையன்றோ?

---

23. 33. ஒ. இஷ்டேவஸ்துன்யுபசிதப்ரஸ: ப்ரேமராசீ பவந்தி ।
—மேகதூதம்: காளிதாஸன்

23. 39. த்ரிவ்ருத்-சௌக்லம், ஸாவித்ரம், தைக்ஷமிதி ।
வ்ரதம்-ப்ரஹ்ம சர்யம் ।

ஒ. விப்ராத்-த்விஷட்குணயுதா-தரவிந்தநாப-பாதாரவிந்த - விமுகாச்-ச்வபசம் வரிஷ்டம் ।
—பாக: 7. 9. 10.

नूनं भगवतो माया योगिनामपि मोहिनी ।
यद् वयं गुरवो नृणां स्वार्थे मुह्यामहे द्विजाः ॥ २३.४० ॥

अहो पश्यत नारीणामपि कृष्णे जगद्गुरौ ।
दुरन्तभावं योऽविध्यन्मृत्यु-पाशान् गृहाभिधान् ॥ २३.४१ ॥

नासां द्विजाति-संस्कारो न निवासो गुरावपि ।
न तपो नात्ममीमांसा न शौचं न क्रियाः शुभाः ॥ २३.४२ ॥

अथापि ह्युत्तमश्लोके कृष्णे योगीश्वरेश्वरे ।
भक्तिर्दृढा न चास्माकं संस्कारादिमतामपि ॥ २३.४३ ॥

ननु स्वार्थ-विमूढानां प्रमत्तानां गृहेहया ।
अहो नः स्मारयामास गोपवाक्यैः सतां गतिः ॥ २३.४४ ॥

---

23. 40. 'நாம் மனிதர்களுக்குக் குருவாகவும் பிராம்மணர்களாகவும் இருந்தும் நமது சொந்தக் காரியத்தில் தவறியதால் பகவானுடைய மாயை யோகிகளையும் மயக்கி விடுகிறது என்பது நிச்சயம்.

23. 41. 'ஆச்சரியம்! யமனுடைய பாசக்கயிறு போன்ற இல்லறத்தின் ஆசா பாசங்களை எந்த பக்தி அறுத்துவிட்டதோ அப்படிப்பட்ட அடைதற்கரிய பக்தி ஜகத் குருவான ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் ஸ்திரீகளுக்குக்கூட உண்டானதைப் பாருங்கள்.

33. 42. 'இவர்களுக்கு உபநயன ஸம்ஸ்காரமில்லை, குருகுல வாசமில்லை, தவமில்லை, ஆத்மவிசாரமில்லை, சௌசமில்லை, ஸத்கர்மானுஷ்டானமில்லை.

23. 43. 'என்றாலும் உத்தம சுலோகரும் யோகீசுவரர்களுக்கு ஈசுவரரும் ஆகிய கிருஷ்ணனிடத்தில் திடமான பக்தி ஏற்பட்டுள்ளது. ஸம்ஸ்காரங்களுடன் கூடி யிருந்தும் நமக்கு ஏற்படவில்லை.

23. 44. 'இல்லறப் பற்றால் உயர் நலனை மறந்தவர்களும் ஆத்மார்த்தமான காரியத்தில் மூடர்களுமான நமக்கு ஸாதுசரண்யரான பகவான் கோபர்களின் வார்த்தையைக் கொண்டு ஞாபகப்படுத்தினார் என்பது நிச்சயம். இது ஆச்சரியம்.

---

23. 40. ஒ. ஜ்ஞானிநாமபி சேதாம்ஸி தேவீ பகவதீ ஹி ஸா ।
பலாதாக்ருஷ்ய மோஹாய மஹாமாயா ப்ரயச்சதி ॥
—தேவீமாஹாத்மியம்.

23. 42. ஒ. மாடத்துளானலன் மண்டபத்தானலன்
கூடத்துளானலன் கோயிலுள்ளானலன்
வேடத்துளானலன் வேட்கைவிட்டார் நெஞ்சில்
மூடத்துளே நின்று முக்தி தந்தானே.
—திருமந்திரம்.

अन्यथा पूर्णकामस्य कैवल्याद्याशिषां पतेः ।
ईशितव्यैः किमस्माभि-रीशस्यैतद् विडंबनम् ॥ २३.४५ ॥

हित्वान्यान् भजते यं श्रीः पादस्पर्शाशयाऽसकृत् ।
आत्मदोषापवर्गेण तद्याच्ञा जनमोहिनी ॥ २३.४६ ॥

देशः कालः पृथग्द्रव्यं मन्त्र-तन्त्र-र्त्विजोऽग्नयः ।
देवता यजमानश्च क्रतु-धर्मश्च यन्मयः ॥ २३.४७ ॥

स एष भगवान् साक्षाद् विष्णु-र्योगीश्वरेश्वरः ।
जातो यदुष्वित्यश्रृण्म ह्यपि मूढा न विद्महे ॥ २३.४८ ॥

अहो वयं धन्यतमा येषां न-स्तादृशी स्त्रियः ।
भक्त्या यासां मति-र्जाता अस्माकं निश्चला हरौ ॥ २३.४९ ॥

नमस्तुभ्यं भगवते कृष्णायाकुण्ठ-मेधसे ।
यन्माया-मोहित-धियो भ्रमामः कर्म-वर्त्मसु ॥ २३.५० ॥

---

23. 45. ' அப்படியல்லாவிட்டால் வேண்டுதல் வேண்டாமை யற்றவரும் கைவல்யம் முதலியவற்றையளிக்கும் நாயகனும் ஈசுவரனுமாகிய அவருக்கு அடிமைகளாகிய நம்மாலாகவேண்டியதென்ன ? இது அவருடைய லீலை.

23. 46. ' இலட்சுமி தேவியானவள் தனது சஞ்சல ஸ்வபாவத்தை விட்டு புறக்கணித்து எவருடைய பாதங்களை இடைவிடாது சேவிக்கின்றளோ அந்த பகவான் நம்மிடம் யாசித்தது மனிதர்களை மயக்குஞ் செயல்.

23. 47-48. ' தேசம் காலம் பலவிதமான திரவியம் மந்திரம் தந்திரம் ருத்விக் அக்னிகள் தேவதைகள் யஜமானன் க்ரது தர்மம் எல்லாம் எவருடைய வடிவேயாமோ அந்த யோகீசுவர ஈசுவரரும் விஷ்ணுவுமான பகவானே நேரில் யதுகுலத்தில் இப்போது பிறந்திருக்கிறர் என்று கேள்விப்பட்டிருந்தும் மதிமயங்கியவர்களாய் நாம் அறியவில்லை.

23. 49. ' எவர்களுடைய பக்தியால் நமக்கு ஹரியினிடத்தில் நிச்சலமான பக்தி உண்டாயிற்றே அப்பட்டிப்பட்ட ஸ்திரீகளை மனைவிகளாய்ப் பெற்ற நாம் பாக்கியசாலிகள்.

23. 50. ' எவருடைய மாயையால் அறிவு மயங்கிக் கர்மார்க்கத்தில் சுழன்று கொண்டிருக்கிறேமோ அந்த அகண்டமான அறிவினையுடைய கிருஷ்ண பகவானுகிய உமக்கு நமஸ்காரம்.

---

23. 47. ஒ. அஹம்-க்ரது-ரஹம் யஜ்ஞ : ஸ்வதாஹ-மஹ-மௌஷதம் | மந்த்ரோஹ-மஹமேவாஜ்ய-மஹ-மக்னி-ரஹம் ஹுதம் || —கீ. 9. 16.

28. 50. ஒ. தைவீஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா |
மாமேவ யே ப்ரபத்யந்தே மாயா-மேதாம் தரந்தி தே || —கீ. 7. 14.

---

23. 46. स्वात्मदोषापवर्गेण ।

स वै न आद्यः पुरुषः स्वमाया-मोहितात्मनाम् ।
अविज्ञातानुभावानां क्षन्तु-मर्हत्यतिक्रमम् ॥ २३.५१ ॥

इति स्वाघ-मनुस्मृत्य कृष्णे ते कृतहेलनाः ।
दिदृक्षवोऽप्यच्युतयोः कंसाद्भीता न चाचलन् ॥ २३.५२ ॥

इति श्रीमद्भागवते दशमस्कन्धे यज्ञपत्न्युपाख्यानं
नाम त्रयोविंशोऽध्यायः ॥

---

23. 51. 'தம்முடைய மாயையில் மோகித்துத் தமது மகிமையை அறிந்து கொள்ளாமலிருக்கும் நம்முடைய குற்றத்தை அந்த ஆதிபுருஷன் பொறுத்தருள வேண்டும்.'

23. 52. கிருஷ்ணனை அவமதித்துப் பிழைபுரிந்த அவர்கள், இவ்வாறுகத் தங்கள் தவறுதலை நினைத்து வருந்தி அவரைப் பார்க்க விரும்பினர்கள் எனினும் கம்ஸனிடம் பயத்தால் இடம் விட்டுச் செல்லவில்லை.

இங்ஙனம் ஸ்ரீமத் பாகவதத்தில் தசமஸ்கந்தத்தில் யஜ்ஞபத்தினி உபாக்கியானம் எனப் பெயர் பெற்ற இருபத்து மூன்றுவது அத்தியாயம் முற்றும்.

॥ गोवर्धनोद्धरणम् ॥

श्रीशुक उवाच—

भगवानपि तत्रैव बलदेवेन संयुतः।
अपश्यन्निवसन् गोपा-निन्द्रयाग-कृतोद्यमान् ॥ २४.१ ॥

श्रीभगवानुवाच—

कथ्यतां मे पितः कोऽयं संभ्रमो व उपागतः।
किं फलं कस्य चोद्देशः केन वा साध्यते मखः ॥ २४.३ ॥

नन्द उवाच—

पर्जन्यो भगवानिन्द्रो मेघास्तस्यात्म-मूर्तयः।
तेऽभिवर्षन्ति भूतानां प्रीणनं जीवनं पयः ॥ २४.८ ॥

तं तात वयमन्ये च वार्मुचां पति-मीश्वरम्।
द्रव्यैस्तद्रेतसा सिद्धै-र्यजन्ते क्रतुभि-र्नराः ॥ २४.९ ॥

கோவர்த்தனோத்தரணம்

ஸ்ரீ சுகர் கூறியது—

24. 1. ஸ்ரீ கிருஷ்ணபகவான் பலதேவருடன் இவ்வாருகக் கோகுலத்தில் வசித்துக்கொண்டிருக்கையில் இந்திரனைக் குறித்து யாகம் செய்வதற்காகக் கோகுல வாசிகள் ஏற்பாடுகள் செய்வதைக் கண்ணுற்ருர்.

ஸ்ரீ பகவான் கூறியது—

24. 3. அப்பா! இப்பொழுது காணப்படும் பரபரப்பு எதற்காக? இது யாகம் எனின் அதனுல் என்ன பயன்? அது யாரைக் குறித்து? யாரால் செய்யத்தக்கது? இவைகளை எனக்குக் கூறவேண்டும்.

நந்தர் கூறியது—

24. 8. தேவர்களுக் கதிபதியான இந்திரன் மழைக்கு அரசன். மேகங்கள் அவனுக்குப் பிரியமான உருவங்கள். அவைகள் பிராணிகளுக்குப் பிரீதியையும் பிழைப்பையும் அளிக்கும் நீரை வர்ஷிக்கின்றன.

24. 9. குழந்தாய்! மேகங்களுக்கு அதிபதியும் ஈசுவரனுமான அவ்விந்திரனை அவன் பொழிந்த மழையால் விளைந்த பொருள்களைக் கொண்டு யாகங்களால் நாம் ஆராதிக்கிறோம். பிற மனிதர்களும் பூஜிக்கிருர்கள்.

இருபத்து நாலாவது அத்தியாயம்—

(**பூஸுராணும்** க்ரியா-**கர்வம்** நிரஸ்ய ஸ்வ: ஸுரேஷு ச। **மகவன்-மதபங்காய** தன் மகம் ஸமவாரயத் ॥ —ஸ்ரீ.)

பிராம்மணர்களுக்குத் தாம் செய்யும் **கர்மா**னுஷ்டானத்தால் ஏற்படும் **கர்வத்தைப்** போக்கியபின் தேவர்களுள் இந்திரனுக்கேற்பட்ட மதத்தைப் போக்குவதை இவ்வத்தியாயம் **கூறுகிறது.**

श्री भगवानुवाच—

किमिन्द्रेणेह भूतानां स्वस्वकर्मानुवर्तिनाम् ।
अनीशेऽन्यथा कर्तुं स्वभाव-विहितं नृणाम् ॥ २४.१५ ॥

न नः पुरो जनपदा न ग्रामा न गृहा वयम् ।
नित्यं वनौकस-स्तात वनशैल-निवासिनः ॥ २४.२४ ॥

तस्माद् गवां ब्राह्मणाना-मद्रेश्चारभ्यतां मखः ।
य इन्द्रयागसंभारा-स्तैरयं साध्यतां मखः ॥ २४.२५ ॥

हूयन्ता-मग्नयः सम्यग् ब्राह्मणै-र्ब्रह्मवादिभिः ।
अन्नं बहुविधं तेभ्यो देयं वो धेनुदक्षिणाः ॥ २४.२७ ॥

अन्येभ्यश्चाश्व-चण्डाल-पतितेभ्यो यथार्हतः ।
यवसं च गवां दत्त्वा गिरये दीयतां बलिः ॥ २४.२८ ॥

स्वलंकृता भुक्तवन्तः स्वनुलिप्ताः सुवाससः ।
प्रदक्षिणं च कुरुत गोविप्रानल-पर्वतान् ॥ २४.२९ ॥

ஸ்ரீ பகவான் கூறியது—

24. 15. அவரவர்களுடைய தொழிலைப் பின்பற்றி வாழும் பிராணிகளுக்கு இங்கு இந்திரனாலாவதென்ன? இயற்கை நியதியின்படி மனிதர்க்கு ஏற்படுவதை மாற்றுவதற்கு அவனுக்குத் திறமையில்லையே.

24. 24. அப்பா! நமக்கு நகரங்களோ நாடுகளோ இல்லை. கிராமங்களுமில்லை, வீடுகளுமில்லை. நாம் எப்போதும் காடுகளிலும் மலைகளிலும் வசித்துக்கொண்டு வனங்களையே நம்பி வாழ்கிறோம்.

24. 25. ஆகையால் (நாம் நம்பி வாழும்) பசுக்களுக்கும் பிராம்மணர்களுக்கும் மலைகளுக்கும் பூஜை ஆரம்பிக்கப்படட்டும். இந்திரயாகத்திற்காகச் சேகரிக்கப்பட்ட பொருள்கள் எவையோ அவற்றைக்கொண்டே இந்தப் பூஜையைச் செய்து முடிக்கலாம்.

24. 27. வேதம் ஓதும் பிராம்மணர்களைக் கொண்டு செவ்வையாக அக்கினியில் ஹோமம் செய்யப்படட்டும். உங்களால் அவர்களுக்குப் பலவிதமான அன்னமும் கறவைப் பசுக்களும் தக்ஷிணைகளும் அளிக்கப்படட்டும்.

24. 28. நாய், சண்டாளர், மற்றும் கீழ்ப்பட்டோர் உள்பட எல்லா உயிர்களுக்கும் அவரவர்களுக்குத் தக்கபடி உணவளித்துப் பசுக்களுக்குப் புல் போட்டு மலைகளுக்குப் பலி கொடுங்கள்.

34. 29. பிறகு நீங்கள் நல்ல ஆடைகளை அணிந்துகொண்டு சந்தனம் பூசிக்கொண்டு அலங்கரித்துக்கொண்டு போஜனம் செய்து பசுக்களையும் பிராம்மணர்களையும் அக்கினியையும் மலையையும் பிரதக்ஷிணம் செய்யுங்கள்.

एतन्मम मतं तात क्रियतां यदि रोचते।
अयं गोब्राह्मणाद्रीणां मह्यं च दयितो मखः ॥ २४.३० ॥

श्रीशुक उवाच—

कालात्मना भगवता शक्रदर्पं जिघांसता।
प्रोक्तं निशम्य नन्दाद्याः साध्वगृह्णन्त तद्वचः ॥ २४.३१ ॥

तथा च व्यदधुः सर्वं यथाऽऽह मधुसूदनः।
वाचयित्वा स्वस्त्ययनं तद् द्रव्येण गिरिद्विजान् ॥ २४.३२ ॥

उपहृत्य बलीन् सर्वानादृता यवसं गवाम्।
गोधनानि पुरस्कृत्य गिरिं चक्रुः प्रदक्षिणम् ॥ २४.३३ ॥

अनांस्यनडुद्युक्तानि ते चारुह्य स्वलंकृताः।
गोप्यश्च कृष्णवीर्याणि गायन्त्यः सद्विजाशिषः ॥ २४.३४ ॥

कृष्णस्त्वन्यतमं रूपं गोपविश्रंभणं गतः।
शैलोऽस्मीति ब्रुवन् भूरि बलिमादद् बृहद्वपुः ॥ २४.३५ ॥

---

24. 30. அப்பா! இது என் அபிப்பிராயம். அது உங்களுக்குப் பிடித்தால் அவ்விதம் செய்யலாம். இவ்விதமாய் யாகம் செய்வது பசுக்களுக்கும் பிராம்மணர்களுக்கும் மலைக்கும் மிகப் பிரியமாயிருக்கும். எனக்கும் மிகப் பிரியமானது.

ஸ்ரீ சுகர் கூறியது—

24. 31. இந்திரனுடைய கர்வத்தையடக்க விரும்பிய காலரூபியான பகவானால் கூறப்பட்டதைக் கேட்டு நந்தகோபர் முதலியவர்கள் அவ்வார்த்தையை நன்றென்று ஏற்றுக் கொண்டனர்.

24. 32-33. அவ்வாறே (இந்திர யாகத்திற்காகச் சேகரித்த) அப் பொருள்களைக் கொண்டு கிருஷ்ணன் கூறியவண்ணம் அனைத்தையும் செய்வித்து வேதியர்களால் ஆசீர்வதிக்கப்பெற்று பசுக்களுக்குப் புல்லளித்துப் பசுக்கூட்டத்தை முன்னே நடத்திக் கொண்டு எல்லா பலிப் பொருள்களையும் எடுத்துக்கொண்டு மிகவும் ஆதரவுடன் மலையைப் பிரதக்ஷிணம் செய்தார்கள்.

24. 34. வேதியர்களால் ஆசீர்வதிக்கப்பெற்று நல்ல காளைகள் பூட்டின வண்டிகளில் நன்கு அலங்கரிக்கப்பெற்ற கோபஸ்திரீகளும் ஏறிக்கொண்டு கிருஷ்ணனுடைய சரித்திரங்களைப் பாடிக்கொண்டு தொடர்ந்தார்கள்.

24. 35. அப்போது கிருஷ்ணன் கோபர்களுக்கு நம்பிக்கை தரும் வகையில் தனியான பெரியதொரு உருவத்தைக் காட்டிக்கொண்டு 'நான் மலையின் அபிமானி தேவதை' என்று சொல்லிக்கொண்டு பலி முழுவதையும் உட்கொண்டார்.

---

24. 31. **சக்ரதர்ப்பஜிகாம்ஸயா**—ஒ. கேன உபநிஷத்து கதை.

तस्मै नमो व्रजजनैः सह चक्रेऽऽत्मनाऽऽत्मने ।
अहो पश्यत शैलोऽसौ रूपी नोऽनुग्रहं व्यधात् ॥ २४.३६ ॥

एषोऽवजानतो मर्त्यान् कामरूपी वनौकसः ।
हन्ति ह्यस्मै नमस्यामः शर्मणे आत्मनो गवाम् ॥ २४.३७ ॥

इत्यद्रि-गो-द्विज-मखं वासुदेवप्रणोदिताः ।
यथा विधाय ते गोपाः सहकृष्णा व्रजं ययुः ॥ २४.३८ ॥

इन्द्र-स्तदाऽऽत्मनः पूजां विज्ञाय विहतां नृप ।
गोपेभ्यः कृष्णनाथेभ्यो नन्दादिभ्य-श्चुकोप ह ॥ २५.१ ॥

विद्योतमाना विद्युद्भिः स्तनन्तः स्तनयित्नुभिः ।
तीव्रै-र्मरुद्गणै-र्नुन्ना ववृषु-र्जलशर्कराः ॥ २५.९ ॥

स्थूणास्थूला वर्षधारा मुंचत्स्वभ्रेष्वभीक्ष्णशः ।
जलौघैः प्लाव्यमाना भू-र्नादृश्यत नतोन्नतम् ॥ २५.१० ॥

---

24. 36. 'ஆச்சரியம் பாருங்கள்! இந்த மலை தனது தேவருபத்தை எடுத்துக் கொண்டு நமக்கு அருள் புரிந்தது' என்று கூறிக் கிருஷ்ணன் தானும் கோபர்களுடன் கூடித் தன்னுடைய அந்த வடிவுக்கு நமஸ்காரம் செய்தார்.

24. 37. 'இந்த மலை இஷ்டம்போல் வடிவெடுக்கக் கூடியது. தன்னை அவமதிக்கும் காட்டு மக்களை அழித்துவிடும். ஆகையால் நமக்கும் நம்முடைய பசுக் களுக்கும் நன்மையைக் குறித்து இம்மலையை வணங்குவோம்' என்றார்.

24. 38. பகவான் கூறியபடி மலை பசு வேதியர் இவர்களுக்கு முறைப்படி பூஜை செய்து முடித்துக் கோபர்கள் கிருஷ்ணனுடன் கோகுலம் சென்றார்கள்.

25. 1. அரசே! அப்போது இந்திரன் தனது பூஜை தடைபட்டதை எண்ணி ஸ்ரீ கிருஷ்ணனை நாதனாகக்கொண்ட நந்தரிடத்தும் மற்ற கோபர்களிடத்தும் கோபங் கொண்டான். (பிரளய காலம் போல் கோகுலத்தில் மழை பெய்யும்படி மேகங்களை ஏவினான்.)

25. 9. மின்னல்களுடன் மின்னிக்கொண்டும் இடிகளுடன் கர்ஜித்துக்கொண்டும் சண்டமாருதத்தால் உந்தப்பட்டும் (மேகங்கள்) ஆலங்கட்டிகளை வருஷித்தன.

25. 10. மேகங்கள் இடைவிடாமல் தூண்போல் பெருத்த மழைத் தாரைகளைப் பொழியவே பூமியானது வெள்ளத்தில் மூழ்கி மேடுபள்ளம் தெரியாமல் ஜலமயமாக ஆயிற்று.

---

34. 36. தஸ்மை ஆத்மனே ஆத்மனா ஸ்வயம் வ்ரஜ-ஜனைஸ்ஸஹ நமச்சக்ரே ।
ஒ. அநேக-மூர்த்தி-ரவ்யக்த: சதமூர்த்தி: சதானன: । —விஷ்ணு ஸஹஸ்ரநாமம்.

---

24. 38. प्रचोदिताः

பா. பே.

अत्यासारातिवातेन पशवो जातवेपनाः।
गोपा गोप्यश्च शीतार्ता गोविन्दं शरणं ययुः ॥ २५.११ ॥

कृष्ण कृष्ण महाभाग त्वन्नाथं गोकुलं प्रभो।
त्रातु-मर्हसि देवान्नः कुपिताद् भक्तवत्सल ॥ २५.१३ ॥

गोपाये स्वात्मयोगेन सोऽयं मे व्रत आहितः।
इत्युक्त्वैकेन हस्तेन कृत्वा गोवर्धनाचलम्॥
दधार लीलया कृष्ण-श्छत्राकमिव बालकः ॥ २५.१९ ॥

कृष्णयोगानुभावं तं निशाम्येन्द्रोऽतिविस्मितः।
निःस्तंभो भ्रष्टसंकल्पः स्वान् मेघान् संन्यवारयत् ॥ २५.२४ ॥

ततस्ते निर्ययु-र्गोपाः स्वं स्वमादाय गोधनम्।
भगवानपि तं शैलं स्वस्थाने पूर्ववत् प्रभुः॥
पश्यतां सर्वभूतानां स्थापयामास लीलया ॥ २५.२८ ॥

दृष्टश्रुतानुभावोऽस्य कृष्णस्यामित-तेजसः।
नष्टत्रिलोकेश-मद इन्द्र आह कृतांजलिः ॥ २७.३ ॥

---

25. 11. அதிக மழையினாலும் அதிகமான காற்றாலும் நடுங்கிக் குளிர் தாங்க மாட்டாமல் பசுக்களுடன் கோபர்களும் கோபிகைகளும் கோவிந்தனைச் சரணடைந்தார்கள்.

25. 13. 'கிருஷ்ணா! கிருஷ்ணா! பக்தர்களுக்கு மகாபாக்கியமாய் விளங்கும் பிரபுவே! பகத்வத்ஸலா! உம்மையே நாதனாக உடைய கோகுலத்தையும் எங்களையும் இந்திரனுடைய கோபத்தினின்று காத்தருள்வீர்" (என முறையிட்டனர்.)

25. 19. 'என் யோக பலத்தால் இவர்களைக் காப்பாற்றுகிறேன். இது என் விரதம் என்பது தீர்மானம்' என்று கூறி ஸ்ரீ கிருஷ்ணன் கோவர்த்தன மலையை ஒரு சிறுவன் நாய்க்குடையைப் பிடுங்கிக் குடைபிடிப்பதுபோல் எடுத்து விளையாட்டாக ஒரு கையால் தூக்கிப் பிடித்தார்.

25. 24. கிருஷ்ணனுடைய இந்த யோக மகிமையைப் பார்த்த இந்திரன் வெகு ஆச்சரியமடைந்து கர்வத்தை விட்டுத் தன் எண்ணம் நிறைவேறாதவனாய்த் தனது மேகங்களை மழையை நிறுத்தும்படி கட்டளையிட்டான்.

25. 28. அப்போது கோபர்கள் தங்கள் தங்கள் பசுக்களையும் சுற்றத்தையும் அழைத்துக்கொண்டு வெளிப்போந்தார்கள். பிரபுவாகிய பகவானும் எல்லாரும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அம்மலையை அதிருந்த இடத்தில் முன்போலவே விளையாட்டாக வைத்துவிட்டார்.

27. 3. அளவில்லாத வீரியம் படைத்த இந்தக் கிருஷ்ணனுடைய மகிமைகளைக் கேட்டவனும் இப்போது நேரில் பார்த்தவனுமாகிய இந்திரன் தான் மூவுலகிற்கும் அதிபதி என்ற மதமடங்கியவனாய்க் கிருஷ்ணன் முன்வந்து கைகூப்பிக்கொண்டு கூறலானான்.

இருபத்தாறுவது அத்தியாயம்: கோபர்கள் கிருஷ்ணனுடைய அதிமானுஷச் செய்கைகளைக் கண்டு முன்பு கர்க்க மகரிஷி கூறிய வார்த்தைகளை நினைத்துப் பார்த்து கிருஷ்ணனை பகவானென அறிந்து ஸ்தோத்திரம் செய்ததைக் கூறுகிறது.

इन्द्र उवाच—
पिता गुरुस्त्वं जगतामधीशो दुरत्ययः काल उपात्तदण्डः।
हिताय स्वेच्छातनुभिः समीहसे मानं विधुन्वञ्जगदीश-
मानिनाम् ॥ २७.६ ॥

स त्वं ममैश्वर्य-मदप्लुतस्य कृतागसस्तेऽविदुषः प्रभावम्।
क्षन्तुं प्रभोऽथार्हसि मूढचेतसो मैवं पुन-र्भून्मतिरीश मेऽसती॥ २७.८ ॥

नमस्तुभ्यं भगवते पुरुषाय महात्मने।
वासुदेवाय कृष्णाय सात्वतां पतये नमः ॥ २७.१० ॥

श्रीभगवानुवाच—
गम्यतां शक्र भद्रं वः क्रियतां मेऽनुशासनम्।
स्थीयतां स्वाधिकारेषु युक्तैर्वः स्तंभवर्जितैः ॥ २७.१७ ॥

இந்திரன் கூறியது—

27. 6. நீங்கள் உலகிற்குத் தந்தையாகவும் குருவாகவும் ஈசனுகவும் சிக்ஷிப்பதில் தடுக்கமுடியாத காலஸ்வரூபியாகவும் விளங்குகின்றீர்கள். தாங்கள் உலகிற்கு ஈசர்கள் என்ற அபிமானமுடையவர்களின் கர்வத்தை அடக்கிக்கொண்டு உலக க்ஷேமத்திற்காக விரும்பி எடுத்துக்கொண்ட வடிவங்களில் நீங்கள் லீலை புரிகின்றீர்கள்.

27. 8. பிரபுவே! இறைவனே! ஐசுவரியமதத்தில் மூழ்கி அறிவிழந்து உங்கள் மகிமையை யறியாமல் தீங்கிழைத்த என் குற்றத்தை நீங்கள் பொறுத்தருளல் வேண்டும். இந்தமாதிரி கெட்ட புத்தி இனி எனக்குண்டாகாதபடி அனுக்கிரகம் செய்ய வேண்டும்.

27. 10. பகவானும் புருஷோத்தமனும் மகாத்மாவாயும் உள்ள உமக்கு நமஸ்காரம். யாதவர்களின் தலைவனும் வசுதேவபுத்திரனும் எல்லாருடைய உள்ளத்தையும் கவர்பவனும் உள்ள உமக்கு நமஸ்காரம்.

ஸ்ரீ பகவான் கூறியது—

27. 17. இந்திரா! நீ செல்லலாம். என்னுடைய கட்டளைப்படி நடந்தால் உங்களுக்கு மங்களமுண்டாகும். இனி கர்வத்தையடையாமல் அவரவர் அதிகாரத்தில் ஜாக்கிரதையாயிருங்கள்.

---

27. 6. ஒ. பிதாஸி லோகஸ்ய சராசரஸ்ய த்வமஸ்ய பூஜ்யச்ச குருர்-கரீயான்। ந த்வத்ஸமோ஽ஸ்த்யப்-யதிக: குதோ஽ன்யோ லோகத்ரயேப்யப்ரதிம-ப்ரபாவ ॥
—கீ. 11. 43.

ஒ. 'தர்ப்பஹா'—பகவான் செருக்கைப் போக்குகிறவர். —வி. ஸ.

27. 8. ஒ. 'மகனே, ஒன்றை ஆக்குதல் மாற்றுதல்
அழித்திடலெல்லாம் நின் செயலன்று காண்
தோற்றேனென நீ உறைத்திடும் பொழுதிலே வென்றாய்.' —பாரதி.

---

27. 3. इदमाह कृताञ्जलिः। 27. 6. तनुभिस्त्वमीहसे।
27. 8. मैवं पुनर्भूदसतीश मे मतिः।

श्रीशुक उवाच—

इन्द्रः सुरर्षिभिः साकं नोदितो देवमातृभिः ।
अभ्यषिंचत दाशार्हं गोविन्द इति चाऽभ्यधात् ॥ २७.२३ ॥

नानारसौघाः सरितो वृक्षा आसन् मधुस्रवाः ।
अकृष्ट-पच्यौषधयो गिरयोऽबिभ्रदुन्मणीन् ॥ २७.२६ ॥

कृष्णेऽभिषिक्त एतानि सत्त्वानि कुरुनन्दन ।
निर्वैराण्यभवंस्तात क्रूराण्यपि निसर्गतः ॥ २७.२७ ॥

इति गो-गोकुलपतिं गोविन्द-मभिषिच्य सः ।
अनुज्ञातो ययौ शक्रो वृतो देवादिभि-र्दिवम् ॥ २७.२८ ॥

इति श्रीमद्भागवते दशमस्कन्धे गोविन्दपट्टाभिषेको नाम
सप्तविंशोऽध्यायः ॥

ஸ்ரீ சுகர் கூறியது—

27. 23. இந்திரன் தேவர்களாலும் அதிதி முதலிய தாய்மார்களாலும் பிரேரணை செய்யப்பட்டவனாய் தேவரிஷிகளுடன் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு அபிஷேகஞ் செய்து "கோவிந்தன்" என்ற பட்டமும் சூட்டினான்.

27. 26. அப்போது நதிகள் பல ரஸங்களைப் பெருக்கிக்கொண்டு ஓடின. மரங்கள் தேனைப் பெருகவிட்டன. உழுது பயிர் செய்யப்படாமல் தானியங்களும் செடி கொடிகளும்வளர்ந்தன. மலைகள் உள்ளிருந்த ரத்னங்களைப் பிரகாசிக்கச் செய்தன.

27. 27. குருநந்தனா! ஸ்ரீ கிருஷ்ணன் இங்ஙனம் அபிஷேகம் செய்யப்பட்டதும் பிறவியிலேயே பகைமை கொண்ட பிராணிகளுங்கூட வைரமில்லாதவைகளாக ஆயின.

27. 28. இவ்விதம் பசுக்களுக்கும் இடையர்களுக்கும் பதியான கிருஷ்ணனுக்கு அபிஷேகம் செய்துவிட்டு தேவேந்திரன் விடைபெற்றுக்கொண்டு தேவர்கள் சூழத் தேவலோகம் சென்றான்.

இங்ஙனம் ஸ்ரீமத் பாகவதத்தில் தசமஸ்கந்தத்தில் கோவிந்த பட்டாபிஷேகம்
என்ற இருபத்தேழாவது அத்தியாயம்
முற்றும்.

---

27. 23. चोदितो देवमातृभिः ।
27. 27. एतानि सर्वाणि ।
27. 28. कृष्णमभिनन्द्य ।

बृन्दावनलीला (३) ॥ २४ ॥

रासक्रीडा

श्रीशुक उवाच—

भगवानपि ता रात्रीः शरदोत्फुल्लमल्लिकाः ।
वीक्ष्य रन्तुं मनश्चक्रे योगमाया-मुपाश्रितः ॥ २९.१ ॥

निशम्य गीतं तदनंग-वर्धनं व्रजस्त्रियः कृष्णगृहीत-मानसाः ।
आजग्मु-रन्योन्य-मलक्षितोद्यमाः स यत्र कान्तो जवलोलकुण्डलाः
॥ २९.४ ॥

---

24. பிருந்தாவன லீலை (3)

ராஸக்கிரீடை

ஸ்ரீ சுகர் கூறியது—

29. 1. சரத்ருதுவின் வரவால் மலர்ந்த மல்லிகைகளுடன் கூடிய அவ்விரவுகளைக் கண்டு பகவான் யோக மாயையின் உதவியைக்கொண்டு லீலைபுரிய மனதில் கருதினார்.

29. 4. காமத்தை வளர்க்கும் (வேணு)கானத்தைக்கேட்டு கிருஷ்ணரிடம் மனதைப் பரிகொடுத்த இடைப் பெண்கள் மனதுக்கினியவரான அவர் எங்கிருந்தாரோ அவ்விடத்திற்கு ஒருவருக்கொருவர் தெரியாமல், வரும் வேகத்தில் குண்டலங்கள் குலுங்க, வந்து சேர்ந்தார்கள்.

இருபத்தெட்டாவது அத்தியாயம்—

அசுர வேளையில் நதியில் ஸ்நானம் செய்ய இறங்கின நந்தகோபரை வருணனுடைய தூதர் வருணனிடம் கொண்டுபோயினர். ஸ்ரீகிருஷ்ணன் அவரை மீட்டதும், பின்பு கோபர்களுக்கு வைகுண்ட தரிசனமளித்ததும் இவ்வத்தியாயத்தில் கூறப்படுகின்றன. வைகுண்டத்தைவிட கிருஷ்ணன் வசிக்கும் கோகுலமே சிறந்ததென்று அவர்கள் எண்ணினர்.

இருபத்தொன்பதாவது அத்தியாயம்—

ப்ரஹ்மாதி ஜயஸம்ரூட-தர்ப்ப-கந்தர்ப்ப-தர்ப்பஹா ।
ஜயதி ஸ்ரீபதிர்-கோபீராஸமண்டல-மண்டன: ॥ —ஸ்ரீதரர்.

ஒ. ராஸக்ரீடா விடம்பனம் காமவிஜய-க்யாபனாய இத்யேவ தத்வம் । கிஞ்ச ச்ருங்கார-கதாபதேசேன விஷயதோ நிவ்ருத்திபரேயம் பஞ்சாத்யாயீதி வ்யக்தீகரிஷ்யாம: ॥ —தரர்.

29. 4. ஒ. தத்ர பகவதி ஸ்ரீநிவாஸே, பரிபாலித-நிஜதாஸே,
ஸந்ததானந்த-கல்யாண-குணநவரத்ன ரத்னாகரே,
ஸரள-முரளீநாத-ஸமுதஞ்சித-விவிதகீத-ஸமுத்கோஷ-
மந்தகமன-மஹோல்லாஸ-விவிதலீலாவிலாஸ-பஹுதர-கல்லோல-ஜாலே,
புவனஸௌந்தரே ஸ்ரீக்ருஷ்ணே விஹரதி, தஸ்மின்
வ்ரஜயுவதீ-மனோநத்ய: ஸ்யந்தமானா: ஸமபிவ்யக்த-
சாரத-விமலீக்ருத-வ்ருத்தி விசேஷானுபவ-
ரஸாட்யா-ஸ்ததைக-ரஸ்ய-மபிலஷந்த்ய:
ஸத்வர-மாவிவிசு: ॥ —க்ருஷ்ணலீலா தரங்கிணீ:

ஒ. வோகா - னுன்மதயன்—ச்ருதீர்முகரயன் க்ஷோணீருஹான் ஹர்ஷயன், சைலான் வித்ரவயன் ம்ருகான் விவசயன் கோப்ருந்தமானந்தயன் । கோபான் ஸம்ப்ரமயன் முனீன் முகுளயன் ஸப்தஸ்வரான் ஜ்ரும்பயன்-னோங்காரார்த்த - முதீரயன் விஜயதே வம்சீ-நினாத: சிசோ: ॥
—க்ருஷ்ணகர்ணாம்ருதம்

---

29. 1. योगमायामयोऽच्युतः ।

दुहन्त्योऽभिययुः काश्चिद् दोहं हित्वा समुत्सुकाः ।
पयोऽधिश्रित्य संयाव-मनुद्वास्यापरा ययुः ॥ २९.५ ॥

परिवेषयन्त्य-स्तद्धित्वा पाययन्त्यः शिशून् पयः ।
शुश्रूषन्त्यः पतीन् काश्चि-दश्नन्त्योऽपास्य भोजनम् ॥ २९.६ ॥

लिंपन्त्यः प्रमृजन्त्योऽन्या अंजन्त्यः काश्च लोचने ।
व्यत्यस्त-वस्त्राभरणाः काश्चित् कृष्णान्तिकं ययुः ॥ २९.७ ॥

ता दृष्ट्वान्तिक-मायाता भगवान् व्रजयोषितः ।
अवदद्वदतां श्रेष्ठो वाचः-पेशै-र्विमोहयन् ॥ २९.१७ ॥

श्रीभगवानुवाच—
स्वागतं वो महाभागाः प्रियं किं करवाणि वः ।
व्रजस्यानामयं कच्चिद् ब्रूतागमन-कारणम् ॥ २९.१८ ॥

रजन्येषा घोररूपा घोरसत्त्व-निषेविता ।
प्रतियात व्रजं नेह स्थेयं स्त्रीभिः सुमध्यमाः ॥ २९.१९ ॥

---

29. 5. மாடு கறந்துகொண்டிருந்த சிலர் கறப்பதை விட்டுவிட்டு ஆவலுடன் விரைந்து வந்தனர். வேறு சிலர் பாலையும் கஞ்சியையும் காய்ச்சி இறக்கிவைக்காமல் சென்றனர்.

29. 6–7. பரிமாறிக்கொண்டும் குழந்தைகளுக்குப் பால் கொடுத்துக்கொண்டும் கணவர்களுக்குப் பணிவிடை செய்துகொண்டும் இருந்த சிலர் அவைகளை விட்டு விட்டும், போஜனம் செய்துகொண்டிருந்தவர்கள் போஜனத்தை வெறுத்தும், சந்தனம் பூசிக்கொண்டிருந்தவர்களும், உடலைச் சுத்தம் செய்துகொண்டிருந்தவர்களும் கண்களுக்கு மைதீட்டிக் கொண்டிருந்தவர்களும் ஆகிய சிலர் (அவ்வாறே சென்றூர்கள்.) வேறு சிலர் வஸ்திரங்களையும் ஆபரணங்களையும் இடம் மாறித் தரித்துக் கொண்டு கிருஷ்ணனை அணுகினூர்கள்.

29. 17. தன்னருகில் வந்த இடைப் பெண்களைப் பார்த்துப் பேசுவதில் திறமை வாய்ந்த பகவான் இனிய சொற்களால் அவர்களை மயக்கிப் பின்வருமாறு பேசினூர்.

ஸ்ரீ பகவான் கூறியது—

29. 18. 'மகா பாக்கியசாலிகளே! உங்களுக்கு நல்வரவு. உங்களுக்குப் பிரியமான எதை நான் செய்யவேண்டும்? கோகுலத்தில் எல்லோரும் க்ஷேமம் தானே? நீங்கள் இங்கு வரவேண்டிய காரணமென்ன? கூறுங்கள்.

29. 19. 'கொடிய மிருகங்கள் சஞ்சரிக்கும் இந்த ராத்திரிவேளை மிகவும் பயங்கர மானது. இடை அழகியவர்களே! பெண்கள் இவ்விடம் தாமதிக்கலாகாது. கோகுலத்திற்குத் திரும்பிச் செல்லுங்கள்.

---

29. 5. நாம் போய்விட்டால் நம்முடைய வேலைகளை இங்கே யார் செய்வர் என்ற கவலை அவர்களுக்கில்லை. பகவான் அதற்கும் ஏற்பாடு செய்கிறூர். அவர்கள் வீடுகளிலிருந்து வேலைசெய்து கொண்டிருந்ததாகவே தான் உறவினர் கண்டனர். (ஓ. 10. 33. 38.)

தானே கன்றுகளாகவும் கோபர்களாகவுமானதுபோல் தானே கோபிகளாகவுமாகி தன் பிம்பத்துடன் விளையாடுவதுபோல் அவர்களுடன் விளையாடினூன் கிருஷ்ணன்.

भर्तुः शुश्रूषणं स्त्रीणां परो धर्मो ह्यमायया ।
तद्बन्धूनां च कल्याण्यः प्रजानां चानुपोषणम् ॥ २९-२४ ॥

श्रवणाद् दर्शनाद् ध्यानान्मयि भावोऽनुकीर्तनात् ।
न तथा सन्निकर्षेण प्रतियात ततो गृहान् ॥ २९.२७ ॥

गोप्य ऊचुः—
मैवं विभोऽर्हति भवान् गदितुं नृशंसं
संत्यज्य सर्व-विषयां-स्तव पादमूलम् ।
भक्ता भजस्व दुरवग्रह मा त्यजास्मान्
देवो यथाऽऽदिपुरुषो भजते मुमुक्षून् ॥ २९.३१ ॥

यत्पत्यपत्य-सुहृदामनुवृत्तिरंग
स्त्रीणां स्वधर्म इति धर्मविदा त्वयोक्तम् ।
अस्त्वेम-मेत-दुपदेशपदे त्वयीशे
प्रेष्ठो भवां-स्तनुभृतां किल बन्धु-रात्मा ॥ २९.३२ ॥

---

29. 24. 'கல்யாணிகளே! கபடமின்றிக் கணவனுக்கும் அவரைச் சேர்ந்த பந்துக்களுக்கும் பணிவிடை செய்வதும் பிரஜைகளைப் போஷிப்பதும்தான் பெண்களுக்கு முக்கியமான தர்மம்.

29. 27. சிரவணத்தாலும் தர்சனத்தாலும் தியானத்தாலும் கீர்த்தனத்தாலும் என்னிடம் பக்தி உண்டாவதுபோல் என்பக்கம் நெருங்குவதால் உண்டாவதில்லை. ஆகையால் நீங்கள் உங்கள் வீடுகளுக்குத் திரும்பிச் செல்லுங்கள்.'

கோபிகள் கூறியது—

29. 31. பிரபுவே! இவ்வாறு புண்படுத்தும் வார்த்தையைச் சொல்வது உமக்குத் தகாது. எல்லா விஷயங்களையும் தள்ளிவிட்டு உமது பாதமூலத்தில் பக்தி பூண்ட எங்களைக் கைவிடாதீர். ஸ்வதந்திரரே! ஸ்வயம் பிரகாசரான ஆதிபுருஷர் முமுக்ஷுக்களைக் காப்பதுபோல் எங்களைக் காக்கவேண்டும்.

29. 32. ஐயனே! கணவர் குழந்தைகள் பந்துக்கள் இவர்களுக்குப் பணிவிடை செய்வதுதான் பெண்களுக்கு ஸ்வதர்மம் என்று தர்மந்தெரிந்த உம்மால் சொல்லப்பட்டது. அது முற்றும் பொருத்தமே. ஆனால் (கணவர் குழந்தைகள் பந்துக்கள் என்று) உபதேசிக்கப்பட்ட அவர்களுக்கும் ஈசுவரரான உம்மிடத்திலேயே அப்பணிவிடை நடக்கட்டும். ஏனென்றால் உடல் படைத்த உயிர்களுக்கெல்லாம் பிரியம் மிக்கவராகவும் பந்துவாகவும் ஆத்மாவாகவும் நீரேயன்றோ விளங்குகிறீர்.

---

29. 32. ஒ. செல் இடமும், போஷித்துக் காப்பவனும் (பர்த்தாவும்), ஆள்பவனும், பார்த்துக் கொண்டிருப்பவனும், வாழுமிடமும், துன்பந்துடைப்பவனும், நண்பனும், பிறப்பிடமும் புகலிடமும் இருப்பிடமும், பொக்கிஷமும், அழியாத வித்தும் நானே. கீ. 9. 18.

ஒ. தத்ராபி ந மாஹாத்மயஜ்ஞான-விஸ்ம்ருத்யபவாத:।
தத்விஹீனம் ஜாராணாமிவ।. —நாரத பக்தி ஸூத்ரம்.

चित्तं सुखेन भवतापहृतं गृहेषु
यन्निर्विशत्युत करावपि गृह्यकृत्ये ।
पादौ पदं न चलतस्तव पादमूलाद्
यामः कथं व्रजमथो करवाम किं वा ॥ २९.३४ ॥

श्रीशुक उवाच—

इति विक्लवितं तासां श्रुत्वा योगेश्वरेश्वरः ।
प्रहस्य सदयं गोपी-रात्मारामोऽप्यरीरमत् ॥ २९.४२ ॥

उपगीयमान उद्गायन् वनिताशय-यूथपः ।
मालां बिभ्रद्वैजयन्तीं व्यचरन्मण्डयन् वनम् ॥ २९.४४ ॥

नद्याः पुलिन-माविश्य गोपीभि-र्हिमवालुकम् ।
रेमे तत्तरलानन्द-कुमुदामोद-वायुना ॥ २९.४५ ॥

---

29. 34. எங்களுடைய எந்தச் சித்தம் சுகமாக வீட்டு வேலைகளில் சென்று கொண்டிருந்ததோ அது உம்மால் கவரப்பட்டது. வீட்டு வேலைகளில் ஈடுபட்ட கைகளும் அதனால் கவரப்பட்டதாயின. கால்களும் உமது பாத மூலத்தை விட்டு ஓரடியும் வைக்கமாட்டா. எங்ஙனம் கோகுலம் செல்லுவோம்? ஆகையால் என்ன தான் செய்வோம்?

ஸ்ரீ சுகர் கூறியது—

29. 42. இவ்வாறு பரவசமாக அவர்கள் பேச்சைக் கேட்டு யோகீசுவரர்களுக்கும் ஈசுவரரான பகவான் ஆத்மாராமனாயிருந்தும் தயையால் புன்முறுவல் பூத்துக் கோபிகளை மகிழ்வித்தார்.

29. 44. வைஜயந்தீ மாலையைத் தரித்தவரும் அப் பெண்களின் குழுவிற்குத் தலைமை தாங்கியவரும் அவர்களால் கீர்த்தனம் செய்யப்பட்டவருமாகிய கிருஷ்ணன் தானும் கூடப் பாடிக்கொண்டு அவ்வனத்தின் அழகைப் பெருக்குபவராய்ச் சஞ்சரித்தார்.

29. 45. அப் பெண்களுடன் பொன் போன்ற சிறு மணல் நிறைந்த யமுனையின் மணல் திட்டிற்குச் சென்று அவ்வாற்றில் அசைகிற ஆம்பல் பூவின் வாசனை கமழும் காற்றில் விளையாடினார்.

---

29. 34. ஒ. ந ச புனராவர்த்ததே, ந ச புனவர்த்ததே ।
பகவானிடம் சென்றபின் திரும்பி வருதல் இல்லை.

ஒ. நீரிருக்க மடமங்கைமீர் கிளிகள் தாமிருக்க மதுகரமெலாம்
நிறைந்திருக்க மடவன்னமுன்னம் நிரையாயிருக்க வுரையாமல் யா
னிருக்கிலு மென்னெஞ்சமல்லதொரு வஞ்சமற்றதுணை யில்லையென்
றுதரத்தினெடு தூதுவிட்டபிழை யாரிடத்துரை செய்தாறுவேன்
சீரிருக்குமறை முடிவுதேடரிய திருவரங்கரை வணங்கியே
திருத்துழாய்தரில் விரும்பியே கொடு திரும்பியே வருதலின்றியே
வாரிருக்குமுலை மலர்மடந்தையுறை மார்பிலே பெரிய தோளிலே
மயங்கியின்புற முயங்கி யென்னையு மறந்துதன்னையு மறந்ததே.
—திருவரங்கக் கலம்பகம்—பிள்ளைப் பெருமாளையங்கார்.

எங்கள் மனத்தை நீ அபகரித்துக்கொண்டு எங்களைப் போகச் சொன்னால் எங்கள் கை கால்கள் மனமின்றி எப்படிச் செல்லும்?

ஒ. நவா அரே பத்யு: காமாய பதி: ப்ரியோ பவதி ஆத்மனஸ்து காமாய பதி: ப்ரியோ பவதி:

---

29. 45. हिमवालुकम् । तत्तरलांभोज । பா. பே.

एवं भगवतः कृष्णा-ल्लब्धमाना महात्मनः।
आत्मानं मेनिरे स्त्रीणां मानिन्योऽभ्यधिकं भुवि ॥ २९.४७ ॥

तासां तत् सौभगमदं वीक्ष्य मानं च केशवः।
प्रशमाय प्रसादाय तत्रैवान्तरधीयत ॥ २९.४८ ॥

अन्तर्हिते भगवति सहसैव व्रजांगनाः।
अतप्यं-स्तमचक्षाणाः करिण्य इव यूथपम् ॥ ३०.१ ॥

गायन्त्य उच्चै-रमुमेव संहता विचिक्यु-रुन्मत्तकवद् वनाद्वनम्।
पप्रच्छु-राकाशव-दन्तरं बहि-र्भूतेषु सन्तं पुरुषं वनस्पतीन् ॥ ३०.४ ॥

कच्चित्तुलसि कल्याणि गोविन्द-चरणप्रिये।
सह त्वालिकुलै-र्बिभ्रद् दृष्टस्तेऽतिप्रियोऽच्युतः ॥ ३०. ॥

---

29. 47. இவ்விதம் மகாத்மாவான கிருஷ்ண பகவானிடம் வெகுமதி பெற்ற கோபிகள் பூவுலகில் உள்ள மாதர்கள் அனைவரையும் விடத் தாங்களே மிக மேன்மை பெற்றவர்கள் என்று எண்ணினார்கள்,

29. 48. அவர்களுடைய அந்த ஸௌபாக்கிய மதத்தையும் கர்வத்தையும் கிருஷ்ணன் பார்த்து அக் கர்வத்தையடக்கி அனுக்கிரகிக்கும் பொருட்டு அவ் விடத்திலேயே அப்போதே மறைந்துவிட்டார்.

30. 1. பகவான் அங்ஙனம் சடக்கென மறையவே அவ்விடைப் பெண்கள் அவரைக் காணாமல் கூட்டத்தின் தலைவனை இழந்த பெண் யானைகளைப்போல் வருந்தினார்கள்.

30. 4. அவர்கள் எல்லோருங்கூடி அவருடைய லீலைகளையே உரக்கப் பாடிக் கொண்டு பிராணிகளின் உள்ளும் புறமும் ஆகாயம்போல் வியாபித்து நிற்கும் பரம புருஷனைக் கண்டீர்களா என்று வனவிருக்ஷங்களிடம் கேட்டுக்கொண்டு பித்தர்களைப் போல் காடுகாடாகத் தேடித்திரிந்தார்கள்.

30. 7. துளஸியே! கல்யாணி! கோவிந்தனுடைய திருவடிகளில் அன்பு கொண்டவளே! கிருஷ்ணன் உனக்கு மிகவும் பிரியமானவர். வண்டுகள் தொடரும் உன்னை மாலையாகத் தரிக்கிறார். கிருஷ்ணன் உன்னால் பார்க்கப்பட்டாரா?

---

29. 48. கடமைகளையெல்லாம் செய்யும்படிச் சொல்லும் அவனே எல்லாவற்றையும் உதறிவிட்டு அவனையே நாடும்படி பிடித்திழுக்கிறான். பின் நம்மைத் தனியே விட்டு நம்மை அலைக்கழித்து வேடிக்கை பார்க்கிறான். அவனைக் காணும் இச்சையாலேயே முள்ளும் கல்லும் இருளும் நிறைந்த உலகமாகிய இவ்வனத்திறகுப் பெண்கள் போன்ற ஜீவர்களாகிய நாம் வந்தோம். அவன் நம்மை இங்கே விளையாடக் குழலூதி யழைத்துவிட்டு மறைந்து கண்ணை மூச்சி விளையாடுகிறான். நாம் தேடியலைகிறோம். அவனைக் காணாத துன்பத்தால் நமது பாவந் தேய்கிறது. கண்டணைந்தால் புண்ணியமும் தேயும். அப்போதே அதுவே முக்தி.

मालत्यदर्शि नः कच्चिन्मल्लिके जाति-यूथिके ।
प्रीतिं वो जनयन् यातः करस्पर्शेन माधवः ॥ ३०.८ ॥

एवं कृष्णं पृच्छमाना वृन्दावनलतास्तरून् ।
व्यचक्षत वनोद्देशे पदानि परमात्मनः ॥ ३०.२४ ॥

तैस्तैः पदै-स्तत्पदवी-मन्विच्छन्त्योऽग्रतोऽबलाः ।
वध्वाः पदैः सुपृक्तानि विलोक्यार्ताः समब्रुवन् ॥ ३०.२६ ॥

कस्याः पदानि चैतानि यातायाः नन्दसूनुना ।
अंसन्यस्त-प्रकोष्ठायाः करेणोः करिणा यथा ॥ ३०.२७ ॥

अनयाऽऽराधितो नूनं भगवान् हरिरीश्वरः ।
यन्नो विहाय गोविन्दः प्रीतो यामनयद् रहः ॥ ३०.२८ ॥

सा च मेने तदाऽऽत्मानं वरिष्ठं सर्वयोषिताम् ।
हित्वा गोपीः कामयाना मामसौ भजते प्रियः ॥ ३०.३७ ॥

---

30. 8. மாலதியே! மல்லிகையே! ஜாதியே! பிச்சைக் கொடியே! உங்களால் எங்களுடைய மாதவன் பார்க்கப்பட்டாரா? கைகளால் உங்களைத் தொட்டுப் பிரியத்தை வளர்த்துக்கொண்டு இவ்வழி சென்ருரா?

30. 24. இவ்விதம் பிருந்தாவனத்திலுள்ள கொடிகளிடமும் கிருஷ்ணனைப் பற்றிக் கேட்டுக்கொண்டு அவ் வனப்பிரதேசத்தில் செல்லுகையில் பரமாத்மாவின் காலடிகளைக் கண்டார்கள்.

30. 26. அந்தந்த அடிச்சுவடுகளைப் பின்பற்றி அவர் சென்ற வழியை நாடுகின்ற அப்பெண்கள் முன்னே ஒரு பெண்ணின் காலடிகளுடன் சேர்ந்திருக்கும் சுவடுகளைப் பார்த்து வருத்தமடைந்து பின்வருமாறு பேசிக்கொண்டார்கள்.

30. 27. 'ஆண் யானையுடன் பெண்யானை சேர்ந்து சென்ருற்போல் கிருஷ்ணனுடன் தோள்மேல் கைபோட்டுக்கொண்டு தொடர்ந்துபோயிருக்கும் இக் காலடிகள் யாருடையதாயிருக்கலாம்?

30. 28. 'ஸர்வேசுவரனுகிய கிருஷ்ணபகவான் இவளால் பூஜிக்கப்பட்டிருத்தல் வேண்டும். இது நிச்சயம். ஏனென்ருல் நம்மெல்லோரையும் விட்டு கோவிந்தன் அன்புடன் அவளைத் தனியாக அழைத்துச் சென்ருரல்லவா?

30. 37. (எந்த கோபியை அழைத்துச் சென்ருரோ) அவளும் அப்பொழுது 'ஆசைகொண்ட மற்ற கோபிகைகளை விட்டுப் பிரியனுன கிருஷ்ணன் என்னையல்லவோ நாடுகின்ருன்', என்று தன்னை மற்ற எல்லாப் பெண்களையும்விட மேலானவளாக எண்ணினுள்.

---

30. 24. ஒ. கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்.

---

30. 8. मालत्यद र्शि वः 30. 27. पदानि यातायाः पश्यध्वं । பா. பே.

ततो गत्वा वनोद्देशं दृप्ता केशव-मब्रवीत् ।
न पारयेऽहं चलितुं नय मां यत्र ते मनः ॥ ३०.३८ ॥

एवमुक्तः प्रियामाह स्कन्ध आरुह्यता-मिति ।
ततश्चान्तर्दधे कृष्णः सा वधू-रन्वतप्यत ॥ ३०.३९ ॥

हा नाथ रमण प्रेष्ठ क्वासि क्वासि महाभुज ।
दास्यास्ते कृपणाया मे सखे दर्शय सन्निधिम् ॥ ३०.४० ॥

अन्विच्छन्त्यो भगवतो मार्गं गोप्योऽविदूरतः ।
ददृशुः प्रियविश्लेष-मोहितां दुःखितां सखीम् ॥ ३०.४१ ॥

तया कथित-माकर्ण्य मानप्राप्तिं च माधवात् ।
अवमानं च दौरात्म्याद् विस्मयं परमं ययुः ॥ ३०.४२ ॥

ततोऽविशन् वनं चन्द्रज्योत्स्ना यावद् विभाव्यते ।
तमः प्रविष्ट-मालक्ष्य ततो निववृतुः स्त्रियः ॥ ३०.४३ ॥

---

30. 38. காட்டினுள் (கிருஷ்ணனுடன் தனியே) சென்றபின் சர்வமடைந்த அவள் கிருஷ்ணனைப் பார்த்து, "நான் இனி ஓரடியும் எடுத்துவைக்க முடியாதவளா யிருக்கிறேன். உங்களுக்கு எங்கு விருப்பமோ அங்கு என்னைக் கொண்டு செல்லுங்கள்" என்று கூறினாள்.

30. 39. இங்ஙனம் ஏவப்பட்ட கிருஷ்ணன் பிரியமான அவளிடம் "என் தோள் மேல் ஏறிக்கொள்" என்று சொல்லிவிட்டு மறைந்துவிட்டார். அப்பெண் அங்கே தவிக்கலானாள்.

30. 40. 'நாதா! ரமணா! பிரியம் மிகுந்த தோழா! புஜபலம் பொருந் தியவரே! எங்கிருக்கின்றீர்! எங்கிருக்கின்றீர்? உம்மைக் காணாது தவிக்கும் உமது அடிமையான எனக்கு உமது முன்னிலையைக் காண்பித்தருளும்.'

30. 41. பகவான்சென்ற வழியைத் தேடிச் சென்ற கோபிகைகள் பிரிவாற்றா மையால் மதியிழந்து வருந்தும் தோழியைச் சற்றுதூரத்தில் கண்டார்கள்.

30, 42. மாதவனிடமிருந்து தான் பெற்ற நன்மதிப்பையும் தனது கொழுப்பினால் அடைந்த அவமானத்தையும் அவள் சொல்லக் கேட்டு அவர்கள் மிகவும் வியப்படைந் தார்கள்.

30. 43. பிறகு நிலா வெளிச்சம் உள்ளவரை அப் பெண்கள் வனத்தில் புகுந்து கிருஷ்ணனைத் தேடிவிட்டு இருள் சூழ்வதைக் கண்டு திரும்பிவிட்டனர்.

---

30. 38. ஒ. உள்ளத்திலே கருவங் கொண்டபோதினில்
ஓங்கியடித்திடுவான்—நெஞ்சில்
கள்ளத்தைக் கொண்டொரு வார்த்தை சொன்னாலங்கு
காரியமிழந்திடுவான். —பாரதி

---

30. 42. तथा कथित । பா. பே.

तन्मनस्का-स्तदालापा-स्तद्विचेष्टा-स्तदात्मिकाः ।
तद्गुणानेव गायन्त्यो नात्मागाराणि सस्मरुः ॥ ३०.४४ ॥

पुनः पुलिन-मागत्य कालिन्द्याः कृष्ण-भावनाः ।
समवेता जगुः कृष्णं तदागमन-कांक्षिताः ॥ ३०.४५ ॥

जयति तेऽधिकं जन्मना व्रजः श्रयत इन्दिरा शश्वदत्र हि ।
दयित दृश्यतां दिक्षु तावका-स्त्वयि धृतासव-स्त्वां विचिन्वते ॥ ३१.१ ॥

शरदुदाशये साधुजातसत्सरसिजोदर-श्रीमुषा दृशा ।
सुरतनाथ तेऽशुल्कदासिका वरद निघ्नतो नेह किं वधः ॥ ३१.२ ॥

न खलु गोपिका-नन्दनो भवानखिलदेहिना-मन्तरात्मदृक् ।
विखनसार्थितो विश्वगुप्तये सख उदेयिवान् सात्वतां कुले ॥ ३१.४ ॥

---

30. 44. அவரிடத்திலேயே மனம் சென்றவர்களாகவும் அவரைப்பற்றியே பேசுகிறவர்களாகவும் அவருடைய லீலைகளை அபிநயம் செய்கின்றவர்களாகவும் அவரிடம் பிராணனை வைத்தவர்களாகவும் அவருடைய குணங்களையே பாடுகின்றவர்களாகவும் அவர்கள் தங்கள் வீடுகளை நினைக்கவில்லை.

30. 45. கிருஷ்ணத்தியானத்துடன் மீண்டும் யமுனையின் மணல் திட்டிற்கு வந்து அவருடைய வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு கிருஷ்ணனையே எல்லோரும் ஒன்று சேர்ந்து பாடினார்கள்.

31. 1. உயிரினும் பிரியமாகியவரே! உமது பிறப்பால் கோகுலம் மிகவும் மேன்மைபெற்று விளங்குகிறது. அதனாலன்றோ லக்ஷ்மீதேவி இவ்விடத்தில் எப்போதும் வசிக்கிறாள். உம்மிடம் பிராணனை வைத்த உமது கோபிகள் திக்குத் தோறும் உம்மைத் தேடுகிறார்கள். ஆகையால் (மறைந்திராமல்) நேரில் வாரும்.

31. 2. இன்பமளிப்பவரே! வரமளிப்பவரே! விலையேதுமில்லாது உமக்கு அடிமைகளாகிவிட்ட எங்களைச் சரத்காலத்தில் நல்ல குளத்தில் நன்றாய் மலர்ந்த தாமரையின் உட்புறத்தினும் அழகுமிக்க கண்களால் கொல்லுகின்ற உமக்கு இவ்வுலகில் இது வதம் என்று தெரியவில்லையா?

31. 4. நீர் யசோதையின் பிள்ளையாகிய கோபிகா நந்தனன் மட்டுமன்று. உடல் படைத்த அனைவரிடத்தும் உள்ளுறையும் ஸாக்ஷியாயிருப்பவர். தோழரே! உலகைக் காக்கும் பொருட்டு பிரம்மதேவரால் வேண்டப்பட்டு யாதவ குலத்தில் உதித்திருக்கிறீர்.

---

30. 44. ஒ. தத்ப்ராப்ய ததேவாவலோகயதி, ததேவ ச்ருணோதி, ததேவ சிந்தயதி । ததர்ப்பிதாகிலாசாரஸ்ஸன் காமக்ரோதாபிமானாதிகம் தஸ்மின்னேவ கரணீயம் ॥

30. 45. ஒ கண்டாவரோத-ரோமாச்ருபி: பரஸ்பரம் லபமானா: பாவயந்தி குலானி ப்ருதிவீஞ்ச

31. 4. 'ஆயர் புத்திரனல்ல னருந்தெய்வம்' —பெரியாழ்வார்.
விகனஸா ப்ரஹ்மணா விச்வபாலனாய ப்ரார்த்திதஸ்ஸன் ஸாத்வதாம் குலே உதேயிவான் ।

विरचिताभयं वृष्णिधुर्य ते चरणमीयुषां संसृते-र्भयात् ।
करसरोरुहं कान्त कामदं शिरसि धेहि नः श्रीकरग्रहम् ॥ ३१.५ ॥

प्रणतदेहिनां पापकर्शनं तृणचरानुगं श्रीनिकेतनम् ।
फणि-फणार्पितं ते पदांबुजं कृणु कुचेषु नः कृन्धि हृच्छयम् ॥ ३१.७ ॥

तव कथामृतं तप्तजीवनं कविभिरीडितं कल्मषापहम् ।
श्रवणमंगलं श्रीमदाततं भुवि गृणन्ति ते भूरिदा जनाः ॥ ३१.९ ॥

प्रहसितं प्रिय प्रेमवीक्षणं विहरणं च ते ध्यानमंगलम् ।
रहसि संविदो या हृदिस्पृशः कुहक नो मनः क्षोभयन्ति हि ॥ ३१.१० ॥

चलसि यद् व्रजा-च्चारयन् पशून् नलिनसुन्दरं नाथ ते पदम् ।
शिलतृणांकुरैः सीदतीति नः कलिलतां मनः कान्त गच्छति ॥ ३१.११ ॥

31. 5. யதுகுலோத்தமா! மனதிற்கினியவரே! உலகிற்கு அஞ்சி உமது திருவடியை யடைந்தவர்களுக்கு அபயமளித்து விரும்பியதைக் கொடுப்பதும் ஸ்ரீ தேவியின் கைகளைப் பிடித்ததுமான உமது தாமரைக் கையை எங்கள் சிரத்தில் வைத்து அருள் புரியவேண்டும்.

31. 7. (அழகினல்) ஸ்ரீ தேவியின் இருப்பிடமாகியதும் (கிருபையால்) சரணடைந்தவர்களின் பாவங்களைப் போக்குவதும், (தயையினல்) புல்மேயும் பசுக் களைத் தொடர்ந்து செல்வதும், (வீரியத்தினல்) காளியனுடைய முடியில் வைக்கப் பட்டதுமான உமது திருமலரடியை எங்கள் ஸ்தனங்களில் வைத்தருளும். அதனல் எங்கள் இருதயத்திலிருக்கும் துராசைகளைப் போக்கும்.

31. 9. உலகத் துன்பத்தால் தவிப்பவர்களுக்குப் புத்துயிரளிப்பதும், தீர்க்க தரிசிகளால் போற்றப்பட்டதும், பாவங்களைப் போக்குவதும், கேட்ட மாத்திரத்தில் மங்களத்தைத் தருவதும், சாந்தியளிப்பதும் ஆகிய உமது கதையாகிற அமுதத்தை இவ்வுலகில் எந்த மக்கள் விரிவுபடும்படி பேசுகின்றனர்களோ அவர்கள் மிகவும் (கொடுத்துவைத்த) புண்ணியசாலிகள்.

31. 10. பிரியமாயிருந்து ஏமாற்றுபவரே! உமது புன்னகை, அன்பான பார்வை, விளையாட்டு, உள்ளத்தைத் தொடும் ரகசிய வார்த்தைகள் இவையெல்லாம் எண்ணுதலாலேயே மங்களத்தைத் தருபவையாயினும் எங்கள் மனத்தைக் கலக்கு கின்றன.

31. 11. மனதிற்கினிய நாதா! பசுக்களை மேய்க்க நீர் கோகுலத்திலிருந்து வெளிச் சென்றால் தாமரைபோல் அழகிய உமது திருவடி கல் புல் முள் இவைகளால் வருந்துமே என்று எங்கள் மனம் சஞ்சலத்தையடைகிறது.

---

31. 9. **பூரிதா** :—பூர்வஜன்மஸு பஹு தத்தவந்த : ஸுக்ருதின இத்யர்த்த : ।

---

31. 10, **प्रेमवीक्षितं विरहिणां च ।** பா. பே.

दिनपरिक्षये नीलकुन्तलै-र्वनरुहाननं बिभ्रदावृतम् ।
घनरजस्वलं दर्शयन् मुहु-र्मनसि नः स्मरं वीर यच्छसि ॥ ३१.१२ ॥

अटति यद्भवानह्नि काननं त्रुटि-र्युगायते त्वामपश्यताम् ।
कुटिलकुन्तलं श्रीमुखं च ते जड उदीक्षतां पक्ष्मकृद् दृशाम् ॥ ३१.१५ ॥

पति-सुतान्वय-भ्रातृबान्धवा-नति-विलंघ्य तेऽन्त्यच्युतागताः
गतिविद्-स्तवोद्गीत-मोहिताः कितव योषितः कस्त्यजे-न्निशि ॥ ३१.१६ ॥

यत्ते सुजातचरणांबुरुहं स्तनेषु भीताः शनैः प्रिय दधीमहि कर्कशेषु ।
तेनाटवीमटसि तद्व्यथते न किं स्वित् कूर्पादिभि-र्भ्रमति
धीर्भवदायुषां नः ॥ ३१.१९ ॥

---

31. 12. வீரா! ஸாயங்கால வேளையில் கரிய சுருட்டை மயிர்களால் சூழப்பட்டதும் நிறையப் புழுதி படிந்ததும் வண்டுகள் மொய்க்கும் தாமரைபோன்றதுமான முகமண்டலத்தைத் தரித்துக்கொண்டு அதை எங்களுக்குக் காண்பித்து மனதில் காமத்தைப் பெருக்குகிறீர்.

31. 15. நீர் பகலில் வனத்திற்குச் சென்றுவிட்டால் அப்போது உங்களைக் காணாத எங்களுக்கு ஒரு நொடி ஒரு யுகம் போலாகிறது. சுருட்டைமயிர் விளையாடும் உங்களது திருமுக மண்டலத்தைப் பார்க்கக் கண்களைக் கொடுத்த பிரம்மதேவன் அவற்றிற்கு இமைகளைச் சிருஷ்டித்ததால் அறிவில்லாதவனே எனத் தோன்றுகிறது.

31. 16. (அடைந்தவர்களைக் கைவிடாதவன் எனப் பெயர் பெற்ற) அச்சுதா! உமது சிறந்த ஸங்கீதத்தால் மயங்கி நீர் இருக்குமிடத்தையும் அதனாலறிந்து கணவர், மக்கள், உடன்பிறந்தார், உற்றார், உறவினர் எல்லோரையும் மீறிக்கொண்டு உமது பக்கம் ஓடிவந்தோம். வஞ்சகரே! அப்படிப்பட்ட பெண்களை இருளில் (உம்மைத்தவிர) எவன்தான் கைவிடுவான்?

31. 19. பிரியத்திற்குகந்தவரே! சிறந்த தாமரைப்பூப்போன்ற உமது திருவடிகள் எவையோ அவைகளை பயத்துடன் எங்கள் கடினமான ஸ்தனங்களில் மெதுவாகத் தாங்கிவந்தோம். அத்திருவடிகளால் வனத்தில் அலைகிறீர். கூரிய பருக்கைக் கற்களால் அத்திருவடி வருந்தாதா என்று உங்களையே உயிராகக்கொண்ட எங்கள் மனம் சஞ்சலப்படுகிறது.

---

31. 12. ஒ. **கோதூ**ளி-**தூ**ஸரித கோமல-**கோ**பவேஷம்
கோபால **பா**லக சதை-ரனுகம்யமானம் ।
ஸாயந்தனே ப்ரதிக்ருஹம் பசுபந்தனார்த்தம்
கச்சந்த-மச்யுதசிசும் ப்ரணதோஸ்மி நித்யம் ॥

31. 16. ஒ. எல்ல அறங்களையும் விட்டொழிந்திங்கென்றனையே
நல்லாய் சரண்புகுக நானுன்னை—அல்லல்தரு
பாவங்க ளின்முற்றும் பற்றறவே வீடுவிப்பேன்
மேவுதுயர் எல்லாம் விடு. —கீதைவெண்பா. 18. 66.

இப்படிச் சொல்லியுள்ள நீர் எங்களைக் கைவிடலாமா?

31. 19. **கூர்ப்பாதிபி** :—ஸூக்ஷ்ம-பாஷாணாதிபி : ।

பா. பே.

31. 19. तेनाटवीं नयसि ।

इति गोप्यः प्रगायन्त्यः प्रलपन्त्यश्च चित्रधा ।
रुरुदुः सुस्वरं राजन् कृष्णदर्शन-लालसाः ॥ ३२.१ ॥

तासा-माविरभू-च्छौरिः स्मयमान-मुखांबुजः ।
पीतांबरधरः स्रग्वी साक्षान्मन्मथमन्मथः ॥ ३२.२ ॥

तं विलोक्यागतं प्रेष्ठं प्रीत्युत्फुल्ल-दृशोऽबलाः ।
उत्तस्थुर्युगपत् सर्वास्तन्वः प्राणमिवागतम् ॥ ३२.३ ॥

काचित्करांबुजं शौरे-र्जगृहेऽञ्जलिना मुदा ।
काचिद्दधार तद्बाहु-मंसे चन्दनरूषितम् ॥ ३२.४ ॥

अपराऽनिमिषद् दृग्भ्यां जुषाणा तन्मुखांबुजम् ।
आपीतमपि नातृप्यत् सन्तस्तच्चरणं यथा ॥ ३२.७ ॥

---

32. 1. அரசே! இவ்வாறாக இனிமையாகப் பாடிக்கொண்டும் பலவாருகப் பிரலாபித்துக்கொண்டும் கிருஷ்ணனைக் காணத் துடித்துக்கொண்டிருந்த கோபிகள் உரக்க அழத்தொடங்கினார்கள்.

32. 2. (அப்போது) ஸ்ரீ கிருஷ்ணன் மஞ்சட் பட்டாடையுடனும் மாலையுடனும் புன்னகைபூத்த முகத்துடனும் மன்மதனுக்கும் மன்மதன்போன்ற அழகினனாய் அவர்களுடைய கண்ணெதிரில் தோன்றினார்.

32. 3. அவ்விதம் தோன்றிய அன்பிற்சிறந்தவரைப் பார்த்து எல்லாப் பெண்களும் பிரியத்தால் மலர்ந்த கண்களுடன் பிராணன் வந்ததும் உடலின் உறுப்புக்கள் எழுவதுபோல் ஒன்றாக எழுந்தார்கள்.

32. 4. ஒருத்தி மகிழ்ச்சிபொங்கத் தனது கைகளால் கிருஷ்ணனுடைய தாமரை போன்ற கையைப் பிடித்தாள். மற்றொருத்தி சந்தனம்பூசிய அவருடைய பாகுவைத் தன் தோளில் தாங்கினாள்

32. 7. வேறொருத்தி கண்கொட்டாமல் கிருஷ்ணனுடைய முகமண்டலத்தின் அழகைப் பருகியபோதிலும் ஸாதுக்கள் அவருடைய திருவடிகளைச் சேவித்தும் திருப்தியடையாததுபோல் திருப்தியடையவில்லை.

---

32. 1. சித்ரதா—அநேகதா ; ஸுஸ்வரம்-உச்சை : ।

32. 2. ஒ. ஸர்வதா ஸர்வபாவேன நிச்சிந்தைர்-பகவானேவ பஜனீய : । ஸ கீர்த்யமான : சீக்ரமேவாவிர்ப்பவதி அனுபாவயதி பக்தான் । —நாரத பக்தி ஸூத்ரம்.

மன்மத-மன்மத :—வத்ஸாபஹாரத்தில் கிருஷ்ணன் பிரம்மாவைவிடப் பெரியவன் என்பதும் கோவர்த்தனத்தைக் குடை பிடித்த இந்திரனைவிடப் பெரியவன் என்பதும் காணப்பட்டதுபோல் இங்கு மன்மதனைவிடப் பெரியவன் என்பது காணப்படுகிறது. சத்ரு ஜயம் இரண்டுவகை: சத்ருவுக்கு ஸாதனமில்லாமல் செய்து ஜயிப்பது ஒன்று. சிவன் மன்மதனை எரித்தாற்போல். அவனுக்கு இரவு, சரத்காலம், ஸ்திரீஸங்கம் அனைத்தையும் கொடுத்து இங்கே ஜயிப்பது மற்றொன்று.

---

32. 4. कचिद्दधार । चन्दनभूषितम् । பா. பே.

तं काचि-न्नेत्ररंध्रेण हृदिकृत्य निमील्य च ।
पुलकांग्युपगुह्यास्ते योगीवानन्द-संप्लुता　　॥ ३२.८ ॥

सर्वास्ताः केशवालोक-परमोत्सव-निर्वृताः ।
जहु-र्विरहजं तापं प्राज्ञं प्राप्य यथा जनाः　　॥ ३२.९ ॥

तद्दर्शनाह्लाद-विधूत-हृद्रजो मनोरथान्तं श्रुतयो यथा ययुः ।
स्वैरुत्तरीयैः कुचकुंकुमांकितै-रचीक्लृप-न्नासन-मात्मबन्धवे　　॥ ३२.१३ ॥

तत्रोपविष्टो भगवान् स ईश्वरो योगेश्वरान्तर्हृदि कल्पितासनः ।
चकास गोपी परिषद्गतोऽर्चित-स्त्रैलोक्य-लक्ष्म्येकपदं वपुर्दधत्　　॥ ३२-१४ ॥

---

32. 8. மற்றும் ஒருத்தி தன் கண் வழியாகக் கிருஷ்ணனை மனதிற்குள் செலுத்திக் கண்களை மூடிக்கொண்டு அவரை இறுகத் தழுவிப் புளகாங்கிதமுற்று யோகியைப்போல் ஆனந்தத்தில் மூழ்கியிருந்தாள்.

32. 9. அப்பெண்கள் எல்லோருமே கிருஷ்ணனைத் தரிசித்த மஹோத்ஸவத்தின் பரமானந்தத்தால் மெய்மறந்து பிராக்ஞனையடைந்த ஜனங்களைப்போல் பிரிவாற்றுமையாலுண்டாயிருந்த துன்பத்தை விட்டார்கள்.

33. 13. அந்த தர்சனத்தால் மனக்கலக்கம் நீங்கிய அவர்கள் சுருதிகள் (கர்ம காண்டத்தில் தேடியலைந்து காணுத பரம்பொருளை ஞான காண்டத்தில் கண்டு) ஆனந்தத்தின் எல்லையை அடைந்ததுபோல் மனோரதங்களின் முடிவை அடைந்தவர்களாய்த் தங்களுடைய கொங்கையின் குங்குமம் படிந்த மேலாடைகளை ஆத்மபந்துவாகிய கிருஷ்ணனுக்கு ஆஸனமாக அளித்தார்கள்.

32. 14. யோகேசுவரர்களின் இருதயத்தினுள் ஆஸனம் கொண்டவனும் ஈசுவரனுமாகிய அந்த கிருஷ்ணபகவான் மூவ்வுலகின் அழகும் ஒன்றாகத் திரண்டு உருவெடுத்தாற்போன்ற வடிவுடன் அங்கு உட்கார்ந்து கோபிகளால் சூழப்பட்டு அவர்களால் பூஜிக்கப்பெற்று விளங்கினர்.

---

32. 8. ஒ. குணமாஹாத்ம்யாஸக்தி ரூபாஸக்தி பூஜாஸக்தி ஸ்மரணாஸக்தி தாஸ்யாஸக்தி ஸக்யாஸக்தி வாத்ஸல்யாஸக்தி காந்தாஸக்தி ஆத்ம-நிவேதனாஸக்தி தன்மயாஸக்தி பரமவிரஹாஸக்தி ரூபைகதாப்யேகதசதா பவதி ।
—நாரத பக்தி ஸூத்ரம்.

32. 9. ஒ. ஸ்ரோதஸ் தோயஹ்ருத: ச்ரமேண பதிகச் சாயாந்தரோர்-வ்ருஷ்டிதோ பீத: ஸ்வஸ்தக்ருஹம் க்ருஹஸ்த-மதிதிர்-தீன: ப்ரபும் தார்மிகம் । தீபம் ஸந்தமஸாகுலச்ச சிகினம் சீதாவ்ருதஸ்-த்வம் ததா சேத: ஸர்வ - பயாபஹம் வ்ரஜ ஸுகம் சம்போ: பதாம் போருஹம் ॥
—சிவானந்தலாஹரீ.

32. 14. கோபாலயந்திர பூஜையில் கோபிகைகள் ஆவரண தேவதைகளாகின்றனர்.

---

32. 8. हृदि कृत्वा । योगीवानन्द-निर्भरा ।

गोप्य ऊचुः—

भजतोऽनुभजन्त्येक एक एतद्विपर्ययम् ।
नोभयांश्च भजन्त्येक एतन्नो ब्रूहि साधु भोः ॥ ३२.१६ ॥

श्रीभगवानुवाच—

मिथो भजन्ति ये सख्यः स्वार्थैकान्तोद्यमा हि ते ।
न तत्र सौहृदं धर्मः स्वार्थार्थं तद्धि नान्यथा ॥ ३२.१७ ॥

भजन्त्यभजतो ये वै करुणाः पितरो यथा ।
धर्मो निरपवादोऽत्र सौहृदं च सुमध्यमाः ॥ ३२.१८ ॥

भजतोऽपि न वै केचिद् भजन्त्यभजतः कुतः ।
आत्मारामा ह्याप्तकामा अकृतज्ञा गुरुद्रुहः ॥ ३२.१९ ॥

नाहं तु सख्यो भजतोऽपि जन्तून् भजाम्यमीषामनुवृत्तिवृत्तये ।
यथाधनो लब्धधने विनष्टे तच्चिन्तयान्यन्निभृतो न वेद ॥ ३२.२० ॥

கோபிகள் கூறியது—

32. 16. மதிப்பிற்குரியவரே! சிலர் தங்களைச் சேவிப்பவர்களைச் சேவிக்கிறார்கள். சிலர் இதற்கு எதிரிடையாக (தங்களைச் சேவிக்காதவர்களுக்கும் உதவி புரிபவர்களாக) இருக்கிறார்கள். மற்றும் சிலர் (சேவிப்பவர்களையும் சேவிக்காதவர்களையும்) இருசாராரையும் சேவிப்பதில்லை. இதை எங்களுக்கு விளக்கிக் கூற வேண்டும்.

ஸ்ரீ பகவான் கூறியது—

32. 17. அன்புள்ள பெண்களே! எவர்கள் ஒருவருக்கொருவர் உபகாரம் செய்துகொள்ளுகிறார்களோ அவர்கள் தங்கள் காரியத்திலேயே கண்ணுயிருப்பவர்கள். அதில் நட்புமில்லை தர்மமுமில்லை. ஏனென்றால் அது சுயநலத்தின் பொருட்டேயன்றி வேறல்ல.

32. 18. அழகிய இடையுள்ளவர்களே! எவர்கள் தங்களைச் சேவியாதவர்களுக்கும் உதவிபுரிகிறார்களோ அவர்கள் பெற்றோர்களைப்போல், கருணைமிக்கவர்கள். இதில் நட்பும் தர்மமும் ஒருங்கே இருக்கிறதென்பதில் சந்தேகமில்லை.

32. 19. சிலர் தங்களைச் சேவிப்பவர்களைக்கூடச் சேவிப்பதில்லை. அப்படியிருக்கச் சேவிக்காதவர்களை எப்படிச் சேவிப்பார்கள்? அவர்கள் ஆத்மாவிலேயே ரமிப்பவர்களாக வெளிநாட்டமில்லாதவர்களாகவாவது, விஷயங்களைப் பார்ப்பவர்களாயினும் ஆசைகளின் பூர்த்தி எய்தியவர்களாய் எதையும் வேண்டாதவர்களாகவாவது, நன்றிகெட்ட மூடர்களாகவாவது, உபகாரம் செய்த பெரியோர்க்கும் துரோகம் செய்பவர்களாகவாவது இருப்பார்கள்.

32. 20. அன்பார்ந்த பெண்களே! (நான் நன்றிகெட்டவன் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள் போலும்.) ஒரு ஏழை தனத்தையடைந்து அது நஷ்டமானால் எப்படி அதைப்பற்றிய சிந்தனையில் மூழ்கி வேறொன்றை நினையாமலிருப்பானே அப்படி என்னை நாடிய ஜீவராசிகள் என்னைத் தொடர்ந்து தியானம் செய்வதற்காக அவர்களை நான் நாடாமல் விலகியிருப்பேன்.

---

32. 20. அமீஷாம் பஜதாமனுவ்ருத்தி-வ்ருத்தயே நிரந்தர-த்யானப்ரவ்ருத்த்-யர்த்தம் தான் நாஹம் பஜாமி। அன்யத் க்ஷுத்பிபாஸாதிகமபி ந வேத ॥ நிப்ருத: பூர்ண:।

ஒ. வியாபாரி பணத்தை எண்ணும்போது வேறு நினைவில்லாதவாறு.

ஒ. லோகவேதேஷு ததனுகூலாசரணம் தத்விரோதிஷு உதாஸீனதா ॥

—நாரத பக்தி ஸூத்ரம்.

एवं मदर्थोज्झित-लोक-वेद-स्वानां हि वो मय्यनुवृत्तयेऽबलाः।
मया परोक्षं भजता तिरोहितं मासूयितुं मार्हथ तत् प्रियं प्रियाः ॥ ३२.२१ ॥

न पारयेऽहं निरवद्य-संयुजां स्वसाधुकृत्यं विबुधायुषापि वः।
या माऽभजन् दुर्जर-गेहशृंखलाः संवृश्च्य तद्वः
प्रतियातु साधुना ॥ ३२.२२ ॥

श्रीशुक उवाच—

तत्रारभत गोविन्दो रासक्रीडा-मनुव्रतैः।
स्त्रीरत्नै-रन्वितः प्रीतै-रन्योन्याबद्ध-बाहुभिः ॥ ३३.२ ॥

रासोत्सवः संप्रवृत्तो गोपीमण्डल-मण्डितः।
योगेश्वरेण कृष्णेन तासां मध्ये द्वयो-र्द्वयोः ॥ ३३.३ ॥

प्रविष्टेन गृहीतानां कण्ठे स्वनिकटं स्त्रियः।
यं मन्येरन् नभस्तावद्विमानशतसंकुलम्।
दिवौकसां सदाराणामौत्सुक्यापहृतात्मनाम् ॥ ३३.४ ॥

---

32. 21. அன்பார்ந்த பெண்களே! இந்த மாதிரி என்பொருட்டு உலகையும் வேதம் விதிக்கும் கடமைகளையும் உற்றுருறவினரையும் விட்டுவந்த உங்களுக்கு என்னிடம் தியானம் நீடித்து நிலைபெறச் செய்யவே உங்கள் கண்ணுக்குத் தெரியாமல் உங்கள் பஜனைகளைக் கேட்டுக்கொண்டு மறைந்திருந்தேன். ஆகையால் உங்களிடம் பிரியம் வைத்த என் மீது குறை கூறுவது தகாது.

32. 22. மிக்க வலுவான இல்லறச் சங்கிலிகளை அறுத்துவிட்டு வந்து என்னைச் சேவித்தவர்களும் களங்கமற்ற பக்தியுடையவர்களுமாகிய உங்களுக்கு தேவர்களுடைய ஆயுட்காலத்திலும் நான் பிரதியுபகாரம் செய்யச் சக்தியற்றவன். ஆகையால் நான் உங்களுடைய நல்ல குணத்தால்தான் இதிலிருந்து மீளவேண்டும்.

ஸ்ரீ சுகர் கூறியது—

33. 2. (பின்னர்) அங்கே பிரீதியால் தன்னையனுசரித்துக் கையுடன் கைகோத்துக்கொண்டு நின்ற பெண்மணிகளுடன் கோவிந்தன் ராஸக்கிரீடை செய்ய ஆரம்பித்தார்.

33. 3-4. அவர்களுள் இரண்டிரண்டுபேர்க்கிடையிலும் புகுந்து அந்த ஸ்திரீகள் தங்கள் பக்கத்திலேயே அவர் இருப்பதாக நினைக்கும்படி கழுத்தை அணைத்துக்கட்டிக் கொண்டிருந்த யோகீசுவரரான கிருஷ்ணனுல் கோபீ மண்டலத்துடன் ராஸக்கிரீடை ஆரம்பிக்கப்பட்டது, அப்போது அதைப் பார்க்கும் ஆவலால் மெய்மறந்த மனைவி களுடன் கூடிய தேவர்களின் விமானங்கள் ஆகாயத்தை நிரப்பியது.

---

32. 21. லோகஹானௌ சிந்தா ந கார்யா। —நாரத பக்தி ஸூத்ரம்.

32. 22. யத் யுஷ்மத் ஸாது-க்ருதம் தத் ப்ரதியாது ப்ரதிக்ருதம் பவது। யுஷ்மத் ஸௌசீல்யேனைவ மமான்ருண்யம் ந து மத்க்ருத-ப்ரத்யுபகாரேணேத்யர்த்த:।

33. 2. ராஸக்ரீடா ராஸோ நாம பஹு நர்த்தகீயுக்தோ ந்ருத்தவிசேஷ: தாம் க்ரீடாம்॥ பகவானுடன் ஆனந்தரஸமனுபவித்துக் கிரீடை செய்தல் ராஸக்கிரீடை. ஜீவர்க ளெல்லாம் மாலை வடிவாய் அவனுடன் கைகோத்து நிற்க நடைபெறும் உலகலீலையையே ராஸக் கிரீடையாக ஞானி காண்கிறுன். உலகமே பிருந்தாவனம்.

ஒ. ரஸோ வை ஸ:। ரஸம் ஹ்யேவாயம் லப்த்வா ஆனந்தீ பவதி।

—தை. உப.

33. 3. ஒ. அங்கனமங்கன-மந்தரே மாதவோ மாதவம் மாதவஞ் சாந்த ரேணுங்-கன। இத்தமாகல்பிதே மண்டலே மத்யக: ஸஞ்ஜகௌ வேணுனு தேவகீநந்தன:॥ —கிருஷ்ண கர்ணும்ருதம்

तत्रातिशुशुभे ताभि-र्भगवान् देवकीसुतः ।
मध्ये मणीनां हैमानां महामरकतो यथा ॥ ३३.७ ॥

एवं परिष्वङ्ग-कराभिमर्श-स्निग्धेक्षणोद्दाम-विलासहासैः ।
रेमे रमेशो व्रजसुन्दरीभि-र्यथार्भकः स्वप्रतिबिंब-विभ्रमः ॥ ३३.१७ ॥

कृत्वा तावन्त-मात्मानं यावती-र्गोपयोषितः ।
रेमे स भगवां-स्ताभि-रात्मारामोऽपि लीलया ॥ ३३.२० ॥

ततश्च कृष्णोपवने जलस्थल-प्रसून-गन्धानिल-जुष्ट-दिक्तटे ।
चचार भृंग-प्रमदागणावृतो यथा मदच्युद् द्विरदः करेणुभिः

राजोवाच—

संस्थापनाय धर्मस्य प्रशमायेतरस्य च ।
अवतीर्णो हि भगवा-नंशेन जगदीश्वरः ॥ ३३.२७ ॥

---

33. 7. அவ்விளையாட்டில் தேவகீ புத்திரனை கிருஷ்ணன் அவர்களுடன்கூடி பொன்மணிகளுக்கிடையில் சிறந்த மரகதம்போல் பிரகாசித்தார்.

33. 17. தன் பிரதிபிம்பத்துடன் விளையாடும் குழந்தையைப்போல் கட்டிக் கொண்டும் கைகளால் தொட்டும் அன்புடன் பார்த்தும் கம்பீரமாகச் சிரித்தும் ஸ்ரீ கிருஷ்ணன் கோபஸ்திரீகளுடன் விளையாடினார்.

33. 20. அந்தக் கிருஷ்ணபகவான் ஆத்மாராமராக இருந்தபோதிலும் விளையாட்டிற்காகக் கோபஸ்திரீகள் எத்தனைபேர்களோ அத்தனை உருவங்களாகத் தன்னை ஆக்கிக்கொண்டு அவர்களுடன் விளையாடினார்.

33. 25. பின்னர் நீரிலும் நிலத்திலும் மலர்ந்திருந்த பூக்களின் நறுமணத்தை எத்திக்கிலும் பரப்பும் காற்று வீசப்பெற்ற யமுனையின் உபவனத்தில் வண்டுகளின் கூட்டமும் பெண்களின் கூட்டமும் சூழப் பெண்யானைகளுடன் மதத்தைப் பெருக்கும் ஆண்யானை சஞ்சரிப்பதுபோல் சஞ்சரித்தார்.

அரசன் கூறியது—

33. 27. ஜகதீசுவரனாகிய பகவான் தர்மத்தை நிலைநிறுத்துவதற்காகவும் அதர்மத்தை அடக்குவதற்காகவும் அல்லவோ தனது அம்சத்துடன் (பலராமருடன்) அவதரித்தார்.

---

33. 17. பல நிலைக்கண்ணாடிகளில் ஒரு குழந்தை அவற்றுடன் விளையாடுவதுபோல் பகவான் விளையாடினார்.

ஒ. வேணுநாதக்ருத-தான தான கல-கானராககதி-யோஜனா
லோபனீய-ம்ருது-பாத பாதக்ருத-தாலமேலன-மனோஹரம் ।
பாணி ஸங்க்வணித-கங்கணஞ்ச முஹுரம்ஸலம்பித-கராம்புஜம்
ச்ரோணி பிம்ப சல-தம்பரம் பஜத ராஸகேலிரஸடம்பரம் ॥
—நாராயணீயம் 69. 4.

33. 21. 'காத்யாயனி மஹாமாயே' என்று ஒவ்வொருவரும் பூஜித்துப் பிரார்த்தித்ததாலும் பகவானும் அவர்களுடைய மனோரதத்தைப் பூர்த்தி செய்விப்பதாய் வாக்களித்திருந்ததாலும் அத்தனை வடிவு கொண்டு ஒவ்வொருவருடனும் விளையாடினார்.

स कथं धर्मसेतूनां वक्ता कर्ता-भिरक्षिता ।
प्रतीप-माचरद् ब्रह्मन् परदाराभिमर्शनम्   ॥ ३३.२८ ॥

आप्तकामो यदुपतिः कृतवान् वै जुगुप्सितम् ।
किमभिप्राय एतं नः संशयं छिन्दि सुव्रत   ॥ ३३.२९ ॥

श्रीशुक उवाच—

धर्मव्यतिक्रमो दृष्ट ईश्वराणां च साहसम् ।
तेजीयसां न दोषाय वह्नेः सर्व-भुजो यथा   ॥ ३३.३० ॥

गोपीनां तत्पतीनां च सर्वेषामेव देहिनाम् ।
योऽन्तश्चरति सोऽध्यक्षः क्रीडनेनेह देहभाक्   ॥ ३३.३६ ॥

---

33. 28. பிரம்மஸ்வரூபியே! தர்மத்தின் மரியாதைகளை நிருபணம் செய்து அனுஷ்டித்துக் காப்பாற்ற வேண்டியவரான அவர் பிறர் மனைவிகளைத் தீண்டும் அதர்மத்தை எப்படிச் செய்தார்?

33. 29. சிறந்த விரதம் பூண்டவரே! ஆப்தகாமரான யது நாயகன் இகழத்தக்க செயலை என்ன அபிப்பிராயங்கொண்டு செய்தார்? எங்களுடைய இந்த சந்தேகத்தைத் தீர்க்கவேண்டும்.

ஸ்ரீ சுகர் கூறியது—

33. 30. ஈசுவரர்களிடத்தில் தர்மத்தை மீறியதாகத் தோன்றும் நடத்தையும் துணிச்சலான செயலும் காணப்படுகின்றன. எல்லாவற்றையும் புசிக்கும் அக்கினிக்கு தோஷம் ஏற்படாததுபோல வீரியம் மிக்க இவர்களுக்கு அவை தோஷத்திற்குக் காரணமாவதில்லை.

33. 36. கோபிகளுக்கும் அவர்களுடைய கணவர்களுக்கும் உடல் படைத்த எல்லோருக்கும் உள்ளே எவர் உறைகிறாரோ அந்த புத்திஸாக்ஷியான பகவானே லீலை புரிய இங்கு உடலுடன் தோன்றியிருக்கிறார்.

---

33. 28. **ப்ரதீபம்—**ப்ரதிகூலம் அனர்த்தம் ।

பாகவதம் முழுவதும் பகவானுடைய சரீரமாகக் கருதப்படுகிறது. 'ராஸ பஞ்சாத்யாயீ' எனப்படும் இவ்வைந்து அத்தியாயங்களும் (29-33) பிராணஸ்தானம்.

'த்யஜ தர்மமதர்மஞ்ச' என்றபடி மற்ற எல்லாம் விடப்பட்டு பக்தியின் உச்சிநிலை இங்கு காணப்படுகிறது. மற்ற இடங்களில் பக்தியானது மற்ற ஆசிரயங்களுடன் காணப்படும். இங்கு காணப்படுவது சிருங்கார ரஸமன்று. இதைக் கேட்பதால் (காமம் ஹ்ருத்ரோகம் நச்யதி) உள்ளத்தின் நோயான காமம் நசிக்கும்.

33. 36. கோபிகளுக்கும் ஆத்மாவாகவும் அவர்களுடைய புருஷர்களுக்கும் ஆத்மாவாகவும் இருப்பவன் பரபுருஷனு?

अनुग्रहाय भूतानां मानुषं देहमास्थितः ।
भजते तादृशीः क्रीडा याः श्रुत्वा तत्परो भवेत् ॥ ३३.३७ ॥

नासूयन् खलु कृष्णाय मोहितास्तस्य मायया ।
मन्यमानाः स्वपार्श्वस्थान् स्वान् स्वान् दारान् व्रजौकसः ॥ ३३.३८ ॥

ब्रह्मरात्र उपावृत्ते वासुदेवानुमोदिताः ।
अनिच्छन्त्यो ययु-र्गोप्यः स्वगृहान् भगवत्प्रियाः ॥ ३३.३९ ॥

33. 37. ஜீவராசிகளுக்கு அனுக்கிரஹம் செய்யும் பொருட்டு மனித சரீரத்தை எடுத்துக்கொண்டு எந்த லீலைகளைப்பற்றிக் கேட்டமாத்திரத்தில் ஒருவன் பக்தியால் பரவசமடைவானோ அப்படிப்பட்ட லீலைகளைப் புரிகிறார்.

33. 38. அவருடைய மாயையால் மோஹமடைந்த கோகுலவாசிகள் தங்கள் தங்களுடைய மனைவிமார்கள் தங்கள் பக்கத்திலேயே இருந்ததாக எண்ணிக் கிருஷ்ண னிடத்தில் பொறுமை கொள்ளவே இல்லை.

33. 39. பிராம்ம முகூர்த்தம் (விடியற்காலை) வந்ததும் பகவானுடைய அன்பிற்குப்பாத்திரமான கோபிகள் கிருஷ்ணனால் விடையளிக்கப்பட்டு இஷ்ட மில்லாமலே தங்கள் வீட்டிற்குச் சென்றார்கள்.

33. 37. 'தத்க்ரது' நியாயம், அதாவது எதைச் சிந்திக்கிறானோ அப்படியாவான் என்பது இங்கே பொருந்துவதில்லை. பகவான் உரலில் கட்டுண்டதை நினைத்தால் ஜீவனுடைய பிறவித்தளை விடுபடுகிறது. பகவான் வெண்ணெய் திருடியதை நினைத்தால் இவன் மனத் திலுள்ள கள்ளம் கரைகிறது. பகவானுடைய ராஸக்கிரீடையை நினைத்தால் இவனுக்குக் காமஜயம் ஏற்படுகிறது என்பது ரகசியம்.

அவனன்றி ஓரணுவுமசையாது. எல்லா சரீரங்களுக்கும் அவனே அந்தர்யாமியன்றோ ?

அணுவுடன் அணு பற்றுவதேன் ? கிரகங்களும் நக்ஷத்திரங்களும் ஒன்றையொன்று சுற்றி வருவதேன் ? எல்லாம் அவன் தோன்றாத்துணையாக இடையிலிருப்பதாலேயே.

33. 38. கோபிகள் பகவத்கிருபையால் யோக சரீரம் படைத்து அதைக்கொண்டு பகவானிடம் விளையாடினார்கள். போக சரீரம் கோகுலத்திலிருந்தது. தேகம் உலகில் நிற்க மனம் பகவானிடம் ரமித்தது.

புத்திரனிடம் உள்ள வாத்ஸல்யத்தைக் கண்ணனிடம் வாத்ஸல்யமாக்குவதுபோல் பர்த்தாவிடமுள்ள காமத்தையும் பகவானிடம் காமமாக்குதலே முறை.

ஓ. 'காமம் கண்ணனுக்கு ஆம்.' காமக்ரோத-அபிமானாதிகம் தஸ்மின்னேவ கரணீயம் |

கோபிகள் கணவன்மார்களை நேசிக்கிறார்கள். பகவானைப் பூஜிக்கிறார்கள். பர்த்தாவின் கருவிழிகளில் அவர்கள் கண்ணனையே காண்கிறார்கள். கிருஷ்ணப் பிரேமை பர்த்தாவிடம் பிரீதியைக் குறைப்பதில்லை, வளர்க்கவே செய்கிறது. பர்த்தாவிடம் உண்மையான நேசமும் பகவத் பக்தியைப் பெருக்கவே செய்கிறது. பர்த்தாவின் பலம் அழகு அன்பு எல்லாம் கண்ணனே.

கோபிகளைப்போல் இருதயம் பரிபக்குவமான பக்தனுக்கு உலகமே பிருந்தாவனம். எல்லாச் செயலும் ராஸக்கிரீடை. குயில் பாடுவது அவன் குரல். பச்சைத் தளிரும், மலர்ந்த பூவும் அவன் திருமேனியின் பிரகாசம். நீலமேகமும் நெடுங்கடலும் அவன் ஆடை.

பிருந்தாவன கிருஷ்ணன் வயது பத்தே தான் ஆனாலும் அவனுக்கு வயதின் எல்லை இல்லை.

33. 39. भगवत्प्रियः ।

विक्रीडितं व्रजवधूभिरिदं च विष्णोः
श्रद्धान्वितोऽनुश‍ृणुयादथ वर्णयेद् यः ।
भक्तिं परां भगवति प्रतिलभ्य कामं
हृद्रोग-माश्वपहिनोत्यचिरेण धीरः ॥ ३३.४० ॥

इति श्रीमद्भागवते दशमस्कन्धे रासक्रीडावर्णनं नाम
त्रयस्त्रिंशोऽध्यायः ॥

---

33. 40. கோபஸ்திரீகளுடன் ஸ்ரீ கிருஷ்ணன் புரிந்த இந்த லீலையை எவன் சிரத்தையுடன் கேட்கிறானோ அல்லது வர்ணிக்கிறானோ அந்த புத்திமான் விரைவில் பகவானிடம் சிறந்த பக்தியையடைந்து இருதயத்தில் குடிகொண்டிருக்கும் நோயாகிய காமத்தை ஒழித்துவிடுகிறான்.

இங்ஙனம் ஸ்ரீமத் பாகவதம் தசமஸ்கந்தத்தில் ராஸக்கிரீடையின் வர்ணனம்
எனப் பெயர் பெற்ற முப்பத்து மூன்றாவது
அத்தியாயம் முற்றும்.

बृन्दावन-लीला (४) ॥ २५ ॥

अक्रूरगामनम्

श्रीशुक उवाच—

अथ तर्ह्यागतो गोष्ठमरिष्टो वृषभासुरः ।
मही महाककुत्कायः कंपयन् खुरविक्षताम् ॥ ३६.१ ॥

तं तीक्ष्णशृंग-मुद्वीक्ष्य गोप्यो गोपाश्च तत्रसुः ।
कृष्ण कृष्णेति ते सर्वे गोविन्दं शरणं ययुः ॥ ३६.६ ॥

तमापतन्तं स निगृह्य शृंगयोः पदा समाक्रम्य निपात्य भूतले ।
निष्पीडयामास यथाऽऽर्द्र-मंबरं कृत्वा विषाणेन जघान सोऽपतत्
॥ ३६.१३ ॥

एवं ककुद्मिनं हत्वा स्तूयमानः स्वजातिभिः ।
विवेश गोष्ठं सबलो गोपीनां नयनोत्सवः ॥ ३६.१५ ॥

अरिष्टे निहते दैत्ये कृष्णेनाद्भुत-कर्मणा ।
कंसायाथाह भगवान् नारदो देवदर्शनः ॥ ३६.१६ ॥

---

25. பிருந்தாவன லீலை - (4)

அக்ரூராகமனம்

ஸ்ரீ சுகர் கூறியது—

36. 1. அதற்குப்பின் ஒருசமயம் விருஷபரூபம் தரித்த அரிஷ்டன் என்ற அசுரன் கொழுத்த திமிலுடன்கூடிய பெரிய உடலுடன் தனது கொம்புகளால் பூமியைப் பிளந்துகொண்டும் நடுங்கச் செய்துகொண்டும் கோகுலத்தினுள் புகுந்தான்.

36. 6. கூரிய கொம்புகளையுடைய அவனைக் கண்டு கோபிகளும் கோபர்களும் பீதியடைந்தார்கள். அவர்கள் எல்லோரும் 'கிருஷ்ண ! கிருஷ்ண !' என்று கூவிக் கொண்டு கோவிந்தனைச் சரணடைந்தார்கள்.

36. 13. எதிர்த்து வருகின்ற அவ்வசுரனைக் கிருஷ்ணன் கொம்புகளால் பிடித்துப் பூமியில் தள்ளி காலால் மிதித்துக்கொண்டு ஈரத்துணியைப் பிழிவதுபோல் பிழிந்தார். கொம்பைப் பிடுங்கி எடுத்து அதனால் அவனைக் கொல்ல அவன் சாய்ந்தான்.

36. 15. இவ்வாறு ரிஷபாஸுரனைக் கொன்றபின் தனது சுற்றத்தால் போற்றப் பட்டு கோபிகளின் கண்களுக்கு ஆனந்தத்தைப் பெருக்கும் கிருஷ்ணன் பலராமருடன் கோசாலையிற் புகுந்தார்.

36. 16. அற்புதச் செயலுடைய கிருஷ்ணனால் அரிஷ்டாசுரன் கொல்லப்பட்ட பின் பகவான் தேவரிஷி நாரதர் கம்ஸனிடம் வந்து பின்வருமாறு கூறினார்.

34-வது அத்தியாயத்தில் எல்லோரும் அம்பிகாவானம் சென்றிருந்தபோது ஒரு மலைப் பாம்பு நந்தரைக் கவ்வியதும் அவரைக் கிருஷ்ணன் விடுவித்ததும் அதனால் மலைப்பாம்பும் சாபத்தினின்று மீண்டதும், பின்பு சங்கசூடன் என்ற யக்ஷன் கோபஸ்திரீகளை இம்சிக்கவே அவனைச் சம்ஹரித்ததும் கூறப்படுகிறது.

35-வது அத்தியாயத்தில் கோபிகைகள் தினந்தோறும் கூடிக்கூடிக் கிருஷ்ண லீலைகளைப் பாடியது (கோபிகாயுகளகீதம்) கூறப்படுகிறது.

यशोदायाः सुतां कन्यां देवक्याः कृष्णमेव च ।
न्यस्ता स्वमित्रे नन्दे वै याभ्यां ते पुरुषा हताः ॥ ३६.१७ ॥

निशम्य तद्भोजपतिः कोपात् प्रचलितेन्द्रियः ।
निशात-मसि-मादत्त वसुदेव-जिघांसया ॥ ३६.१८ ॥

निवारितो नारदेन तत्सुतौ मृत्यु-मात्मनः ।
ज्ञात्वा लोहमयैः पाशै-र्बबन्ध सह भार्यया ॥ ३६.१९ ॥

प्रतियाते तु देवर्षौ कंस आभाष्य केशिनम् ।
प्रेषयामास हन्येतां भवता रामकेशवौ ॥ ३६.२० ॥

ततो मुष्टिक-चाणूर-शलतोशलकादिकान् ।
अमात्यान् हस्तिपांश्चैव समाहूयाह भोजराट् ॥ ३६.२२ ॥

भो भो निशम्यता-मेतद् वीरचाणूर-मुष्टिकौ ।
नन्दव्रजे किलासाते सुतावानकदुन्दुभेः ।
रामकृष्णौ ततो मह्यं मृत्युः किल निदर्शितः ॥ ३६.२३ ॥

---

36. 17. 'யசோதையின் பிள்ளையென்று பெயர் பெற்ற கிருஷ்ணனை தேவகியின் பிள்ளையென்றும் பலராமனை ரோஹிணியின் பிள்ளையென்றும், பயமடைந்த வசுதேவரால் தனது நண்பனாகிய நந்தகோபரிடம் அவர்கள் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருக்கிறார்களென்றும் (தெரிந்துகொள்ளவேண்டும்). அப்படிப்பட்ட அவர்களால்தான் உனது ஆட்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.'

36. 18. அதைக்கேட்டுக் கம்ஸன் கோபத்தால் எல்லா இந்திரியங்களும் துடிக்க வசுதேவரைக் கொல்ல எண்ணிக் கூர்மையான கத்தியைக் கையிலெடுத்தான்.

36. 19. அக்காரியத்திலிருந்து நாரதரால் தடுக்கப்பட்டபோதிலும் வசுதேவருடைய அப்பிள்ளைகள் தனக்கு மரணத்தை விளைவிப்பவர் என்று அறிந்து வசுதேவரை அவர் மனைவியுடன் இரும்புச் சங்கிலியால் கட்டினான்.

36. 20. தேவரிஷியான நாரதர் போனபிறகு கம்ஸன் கேசி என்பவனைக் கூப்பிட்டு "உன்னால் பலராமனும் கிருஷ்ணனும் கொல்லப்படவேண்டும்" என்று சொல்லி அவனை அனுப்பிவைத்தான்.

36. 22. அதன்பிறகு முஷ்டிகன் சாணூரன் சலன் தோசலகன் முதலிய மந்திரிமார்களையும் யானைப் பாகர்களையும் கம்ஸன் வரவழைத்துப் பின்வருமாறு கூறினான்.

36. 23. 'வீரர்களே! சாணூரா! முஷ்டிகா! நான் சொல்லுவதைக் கவனமாய்க் கேளுங்கள். வசுதேவரின் பிள்ளைகளான பலராமனும் கிருஷ்ணனும் நந்த கோகுலத்தில் இருக்கிறார்களல்லவா? அவர்களாலல்லவா எனக்கு மரணம் என்று காட்டப்பட்டிருக்கிறது?

---

36. 20. राममाधवौ । 36. 23. काल निदर्शितः । பா. பே.

भवद्भ्यामिह संप्राप्तौ हन्येतां मल्ललीलया ।
पौरा जानपदाः सर्वे पश्यन्तु स्वैरसंयुगम् ॥ ३६.२४ ॥

आरभ्यतां धनुर्याग-श्चतुर्दश्यां यथाविधि ।
विशसन्तु पशून् मेध्यान् भूतराजाय मीढुषे ॥ ३६.२६ ॥

इत्याज्ञाप्यार्थ-तन्त्रज्ञ आहूय यदुपुंगवम् ।
गृहीत्वा पाणिना पाणिं ततोऽक्रूर-मुवाच ह ॥ ३६.२७ ॥

भो भो दानपते मह्यं क्रियतां मैत्रमादृतः ।
नान्यस्त्वत्तो हिततमो विद्यते भोजवृष्णिषु ॥ ३६.२८ ॥

गच्छ नन्दव्रजं तत्र सुतावानकदुन्दुभेः ।
आसाते ताविहानेन रथेनानय मा चिरम् ॥ ३६.३० ॥

निसृष्टः किल मे मृत्युर्देवै-र्वैकुण्ठ-संश्रयैः ।
तावानय समं गोपै-र्नन्दाद्यैः साभ्युपायनैः ॥ ३६.३१ ॥

---

36. 24. 'அவர்கள் இங்கு கொண்டுவந்து சேர்க்கப்பட்டபின் உங்களிருவர்களாலும் மல்யுத்தத்தில் கொல்லப்படவேண்டும். நகர மக்களும் மற்ற ஜனங்களும் எல்லோரும் இஷ்டப்படி மல்யுத்தத்தைப் பார்க்கட்டும்.

36. 26. 'சதுர்த்தசியன்று விதிப்படி தனுர்யாகம் ஆரம்பிக்கப்படவேண்டும். வரங்களையளிக்கும் பூதபதியான ருத்திரருக்குத் தகுதியான பலிகள் கொடுக்கப்படட்டும்.'

36. 27. என்றிவ்வாறு அர்த்த சாஸ்திர முறைகளையறிந்த கம்ஸன் கட்டளையிட்டுவிட்டு யது சிரேஷ்டரான அக்ரூரரை அழைத்துத் தன் கையால் அவர் கையைப் பிடித்துக்கொண்டு பின்வருமாறு கூறினன்.

36. 28. 'ஐயனே! அக்ரூரரே! எனக்கு சிநேகத்தால் ஒரு உபகாரம் செய்யப்படவேண்டும். போஜர்களுக்குள்ளும் விருஷ்ணிகளுக்குள்ளும் ஆதரவுடன் நன்மை செய்வதில் உம்மினும் சிறந்தவர் வேறு எவருமில்லை.

36. 30. 'நந்தகோகுலத்திற்குப் போங்கள். அங்கே வசுதேவரின் பிள்ளைகள் இருக்கிறார்கள் அல்லவா? அவர்களை இங்கு இந்தத் தேரிலேயே அழைத்துவர வேண்டும். தாமதிக்கவேண்டாம்.

36. 31. 'விஷ்ணுவை ஆசிரயித்த தேவர்களால் அவர்கள் மூலமாய் எனக்கு மரணம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதல்லவா? காணிக்கைகளுடனும் நந்தன் முதலிய கோபர்களுடனும் அவர்களை அழைத்துவாருங்கள்.

जरासन्धो मम गुरु-र्द्विविदो दयितः सखा।
शंबरो नरको बाणो मय्येव कृत-सौहृदाः।
तैरहं सुरपक्षीयान् हत्वा भोक्ष्ये महीं नृपान् ॥ ३६.३६ ॥

एतज्ज्ञात्वाऽऽनय क्षिप्रं रामकृष्णाविहार्भकौ।
धनुर्मख-निरीक्षार्थं द्रष्टुं यदुपुरश्रियम् ॥ ३६.३७ ॥

अक्रूर उवाच—

राजन् मनीषितं सध्र्यक् तव स्वावद्यमार्जनम्।
सिद्ध्यसिद्ध्योः समं कुर्याद् दैवं हि फलसाधनम् ॥ ३६.३८ ॥

मनोरथान् करोत्युच्चै-र्जनो दैवहतानपि।
युज्यते हर्षशोकाभ्यां तथाप्याज्ञां करोमि ते ॥ ३६.३९ ॥

श्रीशुक उवाच—

एवमादिश्य चाक्रूरं मन्त्रिणश्च विसृज्य सः।
प्रविवेश गृहं कंसस्तथाक्रूरः स्वमालयम् ॥ ३६.४० ॥

---

36. 36. 'என் மாமனுரும் குருவுமான ஜராஸந்தன், பிரியமுள்ள தோழனுன த்விவிதன், சம்பரன், நரகன், பாணன் ஆகிய இவர்கள் என்னிடத்தில் அன்பு வைத்தவர்கள். அவர்களுடன்கூடி நான் தேவர் கக்ஷியை ஆதரிக்கும் அரசர்களைக் கொன்று பூமியை ஆண்டனுபவிப்பேன்.

36. 37. 'என்னுடைய இந்த அபிப்பிராயத்தை நன்கறிந்து தனுர்யாகத்தைப் பார்ப்பதற்கென்றும் யதுக்களின் தலைநகராகிய மதுரையின் சிறப்பைப் பார்ப்பதற்கென்றும் குழந்தைகளான பலராமனையும் கிருஷ்ணனையும் விரைவில் இங்கு அழைத்து வாரும்.'

அக்ரூரர் கூறியது—

36. 38. 'அரசே! உமக்கு மரணம் வாராமல் தடுப்பதற்காகச் செய்துள்ள உமது யோசனை நன்ருக இருக்கிறது. அது கைகூடினுலும் கூடாவிட்டாலும் மனதைச் சம நிலையில் வைத்திருக்கவேண்டும். பயனைக் கூட்டிவைப்பது ஊழ்வினை.

36. 39. ஊழ்வினையால் கெடுக்கப்பட்ட மனிதனுங்கூட உயர்ந்த மனக் கோட்டைகளைக் கட்டுகிருன். இன்பதுன்பங்களை அடைகிருன். அது எப்படியிருப்பினும் உமது கட்டளைப்படி செய்கிறேன்.'

ஸ்ரீ சுகர் கூறியது—

36. 40. இவ்விதம் அக்ரூரர்க்குக் கட்டளையிட்டுவிட்டு மந்திரிகளையும் அனுப்பிவிட்டு அந்தக் கம்ஸன் தன் அரண்மனைக்குள் புகுந்தான். அவ்வாறே அக்ரூரரும் தம் வீடு சென்ருர்.

केशी तु कंसप्रहितः खुरै-र्महीं महाहयो निर्जरयन् मनोजवः ।
दुराशयः कंसहितं चिकीर्षु-र्व्रजं स नन्दस्य जगाम कंपयन् ॥ ३७.१ ॥

तं त्रासयन्तं भगवान् स गोकुलं तद्धेषितै-र्वालविघूर्णिताम्बुदम् ।
आत्मान-माजौ मृगयन्त-मग्रणी-रुपाह्वयत् स व्यनदन्मृगेन्द्रवत् ॥ ३७.३ ॥

सोऽप्यस्य वक्त्रे भुजमुत्तरं स्मयन् प्रवेशयामास यथोरगं बिले ।
समेधमानेन स कृष्णबाहुना निरुद्ध-वायुश्चरणांश्च विक्षिपन् ।
प्रस्विन्नगात्रः परिवृत्तलोचनः पपात लेण्डं विसृजन् क्षितौ व्यसुः ॥ ३७.८ ॥

देवर्षि-रुपसंगम्य भागवतप्रवरो नृप ।
कृष्ण-मक्लिष्टकर्माणं रहस्येतदभाषत ॥ ३७.१० ॥

कृष्ण कृष्णाप्रमेयात्मन् योगेश जगदीश्वर ।
वासुदेवाखिलावास सात्वतां प्रवर प्रभो ॥ ३७.११ ॥

दिष्ट्या ते निहतो दैत्यो लीलयायं हयाकृतिः ।
यस्य हेषित-संत्रस्ता-स्त्यजन्त्यनिमिषा दिवम् ॥ ३७.१५ ॥

---

37. 1. கம்ஸனால் ஏவப்பட்ட கேசி என்ற அசுரன் கம்ஸனுக்கு இஷ்டமானதைச் செய்ய விரும்பி மனோவேகமுடைய பெரிய குதிரை வடிவுகொண்டு குளம்புகளால் பூமியைப் பிளந்துகொண்டு கெட்ட எண்ணமுடைய அவன் நந்தருடைய கோகுலத்தை நடுங்கச் செய்துகொண்டு அங்குச் சென்றான்.

37. 3. தன் கனைப்புகளால் கோகுலத்தைப் பயமுறுத்துபவனும் தன் வாலால் மேகங்களைச் சிதறச் செய்பவனும் சண்டைக்குக் கிருஷ்ணனைத் தேடுகிறவனுமான அவன்முன் பகவான் தோன்றித் தன்னருகில் வரும்படி அழைத்தார். அவன் சிங்கம் போல் கர்ஜித்தான்.

37. 8. அப்போது பகவான் சிரித்துக்கொண்டு பொந்தில் பாம்பு நுழைவது போல் அவன் வாயில் தனது இடது கையை நுழையவிட்டார். அப்படி விட்டதும் பெருக்க ஆரம்பித்த கிருஷ்ணனுடைய கையால் சுவாஸம் அடைபட்டு உடல் வியர்த்துக் கண்கள் பிதுங்கிக் கால்களை உதறிக்கொண்டு உயிர் துறந்து அவன் பூமியில் விழுந்தான்.

37. 10. அரசே! அப்போது பாகவத சிரேஷ்டரான தேவரிஷி நாரதர் எதையும் சிரமமில்லாமல் செய்து முடிக்கும் கிருஷ்ணனிடம் வந்து இரகசியமாகப் பின்வருமாறு பேசினார்.

37. 11. 'கிருஷ்ணா! கிருஷ்ணா! அளவுகடந்த மகிமையுடையவனே! யோகேசுவரா! ஜகதீசுவரா! வாஸுதேவா! எல்லா ஜீவர்களுக்கும் உறைவிடமே! ஸாத்வத சிரேஷ்டரே! பிரபுவே!

37. 15. 'தேவர்களும் எந்தக் கேசியினுடைய கனைப்பைக் கேட்டு நடுங்கி சுவர்க்கத்தை விட்டோடுகிறார்களோ அந்தக் குதிரை வேஷம்பூண்ட அசுரன் உம்மால் விளையாட்டாகக் கொல்லப்பட்டான். அது நன்று.

चाणूरं मुष्टिकं चैव मल्लानन्यांश्च हस्तिनम् ।
कंसं च निहतं द्रक्ष्ये परश्वोऽहनि ते विभो ॥ ३७.१६ ॥

तस्यानु शङ्ख-यवन-मुराणां नरकस्य च ।
पारिजातापहरण-मिन्द्रस्य च पराजयम् ॥ ३७.१७ ॥

विशुद्ध-विज्ञानघनं स्वसंस्थया समाप्त-सर्वार्थ-ममोघ-वांछितम् ।
स्वतेजसा नित्यनिवृत्त-माया-गुणप्रवाहं भगवन्त-मीमहि ॥ ३७.२३ ॥

श्रीशुक उवाच—

एवं यदुपतिं कृष्णं भागवत-प्रवरो मुनिः ।
प्रणिपत्याभ्यनुज्ञातो ययौ तद्दर्शनोत्सवः ॥ ३७.२५ ॥

अक्रूरोऽपि च तां रात्रिं मधुपुर्यां महामतिः ।
उषित्वा रथमास्थाय प्रययौ नन्दगोकुलम् ॥ ३८.१ ॥

गच्छन् पथि महाभागो भगवत्यंबुजेक्षणे ।
भक्तिं परामुपगत एवमेत-दचिन्तयत् ॥ ३८.२ ॥

---

37. 16. 'பிரபுவே! சாணூரனையும் முஷ்டிகனையும் மற்ற மல்லர்களையும் குவலயா பீடமென்ற யானையையும் கம்ஸனையும் நாளைக்கு மறுதினம் உம்மால் கொல்லப்பட்டவர்களாக நான் காணப்போகிறேன்.

37. 17. 'அதன்பிறகு சங்கன் யவனன் முரன் நரகன் இவர்களுடைய வதத்தையும் பாரிஜாதம் கொண்டுவருவதையும் இந்திரனுடைய தோல்வியையும் காணப் போகிறேன்.

37. 23. 'நிர்மலமான ஞானஸ்வரூபியும் நிலைபெற்ற ஆத்மானுபவத்தால் அனைத்தையும் அடைந்தவரும் ஸத்யஸங்கல்பரும் இயற்கையான வீரியத்தால் மாயாகுணப் பிரவாகத்தை என்றும் கடந்து நிற்பவரும், பகவானுமாகிய உம்மைச் சரணடைகின்றேன்.'

ஸ்ரீ சுகர் கூறியது—

37. 25. பாகவத சிரேஷ்டரான நாரத முனிவர் இவ்விதம் யது நாயகனை ஸ்ரீ கிருஷ்ணனை வணங்கி அவரிடம் விடைபெற்று அவரைப் பார்த்ததால் மகிழ்ச்சி பொங்கும் மனத்துடன் திரும்பிச் சென்றார்.

38. 1. சிறந்த புத்திமானாகிய அக்ரூரர் அன்றிரவு மதுராபுரியில் இருந்துவிட்டு (கம்ஸன் விருப்பப்படி) தேரில் ஏறிக்கொண்டு நந்தகோகுலத்திற்குப் புறப்பட்டார்.

38. 2. தாமரைக் கண்ணரான பகவானிடத்தில் உத்தமமான பக்திபூண்டவரும் மகா பாக்கியசாலியுமான அவர் வழியில் போகும்போது பின்வருமாறு சிந்திக்கலானார்.

किं मयाऽऽचरितं भद्रं किं तप्तं परमं तपः।
किं वाथाप्यर्हते दत्तं यद् द्रक्ष्याम्यद्य केशवम् ॥ ३८.३ ॥

ममाद्यामंगलं नष्टं फलवांश्चैव मे भवः।
यन्नमस्ये भगवतो योगिध्येयांघ्रि-पंकजम् ॥ ३८.६ ॥

न मय्युपैष्यत्यरिबुद्धि-मच्युतः कंसस्य दूतः प्रहितोऽपि विश्वदृक्।
योऽन्त-र्बहिश्चेतस एतदीहितं क्षेत्रज्ञ ईक्षत्यमलेन चक्षुषा ॥ ३८.१८ ॥

लब्ध्वांगसंगं प्रणतं कृतांजलिं मां वक्ष्यतेऽक्रूर ततेत्युरुश्रवाः।
तदा वयं जन्मभृतो महीयसा नैवादृतो यो धिगमुष्य जन्म तत्

इति संचिन्तयन् कृष्णं श्वफल्कतनयोऽध्वनि।
रथेन गोकुलं प्राप्तः सूर्यश्चास्तगिरिं नृप ॥ ३८.२४ ॥

पदानि तस्याखिल-लोकपाल-किरीट-जुष्टामल-पादरेणोः।
ददर्श गोष्ठे क्षितिकौतुकानि विलक्षितान्यब्ज-यवांकुशाद्यैः ॥ ३८.२५ ॥

---

38. 3. 'இன்று கேசவனைப் பார்ப்பதற்கு என்னால் என்ன புண்ணியம் செய்யப் பட்டது? சிறந்த தவம் என்ன செய்யப்பட்டது? தகுந்த பாத்திரத்தில் என்ன தானம் செய்யப்பட்டது?

38. 6. 'இன்று என் பாபம் நாசமடைந்துவிட்டது. என் பிறவிப்பயன் கைகூடிற்று. ஏனென்றால் யோகிகள் தியானிக்கும் கிருஷ்ணனுடைய திருவடித் தாமரைகளை நான் வணங்கப்போகிறேன்.

38. 18. 'கம்ஸனுடைய தூதனாக நான் அனுப்பப்பட்டிருந்தபோதிலும் என்னிடத்தில் கிருஷ்ணன் பகைவன் என்ற எண்ணம் கொள்ளமாட்டார். அவர் அந்தர்யாமியாயிருப்பதால் எனது சித்தத்தின் உள்கிடக்கையையும் வெளிநடத்தை யையும் நிர்மலமான திருஷ்டியால் உள்ளபடி காண்பார்.

38. 21. 'புகழ்பெற்ற கிருஷ்ணன் தன்னை வணங்கியவனும் பரிசிக்கப்பெற்ற வனும் கைகூப்பியவனுமான என்னை 'அப்பா!' அக்ரூரா!' என்று அழைப்பார். அப் போது நான் பிறவியின் பயனை எய்தியவனாவேன். மகாபுருஷரான அவரால் எவன் ஆத ரிக்கப்படவில்லையோ அவன் பிறவி வீண்.'

38. 24. என்றிவ்வாறு வழிமுழுதும் கிருஷ்ணனைப்பற்றியே எண்ணிக்கொண்டு தேருடன் கோகுலத்தையடைந்தார். சூரியனும் அஸ்தமனமடைந்தான்.

38. 25. லோகபாலர்களுடைய கிரீடங்களைப் புனிதமாக்கும் பாததூளிகளை யுடைய அந்தக் கிருஷ்ணனுடைய அடிச்சுவடுகளை மாட்டுக்கொட்டிலில் கண்ணுற்றார். அவை தாமரை, யவம், அங்குசம் முதலிய அடையாளங்களுடன் பூமியை அலங் கரித்தன.

---

38. 24. **ரதேன கோகுலம் ப்ராப்த** :—தேர் எப்படி வந்ததென்பதுகூட அவருக்குத் தெரியாது. பகவத் பக்திதான் அதைச் செலுத்தியது.

तद्दर्शनाह्लाद-विवृद्ध-संभ्रमः प्रेम्णोर्ध्व-रोमाश्रुकला-कुलेक्षणः।
रथा-दवस्कन्द्य स तेष्वचेष्टत प्रभोरमून्यंघ्रि-रजांस्यहो इति　　॥ ३८.२६ ॥

देहंभृता-मियानर्थो हित्वा दंभ भियं शुचम्।
संदेशाद्यो हरेर्लिंग-दर्शन-श्रवणादिभिः　　॥ ३८.२७ ॥

ददर्श कृष्णं रामं च व्रजे गोदोहनं गतौ।
पीतनीलांबरधरौ शरदंबुरुहेक्षणौ　　॥ ३८.२८ ॥

भगवद्दर्शनाह्लाद-बाष्प-पर्याकुलेक्षणः।
पुलकाचितांग औत्कण्ठ्यात् स्वाख्याने नाशकन् नृप　　॥ ३८.३५ ॥

भगवां-स्तदभिप्रेत्य रथांगाङ्कित-पाणिना।
परिरेभेऽभ्युपाकृष्य प्रीतः प्रणतवत्सलः　　॥ ३८.३६ ॥

---

38. 26. அந்தக் காட்சியாலுண்டான மகிழ்ச்சி பொங்குபவராய், பிரேமையால் மயிர்க்கூச்சலடைந்தவராய், ஆனந்தக் கண்ணீர் பொங்குபவராய் அவர் தேரிலிருந்து குதித்து 'ஆஹா! இவை என் பிரபுவினுடைய பாததூளிகளல்லவா?' என்று அவற்றின்மேல் புரண்டார்.

38. 27. இவ்வாறாக இடம்பத்தையும் பயத்தையும் சோகத்தையும் விட்டு பகவானுடைய கட்டளை, அடையாள தர்சனம், கதைகளைக் கேட்டல் முதலியவற்றால் அடையப்பெறும் பயன் எதுவோ அதுதான் உடல் படைத்தவர்க்குப் பரம புருஷார்த்தம்.

38. 28. கோகுலத்தில் மாடு கறக்குமிடம் சென்றவர்களும்) மஞ்சள் ஆடையும் நீல ஆடையும் தரித்தவர்களும் சரத்காலத் தாமரைபோன்ற கண்களையுடையவர்களுமான கிருஷ்ணனையும் பலராமனையும் (அக்ரூரர்) கண்ணுற்றார்.

38. 35. அரசே! பகவானைப் பார்த்த சந்தோஷத்தாலுண்டான ஆனந்தக் கண்ணீர் நிறைந்தவரும் மயிர்க்கூச்சடைந்தவரும் ஆகிய அவர் தொண்டை அடைபட்டவராய்த் தன்னைத் தெரிவித்துக்கொள்ளவும் முடியவில்லை.

38. 36. வணங்கியவர்களிடம் வாத்ஸல்யம் பொங்கும் பகவான் ப்ரீதிமிக்கவராய் அவருடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு சக்கரமேந்தும் கையால் அவரை இழுத்து அணைத்துக்கொண்டார்.

---

38. 26. ஒ. (கிம் ப்ரூமஹே பஹுஜனா ஹி ததாऽபி ஜாதா ஏவம் து பக்திதரலா விரலா: பராத்மன்) பரமாத்மஸ்வரூபியே, அந்தக் காலத்திலும் அநேக ஜனங்கள் பிறந்திருந்தார்கள். ஆனால் இவ்விதம் பக்தி பரவசமானவர்கள் மிகக்குறைவே.—நாராயணீயம் 72.6.

संकर्षणश्च प्रणत-मुपगुह्य महामनाः ।
गृहीत्वा पाणिना पाणी अनयत् सानुजो गृहम् ॥ ३८.३७ ॥

पृष्ट्वाथ स्वागतं तस्मै निवेद्य च वरासनम् ।
प्रक्षाल्य विधिवत् पादौ मधुपर्कार्हण-माहरत् ॥ ३८.३८ ॥

तस्मै भुक्तवते प्रीत्या रामः परमधर्मवित् ।
मुखवासै-र्गन्धमाल्यैः परां प्रीतिं व्यधात् पुनः ॥ ३८.४० ॥

सुखोपविष्टः पर्यंके रामकृष्णोरुमानितः ।
लेभे मनोरथान् सर्वान् पथि यान् स चकार ह ॥ ३९.१ ॥

किमलभ्यं भगवति प्रसन्ने श्रीनिकेतने ।
तथापि तत्परा राजन्न हि वांछन्ति किंचन ॥ ३९.२ ॥

---


38. 37. கம்பீரமான மனதுடைய பலராமனும் தன்னை வணங்கிய அக்ரூரரைத் தழுவித் தனது கையால் அவர் கைகளைப் பிடித்துக்கொண்டு தம்பியுடன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

38. 38. அவருக்கு நல்வரவு கூறிச் சிறந்த ஆஸனமளித்து விதிப்படி கால்களை யலம்பி மதுபர்க்க பூஜையைச் செய்தார்.

38. 40. தர்மந் தெரிந்தவர்களிற் சிறந்தவரான பலராமன் அவர் போஜனம் செய்தபிறகு மிகப் பிரீதியுடன் தாம்பூலம் சந்தனம் மாலை இவைகளால் அவரை உபசரித்து மகிழ்வித்தார்.

39. 1. பலராமராலும் கிருஷ்ணனாலும் வெகுமானம்அளிக்கப்பெற்று மெத்தையில் இன்புற்று வீற்றிருந்த அக்ரூரர் வரும் வழியில் என்னென்ன எண்ணங்களை எண்ணினாரோ அவையெல்லாங் கைகூடப் பெற்றார்.

39. 2. ஸ்ரீநிவாஸராகிய பகவான் பிரஸன்னரானால் அடையமுடியாதது எது? என்றாலும், அரசே! அவருடைய பக்தர்கள் எதையும் வேண்டுவதில்லை.



सायंतनाशनं कृत्वा भगवान् देवकीसुतः ।
सुहृत्सु वृत्तं कंसस्य पप्रच्छान्य-च्चिकीर्षितम् ॥ ३९.३ ॥

श्रीभगवानुवाच—

तात सौम्यागतः कच्चित् स्वागतं भद्रमस्तु वः ।
अपि स्वज्ञाति-बन्धूना-मनवीम-मनामयम् ॥ ३९.४ ॥

किं नु नः कुशलं पृच्छे एधमाने कुलामये ।
कंसे मातुलनाम्न्यंग स्वानां नस्तत्प्रजासु च ॥ ३९.५ ॥

अहो अस्मदभूद्भूरि पित्रो-र्वृजिन-मार्ययोः ।
यद्धेतोः पुत्रमरणं यद्धेतो-र्बन्धनं तयोः ॥ ३९.६ ॥

दिष्ट्याद्य दर्शनं स्वानां मह्यं वः सौम्य कांक्षितम् ।
संजातं वर्ण्यतां तात तवागमन-कारणम् ॥ ३९.७ ॥

श्रीशुक उवाच—

यत्सन्देशो यदर्थं वा दूतः संप्रेषितः स्वयम् ।
यदुक्तं नारदेनास्य स्वजन्मानकदुन्दुभेः ॥ ३९.९ ॥

---

39. 3. ஸாயங்கால போஜனத்தைச் செய்துவிட்டு தேவகீ புத்திரரான பகவான் தமக்கு வேண்டியவர்களிடத்தில் கம்ஸன் நடத்தையைப்பற்றியும் மேற்கொண்டு அவன் யோசனைகளைப்பற்றியும் மற்ற விஷயங்களைப்பற்றியும் விசாரித்தார்.

ஸ்ரீ பகவான் கூறியது—

39. 4. ஐயா, மனதிற்கினியவரே! சௌக்கியமாக வந்தீரா? உங்களுக்கு மங்களமுண்டாகவேண்டும். உற்றார் உறவினர் எல்லாம் சுகமாக ஆரோக்கியமாக இருக்கிறார்களா?

39. 5. ஐயனே! நமது குலத்திற்கு வியாதிபோன்றவனும் பெயரளவில்மட்டும் மாமனுமான கம்ஸன் கையோங்கியிருக்கையில் அவனுடைய பிரஜைகளாயிருக்கும் நம்மவர்களுடைய க்ஷேமத்தைப்பற்றி நான் என்ன கேட்கட்டும்?

39. 6. மதிப்பிற்குரிய தாய்தந்தையர்க்கு எங்கள் நிமித்தமாக மிகுந்த கஷ்டம் ஏற்பட்டது. ஐயோ! எங்கள் நிமித்தமாகவே மற்ற புத்திரர்களின் மரணமும் ஏற்பட்டது. எங்கள் நிமித்தமாகவே அவர்களுக்குக் கட்டுக்காவலும் ஏற்பட்டது.

39. 7. ஐயனே! ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட பந்துவாகிய உம்முடைய தரிசனம் இன்று கிடைத்தது எங்கள் பாக்கியம். ஐயனே! தாங்கள் வந்த காரணத்தை விளக்கிக் கூறவேண்டும்.

ஸ்ரீ சுகர் கூறியது—

39. 9. எந்தச் செய்தியைத் தெரிவிக்க, என்ன காரணத்திற்காகத் தான் தூதாக அனுப்பப்பட்டார் என்பதையும், கிருஷ்ணனுடைய பிறப்பு வசுதேவரிடம் ஏற்பட்டதென்று நாரதர் கம்ஸனுக்குத் தெரிவித்ததையும், எல்லாவற்றையும் விவரமாகக்கூறினார்.

---

39. 4. **அனமீவம்**—அபாபம், அதுக்கம்।

39. 5. கம்ஸன் ஆட்சியில் பிரஜைகள் க்ஷேமமா என்று கேட்பது கசாப்புக்கடையில் ஆடு க்ஷேமமா என்று கேட்கிற மாதிரிதான்.

श्रुत्वाक्रूरवचः कृष्णो बलश्च परवीरहा ।
प्रहस्य नन्दं पितरं राज्ञाऽऽदिष्टं विजज्ञतुः ॥ ३९.१० ॥

गोपान् समादिशत् सोऽपि गृह्यतां सर्वगोरसः ।
उपायनानि गृह्णीध्वं युज्यन्तां शकटानि च ॥ ३९.११ ॥

गोप्यस्तास्तदुपश्रुत्य बभूवु-र्व्यथिता भृशम् ।
रामकृष्णौ पुरीं नेतु-मक्रूरं व्रजमागतम् ॥ ३९.१३ ॥

गोप्य ऊचुः—

अहो विधात-स्तव न क्वचिद् दया
संयोज्य मैत्र्या प्रणयेन देहिनः ।
तांश्चाकृतार्थान् वियुनंक्ष्यपार्थकं
विक्रीडितं तेऽर्भकचेष्टितं यथा ॥ ३९.१९ ॥

क्रूर-स्त्व-मक्रूर-समाख्यया स्म न-
श्चक्षुर्हि दत्तं हरसे बताज्ञवत् ।
येनैकदेशेऽखिलसर्ग-सौष्ठवं
त्वदीय-मद्राक्ष्म वयं मधुद्विषः ॥ ३९.२१ ॥

---

39. 10. கிருஷ்ணனும் சத்துருக்களையழிக்கும் பலராமனும் அக்ரூரர் சொல்லியதைக் கேட்டுச் சிரித்துத் தந்தையாகிய நந்தரிடம் அரசனாகிய கம்ஸனுடைய கட்டளையை அறிவித்தார்கள்.

39. 11. நந்தகோபரும் கோபர்களைப்பார்த்து 'பால் தயிர் வெண்ணெய் முதலிய ரஸமான பதார்த்தங்களையும் காணிக்கைப் பொருள்களையும் எடுத்துக்கொள்ளுங்கள். வண்டிகளும் பூட்டுவதற்குத் தயாராகட்டும்' என்று கட்டளையிட்டார்.

39. 13. கோபிகைகள் அந்தக் கட்டளையையும், பலராமனையும் கிருஷ்ணனையும் மதுராபுரிக்கு அழைத்துச் செல்லுவதற்காகக் கோகுலத்திற்கு அக்ரூரர் வந்திருப்பதையும் கேள்வியுற்று மிகவும் வருத்தமடைந்தார்கள்.

கோபிகள் பிரலாபித்தது—

39. 19. பிரம்மதேவரே! உமக்கு எவ்விடத்திலும் தயை என்பதே இல்லை. பிராணிகளைச் சிநேகத்தாலும் காதலாலும் கூட்டிவைத்துவிட்டு அவர்கள் ஆசை நிறைவேறுமலேயே அவர்களைப் பிரித்துவிடுகிறீர். இது என்ன கஷ்டம்! அர்த்தமில்லாத உமது லீலை குழந்தைகளின் விளையாட்டுப் போலிருக்கிறது.

39. 21. ஐயோ! உம்முடைய சிருஷ்டி ஸாமர்த்தியம் முழுவதையும் கிருஷ்ணனுடைய இரண்டொரு அவயங்களிலேயே எதனால் கண்டனுபவிக்கும்படி எங்களுக்குக் கண்ணைக் கொடுத்தீரோ அந்தக் கண்ணைக் குரூரராகிய நீர் ஒன்றுமறியாதவனைப்போல் அக்ரூரர் என்ற பெயருடன் வந்து அபஹரிக்கிறீர் அல்லவா?

---

39. 11. गृह्णन्तो सर्वगोरसाः । 39. 21. बतार्थवत् । பா. பே.

अनार्द्रधीरेष समास्थितो रथं
तमन्वमी च त्वरयन्ति दुर्मदाः ।
गोपा अनोभिः स्थविरै-रुपेक्षितं
दैवं च नोऽद्य प्रतिकूल-मीहते ॥ ३९.२७ ॥

निवारयामः समुपेत्य माधवं
किं नोऽकरिष्यन् कुलवृद्धबान्धवाः ।
मुकुन्द-संगा-न्निमिषार्ध-दुस्त्यजाद्
दैवेन विध्वंसित-दीनचेतसाम् ॥ ३९.२८ ॥

योऽह्नः क्षये व्रजमनन्तसखः परीतो
गोपैर्विशन् खुररजश्छुरितालकस्रक् ।
वेणुं क्वणन् स्मितकटाक्ष-निरीक्षणेन
चित्तं क्षिणोत्यमु-मृते नु कथं भवेम ॥ ३९.३० ॥

श्रीशुक उवाच—

एवं ब्रुवाणा विरहातुरा भृशं व्रजस्त्रियः कृष्णविषक्त-मानसाः ।
विसृज्य लज्जां रुरुदुः स्म सुस्वरं गोविन्द दामोदर
माधवेति ॥ ३९.३१ ॥

---

39. 27. நெஞ்சில் ஈரமில்லாத இந்தக் கிருஷ்ணன் தேரில் ஏறி உட்கார்ந்து கொண்டுவிட்டார். இறுமாப்படைந்த இந்த கோபர்களும் அவருக்கிணங்க வண்டி களுடன் அவசரப்படுத்துகிறார்கள். பெரியோர்களாலும் இது கவனிக்கப்படவில்லை. தெய்வம்கூட இன்று நமக்குப் பிரதிகூலத்தையே செய்ய விரும்புகிறது.

39. 28. நாமெல்லோரும் ஒன்றுகூடிக் கிருஷ்ணனைப் போகாமல் தடுத்து விடுவோம். அரை நிமிஷம்கூட விடமுடியாத கிருஷ்ணனுடைய சேர்க்கையிலிருந்து தெய்வத்தால் பிரிக்கப்பட்டு அதனால் வருந்தும் நமக்கு கோகுலத்துப் பெரியோர்களும் பந்துக்களும் என்ன செய்துவிடுவார்கள் ?

39. 30. எந்தக் கிருஷ்ணன் ஸாயங்காலத்தில் பலராமனுடன் கோபர்களால் சூழப் பசுக்களின் குளம்படித் தூசிபடிந்த முன்மயிருடனும் வனமாலையுடனும் புல்லாங் குழலை ஊதிக்கொண்டு கோகுலத்தில் புகும்போது புன்னகையுடன்கூடிய கடைக்கண் பார்வையால் நமது மனதை அபஹரிக்கின்றாரோ அப்படிப்பட்ட கிருஷ்ணனில்லாமல் நாம் எப்படி உயிருடனிருப்போம் ?

ஸ்ரீ சுகர் கூறியது—

39. 31. இப்படிப் பேசுகிறவர்களும் கிருஷ்ணனிடத்திலேயே முழுதும் லயித்த மனமுடையவர்களுமான கோகுல ஸ்திரீகள் வெட்கத்தைவிட்டு உச்சஸ்வரத்தில் 'கோவிந்தா, தாமோதரா, மாதவா' என்று கதறினார்கள்.

---

39. 27. अनार्यधीरेष । பா. பே.

स्त्रीणामेवं रुदन्तीना-मुदिते सवितर्यथ ।
अक्रूर-श्चोदयामास कृतमैत्रादिको रथम् ॥ ३९.३२ ॥

तास्तथा तप्यतीर्वीक्ष्य स्वप्रस्थाने यदूत्तमः ।
सान्त्वयामास सप्रेमैरायास्य इति दौत्यकैः ॥ ३९.३५ ॥

यावदालक्ष्यते केतु-र्यावद् रेणू रथस्य च ।
अनुप्रस्थापितात्मानो लेख्यानीवोपलक्षिताः ॥ ३९.३६ ॥

ता निराशा निववृतु-र्गोविन्दविनिवर्तने ।
विशोका अहनी निन्यु-र्गायन्त्यः प्रियचेष्टितम् ॥ ३९.३७ ॥

भगवानपि संप्राप्तो रामाक्रूरयुतो नृप ।
रथेन वायुवेगेन कालिंदीमघनाशिनीम् ॥ ३९.३८ ॥

तत्रोपस्पृश्य पानीयं पीत्वा मृष्टं मणिप्रभम् ।
वृक्षषण्डमुपव्रज्य सरामो रथमाविशत् ॥ ३९.३९ ॥

---

39. 32. இவ்வாறு கோபஸ்திரீகள் கதறிக்கொண்டிருந்தபோதிலும் சூரியன் உதிக்கவே அக்ரூரர் ஸந்தியாவந்தனுதிகளை முடித்துக்கொண்டு தேரில் ஏறி ஓட்டலானுர்.

39. 35. யது சிரேஷ்டனுன கிருஷ்ணன் தான் போவதற்கு வருத்தப்படும் கோபிகளைப் பார்த்து "நான் சீக்கிரம் வருகிறேன்" என்று தூது சொல்லிச் சமாதானப் படுத்தினுர்.

39. 36. தேரின் கொடிகளும் புழுதியும் கண்ணுக்குத் தெரிகிறவரை ஸ்ரீ கிருஷ்ணனைத் தொடர்ந்து தங்கள் உள்ளத்தையும் அவருடன் அனுப்பிவிட்டு சித்திரப் பாவைபோல் நின்றுர்கள்.

39. 37. பிறகு கோபஸ்திரீகள் கிருஷ்ணன் இனித் திரும்பிவருவார் என்ற ஆசையையொழித்து வீடு சென்றுர்கள். பிரேமைக்குரிய கிருஷ்ணனுடைய லீலைகளைப் பாடிக்கொண்டு அதனுல் ஒருவாறு வருத்தத்தை சாந்தப்படுத்திக்கொண்டு நாட்களைக் கழித்தார்கள்.

39. 38. அரசே! பகவான் வாயுவேகமுடைய தேரிலேறி பலராமருடனும் அக்ரூரருடனும் பாவத்தைப் போக்கும் யமுனையை யடைந்தார்.

39. 39. அங்கு கைகால்களைக் கழுவிக்கொண்டு ரத்னம்போல் பிரகாசிப்பதும் இனியதுமான தீர்த்தத்தைப் பானம் செய்துவிட்டுப் பலராமருடன் சோலையினுட் சென்று தேரில் ஏறிக்கொண்டார்.

---

39. 32. **மைத்ராதிகம்** :—மைத்ரம் மித்ரதைவத்யம் ஸந்த்யோபாஸனம் **ததாதிகம் கர்மக்ருதம்** யேன ஸ: ।

अक्रूर-स्तावुपामन्त्र्य निवेश्य च रथोपरि ।
कालिन्द्या ह्रदमागत्य स्नानं विधिवदाचरत् ॥ ३९.४० ॥

निमज्ज्य तस्मिन् सलिले जपन् ब्रह्म सनातनम् ।
तावेव ददृशेऽक्रूरो रामकृष्णौ समन्वितौ ॥ ३९.४१ ॥

तौ रथस्थौ कथमिह सुतावानकदुन्दुभेः ।
तर्हि स्वित् स्यन्दने न स्त इत्युन्मज्ज्य व्यचष्ट सः ॥ ३९.४२ ॥

तत्रापि च यथा पूर्व-मासीनौ पुनरेव सः ।
न्यमज्जद् दर्शनं यन्मे मृषा किं सलिले तयोः ॥ ३९.४३ ॥

भूयस्तत्रापि सोऽद्राक्षीत् स्तूयमान-महीश्वरम् ।
सिद्ध-चारणगन्धर्वै-रसुरै-र्नतकंधरैः ॥ ३९.४४ ॥

तस्योत्सङ्गे घनश्यामं पीतकौशेयवाससम् ।
पुरुषं चतुर्भुजं शान्तं पद्मपत्रारुणेक्षणम् ॥ ३९.४६ ॥

गिरा गद्गदयास्तौषीत् सत्त्व-मालंब्य सात्वतः ।
प्रणम्य मूर्ध्नावहितः कृतांजलिपुटः शनैः ॥ ३९.५७ ॥

---

39. 40. அக்ரூரர் அவர்களைத் தேரில் உட்காரவைத்துவிட்டு விடைபெற்றுக் கொண்டு யமுனையின் மடுவிற்குச் சென்று விதிப்படி ஸ்நானம் செய்தார்.

39. 41. அக்ரூரர் ஸநாதனமான வேத மந்திரங்களை ஜபித்துக்கொண்டு ஜலத்தில் மூழ்கி அங்கே பலராமனும் கிருஷ்ணனும் சேர்ந்திருக்கக் கண்டார்.

39. 42-43. 'தேரிலிருந்த அந்த வசுதேவ புத்திரர்கள் இங்கே எப்படி வந்தார்கள்? இங்கு வந்திருந்தால் தேரில் இருக்கமுடியாதே' என்று முழுகியெழுந்து தேரிலும் முன்போலவே பலராமனும் கிருஷ்ணனும் இருக்கக் கண்டார். 'நீரினுள் எனக்கு ஏற்பட்ட அவர்களுடைய தரிசனம் பொய்யா?' என்று அவர் மீண்டும் முழுகினார்.

39. 44-46. அவர் அங்கு மறுபடியும் சித்தர்களாலும் சாரணர்களாலும் கந்தர்வர்களாலும் அசுரர்களாலும் தலைவணங்கித் துதிக்கப்பெற்ற ஆதிசேஷனையும் மேகசியாமள வர்ணரும் அவரது மடியில் மஞ்சட்பட்டாடையுடுத்தியவரும் தாமரையிதழ்போல் சிவந்த கண்களையுடையவரும் நான்கு புஜங்களுடன் சாந்தஸ்வரூபியாய் விளங்கியவருமான புருஷோத்தமனையும் கண்டார்.

39. 57. (அதிசயத்தால் மெய்மறந்த) அந்தப் பரமபக்தர் மெதுவாகத் தன் நிலையையடைந்து தலைவணங்கிக் கைகூப்பிக்கொண்டு ஒருமைப்பட்ட மனத்துடன் தழுதழுத்த குரலில் துதிக்கலானார்.

---

39. 41. तावेवावपश्यत् । 39. 44. महेश्वरम् ।

अक्रूर उवाच—

भगवञ्जीवलोकोऽयं मोहित-स्तवमायया।
अहं ममेत्यसद्ग्राहो भ्राम्यते कर्मवर्त्मसु ॥ ४०.२३ ॥

अहं चात्मात्मजागार-दारार्थ-स्वजनादिषु।
भ्रमामि स्वप्न-कल्पेषु मूढः सत्यधिया विभो ॥ ४०.२४ ॥

नमो विज्ञान-मात्राय सर्वप्रत्यय-हेतवे।
पुरुषेशप्रधानाय ब्रह्मणेऽनन्तशक्तये ॥ ४०.२९ ॥

नमस्ते वासुदेवाय सर्वभूतक्षयाय च।
हृषीकेश नमस्तुभ्यं प्रपन्नं पाहि मां प्रभो ॥ ४०.३० ॥

श्रीशुक उवाच—

स्तुवतस्तस्य भगवन् दर्शयित्वा जले वपुः।
भूयः समाहरत् कृष्णो नटो नाट्यमिवात्मनः ॥ ४१.१ ॥

सोऽपि चान्तर्हितं वीक्ष्य जला-दुन्मज्ज्य सत्वरः।
कृत्वा चावश्यकं सर्वं विस्मितो रथमागमत् ॥ ४१.२ ॥

அக்ரூரர் கூறியது—

40. 23. பகவானே! எல்லா ஜீவராசிகளும் உமது மாயைக்குள்ளாகி 'நான் எனது' என்ற துரபிமானத்தால் கவரப்பட்டு கர்ம வழிகளில் ஆட்டுவிக்கப்படுகின்றார்கள்.

40. 24. பிரபுவே! மூடனாகிய நானும் கனவிற்கொப்பான உடல், மக்கள், மனை, மனைவி, பொருள், சுற்றம் என்ற இவற்றை உண்மையெனக்கொண்டு உழலுகின்றேன்.

40. 29. அறிவே வடிவாகியவரும் அறிவிற்கெல்லாம் அடிப்படையாயிருப்பவரும் புருஷனாகவும் ஈசுவரனாகவும் பிரகிருதியாகவும் விளங்குபவரும் அளவுகடந்த மாயா சக்தியுடையவரும் எங்கும் நிறைந்தவருமான உமக்கு நமஸ்காரம்.

40. 30. சித்தத்திற்கு அதிஷ்டானரான வாசுதேவராகவும், எல்லாப் பிராணிகளுக்கும் ஒடுங்குமிடமான அஹங்காரத்தில் நிலைபெறும் ஸங்கர்ஷணராகவும் விளங்கும் உமக்கு நமஸ்காரம். இந்திரியங்களையாளும் பிரத்யும்னராகவும் அநிருத்தராகவும் விளங்கும் உமக்கு நமஸ்காரம். உம்மைச் சரணடைந்த என்னைக் காத்தருள வேண்டும்.

ஸ்ரீ சுகர் கூறியது:-

41. 1. பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் நீரில் தனது ஸ்வரூபத்தைக் காண்பித்துவிட்டு அக்ரூரர் துதித்துக்கொண்டிருக்கும்போதே மறுபடியும் ஒரு நடிகன் தன் நடிப்பை மறைப்பதுபோல் மறைத்துவிட்டார்.

41. 2. கிருஷ்ணன் மறைந்ததைக்கண்டு அக்ரூரர் நீரிலிருந்து வெளியேறி விரைவில் அவசியமான அனுஷ்டானமனைத்தையும் முடித்துக்கொண்டு ஆச்சரியம் மிக்கவராய்த் தேருக்கு வந்து சேர்ந்தார்.

तमपृच्छद्धृषीकेशः किं ते दृष्टमिवाद्भुतम् ।
भूमौ वियति तोये वा तथा त्वां लक्षयामहे ॥ ४१.३ ॥

अक्रूर उवाच—

अद्भुतानीह यावन्ति भूमौ वियति वा जले ।
त्वयि विश्वात्मके तानि किं मेऽदृष्टं विपश्यतः ॥ ४१.४ ॥

यत्राद्भुतानि सर्वाणि भूमौ वियति वा जले ।
तं त्वानुपश्यतो ब्रह्मन् किं मे दृष्टमिहाद्भुतम् ॥ ४१.५ ॥

इत्युक्त्वा चोदयामास स्यन्दनं गान्दिनी-सुतः ।
मथुरा-मनयद् रामं कृष्णं चैव दिनात्यये ॥ ४१.६ ॥

तावद् व्रजौकस-स्तत्र नन्दगोपादयोऽग्रतः ।
पुरोपवनमासाद्य प्रतीक्षन्तोऽवतस्थिरे ॥ ४१.८ ॥

तान् समेत्याह भगवानक्रूरं जगदीश्वरः ।
गृहीत्वा पाणिना पाणिं प्रश्रितं प्रहसन्निव ॥ ४१.९ ॥

---

41. 3. 'உம்மால் பூமியிலாவது ஆகாயத்திலாவது ஜலத்திலாவது ஏதேனும் அதிசயம் காணப்பட்டதா? உம்மைப் பார்த்தால் அப்படி எங்களுக்குத் தோன்றுகிறது' என்று கிருஷ்ணன் அவரைக் கேட்டார்.

அக்ரூரர் கூறியது—

41. 4. 'இங்கே பூமியிலோ ஆகாயத்திலோ ஜலத்திலோ எவ்வளவு அதிசயங்கள் உண்டோ அவையனைத்தும் ஸர்வஸ்வரூபியான உம்மிடத்திலிருக்கின்றன. உம்மைப் பார்க்கும் என்னால் பார்க்கப்படாததுதான் என்ன?

41. 5. பிரம்மஸ்வரூபியே! பூமியிலும் ஆகாயத்திலும் ஜலத்திலும் உள்ள அதிசயங்களெல்லாம் எவரிடம் உறைகின்றனவோ அப்படிப்பட்ட உம்மைப் பார்க்கும் என்னால் உமக்கு வேறாக இவ்வுலகில் பார்க்கப்பட்ட அதிசயம்தான் என்ன இருக்கிறது?

41. 6. இவ்விதம் சொல்லிவிட்டு அக்ரூரர் தேரை ஓட்டினார். பலராமனையும் கிருஷ்ணனையும் பகலின் முடிவில் மதுராபுரிக்குள் அழைத்துச் சென்றார்.

41. 8. அப்போது நந்தர் முதலியகோபர்கள் முந்தியே அங்கு வந்து நகருக்கருகிலிருந்த ஒரு உபவனத்தில் தங்கி அவர்களுடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டு இருந்தார்கள்.

41. 9. ஜகதீசுவரராகிய கிருஷ்ண பகவான் அவர்களைச் சேர்ந்ததும் தமது கையால் அக்ரூரருடைய கையைப் பிடித்துக்கொண்டு தலைவணங்கி நின்ற அக்ரூரரைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்.

भवान् प्रविशतामग्रे सहयानः पुरीं गृहम् ।
वयं त्विहावमुच्याथ ततो द्रक्ष्यामहे पुरीम् ॥ ४१.१० ॥

अक्रूर उवाच—
नाहं भवद्भ्यां रहितः प्रवेक्ष्ये मथुरां प्रभो ।
त्यक्तुं नार्हसि मां नाथ भक्तं ते भक्तवत्सल ॥ ४१.११ ॥

पुनीहि पादरजसा गृहान् नो गृहमेधिनाम् ।
यच्छौचेनानुतृप्यन्ति पितरः साग्नयः सुराः ॥ ४१.१३ ॥

श्रीभगवानुवाच—
आयास्ये भवतो गेह-महमार्य-समन्वितः ।
यदुचक्रद्रुहं हत्वा वितरिष्ये सुहृत्प्रियम् ॥ ४१.१७ ॥

श्रीशुक उवाच—
एवमुक्तो भगवता सोऽक्रूरो विमना इव ।
पुरीं प्रविष्टः कंसाय कर्मावेद्य गृहं ययौ ॥ ४१.१८ ॥

---

41. 10. 'தாங்கள் முதலில் தேருடன் நகரம் சென்று வீடு சேருங்கள். நாங்களும் இங்கே வண்டிகளை அவிழ்த்துவிட்டு இளைப்பாறிவிட்டுப் பின்பு நகரத்தைப் பார்க்கின்றோம்.'

அக்ரூரர் கூறியது—

41. 11. 'பிரபுவே! நான் உங்களைவிட்டு மதுராபுரியில் புகமாட்டேன். அடியார்களுக்கினியவராகிய நாதா! உமது பக்தனாகிய என்னைக் கைவிடக்கூடாது.

41. 13. 'உமது பாததூளியால், கிருஹஸ்தர்களான எங்களுடைய வீடுகளைப் பாவனமாக்குங்கள். உம்முடைய பாததீர்த்தத்தால் பிதிருக்களும் அக்னிகளுடன் கூடிய தேவர்களும் எப்பொழுதும் திருப்தியடைவார்கள்.'

ஸ்ரீ பகவான் கூறியது—

41. 17. 'என் தமயனுடன் நான் பிற்பாடு உமது வீட்டிற்கு வருகிறேன். யாதவர் கூட்டத்திற்குத் துரோகியாகிய கம்ஸனைக் கொன்று உற்றார்க்கு முதலில் பிரியத்தைச் செய்ய விரும்புகிறேன்.'

ஸ்ரீ சுகர் கூறியது—

41. 18. பகவானால் இவ்வாறு கூறப்பட்ட அக்ரூரர் திருப்தியில்லாமலே நகரத்துட் சென்று கம்ஸனிடம் தான் செய்ததைத் தெரிவித்துவிட்டு வீடு சென்றார்.

---

41. 11. मथुरापुरीम् ।

अथापराह्णे भगवान् कृष्णः संकर्षणान्वितः ।
मथुरां प्राविशद्गोपै-र्दिदृक्षुः परिवारितः ॥ ४१.१९ ॥

इति श्रीमद्भागवते दशमस्कन्धे
मथुराप्रवेशो नाम
एकचत्वरिंशोऽध्यायः ॥

---

41. 19. பிறகு மாலை நேரம் வந்ததும் கிருஷ்ணபகவான் பலராமருடன் கோபர்கள் பின்தொடரப் பட்டணத்தைப் பார்க்க ஆவல் கொண்டு மதுராபுரியில் பிரவேசித்தார்.

இங்ஙனம் ஸ்ரீமத்பாகவதம் தசமஸ்கந்தத்தில் மதுரைப் பிரவேசம் என்று
பெயர் பெற்ற நாற்பத்தொராவது
அத்தியாயம் முற்றும்.

---

41. 19. வழியில் துணிமூட்டையை எடுத்துக்கொண்டு கம்ஸனுடைய வண்ணான் ஸுதுர்மதன் வந்தான். பகவான் வேடிக்கையாக 'அந்த வஸ்திரங்களை எங்களுக்குக் கொடு: நாங்கள் அதை உடுத்துக்கொள்ளத் தகுந்தவர்கள்தான்' என்றார். அவன், 'முட்டாள்களே! பட்டிக்காட்டார்களாகிய நீங்கள் இப்படிப்பட்ட வஸ்திரம் கட்டித்தான் வழக்கமோ? அரசன் துணிகள் இவை. நீங்கள் விரும்பியதை அவர் கேட்டாலும் கட்டியடிப்பார். ஓடிப்போங்கள்' என்றான். பகவான் மரியாதைகெட்ட அவனை ஹதம் பண்ணி நல்ல வஸ்திரங்களை கோபர்களுக்குக் கொடுத்து மாமன் சொத்து மருமகனுக்கென்று தாமும் அணிந்துகொண்டு மிகுதியை எறிந்துவிட்டார்.

இதற்குப்பின் பக்தனான ஒரு வியாபாரி வந்து பலவித உடைகளும் ஆபரணங்களும் ஸம்மானமாக அளித்தான். அவனுக்கு ஸகல ஸௌபாக்கியங்களையும் அளித்தார்.

பின்பு ஸுதாமா என்னும் ஒரு மாலைகட்டியின் வீட்டை அடைந்து அவன் கொடுத்த சந்தனம் மாலை முதலியவற்றால் அலங்கரிக்கப்பெற்று அவனுடைய பக்தியை மெச்சி அவனுக்கும் எல்லா நன்மைகளையும் அருளினார்.

कंसवधः

श्रीशुक उवाच—

अथ व्रजन् राजपथेन माधवः स्त्रियं गृहीतांग-विलेपभाजनाम् ।
विलोक्य कुब्जां युवतीं वराननां पप्रच्छ यान्तीं प्रहसन् रसप्रदः ॥ ४२.१ ॥

का त्वं वरोर्वेतदु ह्यनुलेपनं कस्यांगने वा कथयस्व साधु नः ।
देह्यावयो-रंगविलेप-मुत्तमं श्रेयस्ततस्ते नचिराद् भविष्यति ॥ ४२.२ ॥

सैरन्ध्र्युवाच—

दास्यस्म्यहं सुन्दर कंस-संमता त्रिवक्रनामा ह्यनुलेप-कर्मणि ।
मद्भावितं भोजपते-रतिप्रियं विना युवां कोऽन्यतम-स्तदर्हति ॥ ४२.३ ॥

श्रीशुक उवाच—

रूप-पेशल-माधुर्य-हसितालाप-वीक्षितैः ।
धर्षितात्मा ददौ सान्द्र-मुभयोरनुलेपनम् ॥ ४२.४ ॥

प्रसन्नो भगवान् कुब्जां त्रिवक्रां रुचिराननाम् ।
ऋज्वीं कर्तुं मनश्चक्रे दर्शयन् दर्शने फलम् ॥ ४२.६ ॥

---

26. மதுரா லீலை (1)

கம்ஸவதம்

ஸ்ரீ சுகர் கூறியது—

42. 1. ஆனந்தத்தையளிக்கும் கிருஷ்ணன் ராஜவீதி வழியாகச் செல்லுகையில் பூசிக்கொள்ளும் வாஸனைச் சந்தனப் பாத்திரத்துடன் அவ்வழியே செல்லும் ஒரு இளம் பெண் கூனியாகவும் அழகிய முகம் படைத்தவளாகவும் இருக்கக் கண்டு புன்முறுவலுடன் அவளைப் பின்வருமாறு வினவினார்.

42. 2. 'அழகிய துடைகளைப் படைத்த பெண்ணே! நீயார்? இந்த வாஸனைப் பூச்சு யாருக்கு? எங்களுக்கு உண்மையைக் கூறு. எங்களிருவருக்கும் சிறந்த அந்த வாஸனைப் பூச்சைக் கொடு. அதனால் உனக்கு உயர் நலன் விரைவில் உண்டாகும்.'

ஸைரந்திரி கூறியது—

42. 3. 'அழகிய வடிவினரே! திரிவக்ரை என்பது என் பெயர்; சந்தனப் பூச்சுத் தயாரிக்கும் பணியில் நான் கம்ஸனுக்குப் பிரியமான வேலைக்காரி. போஜ ராஜனுக்கு மிகப் பிரியமாக என்னால் தயாரிக்கப்பட்ட அப்பூச்சிற்கு உங்களிருவரைக் காட்டிலும் வேறு யார்தான் தகுதியுடையவர்கள்?'

ஸ்ரீ சுகர் கூறியது—

42. 4. வடிவழகு, மிருதுத்தன்மை, புன்னகை, பேச்சு, கண்ணோட்டம் இவைகளால் மதிமயங்கி இருவருக்கும் நிறைய வாஸனைப் பூச்சைக் கொடுத்தாள்.

42. 6. அதனால் மகிழ்ச்சியடைந்த பகவான் தமது தரிசனத்தின் பலனைக் காண்பிப்பவராய் அழகிய முகம்படைத்தவளும் மூன்று கோணல் உடையவளுமான அக்கூனியைக் கூனில்லாமற் செய்யத் திருவுளம் கொண்டார்.

पद्भ्या-माक्रम्य प्रपदे द्व्यंगुल्युत्तान-पाणिना ।
प्रगृह्य चुबुकेऽध्यात्ममुदनीनमदच्युतः ॥ ४२.७ ॥

सा तदर्जु-समानांगी बृहच्छ्रोणि-पयोधरा ।
मुकुन्दस्पर्शनात् सद्यो बभूव प्रमदोत्तमा ॥ ४२.८ ॥

ततः पौरान् पृच्छमानो धनुषः स्थान-मच्युतः ।
तस्मिन् प्रविष्टो ददृशे धनुरैन्द्रमिवाद्भुतम् ॥ ४२.१५ ॥

पुरुषै-र्बहुभि-र्गुप्त-मर्चितं परमर्द्धिमत् ।
वार्यमाणो नृभिः कृष्णः प्रसह्य धनुराददे ॥ ४२.१६ ॥

करेण वामेन सलीलमुद्धृतं सज्यं च कृत्वा निमिषेण पश्यताम् ।
नृणां विकृष्य प्रबभंज्ञ मध्यतो यथेक्षुदण्डं मदकर्युरुक्रमः ॥ ४२.१७ ॥

---

42. 7. கிருஷ்ணன் தமது இருபாதங்களால் அவளுடைய முன்கால்களை மிதித்துக்கொண்டு இரண்டு விரல்கள் உயர்ந்த கையால் முகவாய்க்கட்டையைப் பிடித்துக்கொண்டு உடலை நிமிர்த்தினார்.

42. 8. முகுந்தர் கைபட்ட அப்போதே அக்கூனி கூன்நீங்கி நேரான அங்கங்களும் பெருத்த நிதம்பமும் ஸ்தனங்களும் உடைய சிறந்த பெண்மணியாக ஆனாள். (பின்பு அவள் கிருஷ்ணனைத் தன் வீட்டிற்கு அழைக்க அவர் தான் வந்த காரியம் முடிந்தபின் வருவதாய் வாக்களித்தார்.)

42. 15. பிறகு கிருஷ்ணன் ஊர்மக்களிடம் தனுர்யாக சாலையைப்பற்றிக் கேட்டுக்கொண்டு அவ்விடத்தையடைந்து இந்திரனுடைய வில் போன்ற ஒரு அற்புதமான வில்லைக் கண்ணுற்றார்.

42. 16. பல காவற்காரர்களால் ரக்ஷிக்கப்பட்டும் பூஜிக்கப்பட்டும் சிறந்த அலங்காரங்களுடன் விளங்கிய அவ்வில்லை அங்கிருந்த ஆட்களால் தடுக்கப்பட்டும் பலாத்காரமாக எடுத்தார்.

42. 17. பராக்கிரமம் மிகுந்த அவர் விளையாட்டாக இடது கையால் எடுத்த அவ்வில்லை நாணேற்றி எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே ஒரு நொடியில் இழுத்து ஒரு மதயானை கரும்புக் கழியை முறிப்பதுபோல் நடுவில் முறித்தார். (பின்பு காவற்காரர்கள் எதிர்க்கவே அவர்களை வதம் செய்துவிட்டு பலராமரும் கிருஷ்ணனும் கோபர்களிருந்த உபவனத்திற்குத் திரும்பிப்போய் இரவைக் கழித்தனர்.)

---

42. 7. ஒ. (சித்தஸ்தாம் ருஜு‑தா-மத ப்ரதயிதும் காத்ரேபி தஸ்யா: ஸ்புடம்) அவளுடைய மனதிலிருக்கும் நேர்மையைச் சரீரத்திலும் தெரிவிப்பதற்கென்றே அவளை உயர்த்தினார். —நாராயணீயம் 74. 45.

कंसस्तु धनुषो भंगं रक्षिणां स्वबलस्य च ।
वधं निशम्य गोविन्द-राम-विक्रीडितं परम् ॥ ४२.२६ ॥

दीर्घ-प्रजागरो भीतो दुर्निमित्तानि दुर्मतिः ।
बहून्यचष्टोभयथा मृत्योर्दौत्यकराणि च ॥ ४२.२७ ॥

अदर्शनं स्वशिरसः प्रतिरूपे च सत्यपि ।
असत्यपि द्वितीये च द्वैरूप्यं ज्योतिषां तथा ॥ ४२.२८ ॥

स्वप्ने प्रेत-परिष्वंगः खरयानं विषादनम् ।
यायान्नलदमाल्येक-स्तैलाभ्यक्तो दिगंबरः ॥ ४२.३० ॥

अन्यानि चेत्थं भूतानि स्वप्नजागरितानि च ।
पश्यन् मरण-सन्त्रस्तो निद्रां लेभे न चिन्तया ॥ ४२.३१ ॥

व्युष्टायां निशि कौरव्य सूर्ये चाद्भ्यः समुत्थिते ।
कारयामास वै कंसो मल्लक्रीडा-महोत्सवम् ॥ ४२.३२ ॥

---

42. 26-27. பலராமனும் கிருஷ்ணனும் விளையாட்டாக வில்லை முறித்ததையும் தனது ஆட்கள் கொல்லப்பட்டதையும் கேட்டு மதிகெட்ட கம்ஸன் பயமடைந்து தூக்கம் பிடிக்காதவனுய்க் கனவு நனவாகிய இருநிலைகளிலும் மரணத்தைக் குறிக்கின்ற பல துர்நிமித்தங்களைக் கண்டான்.

42. 28. பிரதிபிம்பத்தில் தனக்கு இருந்த தலையைக் காணவில்லை; சந்திரசூரிய ஜோதிகளில், இல்லாத இரட்டிப்பான ரூபத்தைக் கண்டான்.

42. 30. சவத்தைத் தழுவுதல், கழுதைச் சவாரி, விஷம் உண்ணுதல், எண்ணெய் தேய்த்துக்கொண்டு இடுப்பில் துணியில்லாமல் செம்பருத்தி மாலையணிந்து தனியாகச் செல்வது போன்றவற்றைக் கனவில் கண்டான்.

42. 31. இன்னும் இதுபோன்ற வேறு அபசகுனங்களையும் கனவிலும் நனவிலும் கண்டு மரணத்திற்கஞ்சிக் கவலையால் தூக்கத்தையடையவில்லை.

42. 32. குருகுலத்தோனே! அன்றிரவு கழிந்து சூரியன் ஸமுத்திரத்திலிருந்து வெளிக்கிளம்பியதும் கம்ஸன் மல்யுத்தத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வித்தான்.

---

42. 31. ஒ. தருக்கிலாளுகித் தான் தீங்கு நினைந்த கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்ற நெடுமாலே. —திருப்பாவை

---

42. 28. प्रतिरूपेषु सत्स्वपि । பா. பே.

कंसः परिवृतोऽमात्यै राजमञ्च उपाविशत् ।
मण्डलेश्वर-मध्यस्थो हृदयेन विदूयता ॥ ४२.३५ ॥

चाणूरो मुष्टिकः कूटः शलस्तोशल एव च ।
त आसेदु-रुपस्थानं वल्गुवाद्य-प्रहर्षिताः ॥ ४२.३७ ॥

नन्दगोपादयो गोपा भोजराज-समाहुताः ।
निवेदितोपायनास्ते एकस्मिन् मञ्च आविशन् ॥ ४२.३८ ॥

अथ कृष्णश्च रामश्च कृतशौचौ परन्तप ।
मल्लदुन्दुभि-निर्घोषं श्रुत्वा द्रष्टुमुपेयतुः ॥ ४३.१ ॥

रंगद्वारं समासाद्य तस्मिन् नागमवस्थितम् ।
अपश्यत् कुवलयापीडं कृष्णोऽम्बष्ठप्रचोदितम् ॥ ४३.२ ॥

करीन्द्र-स्तमभिद्रुत्य करेण तरसाग्रहीत् ।
कराद्विगलितः सोऽमुं निहत्यांघ्रिष्वलीयत ॥ ४३.६ ॥

निगृह्य पाणिना हस्तं पातयामास भूतले ।
पतितस्य पदाऽऽक्रम्य मृगेन्द्र इव लीलया ।
दन्तमुत्पाट्य तेनेभं हस्तिपांश्चाहनद्धरिः ॥ ४३.१४ ॥

---

42. 35. கம்ஸன் மந்திரிகளால் சூழப்பெற்று மண்டலேசுவரர்களின் நடுவில் மனத்தில் கவலையுடன் அரசபீடத்தில் வீற்றிருந்தான்.

42. 37. சாணூரன், முஷ்டிகன், கூடன், சலன், தோசலன் என்ற மல்லர்களும் சிறந்த வாத்தியகோஷத்தால் மகிழ்வடைந்து அரங்கத்தை அடைந்தார்கள்.

42. 38. கம்ஸனால் அழைக்கப்பட்டிருந்த நந்தர் முதலிய கோபர்களும் காணிக்கையைச் செலுத்திவிட்டு ஒரு மேடையில் உட்கார்ந்தார்கள்.

43. 1. பகைவரைத் தவிக்கச் செய்வோனே! கிருஷ்ணனும் பலராமனும் ஸ்நானத்தை முடித்துக்கொண்டு மல்யுத்தத்திற்காக முழங்கும் துந்துபியைக்கேட்டு அதைக் காண்பதற்கு அங்கு வந்தார்கள்.

43. 2. அரங்க வாசலையடைந்து அங்கு யானைப்பாகனால் ஏவப்பட்டு நிற்கும் குவலயாபீடம் என்ற யானையைக் கிருஷ்ணன் பார்த்தார்.

43. 6. (யானைப்பாகனால் ஏவப்பட்டு) அச்சிறந்த யானை கிருஷ்ணனை எதிர்த்துச் சென்று விரைவில் துதிக்கையால் பிடித்துக்கொண்டது. துதிக்கையிலிருந்து நழுவி அதை அடித்துவிட்டு அதன் கால்களிடை அவர் ஒளிந்தார்.

43. 14. பின்பு தனது கையால் துதிக்கையைப் பிடித்து அதைத் தரையில் தள்ளினார். கிருஷ்ணன் ஒரு சிங்கம்போல் விளையாட்டாகவே கீழே விழுந்திருந்த அந்த யானையைத் தனது காலால் மிதித்துக்கொண்டு அதன் தந்தத்தைப் பிடுங்கி அதனாலேயே யானையையும் யானைப்பாகனையும் கொன்றார்.

वृतो गोपैः कतिपयै-र्बलदेवजनार्दनौ ।
रंगं विविशतु् राजन् गजदन्तवरायुधौ ॥ ४३.१६ ॥

मल्लाना-मशनि-र्नृणां नरवरः स्त्रीणां स्मरो मूर्तिमान्
गोपानां स्वजनोऽसतां क्षितिभुजां शास्ता स्वपित्रोः शिशुः ।
मृत्यु-र्भोजपते-र्विराडविदुषां तत्त्वं परं योगिनाम्
वृष्णीनां परदेवतेति विदितो रंगं गतः साग्रजः ॥ ४३.१७ ॥

निरीक्ष्य तावुत्तमपूरुषौ जना मंचस्थिता नागर राष्ट्रका नृप ।
प्रहर्ष-वेगोत्कलितेक्षणाननाः पपुर्न तृप्ता नयनैस्तदाननम् ॥ ४३.२० ॥

पिबन्त इव चक्षुर्भ्यां लिहन्त इव जिह्वया ।
जिघ्रन्त इव नासाभ्यां श्लिष्यन्त इव बाहुभिः ॥ ४३.२१ ॥

ऊचुः परस्परं ते वै यथादृष्टं यथा श्रुतम् ।
तद्रूपगुणमाधुर्य-प्रागल्भ्य-स्मारिता इव ॥ ४३.२२ ॥

---

43. 16. அரசே! யானையின் தந்தமாகிற சிறந்த ஆயுதத்தைத் தாங்கிக் கொண்டு பலராமனும் கிருஷ்ணனும் சில கோபர்கள் சூழ அரங்கத்திற் பிரவேசித்தார்கள்.

43. 17. தமயனுடன் அரங்கத்திற் புகுந்த பகவான் மல்லர்களுக்கு இடி போன்றவராகவும், மனிதர்களுக்குப் புருஷோத்தமராகவும், மாதர்களுக்கு மன்மதனே உருக்கொண்டவராகவும், கோபர்களுக்கு உறவினராகவும், கொடிய அரசர்களுக்கு தண்டனையளிப்பவராகவும், தம் பெற்றோர்க்குக் குழந்தையாகவும் கம்ஸனுக்கு யமனாகவும் அறிவிலிகளுக்கு அறிவிலியாகவும், யோகிகளுக்குப் பரதத்துவமாகவும், விருஷ்ணிகளுக்குச் சிறந்த தெய்வமாகவும் விளங்கினார்.

43. 20. அரசே! மேடைமீதிருந்த நகரத்தாரும் தேச மக்களும் அவ்வுத்தம புருஷர்களைப் பார்த்து மகிழ்ச்சி பொங்க மலர்ந்த கண்களால் அவருடைய முகத்தின் அழகைப் பருகித் திருப்தியடையவில்லை.

42. 21. கண்ணனைக் கண்களால் பருகுபவர்கள்போலும் நாவால் நக்குபவர்கள் போலும் மூக்கால் முகர்பவர்கள்போலும் புஜங்களால் தழுவுபவர்கள்போலும் அவர்கள் காணப்பட்டனர்.

43. 22. மேலும் காணப்பட்டதும் கேட்கப்பட்டதுமான அவர்களுடைய வடிவம் குணம் இனிமை திறமை ஆகியவற்றைப்பற்றி நினைவூட்டப்பெற்று அவர்கள் ஒருவருக்கொருவர் பின்வருமாறு பேசிக்கொண்டனர்.

---

43. 17. 'ரௌத்ரோऽத்புதச்ச ச்ருங்காரோ ஹாஸ்யம் வீரோ தயா ததா। பயானகச்ச பீபத்ஸ: சாந்தஸ்ஸப்ரேம பக்திக: ॥' அவிதுஷாம் விராட் விகல: அபர்யாப்தோ ராஜத இதி ததா। அனேன பீபத்ஸ உக்த: ॥ ச்ருங்காராதி ஸர்வரஸகதம்ப - மூர்த்திர்-பகவான் தத்த-தபிப்ராயானுஸாரேண பபௌ ந ஸாகல்யேன ॥

---

43. 20. तावुत्तमपूरुषौ तदा ।

एतौ भगवतस्साक्षाद्धरे-र्नारायणस्य हि ।
अवतीर्णा-विहांशेन वसुदेवस्य वेश्मनि ॥ ४३.२३ ॥

एष वै किल देवक्यां जातो नीतश्च गोकुलम् ।
कालमेतं वसन् गूढो ववृधे नन्दवेश्मनि ॥ ४३.२४ ॥

पूतनानेन नीतान्तं चक्रवातश्च दानवः ।
अर्जुनौ गुह्यकः केशी धेनुकोऽन्ये च तद्विधाः ॥ ४३.२५ ॥

जनेष्वेवं ब्रुवाणेषु तूर्येषु निनदत्सु च ।
कृष्णरामौ समाभाष्य चाणूरो वाक्यमब्रवीत् ॥ ४३.३१ ॥

हे नन्दसूनो हे राम भवन्तौ वीरसंमतौ ।
नियुद्धकुशलौ श्रुत्वा राज्ञाऽऽहूतौ दिदृक्षुणा ॥ ४३.३२ ॥

तस्माद् राज्ञः प्रियं यूयं वयं च करवामहे ।
भूतानि नः प्रसीदन्ति सर्वभूतमयो नृपः ॥ ४३.३५ ॥

---

43. 23. 'இவர்கள் ஹரி என்றும் நாராயணன் என்றும் சொல்லப்படும் ஸாக்ஷாத் பகவானுடைய அம்சமாக இவ்வுலகில் வசுதேவருடைய கிருஹத்தில் அவதாரம் செய்தவர்களன்றோ!

43. 24. 'இந்தக் கிருஷ்ணர் அல்லவோ தேவகியிடம் பிறந்து கோகுலத்திற்குக் கொண்டுபோகப்பட்டு இதுவரை நந்தகோபர் வீட்டில் ரகசியமாக வசித்துக்கொண்டு வளர்ந்தவர்.

43. 25. 'இவரால் பூதனை கொல்லப்பட்டாள். சுழல்காற்ருக வந்த அசுரனும் கொல்லப்பட்டான், மருதமரங்கள் வீழ்த்தப்பட்டன. தேனுகனும் கேசியும் சங்கசூடனும் இன்னும் அவர்களைப்போன்ற மற்றவர்களும் கொல்லப்பட்டனர்.'

43. 31. ஜனங்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் தூரிய வாத்தியங்கள் முழங்கவே, சாணூரன் கிருஷ்ணனையும் பலராமனையும் கூவியழைத்துப் பின்வருமாறு கூறினன்.

43. 32. 'நந்தகுமாரா! பலராமா! நீங்களிருவரும் புகழ்பெற்ற வீரர்கள், போரில் வல்லவர்கள் எனக் கேள்வியுற்று அதைப்பார்க்க விரும்பிய அரசனால் அழைக்கப்பட்டீர்கள்.

43. 35. 'ஆகையால் நாம் அரசனுக்குப் பிரியத்தைச் செய்வோம். அரசன் எல்லா ஜீவராசிகளின் வடிவாயிருப்பதால் எல்லா ஜீவராசிகளும் நம்மிடம் திருப்தியடையும்.

---

43. 24. स एष किल ।

श्रीभगवानुवाच—

बाला वयं तुल्यबलैः क्रीडिष्यामो यथोचितम् ।
भवेन्नियुद्धं माऽधर्मः स्पृशेन्मल्ल-सभासदः ॥ ४३.३८ ॥

चाणूर उवाच—

न बालो न किशोर-स्त्वं बलश्च बलिनां वरः ।
लीलयेभो हतो येन सहस्र-द्विप-सत्त्वभृत् ॥ ४३.३९ ॥

तस्माद्भवद्भ्यां बलिभि-र्योद्धव्यं नानयोऽत्र वै ।
मयि विक्रम वार्ष्णेय बलेन सह मुष्टिकः ॥ ४३.४० ॥

एवं चर्चित-संकल्पो भगवान् मधुसूदनः ।
आससादाथ चाणूरं मुष्टिकं रोहिणीसुतः ॥ ४४.१ ॥

हस्ताभ्यां हस्तयो-र्बद्ध्वा पद्भ्यामेव च पादयोः ।
विचकर्षतु-रन्योन्यं प्रसह्य विजिगीषया ॥ ४४.२ ॥

परिभ्रामण-विक्षेप-परिरंभावपातनैः ।
उत्सर्पणापसर्पणैश्चान्योन्यं प्रत्यरुन्धताम् ॥ ४४.४ ॥

ஸ்ரீ பகவான் கூறியது—

43. 38. 'நாங்கள் சிறுவர்கள். சமபலமுள்ளவர்களுடன் விளையாடுவோம். மல்யுத்தம் முறைப்படி நடக்கட்டும். மல்லசபையிலிருக்கும் மக்களை அதர்மம் அணுகக் கூடாது.'

சாணூரன் கூறியது—

43. 39. 'எவனால் ஆயிரம் யானை பலமுள்ள யானை விளையாட்டாகக் கொல்லப் பட்டதோ அப்படிப்பட்ட நீ பாலனுமல்ல, குழந்தையுமல்ல. பலராமனும் பலசாலிகளிற் சிறந்தவன்.

43. 40. 'ஆகையால் உங்களுடன் பலசாலிகள் யுத்தம் செய்வது பொருத்தமே. அதில் அநீதி ஏதும் இல்லை, கிருஷ்ணா! என்னிடம் உன் பராக்கிரமத்தைக் காட்டு. பலராமனுடன் முஷ்டிகன் (யுத்தம் செய்யட்டும்.)'

44. 1. இவ்விதம் சர்ச்சைக்குப்பின் முடிவுக்குவந்த பகவான் மதுஸூதனன் அப்போது சாணூரனை எதிர்த்தார். பலராமன் முஷ்டிகனை எதிர்த்தார்.

44. 2. ஒருவரையொருவர் ஜயிக்கவிரும்பி பலாத்காரமாகக் கைகளால் கைகளிலும் கால்களால் கால்களிலும் கட்டிக்கொண்டு இழுத்துக்கொண்டார்கள்.

44. 4. ஒருவரையொருவர் கையில் பிடித்துச் சுழற்றிக்கொண்டும், உந்தித்தள்ளிக் கொண்டும், இறுகக் கட்டிக்கொண்டும், கீழே தள்ளிக்கொண்டும், எதிர்த்தும் பின் வாங்கியும், வளைந்து வளைந்து யுத்தம் செய்தனர்.

---

43. 40. அனய:—அதர்ம: ।

तद् बलाबलवद्युद्धं समेताः सर्वयोषितः।
ऊचुः परस्परं राजन् सानुकंपा वरूथशः ॥ ४४.६ ॥

महानयं बताधर्म एषां राजसभासदाम्।
ये बलाबलवद्युद्धं राज्ञोऽन्विच्छन्ति पश्यतः ॥ ४४.७ ॥

धर्मव्यतिक्रमो ह्यस्य समाजस्य ध्रुवं भवेत्।
यत्राधर्मो समुत्तिष्ठेन्न स्थेयं तत्र कर्हिचित् ॥ ४४.९ ॥

एवं प्रभाषमाणासु स्त्रीषु योगेश्वरो हरिः।
शत्रुं हन्तुं मनश्चक्रे भगवान् भरतर्षभ ॥ ४४.१७ ॥

बाह्वोर्निगृह्य चाणूरं बहुशो भ्रामयन् हरिः।
भूपृष्ठे पोथयामास तरसा क्षीणजीवितम् ॥ ४४.२२ ॥

तथैव मुष्टिकः पूर्वं स्वमुष्ट्याभिहतेन वै।
बलभद्रेण बलिना तलेनाभिहतो भृशम् ॥ ४४-२४ ॥

---

44. 6. அரசே! கூட்டம் கூட்டமாயிருந்த மாதர்களெல்லாம் பலசாலிகளுக்கும் பலமில்லாதவர்களுக்கும் நடக்கும் அந்த யுத்தத்தைப் பார்த்து மனமிளகி ஒருவர்க்கொருவர் பின்வருமாறு பேசிக்கொண்டனர்.

44. 7. 'பலசாலிகளுக்கும் பலமில்லாதவர்களுக்கும் யுத்தம் ஏற்படுத்தி அதை அரசன் பார்க்க விரும்பினாலும் (தடுக்காமல்) தாங்களும் கூடிப்பார்க்க எவர்கள் விரும்புகிறார்களோ அப்படிப்பட்டவர்களடங்கிய அரசசபையார்க்கு இது பெரும் அதர்மமேயன்றோ ?

44. 9. 'இச்சபையோருக்கு தர்மத்தை மீறிய பாவம் உண்டாவது நிச்சயம். எவ்விடத்தில் அதர்மம் நிகழ்கிறதோ அங்கு ஒருபோதும் இருக்கக்கூடாது.'

44. 17. பரதசிரேஷ்டா! பெண்கள் இவ்விதம் பேசிக்கொண்டிருக்கையில், யோகீசுவரரும், துன்பத்தைத் துடைப்பவருமாகிய பகவான் சத்துருவைக் கொல்லத் தீர்மானம் செய்தார்.

44. 22. சாணூரனைக் கைகளால் இறுகப் பிடித்துக்கொண்டு பலமுறை சுழற்றி அவ்வேகத்தால் உயிரையிழந்த அவனைத் தரையில் அறைந்தார். ஆபரணங்களும் கேசமும் மாலைகளும் சிதறி இந்திரனுடைய கொடிமரம்போல் கீழே விழுந்தான்.

44. 24. அவ்விதமே முஷ்டிகனும் தனது முஷ்டியால் பலராமரைத் தாக்க பலசாலியான பலராமருடைய கைத்தலத்தால் நன்கு அறையப்பெற்றான்.

---

44. 6. सानुक्रोशा
44. 7. बलाबलयोर्युद्धं। பா. பே.

प्रवेपितः स रुधिर-मुद्वमन् मुखतोऽर्दितः।
व्यसुः पपातोर्व्युपस्थे वाताहत इवांघ्रिपः ॥ ४४.२५ ॥

जनाः प्रजहृषुः सर्वे कर्मणा रामकृष्णयोः।
ऋते कंसं विप्रमुख्याः साधवः साधु साध्विति ॥ ४४.३० ॥

हतेषु मल्लवर्येषु विद्रुतेषु च भोजराट्।
न्यवारयत् स्वतूर्याणि वाक्यं चेदमुवाच ह ॥ ४४.३१ ॥

निःसारयत दुर्वृत्तौ वसुदेवात्मजौ पुरात्।
धनं हरत गोपानां नन्दं बध्नीत दुर्मतिम् ॥ ४४.३२ ॥

वसुदेवस्तु दुर्मेधा हन्यतामाश्वसत्तमः।
उग्रसेनः पिता चापि सानुगः परपक्षगः ॥ ४४.३३ ॥

एवं विकत्थमाने वै कंसे प्रकुपितोऽव्ययः।
लघिम्नोत्पत्य तरसा मञ्चमुत्तुंग-मारुहत् ॥ ४४.३४ ॥

---

44. 25. அதனால் பீடிக்கப்பெற்ற அவன் மிகவும் நடுங்கி வாயினால் ரத்தத்தைக் கக்கிக்கொண்டு உயிரிழந்து பெருங்காற்றுந்திய மரம்போல் பூமியில் சாய்ந்தான்.

44. 30. பலராமரும் கிருஷ்ணனும் செய்த இச்செயல்களால் கம்ஸன் ஒருவன் நீங்கலாக, ஸாதுக்களான பிராம்மணர்கள் முதலிய எல்லா ஜனங்களும் 'நல்லது நல்லது' என்று சொல்லி மகிழ்ச்சியடைந்தார்கள்.

44. 31. மல்லர் தலைவர்கள் கொல்லப்பட்டும் மற்றவர்கள் பயந்தும் ஓடிப்போன பொழுது போஜராஜனாகிய கம்ஸன் தன்னருகில் முழங்கிய தூரிய வாத்தியங்களை நிறுத்தச்சொல்லிப் பின்வரும் வாக்கியத்தைச் சொன்னான்,

44. 32. 'கெட்ட நடத்தையுள்ள வசுதேவ புத்திரர்களை ஊரைவிட்டு விரட்டுங்கள். இடையர்களுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்யுங்கள். துர்ப்புத்தியுள்ள நந்தனைக் கட்டிப்போடுங்கள்.

44. 33. 'மிக்க அயோக்கியனும் கெட்ட புத்தியுடையவனுமாகிய வசுதேவனும் எதிரிகள் பக்கம் சேர்ந்த என் தந்தை உக்ரஸேனரும் பரிவாரங்களுடன் விரைவில் கொல்லப்படட்டும்.'

44. 34. இவ்விதம் கம்ஸன் பிதற்றிக்கொண்டிருக்கும்போதே அவனைப் பார்த்து மாறுபாடில்லாத கிருஷ்ணன் மிகவும் கோபங்கொண்டு எளிதில் துள்ளியெழுந்து விரைவில் மேடையில் குதித்தார்.

---

44. 34. **அவ்யய:** அச்ரம: | **லகிம்னா**-லாகவேன |

तमाविशन्त-मालोक्य मृत्यु-मात्मन आसनात्।
मनस्वी सहसोत्थाय जगृहे सोऽसि-चर्मणी ॥ ४४.३५ ॥

तं खड्गपाणिं विचरन्त-माशु श्येनं यथा दक्षिणसव्यमंबरे।
समग्रहीद् दुर्विषहोग्रतेजा यथोरगं ताक्ष्र्यसुतः प्रसह्य ॥ ४४.३६ ॥

प्रगृह्य केशेषु चलत्-किरीटं निपात्य रंगोपरि तुंगमंचात्।
तस्योपरिष्टात् स्वयमब्जनाभः पपात विश्वाश्रय आत्मतन्त्रः ॥ ४४.३७ ॥

तं संपरेतं विचकर्ष भूमौ हरिर्यथेभं जगतो विपश्यतः।
हाहेति शब्दः सुमहां-स्तदाभू-दुदीरितः सर्वजनै-र्नरेन्द्र ॥ ४४.३८ ॥

स नित्यदोद्विग्नधिया तमीश्वरं पिबन् वदन् वा विचरन् स्वपन् श्वसन्।
ददर्श चक्रायुधमग्रतो यस्तदेव रूपं दुरवाप-माप ॥ ४५.३९ ॥

राजयोषित आश्वास्य भगवांल्लोकभावनः।
यामाहु-र्लौकिकीं संस्थां हतानां समकारयत् ॥ ४४.४९ ॥

---

44. 35. தனக்கு யமனுக வந்த அந்தக் கிருஷ்ணனைப் பார்த்து தைரியமிழக்காத அந்தக் கம்ஸன் ஆஸனத்திலிருந்து சடக்கென எழுந்து வாளையும் கேடயத்தையும் எடுத்துக்கொண்டான்.

44. 39. ஆகாயத்திற் சுற்றும் பருந்துபோல் வாளுடன் இடசாரி வலசாரியாக விரைந்து சுற்றும் அவனைக் கட்டுக்கடங்காத பராக்கிரமமுடைய கிருஷ்ணன் கருடன் பாம்பைப் பிடிப்பதுபோல் வலுவாகப் பிடித்தார்.

44. 37. எல்லாம் தன்வயப்பட்டவரும் பத்மநாபருமாகிய கிருஷ்ணன் கிரீடம் குலுங்கும் கம்ஸனைத் தலைமயிரால் பிடித்து உயர்ந்த மேடைமீதிருந்து யுத்த பூமியில் தள்ளி விசுவரூப பாரத்துடன் அவன்மேல் குதித்தார்.

44. 38. அரசே! உயிரிழந்த கம்ஸனை அங்கிருந்த எல்லோரும் பார்க்க ஹரியானவர் ஒரு சிங்கம் யானையை இழுப்பதுபோல் தரையில் இழுத்தார். அப்போது எல்லா ஜனங்களாலும் ஆ! ஆ! என்று ஆரவாரம் எழுப்பப்பட்டது.

44. 39. அந்தக் கம்ஸன் எப்போதும் நடுங்கிய மனத்துடன் ஸர்வேசுவரரான கிருஷ்ணனைப் பானம் செய்யும்போதும், பேசும்போதும், நடக்கும்போதும், தூங்கும் போதும், மூச்சுவிடும்போதும் எதிரில் கண்டுகொண்டிருந்தமையாலும் அந்தச் சக்கர பாணியை (சாகுந்தருவாயில்) எதிரில் தரிசித்ததாலும் அடைதற்கரிய அவருடைய ஸ்வரூபத்தையடைந்தான்.

44. 49. உலகரக்ஷகரான பகவான் ராஜஸ்திரீகளை ஸமாதானப்படுத்திக் கொல்லப்பட்டவர்களுக்குப் பரலோகத்திற்கு வேண்டியதான எவ்விதக் கிரியைகள் விதிக்கப்பட்டுள்ளனவோ அவைகளைச் செய்வித்தார்.

---

44. 35. तमापतन्त-मालोक्य। 44. 38. कंसं परेतं।
44. 39. यतस्तदेव रूपं।

मातरं पितरं चैव मोचयित्वाथ बन्धनात् ।
कृष्णरामौ ववन्दाते शिरसाऽऽस्पृश्य पादयोः ॥ ४४.५० ॥

देवकी वसुदेवश्च विज्ञाय जगदीश्वरौ ।
कृतसंवंदनौ पुत्रौ सस्वजाते न शंकितौ ॥ ४४.५१ ॥

पितरावुपलब्धार्थौ विदित्वा पुरुषोत्तमः ।
मा भूदिति निजां मायां ततान जनमोहिनीम् ॥ ४५.१ ॥

उवाच पितरावेत्य साग्रजः सात्वतर्षभः ।
प्रश्रयावनतः प्रीणन्नंब तातेति सादरम् ॥ ४५.२ ॥

नास्मत्तो युवयो-स्तात नित्योत्कण्ठितयोरपि ।
बाल्य-पौगण्ड-कैशोराः पुत्राभ्या-मभवन् क्वचित् ॥ ४५.३ ॥

न लब्धो दैवहतयो-र्वासो नौ भवदन्तिके ।
यां बालाः पितृगेहस्था विन्दन्ते लालिता मुदम् ॥ ४५.४ ॥

---

44. 50. பின்னர் கிருஷ்ணனும் பலராமனும் தாய்தந்தையர்களைக் கட்டிலிருந்து விடுவித்து தலையால் அவர்கள் பாதங்களைத் தொட்டு வணங்கினார்கள்.

44. 51: தேவகியும் வசுதேவரும் தங்களை வணங்கிய குழந்தைகள் உலக நாயகர்கள் என்றறிந்தமையால் தயக்கமடைந்து தழுவிக்கொள்ளவில்லை.

45. 1. புருஷோத்தமன் தனது பெற்றோர்கள் தன்னை அறிந்து கொண்டதைக் கண்டு அது இப்போது கூடாதெனக் கருதி மக்களை மயக்கும் தனது மாயையை ஏவினார்.

45. 2. தமயனுடன்கூடி ஸ்ரீ கிருஷ்ணன் தலைவணங்கித் தாய்தந்தையரை யணுகி அவர்களை மகிழ்வித்து 'அம்மா! அப்பா!' என்று ஆதரவுடன் அழைத்தார்.

45. 3. 'அப்பா! எங்களைப் பற்றி நீங்கள் இடைவிடாது உருகிக்கொண்டிருந்த போதிலும் உங்களுக்குப் புத்திரர்களால் பால்யம் பௌகண்டம் கைசோரம் என்ற பருவங்களில் கிடைக்கக்கூடிய இன்பம் சிறிதும் ஏற்படவில்லை.

45. 4. 'பாக்கிய ஹீனர்களான எங்களுக்கும் உங்களருகில் வாசம் கிடைக்க வில்லை. பாலர்கள் தாய்தந்தைகளுடன் வீட்டிலிருந்துகொண்டு அவர்களால் கொஞ்சிக் குலாவப்பெற்று எந்த ஸந்தோஷத்தையடைவார்களோ அது அடையப்படவில்லை.

---

45. 3. பால்யம் 5 வயதுவரை; பௌகண்டம் 10 வயதுவரை; கைசோரம் 15 வயது வரை; யௌவனம் 15க்குமேல்.

45. 4. ஒ.

முந்தை நன்முறை யன்புடைமகளிர் முறைமுறைத் தந்தம் குறங்கிடை யிருத்தி
எந்தையே யெந்தன் குலப்பெருஞ்சுடரே! எழுமுகில் கணத்தொழில் கவரேறே!
உந்தையாவனென் றுரைப்ப நின் செங்கேழ் விரலினுங்கடைக் கண்ணினுங் காட்ட
நந்தன்பெற்றனன் நல்வினையில்லா நங்கள்கோன்வசு தேவன் பெற்றிலனே.
தண்ணந்தாமரைக் கண்ணனே கண்ணா! தவழ்ந்தெழுந்து தளர்ந்ததோர் நடையால்
மண்ணில் செம்பொடி யாடி வந்தென்றன் மார்பில்மன்னிடப் பெற்றிலேனந்தோ
வண்ணச் செஞ்சிறு கைவிரலனைத்தும் வாரிவாய்க்கொண்ட வடிசிலின் மிச்சில்
உண்ணப் பெற்றிலேன் ஒ! கொடுவினையேன் என்னையென்
செய்யப் பெற்றதெம்மோயே!

—குலசேகராழ்வார்

सर्वार्थ-संभवो देहो जनितः पोषितो यतः ।
न तयो-र्याति निर्वेशं पित्रो-र्मर्त्यः शतायुषा ॥ ४५.५ ॥

तत् क्षन्तु-मर्हथ-स्तात मातर्नौ परतन्त्रयोः ।
अकुर्वतोर्वां शुश्रूषां क्लिष्टयो-र्दुर्हृदा भृशम् ॥ ४५.९ ॥

इति मायामनुष्यस्य हरेर्विश्वात्मनो गिरा ।
मोहितावंक-मारोप्य परिष्वज्यायतु-र्मुदम् ॥ ४५.१० ॥

सिंचन्ता-वश्रुधाराभिः स्नेहपाशेन चावृतौ ।
न किंचिदूचतू राजन् बाष्पकण्ठौ विमोहितौ ॥ ४५.११ ॥

एवमाश्वास्य पितरौ भगवान् देवकीसुतः ।
मातामहं तूग्रसेनं यदूना-मकरो-न्नृपम् ॥ ४५.१२ ॥

आह चास्मान् महाराज प्रजाश्चाज्ञप्तु-मर्हसि ।
ययाति-शापाद् यदुभि-र्नासितव्यं नृपासने ॥ ४५.१३ ॥

---

45. 5. 'புருஷார்த்தமனைத்திற்கும் காரணமான இந்த தேகம் எவர்களால் போஷிக்கப்பட்டதோ அந்தத் தாய்தந்தையர்க்கு மனிதன் நன்றி செலுத்த நூறு வயதும் போதாது.

45. 9. 'அம்மா! அப்பா! கொடியவனான கம்ஸனால் மிகவும் துன்புறுத்தப் பட்ட உங்களுக்குப் பிறர் வசப்பட்டிருந்த நாங்கள் பணிவிடை செய்யாமற்போனதை மன்னிக்கவேண்டும்.'

45. 10. மாயையால் மனித உருக்கொண்ட விசுவாத்மாவாகிய ஹரியின் இவ்வார்த்தையால் மயங்கிய வசுதேவரும் தேவகியும் அவர்களை மடியில் வைத்துக் கொண்டு மார்புறத் தழுவி மகிழ்ச்சியடைந்தார்கள்.

45. 11. அரசே! அவர்கள் ஆனந்தக் கண்ணீர்ப்பெருக்கால் மக்களை அபிஷேகம் செய்து அன்புப் பாசத்திலகப்பட்டு மெய்மறந்து கண்ணீர் கண்டத்தை யடைக்க ஒன்றும் பேசமுடியாமல் மௌனமாயிருந்தார்கள்.

45. 12. பகவான் தேவகீபுத்திரன் இவ்விதம் பெற்றோர்களைச் சமாதானப்படுத்தி விட்டுத் தாயின்தந்தையான உக்ரஸேனரை யாதவர்களுக்கு அரசனாகச் செய்தார்.

45. 13, அவரிடம் பின்வருமாறு கூறினார். 'மகாராஜா! யயாதியின் சாபத்தால் யாதவர்கள் சிம்மாஸனத்தில் இருக்க உரியவர்கள் அல்லர். பிரஜைகளாகிய எங்களுக்கும் நீங்கள் கட்டளையிடுதற்குரியவராகின்றீர்.

---

45. 13. 'யது'வம்சம் கிருஷ்ணன், 'அனு'வம்சம் உக்ரஸேனன், 'பூரு'வம்சம் பாண்டவ கௌரவர்கள். யது பித்ருசாபம் பெற்றவன். பூரு பிதாவுக்கு யௌவனமளித்து வரம் பெற்றவன்.

(வ்ருஷபர்வா பெண்) சர்மிஷ்டை = யயாதி = தேவயானீ (சுக்ரர் பெண்)

சர்மிஷ்டை: த்ருஹ்யன், அனு, பூரு
தேவயானீ: யது, துர்வஸு

---

45. 12. यदूनामकरोत्पतिम् ।

मयि भृत्य उपासीने भवतो विबुधादयः ।
बलिं हरन्त्यवनताः किमुतान्ये नराधिपाः ॥ ४५.१४ ॥

सर्वान् स्वान् ज्ञाति-संबन्धान् दिग्भ्यः कंस-भयाकुलान् ।
यदु-वृष्ण्यन्धक-मधु-दाशार्ह-कुकुरादिकान् ॥ ४५.१५ ॥

सभाजितान् समाश्वास्य विदेशावासकर्शितान् ।
न्यवासयत् स्वगेहेषु वित्तैः सन्तर्प्य विश्वकृत् ॥ ४५.१६ ॥

अथ नन्दं समासाद्य भगवान् देवकीसुतः ।
संकर्षणश्च राजेन्द्र परिष्वज्येद-मूचतुः ॥ ४५.२० ॥

पितर्युवाभ्यां स्निग्धाभ्यां पोषितौ लालितौ भृशम् ।
पित्रो-रभ्यधिका प्रीति-रात्मजेष्वात्मनोऽपि हि ॥ ४५.२१ ॥

एवं सान्त्वय्य भगवान् नन्दं सव्रज-मुच्युतः ।
वासोऽलंकारकुप्याद्यै-रर्हयामास सादरम् ॥ ४५.२४ ॥

---

45. 14. 'வேலைக்காரனை நான் அருகிலிருக்கும்போது உங்களுக்குத் தேவர்கள் முதலியவர்களும் வணங்கிக் கப்பங் கொண்டுவருவார்கள். மற்றும் மனிதர்களைப் பற்றிக் கேட்பானேன் ?'

45. 15-16. கம்ஸனிடம் பயத்தால் கவலைகொண்டு நாடுகடந்து வருந்திக் கொண்டிருந்த யாதவர்கள், விருஷ்ணிகள், அந்தகர்கள், மதுக்கள், தாசார்ஹர்கள், குகுரர்கள் ஆகிய எல்லா ஜாதிகளையும் பந்துக்களையும் பல திசைகளிலிருந்தும் வரவழைத்து மரியாதை செய்து ஸமாதானப்படுத்திப் பணங்கொடுத்துத் திருப்தி செய்வித்து அவரவர்கள் வீடுகளில் வசிக்கும்படி பகவான் ஏற்பாடு செய்தார்.

45. 20. அரசே! பிறகு கிருஷ்ணபகவானும் பலராமனும் நந்தகோபரையணுகி அவரைத் தழுவிக்கொண்டு பின்வருமாறு கூறினார்கள்.

45. 21. 'அப்பா! அன்புமிகுந்த உங்களிருவர்களாலும் மிகவும் சீராட்டி வளர்க்கப்பட்டோம். பெற்றோர்க்குத் தங்களைக்காட்டிலும் தங்கள் குழந்தைகளிடத்தில் ப்ரீதி அதிகமன்றோ ?'

45. 24. பகவான் கிருஷ்ணன் நந்தகோபரை இவ்வாறு ஸமாதானப்படுத்தி கோகுலவாசிகளுடன் அவரை வஸ்திரம் அலங்காரம் பாத்திரம் முதலியவைகளால் ஆதரவுடன் பூஜித்தார்.

---

45. 14. बलीन् हरन्ति । 45. 15. स्वज्ञातिसंबन्धीन् । कंसभयाद्रुतान् ।
45.16. वित्तैस्सन्तर्प्य विश्वदृक् ।

अथ शूरसुतो राजन् पुत्रयोः समकारयत् ।
पुरोधसा ब्राह्मणैश्च यथावद् द्विजसंस्कृतिम् ॥ ४५.२६ ॥

याः कृष्णरामजन्मर्क्षे मनोदत्ता महामतिः ।
ताश्चाददा-दनुस्मृत्य कंसेनाधर्मतो हृताः ॥ ४५.२८ ॥

ततश्च लब्धसंस्कारौ द्विजत्वं प्राप्य सुव्रतौ ।
गर्गाद् यदुकुलाचार्याद् गायत्रं व्रतमास्थितौ ॥ ४५.२९ ॥

प्रभवौ सर्वविद्यानां सर्वज्ञौ जगदीश्वरौ ।
नान्यसिद्धामलज्ञानं गूहमानौ नरेहितैः ॥ ४५.३० ॥

अथो गुरुकुले वास-मिच्छन्ता-वुपजग्मतुः ।
काश्यं सान्दीपनिं नाम ह्यवन्तीपुरवासिनम् ॥ ४५.३१ ॥

यथोपसाद्य तौ दान्तौ गुरौ वृत्ति-मनिन्दिताम् ।
ग्राहयन्तावुपेतौ स्म भक्त्या देवमिवादृतौ ॥ ४५.३२ ॥

45. 26. அரசே! பிறகு வசுதேவர் தனது புத்திரர்களுக்கு ஆசாரியரைக் கொண்டு பிராம்மணர்களுடன் முறைப்படி உபநயனத்தைச் செய்வித்தார்.

45. 28. பலராமன் பிறந்தபோதும் கிருஷ்ணன் பிறந்தபோதும் மானஸீகமாகச் செய்யப்பட்டிருந்த தானங்களையும் கம்ஸனால் தம்மிடமிருந்து அநீதியாக அபகரிக்கப் பட்டவைகளையும் நினைத்துப்பார்த்து இப்போது அவற்றை தானம் செய்தார்.

45. 29. பிறகு, (கிருஷ்ணனும், பலராமனும்,) யதுகுல ஆசாரியரான கர்க்கரிட மிருந்து உபநயன ஸம்ஸ்காரம் பெற்று இரண்டாவது பிறப்பையடைந்து நல்ல நியமத் துடன் பிரம்மசரிய விரதத்தைப் பெற்றார்கள்.

45. 30. எல்லா வித்தைகளுக்கும் மூலஸ்தான மாகியவர்களும் எல்லாம் அறிந்த வர்களும் உலகத்திற்கு ஈசுவரர்களுமான அவர்கள் பிறரிடமிருந்து கற்கப்படாமல் இயற்கையாகவே அடைந்திருந்த தெளிவான ஞானத்தை வெளியில் காட்டா மலிருந்தார்கள்.

45. 31. பிறகு (கிருஷ்ணனும் பலராமனும்) குருகுலவாசம் செய்ய விரும்பிக் காச கோத்திரத்தில் ஜனித்தவரும் அவந்திபுரவாஸியும் ஸாந்தீபனி எனப் பெயர் பெற்றவருமான முனிவரை அடைந்தார்கள்.

45. 32. முறைப்படி குருவையடைந்த அவர்கள் குருவிடம் குற்றமில்லாமல் நடக்கவேண்டிய வழியைப் பிறர்க்குக் காட்டுபவர்களாய் அடக்கத்துடனும் ஆதர வுடனும் அவரைத் தெய்வத்தைப்போல் வழிபட்டு வந்தார்கள்.

45. 28. महाद्युतिः ।

तयो-र्द्विजवर-स्तुष्टः शुद्धभावानुवृत्तिभिः ।
प्रोवाच वेदानखिलान् सांगोपनिषदो गुरुः ॥ ४५.३३ ॥

सरहस्यं धनुर्वेदं धर्मान् न्यायपथांस्तथा ।
तथा चान्वीक्षिकीं विद्यां राजनीतिं च षड्विधाम् ॥ ४५.३४ ॥

सर्वं नरवरश्रेष्ठौ सर्वविद्याप्रवर्तकौ ।
सकृन्निगदमात्रेण तौ संजगृहतु-र्नृप ॥ ४५.३५ ॥

अहोरात्रैश्चतुष्षष्ट्या संयत्तौ तावतीः कलाः ।
गुरुदक्षिणयाचार्यं छन्दयामासतु-र्नृप ॥ ४५.३६ ॥

द्विज-स्तयोस्तं महिमान-मद्भुतं संलक्ष्य राजन्नतिमानुषीं मतिम् ।
संमन्त्र्य पत्न्या स महार्णवे मृतं बालं प्रभासे वरयांबभूव ह ॥ ४५.३७ ॥

ततः संयमनीं नाम यमस्य दयितां पुरीम् ।
गत्वा जनार्दनः शंखं प्रदध्मौ सहलायुधः ॥ ४५.४२ ॥

शंख-निर्ह्रादमाकर्ण्य प्रजासंयमनो यमः ।
तयोः सपर्यां महतीं चक्रे भक्त्युपबृंहिताम् ॥ ४५.४३ ॥

45. 33-34. நிர்மலமான மனதுடன் அவர்கள் செய்த பணிவிடைகளால் சந்தோஷமடைந்த பிராம்மணோத்தமராகிய குரு அங்கங்களுடனும் உபநிஷதங்களுடனும் எல்லா வேதங்களையும், அவ்வாறே மர்மங்களுடன் தனுர் வேதத்தையும் தர்ம சாஸ்திரங்களையும் நியாய சாஸ்திரங்களையும் தர்க்க வித்தையையும் ஆறுவகையான ராஜ நீதியையும் உபதேசித்தார்.

45. 35. அரசே! புருஷசிரேஷ்டர்களும் எல்லா வித்தைகளையும் வெளியிட்டவர்களுமான அவர்கள் ஒருமுறை கூறப்பெற்ற அளவிலேயே அனைத்தையும் நன்கு கிரகித்துக்கொண்டார்கள்.

45. 36. அரசே! அறுபத்துநான்கு நாட்களில் அறுபத்துநான்கு கலைகளையும் கற்றுணர்ந்த அவர்கள் குருதக்ஷிணையைக் குறிப்பிடவேண்டுமென்று ஆசாரியரிடம் பிரார்த்தித்தார்கள்.

45. 37. அரசே! அந்தப் பிராம்மணர் அவர்களுடைய ஆச்சரியமான அந்த மகிமையையும் மனிதர்களுக்கெட்டாத அந்த புத்தியையும் கவனித்துத் தமது பத்தினியுடன் கலந்து ஆலோசித்து பிரபாஸ க்ஷேத்திரத்தில் சமுத்திரத்தில் இறந்துபோன தமது குழந்தையைத் தருவதை தக்ஷிணையாக விரும்பினர்.

45. 42. பிறகு கிருஷ்ணன் பலராமருடன் யமனுக்குப் பிரியமான ஸம்யமனீ என்னும் பட்டணத்துக்குச் சென்று சங்கத்தை முழக்கினர்.

45. 43. பிரஜைகளை அடக்கியாளும் யமதர்மராஜன் அந்த சங்கநாதத்தைக் கேட்டு அவர்களுக்கு பக்தி நிறைந்த சிறந்த பூஜையைச் செய்தான்.

45. 35. सर्वं तद्विबुधश्रेष्ठौ ।

श्री भगवानुवाच—

गुरुपुत्रमिहानीतं निजकर्म-निबन्धनम् ।
आनयस्व महाराज मच्छासन-पुरस्कृतः ॥ ४५.४५ ॥

तथेति तेनोपनीतं गुरुपुत्रं यदूत्तमौ ।
दत्त्वा स्वगुरवे भूयो वृणीष्वेति तमूचतुः ॥ ४५.४६ ॥

गुरुरुवाच—

सम्यक् संपादितो वत्स भवद्भ्यां गुरुनिष्क्रयः ।
को नु युष्मद्विधगुरोः कामाना-मवशिष्यते ॥ ४५.४७ ॥

गच्छतं स्वगृहं वीरौ कीर्ति-र्वामस्तु पावनी ।
छन्दांस्ययातयामानि भवन्त्विह परत्र च ॥ ४५.४८ ॥

गुरुणैव-मनुज्ञातौ रथेनानिलरंहसा ।
आयातौ स्वपुरं तात पर्जन्य-निनदेन वै ॥ ४५.४९ ॥

समनन्दन् प्रजाः सर्वा दृष्ट्वा रामजनार्दनौ ।
अपश्यन्त्यो बह्वहानि नष्टलब्ध-धना इव ॥ ४५.५० ॥

ஸ்ரீ பகவான் கூறியது—

45. 45. மகாராஜனே! தனது கர்மானுஸாரமாக இங்கு கொண்டுவரப்பட்ட (எங்கள்) குரு புத்திரனை (இப்போது) என் கட்டளையை முன்னிட்டு இங்கு அழைத்து வாரும்.

45. 46. 'அப்படியே' என்று சொல்லி யமனால் அழைத்துவந்து அளிக்கப்பட்ட குரு புத்திரனை அந்த யதுகுல சிரேஷ்டர்கள் தங்கள் குருவுக்குக் கொடுத்து 'மேலும் வேண்டியதைக் கேளுங்கள்' என்று அவரிடம் கூறினார்கள்.

குரு கூறியது—

45. 47. "குழந்தாய்! உங்களால் குருதக்ஷிணை நன்றாகக் கொடுக்கப்பட்டது. உங்களைப்போன்றவர்களின் குருவாயிருப்பவர்களுக்கு எந்த ஆசைதான் நிறைவேறாது?

45. 48. "வீரர்களே! நீங்கள் வீட்டுக்குப்போகலாம். உங்களுக்குப் புனிதமான புகழ் உண்டாகட்டும். கற்ற வித்தைகள் இகத்திலும் பரத்திலும் மறந்துபோகாமலிருக்கட்டும்."

45. 49. ஐயனே! இவ்விதம் குருவினால் அனுமதிக்கப்பட்டு அவர்கள் மேகம் போல் முழங்குவதும் வாயு வேகமுள்ளதுமான தேரிலேறித் தங்கள் ஊருக்கு வந்தார்கள்.

45. 50. வெகு நாளாகக் கிருஷ்ணனையும் பலராமனையும் பாராமலிருந்த ஜனங்கள் எல்லோரும் அவர்களைக் கண்டு இழந்த பொருளை மீண்டும் அடைந்தவர்கள்போல் மகிழ்ச்சியடைந்தார்கள்.

मथुरालीला (२) ॥ २७ ॥

उद्धवसन्देशः

श्रीशुक उवाच—

वृष्णीनां प्रवरो मन्त्री कृष्णस्य दयितः सखा ।
शिष्यो बृहस्पतेः साक्षादुद्धवो बुद्धिसत्तमः ॥ ४६.१ ॥

तमाह भगवान् प्रेष्ठं भक्तमेकान्तिनं क्वचित् ।
गृहीत्वा पाणिना पाणिं प्रपन्नार्तिहरो हरिः ॥ ४६.२ ॥

गच्छोद्धव व्रजं सौम्य पित्रो-र्नौ प्रीतिमावह ।
गोपीनां मद्वियोगाधिं मत्सन्देशै-र्विमोचय ॥ ४६.३ ॥

ता मन्मनस्का मत्प्राणा मदर्थे त्यक्तदैहिकाः ।
मामेव दयितं प्रेष्ठ-मात्मानं मनसा गताः ॥
ये त्यक्तलोकधर्माश्च मदर्थे तान् बिभर्म्यहम् ॥ ४६.४ ॥

इत्युक्त उद्धवो राजन् सन्देशं भर्तु-राद‍ृतः ।
आदाय रथमारुह्य प्रययौ नन्दगोकुलम् ॥ ४६.७ ॥

प्राप्तो नन्दव्रजं श्रीमान् निम्लोचति विभावसौ ।
छन्नयानः प्रविशतां पशूनां खुररेणुभिः ॥ ४६.८ ॥

---

27. மதுரா லீலை (2)

உத்தவர்தூது

ஸ்ரீசுகர் கூறியது—

46. 1. விருஷ்ணிகளில் தலைசிறந்த மந்திரியும் கிருஷ்ணனுக்குப் பிரியமான தோழரும் பிருஹஸ்பதியின் நேர் சிஷ்யரும் புத்தியிற் சிறந்தவருமாகியவர் உத்தவர்.

46. 2. சரணடைந்தவர்களின் துன்பத்தைப்போக்கும் கிருஷ்ணபகவான் தமது பிரியத்துக்கு உகந்தவரும் பக்தருமாகிய அவருடைய கையைக்கையால் பிடித்துக் கொண்டு ஏகாந்தமான ஓரிடத்தில் பின்வருமாறு சொன்னார்.

46. 3. 'மனதிற்கினிய உத்தவரே! நீர் கோகுலம் செல்லவேண்டும். எங்கள் பெற்றோர்க்குப் பிரீதியைச் செய்யவேண்டும். கோபிகளுக்கு என்னைப்பிரிவினாலுண்டான மனவருத்தத்தை என் செய்தியைச் சொல்லி அகற்றவேண்டும்.

46. 4. 'அவர்கள் என்னிடத்திலேயே மனதையும் பிராணனையும் வைத்திருப்பவர்கள். எனக்காக உடலைப்பற்றிய உறவை விட்டவர்கள். தங்கள் மனதில் என்னையே பிரியத்துக்குகந்த நாயகனாகக்கொண்டவர்கள். எவர்கள் (இவ்வாறு) எனக்காக உலக தர்மங்களைவிட்டவர்களோ அவர்களை நான் காப்பாற்றுகிறேன்.'

46. 7. அரசே! இவ்விதம் கூறப்பெற்ற உத்தவர் யஜமானனாகிய பகவானுடைய உத்திரவை ஆதரவுடன் ஏற்றுக்கொண்டு தேரில் ஏறி நந்தகோகுலத்திற்குச் சென்றார்.

46. 8. சூரியன் அஸ்தமனமாகும் ஸமயத்தில் கோகுலத்திற்குத் திரும்பிவரும் பசுக்களின் குளம்புகளிலிருந்து கிளம்பும் தூசியால் தன்னுடைய தேர் மறைக்கப் பெற்றவராய் ஸ்ரீமானான உத்தவர் நந்தகோகுலத்தை அடைந்தார்.

तमागतं समागम्य कृष्णस्यानुचरं प्रियम् ।
नन्दः प्रीतः परिष्वज्य वासुदेवधियाऽऽर्चयत् ॥ ४६.१४ ॥

भोजितं परमान्नेन संविष्टं कशिपौ सुखम् ।
गतश्रमं पर्यपृच्छत् पादसंवाहनादिभिः ॥ ४६.१५ ॥

नन्द उवाच—

कच्चिदंग महाभाग सखा नः शूरनन्दनः ।
आस्ते कुशल्यपत्याद्यै-र्युक्तो मुक्तः सुहृद्वृतः ॥ ४६.१६ ॥

अपि स्मरति नः कृष्णो मातरं सुहृदः सखीन् ।
गोपान् व्रजं चात्मनाथं गावो वृन्दावनं गिरिम् ॥ ४६.१८ ॥

अप्यायास्यति गोविन्दः स्वजनान् सकृदीक्षितुम् ।
तर्हि द्रक्ष्याम तद्वक्त्रं सुनसं सुस्मितेक्षणम् ॥ ४६.१९ ॥

सरिच्छैलवनोद्देशान् मुकुन्दपदभूषितान् ।
आक्रीडानीक्षमाणानां मनो याति तदात्मताम् ॥ ४६.२२ ॥

---

46. 14. ஸ்ரீ கிருஷ்ணனையனுசரிக்கும் பிரியனான உத்தவரை அவர் வந்ததும் கிருஷ்ணன் என்ற பாவனையிலேயே எதிர்கொண்டு சென்று இறுகத் தழுவி மகிழ்ச்சியுற்றவராய் நந்தகோபர் பூஜித்தார்.

46. 15. சிறந்த அன்னத்தால் போஜனம் செய்வித்து சிறந்த ஆசனத்தில் சுகமாக எழுந்தருளச் செய்து கால்களைப் பிடிப்பது முதலியவகையில் உபசரித்து அவருக்குச் சிரம பரிஹாரம் ஆனபின் (நந்தகோபர்) பின்வருமாறு வினவினார்.

நந்தகோபர் கூறியது—

46. 16. மகாபாக்கியசாலியான ஐயனே! எமது நண்பர் வசுதேவர் கம்ஸனிடமிருந்து விடுபட்டுப் பிள்ளைகளுடனும் மற்றவர்களுடனும்கூடி நண்பர்கள் சூழ க்ஷேமமாயிருக்கிறாரா ?

46. 18. கிருஷ்ணன் என்னையும் தன் தாயாரையும் சிநேகிதர்களையும் தோழர்களான கோபர்களையும் தன்னையே நாதனாகக்கொண்ட கோகுலம், பசுக்கள், பிருந்தாவனம் கோவர்த்தனகிரி முதலியவற்றையும் நினைக்கிறாரா ?

46. 19. கோவிந்தன் தனது உறவினர்களைப்பார்க்க ஒருமுறை வருவாரா ? அழகிய மூக்கும் புன்முறுவலுடன்கூடிய பார்வையும் விளங்கும் அந்த முகத்தை எப்போது பார்ப்போம் ?

46. 22. கிருஷ்ணனுடைய அடிச்சுவடுகளால் அலங்கரிக்கப்பட்ட ஆறுகள் மலைகள் வனப்பிரதேசங்கள் விளையாட்டிடங்கள் ஆகியவற்றைப் பார்க்குந்தோறும் எங்கள் மனது கிருஷ்ணமயமாகவே ஆய்விடுகிறது.

---

46. 18. व्रजं चात्मनाथान् ।

श्रीशुक उवाच—

इति संस्मृत्य संस्मृत्य नन्दः कृष्णानुरक्तधीः ।
अत्युत्कण्ठोऽभवत्तूष्णीं प्रेमप्रसरविह्वलः ॥ ४६.२७ ॥

यशोदा वर्ण्यमानानि पुत्रस्य चरितानि च ।
शृण्वन्त्यश्रूण्यवास्राक्षीत् स्नेह-स्नुत-पयोधरा ॥ ४६.२८ ॥

तयोरित्थं भगवति कृष्णे नन्दयशोदयोः ।
वीक्ष्यानुरागं परमं नन्दमाहोद्धवो मुदा ॥ ४६.२९ ॥

उद्धव उवाच—

युवां श्लाघ्यतमौ नूनं देहिनामिह मानद ।
नारायणेऽखिलगुरौ यत् कृता मतिरीदृशी ॥ ४६.३० ॥

आगमिष्यत्यदीर्घेण कालेन व्रज-मच्युतः ।
प्रियं विधास्यते पित्रो-र्भगवान् सात्वतां पतिः ॥ ४६.३४ ॥

न माता न पिता तस्य न भार्या न सुतादयः ।
नात्मीयो न परश्चापि न देहो जन्म एव च ॥ ४६.३८ ॥

ஸ்ரீ சுகர் கூறியது—

46. 27. இவ்விதம் கூறிவந்த நந்தகோபர் பகவானை நினைக்க நினைக்க உண்டான அன்பின் மிகுதியால் தொண்டை அடைக்க பிரேமைப் பெருக்கில் பரவசப் பட்டுப் பேசாமல் மௌனமாயிருந்தார்.

46. 28. புத்திரனுடைய சரித்திரத்தை வர்ணிக்கக் கேட்ட யசோதையும் அன்பினுல் கொங்கையில் பால் சுரக்க ஆனந்தக் கண்ணீர் வடித்தாள்.

46. 29. பகவான் கிருஷ்ணனிடத்தில் அவர்களுக்குள்ள இந்தமாதிரியான பரமப்ரீதியைப் பார்த்து நந்தகோபரிடத்தில் உத்தவர் மகிழ்ச்சியுடன் பின்வருமாறு கூறினுர்.

உத்தவர் கூறியது—

46. 30. பெருமைபடைத்த நந்தரே! எல்லோருக்கும் குருவான நாராயண னிடத்தில் இப்படிச் சித்தத்தைச் செலுத்திய நீங்களே உடலெடுத்தவர்களுக்குள் மிக்க மேலானவர்கள் என்பது நிச்சயம்.

46. 34. அச்சுதர் கூடிய சீக்கிரம் கோகுலத்திற்கு வருவார். ஸாத்வதர்களின் பதியாகிய பகவான் பெற்றோர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவார்.

46. 38. அவருக்குத் தாயுமில்லை, தந்தையுமில்லை, மனைவியுமில்லை, மக்களு மில்லை, தன்னைச் சேர்ந்தவனுமில்லை, பிறனுமில்லை, உடலுமில்லை, பிறவியுமில்லை.

युवयोरेव नैवाय-मात्मजो भगवान् हरिः ।
सर्वेषात्मजो ह्यात्मा पिता माता स ईश्वरः ॥ ४६.४२ ॥

एवं निशा सा ब्रुवतोर्व्यतीता नन्दस्य कृष्णानुचरस्य राजन् ।
गोप्यः समुत्थाय निरूप्य दीपान् वास्तून् समभ्यर्च्य
दधीन्यमन्थन् ॥ ४६.४४ ॥

उद्गायतीना-मरविन्दलोचनं व्रजांगनानां दिवमस्पृशद् ध्वनिः ।
दध्नश्च निर्मन्थन-शब्द-मिश्रितो निरस्यते येन दिशाममंगळम् ॥ ४६.४६ ॥

भगवत्युदिते सूर्ये नन्दद्वारि व्रजौकसः ।
दृष्ट्वा रथं शातकौम्भं कस्यायमिति चाब्रुवन् ॥ ४६.४७ ॥

अक्रूर आगतः किं वा यः कंसस्यार्थ-साधकः ।
येन नीतो मधुपुरीं कृष्णः कमललोचनः ॥ ४६.४८ ॥

---

46. 42. இந்தக் கிருஷ்ணபகவான் உங்களுக்குத்தான் பிள்ளை என்பதும் இல்லை. ஏனென்றால் எல்லோருக்குமே அவன் ஆத்மாவாகவும் தந்தையாகவும் தாயாகவும் பிள்ளையாகவும் ஈசுவரனாகவும் இருக்கிறார்.

46. 44. அரசே! இவ்வாறு நந்தகோபரும் உத்தவரும் பேசிக்கொண்டிருக்க, இரவு கழிந்தது. கோபிகள் எழுந்து விளக்கேற்றி வாஸ்துபூஜை செய்து தயிர் கடைய ஆரம்பித்தார்கள்.

46. 46. தாமரைக் கண்ணனைக் குறித்து உரக்கப் பாடுகின்ற கோபஸ்திரீகளுடைய பாட்டொலி தயிர் கடையும் ஒலியுடன் கலந்து வானுலகைத் தொட்டது. அதனால் எல்லாத் திசைகளிலும் அமங்களம் போக்கடிக்கப்பட்டது.

46. 47. சூரிய பகவான் உதித்தபோது கோபஸ்திரீகள் நந்தகோபருடைய வீட்டு வாசலில் பொன்மயமான தேரைக் கண்டு 'இது யாருடையது?' என்று பேசிக்கொண்டார்கள்.

46. 48. 'எவர் கம்ஸனுடைய காரியத்தை நிறைவேற்றியவரோ எவரால் தாமரைக் கண்ணனான கிருஷ்ணன் மதுராபுரிக்கு அழைத்துச் செல்லப்பட்டாரோ அந்த அக்ரூரர்தான் வந்திருக்கிறாரோ?'

---

46. 42. ஒ. ந கலு **கோபிகா**நந்த**னோ** **ப**வான்
அகில-**தேஹி**னாம் **அ**ந்தராத்மத்ருக் ॥ —கோபிகாகீதம்.

46. 44. ஒ. ராதா புனது ஜகதச்யுத-தத்த-சித்தா
மந்தான-மாகலயதீ ததிரிக்த-பாத்ரே ।
தஸ்யாஸ்தன-ஸ்தபக-சஞ்சல-லோல-த்ருஷ்டிர்-
தேவோऽபி **தோ**ஹனதியா வ்ருஷபம் நிருந்தன் ॥
—கிருஷ்ண கர்ணாம்ருதம்

किं साधयिष्यत्यस्माभि-र्भर्तुः प्रेतस्य निष्कृतिम् ।
इति स्त्रीणां वदन्तीना-मुद्धवोऽगात् कृताह्निकः ॥ ४६.४९ ॥

तं वीक्ष्य कृष्णानुचरं व्रजस्त्रियः प्रलंबबाहुं नवकंजलोचनम् ।
पीतांबरं पुष्करमालिनं लसन्मुखारविन्दं मणिमृष्टकुण्डलम् ॥ ४७.१ ॥

शुचिस्मितः कोऽयमपीच्यदर्शनः कुतश्च कस्याच्युतवेषभूषणः ।
इति स्म सर्वाः परिवव्रु-रुत्सुका-स्तमुत्तमश्लोक-पदांबुजाश्रयम् ॥ ४७.२ ॥

गायन्त्यः प्रियकर्माणि रुदन्त्यश्च गतह्रियः ।
तस्य संस्मृत्य संस्मृत्य यानि कैशोर-बाल्ययोः ॥ ४७.१० ॥

काचिन्मधुकरं दृष्ट्वा ध्यायन्ती कृष्णसंगमम् ।
प्रिय-प्रस्थापितं दूतं कल्पयित्वेद-मब्रवीत् ॥ ४७.११ ॥

---

46. 49. ஏற்கெனவே பிரீதி செய்விக்கப்பட்ட தமது யஜமானனுக்கு நம்மைக் கொண்டு இன்னும் என்ன உத்தரக்கிரியைகளைச் செய்விக்கப்போகிறுர் என்று ஸ்திரீகள் பேசிக்கொண்டிருக்கும்போது உத்தவர் உதயகால அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு அங்கு வந்தார்.

47. 1-2. நீண்ட கைகளையும் அன்றலர்ந்த தாமரைபோன்ற கண்களையும் உடையவரும் பீதாம்பரதாரியும் தாமரை மாலை பூண்டவரும் பிரசன்னமான முகமுடையவரும் ரத்னங்களுடன் பிரகாசிக்கின்ற குண்டலங்களையணிந்தவரும் கிருஷ்ணபகவானுக்கருகிலிருக்கும் நண்பரும் ஆகிய உத்தவரைக் கண்டு கோபஸ்திரீகள், 'புன்முறுவல் தவழும் அழகிய தோற்றமுடையவரும் கிருஷ்ணனைப்போலவே வேஷமும் அலங்காரமும் உடையவருமாக விளங்கும் இவர் யார்? எங்கிருந்து வருகிறுர்? யாரைச் சேர்ந்தவர்?' என்று அறிய ஆவல்கொண்டவர்களாய் உத்தம சுலோகருடைய திருவடிகளையாசிரயித்த அந்த உத்தவரைச் சூழ்ந்துகொண்டார்கள்.

47. 10. அவர்கள் கிருஷ்ணன் இளமையில் செய்த பிரியமான லீலைகள் எவையோ அவற்றை நினைத்து நினைத்துப் பாடுபவர்களாய் வெட்கத்தைவிட்டு அழவும் தொடங்கினுர்கள்.

47. 11. ஒரு கோபிகை ஒரு வண்டைப்பார்த்துக் கிருஷ்ணனுடன் கூடுதலை நினைத்து அவரால் பிரியமாக அனுப்பப்பட்ட தூதனுக வண்டைக் கருதிப் பின்வருமாறு கூறினுள்.

---

47. 1-2. ஒ. நோத்தவோண்வபி மந்ந்யூனோ யத் குணைர் நார்தித: ப்ரபு: |
அதோ மத்வயுனம் லோகம் க்ராஹயந்-நிஹ திஷ்டது ||
—பாக. 3. 4. 31

வ்ருஷ்ணீனும் ப்ரவரோ மந்த்ரீ க்ருஷ்ணஸ்ய தயித: ஸகா |
சிஷ்யோ ப்ருஹஸ்பதேஸ் ஸாக்ஷா-துத்தவோ புத்திஸத்தம:
—பாக. 10. 46. 1.

---

46. 49. किं साधयिष्यते । 47. 2. इतीव ।

गोप्युवाच—

विसृज शिरसि पादं वेद्म्यहं चाटुकारै-
रनुनय-विदुषस्तेऽभ्येत्य दौत्यै-र्मुकुन्दात् ।
स्वकृत इह विसृष्टापत्यपत्यन्यलोका
व्यसृज-दकृतचेताः किं नु सन्धेयमस्मिन् ॥ ४७.१६ ॥

यदनुचरितलीला-कर्णपीयूष-विप्रुट्-
सकृददनविधूत-द्वन्द्व-धर्मा विनष्टाः ।
सपदि गृहकुटुंबं दीनमुत्सृज्य दीना
बहव इह विहंगा भिक्षुचर्यां चरन्ति ॥ ४७.१८ ॥

वयमृतमिव जिह्मव्याहृतं श्रद्दधानाः
कुलिकरुत-मिवाज्ञाः कृष्णवध्वो हरिण्यः ।
ददृशुरसकृदेतत्तन्नख-स्पर्श-तीव्र-
स्मररुज उपमन्त्रिन् भण्यता-मन्यवार्ता ॥ ४७.१९ ॥

उद्धव उवाच—

अहो यूयं स्म पूर्णार्था भवत्यो लोकपूजिताः ।
वासुदेवे भगवति यासामित्यर्पितं मनः ॥ ४७.२३ ॥

கோபிகை கூறியது—

47. 16. என் தலையில் உன் காலை வைக்காதே! முகுந்தன் அனுப்ப இவ்விடம் வந்த தூதனென்பதற்கிணங்கச் சமத்காரமாகப் பேசி வசப்படுத்துவதில் உனக்குள்ள திறமையை நான் அறிவேன். கணவன், மக்கள், மற்ற உலகங்கள் ஆகிய அனைத்தையும் விட்டுத் தன்னைச் சரணடைந்தவர்கள் என்ற எண்ணம் சிறிதுமில்லாதவனாய் இங்கே எங்களைக் கைவிட்ட இந்தக் கிருஷ்ணனிடத்தில் இனிச் சமாதானம் செய்து கொள்ளவும் வேண்டுமோ ?

47. 18. அவனுடைய சரித்திரமும் லீலையுமாகிற அமுதக்கடலின் திவலைகளைச் செவியிற்கொண்டு அவ்வின்பத்தை ஒருமுறை யனுபவித்தவர்கள் துவந்துவ தர்மங்களைத் துறந்து, வாடுகின்ற கிருஹத்தையும் குடும்பத்தையும் உதறி விட்டு, எல்லாவற்றையும் இழந்து, ஏழைகளாய்ப் பலபேர்கள் பறவைகளைப்போல் பிச்சையெடுத்துக்கொண்டு திரிகிறார்கள்.

47. 19. தூதரே! வேடனுடைய பாட்டை உண்மையென நம்பிப் பாணத்தாலடிக்கப்பட்டு வருந்தும் கிருஷ்ணமிருகத்தின் பத்தினிகளான ஒன்றுமறியாத பெண் மான்களைப்போல் நாங்களும் அவருடைய கபடமான வார்த்தையைப் பலதடவை உண்மையென நம்பி அவருடைய நகஸ்பர்சத்தாலுண்டான தீவிரமான மனோ வேதனையை அனுபவித்திருக்கிறோம். ஆகையால் இனி வேறு பேச்சுப் பேசுவோம்.

உத்தவர் கூறியது—

47. 23. ஆச்சரியம்! நீங்கள் பரிபூரணமடைந்தவர்கள். நீங்கள் உலகோரால் பூஜித்தற்குரியவர்கள். இது நிச்சயம். ஏனென்றால் உங்களுடைய மனது பகவான் வாசுதேவனிடத்தில் அர்ப்பிக்கப்பட்டுள்ளது.

---

47. 18. பீயூஷ—அம்ருத; விப்ருட்—திவலைகள்

दान-व्रत-तपो-होम-जप-स्वाध्याय-संयमैः ।
श्रेयोभि-र्विविधैश्चान्यैः कृष्णे भक्तिर्हि साध्यते ॥ ४७.२४ ॥

भगवत्युत्तमश्लोके भवतीभि-रनुत्तमा ।
भक्तिः प्रवर्तिता दिष्ट्या मुनीनामपि दुर्लभा ४७.२५ ॥

सर्वात्मभावोऽधिकृतो भवतीनामधोक्षजे ।
विरहेण महाभागा महान् मेऽनुग्रहः कृतः ॥ ४७.२७ ॥

श्रूयतां प्रियसन्देशो भवतीनां सुखावहः ।
यमादायागतो भद्रा अहं भर्तू रहस्करः ॥ ४७.२८ ॥

श्री भगवानुवाच—
भवतीनां वियोगो मे न हि सर्वात्मना क्वचित् ।
यथा भूतानि भूतेषु खं वाय्वग्नि-र्जलं मही ॥
तथाहं च मनः-प्राणबुद्धीन्द्रियगुणाश्रयः ॥ ४७.२९ ॥

---

47. 24. தானம் விரதம் தவம் ஹோமம் ஜபம் வேதாத்தியயனம் நியமம் முதலிய வற்ருலும் வேறு பல நல்ல செயல்களாலுமன்ருே கிருஷ்ணனிடத்தில் பக்தி பெறப் படுகிறது.

47. 25. உத்தமசுலோகனுகிய பகவானிடத்தில் முனிவர்களுக்கும் கிடைத்தற் கரிய ஒப்புயர்வற்ற பக்தி ஏற்பட்டுளது. இது உங்கள் பாக்கியம்.

47. 27. மகாபாக்கியசாலிகளே! பகவானிடத்தில் ஏகாந்தபக்தி செய்துவரும் உங்களுடைய பிரிவாற்ருமையால் எனக்கு மிக உயர்ந்த அனுக்கிரகம் செய்யப்பட்டது.

47. 28. மங்கள வடிவினர்களே! யஜமானனுகிய கிருஷ்ணனுக்கு அந்தரங்கப் பணியாற்றும் நான் எந்தப் பிரியமான செய்தியைக் கொண்டுவந்திருக்கிறேனே அது உங்களுக்கு இன்பமளிக்கக்கூடியது. அதைக் கேளுங்கள்.

ஸ்ரீபகவான்கூறியது—

47. 29. ஸர்வாத்மாவான என்னிடமிருந்து உங்களுக்குப் பிரிவு என்பது ஒரு போதும் இல்லவே இல்லை. ஆகாயம், வாயு, அக்னி, அப்பு, பிருதிவி என்ற மகா பூதங்கள் சராசரங்களில் எங்ஙனம் வியாபித்திருக்கின்றனவோ அங்ஙனமே நானும் மனம், பிராணன், புத்தி, இந்திரியங்கள், குணங்கள் ஆகியவற்றை வியாபித்து நிற்கிறேன்.

---

47. 28. ஒ. ராதாயா மே ப்ரியதமமிதம் மத்ப்ரியைவம் ப்ரவீதி
த்வம் கிம் மௌனம் கலயஸி ஸகே மானினீ மத்ப்ரியேவ ।
இத்யாத்யேவ ப்ரவததி ஸகி த்வத் ப்ரியோ நிர்ஜனே மா-
மித்தம் வாதை-ரரமய-தயம் த்வத்ப்ரியா-முத்பலாக்ஷீம் ॥
—நாராயணீயம். 76. 9.

---

47. 24. ध्यानव्रततपो ।

येनेन्द्रियार्थान् ध्यायेत मृषा स्वप्नवदुत्थितः।
तन्निरुन्ध्यादिन्द्रियाणि विनिद्रः प्रत्यपद्यत ॥ ४७.३१ ॥

एतदन्तः समाम्नायो योगः सांख्यं मनीषिणाम्।
त्यागस्तपो दमः सत्यं समुद्रान्ता इवापगाः ॥ ४७.३३ ॥

यत्त्वहं भवतीनां वै दूरे वर्ते प्रियो दृशाम्।
मनसः सन्निकर्षार्थं मदनुध्यान-काम्यया ॥ ४७.३४ ॥

यथा दूरचरे प्रेष्ठे मन आविश्य वर्तते।
स्त्रीणां च न तथा चेतस्सन्निकृष्टेऽक्षिगोचरे ॥ ४७.३५ ॥

मय्यावेश्य मनः कृत्स्नं विमुक्ताशेष-वृत्ति यत्।
अनुस्मरन्त्यो मां नित्य-मचिरान्मा-मुपैष्यथ ॥ ४७.३६ ॥

---

47. 31. நித்திரைவிட்டெழுந்தவன் கனவைப் பொய்யெனக் காண்பதுபோல் (ஒருவன் வெளிவிஷயங்களைப் பொய்யெனவும் ஆத்மாவே மெய்யெனவும் கண்டு) எந்த மனதால் இந்திரிய விஷயங்களைச் சிந்திக்கிறானோ, இந்திரியங்களை அடைகிறானோ, அந்தச் சித்தத்தைச் சோம்பலில்லாமல் அடக்கவேண்டும்.

47. 33. நதிகள் முடிவில் ஸமுத்திரத்தை அடைவதுபோல் வேதமும், யோகமும், மனனசீலர்களின் ஆத்மானாத்ம விசாரமும், தியாகமும், தவமும், இந்திரிய நிக்ரஹமும், ஸத்தியமும் இதையே (மனதை அடக்குவதையே) முடிவாயுடையது.

47. 34. பிரியனான நான் உங்கள் கண்களுக்கெட்டாத தூரத்தில் இருப்பது நீங்கள் என்னை விடாது எண்ணும் ஆசையின் வழியாக மனது அருகில் வருவதற்காகத்தான்.

47. 35. அதெப்படியெனில் ஸ்திரீகளின் மனது வெகுதூரத்திலிருக்கும் பிரியமான கணவனிடத்தில் எவ்விதம் புகுந்துறைகிறதோ அவ்விதம் கணவன் கண்ணுக்கெதிரில் அருகிலிருக்கும்பொழுது இருப்பதில்லையன்றோ ?

47. 36. ஆதலால் நீங்கள் மற்ற எண்ணங்கள் யாவையுமொழித்து முழுமனதையும் என்னிடம் செலுத்தி இடைவிடாது என்னைத் தியானிப்பீர்களாகில் சீக்கிரமாக என்னை யடைவீர்கள்.

---

47. 34. ஒ. ஏஷ்யாமி த்ராகனுபகமனம் கேவலம் கார்யபாராத் விச்லேஷேऽபி ஸ்மரணத்ருடதா-ஸம்பவான் மாஸ்து கேத: | ப்ரஹ்மானந்தே மிலதி ந சிராத் ஸங்கமோ வா வியோகஸ்-துல்யோ வ: ஸ்யாதிதி தவ கிரா ஸோऽகரோந்நிர்வ்யதாஸ்தா: ||
—நாராயணீயம் 76. 10.

47. 36. ஒ. ஸ்நேஹானாஹு: கிமபி விரஹே த்வம்ஸினஸ்த்வேத்வபோகாத் | இஷ்டே வஸ்துன்யுபசித-ரஸ: ப்ரேம-ராசீ பவந்தி ||
—காளிதாஸன்: மேகதூதம்.

---

47. 36. विमुक्ताशेष-वृत्तयः।

श्रीशुक उवाच—

एवं प्रियतमादिष्ट-माकर्ण्य व्रजयोषितः ।
ता ऊचुरुद्धवं प्रीता-स्तत्सन्देशागत-स्मृतीः ॥ ४७.३८ ॥

गोप्य ऊचुः—

परं सौख्यं हि नैराश्यं स्वैरिण्यप्याह पिंगला ।
तज्जानतीनां नः कृष्णे तथाप्याशा दुरत्यया ॥ ४७.४७ ॥

क उत्सहेत संत्यक्तु-मुत्तमश्लोकसंविदम् ।
अनिच्छतोऽपि यस्य श्रीरंगान्न च्यवते क्वचित् ॥ ४७.४८ ॥

सरिच्छैल--वनोद्देशा गावो वेणुरवा इमे ।
संकर्षण-सहायेन कृष्णेनाचरिताः प्रभो ॥ ४७.४९ ॥

पुनः पुनः स्मारयन्ति नन्दगोपसुतं बत ।
श्रीनिकेतै-स्तत्पदकै-र्विस्मर्तुं नैव शक्नुमः ॥ ४७.५० ॥

ஸ்ரீ சுகர் கூறியது—

47. 38. பிரியத்திற்குகந்த கிருஷ்ணனுடைய இவ்வுபதேசத்தைக் கேட்டு அந்த கோபஸ்திரீகள் அவ்வுபதேசத்தால் மகிழ்ச்சியடைந்தும் அதனால் அவருடைய நினைவு மீண்டும் கிளர்ச்சியுற உத்தவரிடம் பின்வருமாறு கூறினார்கள்,

கோபிகள் கூறியது—

47. 47. ஆசையையொழித்திருப்பதே மேன்மையான சுகம் என்று வேசியான பிங்களையும் கூறியிருக்கிறாள். அவ்வாறு அதை அறிந்தபோதிலுங்கூட எங்களுக்குக் கிருஷ்ணனிடத்தில் (நெருங்கியிருக்கவேண்டும் என்ற) ஆசையை விடமுடியவில்லை.

47. 48. விருப்பமற்றவரெனினும் எவருடைய சரீரத்தைவிட்டு லக்ஷ்மீதேவி ஒருபோதும் விலகுவதில்லையோ அந்த உத்தமசுலோகரின் ஏகாந்த வார்த்தையை விடுவதற்கு யார்தான் விரும்புவர் ?

47. 49-50. பிரபுவே ! பலராமனுடன்கூடிய கிருஷ்ணனால் அழகுமிக்க திருவடி பதிப்பிக்கப்பெற்ற நதி மலை வனப்பிரதேசங்களும், பசுக்களும் வேணுகானங்களும் ஆகிய இவைகள் நந்தகோப குமாரனை மீண்டும் மீண்டும் நினைவூட்டுகின்றன. அந்தோ! அவரை மறப்பதற்கு எங்களால் முடியவே இல்லை.

---

47. 50. **விஸ்மர்த்தும் நைவ சக்னும :—**

'அவனை நினைத்து நீங்கள் வருந்துகிறீர்களே, மறந்து விடுங்களேன் ? '

'அதுதானே முடியவில்லை.'

'யோகிகள் பகவானை நிலையாக நினைக்க முடியவில்லை' என்கிறார்கள்.

'இவர்கள் மறக்கமுடியவில்லை' என்கிறார்கள்.

गत्या ललितयोदार-हासलीलावलोकनैः ।
माध्व्या गिरा हृतधियः कथं तं विस्मरामहे ॥ ४७.५१ ॥

हे नाथ हे रमानाथ व्रजनाथार्तिनाशन ।
मग्न-मुद्धर गोविन्द गोकुलं वृजिनार्णवात् ॥ ४७.५२ ॥

श्रीशुक उवाच—

ततस्ताः कृष्णसन्देशै-र्व्यपेत-विरहज्वराः ।
उद्धवं पूजयांचक्रु-र्ज्ञात्वाऽऽत्मान-मधोक्षजम् ॥ ४७.५३ ॥

उवास कतिचिन्मासान् गोपीनां विनुदञ्छुचः ।
कृष्णलीलाकथां गायन् रमयामास गोकुलम् ॥ ४७.५४ ॥

सरिद्वनगिरिद्रोणी-र्वीक्षन् कुसुमितान् द्रुमान् ।
कृष्णं संस्मारयन् रेमे हरिदासो व्रजौकसाम् ॥ ४७.५६ ॥

दृष्ट्वैवमादि गोपीनां कृष्णावेशात्म-विक्लवम् ।
उद्धवः परमप्रीतस्ता नमस्यन्निदं जगौ ॥ ४७.५७ ॥

47.51. உத்தவரே! அவருடைய அழகான நடையிலும், உதாரமான சிரிப்பிலும், விளையாட்டுப் பார்வையிலும், இனிமையான பேச்சிலும் உள்ளத்தைப் பறிகொடுத்த நாங்கள் அவரை எங்ஙனம் மறப்போம்?

47.52. நாதா! ரமாநாதா! கோகுலநாதா! துன்பங்களைத் துடைப்பவரே! கோவிந்தா! மூழ்கியிருக்கும் கோகுலத்தைத் துக்கக்கடலிலிருந்து கரையேற்றும்.

ஸ்ரீ சுகர் கூறியது—

47.53. பிறகு (உத்தவர் கூறிய) கிருஷ்ணன் செய்திகளைக் கேட்டு விரஹதாபம் நீங்கிக் கிருஷ்ணனை ஆத்மா என்றறிந்து அவர்கள் உத்தவரைப் பூஜித்தார்கள்.

47.54. கோபிகளின் வருத்தத்தைப் போக்கிக்கொண்டு சில மாதங்கள் (உத்தவர்) தங்கியிருந்தார். கிருஷ்ணலீலைக் கதைகளைப் பாடிக் கோகுலத்தை இன்புறச் செய்தார்.

47.56. ஹரிதாஸராகிய உத்தவர் நதி வனம் மலை குகை முதலியவைகளையும் மலர் நிறைந்த மரங்களையும் பார்த்துக்கொண்டு கோகுலவாசிகளுக்கு அங்கங்கே கிருஷ்ணனை நினைப்பூட்டிக்கொண்டு இன்புற்றார்.

47.57. கிருஷ்ணனிடம் மனதை வைத்துப் பிரிவாற்றாமையால் வருந்தும் கோபிகளின் இந்நிலையைப் பார்த்துப் பரமப்ரீதியடைந்த உத்தவர் அவர்களை வணங்கிப் பின்வருமாறு கூறினார்.

एताः परं तनुभृतो भुवि गोपवध्वो
गोविन्द एव निखिलात्मनि रूढभावाः ।
वांछन्ति यद्भवभियो मुनयो वयं च
किं ब्रह्मजन्मभि-रनन्तकथा-रसस्य ॥ ४७.५८ ॥

आसामहो चरणरेणु-जुषामहं स्यां
बृन्दावने किमपि गुल्मलतौषधीनाम् ।
या दुस्त्यजं स्वजन-मार्यपथं च हित्वा
भेजु-र्मुकुन्द-पदवीं श्रुतिभि-र्विमृग्याम् ॥ ४७.६१ ॥

वन्दे नन्दव्रजस्त्रीणां पादरेणु-मभीक्ष्णशः ।
यासां हरिकथोद्गीतं पुनाति भुवनत्रयम् ॥ ४७.६३ ॥

श्रीशुक उवाच—

अथ गोपीरनुज्ञाप्य यशोदां नन्दमेव च ।
गोपानामन्त्र्य दाशार्हो यास्यन्नारुरुहे रथम् ॥ ४७.६४ ॥

तं निर्गतं समासाद्य नानोपायनपाणयः ।
नन्दादयोऽनुरागेण प्रावोचन्नश्रुलोचनाः ॥ ४७.६५ ॥

---

47. 58. ஸர்வாத்மாவாகிய கோவிந்தனிடத்திலேயே எந்தப் பரமப் பிரேமையை ஸம்ஸாரபந்தத்திற்கஞ்சிய முனிவர்கள் அடைய விரும்புகின்றார்களோ, எதையடைய நாங்களும் அவாவுகிறோமோ, அப்படிப்பட்ட திடமான பாவனையை யடைந்த இந்த கோபஸ்திரீகள் மட்டுமே உலகில் உடலெடுத்த பயனையடைந்தவர்கள். பகவானுடைய கதையில் ருசிகண்டவனுக்கு பிராம்மணப் பிறவிகளால்தான் ஆகவேண்டுவதென்ன ?

47. 61. அந்தோ ! எவர்கள் விடுதற்கரிய உற்றாருறவினரையும் சீரிய ஆசாரத்தையும் துறந்து சுருதிகள் தேடும் முகுந்த பதவியை அடைந்தார்களோ அப்படிப்பட்ட கோபிகளுடைய பாததூளிபடிந்த பிருந்தாவனத்திலிருக்கும் புதர் செடி கொடிகளுள் ஏதாவது ஒன்றாக நான் இருக்கலாகாதா ?

47. 63. எவர்களுடைய ஹரிகதாகீர்த்தனம் மூவுலகையும் புனிதமாக்குகிறதோ அந்த கோகுலஸ்திரீகளுடைய பாததூளியை மீண்டும் மீண்டும் தொழுகிறேன்.

ஸ்ரீ சுகர் கூறியது—

47. 64. பிறகு உத்தவர் புறப்பட எண்ணிக் கோபிகளிடத்தும் நந்தகோபரிடத்தும் யசோதையிடத்தும் விடைபெற்றுக்கொண்டு கோபர்களிடத்தும் சொல்லிக்கொண்டு தேரில் ஏறினார்.

47. 65. நந்தகோபர் முதலியவர்கள் பற்பல காணிக்கைகளை எடுத்துக்கொண்டு உத்தவரருகில் சென்று அன்பினால் கண்களில் நீர்ததும்பப் பின்வருமாறு கூறினார்கள்.

---

47. 61. உத்தவர் நினைத்த வண்ணம் இன்றும் பிருந்தாவனத்தில் செடி கொடிகளில் இருக்கிறார் என்பது ஐதிஹ்யம்.

காளிந்தீ கூறியது :—உத்தவருக்கு பதரி ஸாதனபூமி, கோகுலம் பலபூமி, கோகுலத்தில் அவர் நித்யவாஸம் செய்கிறார்.

'கோவர்த்தன-கிரி-நிகடே ஸகீஸ்தலே தத்ரஜ:காம: | தத்ரத்யாங்குரவல்லீ-ரூபேணாஸ்தே ஸ உத்தவோ நூனம் ||'

அவரை நினைத்து பஜனை செய்தால் அவர் வருவார் என்று காளிந்தீ கூறினாள். அவரும் அங்கு அவ்வாறே தோன்றினார்.

ஆஜகாமோத்தவ: ஸ்ரக்வீ, ச்யாம: பீதாம்பராவ்ருத: | ' —பாகவத மாகாத்மியம்.

कर्मभिर्भ्राम्यमाणानां यत्र क्वापीश्वरेच्छया ।
मंगलाचरितैर्दानै रतिर्नः कृष्ण ईश्वरे ॥ ४७.६७ ॥

एवं सभाजितो गोपैः कृष्णभक्त्या नराधिप ।
उद्धवः पुनरागच्छन्मथुरां कृष्णपालिताम् ॥ ४७.६८ ॥

कृष्णाय प्रणिपत्याह भक्त्युद्रेकं व्रजौकसाम् ।
वसुदेवाय रामाय राज्ञे चोपायनान्यदात् ॥ ४७.६९ ॥

अथ विज्ञाय भगवान् सर्वात्मा सर्वदर्शनः ।
सैरन्ध्र्याः कामतप्तायाः प्रियमिच्छन् गृहं ययौ ॥ ४८.१ ॥

गृहं तमायान्त-मवेक्ष्य साऽऽसनात् सद्यः समुत्थाय हि जातसंभ्रमा ।
यथोपसंगम्य सखीभिरच्युतं सभाजयामास सदासनादिभिः ॥ ४८.३ ॥

---

47. 67. 'கருமங்களுக்கிணங்க ஈசுவரனுடைய இச்சையால் எவ்விடத்தில் நாங்கள் சுழன்றுகொண்டிருந்தாலும் எங்களுடைய புண்ணியச் செயல்களுக்கும் தானதருமங்களுக்கும் பயனாக எங்களுக்கு ஈசுவரனாகிய கிருஷ்ணனிடத்தில் பக்தி நிலைத்திருக்கட்டும்.'

47. 68. அரசே! இவ்விதம் கிருஷ்ணபக்திமிக்க கோபர்களால் மரியாதை செய்யப்பெற்று உத்தவர் கிருஷ்ணனால் பரிபாலிக்கப்பட்ட மதுராபுரிக்குத் திரும்பி வந்தார்.

47. 69. கிருஷ்ணனை வணங்கி கோகுலவாசிகளுடைய அதிசயமான பக்தியின் பெருமையைக் கிருஷ்ணனிடத்தில் தெரிவித்தார். வசுதேவருக்கும் பலராமருக்கும் அரசனுக்கும் காணிக்கைகளைக் கொடுத்தார்.

48. 1. பிறகு ஸர்வாத்மாவும் ஸர்வஜ்ஞனுமான பகவான் காமத்தால் தவிக்கும் ஸைரந்திரியின் நிலையை உணர்ந்து அவளுக்குப் பிரியத்தைச் செய்ய விரும்பி அவள் வீட்டிற்குச் சென்றார்.

48. 3. தனது வீட்டிற்கு வந்துகொண்டிருந்த அவரைக் கண்ணுற்று அவள் பரபரப்புடன் உடனே ஆஸனத்தைவிட்டெழுந்து முறைப்படி அணுகி அச்சுதனைத் தோழிகளுடன்கூடி உத்தமமான ஆஸனம் முதலியன அளித்து உபசரித்தாள்.

---

47. 69. ஒ. ஏவம் பக்தி: ஸகல-புவனே நேக்ஷிதா ந ச்ருதா வா
கிம் சாஸ்த்ரௌகை: கிமிஹ தபஸா கோபிகாப்யோ நமோ஽ஸ்து ।
இத்யானந்தாகுல-முபகதம் கோகுலாதுத்தவம் தம்
த்ருஷ்ட்வா ஹ்ருஷ்டோ குருபுரபதே பாஹி மாம் ஆமயௌகாத் ॥
—நாராயணீயம். 76. 11

तथोद्धवः साधु तयाभिपूजितो न्यषीददुर्व्या-मभिमृश्य चासनम् ।
कृष्णोऽपि तूर्णं शयनं महाधनं विवेश लोकाचरितान्यनुव्रतः ॥ ४८.४ ॥

तस्यै कामवरं दत्वा मानयित्वा च मानदः ।
सहोद्धवेन सर्वेशः स्वधामागमदर्चितम् ॥ ४८.१० ॥

दुराराध्यं समाराध्य विष्णुं सर्वेश्वरेश्वरम् ।
यो वृणीते मनो-ग्राह्य-मसत्त्वात् कुमनीष्यसौ ॥ ४८.११ ॥

अक्रूर-भवनं कृष्णः सहरामोद्धवः प्रभुः ।
किंचिच्चिकीर्षयन् प्रागादक्रूर-प्रियकाम्यया ॥ ४८.१२ ॥

स तान् नरवरश्रेष्ठानाराद् वीक्ष्य स्वबान्धवान् ।
प्रत्युत्थाय प्रमुदितः परिष्वज्याभ्यनन्दत ॥ ४८.१३ ॥

ननाम कृष्णं रामं च स तैरप्यभिवादितः ।
पूजयामास विधिवत् कृतासन-परिग्रहान् ॥ ४८.१४ ॥

---

48. 9. அவ்வாறே (உடன்வந்த) உத்தவரும் அவளால் நன்கு உபசரிக்கப்பட்டார். ஆனால் அவர் ஆஸனத்தைக் கையால் தொட்டுவிட்டுத் தரையில் உட்கார்ந்தார். கிருஷ்ணனோ உலக நடவடிக்கையை யனுசரித்துத் தாமதிக்காமல் விலையுயர்ந்த படுக்கையில் உட்கார்ந்தார்.

48. 10. பக்தர்களுக்குக் கௌரவமளிக்கும் ஸர்வேசுவரன் அவள் விரும்பிய காமவரத்தைக் கொடுத்து கௌரவித்து உத்தவருடன் ஸம்பத்து நிறைந்த தன் வீட்டுக்குச் சென்றார்.

48. 11. ஈசுவரருக்கெல்லாம் ஈசுவரரும் ஆராதித்தற்கரியவருமான விஷ்ணுவை ஆராதித்து எவனொருவன் விஷய சுகத்தைப் பிரார்த்திப்பானோ அவன் புத்தி கெட்டவன். ஏனென்றால் (விஷயசுகம்) மிக அற்பமானது.

48. 12. பிரபுவான கிருஷ்ணன் அக்ரூரருடைய ஆசையைப் பூர்த்தி செய்ய விரும்பியும் அவரைக்கொண்டு ஒரு காரியத்தை நடத்த விரும்பியும் பலராமருடனும் உத்தவருடனும் அக்ரூரருடைய வீட்டிற்குச் சென்றார்.

48. 13-14. மனித சிரேஷ்டர்களும் தமது பந்துக்களுமாகிய அவர்கள் தூரத்தில் வருவதைக்கண்ட அக்ரூரர் மகிழ்ச்சி பொங்க எதிர்கொண்டு சென்று தழுவிக்கொண்டு அவர்களைப் புகழ்ந்து நமஸ்கரித்தார். அவர்களாலும் அவர் நமஸ்கரிக்கப்பட்டார். பின்பு முறைப்படி அவர்களை ஆஸனத்திலமர்த்திப் பூஜை செய்தார்.

---

48. 4. कृष्णोऽपि नूत्नं । 48. 10. स्वधामागमदद्भिमत् ।
48. 13. परिष्वज्याभिवाद्य च । பா. பே.

अक्रूर उवाच—

अद्येश नो वसतयः खलु भूरि-भागा
यः सर्वदेवपितृभूतनृदेवमूर्तिः ।
यत्पादशौचसलिलं त्रिजगत् पुनाति
स त्वं जगद्गुरु-रधोक्षज याः प्रविष्टः ॥ ४८.२५ ॥

श्रीभगवानुवाच—

त्वं नो गुरुः पितृव्यश्च श्लाघ्यो बन्धुश्च नित्यदा ।
वयं तु रक्ष्याः पोष्याश्च अनुकंप्याः प्रजा हि वः ॥ ४८.२९ ॥

भवद्विधा महाभागा निषेव्या अर्हसत्तमाः ।
श्रेयस्कामै-र्नृभिर्नित्यं देवाः स्वार्था न साधवः ॥ ४८.३० ॥

न ह्यम्मयानि तीर्थानि न देवा मृच्छिलामयाः ।
ते पुनन्त्युरुकालेन दर्शनादेव साधवः ॥ ४८.३१ ॥

स भवान् सुहृदां वै नः श्रेयाञ्छ्रेय-श्चिकीर्षया ।
जिज्ञासार्थं पाण्डवानां गच्छस्व त्वं गजाह्वयम् ॥ ४८.३२ ॥

அக்ரூரர் கூறியது—

48. 25. ஈசனே! அதோக்ஷஜனே! எவர் தேவர்கள், பிதிருக்கள், மனிதர்கள் முதலியவர்களின் ஸர்வஸ்வரூபியோ, எவருடைய பாதத்தையலம்பிய தீர்த்தம் மூவுலகையும் பரிசுத்தமாக்குகிறதோ, அப்படிப்பட்ட ஜகத்குருவாகிய நீங்கள் பிரவேசித்த எங்கள் வாஸஸ்தலங்கள் இப்போது மகாபாக்கியம் பெற்றவையாயின,

ஸ்ரீ பகவான் கூறியது—

48. 29. நீங்கள் எங்களுக்கு குரு; தந்தையின் சகோதரர்; சிறந்த பந்து; எப்போதுமே நாங்கள் உமது கருணைக்கும் ரக்ஷணைக்கும் போஷணைக்கும் தகுதியான பிரஜைகள்.

48. 30. நன்மையை நாடும் மனிதர்களால் மகாபாகவதர்களும் பூஜைக்குரியவர்களுமான தங்களைப்போன்றவர்கள்தான் எப்போதும் சேவிக்கத்தக்கவர்கள். (பூஜைக்குரிவர்களாய்க் கருதப்படும்) தேவர்கள் சுயகாரியவாதிகள்; ஸாதுக்கள் அப்படிப்பட்டவர்களல்லர்.

48. 31. ஜலமயமானவைமட்டுந் தீர்த்தங்களல்ல; மண்ணுலும் கல்லாலும் செய்த விக்கிரஹங்கள்மட்டுந் தெய்வங்களல்ல; அவை நாளடைவில் புனிதத்தையளிக்கின்றன. ஸாதுக்களோ தரிசித்தமாத்திரத்திலேயே பயனளிக்கிறார்கள்.

48. 32. நீரே நமது மித்திரர்களிற் சிறந்தவர்; அப்படிப்பட்ட நீங்கள் பாண்டவர்களுக்கு நன்மை செய்வதற்காக அவர்களுடைய நிலைமையை யறிந்துவரும் பொருட்டு ஹஸ்தினுபுரத்திற்குச் செல்லவேண்டும்.

---

48. 30. भवद्विधा भागवताः । பா. பே.

पितर्युपरते बालाः सहमात्रा सुदुःखिताः ।
आनीताः स्वपुरं राज्ञा वसन्त इति शुश्रुम ॥ ४८.३३ ॥

तेषु राजांबिकापुत्रो भ्रातृपुत्रेषु दीनधीः ।
समो न वर्तते नूनं दुष्पुत्र-वशगोऽन्धदृक् ॥ ४८.३४ ॥

गच्छ जानीहि तद्वृत्त-मधुना साध्वसाधु वा ।
विज्ञाय तद्विधास्यामो यथा शं सुहृदां भवेत् ॥ ४८.३५ ॥

श्रीशुक उवाच—

इत्यक्रूरं समादिश्य भगवान् हरिरीश्वरः ।
संकर्षणोद्धवाभ्यां वै ततः स्वभवनं ययौ ॥ ४८.३६ ॥

स गत्वा हस्तिनपुरं पौरवेन्द्रयशोंकितम् ।
ददर्श तत्रांबिकेयं स भीष्मं विदुरं पृथाम् ॥ ४९.१ ॥

सह पुत्रं च बाह्लीकं भारद्वाजं सगौतमम् ।
कर्णं सुयोधनं द्रौणिं पाण्डवान् सुहृदोऽपरान् ॥ ४९.२ ॥

---

48. 33. தந்தை இறந்தபின் சிறுவர்களான பாண்டவர்கள் திருதராஷ்டிர மகாராஜனால் குந்தியுடன் தனது பட்டணத்திற்கு அழைத்துவரப்பட்டுள்ளார்கள் என்றும் அங்கு மிகவும் துன்பமான வாழ்க்கை நடத்துகிறார்கள் என்றும் கேள்விப் படுகிறோம்.

48. 34. அம்பிகா புத்திரனும் விவேகமற்றவனுமாகிய அரசன் திருதராஷ்டிரன் தன்னுடைய கெட்ட புத்திரர்களின் வசப்பட்டிருப்பதால் தன் தம்பிகளாகிய பாண்டவர்களிடத்தில் சமமாக நடந்துகொள்ளவில்லை என்பது திண்ணம்.

48. 35. இப்போது அவர்களுடைய நிலைமையின் நன்மை தீமைகளை அறிய வேண்டும். அறிந்தபின் பந்துக்களாகிய அவர்களுக்கு எவ்வகையால் சுகமுண்டாகுமோ அதைச் செய்வோம். ஆகையால் நீங்கள் செல்லவேண்டும்.

ஸ்ரீ சுகர் கூறியது—

48. 36. ஸர்வேசுவரனான கிருஷ்ண பகவான் இவ்விதம் அக்ரூரரிடம் கூறி விட்டு பலராமருடனும் உத்தவருடனும் தனது மாளிகை சென்றார்.

49. 1–2. புரு வம்சத்தரசர்களுடைய கீர்த்தி விளங்கும் ஹஸ்தினபுரிக்குச் சென்று, அக்ரூரர் அவ்விடத்தில் பீஷ்மருடன் திருதராஷ்டிரரையும் விதுரரையும் குந்தியையும், பாஹ்லீகரையும், அவருடைய புத்திரர் ஸோமதத்தரையும் கிருபருடன் துரோணரையும், கர்ணனையும் துரியோதனனையும் அசுவத்தாமாவையும், பாண்டவர்களையும் மற்ற பந்துக்களையும் கண்டார்.

उवास कतिचिन्मासान् राज्ञो वृत्त-विवित्सया ।
दुष्प्रजस्याल्पसारस्य खलच्छन्दानुवर्तिनः ॥ ४९.४ ॥

पृथा तु भ्रातरं प्राप्त-मक्रूर-मुपसृत्य तम् ।
उवाच जन्मनिलयं स्मरन्त्यश्रुकलेक्षणा ॥ ४९.७ ॥

अपि स्मरन्ति नः सौम्य पितरौ भ्रातरश्च मे ।
भगिन्यो भ्रातृपुत्राश्च जामयः सख्य एव च ॥ ४९.८ ॥

भ्रात्रेयो भगवान् कृष्णः शरण्यो भक्तवत्सलः ।
पैतृष्वसेयान् स्मरति रामश्चांबुरुहेक्षणः ॥ ४९.९ ॥

सापत्न-मध्ये शोचन्तीं वृकाणां हरिणीमिव ।
सान्त्वयिष्यति मां वाक्यैः पितृहीनांश्च बालकान् ॥ ४९.१० ॥

कृष्ण कृष्ण महायोगिन् विश्वात्मन् विश्व-भावन ।
प्रपन्नां पाहि गोविन्द शिशुभिश्चावसीदतीम् ॥ ४९.११ ॥

---

49. 4. கெட்ட பிள்ளைகளைப் பெற்று தைரியங்குன்றி துஷ்டர்களின் விருப்பத்திசைந்து நடக்கும் அரசனுடைய நடத்தையைக் கவனிப்பதற்காகச் சிலமாதங்கள் அங்கு வசித்தார்.

49. 7. அங்ஙனம் வந்து தங்கிய சகோதரராகிய அக்ரூரரை அணுகிக் குந்திதேவி தான் பிறந்ததையும் புகுந்ததையும் நினைந்து கண்ணீர்ப் பெருக்குடன் பின்வருமாறு கூறினள்.

49. 8. 'சித்தம் அழகியவரே! என் பெற்றோர்களும் சகோதரர்களும் சகோதரிகளும் சகோதர புத்திரர்களும் குலஸ்திரீகளும் தோழிகளும் எங்களை நினைக்கின்றார்களா?

49. 9. என் சகோதரன் புத்திரனும் ஸர்வலோக சரண்யனும் பக்தவத்ஸலனுமான கிருஷ்ண பகவானும், தாமரைக்கண்ணனான பலராமனும் தங்கள் அத்தை புத்திரர்களை நினைக்கிறார்களா?

49. 10. 'செந்நாய்களுக்கிடையில் அகப்பட்ட மான்போல் சத்துருகளுக்கிடையில் வருந்தும் என்னையும் தந்தையை இழந்த என் குழந்தைகளையும் நல்வார்த்தைகளால் அவர்கள் சமாதானம் செய்வார்களா?

49. 11. 'கிருஷ்ண! கிருஷ்ண! மகாயோகியே! ஸர்வஸ்வரூபியும் ஸர்வரக்ஷகனும் ஆகியவனே! கோவிந்தா! குழந்தைகளுடன் அல்லல்படுபவளும் உன்னைச் சரணடைந்தவளுமாகிய என்னைக் காத்தருள்வாய்.

---

49. 4. दुष्प्रजस्याल्प-वीर्यस्य ।

नान्यत्तव पदांभोजात् पश्यामि शरणं नृणाम्।
बिभ्यतां मृत्युसंसारा-दीश्वरस्यापवर्गिकात् ॥ ४९.१२ ॥

नमः कृष्णाय शुद्धाय ब्रह्मणे परमात्मने।
योगेश्वराय योगाय त्वामहं शरणं गता ॥ ४९.१५ ॥

श्रीशुक उवाच—

समदुःखसुखोऽक्रूरो विदुरश्च महायशाः।
सान्त्वयामासतुः कुन्तीं तत्पुत्रोत्पत्तिहेतुभिः ॥ ४९.१५ ॥

यास्यन् राजान-मभ्येत्य विषमं पुत्रलालसम्।
अवदत् सुहृदां मध्ये बन्धुभिः सौहृदोदितम् ॥ ४९.१६ ॥

अक्रूर उवाच—

भो भो वैचित्रवीर्य त्वं कुरूणां कीर्तिवर्धन।
भ्रातर्युपरते पाण्डावधुनाऽऽसनमास्थितः ॥ ४९.१७ ॥

धर्मेण पालयन्नुर्वीं प्रजाः शीलेन रंजयन्।
वर्तमानः समः स्वेषु श्रेयः कीर्तिमवाप्स्यसि ॥ ४९.१८ ॥

---

49. 12. 'இறப்புக்கும் பிறப்புக்கும் பயந்த மனிதர்களுக்கு முக்தியளிக்கும் ஸர்வேசுவரனை உன்னுடைய பாதகமலத்தைத் தவிர வேறு புகலிடத்தை நான் காண வில்லை.

49. 13. 'பரிசுத்தனும் பரப்பிரம்மமும் பரமாத்மாவும் யோகேச்வரனும் யோகஸ்வரூபியும் கிருஷ்ணனும் ஆகிய உன்னை நான் சரணடைகிறேன்.'

ஸ்ரீ சுகர் கூறியது—

49. 15: அவளுடைய இன்பத்திலும் துன்பத்திலும் சமமாகப் பங்குகொண்ட அக்ரூரரும் புகழ்மிக்க விதுரரும் குந்திதேவியை தருமபுத்திரர் முதலிய பிள்ளைகள் பிறந்த வரலாறுகளை ஞாபகமூட்டிச் சமாதானப்படுத்தினர்கள்.

49. 16. திரும்பிச் செல்ல எண்ணியபோது அக்ரூரர் தன் பிள்ளைகளிடத்தில் அன்பின்மிகுதியால் தம்பி பிள்ளைகளிடம் கபடமாய் நடக்கும் அரசனிடம் சென்று உறவினர்கள் நட்பினுல் கூறிய வார்த்தைகளைச் சிநேகிதர்களின் மத்தியில் கூறினர்,

அக்ரூரர் கூறியது—

49. 17. 'கௌரவர்களின் புகழை வளர்ப்பவரும் விசித்ரவீர்யரின் புதல்வருமாகிய அரசே! சகோதரர் இறந்தபின் நீர் இப்போது சிம்மாசனத்தில் உறைகின்றீர்.

49. 18. 'தர்மமாக பூமியைப் பரிபாலித்து, நற்குணத்தால் பிரஜைகளை மகிழ்வித்து, உற்ருருறவினரிடத்தில் சமமாக நடந்துகொண்டு உயர்நலத்தையும் புகழையும் அடைவீராக.

अन्यथा त्वाचरंल्लोके गर्हितो यास्यसे तमः।
तस्मात् समत्वे वर्तस्व पाण्डवेष्वात्मजेषु च ॥ ४९.१९ ॥

धृतराष्ट्र उवाच--

यथा वदति कल्याणीं वाचं दानपते भवान्।
तथानया न तृप्यामि मर्त्यः प्राप्य यथामृतम् ॥ ४९.२६ ॥

तथापि सूनृता सौम्य हृदि न स्थीयते चले।
पुत्रानुराग-विषमे विद्युत् सौदामिनी यथा ॥४९.२७ ॥

श्रीशुक उवाच--

इत्यभिप्रेत्य नृपतेरभिप्रायं स यादवः।
सुहृद्भिः समनुज्ञातः पुनर्यदुपुरीमगात् ॥ ४९.३० ॥

शशंस रामकृष्णाभ्यां धृतराष्ट्र-विचेष्टितम्।
पाण्डवान् प्रति कौरव्य यदर्थं प्रेषितः स्वयम् ॥ ४९.३१ ॥

इति श्रीमद्भागवते महापुराणे अष्टादशसाहस्रिकायां
संहितायां पारमहंस्यां श्रीवैयासिक्यां हयग्रीव-
ब्रह्मविद्यायां दशमस्कन्धे
पूर्वार्धं समाप्तम् ॥

---

49. 19. 'மாறாக நடந்தால், உலகோரால் நிந்திக்கப்பட்டுப் பின் நரகத்தை அடைவீர். ஆகையால் பாண்டவர்களிடத்திலும் உமது பிள்ளைகளிடத்திலும் சமமாயிருப்பீராக.'

திருதராஷ்டிரர் கூறியது—

49. 26. 'அக்ரூரரே! நீர் நன்மை பயக்கும் வார்த்தையை உள்ளபடி பேசுகிறீர். அமுதத்தைப் பெற்றும் திருப்தியடையாத ஒரு மனிதனைப்போல் நான் திருப்தியடையாமலிருக்கிறேன்.

49. 27. எனினும், சித்தம் அழகியவரே! பிள்ளைகளிடம் அளவுகடந்த அன்பால் சஞ்சலப்படும் என் மனதில் உமது நல்வார்த்தைகள் பிரகாசிக்கும் மின்னல் போல் நிலைக்கவில்லை.

ஸ்ரீ சுகர் கூறியது—

49. 30. யாதவரான அக்ரூரர் அரசனின் இவ்வபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டு உறவினரிடம் விடைபெற்று மீண்டும் யதுபுரிக்குத் திரும்பினார்.

49. 31. குருவம்சத்தரசே! எதற்காகத் தான் அனுப்பப்பட்டாரோ அந்தச் செய்தியை, அதாவது பாண்டவர்களிடம் உள்ள திருதராஷ்டிரருடைய நடத்தையைப் பலராமருக்கும் கிருஷ்ணனுக்கும் எடுத்துக் கூறினார்.

இங்ஙனம் பரமஹம்ஸரான வியாஸபுத்திரர் உபதேசித்ததும்
பதினெண்ணாயிரம் சுலோகங்கள் அடங்கியதும்
ஹயக்கிரீவப் பிரம்மவித்தை எனப்படுவதுமான
ஸ்ரீமத் பாகவத மகாபுராணத்தில்
பத்தாவது ஸ்கந்தம் பூர்வபாகம்
முற்றும்.

———

49. 27. ஒ. ஜானாமி தர்மம் ந சமே ப்ரவ்ருத்தி: ஜானாம்யதர்மம் ந சமே நிவ்ருத்தி:। த்வயா ஹ்ருஷீகேச ஹ்ருதி ஸ்திதேன யதா நியுக்தோऽஸ்மி ததா கரோமி ॥

मथुरालीला (२) ॥ २७ ॥

॥ जरासन्धेन सह युद्धम् ॥

श्रीशुक उवाच—

अस्तिः प्राप्तिश्च कंसस्य महिष्यौ भरतर्षभ ।
मृते भर्तरि दुःखार्ते ईयतुः स्म पितुर्गृहान् ॥ ५०.१ ॥

पित्रे मगधराजाय जरासन्धाय दुःखिते ।
वेदयांचक्रतुः सर्व-मात्मवैधव्यकारणम् ॥ ५०.२ ॥

स तदप्रियमाकर्ण्य शोकामर्षयुतो नृप ।
अयादवीं महीं कर्तुं चक्रे परममुद्यमम् ॥ ५०.३ ॥

अक्षौहिणीभिर्विंशत्या तिसृभिश्चापि संवृतः ।
यदुराजधानीं मथुरां न्यरुणत् सर्वतोदिशम् ॥ ५०.४ ॥

निरीक्ष्य तद्बलं कृष्ण उद्वेलमिव सागरम् ।
स्वपुरं तेन संरुद्धं स्वजनं च भयाकुलम् ॥ ५०.५ ॥

चिन्तयामास भगवान् हरिः कारणमानुषः ।
तद्देशकालानुगुणं स्वावतारप्रयोजनम् ॥ ५०.६ ॥

---

27. மதுரா லீலை (2) தொடர்ச்சி

ஜராஸந்த யுத்தம்

ஸ்ரீ சுகர் கூறியது—

50. 1. பரதசிரேஷ்டா! கம்ஸனுடைய பட்டமஹிஷிகள், அஸ்தி, ப்ராப்தி என்ற இருவரும் பர்த்தா இறந்ததும் துக்கத்திலாழ்ந்து தங்கள் தகப்பன் வீடு சென்றனர்.

50. 2. மகத ராஜனான தங்கள் தகப்பன் ஜராஸந்தனிடம் துக்கத்திலாழ்ந்த அவர்கள் தங்கள் வைதவ்யத்திற்குக் காரணத்தையெல்லாம் தெரிவித்தார்கள்.

50, 3. அரசே! விரும்பத்தகாத அச் செய்தியைக் கேட்டு அவன் கோபமும் வருத்தமும் அடைந்து பூமியில் யாதவப் பூண்டே இல்லாமல் செய்யப் பெரும் முயற்சியை மேற்கொண்டான்.

50. 4. இருபத்திமூன்று அக்ஷௌஹிணி ஸேனைகளால் சூழப்பெற்று யாதவர் களின் ராஜதானியாகிய மதுராபுரியை நாற்புறமும் முற்றுகையிட்டான்.

50. 5-6. காரணத்துடன் மனித உருவெடுத்த நாராயணனாகிய கிருஷ்ண பகவான் பொங்கிவரும் சமுத்திரம்போன்ற அச் சேனையையும் அதனால் தகையப்பட்ட தனது பட்டணத்தையும் பயத்தால் நடுங்கும் தனது பிரஜைகளையும் பார்த்து அந்த தேச காலத்திற்கிசைந்தவகையில் தனது அவதாரப் பிரயோஜனத்தைப்பற்றிச் சிந்தித்தார்.

हनिष्यामि बलं ह्येतद् भुवि भारं समाहितम् ।
मागधेन समानीतं वश्यानां सर्वभूभुजाम् ॥ ५०.७ ॥

अक्षौहिणीभिः संख्यातं भटाश्वरथकुंजरैः ।
मागधस्तु न हन्तव्यो भूयः कर्ता बलोद्यमम् ॥ ५०.८ ॥

एवं ध्यायति गोविन्द आकाशात् सूर्यवर्चसौ ।
रथावुपस्थितौ सद्यः ससूतौ सपरिच्छदौ ॥ ५०.११ ॥

आयुधानि च दिव्यानि पुराणानि यदृच्छया ।
दृष्ट्वा तानि हृषीकेशः संकर्षणमथाब्रवीत् ॥ ५०.१२ ॥

पश्यार्य व्यसनं प्राप्तं यदूनां त्वावतां प्रभो ।
एष ते रथ आयातो दयितान्यायुधानि च ॥ ५०.१३ ॥

यानमास्थाय जह्येतद् व्यसनात् स्वान् समुद्धर ।
एतदर्थं नौ जन्म साधूनामीश शर्मकृत् ॥ ५०.१४ ॥

प्रवर्तिता भीरुभयावहा मृधे मनस्विनां हर्षकरीः परस्परम् ।
विनिघ्नतारीन् मुसलेन दुर्मदान् संकर्षणेनापरिमेयतेजसा ॥ ५०.२८ ॥

---

50. 7-8. தனக்கு வசப்பட்ட அரசர்களின் சேனைகள் இருபத்துமூன்று அக்ஷௌஹிணிகள் காலாட்படை குதிரை தேர் யானைகளுடன் பூமிக்குப் பாரமாயிருப்பதெல்லாம் ஜராஸந்தனால் ஒன்று சேர்த்துக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இவற்றை அழிக்கப்போகிறேன். ஆனால் ஜராஸந்தன் இப்போது கொல்லத்தகுந்தவனல்ல. மறுபடியும் சேனைகளைச் சேர்த்து வரட்டும்.

50. 11-12. பகவான் இவ்வாறு யோசிக்கும்போது அதே க்ஷணத்தில் உபகரணங்களுடனும் ஸாரதியுடனும் கூடிச் சூரியன்போல் பிரகாசிக்கும் இரண்டு தேர்கள் ஆகாயத்திலிருந்து தன் சமீபத்தில் இறங்கி வந்ததையும் அவற்றுடன் எதிர்பாராமல் வந்த தெய்வசக்தி வாய்ந்த பழைய ஆயுதங்களையும் பார்த்து அப்போது கிருஷ்ணன் பலராமரிடம் பின்வருமாறு கூறினார்.

50. 13. 'பிரபுவே! அண்ணலே! உம்மால் காக்கப்பெற்ற யாதவர்களுக்கு வந்திருக்கும் விசனத்தைப் பாரும். இதோ, உமக்குத் தேர் வந்திருக்கிறது. உமக்குப் பிரியமான ஆயுதங்களும் வந்திருக்கின்றன.

50. 14, 'அண்ணலே! தேரில் ஆரோகணித்து இந்தச் சத்துரு சேனையை முடித்துக்கட்டும். நமது பந்துக்களை விசனத்திலிருந்து கைதூக்கிவிடும். நல்லார்க்கு நன்மை செய்யும் நமது அவதாரம் இதற்காகவேயன்றோ ?'

50. 28-29. (ஸ்ரீ கிருஷ்ணனும் பலராமனும் இவ்வாறு யோசித்துக் கவசம் பூண்டு தேரில் ஏறிச் சிறிய சேனையுடன் பட்டணத்திலிருந்து கிளம்பினார்கள். கொடிய யுத்தமும் தொடங்கிற்று.) பயந்தவர்களுக்குப் பயத்தைப் பெருக்கிக்கொண்டும் வீரர்களுக்குப் பரஸ்பரம் மகிழ்ச்சியைப் பெருக்கிக்கொண்டும் நூற்றுக்கணக்கான இரத்த ஓடைகள் போரில் ஓட ஆரம்பித்தன. அளவிடமுடியாத பராக்கிரமமுடையவரும் கொழுத்த சத்துருக்களை உலக்கையால் கொல்லுகிறவருமான பலராமரால் ஜராஸந்தனால் பாலிக்கப்பட்டுச் சமுத்திரம்போல் கடக்கமுடியாமல் பயங்கரமாகவும் அளவுகடந்ததாகவுமிருந்த சேனை அழிக்கப்பட்டது. ஐயனே! ஜகதீசுவரர்களான வசுதேவபுத்திரர்களுக்கு அது கேவலம் விளையாட்டாக இருந்தது.

बलं तदंगार्णवदुर्गभैरवं दुरन्तपारं मगधेन्द्र–पालितम् ।
क्षयं प्रणीतं वसुदेवपुत्रयो-र्विक्रीडितं तज्जगदीशयोः परम्
॥ ५०.२९ ॥

स्थित्युद्भवान्तं भुवनत्रयस्य यः समीहतेऽनन्तगुणः स्वलीलया ।
न तस्य चित्रं परपक्षनिग्रह-स्तथापि मर्त्यानुविधस्य वर्ण्यते
॥ ५०.३० ॥

जग्राह विरथं रामो जरासन्धं महाबलम् ।
हतानीकावशिष्टासुं सिंहः सिंहमिवौजसा ॥ ५०.३१ ॥

बध्यमानं हतारातिं पाशै-र्वारुण-मानुषैः ।
वारयामास गोविन्द-स्तेन कार्यचिकीर्षया ॥ ५०.३२ ॥

हतेषु सर्वानीकेषु नृपो बार्हद्रथ-स्तदा ।
उपेक्षितो भगवता मगधान् दुर्मना ययौ ॥ ५०.३५ ॥

एवं सप्तदशं-कृत्व-स्तावत्यक्षौहिणी-बलः ।
युयुधे मागधो राजा यदुभिः कृष्णपालितैः ॥ ५०.४२ ॥

---

50. 30. அளவற்ற குணங்களையுடையவரும் மூவுலகத்தையும் தனது லீலையால் ஆக்கியளித்துத் துடைப்பவரும் எவரோ அவருக்குச் சத்துரு சேனையைக் கொல்வது அதிசயமல்ல. ஆயினும் மனிதப்போக்கை யனுசரித்த பகவானுடைய லீலை வர்ணிக்கப் படுகிறது.

50. 31. சேனைகள் அழிக்கப்பட்டுத் தான்மட்டும் உயிருடன் தப்பித் தேரில்லாமல் சென்ற மகாபலசாலியான ஜராஸந்தனை பலராமர் தனது வீரியத்தால் சிங்கம் சிங்கத்தைப் பிடிப்பதுபோல் பிடித்தார்.

50. 32. எதிரிசேனைகளையழித்த அந்த ஜராஸந்தனை வருணபாசங்களாலும் மனித பாசங்களாலும் கட்டுவதைக் கண்ணுற்ற பகவான் அவனால் இன்னும் ஆகவேண்டியிருப்பதை எண்ணி அவனை விடுவித்தார்.

50. 35. பிருஹத்ரதனின் புத்திரனான ஜராஸந்தன் சேனைகளெல்லாம் கொல்லப் பட்டபின் கிருஷ்ணனால் அலக்ஷியமாய் விடப்பட்டு மனமுடைந்து மகத தேசம் சென்றான்.

50. 42. அம்மகத தேசாதிபதி பதினேழு தடவை முன்போலவே இருபத்தி மூன்று அக்ஷௌஹிணி சேனைகளுடன் வந்து எதிர்த்துக் கிருஷ்ணனால் பாலிக்கப்பட்ட யாதவர்களுடன் போர் புரிந்தான்.

---

50. 29. तुरङ्गार्णव ।

50. 31. सिंहः क्षुद्रमृगं यथा ।

अक्षिण्वंस्तद्बलं सर्वं वृष्णयः कृष्णतेजसा ।
हतेषु स्वेष्वनीकेषु त्यक्तोऽयादरिभि-र्नृपः ॥ ५०.४३ ॥

अष्टादशमसंग्रामे आगामिनि तदन्तरा ।
नारदप्रेषितो वीरो यवनः प्रत्यदृश्यत ॥ ५०.४४ ॥

रुरोध मथुरामेत्य तिसृभि-र्म्लेच्छ-कोटिभिः ।
नृलोके चाप्रतिद्वन्द्वो वृष्णीञ्छ्रुत्वाऽऽत्मसम्मितान् ॥ ५०.४५ ॥

तं दृष्ट्वाचिन्तयत् कृष्णः संकर्षण-सहायवान् ।
अहो यदूनां वृजिनं प्राप्तं ह्युभयतो महत् ॥ ५०.४६ ॥

यवनोऽयं निरुन्धेऽस्मानद्य तावन्महाबलः ।
मागधोऽप्यद्य वा श्वो वा परश्वो वाऽऽगमिष्यति ॥ ५०.४७ ॥

आवयोर्युध्यतोरस्य यद्यागन्ता जरासुतः ।
बन्धून् वधिष्यत्यथवा नेष्यते स्वपुरं बली ॥ ५०.४८ ॥

तस्मादद्य विधास्यामो दुर्गं द्विपद-दुर्गमम् ।
तत्र ज्ञातीन् समाधाय यवनं घातयामहे ॥ ५०.४९ ॥

इति सम्मन्त्र्य भगवान् दुर्गं द्वादशयोजनम् ।
अन्तःसमुद्रे नगरं कृत्स्नाद्भुत-मचीकरत् ॥ ५०.५० ॥

---

50. 43. விருஷ்ணி குலத்து யாதவர்கள் கிருஷ்ணனுடைய பராக்கிரம பலத்தால் ஜராஸந்தனுடைய சேனையனைத்தையும் நாசம் செய்தனர். அவ்வரசன் தன் சேனா பலத்தையிழந்து தனது எதிரிகளால் விடப்பட்டு ஊர் சென்றான்.

50. 44. பதினெட்டாவது யுத்தம் வருவதற்குள் இடையில் நாரதரால் அனுப்பப் பட்ட காலயவனன் என்ற வீரன் (மதுரையில்) தென்பட்டான்.

50. 45. மனித உலகில் தன்னை எதிர்ப்பவனைக் காணாத அவன் விருஷ்ணிகளைத் தனக்குச் சமமானவர்கள் என்று கேள்விப்பட்டு மூன்றுகோடி மிலேச்சர்களுடன் மதுரை சென்று முற்றுகையிட்டான்.

50. 46-49. பலராமருடன்கூடிய கிருஷ்ணன் அவனைப் பார்த்ததும் 'இரண்டு பக்கங்களிலிருந்தும் பெரும் கஷ்டம் வந்துவிட்டதே. அந்தோ! இப்போது இந்தக் காலயவனன் நம்மைத் தகைகிறான். ஜராஸந்தனும் இன்றோ நாளையோ மறுநாளோ வருவான். நாமிருவரும் போர் புரியும்பொழுது வருவானாகில் பலம் மிகுந்த அவன் பந்துக்களைக் கொல்லுவான் அல்லது தனது பட்டணத்திற்குக் கொண்டுபோவான் ஆகையால் மனிதர்கள் அணுகமுடியாத ஒரு கோட்டையை இப்பொழுதே கட்டுவோம். அங்கே பந்துக்களைக் கொண்டு போய் வைத்து விட்டுக் காலயவனனைக் கொல்லுவோம்.'

50. 50. என்று இவ்வாறு மந்திராலோசனை செய்து பகவான் உடனே சமுத்திரத்தின் மத்தியில் பன்னிரண்டு யோஜனை விஸ்தாரமுள்ளதும் முழுதும் ஆச்சரியமானதும் ஆகிய நகரத்தைவிசுவகர்மாவைக்கொண்டு நிர்மாணித்தார்.

तत्र योगप्रभावेण नीत्वा सर्वजनं हरिः ।
प्रजापालेन रामेण कृष्णः समनुमन्त्रितः ।
निर्जगाम पुरद्वारात् पद्ममाली निरायुधः ॥ ५०.५८ ॥

तं विलोक्य विनिष्क्रान्त-मुज्जिहान-मिवोडुपम् ।
दर्शनीयतमं श्यामं पीतकौशेय-वाससम् ॥ ५१.१ ॥

लक्षणै-र्नारदप्रोक्तै-र्नान्यो भवितु-मर्हति ।
वासुदेवो ह्ययमिति पुमाञ्छ्रीवत्सलाञ्छनः ।
चतुर्भुजोऽरविन्दाक्षो वनमाल्यतिसुन्दरः ॥ ५१.४ ॥

निरायुध-श्चलन् पद्भ्यां योत्स्येऽनेन निरायुधः ॥ ५१.५ ॥

इति निश्चित्य यवनः प्राद्रवन्तं पराङ्मुखम् ।
अन्वधाव-ज्जिघृक्षुस्तं दुरापमपि योगिनाम् ॥ ५१.६ ॥

हस्तप्राप्त-मिवात्मानं हरिणा स पदे पदे ।
नीतो दर्शयता दूरं यवनेशोऽद्रिकन्दरम् ॥ ५१.७ ॥

---

50. 58. ஸ்ரீ ஹரியான கிருஷ்ணபகவான் தனது யோக மகிமையால் எல்லா ஜனங்களையும் அங்கு கொண்டுபோய்ச் சேர்த்துப் பிரஜைகளைத் தான் பரிபாலிப்பதாய் ஒப்புக்கொண்ட பலராமரிடம் அனுமதி பெற்றுத் தாமரை மாலையணிந்து நிராயுதபாணியாய் நகரத்தின் வாயிலிலிருந்து வெளிக் கிளம்பினார்.

51. 1-6. சந்திரன் உதித்தாற்போல் பட்டணத்திலிருந்து வெளிக் கிளம்புகிறவரும், கண்ணுக்கினியவரும், நீலவர்ணரும், மஞ்சட்பட்டாடையணிந்தவரும் ஆகிய அவரைப் பார்த்து 'ஸ்ரீவத்ஸத்தை அடையாளமாக உடையவன், நான்கு கைகளுள்ளவன், தாமரைக்கண்ணன், வனமாலைபூண்டவன், மிக அழகியவன்' என்று நாரதரால் கூறப்பட்ட லக்ஷணங்களால் இந்த மனிதன்தான் வாஸுதேவனாக இருக்கவேண்டும்; வேறொருவன் அல்ல; இவன் ஆயுதமில்லாதவன், கால்நடையாகவே வருகிறான்; ஆகையால் ஆயுதமில்லாதவனாகவே இவனுடன் நான் போர் புரிவேன்' என்று நிச்சயித்துக்கொண்டு அந்த யவனன் திரும்பியோடுகிறவரும் யோகிகளுக்குங்கூட அடைய முடியாதவருமான அவரைப் பிடிக்க விரும்பிப் பின்தொடர்ந்து ஓடினான்.

51. 7. அடிக்கடி தன்னைக் கையில் பிடிபட்டவர்போல் காண்பிக்கும் கிருஷ்ணனால் அந்த யவன ராஜன் தூரத்திலிருந்த ஒரு மலைக்குகைக்குக் கொண்டுபோகப் பட்டான்.

---

51. 6. எட்டியும் எட்டாதிருப்பவன் பகவான். பாவியாகிய காலயவனனுக்கு அவர் எப்படிப் பிடிபடுவார்? அவர் ஏறின மலையில் படியுமில்லை பிடியுமில்லை.

---

50. 58. प्रयागस्याथ रामेण ।

पलायनं यदुकुले जातस्य तव नोचितम्।
इति क्षिपन्ननुगतो नैनं प्रापाहताशुभः ॥ ५१.८ ॥

एवं क्षिप्तोऽपि भगवान् प्राविशद् गिरिकन्दरम्।
सोऽपि प्रविष्ट-स्तत्रान्यं शयानं ददृशे नरम् ॥ ५१.९ ॥

नन्वसौ दूरमानीय शेते मामिह साधुवत्।
इति मत्वाच्युतं मूढस्तं पदा समताडयत् ॥ ५१.१० ॥

स उत्थाय चिरं सुप्तः शनैरुन्मील्य लोचने।
दिशो विलोकयन् पार्श्वे तमद्राक्षीदवस्थितम् ॥ ५१.११ ॥

स तावत्तस्य रुष्टस्य दृष्टिपातेन भारत।
देहजेनाग्निना दग्धो भस्मसा-दभवत् क्षणात् ॥ ५१.१२ ॥

स इक्ष्वाकुकुले जातो मान्धातृतनयो महान्।
मुचुकुन्द इति ख्यातो ब्रह्मण्यः सत्यसंगरः ॥ ५१.१४ ॥

---

51. 8. 'யது குலத்தில் பிறந்த உனக்குப் புறங்காட்டியோடுவது தகுதியல்ல' என்று நிந்தித்துக்கொண்டு பின்தொடரும் அவன் பாவந்தீராதவனுகையால் கிருஷ்ணனை அடையவில்லை.

51. 9. இப்படி நிந்திக்கப்பட்டபோதிலும் பகவான் அதைக் கவனியாமல் மலைக்குகையினுள் புகுந்தார். அவனும் உட்புகுந்ததும் அங்கே தூங்கிக்கொண்டிருந்த மற்றொரு மனிதரைக் கண்டான்.

51. 10. 'அந்த வாசுதேவனே என்னை இவ்வளவுதூரம் இழுத்துவந்து இங்கே ஸாதுபோல் உறங்குகிறுன்' என்று நிச்சயித்து மூடனுன அந்த யவனன் அம்மனிதரைக் கிருஷ்ணன் என்று எண்ணிக் காலால் உதைத்தான்.

51. 11. வெகுகாலமாக உறங்கிக்கொண்டிருந்த அம்மனிதர் எழுந்து மெதுவாகக் கண்களைத் திறந்து நான்கு திசைகளிலும் பார்ப்பவராய்ப் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த அந்த யவனனைக் கண்டார்.

51. 12. பாரதரே! கண்டதுங் கோபங்கொண்ட அவருடைய சரீரத்திலிருந்து கிளம்பிய அக்னியால் எரிக்கப்பட்டு அந்த யவனன் நொடிப்பொழுதில் சாம்பலாக ஆனுன்,

51. 14. அந்த மகான் இக்ஷ்வாகு குலத்தில் பிறந்தவர், மாந்தாதாவின் புத்திரர் ஸத்தியப் பிரதிஜ்ஞையுடையவர், பிராம்மண பக்தர், முசுகுந்தர் எனப் பிரசித்தி பெற்றவர். (அவர் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த போரில் வெகுகாலம் தேவலோகத்திலிருந்து தேவர்களுக்கு உதவிபுரிந்தவர். தேவர்கள் குஹப் பெருமானை ஸேனு நாயகராக அடைந்ததும் இவருக்கு விடைகொடுத்து பூலோகத்திற்கனுப்பினுர்கள். தேவ வருஷங்களில் பல கடந்துவிட்டதால் இவர் பூலோகம் வரும்போது இவருடைய பந்துக்களோ பிரஜைகளோ ஒருவரும் இல்லை. மிகவும் களைத்திருந்த இவர் ஒரு குகையில் புகுந்து வெகுகாலம் யோக நித்திரைபோன்ற உறக்கத்திலிருந்தார். அவருடைய அந்நித்திரையை இடையில் கலைப்பவர்கள் சாம்பலாக வேண்டும் என்று தேவர்களின் சாபம் ஏற்பட்டிருந்தது.)

यवने भस्मसान्नीते भगवान् सात्वतर्षभः।
आत्मानं दर्शयामास मुचुकुन्दाय धीमते ॥ ५१.२३ ॥

श्री भगवानुवाच—

वरान् वृणीष्व राजर्षे सर्वान् कामान् ददामि ते।
मां प्रपन्नो जनः कश्चिन्न भूयोऽर्हति शोचितुम् ॥ ५१.४४ ॥

मुचुकुन्द उवाच—

न कामयेऽन्यं तवपादसेवना-दकिंचनप्रार्थ्यतमाद् वरं विभो।
आराध्य कस्त्वां ह्यपवर्गदं हरे वृणीत आर्यो वरमात्मबन्धनम् ॥ ५१.५६ ॥

तस्माद्विसृज्याशिष ईश सर्वतो रजस्तमस्सत्वगुणानुबन्धनाः।
निरंजनं निर्गुणमद्वयं परं त्वां ज्ञप्तिमात्रं पुरुषं व्रजाम्यहम् ॥ ५१.५७ ॥

श्री भगवानुवाच—

सार्वभौम महाराज मतिस्ते विमलोर्जिता।
वरैः प्रलोभितस्यापि न कामै-र्विहता यतः ॥ ५१.५९ ॥

---

51. 23. யவனன் சாம்பலாக்கப்பட்டதும் பக்தர்களைக் காப்பாற்றும் பகவான் விவேகியான முசுகுந்தருக்குத் தனது காக்ஷியை அளித்தார்.

ஸ்ரீ பகவான் கூறியது—

51. 44. ராஜரிஷியே! உமக்கிஷ்டமான வரங்களைக் கேட்கலாம். ஆசைகளனைத்தையும் உமக்கு நான் அளிக்கிறேன். என்னைச் சரணடைந்த எம்மனிதனும் மறுபடி வருத்தமடைதல் தகாது.

முசுகுந்தர் கூறியது—

51. 56. பிரபுவே! துறவிகள் விரும்பும் உமது திருவடி சேவையைத் தவிர வேறு எந்த வரத்தையும் நான் விரும்பவில்லை. கிருஷ்ண! விவேகியான எவன் தான் மோக்ஷத்தையளிக்கும் உம்மை யாராதித்துத் தனது பந்தத்திற்குக் காரணமான வரத்தைக் கேட்பான்?

51. 57. ஈசா! ஆகையால் ரஜோகுணம் தமோகுணம் ஸத்துவகுணம் இவைகளிலிருந்துண்டான (ஐசுவரியம் சத்துருவிநாசம் தர்மம் முதலிய) ஆக்கங்களை முற்றுந் துறந்து புண்யபாபருபமான தோஷங்களில்லாதவரும் முக்குணவடிவான மாயைக் கப்பாற்பட்டவரும் இரண்டில்லாதவரும் விஜ்ஞானபியும் பரமபுருஷருமான உம்மைச் சரணடைகின்றேன்.

ஸ்ரீ பகவான் கூறியது—

51. 59. பூமண்டலாதிபதியான அரசே! உமது மதி களங்கமற்றது, திடமானது. வரங்களால் ஆசைகாட்டப்பட்டபோதிலும் அவ்வாசைகளால் அசைக்கப்படவில்லையல்லவா?

---

51. 23. காலயவனனுக்கு இருட்டாயிருந்தது முசுகுந்தனுக்குப் பிரகாசித்தது.

विचरस्व महीं कामं मय्यावेशितमानसः ।
अस्त्वेवं नित्यदा तुभ्यं भक्ति-र्मय्यनपायिनी ॥ ५१.६२ ॥

जन्मन्यनन्तरे राजन् सर्वभूतसुहृत्तमः ।
भूत्वा द्विजवरस्त्वं वै मामुपैष्यसि केवलम् ॥ ५१.६४ ॥

भगवान् पुनराव्रज्य पुरीं यवनवेष्टिताम् ।
हत्वा म्लेच्छबलं निन्ये तदीयं द्वारकां धनम् ॥ ५२.५ ॥

नीयमाने धने गोभि-र्नृभिश्चाच्युतचोदितैः ।
आजगाम जरासन्ध-स्त्रयोविंशत्यनीकपः ॥ ५२.६ ॥

विलोक्य वेगरभसं रिपुसैन्यस्य माधवौ ।
मनुष्यचेष्टामापन्नौ राजन् दुद्रुवतु-र्द्रुतम् ॥ ५२.७ ॥

विहाय वित्तं प्रचुर-मभीतौ भीतभीतवत् ।
पद्भ्यां पद्मपलाशाभ्यां चेरतुर्बहुयोजनम् ॥ ५२.८ ॥

पलायमानौ तौ दृष्ट्वा मागधः प्रहसन् बली ।
अन्वधावद् रथानीकै-रीशयो-रप्रमाणवित् ॥ ५२.९ ॥

---

51. 62. என்னிடத்தில் நிலைத்த மனத்துடன் பூமியில் நீர் இஷ்டம்போல் சஞ்சரிக்கலாம். உமக்கு என்னிடம் பக்தி எப்பொழுதும் குறைவுபடாமலிருக்கட்டும்.

51. 64. அரசே! அடுத்த பிறவியில் நீர் எல்லாவுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தண சிரேஷ்டராகத் தோன்றிப் பரமாத்மாவான என்னை நிச்சயமாக வந்தடைவீர்.

(இவ்வாறு அனுக்கிரகிக்கப்பட்ட இக்ஷ்வாகு புத்திரரான முசுகுந்தர் பகவானைப் பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்து குகையிலிருந்து கிளம்பி வடக்கு நோக்கிச் சென்று பதரிகாசிரமத்தையடைந்து தவத்தால் ஸ்ரீ ஹரியை ஆராதிக்கலானார்.)

52. 5. ஸ்ரீ கிருஷ்ணபகவான் யவனர்களால் சூழப்பட்ட மதுராபுரிக்குத் திரும்பி வந்து அம்மிலேச்சர்களின் சேனையை அழித்து அவர்களுடைய பொருளைத் துவாரகைக்குக் கொண்டுபோனார்.

52. 6. கிருஷ்ணனால் ஏவப்பட்டு மனிதர்களாலும் எருதுகள் மேலும் அப்பொருள்கள் கொண்டுபோகப்படும்போது மீண்டும் இருபத்திமூன்று அக்ஷௌஹிணி சேனைகளுடன் ஜராஸந்தன் வந்து சேர்ந்தான்.

52. 7. அரசே! சத்துருசேனையின் வேகத்தைக் கண்ணுற்றுப் பலராமரும் கிருஷ்ணனும் மனித இயற்கையைப் பின்பற்றி விரைந்து ஓடினார்கள்.

52. 8. பயமில்லாத அவர்கள் ஏராளமான பொருள்களை எறிந்துவிட்டுப் பயந்தவர்களைவிட அதிகமாய்ப் பயந்தவர்கள்போல் தாமரையொத்த பாதங்களால் பல யோஜனை தூரம் சென்றனர்.

52. 9. அந்த ஸர்வேசுவரர்களுடைய மகிமையை யறியாதவனும் முரட்டு பலமுடையவனுமான ஜராஸந்தன் அவர்கள் ஓடுவதைப் பார்த்து நகைத்துத் தேர்ப் படைகளுடன் பின்தொடர்ந்தான்.

प्रद्रुत्य दूरं संश्रान्तौ तुंगमारुहतां गिरिम् ।
प्रवर्षणाख्यं भगवान् नित्यदा यत्र वर्षति ॥ ५२.१० ॥

गिरौ निलीनावाज्ञाय नाधिगम्य पदं नृप ।
ददाह गिरि-मेधोभिः समन्तादग्नि-मुत्सृजन् ॥ ५२.११ ॥

तत उत्पत्य तरसा दह्यमानतटादुभौ ।
दशैकयोजनोत्तुंगा-न्निपेततु-रधो भुवि ॥ ५२.१२ ॥

अलक्ष्यमाणौ रिपुणा सानुगेन यदूत्तमौ ।
स्वपुरं पुनरायातौ समुद्रपरिखां नृप ॥ ५२.१३ ॥

सोऽपि दग्धाविति मृषा मन्वानो बलकेशवौ ।
बलमाकृष्य सुमहन्मगधान् मागधो ययौ ॥ ५२.१४ ॥

आनर्त्ताधिपतिः श्रीमान् रैवतो रेवतीं सुताम् ।
ब्रह्मणा चोदितः प्रादाद् बलायेति पुरोदितम् ॥ ५२.१५ ॥

---

52. 10. வெகுதூரம் சென்று களைப்படைந்த அவர்கள் தேவேந்திரன் எக்காலத்தும் மழைபொழியும் சிறப்புப்பெற்ற பிரவர்ஷணம் எனும் உயர்ந்த மலைமீது ஏறினார்கள்.

52. 11. அரசே! மலையில் அவர்கள் மறைந்ததைக் கண்டும் அவர்கள் இருந்த இடத்தை அறியமாட்டாமல் (ஜராஸந்தன்) மலையைச் சுற்றிக் கட்டைகளால் தீயை மூட்டி எரித்தான்.

52. 12. பலராமனும் கிருஷ்ணனும் மலைச்சாரலில் தீ பரவியபோது பதினொரு யோஜனை பரந்துயர்ந்த அம்மலைமீதிருந்து உயரக் கிளம்பி பூமியில் குதித்தார்கள்.

52. 13. அரசே! யதுசிரேஷ்டர்களான பலராமனும் கிருஷ்ணனும் பரிவாரங்களுடன் பகைவர் கண்ணுக்குத் தெரியாமல் ஸமுத்திரத்தால் சூழப்பட்ட தங்கள் பட்டணத்திற்குத் திரும்பிச் சென்றார்கள்.

52. 14. மகததேசத்தரசனான ஜராஸந்தன் பலராமனும் கிருஷ்ணனும் எரிந்து போயிருக்கவேண்டும் என்று வீணான நம்பிக்கையுடன் பெருஞ்சேனையைத் திருப்பியழைத்துக்கொண்டு தனது தேசம் போய்ச் சேர்ந்தான்.

52. 15. ஆனர்த்த தேசத்தரசனும் மிகுந்த செல்வம் படைத்தவனுமான ரைவத மஹாராஜா தனது பெண்ணான ரேவதியை பிரம்ம தேவரால் ஏவப்பட்டுப் பலராமனுக்கு விவாகம் செய்வித்தார் என்பது ஏற்கெனவே கூறப்பட்டது.

---

52. 15. 9. 3. 28-36 பார்க்க.

द्वारकालीला ॥ २८ ॥

॥ रुक्मिणी-विवाहः ॥

श्रीशुक उवाच—

भगवानपि गोविन्द उपयेमे कुरूद्वह ।
वैदर्भीं भीष्मकसुतां श्रियो मात्रां स्वयंवरे ॥ ५२.१६ ॥

प्रमथ्य तरसा राज्ञः शाल्वादींश्चैद्यपक्षगान् ।
पश्यतां सर्वलोकानां तार्क्ष्य-पुत्रः सुधामिव ॥ ५२.१७ ॥

राजोवाच—

भगवञ्छ्रोतु-मिच्छामि कृष्णस्यामित-तेजसः ।
यथा मागध-शाल्वादीन् जित्वा कन्या-मुपाहरत् ॥ ५२.१९ ॥

श्रीशुक उवाच—

राजाऽऽसीद् भीष्मको नाम विदर्भाधिपति-र्महान् ।
तस्य पंचाभवन् पुत्राः कन्यैका च वरानना ॥ ५२.२१ ॥

रुक्म्यग्रजो रुक्मरथो रुक्मबाहु-रनन्तरः ।
रुक्मकेशो रुक्ममाली रुक्मिण्येषां स्वसा सती ॥ ५२.२२ ॥

---

28. துவாரகா லீலை

ருக்மிணீ கல்யாணம்

ஸ்ரீ சுகர் கூறியது—

52. 16. குருசிரேஷ்டரே! இதற்குமேல் ஸ்ரீ கிருஷ்ணபகவான் விதர்ப்ப நாட்டில் பிறந்தவளும், மகாலக்ஷ்மியின் அவதாரமுமான பீஷ்மக மகாராஜாவின் பெண்ணை ஸ்வயம்வரத்தில் விவாகம் செய்துகொண்டார்.

52. 17. கருடன் அமிருதத்தை அடைந்ததுபோல் தனது பராக்கிரமத்தால் சிசுபாலன் முதலியோரது பக்கத்தைச் சேர்ந்த சால்வன் முதலிய அரசர்களை ஜயித்து எல்லா ஜனங்களும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே (கிரகித்துப்போய் விவாஹம் செய்துகொண்டார்.)

அரசன் கூறியது—

52. 19. பகவத்ஸ்வரூபியே! ஜராஸந்தன் ஸால்வன் முதலியவர்களை ஜயித்து கன்னிப்பெண்ணை எங்ஙனம் கிரகித்தார் என்ற வீரியமிக்க கிருஷ்ணனுடைய சரித்தத்தைக் கேட்க ஆசைப்படுகிறேன்.

ஸ்ரீ சுகர் கூறியது—

52. 21. விதர்ப்பதேசத்திற்கதிபதியான பீஷ்மகன் என்ற ஒரு மகாராஜா இருந்தார். அவருக்கு ஐந்து புத்திரர்களும் அழகிய முகம்படைத்த ஒரு பெண்ணும் இருந்தார்கள்.

52. 22. ருக்மீ என்பவன் மூத்தவன்; ருக்மரதன், ருக்மபாகு, ருக்மகேசன், ருக்மமாலி என்பவர்கள் தம்பிமார்கள்; குணவதியான ருக்மிணி இவர்கள் தங்கை.

सोपश्रुत्य मुकुन्दस्य रूपवीर्यगुणश्रियः ।
गृहागतै-र्गीयमाना-स्तं मेने सदृशं पतिम् ॥ ५२.२३ ॥

तां बुद्धिलक्षणौदार्य-रूपशील-गुणाश्रयाम् ।
कृष्णश्च सदृशीं भार्यां समुद्वोढुं मनो दधे ॥ ५२.२४ ॥

बन्धूना-मिच्छतां दातुं कृष्णाय भगिनीं नृप ।
ततो निवार्य कृष्णद्विड् रुक्मी चैद्य-ममन्यत ॥ ५२.२५ ॥

तदवेत्यासितापांगी वैदर्भी दुर्मना भृशम् ।
विचिन्त्याप्तं द्विजं कंचित् कृष्णाय प्राहिणोद् द्रुतम् ॥ ५२.२६ ॥

द्वारकां स समभ्येत्य प्रतीहारैः प्रवेशितः ।
अपश्यदाद्यं पुरुष-मासीनं कांचनासने ॥ ५२.२७ ॥

दृष्ट्वा ब्रह्मण्यदेवस्त-मवरुह्य निजासनात् ।
उपवेश्यार्हयांचक्रे यथाऽऽत्मानं दिवौकसः ॥ ५२.२८ ॥

तं भुक्तवन्तं विश्रान्त-मुपगम्य सतांगतिः ।
पाणिनाभिमृशन् पादावव्यग्रस्तमपृच्छत ॥ ५२.२९ ॥

---

52. 23. அவள் அரண்மனைக்கு வந்தவர்களால் புகழப்பெற்ற முகுந்தருடைய அழகு, வீரியம், குணம், ஐசுவரியம் முதலியவைகளைப்பற்றிக்கேட்டு அவரையே தனக் கேற்ற கணவனென்று எண்ணினாள்.

52. 24. ஸ்ரீ கிருஷ்ணனும் புத்தி, லக்ஷணம், பெருந்தன்மை, அழகு, சீலம், குணம் இவற்றிற்கு உறைவிடமான அவளையே தனக்கேற்ற பத்தினியாக மணந்து கொள்ள மனங் கொண்டார்.

52. 25. அரசே! ருக்மி தன் சகோதரியைப் பந்துக்கள் கிருஷ்ணனுக்குக் கொடுக்க விரும்பியபோது அதைத் தடுத்துக் கிருஷ்ணனின் விரோதியான சேதி நாட்டரசனுக்குக் கொடுக்க நிச்சயித்தான்.

52. 26. கருவிழிபடைத்த ருக்மிணி அதையறிந்து மிகவும் கவலைகொண்டவளாய் யோசித்துப் பார்த்து விசுவாஸமுள்ள ஒரு பிராம்மணரைக் கிருஷ்ணனிடம் விரைவாக தூதனுப்பினாள்.

52. 27. அவர் துவாரகையடைந்து வாயிற்காப்பானால் உள்ளே அழைத்துச் செல்லப்பட்டு அங்கு பொன்மயமான ஆஸனத்தில் வீற்றிருந்த ஆதி புருஷனைக் கண்டார்.

52. 28. பிராம்மணர்களைத் தெய்வமாகக் கருதும் கிருஷ்ணன் அவரைப் பார்த்ததும் சிம்மாஸனத்திலிருந்து இறங்கி அதில் அவரை வீற்றிருக்கச் செய்து தேவர்கள் தன்னைப் பூஜிப்பதுபோல் அவரைப் பூஜித்தார்.

52. 29. அவர் போஜனம் செய்து களைப்பாறியதும் அவரிடம் சென்று அவர் பாதங்களைத் தமது கரங்களால் தடவிக்கொடுத்து ஸாவதானமாக அவரைப் பின் வருமாறு வினவினார்.

---

52. 25. ருக்மி கிருஷ்ணனைப் பகைக்கக் காரணம் என்னவென்றால் அவன் செய்த பாவந்தான். பகவானை துவேஷிக்க வேறு என்ன காரணம் உண்டு?

कच्चिद् द्विजवरश्रेष्ठ धर्मस्ते वृद्धसंमतः ।
वर्तते नातिकृच्छ्रेण सन्तुष्टमनसः सदा ॥ ५२.३० ॥

सन्तुष्टो यर्हि वर्तेत ब्राह्मणो येन केनचित् ।
अहीयमानः स्वाद्धर्मात् स ह्यस्याखिलकामधुक् ॥ ५२.३१ ॥

असन्तुष्टोऽसकृल्लोका-नाप्नोत्यपि सुरेश्वरः ।
अकिंचनोऽपि संतुष्टः शेते सर्वांगविज्वरः ॥ ५२.३२ ॥

विप्रान् स्वलाभसन्तुष्टान् साधून् भूतसुहृत्तमान् ।
निरहंकारिणः शान्तान् नमस्ये शिरसाऽसकृत् ॥ ५२.३३ ॥

कच्चिद् वः कुशलं ब्रह्मन् राजतो यस्य हि प्रजाः ।
सुखं वसन्ति विषये पाल्यमानाः स मे प्रियः ॥ ५२.३४ ॥

ब्राह्मण उवाच—

यतस्त्व-मागतो दुर्गं निस्तीर्येह यदिच्छया ।
सर्वं नो ब्रूह्यगुह्यं चेत् किं कार्यं करवाम ते ॥ ५२.३५ ॥

---

52. 30. 'பிராம்மண சிரேஷ்டரே! எப்பொழுதும் சந்தோஷமான மனதுடைய உமக்குப் பெரியோர்களுக்குச் சம்மதமான தர்மங்கள் அதிக சிரமமின்றி நடந்து வருகின்றனவா ?

52. 31. ஒரு பிராம்மணன் தனக்குக் கிடைத்தது எதுவானாலும் அதைக் கொண்டு சந்தோஷமடைந்து தன் தருமத்திலிருந்து நழுவாமலிருந்தால் அதுவே அவனுக்கு அனைத்தையும் அளிக்கும் காமதேனு போலாகும்.

52. 32. ஸந்தோஷமடையாதவன் தேவேந்திரனாயிருந்தாலும் (ஒன்றுவிட்டொன்றாக) உலகங்களை அடைந்த வண்ணமிருப்பான். ஸந்தோஷமடைந்தவன் ஒன்றுமற்றவனாயிருந்தாலும் எல்லா அங்கங்களிலும் தாபம் நீங்கியவனாய் இன்புற்றிருப்பான்.

52. 33. தங்களுக்குக் கிடைத்ததைக்கொண்டு சந்தோஷமடைகிறவர்களும் நல்லொழுக்கமுடையவர்களும் உயிர்களிடம் சிறந்த நட்புக்கொண்டவர்களும் அகங்காரமில்லாதவர்களும் அமைதியுடையவர்களுமான பிராம்மணர்களை மீண்டும் மீண்டும் தலைவணங்குகிறேன்.

52. 34. பிராம்மணரே! உங்களுக்கு அரசனிடமிருந்து க்ஷேமம் உண்டாகிறதா? எவனுடைய ராஜ்யத்தில் பாலிக்கப்படும் பிரஜைகள் சுகமாக வசிக்கின்றனரோ அந்த அரசனே எனக்குப் பிரியமானவன்.

பிராம்மணர் கூறியது—

52. 35. கடத்தற்குக் கஷ்டமான கடலைத்தாண்டி நீர் எங்கிருந்து வருகிறீர்? எதை விரும்பி? அது ரகசியமில்லாவிட்டால் அனைத்தையும் எனக்குச் சொல்லலாம். நான் உமக்கு என்ன காரியம் செய்யவேண்டும்?

---

52. 32. **சேதே—ஸுகமாஸ்தே ।**
விஜ்வர :—ஒ. மயி ஸர்வாணி கர்மாணி ஸந்ந்யஸ்யாத்மாத்ம-சேதஸா ।
நிராசீர்-நிர்மமோ பூத்வா யுத்த்யஸ்வ விகதஜ்வர : ॥
—கீ. 3. 30.

52. 34. **விஷயே—தேசே ।**

---

52. 35. **करवाम वद् ।**

एवं संपृष्ट-संप्रश्नो ब्राह्मणः परमेष्ठिना ।
लीलागृहीतदेहेन तस्मै सर्व-मवर्णयत् ॥ ५२.३६ ॥

रुक्मिण्युवाच--

श्रुत्वा गुणान् भुवनसुन्दर शृण्वतां ते
निर्विश्य कर्णविवरै-र्हरतोऽङ्गतापम् ।
रूपं दृशां दृशिमता-मखिलार्थ-लाभं
त्वय्यच्युताविशति चित्त-मपत्रपं मे ॥ ५२.३७ ॥

---

52. 36. லீலையாக உடலெடுத்த பகவானால் இவ்விதம் வினவப்பட்ட பிராம்மணர் அவரிடம் அனைத்தையும் விளக்கிக் கூறினார்.

ருக்மிணி பகவானுக்குச் சொல்லியனுப்பியது—

52. 37. புவனசுந்தரா! அச்சுதா! கேட்பவர்களின் காதுகளின் வழி உட்புகுந்து அவர்களுடைய தாபத்தைப் போக்குகின்ற உமது குணங்களையும் கண் படைத்தவர்களுக்கு கண்படைத்த பயன் அனைத்துமாயிருக்கும் உமது ரூபத்தையும் பற்றிக் கேட்டு என் மனம் வெட்கத்தைவிட்டு உம்மிடம் செல்லுகிறது.

---

52. 37. ருக்மிணியின் லிகிதம் :

ஸ்ரீமதே ஸத்யகாம, ஸத்யஸ்ங்கல்ப, ஸர்வகர்ம, ஸர்வகாம, ஸர்வகந்த, ஸர்வரஸ, ஸர்வஸங்கல்பாதி-குணவதே। ஸர்வஜ்ஞ-ஸர்வசக்திஸமன்விதாய, ஸர்வாந்தர்யாமினே, துஷ்டநிக்ரஹ-சிஷ்டபரிபாலனாய, பக்தஜன-காமித-காமவர்ஷி-மஹாமேக நீலமேக-ஸமுஜ்வலித-வித்யுத்புஞ்ஜ-கல்ப-திவ்ய-பீதாம்பர-தாரிணே, ஸ்ரீவத்ஸ-கௌஸ்துபாதி-சோபிதாய, தீனதயாபர-மூர்த்தயே, ஸ்ரீக்ருஷ்ணாய சதக்ருத்வ: ஸஹஸ்ரக்ருத்வச்ச நமோ நம:।

த்வத்ப்ரஸாதம் பரம் காங்க்ஷே க்ருஷ்ண நான்யத்து காமயே।
மனஸா வசஸா நூனம் மத்பாணிக்ரஹணம் குரு॥ —க்ருஷ்ணலீலாதரங்கிணீ.

ஒ. எற்றைக்கு மேழேழு பிறவிக்கு முந்தன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கே நாமாட்செய்வோம்
மற்றை நங்காமங்கள் மாற்றேலோரெம்பாவாய். —திருப்பாவை.

ஒ. முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னும் அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சியானாள்
அன்னையு மத்தனையு மன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தே ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன்றாளே. —அப்பர்.

ஒ. மற்றிருந்தீர்கட்கறியலாகா மாதவனென்பதோரன்பு தன்னை
உற்றிருந்தேனுக் குரைப்பதெல்லாம் ஊமையரோடு செவிடர் வார்த்தை.

का त्वा मुकुन्द महती कुलशीलरूप-
विद्या-वयो-द्रविण-धामभि-रात्मतुल्यम् ।
धीरा पतिं कुलवती न वृणीत कन्या
काले नृसिंह नरलोकमनोऽभिरामम् ॥ ५२.३८ ॥

तन्मे भवान् खलु वृतः पतिरंग जाया-
मात्मार्पितश्च भवतोऽत्र विभो विधेहि ।
मा वीरभाग-मभिमर्शतु चैद्य आराद्
गोमायुवन् मृगपते-र्बलि-मंबुजाक्ष ॥ ५२.३९ ॥

---

52. 38. முகுந்தா! புருஷஸிம்ஹமே! நற்குலத்திலுதித்தவளும் புத்திசாலியும் நற்குணங்களில் சிறந்தவளுமான எந்தக் கன்னிகைதான் உரிய பருவத்தில் குலம் ரூபம் சீலம் வயது வித்தை பொருள் அழகு இவைகளில் தனக்கு இசைவான வரும் மனித சமூகத்தின் மனதிற்கினியவருமான உம்மைக் கணவனாக அடைய விரும்பாமலிருப்பாள்?

52. 39. மனதிற்குகந்தவரே! ஆகையால் தாங்களே எனக்குப் பதி என வரித்திருக்கிறேன். பிரபுவே! ஆவி அர்ப்பணம் செய்யப்பட்டது. இங்கு வந்து என்னை உமது மனைவியாகச் செய்து கொள்ளவேண்டும். தாமரைக்கண்ணா! சிங்கத்தின் இரையை நரி கவர்ந்தாற்போல் வீரரான நீங்கள் அடையவேண்டிய என்னைச் சிசுபாலன் முந்திக்கொண்டு தீண்டிவிடக்கூடாது.

---

52. 38. ஒ. மாரிமலை முழைஞ்சில் மன்னிக்கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலே நீ பூவைப்பூ வண்ணா உன்
கோயில் நின்றிங்கனே போந்தருளிக் கோப்புடைய
சீரியசிங்காதனத்திருந்து யாம்வந்த
காரிய மாராய்ந்தருளேலோ ரெம்பாவாய். —திருப்பாவை.

52. 39. ஒ. வானிடை வாழு மவ்வானவர்க்கு
மறையவர் வேள்வியில் வகுத்த வவி
கானிடைத்திரிவதோர் நரிபுகுந்து
கடப்பதும் மோப்பதும் செய்வ தொப்ப
ஊனிடையாழி சங்குத்தமர்க்கென்று
உன்னித்தெழுந்த என் தடமுலைகள்
மானிடவர்க் கென்று பேச்சுப்படில்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே! —நாய்ச்சியார் திருமொழி.

पूर्तेष्टदत्त-नियम-व्रत-देवविप्र-
गुर्वर्चनादिभि-रलं भगवान् परेशः ।
आराधितो यदि गदाग्रज एत्य पाणिं
गृह्णातु मे न दमघोष-सुतादयोऽन्ये ॥ ५२.४० ॥

श्वोभाविनि त्वमजितोद्वहने विदर्भान्
गुप्तः समेत्य पृतनापतिभिः परीतः ।
निर्मथ्य चैद्यमगधेन्द्र-बलं प्रसह्य
मां राक्षसेन विधिनोद्वह वीर्यशुल्काम् ॥ ५२.४१ ॥

अन्तः-पुरान्तरचरी-मनिहत्य बन्धूं-
स्त्वामुद्वहे कथमिति प्रवदाम्युपायम् ।
पूर्वेद्यु-रस्ति महती कुलदेवियात्रा
यस्यां बहि-र्नववधू-र्गिरिजामुपेयात् ॥ ५२.४२ ॥

यस्यांघ्रिपंकज-रजः-स्नपनं महान्तो
वांछन्त्युमापतिरिवात्म-तमोऽपहत्यै ।
यर्ह्यंबुजाक्ष न लभेय भवत्प्रसादं
जह्यामसून् व्रतकृशान् शतजन्मभिः स्यात् ॥ ५२.४३ ॥

---

52. 40. குளம் வெட்டுதல், யாகம், தானம், நியமம், விரதம் முதலியவற்றை அனுஷ்டித்தல், தேவர் பிராம்மணர் குரு ஆகியவர்களைப் பூஜித்தல் முதலியவற்றால் பரமேசுவரனாகிய பகவானை நான் நன்றாக ஆராதித்திருந்தால் கிருஷ்ணன் வந்து என்னைப் பாணிக்கிரணம் செய்துகொள்ள வேண்டும். சிசுபாலன் முதலிய பிறர் (என்னைத் தொடுதல்) கூடாது.

52. 41. ஒருவராலும் ஜயிக்கமுடியாதவரே! நாளையதினம் நடத்த உத்தேசித்திருக்கும் விவாகத்திற்கு நீங்கள் விதர்ப்பநாட்டிற்கு ரகசியமாகக் காவலுடன் வந்து சேனாதிபதிகளால் பின்தொடரப்பெற்று சிசுபாலன் ஜராஸந்தன் ஆகியோருடைய பரிவாரத்தைக் கலக்கி, வீரியத்தையே சுல்கமாக விரும்பும் என்னை பலாத்காரமாக கிரகித்து ராக்ஷஸ விதிப்படி விவாகம் செய்துகொள்ளுங்கள்.

52. 42. 'உனது பந்துக்களைக் கொல்லாமல் அந்தப்புரத்திலிருக்கும் உன்னை எப்படி நான் விவாகம் செய்து கொள்வது?' என்பீர்களேயானால் அதற்கொரு உபாயம் கூறுகிறேன். விவாகத்திற்கு முதல் நாள் குலதேவதையைப் பூஜிப்பதற்காக ஆடம்பரத்துடன் யாத்திரை போவதுண்டு. அதில் கல்யாணப்பெண் ஊருக்கு வெளியிலிருக்கும் கௌரியின் ஆலயத்திற்குப் போவாள்.

52. 43. தாமரைக்கண்ணா! எவருடைய திருவடிப் பொடியில் ஸ்நானம் செய்து அஜ்ஞானத்தைப் போக்கவேண்டுமென்று உமாபதிபோன்ற உலக நாயகர்களும் விரும்புகிறார்களோ அப்படிப்பட்ட உமது அனுக்கிரகத்தை நான் அடையாமற் போனால் விரதங்களால் உடலை நலியச் செய்து உயிரை விட்டுவிடுவேன். நூறு ஜன்மம் எடுப்பினும் அப்படிச் செய்து உமதருளைப் பெறுவேன்.

---

52. 40. **பூர்த்தம்**-கூபாதி ; **இஷ்டம்**-அக்னிஹோத்ராதி ; **தத்தம்**-ஹிரண்யாதி-**தானம்; நியம** :-தீர்த்தாடனாதி ; **வ்ரதம்**-க்ருச்ச்ராதி ॥

52. 41. விவாகம் எட்டுவகையெனக் கூறப்படும் :

ப்ராஹ்மோ-தைவஸ்-ததைவார்ஷ : ப்ராஜாபத்யஸ்-ததாஸுர : ।
காந்தர்வோ ராக்ஷஸச்சைவ பைசாசச்-சாஷ்டம : ஸ்ம்ருத: ॥

ब्राह्मण उवाच—

इत्येते गुह्यसन्देशा यदुदेव मयाऽऽहृताः।
विमृश्य कर्तुं यच्चात्र क्रियतां तदनन्तरम् ॥ ५२.४४ ॥

श्रीशुक उवाच—

वैदर्भ्याः स तु सन्देशं निशम्य यदुनन्दनः।
प्रगृह्य पाणिना पाणिं प्रहसन्निदमब्रवीत् ॥ ५३.१ ॥

श्री भगवानुवाच—

यथा निर्निद्रा मच्चित्ता रुक्मिणी रुचिरानना।
तथाहमपि तच्चित्तो निद्रां च न लभे निशि ॥ ५३.२ ॥

वेदाहं रुक्मिणा द्वेषान्ममोद्वाहो निवारितः।
तामानयिष्य उन्मथ्य राजन्यापसदान् मृधे।
मत्परा-मनवद्यांगी-मेधसोऽग्निशिखा-मिव ॥ ५३.३ ॥

श्रीशुक उवाच—

उद्वाहर्क्षं च विज्ञाय रुक्मिण्या मधुसूदनः।
रथः संयुज्यतामाशु दारुकेत्याह सारथिम् ॥ ५३.४ ॥

பிராம்மணர் கூறியது—

52. 44. யது தேவரே! இவைகளே என்னால் கொண்டுவரப்பட்ட இரகசியச் செய்திகள். இவ்விஷயத்தில் இனி எது செய்யத்தகுந்ததோ அதை நன்கு ஆலோசித்து விரைவில் செய்யுங்கள்.

ஸ்ரீ சுகர் கூறியது—

53. 1. விதர்ப்பராஜ கன்னிகை சொல்லியனுப்பிய அச் செய்தியைக் கேட்டு யது நந்தனர் அந்தப் பிராமணருடைய கைகளைத் தன் கைகளால் பிடித்துக்கொண்டு புன்முறுவலுடன் பின்வருமாறு கூறினார்.

ஸ்ரீ பகவான் கூறியது—

53. 2. அழகிய முகம்படைத்த ருக்மிணி என்னிடம் சித்தத்தை வைத்து எப்படி தூக்கமும் இல்லாமலிருக்கிறாளோ அப்படியே நானும் அவளிடம் சித்தத்தை வைத்து இரவில் தூங்குவதில்லை.

53. 3. துவேஷத்தால் ருக்மியினால் என்னுடைய விவாகம் தடுக்கப்பட்டதென்பதை நான் அறிவேன். அரசப்பதர்களைப் போரில் கலக்கி என்னையே சிந்தித்திருக்கும் குறைவொன்றுமில்லாத அவளைக் கட்டையைக் கடைந்து தீயெழுப்புவது போல் எடுத்து வருவேன்.

ஸ்ரீ சுகர் கூறியது—

53. 4. மதுஸூதனன் ருக்மிணியின் விவாக நக்ஷத்திரத்தை மனதிற்கொண்டு 'தாருகா! விரைவில் தேர் ஆயத்தமாகட்டும்' என்று ஸாரதியிடம் கூறினார்.

स चाश्वैः शैब्य-सुग्रीव-मेघपुष्प-बलाहकैः ।
युक्तं रथमुपानीय तस्थौ प्रांजलि-रग्रतः ॥ ५३.५ ॥

आरुह्य स्यन्दनं शौरि-र्द्विजमारोप्य तूर्णगैः ।
आनर्त्ता-देकरात्रेण विदर्भा-नगम-द्धयैः ॥ ५३.६ ॥

राजा स कुण्डिनपतिः पुत्रस्नेहवशं गतः ।
शिशुपालाय स्वां कन्यां दास्यन् कर्माण्यकारयत् ॥ ५३.७ ॥

एवं चेदिपती राजा दमघोषः सुताय वै ।
कारयामास मन्त्रज्ञैः सर्व-मभ्युदयोचितम् ॥ ५३.१४ ॥

कृष्णरामद्विषो यत्ताः कन्यां चैद्याय साधितुम् ।
यद्याहत्य हरेत् कृष्णो रामाद्यै-र्यदुभिर्वृतः ॥ ५३.१८ ॥

योत्स्यामः संहतास्तेन इति निश्चित-मानसाः ।
आजग्मु-र्भूभुजः सर्वे समग्रबलवाहनाः ॥ ५३.१९ ॥

---

53. 5. அவனும் சைப்யம் ஸுக்ரீவம் மேகபுஷ்பம் பலாஹகம் எனப் பெயர் கொண்ட குதிரைகள் பூட்டப்பெற்ற தேரைக் கொணர்ந்து நிறுத்திக் கைகூப்பி முன்னே நின்ருன்.

53. 6. கிருஷ்ணன் தேரில் ஏறிப் பிராம்மணரையும் ஏற்றிக்கொண்டு குதிரை களின் வேகத்தால் ஒரே இரவில் ஆனர்த்த தேசத்திலிருந்து விதர்ப்பதேசம் வந்து சேர்ந்தார்.

53. 7. குண்டினபுரிக்கதிபதியான பீஷ்மகராஜன் புத்திரனுடைய பிரீதிக்குக் கட்டுப்பட்டுத் தனது பெண்ணைச் சிசுபாலனுக்குக் கொடுப்பதற்காக ஏற்பாடுகளை நடத்தி வந்தார்.

53. 14. அவ்வாறே சேதிநாட்டரசனை தமகோஷ மகாராஜனும் தன் புத்திர னுக்கு மந்திரம் அறிந்தவர்களைக் கொண்டு விவாகத்திற்குப் பூர்வாங்கமான மங்கள ஸம்ஸ்காரங்களையெல்லாம் செய்வித்தார்.

53. 18-19. 'கிருஷ்ணன் பலராமருடனும் மற்ற யாதவர்களுடனும் புடைசூழ வந்து ஒருவேளை ருக்மிணியைக் கவர்வானேயாகில் நாம் ஒன்றுகூடி அவனுடன் போர் புரிவோம்' என்று மனதில் தீர்மானித்துக்கொண்டு கிருஷ்ணனுக்கும் பலராமனுக்கும் விரோதிகளான எல்லா அரசர்களும் கல்யாணப் பெண்ணைச் சிசுபாலனுக்கே விவாகம் செய்விப்பதற்காகத் தங்கள் சேனைகளுடனும் வாகனங்களுடனும் ஆயத்தமாக வந்து சேர்ந்தார்கள்.

---

53. 6. ஸ்ரீ கிருஷ்ணன் எங்கு போனாலும் தாய்தந்தை தமயன் அனுமதி கேட்காமல் போவதில்லை. இப்போது கல்யாணத்திற்கு யாரிடமும் சொல்லாமல் புறப்பட்டுவிட்டார்.

श्रुत्वैतद् भगवान् रामो विपक्षीय-नृपोद्यमम् ।
कृष्णं चैकं गतं हर्तुं कन्यां कलहशंकितः ॥ ५३.२० ॥

बलेन महता सार्धं भ्रातृस्नेह-परिप्लुतः ।
त्वरितः कुण्डिनं प्रागाद् गजाश्वरथपत्तिभिः ॥ ५३.२१ ॥

भीष्मकन्या वरारोहा कांक्षन्त्यागमनं हरेः ।
प्रत्यापत्ति-मपश्यन्ती द्विजस्याचिन्तयत्तदा ॥ ५३.२२ ॥

अहो त्रियामान्तरित उद्वाहो मेऽल्पराधसः ।
नागच्छत्यरविन्दाक्षो नाहं वेद्म्यत्र कारणम् ।
सोऽपि नावर्ततेऽद्यापि मत्सन्देशहरो द्विजः ॥ ५३.२३ ॥

अपि मय्यनवद्यात्मा दृष्ट्वा किंचिज्जुगुप्सितम् ।
मत्पाणिग्रहणे नूनं नायाति हि कृतोद्यमः ॥ ५३.२४ ॥

दुर्भगाया न मे धाता नानुकूलो महेश्वरः ।
देवी वा विमुखा गौरी रुद्राणी गिरिजा सती ॥ ५३.२५ ॥

---

53. 20-21. கன்னிகையைக் கவர்ந்துவரக் கிருஷ்ணன் தனியே சென்றிருப்பதையும், எதிர்க்கக்ஷி அரசர்கள் முயற்சியுடையவர்களாயிருப்பதையும் பகவான் பலராமன் கேள்விப்பட்டு கலகமுண்டாகுமென்று சந்தேகித்துத் தம்பியிடம் உள்ள அன்பின் பெருக்கால் யானை குதிரை தேர் காலாள் முதலியன அடங்கிய பெரிய சேனையுடன் விரைவில் குண்டினபுரம் சென்றார்.

53. 22. அப்பொழுது கிருஷ்ணனுடைய வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அழகியான பீஷ்மகன்னிகை பிராம்மணர் திரும்பிவருதலைக் காணாமல் சிந்தையிலாழ்ந்தாள்.

53. 23. 'அந்தோ! அற்ப பாக்கியமுள்ள என் விவாகத்திற்கு இன்னும் மூன்று யாமந்தான் இருக்கிறது. கமலக்கண்ணன் வரக்காணோம். அதன் காரணம் எனக்குத் தெரியவில்லை. எனக்காகத் தூது சென்ற அந்தப் பிராம்மணரும் கூடத் திரும்பி வரவில்லை.

53. 24. 'மாசற்றவரான கிருஷ்ணன் ஒருவேளை என்னிடம் ஏதாவது வெறுப்புக்குக் காரணத்தைக் கண்டிருக்கலாம். அதனால்தான் என் பாணிக் கிரகணத்தில் முயற்சியுள்ளவராயிருந்தும் வரவில்லை. இது நிச்சயம்.

53. 25. 'துர்பாக்கியவதியான எனக்குப் பிரம்மதேவர் அனுகூலராக இல்லை. மகேசுவரரும் அனுகூலராக இல்லை. மலைமகளும் பதிவிரதையும் ருத்ரபத்னியுமான கௌரிதேவியும் கூடப் பராமுகமாயிருக்கிறாள்.'

एवं चिन्तयती बाला गोविन्दहृत-मानसा ।
न्यमीलयत कालज्ञा नेत्रे चाश्रु-कलाकुले ॥ ५३.२६ ॥

एवं वध्वाः प्रतीक्षन्त्या गोविन्दागमनं नृप ।
वाम ऊरुर्भुजो नेत्रमस्फुरन् प्रियभाषिणः ॥ ५३.२७ ॥

अथ कृष्णविनिर्दिष्टः स एव द्विजसत्तमः ।
अन्तःपुरचरीं देवीं राजपुत्रीं ददर्श ह ॥ ५३.२८ ॥

सा तं प्रहृष्टवदन-मव्यग्रात्मगतिं सती ।
आलक्ष्य लक्षणाभिज्ञा समपृच्छच्छुचिस्मिता ॥ ५३.२९ ॥

तस्या आवेदयत् प्राप्तं शशंस यदुनन्दनम् ।
उक्तं च सत्यवचन-मात्मोपनयनं प्रति ॥ ५३.३० ॥

तमागतं समाज्ञाय वैदर्भी हृष्टमानसा ।
न पश्यन्ती ब्राह्मणाय प्रियमन्य-न्ननाम सा ॥ ५३.३१ ॥

---

53. 26. கிருஷ்ணனிடம் மனதைப் பறிகொடுத்தவளும் (கிருஷ்ணன் வருவதற்குரிய) காலத்தையறிந்தவளுமான அச்சிறுமி இவ்வாறு சிந்தையிலாழ்ந்து கண்ணீர்த் திவலைகளால் கலங்கிய கண்களை மூடிக்கொண்டாள்.

53. 27. அரசே! இவ்விதம் கோவிந்தருடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த ருக்மிணிக்குப் பிரியத்தைப் பேசுவதுபோல் அவளுடைய இடது துடையும் புஜமும் கண்ணும் துடித்தன.

53. 28. அதே சமயத்தில் கிருஷ்ணனிடமிருந்து திரும்பிய அந்தப் பிராம்மண சிரேஷ்டர் அந்தப்புரத்திலிருந்த ராஜகுமாரியான தேவியைக் கண்டார்.

53. 29. இலக்ஷண ஞானமுள்ள அவ்வுத்தமி நடையில் குற்றமற்றவராயும் முகத்தில் மகிழ்ச்சியுடையவராயும் இருக்கும் அவரைக் கண்ணுற்றுப் புன்னகை பூத்துச் செய்தியை வினவினாள்.

53. 30. கிருஷ்ணன் வந்துவிட்டதை அவர் தெரிவித்தார். மேலும் ருக்மிணியை அழைத்துச் செல்லும் விஷயத்தில் பகவான் கூறிய உறுதிமொழியையும் எடுத்துக் கூறினார்.

53. 31. பகவான் வந்ததையறிந்த ருக்மிணி உள்ளம் பூரித்துப் பிராம்மணருக்குப் பிரியமாய்க் கொடுக்கத்தக்க பொருள் வேறு எதையும் காணாமல் நமஸ்கரித்தாள்.

---

53. 31. (ஸர்வஸ்வார்ப்பண-மப்யபர்யாப்தம் இதி ததுசிதம் ப்ரியமபரம் ந பச்யந்தீ ததா கேவலம் நநாம । யத்வா மாம் ச்ரியம் யே நமந்தி தே தாவத் ஸர்வஸம்பதாம் ஆஸ்பதம் பவந்தி கிம்புனர் மயி ப்ரணதாயாமிதி ।)

எல்லா உடைமையையும் கொடுத்தாலும் போதாது என்று அவருக்குக் கொடுக்கத்தக்க பிரிய வஸ்து வேறு எதையும் காணாதவளாய் அவருக்கு நமஸ்காரம் ஒன்றையே செய்தாள். ஸ்ரீ தேவியாகிய தன்னை நமஸ்கரிப்பவர்க்கு எல்லா ஸம்பத்துக்களின் ஸம்ருத்தியும் ஏற்படுகையில் தானே அவரை வணங்கினால் என்னதான் ஏற்படாது என்று எண்ணினாள் போலும்.

प्राप्तौ श्रुत्वा स्वदुहितु-रुद्वाहप्रेक्षणोत्सुकौ ।
अभ्ययात्तूर्यघोषेण रामकृष्णौ समर्हणैः ॥ ५३.३२ ॥

कृष्ण-मागत-माज्ञाय विदर्भ-पुरवासिनः ।
आगत्य नेत्रांजलिभिः पपु-स्तन्मुख-पंकजम् ॥ ५३.३६ ॥

अस्यैव भार्या भवितुं रुक्मिण्यर्हति नापरा ।
असावप्यनवद्यात्मा भैष्म्याः समुचितः पतिः ॥ ५३.३७ ॥

किंचित्सुचरितं यन्नस्तेन तुष्टस्त्रिलोककृत् ।
अनुगृह्णातु गृह्णातु वैदर्भ्याः पाणिमच्युतः ॥ ५३.३८ ॥

एवं प्रेमकलाबद्धा वदन्ति स्म पुरौकसः ।
कन्या चान्तः-पुरात् प्रागाद् भटैर्गुप्तांबिकालयम् ॥ ५३.३९ ॥

---

53. 32. தனது பெண்ணின் விவாகத்தைப் பார்ப்பதற்கு ஆவலுடன் பலராமனும் கிருஷ்ணனும் வந்திருப்பதைக் கேட்டு பேரீ வாத்திய கோஷத்துடனும் பூஜாதிரவியங்களுடனும் (பீஷ்மகராஜன்) எதிர்கொண்டு சென்றார்.

53. 36. விதர்ப்பராஜதானியிலுள்ள ஜனங்கள் கிருஷ்ணன் வந்திருப்பதைக் கேட்டு ஒன்றுகூடி அவருடைய முகத்தாமரையின் இனிமையைக் கண்களை அஞ்சலியாய்க்கொண்டு பருகினார்கள்,

53. 37. 'இவருக்குப் பத்தினியாவதற்குத் தகுந்தவள் ருக்மிணியேதான் மற்றெவளும் தகுந்தவளாகாள். ருக்மிணிக்குப் பதியாவதற்கும் மாசற்ற இவரேதான் தகுதியானவர்.

53. 38. 'நம்மால் செய்யப்பட்ட புண்ணியம் எதாவது இருக்குமேயானால் அதனால் ஸந்தோஷமடைந்த மூவுலக நாயகன் ருக்மிணியின் கையை இந்தக் கிருஷ்ணன் பிடிக்கும்படி அனுக்கிரகிக்கவேண்டும்.

53. 39. அன்பில் வசப்பட்ட பட்டணத்து மக்கள் இவ்விதம் பேசிக்கொண்டிருக்கும்போதே கன்னிகையும் வேலையாட்கள் காவல் புரிய அந்தப்புரத்திலிருந்து அம்பிகையின் கோவிலை நோக்கிப் புறப்பட்டாள்.

---

53. 39. கண்ணனுடைய அருளைப் பெறுவதற்குக் கண்ணனையே பூசிப்பதைவிடப் பரமசிவனையும் பார்வதியையும் பூசித்தல் சிறந்த சாதனமாகக் காணப்படுகிறது. அர்ஜுனன் சிவனை வழிபட்டுக் கண்ணனுடைய நட்பைப் பெற்றான். கோபிகள் காத்யாயனி பூஜை செய்து கண்ணனுடைய நட்பைப் பெற்றார்கள். ருக்மிணி பராசக்தியை வழிபட்டு கண்ணனைக் கைப்பிடித்தாள்.

---

53. 38. अनुगृह्णातु वैदर्भ्या विधिवत्पाणिमच्युतः ।

पद्भ्यां विनिर्ययौ द्रष्टुं भवान्याः पादपल्लवम् ।
सा चानुध्यायती सम्यङ् मुकुन्द-चरणांबुजम् ॥ ५३.४० ॥

यतवाङ् मातृभिः सार्धं सखीभिः परिवारिता ।
गुप्ता राजभटैः शूरैः सन्नद्धैरुद्यतायुधैः ।
मृदंगशङ्ख-पणवास्तूर्य-भेर्यश्च जघ्निरे ॥ ५३.४१ ॥

आसाद्य देवीसदनं धौतपादकरांबुजा ।
उपस्पृश्य शुचिः शान्ता प्रविवेशांबिकान्तिकम् ॥ ५३.४४ ॥

तां वै प्रवयसो बालां विधिज्ञा विप्रयोषितः ।
भवानीं वन्दयांचक्रु-र्भवपत्नीं भवान्विताम् ॥ ५३.४५ ॥

नमस्ये त्वांबिकेऽभीक्ष्णं स्वसन्तान-युतां शिवाम् ।
भूयात् पतिर्मे भगवान् कृष्णस्तदनुमोदताम् ॥ ५३.४६ ॥

अद्भिर्गंधाक्षतै-र्धूपै-र्वासःस्रङ्माल्य-भूषणैः ।
नानोपहार-बलिभिः प्रदीपावलिभिः पृथक् ॥ ५३.४७ ॥

---

53. 40-41. அவள் முகுந்தருடைய பாதகமலத்தை நன்ருகத் தியானம் செய்து கொண்டு மௌனமாகத் தாய்மார்களாலும் தோழிகளாலும் சூழப்பட்டு, கவசம் பூண்டு ஆயுதந்தாங்கிக் காவல் புரியும் சூரர்களான ராஜசேவகர்கள் தொடரப் பவானியின் திருவடிகளைத் தரிசிக்கக் கால்நடையாகச் சென்ருள். மிருதங்கம், பணவம், தூரியம், பேரிகை முதலிய வாத்தியங்கள் முழங்கின.

53. 44. அம்பிகையின் ஆலயத்தையடைந்து கைகால்களைச் சுத்தம் செய்து கொண்டு ஆசமனம் செய்துப் பரிசுத்தமாகவும் அமரிக்கையுடனும் அம்பிகையின் சமீபத்தையடைந்தாள்.

53. 45. வயதானவர்களும் பூஜைமுறை தெரிந்தவர்களுமான பிராம்மண ஸ்திரீகள் சிவபத்னியும் சிவனுடனேயே இருப்பவளுமான பவானியை ருக்மிணி (பின்வரும் மந்திரத்தைச் சொல்லி) வணங்கும்படிச் செய்தார்கள்.

53. 46. 'அம்பிகே! மக்களுடன் கூடிய மங்கள ரூபியான உன்னை இடைவிடாது நமஸ்கரிக்கின்றேன். ஸ்ரீ கிருஷ்ணபகவான் எனக்குக் கணவனுகும்படி அருள்புரிய வேண்டும்.'

53. 47-48. தீர்த்தங்களாலும் சந்தனுக்ஷதைகளாலும் தூபங்களாலும், வஸ்திரம் புஷ்பம் பூஷணம் இவைகளாலும் பலவிதமான நைவேத்தியம் காணிக்கை முதலியவற்ருலும் தீபாராதனைகளாலும் (தேவியைப் பூஜித்து) அவ்வாறே தனித்தனியே சுமங்கலிகளான பிராம்மண ஸ்திரீகளையும் அதே திரவியங்களாலும் உப்பப்பம் வெற்றிலை பாக்கு மங்கலியச்சரடு பழம் கரும்பு முதலியவற்றையளித்தும் பூஜை செய்தாள்.

विप्रस्त्रियः पतिमती-स्तथा तैः समपूजयत्।
लवणापूपतांबूल-कण्ठसूत्र-फलेक्षुभिः ॥ ५३.४८ ॥

तस्यै स्त्रियस्ताः प्रददुः शेषां युयुजुराशिषः।
ताभ्यो देव्यै नमश्चक्रे शेषां च जगृहे वधूः ॥ ५३.४९ ॥

मुनिव्रत-मथ-स्त्यक्त्वा निश्चक्रामांबिकाग्रहात्।
प्रगृह्य पाणिना भृत्यां रत्नमुद्रोपशोभिना ॥ ५३.५० ॥

तां देवमायामिव वीरमोहिनीं सुमध्यमां कुण्डलमण्डिताननाम्।
श्यामां नितंबार्पित-रत्नमेखलां व्यंजत्स्तनीं कुन्तल-शंकितेक्षणाम्
॥ ५३.५१ ॥

पदा चलन्तीं कलहंसगामिनीं सिंजत्कला-नूपुरधामशोभिना।
विलोक्य वीरा मुमुहुः समागता यशस्विन-स्तत्कृत-हृच्छयार्दिताः
॥ ५३.५३

सैवं शनैश्चलयती चलपद्मकोशौ प्राप्तिं तदा भगवतः प्रसमीक्षमाणा।
उत्सार्य वामकरजै-रलकानपांगैः प्राप्तान् ह्रियैक्षत नृपान्
ददृशेऽच्युतं सा ॥ ५३.५४ ॥

तां राजकन्यां रथमारुरुक्षतीं जहार कृष्णो द्विषतां समीक्षताम्।
रथं समारोप्य सुपर्णलक्षणं राजन्यचक्रं परिभूय माधवः ॥ ५३.५५ ॥

ततो ययौ राजपुरोगमैः शनैः सृगालमध्यादिव भागहृद्धरिः ॥ ५३.५६॥

---

53. 49. அந்த ஸ்திரீகள் ருக்மிணிக்கு நிர்மால்யத்தைப் பிரஸாதமாகக் கொடுத்து ஆசீர்வதித்தார்கள். ருக்மிணியும் அம்பிகைக்கும் அந்த சுமங்கலிகளுக்கும் நமஸ்காரம் செய்து பிரஸாதத்தை பெற்றுக்கொண்டாள்.

53. 50. அதன்பின் மௌனவிரத்தை விட்டுக் கணையாழி பூண்ட கையினால் தோழியின் கையைப் பிடித்துக்கொண்டு அம்பிகையின் ஆலயத்திலிருந்து வெளிக் கிளம்பினாள்.

53. 51-53. பகவானுடைய யோகமாயைபோல் வீரர்களை மயங்கச்செய்கிறவளும், அழகிய இடையுடையவளும், குண்டலங்களால் அலங்கரிக்கப்பட்ட முகத்தையுடைய வளும், யுவதியும், இடையில் ரத்ன மேகலை பூண்டவளும், கொங்கை உதிக்கப் பெற்றவளும், சுருட்டை மயிரிடை வெட்கப்பார்வையுடையவளும், கலகலவென்று ஒலிக்கும் நூபுரமணிந்த பாதங்களால் அன்னம்போல் நடப்பவளுமாகிய ருக்மிணியைப் பார்த்து அங்கு வந்திருந்த புகழ்பெற்ற வீரர்கள் மோகமடைந்தார்கள்.

53. 54. அவள் இவ்விதமாக பகவானுடைய வரவை எதிர்பார்ப்பவளாய் அசைகின்ற தாமரை மொட்டுகள் போன்ற பாதங்களால் மெதுவாக நடக்கின்றவளாய் இடதுகை விரல்களால் கூந்தலை ஒதுக்கிக்கொண்டு வந்திருந்த அரசர்களைக் கடைக் கண்ணால் பார்த்தாள். அப்போது அவள் ஸ்ரீ கிருஷ்ணனைக் கண்டாள்.

53. 55-56. தேரில் ஏற விரும்பும் அந்த ராஜ கன்னிகையைத் தன் எதிரிகள் பார்த்துக்கொண்டிருக்க ஸ்ரீ கிருஷ்ணன் கைப்பற்றிக் கருடக்கொடி விளங்கிய தனது தேரில் ஏற்றிவைத்துக்கொண்டு நரிகளின் மத்தியிலிருக்கும் இரையை ஒரு சிங்கம் அபகரித்துக்கொண்டுபோவதுபோல் அரசர் கூட்டத்தையவமதித்து பலராமன் முதலிய வர்களுடன் மெதுவாகச் சென்றார்.

इति सर्वे सुसंरब्धा वाहानारुह्य दंशिताः।
स्वैः स्वै-र्बलैः परिक्रान्ता अन्वीयु-र्धृतकार्मुकाः ॥ ५४.१ ॥

अश्वपृष्ठे गजस्कन्धे रथोपस्थे च कोविदाः।
मुमुचुश्शरवर्षाणि मेघा अद्रिष्वपो यथा ॥ ५४.३ ॥

पत्युर्बलं शरासारैश्छन्नं वीक्ष्य सुमध्यमा।
सव्रीड-मैक्षत्तद्वक्त्रं भयविह्वललोचना ॥ ५४.४ ॥

प्रहस्य भगवानाह मास्म भै-र्वामलोचने।
विनंक्ष्यत्यधुनैवैतत् तावकैः शात्रवं बलम् ॥ ५४.५ ॥

तेषां तद्विक्रमं वीरा गदसंकर्षणादयः।
अमृष्यमाणा नाराचै-र्जघ्नुर्हय-गजान् रथान् ॥ ५४.६ ॥

हन्यमान-बलानीका वृष्णिभि-र्जयकांक्षिभिः।
राजानो विमुखा जग्मु-र्जरासन्ध-पुरस्सराः ॥ ५४.९ ॥

---

54. 1. அப்போது அரசர்கள் யாவரும் மிகக் கோபமடைந்து கவசங்களைத் தரித்துக்கொண்டு வாகனங்களிலேறி வில்லைக் கையிலேந்தித் தங்கள் தங்கள் சைனியங்கள் புடைசூழப் பின் தொடர்ந்தனர்.

54. 3. யானையேற்றம் குதிரையேற்றம் தேர் ஏற்றம் இவைகளில் திறமைவாய்ந்த அவ்வரசர்கள் மேகங்கள் மலையில் நீரைப் பொழிவதுபோல் பாணங்களைப் பொழிந்தார்கள்.

54. 4. தன் நாயகனுடைய சைனியம் பாணப்பெருக்கால் மூடப்பட்டதைப் பார்த்து அழகிய இடையுள்ள ருக்மிணி பயத்தால் கண் கலங்கி நாணத்துடன் பகவானுடைய முகத்தைப் பார்த்தாள்.

54. 5. 'கண்ணழகியே! பயப்படாதே! இப்போது உன்னைச் சேர்ந்தவர்களால் இந்தச் சத்துருசேனை அழியப்போகிறது' என்று பகவான் புன்முறுவலுடன் கூறினார்.

54. 6. கதன் பலராமன் முதலியவர்கள் அவ்வரசர்களுடைய எதிர்ப்பைப் பொறுக்காமல் பாணங்களால் அவர்களுடைய குதிரைகளையும் யானைகளையும் தேர்களையும் நாசம் செய்தனர்.

54. 9. ஜயசீலர்களான விருஷ்ணிகளால் முறியடிக்கப்பட்ட சேனைகளின் தலைவர்களான ஜராஸந்தன் முதலிய அரசர்கள் புறங்காட்டி ஓடினார்கள்.

शिशुपालं समभ्येत्य हृतदार-मिवातुरम् ।
नष्टत्विषं गतोत्साहं शुष्यद्वदन-मब्रुवन् ॥ ५४.१० ॥

भो भोः पुरुषशार्दूल दौर्मनस्य-मिदं त्यज ।
न प्रियाप्रिययो राजन् निष्ठा देहिषु दृश्यते ॥ ५४.११ ॥

रिपवो जिग्युरधुना काल आत्मानुसारिणि ।
तदा वयं विजेष्यामो यदा कालः प्रदक्षिणः ॥ ५.४१६ ॥

एवं प्रबोधितो मित्रै-श्चैद्योऽगात् सानुगः पुरम् ।
हतशेषाः पुनस्तेऽपि ययुः स्वं स्वं पुरं नृपाः ॥ ५४.१७ ॥

रुक्मी तु राक्षसोद्वाहं कृष्णद्विडसहन् स्वसुः ।
पृष्ठतोऽन्वगमत् कृष्ण-मक्षौहिण्या वृतो बली ॥ ५४.१८ ॥

रुक्म्यमर्षी सुसंरब्धः शृण्वतां सर्वभूभुजाम् ।
प्रतिजज्ञे महाबाहु-र्दंशितः सशरासनः ॥ ५४.१९ ॥

अहत्वा समरे कृष्ण-मप्रत्यूह्य च रुक्मिणीम् ।
कुण्डिनं न प्रवेक्ष्यामि सत्यमेतद् ब्रवीमि वः ॥ ५४.२० ॥

---

54. 10. பத்தினியை இழந்தவன்போல் பரிதவிப்பவனும் ஒளிகுன்றி உத்ஸாஹமின்றி முகம் வாடியிருப்பவனுமான சிசுபாலனையணுகி அவ்வரசர்கள் பின் வருமாறு கூறினார்கள்.

54. 11. 'புருஷப்புலியே! இந்த வருத்தத்தை விடு. அரசே! உடல் படைத்தவர்களிடம் இன்பமும் துன்பமும் நிலையாயிருப்பது காணப்படுவதில்லை.

54. 16. 'பகைவர்கள் தங்களுக்கனுகூலமான இந்த ஸமயத்தில் ஜயமடைந்தார்கள். எப்போது காலம் நமக்கனுகூலமாகுமோ அப்போது நாம் ஜயிப்போம்.'

54. 17. இவ்விதம் நண்பர்களால் புத்தி போதிக்கப்பட்ட சிசுபாலன் பரிவாரங்களுடன் தனது நகரம் சென்றான். பிறகு இறந்தவர்கள் போக மீதியிருந்த அரசர்களும் அவரவர்களுடைய பட்டணம் சென்றனர்.

54. 18. ஆனால் கிருஷ்ணனுடைய பகைவனும் பலசாலியுமான ருக்மி மட்டும் தங்கையின் ராக்ஷஸ விவாஹத்தைச் சகிக்காதவனாய் ஒரு அக்ஷௌஹிணி சேனையுடன் கிருஷ்ணனைப் பின்தொடரலானான்.

54. 19. பொறுமையிழந்தவனும் மிகக் கோபங்கொண்டவனும் நீண்ட கைகளுடையவனும் கவசம் பூண்டவனும் வில்லேந்தியவனுமாகிய ருக்மி எல்லா அரசர்களும் கேட்க ஒரு பிரதிக்ஞை செய்தான்.

54. 20. 'போரில் கிருஷ்ணனைக் கொல்லாமலும் ருக்மிணியைத் திருப்பிக் கொண்டு வராமலும் குண்டினபட்டினத்தில் மீண்டும் பிரவேசிக்கமாட்டேன். இது ஸத்தியம் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.'

इत्युक्त्वा रथमारुह्य सारथिं प्राह सत्वरः ।
चोदयाश्वान् यतः कृष्ण-स्तस्य मे संयुगं भवेत् ॥ ५४.२१ ॥

विकत्थमानः कुमति-रीश्वरस्याप्रमाणवित् ।
रथेनैकेन गोविन्दं तिष्ठ तिष्ठेत्यथाह्वयत् ॥ ५४.२३ ॥

धनु-र्विकृष्य सुदृढं जघ्ने कृष्णं त्रिभिः शरैः ।
आह चात्र क्षणं तिष्ठ यदूनां कुलपांसन ॥ ५४.२४ ॥

तै-स्ताडितः शरौघैस्तु चिच्छेद धनुरच्युतः ।
पुनरन्यदुपादत्त तदप्यच्छिनदव्ययः ॥ ५४.२८ ॥

परिघं पट्टिशं शूलं चर्मासी शक्तितोमरौ ।
यद् यदायुधमादत्त तत्सर्वं सोऽच्छिनद्धरिः ॥ ५४.२९ ॥

ततो रथादवप्लुत्य खड्गपाणि-र्जिघांसया ।
कृष्णमभ्यद्रवत् क्रुद्धः पतंग इव पावकम् ॥ ५४.३० ॥

दृष्ट्वा भ्रातृवधोद्योगं रुक्मिणी भयविह्वला ।
पतित्वा पादयो-र्भर्तु-रुवाच करुणं सती ॥ ५४.३२ ॥

---

54. 21. இங்ஙனம் சொல்லிவிட்டு மிக வேகத்துடன் தேரில் ஏறிச் சாரதியைப் பார்த்து, 'கிருஷ்ணன் எங்கிருக்கிருனே அங்கே குதிரைகளை ஓட்டு. அவனுக்கும் எனக்கும் யுத்தம் நடக்கப்போகிறது' என்ருன்.

54. 23. பின்பு துர்ப்புத்தியும் அர்த்தமில்லாமல் பேசுகிறவனும் பகவானுடைய உண்மையையறியாதவனுமாகிய அவன் ஒரே தேருடன் கிருஷ்ணனைப் பார்த்து 'நில், நில்' என்று கூவினுன்.

54. 24. திடமான வில்லை இழுத்து மூன்று பாணங்களால் கிருஷ்ணனை அடித்து, 'யாதவ குலத்தைக் கெடுத்தவனே! இங்கே ஒரு நொடிப்போது நில்' என்ருன்.

54. 28. அந்த பாணங்களாலடிபட்ட அச்சுதன் அவனுடைய வில்லை முறித்தார். அவன் வேறு வில்லை எடுத்துக்கொள்ள பகவான் அதையும் முறித்தார்.

54. 29. பரிகம் பட்டிசம் சூலம் கேடயம் கத்தி சக்தி தோமரம் என்ற எந்தெந்த ஆயுதத்தை யெடுத்தானே அவையனைத்தையும் முறித்தார்.

54. 30. அப்போது கோபமுண்ட அவன் கையில் வாளேந்தித் தேரிலிருந்து குதித்துக் கொல்லும் எண்ணத்துடன் தீயில் விழப்போகும் விட்டிற் பூச்சிபோல் கிருஷ்ணனை நோக்கிப் பாய்ந்தான்.

54. 32. அப்படி வரும் தன் சகோதரனைக் கொல்லுவதற்குத் தனது கணவனும் முயல்வதைக் கண்ணுற்றுப் பயத்தால் நடுங்கிய அப்பதிவிரதை கணவனின் திருவடிகளில் விழுந்து தீனமான குரலில் பின்வருமாறு கூறினுள்,

---

54. 23. तिष्ठेति च ब्रुवन् ।

योगेश्वराप्रमेयात्मन् देवदेव जगत्पते ।
हन्तुं नार्हसि कल्याण भ्रातरं मे महाभुज ॥ ५४.३३ ॥

चैलेन बद्ध्वा तमसाधुकारिणं सश्मश्रुकेशं प्रवपन् व्यरूपयत् ।
तावन्ममर्दुः परसैन्य-मद्भुतं यदुप्रवीरा नलिनीं यथा गजाः ॥ ५४.३५ ॥

कृष्णान्तिक-मुपव्रज्य ददृशुस्तत्र रुक्मिणम् ।
तथा भूतं हतप्रायं दृष्ट्वा संकर्षणो विभुः ।
विमुच्य बद्धं करुणो भगवान् कृष्ण-मब्रवीत् ॥ ५४.३६ ॥

असाध्विदं त्वया कृष्ण कृतमस्म-ज्जुगुप्सितम् ।
वपनं श्मश्रुकेशानां वैरूप्यं सुहृदो वधः ॥ ५४.३७ ॥

प्राणावशेष उत्सृष्टो द्विड्भि-र्हतबलप्रभः ।
स्मरन् विरूपकरणं वितथात्ममनोरथः ॥ ५४.५१ ॥

चक्रे भोजकटं नाम निवासाय महत् पुरम् ।
अहत्वा दुर्मतिं कृष्ण-मप्रत्यूह्य यवीयसीम् ॥
कुण्डिनं न प्रवेक्ष्यामीत्युक्त्वा तत्रावसद् रुषा ॥ ५४.५२ ॥

---

54. 33. 'யோகேசுவரா! அளவிடற்கரிய மகிமையுள்ளவரே! தேவ தேவா! மங்கள வடிவினரே! புஜபலம் படைத்தவரே! உலக நாயகரே! என் சகோதரனைக் கொல்வது உமக்குத் தகாது.'

54. 35. தகாததைச் செய்த அவனைத் துணியால் கட்டி பகவான் அவனுடைய குடுமியையும் மீசையையும் அறுத்து விருபமாக்கினார். அதே சமயத்தில் தாமரைத் தடாகத்தை யானைகள் கலக்குவதுபோல் யதுவீரர்கள் எதிரி சேனையைக் கலக்கித் திகைத்தோடும்படி செய்தனர்.

54. 36. பிரபுவான பலராமர் கிருஷ்ணனை அணுகி அங்கே விருபம் செய்யப் பட்டு இறந்தவனைப்போலிருக்கும் ருக்மியைக் கண்டார். அதைக்கண்டு கருணை கூர்ந்து அவனைக் கட்டவிழ்த்துவிட்டுக் கிருஷ்ணனிடம் பின்வருமாறு கூறினார்.

54. 37. 'கிருஷ்ணா! உன்னால் செய்யப்பட்ட இந்தக் காரியம் நன்றாயில்லை. நாம் வெறுக்கத்தக்கது. உறவினரின் குடுமியையும் மீசையையும் அறுத்து விருபம் செய்வது வதம் செய்தமாதிரித்தான்.'

54. 51-52. பராக்கிரமத்தையும் சேனா பலத்தையும் சத்துருக்களுக்குப் பரிகொடுத்து மனோரதம் பாழாகி உயிருடன் மீண்ட ருக்மி தனக்கேற்பட்ட அவமானத்தையெண்ணி, துர்ப்புத்தியான கிருஷ்ணனைக் கொல்லாமலும் தங்கையான ருக்மிணியைத் திருப்பிக் கொண்டுவராமலும் குண்டினபுரத்தில் பிரவேசிக்கமாட்டேன்' என்று சொல்லி போஜகட்டம் என்ற அவ்விடத்தைத் தன் வாஸஸ்தானமாக்கிக் கொண்டு பெரிய பட்டணத்தை உண்டாக்கி உள்ளக் கொதிப்புடன் அங்கு வசிக்கலானான்.

भगवान् भीष्मकसुता-मेवं निर्जित्य भूमिपान् ।
पुरमानीय विधिव-दुपयेमे कुरूद्वह ॥ ५४.५३ ॥

तदा महोत्सवो नृणां यदुपुर्यां गृहे गृहे ।
अभूदनन्य-भावानां कृष्णे यदुपतौ नृप ॥ ५४.५४ ॥

नरा नार्यश्च मुदिताः प्रमृष्टमणिकुण्डलाः ।
पारिबर्ह-मुपाजह्रु-र्वरयोश्चित्र-वाससोः ॥ ५४.५५ ॥

सा वृष्णिपुर्युत्तंभितेन्द्रकेतुभि-र्विचित्रमाल्यांबर-रत्नतोरणैः ।
बभौ प्रतिद्वार्युपक्लृप्तमंगलै-रापूर्णकुंभागुरु-धूपदीपकैः ॥ ५५.५६ ॥

---

54. 53. குருசிரேஷ்டனே! பகவான் இவ்வாறுக அரசர்களை ஜயித்து பீஷ்மகராஜபுத்திரியைத் தன் பட்டணத்திற்கு அழைத்துவந்து முறைப்படி விவாகம் செய்துகொண்டார்.

54. 54. அரசே! அப்போது துவாரகையில் யது நாயகனுன கிருஷ்ணனிடம் ஏகாந்த பக்திகொண்ட மக்களின் வீடுகள் ஒவ்வொன்றிலும் பெரிய உத்ஸவம் நடந்தது.

54. 55. ஜ்வலிக்கின்ற ரத்ன குண்டலங்களையணிந்த புருஷர்களும் ஸ்திரீகளும் களிப்புடன் ஆடையாபரணங்களால் அலங்கரிக்கப்பெற்ற வதூவரர்களுக்குக் காணிக்கைகளைக் கொணர்ந்து கொடுத்தார்கள்.

54. 56. அந்தப்பட்டணம் ஏற்றப்பட்ட கொடிகளுடனும் விதவிதமான மாலைகள் வஸ்திரங்கள் தோரணங்களுடனும் ஒவ்வொரு வீட்டுவாயிலிலும் வைக்கப்பட்ட மங்கள திரவியங்களுடனும் பூர்ண கும்பங்களுடனும் அகில் தூபம் தீபங்களுடனும் எங்கும் பிரகாசித்தது.

---

54. 53. ருக்மிணீ கல்யாணம்—

ஓ. தத்ர கலு த்வாரவத்யாம் கர்க்கப்ரமுக-மஹாமுன்யதிஷ்டிதாயாம் மஹாராஜ-ஸபாயாம் ஸகலமங்களத்ரவ்ய-ஸம்பாரவத்யாம் கர்க்கப்ரப்ருதய: வஸுதேவானுமத்யா மஹாஸங்கல்ப-பூர்வகம் ஸ்ரீருக்மிணீக்ருஷ்ணயோ: காந்தர்வ-விதினு வைவாஹிக-மஹோத்ஸவாய லக்னுஷ்டக-மாரபந்த ||

ப்ரஹ்மா-விஷ்ணு-ருமாபதி-ச்ருதிசயோ வாணீரமோமா-யுதா ஆதித்யா வஸவோ கணுதிபமுகா ருத்ராச்ச பத்ரப்ரதா:| காலாம்போதர-திவ்யகாந்தி-விலஸத் காயஸ்ய மாயாவினே ருக்மிண்யா: ஸததம் விவாஹஸமயே குர்வந்து தே மங்களம் ||

ஆசார்ய-வசனுத் ஸர்வ-மகரோத் யது நந்தன:|
வாசாமகோசராத்மாபி வாஸுதேவ: ஸ்வமாயயா ||
காமதா காமினுமேஷா முமுக்ஷுணுஞ்ச மோக்ஷதா |
ச்ருண்வதாம் காயதாம் பக்த்யா க்ருஷ்ணலீலா-தரங்கிணீ ||

—க்ருஷ்ணலீலா தரங்கிணீ.

---

54. 54. महोत्सवो राजन् ।

सिक्तमार्गा मदच्युद्भि-राहूतप्रेष्ठभूभुजाम् ।
गजैर्द्वास्सु परामृष्टरंभा-पूगोपशोभिता ॥ ५४.५७ ॥

कुरुसृंजयकैकेय-विदर्भ-यदु-कुन्तयः ।
मिथो मुमुदिरे तस्मिन् संभ्रमात् परिधावताम् ॥ ५४.५८ ॥

रुक्मिण्या हरणं श्रुत्वा गीयमानं तत-स्ततः ।
राजानो राजकन्याश्च बभूवु-र्भृशविस्मिताः ॥ ५४.५९ ॥

द्वारकाया-मभूद्राजन् महामोदः पुरौकसाम् ।
रुक्मिण्या रमयोपेतं दृष्ट्वा कृष्णं श्रियः पतिम् ॥ ५४.६० ॥

इति श्रीमद्भागवते महापुराणे अष्टादश-साहस्रिकायां
संहितायां पारमहंस्यां वैयासिक्यां श्रीहयग्रीव-
ब्रह्मविद्यायां दशमस्कन्धे रुक्मिण्युद्वाहो नाम
चतुः पंचाशत्तमोऽध्यायः ॥

---

54. 57. துவாரங்களில் கட்டப்பட்ட வாழைமரங்கள் பாக்கு மரங்களுடனும், விவாகத்திற்கழைக்கப்பட்ட மகாராஜாக்களுடைய மத்தகஜங்கள் பெருக்கிய மதஜலத்தால் நனைந்த பாதைகளுடனும் பிரகாசித்தது.

54. 58. அங்கே ஸந்தோஷமாக உலவும் கௌரவர் ஸ்ருஞ்ஜயர் கேகயர் விதர்ப்பநாட்டார் ஒருவரையொருவர் சந்தித்துக் களித்தனர்.

54. 59. ருக்மிணியைக் கிருஷ்ணன் எடுத்துவந்த வரலாற்றைப்பற்றி அங்கங்கே மக்கள் துதிபாடுவதைக் கேட்டு அரசர்களும் அரசகன்னிகைகளும் மிகவும் ஆச்சரியமடைந்தனர்.

54. 60. அரசே! துவாரகையில் மஹாலக்ஷ்மியான ருக்மிணியுடன் லக்ஷ்மீ காந்தனான கிருஷ்ணனைப் பார்த்து துவாரகாபுரவாசிகளுக்குப் பேரானந்தம் உண்டாயிற்று.

இங்ஙனம் பரமஹம்ஸரான வியாஸபுத்திரர் உபதேசித்ததும்
பதினெண்ணாயிரம் சுலோகங்களடங்கியதும், ஹயக்கிரீவப்
பிரம்ம வித்தையெனப்படுவதுமான ஸ்ரீமத் பாகவத
மஹாபுராணத்தில் பத்தாவது ஸ்கந்தத்தில்
ருக்மிணீ கல்யாணம் என்று பெயர் பெற்ற
ஐம்பத்திநான்காவது அத்தியாயம் முற்றும்.
ஐந்தாவதுநாள் கதை முற்றும்.

ஸ்ரீமத் பாகவதஸாரம்

ஆறுவது நாள் கதை (10.55—11.13)

(பிரத்யும்னன் பிறப்பு முதல் உத்தவகீதையில் ஹம்ஸாக்யானம் வரை)

29. **துவாரகாலீலை—(2)** : பிரதியும்னன் வரலாறு-ஸ்யமந்தகோபாக்கியானம்-ஜாம்பவதீ, ஸத்யபாமா, காளிந்தீ, முதலியவர்களின் பாணிக்கிரஹணம்—நரகாசுரவதம்—பாரிஜாதாபஹரணம். (10.55—10.59).

30. **துவாரகாலீலை—(3)** : ஸ்ரீகிருஷ்ண கிருஹஸ்ததர்ம வர்ணனை—பாண்டவர் ராஜசூயயாகம். (10.60—10.75).

31. **துவாரகா லீலை—(4)** : சால்வன், தந்தவக்திரன் முதலியோர் வதம்—குசேலோபாக்கியானம்—குருக்ஷேத்திர ஸமாகமம்—பகவத்தத்வ நிருபணம். (10.76—10.90.)

32. **துவாரகா லீலை—(5)** : சுபத்ராகல்யாணம்—சுருததேவானுக்ரஹம்—விருகாசுரன் கதை—யதுகுலத்திற்கு பிராம்மணசாபம்—நவயோகி ஸம்வாதம். (11.1—11.5).

பதினொராவது ஸ்கந்தம்

33. **துவாரகா லீலை—(6)** : உத்தவ கீதை : அவதூத ஸம்வாதம்—ஹம்ஸாக்கியானம். (11.6—11.13)

॥ श्रीमद्भागवतसारः ॥

द्वारकालीला (२) ॥ २९ ॥

प्रद्युम्नस्य जन्म ॥ स्यमन्तकोपाख्यानम् ॥

श्रीशुक उवाच—

कामस्तु वासुदेवांशो दग्धः प्राग् रुद्रमन्युना ।
देहोपपत्तये भूय-स्तमेव प्रत्यपद्यत ॥ ५५.१ ॥

स एव जातो वैदर्भ्यां कृष्णवीर्य-समुद्भवः ।
प्रद्युम्न इति विख्यातः सर्वतोऽनवमः पितुः ॥ ५५.२ ॥

ஸ்ரீமத்பாகவதஸாரம்

ஆறுவதுநாள் கதை

29. துவாரகா லீலை (2)

பிரத்யும்னன் பிறப்பு—ஸ்யமந்தக உபாக்கியானம்

ஸ்ரீ சுகர் கூறியது—

55. 1. வாசுதேவருடைய அம்சமான காமதேவன் முன்பு பரமசிவனுடைய கோபத்தால் எரிக்கப்பட்டு மீண்டும் சரீரத்தையடைவதற்குக் கிருஷ்ணனையே வந்தடைந்தான்.

55. 2. அவனே கிருஷ்ணனுடைய வீரியத்தில் தோன்றி ருக்மிணியிடம் பிறந்து பிரத்யும்னன் எனப் பிரசித்திபெற்று எல்லா வகையிலும் தன் தந்தையைப்போல் இருந்தான்.

(பிறந்த பத்துநாளுக்குள் சம்பராஸுரன் அக்குழந்தையை அபகரித்துச் சமுத்திரத்தில் எறிந்தான். குழந்தையை ஒரு பெரிய மீன் விழுங்கிற்று. அந்த மீனைச் செம்படவர்கள் பிடித்துச் சம்பரனுக்கே காணிக்கையாகக் கொடுத்தார்கள். அவன் அதைச் சமையல் கட்டிற்கு அனுப்பினான். அங்கே அப்போது சமையற்காரியாக இருந்த மாயாதேவி என்பவள் முன் பிறப்பில் மன்மதன் பத்னியாயிருந்த ரதிதேவி. மீன் வயிற்றில் அதிசயக் குழந்தையைக் கண்ட அவள் அக்குழந்தை தன் பதியாகிய மன்மதன் என்பதை உணர்ந்து வளர்த்துவந்தாள். அவன் யௌவனமடைந்ததும் அவனைக்கொண்டு சம்பராஸுரனை வதம் செய்வித்தாள். பின்பு மாயாதேவி தனது மாயையால் ஆகாயமார்க்கமாக அவனைத் துவாரகை கொண்டுபோய் கிருஷ்ணனிடமும் ருக்மிணியிடமும் சேர்த்தாள். அச்சமயம் நாரதர் வந்து சம்பரன் குழந்தையைத் திருடிப்போனதுமுதல் எல்லா விருத்தாந்தங்களையும் விளக்கிக் கூறினார். முற்பிறவியில் பிரிந்த மன்மதனும் ரதியும் இவ்வாறாகப் பிரத்யும்னனாகவும் மாயாதேவியாகவும் வந்து கூடிப் பல இன்னல்களுக்குப் பின் இன்பவாழ்க்கை எய்தினர்.)

श्रीशुक उवाच--

आसीत् सत्राजितः सूर्यो भक्तस्य परमः सखा ।
प्रीत-स्तस्मै मणिं प्रादात् सूर्य-स्तुष्टः स्यमन्तकम् ॥ ५६.३ ॥

दुर्भिक्षमार्यरिष्टानि सर्वाधि-व्याधयोऽशुभाः ।
न सन्ति मायिन-स्तत्र यत्रास्तेऽभ्यर्चितो मणिः ॥ ५६.११ ॥

स याचितो मणिं क्वापि यदुराजाय शौरिणा ।
नैवार्थ-कामुकः प्रादाद् याच्ञा-भंग-मतर्कयन् ॥ ५६.१२ ॥

तमेकदा मणिं कण्ठे प्रतिमुच्य महाप्रभम् ।
प्रसेनो हय-मारुह्य मृगयां व्यचरद् वने ॥ ५६.१३ ॥

प्रसेनं सहयं हत्वा मणिमाच्छिद्य केसरी ।
गिरिं विशञ्जांबवता निहतो मणिमिच्छता ॥ ५६.१४ ॥

सोऽपि चक्रे कुमारस्य मणिं क्रीडनकं बिले ।
अपश्यन् भ्रातरं भ्राता सत्राजित् पर्यतप्यत ॥ ५६.१५ ॥

ஸ்ரீ சுகர் கூறியது—

56. 3. பக்தியுடன் உபாஸிப்பவரான ஸத்ராஜித்துக்குச் சூரியபகவான் சிறந்த நண்பராக ஆனர். அங்ஙனம் பிரீதிகொண்ட சூரியன் சந்தோஷத்தின் அடையாளமாக ஸ்யமந்தகம் எனும் ரத்தினத்தை அவருக்களித்தார்.

56. 11. எவ்விடத்தில் அந்த ரத்தினம் அர்ச்சனையுடன் வைக்கப்பட்டிருக்குமோ அங்கே பஞ்சம், அகாலமரணம், மனக்கவலை, வியாதி முதலிய அசுபங்கள் ஏற்படமாட்டா.

56. 12. ஒரு சமயம் உக்ரஸேனமகாராஜாவுக்கு அந்த மணியைக் கொடுக்கும்படி கிருஷ்ணனுல் அந்த ஸத்ராஜித்து கேட்கப்பட்டார். ஆனுல் பொருளாசைமிக்க அவர் பகவான் யாசித்தும் கொடுக்காததால் ஏற்படும் தோஷத்தை உணராமல் கொடுக்காமலே இருந்துவிட்டார்.

56. 13. பின்னொரு சமயம் (அவருடைய தம்பியான) பிரஸேனன் ஒளிவீசும் அந்த ரத்தினத்தைக் கழுத்திலணிந்து குதிரைமேலேறிக் காட்டுக்கு வேட்டையாடச் சென்றுன்.

56. 14. பிரஸேனனை அவன் குதிரையுடன் ஒரு சிங்கம் கொன்று அவனுடைய ரத்தினத்தை எடுத்துக்கொண்டு மலையில் செல்லுகையில் (அதைக்கண்டு) அந்த ரத்தினத்தையடைய விரும்பிய ஜாம்பவானுல் அச்சிங்கம் கொல்லப்பட்டது.

56. 15. பின் ஜாம்பவான் தனது குகை சென்று ரத்தினத்தைத் தன் குழந்தைக்கு விளையாட்டுப் பொருளாக்கினுர். ஸத்ராஜித்தோ தன் தம்பி திரும்பி வரக் காணுமல் பரிதவித்தான். (ரத்தினத்தை அரசனுக்கு அளிக்கும்படி கூறிய கிருஷ்ணன்மேல் சந்தேகங்கொண்டு பின்வரும் வதந்தியைப் பரப்பினுன்).

---

56. 11. सर्वाधिव्याधयो । பா. பே.

प्रायः कृष्णेन निहतो मणिग्रीवो वनं गतः ।
भ्राता ममेति तच्छ्रुत्वा कर्णे कर्णेऽजपञ्जनाः ॥ ५६.१६ ॥

भगवांस्तदुपश्रुत्य दुर्यशो लिप्त-मात्मनि ।
मार्ष्टुं प्रसेनपदवी-मन्वपद्यत नागरैः ॥ ५६.१७ ॥

हतं प्रसेन-मश्वं च वीक्ष्य केसरिणा वने ।
तं चाद्रिपृष्ठे निहतमृक्षेण ददृशुर्जनाः ॥ ५६.१८ ॥

ऋक्षराजबिलं भीम-मन्धेन तमसाऽऽवृतम् ।
एको विवेश भगवानवस्थाप्य बहिः प्रजाः ॥ ५६.१९ ॥

तत्र दृष्ट्वा मणिश्रेष्ठं बालक्रीडनकं कृतम् ।
हर्तुं कृतमति-स्तस्मिन्नवतस्थेऽर्भकान्तिके ॥ ५६.२० ॥

तमपूर्वं नरं दृष्ट्वा धात्री चुक्रोश भीतवत् ।
तच्छ्रुत्वाऽभ्यद्रवत् क्रुद्धो जांबवान् बलिनां वरः ॥ ५६.२१ ॥

---

56. 16. 'ரத்தினத்தைக் கழுத்திலணிந்து வனம் சென்ற என் தம்பி நிச்சயமாகக் கிருஷ்ணனால்தான் கொல்லப்பட்டிருக்கவேண்டும்' என்ற அவன் சொல்லக்கேட்டு ஜனங்கள் காதோடு காதாகப்பேசி இதைப் பரப்பினார்கள்.

56. 17. பகவான் இதைக் கேட்டுத் தன்பேரில் ஏற்றப்பட்ட பழியைப் போக்கிக் கொள்ளும் பொருட்டு நகரத்து மக்களுடன் சேர்ந்து பிரஸேனன் சென்ற வழியில் தேடிச் சென்றார்.

56. 18. வனத்தில் பிரஸேனனும் குதிரையும் சிங்கத்தால் கொல்லப் பட்டிருந்ததையும் மலைமேல் கரடியால் சிங்கம் கொல்லப்பட்டிருந்ததையும் ஜனங்கள் கண்டனர்.

56. 19. கொடிய இருள் சூழ்ந்து பயங்கரமாயிருந்த ஜாம்பவானுடைய குகைக்குள் பகவான் ஜனங்களை வெளியே நிறுத்திவிட்டுத் தனியாகச் சென்றார்.

56. 20. அங்கு குழந்தைக்கு விளையாட்டுப் பொருளாக வைக்கப்பட்டிருந்த உத்தம ரத்தினத்தைப் பார்த்து அதை எடுத்துவர விரும்பி அங்கே குழந்தையின் அருகாமையை யடைந்தார்.

56. 21. முன் பார்த்திராத ஒரு மனிதன் அங்கு நிற்பதைப் பார்த்து குழந்தையின் செவிலித்தாய் பயந்து கூவினாள். அதைக்கேட்டு பலவான்களிற் சிறந்த ஜாம்பவான் கோபம் மிக்கவராய் அங்கு ஓடிவந்தார்.

स वै भगवता तेन युयुधे स्वामिनाऽऽत्मनः।
पुरुषं प्राकृतं मत्वा कुपितो नानुभाववित् ॥ ५६.२२ ॥

कृष्णमुष्टि-विनिष्पात-निष्पिष्टांगोरुबन्धनः।
क्षीणसत्त्वः स्विन्नगात्रस्तमाहातीव विस्मितः ॥ ५६.२५ ॥

जाने त्वां सर्वभूतानां प्राण ओजः सहो बलम्।
विष्णुं पुराणपुरुषं प्रभविष्णु-मधीश्वरम् ॥ ५६.२६ ॥

त्वं हि विश्वसृजां स्रष्टा सृज्यानामपि यच्च सत्।
कालः कलयतामीशः पर आत्मा तथाऽऽत्मनाम् ॥ ५६.२७ ॥

यस्येषदुत्कलित-रोषकटाक्षमोक्षै-
वर्त्मादिशत् क्षुभितनक्रतिमिंगिलोऽब्धिः।
सेतुः कृतः स्वयश उज्ज्वलिता च लंका
रक्षः शिरांसि भुवि पेतुरिषुक्षतानि ॥ ५६.२८ ॥

इति विज्ञात-विज्ञान-मृक्षराजान-मच्युतः।
व्याजहार महाराज भगवान् देवकीसुतः ॥ ५६.२९ ॥

---

56. 22. ஜாம்பவான் கிருஷ்ணனைச் சாதாரண மனிதனாக எண்ணித் தனது யஜமானனும் தெய்வமுமான அவருடைய மகிமையை யறியாமல் அவருடன் போர் புரிந்தார்.

56. 25. கிருஷ்ணனுடைய முஷ்டியின் தாக்குதலால் அங்கங்கள் தகைந்து மூட்டுகள் தளர்ந்து உடம்பு வியர்த்து பலங்குறைந்து பிரமித்து நின்ற ஜாம்பவான் அவரிடம் பின்வருமாறு கூறினார்.

56. 26. 'எல்லாப் பிராணிகளுடைய பிராணனாகவும் வீரியமாகவும் மனோசக்தி யாகவும் அனைத்திற்கும் காரணமாகவும் அனைத்தையும் ஆள்பவராகவும் எங்கும் வியாபித்து நிற்கும் புராண புருஷர் என உம்மை அறிகின்றேன்.

56. 27. 'நீர் உலகைச் சிருஷ்டிக்கிறவர்களையும் சிருஷ்டிக்கிறவர்; சிருஷ்டிப் பொருள்களுக்கும் மூலகாரணமாகியவர்; ஸம்ஹாரத்திற்கு ஈசனான காலஸ்வரூபி; அவ்வாறே உயிர்களுக்குயிராகிய பரமாத்மா.

56. 28. 'எவருடைய சிறிது கோபத்தினால் சிவந்த கடைக்கண் பார்வையால் முதலைகளும் திமிங்கலங்களும் நிறைந்த சமுத்திரம் வழிவிட்டதோ, எவருடைய கீர்த்தியே அணையாக ஆயிற்றோ, எவரால் இலங்கை எரிக்கப்பட்டதோ, எவரால் ராக்ஷஸர்களுடைய தலைகள் பாணங்களாலறுத்து வீழ்த்தப்பட்டனவோ அவரே நீர்.'

56. 29-30. மகாராஜனே! அறிவுக்கு ஆதாரமாகியதை அறிந்துகொண்ட பக்தனான அந்தக் கரடிராஜனை பகவானும் அச்சுதனும் தாமரைக் கண்ணனுமான கிருஷ்ணன் மிகுந்த கிருபையுடன் இன்பமளிக்கும் தமது கையால் தடவிக்கொடுத்து மேகநாதம்போல் கம்பீரமான வாக்கால் பின்வருமாறு அவரிடம் கூறினார்.

अभिमृश्यारविन्दाक्षः पाणिना शंकरेण तम् ।
कृपया परया भक्तं प्रेमगंभीरया गिरा ॥ ५६.३० ॥

मणि हेतोरिह प्राप्ता वयमृक्षपते बिलम् ।
मिथ्याभिशापं प्रमृजन्नात्मनो मणिनामुना ॥ ५६.३१ ॥

इत्युक्तः स्वां दुहितरं कन्यां जांबवतीं मुदा ।
अर्हणार्थं स मणिना कृष्णायोपजहार ह ॥ ५६.३२ ॥

सत्राजितं समाहूय सभायां राजसन्निधौ ।
प्राप्तिं चाख्याय भगवान् मणिं तस्मै न्यवेदयत् ॥ ५६.३८ ॥

स चातिव्रीडितो रत्नं गृहीत्वावाङ्मुख-स्ततः ।
अनुतप्यमानो भवन-मगमत् स्वेन पाप्मना ॥ ५६.३९ ॥

सोऽनुध्यायं-स्तदेवाघं बलवद्विग्रहाकुलः ।
कथं मृजाम्यात्मरजः प्रसीदेद् वाच्युतः कथम् ॥ ५६.४० ॥

किं कृत्वा साधु मह्यं स्यान्न शपेद् वा जनो यथा ।
अदीर्घदर्शनं क्षुद्रं मूढं द्रविण-लोलुपम् ॥ ५६.४१ ॥

---

56. 31. 'கரடியரசே! இந்த ரத்தினத்தின் நிமித்தமாக எனக்கு விளைந்த பழியைப் போக்கிக்கொள்வதற்காக இந்த ரத்தினத்தைத் தேடிக்கொண்டு இந்த குகைக்குள் நாங்கள் வந்தோம்.'

56. 32. இது கேட்ட ஜாம்பவான் கிருஷ்ணனுக்கு மதிப்பைக் காட்டத் தன் கன்னிப்பெண்ணான ஜாம்பவதியை ஸ்யமந்தகமணியுடன் மகிழ்ச்சி பொங்கக் கொடுத்துப் பூஜித்தார்.

56. 38. பகவான் (நகரம் திரும்பியதும்) அரசன் முன்னிலையில் ஸபைக்கு ஸத்ராஜித்தை வரவழைத்து ரத்தினம் மீண்டும் கிடைத்த விதத்தை விளக்கி அதை அவனிடம் சேர்ப்பித்தார்.

56. 39-41. பெரிய இடத்தில் ஏற்பட்ட மனஸ்தாபத்தால் கலக்கமுற்ற ஸத்ராஜித்து தான் செய்த குற்றத்தைப் பற்றியே சிந்திப்பவனாய் அதை எப்படி போக்கடிப்பேன், எவ்வாறு கிருஷ்ணன் ஸந்தோஷமடைவார், எதைச் செய்வதால் எனக்கு நன்மை உண்டாகும்? தீர்க்காலோசனையற்றவனும் அற்பனும் மூடனும் பணப்பேராசை பிடித்தவனுமான என்னை ஜனங்கள் எப்படி நடந்துகொண்டால் நிந்திக்காமலிருப்பார்கள்?' என்று பலவாறாய் யோசிக்கலானான்.

दास्ये दुहितरं तस्मै स्त्रीरत्नं रत्नमेव च ।
उपायोऽयं समीचीन-स्तस्य शान्ति-र्नचान्यथा ॥ ५६.४२ ॥

एवं व्यवसितो बुद्ध्या सत्राजित् स्वसुतां शुभाम् ।
मणिं च स्वयमुद्यम्य कृष्णायोपजहार ह ॥ ५६.४३ ॥

तां सत्यभामां भगवा-नुपयेमे यथाविधि ।
बहुभिर्याचितां शीलरूपौदार्यगुणान्विताम् ॥ ५६.४४ ॥

भगवानाह न मणिं प्रतीच्छामो वयं नृप ।
तवास्तां देवभक्तस्य वयं च फलभागिनः ॥ ५६.४५ ॥

---

56. 42. 'அவருக்கு ஸ்யமந்தகமணியையும் ஸ்திரீரத்தினமான என் பெண்ணையும் கொடுத்துவிடுகிறேன். இதுதான் நல்ல உபாயம். அதைத்தவிர அந்தக்குற்றத்திற்கு வேறு சாந்தி கிடையாது.'

56. 43. என்றிவ்வாறு ஸத்ராஜித்து மனதில் நிச்சயம் செய்துகொண்டு மங்கள வடிவினளான தன் பெண்ணையும் ஸ்யமந்தகமணியையும் தானாகவே முன்வந்து கிருஷ்ணனுக்குக் கொடுத்துப் பூஜித்தான்,

56. 44. பல அரசர்களால் விரும்பப்பட்டவளும் சீலம் ரூபம் பரந்த மனம் முதலிய குணங்களுடன் கூடியவளுமான அந்த ஸத்தியபாமை என்ற பெண்ணை பகவான் முறைப்படி விவாகம் செய்துகொண்டார்.

56. 45. 'அரசே! ஸ்யமந்தகமணியை நாங்கள் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. சூரியதேவரின் பக்தரான உம்மிடமே அது இருக்கட்டும். பயனில் மட்டும் நாங்கள் பங்கு கொள்வோம்' என்று பகவான் கூறினார்.

57-வது அத்தியாயத்தில் ஸ்யமந்தகமணியின் நிமித்தமாய் மறுபடியும் ஏற்பட்ட அபகீர்த்தியைப் போக்கிக்கொண்டது கூறப்படுகிறது.

कालिन्द्यादीनां पाणिग्रहणम् ॥

श्रीशुक उवाच—

एकदा पाण्डवान् द्रष्टुं प्रतीतान् पुरुषोत्तमः ।
इन्द्रप्रस्थं गतः श्रीमान् युयुधानादिभिर्वृतः ॥ ५८.१ ॥

दृष्ट्वा तमागतं पार्था मुकुन्दमखिलेश्वरम् ।
उत्तस्थु-र्युगपद् वीराः प्राणा मुख्यमिवागतम् ॥ ५८.२ ॥

परिष्वज्याच्युतं वीराः अंगसंग-हतैनसः ।
सानुरागस्मितं वक्त्रं वीक्ष्य तस्य मुदं ययुः ॥ ५८.३ ॥

युधिष्ठिरस्य भीमस्य कृत्वा पादाभिवन्दनम् ।
फाल्गुनं परिरभ्याथ यमाभ्यां चाभिवन्दितः ॥ ५८.४ ॥

காளிந்தீ முதலியவர்களின் பாணிக்கிரஹணம்

ஸ்ரீ சுகர் கூறியது—

58. 1. ஒருசமயம் அரக்குமாளிகையில் மடிந்துபோனவர்களாய்க் கூறப்பட்டு மீண்டும் (திரௌபதி ஸ்வயம்வரத்தில்) பார்க்கப்பட்டார்கள் என்று பிரசித்தியடைந்திருந்த பாண்டவர்களைக் காண்பதற்கு யுயுதானன் முதலியவர்களால் சூழப்பெற்று இந்திரப்பிரஸ்தம் சென்றார்.


58. 2. வீரர்களான பாண்டவர்கள் அங்ஙனம் வந்த ஸர்வேசுவரரான முகுந்தனைக் கண்டு முக்கியப் பிராணனை யடைந்த இந்திரியங்களைப்போல் ஒருமித்தெழுந்தனர்.

58. 3. அவ்வீரர்கள் அச்சுதனை மார்புறத் தழுவிக் கொண்டு அவருடைய அங்க ஸங்கத்தால் பாவம் நீங்கியவர்களாய் அன்பால் புன்னகை பூத்த அவருடைய முகத்தைப் பார்த்து ஆனந்த மெய்தினர்.

58. 4. யுதிஷ்டிரரையும் பீமனையும் பாதங்களில் தலை வணங்கி அர்ஜுனனைத் தழுவிக் கொண்ட பின் நகுல ஸஹதேவர்களால் பகவான் (கிருஷ்ணன்) வணங்கப் பெற்றார்.

---

58. 1. யுயுதானன்—ஸாத்யகி।



परमासन आसीनं कृष्णा कृष्ण-मनिन्दिता ।
नवोढा व्रीडिता किंचि-च्छनैरेत्याभ्यवन्दत ॥ ५८.५ ॥

तथैव सात्यकिः पार्थैः पूजितश्चाभिवन्दितः ।
निषसादासनेऽन्ये च पूजिताः पर्युपासत ॥ ५८.६ ॥

पृथां समागत्य कृताभिवादन-स्तयातिहार्दार्द्र-दृशाभिरंभितः ।
आपृष्टवांस्तां कुशलं सहस्नुषां पितृष्वसारं परिपृष्टबान्धवः ॥ ५८.७ ॥

तमाह प्रेम-वैक्लव्य-रुद्धकण्ठाश्रुलोचना ।
स्मरन्ती तान् बहून् क्लेशान् क्लेशापायात्मदर्शनम् ॥ ५८.८ ॥

तदैव कुशलं नोऽभूत् सनाथास्ते कृता वयम् ।
ज्ञातीन् नः स्मरता कृष्ण भ्राता मे प्रेषित-स्त्वया ॥ ५८.९ ॥

न तेऽस्ति स्वपरभ्रान्ति-र्विश्वस्य सुहृदात्मनः ।
तथापि स्मरतां शश्वत् क्लेशान् हंसि हृदि स्थितः ॥ ५८.१० ॥

---

58. 5. சிறந்த ஆஸனத்தில் உட்கார்ந்த கிருஷ்ணனைப் புது மணப்பெண்ணை மாசற்ற திரௌபதி மெதுவாகத் தயங்கி வந்து நமஸ்கரித்தாள்.

58, 6. அவ்வாறே பாண்டவர்களால் பூஜித்து வணங்கப் பெற்ற ஸாத்யகியும் ஆஸனத்திலமர்ந்தார். மற்றவர்களும் பூஜிக்கப் பெற்றுச் சுற்றி அமர்ந்தனர்.

58. 7. (பின்பு கிருஷ்ணன்) குந்திதேவியை அணுகி நமஸ்கரிக்க அன்பின் மிகுதியால் நீர் ததும்பும் கண்களுடன் அவளால் ஆலிங்கனம் செய்யப் பெற்று உறவினர்களின் க்ஷேம ஸமாசாரம் விசாரிக்கப் பெற்றார். அவரும் மருமகளுடன் கூடிய அத்தையைக் குசலப் பிரச்னம் செய்தார்.

58. 8. அன்பினால் தொண்டை தழதழக்கவும் கண்களில் நீர் பெருகவும் குந்தி தேவி தான் பட்ட பல கஷ்டங்களை நினைத்துக் கொண்டு கஷ்டங்களைப் போக்குவதற்காகக் காட்சியளித்த கிருஷ்ணனிடம் பின்வருமாறு கூறினாள்.

58. 9. 'கிருஷ்ணா! பந்துக்களாகிய எங்களை நினைத்து என் சகோதரராகிய அக்ரூரர் எப்போது உன்னால் அனுப்பப்பட்டாரோ அப்போதே எங்களுக்கு க்ஷேமம் உண்டாய் விட்டது. உன்னால் நாங்கள் நாதனுடையவர்களானோம்.

58. 10. 'உலகிற்கெல்லாம் ஆத்மாவும் நண்பனுமாகிய உனக்குத் தன்னைச் சேர்ந்தவர் என்றும் பிறர் என்றும் பேதம் இல்லை. எனினும் அடிக்கடி நினைப்பவர்களுடைய இதயத்தில் இருந்து கொண்டு அவர்களுடைய கஷ்டங்களைப் போக்குகிறாய்.

---

58. 6. पूजितश्चाभिनन्दितः ।

युधिष्ठिर उवाच—

किं न आचरितं श्रेयो न वेदाहमधीश्वर ।
योगेश्वराणां दुर्दर्शो यन्नो दृष्टः कुमेधसाम् ॥ ५८.११ ॥

इति वै वार्षिकान् मासान् राज्ञा सोऽभ्यर्थितः सुखम् ।
जनयन् नयनानन्द-मिन्द्रप्रस्थौकसां विभुः ॥ ५८.१२ ॥

एकदा रथमारुह्य विजयो वानरध्वजम् ।
गाण्डीवं धनुरादाय तूणौ चाक्षयसायकौ ॥ ५८.१३ ॥

साकं कृष्णेन सन्नद्धो विहर्तुं विपिनं वनम् ।
बहुव्याल-मृगाकीर्णं प्राविशत् परवीरहा ॥ ५८.१४ ॥

तत्राविध्यच्छरै-र्व्याघ्रान् सूकरान् महिषान् रुरून् ।
शरभान् गवयान् खड्गान् हरिणान् शश-शल्लकान् ॥ ५८.१५ ॥

तान् निन्युः किंकरा राज्ञे मेध्यान् पर्वण्युपागते ।
तृट्परीतः परिश्रान्तो बीभत्सु-र्यमुनामगात् ॥ ५८.१६ ॥

யுதிஷ்டிரர் கூறியது:—

58. 11. ஸர்வேசுவரா! யோகேசுவரர்களாலும் காணுதற்கரிய நீ அறிவிலிகளாகிய எங்களுக்குக் காட்சியளிப்பதற்கு எங்களால் என்ன புண்ணியம் செய்யப்பட்டதோ நான் அறியேன்.

58. 12. இங்ஙனம் தர்மபுத்திர மகாராஜனால் பிரார்த்திக்கப்பட்ட கிருஷ்ண பரமாத்மா இந்திரப்பிரஸ்த வாசிகளுக்கு நேத்ரானந்தத்தை வளர்த்துக் கொண்டு மழைக்கால மாதங்கள் நான்கும் இன்புறத் தங்கினார்.

58. 13-14. ஒரு சமயம் சத்துருக்களையழிக்கும் அர்ஜுனன் கவசம்பூண்டு காண்டீவம் எனும் வில்லையும் குறைவுபடாத பாணங்களையுடைய இரு அம்பறாத் தூணிகளையும் எடுத்துக் கொண்டு குரங்குக் கொடித் தேரில் ஏறிக் கிருஷ்ணனுடன் பாம்புகளும் மிருகங்களும் மிகுதியுள்ள பயங்கரமான காட்டிற்கு வேட்டையாடச் சென்றான்.

58. 15. அங்கே பாணங்களால் புலி பன்றி எருமை கலைமான் சரபம் கவயம் காண்டாமிருகம் மான் முயல் முள்ளம்பன்றி முதலியவற்றைக் கொன்றான்.

58. 16. அவைகளில் சிறந்தவற்றை வேலைக்காரர்கள் அப்போது நெருங்கிவந்த பருவகால பூஜைகளுக்காக தருமபுத்திரரிடம் கொண்டு சேர்த்தார்கள். வேட்டையாடி தாகத்தினால் வருந்திக் களைத்த அர்ஜுனன் யமுனையை யடைந்தான்.

तत्रोपस्पृश्य विशदं पीत्वा वारि महारथौ ।
कृष्णौ ददृशतुः कन्यां चरन्तीं चारुदर्शनाम् ॥ ५८.१७ ॥

तामासाद्य वरारोहां सुद्विजां रुचिराननाम् ।
पप्रच्छ प्रेषितः सख्या फाल्गुनः प्रमदोत्तमाम् ॥ ५८.१८ ॥

का त्वं कस्यासि सुश्रोणि कुतोऽसि किं चिकीर्षसि ।
मन्ये त्वां पतिमिच्छन्तीं सर्वं कथय शोभने ॥ ५८.१९ ॥

कालिन्द्युवाच—

अहं देवस्य सवितु-र्दुहिता पतिमिच्छता ।
विष्णुं वरेण्यं वरदं तपः परम-मास्थिता ॥ ५८.२० ॥

नान्यं पतिं वृणे वीर तमृते श्रीनिकेतनम् ।
तुष्यतां मे स भगवान् मुकुन्दोऽनाथसंश्रयः ॥ ५८.२१ ॥

---

58. 17. மகாரதர்களான கிருஷ்ணனும் அர்ஜுனனும் நீராடித் தெளிவான தண்ணீரைப் பருகியதும் அங்கே உலவிக்கொண்டிருந்த அழகிய தோற்றமுடைய ஒரு கன்னிகையைக் கண்ணுற்றனர்.

58. 18. தோழனை கிருஷ்ணனல் ஏவப்பட்டு அர்ஜுனன் துடையழகும் பல்லழகும் முக அழகும் படைத்த அவ்வுத்தமப் பெண்ணை யணுகிப் பின்வருமாறு வினவினன்.

58. 19. 'இடையழகிய பெண்ணே! நீ யார்? யாருடைய பெண்? எங்கிருந்து வருகிறாய்? உன் விருப்ப மென்ன? கணவனை யடைய விரும்புபவளாய் எனக்குத் தோன்றுகிறது. மங்களமானவளே! அனைத்தையும் சொல்வாயாக'.

காளிந்தீ கூறியது—

58. 20. 'நான் சூரியபகவானுடைய பெண். சிறந்தவரும் வரமளிப்பவருமான விஷ்ணுவைக் கணவராக அடைய விரும்பி உத்தமமான தவம் செய்து வருகிறேன்.

58. 21. 'வீரரே! ஸ்ரீநிவாஸரான அவரைத் தவிர்த்து வேறொருவரையும் கணவராக நான் கொள்ளமாட்டேன். அநாதைகளின் புகலிடமாய் விளங்கும் அந்த பகவான் முகுந்தன் எனக்கருள் புரியவேண்டும்.

---

58. 21. तमृते पुरुषमीश्वरम् ।

कालिन्दीति समाख्याता वसामि यमुनाजले ।
निर्मिते भवने पित्रा यावदच्युत-दर्शनम् ॥ ५८.२२ ॥

तथावदद् गुडाकेशो वासुदेवाय सोऽपि ताम् ।
रथ-मारोप्य तद् विद्वान् धर्मराज-मुपागमत् ॥ ५८.२३ ॥

यदैव कृष्णः सन्दिष्टः पार्थानां परमाद्भुतम् ।
कारयामास नगरं विचित्रं विश्वकर्मणा ॥ ५८.२४ ॥

भगवांस्तत्र निवसन् स्वानां प्रियचिकीर्षया ।
अग्नये खाण्डवं दातु-मर्जुनस्यास सारथिः ॥ ५८.२५ ॥

सोऽग्निस्तुष्टो धनुरदा-द्धयाञ्छ्वेतान् रथं नृप ।
अर्जुनायाक्षयौ तूणौ वर्म-चाभेद्य-मस्त्रिभिः ॥ ५८.२६ ॥

---

58. 22. 'காளிந்தீ என்பது என் பெயர், யமுனை ஜலத்தில் என் தந்தையால் கட்டப்பட்ட மாளிகையில் வசிக்கிறேன். அச்சுத தரிசனம் ஏற்படும்வரை இருப்பேன்.'

58. 23. அவள் கூறியதை அர்ஜுனன் கிருஷ்ணனிடம் சொன்னான். அதை யறிந்துகொண்ட கிருஷ்ணன் அவளை ஏற்றுத் தேரிலேற்றிக்கொண்டு தர்மபுத்திரரிடம் வந்து சேர்ந்தார்.

58. 24. பின்பு பாண்டவர்களின் பிரார்த்தனைக் கிணங்கி விசுவகர்மாவைக் கொண்டு அவர்களுக்காக மிக அற்புதமானதும் அழகியதுமான நகரத்தை நிர்மாணம் செய்வித்தார்.

58. 25. மேலும் அங்கு வசிக்கையில் பகவான் பந்துக்களுக்குப் பிரியத்தைச் செய்யக் கருதி அக்னிபகவானுக்குக் காண்டவவனத்தைக் கொடுப்பதற்காக அர்ஜுன னுக்குச் சாரதியானார்.

58. 26. அரசே! அக்னிபகவான் ஸந்தோஷமடைந்து அர்ஜுனனுக்கு ஒரு வில்லையும் குறைவுபடாத இரு அம்பறுத்தூணிகளையும் ஒரு தேரையும் வெள்ளைக் குதிரைகளையும் வில்லாளிகளால் பிளக்கமுடியாத ஒரு கவசத்தையும் கொடுத்தார்.

---

58. 22. காளிந்தீ குருக்ஷேத்திரம் வந்தபோது தன் விவாகத்தைப்பற்றி திரௌபதியிடம் கூறியது—

தபச்சரந்தீ-மாஜ்ஞாய ஸ்வபாதஸ்பர்சனேச்சயா ।
ஸக்யோபேத்யாக்ரஹீத் பாணிம் ஸாஹம் தத்க்ருஹமார்ஜனீ ॥ பாக. 83.11 ॥

---

58. 24. यथैव कृष्णः ।

मयश्च मोचितो वह्नेः सभां सख्य उपाहरत् ।
यस्मिन् दुर्योधनस्यासी-ज्जलस्थल-दृशिभ्रमः ॥ ५८.२७ ॥

स तेन समनुज्ञातः सुहृद्भिश्चानुमोदितः ।
आययौ द्वारकां भूयः सात्यकिप्रमुखै-र्वृतः ॥ ५८.२८ ॥

अथोपयेमे कालिन्दीं सुपुण्यर्त्वृक्ष ऊर्जिते ।
वितन्वन् परमानन्दं स्वानां परममंगलम् ॥ ५८.२९ ॥

विन्दानुविन्दावावन्त्यौ दुर्योधन-वशानुगौ ।
स्वयंवरे स्वभगिनीं कृष्णे सक्तां न्यषेधताम् ॥ ५८.३० ॥

राजाधिदेव्या-स्तनयां मित्रविन्दां पितृष्वसुः ।
प्रसह्य हृतवान् कृष्णो राजन् राज्ञां प्रपश्यताम् ॥ ५८.३१ ॥

---

58. 27. காட்டுத்தீயிலிருந்து விடுவிக்கப்பட்ட மயன் என்ற அசுர சில்பி தன்னை விடுவித்த தோழனை அர்ஜுனனுக்கு ஒரு ஸபாமண்டபத்தைத் தன் காணிக்கையாக அமைத்துக் கொடுத்தான். அதில் தான் துரியோதனனுக்குத் தரை நீர்போலவும் நீர் தரைபோலவும் மதிமயக்கம் ஏற்பட்டது.

58. 28. (அதன்பின்) பகவான் அர்ஜுனனிடம் விடைபெற்று மற்ற நண்பர்களாலும் அனுமதிக்கப் பெற்று ஸாத்யகி முதலியவர்கள் சூழ துவாரகைக்குத் திரும்பி வந்தார்.

58. 29. மங்களஸ்வரூபியான பகவான் பந்துக்களுக்குப் பரமானந்தமளிப்பவராய்ப் புண்ணியமான நக்ஷத்திரமும் ருதுவும் கூடிய சுபமுகூர்த்தத்தில் காளிந்தியை விவாகம் செய்துகொண்டார்.

58. 30. (இனி மற்றொரு வரலாறு). துரியோதனனைப் பின் பற்றியவர்களாகவும் அவந்தி தேசத்தை யாள்பவர்களாகவு மிருந்த விந்தன் அனுவிந்தன் என்ற அரசர்கள் தங்கள் தங்கையின் ஸ்வயம்வரத்தில் அவளுக்குக் கிருஷ்ணன்மேலிருந்த ஆசையைத் தடுத்தார்கள்.

58. 31. அரசே! கிருஷ்ணனே ராஜாதிதேவி என்ற தன் அத்தையின் மகளும் மித்ரவிந்தை எனப் பெயர் பெற்றவளுமான அக் கன்னிகையை அரசர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே பலாத்காரமாய் எடுத்து வந்தார்.

---

58. 31. வசுதேவர் தங்கை ராஜாதிதேவியின் பெண் மித்ரவிந்தை. இவள் கிருஷ்ணனுடைய ஐந்தாவது பத்னி.

नग्नजि-न्नाम कौसल्य आसीद् राजातिधार्मिकः।
तस्य सत्याभवत् कन्या देवी नाग्नजिती नृप ॥ ५८.३२ ॥

न तां शेकु-र्नृपा वोढु-मजित्वा सप्त गोवृषान्।
तीक्ष्णशृंगान् सुदुर्धर्षान् वीरगन्धासहान् खलान् ॥ ५८.३३ ॥

तां श्रुत्वा वृषजिल्लभ्यां भगवान् सात्वतां पतिः।
जगाम कौसल्यपुरं सैन्येन महता वृतः ॥ ५८.३४ ॥

स कोसलपतिः प्रीतः प्रत्युत्थानासनादिभिः।
अर्हणेनापि गुरुणा पूजयन् प्रतिनन्दितः ॥ ५८.३५ ॥

---

58. 32. அரசே! கோசலநாட்டை யாள்பவனும் சிறந்த தர்மிஷ்டனும் நக்னஜித் எனப் பெயர் படைத்தவனுமான ஒரு அரசன் இருந்தான். அவனுக்கு ஸத்யை என்றும் நாக்னஜிதீதேவி என்றும் பெயர்படைத்த ஒரு பெண் இருந்தாள்.

58. 33. கூரிய கொம்புடையவைகளும் அடக்கமுடியாதவைகளும் வீரர்களின் வாஸனையையே சகிக்காதவைகளும் முரடானவைகளுமான ஏழுகாளைகளை (அடக்கினவர்களே அவளைக் கைப்பிடிக்கலாம் என்று பந்தயம் ஏற்படுத்தியிருந்ததால் அங்ஙனம்) ஜயிக்காமல் அவளை அரசர்கள் எவரும் மணக்க முடியவில்லை.

58. 34. யது நாயகனான கிருஷ்ணன் காளைகளை ஜயித்தவராலேயே அவளை அடையமுடியும் என்பதைக் கேள்விப்பட்டுப் பெரும் சேனையால் சூழப்பட்டுக் கோசல புரிக்குச் சென்றார்.

58. 35. கோசலநாட்டரசனும் மகிழ்ச்சியுடன் எதிர்சென்றழைத்து ஆசனமளித்துச் சிறந்த உபசாரங்களால் பூஜித்துப் பகவானால் தானும் மரியாதை செய்யப்பெற்றான்.

---

58. 32. நந்தகோபருடைய சகோதரியே நக்னஜித் அல்லது கும்பகர் என்பவருடைய மனைவி. அவர்கள் பெண் நாக்னஜிதீ. இவளே நீளாதேவியின் அவதாரமான நப்பின்னை என்றுங் கூறப்படுகிறது.

ஒ. 'நந்தகோபாலன் மருமகளே நப்பின்னாய்' —திருப்பாவை.

ஒ. வம்பு அவிழ் கோதை பொருட்டா மால் விடை ஏழுமடர்த்த
செம்பவளத் திரள்வாயன் சிரீதரன் தொல்புகழ்பாடி
கும்பிடு நட்டமிட்டு ஓடி கோகு உகட்டுண்டு உழலாதார்
தம்பிறப்பால் பயனென்னே சாது சனங்களிடையே? —நம்மாழ்வார்

वरं विलोक्याभिमतं समागतं नरेन्द्रकन्या चकमे रमापतिम्।
भूयादयं मे पतिराशिषोऽमलाः करोतु सत्या यदि मे धृतो व्रतैः
॥ ५८.३६ ॥

यत्पादपंकजरजः शिरसा बिभर्ति श्रीरब्जजः स गिरिशः सह लोकपालैः।
लीलातनूः स्वकृतसेतु-परीप्सयेशः काले दधत् स भगवान् मम केन तुष्येत्
॥ ५८.३७ ॥

अर्चितं पुनरित्याह नारायण जगत्पते।
आत्मानन्देन पूर्णस्य करवाणि किमल्पकः ॥ ५८.३८ ॥

श्रीशुक उवाच—

तमाह भगवान् हृष्टः कृतासन-परिग्रहः।
मेघ-गंभीरया वाचा सस्मितं कुरुनन्दन ॥ ५८.३९ ॥

---


58. 36. அரசகுமாரியும் அங்ஙனம் எழுந்தருளிய லக்ஷ்மீநாயகனைக் கண்ணுற்று அவரே தன் மனத்துக்குகந்த வரன் எனக் கருதினாள்; 'என்றால் விரதங்களால் பகவான் மனதில் நிறுத்தப்பட்டிருந்தால் இவரே எனக்குப் பதியாகவேண்டும். மாசற்றவர்களின் ஆசிமொழிகளையும் உண்மையாகச் செய்யவேண்டும்' (என வேண்டிக் கொண்டாள்.)

58. 37. ஸ்ரீதேவியும் லோகபாலர்களுடன் கூடிய பரமசிவனும் பிரம்மாவும் எவருடைய பாததூளியைச் சிரசில் தாங்குகின்றார்களோ, தான் ஏற்படுத்திய தர்ம மரியாதையைக் காப்பாற்றுவதற்காக ஈசுவரராகிய எவர் அவ்வப்போது விளையாட்டாகச் சரீரங்களை எடுத்துக்கொள்ளுகிறாரோ அந்த பகவான் என் விஷயத்தில் எதைக் கொண்டு பிரீதி யடைவார்? (என்று அரசன் எண்ணினான்.)

58. 38. பூஜையை ஏற்றுக்கொண்ட பகவானைப் பார்த்து, மறுபடியும் அரசன் 'உலக நாயகரே! நாராயணா! ஆத்மானந்தத்தால் பரிபூர்ணராகிய உங்களுக்கு மிக அற்பனான நான் என்ன செய்யப்போகிறேன்?' என்று கூறினார்.

ஸ்ரீ சுகர் கூறியது—

58. 39. குருநந்தனா! ஆஸனத்திலமர்ந்த பகவான் மகிழ்ச்சியடைந்து அவரை நோக்கிப் புன்னகையுடன் மேகத்தின் முழக்கம்போல் கம்பீரமான வாக்கினால் பின் வருமாறு கூறினார்.



श्रीभगवानुवाच—

नरेन्द्र याच्ञा कविभि-र्विगर्हिता राजन्यबन्धो-र्निजधर्म-वर्तिनः।
तथापि याचे तव सौहृदेच्छया कन्यां त्वदीयां
न हि शुल्कदा वयम् ॥ ५८.४० ॥

राजोवाच—

कोऽन्यस्तेऽभ्यधिको नाथ कन्यावर इहेप्सितः।
गुणैकधाम्नो यस्यांगे श्रीर्वसत्यनपायिनी ॥ ५८.४१ ॥

किं त्वस्माभिः कृतः पूर्वं समयः सात्वतर्षभ।
पुंसां वीर्य-परीक्षार्थं कन्यावर-परीप्सया ॥ ५८.४२ ॥

सप्तैते गोवृषा वीर दुर्दान्ता दुरवग्रहाः।
एतै-र्भग्नाः सुबहवो भिन्नगात्रा नृपात्मजाः ॥ ५८.४३ ॥

यदि मे निगृहीताः स्युस्त्वयैव यदुनन्दन।
वरो भवानभिमतो दुहितु-र्मे श्रियःपते ॥ ५८.४४ ॥

ஸ்ரீ பகவான் கூறியது:—

58. 40. அரசே! தனது தர்மத்தில் நிலைபெற்ற க்ஷத்திரியர்களில் சிறியவனுக்கும் யாசித்தல் என்பது பண்டிதர்களால் கண்டிக்கப்பட்டுள்ளது. அப்படியிருந்தபோதிலும் உங்களுடைய சிநேகத்தை விரும்பி உங்கள் கன்னிகையை நான் யாசிக்கிறேன். நாங்கள் சுல்கம் கொடுப்பதில்லை.'

அரசன் கூறியது:—

58. 41. 'நாதா! நற்குணங்கள் அனைத்திற்கும் உறைவிடமானவரும் மஹாலக்ஷ்மி மார்பை விட்டகலப் பெறாதவரும் ஆகிய உம்மைக்காட்டிலும் கன்னிகைக்கு விரும்பத் தக்க வரன் இவ்வுலகில் வேறொருவர் உண்டா?

58. 42. 'யாதவோத்தமா! என்றாலும் பெண்ணிற்குச் சிறந்த வரன் வேண்டும் என்ற விருப்பத்தால் புருஷர்களின் வீர்யப் பரீக்ஷைக்காக முந்தியே எங்களால் ஒரு ஸங்கேதம் செய்யப்பட்டிருக்கிறது.

58. 43. 'வீரரே! இதோ இங்கிருக்கும் ஏழு காளைகளும் எவருக்கும் அடங்காத முரட்டுப் பிராணிகள். பல அரசகுமாரர்கள் இவைகளின் தாக்குதலால் உடல் பிளந்து தோல்வியுற்றிருக்கிறார்கள்.

58. 44. 'யதுநந்தனா! ஸ்ரீகாந்தா! உம்மால் இவை அடக்கப்படுமானால் நீரே என் பெண்ணிற்கு இசைந்த வரன்.'

एवं समय-माकर्ण्य बद्ध्वा परिकरं प्रभुः ।
आत्मानं सप्तधा कृत्वा न्यगृह्णल्लीलयैव तान् ॥ ५८.४५ ॥

बद्ध्वा तान् दामभिः शौरिर्भग्नदर्पान् हतौजसः ।
व्यकर्षल्लीलया बद्धान् बालो दारुमयान् यथा ॥ ५८.४६ ॥

ततः प्रीतः सुतां राजा ददौ कृष्णाय विस्मितः ।
तां प्रत्यगृह्णाद् भगवान् विधिवत् सदृशीं प्रभुः ॥ ५८.४७ ॥

राजपत्न्यश्च दुहितुः कृष्णं लब्ध्वा प्रियं पतिम् ।
लेभिरे परमानन्दं जातश्च परमोत्सवः ॥ ५८.४८ ॥

दंपती रथ-मारोप्य महत्या सेनया वृतौ ।
स्नेहप्रक्लिन्न-हृदयो यापयामास कोसलः ॥ ५८.५२ ॥

श्रुतकीर्तेः सुतां भद्रा-मुपयेमे पितृष्वसुः ।
कैकेयीं भ्रातृभिर्दत्तां कृष्णः सन्तर्दनादिभिः ॥ ५८.५६ ॥

---

58. 45. பகவான் இந்த நிச்சயத்தைக் கேட்டதும் கச்சை கட்டிக்கொண்டு தன்னை ஏழு உருவங்களாகக் கொண்டு அவைகளை விளையாட்டாக அடக்கினார்.

58. 46. ஸ்ரீ கிருஷ்ணன் கயிறுகளால் கட்டப்பட்டவைகளும் கொழுப்படங்கின வைகளும் பலம் குன்றியவைகளுமான அக் காளைகளை ஒரு குழந்தை மரப்பொம்மைகளை இழுப்பதுபோல் விளையாட்டாக அங்குமிங்கு மிழுத்தார்.

58. 47. அதனால் ஆச்சரியமும் ஸந்தோஷமும் அடைந்த அரசன் பெண்ணைக் கிருஷ்ணனுக்குக் கொடுத்தார். ஸர்வேசுவரனான பகவான் தனக்கேற்ற அவளை முறைப் படி விவாகம் செய்து கொண்டார்.

58. 48. அரசனுடைய மனைவிகள் தங்களுடைய புத்திரிக்குப் பிரியமான மணமகனை யடைந்து பரமானந்த மெய்தினர். அது பெரிய உத்ஸவமாக ஆயிற்று.

58. 52. அன்பினால் உள்ளம் நெகிழ்ந்த கோசலாதிபதி தம்பதிகளைத் தேரில் ஏற்றிப் பெரும் சேனை பின்தொடர ஊருக்கனுப்பினார்.

58. 56. (பின்பு) ஸ்ரீகிருஷ்ணன் கேகய ராஜகன்னிகையும் சுருதகீர்த்தி என்ற தன் அத்தைமகளுமான பத்ரை என்பவளை அவர்களுடைய சகோதரர்களாகிய ஸந்தர்த்தனன் முதலியவர்களால் கொடுக்கப்பட்டு விவாகம் செய்துகொண்டார்.

सुतां च मद्राधिपते-र्लक्ष्मणां लक्षणै-र्युताम् ।
स्वयंवरे जहारैकः स सुपर्णः सुधामिव ॥ ५८.५७ ॥

अन्याश्चैवंविधा भार्याः कृष्णस्यासन् सहस्रशः ।
भौमं हत्वा तन्निरोधा-दाहृताश्चारुदर्शनाः ॥ ५८.५८ ॥

इति दशमस्कन्धे अष्टमहिष्युद्वाहो नाम
अष्टपञ्चाशत्तमोऽध्यायः ॥

---

58. 57. (மீண்டும்) அவர் ஒருவராகவே மத்ரதேசத்து அரசன் மகளும் ஸகல ஸாமுத்ரிகாலக்ஷணங்களுடன் கூடினவளுமான லக்ஷ்மணை என்பவளைக் கருடன் அமிருதத்தைக் கொணர்ந்தாற்போல் ஸ்வயம்வரத்தில் எடுத்துவந்தார்.

58. 58. ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு நரகாசுரனைக் கொன்று அவனுடைய அந்தப்புரத்திலிருந்து கொண்டுவரப்பட்டவர்களும் அழகிய தோற்றமுடையவர்களும் இன்னும் இப்படிப்பட்ட ஆயிரக்கணக்கான வேறு மனைவிகளும் இருந்தார்கள்.

இங்ஙனம் தசமஸ்கந்தத்தில் அஷ்டபத்னீ
விவாஹம் எனப் பெயர் பெற்ற ஐம்பதெட்டாவது
அத்தியாயம் முற்றிற்று.

---

58. 58. ஓ. ருக்மிணீ ஜாம்பவதீ பாமா ஸத்யா பத்ரா ச லக்ஷ்மணா ।
காளிந்தீ மித்ரவிந்தா சேத்யஷ்டௌ பட்டமஹாஸ்த்ரிய: ॥

नरकासुरवधः ॥

राजोवाच—

यथा हतो भगवता भौमो येन च ताः स्त्रियः ।
निरुद्धा एतदाचक्ष्व विक्रमं शार्ङ्गधन्वनः ॥ ५९.१ ॥

श्रीशुक उवाच—

इन्द्रेण हृतच्छत्रेण हृतकुण्डलबन्धुना ।
हृतामराद्रिस्थानेन ज्ञापितो भौमचेष्टितम् ।
सभार्यो गरुडारूढः प्राग्ज्योतिषपुरं ययौ ॥ ५९.२ ॥

நரகாசுரவதம்

அரசன் கூறியது—

59. 1. எவனால் (நாம் கேள்விப்படும்) அந்த ஸ்திரீகள் சிறைப் படுத்தப்பட்டார்களோ அப்படிப்பட்ட நரகாசுரன் எவ்விதம் பகவானால் கொல்லப்பட்டானோ அந்தச் சரித்திரத்தைச் சார்ங்கதரனாகிய கிருஷ்ணனுடைய விக்கிரமம் விளங்கும்படிச் சொல்ல வேண்டும்.

ஸ்ரீ சுகர் கூறியது—

59. 2. தன் குடையும் தன் தாயின் குண்டலங்களும் தன்னுடைய மணிபர்வதம் என்னும் ஸ்தானமும் தேவராஜஸ்தானமும் நரகாசுரனால் அபகரிக்கப்பட்ட அக்கிரமச் செயல் இந்திரனால் தெரிவிக்கப்பட்டதும் பகவான் ஸத்தியபாமை யுடன் கருடாருடராய் (நரகாசுரன் ராஜதானியாகிய) பிராக்ஜோதிஷபுரம் சென்றார்.

---

59. 2. **ஸபார்ய**:—தஸ்யா: கௌதுகாய தயா பார்யயா ஸஹ யயௌ। யத்வா 'த்வதனுஜ்ஞயைவ த்வத்புத்ரம் ஹநிஷ்யாமீதி' ஹாஸோக்தம் பூம்யை வரம் த்ததம் ஸத்யம் கர்த்தும்। ஸத்யபாமயா பூம்யசத்வாத் தயா ஸஹ யயௌ। யத்வா நாரதானீத பாரிஜாதைக குஸுமே ருக்மிண்யை தத்தே ஸதி குபிதாம் ஸத்யபாமாம் ஸாந்த்வயதா துப்யம் பாரிஜாதமேவ ததாமீதி ஸ்ரீக்ருஷ்ணேன ப்ரதிச்ருதமிதி ஹரிவம்சே ப்ரஸித்தம்। ததர்த்தம் தாம் நீதவானிதி ஜ்ஞேயம் ॥

शंखनादेन यन्त्राणि हृदयानि मनस्विनाम् ।
प्राकारं गदया गुर्व्या निर्बिभेद गदाधरः ॥ ५९.५ ॥

यानि योधैः प्रयुक्तानि शस्त्रास्त्राणि कुरूद्वह ।
हरिस्तान्यच्छिनत्तीक्ष्णैः शरै-रेकैक-शस्त्रिभिः ॥ ५९.१७ ॥

उह्यमानः सुपर्णेन पक्षाभ्यां निघ्नता गजान् ।
गरुत्मता हन्यमानास्तुण्डपक्षनखैर्गजाः ॥ ५९.१८ ॥

पुरमेवाविशन्नार्ता नरको युध्ययुध्यत ।
दृष्ट्वा विद्रावितं सैन्यं गरुडेनार्दितं स्वकम् ॥ ५९.१९ ॥

तं भौमः प्राहरच्छक्त्या वज्रः प्रतिहतो यतः ।
नाकंपत तया विद्धो मालाहत इव द्विपः ॥ ५९.२० ॥

शूलं भौमोऽच्युतं हन्तु-मादद्दे वितथोद्यमः ।
तद्विसर्गात् पूर्वमेव नरकस्य शिरो हरिः ।
अपाहरद् गजस्थस्य चक्रेण क्षुरनेमिना ॥ ५९.२१ ॥

---

59. 5. கதாதரான கிருஷ்ணன் சங்கநாதத்தாலேயே (கோட்டைகளின்) யந்திரங்களையும் சத்ருவீரர்களின் இருதயங்களையும் பிளந்தார். கோட்டை மதிலைத் தன் கனமான கதையால் இடித்தார்.

59. 17. குருசிரேஷ்டரே!போர் வீரர்களால் எங்கெந்த அஸ்திர சஸ்திரங்கள் ப்ரயோகிக்கப்பட்டனவோ அவைகளை பகவான் தனித் தனியே மும்மூன்று கூறிய பாணங்களால் துண்டித்தார்.

59, 18-20. பகவான் ஏறிச் சென்ற கருடன் தனது இறக்கைகளால் யானைகளையும் கொல்லக்கூடியதாகையால் அந்தக் கருடனுடைய மூக்காலும் இறக்கையாலும் நகங்களாலும் இமசிக்கப்பட்ட யானைகள் பட்டணத்துக்குள் ஓடிப் போயின. நரகாசுரன் மட்டும் போர்க்களத்தில் தனியே யுத்தம் செய்தான். கருடனால் இம்சிக்கப்பட்டுத் தனது சேனை முறியடிக்கப்பட்டதைப் பார்த்து நரகாசுரன் எதனால் வஜ்ராயுத்தையும் மழுங்கச் செய்தானோ அந்தச் சக்தி ஆயுதத்தால் கருடனை அடித்தான். அதனால் அடிக்கப்பட்ட கருடன் பூமாலையால் அடிக்கப்பட்ட யானையைப் போல் அசையவே இல்லை,

59. 21. கருடனிடம் செய்த முயற்சி வீணான நரகாசுரன் அச்சுதனைக் கொல்ல எண்ணிச் சூலாயுதத்தை எடுத்துக் கொண்டான். ஆனால் அவன் அச்சூலத்தை விடுவதற்கு முன்பே யானைமேலிருந்த அந்த நரகாசுரனுடைய தலையைக் கூர்மையான அரும்புகள் பொருந்திய சக்கிராயுதத்தால் பகவான் அறுத்தார்.

स कुण्डलं चारुकिरीटभूषणं बभौ पृथिव्यां पतितं समुज्ज्वलत्।
हाहेति साध्वित्यृषयः सुरेश्वरा माल्यै-र्मुकुन्दं विकिरन्त ईडिरे
॥ ५९.२२ ॥

ततश्च भूः कृष्णमुपेत्य कुण्डले प्रतप्तजांबूनद-रत्न भास्वरे।
स-वैजयन्त्या वनमालयार्पयत् प्राचेतसं छत्रमथो महामणिम् ॥५९.२३॥

अस्तौषीदथ विश्वेशं देवी देववरार्चितम्।
प्रांजलिः प्रणता राजन् भक्ति-प्रवणया धिया ॥ ५९.२४ ॥

भूमिरुवाच—

नमस्ते देवदेवेश शंखचक्रगदाधर।
भक्तेच्छोपात्तरूपाय परमात्मन् नमोऽस्तु ते ॥ ५९.२५ ॥

---

59. 22. குண்டலத்தாலும் அழகிய கிரீடத்தாலும் அலங்கரிக்கப் பெற்று ஒளி வீசிய அவன் தலை தரையில் விழுந்துருளுவதாக ஆயிற்று. 'ஆ! ஆ! இது நல்ல காரியம் என்று ரிஷிகளும் தேவ சிரேஷ்டர்களும் புஷ்பங்களை இறைத்துக் கிருஷ்ணனைத் துதித்தனர்.

59. 23. அப்போது பூதேவி கிருஷ்ணனிடம் வந்து உருக்கிய தங்கத்தில் ரத்தினங்கள் பதிக்கப் பெற்று ஜ்வலிக்கும் இரண்டு குண்டலங்களையும் வைஜயந்திமாலை, வனமாலை இவற்றுடன் வருணனுடைய குடையையும் ஒரு தெய்வீகமான ரத்தினத்தையும் அர்ப்பணம் செய்தாள்.

59. 24. அரசே! பின்பு பூதேவி தேவர்களால் பூஜிக்கப்பட்ட உலக நாயகனை பக்தி கனிந்த மனதுடன் வணங்கிக் கைகூப்பித் துதிக்கலானாள்.

பூதேவி கூறியது—

59. 25. சங்க சக்ர கதாதாரியான தேவ தேவேசா, உமக்கு நமஸ்காரம். பக்தர்கள் விரும்பும் வடிவை எடுத்துக் கொள்ளும் பரமாத்மாவே உமக்கு நமஸ்காரம்.

---

59. 22. நரகாசுரன் மரண காலத்தில் புத்தி தெளிந்து தான் இறந்த தினத்தை மக்களெல்லாம் ஸந்தோஷமாகக் கொண்டாட வேண்டும் என்று பகவானிடம் வரம் கேட்டுக் கொண்டதாகக் கூறுவர். அதனால் தான் ஐப்பசி அமாவாசைக்கு முதல் இரவு நரக சதுர்தசியன்று நாடெங்கும் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

நரகமாவது காமம் கோபம் லோபம். நரகாசுரன் இவற்றின் வடிவாயிருந்தவன். அசுரப்படைகளை விரட்ட அதிர் வெடிகள், அக்ஞான இருளைப் போக்க மத்தாப்புகளும் விளக்குகளும்.

ஓ. அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்.

—பூதத்தாழ்வார்

अहं पयो ज्योतिरथानिलो नभो मात्राणि देवा मन इन्द्रियाणि।
कर्ता महानित्यखिलं चराचरं त्वय्यद्वितीये भगवन्नयं भ्रमः
॥ ५९.३० ॥

तस्यात्मजोऽयं तव पादपंकजं भीतः प्रपन्नार्तिहरोपसादितः।
तत् पालयैनं कुरु हस्तपंकजं शिरस्यमुष्याखिलकल्मषापहम्
॥ ५९.३१ ॥

श्रीशुक उवाच—

इति भूम्यार्थितो वाग्भि-र्भगवान् भक्तिनम्रया।
दत्त्वाभयं भौमगृहं प्राविशत् सकलर्द्धिमत् ॥ ५९.३२ ॥

तत्र राजन्यकन्यानां षट्सहस्राधिकायुतम्।
भौमाहृतानां विक्रम्य राजभ्यो ददृशे हरिः ॥ ५९.३३ ॥

तं प्रविष्टं स्त्रियो वीक्ष्य नरवीरं विमोहिताः।
मनसा वव्रिरेऽभीष्टं पतिं दैवोपसादितम् ॥ ५९.३४ ॥

---

59. 30. பகவானே! பூமி நான் அப்பு தேயு வாயு ஆகாசமும் தன்மாத்திரைகளும் அதிஷ்டான தேவதைகளும் மனது இந்திரியங்கள் அஹங்காரம் மஹத்தத்துவம் ஆகிய வைகளும் இரண்டற்ற உம்மிடத்தில் தோன்றுகின்றன. இது மயக்கமே.

59. 31. சரணடைந்தவர்களின் துன்பத்தைப் போக்கும் ஈசா! நரகாசுரனுடைய புத்திரனுகிய இவன் பயமடைந்திருக்கிறுன். இவனை உமது பாத கமலத்தில் சேர்த்திருக்கிறேன். இவனைக் காத்தருள வேண்டும். எல்லாப் பாவங்களையும் போக்கும் உமது தாமரை போன்ற கையை இவன் சிரசில் வைத்து அருள்புரிய வேண்டும்.

ஸ்ரீ சுகர் கூறியது—

59. 32. இவ்விதம் பூதேவியின் பக்தி கனிந்த வார்த்தைகளால் பிரார்த்திக்கப் பட்ட பகவான் அபயமளித்து எல்லாச் செல்வமும் நிறைந்த நரகாசுரன் மாளிகையில் பிரவேசித்தார்.

59. 33. மன்னர்களிடமிருந்து பலாத்காரமாக நரகாசுரனல் அபகரித்துவரப்பட்ட அரச கன்னிகைகள் பதினறுயிரம் பேரை அங்கே பகவான் கண்டார்.

59. 34. தெய்வ வசமாய் (பூர்வ புண்ணியப் பயனய்) அங்கு வந்தவரும் மனதிற்கினிய மானிட வீரரும் ஆகிய அவரைக் கண்டு மயங்கி மனதால் அவரையே தங்கள் பதியாக அந்த ஸ்திரீகள் வரித்தார்கள்.

ஷட்ஸஹஸ்ராதிகாயுதம்—இவர்களில் 6000 பேர் அப்ஸரஸ்ஸுகளின் அவதாரம் என்றும் மற்ற 10000 பேர் வேறுவகையினர் என்றும் எல்லோரும் 16கலைகளின் ஆயிரம் ஆயிரம் வடிவினர் என்றும் வல்லபாசாரியார் கூறுகிருர். 16000-க்குமேல் அதிகமாக 100 பேர் என்று விஷ்ணுபுராணம் கூறுகிறது.

---

59. 34. नरवर्यं।

ताः प्राहिणोद् द्वारवतीं सुमृष्ट-विरजोऽम्बराः ।
नरयानै-र्महाकोशान् रथाश्वान् द्रविणं महत् ॥ ५९.३६ ॥

गत्वा सुरेन्द्रभवनं दत्वादित्यै च कुण्डले ।
पूजित-स्त्रिदशेन्द्रेण सहेन्द्राण्या च स प्रियः ॥ ५९.३८ ॥

चोदितो भार्ययोत्पाट्य पारिजातं गरुत्मति ।
आरोप्य सेन्द्रान् विबुधान् निर्जित्योपानयत् पुरम् ॥ ५९.३९ ॥

स्थापितः सत्यभामाया गृहोद्यानोपशोभनः ।
अन्वगुर्भ्रमराः स्वर्गात् तद्गन्धासव-लंपटाः ॥ ५९.४० ॥

ययाच आनम्य किरीटकोटिभिः पादौ स्पृशन्नच्युत-मर्थसाधनम् ।
सिद्धार्थ एतेन विगृह्यते महानहो सुराणां च तमो धिगाढ्यताम् ॥ ५९.४१ ॥

---

59. 36. (பகவான் அவர்கள் எண்ணத்தை அறிந்து) அவர்களுக்கு ஸ்நானம் செய்வித்துப் புத்தாடையணிவித்து அவர்களைப் பல்லக்குகளில் துவாரகைக்கு அனுப்பி வைத்தார். நிதிக் குவியல்களையும் தேர்களையும் குதிரைகளையும் சிறந்த பல பொருள் களையும் அனுப்பினார்.

59. 38. (பின்னர்) ஸத்தியபாமையுடன் தேவேந்திரனுடைய மாளிகைக்குச் சென்று அதிதி தேவிக்குக் குண்டலங்களைக் கொடுத்து இந்திராணியுடன் கூடிய தேவேந்திரனால் பூஜிக்கப் பெற்றார்.

59. 39. ஸத்யபாமையின் விருப்பத்துக் கிணங்கிப் பாரிஜாத மரத்தைப் பிடுங்கி கருடன்மேல் வைத்துக் கொண்டு (அதை அப்போது எதிர்த்த) இந்திரனுடன் கூடிய தேவர்களை ஜயித்துத் துவாரகாபுரிக்குக் கொண்டு வந்தார்.

59. 40. ஸத்தியபாமையின் மாளிகையில் உத்யானவனத்தை அழகுபடுத்த அது ஸ்தாபிக்கப்பட்டது. அதின் மணத்திலும் தேனிலும் ஆசை கொண்ட வண்டுகள் ஸ்வர்க்க லோகத்திலிருந்து பின் தொடர்ந்து வந்தன.

59. 41. தனது கிரீடத்தின் நுனிகளால் அச்சுதனுடைய திருவடிகளைத் தொட்டு காரியார்த்தமாக வணங்கி யாசித்த இந்திரன் பெரியவனாக இருந்தும் காரியம் கை கூடிய பின் பகவானுடனேயே போர் புரிகிறான். (ஸத்துவ குணம் மேலிட்ட) தேவர்களிடமும் அறியாமை வருந்தத் தக்கது. ஐசுவரியத்தால் ஏற்படும் கொழுப்பைச் உதறித் தள்ள வேண்டும்.

---

59. 40. நாரதர் கொணர்ந்த ஒரு பாரிஜாத புஷ்பம் முன்னொரு தடவை ருக்மிணிக்குக் கொடுக்கப்பட்டபோது கோபமடைந்த ஸத்யபாமைக்குப் பாரிஜாத விருக்ஷத்தையே கொணர்ந்து தருவதாய் பகவான் வாக்களித்திருந்ததாய் ஹரிவம்சம் கூறுகிறது. அந்தப் பிரதிக்ஞை இப்போது பூர்த்தியாயிற்று.

अथो मुहूर्त एकस्मिन् नानागारेषु ताः स्त्रियः ।
यथोपयेमे भगवां-स्तावद्रूपधरोऽव्ययः ॥ ५९.४२ ॥

गृहेषु तासा-मनपाय्यतर्क्यकृ-न्निरस्त-साम्यातिशये-ष्ववस्थितः ।
रेमे रमाभि-र्निजकामसंप्लुतो यथेतरो गार्हक-मेधिकांश्चरन् ॥ ५९.४३ ॥

इति दशमस्कन्धे नरकासुरवधो नाम
एकोनषष्टितमोऽध्यायः ॥

---

59. 42. பின்னர் பகவான் அச்சுதர் ஒரே முகூர்த்தத்தில் அத்தனை பெண்களையும் அத்தனை உருவங்களைத் தானும் எடுத்துக் கொண்டு அவ்வளவு மாளிகைகளில் முறைப்படி விவாகம் செய்து கொண்டார்.

59. 43. எண்ணுதற்கரிய செயல்களைச் செய்யும் பகவான் ஏற்றத் தாழ்வின்றிச் சமமாக அமைந்த அவர்கள் மாளிகைகளில் விட்டுப் பிரியாமலிருந்து கொண்டு தனது விருப்பத்துக்கிணங்க இல்லற தர்மத்தை நடத்தும் ஒரு சாதாரண மனிதனைப்போலிருந்து கொண்டு அழகிய அம்மாதர்களுடன் விளையாடினார்.

இங்ஙனம் தசமஸ்கந்தத்தில் நரகாசுரவதம்
எனப் பெயர் பெற்ற ஐம்பத்தொன்பதாவது
அத்தியாயம் முற்றிற்று.

द्वारकालीला ॥ ३ ॥ ३० ॥

श्रीकृष्णगृहस्थधर्मवर्णनम्

श्रीशुक उवाच—

कर्हिचित् सुख-मासीनं स्वतल्पस्थं जगद्गुरुम् ।
पतिं पर्यचरद् भैष्मी व्यजनेन सखीजनैः ॥ ६०.१ ॥

श्रीभगवानुवाच—

राजपुत्रीप्सिता भूपै-र्लोकपालविभूतिभिः ।
महानुभावैः श्रीमद्भी रूपौदार्य-बलोर्जितैः ॥ ६०.१० ॥

तान् प्राप्ता-नर्थिनो हित्वा चैद्यादीन् स्मरदुर्मदान् ।
दत्ता भ्रात्रा स्वपित्रा च कस्मान्नो ववृषेऽसमान् ॥ ६०.११ ॥

राजभ्यो बिभ्यतस्सुभ्रूः समुद्रं शरणं गतान् ।
बलवद्भिः कृतद्वेषान् प्रायस्त्यक्त-नृपासनान् ॥ ६०.१२ ॥

अस्पष्ट-वर्त्मनां पुंसा-मलोकपथ-मीयुषाम् ।
आस्थिताः पदवीं सुभ्रूः प्रायः सीदन्ति योषितः ॥ ६०.१३ ॥

---

30. துவாரகா லீலை (3)

ஸ்ரீகிருஷ்ண கிருஹஸ்ததர்ம வர்ணனை

ஸ்ரீ சுகர் கூறியது—

60. 1. ஒரு சமயம் தமது படுக்கையில் சுகமாக வீற்றிருந்த ஜகத் குருவான தன் கணவனை ருக்மிணிதேவி தோழிமார்களுடன் விசிறியால் விசிறி உபசரித்தாள்.

ஸ்ரீ பகவான் கூறியது—

60. 10. அரசகுமாரியே! லோகபாலர்களுக்கொப்பான செல்வம் படைத்தவர்களும் மகானுபாவர்களும் ஸ்ரீமான்களும் அழகு உதாரகுணம் பலம் இவற்றால் சிறந்தவர்களுமான அரசர்களால் நீ விரும்பப்பட்டாயல்லவா?

60. 11-12. உன் பிதாவாலும் தமயனாலும் வாக்குதானம் செய்யப்பட்ட நீ உன்னை விரும்பிக் காமவெறியுடன் வந்த சிசுபாலன் முதலியவர்களை விட்டு அரசர்களிடமிருந்து பயந்து ஸமுத்திரத்தின் நடுவில் புகலிடம் தேடிக் கொண்டவர்களும் பலவான்களின் பகையைத் தேடிக் கொண்டவர்களும் வெகுவாய் அரசபதவியைத் துறந்தவர்களுமாகிய எங்களை, அழகிய புருவம் படைத்த ருக்மிணீ, நீ எதற்காகக் கணவனாக வரித்தாய்?

60. 13. அழகிய புருவமுள்ளவளே! தெளிவான நடவடிக்கையில்லாதவர்களும் உலகையொட்டி வாழாதவர்களுமான புருஷர்களைப் பதியாயடைந்த ஸ்திரீகள் வெகுவாய்க் கஷ்டப்படுவார்கள்.

---

60. 10. ஒ. **ருக்மிணீ**—தேவத்வே தேவதேஹேயம் மனுஷ்யத்வேச மானுஷீ | **விஷ்ணோர்**-தேஹானுரூபாம் வை கரோத்யேஷாத்மனஸ்தனும்|| —பராசரர்

60. 13. **அஸ்பஷ்டவர்த்மனாம்** — அவிஜ்ஞாதாசாராணாம், **அலோகபதம்**—(அசாஸ்த்ர பாரதந்த்ர்யம், அஸ்த்ரீபாரதந்த்ர்யம வா) சாஸ்திரத்துக்குக் கட்டுப்படாதவனும் ஸ்திரீ வசப்படாதவனும்.

निष्किंचना वयं शश्व-न्निष्किंचन जनप्रियाः ।
तस्मात् प्रायेण न ह्याढ्या मां भजन्ति सुमध्यमे ॥ ६०.१४ ॥

ययोरात्मसमं वित्तं जन्मैश्वर्याकृति-र्भवेत् ।
तयो-र्विवाहो मैत्री च नोत्तमाधमयोः क्वचित् ॥ ६०.१५ ॥

वैदर्भ्येत-दविज्ञाय त्वया दीर्घसमीक्षया ।
वृता वयं गुणै-र्हीना भिक्षुभिः श्लाघिता मुधा ॥ ६०.१६ ॥

अथात्मनोऽनुरूपं वै भजस्व क्षत्रियर्षभम् ।
येन त्वमाशिषः सत्या इहामुत्र च लप्स्यसे ॥ ६०.१७ ॥

चैद्य-शाल्व-जरासन्ध-दन्तवक्त्रादयो नृपाः ।
मम द्विषन्ति वामोरु रुक्मी चापि तवाग्रजः ॥ ६०.१८ ॥

---

60. 14. அழகிய இடை படைத்தவளே! நாங்கள் ஏழைகள். ஏழைகளையே விரும்புகிறவர்கள். ஆகையால் பெரும்பாலும் செல்வம் படைத்தவர்கள் என்னை அணுகுவதில்லை என்பது தெரிந்த விஷயம்.

60. 15. திரவியமும் குலமும் ஐசுவரியமும் அழகும் எவர்களுக்கு சமமாயிருக்கின்றனவோ அவர்களுக்கே விவாகமும் நட்பும் பொருத்தம். ஏற்றத்தாழ்வுள்ளவர்களுக்குள் ஒரு போதும் பொருத்தமாகாது.

60. 16. வைதர்ப்பீ! நாங்கள் குணமற்றவர்கள். பிச்சைக்காரர்களால் வீணாகக் கொண்டாடப்பட்டவர்கள். இதை அறியாத உன்னால் தீர்க்காலோசனையில்லாமல் வரிக்கப்பட்டோம்.

60. 17. ஆகையால் எவனால் நீ இகத்திலும் பரத்திலும் உண்மையான அபீஷ்டங்களை அடைவாயோ அப்படிப்பட்டவனும் உனக்கு ஒத்தவனுமான ஒரு க்ஷத்திரிய சிரேஷ்டனை இனியும் நாடியடையலாம்.

60. 18. அழகிய துடைகளை உடையவளே! சிசுபாலன், சால்வன், ஜராஸந்தன், தந்தவக்திரன் முதலிய அரசர்கள் என்னைப் பகைக்கிறார்கள். உன் அண்ணனாகிய, ருக்மியும் அப்படியே.

---

60. 15. ஒ. யயோரேவ ஸமம் வித்தம் யயோரேவ ஸமம் குலம் । தயோர்-மைத்ரீர் விவாஹச்ச ந து புஷ்ட-விபுஷ்டயோ : ॥ —பஞ்சதந்த்ரம்.

---

60. 15. जन्मैश्वर्याकृति-र्भवः ।

तेषां वीर्यमदान्धानां दृप्तानां स्मयनुत्तये।
आनीतासि मया भद्रे तेजोऽपहरताऽसताम् ॥ ६०.१९ ॥

उदासीना वयं नूनं न स्त्र्यपत्यार्थ-कामुकाः।
आत्म-लब्ध्याऽऽस्महे पूर्णा गेहयो-र्ज्योतिरक्रियाः ॥ ६०.२० ॥

श्रीशुक उवाच—

एतावदुक्त्वा भगवानात्मानं वल्लभामिव।
मन्यमाना-मविश्लेषात् तद्दर्पघ्न उपारमत् ॥ ६०.२१ ॥

इति त्रिलोकेशपते-स्तदाऽऽत्मनः प्रियस्य देव्यश्रुतपूर्व-मप्रियम्।
आश्रुत्य भीता हृदि जातवेपथु-श्चिन्तां दुरन्तां रुदती जगाम ह
॥ ६०.२२ ॥

तस्याः सुदुःख-भय-शोक-विनष्टबुद्धे-
र्हस्ताच्छ्लथ-द्वलयतो व्यजनं पपात।
देहश्च विक्लव-धियः सहसैव मुह्यन्
रम्भेव वायुविहता प्रविकीर्य केशान् ॥ ६०.२४ ॥

---

60. 19. மங்களவடிவினளே! துஷ்டர்களின் பராக்கிரமத்தையடக்கும் நான் வீரியத்தாலும் மதத்தாலும் குருடர்களாய்க் கர்வித்திருந்த அவர்களுடைய கொழுப்பை யடக்குவதற்காக உன்னைக் கொண்டு வந்தேன்.

60. 20. நாங்கள் உதாஸீனர்கள். நிச்சயமாக மனைவி மக்கள் பொருள் இவை களில் ஆசையில்லாதவர்கள். விடுகளில் வைத்த விளக்கைப்போல் ஸாக்ஷியாகச் செய லற்றிருப்பவர்கள். ஆத்மானந்தப் பிராப்தியால் பூர்ணர்களாயிருக்கிறோம்.

ஸ்ரீ சுகர் கூறியது—

60. 21. தன்னை விட்டு பகவான் பிரியாதிருப்பதால் தன்னைச் சாமர்த்தியசாலி என்று எண்ணியிருந்த அவளுடைய கர்வத்தைப் போக்க எண்ணிய பகவான் இவ்வாறு சொல்லி விட்டுப் பேசாமலிருந்தார்.

60. 22. மூவ்வுலக நாயகனும் தன் பிரிய நாயகனுமான பகவான் என்றுங் கேட் டறியாத கடுமையான வார்த்தைகளைக் கூறக் கேட்டு பயத்தால் உள்ளத்தில் நடுநடுங்கி அழுது கொண்டு (ருக்மிணி) அளவிலாக் கவலையடைந்தாள்.

60. 24. வருத்தத்தாலும் பயத்தாலும் அனுதாபத்தாலும் மனம் தளர்ந்த அவளு டைய கையிலிருந்து வளையல் நழுவிற்று, விசிறி கீழே விழுந்தது. புத்தி மயங்கிய அவளுடைய உடலும் திடீரென்று சுழன்று காற்றினால் வீழ்த்தப்பட்ட வாழையைப்போல் தலைவிரிகோலமாய்ச் சாய்ந்தது.

---

60. 19. ஸ்மயநுத்தயே—கர்வாபநயனாய !
60. 20. ஸ்த்ரீணா-மதிதுஸ்ஸஹம் ஔதாஸீன்யம் அகாமத்வஞ்ச

पर्यंकादवरुह्याशु तामुत्थाप्य चतुर्भुजः ।
केशान् समुह्य तद्वक्त्रं प्रामृजत् पद्मपाणिना ॥ ६०.२६ ॥

सान्त्वयामास सान्त्वज्ञः कृपया कृपणां प्रभुः ।
हास्य-प्रौढि-भ्रमच्चित्ता-मतदर्हां सतां गतिः ॥ ६०.२८ ॥

श्री भगवानुवाच—

मा मा वैदर्भ्यसूयेथा जाने त्वां मत्परायणाम् ।
त्वद्वचः श्रोतुकामेन क्ष्वेल्याचरित-मंगने ॥ ६०.२९ ॥

अयं हि परमो लाभो गृहेषु गृहमेधिनाम् ।
यन्नर्मै-र्नीयते यामः प्रियया भीरु भामिनि ॥ ६०.३१ ॥

रुक्मिण्युवाच—

त्वत्पादपद्म-मकरन्दजुषां मुनीनां
वर्त्मा-स्फुटं नृपशुभि-र्ननु दुर्विभाव्यम् ।
यस्मा-दलौकिक-मिवेहित-मीश्वरस्य
भूमंस्तवेहित-मथो अनु ये भवन्तम् ॥ ६०.३६ ॥

60. 26. பகவான் நான்கு கைகள் தோன்ற விரைவில் கட்டிலில் இருந்து இறங்கி அவளை எடுத்துத் தலை மயிரை முடிந்து அவள் முகத்தைக் கைகளால் தடவிக் கொடுத்தார்.

60. 28. ஸமாதானம் செய்ய அறிந்தவரும் நல்லோர்களின் புகலிடமுமான பகவான் மிகுந்த பரிகாசத்தால் மனம் கலங்கியவளும் அங்ஙனம் பரிகாசம் செய்யத் தகாதவளும் கிருபைக்குரியவளுமான அவளைச் சமாதானம் செய்தார்.

ஸ்ரீ பகவான் கூறியது—

60. 29. வைதர்ப்பி! என்னைப் பற்றித் தவருக எண்ணுதே. நீ என்னையே அடைக்கலம் புகுந்தவள் என்பதை அறிவேன். பெண்ணே, உன்னுடைய வார்த்தையைக் கேட்க விரும்பிப் பரிகாசமாக இது பேசப்பட்டது.

60. 31. பயங்கொண்ட கட்டழகியே! கிருஹஸ்தாசிரமத்தில் கிருஹஸ்தர்களுக்குப் பிரியமான மனைவியிடம் கேலி பேசிப் பொழுது போக்குவதாகிய இது தான் சிறந்த லாபம்.

ருக்மிணி கூறியது—

60. 36. ஈசா! உமது திருவடித் தாமரையிலுள்ள தேனை நாடும் (வண்டுகள் போன்ற) முனிவர்களின் போக்கும் செயலும் உலகுடன் ஒட்டாதன போலவும் மனிதர்களால் ஊகிக்க முடியாதனவாகவும் இருப்பதால், ஸர்வேசுவரனுகிய உம்முடைய போக்கைப் பற்றிக் கேட்க வேண்டுமா?

60. 27. சதுர்ப்புஜ :—(உத்தாபன—ஆச்லேஷண—வக்த்ரபரிமார்ஜனத்யர்த்தமாவிஷ்க்ருத சதுர்ப்புஜ:) அவளை ஒரே காலத்தில் எடுக்கவும், அணைக்கவும், கூந்தலை முடியவும், முகத்தை தடவிக் கொடுக்கவும் நான்கு கைகளுடன் தோன்றினர்.

निष्किंचनो ननु भवान् न यतोऽस्ति किंचिद्
यस्मै बलिं बलिभुजोऽपि हरन्त्यजाद्याः ।
न त्वा विदन्त्यसुतृपोऽन्धक-माढ्यतान्धाः
प्रेष्ठो भवान् बलिभुजामपि तेऽपि तुभ्यम् ॥ ६०.३७ ॥

नैवालीक-महं मन्ये वचस्ते मधुसूदन ।
अंबाया इव हि प्रायः कन्यायाः स्याद् रतिः क्वचित् ॥ ६०.४७ ॥

व्यूढायाश्चापि पुंश्चल्या मनोऽभ्येति नवं नवम् ।
बुधोऽसतीं न बिभृयात् तां बिभ्रदुभयच्युतः ॥ ६०.४८ ॥

श्रीभगवानुवाच—

साध्व्येतच्छ्रोतुकामैस्त्वं राजपुत्रि प्रलंभिता ।
मयोदितं यदन्वात्थ सर्वं तत् सत्यमेव हि ॥ ६०.४९ ॥

---

60. 37. எல்லோருடைய பூஜைக்கும் உரிய பிரம்மாதி தேவர்களும் எவருக்குப் பூஜை செய்கிறார்களோ அப்படிப்பட்ட தாங்கள் ஒன்றுமில்லாதவர் தான்; ஏனென்றால் எவரைத் தவிர ஒன்றுமில்லையோ அவர் ஒன்றுமில்லாதவரே. தங்களுடைய உயிரைப் போஷிப்பதையே வாழ்க்கைப் பயனாய்க் கொண்டவர்களும் செல்வச் செருக்கால் கண்ணிழந்தவர்களுமாகிய மக்கள் கால ரூபியாகிய உங்களைத் தெரிந்து கொள்வதில்லை.

60. 47. மதுஸூதனா! நான் உங்கள் வார்த்தையை வெறும் கேலிப் பேச்சென்று எண்ணவில்லை. ஏனென்றால் சில சமயங்களில் கன்னிப் பெண்ணுக்கு அம்பைக்கு ஏற்பட்டாற்போல் யாரோ ஒரு புருஷனிடம் ஆசை ஏற்படலாம்.

60. 48. விவாகமானவளாயிருந்தாலும் வியபிசாரிக்குப் புதிது புதிதாக ஆசை ஏற்படுகிறது. விவேகியான புருஷன் அஸத்தான ஸ்திரீயை ஆதரிக்க மாட்டான். அப்படிப்பட்டவளை ஆதரிப்பவன் (இகபர சுகம்) இரண்டினின்றும் நழுவுவான்.

ஸ்ரீ பகவான் கூறியது—

60. 49. நல்ல பெண்ணே! அரச குமாரி. இந்த மாதிரி பேச்சைக் கேட்க ஆசைப்பட்டதினால் தான் என்னால் நீ பரிகசிக்கப்பட்டாய். என்னால் சொல்லப்பட்டதை நீ பொருளைமாற்றிச் சொன்னதும் எல்லாம் உண்மையே.

---

60. 37. அஸுத்ருப :—(அஸுனைவ தர்ப்பயந்தி ந த்வாம் **பஜந்தி**) தங்கள் உயிரையே திருப்தி செய்பவர்கள், உன்னைப் பூஜியாதவர்கள்.

60. 47. காசிராஜன் பெண்களான அம்பை, அம்பிகை, அம்பாலிகை மூவரையும் தனது தம்பிக்குக் கல்யாணம் செய்விக்க எண்ணி பீஷ்மர் கிரகித்தபோது அம்பை தன் மனம் ஸால்வராஜனிடம் சென்றுவிட்டதாகக் கூறினாள்.

श्रीशुक उवाच—

एवं सौरत-संलापै-र्भगवाञ्जगदीश्वरः ।
स्वरतो रमया रेमे नरलोकं विडंबयन् ॥ ६०.५८ ॥

तथान्यासामपि विभु-र्गृहेषु गृहवानिव ।
आस्थितो गृहमेधीयान् धर्मा-ल्लोकगुरु-र्हरिः ॥ ६०.५९ ॥

इति दशमस्कन्धे श्रीकृष्णरुक्मिणीसंबादो
नाम षष्टितमोऽध्यायः ॥

ஸ்ரீ சுகர் கூறியது—

60. 58. ஜகதீசுவரனை கிருஷ்ண பகவான் ஆத்மாராமனுயிருந்தும் இவ்வித மான கேலிப் பேச்சுகளால் மனிதப் போக்கை நடித்துக் காட்டி லக்ஷ்மீதேவியுடன் களித்தார்.

60. 59. உலகிற்கெல்லாம் குருவும் இறைவனுமான கிருஷ்ணன் அவ்வாறே மற்ற மனைவிகளுடைய வீடுகளிலும் கிருஹஸ்தனைப் போல் இல்லறத்திற்குரிய தர்மங் களைப் பின்பற்றி நின்றார்.

இங்ஙனம் ஸ்ரீ கிருஷ்ண ருக்மிணீ ஸம்வாதம்
எனப் பெயர் பெற்ற அறுபதாவது
அத்தியாயம் முற்றிற்று.

अनिरुद्धविवाहः ॥

श्रीशुक उवाच—

गृहा-दनपगं वीक्ष्य राजपुत्र्योऽच्युतं स्थितम् ।
प्रेष्ठं न्यमंसत स्वं न तत्तत्त्वविदः स्त्रियः ॥ ६१.२ ॥

इत्थं रमापति-मवाप्य पतिं स्त्रियस्ता
ब्रह्मादयोऽपि न विदुः पदवीं यदीयाम् ।
भेजु-र्मुदा-विरत-मेधितयानुराग-
हासावलोक-नवसंगम-लालसाद्यम् ॥ ६१.५ ॥

प्रद्युम्न-प्रमुखा जाता रुक्मिण्यां नावमाः पितुः ॥ ६१.९ ॥

प्रद्युम्नाच्चानिरुद्धोऽभूद्रुक्मवत्यां महाबलः ॥ ६१.१८ ॥

पुत्र्यां तु रुक्मिणो राजन् नाम्ना भोजकटे पुरे ।
एतेषां पुत्रपौत्राश्च बभूवुः कोटिशो नृप ।
मातरः कृष्णजातानां सहस्राणि च षोडश ॥ ६१.१९ ॥

அநிருத்தன் விவாஹம்

ஸ்ரீ சுகர் கூறியது—

61. 12. அரசகுமாரிகளான அந்த ஸ்திரீகள் தங்கள் மாளிகைகளிலிருந்து கிருஷ்ணன் பிரியாமலிருப்பதைப் பார்த்து அவருடைய உண்மை நிலையை அறியமாட்டாதவர்களாய் ஒவ்வொருவரும் தங்கள் தங்களையே அவருக்கு மிகப் பிரியத்திற் சிறந்தவர்களாக கருதினார்கள்.

61. 5. பிரம்மாதி தேவர்களும் எவருடைய பதவியை அறியவில்லையோ அந்த லக்ஷ்மீகாந்தனை அந்த ஸ்திரீகள் இவ்வாறு கணவனாகப் பெற்று இடைவிடாது வளரும் அன்பு, புன்னகை, கண்ணோட்டம், புதுப்புணர்ச்சி, விலாஸம் ஆகியவற்றால் அவரை மகிழ்வுடன் சேவித்தார்கள்.

61. 9. பகவானுக்கு ருக்மிணியிடம் தந்தைக்குச் சமானமான பிரத்யும்னன் முதலிய (பத்து) குமாரர்கள் பிறந்தார்கள். (ஸத்யபாமைக்கு பானு முதலியவர்களும் ஜாம்பவதிக்கு ஸாம்பன் முதலியவர்களும் குமாரர்களாகப் பிறந்தார்கள். அவ்வாறே மற்ற பட்டமஹிஷிகளுக்கும் பத்துப் பத்துப் பிள்ளைகள் பிறந்தார்கள்.)

61. 18-19. பிரத்யும்னனுக்கு ருக்மியின் பெண்ணான ருக்மவதியிடம் போஜகடம் என்று பெயர் பெற்ற நகரத்தில் மகாபலசாலியான அநிருத்தன் பிறந்தான். அரசே! கிருஷ்ணனுடைய புத்திரர்களுக்கும் புத்திரர்களும் பௌத்திரர்களும் கோடிக்கணக்காக இருந்தனர். கிருஷ்ண குமாரர்களுக்குப் பதினாறாயிரம் தாய்மார்கள்.

---

61. 18-19. 1. ருக்மிணியிடம்—ப்ரத்யும்னன், சாருதேஷ்ணன், சுதேஷ்ணன் முதலிவர்கள்
2. ஸத்யபாமை—பானு, ஸுபானு முதலியோர்
3. ஜாம்பவதி—ஸாம்பன், ஸுமித்ரன் முதலியோர்
4. நாக்னஜிதி—பானு, சந்திரன், அச்வஸேனன் முதலியோர்
5. காளிந்தீ—சுருதன், கவி, விருஷன் „
6. லக்ஷ்மணா—ப்ரகோஷன் „
7. மித்ரவிந்தை—வ்ருகன், அர்க்கன் „
8. பத்ரை—ஸங்க்ராமஜித், ப்ருஹத்ஸேனன் „

---

61. 2. प्रेष्ठं न्यमंसतात्मानं न तु तत्त्वविदः स्त्रियः ।

राजोवाच—

कथं रुक्म्यरिपुत्राय प्रादाद् दुहितरं युधि ।
कृष्णेन परिभूत-स्तं हन्तुं रन्ध्रं प्रतीक्षते ।
एतदाख्याहि मे विद्वन् द्विषो-वैवाहिकं मिथः ॥ ६१.२० ॥

अनागत-मतीतं च वर्तमान-मतीन्द्रियम् ।
विप्रकृष्टं व्यवहितं सम्यक् पश्यन्ति योगिनः ॥ ६१.२१ ॥

श्रीशुक उवाच—

वृतः स्वयंवरे साक्षा-दनङ्गोऽङ्गयुत-स्तया ।
राज्ञः समेतान् निर्जित्य जहारैकरथो युधि ॥ ६१.२२ ॥

यद्यप्यनुस्मरन् वैरं रुक्मी कृष्णावमानितः ।
व्यतरद् भागिनेयाय सुतां कुर्वन् स्वसुः प्रियम् ॥ ६१.२३ ॥

रुक्मिण्या-स्तनयां राजन् कृतवर्मसुतोबली ।
उपयेमे विशालाक्षीं कन्यां चारुमतीं किल ॥ ६१.२४ ॥

அரசன் கூறியது—

61. 20. எல்லாம் அறிந்தவரே! போரில் கிருஷ்ணனிடம் அவமானப்பட்டு அவனைக் கொல்வதற்குச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்த ருக்மி தன் பகைவன் பிள்ளைக்கு எப்படித் தன் பெண்ணைக் கொடுத்தான்? பகைவர்களுக்குள் ஒருவருக்கொருவர் விவாக ஸம்பந்தம் ஏற்பட்ட தெங்ஙனமென்று கூறியருளவேண்டும்.

61. 21. யோகிகள் நடந்ததையும் நடக்கப் போகிறதையும் இப்போது நடப்பதில் இந்திரியங்களுக் கெட்டாதவைகளையும் கண்ணுக் கெட்டாத இடத்தில் மறைந்திருப்பதையும் நேராகக் காண்கிறார்கள்.

ஸ்ரீ சுகர் கூறியது—

61. 22. சரீரத்தையிழந்த மன்மதனே சரீரமெடுத்து (பிரத்யும்னனாக வந்து) ஸ்வயம்வரத்தில் அந்த ருக்மவதியால் கணவனாக வரிக்கப்பட்டுப் போரில் தான் ஒருவனாகத் தேரில் நின்று அரசர்களை ஜயித்து அவளை எடுத்துச் சென்றான்.

61. 23. கிருஷ்ணனால் அவமதிக்கப்பட்ட ருக்மி பகைமையை எண்ணிக்கொண்டிருந்தபோதிலும் தங்கையான ருக்மிணிக்குப் பிரியம் செய்ய விரும்பித் தங்கையின் பிள்ளைக்குப் பெண்ணைக் கொடுத்தான்.

61. 24. அரசே! க்ருதவர்மாவின் புத்திரனான பலி என்பவன் ருக்மிணியின் பெண்ணான அகன்ற கண்படைத்த சாருமதி என்ற கன்னிகையைக் கலியாணஞ்செய்து கொண்டான்.

दौहित्रायानिरुद्धाय पौत्रीं रुक्म्यदाद्धरेः ।
रोचनां बद्धवैरोऽपि स्वसुः प्रियचिकीर्षया ।
जानन्नधर्मं तद् यौनं स्नेहपाशानुबन्धनः ॥ ६१.२५ ॥

तस्मिन्नभ्युदये राजन् रुक्मिणी रामकेशवौ ।
पुरं भोजकटं जग्मुः साम्बप्रद्युम्नकादयः ॥ ६१.२६ ॥

ततोऽनिरुद्धं सह सूर्यया वरं
रथं समारोप्य ययुः कुशस्थलीम् ।
रामादयो भोजकटाद् दशार्हाः
सिद्धाखिलार्था मधुसूदनाश्रयाः ॥ ६१.४० ॥

---

61. 25. விரோதத்தை விடாமல் பிடித்துக்கொண்டிருந்தபோதிலும் ருக்மி தங்கைக்குப் பிரியம்செய்ய விரும்பித் தனது பெண்வழிப்பேரனும் கிருஷ்ணனுடைய பிள்ளை வழிப் பேரனுமான அநிருத்தனுக்குத் தன் பிள்ளையின் பெண்ணான ரோசனை என்பவளை விவாகம் செய்துகொடுத்தான். அது அதர்மம் என்றறிந்தும் சிநேகபாசத்தால் கட்டுப்பட்டு (அங்ஙனம் செய்தான்.)

61. 26. அரசே! அந்தக் கலியாணத்திற்குப் பலராமனும் கிருஷ்ணனும் ஸாம்பன் பிரத்யும்னன் முதலியவர்களும் போஜகடம் என்ற பட்டணத்திற்கு வந்தார்கள். (விவாஹத்தின்போது விளையாட்டாக அரசர்களிடை சூதாட்டம் நடந்தது. அதில் பலராமனைக் கபடமாக ருக்மி ஜயித்து ஏளனம் செய்தான். இதன் விளைவாக ஏற்பட்ட கலகத்தில் பலராமனால் ருக்மி கொல்லப்பட்டான். கிருஷ்ணன் அதைப் பற்றி ஒன்றுமே பேசவில்லை.)

61. 40. கிருஷ்ணனை ஆசிரயித்த எல்லோரும் பலராமனுடன் காரியங்கள் முடிந்ததும் மணப் பெண்ணையும் மணமகனையும் தேரில் ஏற்றிக்கொண்டு போஜகடத்திலிருந்து துவாரகைக்குச் சென்றனர்.

---

61. 25. ப்ரத்யும்னன்=ருக்மவதி (ருக்மியின் பெண்)
அநிருத்தன்=ரோசனை (ருக்மியின் பேத்தி)

அத்தியாயம் 61, 62, 63-ல் பகவான் பாணாசுரனுடன் யுத்தம் புரிய நேர்ந்த வரலாறு கூறப்படுகிறது. மஹாபலியின் புத்திரனும் சிவபக்தனும் ஆயிரம் கைகளுடையவனும் பாணாசுரன். அவனுடைய பெண் உஷை என்பவள் கனவில் அநிருத்தனைக் கண்டு அவன் மேல் காமுற்றாள். அவளுடைய தோழி சித்திரலேகை என்பவள் யோக சித்தி பெற்றவள். அவள் தன் யோக பலத்தால் அநிருத்தனை ஆகாய மார்க்கமாய்க் கொணர்ந்து யாருமறியாமல் கன்னி மாடத்திலிருந்த உஷையுடன் சேர்ப்பித்தாள். இந்த விஷயம் பாணாசுரனுடைய கவனத்திற்கு வந்ததும் அவன் வெகுண்டு அநிருத்தனைச் சிறையிலிட்டான். இந்த விருத்தாந்தத்தை நாரதர் கிருஷ்ணனிடம் கூறினார். அநிருத்தனைச் சிறை மீட்பதற்காக ஸ்ரீ கிருஷ்ணன் பாணாசுரனுடைய ராஜதானியாகிய சோணிதபுரத்தை முற்றுகையிட்டார். பக்தனான பாணாசுரனைத் தானே காப்பதாக வரமளித்திருந்த பரமசிவன் அப்போது தன் பூத கணங்களுடன் எதிர்த்துப் போர் புரிய வேண்டியதாயிற்று. யுத்தத்தில் பாணாசுரனுக்கு உயிர்ப் பிச்சை கொடுக்கும்படி பரமசிவன் வேண்டியதால் கிருஷ்ணன் பலியின் பிள்ளையான பாணன் தன்னாலும் காக்கத்

தக்கவன் என்று கூறிக் கிருஷ்ணன் அவனுடைய ஆயிரம் கைகளில் நான்கு கைகளைமட்டும் மீதி வைத்து உயிருடன் விட்டார். அவன் பரமசிவனுடைய பாரிஷதர்களில் ஒருவனாக என்று மிருக்கட்டும் என்று வரமளித்தார். இவ்விதம் அபயமளிக்கப்பட்ட பாணாசுரன் கிருஷ்ணனை வணங்கித் தன் பெண் உஷையை அநிருத்தனுடன் தேரில் ஏற்றித் துவாரகைக்கு அனுப்பி வைத்தான்.

64-வது அத்தியாயத்தில் நிருகன் என்ற அரசன் தானம் செய்த பசு அவனிடம் திரும்பி வந்ததால் ஏற்பட்ட தவறினால் ஓணான் பிறவியடைந்திருந்ததும் அதிலிருந்து பகவானால் மீட்கப்பட்டதும் கூறப்படுகிறது.

அத்தியாயம் 65-ல் பலராமர் கோகுலம் சென்று அங்கு உறவினர்களுடனும் சிநேகிதர்களுடனும் இரண்டு மாதம் இன்பமாய்க் காலங் கழித்தது கூறப்படுகிறது. அப்போது தன் சக்தியால் அவர் யமுனை நதியின் போக்கையும் தன் இஷ்டப்படி மாற்றியமைத்ததாய்க் கூறப்படுகிறது.

அத்தியாயம் 66-ல் பௌண்ட்ரகவதம் கூறப்படுகிறது. பலராமன் கோகுலம் சென்றிருந்தபோது கருஷ தேசாதிபதியான பௌண்ட்ரக வாசுதேவன் என்பவன் பகவானுக்குப் பின்வருமாறு தூதனுப்பினான். "நான் வாசுதேவனுடைய அவதாரம். எனக்குப் போட்டியாக நீ அந்தப் பெயரையும் வைத்துக் கொண்டு சங்கு சக்கரம் முதலிய அடையாளங்களையும் தரித்துக் கொண்டிருப்பதால் அவைகளை விட்டு விடவேண்டும். இல்லாவிட்டால் என்னுடன் போர் புரிய வேண்டும்." தூதன் சென்றதும் யாதவ சேனைகளுடன் பகவான் பௌண்ட்ரகனை எதிர்த்துச் சென்றார். பௌண்ட்ரகனும் உதவிக்குத் தன் சிநேகிதனான காசிராஜனுடன் போருக்கு வந்தான். சங்கு சக்கரம் வாள் கதை வில் முதலிய ஆயுதங்களுடனும், கௌஸ்துபம் வனமாலை மஞ்சட் பட்டாடை கிரீடம் கருடக் கொடி மகர குண்டலம் முதலிய அலங்காரங்களுடனும் நாடக மேடைக்கு வந்த வேஷதாரிபோலிருந்த அந்தப் பௌண்ட்ரகனைக் கண்டு பகவான் உறக்கச் சிரித்தார். விளையாட்டாகப் போர் செய்தபின் சுதர்சனத்தைப் பிரயோகித்துப் பௌண்ட்ரகனுடைய தலையையும் அவனுக்காகப் பரிந்து வந்த காசிராஜன் தலையையும் அறுத்து வீழ்த்தினார். பகவானுடைய ரூபத்தைத் தரித்து அவரைப் பகைத்து அவரையே எண்ணி வந்ததால் பௌண்ட்ரகன் ஸாயுஜ்யப் பதவியையடைந்தான். யார் தான் யாருடைய புண்ணியத்தை அறிய முடியும்? (கோ நாம கஸ்ய க்ருதம் கதமித்யவேயாத் —நாராயணீயம் 83.5)

இதற்குப் பின் காசிராஜன் மகனான ஸுதக்ஷிணன் தன் தகப்பனைக் கொன்ற கிருஷ்ணன் மேல் பழி வாங்குவதற்காக அபிசாரஹோமம் செய்து ஒரு கொடும் பூதத்தைக் கிளப்பி அதைக் கிருஷ்ணன்மேல் ஏவினான். அப்போது பகவானுடைய சுதர்சன சக்கரம் அதை எதிர்க்கவே அந்த பூதம் காசிக்குத் திரும்பிச் சென்று தன்னைத் தப்பாக ஏவிய ஸுதக்ஷிணனையே எரித்தது.

அத்தியாயம் 67-ல் நரகாசுரனுடைய நண்பனான துவிதனுடைய வதம் கூறப்படுகிறது. நரகாசுரனைக் கொன்ற கிருஷ்ணனுக்குத் தீங்கிழைக்க இவன் முயன்று வந்தான். ஒரு சமயம் துவாரகைக்கருகிலிருந்த ஆனர்த்த தேசத்தில் அட்டஹாஸம் செய்தான். பின்பு ரைவதகம் எனும் பர்வதத்தில் பலராமன் உல்லாஸமாக ஸ்திரீகளுடன் இருந்தபோது துவிதன் அங்கு சென்று பலராமனைச் சண்டைக்கிழுத்து அவர் கையால் மாண்டான்.

அத்தியாயம் 68-ல் ஜாம்பவதியின் பிள்ளையான ஸாம்பன் துரியோதனன் பெண்ணான லக்ஷ்மணையைக் கலியாணம் செய்து கொண்ட வரலாறு கூறப்படுகிறது. யுத்தத்தில் ஜயம் கொள்ளும் ஸாம்பன் லக்ஷ்மணையின் ஸ்வயம்வரத்திற்குச் சென்று அக்கன்னிகையை எடுத்துச் சென்றான். கௌரவர்கள் அதை விரும்பாததால் அவனை எதிர்த்துப் போர் செய்து ஸாம்பனைச் சிறைப்படுத்தித் தங்கள் பெண்ணை மீட்டுக் கொண்டு போயினர். இந்த ஸமாசாரம் துவாரகைக்கு எட்டியதும் பலராமன் ஹஸ்தினாபுரம் சென்று ஊருக்கு வெளியில் ஒரு உபவனத்தில் இருந்து கொண்டு திருதராஷ்டிரரிடம் உத்தவரைத் தூதனுப்பினார். பலராமன்

வந்த செய்தி கேட்டுக் கௌரவர்கள் அவரை எதிர்கொண்டு உபசரித்தனர். அவர்கள் ஸாம்பனை நடத்திய முறை அநீதியென்று பலராமன் எடுத்துக்காட்டிய போது அவர்கள் இணங்கிவராமல் யாதவர் குலத்தையே அவமதித்துப் பேசியதால், பலராமன் வெகுண்டு தெய்வசக்தி வாய்ந்த தன் கலப்பை ஆயுதத்தைக் கொண்டு ஹஸ்தினபுரத்தையே பூகம்பம் குலுக்குவதுபோல் குலுங்கச் செய்தார். கௌரவர்கள் அவர் சக்திக்குப் பயந்து சரணடைந்தனர். துரியோதனன் எல்லாச் சீர்களுடனும் தன் பெண் லக்ஷ்மணையை ஸாம்பனுக்குக் கொடுத்தான். பலராமன் மணமகன் மணமகளுடன் ஸந்தோஷமாகத் துவாரகைக்கு வந்தார்.

श्रीकृष्ण-गृहस्थधर्म-दर्शनम्

श्रीशुक उवाच—

नरकं निहतं श्रुत्वा तथोद्वाहं च योषिताम्।
कृष्णेनैकेन बह्वीनां तद् दिदृक्षुः स्म नारदः ॥ ६९.१ ॥

चित्रं बतैतदेकेन वपुषा युगपत् पृथक्।
गृहेषु द्व्यष्टसाहस्रं स्त्रिय एक उदावहत् ॥ ६९.२ ॥

इत्युत्सुको द्वारवतीं देवर्षि-र्द्रष्टुमागमत्।
विवेशैकतमं शौरेः पत्नीनां भवनं महत् ॥ ६९.८ ॥

तस्मिन् समानगुणरूप-वयस्सुवेष-दासीसहस्रयुतयानुसवं गृहिण्या।
विप्रो ददर्श चमरव्यजनेन रुक्मदण्डेन सात्वतपतिं परिवीजयन्त्या
॥ ६९.१३ ॥

तं सन्निरीक्ष्य भगवान् सहसोत्थितः श्रीपर्यंकतः सकलधर्मभृतां वरिष्ठः।
आनम्य पादयुगलं शिरसा किरीटजुष्टेन सांजलि-रवीविशदासने स्वे
॥ ६९.१४ ॥

ஸ்ரீகிருஷ்ண கிருஹஸ்ததர்ம தர்சனம்

ஸ்ரீசுகர் கூறியது—

69. 1. நரகாசுரவதத்தைப் பற்றியும் கிருஷ்ணன் ஒருவராலேயே பல ஸ்திரீகள் விவாகம் செய்துகொள்ளப்பட்டதையும் கேள்விப்பட்டு நாரதர் கிருஷ்ணன் பல மனைவிகளுடன் இருப்பதைப் பார்க்க எண்ணங் கொண்டார்.

69. 2-8. 'ஒருவர் ஒரே சரீரத்துடன் ஒரே காலத்தில் தனித்தனியான வீடுகளில் பதினாறாயிரம் ஸ்திரீகளைக் கைப்பிடித்தார்' என்ற இந்த ஆச்சரியத்தைச் செய்த கிருஷ்ணனைக் காண ஆவல்கொண்ட நாரத மகரிஷி துவாரகைக்கு வந்தார்; அங்கு கிருஷ்ணனுடைய பத்னிகளின் மாளிகைகளில் ஒன்றான ஒரு பெரிய மாளிகையில் புகுந்தார்.

69. 13. அங்கே தனக்கொத்த குணம் ரூபம் வயது அலங்காரம் இவைகளுடன் கூடிய ஆயிரக் கணக்கான பணிப்பெண்களுடன் சேர்ந்து தங்கப்பிடிபோட்ட சாமரத்தால் விசிறிக்கொண்டிருக்கும் தர்மபத்தினியுடன் கூடிய பகவானை நாரதர் கண்டார்.

69. 14. தர்மந் தெரிந்தவர்களில் சிறந்தவரான பகவான் அவரைப் பார்த்தவுடன் ஸ்ரீதேவியினுடைய (ருக்மிணியினுடைய) கட்டில் விட்டெழுந்து கிரீடமணிந்த தலையால் அவருடைய இரண்டு திருவடிகளிலும் நமஸ்கரித்துக் கைகூப்பிக்கொண்டு அவரைத் தமது ஆஸனத்தில் அமரச் செய்தார்.

तस्यावनिज्य चरणौ तदपः स्वमूर्ध्नाऽबिभ्रज्जगद्गुरुतरोऽपि सतां पतिर्हि ।
ब्रह्मण्यदेव इति यद्गुणनामयुक्तं तस्यैव यच्चरणशौचमशेषतीर्थम्
॥ ६९.१५ ॥

संपूज्य देवर्षिवर्यमृषिः पुराणो नारायणो नरसखो विधिनोदितेन ।
वाण्याभिभाष्य मितयामृतमिष्टया तं प्राह प्रभो भगवते करवाम हे किम्
॥ ६९.१६ ॥

नारद उवाच—

दृष्टं तवांघ्रियुगलं जनतापवर्गं ब्रह्मादिभिर्हृदि विचिन्त्यमगाधबोधैः ।
संसारकूप-पतितोत्तरणावलंबं ध्यायंश्चरा-म्यनुगृहाण यथा
स्मृतिः स्यात् ॥ ६९.१८ ॥

ततोऽन्यदाविशद् गेहं कृष्णपत्न्याः स नारदः ।
योगेश्वरेश्वरस्यांग योगमाया-विवित्सया ॥ ६९.१९ ॥

---

69. 15. எவருடைய பாததீர்த்தம் எல்லாவற்றையும் பரிசுத்தமாக்குவதோ எவர் ஸாதுஜனங்களின் தலைவரோ எவர் உலகிற் கெல்லாம் குருவோ அவர் அந்த முனிவருடைய பாதங்களை யலம்பி அந்தத் தீர்த்தத்தை தன் தலையில் தரித்துக்கொண்டார். ஆகையால் 'பிரம்மண்ய தேவர்' (பிராம்மணரையே தெய்வமாகக் கொண்டவர்) என்ற காரணப் பெயர் எது ஏற்பட்டுள்ளதோ அது அவருக்கே தகும்,

69. 16. நரனுடைய தோழனுகவும் ஸநாதன ரிஷியான நாராயணனுகவும் முன் அவதரித்த கிருஷ்ணபகவான் சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட முறைப்படி அந்த தேவரிஷி சிரேஷ்டரை நன்ருகப் பூஜித்து அமுதம் போன்று இனிமையானதும் சுருக்கமானதும் ஆகிய சொற்களால் ஸந்தோஷப் படுத்தி 'பிரபுவே.' பகவத்ஸ்வரூபியாகிய தங்களுக்கு நான் என்ன செய்யக் கூடும்?' என்று வினவினுர்.

நாரதர் கூறியது—

69. 18. ஆழங்காணமுடியாத ஞானம் படைத்த பிரம்மா முதலியவர்களால் இருதயத்தில் தியானம் செய்யத் தக்கனவும் மக்களுடைய துன்பத்தைக் களைவனவும் பிறவிக் கிணற்றில் விழுந்தவர்கள் கரையேறுவதற்குப் பிடிப்பாயிருப்பனவுமான உமது திருவடிகளைக் காணப்பெற்றேன். (அத்திருவடிகளின்) ஞாபகம் எதனுல் எனக்கு நிலைத்திருக்குமோ அவ்விதம் அருள்புரியவேண்டும். அவைகளைத் தியானித்துக் கொண்டே நான் சஞ்சரிக்கின்றேன்.

69. 19. அரசே! அந்த நாரதர் யோகேசுவரர்களுக்கும் ஈசுவரரான கிருஷ்ணனுடைய யோக மாயையை அறிய விரும்பிப் பின் அங்கிருந்து இன்னெரு கிருஷ்ண பத்னியின் வீட்டிற்குச் சென்ருர்.

दीव्यन्त-मक्षै-स्तत्रापि प्रियया चोद्धवेन च ।
पूजितः परया भक्त्या प्रत्युत्थानासनादिभिः ॥ ६९.२० ॥

पृष्टश्चाविदुषेवासौ कदाऽऽयातो भवानिति ।
क्रियते किं नु पूर्णाना-मपूर्णै-रस्मदादिभिः ।
अथापि ब्रूहि नो ब्रह्मन् जन्मैतच्छोभनं कुरु ॥ ६९.२१ ॥

स तु विस्मित उत्थाय तूष्णीमन्यदगाद् गृहम् ।
तत्राप्यचष्ट गोविन्दं लालयन्तं सुताञ्छिशून् ॥ ६९.२२ ॥

ततोऽन्यस्मिन् गृहेऽपश्यन् मंजनाय कृतोद्यमम् ।
जुह्वतं च वितानाग्नीन् यजन्तं पंचभिर्मखैः ॥ ६९.२३ ॥

भोजयंतं द्विजान् क्वापि भुंजानमवशेषितम् ।
क्वापि सन्ध्या-मुपासीनं जपन्तं ब्रह्म वाग्यतम् ॥ ६९.२४ ॥

अथोवाच हृषीकेशं नारदः प्रहसन्निव ।
योगमायोदयं वीक्ष्य मानुषीमीयुषो गतिम् ॥ ६९.३७ ॥

---

69. 20. அங்கு மனைவியோடும் உத்தவரோடும் பகவான் சொக்கட்டான் ஆடிக் கொண்டிருக்கக் கண்டார். பரமபக்தியுடன் எதிர்கொண் டழைத்து ஆஸனமளித்துப் பூஜிக்கப் பெற்றார்.

69. 21. 'தாங்கள் எப்போழுது வந்தீர்கள்?' என்று ஒன்று மறியாதவர்போல் அவரால் கேட்கப்பட்டார். 'பரிபூர்ணமான உங்களுக்கு பரிபூர்ணரல்லாத எம்போன் றவரால் செய்யக் கூடியது என்ன இருக்கிறது? இருந்தாலும் பிரம்மஸ்வரூபியே, எங்க ளுடைய இந்த ஜன்மத்தை மங்களகரமாகச் செய்யவேண்டும்.'

69. 22. நாரதர் அதைக்கண்டு ஆச்சரிய மடைந்து பேசாமல் எழுந்திருந்து வேறொரு வீட்டிற்குப் போனார். அங்கும் சின்னஞ்சிறு குழந்தைகளுடன் கொஞ்சிக் கொண்டிருக்கும் கிருஷ்ணனைக் கண்டார்.

69. 23-24. பிறகு வேறொரு வீட்டில் ஸ்நானம் செய்வதற்குத் தயாராய்க்கொண் டிருப்பவராகவும், மற்றொன்றில் யாக அக்கினிகளில் ஹோமம் செய்துகொண்டிருப் பவராகவும், பஞ்சமஹாயக்ஞங்கள் செய்து கொண்டிருப்பவராகவும் மற்றொரு வீட்டில் பிராம்மணபோஜனம் நடத்தி விட்டுச் சேஷத்தைச் சாப்பிட்டுக்கொண் டிருப்பவ ராகவும், இன்னொரு வீட்டில் ஸந்தியாவந்தனம் செய்துகொண்டிருப்பவராகவும் மௌனமாக வேத மந்திரத்தை ஜபிப்பவராகவும் கண்டார்.

69. 37. பிறகு நாரத முனிவர் மானிடத் தன்மையை ஏற்றுக்கொண்ட பகவா னுடைய யோகமாயையின் விலாஸத்தைப் பார்த்துப் புன் முறுவல் பூத்துப் பகவானி டம் இங்ஙனம் கூறினார்.

नारद उवाच—

विदाम योगमायास्ते दुर्दर्शा अपि मायिनाम्।
योगेश्वरात्मन् निर्भातां भवत्-पादनिषेवया ॥ ६९.३८ ॥

अनुजानीहि मां देव लोकांस्ते यशसाऽऽप्लुतान्।
पर्यटामि तवोद्गायन् लीलां भुवनपावनीम् ॥ ६९.३९ ॥

श्रीभगवानुवाच—

ब्रह्मन् धर्मस्य वक्ताहं कर्ता तदनुमोदिता ।
तच्छिक्षयंल्लोक-मिम-मास्थितः पुत्र मा खिदः ॥ ६९.४० ॥

श्रीशुक उवाच—

इत्यर्थकामधर्मेषु कृष्णेन श्रद्धितात्मना।
सम्यक् स भाजितः प्रीत-स्तमेवानुस्मरन् ययौ ॥ ६९.४३ ॥

इति दशमस्कन्धे एकोनसप्ततितमोऽध्यायः ॥

நாரதர் கூறியது—

69. 38. யோகேசுவரா! மாயையில் வல்லவர்களான பிரம்மாதி தேவர்களாலும் காணமுடியாத தங்கள் திருவடியைச் சேவித்ததால் உம்மிடம் பிரகாசிக்கும் உமது யோகமாயையை அறிகின்றேன்.

69. 39. தேவனே! உமது புகழ் நிறைந்த உலகங்களில் உலகத்தோரைப் புனிதமாக்கும் உமது லீலைகளை உறக்கப் பாடிக்கொண்டு சஞ்சரிக்க எனக்கு உத்திரவு கொடுங்கள்.

ஸ்ரீ பகவான் கூறியது—

69. 40. மகனே! பிரம்மஸ்வரூபியே! நான் தர்மத்தைச் சொல்லுகிறவன், செய்கிறவன், அதில் ஸந்தோஷப்படுகிறவன். உலகிற்கு வழிகாட்ட இவ்வாறு செய்து கொண்டிருக்கின்றேன். அதற்காக வருத்தப்படவேண்டாம்.

ஸ்ரீ சுகர் கூறியது—

69. 43. தர்மார்த்த காமங்களில் சிரத்தைகொண்ட கிருஷ்ணனால் இங்ஙனம் நன்றாகப் பூஜிக்கப்பட்டு மகிழ்ச்சியடைந்த நாரதர் அவரையே தியானித்துக்கொண்டு சென்றார்.

இங்ஙனம் பத்தாவது ஸ்கந்தத்தில் அறுபத்தொன்பதாவது அத்தியாயம் முற்றும்

श्रीशुक उवाच—

ब्राह्मे मुहूर्त उत्थाय वार्युपस्पृश्य माधवः।
दध्यौ प्रसन्नकरण आत्मानं तमसः परम् ॥ ७०.४ ॥

एकं स्वयंज्योति-रनन्त-मव्ययं स्वसंस्थया नित्यनिरस्तकल्मषम्।
ब्रह्माख्य-मस्योद्भवनाशहेतुभिः स्वशक्तिभि-र्लक्षित-भावनिर्वृतिम्
॥ ७०.५ ॥

अथाप्लुतोऽम्भस्यमले यथाविधि क्रियाकलापं परिधाय वाससी।
चकार सन्ध्योपगमादि सत्तमो हुतानलो ब्रह्म जजाप वाग्यतः
॥ ७०.६ ॥

उपस्थायार्क-मुद्यन्तं तर्पयित्वात्मनः कलाः।
देवान् ऋषीन् पितॄन् वृद्धान् विप्रानभ्यर्च्य चात्मवान् ॥ ७०.७ ॥

नमस्कृत्यात्म-संभूती-र्मङ्गलानि समस्पृशत्।
आत्मानं भूषयामास नरलोकविभूषणम् ॥ ७०.१० ॥

ஸ்ரீ சுகர் கூறியது—

70. 4-5. விடியற்காலையில் பிராம்ம முகூர்த்தத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் எழுந்து கை கால்களைக் கழுவி ஆசமனம் செய்து பரிசுத்தமான இந்திரியங்களுடன் அவித்தையைக் கடந்ததும் இரண்டற்றதும் ஒன்றேயாகியதும் தனது இயற்கையால் என்றும் மாசற்றதும் ஸ்வயம் பிரகாசமாகியதும், உலகின் தோற்றம் இருப்பு அழிவு முதலியவற்றிற்குக் காரணமான தன் சக்திகளால் சைதன்னியத்தையும் ஆனந்தத்தையும் வெளிக்காட்டுவதும் அழிவில்லாததும் பிரம்மம் என்று பெயருடையதுமான ஆத்மஸ்வரூபத்தைத் தியானம் செய்தார்.

70. 6. பின்பு அப்புருஷோத்தமன் சுத்தஜலத்தில் ஸ்நானம் செய்து இரண்டு வஸ்திரங்களையணிந்து ஸந்தியாவந்தனம் முதலிய கிரியைகளை முறைப்படி செய்தார். அக்கினியை ஆராதித்து மௌனமாக வேதமந்திரங்களை ஜபித்தார்.

70. 7-10. உதயகால சூரியனை ஆராதித்துத் தனது அம்சமான தேவர்களையும் ரிஷிகளையும் பிதிருக்களையும் திருப்தி செய்வித்து வயது முதிர்ந்த பிராம்மணர்களைப் பூஜித்து, தனது விபூதிகள் விளங்கு மிடங்களை நமஸ்கரித்து மங்களத் திரவியங்களைத் தொட்டார். மானிட உலகிற்குப் பூஷணமாய் விளங்கிய தன்னைத் தனக்குரிய வஸ்திரங்களாலும் பூஷணங்களாலும் திவ்வியமான மாலைகளாலும் சந்தனப் பூச்சுகளாலும் அலங்காரம் பண்ணிக்கொண்டார்.

---

70. 6. காண்வத்வாத் உதயாத் பூர்வமேவ ஹுதாநல:

संविभज्याग्रतो विप्रान् स्रक्ताम्बूलानुलेपनैः ।
सुहृदः प्रकृती-र्दारानुपायुङ्क्त ततः स्वयम् ॥ ७०.१३ ॥

तावत् सूत उपानीय स्यन्दनं परमाद्भुतम् ।
सुग्रीवाद्यै-र्हयै-र्युक्तं प्रणम्यावस्थितोऽग्रतः ॥ ७०.१४ ॥

गृहीत्वा पाणिना पाणी सारथे-स्तमथारुहत् ।
सात्यक्युद्धवसंयुक्तः पूर्वाद्रिमिव भास्करः ॥ ७०.१५ ॥

सुधर्माख्यां सभां सर्वै-र्वृष्णिभिः परिवारितः ।
प्राविशद् यन्निविष्टानां न सन्त्यंग षडूर्मयः ॥ ७०.१७ ॥

तत्रोपमन्त्रिणो राजन् नानाहास्य-रसै-र्विभुम् ।
उपतस्थु-र्नटाचार्या नर्तक्य-स्ताण्डवैः पृथक् ॥ ७०.१९ ॥

मृदङ्ग-वीणा-मुरज-वेणु-ताल-दरस्वनैः ।
ननृतु-र्जगु-स्तुष्टुवुश्च सूत-मागध-वन्दिनः ॥ ७०.२० ॥

---

70. 13. புஷ்பம் தாம்பூலம் சந்தனம் முதலியவற்றை முதலில் பிராம்மணர்களுக்குக் கொடுத்துப் பின் சிநேகிதர்களுக்கும் மந்திரி முதலியவர்களுக்கும் பத்தினிகளுக்கும் கொடுத்து முடிவில் தான் எடுத்துக்கொண்டார்.

70. 14 அச்சமயத்தில் மிகவும் அற்புதமான ஸுக்ரீவம் முதலிய ஜாதிக்குதிரைகள் பூட்டியை தேரைக் கொணர்ந்து ஸாரதியானவன் நமஸ்கரித்து எதிரில் நின்றான்.

70. 15, அப்போது ஸாரதியின் கையைத் தன் கையால் பிடித்துக்கொண்டு ஸாத்யகியுடனும் உத்தவருடனும் சூரிய பகவான் உதய பர்வதத்தில் ஏறுவது போல் அந்தத் தேரில் ஏறினார்.

70. 17. அரசே! எந்த இடத்தில் புகுந்தவர்களைப் பசி தாகம் சோகம் மோகம் மூப்பு மரணம் என்ற அலைகள் தாக்குவதில்லையோ அப்பேர்ப்பட்ட பெருமை வாய்ந்த ஸுதர்மை என்ற சபைக்கு விருஷ்ணிகள் புடை சூழச் சென்றார்.

70. 19-20. அரசே! அங்கே விகடகவிகள் பலவிதமான ஹாஸ்யம் நிறைந்த பேச்சுக்களாலும் சிறந்த நடிகர்கள் தாண்டவங்களாலும் தனித்தனியே பகவானைச் சந்தோஷப் படுத்தினர். நாட்டியப் பெண்கள், மிருதங்கம், வீணை, முரசு, புல்லாங்குழல், தாளம், சங்கு முதலிய பக்க வாத்தியங்களுடன் ஆடவும் பாடவும் செய்தனர். ஸூதர்களும், வம்சாவளி பாடுகிறவர்களும், துதி பாடகர்களும் ஸதோத்திரம் செய்தனர்.

तत्रैकः पुरुषो राजन्नागतोऽपूर्वदर्शनः ।
विज्ञापितो भगवते प्रतीहारैः प्रवेशितः ॥ ७०.२२ ॥

स नमस्कृत्य कृष्णाय परेशाय कृतांजलिः ।
राज्ञा-मावेदयद् दुःखं जरासन्ध-निरोधजम् ॥ ७०.२३ ॥

कृष्णकृष्णाप्रमेयात्मन् प्रपन्न-भयभंजन ।
वयं त्वां शरणं यामो भवभीताः पृथग्धियः ॥ ७०.२५ ॥

इति मागधसंरुद्धा भवद्दर्शनकांक्षिणः ।
प्रपन्नाः पादमूलं ते दीनानां शं विधीयताम् ॥ ७०.३१ ॥

राजदूते ब्रुवत्येवं देवर्षिः परमद्युतिः ।
बिभ्रत् पिंगजटाभारं प्रादुरासीद् यथा रविः ॥ ७०.३२ ॥

तं दृष्ट्वा भगवान् कृष्णः सर्वलोकेश्वरेश्वरः ।
ववन्द उत्थितः शीर्ष्णा ससभ्यः सानुगो मुदा ॥ ७०.३३ ॥

---

70. 22. அரசே! அப்போது முந்தி பார்த்திராத ஒரு புருஷன் அங்கு வந்து தன் வரவை பகவானுக்குத் தெரியப்படுத்தி வாசற்காரர்களால் உள்ளே அழைத்துவரப் பட்டான்.

70. 23. அவன் கிருஷ்ணபகவானுக்கு நமஸ்காரம் செய்துவிட்டுக் கைகூப்பிக் கொண்டு ஜராஸந்தனால் சிறைப்படுத்தப்பட்ட அரசர்களின் துக்கத்தைத் தெரிவித் தான்.

70. 25. 'கிருஷ்ண! அளவிடற்கரிய மகிமையுடைய கிருஷ்ண! சரணமடைந்த வர்களின் பயத்தைப் போக்குகிறவரே! வேற்றுமை புத்தியுடைய நாங்கள் இவ்வுல கத் துன்பத்திற்கஞ்சி உம்மைச் சரணடைகிறோம்.

70. 31. 'இவ்விதம் ஜராஸந்தனால் சிறையி லிடப்பட்ட நாங்கள் தங்கள் தரிச னத்திற்கு ஆவல்கொண்டவர்களாய் தங்களுடைய திருவடியில் சரணடைகின்றோம். தீனர்களாகிய எங்களுக்கு க்ஷேமம் உண்டாகும்படி அருள்புரிதல் வேண்டும்' (என்று அரசர்கள் சொல்லி யனுப்பியதைத் தெரிவித்தான்.)

70. 32. அரசர்களின் தூதன் இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கும்போது பொன்னிறமான ஜடாமுடியைத் தரித்தவரும் சூரியன்போல் ஒளி மிகுந்தவருமான தேவரிஷி நாரதர் அங்கு தோன்றினார்.

70. 33. உலகநாயகர்களுக் கெல்லாம் நாயகனான கிருஷ்ணபகவான் அவரைக் கண்டதும் ஸந்தோஷமடைந்தவராய் ஆஸனம் விட்டெழுந்து ஸபையோர்களுடனும் பரிவாரங்களுடனும் தலை வணங்கி நமஸ்கரித்தார்.

स भाजयित्वा विधिवत् कृतासन-परिग्रहम्।
बभाषे सूनृतै-र्वाक्यैः श्रद्धया तर्पयन् मुनिम् ॥ ७०.३४ ॥

न हि तेऽविदितं किंचिल्लोकेष्वीश्वरकर्तृषु।
अथ पृच्छामहे युष्मान् पाण्डवानां चिकीर्षितम् ॥ ७०.३६ ॥

श्रीनारद उवाच—

यक्ष्यति त्वां मखेन्द्रेण राजसूयेन पाण्डवः।
पारमेष्ठ्यकामो नृपति-स्तद् भवाननुमोदताम् ॥ ७०.४१ ॥

तस्मिन् देव क्रतुवरे भवन्तं वै सुरादयः।
दिदृक्षवः समेष्यन्ति राजानश्च यशस्विनः ॥ ७०.४२ ॥

श्रीशुक उवाच—

तत्र तेष्वात्मपक्षेष्वागृह्णत्सु विजिगीषया।
वाचः पेशैः स्मयन् भृत्य-मुद्धवं प्राह केशवः ॥ ७०.४५ ॥

---

70. 34. ஆஸனத்தி லமர்ந்த முனிவரை அவர் முறைப்படி சிரத்தையுடன் பூஜித்துப் பிரியமான வார்த்தைகளால் ஸந்தோஷப் படுத்திப் பின் வருமாறு கூறினர்.

70. 36, 'ஈசுவரனல் படைக்கப்பட்ட உலகங்களில் உமக்குத் தெரியாதது ஒன்று மில்லை. இப்பொழுது பாண்டவர்களுடைய விருப்பம் என்ன என்று தங்களிடம் அறிய விரும்புகிறோம்.'

ஸ்ரீ நாரதர் கூறியது—

70. 41. பாண்டவ அரசரான தருமபுத்திரர் சக்கரவர்த்திப் பதவியை விரும்பியவராய் யாகங்களிற் சிறந்த ராஜஸூயத்தால் உம்மை ஆராதிக்க எண்ணங் கொண்டுள்ளார். அதைத் தாங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும்.

70. 42. தேவதேவா! அந்த உத்தமமான யாகத்தில் தங்களைத் தரிசிப்பதற்காக தேவர்களும் கீர்த்திவாய்த்த அரசர்களும் வருவார்கள்.

ஸ்ரீசுகர் கூறியது—

70. 45. அந்த ஸபையில் தம்மைச் சார்ந்தவர்கள் (ஜராஸந்தனை) ஜயிப்பதில் எண்ணங் கொண்டிருந்ததால் நாரதர் வார்த்தையை அவர்கள் ஏற்றுக் கொள்ளாததைக் கவனித்தபோது பகவான் சிரித்துக்கொண்டு தனது பக்தரான உத்தவரைப் பார்த்துப் பின்வரும் அழகிய வார்த்தைகளைச் சொன்னர்.

श्री भगवानुवाच—

त्वं हि नः परमं चक्षुः सुहृन्मन्त्रार्थ-तत्त्ववित् ।
तथात्र ब्रूह्यनुष्ठेयं श्रद्दध्मः करवाम तत् ॥ ७०.४६ ॥

इत्युपामन्त्रितो भर्त्रा सर्वज्ञेनापि मुग्धवत् ।
निदेशं शिरसाऽधाय उद्धवः प्रत्यभाषत ॥ ७०.४७ ॥

इति दशमस्कन्धे सप्ततिमोऽध्यायः ॥

ஸ்ரீ பகவான் கூறியது—

70. 46. நீர்தான் நமக்குச் சிறந்த கண் போன்றவர்; உண்மையான நண்பர்; மந்திராலோசனையின் தத்துவத்தை யறிந்தவர்; ஆகையால் இப்போது செய்யவேண்டியதை நீர் சொல்லவேண்டும். அதில் சிரத்தை வைத்து அப்படியே செய்வோம்.

70. 47. யஜமானனாகிய பகவான் எல்லாம் அறிந்தவராயிருந்தும் ஒன்று மறியாதவர் போல் இப்படி ஆலோசனை கேட்கவே, உத்தவர் அவருடைய கட்டளையைச் சிரமேல் கொண்டு பதில் சொல்லலானார்.

இங்ஙனம் பத்தாவது ஸ்கந்தத்தில் எழுபதாவது அத்தியாயம் முற்றும்.

राजसूय - यागः

उद्धव उवाच—

यदुक्तमृषिणा देव साचिव्यं यक्ष्यत-स्त्वया ।
कार्यं पैतृष्वसेयस्य रक्षा च शरणैषिणाम् ॥ ७१.२ ॥

यष्टव्यं राजसूयेन दिक्चक्रजयिना विभो ।
अतो जरासुतजय उभयार्थो मतो मम ॥ ७१.३ ॥

अस्माकं च महानर्थो ह्येतेनैव भविष्यति ।
यशश्च तव गोविन्द राज्ञो बद्धान् विमुंचतः ॥ ७१.४ ॥

श्रीशुक उवाच—

इत्युद्धव-वचो राजन् सर्वतोभद्र-मच्युतम् ।
देवर्षि-र्यदुवृद्धाश्च कृष्णश्च प्रत्यपूजयन् ॥ ७१.११ ॥

अथादिशत् प्रयाणाय भगवान् देवकीसुतः ।
भृत्यान् दारुकजैत्रादीननुज्ञाप्य गुरून् विभुः ॥ ७१.१२ ॥

ராஜஸூய யாகம்

உத்தவர் கூறியது—

71. 2. 'பிரபுவே! நாரதமுனி சொல்லியபடி யாகம் செய்யப்போகின்ற உமது அத்தை பிள்ளையாகிய தருமபுத்திரருக்கு உடனிருந்து உதவி செய்யவேண்டும்; சரணடைந்த அரசர்களைக் காக்கவும் வேண்டும்.

71. 3. 'பிரபுவே! எல்லா திக்குகளிலுமுள்ள அரசர்களை ஜயித்தவனால்தான் ராஜஸூய யாகம் செய்ய முடியும். ஆகையால் ஜராஸந்தனுடைய ஜயம் இரண்டுகாரியங்களுக்கும் அனுகூலமாகும் என்பது என் அபிப்பிராயம்.

71. 4. 'இதனால் நமக்கும் சிறந்த பிரயோஜனம் ஏற்படும். கோவிந்தா! சிறைப் படுத்தப்பட்ட அரசர்களை விடுவிக்கின்ற தங்களுக்குக் கீர்த்தியும் உண்டாகும்.'

ஸ்ரீ சுகர் கூறியது—

71. 11. எல்லா வகையிலும் நன்மையே தருவதும் தருமத்திலிருந்து நழுவாததுமான உத்தவருடைய இந்த வார்த்தையை தேவரிஷியும் யாதவப் பெரியோர்களும் பகவானும் கொண்டாடினார்கள்.

71. 12. பிறகு தேவகீபுத்திரனும் ஸர்வேசுவரனுமான பகவான் வசுதேவர் முதலிய பெரியோர்களிடம் உத்திரவு பெற்றுத் தாருகன், ஜைத்ரன் முதலிய வேலைக்காரர்களைப் பிரயாணத்திற்குத் தயாராகும்படி உத்திரவு செய்தார்.

राजदूत-मुवाचेदं भगवान् प्रीणयन् गिरा ।
मा भैष्ट दूत भद्रं वो घातयिष्यामि मागधम्   ॥ ७१.१९ ॥

इत्युक्तः प्रस्थितो दूतो यथावदवद-न्नृपान् ।
तेपि सन्दर्शनं शौरेः प्रत्यैक्षन् यन्मुमुक्षवः   ॥ ७१.२० ॥

आनर्त-सौवीर-मरूंस्तीर्त्वा विनशनं हरिः ।
गिरीन् नदीनतीयाय पुरग्रामव्रजाकरान्   ॥ ७१.२१ ॥

ततो दृषद्वतीं तीर्त्वा मुकुन्दोऽथ सरस्वतीम् ।
पंचालानथ मत्स्यांश्च शक्रप्रस्थ-मथागमत्   ॥ ७१.२२ ॥

तमुपागत-माकर्ण्य प्रीतो दुर्दर्शनं नृणाम् ।
अजातशत्रु-र्निरगात् सोपाध्यायः सुहृद्वृतः   ॥ ७१.२३ ॥

गीतवादित्रघोषेण ब्रह्मघोषेण भूयसा ।
अभ्ययात् स हृषीकेशं प्राणाः प्राणमिवादृतः   ॥ ७१.२४ ॥

---

71. 19. ராஜதூதனைப் பார்த்து பகவான் பிரியமான மொழிகளால், "தூதனே! 'பயப்படவேண்டாம். ஜராஸந்தனை நான் வதை செய்விக்கிறேன். உங்களுக்கு க்ஷேம முண்டாகும்' (என்ற செய்தியைத் தெரிவி)" என்று கூறினர்.

71. 20. இவ்விதம் சொல்லப்பட்ட தூதன் திரும்பிச்சென்று அரசர்களிடம் நடந்ததை உள்ளபடி தெரிவித்தான். ஜராசந்தனிடமிருந்து விடுதலையை அவாவிய அவர்கள் பகவானுடைய தரிசனத்தை எதிர்பார்த்து நின்றார்கள்.

71. 21. பகவான் ஆனர்த்த தேசம், ஸௌவீரதேசம், மருப்பிரதேசம் ஆகிய வற்றையும், விநசனம் என்ற குருக்ஷேத்திரத்தையுந் தாண்டி மலைகளையும் நதிகளையும் பட்டணங்களையும் கிராமங்களையும் இடைச் சேரிகளையும் கடந்து சென்றார்.

71. 22. பிறகு த்ருஷத்வதீ என்ற நதியையும் ஸரஸ்வதீ நதியையும் பஞ்சால தேசத்தையும் மத்ஸ்யதேசத்தையும் கடந்து பகவான் இந்திரப்பிரஸ்தத்தை யடைந்தார்.

71. 23. அஜாதசத்துரு எனப் பெயர்பெற்ற தருமபுத்திரர் மனிதர்களுக்குக் காணக் கிடைக்காத பகவான் சமீபத்தில் வந்துவிட்டதாய்க் கேள்விப்பட்டு ஸந்தோஷம் மிக்கவராய் உபாத்தியாயர்களுடனும், சிநேகிதர்களுடனும் வெளிக் கிளம்பினர்.

71. 24. அவர் ஸங்கீதம் வாத்தியம் முதலிய கோஷத்துடனும், பெரிய வேத கோஷத்துடனும் இந்திரியங்கள் முக்கியப் பிராணனை நாடுவதுபோல் ஹ்ருஷீகேசனாகிய பகவானை ஆதரவுடன் எதிர்கொண்டு சென்றார்.

दृष्ट्वा विक्लिन्नहृदयः कृष्णं स्नेहेन पाण्डवः ।
चिराद् दृष्टं प्रियतमं सस्वजेऽथ पुनः पुनः ॥ ७१.२५ ॥

तं मातुलेयं परिरभ्य निर्वृतो भीमः स्मयन् प्रेमजवाकुलेन्द्रियः
यमौ किरीटी च सुहृत्तमं मुदा प्रवृद्धबाष्पाः परिरेभिरेऽच्युतम्
॥ ७१.२७ ॥

अर्जुनेन परिष्वक्तो यमाभ्या-मभिवादितः ।
ब्राह्मणेभ्यो नमस्कृत्य वृद्धेभ्यश्च यथार्हतः
मानितो मानयामास कुरुसृंजय-कैकयान् ॥ ७१.२८ ॥

एवं सुहृद्भिः पर्यस्तः पुण्यश्लोकशिखामणिः ।
संस्तूयमानो भगवान् विवेशालंकृतं पुरम् ॥ ७१.३१ ॥

उद्दीप्त-दीपबलिभिः प्रतिसद्म-जाल-
निर्यातधूपरुचिरं विलसत्-पताकम् ।
मूर्धन्य-हेमकलशै रजतोरुशृंगै-
र्जुष्टं ददर्श भवनैः कुरुराजधाम ॥ ७१.३३ ॥

तत्र तत्रोपसंगम्य पौरा मंगलपाणयः ।
चक्रुः सपर्यां कृष्णाय श्रेणीमुख्या हतैनसः ॥ ७१.३७ ॥

---

71. 25. வெகுநாட்களுக்குப் பின் பார்க்கப்பட்டவரும் அன்பிற் சிறந்தவருமான கிருஷ்ணனைக் கண்டு மனங் கசிந்து தருமபுத்திரர் சிநேகத்தால் அடிக்கடி ஆலிங்கனம் செய்து கொண்டார்.

71. 27. அன்பின் பெருக்கால் மெய்ம்மறந்த இந்திரியங்களையுடைய பீமசேனனும் அம்மான் மகனாகிய கிருஷ்ணனைத் தழுவிக்கொண்டு ஆனந்தமடைந்தான். அர்ஜுன நகுல ஸஹதேவர்களும் மகிழ்ச்சியால் ஆனந்த கண்ணீர் பெருக உற்றாரிற் சிறந்த அச்சுதனை ஆலிங்கனம் செய்து கொண்டனர்.

71. 28. பின்னர் மீண்டும் அர்ஜுனனால் ஆலிங்கனம் செய்யப் பெற்று நகுல சகதேவர்களால் நமஸ்கரிக்கப் பட்டார். பகவான் பிராம்மணர்களுக்கும் பெரியவர்களுக்கும் முறைப்படி நமஸ்காரம் செய்து எல்லோராலும் கௌரவிக்கப் பெற்றுத் தானும் கௌரவர்களையும் ஸ்ருஞ்ஜயர்களையும் கேகயர்களையும் கௌரவித்தார்.

71. 31. புகழுக் குரியவர்களில் சிறந்த பகவான் இவ்விதம் சிநேகிதர்களால் சூழப் பெற்றும் துதிக்கப் பெற்றும் அலங்கரிக்கப் பட்டிருந்த பட்டணத்தில் பிரவேசித்தார்.

71. 33. வீடுகள் தோறும் ஜன்னல் வழி வரும் தூபப்புகையும் பிரகாசிக்கின்ற கொடிகளும் ஒளிவீசும் தீபங்களும் உபசார திரவியங்களும் விளங்கின. வெள்ளிச் சிகரங்களும் தங்கக் கலசங்களும் பிரகாசிக்கும் வீடுகள் நிறைந்த தருமபுத்திரருடைய அந்த ராஜதானியை பகவான் கண்டார்.

71. 37. அங்கங்கு பட்டணத்து ஜனங்களும் பாவமற்ற தொழிலாளிகளும் அவர்கள் தலைவர்களும் மங்களத் திரவியங்களைக் கையிலெடுத்துக் கொண்டு அருகில் வந்து கிருஷ்ணனுக்குப் பூஜை செய்தார்கள்.

पृथा विलोक्य भ्रात्रेयं कृष्णं त्रिभुवनेश्वरम् ।
प्रीतात्मोत्थाय पर्यंकात् सस्नुषा परिषस्वजे ॥ ७१.३९ ॥

गोविन्दं गृहमानीय देवदेवेश-मादृतः ।
पूजायां नाविदत् कृत्यं प्रमोदोपहतो नृपः ॥ ७१.४० ॥

पितृष्वसु-र्गुरुस्त्रीणां कृष्णश्चक्रेऽभिवादनम् ।
स्वयं च कृष्णया राजन् भगिन्या चाभिवन्दितः ॥ ७१.४१ ॥

श्वश्र्वा संचोदिता कृष्णा कृष्ण-पत्नीश्च सर्वशः ।
आनर्च रुक्मिणीं सत्यां भद्रां जांबवतीं तथा ॥ ७१.४२ ॥

कालिन्दीं मित्रविन्दां च शैब्यां नाग्नजितीं सतीम् ।
अन्याश्चाभ्यागता यास्तु वासः-स्रङ्मण्डनादिभिः ॥ ७१.४३ ॥

सुखं निवासयामास धर्मराजो जनार्दनम् ।
ससैन्यं सानुगामात्यं सभार्यं च नवं नवम् ॥ ७१.४४ ॥

---

71. 39. குந்திதேவி மூவுலக நாயகனும் தன் தமயன் பிள்ளையுமாகிய கிருஷ்ணனைப் பார்த்து திரௌபதியுடன் கட்டிலை விட்டெழுந்து வந்து அன்பின் மிகுதியால் அணைத்துக் கொண்டாள்,

71. 40. ஆதரவுமிக்க தருமபுத்திர மகாராஜன் தேவதேவர்களுக்கும் பிரபுவாகிய கோவிந்தனை அரண்மனைக்கு அழைத்துவந்து இவ்விதம் பூஜைசெய்யவேண்டுமென்பதை ஆனந்த மேலீட்டால் அறியவில்லை.

71. 41. கிருஷ்ணன் அத்தைக்கும் பத்தினிகளுக்கும் நமஸ்காரம் செய்தார். அரசே! திரௌபதியாலும் தங்கை சுபத்ரையாலும் தான் நமஸ்கரிக்கப்பட்டார்.

71. 42-43. மாமியாரால் உத்திரவிடப்பட்டு திரௌபதியானவள் ருக்மிணி, ஸத்யபாமை, பத்ரை, ஜாம்பவதி, காளிந்தி, மித்ரவிந்தை, லக்ஷ்மணை, பதிவிரதையான நாக்னஜிதி, முதலியவர்களையும் இன்னும் வந்திருந்த கிருஷ்ண பத்தினிகள் எவர்களோ அவர்கள் எல்லோரையும் வஸ்திரம், புஷ்பமாலை, அலங்கராம் முதலியவற்றால் பூஜித்தாள்.

71. 44. சேனைகள் பரிவாரங்கள் மந்திரிமார்கள் பத்தினிகள் முதலியவர்களுடன் கூடிய ஜனார்த்தனனை தர்மபுத்திரர் புதிதுபுதிதான முறையில் இன்புற்று வசிக்கச் செய்தார்.

तर्पयित्वा खाण्डवेन वह्निं फाल्गुन-संयुतः ।
मोचयित्वा मयं येन राज्ञे दिव्या सभा कृता ॥ ७१.४५ ॥

उवास कतिचिन्मासान् राज्ञः प्रियचिकीर्षया ।
विहरन् रथमारुह्य फाल्गुनेन भटै-र्वृतः ॥ ७१.४६ ॥

एकदा तु सभामध्ये आस्थितो मुनिभि-र्वृतः ।
ब्राह्मणैः क्षत्रियै-र्वैश्यै-र्भ्रातृभिश्च युधिष्ठिरः ॥ ७२.१ ॥

आचार्यैः कुलवृद्धैश्च ज्ञातिसंबन्धिबान्धवैः ।
शृण्वतामेव चैतेषा-माभाष्येद-मुवाच ह ॥ ७२.२ ॥

युधिष्ठिर उवाच—

क्रतुराजेन गोविन्द राजसूयेन पावनीः ।
यक्ष्ये विभूती-र्भवत-स्तत् संपादय नः प्रभो ॥ ७२.३ ॥

श्रीभगवानुवाच—

सम्यग् व्यवसितं राजन् भवता शत्रुकर्शन ।
कल्याणी येन ते कीर्ति-र्लोकाननु भविष्यति ॥ ७२.७ ॥

---

71. 45-46. அர்ஜுனனுடன் கூடிக் காண்டவ வனத்தால் அக்கினிபகவானைத் திருப்தி செய்வித்தும், மயனை விடுவித்து அரசனுக்குத் தேவஸபை போன்ற ஒரு ஸபா மண்டபத்தைக் கட்டுவித்தும், பரிவாரங்கள் புடைசூழ அர்ஜுனனுடன் தேரில் ஏறிச் சஞ்சரித்துக் கொண்டும் அரசனுக்குப் பிரியம் செய்ய விரும்பிச் சில மாதங்கள் பகவான் தங்கினார்.

72. 1-2. ஒருநாள் யுதிஷ்டிரர் ஸபைநடுவில் சிம்மாஸனத்தி லிருந்தபோது முனிவர்கள் வேதியர்கள் க்ஷத்திரியர்கள் வைசியர்கள் தம்பிமார்கள் ஆசாரியர்கள் குலத்திலுள்ள பெரியோர்கள் உற்றார் உறவினர் எல்லோரும் சூழ்ந்திருக்கவும் கேட்டுக் கொண்டிருக்கவும் கிருஷ்ணனை நோக்கிப் பின் வருமாறு கூறினார்.

யுதிஷ்டிரர் கூறியது—

72. 3. கோவிந்தா! புனிதமானவர்களும் உமது பெருமைகளுக் குறைவிடமானவர்களுமாகிய தேவர்களை ராஜஸூயம் என்ற சிறந்த யாகத்தால் ஆராதிக்க விரும்புகின்றேன். பிரபுவே! அதை எங்களுக்குக் கூடிவரும்படி செய்யவேண்டும்.

ஸ்ரீ பகவான் கூறியது—

72. 7. சத்துருக்களை யொழிக்கவல்ல அரசே! தங்களால் செய்யப்பட்ட தீர்மானம் மிகவும் நல்லது. அதனால் மங்களகரமான தங்கள் கீர்த்தி உலகெல்லாம் பரவப்போகிறது.

विजित्य नृपतीन् सर्वान् कृत्वा च जगतीं वशे ।
संभृत्य सर्व-संभारा-नाहरस्व महाक्रतुम् ॥ ७२.९ ॥

श्रीशुक उवाच—

निशम्य भगवद्गीतं प्रीतः फुल्लमुखांबुजः ।
भ्रातृन् दिग्विजयेऽयुङ्क्त विष्णुतेजोऽपबृंहितान् ॥ ७२.१२ ॥

ते विजित्य नृपान् वीरा आजह्रु-र्दिग्भ्य ओजसा ।
अजातशत्रवे भूरि द्रविणं नृप यक्ष्यते ॥ ७२.१४ ॥

श्रुत्वाजितं जरासन्धं नृपते-र्ध्यायतो हरिः ।
आहोपायं तमेवाद्य उद्धवो यमुवाच ह ॥ ७२.१५ ॥

भीमसेनोऽर्जुनः कृष्णो ब्रह्मलिंगधरा-स्त्रयः ।
जग्मु-र्गिरिव्रजं तात बृहद्रथसुतो यतः ॥ ७२.१६ ॥

ते गत्वाऽऽतिथ्यवेलायां गृहेषु गृहमेधिनम् ।
ब्रह्मण्यं समयाचेरन् राजन्या ब्रह्मलिंगिनः ॥ ७२.१७ ॥

---

72. 9. எல்லா அரசர்களையும் ஜயித்துப் பூமியை வசப்படுத்திக்கொண்டு யாகத்திற்கு வேண்டிய பொருள்களைச் சேகரித்துக்கொண்டு இந்த மகாயாகத்தைச் செய்யலாம்.

ஸ்ரீ சுகர் கூறியது—

72. 12. பகவான் கூறியதைக் கேட்டு ஸந்தோஷத்தால் தாமரைபோல் முகம் மலர்ந்தவராய் விஷ்ணுவின் வீரியம் நிறையப் பெற்ற தம்பிமார்களைத் திசைகளை ஜயிக்கும்படி உத்திரவிட்டார்.

72. 14. அரசே! வீரர்களான அவர்கள் அரசர்களைப் பராக்கிரமத்தால் ஜயித்து நான்கு திக்குகளிலிருந்தும் யாகம் செய்யப்போகும் தருமபுத்திரருக்கு ஏராளமான செல்வத்தைக் கொணர்ந்து சேர்த்தனர்.

72. 15. ஜராஸந்தன் ஜயிக்கப்படவில்லை என்பதைக் கேட்டு எப்படி ஜயிக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த தருமபுத்திரருக்கு உத்தவர் ஏற்கெனவே கூறியிருந்த உபாயத்தையே ஆதிபுருஷனை கிருஷ்ணன் கூறினார்.

72. 16. ஐயனே! பீமசேனன் அர்ஜுனன் கிருஷ்ணன் ஆகிய மூவரும் பிராம்மண வேஷம் பூண்டு எவ்விடத்தில் பிருஹத்ரதன் புத்திரனை ஜராஸந்தன் இருந்தானோ அந்த கிரிவ்ரஜம் என்ற நகரத்திற்குச் சென்றனர்.

72. 17. பிராம்மணவேஷம் பூண்ட அந்த க்ஷத்திரியர்கள் அதிதிபூஜை செய்யும் வேளையில் அரண்மனைக்குச் சென்று பிராம்மண பக்தனும் கிருஹஸ்த தர்மத்தை அனுஷ்டிப்பவனுமான ஜராஸந்தனிடத்தில் பின் வருமாறு யாசித்தனர்.

राजन् विद्ध्यतिथीन् प्राप्ता-नर्थिनो दूरमागतान्।
तन्नः प्रयच्छ भद्रं ते यद् वयं कामयामहे ॥ ७२.१८ ॥

किं दुर्मर्षं तितिक्षूणां किमकार्य-मसाधुभिः।
किं न देयं वदान्यानां कः परः समदर्शिनाम् ॥ ७२.१९ ॥

योऽनित्येन शरीरेण सतां गेयं यशो ध्रुवं।
नाचिनोति स्वयं कल्पः स वाच्यः शोच्य एव सः ॥ ७२.२० ॥

हरिश्चन्द्रो रन्तिदेव उञ्छवृत्तिः शिबि-र्बलिः।
व्याधः कपोतो बहवो ह्यध्रुवेण ध्रुवं गताः ॥ ७२.२१ ॥

स्वरै-राकृतिभि-स्तांस्तु प्रकोष्ठै-र्ज्याहतैरपि।
राजन्यबन्धून् विज्ञाय दृष्टपूर्वा-नचिन्तयत् ॥ ७२.२२ ॥

---

72. 18. 'அரசே! வெகுதூரத்திலிருந்து வந்துள்ள எங்களை ஒரு காரியார்த்தமாக வந்த அதிதிகள் என்று அறியவேண்டும். நாங்கள் எதை விரும்புகிறோமோ அதை எங்களுக்குக் கொடுக்கவேண்டும். உமக்கு க்ஷேம முண்டாகும்.

72. 19. 'பொறுமையுள்ளவர்களுக்குப் பொறுக்க முடியாதது எது? துஷ்டர்களுக்குச் செய்யத்தகாதது எது? தான சீலர்களுக்குக் கொடுக்க முடியாதது எது? ஸமமாய்ப் பார்ப்பவர்களுக்கு அன்னியன் எவன்?

72. 20. 'சாமர்த்தியமுள்ள ஒருவன் அழியும் சரீரத்தால் நல்லோர் புகழத் தக்க அழியாத கீர்த்தியைச் சம்பாதிக்காவிட்டால் அவன் இகழ்ச்சிக் குரியவனாகவும் வருத்தப் படத் தக்கவனாகவும் ஆவான்.

72. 21. 'ஹரிச்சந்திரன், ரந்திதேவன், உஞ்ச விருத்தியால் வாழ்ந்த (முத்கல) முனிவர், சிபி, பலி, வேடன், ஆகியவர்களும் மாடப்புறாவும் இன்னும் பலரும் நிலையற்ற உடலால் நிலையான பதவி எய்தினர் என்பது பிரசித்தம்.'

72. 22. (அவர்களுடைய) குரல்களாலும் உருவத்தாலும் நாண் கயிற்றின் வடுப்பட்ட மணிக்கட்டுகளாலும் அவர்கள் க்ஷத்திரிய குலத்தவர்களென்றும் தன்னால் முன்பு பார்க்கப்பட்டவர்க ளென்றும் எண்ணி (ஜராஸந்தன்) யோசிக்கலானான்.

---

72. 19. **வதான்யானாம்**—அத்யுதாரானாம்।

72. 20. **வாச்ய:— நிந்த்ய:**। ஒ. விநாசே நியதே ஸதி ஸந்நிமித்தே வரம் த்யாக:।

72. 21. ரந்திதேவன் நெடுநாள் பட்டினிக்குப்பின் கிடைத்த அன்னபானத்தை அதிதிக்களித்து ஸ்வர்க்கம் சென்றான். சிபி மாடப் புறாவைக் காக்க வல்லூறுக்குத் தன் துடையிலிருந்து மாம்ஸத்தைக் கொடுத்தான். பலி வாமனருக்கு அனைத்தையும் கொடுத்தான். புறா தன் பேடையுடன் தீயில் விழுந்து அதிதிக்கு இரையாகி ஸ்வர்க்கம் சென்றது. அதைக் கண்ட வேடன் காட்டுத் தீயில் புகுந்து ஸ்வர்க்கமடைந்தான்.

ஒ. அநித்யைர் த்ரவ்யை: ப்ராப்தவானஸ்மி நித்யம். —கட. உப.

---

72. 20. **स्वयं कल्पः।** பா. பே.

राजन्यबन्धवो ह्येते ब्रह्मलिंगानि बिभ्रति ।
ददामि भिक्षितं तेभ्य आत्मानमपि दुस्त्यजम् ॥ ७२.२३ ॥

इत्युदारमतिः प्राह कृष्णार्जुनवृकोदरान् ।
हे विप्रा व्रियतां कामो ददाम्यात्मशिरोऽपि वः ॥ ७२.२७ ॥

श्रीभगवानुवाच—
युद्धं नो देहि राजेन्द्र द्वन्द्वशो यदि मन्यसे ।
युद्धार्थिनो वयं प्राप्ता राजन्या नान्नकांक्षिणः ॥ ७२.२८ ॥

असौ वृकोदरः पार्थस्तस्य भ्रातार्जुनो ह्ययम् ।
अनयो-र्मातुलेयं मां कृष्णं जानीहि ते रिपुम् ॥ ७२.२९ ॥

एवमावेदितो राजा जहासोच्चैः स मागधः ।
आह चामर्षितो मन्दा युद्धं तर्हि ददामि वः ॥ ७२.३० ॥

---

72. 23. 'இவர்கள் க்ஷத்திரியர்களாயிருந்தும் பிராம்மண வேஷத்தைத் தரிக்கின்றனர். யாசிக்கப்பட்டது விடுதற்கரிய உயிரேயாயினும் இவர்கள் பொருட்டுக் கொடுக்கவே போகிறேன்.'

72. 27. என்றிவ்வாறு நிச்சயித்து உதாரகுணம் படைத்த ஜராஸந்தன் ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனன் பீமஸேனன் ஆகிய இவர்களைப் பார்த்து 'பிராம்மணர்களே, இஷ்டமானதைக் கேளுங்கள். உங்களுக்கு என் தலை வேண்டுமானாலும் தருகிறேன்' என்று சொன்னான்.

ஸ்ரீ பகவான் கூறியது—

72. 28. 'அரச சிரேஷ்டரே! அப்படிச் சம்மதித்தால் எங்களுக்கு துவந்துவ யுத்தத்தைக் கொடும். நாங்கள் யுத்தத்தை விரும்பி வந்த க்ஷத்திரியர்கள். அன்னத்தை விரும்பி வந்தவர்களல்லர்.

72. 29. 'இவன் பிருதையின் பிள்ளையான பீமசேனன்; இவன் அவனுடைய தம்பி அர்ஜுனன். என்னை இவர்களுடைய மாமன் மகனும் உமது பகைவனுமான கிருஷ்ணன் என்று தெரிந்துகொள்ளும்.'

72. 30. இவ்விதம் அறிவிக்கப் பெற்ற மகதராஜனான ஜராஸந்தன் உறக்கச் சிரித்தான், மிகுந்த கோபத்துடன் 'மூடர்களே! அப்படியானால் உங்களுக்கு யுத்தத்தைக் கொடுக்கிறேன்' என்று கூறினான்.

न त्वया भीरुणा योत्स्ये युधि विक्लवचेतसा ।
मथुरां स्वपुरीं त्यक्त्वा समुद्रं शरणं गतः ॥ ७२.३१ ॥

अयं तु वयसा तुल्यो नातिसत्त्वो न मे समः ।
अर्जुनो न भवेद् योद्धा भीम-स्तुल्य-बलो मम ॥ ७२.३२ ॥

इत्युक्त्वा भीमसेनाय प्रादाय महतीं गदाम् ।
द्वितीयां स्वयमादाय निर्जगाम पुराद् बहिः ॥ ७२.३३ ॥

ततः समे खले वीरौ संयुक्ताावितरेतरौ ।
जघ्नतु-र्वज्रकल्पाभ्यां गदाभ्यां रणदुर्मदौ ॥ ७२.३४ ॥

मण्डलानि विचित्राणि सव्यं दक्षिणमेव च ।
चरतोः शुशुभे युद्धं नटयोरिव रंगिणोः ॥ ७२.३५ ॥

तयोरेवं प्रहरतोः समशिक्षाबलौजसोः ।
निर्विशेष-मभूद् युद्ध-मक्षीणजवयो-र्नृप ॥ ७२.३९ ॥

---

72. 31. 'சண்டையில் மனத்தளர்ச்சி யடைந்து பயந்தவனுகிய உன்னுடன் நான் யுத்தம் செய்யமாட்டேன். நீ உன் சொந்த ஊராகிய மதுரையைவிட்டு (என்னிடம் பயத்தால்) சமுத்திரத்தைப் புகலிடமாய்க்கொண்டவன்.

72. 32. 'இந்த அர்ஜுனனும் வயதில் எனக்குச் சமமில்லாதவன், பலத்திலும் சமமில்லாதவன்; அதிக பலமில்லாதவன்; ஆகையால் இவன் (என்னுடன்) போர் புரிபவனுகமாட்டான். பீமன் எனக்குச் சமமான பலமுள்ளவன்.'

73. 33. என்று சொல்லி பீமசேனனிடம் ஒரு பெரிய கதாயுத்தத்தைக் கொடுத்துத் தானும் இன்னொரு கதாயுதத்தை எடுத்துக்கொண்டு பட்டணத்தினின்று வெளியே சென்றுன்.

72. 34. பிறகு சமதரையுள்ள போர்க்களத்தில் யுத்த வெறிகொண்ட அவ் வீரர்கள் இருவரும் சேர்ந்து வஜ்ரத்திற் கொப்பான கதைகளால் ஒருவரை யொருவர் அடித்துக் கொண்டனர்.

72. 35. இடசாரி வலசாரியாகவும் விதவிதமாகவும் சுற்றிவருகிற அவர்களுடைய யுத்தம் மேடையில் நடிக்கும் நடிகர்களுடைய நடிப்புப்போல் விளங்கிற்று.

72. 39. அரசே! பயிற்சி, பலம், பராக்கிரமம் இவற்றில் சமமானவர்களும் வேகம் குறையாதவர்களுமான அவர்களுடைய யுத்தம் ஏற்றத் தாழ்வு சொல்லமுடியாமலிருந்தது.

संचिन्त्यारिवधोपायं भीमस्यामोघदर्शनः ।
दर्शयामास विटपं पाटयन्निव संज्ञया ॥ ७२.४३ ॥

तद् विज्ञाय महासत्त्वो भीमः प्रहरतां वरः ।
गृहीत्वा पादयोः शत्रुं पातयामास भूतले ॥ ७२.४४ ॥

एकं पादं पदाऽऽक्रम्य दोर्भ्यामन्यं प्रगृह्य सः ।
गुदतः पाटयामास शाखामिव महागजः ॥ ७२.४५ ॥

हाहाकारो महानासीन्निहते मगधेश्वरे ।
पूजयामासतु-र्भीमं परिरभ्य जयाच्युतौ ॥ ७२.४७ ॥

सहदेवं तत्तनयं भगवान् भूतभावनः ।
अभ्यषिंच-दमेयात्मा मगधानां पतिं प्रभुः ।
मोचयामास राजन्यान् संरुद्धा मागधेन ये ॥ ७२.४८ ॥

---

72. 43. அப்போது தன்னுடைய தரிசனம் வீண்போகாத பகவான் நன்கு யோசித்து ஒரு மரக் கொம்பை எடுத்து இரண்டாகப் பிளப்பவர்போல் காட்டிக் குறிப்பினுல் சத்துருவைக் கொல்லவேண்டிய உபாயத்தை பீமசேனனுக்குக் காட்டினுர்.

72. 44. மகாபலசாலியும் மல்யுத்தம் செய்பவர்களில் சிறந்தவனுமான பீமசேனன் அந்தக்குறிப்பை யறிந்து சத்துருவைக் கால்களால் பிடித்துக் கீழே தள்ளினுன்.

72. 45. அவன் ஜராசந்தனுடைய ஒரு காலைத் தனது காலால் அழுத்திக் கொண்டு மற்ரெரு காலைத் தன் இரு கைகளால் பிடித்துக்கொண்டு ஒரு பெரிய யானை மரக் கிளையைக் கிழிப்பதுபோல் குதத்திலிருந்து கிழித்தான்.

72. 47. இவ்வாறு ஜராஸந்தன் கொல்லப்பட்டபோது 'ஹா! ஹா!' என்ற பெருத்த ஆரவாரம் உண்டாயிற்று. அர்ஜுனனும் கிருஷ்ணனும் பீமசேனனைக் கட்டித் தழுவிக் கொண்டு கொண்டாடினுர்கள்.

72. 48. எல்லாப் பிராணிகளையும் சிருஷ்டித்தவரும் அறியமுடியாத ஸ்வரூபத்தை யுடையவரும் ஸர்வேசுவரருமான கிருஷ்ணபகவான் ஜராஸந்தனுடைய புத்திரனுகிய ஸஹதேவனை மகதநாட்டிற் கரசனுக அபிஷேகம் செய்தார். ஜராஸந்தனுல் எந்த அரசர்கள் சிறையிலிடப்பட்டிருந்தார்களோ அவர்களை விடுதலை செய்தார்.

---

72. 43. மகததேசத்தரசன் ப்ருஹத்ரதனுக்கு இரு மனைவிகள். பிள்ளையில்லை சண்ட கௌசிக ரிஷி ஒரு மாம்பழம் கொடுத்தார். அதை இரு மனைவிகளுக்கும் பங்கிட்டுக் கொடுத்தான். அவர்கள் கருத்தரித்து ஒரு குழைந்தையின் பாதிப் பாதிப் பிண்டத்தை இருவரும் பெற்றனர். இன்னது செய்வதென்றறியாமல் அப் பிண்டங்களை வெளியே போட்டு விடும்படி செய்தனர். அதை ஜரை என்ற ஒரு அரக்கி கண்டு ஒன்று சேர்க்கவே உயிருள்ள குழந்தையாயிற்று. அக்குழந்தையை அவள் அரசனிடம் கொடுத்தாள். அக்குழந்தையே ஜராஸந்தன் எனக் காரணப் பெயர் பெற்றது. இரண்டாகப் பிரிந்து மீண்டும் ஒன்று சேரமுடியாமல் தலை, கால் மாற்றிப் போட்டால் தான் அவனைக் கொல்லமுடியும் என்பது ரகசியம். அதைக் கிருஷ்ணன் இப்போது குறிப்பால் உணர்த்தினுர்.

क्षुत्क्षामाः शुष्कवदनाः संरोधपरिकर्शिताः ।
ददृशुस्ते घनश्यामं पीतकौशेय-वाससम् ॥ ७३.२ ॥

श्रीवत्साङ्कं चतुर्बाहुं पद्मगर्भारुणेक्षणम् ।
चारु-प्रसन्नवदनं स्फुरन्मकरकुण्डलम् ॥ ७३.३ ॥

पिबन्त इव चक्षुर्भ्यां लिहन्त इव जिह्वया ।
जिघ्रन्त इव नासाभ्यां रम्भंत इव बाहुभिः ।
प्रणेमु-र्हतपाप्मानो मूर्धभिः पादयो-र्हरिः ॥ ७३.६ ॥

राजान ऊचुः—

नमस्ते देवदेवेश प्रपन्नार्तिहराव्यय ।
प्रपन्नान् पाहि नः कृष्ण निर्विण्णान् घोरसंसृतेः ॥ ७३.८ ॥

तं नः समादिशोपायं येन ते चरणाब्जयोः ।
स्मृति-र्यथा न विरमेदपि संसरता मिह ॥ ७३.१५ ॥

---

73. 2-3. பசியால் இளைத்தவர்களும் முகம் உலர்ந்தவர்களும் சிறைவாசத்தால் வாட்டப்பட்டவர்களுமான அவர்கள் மேகசியாமள வர்ணரும் மஞ்சள் பட்டாடையணிந்தவரும் ஸ்ரீ வத்ஸத்தை அடையாளமாக உடையவரும் நான்கு கைகளும் தாமரையின் உள்ளிதழ்போல் சிவந்த கண்களும் அழகிய ப்ரசன்ன முகமும் உடையவரும் ஒளி வீசுகின்ற மகர குண்டலங்களை யணிந்தவருமான பகவானைக் கண்டார்கள்.

73. 6. கண்களால் பருகுபவர்கள் போலும் நாக்கினால் ருசிப்பவர்கள்போலும் மூக்கினால் முகர்பவர்கள்போலும் கைகளால் அணைப்பவர்கள்போலும் பாவம் நீங்கிய அவர்கள் பகவானுடைய திருவடிகளில் தலையால் வணங்கினார்கள்.

அரசர்கள் கூறியது—

73. 8. தேவாதி தேவர்களுக்கும் ஈசனே! சரணடைந்தவர்களின் துன்பத்தைத் துடைப்பவரே! அழிவற்றவரே! கிருஷ்ணா! உங்களுக்கு நமஸ்காரம். உலகில் வெறுப்படைந்து உங்களைச் சரணடைந்த எங்களைக் கொடிய ஸம்ஸாரத்திலிருந்து காக்க வேண்டும்.

73. 15. இவ்வுலகில் உழல்பவர்களாயினும் எங்களுக்கு உமது திருவடித் தாமரையின் நினைவு எதனால் எப்படி மறவாமலிருக்குமோ அந்த உபாயத்தை உபதேசிக்க வேண்டும்.

कृष्णाय वासुदेवाय हरये परमात्मने ।
प्रणतक्लेशनाशाय गोविन्दाय नमो नमः ॥ ७३.१६ ॥

श्रीभगवानुवाच—

हैहयो नहुषो वेनो रावणो नरकोऽपरे ।
श्रीमदाद् भ्रंशिताः स्थानाद् देव-दैत्य-नरेश्वराः ॥ ७३.२० ॥

भवन्त एतद् विज्ञाय देहाद्युत्पाद्यमन्तवत् ।
मां यजन्तोऽध्वरै-र्युक्ताः प्रजा धर्मेण रक्षथ ॥ ७३.२१ ॥

उदासीनाश्च देहादावात्मारामा धृतव्रताः ।
मय्यावेश्य मन-स्सम्यङ्मामन्ते ब्रह्म यास्यथ ॥ ७३.२३ ॥

---

73. 16. வசுதேவகுமாரராக அவதரித்தவரும் அடியார்களுடைய பாவத்தைப் போக்குபவரும் பரமாத்மாவும் வணங்கினவர்களின் துன்பத்தை துடைப்பவரும் கோவிந்தன் என்ற சிறப்புப் பெயர் பெற்றவருமான கிருஷ்ணனுக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

ஸ்ரீ பகவான் கூறியது—

73. 20. கார்த்தவீரியார்ஜுனன், நஹுஷன், வேனன், ராவணன், நரகாசுரன் மற்றும் தேவர்கள் அசுரர்கள் மக்களையாண்ட அரசர்கள் (பலர்) செல்வச் செருக்கால் தங்கள் பதவிகளினின்று வீழ்ச்சி யுற்றார்கள்.

73. 21. உண்டாக்கப்பட்ட இச்சரீரம் முதலியவற்றை நீங்கள் முடிவுள்ளவை யென்றுணர்ந்து என்னிடம் சித்தத்தை வைத்து யாகங்களால் என்னை ஆராதித்துக் கொண்டுப் பிரஜைகளை தர்மவழியில் காப்பாற்றுங்கள்.

73. 23. தேகம் முதலியவற்றில் பற்றில்லாதவர்களாய், விரதங்களை மேற்கொண்டவர்களாய் ஆத்மாவில் ஆனந்தம் காண்பவர்களாய், என்னிடம் மனதை நன்கு செலுத்தி முடிவில் பிரம்மமாகிய என்னை அடையுங்கள்.

---

73. 20. பரசுராமருடைய தந்தை ஜமதக்னி மஹரிஷியின் காமதேனுவைக் கார்த்தவீரியார்ஜுனன் அபஹரித்தான். அதன் விளைவாகப் பின்னர் பரசுராமரால் கொல்லப்பட்டான். நஹுஷன் தேவேந்திரப் பதவி கிடைத்தபோது மதியிழந்து இந்திரனுடைய மனைவி சசியைப் பெண்டாளக் கருதி ரிஷிகளைப் பல்லக்குத் தூக்கச் சொல்லவே அகஸ்தியர் சாபத்தால் மலைப் பாம்பானான். வேனன் பிராம்மணர்களை யவமதித்து அவர்களுடைய சாபத்தால் மாண்டான். நரகாசுரன் தேவமாதாவின் குண்டலங்களை யபகரித்துக் கிருஷ்ணனால் கொல்லப்பட்டான். ராவணன் ஸீதையை யபகரித்து ராமனால் கொல்லப்பட்டான்.

श्रीशुक उवाच—

ते पूजिता मुकुन्देन राजानो मृष्टकुण्डलाः।
विरेजु-र्मोचिताः क्लेशात् प्रावृडन्ते यथा ग्रहाः ॥ ७३.२७ ॥

रथान् सदश्वानारोप्य मणि-कांचन-भूषितान्।
प्रीणय्य सूनृतै-र्वाक्यैः स्वदेशान् प्रत्ययापयत् ॥ ७३.२८ ॥

जरासन्धं घातयित्वा भीमसेनेन केशवः।
पार्थाभ्यां संयुतः प्रायात् सहदेवेन पूजितः ॥ ७३.३१ ॥

अभिवन्द्याथ राजानं भीमार्जुन-जनार्दनाः।
सर्वमाश्रावयांचक्रु-रात्मना यदनुष्ठितम् ॥ ७३.३४ ॥

एवं युधिष्ठिरो राजा जरासन्धवधं विभोः।
कृष्णस्य चानुभावं तं श्रुत्वा प्रीत-स्तमब्रवीत् ॥ ७४.१ ॥

ஸ்ரீ சுகர் கூறியது—

73. 27. ஸ்ரீ கிருஷ்ணனால் துன்பத்திலிருந்து விடுதலை யடைந்தவர்களும் உபசரிக்கப் பட்டவர்களுமான அவ்வரசர்கள் ஒளிவீசுகின்ற குண்டலங்களுடன் மழைகாலமுடிவில் கிரகங்கள் (ஆகாயத்தில் பிரகாசிப்பது) போலப் பிரகாசித்தார்கள்.

73. 28. நல்ல குதிரைகள் பூட்டியவைகளும் பொன்னாலும் மணியாலும் அலங்கரிக்கப் பட்டவைகளுமான தேர்களில் ஏற்றிப் பிரியமான வார்த்தைகளால் சந்தோஷப் படுத்தி அவரவர் தேசங்களுக்கு (அவர்களை பகவான்) அனுப்பிவைத்தார்.

73. 31. (இவ்வாறாக) ஸ்ரீ கிருஷ்ணன் பீமசேனனைக்கொண்டு ஜராஸந்த வதத்தை முடித்து ஸஹதேவனால் பூஜிக்கப் பெற்று பீமனுடனும் அர்ஜுனனுடனும் அங்கிருந்து புறப்பட்டார்.

73. 34. பீமனும் அர்ஜுனனும் கிருஷ்ணனும் (இந்திரப்பிரஸ்தம் வந்து) தர்மபுத்திரரை நமஸ்கரித்துத் தங்களால் செய்யப்பட்ட அனைத்தையும் அறிவித்தார்கள்.

74. 1. தர்மபுத்திரர் இவ்விதமாக ஜராஸந்தனுடைய வதத்தையும் ஸர்வேசுவரனான கிருஷ்ணனுடைய மகிமையையும் கேட்டு மகிழ்ந்து அவரிடம் பின்வருமாறு கூறினார்.

युधिष्ठिर उवाच—

ये-स्यु-स्त्रैलोक्यगुरवः सर्वे लोकमहेश्वराः ।
वहन्ति दुर्लभं लब्ध्वा शिरसैवानुशासनम् ॥ ७४.२ ॥

स भवानरविन्दाक्ष दीनाना-मीशमानिनाम् ।
धत्तेऽनुशासनं भूमंस्तदत्यन्त-विडंबनम् ॥ ७४.३ ॥

श्रीशुक उवाच—

इत्युक्त्वा यज्ञिये काले वव्रे युक्तान् स ऋत्विजः ।
कृष्णानुमोदितः पार्थो ब्राह्मणान् ब्रह्मवादिनः ॥ ७४.६ ॥

द्वैपायनो भरद्वाजः सुमन्तु-र्गौतमोऽसितः ।
वसिष्ठश्च्यवनः कण्वो मैत्रेयः कवष-स्त्रितः ॥ ७४.७ ॥

उपहूतास्तथा चान्ये द्रोण-भीष्म-कृपादयः ।
धृतराष्ट्रः सहसुतो विदुरश्च महामतिः ॥ ७४.१० ॥

யுதிஷ்டிரர் கூறியது—

74. 2. மூவுலகுக்கும் குருவாகியவர்கள் எவர்களோ அவர்களும் உலகிலுள்ள எல்லா ஜனங்களும் எல்லா லோகபாலகர்களும் அடைதற்கரிய உமது உத்திரவைப் பெற்று அதைத் தலையால் ஏற்றுச் செய்கிறார்கள்.

74. 3. அனைத்திற்கும் அப்பாற்பட்டவரே! அப்படிப்பட்டவரும் தாமரைக் கண்ணனுமாகிய தாங்கள் அரசர் என்ற அபிமானங்கொண்ட எளியவர்களான எங்களுடைய உத்திரவைக் கேட்பதாகிய அது மிகவும் விந்தை.

ஸ்ரீ சுகர் கூறியது—

74. 6. இவ்விதம் கூறிவிட்டுத் தர்மபுத்திரர் கிருஷ்ணனுடைய அனுமதியைப் பெற்று யாகத்திற்குரிய காலத்தில் தகுதி வாய்ந்தவர்களும் வேதமுணர்ந்தவர்களுமான பிராம்மணர்களை ரித்விக்குகளாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார்.

74. 7-10. வியாஸர், பரத்துவாஜர், ஸுமந்து, கௌதமர், அஸிதர், வஸிஷ்டர், ச்யவனர், கண்வர், மைத்ரேயர், கவஷர், த்ரிதர், அவ்வாறே மற்றவர்களும் துரோணர், பீஷ்மர், கிருபர் முதலியவர்களும், புத்திரர்களுடன் கூட திருதராஷ்டிரரும் சிறந்த மதிவாய்ந்த விதுரரும் அழைக்கப்பட்டனர்.

---

74. 6. **யஜ்ஞியே**—யஜ்ஞோசிதே வஸந்தாதி-காலே ।

ब्राह्मणाः क्षत्रिया वैश्याः शूद्रा यज्ञदिदृक्षवः ।
तत्रेयुः सर्वराजानो राज्ञां प्रकृतयो नृप ॥ ७४.११ ॥

ततस्ते देवयजनं ब्राह्मणाः स्वर्णलांगलैः ।
कृष्ट्वा तत्र यथाम्नायं दीक्षयांचक्रिरे नृपम् ॥ ७४.१२ ॥

अयाजयन् महाराजं याजका देववर्चसः ।
राजसूयेन विधिवत् प्राचेतस-मिवामराः ॥ ७४.१६ ॥

सौत्येऽहन्यवनीपालो याजकान् सदसस्पतीन् ।
अपूजयन् महाभागान् यथावत् सुसमाहितः ॥ ७४.१७ ॥

सदस्याग्र्यार्हणार्हं वै विमृशन्तः सभासदः ।
नाध्यगच्छन्ननैकान्त्यात् सहदेव-स्तदाब्रवीत् ॥ ७४.१८ ॥

अर्हति ह्यच्युतः श्रैष्ठ्यं भगवान् सात्वतां पतिः ।
एष वै देवताः सर्वा देशकाल-धनादयः ॥ ७४.१९ ॥

---

74. 11. அரசே! பிராம்மணர்களும், க்ஷத்திரியர்களும், வைசியர்களும், சூத்திரர்களும் எல்லா அரசர்களும் அரசர்களுடைய மந்திரிகளும் பரிவாரங்களும் யாகத்தைப் பார்க்க விரும்பியவர்களாய் அங்கு வந்தனர்.

74. 12. பிறகு அந்தப் பிராமணர்கள் யாகபூமியைத் தங்கக் கலப்பைகளால் உழுது அங்கு முறைப்படி தர்மபுத்திர மகாராஜனுக்கு தீக்ஷை செய்வித்தார்கள்.

74. 16. வருணபகவானுக்கு தேவர்கள் யாகம் நடத்திவைத்தாற்போல் தேவர்களுக் கொப்பான காந்தியுடைய ரித்விக்குகள் தர்மபுத்திர மகாராஜனுக்கு விதிப்படி ராஜஸூய யாகத்தை நடத்திவைத்தனர்.

74. 17. ஸோமரஸம் பிழியும் தினத்தன்று மகாராஜன் மிகவும் பூஜ்யர்களான ரித்விக்குகளையும் ஸபாநாயகர்களையும் மிகுந்த கவனத்துடன் விதிப்படி பூஜித்தார்.

74. 18. ஸபையில் முதல் பூஜைக்குத் தகுதியுள்ளவர் யாரென்று ஆலோசனை செய்த சபையோர்கள் தகுதியுள்ளவர்கள் ஒருவராயில்லாமல் பலபேரிருந்ததால் ஒரு முடிவுக்கு வரவில்லை. அப்போது ஸஹதேவன் பின்வருமாறு கூறினன்.

74. 19-20. 'இவ்வுலகம் எவருடைய வடிவமோ, யாகங்கள் எவருடைய வடிவோ, அக்கினியும் ஆஹுதிகளும் எவருடைய வடிவமோ, வேதமந்திரங்களும், ஸாங்கியமும் யோகமும் எவரைப் பற்றியவையோ அப்படிப்பட்ட அச்சுதனே, பக்தர்களுக்குப் பதியான பகவானே, முதன்மைக் குரியவர். எல்லா தேவதைகளும், தேசம், காலம், பொருள் முதலிய அனைத்தும் இவரே.

यदात्मकमिदं विश्वं क्रतवश्च यदात्मकाः ।
अग्निराहुतयो मन्त्राः सांख्यं योगश्च यत्परः ॥ ७४.२० ॥

एक एवाद्वितीयोऽसावैतदात्म्य-मिदं जगत् ।
आत्मनाऽऽत्माश्रयः सभ्याः सृजत्यवति हन्त्यजः ॥ ७४.२१ ॥

तस्मात् कृष्णाय महते दीयतां परमार्हणम् ।
एवं चेत् सर्वभूताना-मात्मनश्चार्हणं भवेत् ॥ ७४.२३ ॥

सर्वभूतात्मभूताय कृष्णायानन्यदर्शिने ।
देयं शान्ताय पूर्णाय दत्तस्यानन्त्य-मिच्छता ॥ ७४.२४ ॥

इत्युक्त्वा सहदेवोऽभूत् तूष्णीं कृष्णानुभाववित् ।
तच्छ्रुत्वा तुष्टुवुः सर्वे साधु साध्विति सत्तमाः ॥ ७४.२५ ॥

श्रुत्वा द्विजेरितं राजा ज्ञात्वा हार्दं सभासदां ।
समर्हयद्धृषीकेशं प्रीतः प्रणयविह्वलः ॥ ७४.२६ ॥

---

74. 21. 'சபையோர்களே! இவர் இரண்டற்றவர்; ஒருவரே யாகியவர்; இவ்வுலகம் இவருடைய ஸ்வரூபமே. பிறப்பற்ற இவர் தன்னைத்தானே ஆசிரயித்து தன்னாலேயே சிருஷ்டிக்கிறார், ரக்ஷிக்கிறார், ஸம்ஹரிக்கிறார்.

74. 23. 'ஆகையால் மகாபுருஷனான கிருஷ்ணனுக்கு முதல் பூஜை செய்யப் படட்டும். அப்படிச் செய்தால் எல்லா உயிர்களுக்கும் தனக்கும் பூஜை செய்ததாகும்.

74. 24. 'தானம் செய்ததற்கு அளவற்ற பலனை விரும்புபவனால் எல்லா உயிர்களுக்கும் ஆத்மாவாக இருப்பவரும் பேதபுத்தி யில்லாதவரும் சாந்தரும் பரிபூர்ணருமான கிருஷ்ணனுக்கே தானம் செய்யப்படவேண்டும்.'

74. 25. கிருஷ்ணனுடைய மகிமையை அறிந்த ஸஹதேவன் இவ்விதம் கூறிவிட்டு மௌனமாயிருந்தான். எல்லா ஸாதுக்களும் அதைக்கேட்டு 'நன்று நன்று' என்று கொண்டாடினார்கள்.

74. 26. தர்மபுத்திர மகாராஜன் பிராம்மணர்கள் கொண்டாடியதைக் கேட்டு, சபையோர்களுடைய அபிப்பிராயத்தையும் கேட்டு சந்தோஷமடைந்தவராய்ப் பிரேமையால் மெய் மறந்து இந்திரியங்களை இயக்குவிப்பவனாகிய கிருஷ்ணனைப் பூசிக்கலானார்.

---

74. 26. **ஹார்த்தம்**—அபிப்ராயம்.

तत्पादाववनिज्यापः शिरसा लोकपावनीः ।
सभार्यः सानुजामात्यः सकुटुंबोऽवहन्मुदा ॥ ७४.२७ ॥

वासोभिः पीतकौशेयै-र्भूषणैश्च महाधनैः ।
अर्हयित्वाऽश्रुपूर्णाक्षो नाशकत् समवेक्षितुम् ॥ ७४.२८ ॥

इत्थं सभाजितं वीक्ष्य सर्वे प्रांजलयो जनाः ।
नमो जयेति नेमुस्तं निपेतुः पुष्पवृष्टयः ॥ ७४.२९ ॥

इत्थं निशम्य दमघोषसुतः स्वपीठा-
दुत्थाय कृष्ण-गुण-वर्णन-जातमन्युः ।
उत्क्षिप्य बाहु-मिद-माह सदस्यमर्षी
संश्रावयन् भगवते परुषाण्यभीतः ॥ ७४.३० ॥

ईशो दुरत्ययः काल इति सत्यवती श्रुतिः ।
वृद्धानामपि यद्बुद्धि-र्बालवाक्यैर्विभिद्यते ॥ ७४.३१ ॥

---

74. 27. அவருடைய திருவடிகளை அலம்பிய உலகபாவனமான அந்தத் தீர்த்தத்தைப் பத்தினியுடனும் தம்பிமார்களுடனும் மந்திரிகளுடனும் குடும்பத்துடனும் மகிழ்ந்து தலையில் ஏற்றுக் கொண்டார்,

74. 28. மஞ்சள் பட்டாடையாலும் விலைமிக்க ஆபரணங்களாலும் பகவானை அலங்கரித்துக் கண்களில் ஆனந்தக் கண்ணீர் நிறைந்தவராய் அவரைப் பார்க்க முடியாமலிருந்தார்.

74. 29. இவ்விதம் பூஜிக்கப்பெற்ற அவரைப் பார்த்து எல்லா ஜனங்களும் கை கூப்பியவர்களாய் 'நமஸ்காரம், ஜய' என்று கோஷித்து வந்தனம் செய்தனர். புஷ்பமாரிகள் பெய்தன.

74. 30. இந்த கோஷத்தைக் கேட்டும் கிருஷ்ணனுடைய குணவர்ணனையைக் கேட்டும் கோபம் கொண்ட சிசுபாலன் தனது ஆஸனத்திலிருந்து எழுந்து கையைத் தூக்கிக்கொண்டு கடுமையான வார்த்தைகளைப் பகவான் காதில் விழும்படி பயமில்லாமல் சபையில் பின் வருமாறு கூறினன்.

74. 31. 'காலம் ஸர்வ வல்லமை பெற்றது. கடக்க முடியாதது' என்ற பழமொழி உண்மையாயிற்று. ஏனென்றால் முதியோர்களுடைய புத்தியும் சிறு பிள்ளையின் வார்த்தைகளால் மாறிவிட்டதல்லவா ?

---

74. 29. प्रांजलयो नृपाः ।

तपो-विद्या-व्रत-धरान् ज्ञान-विध्वस्त-कल्मषान् ।
परमर्षीन् ब्रह्मनिष्ठान् लोकपालैश्च पूजितान् ॥ ७४.३३ ॥

सदस्पतीनतिक्रम्य गोपालः कुलपांसनः ।
यथा काकः पुरोडाशं सपर्यां कथमर्हति ॥ ७४.३४ ॥

वर्णाश्रमकुलापेतः सर्वधर्मबहिष्कृतः ।
स्वैरवर्ती गुणैर्हीनः सपर्यां कथमर्हति ॥ ७४.३५ ॥

ययातिनैषां हि कुलं शप्तं सद्भि-र्बहिष्कृतम् ।
वृथा पानरतं शश्वत् सपर्यां कथमर्हति ॥ ७४.३६ ॥

एवमादीन्यभद्राणि बभाषे नष्टमंगलः ।
नोवाच किंचिद्भगवान् यथा सिंहः शिवारुतम् ॥ ७४.३८ ॥

---

74. 33-34. 'தவம், வித்தை, விரதம் இவைகளைக் காப்பவர்களும் ஞானத்தால் பாவத்தைப் போக்கியவர்களும் பிரம்மநிஷ்டர்களும் லோகபாலர்களாலும் பூஜிக்கப் பட்டவர்களும் ஸபாநாயகர்களுமான சிறந்த ரிஷிகளை அலக்ஷியம் செய்து காக்கை யானது (ஹோமத்திற்குரிய) புரோடாசத்தைக் கவர்ந்தாற்போல் குலத்திற்கே இழிவு தருபவனை இந்த இடையன் எவ்வாறு பூஜைக்குரியவனாவான் ?

74. 35. 'வர்ணம் ஆசிரமம் குலம் இவைகளில்லாதவனும் எல்லாக் கடமைகளுக் கும் விலக்காகியவனும் தனதிஷ்டப்படி நடப்பவனும் குணஹீனனுமான இவன் எவ்வாறு பூஜைக்குரியவனாவான் ?

74. 36. ' இவர்களுடைய குலம் யயாதியால் சபிக்கப்பட்டு ஸாதுக்களால் பஹிஷ்கரிக்கப் பட்டது. எப்பொழுதும் (இவர்கள்) குடியில் களித்து வீண்காலம் போக்குபவர்கள் என்பது தெரிந்ததே. (அப்படிப்பட்ட இவன்) எவ்வாறு பூஜைக் குரியவனாவான் ?'

74. 38. க்ஷேமத்தை இழந்தவனை சிசுபாலன் இம்மாதிரியான இழிசொற்களைப் பேசினான். சிங்கமானது நரியின் ஊளையைக் கேட்டுச் சும்மா இருப்பதுபோல் பகவான் ஒன்றுமே பேசவில்லை.

---

74. 35. வர்ணாச்ரமகுலேப்ய: அபேத: ப்ரஹ்மத்வாத் அநாம-கோத்ரமிதி ச்ருதே: அத ஏவ அநதிகாரித்வாத் ஸர்வைர்-தர்மைர்-பஹிஷ்க்ருத: ஸ்வைரவர்த்தீ பரமேச்வரத்வாத் । அத ஏவ நிர்க்குண: தம ஆதி ரஹித: । ஏவம் பூதோ ஜீவானும் யோக்யம் துச்சம் ஸபர்யா-மாத்ரம் கதமர்ஹதீத்யர்த்த: ॥

—ஸ்ரீதர்.

भगवन्निन्दनं श्रुत्वा दुःसहं तत् सभासदः।
कर्णौ पिधाय निर्जग्मुः शपन्त-श्चेदिपं रुषा ॥ ७४.३९ ॥

निन्दां भगवतः शृण्वंस्तत्परस्य जनस्य वा।
ततो नापैति यः सोऽपि यात्यधः सुकृताच्च्युतः ॥ ७४.४० ॥

ततः पाण्डुसुताः क्रुद्धा मत्स्य-कैकय-सृंजयाः।
उदायुधाः समुत्तस्थुः शिशुपाल-जिघांसवः ॥ ७४.४१ ॥

ततश्चैद्यस्त्वसंभ्रान्तो जगृहे खड्गचर्मणी।
भर्त्सयन् कृष्णपक्षीयान् राज्ञः सदसि भारत ॥ ७४.४२ ॥

तावदुत्थाय भगवान् स्वान् निवार्य स्वयं रुषा।
शिरः क्षुरान्त-चक्रेण जहारापततो रिपोः ॥ ७४.४३ ॥

चैद्यदेहोत्थितं ज्योति-र्वासुदेव-मुपाविशत्।
पश्यतां सर्वभूताना-मुल्केव भुवि खाच्च्युता ॥ ७४.४५ ॥

---

74. 39. சபையிலிருந்தவர்கள் சகிக்கமுடியாத அந்த பகவந் நிந்தையைக்கேட்டுக் காதுகளைப் பொத்திக்கொண்டு கோபத்தால் சிசுபாலனைச் சபித்துக்கொண்டு வெளிச் சென்றனர்.

74. 40. பகவந் நிந்தையையோ பகவத் பக்தனுடைய நிந்தையையோ எவன் கேட்டுக்கொண்டு அவ்விடத்தை விட்டகலாமலிருக்கின்றனோ அவனும் தன் புண்ணி யத்தை யிழந்து நரகத்தில் விழுவான்.

74. 41. அப்போது பாண்டவர்களும் மத்ஸ்ய கேகய ஸ்ருஞ்சய தேசத் தரசர்க ளும் கோபமடைந்தவர்களாய் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு சிசுபாலனைக் கொல்ல விரும்பி எழுந்திருந்தனர்.

74. 42. 'பாரதா, அப்போது சிசுபாலனே பரபரப்பின்றி சபையில் கிருஷ்ணன் பக்கத்தில் சேர்ந்தவர்களை அதட்டிக்கொண்டே கத்தியையும் கேடயத்தையும் எடுத் துக் கொண்டான்.

74. 43. அப்போது பகவான் எழுந்திருந்து தன்னைச் சேர்ந்தவர்களைத் தடுத்துத் தானே கோபத்துடன் கத்திபோன்ற நுனியுடைய சக்ராயுதத்தால் தன்னை எதிர்த்து வரும் சத்துருவின் தலையை அறுத்தார்.

74. 45. சிசுபாலனுடைய உடலிலிருந்து ஒரு ஒளி கிளம்பி ஆகாயத்திலிருந்து விழும் உலகம் பூமியை அடைவதுபோல் எல்லாப் பிராணிகளும் பார்த்துக்கொண்டிருக் கும்போதே வாசுதேவனை அடைந்தது.

जन्मत्रयानुगुणित-वैरसंरब्धया धिया।
ध्यायं-स्तन्मयतां यातो भावो हि भवकारणम्   ॥ ७४.४६ ॥

ऋत्विग्भ्यः स सदस्येभ्यो दक्षिणां विपुलामदात्।
सर्वान् संपूज्य विधिवच्चक्रेऽवभृतमेकराट्   ॥ ७४.४७ ॥

साधयित्वा क्रतुं राज्ञः कृष्णो योगेश्वरेश्वरः।
उवास कतिचिन्मासान् सुहृद्भिरभियाचितः   ॥ ७४.४८ ॥

ततोऽनुज्ञाप्य राजान-मनिच्छन्तमपीश्वरः।
ययौ सभार्यः सामात्यः स्वपुरं देवकीसुतः   ॥ ७४.४९ ॥

राज्ञा सभाजिताः सर्वे सुर-मानव-खेचराः।
कृष्णं क्रतुं च शंसन्तः स्वधामानि ययु-र्मुदा   ॥ ७४.५२ ॥

दुर्योधनमृते पापं कलिं कुरुकुलामयम्।
यो न सेहे श्रियं स्फीतां दृष्ट्वा पाण्डुसुतस्य ताम्   ॥ ७४.५३ ॥

---

74. 46. (சிசுபாலன்) மூன்று ஜன்மங்களில் இடைவிடாது வளர்ந்த விரோதத்தின் வேகம் நிறைந்த மனதால் (தன்வயமின்றியே பகவானை) எண்ணிவந்ததால் தன் மயத்தை அடைந்துவிட்டான். பாவனையே பவிப்பதற்குக் காரணமன்றோ?

74. 47. ஏகசக்ராதிபதியான தருமபுத்திரர் சபையோர்களுக்கும் ரித்விக்குகளுக்கும் ஏராளமாக தக்ஷிணை கொடுத்தார். எல்லோரையும் முறைப்படி பூஜித்து அவபிருத ஸ்நானம் செய்தார்.

74. 48. யோகீசுவரர்களுக்கு ஈச்வரரான கிருஷ்ணபகவான் தர்மபுத்திரமகாராஜனுக்கு யாகத்தை நடத்திவைத்தபின் மித்திரர்களால் வேண்டிக்கொள்ளப்பட்டுச் சில மாதங்கள் அவ்விடம் தங்கினார்.

74. 49. பிறகு தர்மபுத்திரர் தன்னைத் துவாரகைக்கு அனுப்பப் பிரியப்படாவிட்டாலும் தேவகீபுத்திரனான பகவான் அவரிடம் விடைபெற்றுக்கொண்டு பத்தினிகளுடனும் மந்திரிகளுடனும் தனது பட்டணம் சென்றார்.

74. 52. தர்மபுத்திர ராஜாவால் பூஜிக்கப்பெற்ற தேவர்கள். மனிதர்கள் ஆகாயத்தில் சஞ்சரிக்கும் ப்ரமதகணங்கள் ஆகிய எல்லோரும் கிருஷ்ணனையும் ராஜஸூய யாகத்தையும் புகழ்ந்துகொண்டு சந்தோஷத்துடன் தங்கள் தங்கள் இருப்பிடம் சென்றார்கள்.

74. 53. பாண்டுகுமாரர்களுடைய ஐசுவரிய விருத்தியைப் பார்த்துச் சகிக்காதவனும் பாவியும் கலிபுருஷனுடைய அம்சமும் குருகுலத்திற்கு வியாதிபோன்றவனும் ஆகிய துரியோதனன் ஒருவன் நீங்கலாக (எல்லோரும் சந்தோஷமாகச் சென்றார்கள்.)

---

74. 46. ௯. கோப்ய: காமாத் பயாத் கம்ஸோ த்வேஷாத் சைத்யாதயோ ந்ருபா:। ஸம்பந்தாத் வ்ருஷ்ணய: ஸ்நேஹாத் யூயம் பக்த்யா வயம் ந்ருப। தஸ்மாத் கேநாப்யுபாயேன மன: க்ருஷ்ணே நிவேசயேத் ॥ —பாக: 7-1-30

राजोवाच--

अजातशत्रोस्तं दृष्ट्वा राजसूयमहोदयम् ।
सर्वे मुमुदिरे ब्रह्मन् नृदेवा ये समागताः ॥ ७५.१ ॥

दुर्योधनं वर्जयित्वा राजानः सर्षयः सुराः ।
इति श्रुतं नो भगवंस्तत्र कारणमुच्यताम् ॥ ७५.२ ॥

श्रीशुक उवाच--

पितामहस्य ते यज्ञे राजसूये महात्मनः ।
बान्धवाः परिचर्यायां तस्यासन् प्रेमबन्धनाः ॥ ७५.३ ॥

भीमो महानसाध्यक्षो धनाध्यक्षः सुयोधनः ।
सहदेवस्तु पूजायां नकुलो द्रव्य-साधने ॥ ७५.४ ॥

गुरुशुश्रूषणे जिष्णुः कृष्णः पादावनेजने ।
परिवेषणे द्रुपदजा कर्णो दाने महामनाः ॥ ७५.५ ॥

அரசன் கூறியது—

75. 1-2. பிரம்மரிஷியே ! அஜாதசத்துருவான தர்மபுத்திரருடைய அந்த ராஜஸூய மஹோத்ஸவத்தைப் பார்த்து பிராம்மணர்களும் க்ஷத்திரியர்களும் ரிஷிகளும் தேவர்களும் இன்னும் வந்திருந்த எல்லோரும் ஸந்தோஷித்தார்கள், துரியோதனன் ஒருவன் நீங்கலாக, என்று கூறக் கேட்டேன். முனிவரே இதன் காரணத்தைக் கூற வேண்டும்.

ஸ்ரீ சுகர் கூறியது—

75. 3. உன் பாட்டனும் மகாத்மாவுமாகிய தர்மபுத்திரருடைய அந்த ராஜஸூய யாகத்தில் அன்பினால் கட்டுண்ட பந்துக்கள் எல்லோரும் பணிவிடை செய்ய முன் வந்தனர்.

75. 4-5. பீமன் சமையற் கட்டிற்கு அதிகாரியாகவும், துரியோதனன் பொக்கிஷத்திற்கு அதிகாரியாகவும் இருந்தனர். ஸஹதேவன் வந்தவர்களை வரவேற்று மரியாதை செய்வதிலும் நகுலன் யாகத்திற்கு வேண்டிய பொருள்களைச் சேகரிப்பதிலும் அர்ஜுனன் குருமார்களுக்குப் பணிவிடை செய்வதிலும் கிருஷ்ணன் அவர்களுடைய பாதங்களை யலம்புவதிலும் துரௌபதி பரிமாறுவதிலும் பரந்த மனதுடைய கர்ணன் தானம் செய்வதிலும் (நியமனம் பெற்றனர்).

---

75. 4. ஒ. (த்வமப்யயி ஜகத்பதே த்விஜபதாவனேஜாதிகம் சகர்த்த கிமு கத்யதே ந்ருபவரஸ்ய பாக்யோன்னதி: ।) உலக நாயகனே! அந்த யாகத்தில் நீரும் துவிஜர்களுடைய கால்களை யலம்புவது முதலியவற்றைச் செய்தீர்களல்லவா? அரசர் பெருமானுடைய பாக்கியத்தின் மேன்மையை என்னவென்று சொல்லட்டும்?
—நாராயணீயம். 85. 6.

---

75. 2. राजानमृषयः सुराः ।

75. 5. सतांशुश्रूषणे ।

युयुधानो विकर्णश्च हार्दिक्यो विदुरादयः।
बाह्लीकपुत्रा भूर्याद्या ये च सन्तर्दनादयः ॥ ७५.६ ॥

निरूपिता महायज्ञे नाना–कर्मसु ते तदा।
प्रवर्तन्ते स्म राजेन्द्र राज्ञः प्रियचिकीर्षवः ॥ ७५.७ ॥

हरिदासस्य राजर्षे राजसूयमहोदयम्।
नैवातृप्यन् प्रशंसन्तः पिबन् मर्त्योऽमृतं यथा ॥ ७५.२७ ॥

भगवानपि तत्राङ्ग न्यवात्सीत् तत् प्रियंकरः।
प्रस्थाप्य यदुवीरांश्च सांबादींश्च कुशस्थलीम् ॥ ७५.२९ ॥

इत्थं राजा धर्मसुतो मनोरथ–महार्णवम्।
सुदुस्तरं समुत्तीर्य कृष्णेनासीद्गतज्वरः ॥ ७५.३० ॥

एकदान्तःपुरे तस्य वीक्ष्य दुर्योधनः श्रियम्।
अतप्यद् राजसूयस्य महित्वं चाच्युतात्मनः ॥ ७५.३१ ॥

---

75. 6-7. அரச சிரேஷ்டரே! ஸாத்யகி, விகர்ணன், கிருபர், விதுரர், பாஹ்லீகருடைய பிள்ளைகள், பூரிசிரவஸ் ஸந்தர்த்தனர் முதலிய எல்லோரும் அந்த மகா யஜ்ஞத்தில் தர்மபுத்திரருக்குப் பிரியத்தைச் செய்ய ஆவல் கொண்டு பற்பல வேலைகளில் நியமிக்கப்பட்டு அந்தந்த வேலைகளைக் கவனித்தார்கள்.

75. 27. ஹரிதாஸரும் ராஜரிஷியுமான தர்மபுத்திரருடைய ராஜஸூய மஹோத்ஸவத்தைக் கொண்டாடிய ஜனங்கள் அமிருதத்தைப் பானம் செய்யும் மனிதன் போதுமென்று எண்ணாததுபோல் திருப்தி யடையவில்லை.

75. 29. ஐயனே! பகவானும் தர்மபுத்திரருக்குப் பிரியத்தைச் செய்ய விரும்பி ஸாம்பன் முதலிய யது வீரர்களைத் துவாரகைக்கு அனுப்பி விட்டு அங்கு தங்கினார்.

75. 30. இவ்வாருக தர்மபுத்திர மகாராஜா கடத்தற்கரிய பெரிய கடலைத்தாண்டியவர்போல் மனதில்கொண்ட பெரிய எண்ணம் கிருஷ்ணனால் பூர்த்திசெய்யப் பெற்றவராய்க் கவலை யற்றிருந்தார்.

75. 31. ஒரு நாள் துரியோதனன் கிருஷ்ணனை உயிராகக் கொண்ட தர்மபுத்திரருடைய அந்தப்புரத்திலுள்ள ஐசுவரியத்தையும் ராஜஸூய யாகத்தின் மகிமையையுங் கண்டு பொறாமை கொண்டான்.

---

75. 29. तत्राङ्ग न्यवासीत्।

यस्मिन् नरेन्द्र-दितिजेन्द्र-सुरेन्द्रलक्ष्मी-
नाना विभान्ति किल विश्वसृजोपक्लृप्ताः ।
ताभिः पतीन् द्रुपदराजसुतोपतस्थे
यस्यां विषक्तहृदयः कुरुराडतप्यत् ॥ ७५.३२ ॥

सभायां मयक्लृप्तायां क्वापि धर्मसुतोऽधिराट् ।
वृतोऽनुजै-र्बन्धुभिश्च कृष्णेनापि स्वचक्षुषा ॥ ७५.३४ ॥

आसीनः कांचने साक्षादासने मघवानिव ।
पारमेष्ठ्य-श्रिया जुष्टः स्तूयमानश्च वन्दिभिः ॥ ७५.३५ ॥

तत्र दुर्योधनो मानी परीतो भ्रातृभि-र्नृप ।
किरीटमाली न्यविश-दसिहस्तः क्षिपन् रुषा ॥ ७५.३६ ॥

स्थलेऽभ्यगृह्णाद्वस्त्रान्तं जलं मत्वा स्थलेऽपतत् ।
जले च स्थलवद् भ्रान्त्या मयमाया-विमोहितः ॥ ७५.३७ ॥

---

75. 32. மானிட அரசர் அசுர அரசர் தேவராஜன் ஆகிய எல்லோருடைய சிறப்பும் மயனுல் அமைக்கப்பட்ட எந்த சபையில் பலவகைகளில் பிரகாசித்தனவோ (அந்த சபையில்) அவ்வெல்லாச் சிறப்புகளுடனும் திரௌபதி தன் நாயகர்களுக்குப் பணிவிடை செய்தாள். அதைக் கண்ணுற்ற குருராஜனை துரியோதனன் அதில் மனதைப் பறிகொடுத்துத் தவிக்கலானுன்.

75. 34-35. மயனுல் அமைக்கப்பட்ட சபையில் ஓரிடத்தில் தம்பிகளாலும் பந்துக்களாலும் தன் கண்ணேபோன்ற கிருஷ்ணனுலும் சூழப்பெற்றுச் சக்கரவர்த்திப் பதவியின் பெருமை விளங்கத் துதி பாடகர்களால் துதிக்கப் படுகிறவரும் ராஜாதி ராஜனுமான தர்மபுத்திரர் தங்கச் சிம்மாஸனத்தில் ஸாக்ஷாத் இந்திரன்போல் வீற்றிருந்தார்.

75. 36. அரசே! அஹங்காரமுடையவனும் கிரீடமும் மாலையும் அணிந்தவனும் தம்பிமார்களால் சூழப்பெற்றவனுமான துரியோதனன் கையில் கத்தியைப் பிடித்துக் கொண்டு கோபத்துடன் (காவற்காரர்களை) அதட்டிக்கொண்டு அங்கே பிரவேசித்தான்.

75. 37. மயனுடைய மாயவேலையில் மயங்கித் தரையை ஜலம் என்று எண்ணித் தரையில் வஸ்திரத்தின் நுனியைத் தூக்கிப் பிடித்துக்கொண்டான். ஜலத்தில் தரை என்ற பிரமையால் கீழே விழுந்தான்.

---

75. 34. मयविद्यायां ।

75. 36. सहितो भ्रातृभिः ।

जहास भीमस्तं दृष्ट्वा स्त्रियो नृपतयोऽपरे ।
निवार्यमाणा अप्यङ्ग राज्ञा कृष्णानुमोदिताः ॥ ७५.३८ ॥

स व्रीडितोऽवाग्वदनो रुषा ज्वलन्
निष्क्रम्य तूष्णीं प्रययौ गजाह्वयम् ।
हाहेति शब्दः सुमहानभूत् सता-
मजातशत्रु-र्विमना इवाभवत् ।
बभूव तूष्णीं भगवान् भुवो भरं
समुज्जिहीर्षु-र्भ्रमति स्म यद्दृशा ॥ ७५.३९ ॥

इति दशमस्कन्धे दुर्योधन-मानभंगो नाम
पंचसप्ततितमोऽध्यायः ॥

---

75. 38. அவனைப் பார்த்து பீமசேனன் சிரித்தான். ஸ்திரீகளும் மற்ற அரசர்களும் தர்மபுத்திரரால் தடுக்கப்பட்டும் கிருஷ்ணனால் ஆமோதிக்கப்பட்டுச் சிரித்தனர்.

75. 39. துரியோதனன் வெட்கித் தலைகுனிந்து கோபத்தால் ஜ்வலித்துக் கொண்டு வெளியேறி மௌனமாக ஹஸ்தினாபுரம் சென்றான். அப்போது ஸாதுக்களின் 'ஹா ஹா' என்ற ஆரவாரம் உண்டாயிற்று. அஜாதசத்ருவாகிய தர்மபுத்திரர் மன வமைதியை யிழந்தவர் போலானார். எந்த பகவானுடைய பார்வையால் துரியோதனன் பிரமத்தை யடைந்தானோ அந்த பகவான் பூபாரத்தை ஒடுக்க எண்ணங்கொண்டவராய்ப் பேசாம லிருந்தார்.

76-வது அத்தியாயம் கிருஷ்ணன் துவாரகையி லில்லாதபோது சிசுபாலனுடைய சிநேகிதனை சால்வன் துவாரகையைத் தாக்கியதையும் பிரதியும்னனைப் பீடித்ததையும் கூறுகிறது.

இங்ஙனம் பத்தாவது ஸ்கந்தத்தில் துர்யோதன மானபங்கம்
எனப் பெயர்பெற்ற எழுபத்தைந்தாவது
அத்தியாயம் முற்றும்.

द्वारकालीला ॥ ४ ॥ ३१ ॥

शाल्ववधः

श्रीशुक उवाच—

कुरुवृद्धाननुज्ञाप्य मुनींश्च ससुतां पृथाम् ।
निमित्तान्यतिघोराणि पश्यन् द्वारवतीं ययौ ॥ ७७.७ ॥

आह चाहमिहायात आर्यमिश्राभिसंगतः ।
राजन्याश्चैद्यपक्षीया नूनं हन्युः पुरीं मम ॥ ७७.८ ॥

वीक्ष्य तत् कदनं स्वानां निरूप्य पुररक्षणम् ।
सौभं च शाल्वराजं च दारुकं प्राह केशवः ॥ ७७.९ ॥

रथं प्रापय मे सूत शाल्वस्यान्तिक-माशु वै ।
संभ्रमस्ते न कर्तव्यो मायावी सौभराडयम् ॥ ७७.१० ॥

---

31. துவாரகா லீலை (4)

சால்வ வதம்

ஸ்ரீ சுகர் கூறியது—

77. 7. (பின் சிலநாள் கழித்து) துர்நிமித்தங்களைக் கண்ட பகவான் "குருவம்சத்துப் பெரியோர்களிடத்திலும் முனிவர்க ளிடத்திலும் குந்தியிடத்திலும் அவள் பிள்ளைக ளிடத்திலும் விடை பெற்றுக்கொண்டு துவாரகைக்குப் புறப்பட்டார்.

77. 8. "நான் பலராமனுடன் இங்கு வந்துவிட்டேன். சிசுபாலன் கட்சியைச் சேர்ந்த அரசர்கள் நிச்சயமாக எனது பட்டணத்தைத் தாக்கி யழிப்பார்கள்!' என்று சொல்லிக்கொண்டார். (அவ்வாறே சிசுபாலனுடைய தோழனான சால்வராஜன் பரம சிவனைக் குறித்துத் தவம்செய்து ஸௌபம் என்ற சிறந்த ஆகாய விமானத்தைப்பெற்று அதைக்கொண்டு துவாரகையைத் தாக்கிப் பிரஜைகளைத் துன்பப் படுத்திக் கொண்டிருந்தான். பிரத்யும்னன், ஸாம்பன், ஸாத்யகி, அக்ரூரர் முதலியவர்கள் எதிர்த்துப் போர் புரிந்தனர். இந்த நிலையில் பகவான் துவாரகை வந்தார்.)

77. 9. பகவான் சால்வ ராஜனையும், ஸௌபம் என்ற அவனுடைய விமானத்தையும் அவனால் தனது பிரஜைகளுக்கு ஏற்பட்ட கஷ்டத்தையும் பார்த்துப் பட்டணத்தைக் காப்பதற்கு வேண்டிய திட்டத்தைச் செய்து தாருகனிடம் பின் வருமாறு சொன்னார்.

77. 10. 'ஸாரதியே! விரைவில் சால்வனிருக்குமிடத்திற்கு என் தேரைக் கொண்டு போ. ஸௌபத்திற் கதிபதியான இவன் மாயாவியாயிற்றே என்று உனக்கு அச்சம் வேண்டாம்.'

विनद्य सौभराडुच्चै-रिदमाह जनार्दनम् ।
यत्त्वया मूढ नः सख्यु-र्भ्रातु-र्भार्या हृतेक्षताम् ।
प्रमत्तः स सभामध्ये त्वया व्यापादितः सखा ॥ ७७.१७ ॥

तं त्वाद्य निशितै-र्बाणै-रपराजितमानिनम् ।
नयाम्यपुनरावृत्तिं यदि तिष्ठे-र्ममाग्रतः ॥ ७७.१८ ॥

श्रीभगवानुवाच—

वृथा त्वं कत्थसे मन्द पश्यस्यन्तिकेऽन्तकम् ।
पौरुषं दर्शयन्ति स्म शूरा न बहुभाषिणः ॥ ७७.१९ ॥

इत्युक्त्वा भगवान् शाल्वं गदया भीमवेगया ।
तताड जत्रौ संरब्धः स चकम्पे वमन्नसृक् ॥ ७७.२० ॥

गदायां सन्निवृत्तायां शाल्वस्त्वन्तरधीयत ।
ततो मुहूर्त आगत्य पुरुषः शिरसाच्युतम् ।
देवक्या प्रहितोऽस्मीति नत्वा प्राह वचो रुदन् ॥ ७७.२१ ॥

---

77. 17-18. சால்வன் கிருஷ்ணனைப் பார்த்து கர்ஜித்துப் பின்வருமாறு பேசினன்: ' முட்டாளே! நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே என் சகோதரனும் சிநேகிதனுமான சிசுபாலனுக்குப் பாரியை ஆகவேண்டியவளை அபகரித்ததற்காகவும், சபை மத்தியில் ஏமாந்திருந்த எங்கள் தோழனை அவனைக் கொன்றதற்காகவும், ஒருவராலும் ஜயிக்க முடியாதவன் என்று கர்வங்கொண்டிருக்கும் உன்னை என் முன் நிற்பாயேயாகில் கூரிய பாணங்களால் இப்போதே திரும்பி வர முடியாத இடத்திற்கு அனுப்புவேன்.'

ஸ்ரீ பகவான் கூறியது—

77. 19. 'மந்தபுத்தியுடையவனே! வீணைகப் பிதற்றுகிருய். பக்கத்தில் வந்திருக்கும் யமனை நீ பார்க்கவில்லை. சூரர்கள் பராக்கிரமத்தைக் காண்பிப்பார்களேயன்றிப் பேசமாட்டார்கள்.

77. 20. இவ்விதம் கூறிவிட்டுக் கிருஷ்ணபகவான் மிகுந்த கோபத்துடன் கடிந்து செல்லும் கதையால் சால்வராஜனைத் தோள்பட்டையில் அடித்தார். அவன் ரத்தத்தைக் கக்கிக்கொண்டு நடுநடுங்கினுன்.

77. 21. கதை திரும்பியவுடன் சால்வன் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தான். இரண்டு நாழிகை கழித்து ஒரு ஆள் ஓடிவந்து கிருஷ்ணனைத் தலையால் வணங்கி 'நான் தேவகியம்மாளால் அனுப்பப் பட்டேன்' என்று அழுதுகொண்டே பின்வரும் வார்த்தையைச் சொன்னுன்.

---

77. 17. भार्यांत्वपहृतेक्षताम् । பா. பே

कृष्ण कृष्ण महाबाहो पिता ते पितृवत्सल ।
बद्ध्वापनीतः शाल्वेन सौनिकेन यथा पशुः ॥ ७७.२२ ॥

निशम्य विप्रियं कृष्णो मानुषीं प्रकृतिं गतः ।
विमनस्को घृणी स्नेहाद् बभाषे प्राकृतो यथा ॥ ७७.२३ ॥

कथं राम-मसंभ्रान्तं जित्वाजेयं सुरासुरैः ।
शाल्वेनाल्पीयसा नीतः पिता मे बलवान् विधिः ॥ ७७.२४ ॥

इति ब्रुवाणे गोविन्दे सौभराट् प्रत्युपस्थितः ।
वसुदेव-मिवानीय कृष्णं चेदमुवाच सः ॥ ७७.२५ ॥

एष ते जनिता तातो यदर्थ-मिह जीवसि ।
वधिष्ये वीक्षत-स्तेऽमु-मीशश्चेत् पाहि बालिश ॥ ७७.२६ ॥

एवं निर्भर्त्स्य मायावी खड्गेनानकदुन्दुभेः ।
उत्कृत्य शिर आदाय खस्थं सौभं समाविशत् ॥ ७७.२७ ॥

---

77. 22. 'கிருஷ்ணா! கிருஷ்ணா! தோள்வலி படைத்தவனே! தந்தையிடம் பிரியம் மிகுந்தவனே! உன் தந்தை சால்வராஜனால் (பிடிக்கப்பட்டு) கசாப்புக் கடைக் காரனால் ஒரு பசு கொண்டுபோகப்படுவதுபோல் கொண்டுபோகப் பட்டார்.'

77. 23. விரும்பத் தகாத அவ்வார்த்தையைக் கேட்டு மனித இயற்கையை அடைந்த கிருஷ்ணன் (தந்தையிடம்) அன்பினால் சாதாரண மனிதனைப்போல் மனதிளகி துக்கம் மேலிட்டு (தனக்குத் தானே இங்ஙனம்) கூறிக்கொண்டார்.

77. 24. 'தேவர்களாலும் அசுரர்களாலும் ஜயிக்கமுடியாதவரும் மிக ஜாக்கிரதையாக இருப்பவருமான பலராமனை ஜெயித்து அற்பனான சால்வன் எப்படி என் பிதாவைக் கொண்டுபோனான்? விதி மிக வலியது.'

77. 25. கிருஷ்ணன் இப்படிச் சொல்லிக்கொண் டிருக்கும்போது அந்த சால்வ ராஜன் திரும்பிவந்து வசுதேவன்போல் ஒரு உருவத்தைக் கொணர்ந்து கிருஷ்ணனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்.

77. 26. 'முட்டாளே! இதோ பார் உன்னைப் பெற்ற தகப்பன். எவருக்காக நீ இவ்வுலகில் உயிருடனிருக்கிறாயோ அவரை நீ பார்த்துக்கொண்டிருக்கும்போதே கொல்லப்போகிறேன். நீ சாமர்த்தியமுள்ளவனானால் காப்பாற்று.'

77. 27. மாயாவியான சால்வன் இவ்விதமாக அதட்டிவிட்டு வாளால் வசுதேவருடைய தலையை வெட்டி எடுத்துக்கொண்டு ஆகாயத்திலிருந்த ஸௌப விமானத்தில் புகுந்துவிட்டான்.

ततो मुहूर्तं प्रकृतावुपप्लुतः स्वबोध आस्ते स्वजनानुषंगतः।
महानुभावस्तदबुद्ध्यदासुरीं मायां स शाल्व-प्रसृतां मयोदिताम्
॥ ७७.२८ ॥

न तत्र दूतं न पितुः कलेबरं प्रबुद्ध आजौ समपश्यदच्युतः।
स्वाप्नं यथा चांबरचारिणं रिपुं सौभस्थ-मालोक्य निहन्तुमुद्यतः
॥ ७७.२९ ॥

तस्मिन् निपतिते पापे सौभे च गदया हते।
नेदु-र्दुन्दुभयो राजन् दिवि देवगणेरिताः।
सखीना-मपचितिं कुर्वन् दन्तवक्त्रो रुषाभ्यगात् ॥ ७७.३७ ॥

गदयाताडयन्मूर्ध्नि सिंहवद् व्यनदच्च सः।
कृष्णोऽपि तमहन् गुर्व्या कौमोदक्या स्तनान्तरे ॥ ७८.८ ॥

गदा-निर्भिन्नहृदय उद्वमन् रुधिरं मुखात्।
प्रसार्य केशबाह्वङ्घ्रीन् धरण्यां न्यपतद् व्यसुः ॥ ७८.९ ॥

---

77. 28. கிருஷ்ணன் இயற்கையான திவ்யஞானம் உடையவராயினும் சொந்த ஜனங்களிடம் உள்ள பற்றினுல் (தந்தையின் மரணத்துக்கு வருந்தி) மனிதத் தன்மையில் சிறிதுநேரம் மூழ்கியிருந்தார். பின்னர் அம்மகானுபாவர் அது சால்வனுல் பிரயோகிக்கப்பட்ட அசுரமாயை என்றும் மயனுல் கற்றுக்கொடுக்கப்பட்டதென்றும் அறிந்தார்.

77. 29. விழித்துக்கொண்ட கிருஷ்ணன் அங்கே போர்க்களத்தில் தூதனைக் காணவில்லை. தந்தையின் சடலத்தையும் காணவில்லை. கனவுபோல் (அவை மறைந்து போயின). ஸௌபத்தி லிருந்துகொண்டு ஆகாயத்தில் சஞ்சரிக்கும் சத்துருவைக் கண்டு அவனைக் கொல்ல எழுந்தார். (உடனே கொன்று முடித்தார்).

77. 37. அரசே! பாவியான அவன் கொல்லப்பட்டு ஸௌப விமானமும் கதையால் உடைக்கப்பட்டபோது ஆகாயத்தில் தேவகணங்கள் துந்துபிகள் முழக்கினுர்கள். அப்போது தன் தோழனுக்காகப் பழிவாங்கும் பொருட்டு தந்தவக்திரன் கோபத்துடன் எதிர்த்து வந்தான்.

78. 8. (கிருஷ்ணனை தந்தவக்திரன்) கதையால் தலையில் அடித்தான். சிங்கம் போல் கர்ஜித்தான். கிருஷ்ணன் பெரிதான கௌமோதகீ என்ற கதையால் அவனுடைய மார்பில் அடித்தார்.

78. 9. அவன் கதையால் மார்பு பிளக்கப்பட்டு வாயால் ரத்தத்தைக் கக்கிக் கொண்டு தலைமயிரையும் கை கால்களையும் விரித்துக்கொண்டு உயிரிழந்துதரையில் விழுந்தான்.

ततः सूक्ष्मतरं ज्योतिः कृष्णमाविशदद्भुतम् ।
पश्यतां सर्वभूतानां यथा चैद्यवधे नृप ॥ ७८.१० ॥

एवं योगेश्वरः कृष्णो भगवान् जगदीश्वरः ।
ईयते पशुदृष्टीनां निर्जितो जयतीति सः ॥ ७८.१६ ॥

श्रुत्वा युद्धोद्यमं रामः कुरूणां सह पाण्डवैः ।
तीर्थाभिषेकव्याजेन मध्यस्थः प्रययौ किल ॥ ७८.१७ ॥

78. 10. அரசே! அப்போது சிசுபாலவதத்தில் நடந்ததுபோலவே எல்லா ஜனங்களும் பார்த்துக்கொண் டிருக்கையில் மிகவும் சூக்ஷ்மமான ஒரு ஜோதி கிருஷ்ண னிடம் பிரவேசித்த அதிசயம் நிகழ்ந்தது.

78. 16. இவ்விதமாக யோகேசுவரனும் ஜகதீசுவரனுமான கிருஷ்ணபகவான் மிருகப் பார்வையுடைய மனிதர்களால் ஜயிக்கப்பட்டவராகவும் ஜயித்தவராகவும் கருதப் படுகிறார்.

78. 17. (இதன் பின்) பாண்டவர்களுடன் கௌரவர்களுக்கு யுத்த முயற்சி ஆரம்பமானதைக் கேள்விப்பட்டு பலராமர் தீர்த்தஸ்நானம் செய்யப்போவதாய்க் காரணத்தைச் சொல்லிவிட்டு இருகக்ஷியிலும் சேரப் பிரியமில்லாதவராய்த் துவாரகை விட்டுச் சென்றார் என்பது பிரசித்தம்.

(பிரபாஸதீர்த்தத்தில் ஸ்நானமும், தர்ப்பணமும் செய்து யமுனை, ஸரஸ்வதி, கங்கை முதலிய தீரங்களிலுள்ள க்ஷேத்திரங்களை தரிசித்துக் கொண்டு நைமிசாரணியம் வந்தார். ஸத்ரயாகம் செய்துகொண்டிருந்த முனிவர்கள் அவரை எதிர்கொண்டு பூஜித்தார்கள். அங்கே வியாஸமஹரிஷியின் சிஷ்யரான ரோமஹர்ஷணர் தன்னை எதிர்கொண்டழையாமலும் நமஸ்காரமோ அஞ்ஜலியோ செய்யாமலும் பிராம்மணர்களைவிட உயர்ந்த ஆஸனத்தில் வீற்றிருந்ததைக்கண்டு கோப மடைந்தார். 'மஹரிஷியின் சிஷ்யனுயிருந்து இதிஹாஸ புராணங்களையும் தர்மசாஸ்தி ரங்களையும் கற்றிருந்தும் வணக்க மில்லாத இவருக்கு இவருடைய அறிவு கூத்தாடிக் குப்போல் பயனளிப்பதாக இல்லை. தர்மத்தை நடத்துபவர்களைப்போல் வேஷம் போட்டு அதர்மம் செய்பவர்களை ஒழிக்கவேண்டும்' என்று கூறி துஷ்டர்களையும் கொல்ல விரும்பாமல் விலகிவந்த பலராமர் ஸாதுவான ரோமஹர்ஷணரைத் தன் கையி லிருந்த தர்ப்பை நுனியால் தட்டவே அவர் உயிரிழந்தார். முனிவர்கள் மனம் நொந்து 'பிரபுவே! உங்களால் அதர்மம் செய்யப்பட்டது. ஸத்திரயாகம் முடியும்வரையில் பிராம்மணர்களுக்குரிய ஆஸனமும் சரீரத்தில் களைப்பின்மையும் இவருக்கு எங்களால் கொடுக்கப்பட்டிருந்தது. நீர் செய்த பாவத்திற்குப் பிராயச்சித்தம் செய்யவேண்டும்' என்றார்கள். பலராமர் 'இனி ரோமஹர்ஷணருடைய புத்திரன் ஆயுளும் புத்திசக்தியும்

78. 10. चैद्यपते-नृप ।

अथ तैरभ्यनुज्ञातः कौशिकीमेत्य ब्राह्मणैः ।
स्नात्वा सरोवर-मगाद्यतः सरयुरास्रवत् ॥ ७९.९ ॥

अनुस्रोतेन सरयूं प्रयागमुपगम्य सः ।
स्नात्वा सन्तर्प्य देवादीन् जगाम पुलहाश्रमम् ॥ ७९.१० ॥

गोमतीं गण्डकीं स्नात्वा विपाशां शोण आप्लुतः ।
गयां गत्वा पितृनिष्ट्वा गङ्गासागर-सङ्गमे ॥ ७९.११ ॥

उपस्पृश्य महेन्द्राद्रौ रामं दृष्ट्वाऽभिवाद्य च ।
सप्तगोदावरीं वेणीं पंपां भीमरथीं ततः ॥ ७९.१२ ॥

உடையவராகவும் இவரைப்போல் புராணங்களைச் சொல்லுபவராகவும் ஆகட்டும்' என்று கூறினர். பின்பு பிராயச்சித்தமாக நியமத்துடன் பன்னிரண்டு மாதம் பாரத வர்ஷத்தைப் பிரதக்ஷிணம் செய்து தீர்த்த ஸ்நானம் செய்யவேண்டுமென்று முனிவர்கள் அவரிடம் கூறித் தங்களுக்குச் சத்துருவாக வந்து யாகத்தைக் கெடுக்கும் பல்வலன் என்னும் அசுரனை வதம் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். அடுத்த பருவத்தில் பல்வலன் அங்கே வந்து யாகசாலையில் ரத்தத்தையும் மலத்தையும் வர்ஷிக்கவே அவனை வதம் செய்தார்.)

79. 9. பிறகு அம்முனிவர்களால் அனுமதி கொடுக்கப்பெற்ற பலராமர் பிராம்மணர்களுடன் கௌசிகீ நதியை யடைந்து அவ்விடத்தில் ஸ்நாநம் செய்தபிறகு ஸரயூநதி எங்கிருந்து பெருகுகிறதோ அந்த நீர் நிலையை யடைந்தார்.

79. 10. அவர் ஸரயூநதியின் போக்கை யனுசரித்துப் பிரயாகை சென்று அங்கு ஸ்நானம் செய்து தேவர்கள் முதலியவர்களுக்குத் தர்ப்பணம் செய்து புலஹாசிரமத்தை யடைந்தார்.

79. 11-12. கோமதி நதியிலும் கண்டகியிலும், விபாசாநதியிலும் ஸ்நானம்செய்து சோண நதியிலும் ஸ்நானம்செய்து, கயாக்ஷேத்திரத்தை யடைந்து, பித்ருக்களைப் பூஜித்து கங்கை ஸமுத்திரத்தைச் சேருமிடத்தில் ஸ்நானம்செய்து மஹேந்திரமலையில் பரசுராமரைத் தரிசித்து நமஸ்கரித்து கோதாவரி ஏழாகப் பிரிந்து ஸமுத்திரத்தில் சேருமிடத்தையும் கிருஷ்ணவேணீ நதியையும் பம்பாஸரஸ்ஸையும் பீமரதீ நதியையும் அடைந்தார்.

स्कन्दं दृष्ट्वा ययौ रामः श्रीशैलं गिरिशालयम् ।
द्रविडेषु महापुण्यं दृष्ट्वाद्रिं वेंकटं प्रभुः ॥ ७९.१३ ॥

कामकोटिपुरीं कांचीं कावेरीं च सरिद्वराम् ।
श्रीरंगाख्यं महापुण्यं यत्र सन्निहितो हरिः ॥ ७९.१४ ॥

ऋषभाद्रिं हरेः क्षेत्रं दक्षिणां मथुरां तथा ।
सामुद्रं सेतु-मगमन्महापातकनाशनम् ॥ ७९.१५ ॥

तत्रायुत-मदाद्धेनू-र्ब्राह्मणेभ्यो हलायुधः ।
कृतमालां ताम्रपर्णीं मलयं च कुलाचलम् ॥ ७९.१६ ॥

तत्रागस्त्यं समासीनं नमस्कृत्याभिवाद्य च ।
योजितस्तेन चाशीर्भि-रनुज्ञातो गतोऽर्णवम् ॥ ७९.१७ ॥

---

79. 13-14. பின்பு ஸ்கந்தரை தரிசித்து பலராமர் ஸ்ரீசைலம் என்ற சிவக்ஷேத்திரத்தை யடைந்தார். அந்தப்பிரபு திரவிட தேசத்தில் மஹாபுண்ணிய க்ஷேத்திரமான வேங்கடமலையைத் தரிசித்துக்கொண்டு காமகோடீ என்று பிரசித்தமான காஞ்சீபுரியையும் காவேரீ நதியையும் எந்த இடத்தில் ஸ்ரீ மஹாவிஷ்ணு ஸாந்நித்திய மடைந்திருக்கிருரோ அந்த மகாபுண்ணியமான ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தையும் தரிசித்தார்.

79. 15. விஷ்ணுக்ஷேத்திரமாகிய ரிஷபாசலத்தையும் அவ்வாறே தென்மதுரையையும் தரிசித்துக்கொண்டு ஸமுத்திரத்தில் கட்டப்பட்ட ஸேதுவை அடைந்தார்.

79. 16-18. அவ்விடத்தில் பலராமர் பிராம்மணர்களுக்கு பதினுயிரம் பசுக்களை தானம் செய்தார். கிருதமாலா நதியையும் தாமிரபர்ணீ நதியையும் மலயமென்ற குல பர்வதத்தையு மடைந்து அங்கு வீற்றிருந்த அகஸ்தியருக்கு அபிவாதனத்துடன் நமஸ்கரித்து அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்று அவருடைய அனுமதியுடன் தெற்கு

---

79. 13. स्कन्दमिष्ट्वा । वेङ्कटं प्रभुम् ।

79. 14. कामकोष्णीं पुरीं ।

79. 15. समुद्रसेतु-मगमत् ।

दक्षिणं तत्र कन्याख्यां दुर्गां देवीं ददर्श सः।
ततः फाल्गुन-मासाद्य पंचाप्सरस-मुत्तमम्।
विष्णुः सन्निहितो यत्र स्नात्वाऽस्पर्शद्गवायुतम् ॥ ७९.१८ ॥

ततोऽभिव्रज्य भगवान् केरलांस्तु त्रिगर्तकान्।
गोकर्णाख्यं शिवक्षेत्रं सान्निध्यं यत्र धूर्जटेः ॥ ७९.१९ ॥

आर्यां द्वैपायनीं दृष्ट्वा शूर्पारक-मगाद्बलः।
तापीं पयोष्णीं निर्विन्ध्या-मुपस्पृश्याथ दण्डकम् ॥ ७९.२० ॥

प्रविश्य रेवा-मगम-द्यत्र माहिष्मती पुरी।
मनुतीर्थ-मुपस्पृश्य प्रभासं पुनरागमत् ॥ ७९.२१ ॥

श्रुत्वा द्विजैः कथ्यमानं कुरुपाण्डव-संयुगे।
सर्वराजन्य-निधनं भारं मेने हृतं भुवः ॥ ७९.२२ ॥

சமுத்திரத்தை யடைந்து அங்கே கன்யாகுமரி எனப் பெயர் பெற்ற துர்க்காதேவியைத் தரிசித்தார். அங்கிருந்து மகாவிஷ்ணு எங்கு பள்ளிகொண்டுள்ளாரோ அந்தப் பால்குனம் என்ற அனந்த சயனத்தை யடைந்து உத்தமமான பஞ்சாப்ஸரஸ் தீர்த்தத்தில் ஸ்னானம்செய்து பதினாயிரம் பசுக்களை தானம் செய்தார்.

79. 19-21. அங்கிருந்து பலராமர் கேரள தேசத்தையும் த்ரிகர்த்த தேசத்தையும் எங்கே பரமசிவனுடைய ஸாந்நித்திய மிருக்கிறதோ அந்த கோகர்ணம் என்று பெயர் பெற்ற சிவக்ஷேத்திரத்தையும் அடைந்து பிறகு தீவின் நடுவில் உறைகின்ற அம்பிகையை தரிசனம் செய்துகொண்டு சூர்ப்பாரகத்தை யடைந்தார். தாபீ நதியிலும் பயோஷ்ணீ நதியிலும் நிர்விந்தியா நதியிலும் ஸ்னானம் செய்து பிறகு தண்டகாரணியம் சென்று எந்த இடத்தில் மாஹிஷ்மதீ நகரமிருக்கிறதோ அங்கு ரேவா நதியை யடைந்தார் மனுதீர்த்தத்தில் ஸ்னானம் செய்து மீண்டும் பிரபாஸ தீர்த்தத்தை யடைந்தார்.

79. 22. கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் நடந்த யுத்தத்தில் எல்லா அரசர்களும் மாண்டுபோனதைப் பிராம்மணர்கள் சொல்லக் கேட்டு பூபாரம் குறைந்ததாக எண்ணினார்.

---

79. 19. केरलान् सोमगर्तकान्।

स भीमदुर्योधनयो-र्गदाभ्यां युध्यतो-र्मृधे ।
वारयिष्यन् विनशनं जगाम यदुनन्दनः ॥ ७९.२३ ॥

युधिष्ठिरस्तु तं दृष्ट्वा यमौ कृष्णार्जुनावपि।
अभिवाद्याभवंस्तूष्णीं किं विवक्षुरिहागतः ॥ ७९.२४ ॥

गदापाणी उभौ दृष्ट्वा संरब्धौ विजयैषिणौ ।
मण्डलानि विचित्राणि चरन्ताविदमब्रवीत् ॥ ७९.२५ ॥

युवां तुल्यबलौ वीरौ हे राजन् हे वृकोदर ।
एकं प्राणाधिकं मन्ये उतैकं शिक्षयाधिकम् ॥ ७९.२६ ॥

तस्मादेकतरस्येह युवयोः समवीर्ययोः ।
न लक्ष्यते जयोऽन्यो वा विरमत्वफलो रणः ॥ ७९.२७ ॥

---

79. 23. அப்போதும் பீமசேனனும் துரியோதனனும் கதாயுத்தம் செய்துகொண்டிருந்ததாகக் கேள்விப்பட்டு அவர்களைத் தடுப்பதற்காக பலராமர் குருக்ஷேத்திரம் சென்றார்.

79. 24. அவரைப் பார்த்து தர்மபுத்திரரும் நகுலஸஹதேவர்களும் ஸ்ரீ கிருஷ்ணனும் அர்ஜுனனும் நமஸ்காரம் செய்து என்ன சொல்ல விரும்பி இவர் இங்கு வந்தாரோ என்று பேசாமலிருந்தார்கள்.

79. 25. கையில் கதை ஏந்தியவர்களும் கோப வசப்பட்டவர்களும் ஒருவரையொருவர் ஜயிக்க விரும்புகின்றவர்களும் விசித்திரமான மண்டலங்களில் சுற்றிவருகிறவர்களுமான இருவரையும் பார்த்து பலராமர் பின் வருமாறு கூறினார்.

79. 26. 'துரியோதனா! பீமசேனா! நீங்களிருவரும் சமபலமுடைய வீரர்கள். ஒருவனைப் பிராணசக்தியில் பெரியவனென்றும் மற்றவனை (கதாயுதப்) பயிற்சியில் சிறந்தவனென்றும் நான் கருதுகிறேன்.

79. 27. 'ஆகையால் சம பலமுடைய உங்களிருவரில் ஒருவனுக்கு இந்த யுத்தத்தில் வெற்றியோ தோல்வியோ காணப்படவில்லை. ஆகையால் வீணான இந்த யுத்தம் முடிவடையட்டும்.'

---

79. 23. விநசனம்—குருக்ஷேத்ரம்.

न तद्वाक्यं जगृहतु-र्बद्धवैरौ नृपार्थवत्।
अनुस्मरन्तावन्योन्यं दुरुक्तं दुष्कृतानि च ॥ ७९.२८ ॥

दिष्टं तदनुमन्वानो रामो द्वारवतीं ययौ।
उग्रसेनादिभिः प्रीतै-र्ज्ञातिभिः समुपागतः ॥ ७९.२९ ॥

तं पुनर्नैमिषं प्राप्त-मृषयोऽयाजयन्मुदा।
क्रत्वंगं क्रतुभिः सर्वै-र्निवृत्ताखिल-विग्रहम् ॥ ७९.३० ॥

स्वपत्न्यावभृथ-स्नातो ज्ञाति-बन्धुसुहृद्वृतः।
रेजे स्वज्योत्स्नयेवेन्दुः सुवासाः सुष्ठ्वलंकृतः ॥ ७९.३२ ॥

---

79. 28. அரசே (பரீக்ஷித்தே)! ஒருவருக் கொருவர் வழங்கிக்கொண்ட வசை மொழிகளையும் தீச்செயல்களையும் நினைத்துக்கொண்டு அதனால் திடமான வைரத்தைக் கொண்டவர்களான அவர்கள் பலராமருடைய உண்மையான அந்த வார்த்தையை ஏற்றுக்கொள்ள வில்லை.

79. 29. பலராமன் அதை அவர்களுடைய தலையெழுத்து என்று எண்ணிக் கொண்டு துவாரகாபுரி சென்றார். அன்பு நிறைந்த உக்ரசேனமகாராஜா முதலிய பந்துக் களுடன் சேர்ந்தார்.

79. 30. போரெல்லாம் முடிந்து மனக்குழப்பம் நீங்கி பலராமர் மீண்டும் நைமிசா ரணியம் செல்லவே, யஜ்ஞமூர்த்தியாகிய அவருக்கு ரிஷிகள் ஸந்தோஷமாக எல்லா யாகங்களையும் செய்து வைத்தார்கள்.

79. 32. தமது பத்தினியுடன் அவபிருதஸ்நானம் செய்து நல்ல வஸ்திரங்களை யணிந்து நன்கலங்கரித்துக்கொண்டு உற்றுருறவினர் சூழத் தனது நிலவினால் பிரகாசிக் கும் சந்திரன்போல் விளங்கினார்.

79. 34. ஆதிசேஷனுடைய அவதாரமாகியவரும் ஆச்சரியமான செய்கைகளை

---

79. 30. க்ரத்வங்கம்—யஜ்ஞமூர்த்திம் ।

योऽनुसरेत रामस्य कर्माण्यद्भुत-कर्मणः ।
सायं प्रातरनन्तस्य विष्णोः स दयितो भवेत् ॥ ७९.३४ ॥

इति दशमस्कन्धे बलराम-तीर्थयात्रा-निरूपणं
नामैकोनाशीतितमोऽध्यायः ॥

யுடையவருமான பலராமருடைய செயல்களைக் காலை மாலைகளில் எவன் நினைக்கின்ருனே அவன் விஷ்ணுவின் கிருபைக் குரியவனுவான்.

இங்ஙனம் பத்தாவது ஸ்கந்தத்தில் பலராமர் தீர்த்தயாத்திரை
எனப் பெயர்பெற்ற எழுபத்தொன்பதாவது
அத்தியாயம் முற்றும்.

कुचेलोपाख्यानम्

राजोवाच—

भगवन् यानि चान्यानि मुकुन्दस्य महात्मनः।
वीर्याण्यनन्त-वीर्यस्य श्रोतुमिच्छामहे प्रभो ॥ ८०.१ ॥

सूत उवाच—

विष्णुरातेन संपृष्टो भगवान् बादरायणिः।
वासुदेवे भगवति निमग्नहृदयोऽब्रवीत् ॥ ८०.५ ॥

श्रीशुक उवाच—

कृष्णस्यासीत् सखा कश्चिद् ब्राह्मणो ब्रह्मवित्तमः।
विरक्त इन्द्रियार्थेषु प्रशान्तात्मा जितेन्द्रियः ॥ ८०.६ ॥

यदृच्छयोपपन्नेन वर्तमानो गृहाश्रमी।
तस्य भार्या कुचेलस्य क्षुत्क्षामा च तथा विधा ॥ ८०.७ ॥

குசேலோபாக்கியானம்

அரசன் கூறியது—

80. 1. பகவானே, பிரபுவே! அளவற்ற வீரியமுடையவரும் மஹாத்மாவுமான முகுந்தருடைய மகிமையை விளக்கும் செயல்கள் வேறு எவையுண்டோ அவற்றையும் கேட்க விரும்புகிறோம்.

ஸூதர் கூறியது—

80. 5. பரீக்ஷித்து மகாராஜனால் இவ்வாறு கேட்கப்பட்ட ஸர்வக்ஞான சுகதேவர் பகவான் வாசுதேவரிடம் ஆழ்ந்த மனத்தினராய்ப் பேசலானார்.

ஸ்ரீ சுகர் கூறியது—

80. 6-7. 'கிருஷ்ணனுக்கு (இளம் பிராய) தோழனாயிருந்த ஒரு பிராமணர் இருந்தார். அவர் பிரம்மஞானிகளில் சிரேஷ்டர், விஷயசுகங்களில் பற்றற்றவர், பரம சாந்தர், இந்திரியங்களை ஜயித்தவர், தானாகக் கிடைத்ததைக் கொண்டு கிருஹஸ்தாசிரம தருமத்தை நடத்திவந்தவர். (கந்தையையே எப்போதும் உடுத்ததால்) குசேலன் எனப் பெயர்பெற்ற அவருக்கு அவரைப் போலவே குணம் படைத்தவளும், (பசியால் வருந்தி இளைத்திருந்ததால்) க்ஷுத்க்ஷாமா எனப் பெயர்பெற்றவளுமான பத்தினி இருந்தாள்.

80. 7. **க்ஷுத்க்ஷாமா**—யஞ்கிஞ்சித் ஸம்பன்ன-மன்னம் தத்தஸ்மை பரிவிஷ்ய ஸ்வயம் க்ஷுதா ஜீர்ணா।

ஒ. மாசிலாக் குலத்து வந்தாள் வருவிருந்துவப்பவூட்டு
நேசமிக்குடையாள் கொண்க நினைப்பறிந்தொழுகு நீராள்
தேசுறு வாய்மையுள்ளாள் சினந்திடலென்று மில்லாள்
பேசுதிண் கற்பு வாய்ந்தாள் பெற்றதே கொண்டுவப்பாள்.

80. 7. कुचेला च। பா. பே.

पतिव्रता पतिं प्राह म्लायता वदनेन सा ।
दरिद्रा सीदमाना सा वेपमानाभिगम्य च ॥ ८०.८ ॥

ननु ब्रह्मन् भगवतः सखा साक्षाच्छ्रियः पतिः ।
ब्रह्मण्यश्च शरण्यश्च भगवान् सात्वतर्षभः ॥ ८०.९ ॥

तमुपैहि महाभाग साधूनां च परायणम् ।
दास्यति द्रविणं भूरि सीदते ते कुटुंबिने ॥ ८०.१० ॥

आस्तेऽधुना द्वारवत्यां भोजवृष्ण्यंधकेश्वरः ।
स्मरतः पादकमल-मात्मानमपि यच्छति ।
किं न्वर्थकामान् भजतो नात्यभीष्टान् जगद्गुरुः ॥ ८०.११ ॥

स एवं भार्यया विप्रो बहुशः प्रार्थितो मृदु ।
अयं हि परमो लाभ उत्तमश्लोकदर्शनम् ॥ ८०.१२ ॥

इति संचिन्त्य मनसा गमनाय मतिं दधे ।
अप्यस्त्युपायनं किंचिद् गृहे कल्याणि दीयताम् ॥ ८०.१३ ॥

---

80. 8. உத்தம பதிவிரதையாகியவளும் ஏழ்மையால், மிகவும் வருந்தியவளுமான அவள் வாடிய முகத்துடன் (ஒரு சமயம்) தன் கணவனிடம் சென்று நடுக்கத்துடன் பின்வருமாறு தெரிவித்தாள்.

80. 9. பிரம்மஸ்வரூபியே ! பிராம்மணர்களிடத்தில் பிரியமுள்ளவரும் புகலிடமாயிருப்பவரும் பக்தர்களின் நாயகரும் ஸாக்ஷாத் லக்ஷ்மீநாயகனுமான கிருஷ்ணபகவான் தங்களுக்குத் தோழ ரல்லவா ?

80. 10. மகாபாக்கியசாலியே ! ஸாதுக்களுக்குச் சிறந்த புகலிடமான அவரை நாடுவீராக. குடும்பியும் அதனால் கஷ்டப்படுகிறவருமான தங்களுக்கு (அவர்) ஏராளமான பொருளைக் கொடுப்பார்.

80. 11. போஜ யாதவ அந்தகர்களுக்கு நாயகனாக இப்போது அவர் துவாரகையில் வாசம் செய்கிறார். தம் பாதகமலங்களை நினைப்பவர்க்கு அவர் தம்மையும் கொடுப்பார். ஜகத் குருவான அவர் தம்மைச் சேவிப்பவர்க்கு அதிகம் விரும்பாவிடினும் அர்த்தத்தையும் காமத்தையும் கொடுப்பார் என்று சொல்லவேண்டுமா ?

80. 12-13. இவ்விதம் தன் மனைவியால் அந்த வேதியர் பலமுறை மெதுவாக வேண்டிக்கொள்ளப்பட்டு ' உத்தம சுலோகராகிய பகவானுடைய தரிசனம் கிடைப்பதென்ற இதுவே பெரிய லாபம் ' என்று மனதில் எண்ணிக்கொண்டு போக நிச்சயித்தார். ' கல்யாணி ! கையுறையாக ஏதாவது வீட்டில் இருந்தால் கொடு ' என்றார்.

---

80. 12. ஒ. பாற்கடலடுத்த மீனப்பால் விரும்பாது மற்ற
ஏற்குமா விரும்பினாற்போல் எம்பிரான் திருமுன் சார்ந்தும்
நாற்கதி கடக்குமின்பச் செல்வத்தை நண்ணிடாமற்
சேற்கருங் கண்ணாய்! துன்பச் செல்வமோ நண்ணுவேன்யான்.

---

80. 8. दारिद्र्यात्सीदमाना । 80. 9. साक्षात् श्रियः पतेः ।
80. 11. किमर्थकामान् ।

इति संचिन्त्य मनसा गमनाय मतिं दधे ।
अप्यस्त्युपायनं किंचिद् गृहे कल्याणि दीयताम् ॥ ८०.१३ ॥

याचित्वा चतुरो मुष्टीन् विप्रान् पृथुकतण्डुलान् ।
चैलखण्डेन तान् बद्ध्वा भर्त्रे प्रादा-दुपायनम् ॥ ८०.१४ ॥

स तानादाय विप्राग्र्यः प्रययौ द्वारकां किल ।
कृष्णसन्दर्शनं मह्यं कथं स्यादिति चिन्तयन् ॥ ८०.१५ ॥

त्रीणि गुल्मान्यतीयाय तिस्रः कक्षाश्च सद्विजः ।
विप्रोऽगम्यान्धक-वृष्णीनां गृहेष्वच्युत-धर्मिणाम् ॥ ८०.१६ ॥

गृहं द्व्यष्ट-सहस्राणां महिषीणां हरे-र्द्विजः ।
विवेशैकतमं श्रीमद् ब्रह्मानन्दं गतो यथा ॥ ८०.१७ ॥

---

80. 14. நாலுபிடி அவலை நாலு பிராம்மணர்களிடம் யாசித்து அதை ஒரு சேலைத் துண்டில் கட்டிக் கையுறையாகக் கணவனிடம் கொடுத்தாள்.

80. 15. அந்தப் பிராம்மணோத்தமன் அதை எடுத்துக்கொண்டு 'கிருஷ்ண தர்சனம் எனக்கு எவ்வாறு கிடைக்கும்?' என்று சிந்தித்துக்கொண்டே துவாரகை போய்ச் சேர்ந்தார்.

80. 16-17. அங்கே பிராம்மணர்களுடன் சேர்ந்து அவ் வேதியர் சேனைகளிருக்கும் மூன்று ஸ்தானங்களையும் மூன்று வீதிகளையும் தாண்டிச் சென்றார். அணுகுதற்கரிய அந்தகர் விருஷ்ணிகள் இவர்களுடைய வீடுகளின் நடுவில் பகவானுக்குப் பணிவிடை செய்வதையே தர்மமாகக்கொண்ட பதினாறாயிரம் கிருஷ்ணபத்தினிகளின் வீடுகளுள் மிகச் சிறப்பாக விளங்கிய ஒன்றில் பிரவேசித்தார். அப்போது பிரம்மானந்தத்தை எய்தியவர்போலானார்.

---

80. 16. **குல்மானி**—ரக்ஷார்த்தம் ஸைன்யஸ்தானானி ।
ஸத்விஜ:—**த்**விஜைஸ்ஸஹித: ॥ **அகம்யா:—துர்க்கமா:** ।

---

80. 16. **कक्ष्याश्च ।**

तं विलोक्याच्युतो दूरात् प्रियापर्यंक-मास्थितः ।
सहसोत्थाय चाभ्येत्य दोर्भ्यां पर्यग्रहीन्मुदा ॥ ८०.१८ ॥

सख्युः प्रियस्य विप्रर्षेरङ्गसङ्गातिनिर्वृतः ।
प्रीतो व्यमुंच-दब्बिन्दून् नेत्राभ्यां पुष्करेक्षणः ॥ ८०.१९ ॥

अथोपवेश्य पर्यंके स्वयं सख्युः समर्हणम् ।
उपहृत्यावनिज्यास्य पादौ पादावनेजनीः ॥ ८०.२० ॥

अग्रहीच्छिरसा राजन् भगवां-ल्लोकपावनः ।
व्यलिंपद् दिव्यगंधेन चन्दनागुरु-कुंकुमैः ॥ ८०.२१ ॥

कुचैलं मलिनं क्षामं द्विजं धमनिसन्ततम् ।
देवी पर्यचरत् साक्षा-च्चामरव्यजनेन वै ॥ ८०.२३ ॥

---

80. 18. அவரை தூரத்திலிருந்தே பார்த்ததும் பிரியையான ருக்மிணியின் கட்டிலில் வீற்றிருந்த பகவான் விரைவில் எழுந்து அவரை எதிர்கொண்டுவந்து மகிழ்ச்சி பொங்க இருகைகளாலும் தழுவிக்கொண்டார்.

80. 19. அருமைத் தோழராகிய அந்த விப்ரரிஷியின் ஆலிங்கனத்தால் ஆனந்தம் பொங்கிய தாமரைக் கண்ணராகிய பகவான் அன்பினால் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீரைப் பெருகவிட்டார்.

80. 20-21. அரசே! லோகபாவனரான பகவான் தானே தன் கட்டிலில் அவரை உட்காரச்செய்து அத்தோழருக்குப் பூஜையைச்செய்து அவருடைய கால்களை அலம்பிப் பாததீர்த்தத்தைச் சிரசில் தரித்துக்கொண்டார். சந்தனம் அகில் குங்குமம் இவைகளுடன் கூடின திவ்ய கந்தத்தை அவருக்குப் பூசினார்.

80. 23. அழுக்குப்படிந்த கந்தையுடுத்தவரும் நரம்புகளெல்லாம் தெரியும்படி இளைத்தவருமான அந்தப் பிராமணனை ருக்மிணீதேவி சாமரமும் விசிறியும் கொண்டு தானே நேரில் உபசரித்தாள்.

---

80. 18. ஒ. காண்டலு முவகை பூத்துக் கால் விசைகொடு நடந்தான்
ஆண்டகையவனுங் கண்ணுற் றணையுடைத்தெழு நீத்தம்போல்
நீண்ட பூம்பள்ளி நீத்து நிலவு பேரன்பு பொங்கப்
பூண்ட மாதவன் முன் சென்று பொன்னடி வணங்கினானால்.

திலக மண்டோய வையன் திருவடி வணங்கிப் பின்னர்
நிலவு மெய்ப்புளகம் போர்த்து நிரம்புறத் தழுவிக் கொண்டான்
குலமறைத் தலைவனென்றுங் கூர்ந்தமெய் நட்பனென்றும்
மலர் தலை யுலகங்கூறும் வாய்மை காத்தருளினானே.

---

80. 23. पर्यचरन्नैष्मी ।

अन्तःपुरजनो दृष्ट्वा कृष्णेनामलकीर्तिना ।
विस्मितोऽभूदतिप्रीत्या अवधूतं सभाजितम् ॥ ८०.२४ ॥

किमनेन कृतं पुण्य-मवधूतेन भिक्षुणा ।
श्रिया हीनेन लोकेऽस्मिन् गर्हितेनाधमेन च ॥ ८०.२५ ॥

योऽसौ त्रिलोकगुरुणा श्रीनिवासेन संभृतः ।
पर्यंकस्थां श्रियं हित्वा परिष्वक्तोऽग्रजो यथा ॥ ८०.२६ ॥

कथयांचक्रतु-र्गाथाः पूर्वा गुरुकुले सतोः ।
आत्मनो ललिता राजन् करौ गृह्य परस्परम् ॥ ८०.२७ ॥

श्रीभगवानुवाच—

अपि ब्रह्मन् गुरुकुलाद् भवता लब्धदक्षिणात् ।
समावृत्तेन धर्मज्ञ भार्योढा सदृशी न वा ॥ ८०.२८ ॥

---

80. 24. மாசற்ற புகழ்வாய்ந்த கிருஷ்ணனால் மிகவும் பரிவுடன் உபசரிக்கப்பட்ட அந்த அடையாளங் கண்டுகொள்ள முடியாத பிராம்மணரைப் பார்த்து அந்தப்புர ஸ்திரீகள் மிகவும் வியப்படைந்தனர்.

80. 25. 'அடையாளங் கண்டுகொள்ள முடியாத பிச்சைக்காரப் பிராம்மணரும் பொருளின்மையால் இவ்வுலகில் இகழ்ச்சியுற்றவரும் தாழ்ந்த நிலையிலுள்ளவருமான இவரால் என்ன புண்ணியம்தான் செய்யப்பட்டதோ!

80. 26. 'மூன்று உலகங்களுக்கும் குருவான லக்ஷ்மீகாந்தனால் வெகுமதிக்கப் பட்டு கட்டிலில் உடனிருந்த லக்ஷ்மியையும் விட்டுத் தமயன்போல் தழுவிக்கொள்ளப் பெற்றாரன்றோ!'

80. 27. அரசே! (பின்பு) குருகுலத்தில் வசித்தகாலத்தில் நிகழ்ந்த மனோஹர மான தங்களுடைய பழைய விருத்தாந்தங்களைக் கைகளைப் பிடித்துக்கொண்டு ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள்.

ஸ்ரீ பகவான் கூறியது—

80. 28. தர்மங்களை யறிந்த பிரம்ம ஸ்வரூபியே! குருதக்ஷிணை கொடுத்த பின் குருகுலத்திலிருந்து ஸமாவர்த்தனம் செய்துகொண்டு திரும்பிய உம்மால் இசைவான மனைவி ஏற்றுக்கொள்ளப்பட்டாளா, இல்லையா? (ஏற்றுக்கொண்டிருக்கலாம் என நினைக்கிறேன்).

---

80. 25. गर्हितेनाधनेन च ।

80. 27. आत्मनोर्ललितौ ।

प्रायो गृहेषु ते चित्त-मकामविहृतं तथा ।
नैवातिप्रीयसे विद्वन् धनेषु विदितं हि मे ॥ ८०.२९ ॥

केचित् कुर्वन्ति कर्माणि कामैरहृत-चेतसः ।
त्यजन्तः प्रकृती-र्दैवी-र्यथाहं लोकसंग्रहम् ॥ ८०.३० ॥

कच्चिद् गुरुकुले वासं ब्रह्मन् स्मरसि नौ यतः ।
द्विजो विज्ञाय विज्ञेयं तमसः पारमश्नुते ॥ ८०.३१ ॥

स वै सत्कर्मणां साक्षाद् द्विजाते-रिह संभवः ।
आद्योंग यत्राश्रमिणां यथाहं ज्ञानदो गुरुः ॥ ८०.३२ ॥

नाहमिज्या-प्रजातिभ्यां तपसोपशमेन वा ।
तुष्येयं सर्वभूतात्मा गुरुशुश्रूषया यथा ॥ ८०.३४ ॥

---

80. 29. (என்ருலும்) அறிவிற் சிறந்தவரே! உமது சித்தம் காமவசப்படாதது என்றும் அதனுல் உமக்கு எப்போதுமே இல்லறவாழ்விலும் பொருளீட்டுதலிலும் அதிகமாகப் பிரியம் இருந்ததில்லை என்பதும் எனக்குத் தெரிந்ததே.

80. 30. ஆசையால் அழியாத மனமுடைய சிலர் மாயா சம்பந்தமான விஷய வாசனைகளை யொழித்து நான் உலகின் நன்மைக்காக எவ்விதம் செய்கிறேனே அவ்விதம் காரியங்களைச் செய்கிருர்கள். (அப்படிப்பட்டவர் நீர்.)

80. 31. பிரம்மஸ்வரூபியே! துவிஜர்கள் எந்த இடத்திலிருந்து மோக்ஷ இன்பத்தை அனுபவிக்கின்ருர்களோ அந்த குருகுலத்தில் நாமிருவரும் வசித்ததை ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருக்கிறீரா?

80. 32. அன்பரே! இவ்வுலகில் எவரிடத்தில் பிறப்பு ஏற்படுகிறதோ அவரே முதல் குரு. இருபிறப்படைந்தவனுக்கு அத்திபயனம் முதலிய நற்காரியங்கள் எவரிடத்திலிருந்து பிறக்கின்றனவோ அவர் இரண்டாவது குரு. எல்லா ஆசிரமத்தில் உள்ளவர்களுக்கும் ஞானத்தை உபதேசிப்பவர் எவரோ அவர் என்னைப்போலவே போற்றத் தகுந்தவர்; அவர் ஸாக்ஷாத் நானே.

80. 34. எல்லா உயிர்களுக்கும் அந்தராத்மாவாகிய நான் குருவிற்குச் செய்யும் பணிவிடையால் ஸந்தோஷிப்பதுபோல் (கிருஹஸ்த தர்மமாகிய) யாகத்தாலோ, சிறந்த பிறப்பைத் தரும் பிரம்மசரியத்தாலோ, (வானப்ரஸ்த தர்மமாகிய) தவத்தாலோ, (ஸந்நியாஸ தர்மமாகிய) சாந்தியாலோ சந்தோஷமடைவதில்லை.

---

80. 30. **தைவீ** :—ஈச்வரமாயா விரசிதா: ப்ரக்ருதீ: விஷய வாஸனா: ।

ஓ. பார்த்தா! செய்ய வேண்டிய கருமம் எனக்கு மூவுலகிலும் ஒரு சிறிதும் இல்லை; அடையப்படாததாயும் இனி அடைதற் குரியதாயும் ஒன்றும் இல்லை; எனினும் நான் கர்மத்தில் முயன்று கொண்டே இருக்கிறேன்.' —கீ 3. 22

80. 31. ஓ. ஜன்மனா ப்ராஹ்மணோ ஜ்ஞேய: ஸம்ஸ்காரைர் - த்விஜ உச்யதே! வித்யயா யாதி விப்ரத்வம் ச்ரோத்ரியஸ்-த்ரிபிரேவ ச ॥

80. 32. 'ஞானி நானே என்பது என் மதம்.'—7. 18

अपि नः स्मर्यते ब्रह्मन् वृत्तं निवसतां गुरौ ।
गुरुदारै-श्चोदिताना-मिन्धनानयने क्वचित्   ॥ ८०.३५ ॥

प्रविष्टानां महारण्य-मपर्तौ सुमहद् द्विज ।
वातवर्ष-मभूत्तीव्रं निष्ठुराः स्तनयित्नवः   ॥ ८०.३६ ॥

सूर्यश्चास्तं गतस्तावत् तमसा चावृता दिशः ।
निम्नं कूलं जलमयं न प्राज्ञायत किंचन   ॥ ८०.३७ ॥

वयं भृशं तत्र महानिलांबुभि-र्निहन्यमाना मुहुरंबुसंप्लवे ।
दिशोऽविदन्तोऽथ परस्परं वने गृहीतहस्ताः परिबभ्रिमातुराः
॥ ८०.३८ ॥

एतद्विदित्वा उदिते रवौ सान्दीपनि-र्गुरुः ।
अन्वेषमाणो नः शिष्यानाचार्योऽपश्यदातुरान्   ॥ ८०.३९ ॥

---

80. 35-36. பிரம்மஸ்வரூபியே! குருவுடன் வசிக்கும்போது நம்மிடை நிகழ்ந்த ஒரு வரலாறு ஞாபகமிருக்கிறதா? பிராம்மணா! ஒரு சமயம் விறகு கொண்டுவரும்படி குருபத்னியால் ஏவப்பட்டுப் பெரியகாட்டினுள் நாம் சென்றிருந்தபோது அகாலமழையும் காற்றும் கடுமையாக ஆரம்பித்துப் பயங்கரமான இடிகளும் உண்டாயினவே.

80. 37. அதற்குள் சூரியனும் அஸ்தமித்தது. திசைகளும் இருளால் கவரப் பட்டன. பள்ளம் மேடு தெரியாமல் எங்கும் ஜலமயமாகி ஒன்றுமே தெரியவில்லை.

80. 38. வெள்ளம் பெருகிய அவ்வனத்தில் காற்றிலும் மழையிலும் மிகவும் கஷ்டப்பட்ட நாம் திக்குத்திசை யறியாமல் துக்கம் மேலிட்டு ஒருவருக் கொருவர் கைகளைப் பிடித்துக்கொண்டு சுற்றித் திரிந்தோமே.

80. 39. அதையறிந்த நமது ஆசாரியரும் குருவுமான ஸாந்தீபனிமகரிஷி சூரியன் உதித்ததும் தேடிக்கொண்டுவந்து கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த சிஷ்யர்களாகிய நம்மைக் கண்டார்.

---

80. 35. ஓ. இருவேமு முன்னுளி லிலங்கு ஸாந்தீபமுனி
வருகாமபடி வணங்கி மாமறை கற்றுணர்ந்திடு நாட்
பெரு கார்வத்தொடும் பேசிக்கொண்டிருந்த பேச்செல்லாம்
திருகாராவுளத்து நினைத்திருக்கின்றாயோ சிறப்ப.

80. 37. கூலம்—உன்னதம் ஸ்தானம்।

80, 35. अपि न स्मर्यते ।

अहो हे पुत्रका यूय-मस्मदर्थेऽतिदुःखिताः ।
तुष्टोऽहं भो द्विजश्रेष्ठाः सत्याः सन्तु मनोरथाः ।
छन्दांस्ययातयामानि भवन्त्विह परत्र च ॥ ८०.४२ ॥

इत्थं विधान्यनेकानि वसतां गुरुवेश्मसु ।
गुरोरनुग्रहेणैव पुमान् पूर्णः प्रशान्तये ॥ ८०.४३ ॥

ब्राह्मण उवाच—

किमस्माभि-रनिर्वृत्तं देवदेव जगद्गुरो ।
भवता सत्यकामेन येषां वासो गुरावभूत् ॥ ८०.४४ ॥

श्रीशुक उवाच—

स इत्थं द्विजमुख्येन सह संकथयन् हरिः ।
सर्वभूतमनोऽभिज्ञः स्मयमान उवाच तम् ॥ ८१.१ ॥

---

80. 42. "அந்தோ! குழந்தைகளே! எனக்காக நீங்கள் மிகவும் கஷ்டப்பட்டு விட்டீர்கள். துவிஜ சிரேஷ்டர்களே! (உங்களை சிஷ்யர்களாக அடைந்த) நான் மகிழ்ச்சி யடைகிறேன். உங்கள் மனதிலுள்ள சிறந்த எண்ணங்கள் பூர்த்தியாகட்டும். (நீங்கள் கற்ற) வேதங்கள் இகத்திலும் பரத்திலும் பழுதுபடாமலிருக்கட்டும்" (என்று அவர் கூறியது ஞாபகமிருக்கிறதா?)

80. 43. குருகுலத்தில் வசித்தபோது நிகழ்ந்தவை இதுபோன்ற பலநிகழ்ச்சிகள். குருவின் அனுக்கிரகத்தால்தான் புருஷன் பரிபூர்ணனுகவும் பரம சாந்தியை அடையக் கூடியவனுகவும் ஆகிறுன்.

பிராம்மணர் கூறியது—

80. 44. தேவதேவா! ஜகத்குருவே! ஸத்ய ஸங்கல்பரான உங்களுடன் குரு குல வாசம்செய்த எங்களால் அடையப்படாதது என்ன இருக்கிறது?

ஸ்ரீ சுகர் கூறியது—

81. 1. பிராம்மணேத்தமராகிய குசேலருடன் இவ்வாறு பேசிக்கொண்டிருந்து விட்டு எல்லாப் பிராணிகளுடைய மனதையும் அறியும் பகவான் புன்சிரிப்புடன் அந்தப் பிராம்மணரைப் பார்த்துப் பின்வருமாறு கூறிஞர்.

---

80. 43. पूर्णः प्रजायते ।

श्रीभगवानुवाच—

किमुपायन-मानीतं ब्रह्मन् मे भवता गृहात्।
अण्वप्युपाहृतं भक्तैः प्रेम्णा भूर्येव मे भवेत्।
भूर्यप्यभक्तोपहृतं न मे तोषाय कल्पते ॥ ८१.३ ॥

पत्रं पुष्पं फलं तोयं यो मे भक्त्या प्रयच्छति।
तदहं भक्त्युपहृत-मश्नामि प्रयतात्मनः ॥ ८१.४ ॥

इत्युक्तोऽपि द्विजस्तस्मै व्रीडितः पतये श्रियः।
पृथुकप्रसृतिं राजन् न प्रायच्छदवाङ्मुखः ॥ ८१.५ ॥

सर्वभूतात्मदृक् साक्षात् तस्यागमन-कारणम्।
विज्ञायाचिन्तयन्नायं श्रीकामो माभजत् पुरा ॥ ८१.६ ॥

पत्न्याः पतिव्रतायास्तु सखा प्रियचिकीर्षया।
प्राप्तो मामस्य दास्यामि संपदोऽमर्त्य-दुर्लभाः ॥ ८१.७ ॥

ஸ்ரீ பகவான் கூறியது—

81. 3. 'பிராம்மணரே! வீட்டிலிருந்து உம்மால் எனக்கு என்ன கையுறை கொண்டு வரப்பட்டது? பக்தர்களால் அன்புடன் கொண்டுவரப்பட்டது அணுவாக இருந்தாலும் அது எனக்கு மிகவும் பெரிதாகவே ஆகும். பக்தி யில்லாதவர்களால் கொண்டுவரப் பட்டது மிகப் பெரிதாக இருந்தாலும் அது எனக்கு ஸந்தோஷத்தைத் தருவதாக ஆகாது.

81. 4. 'இலையோ பூவோ பழமோ தீர்த்தமோ எவன் எனக்கு பக்தியுடன் அர்ப்பித்தாலும். தூய்மையான அந்தக்கரணமுடைய அவனால் பக்தியுடன் ஸமர்ப்பிக்கப்பட்ட அப்பொருளை நான் புசிக்கிறேன்.'

81. 5. அரசே! பிராம்மணன் இவ்வாறு கூறப்பட்ட பின்னும் வெட்கத்தால் தலை குனிந்து ஸ்ரீகாந்தரான அவருக்கு அவல் முடியைக் கொடுக்கவில்லை.

81. 6-7. எல்லாப் பிராணிகளுடைய உள்ளத்தையும் உணர்ந்த ஸாக்ஷாத் ஸ்ரீ கிருஷ்ணபகவான் அவருடைய வரவின் காரணத்தை யறிந்து 'இவர் பொருளை விரும்பி இதற்குமுன் நம்மை நாடவில்லை. ஆனால் இந்த நண்பர் பதிவிரதையான பத்தினிக்குப் பிரியத்தைச் செய்ய விரும்பி இப்போது என்னிடம் வந்திருக்கிறார். தேவர்களும் அடைதற்கரிய ஐசுவரியத்தை இவருக்குக் கொடுக்கிறேன்' என்று எண்ணினார்

---

81. 3. ஒ. பந்தனை யகன்ற மேலோய் பற்பல நாட்குப் பின்பு
வந்தனையெனக் கென்கொண்டு வந்தனை யதனையின்னே
தந்தனை யாயினன்று தருசுவைப் பக்கணத் தென்
சிந்தனை நின்றதென்றான் றெரிவரும் வஞ்சக்கள்வன்.

इत्थं विचिन्त्य वसनाच्चीरबद्धान्द्विजन्मनः ।
स्वयं जहार किमिदमिति पृथुकतण्डुलान् ॥ ८१.८ ॥

नन्वेत-दुपनीतं मे परमप्रीणनं सखे ।
तर्पयन्त्यंग मां विश्वमेते पृथुकतण्डुलाः ॥ ८१.९ ॥

इति मुष्टिं सकृज्जग्ध्वा द्वितीयां जग्धुमाददे ।
तावच्छ्री-र्जगृहे हस्तं सत्वरा परमेष्ठिनः ॥ ८१.१० ॥

एतावताऽलं विश्वात्मन् सर्वसंपत्समृद्धये ।
अस्मिँल्लोकेऽथवामुष्मिन् पुंसस्त्वत्तोषकारणम् ॥ ८१.११ ॥

ब्राह्मण-स्तां तु रजनी-मुषित्वाच्युतमन्दिरे ।
भुक्त्वा पीत्वा सुखं मेने आत्मानं स्वर्गतं यथा ॥ ८१.१२ ॥

---

81. 8. இவ்விதம் எண்ணிக் குசேலருடைய வஸ்திரத்திலிருந்து கந்தையில் முடிந்த அவலை 'இது என்ன ?' என்று தாமுகவே எடுத்துக் கொண்டார்.

81. 9. 'தோழரே! எனக்கு மிகவும் பிரியமான இது கொண்டுவரப்பட்டிருக் கிறதே! அண்ணு! இந்த அவல் விசுவரூபியான எனக்கு மிகுந்த திருப்தி யளிக் கின்றது.'

81. 10. என்று இவ்வாறு சொல்லி ஒரு பிடி அவலைச் சாப்பிட்டு இரண்டாவது பிடியைச் சாப்பிட எடுத்தார். அதற்குள் ருக்மிணிதேவி பரபரப்புடன் பகவானுடைய கையைப் பிடித்தாள்.

81. 11. "அனைத்துயிர்க்கும் உயிராகியவரே! ஒருமனிதனுக்கு இவ்வுலகிலோ மேலுலகிலோ ஸகல ஸம்பத்தையும் பரிபூர்ணமா யடைவதற்கு உங்கள் ஸந்தோஷத் திற்குக் காரணமான இந்த ஒரு பிடியே போதும்."—('இன்னொருபிடியும் சாப்பிட்டால் நானும் அடிமையாக வேண்டும்' என்று கூறினுள்.)

81. 12. அந்தப் பிராம்மணன் நன்ருகச் சாப்பிட்டு நல்ல பானங்களை அருந்தி அன்றிரவைக் கிருஷ்ணனுடைய அரண்மனையில் கழித்துத் தான் ஸ்வர்க்கத்தை யடைந்துவிட்டதாகக் கருதினுர்.

---

81. 10. ஒ. 'உறியளை வாரியுண்டோ ரொருபிடியவல் தின்றுனே.' அவன் மகிழ்ச்சியால் உலகெல்லாம் மகிழும்.

---

81. 7. पतिव्रताया मे ।

श्वोभूते विश्वभावेन स्वसुखेनाभिवन्दितः ।
जगाम स्वालयं तात पथ्यनुव्रज्य नन्दितः　॥ ८१.१३ ॥

स चालब्ध्वा धनं कृष्णान्न तु याचितवान् स्वयम् ।
स्वगृहान् व्रीडितोऽगच्छन्महद्दर्शन-निर्वृतः　॥ ८१.१४ ॥

अहो ब्रह्मण्यदेवस्य दृष्टा ब्रह्मण्यता मया ।
यद् दरिद्रतमो लक्ष्मी-माश्लिष्टो बिभ्रतोरसि　॥ ८१.१५ ॥

काहं दरिद्रः पापीयान् क्व कृष्णः श्रीनिकेतनः ।
ब्रह्मबन्धुरिति स्माहं बाहुभ्यां परिरंभितः　॥ ८१.१६ ॥

निवासितः प्रियाजुष्टे पर्यंके भ्रातरो यथा ।
महिष्या वीजितः श्रान्तो वालव्यजन-हस्तया　॥ ८१.१७ ॥

---

81. 13. ஐயனே! பொழுதுவிடிந்ததும் ஆனந்த மூர்த்தியான கிருஷ்ணனால் வந்தனம் செய்யப் பெற்றும் கொண்டாடப் பெற்றும் பின் தொடர்ந்து வழியனுப்பப் பெற்றும் (குசேலர்) தனது வீட்டை நோக்கிச் சென்றார்.

81. 14. (பணத்தாசை கொண்டு பகவானிடம் தான் வந்ததற்கு) வெட்கமடைந்த அவர் பகவானிடமிருந்து தனத்தைப் பெறாதபோது தாமாக ஒன்றும் யாசிக்கவில்லை. மகாபுருஷனுடைய தரிசனம் கிடைத்ததே என்ற பூரிப்புடன் தன் வீடு சென்றார்.

81. 15. (போகும்போது குசேலர் தமக்குள்ளேயே பின் வருமாறு சிந்தித்தார்.) 'பிராம்மணர்களைத் தெய்வமாகக் கொண்டாடுகிற கிருஷ்ணனுடைய பிராம்மண விசுவாஸம் என்னால் நேரில் கண்டனுபவிக்கப் பட்டது. என்ன ஆச்சரியம்! ஏழையிலும் ஏழையாகிய நான் மகாலக்ஷ்மியை மார்பில் தரிக்கின்ற பகவானால் ஆலிங்கனம் செய்துகொள்ளப்பட்டேனல்லவா?

81. 16. 'மகாபாபஞ்செய்து தரித்திரனாய்ப் பிறந்த நான் எங்கே? லக்ஷ்மீகாந்தனாகிய கிருஷ்ணன் எங்கே? தாழ்ந்தவனாயினும் பிராம்மணன் என்ற ஒரு காரணத்தாலேயே நான் இரு கைகளாலும் தழுவிக்கொள்ளப்பட்டேன்.

81. 17. 'வழி நடந்து களைத்திருந்த நான், பிரியமான ருக்மிணியுடன் தான் உட்கார்ந்திருந்த கட்டிலில் பகவானால் கூடப்பிறந்தவர்களைப்போல் உட்கார்த்தி வைக்கப்பட்டு வெண்சாமர மேந்திய பட்ட மஹிஷியால் வீசவும் பெற்றேன்.

---

81. 14. **ஸ்வஸுகேன**—ஸ்வானந்த பரிபூர்ணேன।

81. 13. **परिष्वङ्गातिनन्दितः ।**

81. 14. **धनं सख्युर्न ।**

शुश्रूषया परमया पादसंवाहनादिभिः ।
पूजितो देवदेवेन विप्रदेवेन देववत् ॥ ८१.१८ ॥

स्वर्गापवर्गयोः पुंसां रसायां भुवि संपदाम् ।
सर्वासामपि सिद्धीनां मूलं तच्चरणार्चनम् ॥ ८१.१९ ॥

अधनोऽयं धनं प्राप्य माद्यन्नुच्चै-र्न मां स्मरेत् ।
इति कारुणिको नूनं धनं मेऽभूरि नाददात् ॥ ८१.२० ॥

इति संचिन्तयन्नन्तः प्राप्तो निजगृहान्तिकम् ।
सूर्यानलेन्दु-संकाशै-र्विमानैः सर्वतो वृतम् ॥ ८१.२१ ॥

किमिदं कस्य वा स्थानं कथं तदिद-मित्यभूत् ।
एवं मीमांसमानं तं नरा नार्योऽमरप्रभाः ।
प्रत्यगृह्णन् महाभागं गीतवाद्येन भूयसा ॥ ८१.२४ ॥

---

81. 18. 'பிராம்மணர்களைத் தெய்வமாகக் கொண்டாடும் தேவதேவனால் கால் பிடித்தல் முதலிய ஒப்பற்ற பணிவிடையால் தேவர்களைப்போல் பூஜிக்கவும் பெற்றேன்.

81. 19. 'மனிதர்களுக்குப் பூலோகத்திலோ பாதாளத்திலோ ஸம்பத்தை யடைவதற்கும் ஸகல ஸித்திகளையும் அடைவதற்கும் ஸ்வர்க்கத்தையும் மோக்ஷத்தையும் அடைவதற்கும் மூலகாரணம் பகவானுடைய சரண பூஜை.

81. 20. "சிறிதும் பொருளில்லாத இவன் பொருளை யடைந்தால் கொழுப்பு மிக்கவனாகி என்னை நினைக்கமாட்டான்" என்று எண்ணியே காருணிகனான பகவான் எனக்குக் குறைந்த அளவில் கூடப் பொருளைக் கொடுக்கவில்லை என்பது நிச்சயம்.'

81. 21. இவ்விதமாக அதைப்பற்றி மனதிற்குள் சிந்தித்துக்கொண்டே தன் வீட்டருகில் வந்தார். ஆனால் அவ்விடம் சூரியனும் சந்திரனும் அக்கினியும்போல் ஒளி வீசும் விமானங்களையுடைய மாளிகைகளால் நாற்புறமும் சூழப்பட்டிருந்தது.

81. 24. (அதைக் கண்டு வியப்படைந்து) 'இது என்ன? யாருடைய வீடு? அது எப்படி இப்படி மாறிற்று?' என்று இவ்வாறு யோசித்துக் கொண் டிருக்கையில் மகா பாக்கியசாலியான அவரை தேவர்கள்போல் பிரகாசிக்கும் புருஷர்களும் ஸ்திரீகளும் நிறைந்த கானத்துடனும் வாத்தியகோஷத்துடனும் எதிர்கொண் டழைத்தனர்.

पति-मागत-माकर्ण्य पत्न्युद्धर्षातिसंभ्रमा।
निश्चक्राम गृहात्तूर्णं रूपिणी श्रीरिवालयात् ॥ ८१.२५ ॥

पतिव्रता पतिं दृष्ट्वा प्रेमोत्कण्ठाश्रुलोचना।
मीलिताक्ष्यनमद् बुद्ध्या मनसा परिषस्वजे ॥ ८१.२६ ॥

विलोक्य ब्राह्मणस्तत्र समृद्धीः सर्वसंपदाम्।
तर्कयामास निर्व्यग्रः स्वसमृद्धि-महैतुकीम् ॥ ८१.३२ ॥

नन्वब्रुवाणो दिशते समक्षं याचिष्णवे भूर्यपि भूरिभोगः।
पर्जन्यवत्तत् स्वयमीक्षमाणो दाशार्हकाणा-मृषभः सखा मे ॥ ८१.३४ ॥

किंचित् करोत्युर्वपि यत् स्वदत्तं सुहृत्कृतं फल्ग्वपि भूरिकारी।
मयोपनीतं पृथुकैक-मुष्टिं प्रत्यग्रहीत् प्रीतियुतो महात्मा ॥ ८१.३५

---

81. 25. குசேலருடைய பத்னி கணவன் வந்ததைக் கேள்விப் பட்டதும் மகிழ்ச்சி பொங்க மிகுந்த பரபரப்புடன் தனது ஆலயத்திலிருந்து உருக்கொண்டு வந்த ஸ்ரீ தேவியைப்போல் விரைவில் வீட்டை விட்டு வெளியில் வந்தாள்.

81. 26. பதிவிரதையான அவள் பர்த்தாவைப் பார்த்து மிகுந்த அன்பினுலும் ஆசையினுலும் ஆனந்தக்கண்ணீர் சொரிந்து கண்களை மூடிக்கொண்டு புத்தியால் நமஸ்கரித்து மனதால் ஆலிங்கனம் செய்து கொண்டாள்.

81. 32. (அவளுடன்கூட வீட்டினுள் நுழைந்த) குசேலர் அங்கே ஸகல ஸம்பத்துக்களும் நிறைந்திருந்தைப் பார்த்துக் காரணமில்லாமல் தமக்கேற்பட்ட ஸம்பத்தைக் குறித்துச் சாவதானமாக ஆலோசித்தார்.

81. 34. '(உலகத்தின் தாபத்தைப் பார்த்து இரவில் மக்கள் உறங்கும்போது தானுகவே மழையைப் பொழியும்) மேகத்தைப்போல் அளவற்ற ஐசுவரியம் படைத்தவரும் யாதவகுல சிரேஷ்டருமான எனது தோழர் நேரில் சொல்லாமல் தானுகவே பார்த்து யாசகனுக்கு ஏராளமான ஸம்பத்தை யளிக்கிறார்.

81. 35. 'தன்னுல் கொடுக்கப்பட்டது அதிகமா யிருந்தாலும் அதைக் குறைவானதாக எண்ணுகிறார். பக்தனுல் செய்யப்பட்டது அல்பமாயிருந்தபோதிலும் அதை மிகப் பெரிதாகக் கருதுகிறார். மகாத்மாவாகிய அவர் என்னுல் கொண்டு போகப்பட்ட ஒரு பிடி அவலை மிகவும் பிரீதியுடன் எடுத்துச் சாப்பிட்டார்.

---

81. 35. ஒ. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவார். —குறள்

---

81. 25. पत्न्युद्धर्षातिमानिता। 81. 34. भूरिभोजः। பா. பே.

तस्यैव मे सौहृद-सख्य-मैत्री दास्यं पुनर्जन्मनि जन्मनि स्यात् ।
महानुभावेन गुणालयेन विषज्जत-स्तत्पुरुषप्रसंगः ॥ ८१.३६ ॥

इत्थं व्यवसितो बुद्ध्या भक्तोऽतीव जनार्दने ।
विषयान् जायया त्यक्ष्यन् बुभुजे नातिलंपटः ॥ ८१.३८ ॥

एवं स विप्रो भगवत्-सुहृत्तदा
दृष्ट्वा स्वभृत्यै-रजितं पराजितम् ।
तद्ध्यान-वेगोद्ग्रथितात्मबन्धन-
स्तद्धाम लेभेऽचिरतः सतां गतिम् ॥ ८१.४० ॥

इति दशमे स्कन्धे एकाशीतितमोऽध्यायः

81. 36. எல்லா குணங்களுக்கும் இருப்பிடமான மகானுபாவனுடன் விசேஷ சம்பந்தத்தை யடைந்த எனக்கு மறுபடியும் ஒவ்வொரு பிறவியிலும் அந்த பகவானிடம் பிரேமையும் சேர்க்கையும் நட்பும் தொண்டும் அவரைச் சேர்ந்தவர்களுடன் கூட்டுறவும் உண்டாக வேண்டும்.

81. 38. இவ்விதம் மனதில் தீர்மானித்துக் கொண்டவரும் பகவானிடத்தில் மிகுந்த பக்தி கொண்டவருமான அவர் விஷய சுகங்களைச் சிறுகச் சிறுக நீக்கி எதிலும் அதிகப்பற் றில்லாதவராய்ப் பத்தினியுடன் வாழ்க்கை நடத்தினார்.

81. 40. இவ்வாறு பகவானுடைய தோழரான அந்தப் பிராம்மணன் ஒருவராலும் ஜயிக்கப்படாதவராயினும் தன்னடியார்களால் ஜயிக்கப்படுகிற அந்த பகவானை அப்போது பார்த்து அவருடைய தியான வேகத்தால் கர்மக்கட்டினின்று விடுபட்டு விரைவிலேயே ஸாதுக்கள் அடையும் பரம பதத்தை அடைந்தார்.

இங்ஙனம் பத்தாவது ஸ்கந்தத்தில் எண்பத்தொராவது
அத்தியாயம் முற்றும்.

---

81. 38. பகவான் இவ்வளவு செல்வத்தைக் கொடுத்தது தன் பக்தி ஸ்திரப்படாததால் அதைப் பரீக்ஷிக்கத்தான் என்று எண்ணிப் பற்றின்றி வாழ்ந்தார்.

'பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.' —குறள்.

कुरुक्षेत्र-समागमः

श्रीशुक उवाच—

अथैकदा द्वारवत्यां वसतो रामकृष्णयोः।
सूर्योपरागः सुमहानासीत् कल्पक्षये यथा ॥ ८२.१ ॥

तं ज्ञात्वा मनुजा राजन् पुरस्तादेव सर्वतः।
समन्तपंचकं क्षेत्रं ययुः श्रेयो विधित्सया ॥ ८२.२ ॥

वृष्णयश्च तथाक्रूर-वसुदेवाहुकादयः।
ययु-र्भारत तत् क्षेत्रं स्वमघं क्षपयिष्णवः ॥ ८२.६ ॥

भीष्मो द्रोणोऽम्बिकापुत्रो गान्धारी ससुता तथा।
सदाराः पाण्डवाः कुन्ती सञ्जयो विदुरः कृपः ॥ ८२.२४ ॥

राजानो ये च राजेन्द्र युधिष्ठिर-मनुव्रताः।
श्रीनिकेतं वपुः शौरेः सस्त्रीकं वीक्ष्य विस्मिताः ॥ ८२.२७ ॥

अथ रामकृष्णाभ्यां सम्यक् प्राप्य समर्हणाः।
प्रशशंसु-र्मुदा युक्ता वृष्णीन् कृष्ण-परिग्रहान् ॥ ८२.२८ ॥

குருக்ஷேத்ர ஸமாகமம்

ஸ்ரீசுகர் கூறியது—

82. 1. பின்பொரு சமயம் பலராமனும் கிருஷ்ணனும் துவாரகையி லிருக்கையில் பிரளய காலத்தில் உண்டாவதுபோன்ற மிகப் பெரிய சூரியக் கிரகணம் உண்டாயிற்று.

82. 2. அரசே! அதை யறிந்த மனிதர்கள் கிரகணத்திற்கு முந்தியே எல்லா திக்குகளி லிருந்தும் புண்ணியத்தை நாடி ஸமந்தபஞ்சகம் என்ற குருக்ஷேத்திரத்திற் குச் சென்றார்கள்.

82. 6. அக்ரூரர் வசுதேவர் உக்ரஸேனர் முதலியவர்களும் (மற்ற) விருஷ்ணி களும் தங்கள் பாவந் தேய விரும்பியவர்களாய் அந்தக் குருக்ஷேத்திரத்திற்குச் சென்றார்கள்.

82. 24. பீஷ்மர், துரோணர், திருதராஷ்டிரர், அவ்வாறே பிள்ளைகளுடன் காந்தாரி, பத்தினிமார்களுடன் பாண்டவர்கள், குந்தி, ஸ்ருஞ்ஜயர், விதுரர், கிருபர் (ஆகிய எல்லோரும் சென்றனர்.)

82. 27. ராஜேந்திரா! தர்மபுத்திரரைச் சேர்ந்த அரசர்கள் எவர்களோ அவர் களும் (சென்றார்கள்.) ஸ்திரீகள் உள்பட எல்லோரும் ஸ்ரீநிவாஸனாகிய பகவானுடைய திருமேனியைத் தரிசித்து ஆச்சரிய மடைந்தார்கள்.

82. 28. பிறகு பலராமனாலும் கிருஷ்ணனாலும் நன்குபசரிக்கப்பெற்ற அவர்கள் மகிழ்ந்து கிருஷ்ணனைச்சேர்ந்த விருஷ்ணிகளைப் புகழ்ந்தார்கள்.

---

82. 2. குருக்ஷேத்திரம் டில்லியிலிருந்து 100 மைல், பாணிப்பட்டிலிருந்து 5 மைல் தூரத்திலுள்ளது.

नन्द-स्तत्र यदून् प्राप्तान् ज्ञात्वा कृष्णपुरोगमान् ।
तत्रागमद् वृतो गोपै-रनःस्थार्थै-र्दिदृक्षया ॥ ८२.३२ ॥

तं दृष्ट्वा वृष्णयो हृष्टास्तन्वः प्राणमिवोत्थिताः ।
परिषस्वजिरे गाढं चिरदर्शन-कातराः ॥ ८२.३३ ॥

गोप्यश्च कृष्ण-मुपलभ्य चिरादभीष्टं
यत्प्रेक्षणे दृशिषु पक्ष्मकृतं शपन्ति ।
दृग्भि-र्हृदीकृत-मलं परिरभ्य सर्वा-
स्तद्भाव-मापुरपि नित्ययुजां दुरापम् ॥ ८२.४० ॥

आहुश्च ते नलिननाभ पदारविन्दं
योगेश्वरै-र्हृदि विचिन्त्य-मगाधबोधैः ।
संसारकूप-पतितोत्तरणावलंबं
गेहञ्जुषामपि मनस्युदियात् सदा नः ॥ ८२.४९ ॥

---

82. 32. நந்தகோபரும் அங்கே கிருஷ்ணனும் யாதவர்களும் வந்த செய்தி கேட்டு ஸாமான்களை வண்டிகளில் ஏற்றிக்கொண்டு கோபர்கள் சூழ அவரைப் பார்ப்ப தற்கு அங்கு சென்றார்.

82. 33. அவரைக் கண்டதும் விருஷ்ணிகள் பிராணனை யடைந்த அவயவங்க ளைப்போல் எழுந்து மகிழ்ச்சியுடன் நீண்ட காலம் காணாத குறை நீங்க இறுகத் தழுவிக் கொண்டார்கள்.

82. 40. கோபிகள் எல்லோரும் வெகு நாட்களுக்குப் பின் தங்கள் மனத்திற் கினிய கிருஷ்ணனை யடைந்து எவரைக் காணுந்தோறும் இமையைச் சிருஷ்டித்த பிரம்ம தேவரை நொந்து கொள்வார்களோ அவரைக் கண்கள் வழியாக உள்ளத்தில்கொண்டு நன்றாக ஆலிங்கனம் செய்துகொண்டு யோகாரூடர்களுக்கும் கிடைக்காத பகவத் பாவனையை யடைந்தனர்.

82. 49. "பத்மநாபா! ஆழ்ங்காண முடியாத அறிவுடைய யோகேசுவரர்களால் மனதில் தியானம் செய்யத் தக்கதும் ஸம்ஸாரமாகிற கிணற்றில் விழுந்தவர்கள் கரை யேறுவதற்குப் பிடிப்பா யிருப்பதுமான உமது திருவடித் தாமரை நாங்கள் வீட்டுக் காரியங்களில் ஆழ்ந்திருந்தாலும் எங்கள் மனதில் எப்போதும் உதிக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்கள்.

---

82. 40. பருகிய நோக்கெனும் பாசத்தாற் பிணித்து
ஒருவரையொருவர் தம்முள்ள மீர்தலால்
வரிசிலை யண்ணலும் வாட் கணங்கையும்
இருவரு மாறிப்புக் கிதய மெய்தினர். (கம்பராமாயணம்)

महिष्य ऊचुः—

व्रजस्त्रियो यद्वाञ्छन्ति पुलिन्द्यस्तृणवीरुधः ।
गावश्चारयतो गोपाः पादस्पर्शं महात्मनः ॥ ८३.४३ ॥

श्रीशुक उवाच—

इति संभाषमाणासु स्त्रीभिः स्त्रीषु नृभि-र्नृषु ।
आययु-र्मुनयस्तत्र कृष्णराम-दिदृक्षया ॥ ८४.२ ॥

द्वैपायनो नारदश्च च्यवनो देवलोऽसितः ।
विश्वामित्रः शतानन्दो भरद्वाजोऽथ गौतमः ॥ ८४.३ ॥

तान् दृष्ट्वा सहसोत्थाय प्रागासीना नृपादयः ।
पाण्डवाः कृष्णरामौ च प्रणेमु-र्विश्ववन्दितान् ॥ ८४.६ ॥

श्रीभगवानुवाच—

नाग्नि-र्न सूर्यो न च चन्द्रतारका न भूर्जलं खं श्वसनोऽथ वाङ्मनः ।
उपासिता भेदकृतो हरन्त्यघं विपश्चितो घ्नन्ति मुहूर्तसेवया ॥ ८४.१२ ॥

(என்பத்து மூன்ருவது அத்தியாயத்தில் ஸ்திரீகள் கிருஷ்ணனுடைய சரித்திரத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் அவருடைய பத்தினிமார்கள் தங்களை பகவான் விவாகம் செய்துகொண்ட விதத்தை ஒவ்வொருவராக திரௌபதிக்கு வர்ணித்தது கூறப்படுகிறது.)

பத்தினிகள் கூறியது—

83. 43. மாடுகளை மேய்த்த மகாத்மாவான பகவானுடைய பாதஸ்பர்சத்தை எவ்விதம் கோபிகளும் கோபர்களும் வேடஸ்திரீகளும் செடிகளும் கொடிகளும் விரும்புகின்றனவோ அவ்விதமே நாங்களும் விரும்புகிருேம்.

ஸ்ரீ சுகர் கூறியது—

84. 2-3. இவ்விதம் ஸ்திரீகள் ஸ்திரீகளுடனும் புருஷர்கள் புருஷர்களுடனும் பேசிக்கொண்டிருக்கையில் அங்கே கிருஷ்ணனையும் பலராமனையும் தரிசிக்க விரும்பி வியாஸரும் நாரதரும் ச்யவனரும் தேவலரும் அஸிதரும் விசுவாமித்திரரும் சதானந்தரும் பரத்வாஜரும் கௌதமரும் (இன்னும் பல மகரிஷிகளும்) வந்தார்கள்.

84. 6. உலகனைத்தும் வணங்கும் அவர்களைப் பார்த்ததும் ஏற்கெனவே வீற்றிருந்த பாண்டவர்களும் பலராமனும் கிருஷ்ணனும் மற்றும் அரசர்கள் முதலிய எல்லோரும் விரைவில் எழுந்து நமஸ்கரித்தார்கள்.

84. 12. ஸ்ரீ பகவான் (அவர்களை ஆஸனம், பரத்தியம், அர்க்கியம், புஷ்பம், தூபம், சந்தனம் முதலியவற்ருல் பூஜித்து) கூறியதாவது—

चिरं विमृश्य मुनय ईश्वरस्येशितव्यताम् ।
जनसंग्रह इत्यूचुः स्मयन्तस्तं जगद्गुरुम् ॥ ८४.१५ ॥

अद्य नो जन्मसाफल्यं विद्यायास्तपसो दृशः ।
त्वया संगम्य सद्गत्या यदन्तः श्रेयसां परः ॥ ८४.२१ ॥

नमस्तस्मै भगवते कृष्णायाकुण्ठमेधसे ।
स्वयोगमाययाच्छन्न-महिम्ने परमात्मने ॥ ८४.२२ ॥

इत्यनुज्ञाप्य दाशार्हं धृतराष्ट्रं युधिष्ठिरम् ।
राजर्षे स्वाश्रमान् गन्तुं मुनयो दधिरे मनः ॥ ८४.२७ ॥

तद्वीक्ष्य तानुपव्रज्य वसुदेवो महायशाः ।
प्रणम्य चोपसंगृह्य बभाषेदं सुयन्त्रितः ॥ ८४.२८ ॥

அக்கினியும் சூரியனும் சந்திரனும் நக்ஷத்திரங்களும் பூமியும் ஜலமும் ஆகாசமும் வாயுவும் வாக்கும் மனமும் வெகுகாலம் உபாஸிக்கப்பட்டாலும் பேத புத்தியை உண்டாக்குவதால் பாவத்தை அறவே போக்குவதில்லை. (தங்களைப் போன்ற) தத்துவ தரிசிகளோ ஒரு முகூர்த்தம் சேவிப்பதால் போக்கடிக்கிருர்கள்.

84. 15. அனைத்தையும் ஆளும் ஈசுவரன் ஆளப்படும் ஜீவனைப்போல் நடப்பத்தைக் கண்டு வெகுநேரம் சிந்தனையி லாழ்ந்து 'லோகஸங்க்ரஹத்தின் பொருட்டு இங்ஙனம் செய்கிருர்' என்று நிச்சயித்து ஆச்சரியத்துடன் ஜகத்குருவான அவரைப் பார்த்து அம் முனிவர்கள் பின்வருமாறு கூறினுர்கள்.

84. 21. 'ஸாதுக்களுக்கு ஆசிரயமான தங்களுடைய சேர்க்கையால் இன்று எங்களுடைய ஞானத்திற்கும் தவத்திற்கும் கண்களுக்கும் ஜன்மாவிற்கும் ஸாபல்யம் ஏற்பட்டது. ஏனென்ருல் ஸகல புருஷார்த்தங்களுக்கும் தாங்களே யன்றோ முடிவான இடம்.'

84. 22. தம்முடைய யோகமாயையினுல் தமது பெருமையை மறைத்துக் கொண்டவரும், குன்ருத ஞானமுள்ளவரும், பரமாத்மாவுமாகிய அந்த பகவான் கிருஷ்ணனுக்கு நமஸ்காரம்.

84. 27. ராஜரிஷியே! இவ்வாறு கூறிவிட்டு முனிவர்கள் பகவானிடத்திலும் திருதராஷ்டிரரிடத்திலும் தர்மபுத்திரரிடத்திலும் விடை பெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் ஆசிரமத்திற்குச் செல்லத் தீர்மானித்தார்கள்.

84. 28. அவர்கள் போவதைக் கண்டு சிறந்த கீர்த்திமானுன வசுதேவர் அவர்களைப் பின் தொடர்ந்து சென்று நமஸ்கரித்துக் கால்களைப் பிடித்துக்கொண்டு மிக வணக்கத்துடன் பின் வருமாறு கூறினுர்.

वसुदेव उवाच—

नमो वः सर्वदेवेभ्य ऋषयः श्रोतुमर्हथ।
कर्मणा कर्मनिर्हारो यथा स्यान्न-स्तदुच्यताम् ॥ ८४.२९ ॥

नारद उवाच—

नाति-चित्रमिदं विप्रा वसुदेवो बुभुत्सया।
कृष्णं मत्वार्भकं यन्नः पृच्छति श्रेय आत्मनः ॥ ८४.३० ॥

सन्निकर्षो हि मर्त्याना-मनादरण-कारणम्।
गाङ्गं हित्वा यथान्यांभ-स्तत्रत्यो याति शुद्धये ॥ ८४.३१ ॥

अथोचु-र्मुनयो राजन्नाभाष्यानकदुन्दुभिम्।
सर्वेषां शृण्वतां राज्ञां तथैवाच्युत-रामयोः ॥ ८४.३४ ॥

कर्मणा कर्मनिर्हार एष साधु निरूपितः।
यच्छ्रद्धया यजेद्विष्णुं सर्वयज्ञेश्वरं मखैः ॥ ८४.३५ ॥

வசுதேவர் கூறியது—

84. 29. ரிஷிகளே! ஸர்வதேவஸ்வரூபிகளான உங்களுக்கு நமஸ்காரம், எனது விண்ணப்பத்தைக் கேட்கவேண்டும். எந்தக் கர்மாவை எப்படி யனுஷ்டித்தால் கர்மபந்தம் விலகுமோ அதை எங்களுக்கு உபதேசித்தருள வேண்டும்.

ஸ்ரீ நாரதர் கூறியது—

84. 30. 'பிராம்மணர்களே! வசுதேவர் கிருஷ்ணனைத் தன் குழந்தையென்று எண்ணித் தனது மோக்ஷத்திற்கு வழியை நம்மிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்பி இதைக் கேட்பது அதிக ஆச்சரிய மன்று.

84. 31. 'கங்கையை விட்டுவிட்டு அங்கு வசிப்பவன் பரிசுத்திக்காக வேறு தீர்த்தத்தை நாடி எவ்விதம் போகிறானோ அவ்விதமே இவ்வுலகில் மனிதர்களுக்கு ஸமீபத்திலிருப்பது அனாதரவிற்குக் காரணமாகிறது (அருகிலுள்ளதின் பெருமையை உணர்வதில்லை).'

84. 34. அரசே! பிறகு முனிவர்கள் எல்லா அரசர்களும் கிருஷ்ணனும் பலராமனும் கேட்கும்படி வசுதேவரை நோக்கிப் பின் வருமாறு கூறினார்கள்.

84. 35. யஜ்ஞேசுவரராகிய மகாவிஷ்ணுவை யஜ்ஞங்களால் சிரத்தையுடன் ஆராதிப்பதாகிய இதுதான் கர்மாவினாலேயே கர்மக் கட்டிலிருந்து விடுபடும் வழி என்று நன்றாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

अयं स्वस्त्ययनः पन्था द्विजाते-र्गृहमेधिनः ।
यच्छ्रद्धयाप्तवित्तेन शुक्लेनेज्येत पूरुषः ॥ ८४.३७ ॥

वित्तैषणां यज्ञदानै-र्गृहैर्दार-सुतैषणाम् ।
आत्मलोकैषणां देव कालेन विसृजेद् बुधः ।
ग्रामे त्यक्तैषणाः सर्वे ययु-र्धीरास्तपोवनम् ॥ ८४.३८ ॥

श्रीशुक उवाच—
इति तद्वचनं श्रुत्वा वसुदेवो महामनाः ।
तानृषीन् ऋत्विजो वव्रे मूर्ध्नाऽऽनम्य प्रसाद्य च ॥ ८४.४२ ॥

त एन-मृषयो राजन् वृता धर्मेण धार्मिकम् ।
तस्मिन्नयाजयन् क्षेत्रे मखैरुत्तमकल्पकैः ॥ ८४.४३ ॥

धृतराष्ट्रोऽर्जुनः पार्थो भीष्मो द्रोणः पृथा यमौ ।
नारदो भगवान् व्यासः सुहृत्संबन्धि-बान्धवाः ॥ ८४.५७ ॥

---

84. 37. ' முவ்வர்ணத்தார்க்கும் கிருஹஸ்தாசிரமத்தி லுள்ளவர்களுக்கு பரிசுத்த மான வழியில் ஸம்பாதிக்கப்பட்ட பொருளைக்கொண்டு சிரத்தையுடன் புருஷோத்த மனை ஆராதிப்பதாகிய இதுதான் என்றென்றைக்கும் சிறந்த நன்மையைத் தரும் வழி.

84. 38. ' விவேகியானவன் யாகங்களாலும் தானங்களாலும் பணத்தாசையை யும், இல்லறத்தால் மனைவி மக்களிடம் பற்றையும், தேவர்களுடைய ஆயுளுக்கும் முடி வுண்டு என்பதைச் சிந்தித்து (இறந்த பின் ஜீவன் அடையக்கூடிய ஸ்வர்க்கம் முதலிய) லோகங்களில் உள்ள ஆசையையும் விடவேண்டும். புத்திமான்கள் எல்லோ ருமே உலகுடன் கூடி வாழ்வதில் ஆசையை ஒழித்தவர்களாய் தபோவனம் சென்றிருக்கிறார்கள்.'

ஸ்ரீ சுகர் கூறியது—

84. 42. இவ்விதம் அவர்களுடைய அவ்வார்த்தையைக் கேட்டுச் சிறந்த மனம் படைத்த வசுதேவர் தலையால் வணங்கி அந்த ரிஷிகளைச் சந்தோஷப்படுத்தி அவர்க ளையே ரித்விக்குகளா யிருந்து யாகத்தை நடத்தித்தரவேண்டு மென்று கேட்டுக் கொண்டார்.

84. 43. அரசே! இவ்வாறு தர்மமுறையில் வேண்டிக் கொள்ளப்பட்ட அந்த ரிஷிகள் அந்த க்ஷேத்திரத்தில் தர்மிஷ்டரான வசுதேவருக்கு (தர்மம் மந்திரம் தந்திரம், இவைகளால்) உத்தமமான வகையில் யாகங்களை நடத்திவைத்தார்கள்.

84. 57-58. (வசுதேவர் அவபிருத ஸ்நானம் செய்து எல்லோரையும் பூஜித்து மரியாதை செய்தார்.) திருதராஷ்டிரர், விதுரர், தருமபுத்திரர், பீமன், அர்ஜுனன் நகுல ஸஹதேவர்கள், குந்தீதேவி, பீஷ்மர், துரோணர், நாரதர், வியாஸர் முதலியவர் களும் சிநேகிதர்களும் ஸம்பந்திகளும் பந்துக்களும் மற்ற ஜனங்களும் பந்துக்களான யாதவர்களை மார்புறத் தழுவிக்கொண்டு சினேகத்தால் மனம் கசிந்தவர்களாய் விட்டுப் பிரிய மன மில்லாமல் தங்கள் தங்கள் தேசம் சென்றார்கள்.

---

84. 37. ஒ. தானமுந் தவமுந் தாம் செய்வராயின்
வானவர் நாடு வழி திறந்திடுமே.

बन्धून् परिष्वज्य यदून् सौहृदात् क्लिन्नचेतसः ।
ययु-र्विरहकृच्छ्रेण स्वदेशांश्चापरे जनाः ॥ ८४.५८ ॥

नन्दो गोपाश्च गोप्यश्च गोविन्दचरणांबुजे ।
मनः क्षिप्तं पुनर्हर्तु-मनीशा मथुरां ययुः ॥ ८४.६९ ॥

बन्धुषु प्रतियातेषु वृष्णयः कृष्णदेवताः ।
वीक्ष्य प्रावृष-मासन्नां ययुर्द्वारवतीं पुनः ॥ ८४.७० ॥

इति दशमस्कन्धे चतुरशीतितमोऽध्यायः

---

84. 69. நந்தரும் கோபர்களும் கோபிகளும் கிருஷ்ணனுடைய பாதகமலங்களில் வைத்த மனதைத் திருப்பி எடுத்துக்கொள்ள முடியாதவர்களாய் மதுரைக்குச் சென்றனர்.

84. 70. பந்துக்கள் சென்ற பிறகு கிருஷ்ணனைத் தெய்வமாகக் கொண்ட விருஷ்ணிகள் மழைகாலம் சமீபித்ததைக் கண்டு மறுபடியும் துவாரகைக்குச் சென்றார்கள்.

இங்ஙனம் பத்தாவது ஸ்கந்தத்தில் எண்பத்து நாலாவது
அத்தியாயம் முற்றிற்று.

---

84. 69. नन्हर्तुमशक्ताः स्वाश्रमान् ययुः ।

भगवत्तत्त्वनिरूपणम्

श्रीशुक उवाच—

अथैकदाऽऽत्मजौ प्राप्तौ कृतपादाभिवन्दनौ ।
वसुदेवोऽभिवन्द्याह प्रीत्या संकर्षणाच्युतौ ॥ ८५.१ ॥

वसुदेव उवाच—

युवां न नः सुतौ साक्षात् प्रधान-पुरुषेश्वरौ ।
भूभारक्षत्रक्षपण अवतीर्णौ तथाऽऽत्थ ह ॥ ८५.१८ ॥

तत्ते गतोऽस्म्यरण-मद्य पदारविन्द-
मापन्न-संसृति-भयापह-मार्तबन्धो ।
एतावताल-मल-मिन्द्रियलालसेन
मर्त्यात्मदृक् त्वयि परे यदपत्यबुद्धिः ॥ ८५.१९ ॥

सूतीगृहे ननु जगाद भवानजो नौ
संजज्ञ इत्यनुयुगं निजधर्म-गुप्त्यै ।
नानातनू-र्गगनवद् विदधज्जहासि
को वेद भूम्न उरुगाय विभूति-मायाम् ॥ ८५.२० ॥

பகவத்தத்வநிருபணம்

ஸ்ரீ சுகர் கூறியது—

85. 1. பின்பு ஒரு சமயம் வசுதேவர் தம்மிடம் வந்து நமஸ்கரித்த பிள்ளைகளான பலராமனையும் கிருஷ்ணனையும் பிரீதியுடன் ஆசீர்வதித்து அவர்களிடம் பின் வருமாறு கூறினார்.

வசுதேவர் கூறியது—

85. 18. நீங்கள் எங்களுடைய பிள்ளைகள் அல்லர். ஸாக்ஷாத் பிரகிருதிக்கும் புருஷனுக்கும் ஈசுவரர்களான நீங்கள் பூமிக்குப் பாரமாயிருந்த க்ஷத்திரியர்களை யொழிப்பதற்காக அவதாரம் செய்தவர்கள், அவ்வாறு நீங்களே சொல்லியிருக்கிறீர்கள்.

85. 19. தீனபந்துவே! சரணடைந்தவர்களுடைய பயத்தைப் போக்கும் உமது சரண கமலத்தை இன்று நான் சரணடைந்தேன். எந்த இந்திரியசுகத்தின் ஆசையால் இவ்வுடலை ஆத்மா என்று கொண்டு பரப்பிரம்மஸ்வரூபியான உங்களிடத்தில் பிள்ளை என்ற புத்தியைக் கொண்டேனோ அது இவ்வளவோடு போதும், போதும்.

85. 20. 'பிறப்பில்லாத நான் எனது தர்மங்களைக் காப்பதற்காக யுகந்தோறும் அவதரிப்பேன்' என்று நீங்களே எங்களுக்குப் பிரஸவ அறையில் கூறியிருக்கிறீர்கள். ஆகாயம்போல் எதிலும் பற்றற் றிருக்கும் நீங்கள் பற்பல சரீரங்களை எடுக்கவும் விடவும் செய்கிறீர்கள். துதிக் கெட்டாத ஈசா! அளவு கடந்த ஐசுவரிய வடிவான உங்களுடைய மாயையை எவன் அறிவான்?

---

85. 18. भूमारक्षपणायावतीर्णौ ।   85. 19. गतोऽस्मि शरणमद्य ।

श्रीभगवानुवाच—

वचो वः समवेतार्थं तातैत-दुपमन्महे ।
यन्नः पुत्रान् समुद्दिश्य तत्त्वग्राम उदाहृतः　　॥ ८५.२२ ॥

अहं यूय-मसावार्य इमे च द्वारकौकसः ।
सर्वेऽप्येवं यदुश्रेष्ठ विमृश्याः सचराचरम्　　॥ ८५.२३ ॥

आत्मा ह्येकः स्वयंज्योति-र्नित्योऽन्यो निर्गुणो गुणैः ।
आत्मसृष्टै-स्तत्कृतेषु भूतेषु बहुधेयते　　॥ ८५.२४ ॥

खं वायुर्ज्योति-रापो भू-स्तत्कृतेषु यथाशयम् ।
आविस्तिरोऽल्प-भूर्येको नानात्वं यात्यसावपि　　॥ ८५.२५ ॥

श्रीशुक उवाच—

एवं भगवता राजन् वसुदेव उदाहृतम् ।
श्रुत्वा विनष्टनानाधी-स्तूष्णीं प्रीतमना अभूत्　　॥ ८५.२६ ॥

ஸ்ரீ பகவான் கூறியது—

85. 22. அப்பா! புத்திரர்களான எங்களைக் குறித்துத் தத்துவத் தொகுதியாக எது கூறப்பட்டதோ அப்படிப்பட்ட உங்கள் வார்த்தை மிகவும் அர்த்தம் நிறைந்த தென்பதை நாங்கள் உணர்கிறோம்.

85. 23. யதுசிரேஷ்டரே! நீங்களும் நானும் இந்த என் தமயனும் இத் துவாரகா வாசிகளும் எல்லோருமே சராசரத்துடன் பரமாத்ம ஸ்வரூபம் என்றே தான் ஆராய்ந் தறியவேண்டும்.

85. 24-25. ஆத்மா என்பது ஒன்றுதான்; அது ஸ்வயம்பிரகாசமானது; என்று மழியாதது, (சரீரத்தினும்) வேறானது; குண சம்பந்த மில்லாதது. என்றாலும் ஆகாயம் வாயு தேயு ஜலம் பூமி ஆகியவை தங்களால் உண்டாக்கப்பட்ட பொருள்களில் இடத்திற்குத் தகுந்தபடி தோன்றுவது போலும் மறைவது போலும், சிறிதுபோலும் பெரிது போலும் ஒன்றேயாகிய வஸ்து எப்படிப் பலவாயிருக்கும் தன்மையை யடை கிறதோ அப்படியே ஆத்மாவும் தன்னால் தோற்றுவிக்கப்பட்ட குணங்களால் அவற்று லுண்டாக்கப்பட்ட உடல்களில் பலவிதமாக அறியப்படுகிறது.

85. 26. அரசே! இவ்வாறு பகவானால் சொல்லப்பட்டதைக் கேட்டு வசுதேவர் உள்ளவை பல என்ற புத்தி நீங்கியவராய் பக்தி நிறைந்த மனத்துடன் வாய் பேசாம லிருந்தார்.

---

85. 23. **अहं प्रियो ममाचार्य ।**

अथ तत्र कुरुश्रेष्ठ देवकी सर्वदेवता ।
श्रुत्वाऽऽनीतं गुरोः पुत्र-मात्मजाभ्यां सुविस्मिता ॥ ८५.२७ ॥

कृष्णरामौ समाश्राव्य पुत्रान् कंसविहिंसितान् ।
स्मरन्ती कृपणं प्राह वैक्लव्यादश्रुलोचना ॥ ८५.२८ ॥

देवक्युवाच—

राम रामाप्रमेयात्मन् कृष्ण योगेश्वरेश्वर ।
वेदाहं वां विश्वसृजा-मीश्वरावादिपूरुषौ ॥ ८५.२९ ॥

चिरान्मृत-सुतादाने गुरुणा कालचोदितौ ।
आनिन्यथुः पितृस्थानाद् गुरवे गुरुदक्षिणाम् ॥ ८५.३२ ॥

तथा मे कुरुतं कामं युवां योगेश्वरेश्वरौ ।
भोजराजहतान् पुत्रान् कामये द्रष्टु-माहृतान् ॥ ८५.३३ ॥

---

85. 27-28. கௌரவசிரேஷ்டரே! அப்போது அங்கே ஸர்வதேவதா ஸ்வரூபி யான தேவகீ (வந்தாள்). தன் பிள்ளைகளால் குருவின் குமாரன் (இறந்தவன்) கொண்டுவரப் பட்டான் என்ற செய்தியைக் கேட்டு ஆச்சரியமடைந் திருந்த அவள் கம்ஸனால் கொல்லப்பட்ட தன் பிள்ளைகளைப்பற்றி நினைத்துக் கண்ணும் கண்ணீரு மாகக் கிருஷ்ணனையும் பலராமனையும் கூப்பிட்டு மிக வருத்தத்துடன் பின் வருமாறு கூறினாள்.

தேவகீ கூறியது—

85. 29. 'அளவிட முடியாத மகிமைவாய்ந்த பலராமா! யோகேசுவர்களுக்கும் ஈசுவரனான கிருஷ்ணா! உங்களிருவரையும் உலகங்களைச் சிருஷ்டிப்பவர்களுக்கும் ஈசுவரர்களென்றும் ஆதிபுருஷர்களென்றும் நான் அறிவேன்.

85. 32. 'வெகு காலத்திற்கு முன் இறந்துபோன பிள்ளையைத் திருப்பிக் கொண்டுவரும்படி குருவினால் ஏவப்பட்டு நீங்கள் குருவிற்கு குருதக்ஷிணையாக அப் பிள்ளையைக் கொணர்ந்து கொடுத்தீர்களே.

85. 33. 'யோகேசுவரர்களுக்கும் ஈசுவரர்களான நீங்கள் இருவரும் அவ்வாறே எனது விருப்பத்தையும் பூர்த்தி செய்யவேண்டும். கம்ஸனால் கொல்லப்பட்ட பிள்ளை களை நீங்கள் கொண்டுவந்து பார்க்க விரும்புகிறேன்.'

एवं संचोदितौ मात्रा रामः कृष्णश्च भारत।
सुतलं संविविशतु-र्योगमायामुपाश्रितौ ॥ ८५.३४ ॥

तस्मिन् प्रविष्टावुपलभ्य दैत्यराड् विश्वात्मदैवं सुतरां तथाऽऽत्मनः।
तद्दर्शनाह्लाद-परिप्लुताशयः सद्यः समुत्थाय ननाम सान्वयः ॥ ८५.३५ ॥

श्रीभगवानुवाच—

आसन् मरीचेः षट् पुत्रा ऊर्णायां प्रथमेऽन्तरे।
देवाः कं जहसु-र्वीक्ष्य सुतां यभितु-मुद्यतम् ॥ ८५.४७ ॥

तेनासुरी-मगन् योनि-मधुनावद्यकर्मणा।
हिरण्यकशिपो-र्जाता नीतास्ते योगमायया ॥ ८५.४८ ॥

देवक्या उदरे जाता राजन् कंस-विहिंसिताः।
सा ताञ्छोचत्यात्मजान् स्वांस्त इमेऽध्यासतेऽन्तिके ॥ ८५.४९ ॥

---

85. 34. பாரதா! இவ்வாறு தாயாரால் ஏவப்பட்ட பலராமனும் கிருஷ்ணனும் யோகமாயா பலத்தால் ஸுதல லோகம் சென்றனர்.

85. 35. பகவான் ஸுதலலோகம் வந்த செய்தி தெரிந்தவுடன் அசுர ராஜனை பலிசக்ரவர்த்தி உலகிற்கெல்லாம் ஆத்மாவும் தெய்வமும், அவ்வாறே தனக்கும் தனி முறையில் ஆத்மாவும் தெய்வமுமான அவர்களைக் கண்ட ஸந்தோஷத்தால் மனம் பூரித்து உடனே எழுந்து சென்று பரிவாரங்களுடன் நமஸ்கரித்தான்.

ஸ்ரீ பகவான் கூறியது—

85. 47. 'முதலாவதான ஸ்வாயம்புவ மன்வந்தரத்தில் மரீசி மகரிஷிக்கு ஊர்ணை யென்ற பத்தினியிடத்தில் ஆறு பிள்ளைகள் பிறந்தார்கள். தேவர்களான அவர்கள் பிரம்மாவைப் பரிகசித்தார்கள்.;—பிரம்மா தனக்குப் பெண்போன்ற ஸரஸ்வதியை பெண்டாட்டியாகக் கொள்ள முயன்றதைக் கண்டு.

85. 48-49. 'பலிமகாராஜனே! அத்தகாத செயலால் அப்போதே அவர்கள் ஆஸுர யோனியை அடைந்து ஹிரண்யகசிபுவுக்குப் பிள்ளைகளாய்ப் பிறந்தார்கள் பின்னர் அவர்கள் யோக மாயையால் கொண்டுவரப்பட்டு தேவகியின் வயிற்றில் பிறந்து கம்ஸனால் கொல்லப்பட்டார்கள். தேவகி யம்மாள் தன்னுடைய அந்தப் பிள்ளைகளைப் பற்றி வருத்தப்படுகிறாள். அவர்கள் இதோ உன்னருகில் இருக்கிறார்கள்.

इत एतान् प्रणेष्यामो मातृशोकापनुत्तये ।
ततः शापाद् विनिर्मुक्ता लोकं यास्यन्ति विज्वराः ॥ ८५.५० ॥

स्मरोद्गीथः परिष्वंगः पतंगः क्षुद्रभृद् घृणी ।
षडिमे मत्प्रसादेन पुनर्यास्यन्ति सद्गतिम् ॥ ८५.५१ ॥

इत्युक्त्वा तान् समादाय इन्द्रसेनेन पूजितौ ।
पुनर्द्वारवतीमेत्य मातुः पुत्रानयच्छताम् ॥ ८५.५२ ॥

तान् दृष्ट्वा बालकान् देवी पुत्रस्नेहस्नुतस्तनी ।
परिष्वज्यांकमारोप्य मूर्ध्न्यजिघ्र-दभीक्ष्णशः ॥ ८५.५३ ॥

ते नमस्कृत्य गोविन्दं देवकीं पितरं बलम् ।
मिषतां सर्वभूतानां ययुर्धाम दिवौकसाम् ॥ ८५.५६ ॥

---

85. 50. 'தாயின் விசனத்துக்கு ஆறுத லளிக்கும் பொருட்டு இவர்களை இங்கிருந்து அழைத்துச் செல்ல விரும்புகிறேன், பிறகு அவர்கள் சாபத்திலிருந்து விடுபட்டுத் துன்பம் நீங்கி தேவலோகம் போய்ச் சேருவார்கள்.

85. 51. 'ஸ்மரன், உத்கீதன், பரிஷ்வங்கன், பதங்கன், க்ஷுத்ரப்ருத், க்ருணீ என்ற இந்த ஆறுபேர்களும் எனது அனுக்கிரகத்தால் மறுபடியும் நல்லகதி யடைவார்கள்.'

85. 52. என் றிவ்வாறு கூறி அவர்களை யழைத்துக்கொண்டு மகாபலியால் பூஜிக்கப் பெற்று மறுபடியும் துவாரகைக்கு வந்து தாயாரிடம் பிள்ளைகளைக் கொடுத்தார்கள்.

85. 53. தேவகீ அக் குழந்தைகளைக் கண்டு புத்திரவாஞ்சையால் ஸ்தனங்களில் பால் பெருகக் கட்டி யணைத்து மடியில் வைத்துக்கொண்டு அடிக்கடி உச்சி முகர்ந்தாள்.

85. 56. பின்னர் அவர்கள் கிருஷ்ணனையும் பலராமனையும் தேவகியையும் வசுதேவரையும் நமஸ்கரித்து எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே தேவலோகத்தை யடைந்தார்கள்.

तं दृष्ट्वा देवकी देवी मृतागमननिर्गमम्।
मेने सुविस्मिता मायां कृष्णस्य रचितां नृप ॥ ८५.५७ ॥

एवंविधान्यद्भुतानि कृष्णस्य परमात्मनः।
वीर्याण्यनन्तवीर्यस्य सन्त्यनन्तानि भारत ॥ ८५.५८ ॥

इति दशमस्कन्धे पंचाशीतितमोऽध्यायः

---

85. 57. அரசே! தேவகீதேவியானவள் இறந்த குழந்தைகள் திரும்பிவந்ததையும் உடனே சென்றுவிட்டதையும் பார்த்து ஆச்சரிய மடைந்தவளாய் இது கிருஷ்ணன் செய்த மாயை என்று எண்ணினாள்.

85. 58. பாரதா! அளவற்ற வீரியமுடைய கிருஷ்ண பரமாத்மாவினுடைய இப்படிப்பட்ட ஆச்சரியமான வீரியச் செயல்களுக்கு எல்லை யில்லை.

இங்ஙனம் பத்தாவது ஸ்கந்தத்தில் எண்பத்தைந்தாவது
அத்தியாயம் முற்றிற்று

सुभद्राकल्याणम्

राजोवाच—

ब्रह्मन् वेदितु-मिच्छामः स्वसारं रामकृष्णयोः ।
यथोपयेमे विजयो या ममासीत् पितामही ॥ ८६.१ ॥

श्रीशुक उवाच—

अर्जुन-स्तीर्थयात्रायां पर्यटन्नवनीं प्रभुः ।
गतः प्रभास-मश्रृणोन्मातुलेयीं स आत्मनः ॥ ८६.२ ॥

दुर्योधनाय रामस्तां दास्यतीति न चापरे ।
तल्लिप्सुः स यतिर्भूत्वा त्रिदण्डी द्वारकामगात् ॥ ८६.३ ॥

तत्र वै वार्षिकान् मासान् अवात्सीत् स्वार्थ-साधकः ।
पौरैः सभाजितोऽभीक्ष्णं रामेणाजानता च सः ॥ ८६.४ ॥

एकदा गृहमानीय आतिथ्येन निमन्त्र्य तम् ।
श्रद्धयोपहृतं भैक्ष्यं बलेन बुभुजे किल ॥ ८६.५ ॥

---

33. துவாரகா லீலை (5)

சுபத்ராகல்யாணம்

அரசன் கூறியது—

86. 1. பிரம்மஸ்வரூபியே ! என் பாட்டியாரும் பலராமருக்கும் கிருஷ்ணருக்கும் சகோதரியுமான சுபத்ராதேவியை அர்ஜுனன் விவாகம் செய்துகொண்ட வரலாற்றைக் கேட்க விரும்புகிறேம்.

ஸ்ரீ சுகர் கூறியது—

86. 2-3. பிரபுவான அர்ஜுனன் தீர்த்தயாத்திரையில் பூப் பிரதக்ஷிணம் செய்து பிரபாஸ தீர்த்தத்தை யடைந்தபோது அவன் தனது மாமன் மகளான அந்த சுபத்திரையைப் பலராமன் துரியோதனனுக்குக் கொடுக்க விரும்பியதாகவும் மற்றவர்கள் அதை விரும்பவில்லை என்றும் கேள்விப்பட்டான். அவன் அவளைத் தான் அடையவிரும்பி திரிதண்டி ஸந்நியாஸியாக வேஷம் பூண்டு துவாரகைக்குச் சென்றான்.

86. 4. காரியத்தில் கண்ணுயிருந்த அர்ஜுனன் பட்டணத்து ஜனங்களாலும் அவனை இன்னுரென்று தெரிந்துகொள்ளாத பலராமராலும் மேன்மேலும் சிறப்பாக உபசரிக்கப்பெற்று மழைக்காலம் பூராவும் அங்கே தங்கியிருந்தான்.

86. 5. ஒருநாள் பிக்ஷைக்கு அழைத்து வீட்டிற்குக் கூட்டிப்போய் சிரத்தையுடன் பலராமர் கொடுத்த பிக்ஷையை அர்ஜுனன் சாப்பிட்டான். ஆச்சரியம் (அப்போதும் பலராமர் அவனை அறிந்துகொள்ளவில்லை.)

---

86. 5. गृहमानिन्ये ।

सोऽपश्यत् तत्र महतीं कन्यां वीरमनोहराम् ।
प्रीत्युत्फुल्लेक्षणस्तस्यां भावक्षुब्धं मनो दधे ॥ ८६.६ ॥

सापि तं चकमे वीक्ष्य नारीणां हृदयंगमम् ।
हसन्ती व्रीडितापांगी तन्न्यस्त-हृदयेक्षणा ॥ ८६.७ ॥

तां परं समनुध्यायन्नन्तरं प्रेप्सु-रर्जुनः ।
न लेभे शं भ्रमच्चित्तः कामेनाति-बलीयसा ॥ ८६.८ ॥

महत्यां देवयात्रायां रथस्थां दुर्गनिर्गताम् ।
जहारानुमतः पित्रोः कृष्णस्य च महारथः ॥ ८६.९ ॥

रथस्थो धनुरादाय शूरां-श्चारुन्धतो भटान् ।
विद्राव्य क्रोशतां स्वानां स्वभागं मृगराडिव ॥ ८६.१० ॥

---

86. 6. அப்போது அவன் அங்கே வீரர்களுடைய மனதைக் கவரும் ஒரு சிறந்த கன்னிகையைக் கண்டான்; பிரீதியால் கண்கள் மலர ஆசையால் உள்ளங் கலங்க அவளிடத்தில் மனதைச் செலுத்தினான்.

86. 7. அவளும் பெண்களின் மனதைக் கவரக்கூடிய அந்த அர்ஜுனனைப் பார்த்துப் புன்னகை பூத்து வெட்கத்தால் கடைக்கண் பார்வையுடையவளாய் அவனிடத்தில் மனதையும் கண்களையும் வைத்து அவன்மேல் ஆசைகொண்டாள்,

86. 8. அவளையே எப்பொழுதும் தியானம் செய்துகொண்டு அபகரித்துச் செல்லுதற்குரிய சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அர்ஜுனன் மிகுந்த காம வேகத்தால் மனம் பிரமித்து அமைதி யற்றிருந்தான்.

86. 9-10. (ஊரில்) ஒரு பிரம்மோத்ஸவம் நடந்தபோது கோட்டையை விட்டு வெளிவந்து தேரில் இருந்த சுபத்திரையை மகாரதனான அர்ஜுனன் பெற்றோர்களிடமும் கிருஷ்ணனிடமும் அனுமதி பெற்றுத் தேரில் ஏறிக்கொண்டு வில்லையும் பாணங்களையும் எடுத்துக்கொண்டு தன்னைத் தடுக்கவந்த சூரர்களான வேலையாட்களை விரட்டிவிட்டு யாதவர்களைக் கதறவிட்டுச் சிங்கம் தனது பாகத்தைக் கொண்டுபோவதுபோல் கொண்டு சென்றான்.

तच्छ्रुत्वा क्षुभितो रामः पर्वणीव महार्णवः।
गृहीतपादः कृष्णेन सुहृद्भिश्चान्वशाम्यत ॥ ८६.११ ॥

प्राहिणोत् पारिबर्हाणि वरवध्वोर्मुदा बलः।
महाधनोपस्करेभ-रथाश्व-नरयोषितः ॥ ८६.१२ ॥

श्रीशुक उवाच—

कृष्णस्यासीद् द्विजश्रेष्ठः श्रुतदेव इति श्रुतः।
कृष्णैक-भक्त्या पूर्णार्थः शान्तः कविरलंपटः ॥ ८६.१३ ॥

स उवास विदेहेषु मिथिलायां गृहाश्रमी।
अनीहयाऽऽगताहार्य-निर्वर्तित-निजक्रियः ॥ ८६.१४ ॥

तथा तद्राष्ट्रपालोऽङ्ग बहुलाश्व इति श्रुतः।
मैथिलो निरहंमान उभावप्यच्युत-प्रियौ ॥ ८६.१६ ॥

---

86. 11. அதைக் கேட்டு பலராமர் பருவகாலத்தில் ஸமுத்திரம் பொங்குவது போல் கலக்க மடைந்தார். பின்பு கிருஷ்ணனாலும் சிநேகிதர்களாலும் கால்களைப் பிடித்துப் பிரார்த்திக்கப்பட்டு ஸமாதான மடைந்தார்.

86. 12. பின்பு பலராமர் தம்பதிகளுக்கு ஸந்தோஷத்துடன் நன்கு அலங்க ரிக்கப்பட்ட யானைகளையும் தேர்களையும் குதிரைகளையும் பணியாட்களையும் பணிப்பெண் களையும் சீராக அனுப்பிவைத்தார்.

ஸ்ரீ சுகர் கூறியது—

86. 13. ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் ஏகாந்த பக்தியால் மனோரதங்களெல்லாம் நிறை வேறியவரும் ஆசையற்றவரும் பரம சாந்தரும் விவேகியும் கிருஷ்ணனுடைய தோழரும் சுருத தேவர் எனப் புகழ்பெற்றவருமான ஒரு பிராம்மண சிரேஷ்டர் இருந்தார்.

86. 14. அவர் தனது பிரயத்தின மில்லாமல் தானாகக் கிடைத்த அன்னம் முதலியவற்றைக் கொண்டு தனது கர்மானுஷ்டானத்தைச் செய்து கிருஹஸ்தாசிரமியாக விதேஹ நாட்டில் மிதிலையில் வசித்து வந்தார்.

86. 16. ஐயனே! மிதிலையில் பிறந்தவனும் அந்த மிதிலைக் கரசனும் புகழ்பெற்ற வனுமான பஹுளாசுவன் என்பவனும் அவ்வாறே அஹங்கார மற்றவனும் (சுருததேவ னைப் போலவே) இருந்தான். இரண்டுபேரும் கிருஷ்ணனுக்குப் பிரியமானவர்கள்.

तयोः प्रसन्नो भगवान् दारुकेणाहृतं रथम् ।
आरुह्य साकं मुनिभि-र्विदेहान् प्रययौ प्रभुः　॥ ८६.१७ ॥

नारदो वामदेवोऽत्रिः कृष्णो रामोऽसितोरुणः ।
अहं बृहस्पतिः कण्वो मैत्रेयश्च्यवनादयः　॥ ८६.१८ ॥

तेऽच्युतं प्राप्तमाकर्ण्य पौरा जानपदा नृपः ।
अभीयु-र्मुदिता-स्तस्मै गृहीतार्हण-पाणयः　॥ ८६.२२ ॥

दृष्ट्वा तु उत्तमश्लोकं प्रीत्युत्फुल्लाननाशयाः ।
कै-र्धृतांजलिभि-र्नेमुः श्रुतपूर्वास्तथा मुनीन्　॥ ८६.२३ ॥

स्वानुग्रहाय संप्राप्तं मन्वानौ तं जगद्गुरुम् ।
मैथिलः श्रुतदेवश्च पादयोः पेततुः प्रभोः　॥ ८६.२४ ॥

---

86. 17. அவர்களிடத்தில் ஸந்தோஷமடைந்த ஸர்வேசுவரனை பகவான் (ஒரு சமயம்) தாருகனுல் கொண்டுவரப்பட்ட தேரில் ஏறிக்கோண்டு முனிவர்களுடன் விதேஹநாட்டிற்குச் சென்ருர்.

86. 18. நாரதர், வாமதேவர், அத்ரி, வியாஸர், பரசுராமர், அஸிதர், அருணர், பிருஹஸ்பதி, கண்வர், மைத்திரேயர், ச்யவனர், நான் ஆகிய யாவரும் போனேம்.

86. 22. அங்கே பட்டணத்து ஜனங்களும் கிராமஜனங்களும் அரசனும் கிருஷ்ண பகவான் வந்ததைக் கேட்டு மகிழ்ச்சி பொங்கியவர்களாய் அவருக் கர்ப்பிக்கப் பூஜா திரவியங்களைக் கையில் கொண்டு எதிர் சென்ருர்கள்.

86. 23. அவர்கள் உத்தம சுலோகரான பகவானையும் அவ்வாறே தாங்கள் முந்தி கேள்விப் பட்டிருந்த முனிவர்களையும் பார்த்துச் சந்தோஷத்தால் முகமும் மனமும் மலர்ந்தவர்களாய் கைகளைக் கூப்பிக்கொண்டு தலையால் வணங்கினுர்கள்.

86. 24. மிதிலை யரசனும் சுருததேவரும் தங்களை அனுக்கிரகிக்கவே ஜகத்குரு வான பகவான் எழுந்தருளியதாக எண்ணிப் பிரபுவின் பாதங்களில் விழுந்து வணங்கி னுர்கள்.

---

86. 18. சுகாசாரியர் தானும் பகவானுடன் மிதிலா நகரம் சென்றதாகக் கூறுகிருர்.
86. 23. கை: —சிரோபி: ।　தாமரைப
　சிரம மில்லாமல்

---

86. 22. प्रतीयुर्मुदिता ।

न्यमन्त्रयेतां दाशार्ह-मातिथ्येन सह द्विजैः ।
मैथिलः श्रुतदेवश्च युगपत् संहतांजली ॥ ८६.२५ ॥

भगवांस्तदभिप्रेत्य द्वयोः प्रिय-चिकीर्षया ।
उभयो-राविशद् गेह-मुभाभ्यां तदलक्षितः ॥ ८६.२६ ॥

श्रोतुमप्यसतां दूरान् जनकः स्वगृहागतान् ।
आनीतेष्वासनाग्र्येषु सुखासीनान् महामनाः ॥ ८६.२७ ॥

प्रवृद्ध-भक्त्या उद्धर्ष-हृदयास्राविलेक्षणः ।
नत्वा तदङ्घ्रीन् प्रक्षाल्य तदपो लोकपावनीः ॥ ८६.२८ ॥

सकुटुंबो वहन् मूर्ध्ना पूजयांचक्र ईश्वरान् ।
गन्धमाल्यांबराकल्प-धूपदीपार्घ्य-गोवृषैः ॥ ८६.२९ ॥

वाचा मधुरया प्रीण-न्निदमाहान्न-तर्पितान् ।
पादावङ्कगतौ विष्णोः संस्पृशञ्छनकै-र्मुदा ॥ ८६.३० ॥

---

86. 25. மிதிலை யரசனும் சுருததேவரும் கைகூப்பிக்கொண்டு பிராம்மணர்களுடன் அதிதி பூஜையை ஏற்றுக்கொள்ள தங்கள் கிருகத்திற்கு வரவேண்டுமென்று ஒரே சமயத்தில் பகவானைப் பிரார்த்தித்தார்கள்.

86. 26. பகவான் அவர்களுடைய பிரார்த்தனைக் கிணங்கி இரண்டு பேருக்கும் பிரியம் செய்ய விரும்பி இரண்டு உருவங்களுடன் ஒருவருக் கொருவர் அறியாமலிருக்கும்படி இரண்டுபேருடைய வீட்டிற்கும் சென்றார்.

86. 27-29. உதாரசித்தனை ஜனகமகாராஜன் அஸத்துக்களுக்குக் கேட்கவும் எட்டாதவர்களும் தனது வீட்டிற்கு வந்தவர்களும் அங்கு போடப்பட்ட உத்தம ஆஸனங்களில் சுகமாக உட்கார்ந்தவர்களுமாகிய அவர்களை மிகுந்த பக்தியுடன் மகிழ்ச்சி பொங்கக் கண்களில் ஆனந்தக்கண்ணீர் ததும்பக் கால்களை அலம்பி உலகைப் புனிதமாக்கும் அந்த ஜலத்தைக் குடும்பத்தாருடன் சிரசில் தரித்து ஸர்வேசுவரர்களான அவர்களைச் சந்தனம், மாலை, வஸ்திரம், அலங்காரம், தூபம், தீபம், அர்க்கியம், பசு, காளை இவைகளைக் கொடுத்துப் பூஜை செய்தார்.

36. 30. பிறகு எல்லோருக்கும் திருப்தியாக போஜனம் செய்வித்து இனிமையான சொற்களால் மகிழ்வித்து பகவானுடைய பாதங்களைத் தன் மடியிலெடுத்து வைத்து மெதுவாகப் பிடித்துக்கொண்டு பின்வருமாறு சொன்னார்.

வனுமான பஹ...
னைப் போலவே) இரு... तान् ।

86. 29. प्रवृद्धभक्तिरुद्धर्ष ।

राजोवाच—

दिनानि कतिचिद् भूमन् गृहान् नो निवसद्द्विजैः ।
समेतः पादरजसा पुनीहीदं निमेः कुलम् ॥ ८६.३६ ॥

इत्युपामंत्रितो राज्ञा भगवाँल्लोक-भावनः ।
उवास कुर्वन् कल्याणं मिथिला-नरयोषिताम् ॥ ८६.३७ ॥

श्रुतदेवोऽच्युतं प्राप्तं स्वगृहाञ्जनको यथा ।
नत्वा मुनीन् सुसंहृष्टो धुन्वन् वासो ननर्त ह ॥ ८६.३८ ॥

तृणपीठबृसीष्वेता-नानीतेषूपवेश्य सः ।
स्वागतेनाभिनन्द्यांघ्रीन् सभार्योऽवनिजे मुदा ॥ ८६.३९ ॥

फलार्हणोशीर-शिवामृतांबुभि-
मृदा सुरभ्या तुलसीकुशांबुजैः ।
आराधयामास यथोपपन्नया
सपर्यया सत्त्वविवर्धनान्धसा ॥ ८६.४१ ॥

அரசன் கூறியது—

86. 36. எங்கும் நிறைந்தவரே! சில நாட்கள் பிராம்மணர்களுடன் கூட எங்கள் கிருகத்தில் தங்கியிருந்து உமது பாததூளியால் இந்த நிமிசக்ரவர்த்தியின் குலத்தைப் புனிதமாக்கவேண்டும்.

86. 37. அரசனால் இவ்வாறு பிரார்த்திக்கப்பட்ட லோகபாவனரான பகவான் மிதிலாபுரத்திலுள்ள புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் மங்களத்தைச் செய்துகொண்டு அவ்வாறே தங்கியிருந்தார்.

86. 38. சுருததேவரும் தமது வீட்டிற்கு வந்த பகவானையும் முனிவர்களையும் ஜனகமகாராஜர் செய்ததுபோலவே நமஸ்கரித்து வஸ்திரங்களை வீசி ஆனந்தப் பெருக்கால் கூத்தாடினார்.

86. 39. அங்கு கொண்டுவரப்பட்ட தர்ப்பாஸனங்களிலும் பலகைகளிலும் அவர்களை அமரச்செய்து நல்வரவு கூறி மகிழ்வித்துப் பத்தினியுடன் சந்தோஷம் பொங்க அவர்கள் கால்களை அலம்பினார்.

86. 41. பழங்களாலும், சந்தனம் தூபம் தீபம் முதலிய உபசாரங்களாலும், விளாமிச்சம் வேரால் வாசனை யுள்ளதாகச் செய்யப்பட்ட அமிருதத்துக் கொப்பான ஜலத்தாலும், சுகந்த திரவியங்களாலும், துளஸியாலும் தர்ப்பையாலும் தாமரைப் புஷ்பங்களாலும் ஸத்துவ குணத்தை விருத்தி செய்யும் ஆகாரத்தாலும் சிரம மில்லாமல் கிடைக்கக்கூடிய பூஜா திரவியங்களாலும் ஆராதித்தார்.

श्रुतदेव उवाच—

नाद्य नो दर्शनं प्राप्तः परं परमपूरुषः।
यहींदं शक्तिभिः सृष्ट्वा प्रविष्टो ह्यात्मसत्तया ॥ ८६.४४ ॥

हृदिस्थोऽप्यतिदूरस्थः कर्मविक्षिप्त-चेतसाम्।
आत्मशक्तिभि-रग्राह्योऽप्यन्त्युपेत-गुणात्मनाम् ॥ ८६.४७ ॥

स त्वं शाधि स्वभृत्यान् नः किं देव करवाम हे।
एतदन्तो नृणां क्लेशो यद् भवानक्षिगोचरः ॥ ८६.४९ ॥

श्रीभगवानुवाच—

ब्रह्मंस्तेऽनुग्रहार्थाय संप्राप्तान् विद्ध्यमून् मुनीन्।
संचरन्ति मया लोकान् पुनन्तः पादरेणुभिः ॥ ८६.५१ ॥

न ब्राह्मणान्मे दयितं रूपमेतच्चतु-र्भुजम्।
सर्ववेदमयो विप्रः सर्वदेवमयो ह्यहम् ॥ ८६.५४ ॥

சுருத தேவர் கூறியது—

86. 44. புருஷோத்தமரான நீங்கள் இன்றுதான் எனக்குத் தரிசனம் அளித்தீர்கள் என்பதில்லை. எப்பொழுது இந்தப் பிரபஞ்சத்தைச் சக்திகளால் சிருஷ்டித்துத் தாங்கள் அதனுள் ஸத்ருபியாகப் பிரவேசித்தீர்களோ அப்போது முதல் (எல்லா இடத்திலும் விளங்கவில்லையா ?)

86. 47. செயல்களில் மனதைச் சிதறவிட்டவர்களுக்கு இருதயத்தி லிருந்த போதிலும் தாங்கள் வெகுதூரத்தில் இருக்கிறீர்கள். ஆத்ம சக்திகளான அஹங்காரம் முதலியவற்றால் மறைக்கப்பட்டு அறிய முடியாதவரா யிருந்தாலும் சிரவணம் கீர்த்தனம் முதலியவற்றால் திருந்திய மனதுடையவர்களுக்குப் பக்கத்திலேயே இருக்கிறீர்கள்.

86. 49. தேவதேவா! அப்படிப்பட்ட நீங்கள் அடியார்களாகிய எங்களுக்கு நாங்கள் செய்யவேண்டியதைக் கட்டளையிட் டருளவேண்டும். மனிதர்களுக்குத் தாங்கள் கண்ணெதிரில் தோன்றினால் அத்துடன் அவர்கள் கஷ்டம் முடிவடைந்து விட்டது.

ஸ்ரீ பகவான் கூறியது—

86. 51. பிராம்மணரே! இம் முனிவர்களை உமக்கு அனுக்கிரகம் செய்வதற்காகவே வந்தவர்களாகத் தெரிந்துகொள்ளும். பாததூளிகளால் உலகங்களைப் பாவனமாக்கிக்கொண்டு இவர்கள் என்னுடன் சஞ்சரிக்கிறார்கள்.

86. 54. பிராம்மணர்களைக்காட்டிலும் நான்கு கைகளையுடைய இந்த ரூபம் கூட எனக்குப் பிரியமானதன்று. பிராம்மணன் ஸர்வ வேதஸ்வரூபீ. நான் ஸர்வ தேவஸ்வரூபீ.

86. 44. यदिदं शक्तिभिः। 86. 49. करवाम ते।

तस्माद् ब्रह्मऋषीनेतान् ब्रह्मन् मच्छ्रद्धयार्चय ।
एवं चेदर्चितोऽस्म्यद्धा नान्यथा भूरि-भूतिभिः ॥ ८६.५७ ॥

श्रीशुक उवाच—

स इत्थं प्रभुणाऽऽदिष्टः सहकृष्णान् द्विजोत्तमान् ।
आराध्यैकात्म-भावेन मैथिलश्चाप सद्गतिम् ॥ ८६.५८ ॥

एवं स्वभक्तयो राजन् भगवान् भक्तभक्तिमान् ।
उषित्वाऽऽदिश्य सन्मार्गं पुनर्द्वारवतीमगात् ॥ ८६.५९ ॥

इति दशमस्कन्धे श्रुतदेवानुग्रहो नाम
षडशीतितमोऽध्यायः ॥

---

86. 57. பிராம்மணரே! ஆகையால் இந்தப் பிரம்மரிஷிகளை என்னைப்போலவே எண்ணிச்சிரத்தையுடன் பூஜை செய்யும். அப்படிச் செய்தால் நானே நேரில் அர்ச்சிக்கப் பட்டவனாகிறேன். அப்படிச் செய்யாமல் எவ்வளவு அதிகமான திரவியங்களைக் கொண்டு பூஜித்தாலும் நான் பூஜிக்கப்பட்டவனாகமாட்டேன்.

ஸ்ரீ சுகர் கூறியது—

86. 58. அந்தப் பிராம்மணர் பகவானால் இவ்வாறு உபதேசிக்கப்பட்டு கிருஷ்ணனுடன் பிராம்மணோத்தமர்களை பேதமில்லாமல் ஆராதனை செய்து ஸத்கதியடைந்தார். மிதிலை யரசனும் அவ்வாறே யடைந்தார்.

86. 59. அரசே! பக்தர்களிடத்தில் பக்தியுடைய பகவான் மிதிலையில் வசித்துத் தன் இருபக்தர்களுக்கும் இவ்வாறு ஸன்மார்க்கத்தை உபதேசித்து மீண்டும் துவாரகை சென்றார்.

இங்ஙனம் தசமஸ்கந்தத்தில் சுருததேவானுக்ரஹம்
எனப் பெயர் பெற்ற எண்பத்தாறுவது
அத்தியாயம் முற்றும்.

श्रुतिगीता

परीक्षिदुवाच—

ब्रह्मन् ब्रह्मण्यनिर्देश्ये निर्गुणे गुणवृत्तयः ।
कथं चरन्ति श्रुतयः साक्षात् सदसतः परे ॥ ८७.१ ॥

श्रीशुक उवाच—

बुद्धीन्द्रिय-मनः-प्राणान् जनानामसृजत् प्रभुः ।
मात्रार्थं च भवार्थं च आत्मनेऽकल्पनाय च ॥ ८७.२ ॥

सैषा ह्युपनिषद्ब्राह्मी पूर्वेषां पूर्वजैर्धृता ।
श्रद्धया धारयेद्यस्तां क्षेमं गच्छेदकिंचनः ॥ ८७.३ ॥

अत्र ते वर्णयिष्यामि गाथां नारायणान्विताम् ।
नारदस्य च संवाद-मृषे-र्नारायणस्य च ॥ ८७.४ ॥

एकदा नारदो लोकान् पर्यटन् भगवत्प्रियः ।
सनातनमृषिं द्रष्टुं ययौ नारायणाश्रमम् ॥ ८७.५ ॥

சுருதிகீதை

பரீக்ஷித்து கூறியது—

87. 1. பிரம்மஸ்வரூபியே! காரிய காரணங்களுக்கப்பாற்பட்டதாயும் குணங்களுடன் சம்பந்தப் படாததாயும் குறிப்பிட முடியாததாயு மிருக்கும் பிரம்மத்தினிடத்தில் குணங்களைப் பற்றிக் கூறப்புகும் வேதங்கள் எப்படிப் பிரவிருத்திக்கின்றன ?

ஸ்ரீசுகர் கூறியது—

87. 2. ஸர்வேசுவரன் ஜீவர்களுக்கு விஷயங்களை யநுபவிக்கவும் பிறந்து கர்மங்களைச் செய்யவும் இவ் வுலகைவிட்டுச் சென்ற ஜீவன் அவ்வனுபவத்தின் பயனாய் முடிவில் பிரம்மத்தினிடம் கற்பிக்கப்பட்ட உலகைப் பொய்யெனக் கண்டு கற்பனையைக் கடந்த நிலையை அடையவுமே புத்தி இந்திரியங்கள் மனது பிராணன் இவைகளைச் சிருஷ்டித்தார்.

87. 3. இங்கு கூறப்படும் அந்த பிரம்மத்தைப்பற்றிய உபநிஷத்து முன்னோர்க்கும் முன்னோர்களால் ஆதரிக்கப் பட்டது. எந்த மனிதன் அந்த உபநிஷத் வித்தையைச் சிரத்தையுடன் ஏற்றுக்கொள்கிறானோ அவன் தேகம் முதலிய கட்டுகளேதுமற்றவனாய் மோக்ஷத்தை யடைவான்.

87. 4. இவ்விஷயத்தில் நாரதருக்கும் நாராயண ரிஷிக்கு மிடையில் நிகழ்ந்ததும் நாராயணராலேயே கூறப்பட்டதுமான ஸம்வாதம் ஒன்றுண்டு. அதன் வரலாற்றை உமக்கு வர்ணிக்கிறேன்.

87. 5. ஒரு சமயம் பகவானுக்குப் பிரியரான நாரதர் உலகங்களைச் சுற்றிக்கொண்டு ஸநாதனரான ரிஷியைக் காண நாராயணாசிரமத்திற்குச் சென்றார்.

योो वै भारतवर्षेऽस्मिन् क्षेमाय स्वस्तये नृणाम् ।
धर्मज्ञानशमोपेत-माकल्पादास्थित-स्तपः ॥ ८७.६ ॥

तत्रोपविष्ट-मृषिभिः कलापग्रामवासिभिः ।
परीतं प्रणतोऽपृच्छ-दिदमेव कुरूद्वह ॥ ८७.७ ॥

तस्मै ह्यवोचद्भगवानृषीणां शृण्वतामिदम् ।
यो ब्रह्मवादः पूर्वेषां जनलोक-निवासिनाम् ॥ ८७.८ ॥

श्रीभगवानुवाच—

स्वायंभुव ब्रह्मसत्रं जनलोकेऽभवत् पुरा ।
तत्रस्थानां मानसानां मुनीना-मूर्ध्वरेतसाम् ॥ ८७.९ ॥

श्वेतद्वीपं गतवति त्वयि द्रष्टुं तदीश्वरम् ।
ब्रह्मवादः सुसंवृत्तः श्रुतयो यत्र शेरते ।
तत्र ह्ययमभूत्प्रश्नस्त्वं मां यमनुपृच्छसि ॥ ८७.१० ॥

---

87. 6, அந்த நாராயண ரிஷி இந்த பாரதவர்ஷத்திலுள்ள ஜனங்களுடைய க்ஷேமத்திற்காகவும் மோக்ஷத்திற்காகவும் தர்மம் ஞானம் சாந்தி இவைகளுடன் கூடிய தவத்தைக் கல்பத்தின் ஆரம்பித்தி லிருந்தே செய்துவருகிறார்.

87. 7. கௌரவசிரேஷ்டரே! அந்த நாராயணாசிரமத்தில் கலாப கிராமவாசிகளான ரிஷிகள் சூழ வீற்றிருந்த நாராயணரை வணங்கி நாரதர் (உம்மால் கேட்கப்பட்ட) இதே கேள்வியைத்தான் கேட்டார்.

87. 8. மற்ற ரிஷிகள் கேட்டுக்கொண் டிருக்கையில் பகவான் நாராயண ரிஷி நாரதருக்குக் கூறியதாவது: "பிரம்மத்தைப் பற்றிய இதே ஆராய்ச்சிதான் ஜன லோகத்தில் வசிக்கும் முன்னோர்களால் செய்யப்பட்டது."

ஸ்ரீ பகவான் கூறியது—

87. 9. நாரதரே! முன்னொருகாலத்தில் ஜனலோகத்தில் வசித்த பிரம்மாவின் மானஸ புத்திரர்களும் ஜிதேந்திரியர்களுமான முனிவர்களுடைய பிரம்மஸத்திரம் என்ற யாகம் நடந்தது.

87. 10. ஆனால் நீர் அந்த சமயம் சுவேதத்துவீபப் பிரபுவாகிய அநிருத்தமூர்த்தி என்னும் என்னைத் தரிசிக்கச் சென்றிருந்தீர். அப்போதுதான் சுருதிகள் எதை நாடுகின்றனவோ, எதைப்பற்றி நீர் என்னிடத்தில் கேட்டீரோ அதே விஷயத்தைப் பற்றிய கேள்வி எழுந்து பிரம்மவிசாரம் நடந்தது.

तुल्य-श्रुततपः-शीला-स्तुल्यस्वीयारिमध्यमाः ।
अपि चक्रुः प्रवचन-मेकं शुश्रूषवोऽपरे ॥ ८७.११ ॥

सनन्दन उवाच—

स्वसृष्ट-मिदमापीय शयानं सह शक्तिभिः ।
तदन्ते बोधयांचक्रु-स्तल्लिंगैः श्रुतयः परम् ॥ ८७.१२ ॥

यथा शयानं सम्राजं वन्दिन-स्तत्पराक्रमैः ।
प्रत्यूषेऽभ्येत्य सुश्लोकै-र्बोधयन्त्यनुजीविनः ॥ ८७.१३ ॥

श्रुतयः ऊचुः—

जय जय जह्यजामजित दोषगृभीतगुणां
त्वमसि यदात्मना समवरुद्ध-समस्त-भगः ।
अगजगदोकसा-मखिलशक्त्यवबोधक ते
क्वचिदजयात्मना च चरतोऽनुचरे-न्निगमः ॥ ८७.१४ ॥

---

87. 11. (அங்கிருந்த எல்லோரும்) வித்தை தவம் சீலம் இவைகளில் சமமான வர்களாகவும், தன்னைச் சேர்ந்தவன் எதிராளி நடுவலவன் என்ற (வித்தியாசமின்றி) எல்லோரையும் சமமாய்ப் பார்ப்பவர்களாகவும் (சித்த புருஷர்களாகவும்) இருந்த போதிலும் ஒருவரைச் சொல்லச் சொல்லி மற்றவர்கள் கேட்பதென ஏற்பாடு செய்து கொண்டார்கள்.

ஸநந்தனர் கூறியது—

87. 12. தன்னால் சிருஷ்டிக்கப்பட்ட இப்பிரபஞ்சத்தைப் பிரளய காலத்தில் ஸம்ஹாரம் செய்துவிட்டுச் சக்திகளுடன் யோகநித்திரையி லாழ்ந்திருந்த பரமாத்மாவைப் பிரளயகாலத்தின் முடிவில் (அவருடைய முதல் மூச்சுக்காற்றுடன் வெளிவந்த) வேதங் கள் அவருடைய அடையாளங்களைக் கூறும் வாக்கியங்களால் (துதித்து) எழுப்பின.

87. 13. நித்திரையிலிருக்கும் ஒரு சக்கரவர்த்தியை அவரை யண்டிப் பிழைக்கும் துதி பாடகர்கள் விடியற்காலத்தில் வந்து நல்ல கீர்த்தனங்களால் அவருடைய பராக் கிரமங்களைப் பாடித் துயிலெழச் செய்வதுபோல் (வேதங்கள் பரமாத்மாவைத் துதித்து எழுப்பின).

சுருதிகள் கூறியது—

87. 14. மாயையால் ஜயிக்கப்படாதவரே! சராசரப் பிரபஞ்சத்திலுள்ள ஜீவ கோடிகளுடைய ஆனந்த ஸ்வரூபத்தை மறைப்பதற்காக முக் குணங்களை ஏற்றுக் கொண்ட மாயையை நாசம் செய்யவேண்டும். உமது வெற்றி விளங்குவதாக! வெற்றி விளங்குவதாக! உம்மாலேயே நீர் ஸமஸ்த ஐசுவரியங்களும் நிரம்பியவராக இருக் கின்றீர். எல்லாச் சக்திகளையும் எழுப்பி விடுகிறவரே! சில சமயம் மாயையுடன் கூடியும் சில சமயம் (மாயையுடன் கூடாமல்) தனித்திருந்தும் லீலைபுரியும் உம்மையே வேதங்களாகிய நாங்கள் போற்றுகிறோம்.

बृहदुपलब्धमेतदवयंत्यवशेषतया
यत उदयास्तमयौ विकृते-र्मृदि वाविकृतात्।
अत ऋषयो दधु-स्त्वयि मनोवचनाचरितं
कथमयथा भवन्ति भुवि दत्तपदानि नृणाम् ॥ ८७.१५ ॥

इति तव सूरयस्त्र्यधिपतेऽखिललोकमल-
क्षपण-कथामृताब्धि-मवगाह्य तपांसि जहुः।
किमुत पुनः स्वधामविधुताशय-कालगुणाः
परम भजन्ति ये पदमजस्र-सुखानुभवम् ॥ ८७.१६ ॥

---

87. 15. காணப்பட்ட இந்த ஜகத்தைப் பரப்பிரம்மாகிய தங்களுடைய அம்சம் என்றே (வித்வான்கள்) அறிகிறார்கள். ஏனென்றால் இதற்கு உற்பத்தியும் நாசமும் மாறுபடில்லாத உம்மிடமிருந்தே உண்டாகின்றன. அதெப்படி யெனில் (மண்ணின்) வேற்றுருவான குடம் முதலியவற்றிற்கு மண் காரணமாவது போலாம். ஆகையால் (வேதங்களும் அவற்றை யறிந்த) ரிஷிகளும் தங்களிடத்திலேயே மனத்தின் செயலையும் வாக்கின் செயலையும் அர்ப்பணம் செய்கிறார்கள். மனிதர்களால் வைக்கப்பட்ட காலடிகள் (கல்லின் மேலாயினும் மண்ணின் மேலாயினும்) எவ்விதம் பூமியில் வைக்கப்படாதன ஆகும்? (அவ்வாறே எந்த தேவதைகளைத் துதித்தாலும் தங்களையே தான் துதித்ததாகும்.)

87. 16. முக்குணவடிவான மாயையை ஆட்டிவைக்கும் பிரபுவே! இவ்வாறு தாங்களே ஜகத்காரணமென்று அறிந்து விவேகிகள் உலகனைத்தின் பாவத்தையும் போக்குகிற தங்களுடைய கீர்த்தியாகிற அமுதக் கடலில் மூழ்கித் துன்பங்களைப் போக்கிக் கொள்ளுகிறார்கள். அப்படியிருக்க ஸ்வரூப ஞானத்தினால் எந்த உத்தமாதிகாரிகள் மனதைப் பற்றிய விருப்புவெறுப்புகளையும் காலத்தைப்பற்றிய மூப்பு மரணம் முதலியவைகளையும் கடந்து அகண்டானந்த அனுபவரூபமான தங்கள் ஸ்வரூபத்தை பஜிக்கின்றனரோ அவர்களைப் பற்றிச் சொல்லவேண்டுமா?

---

87. 15. ஓ. (வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம்) எங்ஙனம் மண்ணாலான வேறுபாடெல்லாம் பேசுமிடத்துப் பெயரளவிலேயாமோ மண் ஒன்றே உண்மையோ அங்ஙனம். —சா. உப. 6. 1. 4.

87. 16. ஓ (யதா புஷ்கர-பலாச ஆபோ ந ச்லிஷ்யந்தே ஏவமேவம்விதி பாபம் கர்ம ந ச்லிஷ்யதே!) எங்ஙனம் தாமரையிலையில் தண்ணீர் ஒட்டாதோ அங்ஙனம் ஞானத்தை உணர்ந்தவனிடம் பாவச் செயல் ஒட்டாது. சா. உப. 4. 14. 3.

स्वकृतपुरेष्वमीष्वबहिरन्तर-संवरणं
तव पुरुषं वदन्त्यखिल-शक्तिधृतोंशकृतम् ।
इति नृगतिं विविच्य कवयो निगमावपनं
भवत उपासतेऽङ्घ्रि-मभवं भुवि विश्वसिताः ॥ ८७.२० ॥

दुरधिगमात्मतत्त्व-निगमाय तवात्ततनो-
श्चरित-महामृताब्धि-परिवर्त-परिश्रमणाः ।
न परिलषन्ति केचिदपवर्ग-मपीश्वर ते
चरण-सरोज-हंसकुल-सङ्गविसृष्ट-गृहाः ॥ ८७.२१ ॥

निभृत-मरुन्मनोक्ष-दृढयोगयुजो हृदि य-
न्मुनय उपासते तदरयोऽपि ययुः स्मरणात् ।
स्त्रिय उरगेन्द्र-भोग-भुजदण्ड-विषक्त-धियो
वयमपि ते समाः समदृशोऽङ्घ्रि-सरोज-सुधाः ॥ ८७.२३ ॥

---

87. 20. தன்னுடைய கர்மத்தின் பயனுக எடுத்த சரீரங்களில் போக்தாவாக இருக்கும் ஜீவனைக் காரிய காரணப் பிரபஞ்சத்தால் மறைக்க முடியாதவனுகவும் ஸர்வ சக்திகளுக்கும் உறைவிடமா யிருக்கும் தங்களுடைய அம்சத்தால் ஆகியவனுகவும் கூறுகிறுர்கள். இவ்வாறு ஜீவனுடைய தத்துவத்தை ஆராய்ந் தறிந்த ஞானிகள் எல்லாச் செயல்களையும் அர்ப்பணம் செய்தற்குரிய ஸ்தானமாகவும் பிறவிப் பிணியைப் போக்கவல்லதாகவும் உள்ள தங்கள் திருவடியை இப்புவியில் நம்பிக்கையுடன் உபாசிக்கிறுர்கள்.

87. 21. ஈசா! அறியமுடியாத ஆத்மதத்துவத்தை அறிவிப்பதற்காக லீலா சரீரங்களை யெடுத்த தங்களுடைய சரித்திரமாகிற அமுதக் கடலில் மூழ்கிச் சாந்தி யெய்திய சிலர் தங்களுடைய திருவடித்தாமரைகளில் வசிக்கும் ஹம்ஸங்கள் போன்ற ஞானிகளின் ஸங்கத்தையே நாடுபவர்களாய் வீட்டைவிட்டுக் கிளம்புகின்றனர். அவர்கள் மோக்ஷத்தையும் விரும்புவதில்லை.

87. 23. பிராணன், மனது, இந்திரியங்கள் இவைகளை யடக்கித் திடமான யோகாப்பியாசத்தைச் செய்கின்ற முனிவர்கள் மனதில் எந்தப் பிரம்ம தத்துவத்தை உபாசிக்கின்றனரோ அதைப் பகைத்தவர்களும்கூட இடைவிடாத நினைவால் அடைந்திருக்கின்றனர். சிறந்த ஸர்ப்பத்தைப்போல் (திரண்டு உருண்டு நீண்டு) இருக்கும் தங்களுடைய கைகளின் ஆலிங்கனத்தில் பற்று வைத்த ஸ்திரீகளும் (அடைந்திருக்கின்றனர்). தங்கள் திருவடித் தாமரையை நாடித் தங்களை எங்கும் சமமாகக் காணும் வேதாபிமான தேவதைகளாகிற நாங்களும் (அடைகிறோம்). தங்களுக்கு எல்லோரும் ஸமம்.

---

87. 20. ஒ. (ஸ ய ஏஷோऽணிமைததாத்ம்யம் இதம் ஸர்வம் தத் ஸத்யம் ஸ ஆத்மா தத்-த்வமஸி ச்வேதகேதோ இதி) எது அணுமாத்திரமான ஸூக்ஷ்ம வஸ்துவோ அதையே ஆத்மாவாய்க் கொண்டது இது எல்லாம். அதுவே ஸத்தியம், அதுவே ஆத்மா, சுவேதகேதுவே, அதுவே நீயாக உளாய். —சா. உப. 6. 9. 4.

87. 23. ஒ. வைரேண பூதபாப்மானஸ் - தமாபு - ரனுசிந்தயா | காமாத்-த்வேஷாத்-பயாத்-ஸ்நேஹாத்-யதா பக்த்யேச்வரே மன : || —பாக. 7. 1. 19.

तव परि ये चरन्त्यखिल-सत्त्व-निकेततया
त उत पदाक्रमन्त्यविगणय्य शिरो निर्ऋतेः।
परिवयसे पशूनिव गिरा विबुधानपि तां-
स्त्वयि कृतसौहृदाः खलु पुनन्ति न ये विमुखाः ॥ ८७.२७॥

न घटत उद्भवः प्रकृति-पूरुषयो-रजयो-
रुभय-युजा भवन्त्यसुभृतो जल-बुद्बुदवत्।
त्वयि त इमे ततो विविधनाम-गुणैः परमे
सरित इवार्णवे मधुनि लिल्यु-रशेष-रसाः ॥ ८७.३१ ॥

---

87. 27. எல்லா ஜீவராசிகளிடத்திலும் உறைபவராக உங்களை எவர்கள் பூஜிக்கின்றார்களோ அவர்கள் மரணத்தைப் பொருட் படுத்தாமல் மிருத்யுவின் தலைமேல் காலை வைத்து மேலே செல்லுகின்றனர். எவர்கள் உங்களை லக்ஷியம் செய்வதில்லையோ அவர்களை எவ்வளவு வித்துவான்களாயிருந்தாலும் விதிவிலக்கு வடிவான கயிற்றால் பசுக்களைக் கட்டுவதுபோல் கட்டிவைக்கின்றீர். உங்களிடத்தில் அன்பு செய்பவர்களே யன்றோ (தங்களையும் மற்றவர்களையும்) புனிதமாக்குகிறார்கள்.

87. 31. உற்பத்தி யில்லாத பிரகிருதிக்கோ புருஷனுக்கோ உற்பத்தி என்பது ஒவ்வாது. இரண்டினுடைய (பரஸ்பர அத்யாஸ, ஸம்பந்தத்தால் பிராணனைத் தரிக்கும் ஜீவர்கள் (நீரும் காற்றும் கலந்து தோன்றும்) நீர்க்குமிழிகள்போல் தோன்றுகிறார்கள். அதனால்தான் இந்த ஜீவர்கள் (ஸுஷுப்தியிலும் பிரளயத்திலும்) தேனில் எல்லாப் புஷ்ப ரஸங்களும் ஒடுங்குவது போலவும் கடலில் நதிகள் போயொடுங்குவது போலவும் பரம்பொருளாகிய தங்களிடத்தில் பல பெயர்கொண்ட காரியகாரண உபாதிகளுடன் லயமடைகின்றனர்.

---

87. 31. ஓ. யதா ஸோம்ய மது மதுக்ருதோ நிஸ்திஷ்டந்தி நாநாத்யயாநாம் வ்ருக்ஷாணாம் ரஸான் ஸமவஹார-மேகதாம் ரஸம் கமயதி தே யதா தத்ர ந விவேகம் லபந்தே அமுஷ்யாஹம் வ்ருக்ஷஸ்ய ரஸோஸ்மி அமுஷ்யாஹம் வ்ருக்ஷஸ்ய ரஸோऽஸ்மீத்-யேவ-மேவ கலு ஸோம் யேமா: ஸர்வா: ப்ரஜா: ஸதி ஸம்பத்ய ந விது: ஸதி ஸம்பத்யாமஹ இதி ।

குழந்தாய்! தேனீக்கள் எங்ஙனம் பல திக்குகளிலுள்ள மரங்களினின்று ரஸங்களை சேகரித்துப் பின் ஒரு ரஸமான தேனைச் செய்கின்றனவோ, அந்த ரஸங்கள் எங்ஙனம் அறியாவோ "நான் இந்த மரத்தின் ரஸம், நான் இந்த மரத்தின் ரஸம்" என்று, அங்ஙனமே குழந்தாய், இப்பிராணிகள் எல்லாம் ஸத்தை அடைந்து (ஆழ்ந்த தூக்கத்தில்) ஸத்தை அடைந்துள்ளோம் என்று அறியமாட்டார்கள். —சா. உப. 6. 9. 1-2.

ஓ. (யதா நத்ய: ஸ்யந்தமானா: ஸமுத்ரே ऽஸ்தம் கச்சந்தி நாமரூபே விஹாய । ததா வித்வான் நாமரூபாத் விமுக்த: பராத்பரம் புருஷமுபைதி திவ்யம் ॥) எங்ஙனம் பெருகியோடும் நதிகள் நாம ரூபங்களை யிழந்து ஸமுத்திரத்தில் மறைகின்றனவோ அங்ஙனம் ஞானி நாமரூபங்களினின்று விடுபட்டு உயர்ந்ததற்கெல்லாம் உயர்ந்த தேஜோமயமான புருஷனை அடைகிறான். —மு. உப. 3. 2. 8.

विजित-हृषीक-वायुभि-रदान्तमन-स्तुरगं
य इह यतन्ति यन्तु-मतिलोल-मुपायखिदः ।
व्यसन-शतान्विता-स्समपहाय गुरोश्चरणं
वणिज इवाज विशन्त्यकृत-कर्णधरा जलधौ ॥ ८७.३३ ॥

भुवि पुरुपुण्यतीर्थ-सदनान्यृषयो विमदा-
स्त उत भवत्पदांबुज-हृदोऽघ-भिदङ्घ्रिजलाः ।
दधति सकृन्मनस्त्वयि य आत्मनि नित्यसुखे
न पुनरुपासते पुरुषसारहरावसथान् ॥ ८७.३५ ॥

---

87. 33. பிறப்பற்றவரே! மிகவும் சஞ்சலமான இந்திரியங்களையும் பிராண வாயுவையும் வசப்படுத்திக்கொண்டு அடங்காத மனக் குதிரையை அடக்க எவர்கள் முயல்கிறார்களோ அவர்கள் குருவினுடைய சரண ஸேவையை விட்டு முயற்சிப்பார்களேயானால் அச் சாதனங்களால் சிரமத்தை மட்டும் அடைந்தவர்களாய் மாலுமியின்றிக் கப்பலேறிச் சமுத்திரத்தில் பிரயாணமான வியாபாரிகளைப் போல் நூற்றுக் கணக்கான கஷ்டங்களுக்குள்ளாகித் தவிப்பார்கள்.

87. 35. அகங்கார மற்றவர்களும் தங்களுடைய சரணாம்புஜத்தை மனத்திலிருத்தியவர்களும் தங்கள் பாததீர்த்தத்தால் பாவத்தைப் போக்குபவர்களும் ஆகிய ரிஷிகள் கூட இவ்வுலகில் மிகப் புண்ணியமான தீர்த்தங்களையும் க்ஷேத்திரங்களையும் சேவிக்கின்றனர். நித்தியானந்த ஸ்வரூபியும் அந்தராத்மாவுமாகிய தங்களிடத்தில் மனதைச் செலுத்தியவர்கள் புருஷனுடைய வீரியத்தை விணுக்கும் வீடுகளை நாடுவதில்லை.

---

87. 33. ஓ. (தத்விஜ்ஞானார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத் ஸமித்பாணி: ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம் ।) பரம்பொருளை உணர்ந்து உய்யும் பொருட்டு ஸமித்தைக் கையுறையாய்க் கொண்டு வேதக் கேள்வியிற் சிறந்தவரும் பிரம்மநிஷ்டருமான குருவையே தேடியடைய வேண்டும். —மு. உப. 1. 2. 12.

ஓ. (நைஷா தர்க்கேண மதிராபனேயா ப்ரோக்தான்யேனைவ ஸுஜ்ஞானாய ப்ரேஷ்ட ।)

87. 35. ஓ. (தீர்த்தீ குர்வந்தி தீர்த்தானி ஸுகர்மீ-குர்வந்தி கர்மாணி ஸச்சாஸ்த்ரீ குர்வந்தி சாஸ்த்ராணி தன்மயா: ।) பகவத் ஸ்வரூபிகளாய் விளங்கும் பக்தர்கள் தாங்கள் வசிப்பதால் தீர்த்தங்களைத் தீர்த்தங்களாக்குகின்றனர், தாங்கள் செய்வதால் செயல்களை நற்செயல்களாக்குகின்றனர், தாங்கள் பின்பற்றுவதால் சாஸ்திரங்களை நற்சாஸ்திரங்களாக்குகின்றனர். —நாரதபக்தி ஸூத்ரம்

न यदिद्-मग्र आस न भविष्यदतो निधना-
दनुमितमन्तरा त्वयि विभाति मृषैकरसे।
अत उपमीयते द्रविणजाति-विकल्पपथै-
र्वितथ-मनो-विलासमृत-मित्यवयन्त्यबुधाः ॥ ८७.३७ ॥

यदि न समुद्धरन्ति यतयो हृदि कामजटा
दुरधिगमोऽसतां हृदि गतोऽस्मृत-कण्ठमणिः।
असुतृपयोगिना-मुभयतोऽप्यसुखं भगव-
न्ननपगतान्तका-दनधिरूढ-पदाद्भवतः ॥ ८७.३९ ॥

त्वदवगमी न वेत्ति भवदुत्थ-शुभाशुभयो-
र्गुणविगुणान्वयांस्तर्हि देहभृतां च गिरः।
अनुयुग-मन्वहं सगुण गीत-परंपरया
श्रवणभृतो यतस्त्व-मपवर्ग-गति-र्मनुजैः ॥ ८७.४० ॥

---

87. 37. எக்காரணத்தால் இப்பிரபஞ்சம் சிருஷ்டிக்குமுன் இருக்கவில்லையோ பிரளயத்துக்குப் பின்னும் இருப்பதில்லையோ அக்காரணத்தால் இடைக்காலத்திலும் இரண்டற்ற ஆனந்த ரூபியாகிய தங்களிடத்தில் தோன்றுவதும் பொய்யே என்பது நிச்சயம். ஆகையால்தான் மண்முதலிய பொருள்களின் வேற்றுருவான குடம் முதலிய வற்றுடன் (இப்பிரபஞ்சத்திற்கு) உவமை கூறப்படுகிறது. ஆனால் விவேகமில்லாதவர் கள் இருப்பின்றி மனோவிலாஸமாக மட்டுமுள்ள இவ்வுலகை உண்மையென்று நம்பு கிறார்கள்.

87. 39. பகவானே! ஸாதன மார்க்கங்களில் முயலும் யதிகளும் மனதிலிருக் கும் காமங்களுக்கு வேர்போன்ற வாசனைகளைக் களைந்தெறியவில்லை யென்றால் அஸத் துகளைப் போன்றவர்களே யாவர். கழுத்தி லணிந்திருக்கும் ரத்னத்தை மறந்துவிட் டவனைப்போல் உள்ளத்தி லுறையும் உம்மை அவர்கள் அறியமாட்டார்கள். பிராண னுக்கும் இந்திரியங்களுக்கும் திருப்தியைத் தேடும் கபடயோகிகளுக்கு விட்டு விலகாத ஸம்ஸாரமாகிற யமனிடமிருந்தும் அறியப்படாத பதவியிலுள்ள உங்களிட மிருந் தும் இரண்டு வகையிலும் துன்பமேதான் உண்டாகின்றது.

87. 40. ஆறுகுண ஐசுவரியமுள்ள பிரபுவே! உம்மை யறிந்தவன் புண்ணிய பாவங்களின் பலனாகிய இன்ப துன்பங்களை அறியமாட்டான். அப்போது சரீராபிமானம் உள்ளவர்களுக்காக ஏற்பட்ட விதிவிலக்குகளையும் அறியமாட்டான். ஒவ்வொரு யுகத் திலும் பெரியோர்கள் செய்துள்ள உபதேச பரம்பரையை ஒவ்வொருநாளும் கேட்டு அவனால் மனதில் நீர் தியானிக்கப்படுவதால் நீர் அவனுக்கு மோக்ஷத்தை யளிக்கிறீர்.

---

87. 39. ஓ. (காமான் ய: காமயதே மன்யமான: ஸ காமபிர்ஜாயதே தத்ர தத்ர ।) எவன் எந்த ஆசைகளைப்பற்றியே சிந்தித்து விரும்பி நிற்கிறானோ அவன் (இறந்த பின்) அந்தந்த ஆசைகளுக்குத் தக்க இடங்களில் அந்தந்த ஆசைகளுடன் பிறக்கிறான்.
—மு. உப. 3. 2. 2:

द्युपतय एव ते न ययुरन्त-मनन्ततया
त्वमपि यदन्तराण्डनिचया ननु सावरणाः ।
ख इव रजांसि वान्ति वयसा सह यच्छ्रुतय-
स्त्वयि फलन्त्यतन्निरसनेन भवन्निधनाः ॥ ८७.४१

श्रीभगवानुवाच—

इत्यशेष-समाम्नाय-पुराणोपनिषद्रसः ।
समुद्धृतः पूर्वजातै-र्व्योमयानै-र्महात्मभिः ॥ ८७.४३ ॥

---

87. 41. சுவர்க்காதிபதிகளான இந்திரன் பிரம்மா முதலியவர்கள்கூடத் தங்களை முற்றும் உணர்ந்தவர்களல்லர். முடிவற்றவரா யிருப்பதால் தாங்களுங்கூடத் தங்களை யறியவில்லை. இது ஆச்சரியம். உங்களுடைய வயிற்றில் ஆவரணங்களுடன் கூடின பிரம்மாண்ட கோடிகள் ஆகாயத்தில் துகள்களைப்போல் காலவேகத்தால் ஏககாலத்தில் சுழல்கின்றன. அக்காரணத்தால் சுருதிகளும் (தங்களை நேரில் விளக்கமாட்டாமல்) தங்களைத்தவிர மற்றவைகளை இல்லை இல்லை யென்றுகூறித் தங்களிடத்திலேயே முடிவடைந்து தங்களிடத்திலேயே பயனுடையவைகளாக ஆகின்றன.

ஸ்ரீ பகவான் கூறியது—

87. 43. இவ்வாருக ஆதியில் பிறந்தவர்களும் ஆகாய வெளியில் சஞ்சரிப்பவர்களும் மஹாத்மாக்களுமான ஸநகாதி மகரிஷிகளால் ஸமஸ்த வேதபுராண உபநிஷத் ஸாரம் திரட்டி யளிக்கப் பட்டது.

---

87. 41. ஒ. (யதூர்த்வம் கார்க்கி திவோ யதர்வாக் ப்ருதிவ்யா யதந்தராத்யாவாப்ருதிவீ இமே யத் பூதம் பவச்ச பவிஷ்யச்ச) எது வானத்திற்கு மேலும் பூமிக்குக் கீழும் வானத்திற்கும் பூமிக்கும் இடையிலும் உள்ளதெனவும், எது இறந்த காலத்திலும் நிகழ் காலத்திலும் எதிர் காலத்திலும் உள்ளதெனவும் கூறப்படுகிறதோ அது. —ப்ரு. உப. 3. 8. 8.

பந்தமறு மெய்ஞ்ஞான மானமோனப்
பண்பொன்றை யருளி, அந்தப்பண்புக்கேதான்
சிந்தையில்லை நானென்னும் பான்மையில்லை
தேசமில்லை காலமில்லை திக்குமில்லை
தொந்தமில்லை நீக்கமில்லை பிரிவுமில்லை
சொல்லுமில்லை இராப்பகலாந் தோற்றமில்லை;
அந்தமில்லை ஆதியில்லை நடுவுமில்லை
அகமுமில்லை புறமுமில்லை யனைத்துமில்லை;
இல்லையில்லை யென்னினென்று மில்லாதல்ல
இயல்பாகி என்றுமுள்ள வியற்கையாகிச்
சொல்லரிய தன்மையதா யான்ருனென்னத்
தோன்ருதெல்லாம் விழுங்குஞ் சொருபமாகி
அல்லையுண்ட பகல்போல வவித்தை யெல்லா
மடையவுண்டு தடையறவுன்னறிவைத்தானே
வெல்லவுண்டிங் குன்னையுந் தானுகக்கொண்டு
வேதகமாய்ப் பேசாமை விளங்குந்தானே. —தாயுமானவர்.

नारद उवाच—

नमस्तस्मै भगवते कृष्णायामलकीर्तये ।
यो धत्ते सर्वभूताना-मभवायोशतीः कलाः ॥ ८७.४६ ॥

श्रीशुक उवाच—

इत्याद्य-मृषिमानम्य तच्छिष्यांश्च महात्मनः ।
ततोऽगादाश्रमं साक्षात् पितु-र्द्वैपानस्य मे ॥ ८७.४७ ॥

सभाजितो भगवता कृतासन-परिग्रहः ।
तस्मै तद्वर्णयामास नारायण-मुखाच्छ्रुतम् ॥ ८७.४८ ॥

योऽस्योत्प्रेक्षक आदिमध्यनिधने योऽव्यक्तजीवेश्वरो
यः सृष्ट्वेदमनुप्रविश्य ऋषिणा चक्रे पुरः शास्ति ताः ।
यं संपद्य जहात्यजामनुशयी सुप्तः कुलायं यथा
तं कैवल्य-निरस्त-योनि-मभयं ध्यायेदजस्रं हरिम् ॥ ८७.५० ॥

इति दशमस्कन्धे सप्ताशीतितमोऽध्यायः ॥

நாரதர் கூறியது—

87. 46. எவர் எல்லாப் பிராணிகளுடைய பிறவிப்பிணியையும் போக்குவதற்காக மனதைக் கவரும் மங்கள வடிவங்களைத் தரிக்கின்றாரோ அந்த மாசற்ற கீர்த்தியை யுடைய பகவானாகிய கிருஷ்ணனுக்கு நமஸ்காரம்.

ஸ்ரீ சுகர் கூறியது—

87. 47. இங்ஙனம் நாராயண ரிஷியையும் மகாத்மாக்களான அவருடைய சிஷ்யர் களையும் நாரதர் வணங்கி அங்கிருந்து என் பிதாவான ஸாக்ஷாத் வேதவியாஸருடைய ஆசிரமத்திற்குச் சென்றார்.

87. 48. பகவான் வேதவியாஸரால் உபசரிக்கப் பெற்று ஆசனத்திலிருந்து கொண்டு நாராயணர் வாக்கிலிருந்து கேட்ட அந்த சுருதி கீதையை அவருக்கு எடுத் துரைத்தார்.

87. 50. எவர் இந்தப் பிரபஞ்சத்தின் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார காரியங்களை ஏவுபவரோ, எவர் பிரகிருதிகளும் ஜீவர்களுக்கும் ஈசுவரரோ, எவர் இப்பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்து அனுப்பிரவேசம் செய்து ஜீவவடிவில் நின்று சரீரங்களை உண்டாக்கி அவைகளைக் காப்பாற்றுகிறாரோ, எவரை யடைந்து சரணாகதி செய்த ஜீவன் சுஷுப்தி யில் சரீராபிமானத்தை விடுவதுபோல் அவித்தையை விடுகிறானோ, மாயைக் கப்பால் தான் தானாகவே இருப்பவரும் எல்லா பயத்தையும் போக்குபவருமான அந்த ஸ்ரீ ஹரியை எப்போதும் தியானிக்க வேண்டும்.

இங்ஙனம் தசமஸ்கந்தத்தில் எண்பத்தேழாவது
அத்தியாயம் முற்றும்.

वृकासुरकथा

राजोवाच—

देवासुरमनुष्येषु ये भजन्त्यशिवं शिवम्।
प्रायस्ते धनिनो ब्रह्मन् न तु लक्ष्म्याः पतिं हरिम् ॥ ८८.१ ॥

एतद्वेदितु-मिच्छामः सन्देहोऽत्र महान् हि नः।
विरुद्धशीलयोः प्रभ्वो-र्विरुद्धा भजतां गतिः ॥ ८८.२ ॥

श्रीशुक उवाच—

शिवः शक्तियुतः शश्वत् त्रिलिंगो गुणसंवृतः।
उपधावन् बिभूतीनां सर्वासामश्नुते गतिम् ॥ ८८.४ ॥

हरिर्हि निर्गुणः साक्षात् पुरुषः प्रकृतेः परः।
स सर्वदृगुपद्रष्टा तं भजन् निर्गुणो भवेत् ॥ ८८.५ ॥

निवृत्तेष्वश्वमेधेषु राजा युष्मत्पितामहः।
शृण्वन् भगवतो धर्मानपृच्छ-दिदमच्युतम् ॥ ८८.६ ॥

விருகாசுரன்கதை

அரசன் கூறியது—

88. 1. பிரம்ம ரிஷியே! தேவர்களிலும் அசுரர்களிலும் மனிதர்களிலும் எவர்கள் போகங்களைத் துறந்த சிவனைச் சேவிக்கின்றார்களோ அவர்கள் அனேகமாக தனிகர்க ளாகவும் போகங்களுடன் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள்; (போகங்களுடன் கூடிய) லக்ஷ்மீகாந்தனை ஹரியைச் சேவிப்பவர்கள் அப்படி யில்லை.

88. 2. மாறுபட்ட சீலமுடைய இவ்விரு தெய்வங்களையும் சேவிப்பவர்களுக்குப் பலனும் மாறுபடுகிறது. அதன் ரகசியத்தை அறிய விரும்புகிறோம். இதில் எங்களுக் குப் பெரிய சந்தேகம்.

ஸ்ரீ சுகர் கூறியது—

88. 4. சக்தியுடன் கூடிய பரமசிவன் குணங்களால் சூழப்பட்டவர். முக்குணங் களின் அடையாள முள்ளவர். இவரைச் சேவிப்பவன் எல்லா ஐசுவரியங்களின் பயனையும் அனுபவிக்கிறான்.

88. 5. ஸ்ரீ ஹரியோ குணங்க ளில்லாதவர்; பிரகிருதிக்கு அப்பாற்பட்ட ஸாக்ஷாத் பரமபுருஷர். அவர் எல்லாவற்றையும் பார்ப்பவர். பார்ப்பவர்க்குப் பின் ஸாக்ஷியாய் இருப்பவர். அவரைச் சேவிப்பவன் குணங்களைக் கடந்தவனாகிறான்.

88. 6. அசுவமேதயாகம் முடிந்தபிறகு உமது பாட்டனாரான தர்மபுத்திரர் பாகவத தர்மங்களைக் கேட்கையில் இதைப் பற்றிக் கிருஷ்ணனிடம் கேட்டார்.

स आह भगवांस्तस्मै प्रीतः शुश्रूषवे प्रभुः ।
नृणां निःश्रेयसार्थाय योऽवतीर्णो यदोः कुले ॥ ८८.७ ॥

श्रीभगवानुवाच—

यस्याहमनुगृह्णामि हरिष्ये तद्धनं शनैः ।
ततोऽधनं त्यजन्त्यस्य स्वजना दुःख-दुःखितम् ॥ ८८.८ ॥

स यदा वितथोद्योगो निर्विण्णः स्याद् धनेहया ।
मत्परैः कृतमैत्रस्य करिष्ये मदनुग्रहम् ॥ ८८.९ ॥

श्रीशुक उवाच—

शापप्रसादयोरीशा ब्रह्म-विष्णु-शिवादयः ।
सद्यः शापप्रसादोऽङ्ग शिवो ब्रह्मा न चाच्युतः ॥ ८८.१२ ॥

अत्र चोदाहरन्तीम-मितिहासं पुरातनम् ।
वृकासुराय गिरिशो वरं दत्त्वाऽऽप संकटम् ॥ ८८.१३ ॥

---

88. 7. மனிதர்களுடைய நன்மைக்காக எவர் யதுகுலத்தில் அவதரித்தாரோ அந்த ஸர்வேசுவரரான கிருஷ்ணபகவான் இதைப்பற்றிக் கேட்க விரும்பிய தர்மபுத்திரருக்கு மகிழ்ச்சியுடன் பின்வருமாறு பதிலளித்தார்.

ஸ்ரீ பகவான் கூறியது—

88. 8. 'நான் எவனுக்கு அனுக்கிரகம்செய்ய விரும்புகிறேனோ அவனுடைய தனத்தை மெள்ள மெள்ள அபகரிப்பேன். பிறகு தனமில்லாமல் மிகவும் கஷ்டப்படும் அவனை உற்றார் விட்டுவிடுகிறார்கள்.

88. 9. 'பொருளீட்டும் முயற்சி வீணாகி அதில் வெறுப்படைந்து எப்போது அவன் எனது பக்தர்களுடன் நட்புக்கொள்ளுகிறானோ அப்போது அவனுக்கு எனது அனுக்கிரகத்தைச் செய்வேன்.'

ஸ்ரீ சுகர் கூறியது—

88. 12. ஐயனே! பிரம்மா விஷ்ணு சிவன் முதலியவர்கள் சாபங் கொடுக்கவும் அனுக்கிரகம் செய்யவும் வல்லவர்கள்; சிவன் உடனுக்குடனே சாபத்தையும் அனுக்கிரகத்தையும் செய்பவர்; பிரம்மாவும் அப்படியே; விஷ்ணு அப்படிச் செய்வதில்லை,

88. 13. பரமசிவன் விருகாசுரனுக்கு வரத்தைக் கொடுத்துவிட்டுப் பாடுபட்டார என்ற பழைய வரலாற்றை இதற்கு உதாரணமாகக் கூறுவார்கள்.

वृको नामासुरः पुत्रः शकुनेः पथि नारदम् ।
दृष्ट्वाऽऽशुतोषं पप्रच्छ देवेषु त्रिषु दुर्मतिः ॥ ८८.१४ ॥

स आह देवं गिरिश-मुपाधावाशु सिद्ध्यसि ।
सोऽल्पाभ्यां गुणदोषाभ्या-माशु तुष्यति कुप्यति ॥ ८८.१५ ॥

दशास्यबाणयोस्तुष्टः स्तुवतो-र्वन्दिनोरिव ।
ऐश्वर्यमतुलं दत्त्वा तत आप सुसंकटम् ॥ ८८.१६ ॥

इत्यादिष्टस्तमसुर उपाधावत् स्वगात्रतः ।
केदार आत्मक्रव्येण जुह्वानोऽग्निमुखं हरम् ॥ ८८.१७ ॥

देवोपलब्धिमप्राप्य निर्वेदात् सप्तमेऽहनि ।
शिरोऽवृश्चत् स्वधितिना तत्तीर्थ-क्लिन्नमूर्धजम् ॥ ८८.१८ ॥

---

88. 14. சகுனி என்ற அசுரனின் குமாரனும் துர்ப்புத்தியுடையவனுமான விருகன் என்ற அசுரன் வழியில் நாரதரைக் கண்டு மும்மூர்த்திகளுள் எவர் விரைவில் பிரீதி செய்யக் கூடியவர் என்று கேட்டான்.

88. 15-16. 'கைலாச மலையிலிருக்கும் சிவனை ஆராதனை செய்; சீக்கிரத்தில் சித்தி யடைவாய். அவர் அற்பமான குணத்தாலும் தோஷத்தாலும் சீக்கிரம் சந்தோஷத்தையும் அடைவார், கோபத்தையும் அடைவார். துதிபாடகர்களைப் போல் தன்னைப் புகழ்ந்து கொண்டிருந்த ராவணனுக்கும் பாணாசுரனுக்கும் சந்தோஷமாக ஈடில்லாத ஐசுவரியத்தைக் கொடுத்து அதனால் மிகுந்த ஸங்கடத்தை யடைந்தார்' என்று நாரதர் கூறினர்.

88. 17. இவ்விதம் கூறப்பெற்ற விருகாசுரன் கேதார க்ஷேத்திரத்தில் தனது மாமிசத்தால் ஹோமம் செய்து அக்கினியை முகமாக வுடைய பரமசிவனைத் தனது உடலால் ஆராதித்தான்.

88. 18. பரமசிவன் பிரத்தியக்ஷமாகாததால் வெறுப்படைந்து ஏழாவது நாள் அவருடைய (பாத) தீர்த்தத்தால் நனைந்த கேசத்துடன் கூடிய தலையைக் கோடரியால் வெட்டலானன்.

---

88. 17. **ஸ்வகாத்ர உபதாவத்**—ஸ்வாசுாத்ரேண யாஜயாமாஸ। **ஆத்மக்ரவ்யேண**—ஸ்வமாம்ஸேன।

88. 18. **அவ்ருச்சத்**—ச்சேத்துமுத்யத:।

तदा महाकारुणिकः स धूर्जटि-
यथा वयं चाग्निरिवोत्थितोऽनलात् ।
निगृह्य दोर्भ्यां भुजयोर्निवारयत्
तत्स्पर्शनाद् भूय उपस्कृताकृतिः ॥ ८८.१९ ॥

तमाह चांगालमलं वृणीष्व मे यथाभिकामं वितरामि ते वरम् ।
प्रीयेय तोयेन नृणां प्रपद्यता-महो त्वयाऽऽत्मा भृशमर्द्यते वृथा
॥ ८८.२० ॥

देवं स वव्रे पापीयान् वरं भूत-भयावहम् ।
यस्य यस्य करं शीर्ष्णि धास्ये स म्रियतामिति ॥ ८८.२१ ॥

तच्छ्रुत्वा भगवान् रुद्रो दुर्मना इव भारत ।
ओमिति प्रहसंस्तस्मै ददेऽहेरमृतं यथा ॥ ८८.२२ ॥

इत्युक्तः सोऽसुरो नूनं गौरीहरणलालसः ।
स तद्वरपरीक्षार्थं शंभो-र्मूर्ध्नि किलासुरः ।
स्वहस्तं धातु-मारेभे सोऽबिभ्यत् स्वकृताच्छिवः ॥ ८८.२३ ॥

---

88. 19. அப்போது பரமகாருணிகரான அந்தப் பரமசிவன் விதிப்படி பூஜிக்கப் பெற்ற அக்கினியைப்போல் வேள்வியிலிருந்து கிளம்பித் தமது இருகைகளாலும் அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு தடுத்தார். அவருடைய ஸ்பர்சம் ஏற்பட்டதால் அவன் மீண்டும் முன்போலவே பூர்ணமான அவயவங்கள் உடையவனுக ஆனுன்.

88. 20. 'அப்பனே! போதும், போதும். என்னிடம் நீ வேண்டிய வரத்தை உனக்குக் கொடுக்கிறேன். என்னைச் சரணடைந்த மனிதர்களிடம் நான் தீர்த்தத் தினுலேயே திருப்தி யடைகிறேன். உன்னுல் சரீரமானது வீணுகத் துன்புறுத்தப் படுகிறது. கஷ்டம்' என்று அவனிடம் கூறினுர்.

88. 21. மகா பாபியான அவன் 'யார் யாருடைய தலையில் நான் கையை வைப் பேனே அவரவர் மடியவேண்டும்' என்று எல்லாப் பிராணிகளுக்கும் பயத்தைக் கொடுக்கும் இந்த வரத்தை அவரிடம் கேட்டான்.

88. 22. பாரதா! அதைக்கேட்டு ருத்திரபகவான் சற்று வருத்தமடைந்தா ரெனி னும் பாம்புக்குப் பால் வார்ப்பதுபோல் 'அப்படியே ஆகுக' என்று சிரித்துக்கொண்டு அவ்வரத்தைக் கொடுத்தார்.

88. 23. இவ்விதம் கூறப்பட்ட அவ்வசுரன் கௌரியையே அபகரிக்கவேண்டும் என்று ஆவலும் நிச்சயமும் கொண்டான். ஆனுல் அவ்வசுரன் அவ்வரத்தைப் பரீக்ஷிப்ப தற்காகப் பரமசிவனுடைய தலையிலேயே தனது கையை வைக்க முயன்றுன். அந்த நிலையில் பரமசிவன் தன் காரியத்தால் விளைந்த அனர்த்தத்தைக் கண்டு பயந்தார்.

---

88. 19. यथावद्द्विष्टोग्निरिवोत्थितो ।

तेनोपसृष्टः संत्रस्तः पराधावन् सवेपथुः ।
तं तथाव्यसनं दृष्ट्वा भगवान् वृजिनार्दनः ।
दूरात् प्रत्युदियात् भूत्वा वटुको योगमायया ॥ ८८.२७ ॥

मेखलाजिन-दण्डाक्षै-स्तेजसाग्नि-रिव ज्वलन् ।
अभिवादयामास च तं कुशपाणि-र्विनीतवत् ॥ ८८.२८ ॥

श्रीभगवानुवाच—

शाकुनेय भवान् व्यक्तं श्रान्तः किं दूरमागतः ।
क्षणं विश्रम्यतां पुंस आत्मायं सर्वकामधुक् ॥ ८८.२९ ॥

यदि नः श्रवणायालं युष्मद्व्यवसितं विभो ।
भण्यतां प्रायशः पुंभि-र्धृतैः स्वार्थान् समीहते ॥ ८८.३० ॥

श्रीशुक उवाच—

एवं भगवता पृष्टो वचसामृतवर्षिणा ।
गतक्लमोऽब्रवीत् तस्मै यथापूर्व-मनुष्ठितम् ॥ ८८.३१ ॥

---

88. 27-28. அவனால் துரத்தப்பட்ட அவர் பயந்து நடுங்கியவராய் பூலோகத்தி லும் அந்தரிக்ஷத்திலும் திக்குகளின் எல்லை வரையில் ஓடிப்போடிப் பின் மேல் நோக்கிச் சென்றார். அப்படித் துன்புற்ற அவரை நாராயணன் வெகு தூரத்திலிருந்து பார்த்துத் தனது யோகமாயையால் ஒரு சிறு பிரம்மசாரி வேஷம் பூண்டு முஞ்சிக் கயிறு, மான் தோல், பலாசதண்டம், ஜபமாலை இவைகளுடன் ஞான ஒளியால் அக்கினிபோல் பிரகாசிப்பவராய் அந்த அசுரனுக்கு முன் தோன்றினார். கையில் தர்ப்பையுடன் மிகவும் வணக்க முடையவர்போல் அவனுக்கு அபிவாதனம் செய்து நமஸ்கரித்தார்.

ஸ்ரீ பகவான் கூறியது—

98. 29. சகுனியின் புத்திரரே! நீர் மிகக் களைத்திருப்பதாகத் தெரிகிறது. வெகு தூரத்திலிருந்து வருகிறீரா? நொடிநேரம் இளைப்பாறலாமே. மனிதனுக்கு இந்தச் சரீரம் எல்லா ஆசைகளையும் நிறைவேற்றித் தரும் காமதேனு போன்றது.

88. 30. பிரபுவே! தாங்கள் நாடிச் செல்லும் காரியம் நாங்கள் கேட்கக் கூடிய தாயின் சொல்லவேண்டும். (எதிர் பாராது) ஸகாயமாக வரும் மனிதர்களால் அநேக மாய்ச் சொந்தக் காரியங்களைச் சாதித்துக் கொள்ளுதல் கூடும்.

ஸ்ரீ சுகர் கூறியது—

88. 31. இப்படி பகவானால் அமிருதம் பொழிந்தாற்போன்ற வார்த்தைகளால் வினவப் பெற்ற அவன் களைப்பு நீங்கி அவரிடம் ஆரம்பத்திலிருந்து நடந்ததைத் தெரி வித்தான்.

श्रीभगवानुवाच—

एवं चेत्तर्हि तद्वाक्यं न वयं श्रद्दधीमहि ।
यो दक्षशापात् पैशाच्यं प्राप्तः प्रेतपिशाचराट् ॥ ८८.३२ ॥

यदि वस्तत्र विश्रंभो दानवेन्द्र जगद्गुरौ ।
तर्ह्यङ्गाशु स्वशिरसि हस्तं न्यस्य प्रतीक्ष्यताम् ॥ ८८.३३ ॥

यद्यसत्यं वचः शंभोः कथंचिद्दानवर्षभ ।
तदैनं जह्यसद्वाचं न यद्वक्तानृतं पुनः ॥ ८८.३४ ॥

इत्थं भगवत-श्चित्रै-र्वचोभिः स सुपेशलैः ।
भिन्नधी-र्विस्मृतः शीर्ष्णि स्वहस्तं कुमति-र्न्यधात् ॥ ८८.३५ ॥

अथापतद् भिन्नशिरा वज्राहत इव क्षणात् ।
जय-शब्दो नमः-शब्दः साधु-शब्दोऽभवद् दिवि ॥ ८८.३६ ॥

ஸ்ரீ பகவான் கூறியது—

88. 32. 'அது அப்படியானால் அவருடைய வார்த்தையை நாம் நம்பமாட்டோம். அவர் தக்ஷருடைய சாபத்தால் பிசாசாகி பிரேதங்களுக்கும் பிசாசுகளுக்கும் அதிபதியாயிருக்கிறார்.

88. 33. 'ஐயனே! அசுரோத்தமனே! ஜகத்குருவாகிய அவரிடத்தில் உமக்கு நம்பிக்கை யிருந்தால் உமது தலையிலேயே சீக்கிரம் கையை வைத்துப் பரீக்ஷைபார்க்கலாமே. (அது பலிக்காது).

88. 34. 'அசுர சிரேஷ்டனே! சிவனுடைய வார்த்தை எவ்வகையிலாவது பொய்யென்று தெரிந்துவிட்டால் அப்போது பொய் சொல்லும் இவரைக் கொன்றுவிடும். அப்படிச் செய்தால்தான் அவர் மறுபடியும் பொய் சொல்லமாட்டார்.'

88. 35. புத்திகெட்ட அவ்வசுரன் இவ்விதமாக பகவானுடைய விசித்திரமான பசப்பு வார்த்தைகளால் மதிமயங்கி நல்ல நினைவை யிழந்து தன் தலையில் கையை வைத்துக் கொண்டான்.

88. 36. நொடிப் பொழுதில் வஜ்ராயுதத்தால் அடிக்கப்பட்டவனைப் போல் தலையுடைந்து கீழே விழுந்தான். ஆகாயத்தில் 'ஜய' சப்தமும் 'நம:' என்ற சப்தமும் 'ஸாது' (நன்று) என்ற சப்தமும் உண்டாயின.

---

88. 35. विस्मितः शीर्ष्णि ।

मुमुचुः पुष्पवर्षाणि हते पापे वृकासुरे ।
देवर्षि-पितृगंधर्वा मोचितः सङ्कटाच्छिवः ॥ ८८.३७ ॥

मुक्तं गिरिश-मभ्याह भगवान् पुरुषोत्तमः ।
अहो देव महादेव पापोऽयं स्वेन पाप्मना ॥ ८८.३८ ॥

हतः को नु महत्स्वीश जन्तु-र्वै कृतकिल्बिषः ।
क्षेमी स्यात् किमु विश्वेशे कृतागस्को जगद्गुरौ ॥ ८८.३९ ॥

* * * * *

सरस्वत्यास्तटे राजन्नृषयः सत्रमासत ।
वितर्कः स मभूत्तेषां त्रिष्वधीशेषु को महान् ॥ ८९.१ ॥

तस्य जिज्ञासया ते वै भृगुं ब्रह्मसुतं नृप ।
तज्ज्ञप्त्यै प्रेषयामासुः सोऽभ्यगाद् ब्रह्मणः सभाम् ॥ ८९. २ ॥

---

88. 37. பாவியான விருகாசுரன் மாண்டபோது தேவர்களும், ரிஷிகளும், பிதிருக்களும், கந்தர்வர்களும் புஷ்பமாரி பொழிந்தனர். பரமசிவன் சங்கடத்திலிருந்து விடுபட்டார்.

88. 38-39. புருஷோத்தமனுன பகவான் விடுவிக்கப்பட்ட பரமசிவனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினுர். "தேவதேவா! மகா தேவா! இந்தப் பாவி தனது பாவத்தாலேயே கொல்லப் பட்டான். அந்தோ! ஈசா! மகான்களிடத்தில் அபராதம் செய்த எந்தப் பிராணிதான் க்ஷேமமாக இருக்கமுடியும்? அதிலும் ஜகத்குருவான பரமேசுவரனிடத்தில் குற்றஞ் செய்தவனைப் பற்றிக் கேட்பானேன்?"

* * * * *

89. 1. அரசே! ஸரஸ்வதீ நதிக்கரையில் (ஒருசமயம்) அநேக ரிஷிகள் சேர்ந்து ஒரு ஸத்ரயாகம் செய்தார்கள். அப்போது மும்மூர்த்திகளுள் யார் சிறந்தவர் என்ற விவாத முண்டாயிற்று.

89. 2. அதை அறியவேண்டியதற்காக ரிஷிகளெல்லோரும் பிரம்மாவின் புத்திரரான பிருகு முனிவரை அனுப்பினுர்கள். அவர் பிரம்மாவின் சபைக்குப் போனுர்.

---

88. 39. 'நானு மீட்டேன்? உமக்கு அவன் நினைத்த தீங்கே அவனைத் துலைத்தது, என்றுர் பகவான்.

न तस्मै प्रह्वणं स्तोत्रं चक्रे सत्त्वपरीक्षया ।
तस्मै चुक्रोध भगवान् प्रज्वलन् स्वेन तेजसा ॥ ८९.३ ॥

स आत्मन्युत्थितं मन्यु-मात्मजायात्मना प्रभुः ।
अशीशमद्यथा वह्निं स्वयोन्या वारिणाऽऽत्मभूः ॥ ८९.४ ॥

ततः कैलासमगमत् स तं देवो महेश्वरः ।
परिरब्धुं समारेभे उत्थाय भ्रातरं मुदा ॥ ८९.५ ॥

नैच्छत्त्वमस्युत्पथग इति देवश्चुकोप ह ।
पतित्वा पादयोर्देवी सान्त्वयामास तं गिरा ॥ ८९.६ ॥

अथो जगाम वैकुण्ठं यत्र देवो जनार्दनः ।
शयानं श्रिय उत्सङ्गे पदा वक्षस्यताडयत् ॥ ८९.७ ॥

तत उत्थाय भगवान् सह लक्ष्म्या सतां गतिः ।
स्वतल्पा-दवरुह्याथ ननाम शिरसा मुनिम् ॥ ८९.८ ॥

---

89. 3. அவருடைய உதார குணத்தைச் சோதிக்கும் பொருட்டு அவரை வணங்காமலும் துதிக்காமலு மிருந்தார். பிரம்மா அவரிடம் கொண்ட சினத்தால் கோபப் பொறி பறக்கலாயிற்று.

89. 4. ஆனுல் புத்திரன்மேல் தனக்குண்டான கோபத்தை அவர் அக்கினியை அக்கினியில் தோன்றிய நீரால் அணைப்பதுபோல் புத்திரனென்னும் காரணத்தால் சமாதானம் செய்துகொண்டார்.

89. 5. பிறகு அவர் (பிருகு) கைலாஸம் சென்றுர். தனது சகோதரன் வந்ததைப் பார்த்துப் பரமசிவன் எழுந்து மகிழ்ச்சியுடன் தழுவிக்கொள்ள ஆரம்பித்தார்.

89. 6. அதை பிருகு விரும்பாமல் 'நீ ஆசாரத்திலிருந்து நழுவியவன்' என்று கூறவே, சிவன் கோபங்கொண்டார். பார்வதி அவருடைய பாதத்தில் வணங்கி அவரைச் சமாதானப் படுத்தினுள்.

89. 7. பின்பு எங்கு ஜனுர்த்தனர் இருக்கிருரோ அந்த வைகுண்டத்திற்குச் சென்றுர். அங்கு ஸ்ரீதேவியின் மடியில் தலைவைத்துச் சயனித்திருந்த விஷ்ணுவைக் காலால் (கவனியாதவர் போல்) மார்பில் இடறினுர்.

89. 8. ஸாதுக்களின் தலைவராகிய விஷ்ணு உடனே சயனத்திலிருந்து எழுந்து லக்ஷ்மியுடன் தலையால் முனிவரை நமஸ்கரித்தார். (பின்பு நல்வரவு) கூறி ஆஸன மளித்து அவர் வந்ததை அறியாத குற்றத்திற்கு மன்னிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முனிவருடைய பாதங்களைத் தனது கையால் பிடித்தார். முனிவர் பகவானுடைய கருணைப் பெருக்கில் மெய்மறந்து ஒன்றும் பேசாமலிருந்தார். பின்பு பிருகு ஸத்ரயாகம் நடக்கு மிடத்திற்கு வந்து மற்ற முனிவர்களிடம் தன் அனுபவத்தைத் தெரிவித்தார்.)

---

89. 7. ஒ. கேகீ-கண்டாபநீலம் ஸுரவரவிலஸத்
விப்ரபாதாப்ஜசிஹ்னம்
சோபாட்யம் பீதவஸ்த்ரம் ஸரஸிஜநயனம்
ஸர்வதா ஸுப்ரஸன்னம் । —துளஸிதாஸர்—
ராமசரிதமானஸ உத்தரகாண்டம்.

श्रीशुक उवाच—

एकदा द्वारवत्यां तु विप्रपत्न्याः कुमारकः।
जातमात्रो भुवं स्पृष्ट्वा ममार किल भारत ॥ ८९.२२ ॥

विप्रो गृहीत्वा मृतकं राजद्वार्युपधाय सः।
इदं प्रोवाच विलपन्नातुरो दीनमानसः ॥ ८९.२३ ॥

ब्रह्मद्विषः शठधियो लुब्धस्य विषयात्मनः।
क्षत्रबन्धोः कर्मदोषात् पंचत्वं मे गतोऽर्भकः ॥ ८९.२४ ॥

एवं द्वितीयं विप्रर्षिस्तृतीयं त्वेवमेव च।
विसृज्य स नृपद्वारि तां गाथां समगायत ॥ ८९.२६ ॥

तामर्जुन उपश्रुत्य कर्हिचित् केशवान्तिके।
परेते नवमे बाले ब्राह्मणं समभाषत ॥ ८९.२७ ॥

अहं प्रजा वां भगवन् रक्षिष्ये दीनयोरिह।
अनिस्तीर्ण-प्रतिज्ञोऽग्निं प्रवेक्ष्ये हतकल्मषः ॥ ८९.३० ॥

ஸ்ரீ சுகர் கூறியது.

89. 22. பரீக்ஷித்தே! ஒருசமயம் துவாரகையில் ஒரு பிராம்மண ஸ்திரீக்குக் குழந்தை பிறந்ததும் அது பூமியைத் தொட்டமாத்திரத்தில் இறந்துவிட்டது.

89. 23. அக் குழந்தையின் பிதாவாகிய பிராம்மணன் இறந்த குழந்தையை எடுத்துக்கொண்டுபோய் அரண்மனை வாயிலில் வைத்து மிகுந்த வருத்தத்துடனும் பதட்டத்துடனும் புலம்பிக்கொண்டு பின்வருமாறு கூறினன்.

89. 24. 'பிராம்மணர்களைப் பகைப்பவனும் வஞ்சகனும் லோபியும் சிற்றின்பத்தி லாழ்ந்தவனும் பெயர்மட்டில் அரசனுயிருப்பவனுமான இவனுடைய கர்மதோஷத்தால் தான் என் குழந்தை இறந்துபோயிற்று.'

89. 26. இவ்விதமே இரண்டாவது குழந்தையையும் மூன்ருவது குழந்தையையும் இழந்த அந்தப் பிராம்மணன் ஒவ்வொரு தடவையும் அரண்மனைவாயிலில் இறந்த குழந்தையைப் போட்டு முன்போலவே சொல்லிப் புலம்பினன்.

89. 27. அம்மாதிரியே ஒருசமயம் ஒன்பதாவது குழந்தையும் இறந்துபோய் பிராம்மணன் புலம்பியதைக் கேட்டு (பகவான் பேசாமலிருக்க) பக்கத்திலிருந்த அர்ஜுனன் அந்தப் பிராம்மணனிடம் பின்வருமாறு கூறினன்.

89. 30. 'பிராம்மணரே! வருந்துகின்ற உங்களுக்கு இனி உண்டாகும் பிரஜையை நான் காப்பாற்றுகிறேன். இவ் விஷயத்தில் என் பிரதிக்ஞை நிறைவேருமற் போனல் அக்கினிப் பிரவேசம் செய்து அதனல் பாவத்தை நீக்கிக் கொள்வேன்' (இதைக்கேட்டு மனதைத் தேற்றிக்கொண்டு பிராம்மணன் வீடு சென்ருன்.)

प्रसूतिकाल आसन्ने भार्याया द्विजसत्तमः।
पाहि पाहि प्रजां मृत्यो-रित्याहार्जुन-मातुरः ॥ ८९.३६ ॥

स उपस्पृश्य शुच्यंभो नमस्कृत्य महेश्वरम्।
दिव्यान्यस्त्राणि संस्मृत्य सज्यं गाण्डीव-माददे ॥ ८९.३७ ॥

न्यरुणत् सूतिकागारं शरै-र्नानास्त्रयोजितैः।
तिर्यगूर्ध्व-मधः पार्थश्चकार शरपंजरम् ॥ ८९.३८ ॥

ततः कुमारः संजातो विप्रपत्न्या रुदन् मुहुः।
सद्योऽदर्शन-मापेदे सशरीरो विहायसा ॥ ८९.३९ ॥

धिगर्जुनं मृषावादं धिगात्मश्लाघिनो धनुः।
दैवोपसृष्टं यो मौढ्या-दानिनीषति दुर्मतिः ॥ ८९.४२ ॥

एवं शपति विप्रर्षौ विद्यामास्थाय फाल्गुनः।
ययौ संयमनी-माशु यत्रास्ते भगवान् यमः ॥ ८९.४३ ॥

---

89. 36. அந்த பிராம்மணன் தனது பத்தினியின் அடுத்த பிரஸவகாலம் நெருங்கியபோது மிகவும் கவலையுடன் அர்ஜுனனிடம் வந்து 'குழந்தையைக் காப்பாற்றவேண்டும், காப்பாற்ற வேண்டும்' என்றான்.

89. 37. அப்போது அர்ஜுனன் சுத்த ஜலத்தில் ஆசமனம்செய்து பரமசிவனை வணங்கி திவ்யாஸ்திரங்களைத் தியானித்து நாணேற்றிய காண்டீவத்தைக் கையிலெடுத்து கொண்டான்.

89. 38. அர்ஜுனன் பிரஸவ அறையைச் சுற்றிப் பற்பல அஸ்திரங்களில் தொடுக்கப்பட்ட பாணங்களால் தகைந்து குறுக்காகவும் மேல் கீழாகவும் சரக்கூட்டை அமைத்தான்,

89. 39. பிறகு அந்தப் பிராம்மண பத்தினிக்குப் பிறந்த குழந்தை ஓயாமல் அழுதுகொண்டே அப்போதே சரீரத்துடன் ஆகாயமார்க்கத்தில் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிட்டது.

89. 42. 'பொய்பேசும் அர்ஜுனன் கெட்டான்; தற்புகழ்ச்சி பேசும் அவனும் வில்லும் கெட்டது. மதிகெட்ட அர்ஜுனன் மூடத்தனத்தால் தெய்வம் மறைத்துவிட்டதைத் தான் கொண்டுவந்து விடலாம் என்று எண்ணுகிறான்.'

89. 43. அந்தப் பிராம்மணோத்தமன் இவ்வாறு நிந்திக்கும்போது அர்ஜுனன் தனது (அந்தர்த்தான) வித்யா பலத்தைக் கொண்டு யமதர்மராஜன் எங்கிருக்கிறாரோ அந்த ஸம்யமனீ பட்டணத்திற்கு விரைந்து சென்றான்.

ततोऽलब्धद्विजसुतो ह्यनिस्तीर्ण-प्रतिश्रुतः ।
अग्निं विविक्षुः कृष्णेन प्रत्युक्तः प्रतिषेधता ॥ ८९.४५ ॥

दर्शये द्विजसूनूंस्ते मावज्ञात्मानमात्मना ।
ये ते नः कीर्तिं विमलां मनुष्याः स्थापयिष्यन्ति ॥ ८९.४६ ॥

इति संभाष्य भगवानर्जुनेन सहेश्वरः ।
दिव्यं स्वरथमास्थाय प्रतीचीं दिशमाविशत् ॥ ८९.४७ ॥

ततः प्रविष्टः सलिलं नभस्वता बलीयसैजद् बृहदूर्मि-भूषणम् ॥
तत्राद्भुतं वै भवनं द्युमत्तमं भ्राजन्मणिस्तंभ-सहस्र-शोभितम्
॥ ८९.५३ ॥

तस्मिन् महा-भीम-मनन्त-मद्भुतं सहस्रमूर्धन्य-फणामणिद्युभिः ।
विभ्राजमानं द्विगुणोल्बणेक्षणं सिताचलाभं शितिकण्ठजिह्वम् ॥८९.५४॥

---

89. 45. அங்கு பிராம்மணபுத்திரனை அடையப் பெருமல் பிரதிக்ஞை நிறைவேருத காரணத்தால் அக்னிப்பிரவேசம் செய்ய எண்ணிய அர்ஜுனன் கிருஷ்ணனுல் அதிலிருந்து தடுக்கப்பட்டான்.

89. 46. 'உனக்கு பிராம்மணன் குழந்தைகளைக் காட்டுகிறேன். உன்னை நீயாகவே இகழ்ச்சிக்கு உள்ளாக்கிக் கொள்ளாதே. எவர்கள் நம்மை இகழ்கிருர்களோ அம்மனிதர்களே நமது மாசற்ற கீர்த்தியை நிலைநாட்டுபவர்களாவார்கள்.'

89. 47. ஸர்வேசுவரனை கிருஷ்ணபகவான் இவ்வாறு கூறிவிட்டு அர்ஜுனனுடன் தெய்வீகமான தனது தேரில் ஏறிக்கொண்டு மேற்குதிக்கை நோக்கி (மஹாகாலபுரம்) சென்றுர்.

89. 53. அங்கிருந்து வலிமையான காற்றல் துள்ளிக்கொண்டிருப்பதும் உன்னதமான அலைகளால் அலங்கரிக்கப் பெற்றதுமான ஜலத்தில் அற்புதமான ஒளி நிறைந்ததும் பல்லாயிரம் ரத்தினத் தூண்களுடன் விளங்குவதுமான ஒரு மாளிகையில் பிரவேசித்தார்.

89. 54. அவ்விடத்தில் அற்புதமான மிகப் பெரிய உடல் படைத்தவரும் ஒளி வீசும் மணிகளுடன் கூடிய ஆயிரம் படங்களையுடையவரும் இரண்டாயிரம் கண்களையுடையவரும் கருத்த நிறமுள்ள கழுத்துக்களையும் நாக்குகளையும் உடையவரும் வெளுத்த மலைபோல் பிரகாசிப்பவருமான அனந்தரை (அர்ஜுனன் கண்டான்).

---

89. 46. येनेन कीर्तिं विपुलां मानवाः स्थापयन्ति च । —பா. பே.

ददर्श तद्भोग-सुखासनं विभुं महानुभावं पुरुषोत्तमोत्तमम् ।
सान्द्रांबुदाभं सुपिशंगवाससं प्रसन्नवक्त्रं रुचिरायतेक्षणम् ॥ ८९.५५ ॥

महामणिव्रात-किरीटकुण्डल-प्रभापरिक्षिप्त-सहस्रकुन्तलम् ।
प्रलंबचार्वष्ट-भुजं सकौस्तुभं श्रीवत्सलक्ष्मं वनमालयावृतम् ॥ ८९.५६ ॥

सुनन्दनन्दप्रमुखैः स्वपार्षदैश्चक्रादिभि-र्मूर्तिधरै-र्निजायुधैः ।
पुष्ट्या श्रिया कीर्त्यजयाऽखिलर्द्धिभि-र्निषेव्यमाणं परमेष्ठिनां पतिम्
॥ ८९.५७ ॥

ववन्द आत्मान-मनन्त-मच्युतो जिष्णुश्च तद्दर्शन-जातसाध्वसः ।
तावाह भूमा परमेष्ठिनां प्रभु-र्बद्धांजली सस्मित-मूर्जया गिरा
॥ ८९.५८ ॥

द्विजात्मजा मे युवयोर्दिदृक्षुणा मयोपनीता भुवि धर्मगुप्तये ।
कलावतीर्णाववने-र्भरासुरान् हत्वेह भूयस्त्वरयेतमन्ति मे ॥ ८९.५९ ॥

---

89. 55-57. அவரது உடலில் சுகமாக வீற்றிருப்பவரும் மகானுபாவரும் புருஷோத்தமர்களில் உத்தமரும் நீருண்டமேகம் போன்றவரும் சிறந்த மஞ்சட்பட்டாடை யணிந்தவரும், பிரசன்னமான முகமுடையவரும், அழகிய நீண்ட கண்களுடையவரும் உயர்ந்த ரத்னங்க ளிழைக்கப்பெற்ற கிரீட குண்டலங்களின் காந்தி துள்ளியெழும் சுருட்டை மயிரையுடையவரும், நீண்டு அழகிய எட்டுக் கைகளை உடையவரும், கௌஸ்துபம், ஸ்ரீவத்ஸம், வனமாலை முதலியவற்றுடன் கூடியவரும் ஸுநந்தன் நந்தன் முதலிய தனது பார்ஷதர்களாலும் உடல் தரித்த சக்கரம் முதலிய ஆயுதங்களாலும், புஷ்டி லக்ஷ்மி கீர்த்திபெற்ற மாயை முதலியவர்களாலும் (அணிமா முதலிய) ஸமஸ்த ஐசுவரிய சக்திகளாலும் சேவிக்கப்பெற்றவரும் அநேகம் பிரம்மாக்களுக்குப் பதியும் ஆகிய பகவானை (அர்ஜுனன்) கண்ணுற்றான்.

89. 58. ஸ்ரீ கிருஷ்ணன் அனந்த னென்னும் ஆத்மஸ்வருபத்தை வணங்கினார். அர்ஜுனனும் அவரைப் பார்த்ததால் உண்டான பயத்தின் நடுக்கத்துடன் வணங்கினான். அநேகம் பிரம்மதேவர்களுக்கு அதிபதியானவரும் அளவற்ற மகிமை வாய்ந்தவருமான அவர் கைகூப்பி நிற்கும் அர்ஜுனனையும் கிருஷ்ணனையும் பார்த்துப் புன்னகையுடன் கம்பீரமான வார்த்தைகளால் பின்வருமாறு கூறினார்.

89. 59. 'உங்களிருவரையும் பார்க்க விரும்பிய என்னால் பிராம்மணரின் குழந்தைகள் என்னிருப்பிடத்திற்குக் கொண்டுவரப்பட்டார்கள். தர்மத்தைக் காப்பாற்றுவதற்காக அம்சாவதாரம் செய்த நீங்களிருவரும் பூபாரமா யிருந்த அசுரர்களைக் கொன்றுவிட்டு மறுபடியும் இங்கே என் பக்கத்தில் சீக்கிரம் வந்து சேருங்கள்.

---

89. 57. வைகுண்டத்தில் பகவானுக்கு நாலு புஜங்கள்; மஹாகால புரத்தில் எட்டு புஜங்கள்; கோலோகத்தில் இரண்டு புஜங்கள்.

पूर्णकामावपि युवां नरनारायणावृषी।
धर्ममाचरतां स्थित्यै ऋषभौ लोकसंग्रहम् ॥ ८९.६० ॥

इत्यादिष्टौ भगवता तौ कृष्णौ परमेष्ठिना।
ओमित्यानम्य भूमान-मादाय द्विजदारकान् ॥ ८९.६१ ॥

न्यवर्तेतां स्वकं धाम संप्रहृष्टौ यथागतम्।
विप्राय ददतुः पुत्रान् यथारूपं यथावयः ॥ ८९.६२ ॥

इतीदृशान्यनेकानि वीर्याणीह प्रदर्शयन्।
बुभुजे विषयान् ग्राम्यानीजे चात्यूर्जितै-र्मखैः ॥ ८९.६४ ॥

प्रवर्तताखिलान् कामान् प्रजासु ब्राह्मणादिषु।
यथाकालं यथैवेन्द्रो भगवाञ्छ्रैष्ठ्यमास्थितः ॥ ८९.६५ ॥

---

89. 60. 'ஆசைகளின் பூர்த்தி எய்தியவர்களாயினும் சிறப்புமிக்க நரநாராயண ரிஷிகளாக இருந்து லோக ரக்ஷணத்திற்காக லோகஸங்க்ரஹ தர்மத்தை அனுஷ்டித்தீர்கள்.'

89. 61-62. ஸர்வேசுவரரான பகவானல் இவ்விதம் உத்திரவிடப் பெற்ற கிருஷ்ணனும் அர்ஜுனனும் 'அப்படியே' என்று சொல்லி ஸர்வேசுவரரை வணங்கி பிராம்மணனுடைய குழந்தைகளை அழைத்துக்கொண்டு மன மகிழ்ச்சியுடன் போன படியே தங்கள் இருப்பிடத்திற்குத் திரும்பினர்கள். அவ்வாறே பிரபுக்களாகிய அவர்கள் பிராம்மணனுக்கு அவருடைய புத்திரர்களை எந்த வடிவிலும் எந்த வயதிலும் இருந்தார்களோ அப்படியே கொடுத்தார்கள்.

89. 64. இவ்வுலகில் இவ்வாருன அநேக வீரியச்செயல்களைச் செய்து காட்டிக் கொண்டும் (சாதாரண மக்களைப் போல்) அற்பமான விஷய சுகங்களை அனுபவித்துக் கொண்டும் பகவான் இருந்தார். மிக வுயர்ந்த யாகங்களால் பகவதாராதனையும் செய்தார்.

89. 65. ஸ்ரீ கிருஷ்ணன் உன்னதமான நிலையிலிருந்துகொண்டு காலத்திற்கேற்றபடி பிராம்மணர் முதலிய பிரஜைகளிடம் ஸர்வாபீஷ்டங்களையும் (மேகம் மழை பொழிவதுபோல்) பொழிந்தார்.

---

89. 62. இந்த வரலாறு பாரதயுத்தத்திற்கு முன்பே நிகழ்ந்ததாயினும் பகவானுடைய பெருமைகளை நினைவிற்குக் கொண்டுவரும் வகையில் இங்கு கூறப்பட்டதாகும்.

---

89. 61. परमेष्ठिनौ।

जयति जननिवासो देवकी-जन्मवादो
　　यदुवरपर्षत्स्वै-र्दोर्भिरस्यन्नधर्मम् ।
स्थिरचरवृजिनघ्नः सुस्मितश्रीमुखेन
　　व्रजपुरवनितानां वर्धयन् कामदेवम्　　॥ १०.४८ ॥

इत्थं परस्य निजवर्त्मरिरक्षयाऽऽत्त-
　　लीलातनो-स्तदनुरूप-विडंबनानि ।
कर्माणि कर्मकषणानि यदूत्तमस्य
　　श्रूयादमुष्य पदयो-रनुवृत्ति-मिच्छन्　　॥ १०.४९ ॥

मर्त्य-स्तयानुसव-मेधितया मुकुन्द-
　　श्रीमत्कथाश्रवण-कीर्तन-चिन्तयैति ।
तद्धाम दुस्तर-कृतान्तजवापवर्गं
　　ग्रामाद् वनं क्षितिभुजोऽपि ययु-र्यदर्थाः　　॥ १०.५० ॥

---

90. 48. எல்லா உயிர்களிடத்தும் உறைபவரும் தேவகியிடம் பிறந்தவராகக் கூறப்படுபவரும் யாதவ சிரேஷ்டர்களைத் தனது பரிவாரமாகக் கொண்டவரும் தனது புஜபலத்தால் அதர்மத்தை அழிப்பவரும் சராசரப் பிரபஞ்சத்தின் பாவத்தைப் போக்கு பவருமாகிய பகவான் அழகிய புன்னகை பூத்த முகத்தால் ஆயர்பாடிகளிலும் நகரங்க ளிலுமுள்ள பெண்களிடம் (மோக்ஷத்திற்கு வழிகாட்டியான) காமதேவனை வளரச் செய்துகொண்டு வெற்றியுடன் விளங்குகிறார்.

90. 49. இவ்வாறு தான் காட்டிய வழியாகிய தர்மத்தைப் பரிபாலிப்பதற்காக விளையாட்டாக மனித உட லெடுத்த பரமாத்மாவான யதுசிரேஷ்டனுடைய அப்பிறவிக் குகந்தவைகளும் பிறருடைய வினைகளைக் களைபவைகளுமான லீலைகளை இவருடைய திருவடிகளை அடைய விரும்புகிறவர்கள் கேட்கவேண்டும்.

90. 50. பூமியாளும் அரசர்கள்கூட எதை விரும்பி ஜனசமூகத்தை விட்டு வனம் சென்றார்களோ அப்படிப்பட்ட கடத்தற்கரிய காலவேகத்தின் எல்லை நிலமாகிய விஷ்ணுபதத்தை ஸ்ரீ கிருஷ்ணனுடைய அழகிய கதையைக் கேட்கவும் பாடவும் வேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொரு கணமும் விருத்தி யடையப்பெற்ற மனிதன் அடைவான்.

---

90. 50. अनुसवमेधितयानुवृत्त्या ।

इति श्रीमद्भागवते महापुराणे अष्टादशसाहस्त्रिकायां
संहितायां पारमहंस्यां श्रीवैयासिक्यां
हयग्रीव-ब्रह्मविद्यायां दशमस्कन्धे
नवतितमोऽध्यायः ॥
दशमस्कन्धः समाप्तः ॥

இங்ஙனம் பரமஹம்ஸரான
வியாஸபுத்திரர் உபதேசித்ததும் பதினெண்ணுயிரம்
சுலோகங்கள் அடங்கியதும் ஹயக்கிரீவப்
பிரம்மவித்தை யெனப்படுவதுமான
ஸ்ரீமத் பாகவத மகாபுராணத்தில்
பத்தாவது ஸ்கந்தத்தில்
தொண்ணூறுவது
அத்தியாயம்
முற்றும்.
பத்தாவது ஸ்கந்தம் முற்றும்.

एकादशः स्कन्धः

यदुकुलस्य ब्राह्मणशापः

श्रीशुक उवाच—

विभ्रद् वपुः सकलसुन्दर-सन्निवेशं
कर्माचरन् भुवि सुमंगल-मासकामः।
आस्थाय धाम रममाण उदारकीर्तिः
संहर्तु-मैच्छत कुलं स्थितकृत्यशेषः ॥ १.१० ॥

कर्माणि पुण्यनिवहानि सुमंगलानि
गायज्जगत्कलिमलापहराणि कृत्वा।
कालात्मना निवसता यदुदेवगेहे
पिण्डारकं समगमन् मुनयो निसृष्टाः ॥ १.११ ॥

विश्वामित्रोऽसितः कण्वो दुर्वासा भृगुरंगिराः।
कश्यपो वामदेवोऽत्रि-र्वसिष्ठो-नारदादयः ॥ १.१२ ॥

பதினொராவது ஸ்கந்தம்

யதுகுலத்திற்கு பிராம்மண சாபம்

ஸ்ரீ சுகர் கூறியது—

1. 10. அழகிற் கெல்லாம் ஒருங்கே இருப்பிடமாகிய உடல் தாங்கியவரும் ஆசைக ளனைத்தும் பூர்த்தி யெய்தியவருமாகிய பகவான் மிகவும் மங்களமான காரியங்களைச் செய்துகொண்டு பூமியில் (துவாரகையில்) கிருஹத்திலிருந்து மகிழ்ந்து பின்னும் செய்யவேண்டிய காரியம் எஞ்சி யிருப்பதைக் கருதித் தன் குலத்தையும் ஸம்ஹரிக்க விரும்பினர்.

1. 11-12. வசுதேவர் வீட்டில் தோன்றிய காலஸ்வரூபியான பகவானல் ஏவப்பட்டு விசுவாமித்திரர், அஸிதர், கண்வர், துர்வாஸர், பிருகு, அங்கிரஸ், காசியபர், அத்ரி, வாமதேவர், வசிஷ்டர், நாரதர் முதலிய முனிவர்கள் புண்ணியத்தை வளர்ப்பதும் பரம மங்களமானதும் கீர்த்தனம் செய்பவர்களின் கலிதோஷத்தைப் போக்குபவையுமான கர்மங்களைச் செய்துகொண்டு பிண்டாரகம் எனும் க்ஷேத்திரத்தை யடைந்தனர்.

பதினொராவதுஸ்கந்தம்

இதில் பாகவதத்தின் ஒன்பதாவது லக்ஷணமாகிய முக்தியின் ஸ்வரூபம் விளக்கப்படுகிறது. முதல் அத்தியாயத்தில் பூமியில் பகவானுடன் தேவாம்சமாய் அவதரித்தவர்கள் மீண்டும் தங்கள் தங்கள் ஸ்தானங்களுக்குச் செல்ல பிராம்மணசாபம் என்ற வியாஜத்தை பகவான் ஏற்படுத்தியது கூறப்படுகிறது.

क्रीडन्त-स्तानुपव्रज्य कुमारा यदुनन्दनाः।
उपसंगृह्य पप्रच्छु-रविनीता विनीतवत् ॥ १.१३ ॥

ते वेषयित्वा स्त्रीवेषैः सांबं जांबवती-सुतम्।
एषा पृच्छति वो विप्रा अन्तर्वत्न्यसितेक्षणा ॥ १.१४ ॥

प्रष्टुं विलज्जती साक्षात् प्रब्रूतामोघदर्शनाः।
प्रसोष्यन्ती पुत्रकामा किंस्वित् संजनयिष्यति ॥ १.१५ ॥

एवं प्रलब्धा मुनयस्तानूचुः कुपिता नृप।
जनयिष्यति वो मन्दा मुसलं कुलनाशनम् ॥ १.१६ ॥

तच्छ्रुत्वा तेऽतिसन्त्रस्ता विमुच्य सहसोदरम्।
सांबस्य ददृशु-स्तस्मिन् मुसलं खल्वयस्मयम् ॥ १.१७ ॥

किं कृतं मन्दभाग्यैर्नः किं वदिष्यन्ति नो जनाः।
इति विह्वलिता गेहानादाय मुसलं ययुः ॥ १.१८ ॥

---

1. 13-15. வணக்க மில்லாத விளையாட்டுப் பிள்ளைகளான யாதவகுமாரர்கள் ஜாம்பவதியின் புத்திரனை ஸாம்பனுக்கு ஸ்திரீவேஷம் போட்டு அவனை யழைத்துக் கொண்டு முனிவர்களிடம் சென்று வணக்கமுடையவர்கள்போல் அவர்கள் பாதங்களைப் பிடித்துக்கொண்டு பின்வருமாறு கேட்டார்கள். 'தரிசனம் வீண்போகாத பெரியோர்களே! கரியவிழிபடைத்த இப்பெண் கருத்தரித்துப் பிரஸவிக்கும் சமயத்தி லிருக்கிறுள். புத்திரனை விரும்புகிறுள். உங்களைக் கேட்பதற்கு வெட்கப்படுகிறுள். (எங்கள் வாயிலாக) உங்களைக் கேட்கிறுள். (பிள்ளையா பெண்ணு) எதைப் பெறுவாள்? சொல்லவேண்டும்.'

1. 16. அரசே! இவ்வாறு வஞ்சனையாகக் கேட்கப்பட்ட முனிவர்கள் கோபங்கொண்டு 'மூடர்களே! இவன் உங்களுடைய குலத்தை யழிக்கும் உலக்கையைப் பெறுவான்' என்று அவர்களிடம் கூறினுர்கள்.

1. 17. அவர்கள் இதைக் கேட்டு மிகவும் நடுங்கினுர்கள். விரைவில் ஸாம்பனுடைய வயிற்றிலிருந்து விழுந்த இரும்பு மயமான உலக்கையைக் கண்டார்கள்.

1. 18. 'பாக்கியம் குறைந்த நாம் என்ன காரியம் செய்துவிட்டோம்! நம்மைப் பற்றி ஜனங்கள் என்ன சொல்லுவார்களோ?' என்று மனந் தளர்ந்து உலக்கையை எடுத்துக் கொண்டு வீடு சென்றனர்.

---

1. 17. ரிஷிகள் எதைச் சொன்னுலும் அது பொய் போகாது.

ஓ. (லௌகிகானும் ஹி ஸாதூனு-மர்த்தம் வாகனுவர்த்ததே । ருஷீணும் புனராத்யானும் வாசமர்த்தோऽனுதாவதி ॥) உலகத்தை யனுசரிக்கும் ஸாதுக்களின் வாக்கு பொருளைப் பின்பற்றிச் செல்லும். ஆதி ரிஷிகளின் வாக்கையோ வெனின் பொருள் பின்பற்றும்.

—உத்தரராமசரிதம் (பவபூதி).

तच्चोपनीय सदसि परिम्लान-मुखश्रियः।
राज्ञ आवेदयांचक्रुः सर्वयादव-सन्निधौ ॥ १.१९ ॥

श्रुत्वामोघं विप्रशापं दृष्ट्वा च मुसलं नृप।
विस्मिता भयसन्त्रस्ता बभूवु-र्द्वारकौकसः ॥ १.२० ॥

तच्चूर्णयित्वा मुसलं यदुराजः स आहुकः।
समुद्र-सलिले प्रास्यल्लोहं चास्यावशेषितम् ॥ १.२१ ॥

कश्चिन्मत्स्योऽग्रहील्लोहं चूर्णानि तरलै-स्ततः।
उह्यमानानि वेलायां लग्नान्यासन् किलैरकाः ॥ १.२२ ॥

मत्स्यो गृहीतो मत्स्यघ्नै-र्जालेनान्यैः सहार्णवे।
तस्योदरगतं लोहं स शल्ये लुब्धकोऽकरोत् ॥ १.२३ ॥

भगवान् ज्ञातसर्वार्थ ईश्वरोऽपि तदन्यथा।
कर्तुं नैच्छद् विप्रशापं कालरूप्यन्वमोदत ॥ १.२४ ॥

---

1. 19. வாடிய முகமுடைய அவர்கள் அவ்வுலக்கையை ராஜசபைக் கெடுத்துச் சென்று எல்லா யாதவர்கள் முன்னிலையிலும் அரசனிடம் நிகழ்ந்ததைத் தெரிவித்தார்கள்.

1. 20. அரசே! பொய்யாமொழியுடைய பிராம்மணர்களின் சாபத்தைக்கேட்டும் உலக்கையைப் பார்த்தும் துவாரகாவாசிகள் ஆச்சரியமும் பயமு மடைந்தார்கள்.

1. 21. யதுராஜனுகிய உக்கிரஸேனன் அவ்வுலக்கையைப் பொடியாக்கிச் சமுத்திரத்தில் போட்டுவிடச் செய்தான். (பொடியாகாமல்) எஞ்சிய துண்டையும் அவ்வாறே போட்டுவிடச் செய்தான்.

1. 22. அந்த இரும்புத் துண்டை ஒரு மீன் விழுங்கிற்று. இரும்புத்தூள் அலைகளால் கரையி லொதுக்கப்பட்டு (கோரைக்கு எருவாகி) கோரையாக மாறிற்று.

1, 23. கடலில் மீன்பிடிப்பவர்கள் வலைகளால் இந்த மீனை வேறு மீன்களுடன் பிடித்தார்கள். (ஒருவேடனிடம் இந்த மீன் போய்ச் சேரவே அந்த) வேடன் மீனின் வயிற்றிலிருந்த இரும்புத் துண்டை ஒரு பாணத்தின் நுனியில் பொருத்தினுன்.

1. 24. நிகழ்ந்ததை யெல்லா மறிந்த பகவான் பிராம்மண சாபத்தை மாற்றுவதற்குச் சாமர்த்திய முடையவராயினும் மாற்ற விரும்பவில்லை. காலரூபியாகிய அவர் இந்தச் சாபத்தை உசிதமானதென்று ஏற்றுக் கொண்டார்.

———

---

1. 19. तं चोपनीय। 1. 21. तंच्चूर्णयित्वा।

1. 23. लोहं शूलेषु लुब्धको।

नवयोगिसंवादः

श्रीशुक उवाच—

गोविन्द-भुजगुप्तायां द्वारवत्यां कुरूद्वह ।
अवात्सीन्नारदोऽभीक्ष्णं कृष्णोपासनलालसः ॥ २.१ ॥

तमेकदा तु देवर्षिं वसुदेवो गृहागतम् ।
अर्चितं सुखमासीन-मभिवाद्येद-मब्रवीत् ॥ २.३ ॥

वसुदेव उवाच—

अहं किल पुरानन्तं प्रजार्थो भुवि मुक्तिदम् ।
अपूजयं न मोक्षाय मोहितो देव-मायया ॥ २.८ ॥

यथा विचित्रव्यसनाद् भवद्भि-र्विश्वतो भयात् ।
मुच्येम ह्यंजसैवाद्धा तथा नः शाधि सुव्रत ॥ २.९ ॥

नारद उवाच—

अत्राप्युदाहरन्तीम-मितिहासं पुरातनम् ।
आर्षभाणां च संवादं विदेहस्य महात्मनः ॥ २.१४ ॥

நவயோகிஸம்வாதம்

2. 1. குருசிரேஷ்டனே! (ஓரிடத்திலும் தங்காத) நாரதர் கிருஷ்ணனை உபாஸிக்க விரும்பிக் கிருஷ்ணருடைய புஜங்களால் ரக்ஷிக்கப்பட்ட துவாரகையில் மீண்டும் தொடர்ந்து வசித்தார்.

2. 3. ஒரு சமயம் தம் வீட்டிற்கு வந்து பூஜிக்கப் பெற்றுச் சுகமாக ஆஸனத்தில் வீற்றிருந்த தேவரிஷியாகிய நாரதரை வசுதேவர் நமஸ்கரித்துப் பின்வருமாறு வினவினார்.

வசுதேவர் கூறியது—

2. 8. முக்தி யளிக்கும் முகுந்தனை முந்தி நான் பூமியில் மக்களை விரும்பிப் பூஜித்தேன். தேவமாயையால் மயங்கி முக்தியைக் கருதிப் பூஜிக்கவில்லை.

2. 9. சிறந்த விரதம் பூண்ட முனிவரே! எங்கும் பயம் நிறைந்ததும் பலவகைப் பட்ட துன்பம் நிறைந்ததுமான இவ்வுலகினின்று எளிதில் நேராக உங்கள் மூலம் எவ்வாறு விடுபடுவோமோ அவ்வாறு எங்களுக்கு உபதேசித்தருளல் வேண்டும்.

நாரதர் கூறியது—

2. 14. இவ்விஷயத்தில் பின்வரும் புராதனமான இந்த வரலாற்றைக் கூறுகிறார்கள். இது ரிஷப தேவருடைய குமாரர்களுக்கும் மஹாத்மாவாகிய நிமிசக்கரவர்த்திக்கும் நிகழ்ந்த ஸம்வாத வடிவிலுள்ளது. (அதைக் கேளும்.)

कवि-र्हरि-रन्तरिक्षः प्रबुद्धः पिप्पलायनः ।
आविर्होत्रोऽथ द्रुमिलश्चमसः करभाजनः　　॥ २.२१ ॥

त एते भगवद्रूपं विश्वं सदसदात्मकम् ।
आत्मनोऽव्यतिरेकेण पश्यन्तो व्यचरन् महीम्　　॥ २.२२ ॥

त एकदा निमेः सत्र-मुपजग्मु-र्यदृच्छया ।
वितायमान-मृषिभि-रजनाभे महात्मनः　　॥ २.२४ ॥

तान् रोचमानान् स्वरुचा ब्रह्मपुत्रोपमान् नव ।
पप्रच्छ परमप्रीतः प्रश्रयावनतो नृपः　　॥ २.२७ ॥

विदेह उवाच—

धर्मान् भागवतान् ब्रूत यदि नः श्रुतये क्षमम् ।
यैः प्रसन्नः प्रपन्नाय दास्यत्यात्मान-मप्यजः　　॥ २.३१ ॥

---

2. 21. (ரிஷபருடைய புத்திரர்களாகிய) இவர்கள் கவி, ஹரி, அந்தரிக்ஷன் ப்ரபுத்தர், பிப்பலாயனர், ஆவிர்ஹோத்ரர், த்ரமீளர், சமஸர், கரபாஜனர் எனப்பெயர் பெற்றவர்கள்.

2. 22. இவர்கள் ஸ்தூலமாகவும் ஸூக்ஷ்மமாகவும் உள்ள இந்தப் பிரபஞ்சத்தை பகவத் ரூபமாகவும் ஆத்மாவுக்கு வேறுபடாததாகவும் பார்ப்பவர்களாய்ப் பூமியில் சஞ்சரித்தார்கள்.

2. 24. இவர்கள் ஒரு சமயம் அஜநாபம் எனப் பெயர்பெற்ற பாரத வர்ஷத்தில் ரிஷிகளுடன் கூடி மஹாத்மாவாகிய நிமிசக்கரவர்த்தி செய்துகொண்டிருந்த ஸத்ரயாகத்திற்குத் தற்செயலாகச் சென்றார்கள்.

2. 27. அரசே! (செயற்கை யழகின்றி) இயற்கையான தங்களுடைய தேஜஸ்ஸால் பிரகாசிப்பவர்களும் பிரம்மபுத்திரர்களான ஸநகாதிகளைப் போன்றவர்களுமான அவர்களைப் பார்த்து பரமப்ரீதியுடனும் வணக்கத்துடனும் விதேஹ சக்கரவர்த்தியான நிமி பின்வருமாறு கேட்டார்.

விதேஹர் கூறியது—

2. 31. எந்த தர்மங்களால் பகவான் பிரஸன்னராகிச் சரணடைந்தவர்க்குத் தம்மையும் கொடுக்கிறாரோ அந்த பாகவததர்மங்களை நாங்கள் கேட்கத் தகுந்தவர்களாயின் கூறி யருளுதல் வேண்டும்.

---

2. 21. இவர்கள் ஜடபரதருடைய சகோதரர்கள்.

---

2. 27. रोचमानान् वपुषा ।

कविरुवाच—

ये वै भगवता प्रोक्ता उपाया ह्यात्मलब्धये।
अंजः पुंसामविदुषां विद्धि भागवतान् हि तान् ॥ २.३४ ॥

यानास्थाय नरो राजन् न प्रमाद्येत कर्हिचित्।
धावन् निमील्य वा नेत्रे न स्खलेन्न पतेदिह ॥ २.३५ ॥

शृण्वन् सुभद्राणि रथांगपाणे-र्जन्मानि कर्माणि च यानि लोके।
गीतानि नामानि तदर्थकानि गायन् विलज्जो विचरेदसंगः ॥ २.३९ ॥

खं वायुमग्निं सलिलं महीं च ज्योतींषि सत्त्वानि दिशो द्रुमादीन्।
सरित्समुद्रांश्च हरेः शरीरं यत्किंच भूतं प्रणमेदनन्यः ॥ २.४१ ॥

கவி கூறியது—

2. 34. அறியாத மனிதர்களுக்கு எளிதில் தம்மை யடைவதற்காகப் பகவானால் கூறப்பட்டுள்ள உபாயங்கள் எவையோ அவையே ஹிதமளிக்கும் பாகவத தர்மங்கள் என்று உணர்வீராக.

2. 35. அரசே! எவற்றை அனுசரிக்கும் புருஷன் ஒருபோதும் தவறுதலடைய மாட்டானோ, கண்களை மூடிக்கொண்டு ஓடினாலும் தடங்கலை யடையமாட்டானோ, விழமாட்டானோ (அப்படிப்பட்டவை பாகவத தர்மங்கள்.)

2. 39. மிகவும் மங்களமாகிய சக்ரபாணியின் ஜன்மங்களும் கர்மங்களும் உலகில் எவையுண்டோ அவற்றைப் பொருளாகக்கொண்ட நாமங்களையும் கீர்த்தனைகளையும் கேட்டுக்கொண்டும் பாடிக்கொண்டும் வெட்கமின்றிப் பற்றற்றவனாய்ச் சஞ்சரிக்க வேண்டும்.

2. 41. ஆகாயம், வாயு, அக்கினி, ஜலம், பூமி, ஜோதிர்மண்டலங்கள், பூதங்கள், திசைகள், மரங்கள், மலைகள், நதிகள், கடல்கள் முதலியவைகளும் இன்னும் எதெது உண்டோ அது எல்லாமும் ஹரியின் சரீரமென்று வித்தியாச மில்லாமல் நமஸ்கரிக்கவேண்டும்.

---

2. 35. எல்லா பயங்களும் நீங்க ஒரே ஸாதனம் பகவத்ஸேவை. பகவத் தர்மம் தனியான தன்று. செய்வதை யெல்லாம் அவனுக்கு அர்ப்பணம் செய்வதுதான் அந்த தர்மம். இதில் ஒரு சிறிதும் வீண்போகாது. ஞானம் கூட வேண்டாம். பகவான் ரக்ஷிப்பான். தவறிருந்தாலும் அவன் சரிக்கட்டிக்கொள்வான். 'ஹரே ஸ்ரீ த்ருஷ்ணய நம:' என்று ஒரு உஞ்சி விருத்திக் கிழவர் சொன்னதை மற்றொருவர் கடுமையாகக் கண்டித்தார். அன்றிரவு கண்டித்தவர் கனவில் ஆஞ்ஜனேயர் வந்து 'ஸ்ரீ த்ருஷ்ணய என்றாலும் அர்த்த முண்டு, ஸ்ரீ தேவியிடம் ஆசைகொண்ட கிருஷ்ணனுக்கு நமஸ்காரம் என்று அவர் சொன்னார். அதில் என்ன தப்பைக் கண்டீர்?' என்று அவரை மிரட்டினார் என்று ஒரு கதை யுண்டு.

2. 41. (அத்வைத மேவாபயம்) அத்துவைதமே பயமற்ற நிலை. வழிப்போக்கனொருவன் கட்டுச் சாதத்தைத் தலையில் தூக்கிப் போகும் வரை பாரமாயிருந்தது, அதை அவன் உண்டபின் பாரம் நீங்கி ஆனந்தத்தைக் கொடுத்தது; காரணம் அது அவனுடன் இரண்டறக் கலந்துவிட்டதே யன்றோ?

भक्तिः परेशानुभवो विरक्ति-रन्यत्र चैष त्रिक एककालः ।
प्रपद्यमानस्य यथाश्नतः स्यु-स्तुष्टिः पुष्टिः क्षुदपायोऽनुघासम् ॥ २.४२ ॥

इत्यच्युतांघ्रिं भजतोऽनुवृत्त्या भक्ति-र्विरक्ति-र्भगवत्-प्रबोधः ।
भवन्ति वै भागवतस्य राजं-स्ततः परां शान्ति-मुपैति साक्षात्
॥ २.४३ ॥

निमिरुवाच—

अथ भागवतं ब्रूत यद्धर्मो यादृशो नृणाम् ।
यथा चरति यद् ब्रूते यै-र्लिंगै-र्भगवत्प्रियः ॥ २.४४ ॥

हरिरुवाच—

सर्वभूतेषु यः पश्येद् भगवद्भाव-मात्मनः ।
भूतानि भगवत्यात्मन्येष भागवतोत्तमः ॥ २.४५ ॥

ईश्वरे तदधीनेषु बालिशेषु द्विषत्सु च ।
प्रेम-मैत्री-कृपोपेक्षा यः करोति स मध्यमः ॥ २.४६ ॥

---

2. 42. சாப்பிடுபவனுக்கு ஒவ்வொரு கவளத்திலும் திருப்தியும் புஷ்டியும் பசி நீங்குதலும் ஏற்படுவதுபோல் பகவானை பஜிப்பவனுக்கு பக்தியும் ஈசுவரானுபவமும் வைராக்கியமும் ஆகிய இம்மூன்றும் ஒரே சமயத்தி லுண்டாகும்.

2. 43. அரசே! இவ்விதம் தொடர்ந்து அச்சுதருடைய திருவடியைத் தொழும் பாகவதனுக்கு பக்தியும் வைராக்கியமும் பகவத் ஸ்வரூபபோதமும் நிச்சயமாக உண்டாகின்றன. அதன்பின் பிரத்தியக்ஷமாகச் சாந்தியை யடைகிறான்.

நிமி கூறியது—

2. 44. மானிடர்களுக்குள் பாகவதனைப்பற்றி இனிச் சொல்லுங்கள். எந்த தர்மங்களைக் கைக்கொள்வான், எந்தமாதிரி இருப்பான், எதைச் செய்வான், எப்படிப் பேசுவான், எந்த அடையாளங்களால் பகவானுக் குகந்தவனாக ஆவான் ?

ஹரி கூறியது—

2. 45. எல்லாப் பிராணிகளிடமும் பகவான் உறைகின்றான் என்ற பாவனையுடனும் பரமாத்மாவாகிய பகவானிடம் எல்லாப் பிராணிகளும் உறைகின்றன என்ற பாவனையுடனும் எவன் பார்க்கின்றானோ அவனே பாகவதர்களில் சிறந்தவன்.

2. 46. ஈசுவரனிடம் அன்பையும், அடியார்களிடம் சிநேகத்தையும், அறியாதவர்களிடம் கருணையையும், பகைவர்களிடம் உபேக்ஷையையும் எவன் செய்கிறானோ அவன் மத்தியமன்.

अर्चायामेव हरये पूजां यः श्रद्धयेहते ।
न तद्भक्तेषु चान्येषु स भक्तः प्राकृतः स्मृतः ॥ २.४७ ॥

गृहीत्वापीन्द्रियै-रर्थान् यो न द्वेष्टि न हृष्यति ।
विष्णो-र्मायामिदं पश्यन् स वै भागवतोत्तमः ॥ २.४८ ॥

देहेन्द्रिय-प्राण-मनो-धियां यो जन्माप्यय-क्षुद्भयतर्ष-कृच्छ्रैः ।
संसारधर्मै-रविमुह्यमानः स्मृत्या हरे-र्भागवत-प्रधानः ॥ २.४९ ॥

न कामकर्म-बीजानां यस्य चेतसि संभवः ।
वासुदेवैकनिलयः स वै भागवतोत्तमः ॥ २.५० ॥

न यस्य जन्मकर्मभ्यां न वर्णाश्रमजातिभिः ।
सज्जतेऽस्मिन्नहंभावो देहे वै स हरेः प्रियः ॥ २.५१ ॥

---

2. 47. எவன் விக்கிரகங்களில் மட்டும் விஷ்ணுவைச் சிரத்தையுடன் பூஜிக்கிருனே, ஆனால் அடியார்களிடத்திலும் பிறரிடத்திலும் பூஜிப்பதில்லையோ அந்த பக்தன் (ப்ராக்ருதன்) ஆரம்ப நிலையி லுள்ளவன்.

2. 48. இந்திரியங்களால் விஷயங்களை யனுபவித்தாலும் எவன் இந்த உலகத்தை விஷ்ணுவின் மாயை என்று கண்டுகொண்டவனுய் வெறுக்காமலும் மகிழாமலு மிருக்கிருனே அவன் பாகவதர்களில் சிறந்தவன்,

2. 49. தோன்றி மறையும் உலகிற் கியற்கையான உடலின் பிறப்பிறப்பு இந்திரியங்களின் தொல்லை, பிராணனுடைய பசி, மனத்திலெழும் பயம், புத்தியின் ஆசை ஆகியவற்ருல் உண்டாகும் மயக்கத்தை எவன் ஹரிஸ்மரணையால் போக்கிக்கொள்ளுகிருனே அவன் பாகவதர்களில் சிறந்தவன்.

2. 50. காமம் கர்மம் வாசனை ஆகியவற்றின் உற்பத்தி எவனிடம் காணப்படவில்லையோ, எவன் வாசுதேவனைப் புகலிடமாய்க் கொண்டவனே அவன் பாகவதர்களில் சிறந்தவன்.

2. 51. பிறப்பாலும் தொழிலாலும் வர்ணுசிரமங்களாலும் ஜாதியாலும் எவனுக்கு இவ்வுடலில் 'நான்' என்ற எண்ணம் உண்டாகாம லிருக்கிறதோ அவனே விஷ்ணுவுக்குப் பிரியமானவன்.

---

2. 51. ப்ரத்யக் வஸ்துனி நிஸ்தரங்க ஸஹஜானந்தாவபோதாம்புதௌ விப்ரோऽயம் ச்வபசோऽயமித்யபி மஹான் கோऽயம் விபேதப்ரம: || —(சங்கரர்) மனீஷாபஞ்சகம்.

न यस्य स्वः पर इति वित्तेष्वात्मनि वा भिदा।
सर्वभूतसमः शान्तः स वै भागवतोत्तमः ॥ २.५२ ॥

त्रिभुवनविभव-हेतवेऽप्यकुण्ठ-स्मृति-रजितात्मसुरादिभि-र्विमृग्यात्।
न चलति भगवत्पदारविन्दा-ल्लवनिमेषार्धमपि स वैष्णवाग्र्यः ॥ २.५३ ॥

विसृजति हृदयं न यस्य साक्षा-द्धरि-रवशाभिहितोऽप्यघौघनाशः।
प्रणयरशनया धृताङ्घ्रिपद्मः स भवति भागवतप्रधान उक्तः ॥ २.५५ ॥

राजोवाच—

परस्य विष्णो-रीशस्य मायिनामपि मोहिनीम्।
मायां वेदितु-मिच्छामो भगवन्तो ब्रुवन्तु नः ॥ ३.१ ॥

अन्तरिक्ष उवाच—

निर्गुणे केवले साक्षादात्मनो यद्विपर्ययः।
सैषा भगवतो माया ययेदं निर्ममे विभुः ॥ ३.३ ॥

2, 52. பொருளைக் கருதியோ உடலைக் கருதியோ எவனுக்கு தன்னுடைய தென்றும் பிறருடைய தென்றும் பேதமில்லையோ, எவன் எல்லாப் பிராணிகளிடத்தும் ஸமமாகவும் சாந்தமாகவு மிருக்கிறனே அவனே பாகவதர்களில் சிறந்தவன்.

2. 53. மூவுலக ஐசுவரியத்திற்காகக்கூட எவன் பகவானை உயிராகக்கொண்ட தேவர்களும் தேடிக்கொண்டிருக்கும் பகவானுடைய திருவடித் தாமரைகளினின்று ஒரு நொடிகூட அரை நிமிஷம்கூட விலகாத் ஞாபகமுடையவனு யிருக்கின்றனே அவன் விஷ்ணுபக்தர்களில் சிறந்தவன்.

2. 55. தன் வசமில்லாமல் நாமத்தைச் சொன்னலும் பாவக்குவியலை நாசம் செய்யும் ஹரியானவர் அன்பெனும் கயிற்றல் கட்டுண்ட பாதங்களையுடையவராய் எவனுடைய மனத்தை விட்டகலாமல் பிரத்தியக்ஷமாக இருக்கிறரோ அவனே பாகவதர்களில் சிறந்தவன் எனக் கூறப்படுகிறன்.

அரசன் கூறியது—

3. 1. பகவத்ஸ்வரூபிகளாகிய முனிவர்களே! மாயாவிகளையும் மயங்கச் செய்யும் பரமேசனுகிய விஷ்ணுவின் மாயையைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேம். எங்களுக்குச் சொல்லவேண்டும்.

அந்தரிக்ஷர் கூறியது—

3. 3. இரண்டற்ற ஸாக்ஷாத் நிர்க்குணப் பிரம்மத்தினிடம் ஸ்வரூபத்திற்கு மாறுதல் ஏற்படுதல் எதுவோ அதுவே பகவானுடைய மாயை. அதைக்கொண்டுதான் பகவான் இந்தப் பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்தார்.

---

2. 53. ஓ. வைஷ்ணவ ஜனதோ தேநே கஹியே ஜோ பீட்பராஈ ஜாணேரே! பரதுঃக்கே உபகார கரேதோஏ மன அபிமான ந ஆநேரே ॥ —நரசிம்ம மேத்தா

विशुद्धं ज्ञानमेवैकं मायया भासते त्रिधा ।
ग्राहकाद्यै-र्यथा स्वप्ने यत्र संवित्क्रिया फलम् ॥ ३.५ ॥

वैतथ्याद्व्यभिचाराच्च मायात्रैविध्यमात्मनि ।
यथा मनोरथस्स्वप्न इत्यामृश्योपशाम्यति ॥ ३.६ ॥

इन्द्रियाणि मनो बुद्धिः सह वैकारिकै-र्नृप ।
प्रविशन्ति ह्यहंकारं स्वगुणै-रहमात्मनि ॥ ३.१९ ॥

एषा माया भगवतः सर्ग-स्थित्यन्तकारिणी ।
त्रिवर्णा वर्णितास्माभिः किं भूयः श्रोतुमिच्छसि ॥ ३.२० ॥

राजोवाच—

यथैता-मैश्वरीं मायां दुस्तरामकृतात्मभिः ।
तरन्त्यंजः स्थूलधियो महर्ष इदमुच्यताम् ॥ ३.२१ ॥

प्रबुद्ध उवाच—

श्रद्धां भागवते शास्त्रेऽनिन्दामन्यत्र चापि हि ।
मनो-वाक्कर्मदण्डं च सत्यं शमदमावपि ॥ ३.२६ ॥

---

3. 5-6. பரிசுத்தமான ஞானஸ்வரூபமொன்றே மாயையால் மூன்று விதமாகத் தோன்றுகிறது. ஸ்வப்னவஸ்தையில் அறிகிறவன், அறிவு அறியப்படுவது என்னும் இவைகள் தோன்றுவது போலாம். (ஸ்வப்னத்தில்) தன்னிடத்திலேயே (அறிகிறவன் அறிவு அறியப்படுவது என்ற) மூன்றும் தோன்றுவது எங்ஙனமோ அங்ஙனமே மனோரதம் நிகழும் ஜாக்கிரத்திலும் உண்மையில் இல்லாமையாலும் மாறுபடுவதாலும் அதுவும் மாயை என்றும் கனவுபோன்றதே என்றும் ஆராய்ந்தறிந்தபின் சந்தேகம் நிவிருத்தியாகிறது.

3. 19. அரசே! (லயகாலத்தில்) இந்திரியங்களும் மனதும் புத்தியும் தத்தம் காரியங்களுடன் அஹங்காரத்தில் லயமாகின்றன. அஹங்காரம் தன் குணங்களுடன் ஆத்மாவிடம் லயமடைகின்றது.

3. 20. ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்ய வல்லதும் மூன்று குணவடிவானதுமான பகவானுடைய இந்த மாயா சக்தி எங்களால் வர்ணிக்கப்பட்டது. இன்னும் எதைக் கேட்கவிரும்புகிறீர்?

அரசன் கூறியது—

3. 21. மஹரிஷியே! அந்தக்கரணம் திருந்தாதவர்களும் ஸ்தூல சரீரத்தை ஆத்மா என்று கொண்டவர்களும் தாண்டமுடியாத இந்த ஈசுவரமாயையை எவ்வாறு எளிதில் தாண்டக் கூடும் என்ற இதைப்பற்றிக் கூறியருளுதல் வேண்டும்.

---

3. 3—6. சில பாடங்களில் இச்சுலோகங்கள் காணப்படவில்லை.

श्रवणं कीर्तनं ध्यानं हरेरद्भुत-कर्मणः।
जन्मकर्मगुणानां च तदर्थेऽखिल-चेष्टितम् ॥ ३.२७ ॥

परस्परानुकथनं पावनं भगवद्यशः।
मिथो रति-र्मिथस्तुष्टि-र्निवृत्ति-र्मिथ आत्मनः ॥ ३.३० ॥

इति भागवतान् धर्मान् शिक्षेद् भक्त्या तदुत्थया।
नारायण-परो माया-मञ्जस्तरति दुस्तराम् ॥ ३.३३ ॥

राजोवाच—

नारायणाभिधानस्य ब्रह्मणः परमात्मनः।
निष्ठामर्हथ नो वक्तुं यूयं हि ब्रह्मवित्तमाः ॥ ३.३४ ॥

ப்ரபுத்தர் கூறியது—

3. 26-27. பாகவத சாஸ்திரத்தில் சிரத்தை, மற்றவைகளை நிந்திக்காமலிருப்பது. மனதையும் வாக்கையும் செயலையும் ஒடுக்குதல், ஸத்தியம், சமம், தமம், அற்புதமான செயல்களையுடைய ஹரியின் ஜன்மம் கர்மம் குணம் முதலியவற்றை சிரவணம் செய்தல் கீர்த்தனம் செய்தல் தியானம் செய்தல் பகவானை உத்தேசித்தே எல்லாக் காரியங்களையும் செய்தல்.

3. 30. பகவானுடைய பரமபாவன புகழை ஒருவர்க் கொருவர் எடுத்துரைத்துக் கொண்டு அதில் உள்ளூர மகிழ்ச்சியும் திருப்தியும் ஆனந்தமும் அடைதல்.

3. 33 இவ்வாறு பாகவத தர்மங்களை அப்பியாஸம் செய்யவேண்டும். இதனால் உண்டான பக்தியால் நாராயணனைக் கதியாக அடைந்து கடக்கமுடியாத மாயையை எளிதில் ஒருவன் கடக்கிறான்.

அரசன் கூறியது—

3. 34. நாராயணன் எனப் பெயர் பெற்றவரும் பரமாத்மாவுமான பிரம்மத்தின் ஸ்வரூபத்தை எங்களுக்கு எடுத்துக் கூற நீங்களே தகுந்தவர்கள். நீங்கள் பிரம்ம ஸ்வரூப மறிந்தவர்களுள் சிறந்தவர்க ளல்லவா ?

---

3. 30. ஒ. சித்தத்தை என்னிடம் வைத்தவர்களாய், என்னை உயிர் நிலையாய்க் கொண்டவர்களாய், ஒருவர்க்கொருவர் என்னையே போதித்துக்கொண்டும், எப்போதும் என் லீலைகளையே எடுத்துரைத்துக்கொண்டும் திருப்தி யடைகின்றனர்; ஆனந்த மெய்துகின்றனர். நிலைபெற்ற உள்ளம் உடையவர்களும் அன்புடன் சேவிப்பவர்களுமாகிய அவர்களுக்கு எதனால் அவர்கள் என்னை யடைவார்களோ அந்த புத்தியோகத்தை நான் கொடுக்கிறேன். —கீ. 10. 9-10

---

3. 33. शिक्षन्। —பா. பே

पिप्पलायन उवाच—

स्थित्युद्भव-प्रलय-हेतु-रहेतु-रस्य
यत्स्वप्न-जागर-सुषुप्तिषु सद्बहिश्च ।
देहेन्द्रियासु-हृदयानि चरन्ति येन
संजीवितानि तदवेहि परं नरेन्द्र ॥ ३.३५॥

नैतन्मनो विशति वागुत चक्षुरात्मा
प्राणेन्द्रियाणि च यथानलमर्चिषः स्वाः ।
शब्दोऽपि बोधक-निषेधतयाऽऽत्ममूल-
मर्थोक्तमाह यदृते न निषेधसिद्धिः ॥ ३.३६ ॥

सत्त्वं रजस्तम इति त्रिवृदेक-मादौ
सूत्रं महानहमिति प्रवदन्ति जीवम् ।
ज्ञानक्रियार्थ-फलरूपत-योरुशक्ति
ब्रह्मैव भाति सदसच्च तयोः परं यत् ॥ ३.३७ ॥

பிப்பலாயனர் கூறியது—

3. 35. அரசே! சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் இவைகளுக்குக் காரணமாகியும் காரண மல்லாததாகவும் எது உள்ளதோ, ஜாக்ரம், ஸ்வப்னம், ஸுஷுப்தி இவைகளிலும் அவற்றிற் கப்பாலும் வியாபிப்பதாகவும் எது உள்ளதோ ,தேகம் இந்திரியம் பிராணன் உள்ளம் ஆகியவை எதனால் இயங்குகின்றனவோ அதுவே பரதத்துவம் என்று தெரிந்துகொள்ளவேண்டும்.

3. 36. அக்கினியிலிருந்துண்டான பொறிகள் அக்கினியைப் பொசுக்கமாட்டாதவாறு மனம் வாக்கு கண் புத்தி பிராணன் இந்திரியங்கள் ஆகியவை பரதத்துவத்தை உணரமாட்டா. வேதமும் தனக்கு மூலமாகிய பிரம்மத்தை (நேராகச் சொல்லாமல்) சொல்லியதாக அர்த்தம் செய்துகொள்ளும்படி நிஷேத ரூபமாக ('நேதி நேதி' இது அன்று இது அன்று என்று) கூறியது. பிரம்மம் இல்லாவிடில் நிஷேதம் ஸித்திக்காது (நிஷேதத்திற்கு அர்த்த மில்லை).

3. 37. ஆதியில் ஒன்றேயாகிய இந்த பரப்பிரம்மத்தை ஸத்துவம், ரஜஸ், தமஸ் என்ற மூன்றாகவும், ஸூத்ரம், மஹான், ஜீவோபாதியாகிய அஹங்காரம் என்றும் சொல்லுகிறார்கள். ஸ்தூலமாகவும் ஸூக்ஷ்மமாகவும் அதற்கப்பாற்பட்டதாகவும் பல விதமான சக்திகளுடையதாகவும் உள்ள பிரம்மம் எதுவோ அதுவே ஞானம் கிரியை அர்த்தம் பலன் இவைகளின் ரூபமாகப் பிரகாசிக்கிறது.

---

3. 36. ஓ. (ந தத்ர சக்ஷுர்-கச்சதி ந வாக் கச்சதி நோ மன:) அங்கே கண் செல்லாது, வாக்கு செல்லாது, மனமும் செல்லாது. —கேன உப. 1. 3.

नात्मा जजान न मरिष्यति नैधतेऽसौ
न क्षीयते सवनविद् व्यभिचारिणां हि ।
सर्वत्र शश्व-दनपाय्युपलब्धिमात्रं
प्राणो यथेन्द्रियबलेन विकल्पितं सत् ॥ ३.३८ ॥

अण्डेषु पेशिषु तरुष्वविनिश्चितेषु
प्राणो हि जीवमुपधावति तत्र तत्र ।
सन्ने यदिन्द्रियगणेऽहमि च प्रसुप्ते
कूटस्थ आशयमृते तदनुस्मृतिर्नः ॥ ३.३९ ॥

यर्ह्यब्जनाभ-चरणैषणयोरुभक्त्या
चेतोमलानि विधमेद् गुणकर्मजानि ।
तस्मिन् विशुद्ध उपलभ्यत आत्मतत्त्वं
साक्षाद् यथामलदृशोः सवितृप्रकाशः ॥ ३.४० ॥

---

3. 38. ஆத்மா பிறப்பதில்லை, இறப்பதில்லை, குறைவதில்லை. மாறிமாறி வரும் (பால்யம் யௌவனம் முதலிய) நிலைகளை அந்தந்தக் காலத்தில் பார்த்துக்கொண்டிருக்கிறது. இந்திரிய பலத்தால் பலவாறாகத் தோன்றும் பிராணனைப்போல் எங்கும் எப்பொழுதும் தொடர்ந்து நிற்கும் ஞானவடிவா யுள்ளது.

3. 39. முட்டையிலிருந்தும் கருப்பையிலிருந்தும் (மரங்களில்) விதையிலிருந்தும் விவரிக்க முடியாத வேறு வகையிலும் தோன்றும் உயிர்களிடை பிராணன் ஜீவனை யனுசரிக்கிறது. இந்திரியங்கள் ஒடுங்கி அஹங்காரமும் உறங்கியபின் கூடஸ்தன் லிங்க சரீரமின்றி இருக்கிறான். (ஸுஷுப்தி ஸாக்ஷியாகிய) அந்த கூடஸ்தனைப்பற்றிய நினைவு நமக்கு ஏற்படுகிறது.

3. 40. பத்மநாபருடைய பாதசேவையால் ஏற்பட்ட பக்திப் பெருக்கால் குணங்களாலும் கர்மங்களாலும் மனத்தில் படிந்துள்ள மலங்களைப் போக்கவேண்டும். தெளிவான கண்களில் சூர்யப்பிரகாசம்போல் மனம் தெளிந்தவுடன் ஆத்மஞானம் பிரகாசிக்கிறது.

---

3. 39. ஸன்னே—லீனே ; அஹமி—அஹங்காரே ச ஸன்னே ।

3. 39. आश्यमृते ।

राजोवाच—

कर्मयोगं वदत नः पुरुषो येन संस्कृतः।
विधूयेहाशु कर्माणि नैष्कर्म्यं विन्दते परम् ॥ ३.४१ ॥

आविर्होत्र उवाच—

कर्माकर्म-विकर्मेति वेदवादो न लौकिकः।
वेदस्य चेश्वरात्मत्वात् तत्र मुह्यन्ति सूरयः ॥ ३.४३ ॥

परोक्षवादो वेदोऽयं बालानामनुशासनम्।
कर्ममोक्षाय कर्माणि विधत्ते ह्यगदं यथा ॥ ३.४४ ॥

नाचरेद् यस्तु वेदोक्तं स्वयमज्ञोऽजितेन्द्रियः।
विकर्मणा ह्यधर्मेण मृत्यो-र्मृत्यु-मुपैति सः ॥ ३.४५ ॥

அரசன் கூறியது—

3. 41. (முனிவர்களே!) எதனுல் மனிதன் திருந்தப்பெற்று விரைவில் கர்மங்களை விட்டு நைஷ்கர்ம ஸித்தியான ஞானத்தை யடைவாஞே அப்படிப்பட்ட கர்மயோக மார்க்கத்தை எங்களுக்கு விளக்கிக் கூறவேண்டும்.

ஆவிர்ஹோத்ரர் கூறியது—

3. 43. கர்மம் அகர்மம் விகர்மம் இம்மூன்றும் வேதத்தால் அறியக் கூடியவை. உலகப் பேச்சால் (யுக்தியால்) அறியக் கூடியவை யன்று. வேதம் ஈசுவர ஸ்வரூப மாகையால் (அதுவே பிரமாணம்); கர்மத்தைப்பற்றிய விஷயத்தில் பண்டிதர்களும் மயங்குகிருர்கள்.

3. 44. இந்த வேதமானது (பரோக்ஷமாக) பொருளை மறைத்துக் கூறுவது அறியாத பிள்ளைகளுக்குக் கட்டளையிடுவதுபோலாம். (வியாதி நீங்கி மருந்துண்ணுமை விருப்பதற்காகக் கொடுக்கப்படும்) மருந்துபோல் கர்மம் விலகுவதற்காகக் கர்மம் போதிக்கப்படுகிறது.

3. 45. இந்திரியங்களை ஜயிக்காதவனும் அறிவில்லாதவனுமான மனிதன் வேதத்தில் கூறிய கர்மத்தைச் செய்யாவிடில் செய்யவேண்டிய கர்மாவை விட்டுவிட்ட அதர்மத்தால் சாவிலிருந்து சாவையே அடைகிருன்.

---

3. 43 **கர்ம-விஹிதம்**; **அகர்ம-தத்விபரீதம் நிஷித்தம்**; **விகர்ம-விகதம் கர்ம விஹிதாகரணம்**; ஏதத் த்ரயம் வேதவாத; வேதைக-கம்யம் ந லௌகிக:।

3. 44. **பரோக்ஷவாத:**—ஒ. தம் வா ஏதம் பஞ்ச ஹூதம் ஸந்தம் பஞ்ச ஹோதே த்யாசக்ஷதே பரோக்ஷேண பரோக்ஷப்ரியா இவ ஹி தேவா:।

'வேதோப்டவாந்தர-பலை: ப்ரலோபயன் கர்ம-மோக்ஷாயைவ **கர்மாணி விதத்தே.**'

—ஸ்ரீதரர்.

वेदोक्तमेव कुर्वाणो निःसंगोऽर्पित-मीश्वरे ।
नैष्कर्म्यां लभते सिद्धिं रोचनार्था फलश्रुतिः ॥ ३.४६ ॥

य आशु हृदयग्रन्थिं निर्जिहीर्षुः परात्मनः ।
विधिनोपचरेद् देवं तन्त्रोक्तेन च केशवम् ॥ ३.४७ ॥

लब्धानुग्रह आचार्यात् तेन सन्दर्शितागमः ।
महापुरुष-मभ्यर्चेन्मूर्त्याभिमतयाऽऽत्मनः ॥ ३.४८ ॥

शुचिः संमुखमासीनः प्राणसंयमनादिभिः ।
पिण्डं विशोध्य संन्यास-कृतरक्षोऽर्चयेद्धरिम् ॥ ३.४९ ॥

आत्मानं तन्मयं ध्यायन् मूर्तिं संपूजयेद्धरेः ।
शेषमाधाय शिरसि स्वधाम्न्युद्वास्य सत्कृतम् ॥ ३.५४ ॥

---

3. 46. வேதத்தில் கூறிய கர்மத்தையே செய்து பற்றுதல் இல்லாமல் ஈசுவரனிடம் அர்ப்பணம் செய்தால் நைஷ்கர்மஸித்தியான ஞானத்தை ஒருவன் அடைவான். பயனைப்பற்றி வேதத்திலுள்ள புகழ்ச்சியானது கர்மத்தில் ருசியை உண்டாக்குவதற்காகவே.

3. 47. எவன் பரனாகிய ஜீவனுடைய அஹங்காரச் சிக்கலைப் போக்க விரும்புகிறானோ அவன் தந்திரத்தில் கூறிய முறைப்படி தேவனாகிய கேசவனைப் பூஜிக்க வேண்டும்.

3. 48. ஆசாரியனிடம் அனுக்கிரகம் பெற்று ஆகமப்படி பூஜைசெய்யும் முறையும் அவரால் காண்பிக்கப் பெற்றுத் தன் மனதுக்குப் பிடித்த வடிவத்தில் பரமபுருஷனைப் பூஜிக்கவேண்டும்.

3. 49. பரிசுத்தனாக மூர்த்திக்கு எதிரில் வீற்றுப் பிராணாயாமம் முதலியவைகளால் தேகத்தைச் சோதித்து ஆறு நியாஸங்களால் ரக்ஷையைச் செய்துகொண்டு ஹரியைப் பூஜிக்கவேண்டும்.

3. 54. ஆத்மாவை அம்மூர்த்தியின் வடிவாகவே தியானித்து ஹரியின் அம்மூர்த்தியைப் பூஜிக்கவேண்டும். நிர்மால்யத்தைச் சிரசில் தரித்துப் பின்பு பூஜிக்கப் பெற்ற பகவானைத் தன் ஸ்தானமாகிய இருதயத்தில் எழுந்தருளச் செய்து பூஜையைப் பூர்த்திசெய்யவேண்டும்.

---

3. 54. ஒ. தேஹோ தேவாலய: ப்ரோக்தோ ஜீவோ தேவ: ஸநாதன: |
த்யஜேத்-அஜ்ஞான-நிர்மால்யம் ஸோऽஹம் பாவேன பூஜயேத் ||
—பூஜாபத்ததி: |

ஒ. 'நாக்ஷதை-ரர்ச்சயேத் விஷ்ணும் ந கேதக்யா மஹேச்வரம் ||'

ஸ்வதாம்னி—ஸ்வஸ்தானே, தேவம் ஹ்ருதயே, மூர்த்திம் கரண்டகே |

உத்வாஸ்ய—ஸ்தாபயித்வா |

एव-मग्न्यर्क-तोयादा-वतिथौ हृदये च यः।
यजतीश्वर-मात्मान-मचिरान्मुच्यते हि सः ॥ ३.५५ ॥

राजोवाच—

यानि यानीह कर्माणि यै-यैः स्वच्छन्द-जन्मभिः।
चक्रे करोति कर्ता वा हरिस्तानि ब्रुवन्तु नः ॥ ४.१ ॥

द्रमील उवाच—

यो वा अनन्तस्य गुणाननन्ता-ननुक्रमिष्यन् स तु बालबुद्धिः।
रजांसि भूमेर्गणयेत् कथंचित् कालेन नैवाखिल-शक्तिधाम्नः ॥ ४.२ ॥

भूतै-र्यदा पंचभिरात्मसृष्टैः पुरं विराजं विरचय्य तस्मिन्।
स्वांशेन विष्टः पुरुषाभिधान-मवाप नारायण आदिदेवः ॥ ४.३ ॥

3. 55. இவ்வாறு எவன் அக்கினி, சூரியன் ஜலம் முதலியவற்றிலும் அதிதியிடத்திலும் இருதயத்திலும் ஆத்மாவாகிய ஈசுவரனைப் பூஜிக்கிருனே அவன் விரைவில் முக்தி எய்துவான்.

அரசன் கூறியது—

4. 1. பகவான் தமக்குவப்பான ஜன்மங்களில் எவ்வெவற்ருல் எங்தெந்தக் காரியங்களைச் செய்தாரோ செய்கிருரோ, செய்யப்போகிருரோ அவற்றை எங்களுக்குச் சொல்லவேண்டும்.

த்ரமீளர் கூறியது—

4. 2. எவன் அனந்தருடைய எல்லையற்ற குணங்களைக் கணக்கிடுகிருனே அவன் அறிவிற் சிறியவன். பூமியிலுள்ள தூசுகளை ஒருவேளை ஒருவன் எண்ணினுலும் எண்ணலாம்; எத்தனை காலமானுலும் எல்லா சக்திகளுக்கும் உறைவிடமான பகவானுடைய குணங்களைக் கணக்கிட முடியாது.

4. 3. ஆதி தேவராகிய நாராயணர் தம்மால் சிருஷ்டிக்கப்பட்ட பஞ்சபூதங்களால் பிரம்மாண்டமாகிய புரத்தைக் கற்பித்து அதில் தமது அம்சத்தால் புகுந்ததால் புருஷர் என்ற பெயரை அடைந்தார்.

---

3. 55. ஒ. பாஷாண-லோஹ-மணி-ம்ருன்மய-விக்ரஹேஷு
பூஜா புனர்ஜனன-போககரீ முமுக்ஷோ: ।
தஸ்மாத்-யதி: ஸ்வஹ்ருதயார்ச்சனமேவ குர்யாத்
பாஹ்யார்ச்சனம் பரிஹரே-தபுனர்ப்பவாய ॥ —மைத்ரேயீ உபநிஷத்து.

4. 2. ஒ. 'விஷ்ணோர் நு கம் வீர்யாணி ப்ரவோசம்
ய: பார்த்திவானி விமமே ரஜாம்ஸி' —விஷ்ணு ஸூக்தம்.

4. 3. தத்ராதௌ புருஷாவதாரமாஹ பூதைரிதி । யதா ஸ்வஸ்ருஷ்டைர்ப்பூதைர்-விராஜம் ப்ரஹ்மாண்டம் புரம் நிர்மாய தஸ்மின் லீலயா ப்ரவிஷ்ட: ந து போக்த்ருத்வேன ப்ராப்த-புண்யஸ்ய ஜீவஸ்ய தத்ர போக்த்ருத்வாத் ॥

4. 2. सर्वधाम्नः ।

धर्मस्य दक्षदुहितर्यजनिष्ट मूर्त्यां नारायणो नर ऋषिप्रवरः प्रशान्तः।
नैष्कर्म्य-लक्षणमुवाच चचार कर्म योऽद्यापि चास्त ऋषिवर्य-
निषेवितांघ्रिः ॥ ४.६ ॥

हंसस्वरूप्यवद-दच्युत आत्मयोगं दत्तः कुमार ऋषभो भगवान् पिता नः।
विष्णुः शिवाय जगतां कलयावतीर्ण-स्तेनाहृता मधुभिदा श्रुतयो हयास्ये
॥ ४.१७ ॥

निःक्षत्रियामकृत गां च त्रिःसप्तकृत्वो
रामस्तु हैहयकुलाप्यय-भार्गवाग्निः।
सोऽब्धिं बबन्ध दशवक्त्रमहन् सलङ्कं
सीतापतिर्जयति लोकमलघ्न-कीर्तिः ॥ ४.२१ ॥

4. 6. தர்மப்பிரஜாபதிக்கு தக்ஷபுத்திரியாகிய மூர்த்தியிடம் நாராயணன் நரன் என்ற இரண்டு வடிவத்துடன் பகவான் பிறந்தார். தம்முடைய தவத்தால் ப்ரசாந்தராய் நைஷ்கர்ம்ய லக்ஷணத்தை உபதேசித்தார். ரிஷி சிரேஷ்டர்களால் பாதசேவை செய்யப் பெற்று இன்றும் விளங்குகிறார்.

4. 17. அச்யுதர் ஹம்ஸ ரூபத்தில் தோன்றி ஆத்மயோகத்தை உரைத்தார். தத்தாத்ரேயர், ஸநகர் முதலிய நால்வர், எங்கள் பிதாவாகிய பகவான் ரிஷபதேவர் ஆகியோர் உலக மங்களத்திற்காக விஷ்ணுவின் அம்சமாக அவதரித்தவர்கள். ஹயக்கிரீவ அவதாரத்தில் மது என்ற அசுரனைக் கொன்று பகவான் வேதங்களைக் கைக் கொண்டார். (மத்ஸ்யாவதாரத்தில் மாதவன் பிரளய ஜலத்தில் முழுகும் பூமியையும் செடிகொடிகளையும் மனுவையும் ரக்ஷித்தார். வராஹாவதாரத்தில் ஜலத்திலிருந்து பூமியைத் தூக்கி ஹிரண்யாக்ஷனை வதம் செய்தார். கூர்மாவதாரத்தில் அமிருத மதனத்திற்காகத் தம் முதுகில் மந்தர மலையைத் தாங்கினார். துன்புற்றுச் சரண்புகுந்த கஜேந்திரனை முதலையிடமிருந்து விடுவித்தார். ஸமுத்திரத்தில் விழுந்து துதி செய்த தபஸ்விகளாகிய வாலகில்ய ரிஷிகளைக் காப்பாற்றினார். விருத்ராஸுரவதத்தால் பிரம்மஹத்தி தோஷமடைந்த இந்திரனை ரக்ஷித்தார். நரசிம்மராக அவதரித்து ஸாதுக்களின் பயத்தையொழிப்பதற்காக ஹிரண்யகசிபுவை வதம் செய்தார்; அவன் வீட்டில் சிறை வைக்கப் பட்டிருந்த அநாதைகளான தேவஸ்திரீகளை விடுவித்தார். தேவாசுரயுத்தத்தில் தேவர்களைக் காக்க அசுரர்களை வதைத்தார். மன்வந்தரங்களில் தம் அம்சங்களால் உலகங்களைப் பரிபாலித்தார். வாமனராக அவதரித்து யாசகம் செய்யும் சாக்கில் பலியிட மிருந்து பூமியைவாங்கி அதிதியின் புத்திரர்களான தேவர்களிடம் கொடுத்தார்.)

4. 21. ஹேஹய வம்சத்தை யழிப்பதற்குப் பிருகு குலத்தில் தோன்றிய அக்கினி போன்ற பரசுராமர் பூமியில் இருபத்தொரு தடவை க்ஷத்திரியர்க ளில்லாமற் செய்தார். சமுத்திரத்தில் அணைகட்டி லங்கையை யழித்து ராவணனை வதஞ் செய்தவரும் அளவற்ற புகழ்பெற்றவருமான ஸீதாபதி உலகில் ஜயமடைகிறார். (பிறப்பில்லாத பகவான் பூபாரத்தைப் போக்குவதற்காக யதுவம்சத்தில் பிறந்து தேவர்களாலும் செய்யமுடியாத காரியங்களைச் செய்யப்போகிறார். புத்தராக அவதரித்து யாகம் செய்பவர்களையும் யாகம் செய்யத் தகுதி யில்லாதவர்களையும் வாதத்தால் மயக்கப் போகிறார். கலியுகத்தில் பூமியை அக்கிரமமாக ஆள்பவர்களை முடிவில் வதைக்கப் போகிறார்.)

4. 6. **நைஷ்கர்ம்யம்** ஆத்மஸ்வரூபம் லக்ஷ்யதே யேன தத் கர்மநிர்ஹார-ரூபம் வா |

4. 6. **नर इति स्वतपः प्रशान्तः ।**

एवंविधानि कर्माणि जन्मानि च जगत्पतेः ।
भूरीणि भूरियशसो वर्णितानि महाभुज ॥ ४.२३ ॥

राजोवाच—

भगवन्तं हरिं प्रायो न भजन्त्यात्मवित्तमाः ।
तेषा-मशान्तकामानां का निष्ठाऽविजितात्मनाम् ॥ ५.१ ॥

चमस उवाच—

वदन्ति तेऽन्योन्य-मुपासित-स्त्रियो गृहेषु मैथुन्यपरेषु चाशिषः ।
यजन्त्यसृष्टान्न-विधानदक्षिणं वृत्त्यै परं घ्नन्ति पशूनतद्विदः ॥ ५.८ ॥

सर्वेषु शश्वत् तनुभृत्स्ववस्थितं यथा खमात्मानमभीष्टमीश्वरम् ।
वेदोपगीतं च न शृण्वतेऽबुधा मनोरथानां प्रवदन्ति वार्तया ॥ ५.१० ॥

लोके व्यवायाऽमिष-मद्यसेवा नित्यास्तु जन्तो-र्न हि तत्र चोदना ।
व्यवस्थिति-स्तेषु विवाह-यज्ञ-सुराग्रहै-रासु निवृत्तिरिष्टा ॥ ५.११ ॥

---

4. 23. புஜபலம் மிக்கவரே! புகழ் மிக்கவரும் லோகநாதருமாகிய பகவானுடைய இம்மாதிரியான பல ஜன்மங்களும் கர்மங்களும் வர்ணிக்கப் படுகின்றன.

அரசன் கூறியது—

5. 1. ஆத்மஞானிகளிற் சிறந்தவர்களே! பகவானாகிய ஹரியை பஜிக்காதவர்களும் மனதை ஜயிக்காதவர்களும் ஆசை யடங்காதவர்களுமான அவர்களுடைய மார்க்கம் எப்படிப்பட்டது?

சமஸர் கூறியது—

5. 8. அந்த அறிவிலிகள் ஸ்திரீகளைச் சேவித்துக்கொண்டு ஸ்திரீ புருஷர்களின் சேர்க்கையை முக்கியமாகக்கொண்ட கிருஹங்களிலுள்ள சுகங்களைப் பற்றி ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வார்கள். அன்னதானமும் தக்ஷிணையு மில்லாமல் யாகம் செய்வார்கள். பிழைப்புக்காகப் பிராணிகளை இம்சிப்பார்கள்.

5. 10. தேஹம் படைத்த எல்லோரிடத்திலும் எப்போதும் ஆகாயம்போல் பற்றற்று, ஆத்மாவாக உறைபவரும் வேதங்களால் கூறப்படுகிறவருமாகிய ஈசுவரனைப் பற்றி மதியீனர்கள் கேட்பதில்லை. மனதிலெழும் ஆசைகளைப் பற்றிய விவகாரங்களையே பேசுகிறார்கள்.

5. 11. உலகில் சிற்றின்பம் மாம்ஸம் மது முதலியவற்றை யனுபவித்தல் பிராணிகளுக்கு இயற்கையாக ஏற்பட்டவையாயினும் அவற்றை யனுபவிக்கவேண்டு மென்று கட்டளை இல்லை. விவாகக் கட்டுப்பாடு, யாகத்தில் அல்லாது பிராணிகளை இம்சியாமை, மதுவை முகர்ந்துமட்டும் பார்த்தல் என்ற விதிகளால் அவற்றினின்று விலகுதலே (வேதத்திற்கு) இஷ்டமானது.

यद् घ्राणभक्षो विहितः सुराया-
स्तथा पशो-रालभनं न हिंसा।
एवं व्यवायः प्रजया न रत्यै
इमं विशुद्धं न विदुः स्वधर्मम् ॥ ५.१३ ॥

राजोवाच—

कस्मिन् काले स भगवान् किं वर्णः कीदृशो नृभिः।
नाम्ना वा केन विधिना पूज्यते तदिहोच्यताम् ॥ ५.१९ ॥

करभाजन उवाच—

कृते शुक्लचतु-र्बाहु-र्जटिलो वल्कलांबरः।
कृष्णाजिनोपवीताक्षान् बिभ्रद्दण्ड-कमण्डलू ॥ ५.२१ ॥

मनुष्यास्तु तदा शान्ता निर्वैराः सुहृदः समाः।
यजन्ति तपसा देवं शमेन च दमेन च ॥ ५.२२ ॥

---

5. 13. மதுவை முகர்ந்து பார்ப்பதே புசித்ததாகும். (யாகத்தில் மட்டும்தான்) ஹிம்ஸை ஹிம்ஸையாகக் கருதப்படாது. ஸ்திரீஸங்கம் மக்களைப் பெறுவதற்கு மட்டுமே யன்றி இன்ப நுகர்ச்சியின் பொருட்டன்று. பரிசுத்தமான இதுவே ஸ்வதர்மம் என்று எவரும் உணர்வதில்லை.

அரசன் கூறியது—

5. 19. பகவான் எந்த வர்ண முடையவர்? என்ன வடிவுடையவர்? (எவ்வெப் போது) எந்தெந்தப் பெயரால் என்ன முறைப்படி அவர் மானிடரால் பூஜிக்கப்படுகிறார்? அதை இங்கு உபதேசித் தருள வேண்டும்.

கரபாஜனர் கூறியது—

5. 21. கிருத யுகத்தில் பகவான் வெண்மை நிறமுடையவராய் நான்கு கைகளு டன் ஜடை தரித்து மரவுரி யுடுத்து மான்தோல், பூணூல், அக்ஷமாலை, தண்டம், கமண் டுலு முதலியவற்றைத் தரித்தவராகப் பூஜிக்கப் படுகிறார்.

5. 22. அப்போது மனிதர்கள் சாந்தர்களாய்ப் பகைமை இல்லாதவர்களாய் அன்பு உடையவர்களாய்ச் சமமான பார்வை யுடையவர்களாய் இருக்கிறார்கள். தவத்தா லும் மன அடக்கத்தாலும் இந்திரிய நிக்ரஹத்தாலும் பகவானைப் பூஜிக்கிறார்கள். (ஹம்ஸர், ஸுபர்ணர், வைகுண்டர், தர்மர், யோகீசுவரர், நிர்மலர், ஈசுவரர், புருஷர், அவ்யக்தர், பரமாத்மா என்று பகவானைக் கூறுகிறார்கள்).

---

5. 22. निर्वैराः समदर्शिनः। பா. பே.

त्रेतायां रक्तवर्णोऽसौ चतुर्बाहुस्त्रिमेखलः ।
हिरण्यकेशस्त्रय्यात्मा स्रुक्स्रुवाद्युपलक्षणः ॥ ५.२४ ॥

तं तदा मनुजा देवं सर्वदेवमयं हरिम् ।
यजन्ति विद्यया त्रय्या धर्मिष्ठा ब्रह्मवादिनः ॥ ५.२५ ॥

द्वापरे भगवाञ्छ्यामः पीतवासा निजायुधः ।
श्रीवत्सादिभिरङ्कैश्च लक्षणैरुपलक्षितः ॥ ५.२७ ॥

तं तदा पुरुषं मर्त्या महाराजोपलक्षणम् ।
यजन्ति वेदतन्त्राभ्यां परं जिज्ञासवो नृप ॥ ५.२८ ॥

इति द्वापर उर्वीश स्तुवन्ति जगदीश्वरम् ।
नानातन्त्र-विधानेन कलावपि यथा शृणु ॥ ५.३१ ॥

---

5. 24. திரேதாயுகத்தில் இவர் சிவப்புவர்ணமும் நான்கு புஜங்களும் உடையவராயும் மூன்று சுற்று மேகலை யணிந்தவராயும் பொன்னிறமான கேச முடையவராயும், வேதமே உருக்கொண்டவராயும் (யாகத்தின் உபகரணங்களான) ஸ்ருக் ஸ்ருவம் முதலியவற்றுடன் கூடியவராயும் (பூஜிக்கப் பெறுகிறார்.)

5. 25. அப்போது வேதத்தில் வல்லவர்களும் தர்மத்தில் நிலைபெற்றவர்களுமான மனிதர்கள் ஸர்வதேவ ஸ்வரூபியும் தேவதேவனுமான ஹரியை வேதவித்தையால் பூஜிக்கிறார்கள். (விஷ்ணு, யஜ்ஞர், ப்ருச்னிகர்ப்பர், ஸர்வதேவர், உருக்ரமர் வ்ருஷாகபி, ஜயந்தர், உருகாயர் என்று அப்போது கூறப்படுகிறார்.)

5. 27. துவாபரயுகத்தில் சியாமளவர்ணராயும் பீதாம்பர மணிந்து தமக்குரிய தான ஆயுதங்களைத் தரித்தவராயும் ஸ்ரீவத்ஸம் முதலிய அடையாளங்களுடையவராயும் பிற லக்ஷணங்களுடையவராயும் அறியப் பெறுகிறார்.

5. 28. அரசே! அந்தப் பரமபுருஷனைத் தெரிந்து கொள்வதில் ஆவலுள்ள மனிதர்கள் அப்போது மகாராஜ லக்ஷணம் பொருந்தியவராக அவரை வேதங்களாலும் ஆகமங்களாலும் பூஜிக்கிறார்கள். (வாஸுதேவரும் ஸங்கர்ஷணரும் ப்ரத்யும்னரும் அநிருத்தரும் பகவானும் நாராயணனும் ரிஷியும் புருஷனும் மகாத்மாவும் விச்வேச்வரனும் விச்வரூபியும் ஸர்வபூத ஸ்வரூபியுமாகிய உமக்கு நமஸ்காரம்.)

5. 31. அரசே! இவ்வாறு உலகநாயகரை துவாபர யுகத்தில் துதி செய்கிறார்கள். இனி கலியில் பலவித ஆகம விதிப்படி எங்ஙனம் பூஜிக்கிறார்கள் என்பதைக் கூறுகிறேன், கேள்.

कलौ कृष्णं त्विषा कृष्णं सांगोपांगास्त्रपार्षदम् ।
यज्ञैः संकीर्तन-प्रायै-र्यजन्ति हि सुमेधसः ॥ ५.३२ ॥

त्यक्त्वा सुदुस्त्यज-सुरेप्सित-राज्यलक्ष्मीं
धर्मिष्ठ आर्यवचसा यदगादरण्यम् ।
मायामृगं दयितयेप्सित-मन्वधावद्
वन्दे महापुरुष ते चरणारविन्दम् ॥ ५.३४ ॥

देवर्षि-भूताप्त-नृणां पितॄणां न किंकरो नायमृणी च राजन् ।
सर्वात्मना यः शरणं शरण्यं गतो मुकुन्दं परिहृत्य कर्तम् ॥ ५.४१ ॥

नारद उवाच—
धर्मान् भागवतानित्थं श्रुत्वाथ मिथिलेश्वरः ।
जायन्तेयान् मुनीन् प्रीतः सोपाध्यायो ह्यपूजयत् ॥ ५.४३ ॥

ततोऽन्तर्दधिरे सिद्धाः सर्वलोकस्य पश्यतः ।
राजा धर्मानुपातिष्ठन्नवाप परमां गतिम् ॥ ५.४४ ॥

---

5. 32. கலியில் சிறந்த புத்திமான்கள் ஒளிவிடும் கருப்பு வர்ணமுடையவரும், அங்கங்கள் உபாங்கங்கள், அஸ்திரங்கள் இவைகளுடனும் பார்ஷதர்களுடனும் கூடிய வருமாகிய கிருஷ்ணனை அநேகமாய்க் கீர்த்தனை என்ற யாகத்தாலேயே பூஜிக்கிறார்கள்.

5. 34. (ஸ்ரீராமாவதாரத்தில்) தர்மத்தில் நிலை பெற்றவனைத் தந்தை சொற்படி விடுதற் கரியதும் தேவர்களாலும் விரும்பப் படுவதுமான ராஜ்யலக்ஷ்மியை விட்டு அரண்யம் சென்றவனும் அன்பிற்குரிய ஸீதை விரும்பிய மாயமானைப் பின் தொடர்ந் தவனுமான மகாபுருஷனே! உன் து திருவடித் தாமரையைத் தொழுகின்றேன்.

5. 41. அரசே! எவன் பேத புத்தியை விட்டுப் புகலிடமாகிய முகுந்தனைப் புக லடைகின்றானோ அவன் தேவர்களுக்கோ ரிஷிகளுக்கோ பூதங்களுக்கோ உற்றார் உறவினராகிய மனிதர்க்கோ பிதிருக்களுக்கோ ஏவல் செய்பவனுகவோ கடனாளி யாகவோ இருக்கமாட்டான்.

நாரதர் கூறியது—

5. 43. மிதிலாபுரி யரசன் இவ்வாறு பாகவத தர்மங்களைக் கேட்டு ப்ரீதியுடன் ஜயந்தியின் மைந்தர்களாகிய முனிவர்களை உபாத்தியாயர்களுடன் கூடிப் பூஜித்தான்.

5. 44. பிறகு அந்த சித்த புருஷர்கள் ஜனங்கள் யாவரும் பார்த்துக் கொண் டிருக்கும்போதே மறைந்து விட்டார்கள். நிமிராஜன் அவர்கள் உபதேசித்த தர்மங்களை யனுஷ்டித்துப் பற்றுதலற்றவனாகிப் பரமபத மடைந்தான்.

त्वमप्येतान् महाभाग धर्मान् भागवतान् श्रुतान् ।
आस्थितः श्रद्धया युक्तो निःसंगो यास्यसे परम् ॥ ५.४५ ॥

युवयोः खलु दंपत्यो-र्यशसा पूरितं जगत् ।
पुत्रतामगमद् यद् वां भगवानीश्वरो हरिः ॥ ५.४६ ॥

मापत्यबुद्धिमकृथाः कृष्णे सर्वात्मनीश्वरे ।
माया-मनुष्य-भावेन गूढैश्वर्ये परेऽव्यये ॥ ५.४९ ॥

श्रीशुक उवाच—

एतच्छ्रुत्वा महाभागो वसुदेवोऽतिविस्मितः ।
देवकी च महाभागा जहतु-र्मोह-मात्मनः ॥ ५.५१ ॥

इतिहास- मिमं पुण्यं धारयेद् यः समाहितः ।
स विधूयेह शमलं ब्रह्मभूयाय कल्पते ॥ ५.५२ ॥

इति श्रीमद्भागवते महापुराणे एकादशस्कन्धे
पंचमोऽध्यायः ॥

---

5. 45. மகாபாக்கியசாலியான வசுதேவரே! நீரும் இப்போது கேட்ட இந்த பாகவத தர்மங்களைச் சிரத்தையுடன் அனுஷ்டித்தால் பற்றுதலை விட்டு உயர் பதவியை யடைவீர்.

5. 46. பதிஸதிகளாகிய உங்களிருவருடைய புகழ் உலகம் முழுதும் பரவியிருக்கிறது. ஈசுவரனும் பகவானுமான ஹரியே அல்லவா உங்களுக்குப் புத்திரனுக வந்தார்.

5. 49. ஸர்வஸ்வரூபியும் ஈசுவரரும் மாயாமானிட வடிவத்தால் தனது பெருமையை மறைத்துக்கொண் டிருப்பவரும் அழிவற்றவரும் பரமபுருஷருமான கிருஷ்ணனிடத்தில் புத்திரன் என்ற எண்ணத்தைக் கொள்ளவேண்டாம்.

ஸ்ரீ சுகர் கூறியது—

5. 51. மகா பாக்கியவந்தரான வசுதேவரும் மகாபாக்கியசாலியான தேவகியும் இதைக் கேட்டு மிகவும் வியப்புற்றவர்களாய் மனதிலிருந்த மயக்கத்தை விட்டார்கள்.

5. 52. எவன் ஒருமைப்பட்ட மனத்துடன் இவ்வரலாற்றை உள்ளத்தில் கொள்ளுகின்றுனே அவன் இங்கேயே மோகத்தை விட்டு பிரம்மஸ்வரூப மடைதற்குரியவனுகிறுன்.

இங்ஙனம் ஸ்ரீமத்பாகவத மகாபுராணத்தில்
பதினொராவது ஸ்கந்தத்தில் ஐந்தாவது
அத்தியாயம் முற்றும்.

॥ द्वारकालीला ॥ ६ ॥ ३३ ॥

उद्धवगीता

श्रीशुक उवाच—

अथ ब्रह्मात्मजै-र्देवैः प्रजेशैरावृतोऽभ्यगात् ।
भवश्च भूतभव्येशो ययौ भूतगणैर्वृतः ॥ ६.१ ॥

इन्द्रो मरुद्भि-र्भगवानादित्या वसवोऽश्विनौ ।
ऋभवोऽङ्गिरसो रुद्रा विश्वे साध्याश्च देवताः ॥ ६.२ ॥

गन्धर्वाप्सरसो नागा-स्सिद्धचारण-गुह्यकाः ।
ऋषयः पितरश्चैव सविद्याधर-किन्नराः ।
द्वारका-मुपसंजग्मु-स्सर्वे कृष्ण-दिदृक्षवः ॥ ६.३ ॥

ब्रह्मोवाच—

भूमेर्भारावताराय पुरा विज्ञापितः प्रभो ।
त्वमस्माभि-रशेषात्म-स्तत्तथैवोपपादितम् ॥ ६.२१ ॥

---

33. துவாரகா லீலை (6)

உத்தவகீதை

ஸ்ரீ சுகர் கூறியது—

6. 1. பிறகு பிரம்மா புத்திரர்களாலும் தேவர்களாலும் பிரஜாபதிகளாலும் சூழப் பெற்று துவாரகை வந்தார். நடந்ததற்கும் நடக்கப்போவதற்கும் பிரபுவாகிய மஹே சரும் பூதகணங்கள் சூழ அங்குவந்தார்.

6. 2–3. மகிமை பொருந்திய இந்திரன் மருத்துக்களுடன் வந்தான். ஆதித்தி யர்கள், வசுக்கள், அச்வினீ தேவர்கள், ரிபுக்கள், அங்கிரஸ்ஸுக்கள், ருத்திரர்கள், விச்வே தேவர்கள், ஸாத்தியர்கள் இன்னும் மற்ற தேவர்களும், கந்தர்வர்கள், அப்ஸ ரஸ்ஸுகள், நாகர்கள், சித்தர்கள், சாரணர்கள், குஹ்யகர்கள், ரிஷிகள், பிதிருக்கள், வித்தியாதரர்கள், கிந்நரர்கள் ஆகியோரும் ஸ்ரீ கிருஷ்ணனை தரிசிக்க விரும்பி துவாரகை வந்தனர்.

பிரம்மா கூறியது—

6. 21. பிரபுவே! பூமியின் பாரத்தைப் போக்குவதற்காக நாங்கள் தங்களிடம் முன்பு பிரார்த்தனை செய்து கொண்டதற் கிணங்க தாங்கள் அக்காரியத்தைச் செய்து முடித்துவிட்டீர்கள்.

धर्मश्च स्थापितस्सत्सु सत्यसन्धेषु वै त्वया ।
कीर्तिश्च दिक्षु विक्षिप्ता सर्वलोक-मलापहा ॥ ६.२२ ॥

अवतीर्य यदोर्वंशे बिभ्रद्रूपमनुत्तमम् ।
कर्माण्युद्दामवृत्तानि हिताय जगतोऽकृथाः ॥ ६.२३ ॥

यदुवंशेऽवतीर्णस्य भवतः पुरुषोत्तम ।
शरच्छतं व्यतीयाय पंचविंशाधिकं प्रभो ॥ ६.२४ ॥

---

6. 22. தர்மமானது ஸத்தியத்தில் நிலைபெற்ற ஸாதுக்களிடம் உம்மால் நிலை நாட்டப் பெற்றது. உலகனைத்தின் பாவத்தைப் போக்கும் உமது புகழும் எல்லாத் திசைகளிலும் பரப்பப் பெற்றது.

6. 23. உலகத்தின் நன்மைக்காக யதுவம்சத்தில் ஒப்புயர்வற்ற ரூபத்துடன் அவதரித்து உயர்வற உயர் நலந்தரும் செயல்களைச் செய்து முடித்தீர்கள்.

6. 24. புருஷோத்தமரே! பிரபுவே! யதுவம்சத்தில் அவதரித்த தங்களுக்கு நூற்றிருபத்தைந்து வருஷங்கள் சென்றுவிட்டன.

---

6. 24. இங்கு கூறியுள்ளபடி **ஸ்ரீகிருஷ்ணன் பூலோகஸஞ்சாரம் 125 வருஷம்.** மகாபாரதம் ஆதிபர்வம் 115-வது அத்தியாயத்தில் பின்வரும் கால அட்டவணை காணப் படுகிறது :—

	வருஷம்
பாண்டவர்கள் ஹஸ்தினபுரம் வந்தபோது (அர்ஜுனன் வயது 14 பீமன் வயது 15)	
யுதிஷ்டிரர் வயது	16
திருதராஷ்டிரருடன் ஹஸ்தினபுர வாசம்	13
அரக்குமாளிகையில்	½
ஏகசக்ரபுரத்தில்	½
பாஞ்சாலமன்னன் வீட்டில்	1
பின்பு மீண்டும் திருதராஷ்டிரருடன்	5
இந்திரப்பிரஸ்தத்தில் தனி யரசு	23
வனவாசமும் அக்ஞாதவாசமும்	13
குருக்ஷேத்திர யுத்தத்திற்குப்பின் அரசாட்சி	36
ஆக	108

ஸ்ரீ கிருஷ்ணன் மறைந்ததும் பரீக்ஷித்திற்குப் பட்டாபிஷேகம் செய்துவிட்டு மஹாப் பிரஸ்தானம். ஸ்ரீ கிருஷ்ணன் வயது அர்ஜுனனைவிட 3 மாதம் அதிகம், யுதிஷ்டிரரை விட 1½ வருஷம் குறைவு. ஆகையால் இந்தக் கணக்குப்படி ஸ்ரீ கிருஷ்ணன் பூமியிலிருந்தது 106 வருஷம் 3 மாதம். ஆனால் பாண்டவர் ஹஸ்தினபுரம் வந்தது 6 வயதில் என்றும், பாரதப் போருக்குப் பின் அரசாட்சி 18 வருஷம் என்றும் சில நூல்கள் கூறும். அதை யேற்றால் மேற்கூறிய கணக்கில் 28 வருஷம் குறைந்து ஸ்ரீ கிருஷ்ணன் பூலோகசஞ்சாரம் சுமார் 80 வருஷம் என்று ஏற்படும்.

नाधुना तेऽखिलाधार देवकार्यावशेषितम् ।
कुलं च विप्रशापेन नष्टप्राय-मभूदिदम् ॥ ६.२६ ॥

ततः स्वधाम परमं विशस्व यदि मन्यसे ।
सलोकान् लोकपालान्नः पाहि वैकुण्ठ किंकरान् ॥ ६.२७ ॥

श्रीभगवानुवाच—

अवधारित-मेतन्मे यथात्थ विबुधेश्वर ।
कृतं वः कार्यमखिलं भूमेर्भारोऽवतारितः ॥ ६.२८ ॥

तदिदं यादवकुलं वीर्य-शौर्य-श्रियोद्धतम् ।
लोकं जिघृक्षद् रुद्धं मे वेलयेव महार्णवः ॥ ६.२९ ॥

यद्यसंहृत्य दृप्तानां यदूनां विपुलं कुलम् ।
गन्तास्म्यनेन लोकोऽय-मुद्वेलेन विनंक्ष्यति ॥ ६.३० ॥

---

6. 26. அனைத்திற்கும் ஆதாரமாகிய அச்சுதா! இப்பொழுது உமக்கு தேவகாரியத்தில் மீதியாக உள்ளது ஏதுமில்லை. (நீர் அவதரித்த) குலமும் பிராம்மண சாபத்தால் அழிந்தாற்போல் ஆகிவிட்டது.

6. 27. வைகுண்டவாசியே! இனி நீர் திருவுளங்கொண்டால் உமது உத்தம ஸ்தானத்திற்கு எழுந்தருளலாம். உலகங்களுடனும் உலக பாலகர்களுடனும் ஊழியர்களாகிய எங்களைக் காத்தருள வேண்டும்.

ஸ்ரீ பகவான் கூறியது—

6. 28. தேவர்களின் பிரபுவே! நீர் எவ்வண்ணங் கூறினீரோ எது அங்ஙனமே என்பது எனது நிச்சயம். பூபாரம் குறைக்கப் பட்டது. உங்களுடைய காரியங்களெல்லாம் செய்து முடிக்கப் பெற்றன.

6. 29. (நான் தோன்றிய) இந்த யாதவகுலம் வீரியம், பலம் முதலியவற்றின் சிறப்பால் கர்வம் மேலிட்டிருக்கிறது. உலகையே அழித்துவிடக் கூடியது. மஹா சமுத்திரம் கரைக்குள் அடங்கியிருப்பதுபோல் என்னால் அடக்கிவைக்கப் பட்டிருந்தது.

6. 30. கர்வம் மிகுந்த யதுக்களின் இந்தப் பரந்த வம்சத்தை ஸம்ஹரிக்காமல் நான் செல்வேனாயின் மரியாதையை மீறிய இக்குலத்தால் உலகம் அழிந்து விடும்.

---

6. 30. யதுகுல ஸம்ஹாரம் நிக்ரஹரூபமான அனுக்ரஹம். அவர்களுடைய முடிவுக்கு உலகரீதியில் ஒரு காரணத்தைக் காட்டி உண்மையில் அவர்களை யெல்லாம் தன்னுடன் பகவான் அழைத்துச் சென்றார்.

ஒ. "ஸ்வாத்மனஸ் ஸங்க யானேன புருஷார்த்தோSதிகோ பவேத் ।
இத்யனுக்ரஹ-புத்த்யா ச ஸஞ்ஜஹ்ரே ஸ்வகுலம் விபு: ॥"

इदानीं नाश आरब्धः कुलस्य द्विजशापतः ।
यास्यामि भवनं ब्रह्मन्नेतदन्ते तवानघ ॥ ६.३१ ॥

श्रीशुक उवाच—

इत्युक्तो लोकनाथेन स्वयम्भूः प्रणिपत्य तम् ।
सह देवगणै-र्देवः स्वधाम समपद्यत ॥ ६.३२ ॥

अथ तस्यां महोत्पातान् द्वारवत्यां समुत्थितान् ।
विलोक्य भगवानाह यदुवृद्धान् समागतान् ॥ ६.३३ ॥

श्रीभगवानुवाच—

न वस्तव्य-मिहास्माभि-र्जिजीविषुभि-रार्यकाः ।
प्रभासं सुमहत्पुण्यं यास्यामोऽद्यैव मा चिरम् ॥ ६.३५ ॥

श्रीशुक उवाच—

एवं भगवताऽऽदिष्टा यादवाः कुरुनन्दन ।
गन्तुं कृतधिय-स्तीर्थं स्यन्दनान् समयूयुजन् ॥ ६.३९ ॥

---

6. 31. களங்கமற்ற பிரம்மதேவரே! பிராம்மண சாபத்தால் இந்தக் குலத்தின் அழிவு தொடங்கியிருக்கிறது. இதன் முடிவில் (வைகுண்டம் செல்லும்போது) உமது இருப்பிடத்திற்கு வருகிறேன்.

ஸ்ரீ சுகர் கூறியது—

6. 32. உலக நாயகரான பகவானால் இங்ஙனம் கூறப்பெற்று பிரம்மா தேவ கணங்களுடன் அவரை நமஸ்கரித்துவிட்டுத் தமது இருப்பிடம் சென்றார்.

6. 33. பிறகு பகவான் துவாரகையில் தோன்றிய பெரும் உத்பாதங்களைப் பார்த்துத் தம்மை நாடிவந்து கூடிய யாதவகுலப் பெரியோர்களை நோக்கிப் பின்வருமாறு கூறினார்.

ஸ்ரீ பகவான் கூறியது—

6. 35. பெரியோர்களே! ஜீவித்திருக்க விரும்பினால் இனி நாம் இங்கிருக்கக் கூடாது. மிகவும் புண்ணியமான பிரபாஸ தீர்த்தத்திற்கு இப்போதே தாமதிக்காமல் செல்லுவோம்.

ஸ்ரீ சுகர் கூறியது—

6. 39. குருநந்தனா! இவ்விதம் பகவானால் கட்டளையிடப்பெற்ற யாதவர்கள் பிரபாஸ தீர்த்தம் போக நிச்சயித்துத் தேர்களை ஆயத்தம் செய்தார்கள்.

तन्निरीक्ष्योद्धवो राजन् श्रुत्वा भगवतोदितम्।
दृष्ट्वारिष्टानि घोराणि नित्यं कृष्णमनुव्रतः ॥ ६.४० ॥

विविक्त उपसंगम्य जगतामीश्वरेश्वरम्।
प्रणम्य शिरसा पादौ प्रांजलि-स्तमभाषत ॥ ६.४१ ॥

उद्धव उवाच—
देवदेवेश योगेश पुण्यश्रवणकीर्तन।
संहृत्यैतत् कुलं नूनं लोकं सन्त्यक्ष्यते भवान्।
विप्रशापं समर्थोऽपि प्रत्यहन्न यदीश्वरः ॥ ६.४२ ॥

नाहं तवांघ्रिकमलं क्षणार्धमपि केशव।
त्यक्तुं समुत्सहे नाथ स्वधाम नय मामपि ॥ ६.४३ ॥

श्रीभगवानुवाच—
यदात्थ मां महाभाग तच्चिकीर्षितमेव मे।
कुलं वै शापनिर्दग्धं नंक्ष्यत्यन्योन्य-विग्रहात्।
समुद्रः सप्तमेऽह्न्येतां पुरीं च प्लावयिष्यति ॥ ७.३ ॥

---

6. 40-41. அரசே! எப்போதும் கிருஷ்ணனைப் பின்பற்றும் உத்தவர் கிருஷ்ணன் கூறியதைக் கேட்டும் பயங்கரமான அரிஷ்டங்களைப் பார்த்தும் உலக நாயகர்களின் நாயகனுகிய பகவானிடம் தனியே வந்து தலையால் அவருடைய பாதங்களில் வணங்கிக் கை கூட்பிக்கொண்டு பின்வருமாறு கூறலானுர்.

உத்தவர் கூறியது—

6. 42. தேவா! தேவநாயகா! யோகநாயகா! கேட்டாலும் பாடினுலும் புண்ணியத்தை வளர்க்கும் கீர்த்தியுடையவனே! நீர் இந்த யதுகுலத்தைச் ஸம்ஹாரம் செய்துவிட்டு உலகை விடக் கருதுகிறீர் என்பது நிச்சயம். பிராம்மண சாபத்தை விலக்க வல்லவராயினும் நீர் அதை விலக்க விரும்ப வில்லை.

6. 43. கேசவா! நான் உமது பாதகமலத்தை விட்டு அரைக்கணமும் பிரிந்திருக்கப் பொறுக்கமாட்டேன். நாதா! என்னையும் உம்முடைய ஸ்தானத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

ஸ்ரீ பகவான் கூறியது—

7. 3. மகாபாக்கியசாலியாகிய உத்தவா! நீ சொல்லுகிறபடிதான் எனது அபிப்பிராயம். சாபத்தால் பொசுங்கிய இக்குலம் ஒருவருக்கொருவர் தமக்குள்ளேயே செய்து கொள்ளப்போகும் கலகத்தால் நாச மடையப் போகிறது. (இன்றிலிருந்து ஏழாவது நாள் ஸமுத்திரம் இந்த துவாரகாபுரியையும் முழுக்கிவிடப் போகிறது.)

---

6. 43. எல்லோரும் பகவானுடைய மாயையில் ஏமாந்தார்கள். விழித்திருந்தவர் உத்தவர் ஒருவர்தான்.

ஏழாவது அத்தியாயத்திலிருந்து இருபத்தொன்பதாவது அத்தியாயம் முடிய இருபத்து மூன்று அத்தியாயங்கள் உத்தவ கீதை.

न वस्तव्यं त्वयैवेह मया त्यक्ते महीतले।
जनोऽधर्मरुचि-र्भद्र भविष्यति कलौ युगे ॥ ७.५ ॥

त्वं तु सर्वं परित्यज्य स्नेहं स्वजनबन्धुषु।
मय्यावेश्य मनः सम्यक् समदृग् विचरस्व गाम् ॥ ७.६ ॥

सर्वभूतसुहृच्छान्तो ज्ञानविज्ञान-निश्चयः।
पश्यन् मदात्मकं विश्वं न विपद्येत वै पुनः ॥ ७.१२ ॥

उद्धव उवाच—

योगेश योगविन्न्यास योगात्मन् योगसंभव।
निःश्रेयसाय मे प्रोक्तस्त्यागः संन्यासलक्षणः ॥ ७.१४ ॥

सोऽहं ममाहमिति मूढमति-र्विगाढ-
स्त्वन्मायया विरचितात्मनि सानुबन्धे।
तत्त्वंजसा निगदितं भवता यथाहं
संसाधयामि भगवन्ननुशाधि भृत्यम् ॥ ७.१६ ॥

---

7. 5. நான் விட்டு விலகிய தேசத்தில் நீ இருக்கக்கூடாது. மங்களஸ்வரூபியான உத்தவா! கலியுகத்தில் ஜனங்கள் அதர்மத்தில் ருசி யுடையவர்களா யிருக்கப் போகிறார்கள்.

7. 6. நீ உன்னைச் சார்ந்த உற்றார் உறவினரிடம் சிநேகத்தையும் மற்றும் அனைத்தையும் துறந்து என்னிடம் நன்றாக மனதைச் செலுத்தி ஸமதிருஷ்டியுடன் பூமியில் சஞ்சரிப்பாயாக.

7. 12. எல்லா உயிர்களுக்கும் நண்பனாகவும் சாந்தனாகவும் ஞானத்திலும் விஞ்ஞானத்திலும் நிச்சயமுள்ளவனாகவும் இருந்துகொண்டு பிரபஞ்சத்தை என் வடிவாகப் பார்ப்பவன் மீண்டும் பிறவிச் சுழலில் விழமாட்டான்.

உத்தவர் கூறியது—

7. 14. யோகேசா! யோக மறிந்தவர்களின் செல்வமே! யோகமே உருக்கொண்டவரே! யோகத்திற்குப் பிறப்பிடமே! எனது உயர் நலத்தைக் கருதி ஸந்நியாஸ லக்ஷணம் பொருந்திய தியாகம் உம்மால் உபதேசிக்கப் பட்டது.

7. 16. பகவானே! 'நான், எனது' என்ற மூடபுத்தியுடைய நான் உமது மாயையின் விலாஸத்தால் சுற்றத்துடன் தோன்றியுள்ள இந்த தேகத்தில் ஆழ்ந்த பற்றுள்ளவனா யிருக்கின்றேன். ஆகையால் உம்மால் உபதேசிக்கப் பட்டதை நான் எவ்வகையில் எளிதில் கைக்கொண்டு அனுஷ்டிக்க முடியுமோ அவ்வகையில் எனக்கு வழி காட்டவேண்டும்.

---

7. 6. स्वजनबन्धनम्।

श्रीभगवानुवाच—

आत्मनो गुरुरात्मैव पुरुषस्य विशेषतः।
यत् प्रत्यक्षानुमानाभ्यां श्रेयोऽसावनुविन्दते ॥ ७.२० ॥

अत्राप्युदाहरन्तीम-मितिहासं पुरातनम्।
अवधूतस्य संवादं यदोरमिततेजसः ॥ ७.२४ ॥

अवधूतं द्विजं कंचिच्चरन्त-मकुतोभयम्।
कविं निरीक्ष्य तरुणं यदुः पप्रच्छ धर्मवित् ॥ ७.२५ ॥

यदुरुवाच—

कुतो बुद्धिरियं ब्रह्मन्नकर्तुः सुविशारदा।
यामासाद्य भवाँल्लोकं विद्वांश्चरति बालवत् ॥ ७.२६ ॥

जनेषु दह्यमानेषु कामलोभ-दवाग्निना।
न तप्यसेऽग्निना मुक्तो गंगांभःस्थ इव द्विपः ॥ ७.२९ ॥

ஸ்ரீ பகவான் கூறியது—

7. 20. ஒரு புருஷனுடைய ஆத்மாவுக்கு விசேஷமாக ஆத்மாவே குரு. ஏனெனில் இவன் (அவ்வாற்றால்) பிரத்தியக்ஷத்தாலும் அனுமானத்தாலும உயர் நலனை எய்துகிறான்.

7. 24. இவ்விஷயத்தில் புராதனமான இந்த வரலாற்றைக் கூறுகிறார்கள். இது அளவிறந்த மகிமை வாய்ந்த யதுமகாராஜனுக்கும் அவதூதருக்கு மிடையே நிகழ்ந்த சம்பாஷணை வடிவிலுள்ளது.

7. 25. தர்மங்களை யறிந்த யது அவதூதராக (ஆடையின்றி) எங்கும் பய மில்லாமல் சஞ்சரிப்பவரும் யௌவனப் பருவ முடையவரும் பண்டிதருமாகிய ஒரு பிராம்மணரைப் பார்த்துப் பின்வருமாறு கேட்டார்.

யது கூறியது—

7. 26. பிரம்மரிஷியே! செயலற்றிருக்கும் உமக்குப் புத்தியானது மிகவும் திறமை வாய்ந்திருப்பது எங்ஙனம்? அப்படிப்பட்ட புத்தியை யடைந்து வித்துவானாகிய நீர் உலகில் ஒன்று மறியாத சிறுவனைப்போல் உலவிவருகிறீர்.

7. 29. காமம் லோபம் என்ற காட்டுத் தீயினால் ஜனங்கள் தவித்துக்கொண் டிருக்கையில் நீர் அந்த அக்கினியிலிருந்து விடுபட்டு கங்கை நீரில் முழுகியிருக்கும் யானைபோல் தாபமடையாமல் இருக்கிறீர்.

त्वं हि नः पृच्छतां ब्रह्मन्नात्मन्यानन्द-कारणम् ।
ब्रूहि स्पर्श-विहीनस्य भवतः केवलात्मनः ॥ ७.३० ॥

ब्राह्मण उवाच—

सन्ति मे गुरवो राजन् बहवो बुद्ध्युपाश्रिताः ।
यतो बुद्धिमुपादाय मुक्तोऽटामीह ताञ्छृणु ॥ ७.३२ ॥

पृथिवी वायु-राकाश-मापो-ऽग्निश्चन्द्रमा रविः ।
कपोतोऽजगरः सिन्धुः पतंगो मधुकृद् गजः ॥ ७.३३ ॥

मधुहा हरिणो मीनः पिंगला कुररोऽर्भकः ।
कुमारी शरकृत् सर्प ऊर्णनाभिः सुपेशकृत् ॥ ७.३४ ॥

एते मे गुरवो राजंश्चतुर्विंशति-राश्रिताः ।
शिक्षा वृत्तिभि-रेतेषा-मन्वशिक्ष-मिहात्मनः ॥ ७.३५ ॥

भूतै-राक्रम्यमाणोऽपि धीरो दैववशानुगैः ।
तद्विद्वान्न चलेन्मार्गा-दन्वशिक्षं क्षिते-र्व्रतम् ॥ ७.३७ ॥

7. 30. பிரம்மரிஷியே! தன்னந்தனியரா யிருப்பவரும் விஷய நுகர்ச்சி யற்ற வரும் ஆகிய உமக்கு மனதில் ஆனந்தம் நிறைந்திருக்கும் காரணத்தைக் கேட்க விரும் பும் எங்களுக்குக் கூறி யருளுதல் வேண்டும்.

பிராம்மணர் கூறியது—

7. 32 அரசே! என் புத்தியில் புகுந்து குருவாய் விளங்குபவர்கள் எனக்குப் பலர். இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து போதனையை ஏற்றுக்கொண்டு நான் முக்த னாகச் சஞ்சரிக்கின்றேன். அவர்களைப்பற்றிக் கூறுகிறேன், கேளும்.

7. 33-35. பூமி, காற்று, ஆகாயம், ஜலம், அக்கினி, சந்திரன், சூரியன், மாடப் புறு, மலைப்பாம்பு, சமுத்திரம், விட்டில் பூச்சி தேனீ, யானை, தேனெடுப்பவன், மான், மீன், பிங்களையெனும் வேசி, குரரப்பக்ஷி, குழந்தை, குமரி, அம்பு தொடுப்ப வன், பாம்பு, சிலந்திப் பூச்சி, குளவி ஆகிய இருபத்து நான்கு குருக்கள் என்னால் அடையப் பட்டவர்கள். அரசே! இக் குருக்களின் இயற்கைச் செயல்களைக் கொண்டு எனக்கு நான் பாடங் கற்பித்துக் கொண்டேன்.

7. 37. பூமியிடமிருந்து நான் கற்றுக்கொண்ட விரதமாவது :—தெய்வவசத்தால் இயங்கும் பஞ்சபூதங்களால் பீடிக்கப்படினும் (பூமி தன் வழியினின்று தவறாதவாறு) வழி தவறாம லிருக்கவேண்டும் என்பதே. (பூமி முதல் குரு).

शश्वत्परार्थ-सर्वेहः परार्थैकान्त-संभवः।
साधुः शिक्षेत भूभृत्तो नगशिष्यः परात्मताम् ॥ ७.३८ ॥

विषयेष्वाविशन् योगी नानाधर्मेषु सर्वतः।
गुणदोष-व्यपेतात्मा न विषज्जेत वायुवत् ॥ ७.४० ॥

अन्तर्हितश्च स्थिरजंगमेषु ब्रह्मात्म-भावेन समन्वयेन।
व्याप्त्याव्यवच्छेद-मसंगमात्मनो मुनि-र्नभस्त्वं विततस्य भावयेत्
॥ ७.४२ ॥

स्वच्छः प्रकृतितः स्निग्धो माधुर्य-स्तीर्थभू-र्नृणाम्।
मुनिः पुनात्यपाम् मित्र-मीक्षोपस्पर्श-कीर्तनैः ॥ ७.४४ ॥

---

7. 38. மேலும் பூமியைச் சார்ந்த மலை பிறர்க்குப் பயன் படுவதையே எல்லா வாற்ருலும் நோக்கமாக உடையது; பிறர்க்குப் பயன் படுவதொன்றைக் கருதியே உண்டாகியது; (மாந்தர் வெட்டினும் குளிர் நிழலைத் தந்து ஒவ்வொரு பகுதியாலும் பிறர்க் குதவும்) மரங்களைச் சீடர்களாக உடையது; அப்படிப்பட்ட பூமியின் பகுதி யாகிய மலையினின்று ஸாதுவாகிய புருஷன் தான் பிறர்க்குரியாளன் என்பதைக் கற்றுக் கொள்ளவேண்டும்.

7. 40. **காற்றைப்போல்** பலவகைப்பட்ட விஷயங்களில் புகுந்து பழகினும் யோகியானவன் அவற்றின் குணதோஷங்களால் கறைபடாத மனத்தினனாய் எல்லா விடத்திலும் பற்றற்றிருக்க வேண்டும். (காற்று இரண்டாவது குரு).

7. 42. ஸ்தாவரஜங்கமங்களைத் துள்ளும் மறைந்தும் பிளவு படாமலும் பற்றில்லாமலும் எங்கும் வியாபித்தும் இருப்பதால் எங்கும் நிறைந்த ஆத்மாவிற்கு **ஆகாயத்துடன்** ஒற்றுமை யிருப்பதை முனிவன் பிரம்மஸ்வரூப பாவனையால் ஸமன்வய மாகப் பார்க்கவேண்டும். (ஆகாயம் மூன்ருவது குரு).

7. 44. பரிசுத்தமான **ஜலத்தைப்போல்** முனிவன் நிர்மலனாகவும் இயற்கை யாகவே ஈரமான நெஞ்சுடையவனாகவும் மனிதரிடம் இனிமை பொருந்தியவனாகவும் தன்னைச் சார்ந்தவரைப் பார்த்தாலும் தொட்டாலும் அவருடன் பேசினும் பரிசுத்தம் செய்பவனாகவும் இருக்கவேண்டும். (தீர்த்தம் நாலாவது குரு.)

---

7. 44. **அபாம் மித்ரம்**—உதகதுல்ய: | **அகாதிதி** பாடே து ஸகாயம் பாபாத் புனாதி ஸ்வச்சத்வாதிபிர்-குணைரர்த்தா-துதக-ஸாத்ருச்யம் ஜ்ஞாதவ்யம் ||

---

7. 44. अपान्मित्रं।

तेजस्वी तपसा दीप्तो दुर्धर्षोदरभाजनः।
सर्व-भक्षोऽपि युक्तात्मा नादत्ते मलमग्निवत् ॥ ७.४५ ॥

स्वमायया सृष्टमिदं सदसल्लक्षणं विभुः।
प्रविष्ट ईयते तत्तत्स्वरूपोऽग्नि-रिवैधसि ॥ ७.४७ ॥

विसर्गाद्याः श्मशानान्ता भावा देहस्य नात्मनः।
कलानामिव चन्द्रस्य कालेनाव्यक्तवर्त्मना ॥ ७.४८ ॥

गुणै-र्गुणानुपादत्ते यथाकालं विमुंचति।
न तेषु युज्यते योगी गोभि-र्गा इव गोपतिः ॥ ७.५० ॥

बुध्यते स्वे न भेदेन व्यक्तिस्थ इव तद्गतः।
लक्ष्यते स्थूलमतिभि-रात्मा चांभस्थितार्कवत् ॥ ७.५१ ॥

---

7. 45. **அக்கினியைப்போல்** ஒளி பொருந்தியவனுகவும் தவத்தால் பிரகாசிப்பவனுகவும் கலக்க மடையாதவனுகவும் வயிற்றையே பாத்திரமாயுடையவனுகவும் அழுக்கால் பற்றப்படாதவனுகவும் யோகியானவன் இருக்கவேண்டும். (அக்கினி ஐந்தாவது குரு).

7. 47. பிரபுவாகிய பகவானும் தனது மாயையால் தோற்றுவிக்கப்பட்ட ஸதஸத்ரூபமான இந்தப் பிரபஞ்சத்தில் கட்டையில் அக்கினியைப்போல் பிரவேசித்து அதே வடிவாய்க் காணப்படுகிருர் (என்று உணரவேண்டும்).

7. 48. பிறப்புமுதல் சுடுகாடுவரை உள்ள மாறுதல்கள் தேகத்திற்கே யொழிய ஆத்மாவிற்கு இல்லை யென்பதை அறிதற்கரிய காலப் போக்கில் **சந்திரனுடைய** கலைகளுக்கு மாறுதல்களே யன்றி சந்திரனுக் கில்லை என்பதால் உணரவேண்டும். (சந்திரன் ஆருவது குரு).

7. 50. **சூரியன்** கிரணங்களால் நீரைக் கவர்வதுபோலும் உரியகாலத்தில் விடுவதுபோலும் அதில் பற்றற்றிருப்பதுபோலும் யோகியானவன் இந்திரியங்களால் விஷயங்களைக் கிரகிக்கிருன், உரியகாலத்தில் விடுகிருன், அவற்றில் பற்றுக்கொள்வதில்லை. (சூரியன் ஏழாவது குரு).

7. 51. சூரியன் நீரினுள் இருப்பதாகக் காணப்படுவதுபோல் தடித்த புத்தியுடையவர்களால் தன் நிலையிலுள்ள ஆத்மா உபாதிகளின் வேற்றுமையால் அவ்வவற்றினுள் புகுந்து நிற்பதாய்க் கருதப்படுகிறது.

---

7. 45. **உதரபாஜன:**—அபரிக்ரஹத்தைக் கைக்கொண்டவர்.

7. 50. **கோபி:**—ரச்மிபி: **கா:** ஸலிலானி **கோபதி:** ஸூர்யோ யதா|

7. 51. பாலத்தின்மேல் சென்றுகொண்டிருந்த ஒரு நாய் கீழே நீரில் தன் உருவத்தைக் கண்டு மயங்கிய வாறு.

नातिस्नेहः प्रसंगो वा कर्तव्यः क्वापि केनचित् ।
कुर्वन् विन्देत सन्तापं कपोत इव दीनधीः ॥ ७.५२ ॥

एवं कुटुंब्यशान्तात्मा द्वन्द्वारामः पतत्रिवत् ।
पुष्णन् कुटुंबं कृपणः सानुबन्धोऽवसीदति ॥ ७.७३ ॥

यः प्राप्य मानुषं लोकं मुक्तिद्वार-मपावृतम् ।
गृहेषु खगवत् सक्त-स्तमारूढच्युतं विदुः ॥ ७.७४ ॥

ग्रासं सुमृष्टं विरसं महान्तं स्तोकमेव वा ।
यदृच्छयैवापतितं ग्रसेदाजगरोऽक्रियः ॥ ८.२ ॥

---

7. 52. எவருடனும் எப்பொழுதும் மிதமிஞ்சிய பிரீதியையும் பற்றுதலையும் ஒருவன் செய்யக் கூடாது; செய்தால் **மாடப்புறுவைப்போல்** மதிகலங்கி மிகுந்த தாபத்தை யடைவான். (ஒரு மாடப்புறு தன் பேடையுடன் ஒரு மரத்தில் கூடுகட்டிக் கொண்டு வசித்து வந்தது. அவ்விரு பறவைகளும் அன்பினால் கட்டுண்டு சயனம் ஆஸனம் சஞ்சாரம் ஸ்தானம் வார்த்தை விளையாட்டு முதலியவைகளில் இணைபிரியாமல் இன்புற்றிருந்தன. நாளடைவில் பல குஞ்சுகள் பிறந்ததில் குடும்பசுகம் வளர்ந்தது. ஒரு சமயம் ஒரு வேடன் வலை வீசிக் குஞ்சுகளைப் பிடிக்கவே தாய்ப் பறவையும் நிலை விழுந்து வலையில் விழுந்தது. ஆண் புறு மிகுந்த துக்கத்துடன் கதறிற்று, மனைவியை யும் மக்களையும் பறிகொடுத்தபின் தனியே வாழ விரும்பாமல் தானும் வலையில் விழுந் தது. வேடன் அவைகளை யெல்லாம் கொண்டு சென்றான். குடும்பியான மனிதனுடைய வாழ்க்கையும் இந்த மாடப்புறுவின் வாழ்க்கையைப் போலத்தா னிருக்கிறது).

7. 73. இவ்விதம் குடும்பியானவன் பறவையைப்போல் அமைதியற்ற மனதுடன் சுகதுக்கம் முதலிய இரட்டைகளில் ஈடுபட்டுத் தன் உண்மை நிலையை உணராது குடும்பத்தைப் போஷித்துப் பரிவாரத்துடன் அழிவுறுகிறான். (மாடப்புறு எட்டாவது குரு).

7. 74. முக்தியின் வாயிற்படி திறந்துவைத்தது போன்ற மானிட வுலகில் பிறந் தும் எவன் பறவையைப்போல் வீடுகளில் பற்று மிகுந்தவனாய் வாழ்கின்றானோ அவனை உயர் பதவியிலிருந்து நழுவியவனாக (பெரியோர்) கருதுகின்றனர்.

8. 2. உணவானது நல்ல சுவையுள்ளதாயினும் சுவையற்றதாயினும் நிறைவாயி னும் குறைவாயினும் தற்செயலாகக் கிடைத்ததை **மலைப்பாம்பைப் போல்** செயலற்ற வனா யிருந்துகொண்டு புசிக்க வேண்டும். (மலைப்பாம்பு ஒன்பதாவது குரு).

ஒ. அஸக்தி-ரனபிஷ்வங்க: புத்ர-தார-க்ருஹாதிஷு | —கீ. 13. 9.

7. 74. ஒ. ஆருஹ்ய க்ருச்ச்ரேண பரம் பதம் தத:
பதந்த்யதோऽனாத்ருத-யுஷ்மதங்க்ரய: || —பாக. 10. 33.

ஒ. யோகாரூடஸ்ய தஸ்யைவ சம: காரண-முச்யதே | —கீ. 6. 3.

8. 2. ஒ. ஜடபரதர்:

ஒ. ஸ்வாத்வன்னம் ந து யாச்யதாம் விதிவசாத் ப்ராப்தேன ஸந்துஷ்ய தாம் | —சங்: உபதேசபஞ்சகம்.

मुनिः प्रसन्न-गंभीरो दुर्विगाह्यो दुरत्ययः।
अनन्तपारो ह्यक्षोभ्यः स्तिमितोद इवार्णवः ॥ ८.५ ॥

समृद्धकामो हीनो वा नारायणपरो मुनिः।
नोत्सर्पेत न शुष्येत सरिद्भिरिव सागरः ॥ ८.६ ॥

दृष्ट्वा स्त्रियं देवमायां तद्भावैरजितेन्द्रियः।
प्रलोभितः पतत्यन्धे तमस्यग्नौ पतंगवत् ॥ ८.७ ॥

स्तोकं स्तोकं ग्रसेद् ग्रासं देहो वर्तेत यावता।
गृहानहिंसन्नातिष्ठेद् वृत्तिं माधुकरीं मुनिः ॥ ८.९ ॥

अणुभ्यश्च महद्भ्यश्च शास्त्रेभ्यः कुशलो नरः।
सर्वतः सारमादद्यात् पुष्पेभ्य इव षट्पदः ॥ ८.१० ॥

---

8. 5. முனிவன் அசைவற்ற ஜலமுடைய **ஸமுத்திரத்தைப்போல்** தெளிந்தவனுகவும் கம்பீரனுகவும் ஆழங் காணமுடியாதவனுகவும் அதிக்கிரமிக்க இயலாதவனுகவும் கரை காணமுடியாதவனுகவும் கலக்க முடியாதவனுகவும் இருக்கவேண்டும்.

8. 6. ஸமுத்திரம் நதிகளால் ஏற்றத்தாழ்வடையாதவாறு விஷ்ணுவை முக்கியகதியாகக் கொண்ட முனிவன் ஆசைகளின் பூர்த்தியால் ஸந்தோஷத்தால் பொங்கவும் கூடாது, குறைவால் வரட்சி யடையவும் கூடாது. (ஸமுத்திரம் பத்தாவது குரு).

8. 7. தீயில் விழும் **விட்டிற்பூச்சிபோல்** இந்திரிய ஜயமில்லாதவன் தேவமாயையின் வடிவான ஸ்திரீயைப் பார்த்து அவளுடைய சேஷ்டைகளால் வஞ்சிக்கப் பெற்று மிகுந்த இருளில் விழுகிருன். (விட்டிற்பூச்சி பதினொராவது குரு).

8. 9. தேனைச் சேகரிக்கும் **தேனீயைப்போல்** கிருஹஸ்தர்களை இம்சியாமல் முனிவன் நடந்துகொள்ளவேண்டும். தேகம் நிலை பெறுவதற்கு அவசியமான அளவு மட்டும் சிறிது சிறிதாக ஆகாரத்தை ஏற்கவேண்டும்.

8 10. புஷ்பங்களினின்று தேனீ தேனைச் சேகரிப்பதுபோல் புத்திசாலியாகிய மனிதன் சிறுதும் பெரிதுமான சாஸதிரங்கள் எல்லாவற்றிலு மிருந்து ஸாரத்தைக் கிரகிக்க வேண்டும்.

---

8. 5. ஒ. 'ஆபூர்யமாண-மசலப்ரதிஷ்டம்' —கீ. 2. 70.
அக்ஷோப்ய: **அவி**கார்ய: ராகா**த்**யபாவாத் ।' ஸ்திமிதோத: நிச்சலோத: ।

8. 6. ஒ. அத்ர ஹேது: நாராயணபர: ந விஷயபர: இதி ।

8. 7. **பதங்கவத்**—ஒ. பதங்க-மாதங்க-குரங்க-ப்ருங்க-மீனு ஹதா: பஞ்சபிரேவ பஞ்ச । ஏக: ப்ரமாதீ ஸ கதம் ந ஹன்யதே யஸ்ஸேவதே பஞ்சபிரேவ பஞ்ச ॥
—விவேகசூடாமணி: சங்.

सायन्तनं श्वस्तनं वा न संगृह्णीत भिक्षुकः ।
मक्षिका इव संगृह्णन् सह तेन विनश्यति ॥ ८.१२ ॥

पदापि युवतीं भिक्षुर्न स्पृशेद् दारवीमपि ।
स्पृशन् करीव बध्येत करिण्या अंगसंगतः ॥ ८.१३ ॥

न देयं नोपभोग्यं च लुब्धै-र्यद् दुःखसंचितम् ।
भुङ्क्ते तदपि तच्चान्यो मधुहेवार्थविन्मधु ॥ ८.१५ ॥

ग्राम्यगीतं न शृणुयाद् यति-र्वनचरः क्वचित् ।
शिक्षेत हरिणाद् बद्धान्मृगयोर्गीतमोहितात् ॥ ८.१७ ॥

जिह्वयातिप्रमाथिन्या जनो रस-विमोहितः ।
मृत्युमृच्छत्यसद्बुद्धि-र्मीनस्तु बडिशैर्यथा ॥ ८.१९ ॥

---

8. 12. இரவுக்காக வென்றும் நாளைக்காக வென்றும் பிக்ஷை யெடுத்ததைச் சேர்த்து வைக்கக் கூடாது. அப்படிச் சேமிப்பவன் **தேனீ** தேனுடன் அழிவதுபோல் அழிந்துபோவான். (தேனீ பன்னிரண்டாவது குரு.)

8. 13. துறவியானவன் மரத்தாலான ஸ்திரீயானாலும் காலால்கூடத் தொடக் கூடாது. பெண்யானையின் அங்கஸங்கத்தால் **ஆண் யானை** கட்டில் அகப்படுவது போல் ஸ்த்ரீயைத் தொடுபவன் பந்தத்திற் குள்ளாவான். (ஆண் யானை பதின் மூன்றாவது குரு).

8. 15. **லோபிகளால்** சிரமப்பட்டுச் சேமிக்கப்பட்ட பொருள் தியாகத்துக்கோ போகத்துக்கோ பயன்படுவதில்லை. ஆனால் தேன் வேட்டைக்காரன் தேனை யனுப விப்பது போல் பொருளைக் கவர உபாயமறிந்த எவனோ ஒருவன் அதையும் அனுபவிக்கி றான். (லோபி பதினான்காவது குரு).

8. 17. வேடனுடைய பாட்டைக் கேட்டு மதி மயங்கி அவனுடைய அம்புக்கி இரையாகும் **மானிடமிருந்து** கற்றுக்கொள்ளவேண்டிய பாடமாவது புத்தியைக் கெடுக்கக்கூடிய பாட்டை வனவாசியான துறவி ஒருபோதும் கேட்கக்கூடாது என்பதே, (மான் பதினைந்தாவது குரு).

8. 19. சுவையினால் கவரப்பட்டு மதி யிழந்த மனிதன் நாவை அடக்கமாட்டாமல் வலையில் **பிடிபட்ட மீனைப்போல்** சாவை யடைகிறான். (மீன் பதினாறாவது குரு).

---

8. 12. ஒ. ஸ்ரீசைதன்யருடன் ஒரு பிரம்மசாரி ஒரு கிருஹஸ்தர் வீட்டுக்கு பிக்ஷைக்குச் சென்றான். போஜனத்திற்குப் பின் முக சுத்திக்குக் கடுக்காய் கொடுக்கப் பட்டதில் மீதி யிருந்ததை துணித் தலைப்பில் முடிந்துகொண்டான். இதைக் கண்ட சைதன்யர் அவனைத் தன் ஸங்கத்தினின்று நீக்கி கிருஹஸ்தாசிரமம் போகச் சொன்னார்.

8. 19. ஒ. யா காவாராயினும் நா காக்க காவாக்கால்
சோ காப்பர் சொல்லிழுக்குப்பட்டு: —குறள.

इन्द्रियाणि जयन्त्याशु निराहारा मनीषिणः।
वर्जयित्वा तु रसनं तन्निरन्नस्य वर्धते ॥ ८.२० ॥

तावज्जितेन्द्रियो न स्याद् विजितान्येन्द्रियः पुमान्।
न जयेद्रसनं यावज्जितं सर्वं जिते रसे ॥ ८.२१ ॥

पिंगला नाम वेश्यासीद् विदेह-नगरे पुरा।
तस्या मे शिक्षितं किंचिन्निबोध नृपनन्दन ॥ ८.२२ ॥

सा स्वैरिण्येकदा कान्तं संकेत उपनेष्यती।
अभूत् काले बहिर्द्वारि बिभ्रती रूपमुत्तमम् ॥ ८.२३ ॥

आगतेष्वपयातेषु सा संकेतोपजीविनी।
अप्यन्यो वित्तवान् कोऽपि मामुपैष्यति भूरिदः ॥ ८.२५ ॥

एवं दुराशया ध्वस्त-निद्रा द्वार्यवलंबती।
निर्गच्छन्ती प्रविशती निशीथं समपद्यत ॥ ८.२६ ॥

---

8. 20. ஆஹாரத்தை விட்ட புத்திமான்கள் நாக்கைத் தவிர மற்ற இந்திரியங்களை விரைவில் ஜயிக்கிறார்கள். ஆனால் உணவின்றிப் பட்டினியிருப்பவனுக்கு சுவையின் அவா வளர்ச்சி யடைகிறது.

8. 21. மற்ற இந்திரியங்களை ஜயித்த புருஷன் நாக்கை ஜயிக்காத வரையில் இந்திரியங்களை ஜயித்தவனாகமாட்டான். சுவை ஜயிக்கப்பட்டால் எல்லாம் ஜயிக்கப் பட்டதாகும்.

8. 22. அரசகுமாரா! விதேக நகரத்தில் முன்னொருகாலத்தில் **பிங்களை** என்று ஒரு வேசி இருந்தாள். அவளிடமிருந்து நான் கற்றுக்கொண்டதைத் தெரிந்துகொள்வாயாக. (பிங்களை பதினேழாவது குரு.)

8. 23. அந்த வேசி ஒரு சமயம் தன்னை விரும்புபவனைக் கூடு மிடத்திற்கு அழைத்துச் செல்ல விரும்பியவளாய்த் தன்னைச் சிறப்பாகச் சிங்காரித்துக்கொண்டு உரிய சமயத்தில் வெளிவாயிலை யடைந்து காத்திருந்தாள்.

8. 25-26. அவ்வழி வந்தவர்களெல்லாம் சென்றுவிடவே வேசித்தனத்தால் பிழைக்கும் அவள் 'நிறையப் பொருள் கொடுக்கும் எவனாவது ஒரு பணக்காரன் என்னை நாடிவருவான்' என்ற துராசையால் நித்திரையின்றி வாயிற்படியிலிருந்து வெளி வருவதும் உள்ளே போவதுமாகப் பாதிராத்திரி வரை இருந்தாள்.

---

8. 20. விஷயா விநிவர்த்தந்தே நிராஹாரஸ்ய தேஹின: |
ரஸவர்ஜம் ரஸோऽப்யஸ்ய பரம் த்ருஷ்ட்வா நிவர்த்ததே || —கீ. 2. 59.

8. 26. ஆகதேஷ்விதி யுக்மகம் ஏவம் குர்வதீதி வ்யாக்யானம் நிர்க்கச்சந்தீ ப்ரவிசதீதி சத்ரந்த ஏவ பாட: ||

---

8. 26. द्वार्यवलम्बिनी। निशीथः। निर्गच्छती। —பா. பே.

तस्या वित्ताशया शुष्यद्वक्त्राया दीनचेतसः।
निर्वेदः परमो जज्ञे चिन्ताहेतुः सुखावहः ॥ ८.२७ ॥

पिंगलोवाच—

सन्तं समीपे रमणं रतिप्रदं वित्तप्रदं नित्यमिमं विहाय।
अकामदं दुःखभयातिशोक-मोहप्रदं तुच्छमहं भजेऽज्ञा ॥ ८.३१ ॥

विदेहानां पुरे ह्यस्मि-न्नहमेकैव मूढधीः।
याऽन्यमिच्छत्यसत्यस्मा-दात्मदात् काममच्युतात् ॥ ८.३४ ॥

नूनं मे भगवान् प्रीतो विष्णुः केनापि कर्मणा।
निर्वेदोऽयं दुराशाया यन्मे जातः सुखावहः ॥ ८.३७ ॥

संसारकूपे पतितं विषयै-र्मुषितेक्षणम्।
ग्रस्तं कालाहिनाऽऽत्मानं कोऽन्यस्त्रातु-मधीश्वरः ॥ ८.४१ ॥

आत्मैव ह्यात्मनो गोप्ता निर्विद्येत यदाखिलात्।
अप्रमत्त इदं पश्येद् ग्रस्तं कालाहिना जगत् ॥ ८.४२ ॥

---

8. 27. பொருளாசையால் முகம் வாடியவளும் மனங் கலங்கியவளுமான அவளுக்கு அக் கவலையின் பயனாக இன்பத்தை யளிக்கக்கூடிய சிறந்த வைராக்கியம் உண்டாயிற்று.

பிங்களை கூறியது—

8. 31. அறிவில்லாத நான் ஸமீபத்தி லிருப்பவரும் கூடிக் குலாவுபவரும் இன்ப மளிப்பவரும் செல்வ மளிப்பவரும் அழிவற்றவருமான இவரை (இறைவனை) விட்டு விரும்பியதைக் கொடுக்கமுடியாதவனும் துன்பத்தையும் பயத்தையும் கவலையையும் மயக்கத்தையுமே கொடுப்பவனுமான அல்பமான புருஷனை நாடுகிறேன்!

8. 34. விதேகர்களுடைய இந்த நகரத்தில் நான் ஒருத்தியே மூடபுத்தியுள்ளவள். ஏனென்றால் அஸத்தாகிய நான் தன்னையே கொடுக்கும் அச்சுதனைவிட்டு வேறு கணவனை விரும்பினேனே!

8. 37. பகவானாகிய விஷ்ணு ஏதோ ஒரு நற்செயலால் என்னிடம் ப்ரீதி யடைந்திருக்கிறார் என்பது நிச்சயம். துராசைகொண்ட என்னிடம் இன்ப மளிக்கும் இந்த வைராக்கியம் உண்டாயிற்றல்லவா!

8. 41. ஸம்ஸாரமாகிய கிணற்றில் விழுந்து விஷயங்களால் விவேகமிழந்து கால மாகிய ஸர்ப்பத்தால் விழுங்கப்படும் ஜீவனை ரக்ஷிப்பதற்கு (பகவானைவிட) எவன் திறமை யுடையவனாவான்?

8. 42. மதிமயக்கம் நீங்கி எப்போது ஒருவன் இந்த உலகம் கால ஸர்ப்பத்தால் விழுங்கப்படுகிறதென்று காண்கின்றானோ அப்போது அவன் தனக்குத்தானே ரக்ஷக னாகிறான்.

ब्राह्मण उवाच—

आशा हि परमं दुःखं नैराश्यं परमं सुखम् ।
यथा संछिद्य कान्ताशां सुखं सुष्वाप पिंगला ॥ ८.४४ ॥

परिग्रहो हि दुःखाय यद्यत् प्रियतमं नृणाम् ।
अनन्तं सुखमाप्नोति तद् विद्वान् यस्त्वकिंचनः ॥ ९.१ ॥

सामिषं कुररं जघ्नुर्बलिनो ये निरामिषाः ।
तदामिषं परित्यज्य स सुखं समविन्दत ॥ ९.२ ॥

न मे मानावमानौ स्तो न चिन्ता गेह-पुत्रिणाम् ।
आत्मक्रीड आत्मरति-र्विचरामीह बालवत् ॥ ९.३॥

क्वचित् कुमारी त्वात्मानं वृणानान् गृहमागतान् ।
स्वयं तानर्हयामास क्वापि यातेषु बन्धुषु ॥ ९.५ ॥

பிராம்மணன் கூறியது—

8. 44. ஆசையாவது அளவற்ற துன்பம்; ஆசை யின்மை அளவற்ற இன்பம். கள்ளக்காதலனிடம் ஆசையைச் சேதித்துப் பிங்களை எங்ஙனம் சுகமாகத் தூங்கினளோ அங்ஙனம் (ஒருவன் ஆசைத் தளையினின்று விடுபட்டு இன்புறுதல் வேண்டும்).

9. 1. மானிடர்களுக்கு எதெது மிகவும் பிரியமானதோ அதனைத் தேடி யடைவது துன்பத்தின் பொருட்டாகிறது. அதை யறிந்தவனும் எதையும் வேண்டாதவனுமாகிய வன் அளவற்ற இன்பத்தை யடைகிறன். (இதைக் **குரரப் பக்ஷியிடமிருந்து**) நான் கற்றுக்கொண்டேன். (இது பதினெட்டாவது குரு).

9. 2. மாம்ஸத்துண்டைக் கொத்திச் சென்ற ஒரு குரரப் பக்ஷியை மாம்ஸம் கிடைக்கப் பெருத மற்ற வலிமை மிக்க பக்ஷிகள் துன்புறுத்தின. அது அந்த மாம்ஸத் தைக் கீழே போட்டுவிட்டுப் பின் சுக மடைந்தது.

9. 3. எனக்கு மானமும் அவமானமும் இல்லை. மனையும் மக்களும் உடையவர் களுக்கு உண்டாகும் கவலையில்லை. தனக்குத் தானே விளையாடிக்கொண்டு தன்க்குத் தானே ரமித்துக் கொண்டு நான் இங்கே ஒரு **சிறுவனைப்போல்** சஞ்சரிக்கிறேன். (சிறுவன் பத்தொன்பதாவது குரு).

9. 5. (ஒரு குமரியிடமிருந்து நான் கற்றுக்கொண்டதைக் கேள்). ஓரிடத்தில் ஒரு குமரி தன்னைக் கலியாணத்திற்குப் பெண்பார்க்க வீடு தேடி வந்தவர்களை வீட்டில் உறவினர் யாரு மில்லாதபோது தானே உபசரித்தாள்.

---

9. 1. ஒ. யாதனின் யாதனின் நீங்கியான் துன்பம்
அதனின் அதனின் இலன். —குறள்.

9. 3. ஒ. பாலரொடு பேயர் பித்தர் பான்மையென நிற்பதுவே
சீலமிகு ஞானியர்தஞ் செய்கை பராபரமே. —தாயுமானவர்

तेषामभ्यवहारार्थं शालीन् रहसि पार्थिव।
अवघ्नन्त्याः प्रकोष्ठस्थाश्चक्रुः शङ्खाः स्वनं महत् ॥ ९.६ ॥

सा तज्जुगुप्सितं मत्वा महती व्रीडिता ततः।
बभंजैकैकशः शंखान् द्वौ द्वौ पाण्यो-रशेषयत् ॥ ९.७ ॥

उभयोरप्यभूद् घोषो ह्यवघ्नन्त्याः स्म शंखयोः।
तत्राप्येकं निरभिद-देकस्मान्नाभवद् ध्वनिः ॥ ९.८ ॥

अन्वशिक्षमिमं तस्या उपदेशमरिन्दम।
लोकाननुचरन्नेतान् लोकतत्त्वविवित्सया ॥ ९.९ ॥

वासे बहूनां कलहोवेभ द्व वार्ता द्वयोरपि।
एक एव चरेत्तस्मात् कुमार्या इव कंकणः ॥ ९.१० ॥

मन एकत्र संयुज्या-ज्जितश्वासो जितासनः।
वैराग्याभ्यासयोगेन ध्रियमाण-मतन्द्रितः ॥ ९.११ ॥

---

9. 6. அரசே! வந்தவர்களுக்கு உணவளிப்பதற்காக இப்பெண் ரகசியமாக நெல்லைக் குத்துகையில் கையிலிருந்த சங்குவளைகள் குலுங்கி மிகுதியாகச் சத்தம் செய்தன.

9. 7. சிறந்த புத்திசாலியான அப்பெண் அச் சத்தத்தை இழிவெனக் கருதி வெட்கமடைந்து வளைகளை ஒவ்வொன்றாகக் கழற்றினாள். கைகளில் இரண்டிரண்டு வளைகளை மட்டும் நிறுத்திக்கொண்டாள்.

9. 8. மறுபடியும் நெல் குத்தும்போது அவ்விருவளைகளினின்றும் சத்த முண்டாயிற்று. அவற்றிலும் ஒவ்வொன்றைக் கழற்றினாள். பின் ஒரு வளையினின்று சத்தமுண்டாக வில்லை.

9. 9. அரசே! உலகத் தத்துவத்தை யறியவேண்டுமென்ற விருப்பத்துடன் உலகங்களில் சஞ்சரிக்கும்போது அந்தப் பெண்ணிடம் பின்வரும் இந்தப் பாடத்தை நான் கற்றுக்கொண்டேன்.

9. 10. வெகு பேர்களுடன் வசித்தால் கலகமுண்டாகும்; இருவருள்ளும் விவகார மேற்படும்; ஆகையால் (முனிவன்) **பெண்ணின் கைக் கங்கணம்போல்** ஒருவனாகச் சஞ்சரிக்க வேண்டும். (குமரியின் கங்கணம் இருபதாவது குரு).

9. 11. யோகியானவன் ஆஸனத்தையும் சுவாஸத்தையும் ஜயித்து வைராக்கியத்தையும் அப்பியாஸத்தையும் கைக்கொண்டு ஸ்திரமாகிய மனதை ஸாவதானத்துடன் ஒரே இடத்தில் சேர்க்கவேண்டும்.

तदैव-मात्मन्यवरुद्ध-चित्तो न वेद किंचिद् बहिरन्तरं वा ।
यथेषुकारो नृपतिं व्रजन्त-मिषौ गतात्मा न ददर्श पार्श्वे ॥ ९.१३ ॥

गृहारंभोऽतिदुःखाय विफलश्चाध्रुवात्मनः ।
सर्पः परकृतं वेश्म प्रविश्य सुखमेधते ॥ ९.१५ ॥

यथोर्णनाभि-र्हृदयादूर्णां सन्तत्य वक्त्रतः ।
तया विहृत्य भूयस्तां ग्रसत्येवं महेश्वरः ॥ ९.२१ ॥

यत्र यत्र मनो देही धारयेत् सकलं धिया ।
स्नेहाद् द्वेषाद् भयाद् वापि याति तत्तत्सरूपताम् ॥ ९.२२ ॥

---

9. 13. **அம்பு தொடுப்பவன்** அம்பில் நிலைத்த மனமுடையவனாகி அருகாமையில் சென்ற அரசனை எவ்விதம் பார்க்கவில்லையோ அவ்விதம் ஸ்வரூபத்தில் நிலைபெற்ற மனமுடையவன் உள்ளும் வெளியும் எதையும் அறியான். (அம்பு தொடுப்பவன் இருபத்தொராவது குரு).

9. 15. நிலையற்ற உடல் படைத்த மனிதனுக்கு வீட்டைப் பற்றிய ஆரம்பம் மிகுந்த துன்பத்தை விளைவிப்பதாகவும் பயனற்றதாகவும் முடிகிறது. **பாம்பு** பிறரால் அமைக்கப்பட்ட வீட்டில் (கரையான் வைத்த புற்றில்) புகுந்து சுகமாக வளர்கிறது. (பாம்பு இருபத்திரண்டாவது குரு).

9. 21. **சிலந்திப் பூச்சி**யானது தன் மார்பிலிருந்து உண்டாகும் நூலை வாயினால் விஸ்தாரப்படுத்தி அத்துடன் விளையாடி மறுபடி அதை விழுங்குகிறது. அவ்வாறே தான் மஹேசுவரனும் லீலை புரிகிறார். (சிலந்திப்பூச்சி இருபத்துமூன்றாவது குரு).

9. 22. உடல் படைத்தவன் சிநேகத்தாலோ பயத்தாலோ துவேஷத்தாலோ ஏகாக்ரபுத்தியால் மனதை எந்தெந்தப் பொருளில் தாரணை செய்கிறானோ அந்தந்தப் பொருளின் வடிவை யடைகிறான்.

---

9. 13. ஒ. சித்தம் அழகியோனே! உபநிஷத்திலுள்ள மஹா அஸ்திரமாகிய ஓங்கார வில்லை எடுத்து உபாஸனையால் கூர்மைபெற்ற உன் ஜீவனையே அதில் அம்பாகத் தொடுத்து பிரம்ம பாவனை நிறைந்த சித்தத்தால் அதை இழுத்து அந்த அக்ஷரப் பிரம்மமாகிய லக்ஷ யத்தை நோக்கி அம்புபோல் பாய்ந்து அதனுள் ஊடுருவிச் செல்வாய். பிரணவமே வில்; ஆத்மாவே அம்பு; பிரம்மமே அதன் குறி; கவனக் குறைவின்றி குறி எய்யப்படவேண்டும். அம்பைப்போல் அதன் பின் லக்ஷியத்துடன் ஒன்றுபட்ட நிலை ஏற்படும்.

9. 22. ஒ. வைரேண பூதபாப்மானஸ்-தமாப்-ரனுசிந்தயா |
காமாத் த்வேஷாத்-பயாத் ஸ்நேஹாத்-யதா பக்த்யேச்வரே மனः ||
ஆவேச்ய தத்கம் ஹித்வா பஹவஸ்-தத்கதிம் கதாः ||
—பாக. 7. 1. 28-29.

कीटः पेशस्कृतं ध्यायन् कुड्यां तेन प्रवेशितः ।
याति तत्सात्मतां राजन् पूर्वरूप-मसन्त्यजन् ॥ ९.२३ ॥

एवं गुरुभ्य एतेभ्य एषा मे शिक्षिता मतिः ।
स्वात्मोपशिक्षितां बुद्धिं शृणु मे वदतः प्रभो ॥ ९.२४ ॥

देहो गुरुर्मम विरक्ति-विवेक-हेतु-र्बिभ्रत् स्म सत्त्वनिधनं सततार्त्युदर्कम् ।
तत्त्वान्यनेन विमृशामि यथा तथापि पारक्यमित्यवसितो विचराम्यसंगः
॥ ९.२५ ॥

एवं संजात-वैराग्यो विज्ञानालोक आत्मनि ।
विचरामि महीमेतां मुक्तसंगोऽनहंकृतिः ॥ ९.३० ॥

न ह्येकस्माद् गुरो-र्ज्ञानं सुस्थिरं स्यात् सुपुष्कलम् ।
ब्रह्मैतदद्वितीयं वै गीयते बहुधर्षिभिः ॥ ९.३१ ॥

---

9. 23. அரசே! புழுவானது குளவிக்கூட்டினுள் புகுத்தப்பட்டு குளவியையே தியானித்து முன்னுடலை விடாமலேயே குளவியின் வடிவை அடைந்து விடுகிறது. (குளவி இருபத்து நான்காவது குரு).

9. 24. இக் குருக்களிடமிருந்து இவ்வாறாக இந்த என் புத்தியை நான் சிக்ஷித்துக் கொண்டேன். அரசே! மேலும் என் சரீரத்தினின்று நான் புத்தியை சிக்ஷித்துக் கொண்டதை நான் கூறக் கேட்பாய்.

9. 25. வைராக்கியத்திற்கும் விவேகத்திற்கும் காரணமா யிருக்கும் சரீரமும் எனக்கு குருவாகிறது. பிறத்தலையும் இறத்தலையும் தாங்குவது எப்போதும் மிகுந்த துன்பத்துடன் கூடியது (இதனால் வைராக்கியம் ஏற்படுகிறது). இதனால் தத்துவங்களை விசாரிக்கிறேன் (அப்போது விவேகம் ஏற்படுகிறது). என்றாலும் இவ்வுடல் பிறரைச் சார்ந்ததென்று நிச்சயபுத்தி யடைந்தவனாய் அதில் பற்றில்லாதவனாய்ச் சஞ்சரிக்கிறேன்.

9. 30. இவ்விதம் வைராக்கிய மடைந்து அறிவாகிய விளக்கையுடையவனாய்ப் பற்றற்று அகங்காரம் நீங்கி ஆத்மஸ்வரூபத்தில் நிலைபெற்று இந்த பூமியில் சஞ்சரிக்கிறேன்.

9. 31. ஒரே குருவிடமிருந்து பரிபூர்ணமான ஞானம் ஏற்படாமற் போகலாம். இரண்டற்ற ஒரே பிரம்மம்தான் ரிஷிகளால் பலவிதமாக உபதேசிக்கப் படுகிறது.

---

9. 31. ஓ. (ஏகம் ஸத்-விப்ரா பஹுதா வதந்தி)
உண்மை ஒன்றே; அதை அறிஞர்கள் பலவிதமாய்ப் பேசுகின்றனர்.
—ரிக்வேதம்.

श्रीभगवानुवाच—

अवधूतवचः श्रुत्वा पूर्वेषां नः स पूर्वजः।
सर्वसंग-विनिर्मुक्तः समचित्तो बभूव ह ॥ ९.३३

इति श्रीमद्भागवते महापुराणे एकादशस्कन्धे
अवधूतयदुसंवादो नाम नवमोऽध्यायः॥

ஸ்ரீ பகவான் கூறியது—

9. 33. எங்களுடைய மூதாதையருக்கும் முன்னோரான யது மகாராஜன் அவதூதருடைய சொல்லைக் கேட்டு எல்லாப்பற்றுகளி னின்றும் விடுபட்டு சமசித்த முடையவவராயினர்.

இங்ஙனம் ஸ்ரீமத்பாகவத மகாபுராணத்தில் பதினொராவது
ஸ்கந்தத்தில் அவதூத-யது-ஸம்வாதம் என்ற
ஒன்பதாவது அத்தியாயம் முற்றும்.

———

हंसाख्यानम्

श्रीभगवानुवाच—

निवृत्तं कर्म सेवेत प्रवृत्तं मत्परस्त्यजेत् ।
जिज्ञासायां संप्रवृत्तो नाद्रियेत् कर्मचोदनाम् ॥ १०.४ ॥

यमानभीक्ष्णं सेवेत नियमान् मत्परः क्वचित् ।
मदभिज्ञं गुरुं शान्त-मुपासीत मदात्मकम् ॥ १०.५ ॥

अमान्यमत्सरो दक्षो निर्ममो दृढसौहृदः ।
असत्वरोऽर्थजिज्ञासु-रनसूयु-रमोघवाक् ॥ १०.६ ॥

जायापत्य-गृहक्षेत्र-स्वजन-द्रविणादिषु ।
उदासीनः समं पश्यन् सर्वेष्वर्थ-मिवात्मनः ॥ १०.७ ॥

गुणाः सृजन्ति कर्माणि गुणोऽनुसृजते गुणान् ।
जीवस्तु गुणसंयुक्तो भुंक्ते कर्मफलान्यसौ ॥ १०.३१ ॥

ஹம்ஸாக்கியானம்

ஸ்ரீ பகவான் கூறியது—

10. 4. என் பக்தன் பற்றுதலை நீக்கும் கர்மத்தைச் செய்யவேண்டும். பற்றுதலை வளர்க்கும் கர்மத்தை விடவேண்டும். ஞானமார்க்கத்தில் முயல்பவன் கர்மத்தைப் பற்றிய கட்டளையை ஆதரிக்கக் கூடாது.

10. 5. என் பக்தன் யமங்களை இடைவிடாமலும் நியமங்களைக் கூடியவரையிலும் கைக் கொள்ளவேண்டும். என்னை யறிந்தவனும் சாந்தனுமாகிய குருவை என் வடிவுகொண்டவனாக உபாசிக்கவேண்டும்.

10. 6-7. கர்வமில்லாதவனாகவும், பொறாமை யில்லாதவனாகவும், ஸாமர்த்திய முள்ளவனாகவும், மமதை யில்லாதவனாகவும், திடமான அன்புள்ளவனாகவும், அவசரப் படாதவனாகவும், அர்த்தத்தை அறிய ஆவலுள்ளவனாகவும், அசூயை யில்லாதவனாக வும், வீண்பேச்சில்லாதவனாகவும், மனைவி மக்கள் நிலம் உற்றார் உடைமை முதலிய வற்றில் உதாசீனனாகவும் தன்னுடைய நலனைப் போலவே எல்லோருடைய நலனையும் சமமாகக் கருதுபவனாகவும் இருந்துகொண்டு (குருவை உபாசிக்க வேண்டும்).

10. 31. முக்குணமும் (தன்வயப்பட்ட) இந்திரியங்களைத் தூண்டுகிறது. இந்திரியங்கள் கர்மங்களைச் செய்கின்றன. கர்மபலன்களை குணத்துடன் கூடிய ஜீவன் அனுபவிக்கிறான்.

---

10. 5. ஒ. அஹிம்ஸா-ஸத்ய-அஸ்தேய-ப்ரஹ்மசர்ய-அபரிக்ரஹா யமா; |
ஜாதி-தேச-கால-ஸமயானவச்சின்னா: ஸார்வபௌமா மஹாவ்ரதம் ||
சௌச-ஸந்தோஷ-தப:-ஸ்வாத்யாய-ஈச்வர.ப்ரணிதானானி நியமா: ||
—பதஞ்ஜலி யோகஸூத்ரம். 2. 30-32.

यावत् स्याद् गुणवैषम्यं तावन्नानात्व-मात्मनः।
नानात्व-मात्मनो यावत् पारतन्त्र्यं तदैवहि ॥ १०.३२ ॥

यावदस्यास्वतन्त्रत्वं तावदीश्वरतो भयम्।
य एतत् समुपासीरं-स्ते मुह्यन्ति शुचार्पिताः ॥ १०.३३ ॥

काल आत्माऽऽगमो लोकः स्वभावो धर्म एव च।
इति मां बहुधा प्राहु-र्गुणव्यतिकरे सति ॥ १०.३४ ॥

उद्धव उवाच—

गुणेषु वर्तमानोऽपि देहजेष्वनपावृतः।
गुणैर्न बद्ध्यते देही बध्यते वा कथं विभो ॥ १०.३५ ॥

कथं वर्तेत विहरेत्कैर्वा ज्ञायेत लक्षणैः।
किं भुंजीतोत विसृजेत् शयीतासीत याति वा ॥ १०.३६ ॥

---

10. 32. குணங்களின் ஏற்றத் தாழ்வு உள்ள வரை ஆத்மா வெவ்வேறு என்ற எண்ணம் உண்டாகிறது. ஆத்மா வெவ்வேறு என்ற எண்ணம் உள்ள வரை அடிமைத் தனமும் உண்டு.

10. 33. அடிமைத்தனம் உள்ள வரை ஈசுவரனிடம் பயமுண்டாகிறது. (ஆகையால்) குணங்களைப் பின்பற்றி இவ்வழியில் நிற்பவர்கள் துன்பத்துக் காளாகி மயங்குகிறார்கள்.

10. 34. குணத்தின் கூட்டுறவாலேயே (ஒன்றே ஆகிய) என்னைக் காலம் என்றும் ஆத்மா என்றும் ஆகமம் என்றும் உலகம் என்றும் இயற்கை என்றும் தர்மம் என்றும் பலவிதமாகக் கூறுகிறார்கள்.

உத்தவர் கூறியது—

10. 35. பிரபுவே! தேகத்தி லுறைபவன் தேகத்தா லேற்படும் கர்மங்களில் பற்றற்றவனுதலால் குணங்களால் கட்டுப்படமாட்டான். அல்லது கட்டுப்படுகிறானென்றால் அது எங்ஙனம்?

10. 36. (கட்டுப்பட்டவனாயின்) அவன் எப்படி இருப்பான்? (கட்டுப்படாதவனாயின் எப்படி யிருப்பான்?) எப்படி இன்புறுவான்? எந்த அடையாளங்களால் அறியலாம்? எதை அனுபவிப்பான்? எதை விடுவான்? எவ்விதம் படுப்பான்? எவ்விதம் உட்கார்வான்? எவ்விதம் செல்வான்?

---

10. 36. ஒ. 'ஸ்திதப்ரஜ்ஞஸ்ய கா பாஷா' —கீ. 254.

एत-दच्युत मे ब्रूहि प्रश्नं प्रश्नविदां वर।
नित्यबद्धो नित्यमुक्त एक एवेति मे भ्रमः ॥ १०.३७ ॥

श्रीभगवानुवाच—

बद्धो मुक्त इति व्याख्या गुणतो मे न वस्तुतः।
गुणस्य मायामूलत्वान्न मे मोक्षो न बन्धनम् ॥ ११.१ ॥

एकस्यैव ममांशस्य जीवस्यैव महामते।
बन्धोऽस्याविद्ययाऽनादि-र्विद्यया च तथेतरः ॥ ११.४ ॥

अथ बद्धस्य मुक्तस्य वैलक्षण्यं वदामि ते।
विरुद्ध-धर्मिणोस्तात स्थितयो-रेकधर्मिणि ॥ ११.५ ॥

सुपर्णावेतौ सदृशौ सखायौ यदृच्छयैतौ कृतनीडौ च वृक्षे।
एकस्तयोः खादति पिप्पलान्न-मन्यो निरन्नोऽपि बलेन भूयान् ॥ ११.६ ॥

---

10. 37. அச்சுதா! கேள்வியை அறிந்தவர்களுள் சிறந்தவரே! இதைப் பற்றி எனக்குச் சொல்லவேண்டும். என்றும் கட்டுப்பட்டவனும் என்றும் விடுபட்டவனும் ஒருவனே என்பது என் சந்தேகம்.

ஸ்ரீ பகவான் கூறியது—

11. 1. (பத்தன்) கட்டுப்பட்டவன் என்பதும் (முக்தன்) விடுபட்டவன் என்பதும் உண்மையில் இல்லை. என் வசப்பட்ட குணத்தால் அங்ஙனம் கூறப்படுகிறது. குணமே எனது மாயா மூலமாகையால் மோக்ஷமுமில்லை பந்தமுமில்லை.

11. 4. மதிமிக்கவனே! எனது அம்சமாகிய இந்த ஜீவனொருவனுக்கே அவித்தையால் அனுதியான பந்தமும், வித்தையால் மோக்ஷமும் ஏற்படுகின்றன.

11. 5. இனி பத்தன் முக்தன் என்ற இவர்களுடைய வேறுபாடான அடையாளங்களை உனக்குக் கூறுகிறேன். உத்தவா! (மேலும் இன்பம் துன்பம் என்று) வேறுபட்ட இயற்கையுடையவர்களாய் ஒரே சரீரத்தில் உறையும் (ஜீவேசுவரர்களான) இவர்களுடைய வேறுபாட்டையும் கூறுகிறேன்.

11. 6. (ஜீவேசுவரர்களாகிய) இவர்கள் இருபக்ஷிகளைப் போன்றவர்கள் சமமானவர்கள் நட்புக் கொண்டவர்கள். (சரீரமாகிய) விருக்ஷத்தில் (இன்னதென்று விவரிக்க முடியாத மாயையாகிய) ஏதோ ஒரு காரணத்தால் (இருதயமாகிய) கூட்டைக் கட்டிக்கொண்டு வாழ்கிறார்கள். அவர்களுள் ஒருவன் (கர்மபலனாகிய) பழங்களைப் புசிக்கிறான்; மற்றவன் எதையும் புசிக்காதவன்; ஆயினும் சக்தி மிகுந்து விளங்குகிறான்.

आत्मान-मन्यं च स वेद विद्वा-नपिप्पलादो न तु पिप्पलादः।
योऽविद्यया युक् स तु नित्यबद्धो विद्यामयो यः स तु नित्यमुक्तः
॥ ११.७ ॥

देहस्थोऽपि न देहस्थो विद्वान् स्वप्नाद् यथोत्थितः।
अदेहस्थोऽपि देहस्थः कुमतिः स्वप्नदृग् यथा ॥ ११.८ ॥

न स्तुवीत न निन्देत कुर्वतः साध्वसाधु वा।
वदतो गुणदोषाभ्यां वर्जितः समदृङ् मुनिः ॥ ११.१६ ॥

न कुर्यान्न वदेत् किंचिन्न ध्यायेत् साध्वसाधु वा।
आत्मारामोऽनया वृत्त्या विचरे-ज्जडवन्मुनिः ॥ ११.१७ ॥

एवं जिज्ञासयापोह्य नानात्व-भ्रममात्मनि।
उपारमेत विरजं मनो मय्यर्प्य सर्वगे ॥ ११.२१ ॥

यद्यनीशो धारयितुं मनो ब्रह्मणि निश्चलम्।
मयि सर्वाणि कर्माणि निरपेक्षः समाचरेत् ॥ १.२२ ॥

---

11. 7. பலனைப் புசிக்காதவனும் அறிபவனுமாகிய ஈசுவரன் தன்னையும் பிறனையும் அறிகிறான். பலனைப் புசிப்பவன் (ஜீவன்) அறிவதில்லை. எவன் அவித்தையுடன் கூடியவனோ அவன் நித்திய பத்தன்; எவன் வித்தை வடிவானவனோ அவன் நித்ய முக்தன்.

11. 8. கனவினின்று விழித்துக்கொண்டவன் கனவுடலை மெய்யென்று எண்ணாதவாறு ஞானியானவன் உடலில் இருப்பினும் உடலில் இல்லாதவன் போலவே ஆகிறான். அறிவுகெட்டவன் கனவு காண்பவனைப்போல் உடலில் இல்லாதவனாயினும் உடலில் இருப்பவனாகிறான்.

11. 16. நல்லதையோ கெடுதலையோ சொல்லுகிறவர்களையும் செய்பவர்களையும் ஸ்தோத்திரமும் செய்யக்கூடாது, நிந்திக்கவும் கூடாது. குண தோஷங்களில்லாதவனும் ஸமமான நோக்கமுடையவனுமாக முனிவன் இருக்க வேண்டும்.

11. 17. முனிவன் நல்லதையோ கெட்டதையோ சிறிதும் செய்யவும் கூடாது, பேசவும் கூடாது, நினைக்கவும் கூடாது ஆத்மாராமனாக இருந்து கொண்டு, இந்த மனப்போக்குடன் ஜடன்போலச் சஞ்சரிக்க வேண்டும்.

11. 21. இவ்வாறு விசாரத்தால் ஆத்ம விஷயத்தில் ஏற்பட்ட பலவிதமான மயக்கத்தை யொழித்து எங்கும் நிறைந்த என்னிடம் நிர்மலமான மனதை அர்ப்பணம் செய்து ஒழிவடைய வேண்டும்.

11. 22. (ஒருவன்) பிரம்மமாகிய என்னிடத்தில் மனதைச் சஞ்சலமின்றி நிறுத்தச் சக்தியற்றவனாயின் பயனில் பற்றில்லாமல் எல்லாக் கர்மங்களையும் செய்ய வேண்டும்.

श्रद्धालु-र्मे कथाः श्रृण्वन् सुभद्रा लोकपावनीः।
गायन्ननुस्मरन् कर्म जन्म चाभिनयन् मुहुः ॥ ११.२३ ॥

मदर्थे धर्मकामार्था-नाचरन् मदपाश्रयः।
लभते निश्चलां भक्तिं मय्युद्धव सनातने ॥ ११.२४ ॥

सत्संग-लब्धया भक्त्या मयि मां य उपासिता।
स वै मे दर्शितं सद्भि-रंजसा विन्दते पदम् ॥ ११.२५ ॥

यद्यदिष्टतमं लोके यच्चातिप्रिय-मात्मनः।
तत्तन्निवेदयेन्मह्यं तदानन्त्याय कल्पते ॥ ११.४१ ॥

सूर्योऽग्नि-र्ब्राह्मणो गावो वैष्णवः खं मरुज्जलम्।
भूरात्मा सर्वभूतानि भद्र पूजापदानि मे ॥ ११.४२ ॥

धिष्ण्येष्वेष्विति मद्रूपं शंखचक्रगदांबुजैः।
युक्तं चतुर्भुजं शान्तं ध्यायन्नर्चेत् समाहितः ॥ ११.४६ ॥

---

11. 23. சிரத்தையுடையவனாக மங்களம் மிக்கதும் உலகங்களைப் பரிசுத்தம் செய்வனவுமாகிய எனது கதைகளையும் ஜன்மத்தையும் அடிக்கடி கேட்டும் பாடியும் சிந்தித்தும் அனுசரித்தும் (இருக்க வேண்டும்).

11. 24. உத்தவா! என்னை ஆச்ரயித்து எனக்காகவே அறத்தையும் பொருளையும் இன்பத்தையும் கைக்கொள்பவனாய் இருந்தால் நித்தியனாகிய என்னிடம் நிச்சலமான பக்தியை அடைவான்.

11. 25. ஸத்ஸங்கத்தால் என்னிடம் ஏற்பட்ட பக்தியால் என்னை எவன் உபாசிக்கிறானோ அவன் ஸாதுக்களால் வழிகாட்டப் பட்டு எளிதில் எனது பதவியை யடைகிறான்.

11. 41. உலகத்தில் எதெது ஒருவனுக்கு மிகவும் பிடித்ததோ எதெது பிரியமானதோ அததை எனக்கு நிவேதனம் செய்யவேண்டும். அது அளவற்ற பயனைத் தருவதாகும்.

11. 42. மங்கள வடிவினனே! சூரியன், அக்கினி, அந்தணன், பசுக்கள், விஷ்ணுபக்தன், ஆகாயம், வாயு, ஜலம், பூமி, ஆத்மா, பிராணிவர்க்கம் இவை எல்லாம் எனது பூஜைக்குரிய இடங்களாம்.

11. 46. நான்கு புஜங்களுடையதும் சங்கு சக்கரம் கதை பத்மம் இவைகளுடன் கூடியதும் சாந்தமுமாகிய எனது ரூபத்தை இந்த இடங்களில் தியானம் செய்து அமைதியுடன் பூஜிக்க வேண்டும்.

---

11. 46. धिष्ण्येष्वेतेषु। —பா. பே.

इष्टापूर्तेन मामेवं यो यजेत समाहितः।
लभते मयि सद्भक्तिं मत्स्मृतिः साधुसेवया ॥ ११.४ ॥

न रोधयति मां योगो न सांख्यं धर्म उद्धव।
न स्वाध्याय-स्तप-स्त्यागो नेष्टापूर्तं न दक्षिणा ॥ १२.१ ॥

व्रतानि यज्ञश्छंदांसि तीर्थानि नियमा यमाः।
यथावरुन्धे सत्संगः सर्वसंगापहो हि माम् ॥ १२.२ ॥

सत्संगेन हि दैतेया यातुधाना मृगाः खगाः।
गन्धर्वाप्सरसो नागाः सिद्धाश्चारणगुह्यकाः ॥ १२.३ ॥

विद्याधरा मनुष्येषु वैश्याः शूद्राः स्त्रियोऽन्त्यजाः।
रजस्तमः-प्रकृतय-स्तस्मिंस्तस्मिन् युगेऽनघ।
बहवो मत्पदं प्राप्तास्त्वाष्ट्र-कायाधवादयः ॥ १२.४ ॥

---

11. 47. எவன் அடக்கத்துடன் யாகம் அன்னதானம் முதலியவற்ருல் என்னையே பூஜிக்கின்ருனே அவன் என்னிடம் சிறந்த பக்தியை யடைவான். ஸாதுக்களின் ஸேவையால் எனது நினைவு நிலைபெறுகிறது.

12. 1. உத்தவா! யோகமானது என்னை வசப்படுத்தாது. ஸாங்கியமும் தர்மமும் வசப்படுத்தா. வேத அத்தியயனமும் தவமும் தியாகமும் வசப்படுத்தா. யாக செய்தல் குளம் வெட்டுதல் முதலியனவும் தக்ஷிணை கொடுப்பதும் வசப்படுத்தா.

12. 2. பற்றை யெல்லாம் நீக்கும் ஸாதுக்களின் பற்று என்னை வசப்படுத்துவது போல் விரதங்களும் யாகமும் இரகசிய மந்திரங்களும் தீர்த்தங்களும் யம நியமங்களும் வசப்படுத்தமாட்டா.

12. 3–4. பாவமற்றவனே! தைத்தியர்கள், ராக்ஷஸர்கள், பக்ஷிகள், மிருகங்கள், கந்தர்வர்கள் அப்ஸர ஸ்திரீகள், நாகர்கள், ஸித்தர்கள், சாரணர்கள், குஹ்யகர்கள், வித்யாதரர்கள், ரஜோகுணமும் தமோகுணமும் மேலிட்டவர்கள், மனிதர்களில் வைசியர்கள், சூத்திரர்கள், ஸ்திரீகள், புலையர்கள் (அசுரர்களில்), வ்ருத்ராசுரன், பிரஹ்லாதன் முதலிய பல பேர்கள் அந்தந்த யுகத்தில் (ஸாதுக்களின் சேர்க்கையால்) என்னுடைய பதவியை யடைந்தார்கள்.

---

12. 1. ஒ. 'நாஹம் வேதைர்-ந தபஸா ந தானேன ந சேஜ்யயா'—கீ. 11. 53.

ஒ. (உபநிஷதர்த்த-முலூகலே நிபத்தம்) உபநிஷதர்த்தமான பரம்பொருள் யசோதையின் அன்புக்கு வசமாகி உரலில் கட்டிவைக்கப்பட்டது.
—ஸ்ரீகிருஷ்ணகர்ணாம்ருதம்.

12. 4. த்வாஷ்ட்ர:-வ்ருத்ர: | காயாதவ:-ப்ரஹ்லாத: |

वृषपर्वा बलि-र्बाणो मयश्चाथ विभीषणः।
सुग्रीवो हनुमान् ऋक्षो गजो गृध्रो वणिक्पथः।
व्याधः कुब्जा व्रजे गोप्यो यज्ञपत्न्य-स्तथापरे ॥ १२.६ ॥

ते नाधीतश्रुतिगणा नोपासित-महत्तमाः।
अव्रतातप्ततपसः सत्संगान्मा-मुपागताः ॥ १२.७ ॥

केवलेन हि भावेन गोप्यो गावो नगा मृगाः।
येऽन्ये मूढधियो नागाः सिद्धा मामीयु-रंजसा ॥ १२.८ ॥

यं न योगेन सांख्येन दानव्रततपोऽध्वरैः।
व्याख्या-स्वाध्याय-संन्यासैः प्राप्नुयाद् यत्नवानपि ॥ १२.९ ॥

---

12. 6. விருஷபர்வா, பலி, பாணன், மயன், விபீஷணன், சுக்ரீவன், ஹனுமான் கரடியாகிய ஜாம்பவான், யானை, கழுகாகிய ஜடாயு, தராசு பிடிப்பவன், தர்மவியாதன், குப்ஜை, ஆயர் குலத்தில் கோபிகள், யஜ்ஞபத்தினிகள், இன்னும் இது போன்ற மற்ற வர்கள் (ஸாதுக்களின் சேர்க்கையால் என்னுடைய பதவியை யடைந்தார்கள்).

12. 7. அவர்கள் (அவர்களுள் பெரும்பாலோர்) வேதங்களை அத்தியயனம் செய்தவர்களல்லர்; மகான்களை உபாசித்தவர்களல்லர்; விரதங்களை யனுஷ்டித்தவர்க ளல்லர்; தவஞ்செய்தவர்களல்லர்; ஸத்ஸங்கத்தாலேயே என்னை அடைந்தார்கள்.

12. 8. கோபிகைகளும் பசுக்களும் (யமளார்ஜுனர் முதலிய) மரங்களும், மிருகங்களும் புத்தி மழுங்கி மற்ற உயிர்களும், (காளீயன் முதலிய) நாகர்களும், சித்தர்களும், பக்தி யொன்றினாலேயே எளிதில் என்னை அடைந்தார்கள்.

12. 9. எப்படிப்பட்ட என்னை முயற்சியுடையவனாயினும், யோகத்தாலும் ஸாங்கி யத்தாலும் தானம் விரதம் தவம் யாகம் ஆகியவற்றாலும் வியாக்கியானம் அத்தியயனம் ஸந்நியாஸம் முதலியவற்றாலும் அடைய முடியாதோ (அப்படிப்பட்ட என்னை கோபிகள் முதலியோர் எளிதில் அடைந்தார்கள்).

---

12. 7. ஒ. மஹத்-ஸங்கஸ்து துர்லபோऽகம்யோऽமோகச்ச |
லப்யதேऽபி தத்க்ருபயைவ || —நாரதபக்தி ஸூத்ரம். 39. 40.

तस्मात्त्व-मुद्धवोत्सृज्य चोदनां प्रतिचोदनाम् ।
प्रवृत्तिं च निवृत्तिं च श्रोतव्यं श्रुतमेव च ॥ १२.१४ ॥

मामेकमेव शरण-मात्मानं सर्वदेहिनाम् ।
याहि सर्वात्मभावेन मया स्या-ह्यकुतो-भयः ॥ १२.१५ ॥

एतावान् योग आदिष्टो मच्छिष्यैः सनकादिभिः ।
सर्वतो मन आकृष्य मय्यद्धाऽऽवेश्यते यथा ॥ १३.१४ ॥

उद्धव उवाच—

यदा त्वं सनकादिभ्यो येन रूपेण केशव ।
योगमादिष्टवानेतद् रूपमिच्छामि वेदितुम् ॥ १३.१५

श्रीभगवानुवाच—

पुत्रा हिरण्यगर्भस्य मानसाः सनकादयः ।
पप्रच्छुः पितरं सूक्ष्मां योगस्यैकान्तिकीं गतिम् ॥ १३.१६ ॥

---

12. 14-15. உத்தவா! ஆகையால் சுருதியில் விதித்தவைகளையும் ஸ்மிருதியில் விதித்தவைகளையும் பிருவிருத்தியையும் நிவிருத்தியையும் கேட்டதையும் கேட்க வேண்டியதையும் விட்டு விட்டு எல்லா உயிர்களுக்கும் ஆத்மாவாகிய என்னை ஒருவனை யே ஸர்வஸ்வரூபி என்ற எண்ணத்துடன் சரணடைவாயாக. என்னால் எங்கும் பயமற்ற வனாக ஆவாய்.

13. 14. எல்லாவற்றினின்றும் மனதை இழுத்து என்னிடம் பிரத்யக்ஷமாக நிலை பெறச் செய்வது எங்ஙனமோ அதுவே யோகம் என்று என் சிஷ்யர்களாகிய ஸநகாதி முனிவர்களால் கூறப்பட்டுள்ளது.

உத்தவர் கூறியது—

13. 15. கேசவா! (உமது சிஷ்யர்கள் என்று கூறிய) ஸநகாதி முனிவர்களுக்கு எந்த ரூபத்துடன் எப்போது யோகத்தை உபதேசித்தீர்கள்? அந்த ரூபத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

ஸ்ரீ பகவான் கூறியது—

13. 16. பிரம்மாவின் மானஸ புத்திரர்களாகிய ஸநகாதி முனிவர்கள் யோகத்தின் ரகசியத்தையும் தனிச்சிறப்புடைய மார்க்கத்தையும் பற்றித் தந்தையிடம் கேட்டார்கள்.

---

12. 14. ஒ. ச்ருதிவிப்ரதிபன்னா தே யதா ஸ்தாஸ்யதி நிச்சலா । ஸமாதாவசலா புத்திஸ்-ததா யோகமவாப்ஸ்யஸி ॥ கீ. 2. 52.

ஒ. பலநூல்களைப் படிப்பதால் பகவத் ப்ரேமை உண்டாகிவிடுமா? பஞ்சாங்கத்தில் இவ்வளவு மழைபெய்யும் என்று குறிப்பிட்டிருக்கிறது. பஞ்சாங்கத்தைக் கசக்கிப் பிழிந்தால் ஒரு துளிஜலம் கூட வராது. — ஸ்ரீராமகிருஷ்ணர்.

ஒ. நிற்கும் உருவெல்லாம் நெடுமா லென்றுணரார்தார் கற்ற கல்வி யெல்லாம் கடை.

सनकादय ऊचुः—

गुणेष्वाविशते चेतो गुणाश्चेतसि च प्रभो ।
कथ-मन्योन्य-संत्यागो मुमुक्षो-रतितितीर्षोः ॥ १३.१७ ॥

श्रीभगवानुवाच—

एवं पृष्टो महादेवः स्वयंभू-र्भूतभावनः ।
ध्यायमानः प्रश्न-बीजं नाभ्यपद्यत कर्मधीः ॥ १३.१८ ॥

स मामचिन्तयद् देवः प्रश्न-पारतितीर्षया ।
तस्याहं हंसरूपेण सकाश-मगमं तदा ॥ १३.१९ ॥

दृष्ट्वा मां त उपव्रज्य कृत्वा पादाभिवन्दनम् ।
ब्रह्माण-मग्रतः कृत्वा पप्रच्छुः को भवानिति ॥ १३.२० ॥

इत्यहं मुनिभिः पृष्टस्तत्त्वजिज्ञासुभि-स्तदा ।
यदवोच-महं तेभ्य-स्तदुद्धव निबोध मे ॥ १३.२१ ॥

ஸநகாதி முனிவர்கள் கூறியது—

13. 17. பிரபுவே! விஷயங்களில் மனம் புகுகின்றது, மனத்தில் விஷயங்கள் புகுகின்றன. விஷயங்களைத் தாண்டிச் சென்று மோக்ஷமடைய விரும்புபவனுக்கு எவ்வாறு ஒன்றுக் கொன்று விடுதலை ஏற்படும்?

ஸ்ரீ பகவான் கூறியது—

13. 18. தேவர்களிற் சிறந்தவரும் தானே தோன்றியவரும் பிராணிகளைச் சிருஷ்டிப்பவரும் ஆயினும் இவ்வாறு கேட்கப்பட்ட பிரம்மா கர்மங்களில் சென்ற புத்தியுடையவராகிக் கேள்வியின் காரணத்தைப்பற்றி யோசித்தும் தெரிந்துகொள்ளவில்லை.

13. 19. கேள்வியின் முடிவைத் தெரிந்துகொள்ள விரும்பி பிரம்மா தேவனாகிய என்னை நினைத்தார். அப்பொழுது நான் அவரருகில் ஹம்ஸரூபத்துடன் சென்றேன்.

13. 20. என்னைப் பார்த்து ஸநகாதி முனிவர்கள் பிரம்மாவை முன்னிட்டுக் கொண்டு என்னருகில் வந்து பாதங்களில் பணிந்து "தாங்கள் யார்?" என்று கேட்டார்கள்.

13. 21. உத்தவா! தத்துவத்தை யறிய விரும்பிய அம்முனிவர்களால் இங்ஙனம் கேட்கப்பட்ட நான் அப்போது அவர்களுக்கு எதை உபதேசித்தேனோ அதை என்னிடமிருந்து தெரிந்து கொள்வாயாக.

---

13. 17. मुमुक्षोरतितीर्षया । —பா. பே.

वस्तुनो यद्यनानात्व-मात्मनः प्रश्न ईदृशः ।
कथं घटेत वो विप्रा वक्तुर्वा-मेक आश्रयः ॥ १३.२२ ॥

पंचात्मकेषु भूतेषु समानेषु च वस्तुतः ।
को भवानिति वः प्रश्नो वाचारंभो ह्यनर्थकः ॥ १३.२३ ॥

मनसा वचसा दृष्ट्या गृह्यतेऽन्यैरपीन्द्रियैः ।
अहमेव न मत्तोऽन्यदिति बुध्यध्वमंजसा ॥ १३.२४ ॥

गुणेष्वाविशते चेतो गुणाश्चेतसि च प्रजाः ।
जीवस्य देह उभयं गुणाश्चेतो मदात्मनः ॥ १३.२५ ॥

गुणेषु चाविशच्चित्त-मभीक्ष्णं गुणसेवया ।
गुणाश्च चित्तप्रभवा मद्रूप उभयं त्यजेत् ॥ १३.२६ ॥

जाग्रत् स्वप्नः सुषुप्तं च गुणतो बुद्धिवृत्तयः ।
तासां विलक्षणो जीवः साक्षित्वेन विनिश्चितः ॥ १३.२७ ॥

---

13. 22. பிராம்மணர்களே! (உங்களுடைய கேள்வி ஆத்மாவைப் பற்றியதா, தேகத்தைப் பற்றியதா?) உங்களுடைய இந்தக்கேள்வி பரமார்த்த வஸ்துவைப் பற்றியதானால் அது பலவகைப்பட்டதல்ல வாகையால் கேள்வி பொருந்தாது. பதில் சொல்லும் எனக்கும் உங்களுக்கும் ஆசிரயமான ஆத்மா ஒன்றே.

13. 23. (தேகத்தைப் பற்றியதானாலும்) பஞ்சபூதங்களால் ஆகிய உடல்கள் எல்லாம் உண்மையில் ஸமமாயிருக்கையில் 'தாங்கள் யார்' என்ற உங்களுடைய இக் கேள்வி வார்த்தை மட்டுமே யன்றி அர்த்த மில்லாதது.

13. 24. 'மனதாலும் வாக்காலும் பார்வையாலும் மற்ற இந்திரியங்களாலும் நானேதான் உணரப் படுகிறேன், எனக்கு வேறாக ஒன்றுமே இல்லை' என்று விசாரித் துத் தெளிவாகத் தெரிந்துகொள்ளுங்கள்.

13. 25. மக்களே! குணங்களில் சித்தம் புகுகிறது; சித்தத்தில் குணங்கள், புகுகின்றன. என் ஸ்வரூபனாகிய ஜீவனுக்குக் குணங்கள் சித்தம் ஆகிய இரண்டும் தேகமாகிறது.

13. 26. குணங்களை யனுபவிப்பதால் அடிக்கடி குணங்களில் சித்தம் புகுகிறது. குணங்களோ சித்தத்தில் உண்டாகியவையே. என் ஸ்வரூபனாகியவன் இரண்டையும் விடவேண்டும்.

13. 27. விழிப்பு, கனவு, உறக்கம் இம் மூன்றும் குணங்களால் புத்தியின் விருத்திக ளாகின்றன. இவ் விருத்திகளினின்று வேறுபட்ட ஜீவன் ஸாக்ஷி என நிச்சயிக்கப்பட்டுள்ளவன்.

यर्हि संसृति-बन्धोऽय-मात्मनो गुणवृत्तिदः।
मयि तुर्ये स्थितो जह्यात् त्यागस्तद्गुणचेतसाम् ॥ १३.२८ ॥

अहंकारकृतं बन्ध-मात्मनोऽर्थविपर्ययम्।
विद्वान् निर्विद्य संसारचिन्तां तुर्ये स्थित-स्त्यजेत् ॥ १३.२९ ॥

यावन्नानार्थधीः पुंसो न निवर्तेत युक्तिभिः।
जागर्त्यपि स्वपन्नज्ञः स्वप्ने जागरणं यथा ॥ १३.३० ॥

दृष्टिं ततः प्रति निवर्त्य निवृत्ततृष्ण-
स्तूष्णीं भवेन्निज-सुखानुभवो निरीहः।
संदृश्यते क्व च यदीद-मवस्तु बुद्ध्या
त्यक्तं भ्रमाय न भवेत् स्मृतिरानिपातात् ॥ १३.३५ ॥

देहं च नश्वर-मवस्थित-मुत्थितं वा
सिद्धो न पश्यति यतोऽध्यगमत् स्वरूपम्।
दैवादपेतमुत दैववशादपेतं
वासो यथा परिकृतं मदिरामदान्धः ॥ १३.३६ ॥

---

13. 28. ஜீவாத்மாவிற்குக் குணங்களிடை வியாபாரத்தை விளைக்கும் இம் மூன்றும் புத்தியால் ஏற்படும் பந்தம். துரீயனாகிய என்னிடம் நிலைபெற்று இந்த புத்தி பந்தத்தை யொழிக்க வேண்டும். அப்பொழுது குணங்களுக்கும் சித்தத்திற்கும் ஒழிவு ஏற்படும்.

13. 29. அஹங்காரத்தால் ஏற்படும் பந்தத்தை ஆத்மாவிற்குக் கேட்டை விளைப்பதென்று அறிந்து வைராக்கிய மடைந்து துரீயத்தில் நிலைபெற்று புத்தியில் உள்ள கவலையை (விஷயபோக சிந்தனையை) ஒழிக்கவேண்டும்.

13. 30. புருஷனுக்கு எதுவரை விஷயங்களில் பலவாருகத் திரியும் புத்தியானது யுக்திகளால் நிவிருத்தி யடையவில்லையோ அவன் விழித்திருந்தாலும் கனவு காண்பவனே; அவனுடைய விழிப்பானது கனவிலுள்ள விழிப்பைப் போன்றதே.

13. 35. காணப்படும் பொருள்களினின்று பார்வையைத் திருப்பி ஆசையை ஒழித்து ஆத்மாவிடம் ஆனந்தத்தை யனுபவிப்பவனாய் எதையும் வேண்டாதவனாய் மௌனமா யிருக்கவேண்டும். (கயிற்றைப் பாம்பல்ல என்று கண்ட பின்னும் சில சமயம் பாம்பின் தோற்ற மேற்படுவதுபோல்) சில சமயங்களில் உடலின் தோற்றம் ஏற்படும்; என்றாலும் அது வஸ்துவல்ல என்று விடப் பட்டதே யாகையால் மறுபடி மதிமயக்கத்தின் பொருட்டாகாது; உடல் விழும் வரை அதன் ஞாபகம் ஏற்படும்.

13. 36. எந்த தேகத்தால் தனது ஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரித்தானே அந்த அழியுந் தேகத்தைச் சித்தியடைந்த புருஷன் அது உட்கார்ந்தாலும் எழுந்தாலும் தற்செயலாக வெளியே சென்றாலும் திரும்பிவந்தாலும் மதுபானத்தின் போதையால் மதியிழந்தவன் கட்டிக்கொண்டிருக்கும் துணியைக் காணாததுபோல் காண்பதில்லை.

---

13. 36. பரிக்ருதம்—பரிஹிதம் ।

देहोऽपि दैववशगः खलु कर्म यावत्
स्वारंभकं प्रतिसमीक्षत एव सासुः
तं सप्रपंचमधिरूढ-समाधि-योगः
स्वाप्नं पुन-र्न भजते प्रतिबुद्धवस्तुः ॥ १३.३७ ॥

मयैतदुक्तं वो विप्रा गुह्यं यत् सांख्ययोगयोः ।
जानीत माऽऽगतं यज्ञं युष्मद्धर्म-विवक्षया ॥ १३.३८ ॥

अहं योगस्य सांख्यस्य सत्यर्तस्य तेजसः ।
परायणं द्विजश्रेष्ठाः श्रियः कीर्तेर्दमस्य च ॥ १३.३९ ॥

मां भजन्ति गुणाः सर्वे निर्गुणं निरपेक्षकम् ।
सुहृदं प्रियमात्मानं साम्यासंगादयोऽगुणाः ॥ १३.४० ॥

इति मे छिन्नसन्देहा मुनयः सनकादयः ।
स भाजयित्वा परया भक्त्यागृणत संस्तवैः ॥ १३.४१ ॥

तैरहं पूजितः सम्यक् संस्तुतः परमर्षिभिः ।
प्रत्येयाय स्वकं धाम पश्यतः परमेष्ठिनः ॥ १३.४२ ॥

---

13. 37. பிராரப்தபலம் உள்ளவரை பிராணனுடன் கூடியதாய் தெய்வவசமாய்ச் செல்லுவதாய் தேகம் காணப்படுகிறது. யோகமார்க்கத்தில் ஏறிச்சென்று ஸமாதியை யடைந்து பரம்பொருளிடம் விழிப்பை யடைந்தவன் மீண்டும் கனவிற்கொப்பான இந்த தேகத்தைப் பஞ்சபூதவடிவான உலகத்துடன் பற்றுக்கொண்டு நாடமாட்டான்.

13. 38. பிராம்மணர்களே! ஸாங்கியம் யோகம் ஆகியவற்றின் மர்மமாகிய இது என்னால் உங்களுக்குக் கூறப்பட்டது. உங்களுக்கு தர்மத்தை விளக்கிக் கூறும் விருப்பத்துடன் வந்த யஜ்ஞ புருஷனாகிய விஷ்ணு என்று என்னை யறிவீர்களாக,

13. 39. பிராம்மண சிரேஷ்டர்களே! நான் ஸாங்கியம், யோகம், ஸத்யம். ருதம், தேஜஸ், ஸ்ரீ, கீர்த்தி, அடக்கம் ஆகியவற்றின் உறைவிடம்.

13. 40. ஸமத்துவம் பற்றின்மை முதலிய குணமற்ற குணங்கள் நிர்க்குணனும் வேண்டுதல் வேண்டாமை யற்றவனும் நண்பனும் பிரியனும் ஆத்மாவுமாகிய என்னை யடைகின்றன.

13. 41. ஸநகாதி முனிவர்கள் என்னிடமிருந்து இவ்வாறு சந்தேகம் தீர்ந்தவர்களாகி என்னைக் கொண்டாடிப் பரமபக்தியுடன் ஸ்தோத்திரங்களால் போற்றினார்கள்.

13. 42. ரிஷிசிரேஷ்டர்களாகிய அவர்களால் நன்கு புகழ்ந்து பூஜிக்கப் பெற்ற நான் பிரம்மா பார்த்துக் கொண்டிருக்க என்னிடத்திற்குத் திரும்பினேன்.

इति श्रीमद्भागवते महापुराणे अष्टादश-
साहस्रिकायां संहितायां पारमहंस्यां
श्रीवैयासिक्यां हयग्रीवब्रह्म-
विद्यायां एकादशस्कन्धे
हंसाख्यानं नाम
त्रयोदशोऽध्यायः ॥

இங்ஙனம் பரமஹம்ஸரான
வியாஸபுத்திரர் உபதேசித்ததும் பதினெண்ணுயிரம்
சுலோகங்கள் அடங்கியதும் ஹயக்கிரீவப்
பிரம்மவித்தை யெனப்படுவதுமான
ஸ்ரீமத் பாகவத மகாபுராணத்தில்
பதினொராவது ஸ்கந்தத்தில்
ஹம்ஸாக்யானம்
எனப் பெயர்பெற்ற
பதின்மூன்ருவது
அத்தியாயம்
முற்றும்.
ஆருவதுநாள் கதை முற்றும்.

ஸ்ரீமத்பாகவத ஸாரம்

ஏழாவது நாள் கதை (11.14—12.13)

(உத்தவகீதையில் தியானயோக வர்ணனம் முதல் ஸ்ரீமத் பாகவத மகத்துவம் முடிய)

34. துவாரகா லீலை — (6) தொடர்ச்சி:— உத்தவகீதை — தியான மங்களம் ஸித்திகளும் விபூதிகளும் — வர்ணாசிரம தர்மம்— யோகமார்க்கம் — பிக்ஷுகீதை—சரம உபதேசம்— பகவதாரோஹணம். அத். 11. 14—11. 31.

பன்னிரண்டாவது ஸ்கந்தம்

35. உபஸம்ஹாரம்: — கல்கி அவதாரமும் யுகதர்மமும் — பிரளய வர்ணனம் — பரமார்த்தோபதேசம் — பரீக்ஷித்தின் தேஹத்தியாகம் — வேத விபாகமும் புராண லக்ஷணமும் — மார்க்கண்டேயர் மாயா தரிசனம்—பகவத் ஸ்வரூப வர்ணனம்—புராணங்களும் ஸ்ரீமத் பாகவதத்தின் மஹத்துவமும். அத். 12. 1—12. 13

———

॥ श्रीमद्भागवतसारः ॥

॥ द्वारकालीला ॥ ६ ॥ ३४ ॥

उद्धवगीता—ध्यानमंगलम् ॥

उद्धव उवाच—

वदन्ति कृष्ण श्रेयांसि बहूनि ब्रह्मवादिनः ।
तेषां विकल्प-प्राधान्य-मुताहो एक-मुख्यता ॥ १४.१ ॥

श्रीभगवानुवाच—

कालेन नष्टा प्रलये वाणीयं वेदसंज्ञिता ।
मयाऽऽदौ ब्रह्मणे प्रोक्ता धर्मो यस्यां मदात्मकः ॥ १४.३ ॥

तेन प्रोक्ता स्वपुत्राय मनवे पूर्वजाय सा ।
ततो भृग्वादयोऽगृह्णन् सप्त ब्रह्ममहर्षयः ।
तेभ्यो मुनिभ्यस्तत्पुत्रा देवदानव-गुह्यकाः ॥ १४.४ ॥

ஸ்ரீமத் பாகவதஸாரம்

34. துவாரகா லீலை (6) தொடர்ச்சி

ஏழாவது நாள் கதை

உத்தவகீதை (தொடர்ச்சி) தியானமங்களம்

உத்தவர் கூறியது—

14. 1. கிருஷ்ணு! வேதவாதிகள் உயர்நலனை எய்த ஸாதனங்கள் பல என்க் கூறுகிருர்கள். அவைகளுள் (பின் பற்ற) வேறுபட்ட பலவும் சிறந்தனவா அல்லது ஒன்றே முக்கியமா ?

ஸ்ரீ பகவான் கூறியது—

14. 3. ஆதியில் பிரம்மாவுக்கு என்னிடமே மனதைச் செலுத்தும் (பக்தியோக மாகிய) எந்த தர்மமானது உபதேசிக்கப்பட்டதோ அந்த வேதவாக்கானது பிரளய காலத்தில் மறைந்துபோயிற்று.

14. 4. பிரம்மாவால் அது தனது முதல் குமாரனுகிய (ஸ்வாயம்புவ) மனுவுக்கு (மீண்டும்) உபதேசிக்கப்பட்டது. அவரிடமிருந்து பின்னர் பிருகு முதலிய ஏழு பிரம்ம ரிஷிகள் உபதேசம் பெற்றனர். அம்முனிவர்களிடமிருந்து அவர்களுடைய புத்திரர் களான தேவர்களும் தானவர்களும் குஹ்யகர்களும் (மனுஷ்யர்களும் மற்றவர்களும் உபதேசம் பெற்ருர்கள்.)

---

14. 3. ஏழு பிரம்ம ரிஷிகள் :—பிருகு, மரீசி, அத்ரி, அங்கிரஸ், புலஸ்தியர், புலஹர், க்ரது.

बह्व्यस्तेषां प्रकृतयो रजस्सत्त्वतमो-भुवः ।
याभि-र्भूतानि भिद्यन्ते भूतानां मतय-स्तथा ।
यथाप्रकृति सर्वेषां चित्रा वाचः स्रवन्ति हि ॥ १४.७ ॥

एवं प्रकृति-वैचित्र्याद् भिद्यन्ते मतयो नृणाम् ।
पारंपर्येण केषांचित् पाखण्ड-मतयोऽपरे ॥ १४.८ ॥

मन्माया-मोहित-धियः पुरुषाः पुरुषर्षभ ।
श्रेयो वदन्त्यनेकान्तं यथाकर्म यथारुचि ॥ १४.९ ॥

आद्यन्तवन्त एवैषां लोकाः कर्मविनिर्मिताः ।
दुःखोदर्कास्तमोनिष्ठाः क्षुद्रानन्दाः शुचार्पिताः ॥ १४.११ ॥

मय्यर्पितात्मनः सभ्य निरपेक्षस्य सर्वतः ।
मयाऽऽत्मना सुखं यत्तत् कुतः स्याद् विषयात्मनाम् ॥ १४.१२ ॥

---

14. 7. ஸத்துவம் ரஜஸ் தமஸ் ஆகிய குணங்களை மேற்கொண்டு பிறந்த இவர்களுடைய இயற்கை குணங்கள் பலவாறுனவை. இவைகளால் உயிர்கள் வேறுபடுகின்றன. உயிர்களின் மதிகளும் அவ்வாறே (வேறுபடுகின்றன). எல்லோருக்கும் இயற்கை எப்படியோ அப்படியே விசித்திரமான வாக்குகளும் (வேதவாதங்களும்) பெருகுகின்றன.

14. 8. இவ்விதம் இயற்கையின் வேறுபாட்டால் சில மனிதர்களின் மதிகள் பரம்பரையாக பேதமடைகின்றன. இன்னும் சிலர் (வேதத்தை மறுக்கும்) பாஷண்ட புத்தியுடைவர்களாகவும் ஆகின்றனர்.

14. 9. புருஷசிரேஷ்டனே! என் மாயையால் மதிமயங்கிய புருஷர்கள் தொழிலுக்கும் விருப்பத்துக்குமிணங்க உயர் நலனைப் பலவிதமாகக் கூறுகிறார்கள்.

14. 11. இவர்களுக்குள்ள உலகங்கள் ஆதியும் அந்தமும் உடையவைகள்; கர்மங்களால் ஏற்பட்டவைகள்; முடிவில் துன்பம் தருபவைகள்; இருள் சூழ்ந்தவைகள்; அற்ப சுக முடையவைகள்; துக்கம் மிகுந்தவைகள்.

14. 12. சபைக்குரியவனே! எங்கும் எதையும் வேண்டாதவனும் என்னிடம் மனதை அர்ப்பணம் செய்தவனும் ஆகிய புருஷனுக்கு நானே ஆத்மாவாகப் பிரகாசிப்பதால் ஏற்படும் சுகம் எதுவோ அது விஷயங்களில் மனம் செலுத்தியவர்களுக்கு எங்ஙனம் ஏற்படும்?

---

14. 11. शुचार्दिताः ।

अकिंचनस्य दान्तस्य शान्तस्य समचेतसः।
मया सन्तुष्टमनसः सर्वाः सुखमया दिशः ॥ १४.१३ ॥

न पारमेष्ठ्यं न महेन्द्रधिष्ण्यं न सार्वभौमं न रसाधिपत्यम्।
न योगसिद्धी-रपुनर्भवं वा मय्यर्पितात्मेच्छति मद् विनान्यत्
॥ १४.१४ ॥

न तथा मे प्रियतम आत्मयोनि-र्न शंकरः।
न च संकर्षणो न श्री-र्नैवात्मा च यथा भवान् ॥ १४.१५ ॥

निरपेक्षं मुनिं शान्तं निर्वैरं समदर्शनम्।
अनुव्रजाम्यहं नित्यं पूयेयेत्यंघ्रिरेणुभिः ॥ १४.१६ ॥

निष्किंचना मय्यनुरक्तचेतसः शान्ता महान्तोऽखिल-जीववत्सलाः।
कामै-रनालब्ध-धियो जुषन्ति यत् तन्नैरपेक्ष्यं न विदुः सुखं मम
॥ १४.१७ ॥

---

14. 13. உடைமையற்றவனும் கர்மேந்திரியங்களும் ஞானேந்திரியங்களும் அடங்கியவனும் ஸமசித்தனும் என்னிடம் ஸந்தோஷிக்கும் மனமுடையவனுமாகிய புருஷனுக்குத் திசைகளெல்லாம் சுகமயமாகின்றன.

14. 4. என்னிடம் மனதை அர்ப்பணம் செய்தவன் பிரம்மாவின் பதவியையோ இந்திரப் பதவியையோ பூலோகத்தை யாளும் பதவியையோ, பாதாளத்தின் ஆட்சியையோ விரும்பமாட்டான். யோகசித்திகளையும் விரும்பமாட்டான். மோக்ஷத்தையும் விரும்பமாட்டான். என்னைத் தவிர மற்ற எதையும் விரும்பமாட்டான்.

14. 15. நீர் எனக்குப் பிரியராவதுபோல் பிரம்மாவோ, சங்கரரோ, ஸங்கர்ஷணரோ பிரியமுள்ளவர்களல்லர். ஸ்ரீதேவியும் பிரியமுள்ளவளல்லள்; என் மூர்த்தியும் பிரிய முள்ளதல்ல.

14. 16. எதையும் வேண்டாதவனும் சாந்தனும் வைரமில்லாதவனும் சமமான நோக்கமுள்ளவனும் முனியுமாகிய புருஷனை அவனுடைய பாததூளிகளால் (உலகங்களை) பரிசுத்தம் செய்யலாமென்று நான் எப்பொழுதும் அனுசரிக்கிறேன்.

14. 17. உடைமை யற்றவர்களும் என்னிடம் அன்பு பூண்டவர்களும் சாந்தர்களும் உயிர்களனைத்திலும் வாத்ஸல்யமுள்ளவர்களும், காமவசப்படாத புத்தியுடையவர்களும் என் பக்தர்களுமான மகான்கள் அபேக்ஷையின்மையால் அடையும் சுகம் எதுவோ அதை (மற்றவர்கள்) அறியார்கள்.

---

14. 13. शुद्धस्य समचेतसः। 14. 16. समदर्शिनम्।

बाध्यमानोऽपि मद्भक्तो विषयै-रजितेन्द्रियः।
प्रायः प्रगल्भया भक्त्या विषयै-र्नाभिभूयते ॥ १४.१८ ॥

यथाग्निना हेम मलं जहाति ध्मातं पुनः स्वं भजते च रूपम्।
आत्मा च कर्मानुशयं विधूय मद्भक्तियोगेन भजत्यथो माम् ॥ १४.२५ ॥

विषयान् ध्यायत-श्चित्तं विषयेषु विषज्जते।
मामनुस्मरत-श्चित्तं मय्येव प्रविलीयते ॥ १४.२७ ॥

स्त्रीणां स्त्रीसंगिनां संगं त्यक्त्वा दूरत आत्मवान्।
क्षेमे विविक्त आसीन-श्चिन्तयेन्मा-मतन्द्रितः ॥ १४.२९ ॥

न तथास्य भवेत् क्लेशो बन्धश्चान्य-प्रसंगतः।
योषित्-संगाद् यथा पुंसो यथा तत्संगि-संगतः ॥ १४.३० ॥

उद्धव उवाच—

यथा त्वामरविन्दाक्ष यादृशं वा यदात्मकम्।
ध्यायेन्मुमुक्षु-रेतन्मे ध्यानं त्वं वक्तुमर्हसि ॥ १४.३१ ॥

---

14. 18. என்னுடைய பக்தன் இந்திரியங்களை ஜயிக்காதவனாயினும் விஷயங்களால் பாதிக்கப்பட்டவனாயினும் திடமான பக்தியின் பலத்தால் பெரும்பாலும் விஷயங்களிடமிருந்து அவமதிப்பை யடையமாட்டான்.

14. 25. தீயில் புடம் போடப்பட்ட பொன் அழுக்கு நீங்கி இயற்கையான (பிரகாச) ரூபத்தை யடைவதுபோல் ஆத்மாவானது என்னிடம் பக்தியோகத்தால் கர்மவாஸனையை விட்டு என் ஸ்வரூபத்தை யடைகிறது.

14. 27. விஷயங்களைத் தியானிக்கும் புருஷனுடைய மனம் விஷயங்களில் பற்றுத லடைகிறது. என்னை நினைப்பவனுடைய மனம் என்னிடம் லயிக்கிறது.

14. 29. ஸ்திரீகளுடைய சேர்க்கையையும் ஸ்திரீகளுடன் சேருபவர்களின் சேர்க்கையையும் வெகுதூரத்தில் விலக்கி தீரனாகவும் ஸாவதானனாகவும் பயமற்ற தனியிடத்தி லிருந்துகொண்டு என்னை தியானம் செய்யவேண்டும்.

14. 30. புருஷனுக்கு ஸ்திரீகளின் சேர்க்கையாலும் ஸ்திரீகளுடன் சேருபவர்களின் சேர்க்கையாலும் துன்பமும் பந்தமும் உண்டாவதுபோல் மற்ற எவ்வகையிலும் உண்டாகாது.

உத்தவர் கூறியது—

14. 31. தாமரைக்கண்ணா! மோக்ஷத்தை விரும்பியவன் உம்மை எவ்விதம் எந்த வடிவத்தில் தியானம் செய்யவேண்டும்? இந்த தியான முறையை நீர் எனக்கு உபதேசித் தருளல் வேண்டும்.

श्रीभगवानुवाच—

सम आसन आसीनः समकायो यथासुखम् ।
हस्तावुत्संग आधाय स्वनासाग्र-कृतेक्षणः ॥ १४.३२ ॥

प्राणस्य शोधयेन्मार्गं पूरकुंभक-रेचकैः ।
विपर्ययेनापि शनै-रभ्यसे-न्निर्जितेन्द्रियः ॥ १४.३३ ॥

हृद्यविच्छिन्नमोंकारं घण्टानादं बिसोर्णवत् ।
प्राणेनोदीर्य तत्राथ पुनः संवेशयेत् स्वरम् ॥ १४.३४ ॥

एवं प्रणवसंयुक्तं प्राणमेव समभ्यसेत् ।
दशकृत्व त्रिषवणं मासादर्वाग् जितानिलः ॥ १४.३५ ॥

हृत्पुण्डरीक-मन्तःस्थ-मूर्ध्वनाल-मधोमुखम् ।
ध्यात्वोर्ध्वमुख-मुन्निद्र-मष्टपत्रं सकर्णिकम् ॥ १४.३६ ॥

कर्णिकायां न्यसेत् सूर्य-सोमाग्नी-नुत्तरोत्तरम् ।
वह्निमध्ये स्मरेद् रूपं ममैतद् ध्यानमंगलम् ॥ १४.३७ ॥

ஸ்ரீ பகவான் கூறியது—

14. 32-33. உடல் நிமிர்ந்து ஸமமான ஆஸனத்தில் சுகமாக அமர்ந்து கைகளை மடிமீது வைத்துத் தன் மூக்கு நுனியில் பார்வையை வைத்துப் பூரகம் கும்பகம் ரேசகம் இவைகளால் பிராணனுடைய மார்க்கத்தைச் சோதிக்க வேண்டும்; ரேசகம் கும்பகம் பூரகம் என்ற எதிரிடைக் கிரமத்திலும் மெதுவாக அப்பியசிக்க வேண்டும். இந்திரிய ஜயமுடையவனாக இருக்கவேண்டும்.

14. 34. மணியின் நாதம்போல் இடைவிடாது இருதயத்தில் விளங்குவதும் தாமரை நூல்போல் மெல்லியதுமான ஓங்காரத்தைப் பிராணனால் மேலே (ஸஹஸ்ராரம் வரை) கொண்டு சென்று அங்கே ஓங்காரத்வனியை நிலைநாட்டவேண்டும்.

14.. 35 இவ்விதம் பிரணவத்துடன் பிராணாயாமத்தை மூன்று காலத்திலும் பத்துத் தடவை அப்பியாஸம் செய்வானாயின் ஒரு மாதத்திற்குள் வாயுவை ஜயித்தவனாவான்.

14. 36-37. மேலே தண்டும் கீழே முகமும் உடையதாய் முகிழாய் (வாழைப்பூப் போல்) எட்டு இதழ்களுடனும் கர்ணிகையுடனும் கூடியதாய் உடலினுள் ளிருக்கும் இருதயமாகிய தாமரையை மேல் நோக்கி யிருப்பதாய்ப் பாவித்து அதன் கர்ணிகையில் சூரியனையும் சந்திரனையும் அக்கினியையும் ஒன்றன் மேலொன்றாகத் தியானம் செய்ய வேண்டும். அக்கினியின் நடுவில் என்னுடைய இந்த தியானமங்கள ரூபத்தை ஸ்மரிக்க வேண்டும்.

14. 33. ஓ. இடயா பூரயேத் வாயும் த்யஜேத் பிங்களயா புனः ।
பிங்களா—பூரிதம் வாயும் இடயா ச பரித்யஜேத் ॥

14. 34. ஓ. பிராணாயாமம் ' ஸகர்ப்பம், அகர்ப்பம் ' என்று இருவகை. பிரணவத்துடன் செய்யும் ஸகர்ப்பப் பிராணாயாமம் சிறந்ததாகையால் அது இங்கு கூறப்படுகிறது.

समं प्रशान्तं सुमुखं दीर्घचारु-चतुर्भुजम् ।
सुचारु-सुन्दरग्रीवं सुकपोलं शुचिस्मितम् ॥ १४.३८ ॥

समान-कर्ण-विन्यस्त-स्फुरन्मकर-कुण्डलम् ।
हेमांबरं घनश्यामं श्रीवत्स-श्रीनिकेतनम् ॥ १४.३९ ॥

शंख-चक्र-गदा-पद्म-वनमाला-विभूषितम् ।
नूपुरै-र्विलसत्पादं कौस्तुभ-प्रभया युतम् ॥ १४.४० ॥

द्युमत्किरीटकटक-कटिसूत्रांगदायुतम् ।
सर्वांग-सुन्दरं हृद्यं प्रसाद-सुमुखेक्षणम् ।
सुकुमार-मभिध्यायेत् सर्वांगेषु मनो दधत् ॥ १४.४१ ॥

इन्द्रियाणीन्द्रियार्थेभ्यो मनसाऽऽकृष्य तन्मनः ।
बुद्ध्या सारथिना धीरः प्रणयेन्मयि सर्वतः ॥ १४.४२ ॥

---

14. 38. ஸமமானதும் மிகவும் சாந்தமானதும் ஸுமுகமானதும் நீண்டு அழகிய நான்கு புஜங்களை யுடையதும், மனதுக் கினியதும், அழகிய கழுத்தும் அழகிய கன்னங்களும் உடையதும் பரிசுத்தமான புன்முறுவலுடையதும்;

14. 39. ஸமமான செவிகளில் பொருந்திப் பிரகாசிக்கும் மகரகுண்டலங்களுடன் கூடியதும், பொன்னுடை யணிந்ததும், மேகசியாமள வர்ணமுடையதும், ஸ்ரீவத்ஸம் எனும் மருவுக்கும் ஸ்ரீதேவிக்கும் இருப்பிடமானதும்;

14. 40. சங்கம், சக்கரம், கதை, பத்மம், வனமாலை இவைகளால் அலங்கரிக்கப் பெற்றதும், தண்டைகளுடன் விளங்கும் பாதங்களை யுடையதும், கௌஸ்துப மணியின் ஒளியுடன் கூடியதும்;

14. 41. பிரகாசம் பொருந்திய கிரீடம், கடகம், மேகலை, தோள்வளை ஆகியவற்றை யுடையதும், எல்லா அவயவங்களும் அழகியதும், மனதைக் கவர்வதும், அனுக்கிரஹம் செய்யும் அழகிய முகமும் கண்களு முடையதும், இளமை பொலிவதுமான என்னுடைய இந்த ரூபத்தை எல்லா அவயவங்களிலும் மனதைச் செலுத்தித் தியானம் செய்யவேண்டும்.

14. 42. தீரனாகிய புருஷன் இந்திரியங்களை எல்லா விஷயங்களினின்றும் மனதால் இழுத்து புத்தியின் உதவியால் அந்த மனதை அவயவங்க ளனைத்துடன் கூடிய என்னிடம் சேர்க்கவேண்டும்.

---

14. 38. दीर्घबाहुं चतुर्भुजम् ।

तत् सर्वव्यापकं चित्त-माकृष्यैकत्र धारयेत्।
नान्यानि चिन्तयेद्भूयः सुस्मितं भावयेन्मुखम् ॥ १४.४३ ॥

तत्र लब्धपदं चित्त-माकृष्य व्योम्नि धारयेत्।
तच्च त्यक्त्वा मदारोहे न किंचिदपि चिन्तयेत् ॥ १४.४४ ॥

एवं समाहितमति-र्मामेवात्मान-मात्मनि।
विचष्टे मयि सर्वात्मन् ज्योति-र्ज्योतिषि संयुतम् ॥ १४.४५ ॥

ध्यानेनेत्थं सुतीव्रेण युंजतो योगिनो मनः।
संयास्यत्याशु निर्वाणं द्रव्यज्ञान-क्रियाभ्रमः ॥ १४.४६ ॥

जितेन्द्रियस्य युक्तस्य जितश्वासस्य योगिनः।
मयि धारयतश्चेत उपतिष्ठन्ति सिद्धयः ॥ १५.१ ॥

---

14. 43. எங்கும் பரந்து நிற்கும் அந்தச் சித்தத்தை இழுத்து ஒரே அவயவத்தில் தாரணை செய்யவேண்டும். மீண்டும் மற்ற அவயவங்களை நினைக்கக் கூடாது. அப்படி தாரணை செய்யவேண்டியது புன் முறுவல் பூத்த முகமண்டலத்தையே.

14. 44. முகத்தில் நிலைபெற்ற சித்தத்தை இழுத்து ஆகாயத்தில் தாரணை செய்ய வேண்டும். பின்பு (சுத்தப் பிரம்மமாகிய) என்னிடம் நிலைபெற்று எதையும் நினைக்கக்கூடாது.

14. 45. இவ்விதம் நிலைபெற்ற புத்தியுடைய புருஷன் தன்னிடம் என்னையும் ஸர்வஸ்வரூபியான என்னிடம் தன்னையும் ஒளியில் ஒளி கலந்தாற்போல் பார்ப்பான்.

14. 46. இவ்வாறு மிகவும் தீவிரமான தியானத்தால் மனதை (ஆத்மாவிடம்) சேர்க்கும் யோகிக்குப் பார்க்கப்படும் பொருள், பார்ப்பவன் என்ற அறிவு, பார்க்கும் செயல், என்ற வேற்றுமை மயக்கம் விரைவில் ஒழிவடைகிறது.

15. 1. இந்திரியங்களை ஜயித்தவனும் சுவாஸத்தை ஜயித்தவனும் என்னிடம் மனதை தாரணை செய்தவனுமாகிய யோகிக்குச் சித்திகள் உண்டாகின்றன.

---

15. 1. (ஏவம் மனோ யுஞ்ஜதோ யோகினோऽந்தராவிர்ப்பவந்த்ய: ஸித்தயோऽப்-யந்தராய-ப்ராயா-ஏவ அதஸ்தா: பரிஹ்ருத்ய பரமேச்வர-பர ஏவ பவேதிதி வக்தும் ஸித்தீராஹ) இவ்வாறு மனதை யடக்கும் யோகிக்குத் தனக்குள் தானகவே ஸித்திகள் உண்டாகின்றன. எனினும் அவை யோகத்திற்குத் தடைகளாகையால் அவைகளை விடுத்துப் பரமேசுவரனிடமே மனதை நிறுத்த வேண்டும் என்று விளக்கவே ஸித்திகளைப்பற்றிக் கூறுகிறார்.

—ஸ்ரீதரர்.

सिद्धयोऽष्टादश प्रोक्ता धारणा योग-पारगैः।
तासा-मष्टौ मत्प्रधाना दशैव गुणहेतवः ॥ १५.३ ॥

अणिमा महिमा मूर्ते-र्लघिमा प्राप्तिरिन्द्रियैः।
प्राकाम्यं श्रुतदृष्टेषु शक्तिप्रेरण-मीशिता ॥ १५.४ ॥

गुणेष्वसंगो वशिता यत्कामस्तदवस्यति।
एता मे सिद्धयः सौम्य अष्टावौत्पत्तिका मताः ॥ १५.५ ॥

अनूर्मिमत्त्वं देहेऽस्मिन् दूरश्रवण-दर्शनम्।
मनोजवः कामरूपं परकाय-प्रवेशनम् ॥ १५.६ ॥

स्वच्छन्दमृत्यु-र्देवानां सहक्रीडानुदर्शनम्।
यथासंकल्पसंसिद्धि-राज्ञाऽप्रतिहता गतिः ॥ १५.७ ॥

---

15. 3. யோகத்தின் கரைகண்டவர்களால் சித்திகள் பதினெட்டு என்றும் அவ்வாறே தாரணைகள் என்றும் கூறுகிறார்கள். அவைகளில் எட்டு என்னை முக்கியமாகக் கொண்டவை, பத்து குணங்களைக் காரணங்களாகக் கொண்டவை.

15. 4. உடல் சிறுத்தல், பெருத்தல், கனம் குறைதல் (அணிமா, மஹிமா, லகிமா என்ற இம்மூன்று சித்திகள்; (எல்லாப் பிராணிகளின்) இந்திரியங்களுடன் கூடி நிற்ற லாகிய பிராப்தி; கேட்கப்படும் உலகிலும் பார்க்கப்படும் உலகிலும் மறைந்துள்ள விஷயங்களை அறியும் சக்தியாகிய பிராகாம்யம்; மாயையை ஏவும் திறமையாகிய ஈசித்துவம் ;

15. 5. (குணங்களின் வசமாகாமல் அவற்றைத் தன் வசமாக்கி) குணங்களில் பற்றற்றிருக்கும் வசித்துவம்; விரும்பியதை எய்தும் சித்தி எனச் சித்தம் அழகியவனே, எட்டு சித்திகளும் (என்னுடைய தியானத்தால்) இயற்கையாகவே ஏற்படுபவைகள்.

15. 6-7. (குணங்களைக் காரணமாகக் கொண்ட பத்து சித்திகள்) இந்த தேகத்தில் பசிதாக மில்லாம லிருப்பது, தூரத்தில் நிகழ்வதைப் பார்ப்பது, கேட்பது, மனோ வேகத்தில் செல்லுதல், விரும்பிய வடிவத்தை எடுத்துக் கொள்ளுதல், பிறர் தேகத்தில் புகுதல், விரும்பியபோது மரண மடைதல், தேவர்கள் கூடி விளையாடுதலை உடனிருந்து பார்த்தல், எண்ணியதை எண்ணியவாறெய்துதல், தடைபடாமற்செல்லும் கட்டளை.

---

15. 3. **தாரணா:**—தாரணாச்ச அஷ்டாதசேத்யனுஷங்க: ।
மத்ப்ரதானா:—ஸ்வபாவத: அஹமேவ ஆச்ரயோ யாஸாம் தா: ।
குணஹேதவ:—ஸத்வோத்கர்ஷ-ஹேதுகா: ।

15, 7. **அப்ரதிஹதா கதி:**—ஆஸமந்தாத்கதிர்யஸ்யாஸ்-ஸா ஆஜ்ஞா ।

त्रिकालज्ञत्व-मद्वन्द्वं परचित्ताद्यभिज्ञता।
अग्न्यर्काम्बु-विषादीनां प्रतिष्टंभोऽपराजयः।
एताश्चोद्देशतः प्रोक्ता योगधारणसिद्धयः ॥ १५.८ ॥

यथा संकल्पयेद् बुद्धया यदा वा मत्परः पुमान्।
मयि सत्ये मनो युंजंस्तथा तत् समुपाश्नुते ॥ १५.२६ ॥

यो वै मद्भाव-मापन्न ईशितु-र्वशितुः पुमान्।
कुतश्चिन्न विहन्येत तस्य चाज्ञा यथा मम ॥ १५.२७ ॥

मद्भक्त्या शुद्धसत्त्वस्य योगिनो धारणाविदः।
तस्य त्रैकालिकी बुद्धि-र्जन्ममृत्यूपबृंहिता ॥ १५.२८ ॥

अग्न्यादिभि-र्न हन्येत मुनेर्योगमयं वपुः।
मद्योगश्रान्तचित्तस्य यादसामुदकं यथा ॥ १५.२९ ॥

---

15. 8. மூன்று காலங்களையும் அறியுந் திறமை, குளிர் வெப்பம் முதலிய இரட்டைகளின் ஐயம், பிறர் மனம் முதலியவற்றை அறிதல், அக்கினி சூரியன் ஜலம் விஷம் முதலியவற்றைக் கட்டுதல், பிறரால் ஜயிக்கப்படாமை ஆகிய இவையெல்லாம் யோக தாரணையால் ஏற்படும் மற்ற சித்திகள். இவை உத்தேசமாகக் கூறப்பட்டன.

15. 26. என்னைவிட எதையும் மேலாகக் கருதாத யோகி ஸத்தியஸ்வரூபியான என்னிடம் மனதை நிறுத்தி எந்த ஸமயத்தில் எவ்வாறு எண்ணுகிறானோ அதை அவ்வாறே அடைகிறான்.

15. 27. அனைத்தையும் ஆள்பவனும் அனைத்தையும் வசமாகக்கொண்டவனுமான என்னுடைய ஸ்வபாவத்தை எந்தப் புருஷன் அடைந்தவனோ அவனுடைய கட்டளை என் கட்டளைபோல் எங்கும் வீணாகாது.

15. 28. என்னிடம் பக்தியால் பரிசுத்தமான மனமுடையவனும் தாரணைகளையறிந்தவனுமான அந்த யோகிக்குப் பிறப்பும் இறப்பும் அடங்கலாக மூன்று காலத்தையும் வியாபிக்கும் சித்தி உண்டாகிறது.

15. 29. என்னைச் சார்ந்த யோகத்தில் பாடுபட்டுப் பழகிய சித்தமுடைய முனிவனுக்கு அவனுடைய யோகமயமான தேகம் அக்கினி முதலியவைகளால் அழிவுறாது, ஜலஜந்துக்களுக்கு ஜலம் கெடுதி செய்யாதவாறு.

---

15. 26. (யதா வா மத்பரோ மயி விச்வாஸவான் பவதி ததா ததனுரூபம் ஸர்வம் ப்ராப்னோதீத்யர்த்த: । கிம் குர்வன் ஸத்யே ஸத்ய-ஸங்கல்பே மயி மனோ யுஞ்ஜன்) என்னிடம் நம்பிக்கை யுள்ளவன் எங்ஙனம் நினைக்கிறானோ அதற்குத் தக்கபடி எல்லாவற்றையுமடைவான்; எதைச் செய்வதால் என்றால், ஸத்யஸங்கல்பனான என்னிடம் மனதை நிலை நிறுத்துவதால்.
—ஸ்ரீதரர்.

---

15. 27. यो मद्भावमनुप्राप्त। न कुतश्चिद्विपद्येत।
15. 28. शुद्धचित्तस्य।

मद्विभूती-रभिध्यायन् श्रीवत्साक्ष-विभूषिताः ।
ध्वजातपत्रव्यजनैः स भवेदपराजितः ॥ १५.३० ॥

उपासकस्य मामेवं योगधारणया मुनेः ।
मद्धारणां धारयतः का सा सिद्धिः सुदुर्लभा ॥ १५.३२ ॥

अन्तरायान् वदन्त्येतान् युंजतो योगमुत्तमम् ।
मया संपद्यमानस्य कालक्षपण-हेतवः ॥ १५.३३ ॥

जन्मौषधि-तपो-मन्त्रै-र्यावतीरिह सिद्धयः ।
योगेनाप्नोति ताः सर्वा नान्यै-र्योगगतिं व्रजेत् ॥ १५.३४ ॥

सर्वासामपि सिद्धीनां हेतुः पतिरहं प्रभुः ।
अहं योगस्य सांख्यस्य धर्मस्य ब्रह्मवादिनाम् ॥ १५.३५ ॥

अहमात्माऽऽन्तरो बाह्योऽनावृतः सर्वदेहिनाम् ।
यथा भूतानि भूतेषु बहिरन्तः स्वयं तथा ॥ १५.३६ ॥

15. 30. ஸ்ரீவத்ஸம் முதலியவற்றால் அலங்கரிக்கப் பெற்ற என்னுடைய வடிவங்களைக் கொடி குடை விசிறி முதலியவற்றுடன் தியானிக்கும் யோகி பிறரால் ஜயிக்கப் படாதவனாவான்.

15. 32. இந்திரியங்களை ஜயித்து அடங்கியவனும் மூச்சையும் மனதையும் ஜயித்தவனும் என்னிடம் தாரணையை நிலையாகக் கொண்டவனுமான முனிக்கு எந்த சித்திதான் அடைதற் கரிது?

15. 33. (ஆனால்) என்னை யடைய விரும்பி உத்தம யோகத்தைக் கைக்கொண்டவனுக்கு இவைகளை இடையூறுகளாகவே கூறுகிறார்கள். இவை வீண்காலப் போக்குக்கே காரணமாகின்றன.

15. 34. பிறப்பாலும், மூலிகைகளாலும், தவத்தாலும், மந்திரத்தாலும் ஏற்படும் சித்திகள் எவையோ அவையனைத்தையும் ஒருவன் (என்னிடம்) யோகத்தால் அடைவான்; மற்றவைகளால் அடையமாட்டான்; ஆகையால் (மற்ற) யோகமார்க்கங்களை (என் பக்தன்) விடவேண்டும்.

15. 35. சித்திகளனைத்திற்கும் வேதவாதிகளுடைய தர்மத்திற்கும் ஸாங்கியத்திற்கும் யோகத்திற்கும் அனைத்திற்கும் காரணமா யிருப்பவனும் ஆள்பவனும் அளிப்பவனும் நானே.

15. 36. (பிருதிவி அப்பு தேயு வாயு என்ற) பொருள்களில் சூக்ஷ்மமான மகாபூதங்கள் உள்ளும் வெளியும் வியாபித்திருப்பது போல் உடல் படைத்தோரின் ஆத்மாவாகிய நான் உள்ளும் வெளியும் ஆவரண மில்லாமல் வியாபித்திருக்கிறேன்.

15. 30. श्रीवत्सादि ।

उद्धव उवाच—

याः काश्च भूमौ दिवि वै रसायां विभूतयो दिक्षु महाविभूते।
ता मह्यमाख्या-ह्यनुभावितास्ते नमामि ते तीर्थपदांघ्रिपद्मम् ॥ १६.५ ॥

श्रीभगवानुवाच—

एवमेतदहं पृष्टः प्रश्नं प्रश्नविदां वर।
युयुत्सुना विनशने सपत्नै-रर्जुनेन वै ॥ १६.६ ॥

अहमात्मोद्धवामीषां भूतानां सुहृदीश्वरः।
अहं सर्वाणि भूतानि तेषां स्थित्युद्भवाप्ययः ॥ १६.९ ॥

अहं गतिर्गतिमतां कालः कलयतामहम्।
गुणानामप्यहं साम्यं गुणिन्यौत्पत्तिको गुणः ॥ १६.१० ॥

गुणिनामप्यहं सूत्रं महतां च महानहम्।
सूक्ष्माणामप्यहं जीवो दुर्जयानामहं मनः ॥ १६.११ ॥

உத்தவர் கூறியது—

16. 5. சிறந்த ஐசுவரியங்களுக் கிருப்பிடமான அச்சுதா! பூமியிலோ, ஸ்வர்க்கத்திலோ, பாதாளத்திலோ, திசைகளிலோ உம்முடைய பெருமைகளாகக் கருதப் படுபவை எவையோ அவற்றை யெல்லாம் எனக்குச் சொல்லவேண்டும். பரிசுத்தத்திற் குறைவிடமாகிய உமது பாதகமலங்களிற் பணிகின்றேன்.

ஸ்ரீ பகவான் கூறியது—

16. 6. கேள்வி கேட்கத் தெரிந்தவர்களில் சிறந்தவனே! சத்துருக்களுடன் போர்புரிய விரும்பிய அர்ஜுனனாலும் குருக்ஷேத்திரத்தில் நான் இதே கேள்வியைக் கேட்கப்பட்டேன்.

16. 9. உத்தவா! நான் இவ்வுயிர்களுக்கு ஆத்மா, நண்பன், ஈசுவரன்; நான் உண்டாய பொருளனைத்து மாயிருப்பவன்; அவற்றின் பிறப்பும் இருப்பும் முடிவு மாயிருப்பவன்.

16. 10. நான் செல்பவர்களின் கதியாகிறேன்; கணக்கிடுபவர்களிடம் காலமாகிறேன்; குணங்களில் நான் ஸமத்துவமாகிறேன்; குணமுள்ளவைகளில் இயற்கையான குணமாகிறேன்.

16. 11. குணங்களில் ஸூத்திரம்போன்ற மகத் தத்துவமா யிருக்கிறேன்; மகாத்துமாக்களின் மகத்துவமா யிருக்கிறேன்; ஸூக்ஷ்மங்களுள் ஜீவனாகிறேன்; ஜயித்தற் கரியவற்றுள் மனமாகிறேன்.

---

16 வது அத்தியாயத்தில் மனதையடக்கி தியானம் செய்ய இயலாதவர்களுக்கு யோகம் கூடுவதற்கு முதல்படியாக விபூதிகளைப்பற்றிய சிந்தனை கூறப்படுகிறது.

16. 6, **விநசனே**—குருக்ஷேத்ரே।

हिरण्यगर्भो वेदानां मन्त्राणां प्रणवस्त्रिवृत्।
अक्षराणामकारोऽस्मि पदानि छन्दसामहम् ॥ १६.१२ ॥

नारायणो मुनीनां च कुमारो ब्रह्मचारिणाम्।
धर्माणामस्मि सन्न्यासः क्षेमाणा-मबहिर्मतिः ॥ १६.२५ ॥

द्वैपायनोऽस्मि व्यासानां कवीनां काव्य आत्मवान्।
वासुदेवो भगवतां त्वं तु भागवतेष्वहम्।
किंपुरुषाणां तु हनुमान् विद्याध्राणां सुदर्शनः ॥ १६.२८ ॥

ब्रह्मण्यानां बलिरहं वीराणामह-मर्जुनः।
तेजः श्रीः कीर्तिरैश्वर्यं ह्रीस्त्यागः सौभगं भगः।
वीर्यं तितिक्षा विज्ञानं यत्र यत्र समेंऽशकः ॥ १६.४० ॥

एतास्ते कीर्तितास्सर्वाः संक्षेपेण विभूतयः।
मनो विकारा एवैते यथा वाचाभिधीयते ॥ १६.४१ ॥

---

16. 12. வேதங்களுக்கு ஹிரண்யகர்ப்பனுகிறேன்; மந்திரங்களுக்குள் மூன்று எழுத்தடங்கிய பிரணவமாகிறேன்; அக்ஷரங்களில் அகாரமாயிருக்கிறேன்; சந்தங்களுக்குள் (மூன்று பாதமுடைய) காயத்ரியாகிறேன்.

16. 25. முனிவர்களுள் நாராயணனுகவும், பிரம்மசாரிகளுள் ஸநத்குமாரராகவும் இருக்கிறேன். தர்மங்களுள் ஸந்நியாஸமா யிருக்கிறேன்; க்ஷேமங்களுள் வெளிச் செல்லாத மதியா யிருக்கிறேன்.

16. 28. வேதத்தை வகுத்தவர்களுள் துவைபாயனரா யிருக்கிறேன்; கவிகளுள் ஞானியாகிய சுக்ராசாரியரா யிருக்கிறேன். பகவான்களுக்குள் வாசுதேவராகவும், பாகவதர்களுக்குள் நீயாகவும் இருக்கிறேன். கிம்புருஷர்களுள் ஹனுமானுகவும், வித்யாதரர்களுள் சுதர்சனனுகவும் இருக்கிறேன்.

16. 40. பிராம்மணபக்தர்களுள் நான் பலியாகவும், வீரர்களுள் அர்ஜுனனுகவும் இருக்கிறேன். தேஜஸ், செல்வம், கீர்த்தி, ஐசுவரியம், நாணம், தியாகம், மனமகிழ்ச்சி, பாக்கியம், வீரியம், பொறுமை, விஞ்ஞானம், இவை எங்கெங்குளவோ அவை என் அம்சங்களாகின்றன.

16. 41. இவ்வாருக என் விபூதிகள் உனக்குச் சுருக்கமாகக் கூறப்பட்டன. மனதின் கற்பனைகள் (உண்மையில் இல்லாதவையாயினும்) வாயினுல் சொல்லப்படுவது போல் இவை (என்னிடம் உன் சித்தத்தை நிறுத்துவதற்காக) ஆகின்றன.

---

16. 12. **ஹிரண்யகர்ப்ப:**—வேதானும் ஸம்பந்தீ தேஷா-மத்யாபக: । **பதானி-த்ரீணி த்ரிபதா காயத்ரீ** இத்யர்த்த:

16. 28. **பகவதாம்**—'உத்பத்திம் ப்ரலயஞ்சைவ பூதானுமாகதிம் கதிம் । வேத்தி வித்யா-மவித்யாஞ்ச ஸ வாச்யோ பகவானிதி' ஏவம் லக்ஷணும் ।

16. 40. **वक् तितिक्षा ।**

वाचं यच्छ मनो यच्छ प्राणान् यच्छेन्द्रियाणि च।
आत्मान-मात्मना यच्छ न भूयः कल्पसेऽध्वने ॥ १६.४२ ॥

यो वै वाङ्मनसी संयगसंयच्छन् धिया यतिः।
तस्य व्रतं तपो दानं स्रवत्यामघटांबुवत् ॥ १६.४३ ॥

तस्मान्मनो वचः प्राणान् नियच्छेन्मत्परायणः।
मद्भक्तियुक्तया बुद्ध्या ततः परिसमाप्यते ॥ १६.४४ ॥

उद्धव उवाच—

यस्त्वयाभिहितः पूर्वं धर्मस्त्वद्भक्तिलक्षणः।
वर्णाश्रमाचारवतां सर्वेषां द्विपदामपि ॥ १७.१ ॥

यथानुष्ठीयमानेन त्वयि भक्तिर्नृणां भवेत्।
स्वधर्मेणारविन्दाक्ष तत् समाख्यातु-मर्हसि ॥ १७.२ ॥

---

16. 42. வாக்கை யடக்கு; மனதை யடக்கு; பிராணனை யடக்கு; இந்திரியங்களையும் அடக்கு; புத்தியை புத்தியா லடக்கு; மீண்டும் ஸம்ஸாரத்தில் உழலமாட்டாய்.

16. 43. எந்தத் துறவி புத்தியால் வாக்கையும் மனதையும் அடக்கவில்லையோ அவனுடைய விரதமும் தவமும் ஞானமும் வேகாத மண்குடத்தில் வைத்த நீரைப்போல் ஒழுகிப்போம்.

16. 44. ஆகையால் என்னை முக்கியமாகக் கொண்டவன் என்னிடம் பக்தியுடன் கூடிய புத்தியால் வாக்கையும் மனதையும் பிராணன்களையும் அடக்கவேண்டும். அதனால் பரிபூரண நிலை எய்துவான்.

உத்தவர் கூறியது—

17. 1. முன்பு நீர் கூறிய பக்தியை அங்கமாகக்கொண்ட தர்மம் வர்ணசிரம ஒழுக்கத்தைக் கைக்கொண்டவர்க்கும் இரண்டு கால் பிராணிகளாகிய ஏனையோர்க்கும் எல்லோர்க்கும் பொதுவாகும்.

17. 2. தாமரைக் கண்ணா! அவரவர்களுக் குரிய தர்மத்தை எப்படி அனுஷ்டித்தால் மானிடர்களுக்கு உம்மிடம் பக்தியுண்டாகுமோ அதை எனக்குக் கூறி யருளுதல் வேண்டும்.

---

17. 1. 'ஆர்ய-ம்லேச்சானும் ஸமானமிஹலக்ஷணம்.' பக்தி யோகத்தில் எல்லோருக்கும் அதிகார முண்டு. —ரிக்வேதம்.

ஒ. ஸ்த்ரியோ வைச்யாஸ்-ததா சூத்ராஸ்-தேபி யாந்தி பராங்கதிம் । —கீ. 9. 32.

श्री भगवानुवाच—

वेदः प्रणव एवाग्रे धर्मोऽहं वृषरूपधृत्।
उपासते तपोनिष्ठा हंसं मां मुक्तकिल्विषाः ॥ १७.११ ॥

त्रेतामुखे महाभाग प्राणान्मे हृदयात्त्रयी।
विद्या प्रादुरभूत्तस्या अहमासं त्रिवृन्मखः ॥ १७.१२ ॥

शमो दमस्तपः शौचं सन्तोषः क्षान्तिरार्जवम्।
मद्भक्तिश्च दया सत्यं ब्रह्मप्रकृतय-स्त्विमाः ॥ १७.१६ ॥

तेजो बलं धृतिः शौर्यं तितिक्षौदार्य-मुद्यमः।
स्थैर्यं ब्रह्मण्यतैश्वर्यं क्षत्रप्रकृतय-स्त्विमाः ॥ १७.१७ ॥

आस्तिक्यं दाननिष्ठा च अदंभो ब्रह्मसेवनम्।
अतुष्टिरर्थोपचयै-र्वैश्य-प्रकृतय-स्त्विमाः ॥ १७.१८ ॥

ஸ்ரீ பகவான் கூறியது—

17. 11. ஆதியில் (இருதயத்தில்) பிரணவம் மட்டுமே வேதம். நான் ஒருவன் (தர்மார்த்த காம மோக்ஷமென்ற நான்கு கால்களை யுடையதும் மனதிற்கு விஷயமுமாகிய) தர்மம். மாசற்ற தபஸ்விகள் ஹம்ஸரூபியான என்னை உபாசிக்கிறார்கள்.

17. 12. மகாபாக்கியசாலியே! திரேதாயுகத்தின் ஆதியில் என் உள்ளத்திலிருந்து மூச்சுக் காற்றின்மூலம் வேதவித்தை உண்டாயிற்று. அதிலிருந்து நான் மூன்று வகையான யஜ்ஞரூபியானேன்.

17. 16. (அப்போது) உள்ளிந்திரிய அடக்கம், வெளி இந்திரிய அடக்கம், தமம், பரிசுத்தம், ஸந்தோஷம், பொறுமை, நேர்மை, என்னிடம் பக்தி, தயை, ஸத்தியம் ஆகியவை அந்தணனுடைய இயற்கை குணங்களாயின.

17. 17. புத்திக் கூர்மை, தேகபலம், தைரியம், சூரத்தனம், பொறுமை, உதார குணம், முயற்சி, அழுத்தம், பிராம்மண பக்தி, ஆளுந் தன்மை ஆகியவை க்ஷத்திரியனுடைய இயற்கை குணங்களாயின.

17. 18. தெய்வ நம்பிக்கை, தானத்தில் நிஷ்டை, இடம்ப மின்மை, பிராம்மண ஸேவை, பொருள் சேர்ப்பதில் போதுமென்ற மனமின்மை, ஆகியவை வைசியனுடைய இயற்கை குணங்களாயின.

---

17. 11. ஒ, 'மனஸச்—சேந்த்ரியணாஞ்ச ஹ்யைகாக்ர்யம் பரமம் தப:' |

17. 12. ஒ. 'யஜ்ஞோ வை விஷ்ணு:' |

---

17. 12. त्रतायुगे। 17. 18. विप्रसेवनम्।

शुश्रूषणं द्विजगवां देवानां चाप्यमायया।
तत्र लब्धेन सन्तोषः शूद्रप्रकृतय-स्त्विमाः ॥ १७.१९ ॥

अहिंसा सत्य-मस्तेय-मकामक्रोध-लोभता।
भूत-प्रिय-हितेहा च धर्मोऽयं सार्ववर्णिकः ॥ १७.२१ ॥

द्वितीयं प्राप्यानुपूर्व्याज्जन्मोपनयनं द्विजः।
वसन् गुरुकुले दान्तो ब्रह्माधीयीत चाहुतः ॥ १७.२२ ॥

स्नान-भोजन-होमेषु जपोच्चारे च वाग्यतः।
शुश्रूषमाण आचार्यं सदोपासीत नीचवत् ॥ १७.२४ ॥

रेतो नावकिरेज्जातु ब्रह्मव्रतधरः स्वयम्।
अवकीर्णेऽवगाह्याप्सु यतासुस्त्रिपदीं जपेत् ॥ १७.२५ ॥

17. 19. மூன்று வர்ணத்தார்க்கும், பசுக்களுக்கும் தேவர்களுக்கும், கபடமின்றிப் பணிசெய்தல், அதில் கிடைத்ததைக் கொண்டு ஸந்தோஷமடைதல் ஆகியவை சூத்திரனுடைய இயற்கை குணங்களாயின.

17. 21. அஹிம்ஸையும், ஸத்தியமும், களவின்மையும் காமக் குரோத லோபமின்மையும், உயிர்களிடம் அன்பும் நல்லதை நாடும் எண்ணமும் ஆகிய இந்த தர்மம் எல்லா வர்ணத்துக்கும் பொதுவாம்.

17. 22. துவிஜன் (பிராம்மணனும் க்ஷத்திரியனும் வைசியனும்) வரிசைக் கிரமத்தில் (கர்ப்பாதானம் முதலிய ஸம்ஸ்காரங்களுக்குப் பின்) இரண்டாவது பிறவியாகிய உபநயனத்தைப் பெற்று குருகுல வாஸம் செய்து இந்திரியங்களை யடக்கி ஆசாரியனால் அழைக்கப்பட்டு வேதாத்தியயனம் செய்யவேண்டும்.

17. 24. ஸ்நானம் போஜனம் ஹோமம் இவைகள் செய்யும்போதும் ஜபகாலத்திலும், மலமூத்திரங்களைக் கழிக்கும்போதும் மௌனமா யிருக்கவேண்டும். ஆசாரியனுக்குப் பணிவிடை செய்பவனாய் அடிமையைப்போல் எப்போதும் அவரருகில் இருக்கவேண்டும்.

17. 25. வேதவிரதத்தைக் கைக்கொண்ட பிரம்மசாரி ஒருபோதும் ரேதஸ்ஸை நழுவவிடக்கூடாது. தானாக ரேதஸ் நழுவினால் நீராடிப் பிராணாயாமம் செய்து காயத்ரீ ஜபம் செய்யவேண்டும்.

17. 22. ப்ரஹ்ம—வேதமதீயீத ; சகாராத் ததர்த்தஞ்ச விசாரயேத் ।

17. 24. உச்சார:—மூத்ரபுரீஷ உத்ஸர்க்க: ।

17. 24. मन्त्रोच्चारे च वाग्यतः । 17. 25. न विकिरेत् ।

स्त्रीणां निरीक्षण-स्पर्श-संलापक्ष्वेळनादिकम् ।
प्राणिनो मिथुनी-भूतानगृहस्थोऽग्रतस्त्यजेत् ॥ १७.३२ ॥

गुरवे दक्षिणां दत्वा स्नायाद् गुर्वनुमोदितः ।
गृहं वनं वोपविशेत् प्रव्रजेद् वा द्विजोत्तमः ।
आश्रमादाश्रमं गच्छेन्नान्यथा मत्परश्चरेत् ॥ १७.३८ ॥

गृहार्थी सदृशीं भार्या-मुद्वहे-दजुगुप्सिताम् ।
यवीयसीं तु वयसा तां सवर्णामनु क्रमात् ॥ १७.३९ ॥

इज्याध्ययन-दानानि सर्वेषां च द्विजन्मनाम् ।
प्रतिग्रहोऽध्यापनं च ब्राह्मणस्यैव याजनम् ॥ १७.४० ॥

प्रतिग्रहं मन्यमान-स्तपस्तेजो-यशोनुदम् ।
अन्याभ्यामेव जीवेत शिलैर्वा दोषदृक् तयोः ॥ १७.४१ ॥

---

17. 32. கிருஹஸ்தனாகாத அந்தப் பிரம்மசாரி ஸ்திரீகளைப் பார்ப்பது, தொடுவது, அவர்களுடன் பேசுவது, பரிஹாஸஞ் செய்வது முதலியவற்றைச் செய்யக்கூடாது. ஆணும் பெண்ணுமாகப் பிராணிகள் புணர்வதையும் பார்க்கக்கூடாது.

17. 38. குருவுக்கு தக்ஷிணை கொடுத்து குருமகிழ்ச்சி யடைந்தபின் ஸ்நாதகனாக வேண்டும். பின்பு கிருஹஸ்தாச்ரமத்தையோ வானப்பிரஸ்தாசிரமத்தையோ, அல்லது பிராம்மணனாயின் ஸந்நியாஸத்தையோ அடையலாம். என்னிடம் பக்தியுள்ளவனாக ஒரு ஆசிரமத்தினின்று மற்றொரு ஆசிரமத்தைக் கைக்கொள்ள வேண்டும். வேறு விதமாய்ச் செய்யக்கூடாது.

17. 39. கிருஹஸ்தாசிரமத்தை விரும்புபவன் தனக் கொத்தவளும், கிரமப் படி உரிய வர்ணத்தைச் சார்ந்தவளும், வயதிற் சிறியவளும் குற்றமற்றவளுமாகிய மனைவியை ஏற்கவேண்டும்.

17. 40. இரு பிறப்பாளர் யாவர்க்கும் யாகம், அத்தியயனம், தானம் கொடுத்தல் இவை பொதுவாம். தானம் வாங்குதல், அத்தியயனம் செய்வித்தல் யாகம் செய்வித்தல் ஆகியவை பிராம்மணனுக்கு மட்டும் உரியவை.

17. 41. தானம் வாங்குதல் தவத்தையும் தேஜஸ்ஸையும் கீர்த்தியையும் பழுது படுத்தும் என்று கருதுபவன் (அத்தியயனம் செய்வித்தல் யாகம் செய்வித்தல் என்ற) மற்ற இரண்டாலுமோ அல்லது அதுவும் தோஷமுடைய தெனக் கொண்டவன் வயல் களில் சிதறிய தானியத்தைக் கொண்டாவதோ ஜீவிக்கவேண்டும்.

17. 38. **அமத்பர:** (பாடபேதம்)—(ஸ்வபக்தஸ்ய ஆச்ரமநியமாபாவஸ்ய வக்ஷ்யமாணத்வாத்) பக்தனுக்கு ஆசிரம நியமம் கூறப்படாமையால் இது மற்றவர்களைக் குறித்து என்றும் கொள்ளலாம். —ஸ்ரீதரர்

ब्राह्मणस्य हि देहोऽयं क्षुद्रकामाय नेष्यते।
कृच्छ्राय तपसे चेह प्रेत्यानन्तसुखाय च ॥ १७.४२ ॥

वेदाध्याय-स्वधा-स्वाहा-बल्यन्नाद्यै-र्यथोदयम्।
देवर्षि-पितृभूतानि मद्रूपाण्यन्वहं यजेत् ॥ १७.५० ॥

यदृच्छयोपपन्नेन शुक्लेनोपार्जितेन वा।
धनेनापीडयन् भृत्यान् न्यायेनैवाहरेत् क्रतून् ॥ १७.५१ ॥

कुटुंबेषु न सज्जेत न प्रमाद्येत् कुटुंब्यपि।
विपश्चिन्नश्वरं पश्ये-ददृष्टमपि दृष्टवत् ॥ १७.५२ ॥

पुत्र-दाराप्त-बन्धूनां संगमः पान्थसंगमः।
अनुदेहं वियन्त्येते स्वप्नो निद्रानुगो यथा ॥ १७.५३ ॥

इत्थं परिमृशन्मुक्तो गृहेष्वतिथिवद् वसन्।
न गृहैरनुबध्येत निर्ममो निरहंकृतिः ॥ १७.५४ ॥

---

17. 42. பிராம்மணனுடைய இந்த தேகமானது அற்பமான காமத்தை உத்தேசித்துச் செல்லாது. இவ்வுலகில் வருந்திச் செய்யப்படும் தவத்தையும் மேலுலகில் முடிவில்லாத சுகத்தையுமே கருதிச் செல்லும்.

17. 50 வேதாத்தியயனம். ஸ்வாதாகாரம் (பிதிருபூஜை), ஸ்வாஹாகாரம் (தேவபூஜை), பலி, (அன்னதானம் முதலியவைகளால்) என் ரூபமுடைய தேவர்களையும், ரிஷிகளையும் பிதிருக்களையும், பூதங்களையும் செல்வத்துக்குத் தகுந்த முறையில் தினந்தோறும் (மூன்று வர்ணத்தாரும்) பூஜிக்கவேண்டும்.

17. 51. முயற்சியின்றிக் கிடைத்த பொருளைக் கொண்டோ பரிசுத்தமான வழியில் தேடியடைந்த பொருளைக் கொண்டோ வேலையாட்களைப் பீடிக்காமல் யாகங்களைச் செய்து என்னை ஆராதிக்க வேண்டும்.

17. 52. குடும்பியாயினும் கிருஹஸ்தன் குடும்பங்களில் பற்றுதலுடையவனாகக் கூடாது; (ஈசுவர ஆராதனையில்) தவறக்கூடாது; அறிவாளியானவன் பார்க்கப்படுவது அழிவதுபோல் பார்க்கப்படாதவைகளும் (ஸ்வர்க்காதி லோகங்களும்) அழிவுள்ளவையே என்பதை உணரவேண்டும்.

17. 53. மக்கள் மனைவிகள் நண்பர்கள் உறவினர் ஆகியவர்களின் கூட்டுறவு வழிப்போக்கர்களின் சேர்க்கைக்குச் சமானம். நித்திரை வரும்போது தோன்றும் கனவு நித்திரையுடன் அழிவதுபோல் ஒவ்வொரு தேகத்துடனும் தோன்றும் உறவினர்கள் தேகம் மறையும்போது கனவுபோல் அழிகின்றனர்.

17. 54. இவ்விதம் யுக்தியால் ஆராய்ந்தறிந்து வீடுகளில் அதிதியைப்போல் வசித்து அஹங்கார மமகார மில்லாதவனாய் வீடுகளில் தளைபடாமலிருக்கவேண்டும்.

कर्मभि-र्गृहमेधीयै-रिष्ट्वा मामेव भक्तिमान् ।
तिष्ठेद्वनं वोपविशेत् प्रजावान् वा परिव्रजेत् ॥ १७.५५ ॥

यस्त्वासक्तमतिर्गेहे पुत्रवित्तैषणातुरः ।
स्त्रैणः कृपणधी-र्मूढो ममाहमिति बध्यते ॥ १७.५६ ॥

अहो मे पितरौ वृद्धौ भार्या बालात्मजाऽऽत्मजाः ।
अनाथा मामृते दीनाः कथं जीवन्ति दुःखिताः ॥ १७.५७ ॥

एवं गृहाशयाक्षिप्त-हृदयो मूढधी-रयम् ।
अतृप्त-स्ताननुध्यायन् मृतोऽन्धं विशते तमः ॥ १७.५८ ॥

वनं विविक्षुः पुत्रेषु भार्यां न्यस्य सहैव वा ।
वन एव वसेच्छान्तस्तृतीयं भागमायुषः ॥ १८.१ ॥

कन्दमूलफलै-र्वन्यै-र्मेध्यै-र्वृत्तिं प्रकल्पयेत् ।
वसीत वल्कलं वास-स्तृणपर्णाजिनानि च ॥ १८.२ ॥

17. 55. கிருஹஸ்தாசிரமத்திற்குரிய கர்மங்களால் பக்தியுள்ளவன் என்னை வழி படுபவனுயிருக்கவேண்டும். அல்லது வனம் செல்லவேண்டும். அல்லது ஸந்ததி யுடையவனுயின் ஸந்நியாஸம் செய்து கொள்ளவேண்டும்.

17. 56. எவன் வீட்டில் பற்று மிகுந்தவனுகவும் மக்கள் சொத்து முதலியவற் றில் ஆசையால் வருந்துபவனுகவும் ஸ்திரீகளுக்கு வசப்பட்டவனுகவும் குறுகிய நோக்கமுள்ளவனுகவும் மூடனுகவு மிருக்கிருனே அவன் 'நான், என்னுடையது' என்ற கட்டுக்குள்ளாகிருன்.

17. 57-58. 'ஐயோ! என் தாய் தந்தையர் வயதானவர்கள்; மனைவியோ இளங் குழந்தைகளை யுடையவள்; பிரஜைகள் நாதனற்றவர்கள்; நானில்லாமல் தீனர்களாய்த் தவிக்கும் இவர்கள் எப்படிப் பிழைப்பார்கள்?' என்றிவ்வாறு கிருஹஸ்தாசிரம வாஸனையால் பலவகையில் சிதறிய மனமுடையவனும் மதியிழந்தவனுமாகிய இவன் திருப்தி யடையாமல் அவர்களை நினைத்துக்கொண்டே மரணமடைந்து இருள் சூழ்ந்த நிலையில் புகுந்து தாழ்ந்த பிறவியை யடைகிருன்.

18. 1. வனத்தில் வசிக்க விரும்பியவன் புத்திரர்களிடம் மனைவியை ஒப்பு வித்துவிட்டோ அல்லது கூட அழைத்துச் சென்ருே ஆயுளின் மூன்ருவது பாகம் வரை யில் சாந்தனுக வசிக்கவேண்டும்.

18. 2. வனத்தில் கிடைக்கக்கூடிய பரிசுத்தமான காய் கிழங்கு பழம் முதலிய வற்ருல் வாழ்க்கையை நடத்தவேண்டும். மரவுரி, புல், இலை, தோல் இவைகளை ஆடையாக அணியவேண்டும்.

17. 57. बालात्मजा प्रजाः ।

स्वयं संचिनुयात् सर्व-मात्मनो वृत्तिकारणम् ।
देशकाल-बलाभिज्ञो नाददीतान्यदाहृतम् ॥ १८.६ ॥

यदासौ नियमेऽकल्पो जरया जातवेपथुः ।
आत्मन्यग्नीन् समारोप्य मच्चित्तोऽग्निं समाविशेत् ॥ १८.११ ॥

यदा कर्मविपाकेषु लोकेषु निरयात्मसु ।
विरागो जायते सम्यङ् न्यस्ताग्निः प्रव्रजेत्ततः ॥ १८.१२ ॥

इष्ट्वा यथोपदेशं मां दत्त्वा सर्वस्वमृत्विजे ।
अग्नीन् स्वप्राण आवेश्य निरपेक्षः परिव्रजेत् ॥ १८.१३ ॥

विप्रस्य वै सन्न्यसतो देवा दारादिरूपिणः ।
विघ्नान् कुर्वन्त्ययं ह्यस्मानाक्रम्य समियात् परम् ॥ १८.१४ ॥

बिभृयाच्चेन्मुनि-र्वासः कौपीनाच्छादनं परम् ।
त्यक्तं न दण्डपात्राभ्या-मन्यत् किंचिदनापदि ॥ १८.१५ ॥

---

18. 6. வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்தையும் வானப்பிரஸ்தன் காலத்தையும் தேசத்தையும் சக்தியையு முணர்ந்து அவ்வப்போது தானே தேடிக்கொள்ளவேண்டும். மற்ற சமயத்திலோ பிறராலே சேகரிக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ளக் கூடாது.

18. 11. இவன் எப்பொழுது மூப்பினால் நடுக்க மடைந்து நியமத்தில் திறமை யற்றவனாகிறானோ அப்பொழுது அக்கினிகளைத் தன்னிடம் ஆரோபணம் செய்துகொண்டு என்னிடம் மனதைச் செலுத்தி அக்கினியில் பிரவேசிக்கவேண்டும்.

18. 12. கர்மத்தின் பயனாக அடையக் கூடியவைகளும் நரகத்திற்கே ஒப்பான வைகளுமான மேலுலகங்களிலும் திடமான வைராக்கியம் ஏற்பட்டால் அப்பொழுது (உடல் வன்மை யிருந்தாலும்) அக்கினி கார்யத்தை நிறுத்தி ஸந்நியாஸியாக வேண்டும்.

18. 13. வேதத்தில் கூறிய விதம் என்னைப் பூஜித்து ரித்விக்குகளிடம் பொருள் யாவற்றையும் கொடுத்துப் பிராணனில் அக்கினிகளை அமைத்து எதிலும் ஆசை யில்லாதவனாய்க் கிளம்பவேண்டும்.

18. 14. ஸந்நியாஸம் செய்துகொள்ளும் வேதியனுக்குத் தேவர்கள், மனைவி முதலியவர்களின் ரூபமாக வந்து 'இவன் நம்மை அலக்ஷியம் செய்து மேலே செல்லு கிறான்' என்ற எண்ணத்துடன் விக்கினங்களைச் செய்வார்கள்.

18. 15. முனிவனாகிய துறவி கௌபீனத்தைத் தவிர வேறு வஸ்திரம் தரிக்க விரும்பினால். கௌபீனத்தை மறைக்குமளவு வஸ்திரம் தரிக்கலாம். தண்டம் ஜல பாத்திரம் இவைகளைத் தவிர ஏற்கெனவே நீக்கப்பட்ட வேறு எதையும் ஆபத்தில்லாத சமயத்தில் வைத்துக் கொள்ளக் கூடாது.

---

18. 12. धर्मविपाकेषु । 18. 11. नियमेऽकल्पः ।

दृष्टिपूतं न्यसेत्पादं वस्त्रपूतं पिबेज्जलम् ।
सत्यपूतां वदेद्वाचं मनः-पूतं समाचरेत् ॥ १८.१६ ॥

मौनानीहानिलायामा दण्डा वाग्देहचेतसाम् ।
न ह्येते यस्य सन्त्यंग वेणुभि-र्न भवेद् यतिः ॥ १८.१७ ॥

भिक्षां चतुर्षु वर्णेषु विगर्ह्यान् वर्जयंश्चरेत् ।
सप्तागारानसंक्लृप्तां-स्तुष्येल्लब्धेन तावता ॥ १८.१८ ॥

बहिर्जलाशयं गत्वा तत्रो-पस्पृश्य वाग्यतः ।
विभज्य पावितं शेषं भुंजीताशेष-माहृतम् ॥ १८.१९ ॥

एकश्चरेन्महीमेतां निःसंगः संयतेन्द्रियः ।
आत्मक्रीड आत्मरत आत्मवान् समदर्शनः ॥ १८.२० ॥

---

18. 16. பார்வையால் சுத்தமான இடத்தில் பாதத்தை வைக்கவேண்டும். வஸ்திரத்தால் வடிகட்டிச் சுத்தமான ஜலத்தைப் பானம் செய்யவேண்டும். ஸத்தியத்தால் சுத்தமான வார்த்தையைச் சொல்லவேண்டும். மனச் சாட்சியால் சுத்தமான செயலைச் செய்யவேண்டும்.

18. 17. மௌனமும் ஆசைவிடுதலும் (காம்ய கர்மத்தியாகம்) பிராணாயாமமும் வாக்குக்கும் காயத்திற்கும் மனதிற்கும் தண்டங்களாகின்றன. அன்பா! எவனுக்கு இவைகள் இல்லையோ அவன் மூங்கில் தண்டங்களால் துறவியாகிவிடமாட்டான்.

18. 18. நான்கு வர்ணங்களில் இழிவானவர்களை விலக்கி முன்பே நிச்சயிக்கப் படாத ஏதோ ஏழு வீடுகளில் பிக்ஷை எடுக்கவேண்டும். எது கிடைத்ததோ அதைக் கொண்டு திருப்தி யடையவேண்டும்.

18. 19. (கிராமத்திற்கு) வெளியிலுள்ள குளத்திற்குச் சென்று அங்கு ஆசமனம் செய்து (தேவதைகளுக்கும் பூதங்களுக்கும் யாசகர்களுக்கும்) பாகம் கொடுத்துப் பரிசுத்தமான மிகுதியைக் கொண்டுவந்து வீணாகாம லிருக்கும்படி புசிக்கவேண்டும்.

18. 20. பற்றற்றவனாகவும் இந்திரியங்களை யடக்கியவனாகவும் ஆத்மாவினிடம் விளையாட்டும் ஆத்மாவினிடம் மகிழ்ச்சியும் ஆத்மாவிடமே இருப்பும் உடையவனாகவும் அனைத்தையும் சமமாய்ப் பார்ப்பவனாகவும் ஒருவனாகவும் இந்த பூமியில் சஞ்சரிக்க வேண்டும்.

---

18. 18. ஓ. (ஸர்வான்னானுமதிச்ச ப்ராணாத்யயே தத்தர்சனாத் ।) உயிருக்கு ஆபத்து நேரிட்டபோது எந்த அன்னத்தையும் ஏற்க அனுமதியுண்டு; அதைச்சுருதி கூறுவதால்.
—பி. சூ, 3. 4-28.

18. 20. ஓ. 'ஆத்மக்ரீட ஆத்மரதி: க்ரியாவான் ஏஷ ப்ரஹ்மவிதாம் வரிஷ்ட:'
—மு. உப. 3. 1. 4.

---

18. 19. विभज्य पावितं ।

अन्वीक्षेतात्मनो बन्धं मोक्षं च ज्ञाननिष्ठया।
बन्ध इन्द्रियविक्षेपो मोक्ष एषां च संयमः ॥ १८.२२ ॥

नैतद्वस्तुतया पश्येद् दृश्यमानं विनश्यति।
असक्तचित्तो विरमे-दिहामुत्र चिकीर्षितात् ॥ १८.२६ ॥

ज्ञाननिष्ठो विरक्तो वा मद्भक्तो वानपेक्षकः।
सलिंगानाश्रमां-स्त्यक्त्वा चरेदविधिगोचरः ॥ १८.२८ ॥

वेदवादरतो न स्यान्न पाषण्डी न हैतुकः।
शुष्कवादे-विवादे च न कंचित्पक्षमाश्रयेत् ॥ १८.३० ॥

यदृच्छयोपपन्नान्न-मद्याच्छ्रेष्ठ-मुतापरम्।
तथा वास-स्तथा शय्यां प्राप्तं प्राप्तं भजेन्मुनिः ॥ १८.३५ ॥

---

13. 22. ஞானத்தில் நிலைபெற்றுத் தனது பந்தத்தையும் மோக்ஷத்தையும் பற்றிக் கவனிக்கவேண்டும். இந்திரியங்களின் சிதறலே பந்தம், அவற்றின் அடக்கமே மோக்ஷம்.

18. 26. பார்க்கப்படும் இந்தப் பிரபஞ்சத்தை ஒரு பொருட்டாகப் பார்க்கக் கூடாது. ஏனென்றால் இது அழிவுடையது, இகத்திலும் பரத்திலும் பற்று நீங்கிய மனமுடையவனாய் ஆசை வைத்தவைகளினின்று ஒழிவை யடையவேண்டும்.

18. 28. ஞானத்தில் நிலைபெற்றவனும் வைராக்கிய முள்ளவனும் ஆகிய என் பக்தன் எதையும் வேண்டாதவனாய் அடையாளங்களுடன் கூடிய ஆசிரமங்களை விட்டு விதிகளுக் கப்பாற்பட்டவனாய் சஞ்சரிக்க வேண்டும்.

18. 30. வேதவாதத்தில் மிகுந்த ஆவலுடையக் கூடாது. பாஷண்டனாகவும் யுக்திவாதம் செய்பவனாகவும் இருக்கக்கூடாது. வரட்டு வாதங்களிலும் தர்க்கங்களி லும் ஒரு பக்ஷத்தையும் ஆச்ரயிக்கக் கூடாது.

18. 35. முனிவன் தற்செயலாகக் கிடைத்த அன்னத்தை அது உயர்ந்ததாயி னும் தாழ்ந்ததாயினும் புசிக்கவேண்டும். அவ்விதமே வஸ்திரத்தையும் அவ்விதமே படுக்கு மிடத்தையும் எப்படி எப்படிக் கிடைக்கிறதோ அப்படி ஏற்கவேண்டும்.

---

18. 26. ஆத்மாவினிடத்திலேயே ஸந்தோஷமுள்ளவன் எவனோ அவனுக்குச் செய்ய வேண்டிய கார்யம் ஒன்றும் இல்லை. —கீ. 3. 17.

18. 80. ஒ. 'வாதோ நாவலம்ப்ய:। பாஹுல்யாவகாசத்வாத் அநியதத்வாச்ச।'
—நாரதபக்தி ஸூத்ரம்.

ஒ. நானுத்யாயாத் பஹூன் சப்தான் வாசோ விக்லாபனம் ஹி தத்।
—ப்ரு. உப. 4. 4. 21.

ஒ. ஆழமில்லாத குளத்தில் நீர் குடிக்கவேண்டுமானால் அதைக் கலக்காமல் மெதுவாகக் குடிக்கவேண்டும். கலக்கிவிட்டால் அடியிலுள்ள சேறு மேலே கிளம்பிவிடும். சாஸ்திரத்தைப்பற்றி வீண்வாதத்தில் இறங்கினால் உன் மூளை கலங்கிவிடும். —ரா. கி.

शौच-माचमनं स्नानं न तु चोदनया चरेत्।
अन्यांश्च नियमान् ज्ञानी यथाहं लीलयेश्वरः ॥ १८.३६ ॥

वर्णाश्रमवतां धर्म एष आचारलक्षणः।
स एव मद्भक्ति-युतो निःश्रेयसकरः परः ॥ १८.४७ ॥

तपस्तीर्थं जपो दानं पवित्राणीतराणि च।
नालं कुर्वन्ति तां सिद्धिं या ज्ञानकलया कृता ॥ १९.४ ॥

तस्माज्ज्ञानेन सहितं ज्ञात्वा स्वात्मान-मुद्धव।
ज्ञानविज्ञानसंपन्नो भज मां भक्तिभावितः ॥ १९.५ ॥

अहिंसा सत्य-मस्तेय-मसंगो ह्रीरसंचयः।
आस्तिक्यं ब्रह्मचर्यं च मौनं स्थैर्यं क्षमाभयम् ॥ १९.३३ ॥

---

18. 36. ஞானியானவன் சௌசம், ஆசமனம் ஸ்நானம் மற்ற நியமங்கள் ஆகியவற்றை சாஸ்திரக் கட்டுப்பாடு என்று அனுஷ்டிக்காமல் ஈசுவரனுகிய என்னைப்போல் லீலையாகச் செய்யட்டும்.

18. 47. வர்ணுசிரமிகளின் ஆசாரலக்ஷணம் இவ்வாருகக் கூறப்பட்டது. இந்த தர்மமே என்னிடம் பக்தியுடன் கூடியதாயின் உயர்ந்த நன்மையைப் பயப்பதாக ஆகும்.

19. 4. சிறிது ஞானத்தால் ஏற்படக்கூடிய புனிதத் தன்மை எவ்வளவோ அவ்வளவு தவத்தாலும் தீர்த்தத்தாலும் ஜபத்தாலும் தானத்தாலும் பாவனமான மற்ற எவையாலும் ஏற்படாது.

19. 5. உத்தவா! ஆகையால் ஞானத்துடன் கூடி நிற்கும் வகையில் ஆத்மாவை ஆராய்ந் தறிந்து பக்தியால் பரிசுத்தனுகி ஞான விஞ்ஞான ஸம்பன்னனுய் என்னை நாடுவாயாக.

19. 33. உத்தவா! அஹிம்ஸை, ஸத்தியம், திருட்டுத்தன மின்மை, பற்றின்மை, வெட்கம், பொருளைச் சேமிக்கா திருத்தல், தெய்வ நம்பிக்கை, பிரம்மசரியம், மௌனம், திடச்சித்தம், பொறுமை, பயமின்மை;

---

18. 36. ஒ. (லோகஸங்க்ரஹமேவாபி ஸம்பச்யன் கர்த்துமர்ஹஸி) உலகை நல் வழிப் படுத்தலைக் கருதிக் கருமத்தைச் நீ செய்வது தகுதியாகும். —கீ. 3. 20.

19. 5. ஒ. 'மாமேவ பஜ அன்யத் ஸர்வம் த்யஜ' —ஸ்ரீதரர்.

शौचं जपस्तपो होमः श्रद्धाऽऽतिथ्यं मदर्चनम्।
तीर्थाटनं परार्थेहा तुष्टिराचार्य-सेवनम् ॥ १९.३४ ॥

एते यमाः सुनियमा उभयोर्द्वादश स्मृताः।
पुंसा-मुपासिता-स्तात यथा कामं दुहन्ति हि ॥ १९.३५ ॥

शमो मन्निष्ठता बुद्धे-र्दम इन्द्रियसंयमः।
तितिक्षा दुःखसंमर्षो जिह्वोपस्थ-जयो धृतिः ॥ १९.३६ ॥

दण्डन्यासः परं दानं कामत्याग-स्तपः स्मृतम्।
स्वभावविजयः शौर्यं सत्यं च समदर्शनम् ॥ १९.३७ ॥

ऋतं च सूनृता वाणी कविभिः परिकीर्तिता।
कर्मस्वसंगमः शौचं त्यागः सन्न्यास उच्यते ॥ १९.३८ ॥

धर्म इष्टं धनं नृणां यज्ञोऽहं भगवत्तमः।
दक्षिणा ज्ञान-सन्देशः प्राणायामः परं बलम् ॥ १९.३९ ॥

19. 34. (உள்ளும் வெளியும்) பரிசுத்தம், ஜபம், தவம், ஹோமம், சிரத்தை, அதிதிபூஜை, என் பூஜை, தீர்த்தங்களுக்குச் செல்லுதல், பிறர்க்கு உழைத்தல், ஸந்தோஷம், ஆசாரிய சேவை;

19. 35. என இவ்வாறுக இரண்டு சுலோகங்களில் பன்னிரண்டு பன்னிரண்டாகக்கூறப்பட்ட) இவைகள் இயமங்களும் நியமங்களுமாம். ஐயனே, இவைகள் அனுஷ்டிக்கப் பெற்றால் மனிதர்க்கு என்ன, விருப்பமோ (போகமோ மோக்ஷமோ) அதை அவை அளிப்பனவாம்.

19, 36. என்னிடம் புத்தி நிலைபெறுதலே சமம், இந்திரிய நிக்கிரகமே தமம், துக்கங்களைப் பொறுப்பது திதிக்ஷை, நாவையும் உபஸ்தத்தையும் ஜயிப்பது திருதி.

19. 37. பிராணிஹிம்ஸையை விடுதல் சிறந்ததானம், காமத்தை விடுதல் தவம், வாஸனையை ஜயித்தல் சூரத்தனம், எங்கும் ஸமமாயுள்ள பிரம்மத்தை எண்ணுதல் ஸத்யம்.

19. 38. தீமையில்லாத வாக்கு ருதம் என்று கவிகளால் கூறப்படுகிறது; கர்மங்களில் பற்றின்மை சௌசம், (கர்ம பல) தியாகமே ஸந்நியாஸம்.

19. 39. தர்மமே பிரியமான தனம், சிறந்தபகவானாகிய நானே யஜ்ஞம், ஞானோபதேசம் தக்ஷிணை, பிராணாயாமம் சிறந்த பலம்.

भगो म ऐश्वरो भावो लाभो मद्भक्तिरुत्तमः।
विद्यात्मनि भिदाबाधो जगुप्सा ह्रीरकर्मसु ॥ १९.४० ॥

श्रीर्गुणा नैरपेक्षाद्याः सुखं दुःख-सुखात्ययः।
दुःखं कामसुखापेक्षा पण्डितो बन्धमोक्षवित् ॥ १९.४१ ॥

मूर्खो देहाद्यहंबुद्धिः पन्था मन्निगमः स्मृतः।
उत्पथश्चित्तविक्षेपः स्वर्गः सत्त्वगुणोदयः ॥ १९.४२ ॥

नरकस्तम उन्नाहो बन्धु-र्गुरुरहं सखे।
गृहं शरीरं मानुष्यं गुणाढ्यो ह्याढ्य उच्यते ॥ १९.४३ ॥

दरिद्रो यस्त्वसन्तुष्टः कृपणो योऽजितेन्द्रियः।
गुणेष्वसक्तधी-रीशो गुणसंगो विपर्ययः ॥ १९.४४ ॥

किं वर्णितेन बहुना लक्षणं गुणदोषयोः।
गुणदोषदृशि-र्दोषो गुणस्तूभयवर्जितः ॥ १९.४५ ॥

19. 40. என்னைச் சார்ந்த ஐச்வரிய பாவனை பாக்கியம், என்னிடம் பக்தி உத்தம லாபம், ஆத்மாவில் பேதபுத்தியை ஒழித்தல் வித்தை, கெட்ட செய்கைகளில் வெறுப்பே வெட்கம்.

19. 41. வேண்டாமை முதலிய குணங்களே ஸ்ரீ, இன்ப துன்பத்தைக் கடந்து நிற்றல் சுகம், விஷய சுகத்தில் ஆசையே துக்கம், பந்தத்தினின்று விடுபடும் வழியறிந்தவன் பண்டிதன் ;

19. 42-43. தேகம் முதலியவற்றில் நான் என்ற புத்தியுள்ளவன் முட்டாள் ; செல்லத் தக்கவழி என்னைப் பற்றிய ஞானத்தால் நிவிருத்தி, தகாத வழி சிதறிய மனத்தால் பிரவிருத்தி ; ஸத்வகுணத்தின் மிகுதி ஸ்வர்க்கம், தமோ குணத்தின் மிகுதி நரகம். நண்பா ! குருவே பந்து, அதுவும் நானே ; சரீரம்தான் வீடு, குணவானே பிரபு எனப்படுபவன்.

19. 44. ஸந்தோஷமில்லாதவன் தரித்திரன், இந்திரியங்களை ஜயிக்காதவன் கிருபணன் ; குணங்களில் பற்று விட்டவன் ஈசுவரன் ; பற்றுள்ளவன் அடிமை.

19. 45. குணங்களையும் குற்றங்களையும் பற்றிய அடையாளங்களை வெகுவாக விவரிப்பதில் என்ன பயன் ? குணதோஷங்களைப் பார்ப்பதே குற்றம், இரண்டையும் பாராமலிருப்பதே குணம்.

19. 42. மந்நிகம:—மத்விஷயஜ்ஞானம் ; உத்பத:—குமார்க்க: |

उद्धव उवाच—

गुणदोषभिदा-दृष्टिमन्तरेण वचस्तव।
निश्रेयसं कथं नृणां निषेधविधिलक्षणम् ॥ २०.३ ॥

श्रीभगवानुवाच—

योगास्त्रयो मया प्रोक्ता नृणां श्रेयो विधित्सया।
ज्ञानं कर्म च भक्तिश्च नोपायोऽन्योऽस्ति कुत्रचित् ॥ २०.६ ॥

निर्विण्णानां ज्ञानयोगो न्यासिनामिह कर्मसु।
तेष्वनिर्विण्णो नातिसक्तो भक्तियोगोऽस्य सिद्धिदः ॥ २०.७ ॥

यदृच्छया मत्कथादौ जातश्रद्धस्तु यः पुमान्।
न निर्विण्णो नातिसक्तो भक्तियोगोऽस्य सिद्धिदः ॥ २०.८ ॥

तावत् कर्माणि कुर्वीत न निर्विद्येत यावता।
मत्कथा-श्रवणादौ वा श्रद्धा यावन्न जायते ॥ २०.९ ॥

உத்தவர் கூறியது—

20. 3. குணதோஷங்களின் வித்தியாசத்தைப் பார்க்காவிட்டால் விதிவிலக்கு லக்ஷண முடைய உம்முடைய வேதவாக்கு மானிடர்களுக்கு நன்மை பயப்பதாக எங்ஙனம் ஆகும்?

ஸ்ரீ பகவான் கூறியது—

20. 6. மானிடர்களுக்கு நன்மையை விரும்பி நான் மூன்று யோகங்களைக் கூறினேன். அவை ஞானம் கர்மம் பக்தி என்பன. இவற்றைத் தவிர எங்கும் வேறு உபாயமில்லை.

20. 7. கர்மங்களில் வைராக்கிய மடைந்து அவைகளைத் துறந்தவர்களுக்கு (கர்ம விதிவிலக்குகளைக் கடந்த) ஞானயோகமும், அவைகளில் வைராக்கிய மில்லாத மனமுடைய காமிகளுக்கு (விதிவிலக்குகளுக்கு உட்பட்ட) கர்மயோகமும் பொருந்தும்.

20. 8. தானுகவே என் கதை முதலியவற்றில் சிரத்தைஉண்டாகிய புருஷன் எவனே அவன் (கர்மங்களில்) அதிக விருப்பமோ வெறுப்போ இல்லாதவனு யிருப்பான். அவனுக்கு பக்தியோகம் சித்தி தருவதாகும்.

20. 9. எதுவரையில் வைராக்கியம் உண்டாகவில்லையோ எதுவரையில் என் கதை முதலியவற்றைக் கேட்பதில் சிரத்தை உண்டாகவில்லையோ அதுவரையில் கர்மங்களைச் செய்யவேண்டும்.

---

20. 6.. (விஷயாபேதேப்யதிகாரி-பேதேனுவிரோதம் வக்தும் ப்ரதமம் யோக-த்ரய மாஹ) விஷயத்தில் பேதமில்லை யெனினும் அதிகாரிபேத மிருப்பதால் தாழ்ந்த நிலையிலுள்ள வர்களுக்குக் குணதோஷங்களை யடிப்படையாகக் கொண்டு சாஸ்திரம் கட்டளை யிடுகிறது என்று விளக்க முதலில் மூன்று யோகங்களைக் கூறுகிருர்.

स्वधर्मस्थो यजन् यज्ञै-रनाशीः काम उद्धव ।
न याति स्वर्गनरकौ यद्यन्यन्न समाचरेत् ॥ २०.१० ॥

अस्मिँल्लोके वर्तमानः स्वधर्मस्थोऽनघः शुचिः ।
ज्ञानं विशुद्धमाप्नोति मद्भक्तिं वा यदृच्छया ॥ २०.११ ॥

स्वर्गिणोऽप्येत-मिच्छन्ति लोकं निरयिणस्तथा ।
साधकं ज्ञान-भक्तिभ्या-मुभयं तदसाधकम् ॥ २०.१२ ॥

न नरः स्वर्गतिं काङ्क्षे-न्नारकीं वा विचक्षणः ।
नेमं लोकं च काङ्क्षेत देहावेशात् प्रमाद्यति ॥ २०.१३ ॥

एतद्विद्वान् पुरा मृत्योरभवाय घटते सः ।
अप्रमत्त इदं ज्ञात्वा मर्त्यमप्यर्थ-सिद्धिदम् ॥ २०.१४ ॥

छिद्यमानं यमैरेतैः कृतनीडं वनस्पतिम् ।
खगः स्वकेत-मुत्सृज्य क्षेमं याति ह्यलंपटः ॥ २०.१५ ॥

---

20. 10. உத்தவா! ஸ்வதர்மத்தில் நிலைபெற்றவனும், பலனை விரும்பாதவனுமாகிய புருஷன் நிஷித்த கர்மத்தைச் செய்யாமல் யாகங்களால் பூஜிப்பானாகில் ஸ்வர்க்கத்தையோ நரகத்தையோ அடையமாட்டான்.

20. 11. இவ்வுலகில் இவ்வாறு ஸ்வதர்மத்தில் நிலைபெற்று இருப்பவன் பாவம் நீங்கிப் பரிசுத்தனாய்த் தெளிந்த ஞானத்தை அடைவான். அல்லது என் பக்தியையடைவான்.

20. 12. ஸ்வர்க்கத்திலுள்ளவர்கள் இவ்வுலகில் பிறவியை இச்சிக்கிறார்கள்; அவ்வாறே நரகத்திலுள்ளவர்களும் (இச்சிக்கிறார்கள்). இப் பிறவி ஞானத்திற்கும் பக்திக்கும் ஸாதகமானது; ஸ்வர்க்கவாசமும் நரகவாசமும் ஸாதகமாவதில்லை.

20. 13. அறிவுடைய மனிதன் ஸ்வர்க்கம் செல்லுதலையோ நரகம் செல்லுதலையோ விரும்பமாட்டான். இப்பிறவியையும் விரும்பமாட்டான். தேகத்தில் புகுந்து பற்றுக் கொள்ளுவதாலேயே தவறுதலடைகிறான்.

20. 14. இவ்வுடல் காரிய சித்தியைக் கொடுப்பதாயினும் அழிவுடையதென்பதை மறந்துவிடாமல் மனதிலிருத்தி அறிவாளியானவன் சாவுக்கு முன் பிறவித்தளையை நீக்க முயற்சிக்க வேண்டும்.

20. 15. யமபடர்களைப்போன்ற இரவு பகல்களால் பிளக்கப்படுவதும் கூடு கட்டி வாழும் மரம் போலிருப்பதுமான இந்த உடலாகிய இருப்பிடத்தை ஜீவனாகிய பக்ஷி விட்டுப் பற்று நீங்கி க்ஷேமத்தை யடைகிறது.

अहोरात्रैश्छिद्यमानं बुद्ध्वाऽऽयुर्भयवेपथुः।
मुक्तसंगः परं बुद्ध्वा निरीह उपशाम्यति ॥ २०.१६ ॥

नृदेहमाद्यं सुलभं सुदुर्लभं प्लवं सुकल्पं गुरुकर्णधारम्।
मयानुकूलेन नभस्वतेरितं पुमान् भवाब्धिं न तरेत् स आत्महा
॥ २०.१७ ॥

यदारंभेषु निर्विण्णो विरक्तः संयतेन्द्रियः।
अभ्यासेनात्मनो योगी धारयेदचलं मनः ॥ २०.१८ ॥

धार्यमाणं मनो यर्हि भ्राम्यदाश्वनवस्थितम्।
अतन्द्रितोऽनुरोधेन मार्गेणात्मवशं नयेत् ॥ २०.१९ ॥

मनोगतिं न विसृजेज्जितप्राणो जितेन्द्रियः।
सत्त्वसंपन्नया बुद्ध्या मन आत्मवशं नयेत् ॥ २०.२० ॥

---

20. 16. இரவாலும் பகலாலும் ஆயுள் பிளக்கப்படுவதை அறிந்து நடுங்கும் மனிதன் பற்றுதலை விட்டுப் பரதத்துவத்தை யறிந்து எதையும் வேண்டாதவனாய் ஒழிவடையவேண்டும்.

20. 17. (தர்மஸாதனத்திற்கு) மூலகாரணமாகியதும் அடைதற்கரியதாயினும் எளிதிற் கிட்டியிருப்பதும், திடமானதும், குருவாகிய படகோட்டியை யுடையதும், என் கிருபையாகிய அனுகூலக்காற்றால் செலுத்தப்படுவதும் ஆகிய ஓடம் போன்ற தேகத்தை, யடைந்தும் பிறவிக் கடலை ஒருவன் தாண்டாமற் போனால், அவன் தற்கொலை செய்து கொண்டவனாவான்.

20. 18. யோகியானவன் எப்பொழுது ஆரம்பிக்கப்பட்ட காரியங்களில் வெறுப்படைந்து வைராக்கிய மடைகின்றானோ அப்போது இந்திரியங்களை யடக்கித் தொடர்ச்சியான ஆத்மத் தியானப் பழக்கத்தால் மனதை நிலைநிறுத்த வேண்டும்.

20. 19. தாரணையில் முயலும் மனம் எதுவரை நிலைபெறாமல் சுழலுகிறதோ அதுவரை அதன் வழியாகவே விட்டுச் சோம்பலின்றித் தன்வசமாக்க வேண்டும்.

20. 20. பிராணனை ஜயித்தவனும் இந்திரியங்களை ஜயித்தவனுமாகிய யோகி மனதை அதன் போக்கின்படி விடக்கூடாது. ஸத்துவம் மேலோங்கிய புத்தியால் மனதைத் தன் வசமாக்க வேண்டும்.

---

20. 17. ஒ. (ந சேதிஹாவேதீன் மஹதீ விநஷ்டி :) இங்கேயே இச்சரீர மிருக்கும் போதே ஒருவன் ஆத்மஞானத்தை யடையாமற்போனால் அவன் பெரிய நஷ்டத்தை யடைந்தவனாவான்.
—ஈ ச. உப.

20. 21. அர்வத:—அச்வஸ்ய।

एष वै परमो योगो मनसः संग्रहः स्मृतः ।
हृदयज्ञत्व-मन्विच्छन् अदान्तस्येवार्वतो यथा ॥ २०.२१ ॥

सांख्येन सर्वभावानां प्रतिलोमानुलोमतः ।
भवाप्ययावनुध्यायेन्मनो यावत् प्रसीदति ॥ २०.२२ ॥

निर्विण्णस्य विरक्तस्य पुरुषस्योक्तवेदिनः ।
मनस्त्यजति दौरात्म्यं चिन्तितस्यानुचिन्तया ॥ २०.२३ ॥

यमादिभि-र्योगपथै-रान्वीक्षिक्या च विद्यया ।
ममार्चोपासनाभिर्वा नान्यै-र्योग्यं स्मरेन्मनः ॥ २०.२४ ॥

यदि कुर्याद् प्रमादेन योगी कर्मविगर्हितम् ।
योगेनैव दहेदंहो नान्यत्तत्र कदाचन ॥ २०.२५ ॥

स्वे स्वेऽधिकारे या निष्ठा स गुणः परिकीर्तितः ।
विपर्ययस्तु दोषस्स्यादुभयोरेष निश्चयः ॥ २०.२६ ॥

20. 21. மனதை அடக்குவதாகிய இதுவே சிறந்த யோகம் என்று கூறப்படுகிறது. அடங்காத குதிரையின் உள்ளத்தை யறிந்தவன் அதன் போக்கில் சிறிது விட்டு அடக்குவதுபோல் அடக்கவேண்டும்.

20. 22. மனது தெளிந்து நிச்சலமாகும் வரை தத்துவ விசாரத்தால் உண்டாய பொருள்களுக் கெல்லாம் (பிரகிருதி மஹத்தத்துவம் என்ற கிரமத்தில்) இறங்கும் வரிசையில் தோற்றமும் ஒடுங்கும் வரிசையில் அழிவும் ஏற்படுவதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

20. 23. விஷயங்களை வெறுத்தவனும் வைராக்கிய மடைந்தவனும் உபதேசத்தை உள்ளபடி உணர்ந்தவனுமாகிய புருஷனுடைய மனது (அந்த உபதேசத்தின் கருத்தை) சிந்தித்ததைத் தொடர்ந்து சிந்திப்பதால் அஸத்தில் அபிமானத்தை விடுகிறது.

20. 24. முனிவன் இயமம் முதலிய யோக மார்க்கங்களாலோ நித்தியாநித்திய விவேகமாகிய வித்தையாலோ அல்லது என் பூஜை உபாஸனை முதலியவற்றாலோ மற்ற வகையில் அடைய முடியாத என்னைச் சிந்திக்க வேண்டும்.

20. 25. யோகியானவன் தவறுதலால் இழிவான காரியத்தைச் செய்ய நேர்ந்தால், அந்த தோஷத்தை யோகத்தாலேயே போக்கவேண்டும். ஒருபோதும் மற்ற (பிராயச்சித்தம்) எதையும் செய்யக் கூடாது.

20. 26. அவரவர்க் கேற்றபட்ட செயலில் நிலை நிற்றலே குணம் எனக் கூறப்படுவது. அதற்கு மாறானது தோஷம். இவ்விரண்டையும் பற்றிய முடிவு இதுவே.

20. 21. दम्यस्येवार्वतो मुहुः ।

20. 23. दौर्भाग्यं ।

20. 24. नान्यैर्योगं ।

जातश्रद्धो मत्कथासु निर्विण्णः सर्वकर्मसु ।
वेद दुःखात्मकान् कामान् परित्यागेऽप्यनीश्वरः ॥ २०.२८ ॥

नैरपेक्ष्यं परं प्राहुर्निःश्रेयस-मनल्पकम् ।
तस्मान्निराशिषो-भक्तिर्निरपेक्षस्य मे भवेत् ॥ २०.३५ ॥

न मय्येकान्त-भक्तानां गुणदोषोद्भवा गुणाः ।
साधूनां समचित्तानां बुद्धेः परमुपेयुषाम् ॥ २०.३६ ॥

एवमेतान् मयाऽऽदिष्टा-ननुतिष्ठन्ति मे पथः ।
क्षेमं विन्दन्ति मत्स्थानं यद् ब्रह्म परमं विदुः ॥ २०.३७ ॥

20. 28. என் கதைகளில் சிரத்தையுடையவனும், மற்ற கர்மங்களில் விருப்பமில்லாதவனுமாகிய புருஷன் காமசுகங்களை விடுதற்குச் சக்தியற்றவனாயினும் அவைகள் துன்பவடிவானவை என்பதை அறிவான்.

20. 35. வேண்டாமையே குறைவற்றதும் சிறந்ததுமான நலனைத் தரும் உத்தம ஸாதனம் என்று கூறுகின்றனர். அதனால் ஆசையற்றவனாய் வேட்கையிற்றவனா யிருப்பவனுக்கு என்னிடம் பக்தி உண்டாகிறது.

20. 36. ஸாதுக்களும் ஸமதர்சிகளும் புத்திக்கு அப்பாற்பட்ட பரமபுருஷனை அடைந்தவர்களுமாகிய என்னுடைய ஏகாந்த பக்தர்களுக்குக் குணதோஷங்களாலுண்டாகும் நன்மை தீமைகள் இல்லை.

20. 37. இவ்விதம் என்னால் கூறப்பட்ட என் வழியைப் பின்பற்றுபவர்கள் க்ஷேமமான என் ஸ்தானத்தை அடைகிறார்கள். ஒப்புயர்வற்ற பிரம்மத்தை அறிகிறார்கள்.

———

20. 37. ஒ. இருள் சேர் இரு வினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. —குறள்.

ஒ. பிரம்மானந்தத்தை யறிந்தவன் எக் காரணத்தாலும் பயப்படுவதில்லை. "நான் நல்லது ஏன் செய்யாது போனேன், பாவத்தை ஏன் செய்தேன்" என்ற எண்ணம் அவனை வருத்துவதில்லை. —தை. உப. 2. 9.

(அநேன ச ப்ரகாரேண ஜ்ஞானபக்தி-ஸித்தானாம் ந குணதோஷா இதி விரோத-பரிஹார-முக்தம்) இங்ஙனம் ஞானத்திலும் பக்தியிலும் சித்தி எய்தியவர்களுக்கு குணதோஷங்கள் இல்லை என்று முதலில் கேட்ட கேள்விக்குப் பரிஹாரம் கூறப்பட்டது.

21-வது அத்தியாயத்தில் கர்மயோகம் பக்தியோகம் ஞானயோகம் இவைகளில் மனம் செல்லாத கர்மிகளுக்கு திரவியம் தேசம் முதலியவற்றின் குணதோஷங்கள் கூறப்படுகின்றன.

22-வது அத்தியாயத்தில் பிரகிருதி புருஷ விவேகமும் பிறப்பிறப்பின் போக்கும் கூறப்படுகின்றன.

20, 35, श्रेयस-मनल्पकम् ।

॥ भिक्षुगीता ॥

श्रीभगवानुवाच—

अवन्तिषु द्विजः कश्चिदासीदाढ्यतमः श्रिया।
वार्तावृत्तिः कदर्यस्तु कामी लुब्धोऽतिकोपनः ॥ २३.६ ॥

ज्ञातयोऽतिथयस्तस्य वाङ्मात्रेणापि नार्चिताः।
शून्यावसथ आत्मापि काले कामैरनर्चितः ॥ २३.७ ॥

दुःशीलस्य कदर्यस्य द्रुह्यन्ते पुत्रबान्धवाः।
दारा दुहितरो भृत्या विषण्णा नाचरन् प्रियम् ॥ २३.८ ॥

तस्यैवं यक्षवित्तस्य च्युतस्योभयलोकतः।
धर्मकामविहीनस्य चुक्रुधुः पंचभागिनः ॥ २३.९ ॥

பிக்ஷுகீதை

ஸ்ரீ பகவான் கூறியது—

23. 6. அவந்தி தேசத்தில் ஒரு பிராம்மணன் இருந்தான். அவன் செல்வச் செருக்கேறியவன். விவசாயமும் வியாபாரமும் தொழிலாய்க் கொண்டவன். கஞ்சனாக வும், காமியாகவும், லோபியாகவும், கோபியாகவு மிருந்தான்.

23. 7. இவனுடைய உறவினரும் அதிதிகளும் வாய்ச் சொல்லால்கூட இவனால் உபசரிக்கப்பட்டவர்களல்லர். (தானும்) உரியகாலத்தில் ஆசைகளை அனுபவியாதவன். அறமும் இன்பமும் இல்லாமல் சூனியமாயிருந்த வீட்டிலும் உடலிலும் நான் என்ற அஹங்காரம் மட்டும் மிகுந்தவனாக இருந்தான்.

23. 8. துர்க்குணம் படைத்த இந்தக் கஞ்சனுடைய பிள்ளைகளும் பெண்களும் மனைவியர்களும் உறவினர்களும் வேலைக்காரர்களும் இவனுக்குத் துரோகம் செய்பவர் களாயினர். வெறுப்படைந்து இவனுக்குப் பிரியமானதை எவரும் செய்யவில்லை.

23. 9. யக்ஷனைப்போல் (காப்பதற்குமட்டும்) பொருள் படைத்தவனும் இவ்வுல கையு மிழந்தவனும், அறமும், இன்பமும் இல்லாதவனுமாகிய இவனிடம் (பஞ்சமஹா யக்ஞத்தில் பாகம் பெறவேண்டிய) ஐந்து வகையான தேவதைகளும் கோப மடைந்தனர்.

---

23. 6. **கதர்ய:—ஒ.** 'ஆத்மானம் தர்மக்ருத்யஞ்ச புத்ரதாராம்ச்ச பீடயன் । தேவதாதிதி-ப்ருத்யாம்ச்ச ஸ கதர்ய இதி ஸ்ம்ருத: ॥'

तद्वध्यानविस्रस्त-पुण्यस्कन्धस्य भूरिद ।
अर्थोऽप्यगच्छन्निधनं बह्वायास-परिश्रमः ॥ २३.१० ॥

ज्ञातयो जगृहुः किंचित् किंचिद् दस्यव उद्धव ।
दैवतः कालतः किंचिद् ब्रह्मबन्धोर्नृ-पार्थिवात् ॥ २३.११ ॥

स एवं द्रविणे नष्टे धर्मकामविवर्जितः ।
उपेक्षितश्च स्वजनैश्चिन्तामाप दुरत्ययाम् ॥ २३.१२ ॥

तस्यैवं ध्यायतो दीर्घं नष्टरायस्तपस्विनः ।
खिद्यतो बाष्पकण्ठस्य निर्वेदः सुमहानभूत् ॥ २३.१३ ॥

स चाहेदमहो कष्टं वृथाऽऽत्मा मेऽनुतापितः ।
न धर्माय न कामाय यस्यार्थायास ईदृशः ॥ २३.१४ ॥

नूनं मे भगवांस्तुष्टः सर्वदेवमयो हरिः ।
येन नीतो दशामेतां निर्वेदश्चात्मनः प्लवः ॥ २३.२८ ॥

---

23. 10. வள்ளலாகிய உத்தவா! அவர்களின் ஆதரவின்மையால் புண்ணியம் முழுதும் சிதறிய அவனுக்கு மிகுந்த பாடுபட்டுத் தேடிய பொருளும் அழிந்துபோயிற்று.

23. 11. உத்தவா! அந்தப் பிராம்மணதமனுடைய பொருளில் ஒரு பகுதியை ஞாதிகள் கைப்பற்றிக் கொண்டார்கள்; ஒரு பகுதியைக் கள்ளர் கொண்டுபோனார் கள்; ஒரு பகுதி தெய்வத்தாலும் காலத்தாலும் மனிதராலும் அரசராலும் கவரப் பட்டது.

23. 12. இவ்வாறு பொருள் நஷ்டமான பின்பு அறத்தையும் இன்பத்தையும் இழந்த அவன் தன் ஜனங்களாலும் ஒதுக்கப்பட்டு கடத்தற்கரிய கவலை யடைந்தான்.

23. 13. பொருளை யிழந்து தவிப்பவனும், நீண்ட சிந்தனையி லாழ்ந்தவனும், கண்ணீர் தொண்டையி லடைத்துக் கொண்டவனும், துன்பம் மிக்கவனுமாகிய அவனுக்கு மிகுந்த வைராக்கியம் உண்டாயிற்று.

23. 14. அவன் பின்வருமாறு கூறலானான்: 'ஐயோ! கஷ்டம்! எந்தப் பொருளுக்காக நான் இந்தமாதிரி பாடு பட்டேனோ, உடலை வீணே வருத்தினேனோ, அது அறத்திற்கு மில்லை, இன்பத்திற்கு மில்லை.

23. 28. *'ஸர்வதேவஸ்வரூபியும்* பகவானுமாகிய விஷ்ணு என்னிடம் இப்போது ப்ரீதி யடைந்திருக்கிறார் என்பது நிச்சயம். *அவராலன்றோ எனக்கு இந்த நிலைமை* ஏற்பட்டு ஆத்மாவிற்குத் தெப்பம் போன்ற வைராக்கியமும் ஏற்பட்டுள்ளது.

---

23. 10. तद्भिध्यान ।

सोऽहं कालावशेषेण शोषयिष्येऽङ्गमात्मनः ।
अप्रमत्तोऽखिलस्वार्थे यदि स्याद् सिद्ध आत्मनि ॥ २३.२९ ॥

तत्र मामनुमोदेरन् देवास्त्रिभुवनेश्वराः ।
मुहूर्तेन ब्रह्मलोकं खट्वांगः समसाधयत् ॥ २३.३० ॥

इत्यभिप्रेत्य मनसा ह्यावन्त्यो द्विजसत्तमः ।
उन्मुच्य हृदयग्रन्थीन् शान्तो भिक्षुरभून्मुनिः ॥ २३.३१ ॥

तं वै प्रवयसं भिक्षु-मवधूत-मसज्जनाः ।
दृष्ट्वा पर्यभवन् भद्र बह्वीभिः परिभूतिभिः ॥ २३.३३ ॥

केचित्त्रिवेणुं जगृहुरेके पात्रं कमण्डलुम् ।
पीठं चैकेऽक्षसूत्रं च कन्थां चीराणि केचन ॥ २३.३४ ॥

---

23. 29. 'அப்படிப்பட்ட நான் மீதி வாழ்கால மிருக்குமானால் அந்தக் காலத்தில் (தவத்தால்) உடலை உலர்த்தி மனதில் சந்தோஷம் நிறைந்த கார்யத்தில் அஜாக்கிரதை யில்லாதவனாகவும் இருக்கப் போகிறேன்.

23. 30. 'அதில் மூன்று உலகங்களுக்கும் நாயகர்களான தேவர்கள் எனக்கு அருள்புரிய வேண்டும். கட்வாங்கன் ஒரு முகூர்த்தத்தில் பிரம்மலோகத்தைச் சாதித்துக் கொள்ளவில்லையா?'

23. 31. இப்படி மனதி லெண்ணிக்கொண்டு அந்த அவந்திதேசத்துப் பிராம்மணோத்தமன் இருதயச் சிக்கல்களறுபட்டுச் சாந்தனாகி முனிவனும் துறவியு மாயினான்.

23. 33. மங்களவடிவினனே! வயது முதிர்ந்தவனும் அவதூதனுமாகிய இந்தத் துறவியை துஷ்ட ஜனங்கள் கர்வங்கொண்டு பலவகைகளில் அவமானப் படுத்தினார்கள்.

23. 34. சிலர் த்ரிதண்டத்தைப் பிடுங்கிக் கொண்டார்கள், சிலர் பாத்திரத்தையும் கமண்டலுவையும், சிலர் ஆஸனத்தையும் ஜபமாலையையும், சிலர் கந்தைத் துணியையும் மரவுரியையும் எடுத்துக் கொண்டார்கள்.

---

23. 30. ஒ. அப்தார்த்தேன ஹரிம் ப்ரஸன்ன-மகரோத் ஔத்தானபாதி: சிசு:
ஸப்தாஹேன ந்ருப: பரீக்ஷிதபலா யாமார்த்தத: பிங்கலா |
கட்வாங்கோ கடிகாத்வயேன நவதி-ப்ராயோऽபி தம் நவ்யதே
த்வாம் காருண்ய-நிதிம் ப்ரபத்ய சரணம் சேஷாயுஷா தோஷயே ||
—குருவாயூர் செல்லப் பரம்பு.

क्षिपन्त्येकेऽवजानन्त एष धर्मध्वजः शठः ।
क्षीणवित्त इमां वृत्ति-मग्रहीत् स्वजनोज्झितः ॥ २३.३८ ॥

अहो एष महासारो धृतिमान् गिरिराडिव ।
मौनेन साधयत्यर्थं बकवद् दृढ-निश्चयः ॥ २३.३९ ॥

परिभूत इमां गाथा-मगायत नराधमैः ।
पातयद्भिः स्वधर्मस्थो धृतिमास्थाय सात्त्विकीम् ॥ २३.४२ ॥

भिक्षुरुवाच—

नायं जनो मे सुखदुःखहेतु-र्न देवताऽऽत्मा ग्रहकर्मकालाः ।
मनः परं कारणमामनन्ति संसारचक्रं परिवर्तयेद् यत् ॥ २३.४३ ॥

दुःखस्य हेतु-र्यदि देवतास्तु किमात्मनस्तत्र विकारयोस्तत् ।
यदङ्गमङ्गेन निहन्यते क्वचित् क्रुध्येत कस्मै पुरुषः स्वदेहे ॥ २३.५२ ॥

---

23. 38. 'தர்மக் கொடி பிடிக்கும் இவன் வஞ்சகன், பொருளை இழந்து உற்ற சுறவினரால் தள்ளப்பட்டு வயிற்றுப் பிழைப்புக்காக இந்தத் தொழிலைக் கைக்கொண்டிருக்கிறான்' என்று நிந்தித்து அவமதித்தார்கள்.

23. 39. 'ஆச்சரியம்! மிக வன்மையுள்ள இவன் பெரிய மலையைப்போல் அழுத்தமானவன். திட நிச்சயத்துடன் கொக்கைப்போல் மௌனத்தால் காரியத்தைச் சாதித்துக் கொள்ளுகிறான்' (என்று சிலர் பரிகசித்தனர்.)

23. 42. தர்மத்தினின்று தவறும்படி தூண்டப்பட்டும் இழிவான மனிதர்களால் அவமதிக்கப்பட்டும் ஸத்துவகுணத்தா லேற்பட்ட திடச் சித்தத்தால் தர்மத்தில் நிலை பெற்றிருந்த அவன் பின்வருமாறு கூறினான்.

துறவி கூறியது—

23. 43. இந்த ஜனங்கள் என்னுடைய சுகத்துக்கோ துக்கத்துக்கோ காரணமாக மாட்டார்கள். தேவதைகளோ, ஆத்மாவோ, கிரகங்களோ, கர்மமோ, காலமோ காரண மாகமாட்டா. மனதையே முக்கிய காரணமாகக் கூறுகின்றனர். மனதாலேயே ஸம்ஸார மண்டலம் சுழலுகிறது.

23. 52. துக்கத்திற்கு தேவதைகள் காரண மென்றால் (அந்த தேவதைகள் எல்லா சரீரங்களிலும் ஸமமாயிருப்பதால்) ஆத்மாவுக்கு என்ன? விகாரமடையும் தேவதைகளுக்கே அந்தத் துன்பம். ஒரு புருஷனுடைய அவயவம் மற்றொரு அவயவத்தால் அடிபட்டால் அவற்றினின்று வேறான புருஷன் யாரிடம் கோபித்துக் கொள்ளலாம்?

आत्मा यदि स्यात् सुखदुःखहेतुः
किमन्यतस्तत्र निजस्वभावः ।
न ह्यात्मनोऽन्यद् यदि तन्मृषा स्यात्
क्रुध्येत कस्मान्न सुखं न दुःखम् ॥ २३.५३ ॥

ग्रहा निमित्तं सुखदुःखयोश्चेत्
किमात्मनोऽजस्य जनस्य ते वै ।
ग्रहै-र्ग्रहस्यैव वदन्ति पीडां
क्रुध्येत कस्मै पुरुषस्ततोऽन्यः ॥ २३.५४ ॥

कर्मास्तु हेतुः सुखदुःखयोश्चेत्
किमात्मन-स्तद्धि जडाजडत्वे ।
देहस्त्वचित् पुरुषोऽयं सुपर्णः
क्रुध्येत कस्मै न हि कर्ममूलम् ॥ २३.५५ ॥

कालस्तु हेतुः सुखदुःखयोश्चेत्
किमात्मन-स्तत्र तदात्मकोऽसौ ।
नाग्नेर्हि तापो न हिमस्य तत् स्यात्
क्रुध्येत कस्मै न परस्य द्वन्द्वम् ॥ २३.५६ ॥

---

23. 53. சுகதுக்கங்களுக்கு ஆத்மா காரணமென்ருல், பிறகு என்ன பேச்சு? அதுவே ஆத்மாவின் ஸ்வபாவ மென்ருகிறது. உண்மையில் ஆத்மாவைத் தவிர ஒன்றுமே இல்லை. இருப்பதாய்த் தோன்றிஞல் அது பொய். என்ன காரணத்தைக் கொண்டு கோபமடையலாம்? சுகமுமில்லை துக்கமுமில்லை.

23. 54. சுகதுக்கங்களுக்கு கிரகங்கள் காரணமென்ருல், அவை பிறப்புடைய தேகத்துக்கேயாம். பிறப்பில்லாத ஆத்மாவுக்கு என்ன? கிரகங்களால் கிரகத்திற்கே பீடையைக் கூறுகிருர்கள். அவற்றினின்று வேருன புருஷன் யாரிடம் கோப மடையலாம்?

23. 55. சுகதுக்கங்களுக்குக் கருமம் காரண மென்ருல் ஆத்மாவுக்கு என்ன? கர்மம் ஜடத்தையோ அல்லது ஜடமில்லாததையோ பாதிக்கவேண்டும். தேகம் ஜடம் (அதற்கு சுகதுக்கமில்லை); புருஷன் சித்ஸ்வரூபன் (அவனை சுகதுக்கம் பற்ருது.) ஆகையால் யாரிடம் கோப மடையலாம்? உண்மையில் கருமம் காரணமாகாது.

23. 56. சுகதுக்கங்களுக்குக் காலம் காரண மென்ருல், ஆத்மாவே கால ஸ்வரூபி யாதலால் ஆத்மாவுக்கு என்ன? அக்கினியை உஷ்ணம் பாதிக்காது, பனியைக் குளிர் பாதிக்காது. ஆகையால் யாரிடம் கோப மடையலாம்? உண்மையில் ஆத்மாவுக்கு துவந்துவமே கிடையாது.

न केनचित् क्वापि कथंचनास्य
द्वन्द्वोपरागः परतः परस्य ।
यथाहमः संसृति-रूपिणः-स्या-
देवं प्रबुद्धो न बिभेति भूतैः ॥ २३.५७ ॥

एतां स आस्थाय परात्मनिष्ठा-
मध्यासितां पूर्वतमैर्महर्षिभिः ।
अहं तरिष्यामि दुरन्तपारं
तमो मुकुन्दांघ्रि-निषेवयैव ॥ २३.५८ ॥

श्रीभगवानुवाच—
निर्विद्य नष्टद्रविणो गतक्लमः
प्रव्रज्य गां पर्यटमान इत्थम् ।
निराकृतोऽसद्भिरपि स्वधर्मा-
दकंपितोऽमुं मुनिराह गाथाम् ॥ २३.५९ ॥

सुखदुःखप्रदो नान्यः पुरुषस्यात्म-विभ्रमः ।
मित्रोदासीनरिपवः संसार-स्तमसः कृतः ॥ २३.६० ॥

तस्मात् सर्वात्मना तात निगृहाण मनो धिया ।
मय्यावेशितया युक्त एतावान् योगसंग्रहः ॥ २३.६१ ॥

॥ इति भिक्षुगीता ॥

---

23. 57. அகங்கார வசப்பட்டுச் சம்சாரத்தி லுழல்பவனுக்குத் துன்பமுண்டாவது போல் பிரகிருதிக்கும் அப்பாற்பட்ட ஆத்மாவுக்கு எதனுலும் எந்த விதத்திலும், எப் போதும் துவந்துவத்தினுல் பீடை ஏற்படாது. இத்தகைய அறிவு விழிப்பேற்பட்டவன் உண்டான எதினின்றும் பய மடைய மாட்டான்.

23. 58. முன்னோர்க்கும் முன்னோர்களான மகரிஷிகளால் அனுஷ்டிக்கப் பட்ட இந்தப் பரமாத்ம நிஷ்டையை நான் அடைந்து, கரை காண முடியாத ஸம்ஸாரத்தை முகுந்தனுடைய பாதசேவையால் தாண்டுகிறேன்.

ஸ்ரீ பகவான் கூறியது—
23. 59. பொருளை இழந்து, வைராக்கிய மடைந்து துறவியாகித் துன்பம் நீங்கி பூமியில் சஞ்சரித்த அந்த முனிவன் கெட்டவர்களால் அவமானப்படுத்தப் பட்ட போதிலும் ஸ்வதர்மத்திலிருந்து அசையாமல் இந்தப் பிரசித்தமான பேச்சைக் கூறினன்.

23. 60. 'புருஷனுக்கு சுகதுக்கங்களைக் கொடுப்பவன் மற்ற எவனு மில்லை. நண்பன், நடுவலவன், சத்துரு எனப்படுபவர்களும், பிறவிச் சுழலும், அஞ்ஞானத்தின் விளைவான மனதின் பிரமமே யாகும்.'

23. 61. ஆகையால், உத்தவா! என்னிடம் நிலை பெற்ற புத்தியுடன் ஸாவதான ஞக எல்லாவற்றுலும் மனதை யடக்குவாயாக. இதுவே யோகத்தின் சுருக்கம்.

பிக்ஷுகீதை முற்றும்.

॥ चरम - उपदेशः ॥

केचिद्देहमिमं धीरा सुकल्पं वयसि स्थितम् ।
विधाय विविधोपायै-र्योग युञ्जन्ति सिद्धये ॥ २८.४२ ॥

न हि तत्कुशलादृत्यं तदायासो ह्यपार्थकः ।
अध्रुवत्वाच्छरीरस्य फलस्येव वनस्पतेः ॥ २८.४३ ॥

उद्धव उवाच—

सुदुस्तरा-मिमां मन्ये योगचर्या-मनात्मनः ।
यथांजसा पुमान् सिद्ध्येत् तन्मे ब्रूह्यंजसाच्युत ॥ २९.१ ॥

श्रीशुक उवाच—

इत्युद्धवेनात्यनुरक्त-चेतसा पृष्टो जगत्क्रीडनकः स्वशक्तिभिः ।
गृहीत-मूर्तित्रय ईश्वरेश्वरो जगाद सप्रेम-मनोहरस्मितः ॥ २९.७ ॥

முடிவான உபதேசம்

28. 42. சில தீரர்கள் திறமை வாய்ந்ததும் நல்ல வயதி லிருப்பதுமான இந்தச் சரீரத்தை அந்நிலையிலேயே சித்திசெய்து கொள்ளப் பலவித உபாயங்களால் யோகம் செய்கிறார்கள்.

28. 43. அது அறிவாளிகளால் ஆதரவு செய்யத் தக்கதல்ல. மரத்தில் தோன்றும் பழம்போல் (ஜீவனுடைய கர்மத்தின் பயனாக ஸம்ஸார விருக்ஷத்தில் தோன்றும்) சரீரம் நிலையற்றதாகையால் அம் முறையில் படும் சிரமம் அர்த்த மில்லாதது.

உத்தவர் கூறியது—

29. 1. அச்சுதா! மனம் வசப்படாதவனுக்கு (நீர் கூறிய) இந்த யோகாப்பியாஸம் மிகவும் கடின மென்று எண்ணுகிறேன். புருஷன் எவ்விதம் எளிதில் சித்தி பெறுவானோ அதை எனக்குத் தெளிவுறக் கூறவேண்டும்.

ஸ்ரீசுகர் கூறியது—

29. 7. பிரேமை மிக்க மனமுடைய உத்தவரால் இவ்விதம் கேட்கப்பட்டவரும் (ஸத்துவம் முதலிய குணங்களை யனுசரித்து) மூன்று வடிவங்களை யெடுத்துக்கொண்டு உலக விளையாட்டை நடத்துபவரும், ஈசுவரர்களுக்கு ஈசுவரருமாகிய பகவான் அன்புடனும் மனதைக் கவரும் புன்முறுவலுடனும் பின்வருமாறு கூறினார்.

24-வது அத்தியாயத்தில் சிருஷ்டி பிரளயம் முதலியவற்றைப் பற்றிய விசாரணை.

25-வது அத்தியாயத்தில் முக்குணங்களால் மனதில் ஏற்படும் மாறுபாடுகளின் வர்ணனை.

26-வது அத்தியாயத்தில் ஸத்ஸங்கத்தின் பயனும் துஸ்ஸங்கத்தின் பயனும் துஸ்ஸங்கத்தால் யோகநிலைக் கேற்படும் கெடுதிகளும் கூறப்படுகின்றன.

27-வது அத்தியாயத்தில் பகவானுடைய பூஜைக்குரிய கிரியாயோகம் விளக்கப்படுகிறது.

28-வது அத்தியாயத்தில் ஞானயோகம் மீண்டும் விளக்கப்படுகிறது.

श्रीभगवानुवाच—

हन्त ते कथयिष्यामि मम धर्मान् सुमंगलान् ।
याञ्छ्रद्धयाऽऽचरन् मर्त्यो मृत्युं जयति दुर्जयम् ॥ २९.८ ॥

कुर्यात् सर्वाणि कर्माणि मदर्थं शनकैः स्मरन् ।
मय्यर्पित-मनश्चित्तो मद्धर्मात्म-मनोरतिः ॥ २९.९ ॥

देशान् पुण्यानाश्रयेत मद्भक्तैः साधुभिः श्रितान् ।
देवासुर-मनुष्येषु मद्भक्ताचरितानि च ॥ २९.१० ॥

पृथक् सत्रेण वा मह्यं पर्वयात्रा-महोत्सवान् ।
कारयेद् गीतनृत्याद्यै-र्महाराज-विभूतिभिः ॥ २९.११ ॥

मामेव सर्वभूतेषु बहिरन्तरपावृतम् ।
ईक्षेतात्मनि-चात्मानं यथा खममलाशयः ॥ २९.१२ ॥

ஸ்ரீ பகவான் கூறியது—

29. 8. உத்தவா! மங்களம் மிக்க என்னைச் சார்ந்த தர்மங்களை உமக்கு வர்ணிக்கிறேன். இந்த தர்மங்களை சிரத்தையுடன் அனுஷ்டிக்கும் மனிதன் ஜயித்தற் கரிய ஸம்ஸாரத்தை ஜயிக்கிறான்.

29. 9. மனதையும் சித்தத்தையும் என்னிடம் அர்ப்பித்து என்னைச் சார்ந்த தர்மங்களிலேயே ஆத்மாவிற்கும் மனதிற்கும் மகிழ்ச்சியைத் தேடிக்கொண்டு ஸாவதானமாக என்னை ஸ்மரித்துக்கொண்டு என் பொருட்டே எல்லாக் கர்மங்களையும் செய்யவேண்டும்.

29. 10. என் பக்தர்களான ஸாதுக்களால் ஆசிரயிக்கப்பட்ட புண்ணிய தேசங்களை எப்பொழுதும் ஆசிரயிக்க வேண்டும். தேவர்களிலும் அசுரர்களிலும் மனிதர்களிலும் என் பக்தர்கள் எவர்களோ அவர்களுடைய ஆசாரங்களையும் பின்பற்ற வேண்டும்.

29. 11. தனியாகவோ சேர்ந்தோ ஆடல் பாடல் முதலிய அரசர்க்குரிய பெருமைகளுடன் எனக்கு வர்ஷ உத்ஸவம், யாத்ரோத்ஸவம், மஹோத்ஸவம் இவைகளைச் செய்விக்க வேண்டும்.

29. 12. நிர்மலமான மனமுடையவன், உள்ளும் வெளியும் நிறைந்து ஆவரணமில்லாமல் ஆகாயம் போலிருக்கும் ஆத்மாவாகிய என்னையே எல்லாப் பொருள்களிலும் தன்னிடத்திலும் பார்க்க வேண்டும்.

---

29. 8. धर्मान् महाफलान् । 29. 12. चात्मस्थं ।

इति सर्वाणि भूतानि मद्भावेन महाद्युते।
स भाजयन् मन्यमानो ज्ञानं केवल-माश्रितः ॥ २९.१३ ॥

ब्राह्मणे पुल्कसे स्तेने ब्रह्मण्येऽर्के स्फुलिंगके।
अक्रूरे क्रूरके चैव समदृक् पण्डितो मतः ॥ २९.१४ ॥

नरेष्वभीक्ष्णं मद्भावं पुंसो भावयतोऽचिरात्।
स्पर्धासूयातिरस्काराः साहंकारा वियन्ति हि ॥ २९.१५ ॥

विसृज्य स्मयमानान् स्वान् दृशं व्रीडां च दैहिकीम्।
प्रणमेद् दण्डवद् भूमावाश्व-चाण्डाल-गो-खरम् ॥ २९.१६ ॥

---

29. 13-14. மதிமிக்கோனே! தெளிந்த ஞானத்தை யடைந்தவனும் இங்ஙனம் எல்லாப் பொருள்களையும் என் வடிவாக எண்ணுகிறவனும் துதிப்பவனும், பிராம்மண னிடத்திலும் புலையனிடத்திலும் திருடனிடத்திலும் பிராம்மணபக்தனிடத்திலும், சூரிய னிடத்திலும் அக்கினியிடத்திலும், சாந்தனிடத்திலும் கொடியவனிடத்திலும், ஸமமான பார்வையுடையவனும் எவனோ அவனே பண்டிதன் எனக் கருதப்படுவான்.

29. 15. மனிதர்களிடம் அடிக்கடி என் பாவனையைச் செய்யும் புருஷனுக்கு விரைவில் பொறாமை, அசூயை, அவமதிப்பு, அகங்காரம் ஆகியவை அழிகின்றன.

29, 16. கர்வங்கொண்ட உற்றுருறவினரையும் தேகாபிமான நோக்கத்தையும் வெட்கத்தையும் விட்டு, சண்டாளன், நாய் கோவேறுகழுதை உட்பட எல்லாப் பிராணிகளிடமும் ஜீவகலையில் ஈசுவரன் புகுந் துறைகிறுன் என்று தரையில் தடிபோல் விழுந்து நமஸ்கரிக்க வேண்டும்.

---

29. 14. ஜாதித:, கர்மத:, குணத:, ஸ்வபாவத: வைஷம்யம் சதுர்த்தா।

29. 16. பகவான்—எங்கெங்கே பார்த்தாலும் ஜீவகலையே ஈசுவரகலை என்று எண்ணி வணங்கு.

உத்தவர்—விதிவிலக்கு இல்லையா?

ப.—சண்டாளரையும் வணங்கவேண்டும்.

உ.—மனிதவர்க்கம் அனைத்தையுந் தானே?

ப.—பசு, நாய், கழுதைகளையுங் கூட.

உ.—அப்படிச் செய்தால் உலகம் பழிக்காதா?

ப.—உலகம் எது வேண்டுமானாலும் செய்யட்டும். அதைக் கவனியாதே. அது தேகாபிமானத்தினின்று பிறப்பது.

உ.—எனக்கே வெட்கமா யிருக்காதா?

ப.—நீ உன்னையும் பிறரையும் சரீரம் என்று எண்ணினால்தான் அப்படித் தோன்றும். எல்லோரிடமும் உள்ளவன் நானே யன்றோ? எவர் சிறியர், எவர் பெரியர்? என்னை எங்குங் கண்டு வணங்குதலாகிய இதுவே உபாயங்களனைத்துள்ளும் சிறந்தது; இதுவே என் முடிவான அபிப்பிராயம்.

यावत् सर्वेषु भूतेषु मद्भावो नोपजायते।
तावदेव-मुपासीत वाङ्मनः-कायवृत्तिभिः ॥ २९.१७ ॥

सर्वं ब्रह्मात्मकं तस्य विद्ययाऽऽत्म-मनीषया।
परिपश्यन्नुपरमेत् सर्वतो मुक्तसंशयः ॥ २९.१८ ॥

अयं हि सर्वकल्पानां सध्रीचीनो मतो मम।
मद्भावः सर्वभूतेषु मनो-वाक्काय-वृत्तिभिः ॥ २९.१९ ॥

न ह्यङ्गोपक्रमे ध्वंसो मद्धर्मस्योद्धवाण्वपि।
मया व्यवसितः सम्यङ् निर्गुणत्वा-दनाशिषः ॥ २९.२० ॥

यो यो मयि परे धर्मः कल्प्यते निष्फलाय चेत्।
तदायासो निरर्थः स्याद् भयादेरिव सत्तम ॥ २९.२१ ॥

---

29. 17. எல்லாப் பிராணிகளிடமும் எதுவரை என் பாவனை (திடமாக) ஏற்படவில்லையோ அதுவரை மனோவாக்காயங்களின் செயல்களால் இந்தமாதிரி உபாசிக்க வேண்டும்.

29. 18. எங்கும் ஆத்மாவைக் காணும் உபாசனையால் அவனுக்கு எல்லாம் பிரம்மமாகவே ஆய்விடும். அப்படி பிரம்மத்தை எங்கும் பார்த்துக் கட்டுகளினின்று விடுபட்டவனாய் (கர்மங்கள்) எல்லாவற்றினின்றும் ஒழிவடைகிறான்.

29. 19. மனோ வாக் காயங்களின் செயல்களால் எல்லாப் பிராணிகளிடமும் என்னுடைய பாவனையைச் செய்தலாகிய இதுவே உபாயங்க ளனைத்துள்ளும் நல்ல உபாயம் என்பது என்னுடைய நிச்சயம்.

29. 20. அன்பா! உத்தவா! இந்த ஆசை யற்ற என் தர்மத்தை ஆரம்பித்து நடத்துவதில் அணுவளவேனும் அழிவேற்படாது. நிர்க்குணமாகையால் அதுவே சிறந்த தென்று என்னால் நிச்சயிக்கப்பட்டுள்ளது.

29. 21. ஸாது சிரேஷ்டா! எது எது எனக்கு அர்ப்பிக்கப் பட்டதோ அது அது பயம் முதலியவற்றால் கதறுவதுபோல் (உலகில்) பயனற்ற செய்கையாயினும் நிஷ்காமமா யிருந்தால் அதுவும் தர்மமே.

---

29. 19. இது உத்தவகீதையின் முடிவான பொருள்.

29. 21. ஒ. இதில் முயற்சி வீணாதல் இல்லை; எதிரிடையான பலன் உண்டாகாது; இந்த தர்மத்தின் சிறிதுங்கூட பெரிய பயத்தினின்றும் காப்பாற்றும். —கீ. 2-40.

ஒ. யதா கம்ஸாதெள மத்ஸம்பந்த-மாத்ரேண பயாதேரப்யாயாஸோ நிரர்த்தோ ந பவதி மோக்ஷஸம்பாதகத்வாத் இத்யர்த்த: ॥

एषा बुद्धिमतां बुद्धिर्मनीषा च मनीषिणाम् ।
यत् सत्य-मनृतेनेह मर्त्येनाप्नोति माऽमृतम् ॥ २९.२२ ॥

एष तेऽभिहितः कृत्स्नो ब्रह्मवादस्य संग्रहः ।
समास-व्यास-विधिना देवानामपि दुर्गमः ॥ २९.२३ ॥

अभीक्ष्णशस्ते गदितं ज्ञानं विस्पष्ट-युक्तिमत् ।
एतद् विज्ञाय मुच्येत पुरुषो नष्ट-संशयः ॥ २९.२४ ॥

सुविविक्तं तव प्रश्नं मयैतदपि धारयेत् ।
सनातनं ब्रह्म गुह्यं परं ब्रह्माधिगच्छति ॥ २९.२५ ॥

य एतन्मम भक्तेषु संप्रदद्यात् सुपुष्कलम् ।
तस्याहं ब्रह्मदायस्य ददाम्यात्मान-मात्मना ॥ २९.२६ ॥

य एतत् समधीयीत पवित्रं परमं शुचि ।
स पूयेताहरहर्मां ज्ञानदीपेन दर्शयन् ॥ २९.२७ ॥

29. 22. பொய்யான இந்த தேகத்தால் மெய்யான என்னையும், அழிவுடைய தேகத்தால் அழிவற்ற என்னையும் அடையலாம் என்பது புத்திமான்களின் கொள்கை. அதுவே அறிவாளிகளின் நிச்சயம்.

29. 23. ஸாதுவே! தேவர்களாலும் அடைதற்கரிய பிரம்மதத்துவத்தின் சுருக்கம் கூட்டியும் வகுத்தும் உமக்குக் கூறப்பட்டது.

29. 24. தெளிந்த யுக்தியுடன் கூடிய இந்த ஞானம் உமக்கு மீண்டும் மீண்டும் கூறப்பட்டது. இதை யறிந்த புருஷன் சந்தேகம் நீங்கி முக்தி யடைவான்.

29. 25. உமது கேள்விக்கு என்னால் தெளிவுறக் கூறப்பட்டதாகிய இதை எவன் உள்ளத்தில் கொள்ளுகின்றானோ அவன் என்றுமுள்ளதும் வேதத்தின் உட்பொருளுமான பரப்பிரம்மத்தை யடைகிறான்,

29. 26. என் பக்தர்களிடம் செழிக்கும்படி இதை எவன் கொடுக்கிறானோ அந்த பிரம்மஞானவள்ளலுக்கு நான் என்னுடைய ஆத்மாவையே (நிஜஸ்வரூபத்தையே) கொடுக்கிறேன்.

29. 27. எவன் ஞான ஒளியால் என்னைத் தரிசித்துப் புனிதமானதும் சிறந்ததும் சுத்தி செய்வதுமான இந்த உபதேசத்தை நாள் தோறும் படிக்கிறானோ அவன் புனிதனாகிறான்.

29. 22. ஒ. 'அநித்யைர்-த்ரவ்யை: ப்ராப்தவானஸ்மி நித்யம்' —கட. உப. 1. 2. 10,

ஒ. இவ்வுலகம் அநித்தியமா? நீ ஈசுவரனை அறியாமலிருக்கும் வரையில் அநித்தியந்தான். ஏனென்னில் நீ ஒவ்வொரு பொருளிலுமுள்ள ஈசுவரனைக் காண்பதில்லை. —ரா. கி.

य एतच्छ्रद्धया नित्य-मव्यग्रः शृणुयान्नरः।
मयि भक्तिं परां कुर्वन् कर्मभि-र्न स बध्यते ॥ २९.२८ ॥

अप्युद्धव त्वया ब्रह्म सखे समवधारितम्।
अपि ते विगतो मोहः शोकश्चासौ मनोभवः ॥ २९.२९ ॥

नैतत्त्वया दांभिकाय नास्तिकाय शठाय च।
अशुश्रूषो-रभक्ताय दुर्विनीताय दीयताम् ॥ २९.३० ॥

एतैर्दोषै-र्विहीनाय ब्रह्मण्याय प्रियाय च।
साधवे शुचये ब्रूयाद् भक्तिः स्याच्छूद्रयोषिताम् ॥ २९.३१ ॥

नैतद्विज्ञाय जिज्ञासो-र्ज्ञातव्य-मवशिष्यते।
पीत्वा पीयूष-ममृतं पातव्यं नावशिष्यते ॥ २९.३२ ॥

---

29. 28. எந்த மனிதன் என்னிடம் சிறந்த பக்தி பூண்டவனுய்ச் சிரத்தையுடனும் அமைதியுடனும் இதைக் கேட்கிருனே அவன் கர்மங்களால் கட்டுப்படமாட்டான்.

29. 29. நண்பராகிய உத்தவரே! பிரம்மஸ்வரூபம் மனதில் திடப்பட்டதா? உம்முடைய மனதி லெழுந்த மயக்கமும் துக்கமும் போயினவா?

29. 30. இதை நீர் கர்வங்கொண்டவனுக்கும் நாஸ்திகனுக்கும் வஞ்சகனுக்கும் கேட்க ஆசையில்லாதவனுக்கும், பக்தி யில்லாதவனுக்கும் வணக்கமில்லாதவனுக்கும் சொல்லக்கூடாது.

29. 31. இக் குற்றங்களற்றவனும் பிராம்மணர்களைப் போற்றுபவனும், அன்பு டையவனும், ஸாதுவும், பரிசுத்தனுமாகியவனுக்குச் சொல்லவேண்டும். சூத்திரர் களுக்கும் ஸ்திரீகளுக்கும் பக்தியிருந்தால் அவர்களுக்கும் உபதேசிக்கலாம்.

29. 32. ஞானத்தை நாடுபவனுக்கு இதை யறிந்தபின் அறியவேண்டியது வேறு இல்லை. இனிமையான அமிருதத்தைப் பருகியபின் வேறு பானத்தில் விருப்பமிராது.

---

29. 32. ஒ. மாங்காய்ப் பாலுண்டு மலைமே லிருப்போர்க்கு
தேங்காய்ப்பா லேதுக்கடி—குதம்பாய்
தேங்காய்ப்பா லேதுக்கடி?
வேகமடங்கி விளங்கு மெய்ஞ்ஞானிக்கு
யோகந்தா னேதுக்கடி—குதம்பாய்
யோகந்தா னேதுக்கடி? —சித்தர்பாடல்.

ज्ञाने कर्मणि योगे च वार्तायां दण्डधारणे ।
यावानर्थो नृणां तात तावांस्तेऽहं चतुर्विधः ॥ २९.३३ ॥

मर्त्यो यदा त्यक्त-समस्त-कर्मा
निवेदितात्मा विचिकीर्षितो मे ।
तदामृतत्वं प्रतिपद्यमानो
मयाऽऽत्मभूयाय च कल्पते वै ॥ २९.३४ ॥

श्रीशुक उवाच—

स एव-मादर्शित-योगमार्ग-
स्तदोत्तमश्लोकवचो निशम्य ।
बद्धांजलिः प्रीत्युपरुद्धकण्ठो
न किंचिदूचेऽश्रुपरिप्लुताक्षः ॥ २९.३५ ॥

विष्टभ्य चित्तं प्रणयावघूर्णं
धैर्येण राजन् बहु मन्यमानः ।
कृतांजलिः प्राह यदुप्रवीरं
शीर्ष्णा स्पृशं-स्तच्चरणारविन्दम् ॥ २९.३६ ॥

---

29. 33. ஐயனே! ஞானத்தாலும் கர்மத்தாலும் யோகத்தாலும் உலக வியாபாரத்தாலும் பிறரை அடக்கியாளுவதாலும் (தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்ற) என்னென்ன பயன் மனிதர்க்கு உண்டோ அந்த நால்வகைப் பயனாகவும் உமக்கு நான் உளேன்.

29. 34. மானிடன் எப்போது எல்லாக் கர்மங்களையும் விட்டு என்னிடம் தன்னை அர்ப்பணம் செய்கிறானோ அப்போது அவன் எனது விசேஷமான பிரீதிக்குரியவனாகிறான். அப்போது சாகா நிலையை எய்தியவனாய் என்னுடன் ஒன்றுபட்ட தன்மையை அடையத் தகுதியுள்ள வனாகிறான்.

ஸ்ரீ சுகர் கூறியது—

29. 35. இங்ஙனம் யோகமார்க்கம் உபதேசிக்கப் பெற்ற உத்தவர் உத்தமப் புகழ்க்குரிய கிருஷ்ணனுடைய சொல்லைக் கேட்டு கைகூப்பிக்கொண்டு அன்பினால் தொண்டை யடைக்கக் கண்களில் நீர் ததும்ப ஒன்றும் பேசாம லிருந்தார்.

29. 36. அரசே! அன்பினால் கலங்கிய மனதைத் தைரியத்தால் அடக்கித் தம்மைக் கிருதார்த்தராகக் கருதிக் கைகளைக் கூப்பித் தலையால் யதுவீரராகிய பகவானுடைய பாதத்தைத் தொட்டு அவரிடம் பின்வருமாறு கூறினார்.

उद्धव उवाच—

विद्रावितो मोह-महान्धकारो
य आश्रितो मे तव सन्निधानात्।
विभावसोः किन्तु समीपगस्य
शीतं तमो भीः प्रभवन्त्यजाद्य ॥ २९.३७ ॥

प्रत्यर्पितो मे भवतानुकंपिना
भृत्याय विज्ञानमयः प्रदीपः।
हित्वा कृतज्ञस्तव पादमूलं
कोऽन्यत् समीयाच्छरणं त्वदीयम् ॥ २९.३८ ॥

वृकणश्च मे सुदृढः स्नेहपाशो
दाशार्ह-वृष्ण्यन्धक-सात्वतेषु।
प्रसारितः सृष्टिविवृद्धये त्वया
स्वमायया ह्यात्म-सुबोध-हेतिना ॥ २९.३९ ॥

नमोऽस्तु ते महायोगिन् प्रपन्न-मनुशाधि-माम्।
यथा त्वच्चरणांभोजे रतिः स्यादनपायिनी ॥ २९.४० ॥

உத்தவர் கூறியது—

29. 37. பிரம்மாவுக்கும் ஆதியாகிய கிருஷ்ணா! எந்த மதி மயக்கமாகிய இருள் என்னை யண்டியிருந்ததோ அது உமது ஸந்நிதி மாத்திரத்தால் விலகிவிட்டது. அக்கினியின் சமீபத்தை யடைந்தவனுக்குக் குளிரும் இருட்டும் பயமுமுண்டா?

29. 38. அப்படி யிருந்தபோதிலும் கருணை மிக்க உம்மால் எனக்கு விஞ்ஞான வடிவான சிறந்த விளக்கு மேலும் அளிக்கப்பட்டது. நன்றியறிந்தவன் எவன்தான் உமது பாதமூலத்தை விட்டு வேறொன்றைச் சரணடைவான்?

29. 39. உமது சிருஷ்டி காரியம் வளரும் பொருட்டு தாசார்ஹர்கள், விருஷ்ணிகள், ஸாத்வதர்கள், அந்தகர்கள் என்ற உற்றார் உறவினரிடம் உமது மாயையால் எனக்கு அழுத்தமான நட்பெனும் பாசத்தைப் பரப்பிய நீரே ஆத்மஞானமாகிய ஆயுதத்தால் அதை அறுத்துவிட்டீர்.

29. 40. மகாயோகியே! உமக்கு நமஸ்காரம். சரண் புகுந்த எனக்கு எங்ஙனம் உமது பாதகமலத்தில் என்றும் நீங்காத அன்பு நிலைபெறுமோ அங்ஙனம் அருள் புரிந்து கட்டளையிட வேண்டும்.

---

29. 39. ஒ. 'ஸ்நேஹ-பாசமிமம் ச்சிந்தி த்ருடம் வ்ருஷ்ணிஷு பாண்டுஷு।'

29, 37. प्रभवन्त्यजस्रम्।

श्री भगवानुवाच—

गच्छोद्धव मयाऽऽदिष्टो बदर्याख्यं ममाश्रमम् ।
तत्र मत्पादतीर्थोदे स्नानोपस्पर्शनैः शुचिः ॥ २९.४१ ॥

ईक्षयालकनन्दाया विधूताशेष-कल्मषः ।
वसानो वल्कलान्यंग वन्यभुक् सुखनिःस्पृहः ॥ २९.४२ ॥

तितिक्षु-र्द्वन्द्व-मात्राणां सुशीलः संयतेन्द्रियः ।
शान्तः समाहित-धिया ज्ञानविज्ञान-संयुतः ॥ २९.४३ ॥

मत्तोऽनुशिक्षितं यत्ते विविक्त-मनुभावयन् ।
मय्यावेशित-वाक्चित्तो मद्धर्म-निरतो भव ।
अतिव्रज्य गतीस्तिस्रो मामेष्यसि ततः परम् ॥ २९.४४ ॥

श्रीशुक उवाच—

स एवमुक्तो हरिमेधसोद्धवः
प्रदक्षिणं तं परिसृत्य पादयोः ।
शिरो निधायाश्रुकुलाभि-रार्द्रधी-
र्न्यषिञ्च-दद्वन्द्वपरोऽप्यपक्रमे ॥ २९.४५ ॥

ஸ்ரீ பகவான் கூறியது—

29. 41-44. ஐயனே! உத்தவா! என்னிடம் விடைபெற்று பதரி எனப் பெயர் பெற்ற எனது ஆசிரமத்திற்குச் செல்வீராக. அங்கு என் பாதங்களினின்று பெருகிய தீர்த்தமாகிய கங்கையில் ஸ்நானத்தாலும் ஆசமனத்தாலும் பரிசுத்தராகி அளகநந்தை எனப் பெயர் பெற்ற அந்நதியில் தரிசனத்தால் மாசனைத்தும் நீங்கியவராய், மரவுரி யணிந்துகொண்டு வனத்தில் கிடைப்பதை உண்டு, சுகத்தில் பற்றை விட்டு, குளிர்வெப்பம் போன்ற இரட்டைகளைச் சகித்துக்கொண்டு, நல்ல சீலத்துடனும் அடங்கிய இந்திரியங்களுடனும், ஞானத்துடனும் விஞ்ஞானத்துடனும் கூடி அமைதிபெற்ற புத்தியுடன் சாந்தராக என்னால் உபதேசிக்கப்பட்டது எதுவோ அதைத் தெளிவுபட விசாரித்துணர்ந்து, வாக்கையும் மனதையும் என்னிடம் புகுத்தி, என்னுடைய தர்மத்தில் நிலை நிற்பவராய், முக்குணங்களின் வழிகளைக் கடந்து அதன்பின் நீர் என்னை அடைவீர்.

ஸ்ரீசுகர் கூறியது—

29. 45. ஸம்ஸார தாபத்தைப் பரிஹரிக்க எண்ணங்கொண்ட கிருஷ்ணனால் இங்ஙனம் கூறப்பெற்ற உத்தவர் மூன்று தடவை அவரை வலம் வந்து பாதங்களில் தலையை வைத்து சுகதுக்கமாகிய துவந்துவத்தைக் கடந்தவராயினும் புறப்படும் சமயத்தில் கசிந்த உள்ளம் படைத்த அவர் கண்ணீரால் (அப்பாதங்களை) நனைத்தார்.

---

29. 41. ममाश्रमम् ।

सुदुस्त्यज-स्नेह-वियोग-कातरो
न शक्नुवंस्तं परिहातु-मातुरः ।
कृच्छ्रं ययौ मूर्धनि भर्तृपादुके
बिभ्रन्नमस्कृत्य ययौ पुनः पुनः ॥ २९.४६ ॥

तत-स्तमन्तर्हृदि संनिवेश्य
गतो महाभागवतो विशालाम् ।
यथोपदिष्टां जगदेकबन्धुना
तपः समास्थाय हरेरगाद् गतिम् ॥ २९.४७ ॥

य एतदानन्द-समुद्र-संभृतं
ज्ञानामृतं भागवताय भाषितम् ।
कृष्णेन योगेश्वर-सेविताङ्घ्रिणा
सच्छ्रद्धयाऽऽसेव्य जगद्विमुच्यते ॥ २९.४८ ॥

---

29. 46. விடமுடியாத சிநேகமுள்ள கிருஷ்ணனிடமிருந்து விட்டுப் பிரிவதில் மிகவும் தளர்ந்து பயந்தவரும் வருந்தியவரும் ஆகிய அவர் விட்டுச் செல்லமாட்டாதவரா யினர். பகவானுடைய பாதுகைகளைச் சிரசில் தாங்கிக்கொண்டு மிகவும் பிரயாசத்து துடன் சென்றார். மீண்டும் மீண்டும் வணங்கிக்கொண்டே சென்றார்.

29. 47. பின்னர் அந்த மகாபாகவதர் பகவானை இருதயத்தில் நன்கு நிலைபெறச் செய்துகொண்டு பதரிகாசிரமம் சென்றார். உலகிற்கு ஒரே பந்துவாகிய பகவானால் உபதேசிக்கப்பட்ட அந்த பகவானுடைய கதியைத் தவஞ்செய்து அடைந்தார்.

29. 48. யோகேசுவரர்கள் சேவிக்கும் பாதங்களை யுடைய கிருஷ்ணனால் பாகவதராகிய உத்தவருக்கு உபதேசிக்கப்பட்டதும் ஆனந்தஸாகரத்தினின்று முகந் தளிக்கப்பட்டதுமான இந்த ஞானமிருதத்தை நல்ல சிரத்தையுடன் ஒருவன் கொஞ்சம் பருகினாலும் முக்தி எய்துகிறான், (அவனுடன் கூடிய) உலகமும் விடுபடுகிறது.

---

29. 46. (அத்ர ச "ப்ருஷ்டதோऽன்வகமம் பர்த்து: பாதவிச்லேஷணாக்ஷம:" இத்யாதி த்ருதீயஸ்கந்தோபக்ரமோக்தானுஸாரேண பதரிகாச்ரமம் கச்சன் பகவத: ப்ரபாஸயாத்ரா-முபச்ருத்ய சனை: ப்ருஷ்டதோ கத: ஸன் உபஸம்ஹ்ருத-நிஜகுலம் பகவந்த-மேகாந்தே த்ருஷ்ட்வா தத்காலப்ராப்தேன மைத்ரேயேண ஸஹ புன: க்ருபயா பகவதோபாதிஷ்டம் தத்வ-மாகலய்ய ததா ததனுஜ்ஞாதோ யயௌ இதி த்ரஷ்டவ்யம்) பதரிகாசிரமம் புறப்பட்ட உத்தவர் பகவானுடைய பிரபாஸ யாத்திரையைப்பற்றிக் கேள்விப் பட்டுத் திரும்பி வந்து தன் குலம் ஸம்ஹரிக்கப்பட்டதையும் பகவான் ஏகாந்தத்தி லிருந்ததையும் கண்ணுற்றுப் பின் அச்சமயம் அங்கு வந்த மைத்ரேயருடன் மீண்டும் பகவான் கிருபையால் உபதே சித்ததைக் கேட்டுவிட்டு அவரால் அனுமதிக்கப்பட்டு பயணப் பட்டார் என்று அறியவேண்டும்.
—ஸ்ரீதரர்.

ஓ, யேனானுகம்பிதம் விச்வம் உத்தவப்ரச்ன-நிர்ணயை;
தம் வந்தே பரமானந்தம் நந்த – நந்தன-ரூபிணம் ॥ —ஸ்ரீதரர்:

भवभय-मपहन्तुं ज्ञानविज्ञान-सारं
निगमकृदुपजह्रे भृङ्गवद्वेदसारम् ।
अमृतमुदधित-श्चापाययद् भृत्यवर्गान्
पुरुषमृषभ-माद्यं कृष्णसंज्ञं नतोऽस्मि ॥ २९.४९ ॥

॥ इति उद्धवगीता समाप्ता ॥

---

29. 49. வேதங்களை வெளியிட்ட பகவானே ஸம்ஸாரத்தையும் ஸம்ஸார பயத்தையும் போக்குவதற்காக ஞான விஞ்ஞான அமிருதமாகிய தேனை வேதங்களினின்று வண்டு போல் சேகரித்தார். தமது அடியார் குழாத்திற்கு அதை ஊட்டுவித்தார், ஆதியானவரும் விஷ்ணு எனப் பெயர் படைத்தவருமாகிய அந்தப் புருஷோத்தமரை நான் வணங்குகிறேன்.

இங்ஙனம் உத்தவகீதை முற்றும்.

॥ परमपदारोहणम् ॥

राजोवाच—

ततो महाभागवत उद्धवे निर्गते वनम् ।
द्वारवत्यां किमकरोद् भगवान् भूतभावनः ॥ ३०.१ ॥

श्रीशुक उवाच—

दिवि भुव्यन्तरिक्षे च महोत्पातान् समुत्थितान् ।
दृष्ट्वासीनान् सुधर्मायां कृष्णः प्राह यदूनिदम् ॥ ३०.४ ॥

श्री भगवानुवाच—

एते घोरा महोत्पाता द्वार्वत्यां यमकेतवः ।
मुहूर्तमपि न स्थेय-मत्र नो यदुपुंगवाः ॥ ३०.५ ॥

स्त्रियो बालाश्च वृद्धाश्च शङ्खोद्धारं व्रजन्त्वितः ।
वयं प्रभासं यास्यामो यत्र प्रत्यक् सरस्वती ॥ ३०.६ ॥

तत्राभिषिच्य शुचय उपोष्य सुसमाहिताः ।
देवताः पूजयिष्यामः स्नपनालेपनार्हणैः ॥ ३०.७ ॥

பரமபதாரோஹணம்

அரசன் கூறியது—

30. 1. மகாபாகவதராகிய உத்தவர் வனம் சென்ற பின்பு சிருஷ்டிகர்த்தாவாகிய பகவான் துவாரகையில் என்ன செய்தார் ?

ஸ்ரீ சுகர் கூறியது—

30. 4. ஸ்ரீ கிருஷ்ணன் ஸ்வர்க்கத்திலும் பூமியிலும் அந்தரிக்ஷத்திலும் உண்டான பெரும் அபசகுனங்களைப் பார்த்து ஸபையிலிருந்த பெரியோர்களை நோக்கிப் பின்வருமாறு கூறலானார்.

ஸ்ரீ பகவான் கூறியது—

30. 5. யமதர்மராஜனுடைய கொடிகள் போன்ற இப்பெரும் அபசகுனங்கள் துவாரகையில் தோன்றியிருக்கின்றன. (நம்முடைய வம்சத்திற்கு மீறமுடியாத பிராம்மண சாபமும் ஏற்பட்டிருக்கிறது.) யதுசிரேஷ்டர்களே ! இரண்டு நாழிகைப் பொழுதும் நாம் இனி இங்கிருக்கக் கூடாது.

30. 6. ஸ்திரீகள், குழந்தைகள், கிழவர்கள் யாவரும் இங்கிருந்து சங்கோத்தாரம் செல்லட்டும்! எங்கு ஸரஸ்வதீ நதி (கடலில்) மேற்கு நோக்கிப் பாய்கிறதோ அந்தப் பிரபாஸ க்ஷேத்திரத்திற்கு நாம் செல்லுவோம்.

30. 7. அங்கு நீராடிப் பரிசுத்தர்களாகி உபவாஸமிருந்து அமைதியாக தேவதைகளை அபிஷேகம் சந்தனம் உபசாரம் இவைகளால் பூஜிப்போம்.

इति सर्वे समाकर्ण्य यदुवृद्धा मधुद्विषः ।
तथेति नौभिरुत्तीर्य प्रभासं प्रययू रथैः ॥ ३०.१० ॥

तस्मिन् भगवताऽऽदिष्टं यदुदेवेन यादवाः ।
चक्रुः परमया भक्त्या सर्वश्रेयोपबृंहितम् ॥ ३०.११ ॥

तत-स्तस्मिन् महापानं पपुर्मैरेयकं मधु ।
दिष्टविभ्रंशित-धियो यद्-द्रवै-र्भ्रश्यते मतिः ॥ ३०.१२ ॥

महापानाभिमत्तानां वीराणां दृप्तचेतसाम् ।
कृष्णमाया-विमूढानां संघर्षः सुमहानभूत् ॥ ३०.१३ ॥

युयुधुः क्रोधसंरब्धा वेलाया-माततायिनः ।
धनुर्भि-रसिभि--र्भल्लै-र्गदाभि-स्तोमरर्ष्टिभिः ॥ ३०.१४ ॥

शरेषु क्षीयमाणेषु भज्यमानेषु धन्वसु ।
शस्त्रेषु क्षीयमाणेषु मुष्टिभिर्जह्रुरेरकाः ॥ ३०.२० ॥

30. 10. யாதவப் பெரியோர்கள் கிருஷ்ணனுடைய இந்த வார்த்தையைக் கேட்டு அப்படியே ஆகட்டுமென்று ஓடங்கொண்டு கடலைக்கடந்து தேர்களில் பிரபாஸக்ஷேத்திரம் சென்றார்கள்.

30. 11. அங்கே பகவானுடைய கட்டளைப்படி யாதவர்கள் நன்மை யாவும் கூடும்படி மிகுந்த பக்தியுடன் (அனைத்தையும்) செய்தார்கள்.

30. 12. பிறகு தெய்வத்தால் புத்திகெட்ட அவர்கள் அங்கே மிராதேசத்துச் சிறந்தபானமாகிய எந்த மது மதியை மயக்குமோ அதை உண்டார்கள்.

30. 13. அந்தப் பெருங்குடியால் பித்துப் பிடித்தவர்களும் மதங்கொண்டவர்களும் கிருஷ்ணமாயையால் மதியிழந்தவர்களுமான அவ்வீரர்களிடையில் பெருங் கலகமுண்டாயிற்று.

30. 14. உற்றுருறவினரைக் கொல்லத் துணிந்த அவர்கள் அந்த சமுத்திரக் கரையில் வில், கத்தி, பல்லம், கதை, தோமரம், தடி முதலியவற்றைக் கொண்டு கோபாவேசத்துடன் சண்டை செய்தார்கள்.

30. 20. (முடிவில்) பாணங்கள் குறைந்து வில்லொடிந்து ஆயுதங்கள் நசித்த பொழுது பிடிப்பிடியாக கோரைகளைப் பிடுங்கிக் கொண்டார்கள்.

ता वज्रकल्पा ह्यभवन् परिघा मुष्टिभिर्धृताः ।
जघ्नुः-र्द्विषन्तः कृष्णेन वार्यमाणास्तु तं च ते ॥ ३०.२१ ॥

ब्रह्मशापोपसृष्टानां कृष्णमायावृतात्मनाम् ।
स्पर्धा क्रोधं क्षयं निन्ये वैणवोऽग्नि-र्यथा वनम् ॥ ३०.२४ ॥

एवं नष्टेषु सर्वेषु कुलेषु स्वेषु केशवः ।
अवतारितो भुवो भार इति मेनेऽवशेषितः ॥ ३०.२५ ॥

रामः समुद्रवेलायां योगमास्थाय पौरुषम् ।
तत्याज लोकं मानुष्यं संयोज्यात्मान-मात्मनि ॥ ३०.२६ ॥

रामनिर्याण-मालोक्य भगवान् देवकीसुतः ।
निषसाद धरोपस्थे तूष्णीमासाद्य पिप्पलम् ॥ ३०.२७ ॥

---

30. 21. அரசே! அவர்கள் கைமுஷ்டிகளில் பிடிக்கப்பட்ட கோரைகள் வஜ்ரம் போன்ற இரும்புத் தடிகளாயின. கிருஷ்ணனால் தடுக்கப்பட்டும் பகை மூண்ட அவர்கள் அடித்துக் கொண்டார்கள்; கிருஷ்ணனையும் அடித்தார்கள்.

30. 24. பிராம்மண சாபத்தால் பீடிக்கப்பட்டவர்களும், கிருஷ்ணமாயை சூழ்ந்த மனமுடையவர்களுமாகிய யாதவர்களின் அசூயையா லேற்பட்ட கோபம் மூங்கிற் புத்ரி லுண்டான தீ வனத்தை யெரிப்பதுபோல் (அவர்கள் குலத்தை) நாசமாக்கியது.

30. 25. தமது குலம் முழுதும் இவ்வாறு அழிந்தபின் எஞ்சிநின்ற கிருஷ்ணன் பூமியின் பாரம் குறைக்கப்பட்டது என்று எண்ணினார்.

30. 26. பலராமர் ஸமுத்திரக் கரையில் புருஷோத்தம தியானயோகத்தி லமர்ந்து தன்னைப் பரமாத்மாவில் லயிக்கச் செய்து மானிடவுலகை விட்டார்.

30. 27. தேவகீபுத்திரராகிய பகவான் பலராமர் நிர்வாண மெய்தியதைப் பார்த்து மௌனமாக ஒரு அரசமரத்தை யடைந்து அத னடியில் தரையி லுட்கார்ந்தார்.

---

30. 21. பகவானுக்கு ஸமீபத்தி லிருப்பதால் உடல் சம்பந்தமான கஷ்டங்கள் வராமலிருக்கும் என்று எண்ணுவது தவறு. அவற்றைச் சகிக்கும் தன்மை வரும் என்பதே உண்மை. கர்மகதி செல்லட்டும். நீ சாக்ஷியாய் மட்டும் இரு.

30, 26. लोकमाविश्य ।

बिभ्रच्चतुर्भुजं रूपं भ्राजिष्णु प्रभया स्वया ।
दिशो वितिमिराः कुर्वन् विधूम इव पावकः ॥ ३०.२८ ॥

श्रीवत्साङ्कं घनश्यामं तप्तहाटक-वर्चसम् ।
कौशेयांबरयुग्मेन परिवीतं सुमंगलम् ॥ ३०.२९ ॥

सुन्दरस्मित-वक्त्राब्जं नीलकुन्तल-मण्डितम् ।
पुण्डरीकाभिरामाक्षं स्फुरन्मकरकुण्डलम् ॥ ३०.३० ॥

कटिसूत्र-ब्रह्मसूत्र-किरीट-कटकांगदैः ।
हारनूपुर-मुद्राभिः कौस्तुभेन विराजितम् ॥ ३०.३१ ॥

वनमालापरीतांगं मूर्तिमद्भि-र्निजायुधैः ।
कृत्वोरौ दक्षिणे पाद-मासीनं पंकजारुणम् ॥ ३०.३२ ॥

मुसलावशेषायः-खण्डकृतेषु-र्लुब्धको जरा ।
मृगास्याकारं तच्चरणं विव्याध मृगशंकया ॥ ३०.३३ ॥

---

30. 28. நான்கு புஜங்களுடன் விளங்கும் ரூபத்தை எடுத்துக்கொண்டு தனது ஒளியால் திசைகளின் இருளைப் போக்கிப் புகையில்லாத அக்கினிபோல் பிரகாசித்தார்.

30. 29. இரண்டு பட்டுவஸ்திரங்களால் சூழப்பெற்று ஸ்ரீவத்ஸ மருவுடன் மேக சியாமள வர்ணமாய் உருக்கிய பொன்போல் ஒளிவிடும் மங்கள வடிவுடையவராய் ;

30. 30. கருத்த சுருட்டைமயிர் தவழ்வதும், புன்முறுவல் பூத்ததுமான தாமரை போன்ற முகமும், புண்டரீகம்போல் மனதைக் கவரும் கண்களும், பிரகாசிக்கும் மகர குண்டலங்களும் உடையவராய் ;

30. 31. அரைஞாண், பூணூல், கிரீடம், கங்கணம், தோள்வளை, ஹாரம், தண்டை, முத்திரை, கௌஸ்துபமணி முதலியவற்றுடன் பிரகாசிப்பவராய் ;

30. 32. வனமாலையாலும், உருக்கொண்டு நின்ற நமது ஆயுதங்களாலும் சூழப் பெற்ற சரீரத்தையுடையவராய் பத்மம்போல் சிவந்த (இடது) பாதத்தை வலது துடை மேல் வைத்து உட்கார்ந் திருப்பவராக (விளங்கினார்).

30. 33. (அப்பொழுது)ஜரை எனப் பெயர்கொண்ட ஒரு வேடன் (அங்கு வந்து) உலக்கையில் எஞ்சி நின்ற இரும்புத் துணுக்கைப் பாணத்தில் பொருத்தியவனாய் மானின் முகம்போல் (தூரத்திலிருந்து) தோன்றிய பகவானுடைய பாதத்தை மானென்ற சந்தேகத்தால் அடித்தான்.

चतुर्भुजं तं पुरुषं दृष्ट्वा स कृतकिल्बिषः।
भीतः पपात शिरसा पादयो-रसुरद्विषः ॥ ३०.३४ ॥

अजानता कृतमिदं पापेन मधुसूदन।
क्षन्तु-मर्हसि पापस्य उत्तमश्लोक मेऽनघ ॥ ३०.३५ ॥

यस्यानुस्मरणं नृणा-मज्ञानध्वान्त-नाशनम्।
वदन्ति तस्य ते विष्णो मयासाधु कृतं प्रभो ॥ ३०.३६ ॥

तन्माऽऽशु जहि वैकुण्ठ पाप्मानं मृगलुब्धकम्।
यथा पुनरहं त्वेवं न कुर्यां सदतिक्रमम् ॥ ३०.३७ ॥

श्रीभगवानुवाच—

मा भैर्जरे त्वमुत्तिष्ठ काम एष कृतो हि मे।
या हि त्वं मदनुज्ञातः स्वर्गं सुकृतिनां पदम् ॥ ३०.३९ ॥

---

30. 34. (ஸமீபத்தில் வந்து) நான்கு புஜங்களுடன் விளங்கிய அந்தப் புருஷனைப் பார்த்துப் பாவச்செயலைச் செய்துவிட்ட அவன் பயந்து அசுரர்களின் பகைவராகிய அவருடைய பாதங்களில் விழுந்தான்.

30. 35. 'மதுஸூதனரே! பாவியாகிய என்னால் அறியாமல் இக் காரியம் செய்யப்பட்டது. உத்தம சுலோகரே! பிரபுவே! பாவியாகிய என்னுடைய இச்செயலைப் பொருத்தருளல் வேண்டும்.

30. 36. 'பிரபுவே! எவருடைய நினைவு மனிதர்களின் அறியாமையாகிய இருளைப் போக்குவதென்று கூறுகிறார்களோ அந்த விஷ்ணுவாகிய உமக்கு நான் செய்யத் தகாததைச் செய்துவிட்டேன்.

30. 37. 'நாராயணா! எப்படிச் செய்தால் நான் மறுபடி இந்தமாதிரி நல்லவர்களுக்கு அபசாரத்தைச் செய்யாம லிருப்பேனோ அந்த வகையில் மிருகங்களை வேட்டையாடும் என்னைச் சிக்ஷிக்க வேண்டும்.'

ஸ்ரீ பகவான் கூறியது—

30. 39. 'ஜரையே! அஞ்சாதே; எழுந்திரு; செய்யப்பட்ட இது எனக்கு விருப்பமானதே. என்னால் அனுமதிக்கப் பெற்றுப் புண்ணியசாலிகள் செல்லுமிடமாகிய ஸ்வர்க்கம் செல்வாயாக.'

---

30. 39. பகவானும் பக்தர்களும் நோய்களையும் சாபங்களையும் விலக்கவல்லவராயினும் விலக்கவேண்டுமென்று கவலைப்படுவதில்லை.

श्रीशुक उवाच—

इत्यादिष्टो भगवता कृष्णेनेच्छा-शरीरिणा।
त्रिः परिक्रम्य तं नत्वा विमानेन दिवं ययौ ॥ ३०.४० ॥

दारुकः कृष्णपदवी-मन्विच्छन्नधिगम्य ताम्।
वायुं तुलसिकामोद-माघ्रायाभिमुखं ययौ ॥ ३०.४१ ॥

तं तत्र तिग्मद्युभि-रायुधै-र्वृतं ह्यश्वत्थमूले कृतकेतनं पतिम्।
स्नेहप्लुतात्मा निपपात पादयो रथादवप्लुत्य सबाष्पलोचनः ॥ ३०.४२ ॥

दारुक उवाच—

अपश्यत-स्त्वच्चरणांबुजं प्रभो दृष्टिः प्रणष्टा तमसि प्रविष्टा।
दिशो न जाने न लभे च शान्तिं यथा निशाया-मुडुपे प्रणष्टे ॥ ३०.४३ ॥

श्रीशुक उवाच—

इति ब्रुवति सूते वै रथो गरुडलांछनः।
खमुत्पपात राजेन्द्र साश्वध्वज उदीक्षतः ॥ ३०.४४ ॥

ஸ்ரீ சுகர் கூறியது—

30. 40. இச்சைப்படி உடல் தரிக்கும் கிருஷ்ணபகவானால் இவ்விதம் கட்டளையிடப்பட்ட வேடன் அவரை மும்முறை வலம் வந்து நமஸ்கரித்து விமானத்தில் ஸ்வர்க்கம் சென்றான்.

30. 41. (கிருஷ்ணனுடைய ஸாரதியாகிய) தாருகன்கிருஷ்ணனைப் பின்பற்ற விரும்பி துளசியின் மணத்துடன் வரும் காற்றை முகர்ந்துகொண்டு அதற்கு எதிர்முகமாய்ச் சென்றான்.

30. 42. (அவரிருக்கு மிடத்தை யடைந்து) அங்கே ஒளி வீசும் ஆயுதங்கள் புடைசூழ அரசமரத் தடியில் இருப்புக்கொண்ட தனது நாயகனைப் பார்த்து சிநேகத்தால் கசிந்தமனமுடைய அவன் கண்ணீர் ததும்பும் கண்களுடன் தேரிலிருந்து இறங்கி அவருடைய பாதங்களில் விழுந்தான்.

தாருகன் கூறியது—

30. 43. 'பிரபுவே! உமது திருவடித் தாமரைகளைக் காணாமல் எனது கண் பார்வை யிழந்து இருளில் புகுந்துவிட்டது. சந்திர னில்லாத நள்ளிரவில்போல் நான் திசைகளை அறியவில்லை. மனதில் சாந்தியையும் அடையவில்லை.'

ஸ்ரீ சுகர் கூறியது—

30. 44. அரச சிரேஷ்டனே! ஸாரதியாகிய தாருகன் இவ்விதம் பேசிக்கொண்டு பார்த்துக்கொண் டிருக்கும்போதே கருடக் கொடியுடைய தேர் கொடியுடனும் குதிரைகளுடனும் ஆகாயத்தில் கிளம்பிற்று.

तमन्वगच्छन् दिव्यानि विष्णुप्रहरणानि च।
तेनातिविस्मितात्मानं सूतमाह जनार्दनः ॥ ३०.४५ ॥

श्रीभगवानुवाच—

गच्छ द्वारवतीं सूत ज्ञातीनां निधनं मिथः।
संकर्षणस्य निर्याणं बन्धुभ्यो ब्रूहि मद्दशाम् ॥ ३०.४६ ॥

द्वारकायां च न स्थेयं भवद्भिश्च स्वबन्धुभिः।
मया त्यक्तां यदुपुरीं समुद्रः प्लावयिष्यति ॥ ३०.४७ ॥

स्वं स्वं परिग्रहं सर्वे आदाय पितरौ च नः।
अर्जुनेनाविताः सर्व इन्द्रप्रस्थं गमिष्यथ ॥ ३०.४८ ॥

त्वं तु मद्धर्म-मास्थाय ज्ञाननिष्ठ उपेक्षकः।
मन्माया-रचनामेतां विज्ञायोपशमं व्रज ॥ ३०.४९ ॥

श्रीशुक उवाच—

इत्युक्त-स्तं परिक्रम्य नमस्कृत्य पुनः पुनः।
तत्पादौ शीर्ष्ण्युपादाय दुर्मनाः प्रययौ पुरीम् ॥ ३०.५० ॥

---

30. 45. விஷ்ணுவின் தெய்வீகமான ஆயுதங்களும் தேரைத் தொடர்ந்து சென்றன. அதனால் மிகுந்த ஆச்சரிய மடைந்த மனமுடைய ஸாரதியைப் பார்த்து ஜனார்த்தனர் பின்வருமாறு கூறினார்.

ஸ்ரீ பகவான் கூறியது—

30. 46. ஸாரதியே! நீ துவாரகை செல்லுவாயாக. ஞாதிகள் ஒருவரை யொருவர் அடித்துக்கொண்டு நாசமடைந்ததையும் பலராமருடைய கடைசிப் பயணத்தையும் என்னுடைய நிலையையும் பந்துஜனங்களுக்குத் தெரிவி.

30. 47. உங்கள் பந்துக்களுடன் நீங்களும் இனி துவாரகையில் இருக்கக் கூடாது. என்னால் விடப்பட்ட யதுபுரியாகிய துவாரகையைக் கடல் விழுங்கிவிடப் போகிறது.

30. 48. அவரவர் மனைவி மக்களையும் எங்கள் பெற்றோரையும் கூட்டிக்கொண்டு மற்றும் அனைத்தையும் சேகரித்துக் கொண்டு அர்ஜுனனால் காக்கப்பட்டு இந்திரப் பிரஸ்தம் செல்லுங்கள்.

30. 49. நீயும் என் தர்மத்தைக் கைக்கொண்டு ஞானத்தில் நிலைபெற்றுப் பற்றற்றவனாய் இந்த என் வடிவம் எனது யோகமாயையால் ஏற்பட்டதெனவும் (முடிவில் மறைகிறதெனவும்) உணர்ந்து அமைதியை யடைவாயாக.

---

30. 49. நிஜஸ்ரீமூர்த்தேரந்தர்ஹிதத்வாத் வ்ருதா சோகம் மா குர்வித்யர்த்தः।

अथ तत्रागमद् ब्रह्मा भवान्या च समं भवः।
महेन्द्र-प्रमुखा देवा मुनयः सप्रजेश्वराः ॥ ३१.१ ॥

ववृषुः पुष्पवर्षाणि विमानावलिभि-र्नभः।
कुर्वन्तः सङ्कुलं राजन् भक्त्या परमया युताः ॥ ३१.४ ॥

भगवानपि तान् वीक्ष्य विभूती-रात्मनो विभुः।
संयोज्यात्मनि चात्मानं पद्मनेत्रे न्यमीलयत् ॥ ३१.५ ॥

लोकाभिरामां स्वतनुं धारणा-ध्यानमंगलम्।
योगधारणयाऽऽग्नेय्यादग्ध्वा धामाविशत् स्वकम् ॥ ३१.६ ॥

दिवि दुन्दुभयो नेदुः पेतुस्सुमनसश्च खात्।
सत्यं धर्मो धृति-र्भूमेः कीर्तिः श्रीश्चानु त ययुः ॥ ३१.७ ॥

ஸ்ரீ சுகர் கூறியது—

30. 50. இவ்வாறு கட்டளையிடப்பட்ட தாருகன் அவரை வலம்வந்து மீண்டும் அவருடைய பாதங்களைத் தலையில் வைத்துக் கொண்டு நமஸ்கரித்து மிகுந்த துக்கத்துடன் நகரம் சென்றான்.

31. 1. பிறகு அங்கு பிரம்மாவும், பார்வதியுடன் பரமசிவனும், மகேந்திரன் முதலிய தேவர்களும், பிரஜாபதிகளுடன் முனிவர்களும் வந்தார்கள்.

31. 4. அரசே! அவர்கள் விமான வரிசைகளால் ஆகாயமார்க்கத்தை நிரப்பிக் கொண்டு மிகுந்த பக்தியுன் கூடினவர்களாய்ப் புஷ்பமாரி பொழிந்தார்கள்.

31. 5. எங்கும் நிறைந்தவராகிய பகவான் தமது அம்சமான அவர்களைக் கடாக்ஷித்து விட்டு மனதை ஆத்மாவில் சேர்த்துக் கமலக் கண்களை மூடினார்.

31. 6. தாரணைக்கும் தியானத்திற்கும் மங்களமாகியதும் உலகிற்குக் களிப்பூட்டுவதுமான தமது சரீரத்தை யோகதாரணையின் அக்கினியால் பொசுக்காமல் தமது ஸ்தானம் சென்றார்.

---

31. 6. அயமர்த்த; | யோகினோ ஹி ஸ்வச்சந்த ம்ருத்யவ: ஸ்வதனு-மாக்னேய்யா யோக தாரணயா தக்த்வா லோகாந்தரம் பிரவிசந்தி | பகவாம்ஸ்து ந ததா | கிந்து அதக்த்வைவ ஸ்வத்னு-ஸஹித ஏவ ஸ்வகம் தாம ஸ்ரீவைகுண்டாக்ய-மவிசத் | தத்ர ஹேது: | லோகானு-மபிராம: அபிதோ ரமணம் ஸ்திதிர் யஸ்யாம் தாம் ஜகதாச்ரயத்வேன ஜகதோபி தாஹப்ர ஸங்காதித்யர்த்த: | கிஞ்ச தாரணயா த்யானஸ்ய ச மங்களம் சோபனம் விஷயம் இதரதா தயோர்-நிர்விஷயத்வம் ஸ்யாத் | த்ருச்யதே சாத்யாப்யுபாஸகானும் ததைவ தத்ருபஸாக்ஷாத் கார: பலப்ராப்திச்சேதி பாவ: | இச்சாசரீராபிப்ராயேண யதாச்ருத-மேவாஸ்து தத்ராபி லோகாபிராமாம் இத்யாதி விசேஷணைனர்த்தக்ய-ப்ரஸங்காத் ததப்யதக்த்வா திரோதாய நிர்கத இத்யேவ ஸாம்ப்ரதம் || —ஸ்ரீதரர்.

देवादयो ब्रह्ममुख्या न विशन्तं स्वधामनि।
अविज्ञात-गतिं कृष्णं ददृशुश्चातिविस्मिताः ॥ ३१.८ ॥

सौदामन्या यथाकाशे यान्त्या हित्वाभ्रमण्डलम्।
गति-र्न लक्ष्यते मर्त्यै-स्तथा कृष्णस्य दैवतैः ॥ ३१.९ ॥

ब्रह्मरुद्रादयस्ते तु दृष्ट्वा योगगतिं हरेः।
विस्मितास्तां प्रशंसन्तः स्वं स्वं लोकं ययुस्तदा ॥ ३१.१० ॥

राजन् परस्य तनुभृज्जननाप्ययेहा
मायाविडंबनमवेहि यथा नटस्य।
सृष्ट्वाऽऽत्मनेद-मनुविश्य विहृत्य चान्ते
संहृत्य चात्म-महिमोपरतः स आस्ते ॥ ३१.११ ॥

मर्त्येन यो गुरुसुतं यमलोकनीतं
त्वां चानयच्छरणदः परमास्त्रदग्धम्।
जिग्येऽन्तकान्तक-मपीश-मसावनीशः
किं स्वावने स्वरनयन्मृगयुं सदेहम् ॥ ३१.१२ ॥

---

31. 7. ஸ்வர்க்கத்தில் துந்துபிகள் முழங்கின. ஆகாயத்தினின்று புஷ்பமாரி பெய்தது. பூமியினின்று ஸத்தியமும் தர்மமும் தைரியமும் கீர்த்தியும் ஸ்ரீயும் அவரைத் தொடர்ந்து சென்றன.

31. 8. அறியமுடியாத போக்குடைய கிருஷ்ணன் தமது ஸ்தானத்திற்குச் செல்லும்போது பிரம்மா முதலிய தேவர்களும் மற்றவர்களும் அதைக் காணவில்லை. மிகவும் ஆச்சரிய மடைந்தார்கள்.

31. 9. ஆகாயத்திற் செல்லும் மின்னலுடைய போக்கை மானிடர்கள் பார்க்க முடியாததுபோல் ஆகாயத்தை விட்டுச் செல்லும் கிருஷ்ணனுடைய கதியைத் தேவர்களால் பார்க்க முடியவில்லை.

31. 10. அரசே! பிரம்மா ருத்திரர் முதலியவர்கள் ஹரியின் யோக கதியைப் பார்த்து ஆச்சரிய மடைந்து அவரைக் கொண்டாடித் தத்தம் இருப்பிடம் ஏகினர்.

31. 11. அரசே! பரமபுருஷனுக்கு மானிடர்களாகிய யாதவர்களிடை பிறப்பு லீலை மறைவு என்றவை யெல்லாம் நாடகம் நடிப்பவனுடைய செயலைப்போல் மாயைக் கூத்து என்று அறியவேண்டும். அவர் தாமே இந்தப் பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்து அதில் புகுந்து விளையாடி முடிவில் தமது மகிமையால் ஒழிவடைந்திருக்கிறார்.

31. 12. சரணகத ரக்ஷகரான கிருஷ்ண பகவான் யமலோகஞ் சென்ற குரு குமாரனை மானிடதேகத்துடன் வரவழைத்தார்; பிரம்மாஸ்திரத்தால் எரிக்கப்பட்ட உன்னையும் காப்பாற்றினார்; யமனுக்கு யமனாகிய பரமசிவனையும் (பாணாசுர யுத்தத்தில்) ஜயித்தார்; வேடனைத் தேகத்துடன் ஸ்வர்க்கம் சேர்த்தார்; அந்த பகவான் தம்மை ரக்ஷித்துக்கொள்ளத் திறமையில்லாதவரா?

तथाप्यशेष-स्थिति-संभवाप्यये-
ष्वनन्यहेतु-र्यदशेष-शक्तिधृक् ।
नैच्छत् प्रणेतुं वपुरत्र शेषितं
मर्त्येन किं स्वात्मगतिं प्रदर्शयन् ॥ ३१.१३ ॥

य एतां प्रातरुत्थाय कृष्णस्य पदवीं पराम् ।
प्रयतः कीर्तयेद् भक्त्या तामेवाप्नोत्यनुत्तमाम् ॥ ३१.१४ ॥

दारुको द्वारकामेत्य वसुदेवोग्रसेनयोः ।
पतित्वा चरणावस्रै-र्न्यषिञ्चत् कृष्णविच्युतः ॥ ३१.१५ ॥

कथयामास निधनं वृष्णीनां कृत्स्नशो नृप ।
तच्छ्रुत्वोद्विग्नहृदया जनाः शोकविमूर्च्छिताः ॥ ३१.१६ ॥

तत्र स्म त्वरिता जग्मुः कृष्णविश्लेषविह्वलाः ।
व्यसवः शेरते यत्र ज्ञातयो घ्नन्त आननम् ॥ ३१.१७ ॥

---

31. 13. அவ்வித மிருந்தும் வெகுசக்திகளை யுடையவரும் எல்லாவற்றின் பிறப்பு இருப்பு இறப்பு ஆகியவற்றிற்குத் தாமன்றி வேறு காரண மில்லாதவருமாகிய பகவான் மானிட தேகத்தால் இனி ஆகவேண்டிய தென்னவென்று தம்மைச் சார்ந்தவர்களுக்கு ஆத்மகதியைக் காட்டி இங்கு தேகத்தை விட்டுச் செல்ல விரும்பவில்லை.

31. 14. எவன் காலையி லெழுந்து கிருஷ்ணனுடைய இந்தப் பரமகதியைப் பரிசுத்தனைகப் பக்தியுடன் கீர்த்தனம் செய்கிருனே அவன் உயர்வான அந்த கதியைத் தானும் அடைவான்.

31. 15. கிருஷ்ணனைப் பிரிந்த தாருகன் துவாரகை வந்து வசுதேவர், உக்கிர சேனர் இவர்களுடைய பாதங்களில் விழுந்து கண்ணீரால் நனைத்தான்.

31. 16. அரசே! அவன் யாதவர்க ளனைவரும் நாச மடைந்ததைக் கூறினன். அதைக் கேட்ட ஜனங்கள் மனமுடைந்து துக்கத்தால் மூர்ச்சித்தார்கள்.

31. 17. கிருஷ்ணனைப் பிரிந்ததால் மனம் தளர்ந்த ஜனங்கள் முகத்தில் அடித்துக் கொண்டு உறவினர்கள் பிராணனை யிழந்து எங்கே கிடந்தார்களோ அங்கு விரைந்து சென்றுர்கள்.

---

31. 13. மர்த்யேன தேஹேன கிம் ந கிஞ்சித் கார்யமிதி ஸ்வானும் ஆத்மநிஷ்டாம் திவ்யாம் கதிமேவ ப்ரக்ருஷ்டாம் தர்சயன் அன்யதா தேஃபி திவ்யாம் கதி-மனுத்ருத்ய யோகபலேன தேஹஸித்திம் விதாயாத்ரைவ ரந்தும் யதேரன் தன் மா பூதிதி ஏததர்த்தமிதி பாவ: ॥ —ஸ்ரீதரர்.

---

31. 13. स्वस्यगतिं ।

देवकी रोहिणी चैव वसुदेवस्तथा सुतौ ।
कृष्णरामावपश्यन्तः शोकार्ता विजहुः स्मृतिम् ।
प्राणांश्च विजहुस्तत्र भगवद्विरहातुराः ॥ ३१.१८ ॥

उपगुह्य पतींस्तात चितामारुरुहुः स्त्रियः ।
रामपत्न्यश्च तद्देहमुपगुह्याग्नि-माविशन् ॥ ३१.१९ ॥

वसुदेव-पत्न्य-स्तद्गात्रं प्रद्युम्नादीन् हरेः स्नुषाः ।
कृष्णपत्न्योऽविशन्नग्निं रुक्मिण्याद्या-स्तदात्मिकाः ॥ ३१.२० ॥

अर्जुनः प्रेयसः सख्युः कृष्णस्य विरहातुरः ।
आत्मानं सान्त्वयामास कृष्णगीतैः सदुक्तिभिः ॥ ३१.२१ ॥

बन्धूनां नष्टगोत्राणा-मर्जुनः सांपरायिकम् ।
हतानां कारयामास यथावदनुपूर्वशः ॥ ३१.२२ ॥

---

31. 18. தேவகி, ரோகிணி, வசுதேவர் மூவரும் புத்திரர்களான கிருஷ்ணனையும் பலராமனையும் காணாத சோகத்தால் துன்புற்று நினைவிழந்தார்கள். பகவானுடைய பிரிவாற்றாமையால் பிராணனையும் அங்கேயே விட்டார்கள்.

31. 19. ஐயனே! ஸ்திரீகள் தங்கள் தங்கள் பதிகளை அணைந்து சிதையில் ஏறினார்கள். பலராமருடைய பத்தினிகளும் அவருடைய தேகத்தைத் தழுவிக் கொண்டு அக்கினியில் பிரவேசித்தார்கள்.

31. 20. வசுதேவருடைய பத்தினிகள் அவருடைய தேகத்தையும் கிருஷ்ணனுடைய நாட்டுப்பெண்கள் பிரத்யும்னன் முதலியவர்கள் தேகத்தையும் தழுவிக் கொண்டு சிதையில் ஏறினார்கள். ருக்மிணி முதலிய கிருஷ்ண பத்தினிகள் கிருஷ்ண ஸ்வரூபமுள்ளவர்களாகி அக்கினியில் பிரவேசித்தார்கள்.

31. 21. அர்ஜுனன் பிரேமைக்கிடமான கிருஷ்ணனுடைய பிரிவால் துன்பமடைந்து கிருஷ்ணனுடைய உபதேசமாகிய சிறந்த சொற்களைக் கொண்டு தன்னைச் சமாதானம் செய்து கொண்டான்.

31. 22. மரணமடைந்த பந்துக்களில் ஸந்ததி யிழந்தவர்களுக்கு அர்ஜுனன் எப்படிச் செய்யவேண்டுமோ அந்த முறைப்படி ஈமக்கிரியைகளைச் செய்தான்.

---

31. 21. **ஸதுக்திபி:**—நாஹம் ப்ரகாச: ஸர்வஸ்ய யோகமாயா-ஸமாவ்ருத: ।
மூடோயம் நாபிஜாநாதி லோகோ மாமஜ-மவ்யயம்' இத்யாதிபி: ॥

31. 22. கிருஷ்ணன் = ருக்மிணி
|
ப்ரத்யும்னன் = ருக்மவதீ
|
அநிருத்தன் = ருக்மியின் புத்திரனுடைய பெண்
|
வஜ்ரன்
(சாபத்திலிருந்து மிஞ்சியவன்
இவன் ஒருவன் தான்)

द्वारकां हरिणा त्यक्तां समुद्रोऽप्लावयत् क्षणात् ।
वर्जयित्वा महाराज श्रीमद्भगवदालयम् ॥ ३१.३२ ॥

नित्यं सन्निहित-स्तत्र भगवान् मधुसूदनः ।
स्मृत्याशेषाशुभहरं सर्वमंगलमंगलम् ॥ ३१.२४ ॥

स्त्री–बालवृद्धानादाय हतशेषान् धनञ्जयः ।
इन्द्रप्रस्थं समावेश्य वज्रं तत्राभ्यषेचयत् ॥ ३१.२५ ॥

श्रुत्वा सुहृद्वधं राजन्नर्जुनात्ते पितामहाः ।
त्वां तु वंशधरं कृत्वा जग्मुः सर्वे महापथम् ॥ ३१.२६ ॥

य एतद् देवदेवस्य विष्णोः कर्माणि जन्म च ।
कीर्तयेच्छ्रद्धया मर्त्यः सर्वपापैः प्रमुच्यते ॥ ३१.२७ ॥

इत्थं हरे-र्भगवतो रुचिरावतार-
वीर्याणि बालचरितानि च शन्तमानि ।
अन्यत्र चेह च श्रुतानि गृणन् मनुष्यो
भक्तिं परां परमहंसगतौ लभेत ॥ ३१.२८ ॥

31. 23. மகாராஜனே! கிருஷ்ணன் நீங்கிய துவாரகையில் அழகுமிகுந்த பகவானுடைய அரண்மனை நீங்கலாக மற்ற இடங்களை யெல்லாம் ஒரு நொடிப் பொழுதில் ஸமுத்திரம் வியாபித்தது.

31. 24. அங்கே பகவான் மதுசூதனர் என்றும் பிரசன்னமா யிருக்கிறார். அவ்விடம் நினைத்தமாத்திரத்தில் கெடுதிகளை யெல்லாம் போக்கக் கூடியது. மங்கள மனைத்திற்கும் மங்களமானது.

31. 25. இறந்தவர்கள் போக மீதியிருந்த ஸ்திரீகள் குழந்தைகள் கிழவர்க ளாகியோரைக் கூட்டிக் கொண்டு அர்ஜுனன் இந்திரப்பிரஸ்தம் சென்று அங்கு வஜ்ரனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தான்.

31. 26. அரசே! உன் பாட்டன்மார்கள் அர்ஜுனனிட மிருந்து உற்றாரு றவினரின் மரணத்தைப்பற்றிக் கேள்வியுற்று உன்னைக் குலத்தைக் காப்பவனாகச் செய்து யாவரும் மஹாப்பிரஸ்தானம் என்ற கடைசி யாத்திரை சென்றார்கள்.

31. 27. தேவதேவராகிய விஷ்ணுவின் இந்த ஜன்மத்தையும், கர்மங்களையும் சிரத்தையுடன் எவன் கீர்த்தனம் செய்கிறானோ அவன் அப்போதே பாவங்களினின்று விடுபடுகிறான்.

31. 28. இகத்திலும் பரத்திலும் மங்கள மானதும் சிறந்த நன்மை பயப்பதும் மனதிற்கினியதும் ஆகிய பகவான் ஹரியினுடைய அவதாரத்தையும் வீரியங்களையும் பால லீலைகளையும் கீர்த்தனம் செய்யும் மனிதன் பரமஹம்ஸர்களின் புகலிடமான பகவானிடம் பராபக்தியை அடைவான்.

31. 23. वर्जयित्वा महाभाग

इति श्रीमद्भागवते महापुराणे अष्टादश-
साहस्रिकायां संहितायां पारमहंस्यां
श्रीवैयासिक्यां हयग्रीवब्रह्म-
विद्यायां एकादशः स्कन्धः ॥

இங்ஙனம் பரமஹம்ஸரான வியாஸ புத்திரர் உபதேசித்ததும் பதினெண்ணாயிரம் சுலோகங்கள் அடங்கியதும் ஹயக்கிரீவப் பிரம்மவித்தை எனப்படுவதுமான ஸ்ரீமத் பாகவத மகாபுராணத்தில் பதினொராவது ஸ்கந்தம்

முற்றும்

द्वादशः स्कन्धः

॥ उपसंहारः ॥

कलिधर्मनिरूपणम्

श्रीशुक उवाच—

क्षीणप्राणेषु देहेषु देहिनां कलिदोषतः।
वर्णाश्रमवतां धर्मे नष्टे वेदपथे नृणाम् ॥ २.१२ ॥

पाखण्ड-प्रचुरे धर्मे दस्युप्रायेषु राजसु।
चौर्यानृत-वृथाहिंसा-नानावृत्तिषु वै नृषु ॥ २.१३ ॥

शूद्रप्रायेषु वर्णेषु च्छागप्रायासु धेनुषु।
गृहप्रायेष्वाश्रमेषु यौनप्रायेषु बन्धुषु ॥ २.१४ ॥

பன்னிரண்டாவது ஸ்கந்தம்

35. உபஸம்ஹாரம்

கலிதர்ம நிருபணம்

ஸ்ரீதர் கூறியது—

2. 12. கலிதோஷத்தால் உடல்படைத்தோர்க்கு உடலில் பிராணசக்தி குறைந்து போகும் போதும் வர்ணாசிரமங்களையுடைய மனிதர்களின் தர்மமும் வேதமார்க்கமும் நசிக்கும்போதும்;

2. 13. தர்மம் பாஷண்ட மயமாகவும் அரசர்கள் திருடர்களைப் போலவும் ஆகும்போதும் மனிதர்கள் திருட்டு பொய் வீணை இம்சை கலந்த பல தொழில்கள் முதலியவற்றைக் கைக்கொள்ளும்போதும்;

2. 14. வர்ணங்களெல்லாம் ஒரே சூத்திரவர்ணமாகவும், பசுக்கள் ஆடுகளைப் போலவும், ஆசிரமங்களெல்லாம் கிருஹஸ்தாசிரமத்தைப் போலவும், பந்துக்கள் என்பவர்கள் மைத்துனன் மார்களே யாகவும் ஆகும்போதும்;

பன்னிரண்டாவது ஸ்கந்தம்:

முதல் அத்தியாயம் கலிதோஷங்களைப் பற்றியும் கலியில் வரப்போகும் அரசர்களைப் பற்றியும் கூறுகிறது. இரண்டாவது அத்தியாயம் கலிதோஷம் முதிர்ந்தபோது ஏற்படும் கல்கி அவதாரத்தையும் அதர்மிஷ்டர்கள் நாசமடைந்தபின் கிருதயுகம் வருவதையும் கூறுகிறது.

अणुप्रायास्वोषधीषु शमीप्रायेषु स्थास्नुषु ।
विद्युत्प्रायेषु मेघेषु शून्यप्रायेषु सद्मसु ॥ २.१५ ॥

इत्थं कलौ गतप्राये जने तु खरधर्मणि ।
धर्मत्राणाय सत्त्वेन भगवानवतरिष्यति ॥ २.१६ ॥

चराचरगुरो-र्विष्णो-रीश्वरस्याखिलात्मनः ।
धर्मत्राणाय साधूनां जन्म-कर्मापनुत्तये ॥ २.१७ ॥

शंभलग्राममुख्यस्य ब्राह्मणस्य महात्मनः ।
भवने विष्णुयशसः कल्किः प्रादुर्भविष्यति ॥ २.१८ ॥

अश्व-माशुग-मारुह्य देवदत्तं जगत्पतिः ।
असिनासाधुदमन-मष्टैश्वर्यगुणान्वितः ॥ २.१९ ॥

विचरन्नाशुना क्षोण्यां हयेनाप्रतिमद्युतिः ।
नृपलिंगच्छदो दस्यून् कोटिशो निहनिष्यति ॥ २.२० ॥

---

2. 15. செடி கொடிகள் அணுவைப்போல் சிறுத்தும், மரங்கள் வன்னிமரங்களைப் போலும் மேகங்கள் மின்னல் மிகுந்தனவாயும், வீடுகள் (தர்மானுஷ்டான மில்லாமல்) சூனியமாகவும் ஆகும் போதும் ;

2. 16. ஜனங்கள் கழுதைகளின் தர்மங்களையுடையவர்களாக ஆகும்போதும் இப்படியாகக் கலி முற்றியபோது தர்மத்தைக் காப்பதற்காக பகவான் ஸத்துவ குணத்தால் (மீண்டும்) அவதரிக்கப் போகிறார்.

2. 17. சராசர குருவும் ஸர்வஸ்வரூபியும் ஈசுவரருமாகிய விஷ்ணுவின் அவதாரம் தர்மத்தை ரக்ஷிப்பதற்கும் ஸாதுக்களுக்குப் பிறவியிலிருந்தும் கர்மத்தளைகளினின்றும் மோக்ஷமளிப்பதற்கும் ஏற்படுகிறது.

2. 18. சம்பளக் கிராமத்தில் முக்கியமானவரும் மகாத்மாவுமாகிய விஷ்ணுயசஸ் என்ற பிராம்மணருடைய வீட்டில் கல்கி என்ற பெயருடன் பகவான் அவதரிக்கப் போகிறார்.

2. 19. (அணிமாதி) அஷ்டைசுவரியங்களுடனும் (ஸத்யஸங்கல்பம் முதலிய) குணங்களுடனும் கூடியவருமான லோகநாயகன் வேகமாகச் செல்லும் குதிரை மீதேறிக்கொண்டு கத்தியால் கெட்டவர்களை யடக்குபவராய்;

2. 20. ஒப்பற்ற வேகமுடைய குதிரைமீது விரைவில் பூமியெங்கும் சஞ்சரித்து அரசவேஷத்தில் மறைந் தொழுகும் திருடர்களைக் கோடிக் கணக்கில் கொல்லப் போகிறார்.

---

2. 16. जनेषु खरधर्मिषु ।

2. 20. विचरन्नसिना ।

अथ तेषां भविष्यन्ति-मनांसि विशदानि वै ।
वासुदेवांगरागाति-पुण्यगन्धानिल-स्पृशाम् ।
पौरजानपदानां वै हतेष्वखिलदस्युषु ॥ २.२१ ॥

तेषां प्रजाविसर्गश्च स्थविष्ठः संभविष्यति ।
वासुदेवे भगवति सत्त्वमूर्तौ हृदि स्थिते ॥ २.२२ ॥

यदावतीर्णो भगवान् कल्कि-धर्मपति-र्हरिः ।
कृतं भविष्यति तदा प्रजासूतिश्च सात्त्विकी ॥ २.२३ ॥

यदा चन्द्रश्च सूर्यश्च तथा तिष्य-बृहस्पती ।
एकराशौ समेष्यन्ति तदा भवति तत्कृतम् ॥ २.२४ ॥

विष्णो-र्भगवतो भानुः कृष्णाख्योऽसौ दिवं गतः ।
तदाविशत् कलि-र्लोकं पापे यद् रमते जनः ॥ २.२५ ॥

यावत् स पादपद्माभ्यां स्पृशन्नास्ते रमापतिः ।
तावत् कलिर्वै पृथिवीं पराक्रान्तुं न चाशकत् ॥ २.३० ॥

---

2. 21. துஷ்டர்களனைவரு மழிந்த பின்பு, பகவான் வாசுதேவருடைய புண்ணியமான சந்தன வாசனை கலந்த காற்றினால் தொடப்பெற்ற நாடு நகரத்துள்ள அந்த மக்களுக்கு மனம் தெளிவடையப் போகின்றது.

2. 22. ஸத்துவமூர்த்தியான பகவான் வாசுதேவர் இருதயத்தினுள்ளே உறைவதால் அவர்களுடைய மக்கட்பேறும் வெளியில் ஸ்தூலமாக (நல்ல வகையில்) ஏற்படப் போகிறது.

2. 23. தர்மத்திற்குப் பதியாகிய பகவான் கல்கியாக அவதரிக்கும்பொழுது கிருதயுகம் உண்டாகப் போகிறது. மக்களின் பிறப்பும் ஸாத்துவிகமா யிருக்கும்.

2. 24. சந்திரனும் சூரியனும் குருவும் பூச நக்ஷத்திரத்தில் ஒரே ராசியில் எப்பொழுது கூடுகிறார்களோ அதுவே கிருதயுகமாகும்.

2. 25. கிருஷ்ணன் எனப் பெயர்பெற்ற பகவான் விஷ்ணுவினுடைய சூரியன் போல் பிரகாசிக்கும் மூர்த்தி வைகுண்டம் சென்றபோது இவ்வுலகில் கலி புகுந்தது. இந்தக் கலியில் மனது பாவத்தில் இன்பங் காண்கிறது.

2. 30. ஸ்ரீ காந்தனான கிருஷ்ணன் தன் பாதங்களால் பூமியைத் தொட்டுக் கொண்டிருக்கும்வரை கலியானது பூமியை ஆக்கிரமிக்க முடியவில்லை.

दृष्ट्वाऽऽत्मनि जये व्यग्रान् नृपान् हसति भूरियम्।
अहो मा विजिगीषन्ति मृत्योः क्रीडनका नृपाः ॥ ३.१ ॥

समुद्रावरणं जित्वा मां विशन्त्यब्धि-मोजसा।
कियदात्मजयस्यैतन्मुक्तिरात्मजये फलम् ॥ ३.५ ॥

यां विसृज्यैव मनव-स्तत्सुताश्च कुरूद्वह।
गता यथागतं युद्धे तां मां जेष्यन्त्यबुद्धयः ॥ ३.६ ॥

मत्कृते पितृपुत्राणां भ्रातॄणां चापि विग्रहः।
जायते ह्यसतां राज्ये ममताबद्ध-चेतसाम् ॥ ३.७ ॥

ममैवेयं मही कृत्स्ना न ते मूढेति वादिनः।
स्पर्धमाना मिथो घ्नन्ति म्रियन्ते मत्कृते नृपाः ॥ ३.८ ॥

पृथुः पुरूरवा गाधि-र्नहुषो भरतोऽर्जुनः।
मान्धाता सगरो रामः खट्वांगो धुन्धुहा रघुः ॥ ३.९ ॥

---

3. 1. இந்த பூமிதேவியானவள் தன்னை ஜயிக்கும் விஷயத்தில் முயற்சியுள்ளவர்களாகிய அரசர்களைப் பார்த்து, "யமனுக்கு விளையாட்டுப் பொருள்கள் போன்ற இவ்வரசர்கள் என்னை ஜயிக்க விரும்புகிறார்கள், ஆச்சரியம்!" என்று நகைக்கிறாள்.

3. 5. 'ஸமுத்திரத்தை ஆவரணமாகக் கொண்ட என்னை ஜயித்து வீரியத்தால் ஸமுத்திரத்திலும் பிரவேசிக்கிறார்கள். ஆத்மஜயத்தின் பயனாகவே முக்தி ஏற்படும். அந்த ஆத்ம ஜயத்திற்கு இது பயன்படுமா?

3. 6. குருசிரேஷ்டா! மனுக்களும் அவர்களுடைய மக்களும் (பூமியாகிய) என்னை விட்டுவிட்டு வந்தமாதிரியே சென்றார்கள். அப்படிப்பட்ட என்னை அறிவில்லாதவர்கள் யுத்தத்தில் ஜயிக்க விரும்புகிறார்கள்.

3. 7. 'என்னுடையது ராஜ்யம்' என்ற எண்ணத்தால் கட்டுண்ட மனமுடைய அஸத்துக்களிடை தந்தை தனயர் கலகமும் சகோதரர்கள் கலகமும் என் பொருட்டாக ஏற்படுகிறது.

3. 8. 'இந்த பூமி முழுதும் என்னுடையதே; மூடா! உன்னுடைய தன்று' என்று சொல்லிக்கொண்டு அரசர்கள் ஒருவர்க் கொருவர் அசூயையால் என் பொருட்டு அடித்துக்கொண்டு சாகிறார்கள்.

तृणबिन्दुर्ययातिश्च शर्यातिः शन्तनु-र्गयः।
भगीरथः कुवलयाश्वः ककुत्स्थो नैषधो नृगः ॥ ३.१० ॥

हिरण्यकशिपु-र्वृत्रो रावणो लोकरावणः।
नमुचिः शंबरो भौमो हिरण्याक्षोऽथ तारकः ॥ ३.११ ॥

अन्ये च बहवो दैत्या राजानो ये महेश्वराः।
सर्वे सर्वविदः शूराः सर्वे सर्वजितोजिताः ॥ ३.१२ ॥

ममतां मय्यवर्तन्त कृत्वोच्चै-र्मर्त्यधर्मिणः।
कथावशेषाः कालेन ह्यकृतार्थाः कृता विभो ॥ ३.१३ ॥

राजोवाच—

केनोपायेन भगवन् कलेर्दोषान् कलौ जनाः।
विधमिष्यन्त्युपचितां-स्तन्मे ब्रूहि यथा मुने ॥ ३.१६ ॥

युगानि युगधर्मांश्च मानं प्रलयकल्पयोः।
कालस्येश्वररूपस्य गतिं विष्णो-र्महात्मनः ॥ ३.१७ ॥

---

3. 9-12. 'பிருது, புரூரவஸ், காதி, நகுஷன், பரதன், கார்த்த வீரியார்ஜுனன், மாந்தாதா, ஸகரன், ராமன், கட்வாங்கன், துந்துமாரன், ரகு, த்ருணபிந்து, யயாதி, சர்யாதி, சந்தனு, கயன், பகீரதன், குவலயாச்வன், ககுத்ஸ்தன், நைஷதன், நிருகன், ஹிரண்யகசிபு, விருத்ரன், உலகைக் கதறடித்த ராவணன், நமுசி, சம்பரன், நரகன், ஹிரண்யாக்ஷன், தாரகன் இன்னும் பல அசுரர்கள் பிரபுக்களாகிய பல அரசர்கள் எல்லோரும் எல்லா மறிந்தவர்கள், சூரர்கள், எல்லோரும் எல்லாவற்றையும் ஜயித்தவர்களாயினும் ஜயிக்கப்பட்டவர்களானார்கள்.

3. 13. 'சாவுக்குட்பட்டவர்கள் சாவில்லாத என்னிடம் மிகுதியான உரிமை கொண்டாடி எண்ணம் கைகூடாதவர்களாய் நாளடையில் சரித்திரம் மாத்திரம் மீதியுள்ளவர்களானார்கள்.'

அரசன் கூறியது—

3. 16. பகவத் ஸ்வரூபியே! கலியில் ஜனங்கள் அதிகமாய் வளர்ந்த கலி தோஷங்களை என்ன உபாயத்தால் நாசம் செய்கிறார்கள்? முனிவரே! அதை எனக்குச் சொல்லவேண்டும்.

3. 17. யுகங்கள், யுகதர்மங்கள், பிரளயம் கல்பம் ஆகியவற்றின் கணக்கு, காலரூபியும் ஈசுவரரூபியும் மஹாத்மாவுமான விஷ்ணுவின் கதி இவைகளைப் பற்றியும் சொல்லவேண்டும்.

श्रीशुक उवाच—

कृते प्रवर्तते धर्मश्चतुष्पात्तज्जनै-र्धृतः।
सत्यं दया तपो दानमिति पादा विभो-र्नृप ॥ ३.१८ ॥

सन्तुष्टाः करुणा मैत्राः शान्ता दान्तास्तितिक्षवः।
आत्मारामाः समदृशः प्रायशः श्रमणा जनाः ॥ ३.१९ ॥

त्रेतायां धर्मपादानां तुर्यांशो ह्रीयते शनैः।
अधर्मपादै-रनृत-हिंसासन्तोष-विग्रहैः ॥ ३.२० ॥

तदा क्रिया तपोनिष्ठा नातिहिंस्रा न लंपटाः।
त्रैवर्गिका-स्त्रयीवृद्धा वर्णा ब्रह्मोत्तरा नृप ॥ ३.२१ ॥

तपः सत्य-दया-दानेष्वर्धं ह्रसति द्वापरे।
हिंसातुष्ट्यनृतद्वेषै-र्धर्मस्याधर्मलक्षणैः ॥ ३.२२ ॥

ஸ்ரீ சுகர் கூறியது—

3. 18. அரசே! கிருதயுகத்தில் தர்மம் நாலுபாதங்களுடன் முன்னேறுகிறது. அது அந்த யுகத்து ஜனங்களால் ஆதரிக்கப்படுகிறது. பூர்ணமான அந்த தர்மத்திற்கு ஸத்தியம், தானம், தயை, தவம் என்பவையே பாதங்கள்.

3. 19. அப்போது ஜனங்கள் ஸந்தோஷம், கருணை, நட்பு, சாந்தம், அடக்கம், பொறுமை, ஆத்மானந்தம், ஸமதர்சனம், முதலியவற்றை யுடையவர்களாகவும் பெரும் பாலும் ஆத்மஞானத்திற் குழைப்பவர்களாகவும் இருப்பார்கள்.

3. 20. திரேதாயுகத்தில் தர்மத்தின் பாதங்களில் ஒவ்வொன்றும் கால் பங்கு அதர்மத்தின் பாதங்களான அஸத்தியம் இம்சை பேராசை கலகம் ஆகியவற்றால் ஜனங்களால் குறைக்கப்படுகிறது.

3. 21. அரசே! அந்த யுகத்தில் மூன்று வர்ணத்தாரும் தர்மம் தவம் இவைக ளில் நிலைபெற்றவர்களாயும் இம்சையில் அதிகமாய் மனம் செல்லாதவர்களாயும் கெட்ட எண்ணமில்லாதவர்களாயும் தர்மம் அர்த்தம் காமம் இவைகளை நாடுபவர்களாயும் (அறிவில்) முதிர்ந்தவர்களாயும் பிராம்மணர்களை மேலாக மதிப்பவர்களாயும் இருப்பார்கள்.

3. 22. துவாபரயுகத்தில் அதர்மத்தின் அடையாளங்களான இம்சை பேராசை அஸத்தியம் பகை ஆகியவற்றால் தர்மத்தின் பாதங்களான தவமும் ஸத்தியமும் தயை யும் தானமும் பாதி குறைகிறது.

3. 19. प्रायशः सुमदृशाजनाः।

यशस्विनो महाशालाः स्वाध्यायाध्ययने रताः ।
आढ्याः कुटुंबिनो हृष्टा वर्णाःक्षत्रद्विजोत्तराः ॥ ३.२३ ॥

कलौ तु धर्महेतूनां तुर्यांशोऽधर्महेतुभिः ।
एधमानैः क्षीयमाणो ह्यन्ते सोऽपि विनंक्ष्यति ॥ ३.२४ ॥

तस्मिंल्लुब्धा दुराचारा निर्दया शुष्क-वैरिणः ।
दुर्भगा भूरितर्षाश्च शूद्रदाशोत्तराः प्रजाः ॥ ३.२५ ॥

सत्त्वं रजस्तम इति दृश्यन्ते पुरुषे गुणाः ।
कालसंचोदितास्ते वै परिवर्तन्त आत्मनि ॥ ३.२६ ॥

प्रभवन्ति यदा सत्त्वे मनो बुद्धीन्द्रियाणि च ।
तदा कृतयुगं विद्याज्ज्ञाने तपसि यद्रुचिः ॥ ३.२७ ॥

यदा धर्मार्थ-कामेषु भक्ति-र्भवति देहिनाम् ।
तदा त्रेता रजोवृत्तिरिति जानीहि बुद्धिमन् ॥ ३.२८ ॥

3. 23. (அப்போது ஜனங்கள்) கீர்த்தியுள்ளவர்களாகவும் உயர்ந்த சீலமுள்ளவர்களாகவும் வேதாத்தியயனத்தில் பிரியமுள்ளவர்களாகவும் செல்வம் மிக்கவர்களாகவும் குடும்பிகளாகவும், செருக்குடையவர்களாகவும் க்ஷத்திரியனையும் பிராம்மணனையும் மேலாக மதிப்பவர்களாயும் இருப்பார்கள்.

3. 24. கலியில் அதர்ம காரணங்களின் வளர்ச்சியால் தர்மத்தின் பாதங்களில் கால்பகுதியே மீதியாகிறது. குறைந்துகொண்டே போய் அதுவும் அழிந்து போகும்.

3. 25. அதில் மக்கள் லோபிகளாகவும், கெட்ட நடத்தை யுடையவர்களாகவும் தயையில்லாதவர்களாகவும் வரட்டு வைரமுடையவர்களாகவும் பாக்கிய ஹீனர்களாகவும், ஆசை மிக்கவர்களாகவும் சூத்திரர்களையும் மீன் பிடிப்பவர்களையும் மேலாக மதிப்பவர்களாகவும் இருப்பார்கள்,

3. 26. ஸத்துவம், ரஜஸ், தமஸ் என்ற குணங்கள் ஜீவனிடம் காணப்படுகின்றன. அவை காலத்தினால் தூண்டப்பட்டு ஆத்மாவைச் சூழ்கின்றன.

3. 27. மனமும் புத்தியும் இந்திரியங்களும் எப்போது இயற்கையாகவே ஸத்துவகுணத்தில் அதிகமாகச் செல்லுகின்றனவோ அப்போது கிருதயுகம் என்று அறியவேண்டும். ஞானத்திலும் தவத்திலும் அப்போது ருசி யிருக்கும்.

3. 28. புத்திமானே! அறத்திலும் பொருளிலும் இன்பத்திலும் மக்களுக்கு எப்போது பிரீதியுண்டாகிறதோ அப்போது ரஜோகுணம் செயல்படும் திரேதாயுகமென்று அறியவேண்டும்.

3. 28. जानीत बुद्धिमान् ।

यदा लोभस्त्वसन्तोषो मानो दंभोऽथ मत्सरः।
कर्मणां चापि काम्यानां द्वापरं तद्रजस्तमः ॥ ३.२९ ॥

यदा मायानृतं तन्द्रा निद्रा हिंसा विषादनम्।
शोको मोहो भयं दैन्यं स कलि-स्तामसः स्मृतः ॥ ३.३० ॥

यस्मात् क्षुद्रदृशो मर्त्या क्षुद्रभाग्या महाशनाः।
कामिनो वित्तहीनाश्च स्वैरिण्यश्च स्त्रियोऽसतीः ॥ ३.३१ ॥

दस्यूत्कृष्टा जनपदा देवाः पाखण्डदूषिताः।
राजानश्च प्रजाभक्षाः शिश्नोदरपरा द्विजाः ॥ ३.३२ ॥

अव्रता वटवोऽशौचा भिक्षवश्च कुटुंबिनः।
तपस्विनो ग्रामवासा न्यासिनोऽत्यर्थ-लोलुपाः ॥ ३.३३ ॥

ह्रस्वकाया महाहारा भूर्यपत्या गतह्रियः।
शश्वत्कटुकभाषिण्य-श्चौर्य-मायोरु-साहसाः ॥ ३.३४ ॥

---

3. 29. லோபம், ஸந்தோஷ மின்மை, அகங்காரம், இடம்பம், பொறுமை, காமிய கர்மங்களில் பிரீதி ஆகிய இவை உண்டாகும்போது ரஜோகுணமும் தமோ குணமும் செயல்படும் துவாபரயுகம்.

3. 30. சூது, பொய், சோம்பல், உறக்கம், துக்கம், சோகம், மதிமயக்கம், பயம், அற்பத்தனம் ஆகியவை எப்போது மேம்படுகின்றனவோ அது தமோகுணம் செயல்படும் கலி எனப்படுகிறது.

3. 31. இதனுல் மனிதர்கள் அற்பமான நோக்கமுள்ளவர்களாகவும் அற்பமான பாக்கிய முள்ளவர்களாகவும், பெருந்தீனி யுடையவர்களாகவும், சிற்றின்ப நாட்ட முடையவர்களாகவும், பொரு ளில்லாதவர்களாகவும், இருப்பார்கள். ஸ்திரீகள் கெட்ட வர்களாகவும் மனம் போனபடி நடப்பவர்களாகவும் இருப்பார்கள்.

3. 32. நாடுகள் திருடர்களால் வியாபிக்கப்படும்; வேதங்கள் பாஷண்டர்க ளால் கெடுக்கப்படும்; அரசர்கள் மக்களைப் புசிப்பவர்க ளாவார்கள்; பிராம்மணர்கள் காமத்தையும் வயிற்றையும் நிரப்புவதையே பெரிதாய்க் கருதுவார்கள்.

3. 33. பிரம்மசாரிகள் விரதமில்லாதவர்களாகவும் சுத்த மில்லாதவர்களாகவும் இருப்பார்கள். கிருஹஸ்தர்கள் பிச்சை யெடுப்பவர்களாவார்கள்; தபஸ்விகள் கிராம வாசிகளா யிருப்பார்கள்; ஸந்நியாஸிகள் மிக்க பொருளாசை கொண்டவர்களா யிருப் பார்கள்.

3. 34. ஸ்திரீகள் குட்டையான சரீரமுடையவர்களாயும், அதிகமாகச் சாப்பிடுப வர்களாயும், ஏராளமாய்க் குழந்தைகளைப் பெறுபவர்களாயும், வெட்கமற்றவர்களா யும், கடுஞ் சொல்லுடையவர்களாயும், திருட்டும் வஞ்சனையும் பிடிவாதமும் உடையவர் களாயும் இருப்பார்கள்.

पणयिष्यन्ति वै क्षुद्राः किराटाः कूटकारिणः।
अनापद्यपि मंस्यन्ते वार्तां साधु जुगुप्सिताम् ॥ ३.३५ ॥

पतिं त्यक्ष्यन्ति निर्द्रव्यं भृत्या अप्यखिलोत्तमम्।
भृत्यं विपन्नं पतयः कौलं गाश्चापयस्विनीः ॥ ३.३६ ॥

पितृ-भ्रातृ-सुहृ-ज्ज्ञातीन् हित्वा सौरत-सौहृदाः।
ननान्दृश्याल-संवादा दीनाः स्त्रैणाः कलौ नराः ॥ ३.३७ ॥

शूद्राः प्रतिग्रहीष्यन्ति तपोवेषोपजीविनः।
धर्मं वक्ष्यन्त्यधर्मज्ञा अधिरुह्योत्तमासनम् ॥ ३.३८ ॥

नित्य-मुद्विग्नमनसो दुर्भिक्षकर-कर्शिताः।
निरन्नो भूतले राजन्ननावृष्टि-भयातुराः ॥ ३.३९ ॥

वासोऽन्नपान-शयन-व्यवाय-स्नान-भूषणैः।
हीनाः पिशाच-सन्दर्शा भविष्यन्ति कलौ प्रजाः ॥ ३.४० ॥

---

3. 35. வியாபாரிகள் அற்ப புத்தியுடையவர்களாயும் சூதும் வஞ்சனையும் உடையவர்களாயும் வியாபாரம் செய்வார்கள். (எல்லோருமே) ஆபத்தில்லாதபோதும் இழிவான தொழில்களை நல்லதாய்க் கருதுவார்கள்.

3. 36. வேலைக்காரர்கள் பொருளில்லாத யஜமானனை அவன் எல்லா வகையிலும் சிறந்தவனுயினும் விட்டுவிடுவார்கள்; யஜமானர்கள் பரம்பரையாக வந்த வேலைக்காரனை அவனுக்கு ஆபத்து வந்தபோது விட்டுவிடுவார்கள்; கறவை நின்றுபோன பசுக்களையும் விட்டுவிடுவார்கள்.

3. 37. கலியில் மனிதர்கள் ஸ்திரீலோலர்களாய் சிற்றின்பத்தின் பொருட்டு அன்பு செய்பவர்களாய் பெற்றோர் சகோதர சகோதரிகள் உறவினர் ஆகியோரை விட்டு மைத்துனிகளுடனும் மைத்துனர்களுடனும் கலந்து யோசிப்பவர்களாய் அற்பர்களாயிருப்பார்கள்.

3. 38. சூத்திரர்கள் தவவேஷத்தால் பிழைப்பவர்களாய் தானம் வாங்குவார்கள். தர்மந் தெரியாதவர்கள் உயர்ந்த ஆசனத்திலமர்ந்து தர்மோபதேசம் செய்வார்கள்.

3. 39. அரசே! அன்னமில்லாத பூதலத்தில் மக்கள் பஞ்சத்திற் கஞ்சி வாடுபவர்களாய் மழையின்மையால் பயந்து தவிப்பவர்களாய் எப்போதும் மனம் நொந்தவர்களாயிருப்பார்கள்.

3. 40. கலியில் மக்கள் ஆடை அன்னம் பானம் சயனம் சிற்றின்பம் ஸ்நாநம் பூஷணம் இவைகளற்றவர்களாய்ப் பார்ப்பதற்குப் பிசாசைப் போலிருப்பார்கள்.

कलौ काकिणिकेप्यर्थे विगृह्य त्यक्तसौहृदाः।
त्यक्ष्यन्ति च प्रियान् प्राणान् हनिष्यन्ति स्वकानपि ॥ ३.४१ ॥

न रक्षिष्यन्ति मनुजाः स्थविरौ पितरावपि।
पुत्रान् भार्याश्च कुलजाः क्षुद्राः शिश्नोदरंभराः ॥ ३.४२ ॥

कलौ न राजन् जगतां परं गुरुं त्रिलोकनाथानत-पादपंकजम्।
प्रायेण मर्त्या भगवन्तमच्युतं यक्ष्यन्ति पाखण्डविभिन्न-चेतसः ॥ ३.४३ ॥

यन्नामधेयं म्रियमाण आतुरः
पतन् स्खलन् वा विवशो गृणन् पुमान्।
विमुक्त-कर्मार्गल उत्तमां गतिं
प्राप्नोति यक्ष्यन्ति न तं कलौ जनाः ॥ ३.४४ ॥

पुंसां कलिकृतान् दोषान् द्रव्यदेशात्म-संभवान्।
सर्वान् हरति चित्तस्थो भगवान् पुरुषोत्तमः ॥ ३.४५ ॥

---

3. 41. கலியில் இருபது சோழிப் பொருளுக்காகவும் விரோதித்து நட்பைத் துறந்து பிரியமான பிராணனையும் விடுவார்கள். தம்மைச் சார்ந்தவர்களையும் கொல்வார்கள்.

3. 42. வயதான தாய் தந்தையர்களையும் புத்திரர்களையும் நல்ல குலத்திலிருந்து வந்த பத்தினிகளையும் மனிதர்கள் ரக்ஷிக்கமாட்டார்கள்; கோபிஷ்டர்களாகவும் காமத்தையும் வயிற்றையும் நிரப்புபவர்களாகவும் இருப்பார்கள்.

3. 43. அரசே! கலியில் மனிதர்கள் பாஷண்டப் பிரசாரத்தால் மனம் சிதறிய வர்களாய் மூவுலக நாயகர்கள் வணங்கும் பாதாரவிந்தமுடைய லோக குருவான பகவான் அச்சுதரைப் பெரும்பாலும் பூஜிக்கமாட்டார்கள்.

3. 44. சாகுந்தசையி லிருப்பவனும் துன்புற்றவனும் அல்லது விழும்போதோ தடுக்கும்போதோ தன் வயமற்றவனும் ஆகிய மனிதன் எவருடைய நாமத்தைச் சொன்னால் கர்மத் தளையினின்று விடுபட்டு உத்தம கதியை யடைவானோ அந்த பகவானைக் கலியில் மக்கள் பூஜிக்கமாட்டார்கள்.

3. 45. பொருளாலும் தேசத்தாலும் தன்னுடைய இந்திரியங்களாலும ஒரு புருஷனுக்கு கலியின் செயலால் ஏற்படும் தோஷங்களை யெல்லாம் சித்தத்திலிருக்கும் புருஷோத்தமன் போக்குவான்.

---

3. 42. सर्वार्थकुशलान् क्षुद्राः। —பா. பே.

श्रुतः संकीर्तितो ध्यातः पूजितश्चादृतोऽपि वा ।
नृणां धुनोति भगवान् हृत्स्थो जन्मायुताशुभम् । ३.४६

यथा हेम्नि स्थितो वह्नि-र्दुर्वर्णं हन्ति धातुजम् ।
एवमात्मगतो विष्णुर्योगिनामशुभाशयम् ॥ ३.४७ ॥

विद्यातपः-प्राणनिरोध-मैत्री-तीर्थाभिषेक-व्रतदानजप्यैः ।
नात्यन्त-शुद्धिं लभतेऽन्तरात्मा यथा हृदिस्थे भगवत्यनन्ते ॥ ३.४८ ॥

तस्मात् सर्वात्मना राजन् हृदिस्थं कुरु केशवम् ।
म्रियमाणो ह्यवहित-स्ततो यासि परां गतिम् ॥ ३.४९ ॥

म्रियमाणै-रभिध्येयो भगवान् परमेश्वरः ।
आत्मभावं नयत्यंग सर्वात्मा सर्वसंश्रयः ॥ ३.५० ॥

कले-र्दोषनिधे राजन्नस्ति ह्येको महान् गुणः ।
कीर्तनादेव कृष्णस्य मुक्तसंगः परं व्रजेत् ॥ ३.५१ ॥

---

3. 46. கேட்டாலும் கீர்த்தனம் செய்தாலும் தியானம் செய்தாலும் பூஜித்தாலும் ஆதரித்தாலும் பகவான் மனிதர்களுடைய உள்ளத்தி லிருந்துகொண்டு அவர்களுடைய எண்ணிறந்த பிறவித் தீமைகளை யெல்லாம் போக்குவார்.

3. 47. ரஸாயனப் பொருட்களின் கலப்பால் தங்கத்திற் கேற்பட்ட நிறமாறுதலை அக்கினி போக்குவதுபோல் யோகிகளின் உள்ளத்தில் இடம் பெற்ற மலினத்தை அவர்கள் மனதிலுறையும் விஷ்ணு போக்குகிறார்.

3. 48. அனந்தராகிய பகவான் இருதயத்தி லிருக்கும்போது மனம் சுத்தி யடைவதுபோல் வித்தை, தவம், பிராணாயாமம், உயிர்களிடம் அன்பு, புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நாநம் செய்தல், விரதம், தானம், ஜபம் ஆகியவற்றால் முழுதும் சுததி யடையாது.

3. 49. அரசே! ஆகையால் எல்லா வகையாலும் கேசவனை உள்ளத்தில் நிலை நிறுத்துவீராக. மரணத் தருவாயிலும் அமைதியுடன் அவ்வாறு செய்தால், அதனால் உத்தம கதியை அடைவீர்.

3. 50. ஐயனே! சாகுந்தருவாயி லிருப்பவர்களால் ஸர்வசக்திமானும் ஈசுவரனு மாகிய ஹரி தியானிக்கப் பட்டால் எல்லா வற்றையும் படைத்து எல்லா வடிவமாகவு மிருக்கும் அவர் தம் ஸ்வரூபத்தை யடையச் செய்கிறார்.

3. 51. அரசே! தோஷங்களெல்லாம் குவிந்த கலியில் ஒரு சிறந்த குண மிருக்கிறது. கிருஷ்ணனுடைய கீர்த்தனத்தாலேயே தளைகளி னின்று விடுபட்டு உயர் நலத்தை யடையலாம்.

कृते यद्ध्यायतो विष्णुं त्रेतायां यजतो मखैः ।
द्वापरे परिचर्यायां कलौ तद्धरिकीर्तनात् ॥ ३.५२ ॥

इति श्रीमद्भागवते द्वादशस्कन्धे युगानुवर्णनं
नाम तृतीयोऽध्यायः ॥

---

3. 52. கிருத யுகத்தில் விஷ்ணுவை தியானிப்பவனுக்கும் திரேதா யுகத்தில் யாகங்களால் பூஜிப்பவனுக்கும் துவாபரத்தில் பரிவுடன் சேவை செய்பவனுக்கும் எந்த நன்மை உண்டாகுமோ அது கலியில் ஹரிகீர்த்தனத்தாலேயே உண்டாகும்.

இங்ஙனம் ஸ்ரீமத் பாகவதத்தில் பன்னிரண்டாவது ஸ்கந்தத்தில்
யுகங்களின் வர்ணனை எனப் பெயர்பெற்ற
மூன்றாவது அத்தியாயம் முற்றும்.

प्रलयवर्णनम्

श्रीशुक उवाच—

कालस्ते परमाण्वादि-र्द्विपरार्धावधि-र्नृप ।
कथितो युगमानं च शृणु कल्पलयावपि ॥ ४.१ ॥

चतु-र्युग-सहस्रं च ब्रह्मणो दिन-मुच्यते ।
स कल्पो यत्र मनव-श्चतुर्दश विशांपते ॥ ४.२ ॥

तदन्ते प्रलयस्तावान् ब्राह्मी-रात्रि-रुदाहृता ।
त्रयो लोका इमे तत्र कल्पन्ते प्रलयाय हि ॥ ४.३ ॥

एष नैमित्तिकः प्रोक्तः प्रलयो यत्र विश्वसृक् ।
शेतेऽनन्तासनो विश्व-मात्मसात्कृत्य चात्मभूः ॥ ४.४ ॥

द्विपरार्धे त्वतिक्रान्ते ब्रह्मणः परमेष्ठिनः ।
तदा प्रकृतयः सप्त कल्पन्ते प्रलयाय वै ॥ ४.५ ॥

பிரளயவர்ணனம்

ஸ்ரீ சுகர் கூறியது—

4. 1. அரசே! பரமாணுமுதல் இருபரார்த்தம் வரையுள்ள காலமும் யுகத்தின் கணக்கும் உமக்குக் கூறப்பட்டது. கல்பத்தையும் பிரளயத்தையும் இனிக் கேட்கலாம்,

4. 2. ஆயிரம் சதுர்யுகம் பிரம்மாவுக்கு ஒரு பகலெனப்படுகிறது. அரசே! அது ஒரு கல்பம்; அதில் மனுக்கள் பதினன்கு பேர்.

4. 3. ஆயிரம் சதுர்யுகத்தின் முடிவில் அதே அளவுள்ள காலம் பிரம்மாவின் இரவாகக் கூறப்படுகிறது. அது பிரளயம்; இந்த மூவுலகும் அப்போது தோன்றிய கிரமத்தில் மறைகின்றன.

4. 4. இது நைமித்திகப் பிரளயம் எனப்படும். இதில் பிரம்மா தூங்குகிருர். உலகைச் சிருஷ்டித்த நாராயணனும் அனந்த சயனத்தில் உலகை யெல்லாம் தன்னிடம் ஒடுக்கிக்கொண்டு உறங்குகிருர்.

4. 5. பரமேஷ்டியாகிய பிரம்மாவின் இரு பரார்த்த காலத்தின் முடிவில் (மஹத் தத்துவம், அஹங்காரம் பஞ்சதன்மாத்திரைகள் ஆகிய) ஏழு பிரகிருதிகள் பிரளயத்தை யடைகின்றன.

---

4. 1. காலக்கணக்கு மூன்ருவது ஸ்கந்தத்தில் கூறப்பட்டது (3. 11).

एष प्राकृतिको राजन् प्रलयो यत्र लीयते।
अण्डकोशस्तु सङ्घातो विघात उपसादिते ॥ ४.६ ॥

पर्जन्यः शतवर्षाणि भूमौ राजन् न वर्षति।
ततः संवर्तको वह्निः संकर्षण-मुखोत्थितः।
दहत्यनिलवेगोत्थः शून्यान् भूविवरानथ ॥ ४.९ ॥

उपर्यधः समन्ताच्च शिखाभि-र्वह्निसूर्ययोः।
दह्यमानं विभात्यण्डं दग्धगोमयपिण्डवत् ॥ ४.१० ॥

ततः प्रचण्डपवनो वर्षाणामधिकं शतम्।
परः सांवर्तको वाति धूम्रं खं रजसाऽऽवृतम्।
ततो मेघकुलान्यंग चित्रवर्णान्यनेकशः ॥ ४.१२ ॥

शत-वर्षाणि वर्षन्ति नदन्ति रभसस्वनैः।
तत एकोदकं विश्वं ब्रह्माण्ड-विवरान्तरम् ॥ ४.१३ ॥

तदा भूमेर्गन्धगुणं ग्रसन्त्याप उदप्लुते।
ग्रस्त-गन्धा तु पृथिवी प्रलयत्वाय कल्पते ॥ ४.१४ ॥

---

4. 6. அரசே! இது பிராகிருதிகப் பிரளயம் எனப்படுகிறது. அழியுங்காலங் கிட்டியவுடன் (மஹத் முதலியவற்றின்) கூட்டமாகிய பிரம்மாண்டம் லயமடையத் தொடங்குகிறது.

4. 9. அப்போது நூறுவருஷகாலம் பூமியில் மழை பெய்யாது. பிறகு ஸங்கர்ஷணருடைய முகத்திலிருந்து கிளம்பிய பிரளயாக்கினி வாயுவேகத்தால் விருத்தியடைந்து பாதாளம்வரை சூனியமாகச் செய்கிறது.

4. 10. அக்கினி சூரியன் இவர்களுடைய ஜ்வாலைகளால் மேலும் கீழும் நாற்புறமும் எரிக்கப்படும் பிரம்மாண்டம் தீப்பிடித்த சாணியுருண்டைபோல் காணப்படும்.

4. 12-13. பிறகு பிரளயத்தின் பிரசண்டமாருதம் நூறு வருஷத்திற்குமேல் வீசும். ஆகாயம் புகையும் புழுதியும் சூழ்ந்ததாகும். ஐயனே! பிறகு பல விசித்திரமான வர்ணங்களையுடைய மேகக் கூட்டங்கள் நூறு வருஷங்கள் மழை பொழியும். கடுமையாய் இடி இடிக்கும். பிரம்மாண்டத்தின் இடைவெளி முழுதும் ஒரே ஜலமயமாகும்.

4. 14. ஜலம் வியாபித்த அப்போது பூமியின் கந்த குணத்தை ஜலம் கவர்கிறது; கந்தம் கவரப்பட்ட பூமி பிரளயத்திற் குரியதாகிறது.

अपां रसमथो तेजस्ता लीयन्तेऽथ नीरसाः ।
ग्रसते तेजसो रूपं वायुस्तद्रहितं तदा ॥ ४.१५ ॥

लीयते चानिले तेजो वायोः खं ग्रसते गुणम् ।
स वै विशति खं राजं-स्ततश्च नभसो गुणम् ॥ ४.१६ ॥

शब्दं ग्रसति भूतादि-र्नभस्तमनुलीयते ।
तैजसश्चेन्द्रियाण्यंग देवान् वैकारिको गुणैः ॥ ४.१७ ॥

महान् ग्रसत्यहंकारं गुणाः सत्त्वादयश्च तम् ।
ग्रसतेऽव्याकृतं राजन् गुणान् कालेन चोदितम् ॥ ४.१८ ॥

न तस्य कालावयवैः परिणामाद्यो गुणाः ।
अनाद्यनन्त-मव्यक्तं नित्यं कारणमव्ययम् ॥ ४.१९ ॥

न यत्र वाचो न मनो न सत्त्वं तमो रजो वा महदादयोऽमी ।
न प्राणबुद्धीन्द्रिय-देवता वा न सन्निवेशः खलु लोककल्पः ॥ ४.२० ॥

---

4. 15-18. அப்புவின் ரஸத்தைத் தேயு கவர்கிறது; ரஸத்தை யிழந்த அப்பு லயத்தை யடைகிறது. தேயுவின் ரூபத்தை வாயு கவர்கிறது; ரூபத்தை யிழந்த தேயு அப்போது வாயுவிடம் லயத்தை யடைகிறது. வாயுவின் குணத்தை ஆகாயம் கவர் கிறது; அரசே! அந்த வாயு ஆகாயத்தில் லயத்தை யடைகிறது. பின்பு ஆகாயத்தின் குணமாகிய சப்தத்தை பஞ்சபூதங்களின் ஆதிகாரணமான தாமஸாஹங்காரம் கவர் கிறது; ஆகாயம் அதில் லயத்தை யடைகிறது. ஐயனே, தைஜஸ சிருஷ்டியான இந்திரி யங்களையும் வைகாரிக சிருஷ்டியான தேவர்களையும் அஹங்காரத்தையும் தொழில்க ளுடன் மஹத் தத்துவம் கவர்கிறது. ஸத்துவம் முதலிய குணங்கள் மஹத் தத்துவத் தைக் கவர்கின்றன. காலத்தால் தூண்டப்பட்ட மூலப் பிரகிருதி குணங்களைக் கவர் கிறது.

4. 19. அந்த மூலப் பிரகிருதிக்குக் காலத்தின் அவயவங்களான இரவு பகல் முதலியவற்றால் பரிணமமோ (ஆறுவித) மாறுதல்களோ இல்லை. அது ஆதியில்லாதது, எல்லையில்லாதது, வெளிப்படாதது, என்று மிருப்பது அழிவற்றது, அனைத்திற்கும் காரணமா யிருப்பது.

4. 20. எங்கே வாக்கோ மனதோ, ஸத்வம் ரஜஸ் தமஸ் மஹத் முதலிய இவை களோ பிரவேசிக்கமாட்டாவோ, எங்கே பிராணன் புத்தி இந்திரியங்களும் பிரவேசிக்க மாட்டாவோ, தேவதைகளுக்கும் பிரவேச மில்லையோ அங்கே லோக கல்பனை ஏது?

न स्वप्न-जाग्रन्न च तत् सुषुप्तं न खं जलं भूरनिलोऽग्निरर्कः।
संसुप्तवच्छून्यव-दप्रतर्क्यं तन्मूलभूतं पदमामनन्ति ॥ ४.२१ ॥

लयः प्राकृतिको ह्येष पुरुषाव्यक्तयो-र्यदा।
शक्तयः संप्रलीयन्ते विवशाः कालविद्रुताः ॥ ४.२२ ॥

बुद्धीन्द्रियार्थरूपेण ज्ञानं भाति तदाश्रयम्।
दृश्यत्वाव्यतिरेकाभ्या-माद्यन्तवदवस्तु यत् ॥ ४.२३ ॥

दीपश्चक्षुश्च रूपं च ज्योतिषो न पृथग् भवेत्।
एवं धीः खानि मात्राश्च न स्युरन्यतमादृतात् ॥ ४.२४ ॥

बुद्धेर्जागरणं स्वप्नः सुषुप्तिरिति चोच्यते।
मायामात्र-मिदं राजन् नानात्वं प्रत्यगात्मनि ॥ ४.२५ ॥

यथा जलधरा व्योम्नि भवन्ति न भवन्ति च।
ब्रह्मणीदं तथा विश्व- मवयव्युदयाप्ययात् ॥ ४.२६ ॥

---

4. 21. அது கனவுமன்று விழிப்புமன்று; அது உறக்கமுமன்று; அது ஆகாயமும் ஜலமும் பூமியும் வாயுவும் அக்கினியும் சூரியனுமன்று; உறக்கத்தி லாழ்ந்தது போலும் ஒன்று மில்லாதது போலும் அது ஊகிக்க முடியாத நிலை; அதை அனைத்திற்கும் அடிப்படையான நிலையாகக் கூறுகிறார்கள்.

4. 22. எப்பொழுது புருஷனுடைய சக்திகளும் அவ்யக்தத்தின் சக்திகளும் காலத்தால் கலைக்கப்பட்டுத் தம் வயமில்லாமல் பிரளயத்தை யடைகின்றனவோ அப்போது அது பிராகிருதிகப் பிரளயம் எனப்படுகிறது.

4. 23. புத்தி இந்திரியம் விஷயம் என்ற வடிவங்களில் அவைகளைச் சார்ந்து பிரகாசிப்பது (பிரம்மமாகிய) ஞானமே. எது ஆதியும் அந்தமும் உள்ளதோ எது காணப்படுகிறதோ அது (ஞானத்திலின்று) வேறாகாததால் (பழுதையிற் பாம்புபோல்) உண்மையில் இல்லாததே.

4. 24. விளக்கு கண் வடிவம் ஆகியவை ஒளியினின்று வேறாக இருக்க முடியாதவாறு புத்தி இந்திரியங்கள் விஷயங்கள் ஆகிய இவை மெய்யான பிரம்மத்தினின்று வேறாகமாட்டா.

4. 25. புத்தியினிடமே விழிப்பு கனவு தூக்கம் என்று சொல்லப்படுகிறது. (ஆனால் புத்தியே பொய் யாவதால் இந் நிலைகள் பொய்யினும் பொய்). பரமாத்மாவிடம் வேற்றுமையாகக் காணப்படும் இப்பிரபஞ்சம் மாயையாகவே உளது.

4. 26. ஆகாயத்தில் மேகங்கள் தோன்றுவது போலும் மறைவது போலும் (அவயவமாகிய) பிரம்மத்தினிடம் இந்த பிரபஞ்சம் தோன்றுவதாலும் மறைவதாலும் இது அவயவீ.

सत्यं ह्यवयवः प्रोक्तः सर्वावयविना-मिह ।
विनार्थेन प्रतीयेरन् पटस्येवांग तन्तवः ॥ ४.२७ ॥

यत् सामान्यविशेषाभ्या-मुपलभ्येत स भ्रमः ।
अन्योन्यापाश्रयात् सर्वमाद्यन्तवदवस्तु यत् ॥ ४.२८ ॥

विकारः ख्यायमानोऽपि प्रत्यगात्मान-मन्तरा ।
न निरूप्योऽस्त्यणुरपि स्याच्चेच्चित्सम आत्मवत् ॥ ४.२९ ॥

न हि सत्यस्य नानात्व-मविद्वान् यदि मन्यते ।
नानात्वं छिद्रयो-र्यद्वज्ज्योतिषो-र्वातयोरिव ॥ ४.३० ॥

यथा हिरण्यं बहुधा समीयते नृभिः क्रियाभि-र्व्यवहारवर्त्मसु ।
एवं वचोभि-र्भगवानधोक्षजो व्याख्यायते लौकिकवैदिकैर्जनैः ॥ ४.३१ ॥

---

4. 27. அரசே! எல்லா அவயவிகளுக்கும் அவயவம் மெய்யான காரணமெனப் படுகிறது. ஐயனே! வஸ்திர மில்லாவிட்டாலும் நூல்கள் இருப்பதுபோல் பிரபஞ்ச மில்லாவிட்டாலும் பிரம்மம் இருக்கிறது.

4. 28. ஸாமானியம் எனப்படும் காரணம். விசேஷம் எனப்படும் காரியம் ஆகிய வற்ருல் எது அறியப்படுகிறதோ அது மயக்கம். ஒன்றை யொன்று ஆசிரயத்திருப்ப தால் அது எல்லாம் ஆதியும் அந்தமும் உடையதுபோல் உண்மையில் பொருளன்று.

4. 29. பலவடிவாய்த் தோன்றும் பிரபஞ்சம் பிரகாசித்தாலும் பரமாத்மாவைத் தவிற வேருகப் பிராகாசிக்கிறதென்று அணுவளவும் நிருபிக்க முடியாது. முடியும் என்ருல் அப்போது அதுவும் (ஸ்வயம் பிரகாசமாய்) சித்ரூபமாய் விடுவதால் அதுவே தான் ஆத்மா.

4. 30. ஆத்மாவிடம் வேற்றுமை என்பதில்லை. அறியாதவன் உண்டு என்று எண்ணிஞல், அது பெருவெளிக்கும் குடத்திலுள்ள வெளிக்கும், ஆகாயத்திலுள்ள காற்றுக்கும் மூச்சுக் காற்றுக்கும் வேற்றுமை கூறுவதுபோல் ஆகும்.

4. 31. எவ்வாறு மானிடர்களால் தங்கம் விவகார வழிகளில் செயல்களால் பலவாருக (நாணயங்களாகவும் ஆபரணங்களாகவும் விக்கிரகங்களாகவும்) செய்யப் படுகிறதோ அவ்வாறே பகவான் அதோக்ஷஜர் ஜனங்களால் லௌகிக வைதிகச் சொற்களால் (பலவாருகப் பேசப்படுகிருர்).

यथा घनोऽर्कप्रभवोऽर्कदर्शितो ह्यर्कांशभूतस्य च चक्षुषस्तमः।
एवं त्वहं ब्रह्मगुण-स्तदीक्षितो ब्रह्मांशकस्यात्मन आत्मबन्धनः ॥ ४ ३२ ॥

घनो यदर्कप्रभवो विदीर्यते चक्षुः स्वरूपं रविमीक्षते तदा।
यदा ह्यहंकार उपाधिरात्मनो जिज्ञासया नश्यति तर्ह्यनुस्मरेत्
॥ ४.३३ ॥

यदैवमेतेन विवेकहेतिना मायामयाहंकरणात्मबन्धनम्।
छित्वाच्युतात्मानुभवोऽवतिष्ठते तमाहु-रात्यन्तिकमंग संप्लवम्
॥ ४.३४ ॥

नित्यदा सर्वभूतानां ब्रह्मादीनां परन्तप।
उत्पत्तिप्रलयावेके सूक्ष्मज्ञाः संप्रचक्षते ॥ ४.३५ ॥

कालस्रोतो-जवेनाशु ह्रियमाणस्य नित्यदा।
परिणामिना-मवस्था-स्ता जन्म-प्रलय-हेतवः ॥ ४.३६ ॥

---

4. 32. எவ்வாறு சூரியனுடைய சக்தியாலுண்டானதும் சூரியனால் பிரகாசம் பெற்றதுமான மேகம் சூரியனுடைய அம்சமான கண்ணுக்கு (சூரியனைப் பார்க்க) தடையாகிறதோ, அவ்வாறே பிரம்மத்தின் குணமாகத் தோன்றியதும் பிரம்மத்தின் பார்வையால் பிரகாசம் பெற்றதுமான அஹங்காரம் பிரம்மத்தின் அம்சமான ஜீவனுக்கு பிரம்மத்தைக் காண வொட்டாமல் தடை செய்கிறது.

4. 33. எப்போது சூரியனிடமுண்டான மேகம் விலகுகிறதோ அப்போது கண் தனது ஸ்வரூபமேயான சூரியனைக் காண்கிறது. ஆத்மாவை மறைக்கும் அஹங்காரம் ஆராய்ச்சியால் அழிந்தவுடன் தன் ஸ்வரூபம் நினைவுக்கு வருகிறது.

4. 34. அரசே! இவ்விதம் இந்த விவேகமாகிய ஆயுதத்தால் மாயாவடிவான அஹங்காரத்தால் தோன்றிய ஆத்ம பந்தனத்தைக் களைந்து பரிபூரண ஆத்மானுபவத்தில் ஒருவன் எப்பொழுது நிலை பெற்றவனாகின்றானோ அப்போது அவனுடைய அந் நிலையை ஆத்யந்திகப் பிரளயம் எனக் கூறுகின்றனர்.

4. 35. எதிரிகளை எரிப்பவனே! பிரம்மா முதல் எல்லா ஜீவர்களுக்கும் உற்பத்தியும் பிரளயமும் எப்போதும் உண்டு என்று இரகசிய மறிந்தவர்கள் தெளிவாய்க் கூறுகிறார்கள்.

4. 36. மாறுதலுக் குட்பட்ட பொருள்களுக்கு (தோற்றம் மறைவு வளர்தல் தேய்தல் என்ற) என்னென்ன நிலைகள் உண்டோ அவைகள் கால வெள்ளத்தின் வேகத்தால் விரைவில் கவர்ந்து செல்லப்படும் (தேகம் முதலிய) எதற்கும் ஒவ்வொரு க்ஷணத்திலும் உண்டு. அவையே உற்பத்திக்கும் பிரளயத்துக்கும் காரணங்களாகின்றன.

अनाद्यन्तवतानेन कालेनेश्वर-मूर्तिना ।
अवस्था नैव दृश्यन्ते वियति ज्योतिषा-मिव ॥ ४.३७ ॥

नित्यो नैमित्तिकश्चैव तथा प्राकृतिको लयः ।
आत्यन्तिकश्च कथितः कालस्य गतिरीदृशी ॥ ४.३८ ॥

एताः कुरुश्रेष्ठ जगद्विधातु-र्नारायणस्याखिल-सत्त्वधाम्नः ।
लीलाकथास्ते कथिताः समासतः कार्त्स्न्येन नाजोऽप्यभिधातुमीशः
॥ ४.३९ ॥

संसार-सिन्धु-मतिदुस्तर-मुत्तितीर्षो-
र्नान्यः प्लवो भगवतः पुरुषोत्तमस्य ।
लीलाकथारस-निषेवण-मन्तरेण
पुंसो भवेद् विविधदुःख-दवार्दितस्य ॥ ४.४० ॥

पुराणसंहिता-मेता-मृषि-र्नारायणोऽव्ययः ।
नारदाय पुरा प्राह कृष्णद्वैपायनाय सः ॥ ४.४१ ॥

---

4. 37. ஈசுவரனுடைய ஸ்வரூபமாக ஆதியந்த மில்லா திருக்கும் அந்தக்காலத்தி னுல் (ஒவ்வொரு க்ஷணமும்) ஏற்படும் மாறுதல்கள் காணப்படுவதில்லை; ஆகாயத்தில் நட்சத்திரங்களும் கிரகங்களும் (தெரியாமல் நகர்வது) போல்.

4. 38. நித்தியம், நைமித்திகம், பிராகிருதிகம், ஆத்யந்திகம் என்ற பிரளயங்கள் இவ்வாறுக விளக்கப்பட்டன. காலத்தின் கதி இப்படிப் பட்டது.

4. 39. குருசிரேஷ்டா ! உலகங்களைப் படைத்தவரும் உயிர்க ளனைத்திற்கும் உறைவிடமா யிருப்பவருமான நரநாராயணருடைய லீலைகளைப் பற்றிய கதைகளை உமக்குச் சுருக்கமாகக் கூறினேன். முழுதும் கூறுவதற்குப் பிரம்மாவும் வல்லவராகார்.

4. 40. காட்டுத் தீ போன்ற பலவிதத் துன்பங்களால் தவிப்பவனும் கடத்தற் கரிய பிறவிக் கடலைக் கடக்க விரும்புபவனுமான புருஷனுக்கு பகவான் புருஷோத்தம னுடைய லீலைகளைப் பற்றிய கதைகளின் இன்பரஸத்தைச் சேவித்தல் என்ற தெப்ப மல்லாது வேறு ஸாதன மில்லை.

4. 41. மாறுபாடற்றவராகிய நாராயண ரிஷி இந்தப் புராண ஸம்ஹிதையை முன்பு நாரதருக்குக் கூறினர். அவர் கிருஷ்ணத்துவைபாயனருக்குக் கூறினர்.

स वै मह्यं महाराज भगवान् बादरायणः ।
इमां भागवतीं प्रीतः संहितां वेदसंमिताम् ॥ ४.४२ ॥

एतां वक्ष्यत्यसौ सूत ऋषिभ्यो नैमिषालये ।
दीर्घसत्रे कुरुश्रेष्ठ संपृष्टः शौनकादिभिः ॥ ४.४३ ॥

इति श्रीमद्भागवते द्वादशस्कन्धे
प्रलयवर्णनं नाम
चतुर्थोऽध्यायः ॥

---

4. 42. மகா பாக்கியசாலியே! அந்த பாதராயண பகவான் வேதத்திற்குச் சமமானதும் பகவானைச் சார்ந்ததுமான இந்த ஸம்ஹிதையை எனக்குப் பிரீதியுடன் உபதேசித்தார்.

4. 43. குருசிரேஷ்டா! நைமிசாரணியத்தில் நீண்டகாலம் நிகழப் போகும் ஸத்ர யாகத்தில் சௌனகர் முதலிய முனிவர்களால் நன்ருய்க் கேட்கப்பட்டு இந்த ஸூதர் ரிஷிகளுக்கு இதைச் சொல்லப் போகிருர்.

இங்ஙனம் ஸ்ரீமத்பாகவதத்தில் பன்னிரண்டாவது
ஸ்கந்தத்தில் பிரளயவர்ணனம் என்ற
நான்காவது அத்தியாயம்
முற்றும்.

ब्रह्मोपदेशः

श्रीशुक उवाच—

अत्रानुवर्ण्यतेऽभीक्ष्णं विश्वात्मा भगवान् हरिः ।
यस्य प्रसादजो ब्रह्मा रुद्रः क्रोधसमुद्भवः ॥ ५.१ ॥

त्वं तु राजन् मरिष्येति पशुबुद्धि-मिमां जहि ।
न जातः प्रागभूतोऽद्य देहवत्त्वं न नंक्ष्यति ॥ ५.२ ॥

न भविष्यसि भूत्वा त्वं पुत्रपौत्रादि-रूपवान् ।
बीजांकुरवद् देहादे-र्व्यतिरिक्तो यथानलः ॥ ५.३ ॥

स्वप्ने यथा शिरश्छेदं पंचत्वाद्यात्मनः स्वयम् ।
यस्मात् पश्यति देहस्य तत आत्मा ह्यजोऽमरः ॥ ५.४ ॥

घटे भिन्ने यथाऽऽकाश आकाशः स्याद् यथा पुरा ।
एवं देहे मृते जीवो ब्रह्म संपद्यते पुनः ॥ ५.५ ॥

பிரம்மோபதேசம்

ஸ்ரீ சுகர் கூறியது—

5. 1. எவருடைய மகிழ்ச்சியில் பிரம்மாவும் கோபத்தில் ருத்திரமும் தோன்றினார்களோ அந்த ஸர்வஸ்வரூபியான பகவான் ஹரி மேன்மேலும் இங்கே வர்ணிக்கப் படுகிறார்.

5. 2. அரசே! 'நான் மரண மடையப் போகிறேன்' என்ற இந்த பசு புத்தியை விட்டொழியும். நீர் முன்பு ஒருபோதும் பிறக்கவில்லை, அழியவும் போவதில்லை.

5. 3. (உமது தேகத்தினின்று தோன்றிய) பிள்ளை பேரன்களை யுடையவராயிருந்தபோதிலும் நீர் விதையினின்று முளைதோன்றுவதுபோல் அப்படி மாறுபவரல்லர். (ஒரு கட்டையைப்பற்றி எரியும்) தீ போல் நீர் வேறானவர்.

5. 4. தன்னுடைய தலை வெட்டப்படுவதுபோல் ஒருவன் கனவு காண்பதாலும் தன்னுடைய சரீரத்திற்கு மரணம் ஏற்படுவதை ஒருவன் காண்பதாலும் (கண்டு கொண்டிருக்கும்) தான் பிறப்பற்றவன், மரணமற்றவன் என்பதை உணரவேண்டும்.

5. 5. குடம் உடைந்தபின் அதனுள் தனித்திருந்த ஆகாசம் முன்போல் ஆகாசமாகவே ஆய்விடுவதுபோல் தேகம் மரண மடைந்தபின் ஜீவன் மீண்டும் பிரம்மமாகிவிடுகிறான்.

मनः सृजति वै देहान् गुणान् कर्माणि चात्मनः।
तन्मनः सृजते माया ततो जीवस्य संसृतिः ॥ ५.६ ॥

स्नेहाधिष्ठान-वर्त्यग्नि-संयोगो यावदीयते।
ततो दीपस्य दीपत्व-मेवं देहकृतो भवः।
रजः सत्त्व-तमो-वृत्त्या जायतेऽथ विनश्यति ॥ ५.७ ॥

न तत्रात्मा स्वयंज्योति-र्यो व्यक्ताव्यक्तयोः परः।
आकाश इव चाधारो ध्रुवोऽनन्तोपमस्ततः ॥ ५.८ ॥

एव-मात्मान-मात्मस्थ-मात्मनैवामृश प्रभो।
बुद्ध्यानुमान-गर्भिण्या वासुदेवानुचिन्तया ॥ ५.९ ॥

चोदितो विप्रवाक्येन न त्वां धक्ष्यति तक्षकः।
मृत्यवो नोपधक्ष्यन्ति मृत्यूनां मृत्युमीश्वरम् ॥ ५.१० ॥

---

5. 6. மனது தேகங்களையும் குணங்களையும் கர்மங்களையும் ஒருவனுக்கு உண்டாக்குகிறது. அந்த மனதை மாயை உண்டாக்குகிறது. அதனால் ஜீவனுக்கு ஸம்ஸாரம் ஏற்படுகிறது.

5. 7. தீபம் தீபமாவதற்கு எண்ணெய், அகல், திரி, தீ இவற்றின் கூட்டுறவே காரணமாவது போல் தேகத்தைத் தோற்றுவித்த மனதிற்கு (எண்ணெய் போன்றது கர்மம், அகல்போன்றது மனம், திரிபோன்றது தேகம், தீ போன்றது சைதன்யத்தின் அத்தியாஸம். இவற்றால் தீபச் சுடர்போன்ற) ஸம்ஸாரம் ஏற்படுகிறது. ஸத்வம் ரஜஸ் தமஸ் என்ற குணங்களின் செயலால் தோன்றி வளர்ந்து மறைகிறது.

5. 8. அது ஆத்மாவுக் கில்லை. ஆத்மா ஸ்வயம்பிரகாசமானது, ஸ்தூலத்திற்கும் ஸூக்ஷ்மத்திற்கும் அப்பாற்பட்டது, ஆகாயம்போல் ஆதாரமாகியது, அசையாதது, எல்லையும் உவமையும் இல்லாதது, எங்கும் வியாபித்திருப்பது,

5. 9. பிரபுவே! அனுமானத்தைத் தன்னுட்கொண்ட புத்தியாலும் வாசுதேவருடைய தொடர்ச்சியான தியானத்தாலும் இவ்வாறாக உம்மிடமேயுள்ள ஆத்மாவை நீரே ஆராய்ந்து கண்டு கொள்வீராக.

5. 10. பிராம்மண-சாபத்தால் ஏவப்பட்ட தக்ஷகன் உம்மைப் பொசுக்க மாட்டான். அழிவுகளுக் கெல்லாம் அழிவு செய்யும் ஈசுவரனாகிய ஆத்மாவை அழிவின் காரணங்கள் அணுகமாட்டா.

अहं ब्रह्म परं धाम ब्रह्माहं परमं पदम् ।
एवं समीक्षन्नात्मान-मात्मन्याधाय निष्कले ॥ ५.११ ॥

दशन्तं तक्षकं पादे लेलिह्यानं विषाननैः ।
न द्रक्ष्यसि शरीरं च विश्वं च पृथगात्मनः ॥ ५.१२ ॥

एतत् ते कथितं तात यथाऽऽत्मा पृष्टवान् नृप ।
हरे-र्विश्वात्मनश्चेष्टां किं भूयः श्रोतु-मिच्छसि ॥ ५.१३ ॥

इति श्रीमद्भागवते द्वादशस्कन्धे
ब्रह्मोपदेशो नाम
पंचमोऽध्यायः ॥

---

5. 11-12. 'நான் அனைத்திற்கும் உறைவிடமாகிய பிரம்மம், பரமபதமாகிய பிரம்மம் நானே' என்றிவ்வாறு பிரத்தியக்ஷமாகப் பார்த்து நிஷ்களப் பிரம்மத்தினிடம் ஆத்மாவைச் சேர்த்து விஷம் நிறைந்த வாய்களில் துளாவும் நாக்குகளுடன் பாதத்தில் கடிக்கும் தக்ஷகனைப் பார்க்கமாட்டீர்; சரீரத்தையும் பார்க்கமாட்டீர்; உலகத்தையும் உமக்கு வேறாகப் பார்க்கமாட்டீர்.

5. 13. 'அரசே! அன்பிற்குரியவரே! விச்வாத்மாவாகிய ஹரியின் லீலையைப் பற்றி ஆத்மாவாகிய நீர் எதைக் கேட்டீரோ அதை உமக்குக் கூறியாய் விட்டது. இன்னும் எதைக் கேட்க விரும்புகிறீர்?'

இங்ஙனம் ஸ்ரீமத்பாகவத்தில் பன்னிரண்டாவது ஸ்கந்தத்தில்
பிரம்மோபதேசம் என்ற ஐந்தாவது
அத்தியாயம் முற்றும்.

परीक्षितो देहत्यागः

सूत उवाच—

एतन्निशम्य मुनिनाभिहितं परीक्षिद्
व्यासात्मजेन निखिलात्मदृशा समेन।
तत्पादमूल-मुपसृत्य नतेन मूर्ध्ना
बद्धांजलि-स्तमिदमाह स विष्णुरातः ॥ ६.१ ॥

राजोवाच—

सिद्धोऽस्म्यनुगृहीतोऽस्मि भवता करुणात्मना।
श्रावितो यच्च मे साक्षा-दनादि-निधनो हरिः ॥ ६.२ ॥

नात्यद्भुत-महं मन्ये भवता-मच्युतात्मनाम्।
अज्ञेषु तापतप्तेषु भूतेषु यदनुग्रहः ॥ ६.३ ॥

पुराण-संहिता-मेता-मश्रौष्म भवतो वयम्।
यस्यां खलूत्तमश्लोको भगवाननुवर्ण्यते ॥ ६.४ ॥

भगवंस्तक्षकादिभ्यो मृत्युभ्यो न बिभेम्यहम्।
प्रविष्टो ब्रह्मनिर्वाण-मभयं दर्शितं त्वया ॥ ६.५ ॥

பரீக்ஷித்தின் தேஹத்தியாகம்

ஸூதர் கூறியது—

6. 1. ஸர்வாத்மாவாகிய பகவானைத் தன்னிடம் காண்பவரும் ஸமபுத்தியுடைய வரும் வியாஸபுத்திரருமாகிய அவர் கூறிய இதைக் கேட்டு அவருடைய பாதமூலங்களை யணுகிச் சிரசால் வணங்கிக் கை கூப்பிக்கொண்டு அவரிடம் விஷ்ணுராதர் என்பட்ட பரீக்ஷித்து மகாராஜர் பின்வருமாறு கூறினார்.

அரசன் கூறியது—

6. 2. கருணையே உருக்கொண்ட உம்மால் ஆதியும் அந்தமு மில்லாத ஸாக்ஷாத் ஹரியின் பெருமை எனக்கு உபதேசிக்கப் பட்டது. அப்படிப்பட்ட நான் சித்தி எய்திய வனாகவும் உமது அனுக்கிரகத்தைப் பெற்றவனாகவும் உள்ளேன்.

6. 3. அறியாதவர்களாகவும் துன்பத்தால் பீடிக்கப்பட்டவர்களாகவும் உள்ள பிராணிகளுக்கு அனுக்கிரகம் செய்வதென்பது பகவத் ஸ்வரூபியாகிய உங்களிடம் அதிசயப்படக்கூடியதாக நான் கருதவில்லை.

6. 4. எங்கு உத்தம சுலோகராகிய பகவான் தொடர்ந்து வர்ணிக்கப்படுகிறாரோ அப்படிப்பட்ட இந்தப் புராண ஸம்ஹிதையை நாங்கள் உங்களிடம் கேட்டோம்.

6. 5. பகவானே! மரணத்தின் காரணங்களா யிருக்கும் தக்ஷகன் முதலியவர்க ளிட மிருந்து நான் பயப்படவில்லை. உம்மால் பயம் நீங்கிய நிலை காட்டப்பட்டது. அந்தப் பிரம்ம நிர்வாணத்தில் நான் புகுந்துவிட்டேன்.

अनुजानीहि मां ब्रह्मन् वाचं यच्छाम्यधोक्षजे ।
मुक्तकामाशयं चेतः प्रवेश्य विसृजाम्यसून् ॥ ६.६ ॥

अज्ञानं च निरस्तं मे ज्ञानविज्ञान-निष्ठया ।
भवता दर्शितं क्षेमं परं भगवतः पदम् ॥ ६.७ ॥

सूत उवाच—

इत्युक्त-स्तमनुज्ञाप्य भगवान् बादरायणिः ।
जगाम भिक्षुभिः साकं नरदेवेन पूजितः ॥ ६.८ ॥

परीक्षिदपि राजर्षि-रात्मन्यात्मान-मात्मना ।
समाधाय परं दध्यावस्पन्दासुर्यथा तरुः ॥ ६.९ ॥

प्राक्कूले बर्हिष्यासीनो गंगाकूल उदङ्मुखः ।
ब्रह्मभूतो महायोगी निःसंगश्छिन्न-संशयः ॥ ६.१० ॥

---

6. 6. பிரம்மஸ்வரூபியே! எனக்கு உத்திரவு கொடுங்கள். வாக்கை (மனதில்) அடக்குகிறேன். காம வாசனைகளற்றுத் தெளிந்த மனதை அதோக்ஷஜரிடம் புகுத்திப் பிராணன்களை விடுகிறேன்.

6. 7. எல்லா நலன்களையும் கூட்டிவைக்கும் பகவானுடைய உயர்ந்த ஸ்தானம் உங்களால் காட்டப் பெற்றேன். அனுபவத்தில் வந்த ஞான நிஷ்டையால் அக்ஞானம் அறவே ஒழிந்துபோயிற்று.

ஸூதர் கூறியது—

6. 8. இவ்வாறு கூறி அரசனால் பூஜிக்கப்பெற்ற பகவான் வியாஸபுத்திரர் அவருக்கு விடை யளித்துவிட்டு ஸந்நியாஸிகள் தொடர அவ்விடம் விட்டு அகன்றார்.

6. 9. ராஜரிஷியாகிய பரீக்ஷித்தும் புத்தியால் மனதை ஆத்மாவிடம் சேர்த்து மூச்சை யடக்கி மரம்போல் அசையாம லிருந்துகொண்டு பரமாத்மாவை தியானித்தார்.

6. 10. கங்கைக் கரையில் கிழக்கு நுனியாகப் பரப்பிய தர்ப்பையின்மேல் வடக்கு நோக்கி யமர்ந்து சந்தேக மற்றவராகவும் பற்றற்றவராகவும் அந்த மஹாயோகி பிரம்மமே யாயினர்.

---

6. 10. ஒ. (ஏஷா ப்ராஹ்மீஸ்திதி: பார்த்த நைனாம் ப்ராப்ய விமுஹ்யதி ।
ஸ்தித்வாஸ்யா-மந்தகாலேஸபி ப்ரஹ்ம-நிர்வாணம் ருச்சதி) ॥

இதுவே பிரம்மத்துடன் ஒன்றுபட்ட நிலை. இதை அடைந்து ஒருவன் மோகத்தில் அழுந்த மாட்டான். கடைசி காலத்திலும் இதில் நின்று ப்ரஹ்மத்தில் கலந்து போக்குவரவற்ற முக்தி நிலையை அடைகிறான். —கீ. 2. 72.

तक्षकः प्रहितो विप्राः क्रुद्धेन द्विजसूनुना।
हन्तुकामो नृपं गच्छन् ददर्श पथि कश्यपम् ॥ ६.११ ॥

तं तर्पयित्वा द्रविणै-र्निवर्त्य विषहारिणम्।
द्विजरूप-प्रतिच्छन्नः कामरूपोऽदशन्नृपम् ॥ ६.१२ ॥

ब्रह्मभूतस्य राजर्षे-र्देहोऽहि-गरलाग्निना।
बभूव भस्मसात् सद्यः पश्यतां सर्वदेहिनाम् ॥ ६.१३ ॥

हाहाकारो महानासीद् भुवि खे दिक्षु सर्वतः।
विस्मिता ह्यभवन् सर्वे देवासुर-नरादयः ॥ ६.१४ ॥

6\. 11. பிராம்மணர்களே! கோப மடைந்த (சிருங்கி என்ற) பிராம்மண குமார னுடைய சாபத்தால் தூண்டப்பட்ட தக்ஷகன் அரசனைக் கொல்லும் விருப்பத்துடன் செல்லுகையில் வழியில் காசியபர் என்ற ஒரு பிராம்மணனைக் கண்டான்.

6\. 12. விஷத்தைப் போக்க வல்லவரான அவரைத் திரவியத்தால் திருப்தி செய் வித்துத் திரும்பிப் போகச் செய்துவிட்டு இஷ்டமான வடிவெடுக்கவல்ல தக்ஷகன் ஒரு பிராம்மண வடிவில் தன்னை மறைத்துக்கொண்டு போய் அரசனைக் கடித்தான்.

6\. 13. பிரம்மமே யாகிவிட்ட ராஜரிஷியின் தேகம் உடல் தாங்கிய எல்லோரும் பார்த்துக்கொண் டிருக்கும்போதே விஷஜ்வாலையால் உடனே சாம்பலாயிற்று.

6\. 14. பூமியிலும் ஆகாயத்திலும் திசைகளிலும் எங்கும் ஹா! ஹா! என்ற சப்த முண்டாயிற்று. தேவர்கள் அசுரர்கள் மனிதர்கள் ஆகிய எல்லோரும் ஆச்சரியத் தில் மூழ்கினர்.

6\. 12. காசியப கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு விஷவைத்திய பிராம்மணன் அரசனை நாடிச் செல்லும்போது அவரைத் தக்ஷகன் கண்டான். 'எங்கே போகிறீர்?' என்று தக்ஷகன் வினவ 'தக்ஷகன் என்ற நாகராஜன் பரீக்ஷித்தைக் கடித்தால் அந்த விஷத்தை இறக்கப் போகிறேன்' என்றார். அதைக்கேட்ட தக்ஷகன் 'அந்தத் தக்ஷகன் நான்தான். நீர் வீண் சிரமப்படவேண்டாம். நான் ஒருவரைக் கடித்தபின் யாரும் காப்பாற்ற முடியாது' என்று கூறி அதை நிரூபிக்கப் பாம்புருக்கொண்டு அருகிலிருந்த ஆலமரத்தைக் கடிக்கவே அது எரிந்து நீராயிற்று. ஆனால் அந்தப் பிராம்மணன் தன் மந்திர சக்தியால் மரத்தை மீண்டும் பிழைக்கச் செய்தார். தக்ஷகன் பிரமித்து 'அரசன் ஆயுள் முடிந்துவிட்டது. உம்முடைய மந்திரம் அங்கு பலிப்பது ஸந்தேஹம். உமது கீர்த்தியை இழக்கவேண்டாம். உமக்கு வேண்டிய பொருள் நான் தருகிறேன்' என்று கூறி அவரைத் தக்ஷகன் திரும்பிப் போகச் செய்தான்.

देव-दुन्दुभयो नेदु-र्गन्धर्वाप्सरसो जगुः ।
ववृषुः पुष्पवर्षाणि विबुधाः साधुवादिनः ॥ ६.१५ ॥

जनमेजयः स्वपितरं श्रुत्वा तक्षक-भक्षितम् ।
यथा जुहाव संक्रुद्धो नागान् सत्रे सह द्विजैः ॥ ६.१६ ॥

सर्पसत्रे समिद्धाग्नौ दह्यमानान् महोरगान् ।
दृष्ट्वेन्द्रं भयसंविग्नस्तक्षकः शरणं ययौ ॥ ६.१७ ॥

अपश्यं-स्तक्षकं तत्र राजा पारीक्षितो द्विजान् ।
उवाच तक्षकः कस्मान्न दह्येतोरगाधमः ॥ ६.१८ ॥

तं गोपायति राजेन्द्र शक्रः शरणमागतम् ।
तेन संस्तंभितः सर्प-स्तस्मान्नाग्नौ पतत्यसौ ॥ ६.१९ ॥

पारीक्षित इति श्रुत्वा प्राहर्त्विज उदारधीः ।
सहेन्द्रस्तक्षको विप्रा नाग्नौ किमिति पात्यते ॥ ६.२० ॥

---

6. 15. தேவதுந்துபிகள் முழங்கின. கந்தர்வர்களும் அப்ஸரஸ்ஸுகளும் கானம் செய்தனர். தேவர்கள் 'நன்று நன்று' என்று வாழ்த்திப் பூமாரி பெய்தனர்.

6. 16. ஜனமேஜய மகாராஜன் தன் தந்தை தக்ஷகனால் பொசுக்கப்பட்டதைக் கேட்டு மிகவும் கோபமடைந்து பிராம்மணர்களுடன் கூடி ஒரு ஸத்ரயாகத்தை முறைப் படி ஆரம்பித்து அதில் ஸர்ப்பங்களை ஹோமம் செய்தான்.

6. 17. அந்த ஸர்ப்பயாகத்தில் கொழுந்துவிட் டெரியும் அக்கினியில் எரிக்கப் படும் பெரிய ஸர்ப்பங்களைக் கண்டு தக்ஷகன் நடு நடுங்கி இந்திரனைச் சரண மடைந்தான்.

6. 18. பரீக்ஷித்தின் குமாரனாகிய ஜனமேஜயன் அங்கே தக்ஷகன் வராததைக் கண்டு பிராம்மணர்களை நோக்கி, "ஸர்ப்பங்களுள் அதமனாகிய தக்ஷகன் ஏன் எரிக் கப்படவில்லை?" என்று வினவினான்.

6. 19. (பிராம்மணர் கூறியது)—ராஜேந்திரனே! தன்னைச் சரணடைந்த அவனை இந்திரன் காப்பாற்றுகிறான். அதனால் அவன் அசைக்க முடியாம லிருக்கிறான். அக் காரணத்தால்தான் அவன் அக்கினியில் விழவில்லை.

6. 20. சிறந்த புத்தியுடைய ஜனமேஜயன் இவ்வார்த்தையைக் கேட்டு ரித்விக்கு களைப் பார்த்து, "பிராம்மணர்களே! இந்திரனையும் சேர்த்து தக்ஷகனை ஏன் வீழ்த்தக் கூடாது?" என்றான்.

तच्छ्रुत्वाऽऽजुहुवु-र्विप्राः सहेन्द्रं तक्षकं मखे ।
तक्षकाशु पतस्वेह सहेन्द्रेण मरुत्वता ॥ ६.२१ ॥

इति ब्रह्मोदिताक्षेपैः स्थानादिन्द्रः प्रचालितः ।
बभूव संभ्रान्तमतिः सविमानः स तक्षकः ॥ ६.२२ ॥

तं पतन्तं विमानेन सहतक्षक-मंबरात् ।
विलोक्यांगिरसः प्राह राजानं तं बृहस्पतिः ॥ ६.२३ ॥

नैष त्वया मनुष्येन्द्र वधमर्हति सर्पराट् ।
अनेन पीतममृत-मतोऽयमथजरामरः ॥ ६.२४ ॥

जीवितं मरणं जन्तो-र्गतिः स्वेनैव कर्मणा ।
राजंस्ततोऽन्यो नान्यस्य प्रदाता सुखदुःखयोः ॥ ६.२५ ॥

सर्पचोरादिवह्न्यंबु-क्षुत्तृड्व्याध्यादिभि-र्नृप ।
पंचत्व-मृच्छते जन्तु-र्भुङ्क्त आरब्धकर्म तत् ॥ ६.२६ ॥

---

6. 21. அதைக் கேட்டதும் பிராம்மணர்கள் "தக்ஷகா! மருத்துக்கள் சூழ்ந்த இந்திரனுடன் இங்கே விரைவில் வீழ்வாயாக!" என்று யாகத்தில் இந்திரனுடன் சேர்த்துத் தக்ஷகனைக் குறித்து ஹோமம் செய்தார்கள்.

6. 22. இங்ஙனம் பிரம்மணர்கள் கூறிய சொற்களால் தன் ஸ்தானத்திலிருந்து இந்திரன் அசைக்கப்பட்டான்; விமானத்துடனும் தக்ஷகனுடனும் (தான் விழுவதை யுணர்ந்து) மதிகலங்கியவனுன்.

6. 23. ஆகாயத்தினின்று தக்ஷகனுடனும் விமானத்துடனும் விழும் இந்திரனைக் கண்ணுற்ற பிருஹஸ்பதி அந்த ஜனமேஜய ராஜனிடம் பின்வருமாறு கூறினுர்.

6. 24. மனிதர்களிற் சிறந்தவரே! இந்த ஸர்ப்பராஜனுகிய தக்ஷகன் உம்மால் கொல்ல முடியாதவன்; இவனுல் அமிருதபானம் செய்யப்பட்டிருக்கிறது; இதனுல் இவன் மூப்பும் மரணமும் இல்லாதவன்.

6. 25. ஒரு ஜீவனுக்கு வாழ்வும் சாவும் மேலுலகமும், தான் செய்த கர்மத்தாலேயே ஏற்படுகின்றன. ஆகையால், அரசே! ஜீவனுக்கு சுகதுக்கங்களைக் கொடுப்பவன் மற்ற எவனுமில்லை.

6. 26. அரசே! ஒரு ஜீவன் பாம்பால் மரணமடைகிருன். திருடர்கள் முதலியவர்களால் மரணமடைகிருன். நெருப்பாலும் நீராலும் பசியாலும் தாகத்தாலும் வியாதியாலும் மரணமடைகிருன் என்பதெல்லாம் (அததன் வாயிலாகத் தன்னுடைய) பிராரப்த கர்மத்தை யனுபவிக்கிருன் என்பதே யாகும்.

---

6. 26. सर्पचौराग्निविद्युद्भ्यः । —பா. பே.

तस्मात् सत्रमिदं राजन् संस्थीयेताभिचारिकम्।
सर्पा अनागसो दग्धा जनै-र्दिष्टं हि भुज्यते ॥ ६.२७ ॥

सूत उवाच—

इत्युक्तः स तथेत्याह महर्षे-र्मानयन् वचः।
सर्पसत्रादुपरतः पूजयामास वाक्पतिम् ॥ ६.२८ ॥

सैषा विष्णो-र्महामाया-बाध्ययालक्षणा यया।
मुह्यन्त्यस्यैवात्मभूता भूतेषु गुणवृत्तिभिः ॥ ६.२९ ॥

परं पदं वैष्णव-मामनन्ति तद् यन्नेति नेतीत्यत-दुत्सिसृक्षवः।
विसृज्य दौरात्म्य-मनन्यसौहृदा हृदोपगुह्यावसितं समाहितैः
॥ ६.३२ ॥

---

6. 27. ஆகையால் அரசே! இம்சை பிரதானமான இந்த அபிசார ஸத்ரயாகம் முடிவுபெறட்டும். ஒரு பிழையும் செய்யாத ஸர்ப்பங்கள் எரிக்கப்பட்டன. முன் வினையே மக்களால் அனுபவிக்கப் படுகிறது என்பது தான் உண்மை.

ஸூதர் கூறியது—

6. 28. இவ்விதம் கூறப்பெற்ற ஜனமேஜயன் மகரிஷியின் வார்த்தையை வெகு மானித்து 'அப்படியே ஆகட்டும்' என்றான். அதன்படி ஸர்ப்பயாகத்திலிருந்து ஒழிவடைந்து பிருஹஸ்பதியைப் பூஜித்தான்.

6. 29. (ஜனமேஜயன் போன்ற அறிவாளிகளும் இப்படி கோபங்கொண்டு ஒரு பிராணியின் குற்றத்துக்குப் பல பிராணிகளை இம்சிக்கலாமா என்றால்) இதுதான் விஷ்ணுவின் மகாமாயை; இது விலக்க முடியாதது; இதன் ஸ்வரூபம் காணமுடியாதது; இதனாலேயே (விஷ்ணுவின்) அம்சமான எல்லாப் பிராணிகளும் தேகங்களில் குணங்களின் விருத்திகளான கோபம் முதலியவைகளால் மயங்குகிறார்கள்.

6. 32. (மாயையான) இதை யெல்லாம் இல்லை இல்லை யென்று தள்ள விரும்பிய எவர்கள் தேகம் முதலியவற்றில் அகம்பாவத்தை விட்டு எதிலும் பற்று வையாதவர்களாய் ஒருமைப்பட்ட உள்ளத்துடன் எதை நாடி நிற்கின்றார்களோ அதுவே (மாயையைக் கடந்த) விஷ்ணுவின் பரமபதம் எனப் பெரியோர் கூறுகின்றனர்.

---

6. 27. ஆபிசாரிகம்—ஹிம்ஸாதிபலகம்; திஷ்டம்—ப்ராசீனம் கர்ம।

6. 29. ஒ. ஜ்ஞானினாமபி சேதாம்ஸி தேவீ பகவதீ ஹி ஸா।
பலாதாக்ருஷ்ய மோஹாய மஹாமாயா ப்ரயச்சதி ||
—தேவீமாஹாத்மியம். 1-55.

त एतदधिगच्छन्ति विष्णोर्यत्परमं पदम् ।
अहं ममेति दौर्जन्यं न येषां देहगेहजम् ॥ ६.३३ ॥

अतिवादां-स्तितिक्षेत नावमन्येत कंचन ।
न चेमं देहमाश्रित्य वैरं कुर्वीत केनचित् ॥ ६.३४ ॥

नमो भगवते तस्मै कृष्णायाकुण्ठमेधसे ।
यत्पादांबुरुह-ध्यानात् संहिता-मध्यगा-मिमाम् ॥ ६.३५ ॥

शौनक उवाच—

पैलादिभि-र्व्यासशिष्यै-र्वेदाचार्यै-र्महात्मभिः ।
वेदाश्च कतिधा व्यस्ता एतत् सौम्याभिधेहि नः ॥ ६.३६ ॥

अस्मिन्नप्यन्तरे ब्रह्मन् भगवाँल्लोकभावनः ।
ब्रह्मेशाद्यै-र्लोकपालै-र्याचितो धर्मगुप्तये ॥ ६.४८ ॥

पराशरात् सत्यवत्यामंशांशकलया विभुः ।
अवतीर्णो महाभाग वेदं चक्रे चतुर्विधम् ॥ ६.४९ ॥

---

6. 33. தேகத்திலுதிக்கும் 'நான்' என்ற கெட்ட எண்ணமும் கிருகத்தினின்று உதிக்கும் 'என்னுடையது' என்ற கெட்ட எண்ணமும் எவர்களுக்கு இல்லையோ அவர்கள் விஷ்ணுவின் இந்த உத்தம ஸ்வரூபத்தை அடைவார்கள்.

6. 34. அவமதிப்பான பேச்சுக்களைப் பொறுத்துக்கொள்ளவேண்டும். எவரையும் அவமதிக்கக்கூடாது. இந்த தேகப்பற்றினால் எவருடனும் விரோதித்துக்கொள்ளக் கூடாது.

6. 35. எவருடைய திருவடித் தாமரைகளைத் தியானித்து இந்த பாகவத ஸம்ஹிதையை அத்தியயனம் செய்தேனோ அந்தக் குறைபடாத புத்திச்செல்வரும் பகவத்ஸ்வரூபியுமான கிருஷ்ணத்துவைபாயனருக்கு நமஸ்காரம்.

சௌனகர் கூறியது—

6. 36. மனதிற்கினிய ஸூதரே! மகாத்மாக்களும் வேதாசாரியர்களும் வியாஸ சிஷ்யர்களுமான பைலர் முதலியவர்களால் வேதங்கள் எவ்வாறு வகுக்கப்பட்டன? இதைப்பற்றி எங்களுக்குச் சொல்லவேண்டும்.

ஸூதர் கூறியது—

6. 48-49. பிரம்மரிஷியே! இந்த வைவஸ்வத மன்வந்தரத்தில் உலகைப் போஷித்து வளர்க்கும் பிரபுவாகிய பகவான் பிரம்மா ருத்திரர் முதலிய லோக ரக்ஷகர்களால் தர்மரக்ஷணத்திற்காகப் பிரார்த்திக்கப்பட்டுப் பராசரருக்கு ஸத்தியவதியிடம் தனது அம்சமாகிய ஸத்துவகுணத்தின் பகுதியால் மகாபாக்கியசாலியான வியாஸராக அவதரித்து வேதத்தை நான்காக வகுத்தார்.

ऋगथर्व-यजुस्साम्नां राशीनुद्धृत्य वर्गशः।
चतस्रः संहिताश्चक्रे सूत्रेमणिगणा इव ॥ ६.५० ॥

तासां स चतुरः शिष्या-नुपाहूय महामतिः।
एकैकां संहितां ब्रह्मन्नेकैकस्मै ददौ विभुः ॥ ६.५१ ॥

पैलाय संहितामाद्यां बह्वृचाख्या-मुवाच ह।
वैशंपायन-संज्ञाय निगदाख्यं यजुर्गणम् ॥ ६.५२ ॥

साम्नां जैमिनये प्राह तथा छन्दोग-संहिताम्।
अथर्वांगिरसीं नाम स्वशिष्याय सुमन्तवे ॥ ६.५३ ॥

पैलः स्वसंहितामूचे इन्द्रप्रमितये मुनिः।
बाष्कलाय च सोऽप्याह शिष्येभ्यः संहितां स्वकाम् ॥ ६.५४ ॥

चतुर्धा व्यस्य बोध्याय याज्ञवल्क्याय भार्गव।
पराशरायाग्निमित्रे इन्द्रप्रमिति-रात्मवान् ॥ ६.५५ ॥

अध्यापयत् संहितां स्वां माण्डूकेयं ऋषिं कविम्।
तस्य शिष्यो देवमित्रः सौभर्यादिभ्य ऊचिवान् ॥ ६.५६ ॥

---

6. 50. ருக் யஜுஸ் ஸாமம் அதர்வம் ஆகியவற்றின் குவியலை எடுத்துப் பாகு-படுத்தி நூலில் மணிகளைக் கோப்பதுபோல் நாலு ஸம்ஹிதைகளையும் தொகுத்தார்.

6. 51. பிரம்மரிஷியே! மதிமிக்கவரும் பரந்த நோக்கமுடையவருமான அவர் நாலு சிஷ்யர்களை யழைத்து அவற்றுள் ஒவ்வொரு ஸம்ஹிதையை ஒவ்வொருவருக்குக் கொடுத்தார்.

6. 52. பைலருக்கு பஹ்வ்ருசை எனப் பெயர் பெற்ற முதல் ஸம்ஹிதையை உபதேசித்தார். வைசம்பாயனர் என்றவருக்கு நிகதம் எனப்படும் யஜுஸ் ஸம்ஹிதையை உபதேசித்தார்.

6. 53. சந்தோகம் எனப் பெயர்பெற்ற ஸாமஸம்ஹிதையை ஜைமினிக்கு உபதேசித்தார். அதர்வாங்கிரஸம் எனப் பெயர் பெற்ற ஸம்ஹிதையை ஸுமந்து என்ற தமது சிஷ்யருக்கு உபதேசித்தார்.

6. 54-56. பைலர் தமது ஸம்ஹிதையைஇந்திரப் பிரமிதிக்கும் பாஷ்கலருக்கும் உபதேசித்தார். சௌனகரே! பாஷ்கலரும் தமது ஸம்ஹிதையை நான்காகப் பிரித்து போத்யர், யாஜ்ஞவல்கியர், பராசரர், அக்னிமித்திரர் என்ற நான்கு சிஷ்யர்களுக்குக் கொடுத்தார். ஆத்மஞானியாகிய இந்திரப்ரமிதியும் தமது ஸம்ஹிதையை தீர்க்கதரிசியாகிய மாண்டுகேயரிஷிக்கு உபதேசித்தார். அவருடைய சிஷ்யர் தேவமித்ரர் ஸௌபரி-முதலியவர்களுக்கு உபதேசித்தார்.

6. 50. मन्त्रे मणिगणा इव। 6, 51. ततः स चतुरः।

वैशंपायनशिष्या वै चरकाध्वर्यवोऽभवन् ।
यच्चेरु-र्ब्रह्महत्यांहःक्षपणं स्वगुरोर्व्रतम् ॥ ६.६१ ॥

याज्ञवल्क्यश्च तच्छिष्य आहाहो भगवन् कियत् ।
चरितेनाल्पसाराणां चरिष्येऽहं सुदुश्चरम् ॥ ६.६२ ॥

इत्युक्तो गुरुरप्याह कुपितो याह्यलं त्वया ।
विप्रावमन्त्रा शिष्येण मदधीतं त्यजाश्विति ॥ ६.६३ ॥

देवरातसुतः सोऽपिच्छर्दित्वा यजुषां गणम् ।
ततो गतोऽथ मुनयो ददृशुस्तान् यजुर्गणान् ॥ ६.६४ ॥

यजूंषि तित्तिरा भूत्वा तल्लोलुपतयाऽऽददुः ।
तैत्तिरीया इति यजुः शाखा आसन् सुपेशलाः ॥ ६.६५ ॥

याज्ञवल्क्य-स्ततो ब्रह्मन् छन्दांस्यधिगवेषयन् ।
गुरो-रविद्यमानानि सूपतस्थेऽर्कमीश्वरम् ॥ ६.६६ ॥

---

6. 61. வைசம்பாயனருடைய சிஷ்யர்கள் தங்கள் குருவை உத்தேசித்து பிரம்ம ஹத்தி தோஷத்தைப் போக்கவல்ல ஒரு விரதத்தை யனுசரித்ததால் சரகாத்வர்யுக்கள் எனப் பெயர் பெற்றனர்.

6. 62. அவருடைய சிஷ்யரான யாஜ்ஞவல்கியர் குருவை நோக்கி, "பகவானே! திறமை குறைந்த இந்த சிஷ்யர்களுடைய ஆசரணத்தினுல் என்ன பயன்? கடினமான விரதத்தை நான் அநுஷ்டிக்கிறேன்" என்றார்.

6. 63. இதைக் கேட்ட குருவானவர், "விப்ரர்களை அவமதிக்கும் சிஷ்யனுகிய உன்னுல் நான் கோபம் மூண்டுள்ளேன். என்னிடம் அத்தியயனம் செய்ததை விரைவில் விட்டுவிடு" என்றார்.

6. 64. தேவராதரின் புத்திரராகிய அந்த யாஜ்ஞவல்கியரும் யஜுஸ்ஸின் தொகுதியை (விடுதற்கு அறிகுறியாகக்) கக்கிவிட்டு அங்கிருந்து சென்று விட்டார். பிறகு முனிவர்கள் அந்த யஜுஸ்ஸின் தொகுதியைக் கண்டார்கள்.

6. 65. அம்முனிவர்கள் தித்திரிப் பக்ஷிகளின் உருக்கொண்டு வேதங்களில் ஆசை யுள்ளவர்களாகையால் அதைக் கிரகித்தனர்கள். அழகான அந்த யஜுஸ் சாகைகள் தைத்திரீயங்கள் எனப் பெயர் பெற்றன.

6. 66. பிரம்ம ரிஷியே! பிறகு யாஜ்ஞவல்கியர் தமது குருவாகிய வைசம்பாயன ரால் அறியப்படாம லிருந்த சந்தஸ்ஸுகளைத் தேடி ஸூர்ய பகவானை நன்கு துதித்து ஆராதித்தார்.

याज्ञवल्क्य उवाच—

ॐ नमो भगवते आदित्यायाखिल-जगदात्मस्वरूपेण कालरूपेण चतुर्विध-भूत-निकायानां ब्रह्मादिस्तंब-पर्यन्ताना-मन्तर्हृदयेषु बहिरपि चाकाश इवोपाधिना-व्यवधीयमानो भवानेक एव क्षण - लव-निमेषावयवोपचित-संवत्सरगणेनापामा-दान-विसर्गाभ्या-मिमां लोकयात्रामनुवहति ॥ ६.६७ ॥

अथ ह भगवंस्तव चरणनलिन-युगलं त्रिभुवन-गुरुभि-र्वन्दित-मह-मयातयाम-यजुः काम उपसरामीति ॥ ६.७२ ॥

सूत उवाच—

एवं स्तुतः स भगवान् वाजिरूपधरो हरिः।
यजूंष्ययातयामानि मुनयेऽदात् प्रसादितः ॥ ६.७३ ॥

यजुर्भि-रकरोच्छाखा दशपंच शतैर्विभुः।
जगृहु-र्वाजसन्यस्ताः काण्वमाध्यन्दिनादयः ॥ ६.७४ ॥

---

6. 67. ‘ஓம் பகவானுகிய ஆதித்தியருக்கு நமஸ்காரம். பிரம்மா முதல் புழு வரையுள்ள நான்கு வகைப் பிராணி ஸமூகங்களின் இருதயத்தில் ஆத்ம ஸ்வரூபியாகவும் வெளியில் க்ஷணம் லவம் நிமிஷம் முதலியவற்ருல் பெருகும் பல வருஷ வடிவுகொண்ட காலரூபியாகவும் நீர் ஒருவரே விளங்குகிறீர். நீர் ஆகாசம்போல் உபாதியால் மறைக்கப் படாதவராகவும் ஜலங்களைக் கவர்வதாலும் மழையாகப் பெய்வதாலும் உலக யாத்திரையை நடத்துபவராகவும் இருக்கிறீர்.

6. 72. ‘பகவானே! மூவுலகங்களின் குருக்களால் வந்தனம் செய்யப்பெற்ற உமது இரு பாதகமலங்களையும் இதுவரை உலகில் விளங்காத யஜுஸ்ஸில் ஆசை வைத்த நான் உபாசிக்கிறேன்.’

ஸூதர் கூறியது—

6. 73. இவ்விதம் துதிக்கப்பெற்ற அந்த சூரியபகவான் ‘வாஜி’ என்ற குதிரை ரூபத்தில் பிரசன்னராகி உலகில் விளங்காத யஜுர்வேத மந்திரங்களை அம்முனிவருக்குக் கொடுத்தார்.

6. 74. பரந்த அறிவுள்ள அவர் அப் பலநூற்றுக் கணக்கான யஜுர் மந்திரங்களால் பதினைந்து சாகைகளைச் செய்தார். குதிரை வடிவெடுத்த சூரியனால் விடப்பட்ட அச்சாகைகளைக் காண்வர் மாத்யந்தினர் முதலியவர்கள் அத்தியயனம் செய்தார்கள்.

---

6. 67. ஓ. அந்த: புருஷரூபேண காலரூபேண யோ பஹி: ||

जैमिनेः सामगस्यासीत् सुमन्तु-स्तनयो मुनिः।
सुन्वांस्तु तत्सुत-स्ताभ्या-मेकैकां प्राह संहिताम् ॥ ६.७५ ॥

सुकर्मा चापि तच्छिष्यः सामवेदतरो-र्महान्।
सहस्र-संहिता-भेदं चक्रे साम्नां ततो द्विजः ॥ ६.७६ ॥

हिरण्यनाभः कौसल्यः पौष्यंजिश्च सुकर्मणः।
शिष्यौ जगृहतुश्चान्य आवन्त्यो ब्रह्मवित्तमः ॥ ६.७७ ॥

उदीच्याः सामगाः शिष्या आसन् पंचशतानि वै।
पौष्यञ्ज्यावन्त्ययोश्चापि तांश्चोदीच्यान् प्रचक्षते ॥ ६.७८ ॥

सूत उवाच—

अथर्ववित् सुमन्तुश्च शिष्यमध्यापयत् स्वकाम्।
संहितां सोऽपि पथ्याय वेददर्शाय चोक्तवान् ॥ ७.१ ॥

नक्षत्रकल्पः शान्तिश्च कश्यपांगिरसादयः।
एते आथर्वणाचार्याः श्रृणुपौराणिकान् मुने ॥ ७.४ ॥

---

6. 75. முனிவரே! ஸாமகராகிய ஜைமினிக்கு ஸுமந்து புத்திரன்; ஸுமந்து புத்திரன் ஸுகர்மா; இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஜைமினி ஒவ்வொரு சாகையை உபதேசித்தார்.

6. 76-77. ஸுகர்மா என்ற அந்த சிஷ்யர் ஸாமவேதத்தைக் கற்றவர்களுள் பெருமை வாய்ந்தவர். அவர் ஸாம ஸம்ஹிதைப் பிரிவுகளை ஆயிரமாக்கினார். பிறகு ஸுகர்மாவின் சிஷ்யர்களான கோசலநாட்டு ஹிரண்யநாபர், பௌஷ்யஞ்ஜி என்ற இருவரும் அப் பிரிவுகளை அத்தியயனம் செய்தனர். சிறந்த வேதியரான ஆவந்தியர் என்ற மற்றொரு சிஷ்யரும் அத்தியயனம் செய்தார்.

6. 78. பௌஷ்யஞ்ஜிக்கும் ஆவந்தியருக்குமாக வடக்கி லிருந்து வந்த ஐந்நூறு பேர்கள் சிஷ்யர்கள்; அவர்கள் உதீச்ய ஸாமகர்கள் எனப்படுவர். (ஹிரண்யநாப ருக்குக் கிழக்கிலிருந்து வந்த சிஷ்யர்கள் ஐந்நூறுபேர்; அவர்கள் ப்ராச்ய ஸாமகர் கள் எனப்படுவர்.)

ஸூதர் கூறியது—

7. 1. அதர்வ வேதத்தைக் கற்ற ஸுமந்து தனது ஸம்ஹிதையை (கபந்தர் என்ற) சிஷ்யருக்கு அத்தியயனம் செய்வித்தார். அவர் பத்யருக்கும் வேததர்சருக்கும் உபதேசித்தார்.

7. 4. நக்ஷத்திரகல்பர், சாந்திகல்பர், காசியபர், ஆங்கிரஸர் முதலியோர் அதர்வணவேத ஆசாரியர்கள். முனிவரே! இனிப் பௌராணிகர்களைப் பற்றிக் கேளும்.

त्रय्यारुणिः कश्यपश्च सावर्णि-रकृतव्रणः ।
वैशंपायन-हारीतौ षड् वै पौराणिका इमे ॥ ७.५ ॥

अधीयन्त व्यासशिष्यात् संहितां मत्पितु-र्मुखात् ।
एकैकामह-मेतेषां शिष्यः सर्वाः समध्यगाम् ॥ ७.६ ॥

कश्यपोऽहं च सावर्णी रामशिष्योऽकृतव्रणः ।
अधीमहि व्यासशिष्या-च्चतस्रो मूलसंहिताः ॥ ७.७ ॥

पुराणलक्षणं ब्रह्मन् ब्रह्मर्षिभि-र्निरूपितम् ।
शृणुष्व बुद्धि-माश्रित्य वेदशास्त्रानुसारतः ॥ ७.८ ॥

सर्गोऽस्याथ विसर्गश्च वृत्ती रक्षान्तराणि च ।
वंशो वंशानुचरितं संस्था हेतुरपाश्रयः ॥ ७.९ ॥

दशभि-र्लक्षणै-र्युक्तं पुराणं तद्विदो विदुः ।
केचित् पंचविधं ब्रह्मन् महदल्पव्यवस्थया ॥ ७.१० ॥

---

7. 5-6. த்ரய்யாருணி, காசியபர், ஸாவர்ணி, அக்ருதவ்ரணர், வைசம்பாயனர், ஹாரீதர் என்ற ஆறு பௌராணிகர்கள் வியாஸரின் சிஷ்யரும் என் பிதாவுமாகிய ரோமஹர்ஷணரிடம் ஒவ்வொரு ஸம்ஹிதையை அத்தியயனம் செய்தார்கள். நான் இவர்களுக்குச் சிஷ்யனுகி எல்லாவற்றையும் அத்தியயனம் செய்தேன்.

7. 7. காசியபர், ஸாவர்ணி, பரசுராமரின் சிஷ்யராகிய அக்ருதவ்ரணர், நான் ஆக நால்வர் வியாஸபுத்திரரிடம் நான்கு மூல ஸம்ஹிதைகளை அத்தியயனம் செய்தோம்.

7. 8. பிரம்மஸ்வரூபியே ! பிரம்மரிஷிகளால் நிரூபிக்கப்பட்ட புராண லக்ஷணத்தை வேதசாஸ்திரத்தை யனுசரித்த புத்தியுடன் கேட்பீராக.

7. 9-10. பிரம்மஸ்வரூபியே! இங்கு ஸர்க்கம், விஸர்க்கம், விருத்தி, ரக்ஷணம், மன்வந்தரங்கள், வம்சம், வம்சானுசரிதம், நிரோதம், ஹேது, அபாச்ரயம் எனப்பத்து லக்ஷணங்களுடன் கூடியதைப் புராணம் என்று அவ்விஷயத்தை யறிந்தவர்கள் கூறுகிருர்கள். சில சமயம் பெரிது சிறிது என்ற ஏற்பாட்டின்படி ஐந்து லக்ஷணமும் கூறப்படுவதுண்டு. (பத்து லக்ஷணமுடையது மகாபுராணம். ஸர்க்கம் ப்ரதிஸர்க்கம் வம்சம் மன்வந்தரம் வம்சானுசரிதம் என்ற ஐந்து லக்ஷண முடையது சிறு புராணம்.)

---

7. 7. व्यासपुत्राच्चतस्रो । பா. பே.

अव्याकृत-गुणक्षोभान्महत-स्त्रिवृतोऽहमः।
भूतमात्रेन्द्रियार्थानां संभवः सर्ग उच्यते ॥ ७.११ ॥

पुरुषानुगृहीताना-मेतेषां वासनामयः।
विसर्गोऽयं समाहारो बीजाद् बीजं चराचरम् ॥ ७.१२ ॥

वृत्ति-र्भूतानि भूतानां चराणा-मचराणि च।
कृता स्वेन नृणां तत्र कामाच्चोदनयापि वा ॥ ७.१३ ॥

रक्षाच्युतावतारेहा विश्वस्यानु युगे युगे।
तिर्यङ्मर्त्यर्षि-देवेषु हन्यन्ते यैस्त्रयीद्विषः ॥ ७.१४ ॥

मन्वन्तरं मनुर्देवा मनुपुत्राः सुरेश्वरः।
ऋषयोंऽशावतारश्च हरेः षाड्विधमुच्यते ॥ ७.१५ ॥

राज्ञां ब्रह्मप्रसूतानां वंशस्त्रैकालिकोऽन्वयः।
वंशानुचरितं तेषां वृत्तं वंशधराश्च ये ॥ ७.१६ ॥

---

7. 11. மூலப்பிரகிருதியின் குணங்களின் சலனத்தால் மஹத் தத்துவமும் அதிலிருந்து மூன்று வித அஹங்காரமும் அதிலிருந்து ஸூக்ஷ்ம பூதங்களும் இந்திரியங்களும் அர்த்தங்களும் தோன்றுதல் ஸர்க்கம் எனப்படும்.

7. 12. ஈசுவரனுல் ஏவப்பட்ட இந்த மஹத் முதலிய தத்துவங்களின் முன் வினை வாசனைப் பயனுய் விதையினின்று விதையுண்டாவதுபோற் பரம்பரையாகத் தோன்றும் சராசரப் பிரபஞ்சத்தின் தொடர்ச்சி விஸர்க்கம் எனப்படும்.

7. 13. பிராணிக்குத் தாவரம் ஜீவனுேபாயமாகவும் உண்டாயவற்றில் ஒன்றுக்கு மற்றென்று ஜீவனுேபாயமாகவும் ஆகின்றது; இதில் மானிடர்க்குத் தங்கள் இச்சைப் படியும் கட்டளைப்படியும் ஜீவனம் ஏற்படுகிறது; இது வ்ருத்தி.

7. 14. பகவான் அச்சுதருடைய அவதாரமும் லீலையும் யுகந்தோறும் பிராணிகளிடையும், மனிதர், ரிஷிகள் தேவர்களிடையும் ஏற்படுதல் உலகின் ரக்ஷணம் எனப் படுவது. அவதார லீலைகளால் வேதத்தைப் பகைப்பவர்களின் அழிவு ஏற்படுகிறது.

7. 15. மனு, தேவர்கள், மனுபுத்திரர்கள், இந்திரன், ரிஷிகள், ஹரியின் அம்சாவதாரம் என மன்வந்தரம் ஆறு அங்கமுடையதாய்க் கூறப்படுகிறது.

7. 16. பிரம்மாவிடமிருந்து தோன்றிய ஆதி அரசர்களின் முக்காலப் பரம்பரை வம்சமெனப் படுவது. அவர்களுடைய சரித்திரங்களும் அவர்கள் வம்சத்தில் தோன்றியவர்களின் சரித்திரங்களும் வம்சானுசரிதம் எனப்படும்.

नैमित्तिकः प्राकृतिको नित्य आत्यन्तिको लयः।
संस्थेति कविभिः प्रोक्ता चतुर्धास्य स्वभावतः ॥ ७.१७ ॥

हेतु-र्जीवोऽस्य सर्गादे-रविद्याकर्मकारकः।
यं चानुशयिनं प्राहु-रव्याकृत-मुतापरे ॥ ७.१८ ॥

व्यतिरेकान्वयो यस्य जाग्रत्स्वप्नसुषुप्तिषु।
मायामयेषु तद् ब्रह्म जीववृत्तिष्वपाश्रयः ॥ ७.१९ ॥

पदार्थेषु यथा द्रव्यं सन्मात्रं रूपनामसु।
बीजादि पंचतान्तासु ह्यवस्थासु युतायुतम् ॥ ७.२० ॥

विरमेत यदा चित्तं हित्वा वृत्तित्रयं स्वयम्।
योगेन वा तदाऽऽत्मानं वेदेहाया निवर्तते ॥ ७.२१ ॥

एवं लक्षण-लक्ष्याणि पुराणानि पुराविदः।
मुनयोऽष्टादश प्राहुः क्षुल्लकानि महान्ति च ॥ ७.२२ ॥

7. 17. நைமித்திகம், பிராகிருதம், நித்தியம், ஆத்யந்திகம் என இயற்கையாகவே இப்பிரபஞ்சத்திற்கு ஏற்படும் நாலு வகைப் பிரளயமும் (ஸம்ஸ்தா) நிரோதம் என்று ஞானிகளால் கூறப்படுகிறது.

7. 18. அவித்தையால் கர்மத்தைச் செய்பவனாகிய ஜீவன் இந்தப் பிரபஞ்சத்தின் ஸர்க்கம் முதலியவற்றிற்கு ஹேது எனப்படுகிறான். முன் சிருஷ்டிகளி லிருந்து தொடர்ந்து வரும் வாசனையால் அவனையே 'அனுசயீ' எனச் சிலரும் அவ்யாகிருதன் எனப் பிறரும் கூறுகின்றனர்.

7. 19. விழிப்பிலும் கனவிலும் உறக்கத்திலும் ஏற்படும் மாயாமயமான தோற்றங்களில் என் வயத்தால் ஸாக்ஷியா யிருக்கும் தன்மையும் வியதிரேகத்தால் ஸம்ஸாரத்துடன் கலந்திடுந் தன்மையும் எந்தப் பிரம்மத்திற்கு ஏற்படுகிறதோ அதுவே அபாச்ரயம் எனப்படுவது.

7. 20. பெயரும் வடிவமும் உடைய பொருள்களில் (குடத்திற்கு மண்போல்) அடிப்படையான திரவியம் எவ்வாறு இருப்பு மட்டும் உடையதாக இருக்கிறதோ அவ்வாறே வித்திலிருந்து மரணம் வரையுள்ள எல்லா நிலைகளிலும் சேர்ந்தும் சேராமலிருப்பது பிரம்மம்.

7. 21. எப்போது மூன்று விருத்திகளையும் விட்டுத் தானாகவே (பிறவியிலிருந்தே வாமதேவரைப்போல்) சித்தம் ஒழிவடைகிறதோ அல்லது (தேவஹூதி முதலியவர்களைப் போல்) யோகத்தால் ஒழிவடைகிறதோ அப்போது ஒருவன் ஆத்மாவை அறிகிறான். ஸம்ஸாரத்திலிருந்து விடுபடுகிறான்.

7. 22. முன் னறிந்த முனிவர்கள் இவ்வித லக்ஷணங்களால் அறியக்கூடிய புராணங்கள் சிறியவையும் பெரியவையுமாகப் பதினெட்டு என்று கூறுகிறார்கள்.

7. 17. **ஸம்ஸ்தா**—அஸ்ய விச்வஸ்ய ஸ்வஸ்ய பாவேஷு காரணேஷு ப்ருதிவ்யாதி-தத்வேஷு க்ரமேண லய: ஸம்ஸ்தேத்யுச்யதே ||

7. 18. **அனுசயீ**—சைதன்ய-ப்ராதான்யேன அனுசயினம் உபாதி-ப்ராதான்ய-விவக்ஷயா஽வ்யாக்ருதம் ||

ब्राह्मं पाद्मं वैष्णवं च शैवं लैंगं सगारुडम् ।
नारदीयं भागवत-माग्नेयं स्कान्दसंज्ञितम् ॥ ७.२३ ॥

भविष्यं ब्रह्मवैवर्तं मार्कण्डेयं सवामनम् ।
वाराहं मात्स्यं कौर्मं च ब्रह्माण्डाख्यमिति त्रिषट् ॥ ७.२४ ॥

ब्रह्मन्निदं समाख्यातं शाखाप्रणयनं मुनेः ।
शिष्यशिष्य-प्रशिष्याणां ब्रह्मतेजो-विवर्धनम् ॥ ७.२५ ॥

इति श्रीमद्भागवते द्वादशस्कन्धे पुराणलक्षणवर्णनं
नाम सप्तमोऽध्यायः ॥

---

7. 23-24. பிராம்மம், பாத்மம், வைஷ்ணவம், சைவம், லைங்கம், காருடம், நாரதீயம், பாகவதம், ஆக்னேயம், ஸ்காந்தம், பவிஷ்யத், ப்ரம்ம வைவர்த்தம், மார்க்கண்டேயம், வாமனம், வாராஹம், மாத்ஸ்யம், கௌர்மம், பிரம்மாண்டம் எனப் பதினெட்டு.

7. 25. பிரம்மரிஷியே! வியாஸ முனிவரின் சிஷ்யப் பிரசிஷ்யர்களின் பிரம்ம தேஜஸை வளர்க்கும் சாகைகளின் வாலாறு இவ்வாருகக் கூறப்பட்டது. (இது கேட்பவர்களின் பிரம்ம தேஜஸ்ஸையும் வளர்ப்பதாகும்.)

இங்ஙனம் ஸ்ரீமத் பாகவதத்தில் பன்னிரண்டாவது ஸ்கந்தத்தில்
புராண லக்ஷண வர்ணனை எனப் பெயர்பெற்ற
ஏழாவது அத்தியாயம் முற்றும்.

मार्कण्डेय मायादर्शनम्

शौनक उवाच—

सूत जीव चिरं साधो वद नो वदतां वर।
तमस्यपारे भ्रमतां नृणां त्वं पारदर्शनः ॥ ८.१ ॥

आहुश्चिरायुष-मृषिं मृकण्डुतनयं जनाः।
यः कल्पान्ते उर्वरितो येन ग्रस्तमिदं जगत् ॥ ८.२ ॥

स वा अस्मत्कुलोत्पन्नः कल्पेऽस्मिन् भार्गवर्षभः।
नैवाधुनापि भूतानां संप्लवः कोऽपि जायते ॥ ८.३ ॥

एक एवार्णवे भ्राम्यन् ददर्श पुरुषं किल।
वटपत्र-पुटे तोकं शयानं त्वेक-मद्भुतम् ॥ ८.४ ॥

एष नः संशयो भूयान् सूत कौतूहलं यतः।
तं नश्छिन्धि महायोगिन् पुराणेष्वपि संमतः ॥ ८.५ ॥

மார்க்கண்டேயர் மாயாதர்சனம்

சௌனகர் கூறியது—

8. 1. ஸூதரே! ஸாதுவே! பேசவல்லவர்களிற் சிறந்தவரே! நீர் வெகுகாலம் ஜீவித்திருக்கவேண்டும். எங்களுக்கு இதே மாதிரி இன்னும் பல விஷயங்களைச் சொல்ல வேண்டும். எல்லை யில்லாத ஸம்ஸார இருளில் சுழலும் மானிடர்களுக்கு நீர் எல்லையைக் காட்டுவிப்பவர்.

8. 2. ஜனங்கள் மிருகண்டு ரிஷியின் புத்திரராகிய மார்க்கண்டேய ரிஷியைச் சிரஞ்ஜீவி யெனச் சொல்லுகிறார்கள். கல்பத்தின் முடிவில் இந்த வுலகம் பிரளயத்தை யடையும்போது இவர் மட்டும் எஞ்சி நிற்கிறார். (என்பது எப்படி ?)

8. 3. பார்க்கவசிரேஷ்டராகிய அந்த முனிவர் இந்தக் கல்பத்தில் எங்களுடைய வம்சத்தில் உண்டானவர். (அப்படி யிருக்க அவர் பிரளயத்தில் எஞ்சி நின்றவர் என்பது எங்ஙனம் பொருந்தும் ?) இப்போது பிராணிகளுக்கு ஒன்றும் பிரளயம் உண்டாக வில்லையே.

8. 4. (அப்படி யிருக்க) அந்த மார்க்கண்டேயர் ஒருவராகவே ஸமுத்திரத்தில் சுழல்பவராய் ஆலிலையில் ஒருவராக சயனித்திருந்த அற்புதக் குழந்தை வடிவினரான பரமபுருஷனைப் பார்த்தா ரல்லவா ? (அது எங்ஙனம் ?)

8. 5. ஸூதரே! எங்களுக்கு இது பெரிய சந்தேகம். மகா யோகியே! நீர் புராணங்களைக் கரை கண்டவரென எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பட்டவர். எங்களுக்கு மிகுந்த ஆவ லிருப்பதால் எங்கள் சந்தேகத்தைப் போக்கவேண்டும்.

सूत उवाच—

प्राप्त-द्विजाति-संस्कारो मार्कण्डेयः पितुः क्रमात्।
छन्दांस्यधीत्य धर्मेण तपः स्वाध्याय संयुतः ॥ ८.७ ॥

बृहद्व्रतधरः शान्तो जटिलो वल्कलांबरः।
एवं तपःस्वाध्यायपरो वर्षाणा-मयुतायुतम्।
आराधयन् हृषीकेशं जिग्ये मृत्युं सुदुर्जयम् ॥ ८.११ ॥

तस्यैवं युंजत-श्चित्तं तपः-स्वाध्याय-संयमैः।
अनुग्रहायाविरासी-न्नरनारायणो हरिः ॥ ८.३२ ॥

तौ शुक्लकृष्णौ नवकंजलोचनौ चतुर्भुजौ रौरव-वल्कलांबरौ।
पवित्रपाणी उपवीतकं त्रिवृत् कमण्डलुं दण्डमृजुं च वैणवम् ॥ ८.३३ ॥

पद्माक्षमालामुत जन्तु-मार्जनं वेदं च साक्षात्तप एव रूपिणौ।
तपत्तडिद्वर्णपिशंगरोचिषा प्रांशू दधानौ विबुधर्षभार्चितौ ॥ ८.३४ ॥

ஸூதர் கூறியது—

8. 7. மார்க்கண்டேயர் பிதாவிடமிருந்து கிரமமாக உபநயனத்தைப் பெற்று முறைப்படி வேதங்களை அத்தியயனம் செய்து தவம் ஸ்வாத்தியாயம் இவைகளைக் கைக்கொண்டவராயினர்.

8. 11. நைஷ்டிகப் பிரம்மசரிய விரதம் பூண்டவராகவும் ஜடையும் மரவுரியும் தரித்து சாந்தராகவும் இருந்துகொண்டு தவத்திலும் அத்தியயனத்திலுமே மனதைச் செலுத்தி ஹிருஷீகேசரைப் பூஜித்து ஜயிக்கமுடியாத மரணத்தை ஜயித்தவரானார்.

8. 32. தவம், அத்தியயனம், இந்திரிய நிக்ரஹம் ஆகியவற்றால் இவ்வாறு மனதைக் கட்டிய அவருக்கு அனுக்கிரகம் செய்ய நரநாராயண ரூபியான விஷ்ணு பிரத்தியக்ஷமானார்.

8. 33. நரர் வெண்மை நிறமானவர், நாராயணன் கருப்பு நிறமானவர்; இருவரும் புதிதாகப் பூத்த தாமரைபோன்ற கண்களை யுடையவர்கள்; நான்கு புஜங்களை யுடையவர்கள்; மான்தோலையும் மரவுரியையும் ஆடையாயணிந்தவர்கள்; கையில் பவித்திரமணிந்தவர்கள்; முப்புரி உபவீதமும் கமண்டலுவும், நேரான மூங்கிலாலமைந்த தண்டமும் உடையவர்கள்.

8. 34. தாமரை மணியாலான அக்ஷமாலை, பூச்சி புழுக்களை ஒதுக்கும் ஸாதனம், தர்ப்பைக் கற்றை ஆகியவற்றைத் தரித்தவர்கள்; கோரோசனை நிறமாக மின்னல் கொடிபோல் பிரகாசிப்பதால் தவமே உருவெடுத்துவந்தாற் போன்ற உன்னதமான வடிவுடையவர்கள்; தேவசிரேஷ்டர்களால் பூஜிக்கப் பட்டவர்கள்.

उत्थाय प्रांजलिः प्रह्व औत्सुक्या-दाश्लिषन्निव ।
नमो नम इतीशानौ बभाषे गद्गदाक्षरः ॥ ८.३७ ॥

तयो-रासन-मादाय पादयोरवनिज्य च ।
अर्हणेनानुलेपेन धूपमाल्यैरपूजयत् ॥ ८.३८ ॥

मार्कण्डेय उवाच—

तस्मै नमो भगवते पुरुषाय भूम्ने
विश्वाय विश्वगुरवे परदेवतायै ।
नारायणाय ऋषये च नरोत्तमाय
हंसाय संयतगिरे निगमेश्वराय ॥ ८.४७ ॥

यं वै न वेद वितथाक्षपथै-र्भ्रमद्धीः
सन्तं स्वकेष्वसुषु हृद्यपि दृक्पथेषु ।
तन्मायायावृतमतिः स उ एव साक्षा-
दाद्य-स्तवाखिलगुरोरुपसाद्य वेदम् ॥ ८.४८ ॥

---

8. 37. (மார்க்கண்டேயர்) எழுந்து அஞ்ஜலி செய்து வணக்கத்துடன் ஆனந்தப் பெருக்கால் அவர்களை ஆலிங்கனம் செய்துகொள்பவர்போல் 'நமஸ்காரம்' 'நமஸ்காரம்' என்று தழுதழுத்த அக்ஷரங்களில் ஈசுவரர்களாகிய அவர்களிடம் சொன்னார்.

8. 38. அவர்களுக்கு ஆசன மளித்துக் கால்களைக் கழுவி அர்க்கியத்தாலும் சந்தனத்தாலும் தூபத்தாலும் புஷ்பங்களாலும் பூஜித்தார்.

மார்க்கண்டேயர் கூறியது—

8. 47. புருஷோத்தமரும் எல்லையற்றவரும் ஸர்வஸ்வரூபியும் ஸர்வகுருவும் பரதேவதையும் நாராயணரிஷியும் நரோத்தமரும் ஹம்ஸரும் வாக்கை அடக்கியவரும் வேதத்திற்கு ஈசுவரனுமாகிய அந்த பகவானுக்கு நமஸ்காரம்.

8. 48. பயனற்ற இந்திரியங்களின் வழிகளில் சுழலும் புத்தியுடையவனும் உமது மாயையால் சூழப்பட்ட மதியுடையவனுமான புருஷன் தனது பிராணன்களிலும் இருதயத்திலும் கண்காணும் விஷயங்களிலும் உறைபவராயினும் எங்ஙனம் அறிவ தில்லையோ அங்ஙனம் ஆதி புருஷராகிய பிரம்மாவுங்கூட அறியவில்லை. லோக குருவாகிய உம்மிடமிருந்து வேதத்தைப் பெற்ற பின்னரே உம்மைப் பிரத்தியக்ஷமாக அறிந்தார்.

---

8. 48. साक्षा-दन्यस्तवाखिलगुरोरुपसाद्य । பா. பே.

यद्दर्शनं निगम आत्मरहःप्रकाशं
मुह्यन्ति यत्र कवयोऽजपरा यतन्तः।
तं सर्ववाद-विषयप्रतिरूपशीलं
वन्दे महापुरुषमात्मनि गूढबोधम् ॥ ८.४९ ॥

श्रीभगवानुवाच—

वयं ते परितुष्टाः स्म त्वद्बृहद्व्रत-चर्यया।
वरं प्रतीच्छ भद्रं ते वरदेशादभीप्सितम् ॥ ९.३ ॥

ऋषिरुवाच—

जितं ते देवदेवेश प्रपन्नार्तिहराच्युत।
वरेणैतावतालं नो यद् भवान् समदृश्यत ॥ ९.४ ॥

अथाप्यंबुजपत्राक्ष पुण्यश्लोक-शिखामणे।
द्रक्ष्ये मायां यया लोकः सपालो वेद सद्भिदाम् ॥ ९.६ ॥

---

8 49. ஆத்ம ரகசியத்தைப் பிரகாசப் படுத்தும் எவருடைய தரிசனம் வேதத்தில் ஏற்படுகிறதோ, பிரம்மா முதலிய தீர்க்க தரிசிகளும் முயற்சி யுடையவர்களாயினும் எவரிடத்தில் மயக்கத்தை யடைகின்றார்களோ, எவர் எல்லா வாதத்திற்கும் அததற்குத் தக்கபடி இடம் தருபவரா யிருக்கின்றரோ, ஒவ்வொருவரிடமும் மறைந்த ஞானவடிவாய் விளங்குபவர் எவரோ அந்த மகா புருஷராகிய உம்மை நமஸ்கரிக்கின்றேன்.

ஸ்ரீ பகவான் கூறியது—

9. 3. உம்முடைய பிரம்மசரிய விரதானுஷ்டானத்தால் நாம் மிகவும் ஸந்தோஷமடைந்தோம். வரதராஜராகிய எம்மிடம் வேண்டிய வரத்தை வாங்கிக்கொள்ளும். உமக்கு மங்களம் உண்டாகுக.

ரிஷி கூறியது --

9. 4. தேவதேவசுவரா! அச்சுதா! சரணமடைந்தவர்களின் துன்பத்தைத் துடைப்பவரே! உமது வெற்றி விளங்குவதாக. எங்களுக்கு தரிசன மளித்தீரே அந்த ஒரு வரனே போதும்.

9 6. என்றாலும், தாமரைக்கண்ணா! நற்கீர்த்தி மிக்கோரின் சிகாமணியே! பிரம்மா முதலிய லோகபாலர்களுள்பட உலகத்தோரெல்லாம் (ஒன்றேயாகிய) ஸத்தில் எதனால் வேற்றுமையைக் காண்பவர்க ளாகின்றார்களோ அந்த மாயையைக் காண விரும்புகிறேன்.

---

9. 3. वरदोऽस्मि त्वदीप्सितम्।

सूत उवाच—

इतीडितोऽर्चितः काममृषिणा भगवान् मुने ।
तथेति स स्मयन् प्रागाद् बदर्याश्रम-मीश्वरः ॥ ९.७ ॥

तमेव चिन्तयन्नर्थ-मृषिः स्वाश्रम एव सः ।
वसन्नग्न्यर्क-सोमांबु-भूवायु-वियदात्मसु ॥ ९.८ ॥

ध्यायन् सर्वत्र च हरिं भावद्रव्यै-रपूजयत् ।
क्वचित् पूजां विसस्मार प्रेम-प्रसरसंप्लुतः ॥ ९.९ ॥

तस्यैकदा भृगुश्रेष्ठ पुष्पभद्रा-तटे मुनेः ।
उपासीनस्य सन्ध्यायां ब्रह्मन् वायु-रभून्महान् ॥ ९.१० ॥

ततो व्यदृश्यन्त चतुः-समुद्राः समन्ततः क्ष्मातलमाग्रसन्तः ।
समीरवेगोर्मिभिरुग्रनक्र-महाभयावर्त-गभीरघोषाः ॥ ९.१२ ॥

ஸூதர் கூறியது—

9. 7. முனிவரே ! ரிஷியால் இவ்விதம் துதிக்கப்பெற்றவரும் பூஜிக்கப் பெற்றவருமான பகவான் ஸர்வேசுவரன் 'அப்படியே ஆகட்டும்' என்று கூறிவிட்டுப் புன் சிரிப்புடன் பதரிகாசிரமம் சென்றுவிட்டார்.

9. 8-9. ரிஷி யானவர் தம தாசிரமத்தி லிருந்துகொண்டு மாயாதர்சனம் ஏற்படப் போவதையே சிந்திப்பவராய் அக்கினி, சூரியன், சந்திரன், ஜலம், பூமி, வாயு, ஆகாசம், ஆத்மா இவைகளில் எங்கும் பகவானையே தியானித்து மனதால் கற்பிக்கப்பட்ட பொருள்களால் பூஜித்துவந்தார். சில சமயம் பக்திப் பெருக்கில் மூழ்கிப் பூஜையையும் மறந்துபோவார்.

9. 10. பிருகுசிரேஷ்டரே! பிரம்மஸ்வரூபியே! அப்படியிருந்த அம் முனிவர் ஒருசமயம் ஸந்தியா காலத்தில் புஷ்பபத்ரா நதிக்கரையில் வீற்றிருக்கும்பொழுது பெரும் காற்று உண்டாயிற்று.

9. 12. பிறகு காற்றின் வேகத்தா லுண்டான அலைகளால் பூமண்டலத்தை நான்குபுறத்திலும் கவர்வனவும் கொடிய முதலைகள், பயங்கரமான சுழல்கள், கம்பீரமான ஓசை இவற்றுடன் கூடியனவுமான நான்கு ஸமுத்திரங்கள் நான்கு புறத்திலும் காணப்பட்டன.

सक्ष्मान्तरिक्षं सदिवं सभागणं
त्रैलोक्यमासीत् सहदिग्भराप्लुतम् ।
स एक एवोर्वरितो महामुनि-
र्बभ्राम विक्षिप्य जटा जडान्धवत् ॥ ९.१५ ॥

क्षुत्तृट्-परीतो मकरै-स्तिमिंगिलै-
रुपद्रुतो वीचिनभस्वता हतः ।
तमस्यपारे पतितो भ्रमन् दिशो
न वेद खं गां च परिश्रमेषितः ॥ ९.१६ ॥

क्वचिद् गतो महावर्ते तरलै-स्ताडितः क्वचित् ।
यादोभि-र्भक्ष्यते क्वापि स्वयमन्योन्य-घातिभिः ॥ ९.१७ ॥

क्वचिच्छोकं क्वचिन्मोहं क्वचिद्दुःखं सुखं भयम् ।
क्वचिन्मृत्यु-मवाप्नोति व्याध्यादिभिरुतार्दितः ॥ ९.१८ ॥

अयुतायुतवर्षाणां सहस्राणि शतानि च ।
व्यतीयु-र्भ्रमतस्तस्मिन् विष्णुमायावृतात्मनः ॥ ९.१९ ॥

---

9. 15. பூமி, அந்தரிக்ஷம், வானுலகு, நக்ஷத்திரக் கூட்டங்களுடன் மூவுலகு எல்லாம் விரைவில் ஜலத்திஞல் வியாபிக்கப் பட்டது. மகாமுனிவராகிய அவர் ஒருவர் மட்டுமே அந்த அலைபொங்கும் சமுத்திரஜலத்தில் ஜடைகளை அலையவிட்டு மூடனைப் போலும் குருடனைப்போலும் சுழன்ருர்.

9. 16. பசியாலும் தாகத்தாலும் பீடிக்கப்பட்டவரும், மகரங்களாலும் திமிங்கிலங் களாலும் துரத்தப்பட்டவரும், அலைகளாலும் காற்ருலும் அடிக்கப்பட்டவரும், களைப்பு மிக்கவரும் ஆகிய அவர் எல்லையற்ற இருளால் சூழப்பெற்றுச் சுழல்பவராய்த் திசைக ளையோ ஆகாயத்தையோ, பூமியையோ காணவில்லை.

9. 17. சிலசமயம் பெருஞ்சுழலில் அகப்படுவார், சிலசமயம் அலைகளால் அடிபடுவார், ஒன்றுடன் ஒன்று சண்டையிடும் ஜல ஜந்துக்களால் சிலசமயம் புசிக்கப் படுவார்.

9. 18. ஒருபோது சோகம், ஒருபோது மோகம், ஒருபோது துக்கம் ஒருபோது சுகம் ஒருபோது பயம் ஒருபோது வியாதி, முதலியவற்ருல் பீடிக்கப்பட்டு மரணம் ஆகியவற்றை யடைவார்.

9. 19. விஷ்ணு மாயையால் சூழப்பெற்ற மனமுடையவராகி அப்படிச் சுழன்ற அவருக்குப் பல கோடி வருஷங்கள் சென்றன.

---

9. 15.. एवोद्वरितो ।   9. 16. तमस्यपारे परितो ।

9. 17. क्वचिन्माया-महावर्ते ।

स कदाचिद् भ्रमंस्तस्मिन् पृथिव्याः ककुदि द्विजः।
न्यग्रोधपोतं ददृशे फलपल्लवशोभितम् ॥ ९.२० ॥

प्रागुत्तरस्यां शाखायां तस्यापि ददृशे शिशुम्।
शयानं पर्णपुटके ग्रसन्तं प्रभया तमः ॥ ९.२१ ॥

महा-मरकतश्यामं श्रीमद्वदनपंकजम्।
कंबुग्रीवं महोरस्कं सुनासं सुन्दरभ्रुवम् ॥ ९.२२ ॥

चारंगुलिभ्यां पाणिभ्यामुन्नीय चरणांबुजम्।
मुखे निधाय विप्रेन्द्रो धयन्तं वीक्ष्य विस्मितः ॥ ९.२५ ॥

तद्दर्शनाद् वीतपरिश्रमो मुदा
प्रोत्फुल्ल-हृत्पद्म-विलोचनांबुजः।
प्रहृष्टरोमाद्भुत-भावशंकितः
प्रष्टुं पुरस्तं प्रससार बालकम् ॥ ९.२६ ॥

तावच्छिशोर्वै श्वसितेन भार्गवः
सोऽन्तःशरीरं मशको यथाविशत्।
तत्राप्यदो न्यस्तमचष्ट कृत्स्नशो
यथा पुरामुह्यदतीव विस्मितः ॥ ९.२७ ॥

9. 20. அப்படிச் சுழன்று வருகையில் அந்தப் பிராம்மணர் ஒரு சமயம் பூமியில் ஒரு உன்னதமான இடத்தில் இலைகளுடனும் பழங்களுடனும் விளங்கும் ஒரு ஆலமரத்தைக் கண்டார்.

9. 21. அதின் வடகிழக்குக் கிளையில் ஒரு இலை மேல் தன் ஒளியால் இருளை விழுங்குவதுபோல் ஒரு குழந்தை சயனித்திருக்கக் கண்டார்.

9. 22. சிறந்த மரகத நீலமேனியும் அழகிய முகாரவிந்தமும் சங்குபோன்ற கழுத்தும், சிறந்த மார்பும், அழகிய மூக்கும், சுந்தரமான புருவமும் (உடையதாக இருந்தது அக் குழந்தை).

9. 25. பிராம்மண சிரேஷ்டரே! அழகிய கைவிரல்களால் பாத கமலத்தை இழுத்து வாயில் வைத்துப் பானம் செய்துகொண்டிருக்கும் அக் குழந்தையைக் கண்ணுற்று ஆச்சரிய மடைந்தார்.

9. 26. அந்த தரிசனத்தால் சிரம நீங்கியவரும் மகிழ்ச்சியால் மலர்ந்த உள்ளத்தையும் கண்களையு முடையவரும், மயிர்க் கூச்சலடைந்தவரும் ஆச்சரியத்தினுல் சந்தேகங் கொண்டவருமாகிய அவர் அக்குழந்தையை விசாரிப்பதற்காக முன் சென்றார்.

9. 25. தயந்தம் — பிபந்தம் ।

9. 26. पुनस्तं । பா. பே.

खं रोदसी भगणानद्रि-सागरान्
द्वीपान् सवर्षान् ककुभः सुरासुरान् ।
वनानि देशान् सरितः पुराकरान्
खेटान् व्रजानाश्रमवर्णवृत्तयः ॥ ९.२८ ॥

महान्ति भूतान्यथ भौतिकान्यसौ
कालं च नानायुग-कल्पकल्पनम् ।
यत्किंचिदन्यद् व्यवहार-कारणं
ददर्श विश्वं सदिवावभासितम् ॥ ९.२९ ॥

हिमालयं पुष्पवहां च तां नदीं
निजाश्रमं तत्र ऋषीनपश्यत् ।
विश्वं विपश्यञ्छ्वसिताच्छिशोर्वै
बहिर्निरस्तो न्यपतल्लयाब्धौ ॥ ९.३० ॥

तस्मिन् पृथिव्या ककुदि प्ररूढं
वटं च तत्पर्णपुटे शयानम् ।
तोकं च तत्प्रेमसुधास्मितेन
निरीक्षितोऽपांगनिरीक्षणेन ॥ ९.३१ ॥

---

9. 27. அப்போது மார்க்கண்டேயர் குழந்தையின் மூச்சுக் காற்றால் கவரப்பட்டு ஒரு கொசுவைப்போல் அக்குழந்தையின் சரீரத்திற்குள் புகுந்தார். அங்கே (பிரளயத்திற்கு) முன்போல் அமைந்திருந்த பிரபஞ்சம் முழுவதையும் கண்டு இன்னும் அதிக ஆச்சரிய மடைந்தார்.

9. 28-29. ஆகாயம், ஸ்வர்க்கம், பூமி, நக்ஷத்திரக் கூட்டங்கள், மலைகள், கடல்கள், கண்டங்கள், தேசங்கள், திசைகள், தேவர்கள், அசுரர்கள், காடுகள், நாடுகள், நதிகள், நகரங்கள், சுரங்கங்கள், கிராமங்கள், இடைச் சேரிகள், ஆசிரமங்கள், வர்ணங்கள், அவற்றின் தொழில்கள் மகாபூதங்கள், பௌதிகப் பொருள்கள், பல யுகங்களையும் கல்பங்களையும் தோற்றுவிக்கும் காலம், உலக வியவகாரத்திற்குக் காரணமான மற்றும் எவையுண்டோ அவை யாவற்றையும் பரமார்த்தமாக உள்ளதுபோல் கண்டார்.

9. 30. இமயமலை, அந்தப் புஷ்பவஹை (புஷ்பபத்ரா) என்ற நதி, தம தாசிரமம் ஆகியவற்றையும் ரிஷியானவர் பார்த்தார். அப்படி அனைத்தையும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே குழந்தையின் மூச்சுக் காற்றால் வெளியில் தள்ளப்பட்டுப் பிரளய சமுத்திரத்தில் விழுந்தார்.

9. 31. அங்கே பூமியில் உன்னதமான இடத்தில் வளர்ந்து நிற்கும் ஆலமரத்தையும் அதன் இலையில் பள்ளிகொண்ட குழந்தையையும் (பார்த்தார்). அன்பெனும் அமுதம் பொங்கும் புன்முறுவலுடன் கூடிய அக்குழந்தையின் கடைக்கண் பார்வை அவர் மேல் வீழ்ந்தது.

अथ तं बालकं वीक्ष्य नेत्राभ्यां धिष्ठितं हृदि ।
अभ्ययादतिसंक्लिष्टः परिष्वक्तु-मधोक्षजम् ॥ ९.३२ ॥

तावत् स भगवान् साक्षाद् योगाधीशो गुहाशयः ।
अन्तर्दधे ऋषेः सद्यो यथेहानीशनिर्मिता ॥ ९.३३ ॥

तमन्वथ वटो ब्रह्मन् सलिलं लोकसंप्लवः ।
तिरोधायि क्षणादस्य स्वाश्रमे पूर्ववत् स्थितः ॥ ९.३४ ॥

स एव-मनुभूयेदं नारायण-विनिर्मितम् ।
वैभवं योगमायाया-स्तमेव शरणं ययौ ॥ १०.१ ॥

मार्कण्डेय उवाच—

प्रपन्नोऽस्म्यंघ्रिमूलं ते प्रपन्नाभयदं हरे ।
यन्मायया‍पि विबुधा मुह्यन्ति ज्ञानकाशया ॥ १०.२ ॥

---

9. 32. இருதயத்தில் குடிகொண் டிருக்கும் அதோக்ஷஜரே யாகிய அக்குழந்தை யைக் கண்களால் பார்த்து மகிழ்ச்சி பொங்கியவராய் சேர்த்து அணைத்துக் கொள்வதற் காக முன் சென்றார்.

9. 33. இருதய குகையில் உறைபவரும், யோகேசுவரருமான பகவான் அதற் குள் தெய்வநம்பிக்கை யில்லாதவன் செய்த செயலைப்போல் (இருந்த இடந்தெரியாமல்) மறைந்துபோனார்.

9. 34. பிரம்ம ரிஷியே! அவருடன் ஆலமரமும் ஜலமும் உலகப் பிரளயமும் ஒரு நொடியில் மறைந்துபோயின. மார்க்கண்டேயர் தம தாசிரமத்தில் முன்போலிருந்தார்.

10. 1. மார்க்கண்டேயர் நாராயணரால் காட்டப்பட்ட யோகமாயையின் மகிமையை யனுபவித்து அவரையே சரண மடைந்தார்.

மார்க்கண்டேயர் கூறியது—

10. 2. "பகவானே! சரணமடைந்தவர்களுக்கு அபய மளிக்கும் உம்முடைய பாத மூலத்தை யடைந்தேன். ஞானம்போல் பிரகாசிக்கும் உமது மாயையால் சிறந்த பண்டிதர்களும் மயங்குகிறார்கள்.

सूत उवाच—

तमेवं निभृतात्मानं वृषेण दिवि पर्यटन्।
रुद्राण्या भगवान् रुद्रो ददर्श स्वगणै-र्वृतः ॥ १०.३ ॥

अथोमा तं ऋषिं वीक्ष्य गिरिशं समभाषत।
पश्येमं भगवन् विप्रं निभृतात्मेन्द्रियाशयम् ॥ १०.४ ॥

निभृतोदझषव्रातं वातापाये यथार्णवम्।
कुर्वस्य तपसः साक्षात् संसिद्धिं सिद्धिदो भवान् ॥ १०.५ ॥

श्री रुद्र उवाच—

नैवेच्छत्याशिषः क्वापि ब्रह्मर्षि-र्मोक्षमप्युत।
भक्तिं परां भगवति लब्धवान् पुरुषेऽव्यये ॥ १०.६ ॥

अथापि संवदिष्यामो भवान्येतेन साधुना।
अयं हि परमो लाभो नृणां साधु-समागमः ॥ १०.७ ॥

सूत उवाच—

इत्युक्त्वा तमुपेयाय भगवान् स सतां गतिः।
ईशानः सर्वविद्याना-मीश्वरः सर्वदेहिनाम् ॥ १०.८ ॥

ஸூதர் கூறியது—

10. 3. இவ்விதம் ஒன்றுபட்ட மனத்தினரான மார்க்கண்டேயரைத் தமது கணங்களால் சூழப்பெற்றுப் பார்வதியுடன் வான வெளியில் சஞ்சரிக்கும் ருத்ரபகவான் பார்த்தார்.

10. 4-5. பிறகு உமாதேவி அந்த ரிஷியைக் கடாக்ஷித்துக் கைலாஸபதியிடம் பின்வருமாறு கூறினாள். "பகவானே! இம் முனிவரைப் பாருங்கள். இவர் காற்றில்லாத ஸமயத்தில் அலைகளும் மீன்களும் அடங்கியுள்ள ஸமுத்திரம்போல் தேகமும் இந்திரியங்களும் மனதும் அடங்கியவர். இந்தப் பிராம்மணருடைய தவத்தின் பலனைப் பிரகாசப் படுத்துங்கள். தாங்கள் சித்தி யளிப்பவ ரன்றோ!

ஸ்ரீ ருத்ரர் கூறியது—

10. 6. இந்தப் பிரம்மரிஷி எந்த ஆசிகளையும் விரும்பவில்லை, மோக்ஷத்தைக்கூட விரும்பவில்லை. அழிவற்ற புருஷராகிய பகவானிடம் பரமபக்தியை யடைந்தவர்.

10. 7. பவானி! என்றாலும் இந்த ஸாதுவுடன் பேசிப் பார்ப்போம். மானிடர்களுக்கு ஸாதுக்களுடன் சேர்க்கையானது சிறந்த லாபம்.

ஸூதர் கூறியது—

10. 8. எல்லா வித்தைகளுக்கும் அதிபதியும் எல்லாப் பிராணிகளுக்கும் இறைவனும் ஸாதுக்களுக்குப் புகலிடமும் ஆகிய அந்த பகவான் இவ்விதம் கூறிவிட்டு மார்க்கண்டேயரை யணுகினார்.

तयोरागमनं साक्षा-दीशयो-र्जगदात्मनोः ।
न वेद रुद्धधीवृत्ति-रात्मानं विश्वमेव च ॥ १०.९ ॥

भगवां-स्तदभिज्ञाय गिरिशो योगमायया ।
आविशत्तद् गुहाकाशं वायुश्छिद्रमिवेश्वरः ॥ १०.१० ॥

आत्मन्यपि शिवं प्राप्तं तडित्पिंग-जटाधरम् ।
त्र्यक्षं दशभुजं प्रांशु-मुद्यन्तमिव भास्करम् ॥ १०.११ ॥

व्याघ्रचर्मांबरधरं शूलखट्वांगचर्मभिः ।
अक्षमाला-डमरुक-कपालासि-धनुः सह ॥ १०.१२ ॥

बिभ्राणं सहसा भातं विचक्ष्य हृदि विस्मितः ।
किमिदं कुत एवेति समाधे-र्विरतो मुनिः ॥ १०.१३ ॥

नेत्रे उन्मील्य ददृशे सगणं सोमयाऽऽगतम् ।
रुद्रं त्रिलोकैकगुरुं ननाम शिरसा मुनिः ॥ १०.१४ ॥

तस्मै सपर्यां व्यदधात् सगणाय सहोमया ।
स्वागतासन-पाद्यार्घ्य-गन्ध-स्रग्-धूप-दीपकैः ॥ १०.१५ ॥

10. 9. ஆனால் அம்முனிவரோ அந்தக்கரணவிருத்திக ளடங்கியவராய்த் தன்னையோ பிரபஞ்சத்தையோ, பிரபஞ்சமே தாங்களாகிய பார்வதீ பரமேசுவரர்கள் பிரத்தியக்ஷமாக வந்ததையோ, அறியவில்லை.

10. 10. கைலாஸவாஸியும் பகவானுமாகிய ஈசுவரர் அதை யறிந்து காற்றானது ஒரு துவாரத்திற் புகுவதுபோல் அவருடைய இருதய குகையின் ஆகாசத்தில் புகுந்தார்.

10. 11. மார்க்கண்டேய முனிவர் தமது மனதில் எழுந்தருளியவரும் மூன்று கண்களுடனும் பத்துக் கைகளுடனும் மின்னல் போன்று பிரகாசிக்கும் செஞ்சடைக ளுடனும் உதயகால சூரியன்போல் உன்னதமாகவும் ;

10. 12-14. புலித்தோலை ஆடையாக உடுத்துச் சூலம், வில், பாணம், கத்தி, கேடயம், அக்ஷமாலை, டமருகம், கபாலம், பரசு இவற்றை யேந்தி திடீரெனப் பிரகாசித்தவருமான பரம சிவனை இருதயத்தில் பார்த்து ஆச்சரிய மடைந்து, 'இது என்ன ? எங்ஙனம் ஏற்பட்டது ?' என்று ஸமாதி கலைந்து கண்களைத் திறந்து தமது கணங்களுடனும் உமாதேவியுடலும் வந்திருக்கும் அவரைக் கண்டார். மூன்று லோகத்திற்கும் ஒரே குருவான ருத்திரரை அம்முனிவர் தலையால் நமஸ்கரித்தார்.

10. 15. நல்வரவு, ஆஸனம், பாத்யம், அர்க்கியம், சந்தனம், புஷ்பம், தூபம் தீபம் இவைகளால் அவரைக் கணங்களுடனும் உமாதேவியுடனும் சேர்த்துப் பூஜித்தார்.

10. 12. இங்கே எட்டு ஆயுதங்கள் மட்டும் குறிப்பிடப்பட்டிருந்தாலும் மற்ற இரு கைகளில் அபய முத்திரையும் வர முத்திரையும் தரிப்ப தாய்க் கொள்ளவேண்டும்.

10. 12. शूल-खट्वाङ्ग-तोमरैः ।

आह चात्मानुभावेन पूर्णकामस्य ते विभो।
करवाम किमीशान येनेदं निर्वृतं जगत् ॥ १०.१६ ॥

नमः शिवाय शान्ताय सत्त्वाय प्रमृडाय च।
रजोजुषेऽथ घोराय नमस्तुभ्यं तमोजुषे ॥ १०.१७ ॥

एवं स्तुतः स भगवानादिदेवः सतां गतिः।
परितुष्टः प्रसन्नात्मा प्रहसंस्तमभाषत ॥ १०.१८ ॥

श्री रुद्र उवाच—

वरं वृणीष्व नः कामं वरदेशा वयं त्रयः।
अमोघं दर्शनं येषां मर्त्यो यद् विन्दतेऽमृतम् ॥ १०.१९ ॥

ब्राह्मणाः साधवः शान्ता निःसंगा भूतवत्सलाः।
एकान्तभक्ता अस्मासु निर्वैरा समदर्शिनः ॥ १०.२० ॥

---

10. 16. பின்வருமாறு துதிக்கவும் செய்தார். "பிரபுவே! ஈசனே! எவரால் இவ்வுலகம் இன்புறுகிறதோ எவர் தம்முடைய மகிமையால் ஆசைகளின் பூர்த்தி எய்தியவரோ அப்படிப்பட்ட தங்களுக்கு நான் செய்யக் கூடியது என்ன இருக்கிறது?

10. 17. "மங்களவடிவினரும், சாந்தரும், ஸத்வஸ்வரூபியும் இன்பத்தைப் பொழிபவரும் ஆகிய உமக்கு நமஸ்காரம். ரஜோகுணத்தை மேற்கொண்டவரும் தமோ குணத்தை மேற்கொண்டு கோரமாய் விளங்குபவரும் ஆகிய உமக்கு நமஸ்காரம்."

10. 18. இவ்விதம் துதிக்கப் பெற்றவரும் ஸாதுக்களின் புகலிடமாகிய வருமான பகவான் மகாதேவர் சந்தோஷ மடைந்து பிரசன்னமான மனதுடன் சிரித்துக்கொண்டு பின்வருமாறு கூறினர்.

ஸ்ரீ ருத்ரர் கூறியது—

10. 19. உமக்கு விருப்பமான வரனைக் கேட்கலாம். வரங் கொடுப்பவர்களிற் சிறந்தவர்கள் நாங்கள் மூவர். எங்கள் தரிசனம் வீண் போகாது. அதனல் மனிதன் சாகாத் தன்மை எய்துவான்.

10. 20. ஸாதுக்களும், சாந்தர்களும், பற்றற்றவர்களும் எவ்வுயிர்க்கு மிரங்குப வர்களும் எங்களிடம் ஏகாந்த பக்தர்களும், பகையற்றவர்களும், ஸமமான பார்வை யுடையவர்களுமாவார்கள் (உம்மைப் போன்ற) பிராம்மணர்கள்.

सलोका-लोकपालांस्तान् वन्दन्त्यर्चन्त्युपासते ।
अहं च भगवान् ब्रह्मा स्वयं च हरिरीश्वरः ॥ १०.२१ ॥

न ते मय्यच्युतेऽजे च भिदामण्वपि चक्षते ।
नात्मनश्च जनस्यापि तद् युष्मान् वयमीमहे ॥ १०.२२ ॥

न ह्यम्मयानि तीर्थानि न देवा मृच्छिलामयाः ।
ते पुनन्त्युरुकालेन यूयं दर्शनमात्रतः ॥ १०.२३ ॥

ब्राह्मणेभ्यो नमस्यामो येऽस्मद्रूपं त्रयीमयम् ।
बिभ्रत्यात्म-समाधान-तपः-स्वाध्याय-संयमैः ॥ १०.२४ ॥

श्रवणाद् दर्शनाद् वापि महापातकिनोऽपि वः ।
शुद्ध्येर-न्नन्त्यजाश्चापि किमु संभाषणादिभिः ॥ १०.२५ ॥

सूत उवाच—

इति चन्द्रललामस्य धर्मगुह्योपबृंहितम् ।
वाचोऽमृतायनमृषि-र्नातृप्यत् कर्णयोः पिबन् ॥ १०.२६ ॥

10 21. அப்படிப் பட்டவர்களை உலகமக்களும் உலகைக் காப்பவர்களும் நானும் பிரம்ம தேவரும் உலகநாயகரான விஷ்ணுவும் துதித்துப் பூஜித்து வழிபடு கிறோம்.

10. 22. அவர்கள் எனக்கும் அச்சுதருக்கும் பிரம்மாவுக்கு மிடையே அணுவள வும் பேதம் காண்பதில்லை. தங்களுக்கும் பிறருக்கும் பேதம் காண்பதில்லை. ஆகையால் நாங்கள் உங்களை நாடி வழிபடுகிறோம்.

10. 23. நீங்கள் பார்த்தமாத்திரத்திலேயே பரிசுத்த மாக்குபவர்கள். ஜலமயமான தீர்த்தங்களும் அப்படி அன்று; மண்ணாலும் கல்லாலும் ஆகிய பிரதிமைகள் வடிவான தேவதைகளும் அன்று; அவை நாளடைவிலேயே புனிதமாக்குபவை.

10. 24. தவத்தாலும் அத்தியயனத்தாலும் இந்திரிய நிக்கிரகத்தாலும் வேதமய மான எங்களுடைய ரூபத்தைத் தாங்கும் பிராம்மணர்களை நமஸ்கரிக்கின்றோம்.

10. 25. மகாபாதகம் செய்தவர்களும் சண்டாளர்களும்கூட அவர்களைப் பற்றிக் கேட்டாலும் பார்த்தாலும் பரிசுத்த மடைவார்கள். அவர்களுடன் பேச்சு முதலியவற் றைப் பற்றிச் சொல்லவேண்டுமா?

ஸூதர் கூறியது—

10. 26. தர்ம ரகசியத்தை உட்கொண்ட சந்திரசேகரப் பெருமானுடைய அமுதம் போன்ற சொல்லைக் காதால் பருகி ரிஷியானவர் திருப்தியடையவில்லை. (இன்னும் கேட்க விரும்பினார்.)

10. 21. लोकपालाश्च न मा विन्दन्त्युपासितुम् ।

स चिरं मायया विष्णो-र्भ्रामितः कर्शितो भृशम् ।
शिववागमृत-ध्वस्त-क्लेशपुंज-स्तमब्रवीत् ॥ १०.२७ ॥

ऋषिरुवाच—

अहो ईश्वरलीलेयं दुर्विभाव्या शरीरिणाम् ।
यन्नमन्तीशितव्यानि स्तुवन्ति जगदीश्वराः ॥ १०.२८ ॥

धर्मं ग्राहयितुं प्रायः प्रवक्तारश्च देहिनाम् ।
आचरन्त्यनुमोदन्ते क्रियमाणं स्तुवन्ति च ॥ १०.२९ ॥

नैतावता भगवतः स्वमायामयवृत्तिभिः ।
न दुष्येतानुभावस्तै-र्मायिनः कुहकं यथा ॥ १०.३० ॥

सृष्ट्वेदं मनसा विश्व-मात्मनानुप्रविश्य यः ।
गुणैः कुर्वद्भि-राभाति कर्तेव स्वप्नदृग् यथा ॥ १०.३१ ॥

तस्मै नमो भगवते त्रिगुणाय गुणात्मने ।
केवलायाद्वितीयाय गुरवे ब्रह्ममूर्तये ॥ १०.३२ ॥

---

10. 27. விஷ்ணுமாயையால் நெடுநேரம் பிரமித்து மிகவும் சிரம மடைந்திருந்த அவர் சிவனுடைய வாக்காகிய அம்ருதத்தால் கிலேசங்கள் எல்லாம் நீங்கி அவரிடம் பின்வருமாறு கூறினர்.

ரிஷி கூறியது—

10. 28. ஜகதீசுவரர்கள் தங்களால் ஆளப்படும் ஜீவர்களை வணங்குவது துதிப்பது என்ற இச்செயல் ஆச்சரியமானது; உடல்படைத்தோர் உணர முடியாதது.

10. 29. உலகிற்கு தர்மத்தை உபதேசிப்பவர்களா யிருந்தும் அந்த தர்மத்தை எல்லோரும் கைக்கொள்ளும்படி செய்வதற்காக அநேகமாய் உடல் படைத்தோரின் தர்மத்தைத் தாமே அனுஷ்டிக்கவும் ஆமோதிக்கவும் செய்கிருர்கள். செய்யப்படுவதைத் துதிக்கவும் செய்கிருர்கள்.

10. 30. இப்படிப்பட்ட மாயா மயமான செயல்களால் பகவானுகிய உம்முடைய மகிமை செப்பிடுவித்தைக்காரனுடைய வஞ்சனையைப்போல் தோஷமுடைய தாகாது.

10. 31. ஈசுவரன் மனதால் இப்பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்து தானே அதில் பிரவேசித்து குணங்கள் செயலாற்றுகையில் தான் செயலாற்றுவதாய்க் கனவில் காண்பதுபோல் தானே கர்த்தாபோல் தோன்றுகிருர்.

10. 32. அப்படிப்பட்ட முக்குணஸ்வரூபியும் மகாத்மாவும் கேவலரும் இரண்டற்றவரும் குருவும் பரப்பிரம்மவடிவினரும் பகவானும் ஆகிய உமக்கு நமஸ்காரம்.

कं वृणे नु परं भूमन् वरं त्वद्-वरदर्शनात् ।
यद्दर्शनात् पूर्णकामः सत्यकामः पुमान् भवेत् ॥ १०.३३ ॥

वरमेकं वृणेऽथापि पूर्णात् कामाभिवर्षणात् ।
भगवत्यच्युतां भक्तिं तत्परेषु तथा त्वयि ॥ १०.३४ ॥

सूत उवाच—

इत्यर्चितोऽभिष्टुतश्च मुनिना सूक्तया गिरा ।
तमाह भगवाञ्छर्वः शर्वया चाभिनन्दितः ॥ १०.३५ ॥

कामो महर्षे सर्वोऽयं भक्तिमां-स्त्वमधोक्षजे ।
आकल्पान्ताद् यशः पुण्य-मजरामरता तथा ॥ १०.३६ ॥

ज्ञानं त्रैकालिकं ब्रह्मन् विज्ञानं च विरक्तिमत् ।
ब्रह्मवर्चस्विनो भूयात् पुराणाचार्यतास्तु ते ॥ १०.३७ ॥

---

10. 33. எல்லையற்றவரே! எந்த தரிசனத்தால் ஒரு புருஷன் ஆசைகளின் பூர்த்தி எய்தியவனுகவும் உண்மையையே விரும்புபவனுகவும் ஆவானே அப்படிப்பட்ட உம்முடைய சிறந்த தரிசனமே வரமாயிருக்க நான் வேறு என்ன வரத்தைக் கேட்கப் போகிறேன்?

10. 34. என்றாலும் பூர்ணமாக மனோரதங்களைப் பொழியும் உம்மிடம் ஒரு வரம் கேட்டுக்கொள்ளுகிறேன். உம்மிடத்தில்போல் பகவான் அச்சுதரிடத்திலும் அவருடைய அடியார்களிடத்திலும் பக்தியை (அருளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்).

ஸூதர் கூறியது—

10. 35. இவ்வாறு முனிவரால் அழகாய்ப் பேசப்பட்ட வார்த்தைகளால் துதிக்கப் பெற்று பூஜிக்கப் பட்டவரும் பவானியாலும் மகிழ்விக்கப்பட்டவருமான பகவான் பரம சிவன் அவரிடம் பின்வருமாறு கூறினார்.

10. 36-37. 'மகரிஷியே! பிரம்மஸ்வரூபியே! நீர் அதோக்ஷஜரிடம் பக்தி பூண்டவர். நீர் விரும்பிய யாவையும் சித்திக்கட்டும். கல்பத்தின் முடிவுவரை கீர்த்தியும், புண்ணியமும், மூப்பு மரணமின்மையும், மூன்று காலஞானமும், வைராக்கியத்துடன் கூடிய அனுபவஞானமும், புராணுசாரியனு யிருத்தலும் உமக்கு உண்டாகட்டும்.'

---

10. 33. सद्यो देवः पुमान् भवेत् ।

एवं वरान् स मुनये दत्त्वागात् त्र्यक्ष ईश्वरः ।
देव्यै तत्कर्म कथयन्ननुभूतं पुराऽमुना ॥ १०.३८ ॥

सोऽप्यवाप्तमहायोगमहिमा भार्गवोत्तमः ।
विचरत्यधुनाप्यद्धा हरावेकान्ततां गतः ॥ १०.३९ ॥

अनुवर्णितमेतत्ते मार्कण्डेयस्य धीमतः ।
अनुभूतं भगवतो मायावैभव-मद्भुतम् ॥ १०.४० ॥

एतत् केचिदविद्वांसो माया-संसृति-मात्मनः ।
अनाद्यावर्तितं नृणां कादाचित्कं प्रचक्षते ॥ १०.४१ ॥

य एवमेतद् भृगुवर्य वर्णितं रथांगपाणे-रनुभावभावितम् ।
संश्रावयेत् संशृणुयादु तावुभौ तयोर्न कर्माशय-संसृति-र्भवेत्
॥ १०.४२ ॥

---

10 33 முக்கண்ணராகிய ஈசுவரர் அம்முனிவருக்கு இவ்வாறு வரங்களை யளித்துவிட்டு முன் இவரால் அனுபவிக்கப்பட்ட (யோகமாயாதர்சன) சரித்திரத்தை உமாதேவிக்குச் சொல்லிக்கொண்டு சென்றார்.

10. 39. மகாயோகமகிமையை யடைந்த பார்க்கவ குலசிரேஷ்டராகிய அம் முனிவர் விஷ்ணுவிடம் ஏகாந்த பக்தியுள்ளவராய் இப்போதும் பிரத்தியக்ஷமாய் உலவி வருகிறார்.

10. 40. புத்திமானாகிய மார்க்கண்டேயர் பகவானுடைய அற்புதமான மாயா வைபவத்தை அனுபவித்த வரலாறாகிய இது இங்ஙனம் உமக்கு வர்ணிக்கப் பட்டது.

10. 41. (மார்க்கண்டேயரால் எப்போதோ ஒரு சமயம் அனுபவிக்கப்பட்டதும்) பகவானுடைய மாயா சிருஷ்டிப் பிரளய ரூபமானதும் ஆகிய இதை உள்ளபடி அறியாதவர் (இரண்டாயிரம் சதுர்யுகங்களுக்கு ஒரு தடவை மீண்டும் மீண்டும்) அனாதி காலமாகச் சுழன்றுவரும் பிரளயம் என்று எண்ணுகிறார்கள்.

10. 42. சக்ரபாணியின் மகிமையை விளக்குவதான இந்த மார்க்கண்டேய சரித்திரத்தை எவன் கேட்கிறானோ எவன் கேட்கும்படி செய்கிறானோ அவ்விருவருக்கும் கர்மசம்பந்தமான பிறவித்தளை ஏற்படாது.

---

10. 41. (வித்வாம்ஸஸ்து மாயாசிசோ: ச்வாஸோச்ச்வாஸாப்யாம் ஸப்தக்ருத்வஸ் ததுதரப்ரவேச-நிர்க்கமத: ஸப்தகல்பத்வ-லக்ஷணமாத்ரமேவேதி வதந்தி) அறிந்தவர்கள் மாயாபாலனுடைய மூச்சுக் காற்றுடன் ஏழு தடவை உள்ளும் வெளியும் சென்றது ஏழு கல்பங்களையும் குறிப்பாலுணர்த்துவதற்காகவே எனக் கூறுகின்றனர். —ஸ்ரீதரர்,

भगवत्स्वरूपवर्णनम्

शौनक उवाच—

अथेम-मर्थं पृच्छामो भवन्तं बहुवित्तमम् ।
समस्त-तन्त्र-राद्धान्ते भवान् भागवत-तत्त्ववित् ॥ ११.१ ॥

तान्त्रिकाः परिचर्यायां केवलस्य श्रियः पतेः ।
अंगोपांगायुधाकल्पं कल्पयन्ति यथा च यैः ॥ ११.२ ॥

तन्नो वर्णय भद्रं ते क्रियायोगं बुभुत्सताम् ।
येन क्रियानैपुणेन मर्त्यो याया-दमर्त्यताम् ॥ ११.३ ॥

सूत उवाच—

नमस्कृत्य गुरून् वक्ष्ये विभूती-र्वैष्णवीरपि ।
याः प्रोक्ता वेदतन्त्राभ्या-माचार्यैः पद्मजादिभिः ॥ ११.४ ॥

பகவத்ஸ்வரூபவர்ணனம்

சௌனகர் கூறியது—

11. 1. பாகவதராகிய ஸூதரே! பிரம்மத்தை யறிந்தவர்களுள் சிறந்தவராகிய உம்மிடம் இனி யொரு விஷயத்தைக் கேட்க விரும்புகிறோம். நீர் தந்திரசாஸ்திரங்களனைத்தினுடைய சித்தாந்தத்தின் தத்துவ மறிந்தவர்.

11. 2. சித்ரூபியாகிய ஸ்ரீபதிக்கு உபாஸனையில் தாந்திரிகர்கள் அங்கங்கள் உபாங்கங்கள், ஆயுதங்கள், ஆபரணங்கள் இவைகளை எந்தத் தத்துவங்களால் எவ்விதம் கற்பிக்கிறார்கள்?

11. 3. எந்தக் கிரியையின் திறமையால் மனிதன் சாகாநிலையை யடைவனோ அந்தக் கிரியா யோகத்தை எங்களுக்கு வர்ணிக்கவேண்டும். (இதை உபதேசிக்கும்) உங்களுக்கு மங்கள முண்டாகும்.

ஸூதர் கூறியது—

11. 4. வேதங்களிலும் தந்திர சாஸ்திரங்களிலும், பிரம்மா முதலிய ஆசாரியர்களாலும் கூறப்பட்ட மகாவிஷ்ணுவின் விபூதிகளைக் குருமார்களை நமஸ்கரித்துக் கூறுகிறேன்.

---

11. 4. ஒ. அஸ்த்ர-பூஷண-ஸம்ஸ்தான-ஸ்வரூபம் ரூபவர்ஜித: |
பிபர்த்தி மாயாரூபோSஸௌ ச்ரேயஸே ப்ராணினும் ஹரி: ||
—விஷ்ணுபுராணம்: 1. 22: 76.

---

11. 2. कल्पयन्ति तथैव ये ।

मायाद्यै-र्नवभि-स्तत्त्वैः स विकारमयो विराट्।
निर्मितो दृश्यते यत्र सचित्के भुवनत्रयम् ॥ ११.५ ॥

एतद्वै पौरुषं रूपं भूः पादौ द्यौः शिरो नभः।
नाभिः सूर्योऽक्षिणी नासे वायुः कर्णौ दिशः प्रभोः ॥ ११.६ ॥

प्रजापतिः प्रजनन-मपानं मृत्युरीशितुः।
तद्बाहवो लोकपाला मनश्चन्द्रो भ्रुवौ यमः ॥ ११.७ ॥

लज्जोत्तरोऽधरो लोभो दन्ता ज्योत्स्ना स्मयो भ्रमः।
रोमाणि भूरुहा भूम्नो मेघाः पुरुषमूर्धजाः ॥ ११.८ ॥

यावानयं वै पुरुषो यावत्या संस्थया मितः।
तावानसावपि महान् पुरुषो लोकसंस्थया ॥ ११.९ ॥

कौस्तुभव्यपदेशेन स्वात्मज्योति-र्बिभर्त्यजः।
तत्प्रभा व्यापिनी साक्षात् श्रीवत्स-मुरसा विभुः ॥ ११.१० ॥

---

11. 5. எவரிடத்தில் சிச்சக்தியின் சம்பந்தத்தால் மூவுலகும் தோன்றுகிறதோ அந்த விராட் புருஷன் மாயை முதலிய ஒன்பது தத்துவங்கள் அவற்றின் விகாரங்களாகிய பஞ்சமகா பூதங்கள் இந்திரியங்கள் ஆகியவற்றின் வடிவாக ஏற்பட்டார்.

11. 6. இந்த விராட்ரூபமே பகவானுடைய புருஷரூபம். பிரபுவாகிய புருஷோத்தமனுக்கு பூமி பாதமாகவும், ஆகாயம் தலையாகவும், அந்தரிக்ஷம் நாபியாகவும், சூரியன் கண்ணாகவும், வாயு மூக்காகவும், திசைகள் காதுகளாகவும் ஆகின்றன.

11. 7. ஈசுவரனுக்குப் பிரஜாபதி ஆண் குறியாகவும், மிருத்யு பாயுவாகவும், லோகபாலர்கள் புஜங்களாகவும், சந்திரன் மனதாகவும், யமன் புருவமாகவும் ஆகின்றனர்.

11. 8. எல்லையற்ற பகவானுக்கு வெட்கம் மேலுதடு, லோபம் கீழுதடு, நிலவொளி பல்வரிசை, கர்வம் சுழற்சி, மரங்கள் ரோமம், மேகங்கள் தலைமயிர்.

11. 9. இந்த வியஷ்டி புருஷன் (ஒவ்வொருவனும்) எந்தச் சிறு அளவுக்கு ஒத்தபடி அமைப்புடையவனாகின்றானோ அதேமாதிரி ஸமஷ்டி புருஷனும் லோகத்தின் அளவுக்குத் தக்கபடி அமைப்புடையவனாகின்றான்.

11. 10. பிறப்பில்லாத ஈசுவரன் ஆத்மஜோதியாகிற ஜீவசைதன்னியத்தைக் கௌஸ்துபமணி என்ற அடையாளமாகத் தரிக்கிறார். அதனின்று பரவும் காந்தியால் பிரகாசிக்கும் ஸ்ரீவத்ஸம் என்னும் மருவைப் பகவான் மார்பில் தரிக்கிறார்.

स्वमायां वनमालाख्यां नानागुणमयीं दधत् ।
वासश्छन्दोमयं पीतं ब्रह्मसूत्रं त्रिवृत् स्वरम् ॥ ११.११ ॥

बिभर्ति सांख्यं योगं च देवो मकरकुण्डले ।
मौलिं पदं पारमेष्ठ्यं सर्वलोकनमस्कृतम् ॥ ११.१२ ॥

अव्याकृत-मनन्ताख्य-मासनं यदधिष्ठितः ।
धर्म-ज्ञानादिभि-र्युक्तं सत्त्वं पद्ममिहोच्यते ॥ ११.१३ ॥

ओजः-सहोबलयुतं मुख्यतत्त्वं गदां दधत् ।
अपां तत्त्वं दरवरं तेजस्तत्त्वं सुदर्शनम् ॥ ११.१४ ॥

नभोनिभं नभस्तत्त्व-मसिं चर्म तमोमयम् ।
कालरूपं धनुः शार्ङ्गं तथा कर्ममयेषुधिम् ॥ ११.१५ ॥

इन्द्रियाणि शरानाहु-राकूतीरस्य स्यन्दनम् ।
तन्मात्राण्यस्याभिव्यक्तिं मुद्रयार्थ-क्रियात्मताम् ॥ ११.१६ ॥

11, 11. பல குணங்களின் வடிவான தமது மாயையை வனமாலையாகவும் வேதங்களைப் பீதாம்பரமாகவும் மூன்று மாத்திரைகளையுடைய பிரணவத்தைப் பூணூலாகவும் தரிக்கிறார்.

11, 12. தேவதேவன் ஸாங்கியத்தையும் யோகத்தையும் மகரகுண்டலங்களாகவும், உலகங்களெல்லாம் வணங்கும் பரம பதத்தைத் தலையாகவும் கொண்டுள்ளார்.

11, 13. அவ்வியாகிருதம் எனப்படும் பிரகிருதி அனந்தன் என்ற பெயருடன் அவர் எழுந்தருளும் ஆஸனமாகின்றது. தர்மம் ஞானம் முதலியவற்றுடன் கூடிய ஸத்துவ குணமும் பக்கம் எனக் கூறப் படுகிறது.

11. 14. வீரியம், பொறுமை, பலம் இவற்றுடன் கூடிய முக்கியப் பிராண தத்துவத்தைக் கதையாகவும், அப்பு தத்துவத்தைச் சங்காகவும், தேயு தத்துவத்தைச் சுதர்சன சக்கரமாகவும் தரிக்கிறார்.

11. 15. ஆகாச தத்துவத்தை ஆகாசத்திற்குச் சமமான கத்தியாகவும், தமோ குணத்தைக் கேடயமாகவும், காலத்தைச் சார்ங்கம் என்ற வில்லாகவும், கர்மத்தை அம்பறுத் தூணியாகவும் தரிக்கிறார்.

11. 16. இந்திரியங்களை பாணங்களாகவும், கிரியா சக்தியுடன் கூடிய மனதைத் தேராகவும், தன்மாத்திரைகளை அந்தத் தேரின் வெளிப்படையான தோற்றமாகவும், முத்திரைகளை வரமும் அபயமும் அளிக்கும் அடையாளங்களாகவும் கூறுகின்றனர்.

मण्डलं देवयजनं दीक्षासंस्कार आत्मनः।
परिचर्या भगवत आत्मनो दुरितक्षयः ॥ ११.१७ ॥

भगवान् भगशब्दार्थं लीलाकमल-मुद्वहन्।
धर्मं यशश्च भगवान् चामरव्यजनेऽभजत् ॥ ११.१८ ॥

आतपत्रं तु वैकुण्ठं द्विजा धामाकुतोभयम्।
त्रिवृद्वेदः सुपर्णाख्यो यज्ञं वहति पूरुषम् ॥ ११.१९ ॥

अनपायिनी सा शक्तिः श्रीः साक्षादात्मनो हरेः।
विष्वक्सेनस्तन्त्रमूर्ति-र्विदितः पार्षदाधिपः।
नन्दादयोऽष्टौ द्वाःस्थाश्च तेऽणिमाद्या हरेर्गुणाः ॥ ११.२० ॥

वासुदेवः संकर्षणः प्रद्युम्नः पुरुषः स्वयम्।
अनिरुद्ध इति ब्रह्मन् मूर्तिव्यूहोऽभिधीयते ॥ ११.२१ ॥

स विश्व-स्तैजसः प्राज्ञ-स्तुरीय इति वृत्तिभिः।
अथेन्द्रियाशय-ज्ञानै-र्भगवान् परिभाव्यते ॥ ११.२२ ॥

---

11. 17. சூரியமண்டலத்தைத் தேவபூஜாஸ்தானமாகவும், (குருவிடம்) தான் பெற்ற தீக்ஷையைப் பூஜைக்குத் தகுதியளிக்கும் ஸம்ஸ்காரமாகவும் பகவத் ஸேவையைத் தனது பாவத்தைப் போக்கும் ஸாதனமாகவும் (பக்தன்) கருதவேண்டும்.

11. 18. 'பக' எனும் சொல்லின் பொருளைக் குறிப்பதாக பகவான் விளையாட்டுத் தாமரையைத் தரிக்கிறார். தர்மத்தையும் கீர்த்தியையும் சாமரமாகவும் விசிறியாகவும் கொண்டுள்ளார்.

11. 19. பிராம்மணர்களே! வைகுண்டத்தைக் குடையாகவும் ஒரு பயமுமில்லாத கைவல்யத்தை இருப்பிடமாகவும் கொண்டுள்ளார். மூன்று வேதமும் ஸுபர்ணன் என்ற கருடவடிவில் யஜ்ஞ புருஷனைத் தாங்குகிறது.

11. 20. ஸாக்ஷாத் பரமாத்மாவாகிய ஹரியினுடைய இணைபிரியாத சக்தியே ஸ்ரீதேவி (பாஞ்சராத்ரம் முதலிய) தந்திர சாஸ்திரமே பாரிஷதர்களின் தலைவராகிய விஷ்வக்ஸேன ரூபம். பகவானுடைய அணிமா முதலிய எட்டு குணங்கள் நந்தன் முதலிய எட்டு துவாரபாலகர்கள்.

11. 21. பிரம்மஸ்வரூபியே! புருஷோத்தமர் தாமே வாசுதேவர், ஸங்கர்ஷணர், பிரத்யும்னர், அநிருத்தர் என்ற மூர்த்தி வ்யூஹமாகச் சொல்லப்படுகிறார்.

11. 22. அந்த பகவான் விஷயங்கள் மனம் அக்ஞானம் ஞானம் ஆகியவற்றுடன் கூடிய (விழிப்பு கனவு முதலிய) விருத்திகளால் விசுவன், தைஜஸன், பிராக்ஞன், துரீயன் எனவும் பேசப்படுகிறார்.

---

11. 22. ஒ. மாண்டுக்கியோபநிஷத்து.

य इदं कल्य उत्थाय महापुरुषलक्षणम् ।
तच्चित्तः प्रयतो जप्त्वा ब्रह्म वेद गुहाशयम् ॥ ११.२६ ॥

एतद्वः कथितं विप्रा विष्णोश्चरित-मद्भुतम् ।
भवद्भिर्यदहं पृष्टो नराणां पुरुषोचितम् ॥ १२.२ ॥

अत्र ब्रह्म परं गुह्यं जगतः प्रभवाप्ययम् ।
ज्ञानं च तदुपाख्यानं प्रोक्तं विज्ञानसंयुतम् ॥ १२.४ ॥

लीलावतारकर्माणि कीर्तितानीह सर्वशः ।
पतितः स्खलितश्चार्तः क्षुत्त्वा वा विवशो ब्रुवन् ।
हरये नम इत्युच्चै-र्मुच्यते सर्व-पातकात् ॥ १२.४६ ॥

संकीर्त्यमानो भगवाननन्तः श्रुतानुभावो व्यसनं हि पुंसाम् ।
प्रविश्य चित्तं विधुनोत्यशेषं यथा तमोऽर्कोऽभ्रमिवातिवातः ॥ १२.४७ ॥

---

11. 26. இந்த மகாபுருஷ லக்ஷணத்தை எவன் காலையி லெழுந்து பகவானிடம் மனதைச் செலுத்திப் பரிசுத்தனுக ஜபம் செய்கிருனோ அவன் இருதய குகையி லிருக்கும் பிரம்மத்தைக் காண்பான்.

12. 2. வேதியர்களே! மனிதர்களில் புருஷத் தன்மைக்கு உசிதமான எந்தக் கேள்வி என்னிடம் உங்களால் கேட்கப் பட்டதோ அது சம்பந்தமான விஷ்ணுவின் அற்புத சரித்திரமாகிய இந்த பாகவதம் உங்களுக்குக் கூறப்பட்டது.

12. 4. பிரபஞ்சத்தின் உற்பத்திக்கும் பிரளயத்திற்கும் காரணமானதும் பரம ரகசிய மானதுமான பிரம்மஸ்வரூபமும், விஜ்ஞானத்துடன் கூடிய ஞானமும் அதின் விளக்கமும் இங்கு கூறப்பட்டது.

12. 46. பகவான் லீலையாக அவதாரம் செய்ததும் அவருடைய செய்கைகளும் முழுதும் வர்ணிக்கப் பட்டன. ஒருவன் கீழே விழுகையிலோ, இடறுகையிலோ, துன் புற்றபோதோ, தும்மும்போதோ தன் வய மில்லாமலே 'ஹரயே நம:' என்று உறக்கச் சொல்வானுயின் அவன் எல்லாப் பாதகங்களினின்றும் விடுபடுவான்.

12. 47. தமது மகிமை கேட்கப் பட்டாலும் கீர்த்தனம் செய்யப் பட்டாலும் பகவான் அனந்தர் மனிதர்களின் சித்தத்தில் புகுந்து சூரியன் இருளைப் போக்குவது போலும் பெருங் காற்று மேகத்தைக் கலைப்பது போலும் விசனத்தைப் போக்குகிருர்.

मृषा गिरस्ता ह्यसती-रसत्कथा न कथ्यते यद् भगवानधोक्षजः।
तदेव सत्यं तदुहैव मंगलं तदेव पुण्यं भगवद्गुणोदयम् ॥ १२.४८ ॥

तदेव रम्यं रुचिरं नवं नवं तदेव शश्वन्मनसो महोत्सवम्।
तदेव शोकार्णव-शोषणं नृणां यदुत्तमश्लोक-यशोऽनुगीयते ॥ १२.४९ ॥

न यद् वचश्चित्रपदं हरेर्यशो
जगत्पवित्रं प्रगृणीय कर्हिचित्।
तत् ध्वाङ्क्षतीर्थं न तु हंससेवितं
यत्राच्युत-स्तत्र हि साधवोऽमलाः ॥ १२.५० ॥

स वाग्विसर्गो जनताघ-संप्लवो यस्मिन् प्रतिश्लोक-मबद्धवत्यपि।
नामान्यनन्तस्य यशोऽङ्कितानि यच्छृण्वन्ति गायन्ति गृणन्ति साधवः
॥ १२.५१ ॥

नैष्कर्म्य-मप्यच्युतभाव-वर्जितं न शोभते ज्ञानमलं निरंजनम्।
कुतः पुनः शश्वदभद्र-मीश्वरे नह्यर्पितं कर्म यदप्यनुत्तमम् ॥ १२.५२ ॥

---

12. 48. எங்கே பகவான் அதோக்ஷஜர் கூறப்படவில்லையோ அந்த அஸத்துக களின் கதைகள் பொய் வார்த்தைகள், கெடுதலை விளைப்பவை. பகவானுடைய குணம் எங்கே உதிக்கிறதோ அதுவே ஸத்தியம், அதுவே மங்களம், அதுவே புண்ணியம்.

12. 49. உத்தமசுலோகருடைய கீர்த்தி எங்கே பாடப்படுகிறதோ அதுவே மனதிற் கினியது, புதிது புதிதாக ருசி யளிப்பது, எப்போதும் மனதிற்கு மிகவும் உற்சாக மளிப்பது; அதுவே மனிதர்களின் துன்பக் கடலை வற்றச் செய்வது.

12. 50. எந்த வாக்கானது அழகான பதங்களை யுடையதாயினும் உலகைப் புனிதமாக்கும் ஹரியின் புகழைச் சிறிதேனும் வர்ணிக்கவில்லையோ அது காக்கை விரும்பும் குட்டையைப் போன்றது, ஹம்ஸம் விரும்பும் தீர்த்த மாகாது. எங்கு அச்சுதன் உண்டோ அங்குதான் மாசற்ற ஸாதுக்கள் ரமிப்பார்கள்.

12. 51. எது சுலோகந் தோறும் பிழையுள்ளதாயினும் அனந்தருடைய புகழின் முத்திரையுடைய நாமங்களை யுடையதோ அதுவே வாக்கு வெளிப் படுதலின் பயனும்; அதுவே ஜனங்களுடைய பாவங்களைப் போக்கக் கூடியது; ஸாதுக்கள் அதையே கேட்பார்கள், பாடுவார்கள், புகழ்ந்து பேசுவார்கள்.

12. 52. கர்மத்தைக் கடந்த மாசற்ற பிரம்மஞானமாயினும் அச்சுதனிடம் பக்தியில்லாததாயின் அது நன்கு சோபிக்காது. அப்படி யிருக்கக் கர்மமானது மிகச் சிறந்ததாயினும் ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்யப்படாவிட்டால் எவ்விதம் சோபிக்கும்? அது எப்போதும் (ஸாதன காலத்திலும் பயனை யளிக்கும் போதும்) துன்பத்தையே தருவதாகும்.

यशः श्रियामेव परिश्रमः परो वर्णाश्रमाचार-तपः-श्रुतादिषु ।
अविस्मृतिः श्रीधरपादपद्मयो-र्गुणानुवाद-श्रवणादिभि-र्हरेः ॥ १२.५३ ॥

अविस्मृतिः कृष्णपदारविन्दयोः
क्षिणोत्यभद्राणि शमं तनोति च ।
सत्त्वस्य शुद्धिं परमात्म-भक्तिं
ज्ञानं च विज्ञान-विराग-युक्तम् ॥ १२.५४ ॥

यूयं द्विजाग्र्या बत भूरि-भागा यच्छश्वदात्मन्यखिलात्मभूतम् ।
नारायणं देवमदेव-मीश-मजस्रभावा भजताविवेश्य ॥ १२.५५ ॥

अहं च संस्मारित आत्मतत्त्वं श्रुतं पुरा मे परमर्षिवक्त्रात् ।
प्रायोपवेशे नृपतेः परीक्षितः सदस्यृषीणां महतां च शृण्वताम्
॥ १२.५६ ॥

एतद्वः कथितं विप्राः कथनीयोरुकर्मणः ।
माहात्म्यं वासुदेवस्य सर्वाशुभविनाशनम् ॥ १२.५७ ॥

---

12. 53. வர்ணாசிரம ஆசாரம் தவம் சாஸ்திரசிரவணம் ஆகியவற்றிற்காகப் படும் பாடு புகழுக்கும் செல்வத்திற்குமே (பெரும் பாலும்) பயன் படுகின்றது. பகவானுடைய குணங்களைக் கீர்த்தனம் செய்வது சிரவணம் செய்வது அதை ஆதரவு செய்வது முதலியவற்றாலேயே ஸ்ரீதரருடைய பாதாரவிந்தங்களின் இடையறாத நினைவு ஏற்படுகிறது.

12. 54. கிருஷ்ணனுடைய பாதாரவிந்தங்களின் இடையறா நினைவு அமங்களங்களை நாசம் செய்யும்; சாந்தியை யளிக்கும்; மனதிற்குத் தூய்மையையும், சிறந்த பக்தியையும், விஜ்ஞானம் வைராக்கியம் இவற்றுடன் கூடிய ஞானத்தையும் கொடுக்கும்.

12. 55. பிராம்மண சிரேஷ்டர்களே! நீங்கள் மிகுந்த பாக்கியம் செய்தவர்கள். ஆச்சரியம்! அனைத்திற்கும் ஆத்மாவாகியவனும் எல்லோராலும் உபாசிக்கப்படும் தேவனும் தனக்கு வேறு தேவன் இல்லாதவனும் ஈசுவரனுமாகிய நாராயணனை மனதில் நிலைபெறச் செய்து மற்றதில் மனம் செலுத்தாமல் பஜனை செய்யுங்கள்.

12. 56. பரீக்ஷித்து மகாராஜன் பிராயோபவேச காலத்தில் ரிஷிகளுடைய சபையில் பெரியோர்கள் உடனிருந்து கேட்க ரிஷிச்ரேஷ்டராகிய சுகருடைய முகத்திலிருந்து ஆத்மதத்துவத்தை முன்பு நான் கேட்டேன். இப்பொழுது உங்களால் அது என் ஞாபகத்திற்குக் கொண்டுவரப் பட்டது.

12. 57. பிராம்மணர்களே! பெருஞ் செயல்களுடைய வாசுதேவரின் மகிமையே பேசுதற் குறியது; அது எல்லா அசுபத்தையும் போக்குவது; அதை உங்களுக்குக் கூறினேன்.

य एवं श्रावयेन्नित्यं यामक्षण-मनन्यधीः।
श्रद्धावान् योऽनुश्रृणुयात् पुनात्यात्मानमेव सः ॥ १२.५८ ॥

कलिमल-संहतिकालनोऽखिलेशो
हरिरितरत्र न गीयते ह्यभीक्ष्णम्।
इह तु पुन-र्भगवानशेषमूर्तिः
परिपठितोऽनुपदं कथाप्रसंगैः ॥१२.६५॥

स्वसुख-निभृतचेता-स्तद्व्युदस्तान्यभावो-
ऽप्यजित-रुचिरलीलाकृष्टसार-स्तदीयम्।
व्यतनुत कृपया य-स्तत्त्वदीपं पुराणं
तमखिल-वृजिनघ्नं व्याससूनुं नतोऽस्मि ॥ १२.६८ ॥

इति श्रीमद्भागवते द्वादशस्कन्धे
द्वादशोऽध्यायः ॥

---

12. 58. எவன் வேறிடத்தில் மனம் செல்லாமல் தினந்தோறும் ஒரு யாமப் போதோ அல்லது ஒரு க்ஷணமாயினும் சிரத்தையுடன் இதில் ஒரு சுலோகமோ, அரை சுலோகமோ, ஒரு பாதமோ அரைப் பாதமோ சிரவணம் செய்கிறுனே அல்லது சிரவணம் செய்விக்கிறுனே அவன் நேராக ஆத்மாவையே புனிதமாக்குகிறுன்.

12. 65. கலியின் தோஷக் குவியலைப் போக்குகின்றவரும் ஸர்வேசுவரருமாகிய ஹரி மற்ற சாஸ்திரங்களில் (இம்மாதிரி) மிகுதியாக வர்ணிக்கப் படவில்லை. ஸர்வ ஸ்வரூபியாகிய பகவான் இங்கே கதையின் மூலமாக ஒவ்வொரு பதத்திலும் நன்கு வர்ணிக்கப்படுகிறுர்.

12. 68. ஆத்மானந்தத்தால் நிறைந்த மனமுடையவராய் அதனுல் வேறு எண்ணங்களில் செல்லாத மனமுடையவராக இருப்பினும் ஜயிக்கப்படாத கிருஷ்ணனுடைய மனதிற்கினிய லீலைகளால் அந்நிலையினின்று இறங்கியவராய் எவர் பகவானைச் சார்ந்த தத்துவத்தைப் பிரகாசப் படுத்தும் புராணத்தைக் கருணையால் கூறியருளினுரோ, பாவத்தை யெல்லாம் போக்கவல்ல அந்த வியாஸ குமாரரை நான் வணங்குகின்றேன்.

இங்ஙனம் பன்னிரண்டாவது
ஸ்கந்தத்தில் பன்னிரண்டாவது அத்தியாயம்
முற்றும்

पुराणसंख्या-भगवतमहत्त्वम्

सूत उवाच—

यं ब्रह्मा वरुणेन्द्र-रुद्रमरुतः स्तुन्वन्ति दिव्यैः स्तवै-
वेदैः सांगपदक्रमोपनिषदै-र्गायन्ति यं सामगाः।
ध्यानावस्थित-तद्गतेन मनसा पश्यन्ति यं योगिनो
यस्यान्तं न विदुः सुरासुरगणा देवाय तस्मै नमः ॥ १३.१ ॥

पुराणसंख्या-संभूति-मस्य वाच्य-प्रयोजने।
दानं दानस्य माहात्म्यं पाठादेश्च निबोधत ॥ १३.३ ॥

ब्राह्मं दशसहस्राणि पाद्मं पंचोनषष्टि च।
श्रीवैष्णवं त्रयोविंश-च्चतुर्विंशति शैवकम् ॥ १३.४ ॥

दशाष्टौ श्रीभागवतं नारदं पंचविंशतिः।
मार्कण्डं नव वाह्नं च दशपंच चतुर्दशम् ॥ १३.५ ॥

चतुर्दश भविष्यं स्यात् तथा पंचशतानि च।
दशाष्टौ ब्रह्मवैवर्तं लिंगमेकादशैव तु ॥ १३.६ ॥

புராணங்களும் பாகவதத்தின் மகத்துவமும்

ஸூதர் கூறியது—

13. 1. எவரைப் பிரம்மாவும் வருணனும் இந்திரனும், ருத்திரனும் மருத்துக்களும் திவ்யமான ஸ்தோத்திரங்களால் துதிக்கிறார்களோ, எவரை அங்கம் பதம் க்ரமம் உபநிஷத் ஆகியவற்றுடன் கூடிய வேதங்களால் ஸாமகர்கள் கானம் செய்கிறார்களோ, எவரை யோகிகள் தியானத்தில் நிலைபெற்றுத் தன் மயமான மனதால் பார்க்கிறார்களோ, என்றாலும் எவருடைய எல்லையைத் தேவகணங்களும் அசுர கணங்களும் அறியமாட்டார்களோ அந்த தேவருக்கு நமஸ்காரம்

13. 3. புராணங்களின் எண்ணிக்கையையும் அளவையும், இந்த பாகவதத்தின் விஷயம் பிரயோஜனம் தானம் பாராயணம் முதலியவற்றின் மகிமை ஆகியவற்றையும் தெரிந்து கொள்ளுங்கள்.

13. 4. பிராம்ம புராணம் பத்தாயிரம் சுலோகங்கள் கொண்டது, பத்மபுராணம் ஐம்பத்தையாயிரம் சுலோகங்கள் கொண்டது, ஸ்ரீ விஷ்ணுபுராணம் இருபத்து மூவாயிரம், சிவபுராணம் இருபத்து நாலாயிரம்.

13. 5. ஸ்ரீ பாகவதம் பதினெட்டாயிரம், நாரதபுராணம் இருபத்தையாயிரம், மார்க்கண்டேய புராணம் ஒன்பதாயிரம், ஆக்னேய புராணம் பதினையாயிரத்து நானூறு.

13. 6. பவிஷ்யத் புராணம் பதினாலாயிரத்து ஐந்நூறு, பிரம்ம வைவர்த்தம் பதினெண்ணாயிரம், லிங்க புராணம் பதினோராயிரம்.

चतुर्विंशति वाराहू-मेकाशीति-सहस्रकम् ।
स्कान्दं शतं तथा चैकं वामनं दशकीर्तितम् ॥ १३.७ ॥

कौर्मं सप्तदशाख्यातं मात्स्यं तत्तु चतुर्दश ।
एकोनविंशत् सौपर्णं ब्रह्माण्डं द्वादशैव तु ॥ १३.८ ॥

एवं पुराण-सन्दोहू-श्चतुर्लक्ष उदाहृतः ।
तत्राष्टदशसाहस्रं श्रीभागवत-मिष्यते ॥ १३.९ ॥

इदं भगवता पूर्वं ब्रह्मणे नाभिपंकजे ।
स्थिताय भव-भीताय कारुण्यात् संप्रकाशितम् ॥ १३.१० ॥

आदि-मध्यावसानेषु वैराग्याख्यान-संयुतम् ।
हरिलीलाकथाव्रातामृतानन्दित-सत्सुरम् ॥ १३.११ ॥

सर्ववेदान्तसारं यद् ब्रह्मात्मैकत्व-लक्षणम् ।
वस्त्वद्वितीयं तन्निष्ठं कैवल्यैक-प्रयोजनम् ॥ १३.१२ ॥

---

13. 7. வராக புராணம் இருபத்து நாலாயிரம், ஸ்காந்தம் எண்பத் தோராயித்து நூறு. வாமன புராணம் பத்தாயிரம்.

13. 8. கூர்ம புராணம் பதினேழாயிரம், மத்ஸ்ய புராணம் பதிஞலாயிரம், கருடபுராணம் பத்தொன்பதாயிரம், பிரம்மாண்ட புராணம் பன்னிரண்டாயிரம்.

13. 9. இவ்விதம் புராணங்களின் தொகை நாலு லக்ஷம் சுலோகங்கள் என்று கூறப்படுகிறது. அதில் பாகவதம் பதினெட்டாயிரம் எனப்படும்.

13. 10. இது ஆதியில் தமது நாபி கமலத்தி லிருந்தவரும் ஸம்ஸாரத்தில் பயங் கொண்டவருமாகிய பிரம்மாவுக்கு பகவானுல் கருணையால் பிரகாசம் செய்யப்பட்டது.

13. 11. ஆதியிலும் நடுவிலும் முடிவிலும் வைராக்கியத்தைப் புகட்டும் உபாக்கியனங்களை யுடையதாகவும் விஷ்ணுவின் லீலைகளைப் பற்றிய கதைகளின் அமுதரஸத்தால் ஸாதுக்களையும் தேவர்களையும் மகிழ்விப்பதாகவும் இது விளங்குகிறது.

13. 12. இது வேதாந்தம் முழுவதின் ஸாரம்; பிரம்மமும் ஆத்மாவும் ஒன்று என்ற லக்ஷணத்தை யுடையது; இரண்டற்ற வஸ்து எதுவோ அதை விஷயமாகக் கொண்டது; மோக்ஷமாகிய ஒன்றையே பிரயோஜனமாக உடையது.

प्रोष्ठपद्यां पौर्णमास्यां हेमसिंह्मसमन्वितम् ।
ददाति यो भागवतं स याति परमां गतिम् ॥ १३-१३ ॥

राजन्ते तावदन्यानि पुराणानि सतां गणे ।
यावन्न दृश्यते साक्षाच्छ्रीमद्भागवतं परम् ॥ १३-१४ ॥

निम्नगानां यथा गङ्गा देवानामच्युतो यथा ।
वैष्णवानां यथा शंभुः पुराणानामिदं तथा ॥ १३-१६ ॥

श्रीमद्भागवतं पुराण-ममलं यद्वैष्णवानां प्रियं
यस्मिन् पारमहंस्य-मेक-ममलं ज्ञानं परं गीयते ।
यत्र ज्ञान-विराग-भक्ति-सहितं नैष्कर्म्य-माविष्कृतं
तच्छृण्वन् विपठन् विचारणपरो भक्त्या विमुच्येन्नरः ॥ १३-१८ ॥

कस्मै येन विभासितोऽयमतुलो ज्ञानप्रदीपः पुरा
तद्रूपेण च नारदाय मुनये कृष्णाय तद्रूपिणा ।
योगीन्द्राय तदात्मनाथ भगवद्राताय कारुण्यत-
स्तच्छुद्धं विमलं विशोक-ममृतं सत्यं परं धीमहि ॥ १३-१९ ॥

---

13. 13. ஆவணிமாதப் பௌர்ணமி யன்று தங்கச் சிம்மாஸனத்தில் வைத்து பாகவதத்தை எவன் தானம் செய்கிருனே அவன் உத்தம கதியை யடைவான்.

13. 14. ஸாதுக்களின் கூட்டத்தில் சிறந்த ஸ்ரீமத்பாகவதம் எதுவரை பிரத்தியக்ஷமாகக் காணப்படவில்லையோ அதுவரைதான் மற்ற புராணங்கள் பிரகாசிக்கும்.

13. 16. நதிகளுக்குள் கங்கை போலும், தேவர்களுக்குள் அச்சுதர்போலும், விஷ்ணு தத்துவத்தை யறிந்தவர்களுக்குள் சிவன் போலும் புராணங்களுக்குள் இந்த பாகவதம்.

13. 18. எது விஷ்ணு பக்தர்களுக்குப் பிரியமானதோ, எதில் பரமஹம்ஸர்களுக் குரித்தான சிறந்தஞானம் முழுதும் கூறப்படுகின்றதோ, எங்கு ஞானமும் வைராக்கியமும் பக்தியும் உடையவர்களால் கர்மங்களுக் கப்பாற்பட்ட நிலை எய்தப்படுகிறதோ, அந்த நிர்மலமான ஸ்ரீமத் பாகவத புராணத்தை பக்தியுடன் கேட்பவனும் படிப்பவனும் ஆராய்பவனும் ஆகிய மனிதன் முக்தி எய்துகிருன்.

13. 19. எந்தப் பரம்பொருளால் இந்த நிகரற்ற ஞான ஒளிவீசும் பாகவதம் முன்பு பிரம்மாவுக்கும், பிரம்மாவின் ரூபத்தில் நாரத முனிக்கும், நாரத முனி ரூபத்தில் கிருஷ்ணத் துவைபாயனருக்கும், கிருஷ்ணத் துவைபாயன ரூபத்தில் யோகீந்திரராகிய சுகருக்கும், சுகரூபத்தில் கருணையுடன் பகவத் ராதராகிய பரீக்ஷித்துக்கும் வெளியிடப் பட்டதோ அந்தப் பரிசுத்தமானதும் மாசற்றதும், துன்பங்களைக் கடந்ததும், மரணமற்றதும், ஸத்தியமுமாகிய பரம்பொருளை தியானிக்கின்றோம்.

---

13. 19. **தீமஹி—தீ**மஹீதி காயத்ர்யைவ யதோபக்ரமம் உபஸம்ஹரன் **காயத்ர்யா ப்ரஹ்மவித்**யேயமிதி **தர்**சயதி ||

नमस्तस्मै भगवते वासुदेवाय साक्षिणे ।
य इदं कृपया कस्मै व्याचचक्षे मुमुक्षवे ॥ १३.२० ॥

योगीन्द्राय नमस्तस्मै शुकाय ब्रह्मरूपिणे ।
संसारसर्प-दष्टं यो विष्णुरात-ममूमुचत् ॥ १३.२१ ॥

भवे भवे यथा भक्तिः पादयोस्तव जायते ।
तथा कुरुष्व देवेश नाथस्त्वं नो यतः प्रभो ॥ १३.२२ ॥

नामसंकीर्तनं यस्य सर्वपापप्रणाशनम् ।
प्रणामो दुःखशमन-स्तं नमामि हरिं परम् ॥ १३.२३ ॥

इति श्रीमद्भागवते महापुराणे अष्टादशसाहस्रिकायां
संहितायां पारमहंस्यां श्रीवैयासिक्यां हयग्रीव-
ब्रह्मविद्यायां द्वादशस्कन्धे त्रयोदशोऽध्यायः ॥
द्वादशः स्कन्धः समाप्तः ॥
॥ श्रीमद्भागवतमहापुराणम् समाप्तम् ॥

---

13. 20. மோக்ஷத்தில் விருப்பமுள்ள பிரம்மாவுக்கு இந்த பாகவதத்தை எவர் கிருபையால் உபதேசித்தாரோ அந்த ஸர்வஸாக்ஷியான பகவான் வாசுதேவருக்கு நமஸ்காரம்.

13. 21. ஸம்ஸார ஸர்ப்பத்தால் தீண்டப்பட்ட விஷ்ணுராதரை எவர் விடுவித்தாரோ அந்த யோகீந்திரரும் பிரம்மஸ்வரூபியுமான சுகருக்கு நமஸ்காரம்.


13. 22. தேவேசா! பிரபுவே! நீர் எங்களுக்கு நாதராகையால் பிறவிதோறும் உமது திருவடிகளில் எவ்வண்ணம் பக்தி பிறக்குமோ அவ்வண்ணம் அருள்புரிய வேண்டும்.

13. 23. எவருடைய நாம ஸங்கீர்த்தனம் எல்லாப் பாவங்களையும் போக்குமோ எவரை வணங்குதல் துன்பங்களைத் துடைக்குமோ அந்தப் பரதத்துவமான ஹரியை நமஸ்கரிக்கின்றேன்.

இங்ஙனம் பரமஹம்ஸரான வியாஸ புத்திரர் உபதேசித்ததும் பதினெண்ணாயிரம்
சுலோகங்கள் அடங்கியதும் ஹயக்கிரீவப் பிரம்மவித்தை எனப்படுவதுமான
ஸ்ரீமத் பாகவத மகாபுராணத்தில் பன்னிரண்டாவது
ஸ்கந்தத்தில் பதின்மூன்றுவது அத்தியாயம்
முற்றும்

பன்னிரண்டாவது ஸ்கந்தம் முற்றும்

ஸ்ரீமத் பாகவத மஹாபுராணம் முற்றும்.



अनुबन्धः ॥ १ ॥

संक्षेप-भागवत-माहात्म्यम् ॥

पद्मपुराणान्तर्गतम्

सच्चिदानन्द-रूपाय विश्वोत्पत्त्यादि-हेतवे।
तापत्रय-विनाशाय श्रीकृष्णाय वयं नुमः॥

शौनक उवाच—

इह घोरे कलौ प्रायो जीवश्चासुरतां गतः।
क्लेशाक्रान्तस्य तस्यैव शोधने किं परायणम् ॥ १ ॥

सूत उवाच—

कालव्यालमुखग्रास-त्रास-निर्णाश-हेतवे।
श्रीमद्भागवतं शास्त्रं कलौ कीरेण भाषितम् ॥ २ ॥

एतस्मादपरं किंचिन्मनः शुद्ध्यै न विद्यते।
जन्मान्तरे भवेत्पुण्यं तदा भागवतं लभेत् ॥ ३ ॥

அனுபந்தம்—1

ஸம்க்ஷேப பாகவத மாஹாத்மியம்

(பத்மபுராணத்திலடங்கியது)

ஸச்சிதானந்த ரூபியும் உலகின் உற்பத்தி முதலியவற்றிற்குக் காரணமும் ஆகிய ஸ்ரீ கிருஷ்ணனை முவ்வகைத் துன்பமும் ஒழிவதற்காக நாம் துதிப்போம்.

* * * * * *

சௌனகர் கூறியது—

1. இந்தக் கொடிய கலியில் ஜீவராசிகள் வெகுவாக அசுரத் தன்மையை அடைந்துவிட்டன. துன்பத்தால் பீடிக்கப்பட்ட அவர்களுடைய பாவம் நீங்கப் புகலிடம் எது?

ஸூதர் கூறியது—

2. கலியில் கால ஸர்ப்பத்தின் வாயிலகப்பட்டவர்களின் துன்பத்தைப் போக்குவதற்காக ஸ்ரீமத்பாகவத சாஸ்திரம் சுகரால் உபதேசிக்கப் பட்டது.

सप्ताहेन श्रुतं चैतत्सर्वथा मुक्तिदायकम् ।
सनकाद्यैः पुरा प्रोक्तं नारदाय दयापरैः ॥ ४ ॥

यद्यपि ब्रह्मसम्बन्धात् श्रुतमेतत् सुरर्षिणा ।
सप्ताह-श्रवणविधिः कुमारैस्तस्य भाषितः ॥ ५ ॥

एकदा हि विशालायां चत्वार ऋषयोऽमलाः ।
सत्संगार्थं समायाता ददृशुस्तत्र नारदम् ॥ ६ ॥

कुमारा ऊचुः—

कथं ब्रह्मन् दीनमुखः कुतश्चिन्तातुरो भवान् ।
त्वरितं गम्यते कुत्र कुतश्चागमनं तव ॥ ७ ॥

नारद उवाच—

अहं तु पृथिवीं यातो ज्ञात्वा सर्वोत्तमामिति ।
पुष्करं च प्रयागं च काशीं गोदावरीं तथा ॥ ८ ॥

हरिक्षेत्रं कुरुक्षेत्रं श्रीरङ्गं सेतुबन्धनम् ।
एवमादिषु तीर्थेषु भ्रममाण इतस्ततः ॥ ९ ॥

---

3. மனதிற்குத் தூய்மையளிக்க இதினும் சிறந்தது வேறெதுவும் இல்லை. முன் பிறவிகளில் செய்த புண்ணியம் இருக்கும்; அப்போதுதான் ஒருவன் பாகவதத்தை அடைவான்.

4. ஏழு நாட்களில் இது கேட்கப்பட்டால் எவ்வாற்றாலும் முக்தியளிப்பதாகும். கருணைமிக்க ஸநகாதி முனிவர்களால் இது முன்பு நாரதருக்குக் கூறப் பட்டது.

5. இது தேவரிஷியாகிய நாரதரால் ஏற்கெனவே பிரம்மாவுடன் ஸம்பந்தத்தால் கேட்கப்பட்டிருப்பினும் ஏழு நாட்களில் கேட்கும் முறை (ஸப்தாஹ ச்ரவணவிதி) ஸநத்குமாராதியரால் அவருக்கு எடுத்துரைக்கப் பட்டது.

6. ஒரு ஸமயம் உஜ்ஜயினியில் தூய்மையின் உருவான ரிஷிகள் நால்வரும் ஸத் ஸங்கத்திற்காகக் கூடியபோது அங்கே நாரதரைக் கண்டனர்.

குமாரர்கள் கூறியது—

7. பிரம்ம ஸ்வரூபியே! தாங்கள் வாடிய முகத்தினராயும் கவலையால் துன்புறுபவ ராயும் காண்பது ஏன்? எங்கு விரைந்து செல்லுகின்றீர்? உம்முடைய வரவு எங்கிருந்து?

நாரதர் கூறியது—

8-10. நான் பூமியை யடைந்து புஷ்கரம், பிரயாகை, காசி. கோதாவரி, ஹரி க்ஷேத்திரம், குருக்ஷேத்திரம், ஸ்ரீரங்கம், ஸேதுபந்தம் முதலிய சிறப்பான புண்ணிய

नापश्यं कुत्रचिच्छर्म मनः-सन्तोषकारकम् ।
कलिनाऽधर्ममित्रेण धरेयं बाधिताधुना ॥ १० ॥

एवं पश्यन् कलेर्दोषान् पर्यटन्नवनीमहम् ।
यामुनं तटमापन्नो यत्र लीला हरे-रभूत् ॥ ११ ॥

तत्राश्चर्यं मया दृष्टं श्रूयतां तन्मुनीश्वराः ।
एका तु तरुणी तत्र निषण्णा खिन्नमानसा ॥ १२ ॥

वृद्धौ द्वौ पतितौ पार्श्वे निःश्वसन्तावचेतनौ ।
शुश्रूषन्ती प्रबोधन्ती रुदन्ती च तयोः पुरः ॥ १३ ॥

दशदिक्षु निरीक्षन्ती रक्षितारं निजं वपुः ।
वीज्यमाना शतस्त्रीभि-र्बोध्यमाना मुहुर्मुहुः ॥ १४ ॥

दृष्ट्वा दूराद्गतः सोऽहं कौतुकेन तदन्तिकम् ।
मां दृष्ट्वा चोत्थिता बाला विह्वलाचाब्रवीद्वचः ॥ १५ ॥

ஸ்தலங்களில் இங்குமங்கும் சுற்றிவருகையில் மனதிற்குச் சந்தோஷத்தை யளிக்கக் கூடிய நன்மையை நான் எங்குங் காணவில்லை. அதர்மத்தின் உறவினனாகிய கலி புருஷனால் இந்த பூமி இப்போது பாதிக்கப்பட்டுள்ளது.

11. இவ்வாறு கலிதோஷங்களைப் பார்த்துக்கொண்டு நான் பூமியைச் சுற்றி வருகையில் ஹரியினுடைய அவதார லீலைகள் எங்கு நிகழ்ந்தனவோ அந்த யமுனையின் கரைக்கு வந்து சேர்ந்தேன்.

12. அங்கு ஒரு அதிசயம் என்னால் காணப் பட்டது. முனீச்வரர்களே! அதைக் கேளுங்கள். அங்கு ஒரு யௌவன ஸ்திரீ மனமுடைந்து உட்கார்ந் திருந்தாள்.

13-15. இரண்டு கிழவர்கள் மூச்சிழந்து பிரக்ஞை யில்லாமல் விழுந்து கிடந்தனர். அவர்களுக்கு முன் அழுதுகொண்டும் அவர்களை எழுப்ப முயன்று கொண்டும் அவர்களுக்குச் சுச்ரூஷை செய்து கொண்டும், தன்னை ரக்ஷிக்கக் கூடியவரைப் பத்து திக்குகளிலும் தேடிக் கொண்டும் இருந்த அவளை தூரத்தி லிருந்து கண்ட நான் ஆச்சரியத்துடன் அவளருகில் சென்றேன். அவள் நூற்றுக் கணக்கான ஸ்திரீகளால் விசிறப்பெற்று அடிக்கடி தேற்றி அறிவுறுத்தப் பெறுபவளா யிருந்தாள். என்னைக் கண்டு அந்த யுவதி எழுந்து கலவரத்துடன் பின்வருமாறு பேசினாள்.

बालोवाच—

भो भोः साधो क्षणं तिष्ठ मच्चिन्तामपि नाशय ।
दर्शनं तव लोकस्य सर्वथाघहरं परम् ॥ १६ ॥

नारद उवाच—

कासि त्वं काविमौ चेमा नार्यः काः पद्मलोचनाः ।
वद देवि सविस्तारं स्वस्य दुःखस्य कारणम् ॥ १७ ॥

बालोवाच—

अहं भक्तिरिति ख्याता इमौ मे तनयौ मतौ ।
ज्ञानवैराग्यनामानौ कालयोगेन जर्जरौ ॥ १८ ॥

गङ्गाद्याः सरितश्चेमा मत्सेवार्थं समागताः ।
तथापि न च मे श्रेयः सेवितायाः सुरैरपि ॥ १९ ॥

इदानीं शृणु मद्वार्तां सचित्तस्त्वं तपोधन ।
वार्ता मे विततास्त्यस्ति तां श्रुत्वा सुखमावह ॥ २० ॥

யுவதி கூறியது—

16. ஐயனே! ஸாதுவே! நொடிப்போது நில்லும். என்னுடைய கவலையைப் போக்கியருளும். உம்முடைய தரிசனம் உலக மக்களின் பாவ மனைத்தையும் போக்கக் கூடிய சிறப்பு வாய்ந்தது.

நாரதர் கூறியது—

17. நீ யார்? இவ்விருவர் யார்? தாமரைபோன்ற கண்கள் படைத்த இப் பெண்கள் யாவர்? தேவியே! உன்னுடைய துக்கத்திற்குக் காரண மென்ன? விரிவாகக் கூறுவாய்.

யுவதி கூறியது—

18. நான் பக்தி எனப் பெயர் பெற்றவள். இவ்விருவரையும் என் குமாரர்க ளாகத் தெரிந்து கொள்ள வேண்டும்; ஞானம் வைராக்கியம் எனப் பெயருடையவர் கள்; காலகதியால் மூப்பை யடைந்து விட்டனர்.

19. இவர்கள் (இந்த ஸ்திரீகள்) கங்கை முதலிய நதிகள்; என் ஸேவைக்காக வந்திருக்கிறார்கள்; அப்படி யிருந்தும், தேவதைகளால் ஸேவிக்கப் பெற்றும் எனக்கு நன்மை ஏற்பட வில்லை.

20. தவச் செல்வரே! இப்போது என் வார்த்தைக்கு நீர் முழுமனதுடன் செவி சாய்க்க வேண்டுகிறேன். என்னுடைய விருத்தாந்தம் விரிவானது. அதைக் கேட்டு இன்பத்திற்கு வழி காட்டவேண்டும்.

उत्पन्ना द्रविडे साहं वृद्धिं कर्णाटके गता।
क्वचित्क्वचिन्महाराष्ट्रे गुर्जरे जीर्णतां गता ॥ २१ ॥

तत्र घोरकले-र्योगात् पाखण्डैः खण्डितांगका।
दुर्बलाहं चिरं याता पुत्राभ्यां सह मन्दता ॥ २२ ॥

वृन्दावनं पुनः प्राप्य नवीनेव सुरूपिणी।
जाताहं युवती सम्यक् प्रेष्ठरूपा तु साम्प्रतम् ॥ २३ ॥

इमौ तु शयितावत्र सुतौ मे क्लिश्यतः श्रमात्।
इदं स्थानं परित्यज्य विदेशं गम्यते मया ॥ २४ ॥

जरठत्वं समायातौ तेन दुःखेन दुःखिता।
साहं तु तरुणी कस्मात् सुतौ वृद्धाविमौ कुतः ॥ २५ ॥

त्रयाणां सहचारित्वाद्वैपरीत्यं कुतः स्थितम्।
घटते जरठा माता तरुणौ तनयाविति ॥ २६ ॥

---

21. திராவிடத்தில் பிறந்த நான் கர்நாடகத்திலும் மகாராஷ்டிரத்தில் சிற்சில விடங்களிலும் வளர்ச்சி யடைந்து கூர்ஜரத்தில் தளர்ச்சியுற்றேன்.

22. அங்கு கொடுமையான கலியின் கூட்டுறவால் நாஸ்திகர்களால் அங்கங்கள் சேதிக்கப் பெற்று பலமிழந்து புத்திரர்களுடன் நெடுங் காலம் தாழ்ந்த நிலையில் கழித்தேன்.

23. பிருந்தாவனத்தை யடைந்து மீண்டும் புத்துயிர் பெற்று எல்லோரும் விரும்பும்படியான உருவத்துடன் அழகுள்ள யுவதியாக இப்போது ஆகிவிட்டேன்.

24. இங்கு இப்போது படுத்திருக்கும் எனது குமாரர்கள் களைப்பால் சோர்வுற்றிருக்கிறார்கள். இவ்விடம் விட்டு வேறு தேசம் செல்ல நான் விரும்புகிறேன்.

25. மூப்பை யடைந்து வருந்தும் இவர்களுடைய துன்பத்தால் நான் துன்புற்றிருக்கிறேன். நான் யுவதியா யிருக்க என் குமாரர்களாகிய இவர்கள் ஏன், எப்படி, கிழத்தன்மை யடைந்தனர் ?

26. நாங்கள் மூவரும் ஒன்றாகவே இருந்து வந்திருக்கையில் இந்த விபரீதம் எங்கிருந்து வந்தது ? தாய் கிழவியாகவும் புத்திரர்கள் யௌவன முடையவர்களாயும் இருப்பதுதான் பொருந்தும்.

अतः शोचामि चात्मानं विस्मयाविष्टमानसा ।
वद योगनिधे धीमन् कारणं चात्र किं भवेत् ॥ २७ ॥

नारद उवाच—

शृणुष्वावहिता बाले युगोऽयं दारुणः कलिः ।
तेन लुप्तः सदाचारो योगमार्गस्तपांसि च ॥ २८ ॥

जना अघासुरायन्ते शाठ्य-दुष्कर्म-कारिणः ।
इह सन्तो विषीदन्ति प्रहृष्यन्ति ह्यसाधवः ॥ २९ ॥

यदा मुकुन्दो भगवान् क्ष्मां त्यक्त्वा स्वपदं गतः ।
तद्दिनात्कलि-रायातः सर्वसाधन-बाधकः ॥ ३० ॥

दृष्टो दिग्विजये राज्ञा दीनवच्छरणं गतः ।
न मया मारणीयोऽयं सारंग इव सारभुक् ॥ ३१ ॥

यत्फलं नास्ति तपसा न योगेन समाधिना ।
तत्फलं लभते सम्यक्कलौ केशवकीर्तनात् ॥ ३२ ॥

---

27. ஆகையால் நான் என்னைக் குறித்து வருந்துகிறேன். என் மனது ஆச்சரியத்தில் முழுகி யிருக்கிறது. யோகச் செல்வரே! மதிமானே! இதற்கு என்ன காரணமிருக்கும்? கூறியருளும்.

நாரதர் கூறியது—

28. பெண்ணே! மன வமைதியுடன் கேள். இது கொடுமையான கலியுகம். அதனால் ஸதாசாரமும், யோகமார்க்கமும், தவமும் மறைந்து விட்டன.

29. (பகவானையே விழுங்கிவிடப் பார்த்த) அகாசுரனைப் போல் இருக்கிறார்கள் மனிதர்கள். சூதும் தீமையும் நிறைந்த செயலுடையவர்களா யிருக்கிறார்கள். இங்கு ஸாதுக்கள் துன்புறுகிறார்கள், அஸாதுக்கள் களிக்கின்றார்கள்.

30. எப்போது பகவான் முகுந்தர் பூமியைவிட்டுத் தமதிருப்பிடம் சென்றாரோ அந்த நாளிலிருந்து எல்லா ஸாதனங்களையும் பாழாக்கும் கலி வந்து விட்டான்.

31. (பரீக்ஷித்து) மகாராஜாவால் திக்விஜயத்தின் போது பார்க்கப்படவே அவன் எளியவனைப்போல் அவரைச் சரணடைந்தான். தேனீயைப்போல் ஸாரத்தை கிரகிக்கும் அரசர் 'இவன் என்னால் கொல்லத்தக்கவன் அல்லன் (கலியிலும் ஒரு நன்மை உண்டு)' என்று எண்ணினார்.

32. தவத்தால் எந்தப் பயன் கை கூடாதோ, யோகத்தாலும் ஸமாதியாலும் எது கிட்டாதோ அந்தப் பயனை எளிதில் கலியில் கேசவனுடைய கீர்த்தனத்தால் ஒருவன் அடைகிறான்.

एकाकारं कलिं दृष्ट्वा सारवत्सार-नीरसम् ।
विष्णुरातः स्थापितवान् कलिजानां सुखाय च ॥ ३३ ॥

कुकर्माचरणात्सारः सर्वतो निर्गतोऽधुना ।
पदार्थाः संस्थिता भूमौ बीजहीना-स्तुषा यथा ॥ ३४ ॥

विप्रै-र्भागवती वार्ता गेहे गेहे जने जने ।
कारिता कणलोभेन कथासारस्ततो गतः ॥ ३५ ॥

अत्युग्रभूरिकर्माणो नास्तिका रौरवा जनाः ।
तेऽपि तिष्ठन्ति तीर्थेषु तीर्थसारस्ततो गतः ॥ ३६ ॥

कामक्रोध-महालोभ-तृष्णाऽव्याकुल-चेतसः ।
तेऽपि तिष्ठन्ति तपसि तपः-सारस्ततो गतः ॥ ३७ ॥

मनसश्चाजयाल्लोभा-द्दम्भात्पाखण्ड-संश्रयात् ।
शास्त्रानभ्यसनाच्चैव ध्यानयोगफलं गतम् ॥ ३८ ॥

---

33. ஸாரமில்லாத கலியை ஒருபடித்தாய் ஸாரமுடையதாய்க் கருதி விஷ்ணுராதராகிய பரீக்ஷித்து கலிகாலத்தில் பிறப்பவர்களின் சுகத்திற்காகக் கலிபுருஷனுக்கு இருப்பிடத்தை அளித்தார்.

34. தீயொழுக்கத்தால் இப்போது எல்லாம் ஸாரமற்றதாகிவிட்டது. பூமியிலுள்ள பொருள்களெல்லாம் தானியமில்லாத உமியைப்போல் இருக்கின்றன.

35. விடுதோறும், ஜனசமூகம் தோறும், பிராம்மணர்களால் சிறு லாபத்திற்கு ஆசைப்பட்டு பாகவதப்பிரஸங்கம் வியாபாரமாகச் செய்யப்பட்டிருக்கிறது. அதனுல் கதையின் ஸாரம் அதிலிருந்து போய்விட்டது.

36. நரகவாசிகளை யொத்த நாஸ்திக ஜனங்கள் அதிகமான கொடுமை நிறைந்த செயல்களைச் செய்பவர்களாய் புண்ணிய ஸ்தலங்களில் நிலை பெற்றுவிட்டதால் புண்ணிய ஸ்தலங்களின் ஸாரம் போய்விட்டது.

37. காமம், கோபம், அதிகமான லோபம். ஆசை, கவலை முதலியன நிறைந்த மனமுடையவர்களுங் கூடத் தவத்தில் நிற்கிறுர்கள். அதனுல் தவத்தின் ஸாரம் அதிலிருந்து போய்விட்டது.

38. மனதை ஜயிக்காததாலும், லோபத்தாலும், டம்பத்தாலும், நாஸ்திகர்களுடன் கூடி வாழ்வதாலும், சாஸ்திராப்பியாஸ மின்மையாலும் தியான யோகத்தின் பயன் போய்விட்டது.

पण्डितास्तु कलत्रेण रमन्ते महिषा इव ।
पुत्रस्योत्पादने दक्षा अदक्षा मुक्तिसाधने ॥ ३९ ॥

न हि वैष्णवता कुत्र सम्प्रदाय-पुरःसरा ।
एवं प्रलयतां प्राप्तो वस्तुसारः स्थले स्थले ॥ ४० ॥

अयं तु युगधर्मो हि वर्तते कस्य दूषणम् ।
अतस्तु पुण्डरीकाक्षः सहते निकटे स्थितः ॥ ४१ ॥

वृथा खेदयसे बाले अहो चिन्तातुरा कथम् ।
श्रीकृष्णचरणाम्भोजं स्मर दुःखं गमिष्यति ॥ ४२ ॥

द्रौपदी च परित्राता येन कौरवकश्मलात् ।
पालिता गोपसुन्दर्यः स कृष्णः क्वापि नो गतः ॥ ४३ ॥

त्वं तु भक्तिः प्रिया तस्य सततं प्राणतोऽधिका ।
त्वयाऽऽहूतस्तु भगवान् याति नीचगृहेष्वपि ॥ ४४ ॥

---

39. பண்டிதர்களும் மனைவிகளுடன் கூடி எருமைகளைப்போல் களிக்கிறார்கள். புத்திரர்களைப் பெறுவதில் ஸாமர்த்திய முடையவர்களாகவும் முக்திஸாதனத்தில் ஸாமர்த்திய மற்றவர்களாகவும் இருக்கிறார்கள்.

40. ஸம்பிரதாயத்தை முன்னிட்ட வைஷ்ணவ ஒழுக்கம் ஓரிடத்திலும் காணப்படவில்லை. இங்ஙனம் ஸ்தலந்தோறும் ஒவ்வொரு வஸ்துவின் ஸாரமும் அழிவை யடைந்து விட்டது.

41. இந்த யுகதர்மம் நடக்கிறது. யாரைக் குறை கூறுவது? அதையும் பகவான் கமலக்கண்ணன் பக்கத்தி லிருந்துகொண்டே பொறுத்துக்கொண் டிருக்கிறான்.

42. பெண்ணே! நீ வீணாக வருந்துகிறாய். ஐயோ! இவ்வளவு மனத்துயரம் எதற்கு? ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாத கமலங்களை நினைத்துக் கொள். துக்கம் போய் விடும்.

43. அந்த வழியில்தான் கௌரவர்களுடைய தீச்செயலிலிருந்து துரௌபதி காக்கப்பட்டாள்; கோப ஸ்திரீகள் பாலிக்கப் பட்டார்கள்; அந்தக் கிருஷ்ணன் எங்கும் போய்விடவில்லை.

44. பக்தியாகிய நீயோ அவருக்கு எப்போதும் உயிரைக் காட்டிலும் பிரியமானவள். உன்னால் அழைக்கப் பட்டால் பகவான் இழிந்தோர் இல்லங்களுக்கும் வருவார்.

सत्यादित्रियुगे बोधवैराग्यौ मुक्तिसाधकौ ।
कलौ तु केवला भक्ति-ब्रह्मसायुज्य-कारिणी ॥ ४५ ॥

न तपोभि-र्न वेदैश्च न ज्ञानेनापि कर्मणा ।
हरिर्हि साध्यते भक्त्या प्रमाणं तत्र गोपिकाः ॥ ४६ ॥

भक्तिरुवाच—

कृपालुना त्वया साधो मद्बाधा ध्वंसिता क्षणात् ।
पुत्रयोश्चेतना नास्ति ततो बोधय बोधय ॥ ४७ ॥

सूत उवाच—

तस्या वचः समाकर्ण्य कारुण्यं नारदो गतः ।
तयोर्बोधन-मारेभे कराग्रेण विमर्दयन् ॥ ४८ ॥

मुखं संयोज्य कर्णान्ते शब्दमुच्चैः समुच्चरन् ।
ज्ञान प्रबुध्यतां शीघ्रं रे वैराग्य प्रबुध्यताम् ॥ ४९ ॥

---

45. கிருதம் முதலிய மூன்று யுகங்களில் ஞானமும் வைராக்கியமும் முக்திக்கு ஸாதனங்கள். கலியில் பக்தியொன்றே பிரம்ம ஸாயுஜ்ய மளிக்க வல்லது.

46. தவங்களாலோ, வேதங்களாலோ, ஞானத்தாலோ, கர்மத்தாலோ ஹரியை அடைய முடியாது. பக்தியால் அடையலாம். அதற்குப் பிரமாணம் கோபிகைகள்.

பக்தி கூறியது—

47. ஸாதுவே ! கருணைமிக்க உம்மால் என்னுடைய துன்பம் ஒரு நொடியில் துடைக்கப் பட்டது ; புத்திரர்களுக்கு உணர்ச்சி யில்லையே ; அவர்களை எழுப்பிவிடும், எழுப்பிவிடும்.

ஸூதர் கூறியது—

48. அவளுடைய வார்த்தையைக் கேட்டு மனமிரங்கிய நாரதர் அவர்களை (புத்திரர்களை) கைவிரல்களால் பிடித்துவிட்டு எழுப்ப ஆரம்பித்தார்.

49. அவர்கள் காதுகளி னருகில் வாயை வைத்து உரக்கச் சத்தம் செய்து 'அரே ! ஞான சீக்கிரம் எழுந்திரு. வைராக்கியா ! எழுந்திரு' என்று கூவினார்.

वेदवेदान्तघोषैश्च गीतापाठै-र्मुहु-र्मुहुः ।
बोध्यमानौ तदा तेन कथंचिच्चोत्थितौ बलात् ॥ ५० ॥

नेत्रै-रनवलोकन्तौ जृम्भन्तौ सालसावुभौ ।
बकवत्पलितौ प्रायः शुष्ककाष्ठसमांगकौ ॥ ५१ ॥

क्षुत्क्षामौ तौ निरीक्ष्यैव पुनः स्वाप-परायणौ ।
ऋषिश्चिन्तापरो जातः किं विधेयं मयेति च ॥ ५२ ॥

व्योमवाणी तदैवाभून्मा ऋषे खिद्यतामिति ।
उद्यमः सफलस्तेऽयं भविष्यति न संशयः ॥ ५३ ॥

एतदर्थं तु सत्कर्म सुरर्षे त्वं समाचर ।
तत्ते कर्माभिधास्यन्ति साधवः साधुभूषणाः ॥ ५४ ॥

तत्र द्वावपि संस्थाप्य निर्गतो नारदो मुनिः ।
तीर्थं तीर्थं विनिष्क्रम्य पृच्छन्मार्गे मुनीश्वरान् ॥ ५५ ॥

तावद्ददर्श पुरतः सनकादीन्मुनीश्वरान् ।
कोटि-सूर्य-समाभासानुवाच मुनिसत्तमः ॥ ५६ ॥

50-51. வேத வேதாந்த கோஷங்களாலும் கீதாபாடத்தாலும் மீண்டும் மீண்டும் பலவந்தமாய் எழுப்பப் பட்டு, கொக்கைப்போல் வெண்மையான நரைமயிருடனும் உலர்ந்த கட்டைகளைப் போன்ற அங்கங்களுடனும் காணப்பட்ட அவ்விருவரும் கண்களால் எதையும் பாராமல் கொட்டாவி விட்டுக்கொண்டும் சோம்பல் முறித்துக்கொண்டும் எப்படியோ சிறிது எழுந்தார்கள்.

52. பசியால் மெலிந்திருந்த அவர்கள் கண்ணைத் திறந்து பார்த்துவிட்டு மறுபடியும் தூங்க ஆரம்பித்து விட்டார்கள். மகரிஷி கவலையுற்றவராய்த் தான் என்ன செய்ய வேண்டும் என்று யோசிக்கலானார்.

53-54. அப்போது பின்வருமாறு அசரீரி எழுந்தது ; ' ரிஷியே! வருத்தப்படாதீர்: உம்முடைய முயற்சி கைகூடி வரும். சந்தேக மில்லை. தேவரிஷியே ! அதற்காக நீர் ஒரு ஸத்கர்மம் செய்ய வேண்டும். அது என்ன கர்ம மென்று சிரேஷ்டர்களாகிய ஸாதுக்கள் கூறி யருள்வார்கள்.''

55. அவ்விடத்திலேயே இருவரையும் விட்டுவிட்டு நாரத முனிவர் கிளம்பி ஒவ்வொரு புண்ணிய க்ஷேத்திரமாகப் போய் முனீசுவரர்களை வழியில் வினவிக் கொண்டே போனார்.

56. அப்போது கோடி சூரியப் பிரகாசம் பொருந்திய ஸநகாதி முனிவர்களைக் கண்முன்னே கண்டு நாரதர் பின்வருமாறு அவர்களிடம் விண்ணப்பித்துக் கொண்டார்.

नारद उवाच—

इदानीं भूरि-भाग्येन भवद्भिः संगमोऽभवत् ।
कुमारा ब्रुवतां शीघ्रं कृपां कृत्वा ममोपरि ॥ ५७ ॥

अशरीर-गिरोक्तं यत्तत्किं साधन-मुच्यताम् ।
अनुष्ठेयं कथं तावत्प्रब्रुवन्तु सविस्तरम् ॥ ५८ ॥

कुमारा ऊचुः—

सत्कर्म सूचको नूनं ज्ञानयज्ञः स्मृतो बुधैः ।
श्रीमद्भागवतालापः स तु गीतः शुकादिभिः ॥ ५९ ॥

भक्तिज्ञान-विरागाणां तद्घोषेण बलं महत् ।
व्रजिष्यति द्वयोः कष्टं सुखं भक्तेर्भविष्यति ॥ ६० ॥

नारद उवाच—

ज्ञानयज्ञं करिष्यामि शुकशास्त्रकथोज्ज्वलम् ।
भक्तिज्ञानविरागणां स्थापनार्थं प्रयत्नतः ॥ ६१ ॥

நாரதர் கூறியது—

57-58. இப்போது பெரும் பாக்கியத்தால் தங்களுடன் சந்திப்பு ஏற்பட்டது. குமார ரிஷிகளே! என்னிடம் கருணை கூர்ந்து விரைவில் எனக்குக் கூறுங்கள். அசரீரி வாக்குக் குறிப்பிட்ட ஸாதனம் எதுவோ அதை எனக்குத் தெரிவித் தருளவேண்டும். அதை எப்படி யனுஷ்டிக்க வேண்டுமென்றும் விரிவாக உபதேசிக்க வேண்டும்.

குமார ரிஷிகள் கூறியது—

59. ஸத்கர்மம் என்று குறிப்பிடப் படுவது நிச்சயமாக ஞான யக்ஞமே என்பது அறிவிற் சிறந்தவர்களின் கருத்து. அது ஸ்ரீமத் பாகவதப் பிரவசனம்; சுகர் முதலிய வர்களால் பாடப் பெற்றது.

60. பக்திக்கும் ஞானத்திற்கும் வைராக்கியத்திற்கும் பாகவத கோஷத்தால் மிகுந்த பலம் ஏற்படும். இருவருடைய கஷ்டமும் நீங்கிவிடும். பக்திக்கு சுகம் உண்டாகும்.

நாரதர் கூறியது—

61. பக்தியையும் ஞானத்தையும் வைராக்கியத்தையும் நன்னிலையில் ஸ்தாபிப்ப தற்காக சுக ரருளிய பாகவத சாஸ்திரமாகிய அக்னியைக் கொண்டு ஞானயக்ஞத்தைச் செய்ய முயற்சிக்கின்றேன்.

कुत्र कार्यो महायज्ञः स्थलं तद्वाच्यतामिह।
महिमा शुकशास्त्रस्य वक्तव्यो वेदपारगैः ॥ ६२ ॥

कियद्भि-र्दिवसैः श्राव्या श्रीमद्भागवती कथा।
को विधिस्तत्र कर्तव्यो ममेदं ब्रुवतामितः ॥ ६३ ॥

कुमारा ऊचुः—

शृणु नारद वक्ष्यामो विनम्राय विवेकिने।
गंगाद्वार-समीपे तु तटमानन्द-नामकम् ॥ ६४ ॥

रम्यमेकान्तदेशस्थं हेमपद्मसुसौरभम्।
यत्समीपस्थजीवानां वैरं चेतसि न स्थितम् ॥ ६५ ॥

ज्ञानयज्ञस्त्वया तत्र कर्तव्यो ह्यप्रयत्नतः।
अपूर्वरसरूपा च कथा तत्र भविष्यति ॥ ६६ ॥

पुरःस्थं निर्बलं चैव जराजीर्णकलेवरम्।
तद्द्वयं च पुरस्कृत्य भक्तिस्तत्रागमिष्यति ॥ ६७ ॥

---

62. அந்த மகாயக்ஞம் எங்கே, எந்த ஸ்தலத்தில் செய்யவேண்டு மென்றும் சுக சாஸ்திரத்தின் மாஹாத்மியத்தைப் பற்றியும் வேதத்தில் கரைகண்டவர்களான உங்களால் கூறப்பட வேண்டும்.

63. ஸ்ரீமத் பாகவத கதை எத்தனை நாட்களில் கேட்கப்பட வேண்டும்? அதற்கு என்ன முறை? நான் என்ன செய்யவேண்டும்? இதைக் கூறி யருளுங்கள்.

குமார ரிஷிகள் கூறியது—

64. நாரதரே! விவேகமும் விநயமும் பொருந்திய உமக்குக் கூறுவோம், கேளும். கங்காத் துவாரத்தி னருகில் ஆனந்தத் தடம் எனப் பெயர்பெற்ற இடம் உளது.

65. அது அழகாகவும், ஏகாந்தமாகவும், பொற்றாமரையின் நறு மணம் வீசுவதாகவும் அமைந்தது. அத னருகாமையில் உள்ள ஜீவர்களிடம் மனதில் பகைமை என்பதிராது.

66. சிரம மில்லாமல் ஞானயக்ஞமானது உம்மால் அங்கு செய்யப்படலாம். அவ்விடத்தில் கதை முன் கண் டறியாத சுவையுடன் கூடி விளங்கும்.

67. முன்பு பலவீனர்களாகவும் மூப்பால் மெலிந்த சரீர முடையவர்களாகவும் இருந்த (ஞானம் வைராக்கியம் என்ற) அவ்விருவரையும் முன்னிட்டுக் கொண்டு பக்தியானவள் அங்கு தானே வந்து சேருவாள்.

यत्र भागवती वार्ता तत्र भक्त्यादिकं व्रजेत् ।
कथाशब्दं समाकर्ण्य तत्त्रिकं तरुणायते ॥ ६८ ॥

सूत उवाच—

एवमुक्त्वा कुमारास्ते नारदेन समं ततः ।
गंगातटं समाजग्मुः कथापानाय सत्वराः ॥ ६९ ॥

दीक्षिता नारदेनाथ दत्तमासनमुत्तमम् ।
कुमारा वन्दिताः सर्वै-र्निषेदुः कृष्णतत्पराः ॥ ७० ॥

वैष्णवाश्च विरक्ताश्च न्यासिनो ब्रह्मचारिणः ।
मुखभागे स्थितास्ते च तदग्रे नारदस्थितः ॥ ७१ ॥

एकभागे ऋषिगणा-स्तदन्यत्र दिवौकसः ।
वेदोपनिषदोऽन्यत्र तीर्थान्यत्र स्त्रियोऽन्यतः ॥ ७२ ॥

एवं तेष्वेकचित्तेषु श्रीमद्भागवतस्य च ।
माहात्म्यमूचिरे स्पष्टं नारदाय महात्मने ॥ ७३ ॥

---

68. எங்கு பாகவதப் பிரசங்கம் நிகழ்கிறதோ அங்கு பக்தி முதலியவர்கள் செல்வார்கள். கதையின் ஒலியைக் கேட்ட மாத்திரத்தில் அம்மூவரும் (பக்தியும் ஞானமும் வைராக்கியமும்) இளமைப் பருவத்தை யடைவார்கள்.

ஸூதர் கூறியது—

69. இங்ஙனம் கூறிவிட்டு குமார ரிஷிகள் நாரதருடன் கதை யமுதைப் பருகுவதற்காக அங்கிருந்து கங்கைக் கரைக்குச் சென்றனர்.

70. நியமத்தைக் கைக்கொண்ட நாரதரால் சிறந்த ஆஸன மளிக்கப் பெற்ற குமார ரிஷிகள் எல்லோராலும் வந்தனம் செய்யப் பட்டு கிருஷ்ணனிடம் லயித்தவர்களாய் அமர்ந்தனர்.

71. வைஷ்ணவர்களும், வைராகிகளும், ஸந்நியாஸிகளும், பிரம்மசாரிகளும் முன்பு வீற்றிருக்க, நாரதர் அவர்க ளருகி லிருந்தார்.

72-73. ஒருபுறம் ரிஷிகணங்களும், ஒருபுறம் தேவர்களும் ஒருபுறம் (மூர்த்தீகரித்த) வேத உபநிஷதங்களும், ஒருபுறம் தீர்த்தங்களும், ஒருபுறம் ஸ்திரீகளுமாக எல்லோரும் மனது ஒருமுகப்பட் டிருக்கையில் (குமாரரிஷிகள்) மகாத்மாவாகிய நாரதரை நோக்கித் தெளிவாக ஸ்ரீமத்பாகவத மாஹாத்மியத்தைக் கூறினார்கள்.

कुमारा ऊचुः—

दुर्लभैव कथा लोके श्रीमद्भागवतोद्भवा।
कोटिजन्मसमुत्थेन पुण्येनैव तु लभ्यते ॥ ७४ ॥

तेन योगनिधे धीमन् श्रोतव्या सा प्रयत्नतः।
दिनानां नियमो नास्ति सर्वदा श्रवणं मतम् ॥ ७५ ॥

मनसश्चाजयाद्रोगात्पुंसां चैवायुषः क्षयात्।
कलेर्दोषबहुत्वाच्च सप्ताहश्रवणं मतम् ॥ ७६ ॥

सूत उवाच—

एवं नगाहश्रवणोरुधर्मे प्रकाश्यमाने ऋषिभिः सभायाम्।
आश्चर्यमेकं समभूत्तदानीं तदुच्यते संशृणु शौनक त्वम् ॥ ७७ ॥

भक्तिः सुतौ तौ तरुणौ गृहीत्वा प्रेमैकरूपा सहसाऽऽविरासीत्।
श्रीकृष्ण गोविन्द हरे मुरारे नाथेति नामानि मुहुर्वदन्ती ॥ ७८ ॥

குமார ரிஷிகள் கூறியது—

74. ஸ்ரீமத் பாகவதத்திலுதித்த கதா சிரவணம் உலகில் எளிதில் கிட்டுவதன்று. கோடிப் பிறவிகளில் செய்த புண்ணியத்தின் பயனாகவே அது கிட்டும்.

75. யோகச் செல்வரே! மதிமானே! அதனால் அக்கதை முயற்சிசெய்து கேட்கப் படவேண்டும். அதற்கு நாட்களின் நியமம் இல்லை. எப்போதும் சிரவணம் செய்ய வேண்டும் என்பதே துணிபு.

76. ஆனால் கலியில் தோஷம் நிறைந்திருப்பதாலும், மனிதர்களுக்கு மனோ ஜயம் இன்மையாலும், அவர்கள் நோய் வாய்ப் படுவதாலும், ஆயுள் நசிப்பதாலும் ஸப்தாஹ சிரவணம் (ஏழுநாளில் கேட்பது) விதிக்கப் பட்டது.

ஸூதர் கூறியது—

77. இங்ஙனம் ஸப்தாஹசிரவணத்தின் சிறந்த தர்மம் ரிஷிகளால் ஸபையில் பிரகாசப் படுத்தப் பட்டதும் ஒரு ஆச்சரியம் தோன்றிற்று. சௌனகரே! அதைக் கூறுகிறேன், நீர் கேளும்.

78. பக்திதேவி தனது இளங்குமாரர்கள் இருவரையும் கூட்டிக்கொண்டு பிரேமையே வடிவெடுத்தவளாய், 'ஸ்ரீ கிருஷ்ணா, கோவிந்தா, ஹரே, முராரே, நாதா' என்று பகவந் நாமங்களை மேன்மேலும் உச்சரித்துக் கொண்டு அப்போதே அங்கு தோன்றினாள்.

तां चागतां भागवतार्थ-भूषां सुचारुवेषां ददृशुः सदस्याः।
कथं प्रविष्टा कथमागतेयं मध्ये मुनीनामिति तर्कयन्तः ॥ ७९ ॥

ऊचुः कुमारा वचनं तदानीं कथार्थतो निष्पतिताधुनेयम्।
एवं गिरः सा ससुता निशम्य सनत्कुमारं निजगाद नम्रा ॥ ८० ॥

भक्तिरुवाच—

भवद्भिरद्यैव कृतास्मि पुष्टा कलिप्रणष्टापि कथारसेन।
काहं तु तिष्ठाम्यधुना ब्रुवन्तु ब्राह्मा इदं तां गिरमूचिरे ते ॥ ८१ ॥

कुमारा ऊचुः—

भक्तेषु गोविन्दसरूपकर्त्री प्रेमैकधर्त्री भवरोगहन्त्री।
सा त्वं च तिष्ठस्व सुधैर्य-संश्रया निरन्तरं वैष्णवमानसानि ॥ ८२ ॥

ब्रूमोऽद्य ते किमधिकं महिमानमेवं
ब्रह्मात्मकस्य भुवि भागवताभिधस्य।
यत्संश्रयान्निगदिते लभते सुवक्ता
श्रोतापि कृष्णसमता-मलमन्यधर्मैः ॥ ८३ ॥

---

79. பாகவதத்தின் தாத்பரியத்தை ஆபரணமாய்க் கொண்டவளாகவும், நன்கு அலங்கரிக்கப் பெற்றவளாகவும் எழுந்தருளிய அவளை ஸபையோர் கண்டு, 'எப்படி ஸபைக்குள் வந்தாள்? எப்படி முனிவர்களின் மத்தியில் தோன்றினாள்?' என்று தர்க்கம் செய்யலாயினர்.

80. 'கதையின் பொருட்டே இப்போது இவள் இங்கு வந்துள்ளாள்' என்று குமார ரிஷிகள் கூறவே, அதைத் தன் பிள்ளைகளுடன் அவள் கேட்டு ஸநத்குமாரரை வணங்கிப் பின் வருமாறு கூறினாள்.

பக்தி கூறியது—

81. 'நான் கலியினால் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் அடைந்த பின் பாகவதக் கதையின் ரஸத்தால் இப்போது தான் உங்களால் புஷ்டியுள்ளவளாய்ச் செய்யப்பட்டேன். இனி நான் எங்கு நிலைபெறவேண்டும் என்பதைக் கூறி யருளுங்கள்.'

பிரம்மபுத்திரர்கள் அவளை நோக்கிப் பின் வருமாறு கூறினார்கள்.

குமார ரிஷிகள் கூறியது—

82. பக்தர்களை கோவிந்த வடிவாகவே ஆக்கிவிடுபவளும், பிரேமை ஒன்றையே தாங்குபவளும், பிறவிப் பிணியை ஒழிப்பவளுமாகிய நீ விஷ்ணு பக்தர்களின் மனதில் தைரியமாக எப்பொழுதும் நிலைபெற்றிருக்கலாம்.

83. வேதமே உருக் கொண்டதும் பாகவதம் என உலகில் பெயர் பெற்றதும், எதை அடைந்ததும் எதைப் பேசியதும், சொல்லுபவனும் கேட்பவனும் கிருஷ்ணனுக்கு ஸமமான நிலையை அடைந்து விடுகிறார்களோ அதன் மகிமையைப்பற்றி உனக்கு நாங்கள் இன்னும் அதிகமாக என்ன சொல்ல வேண்டும்? வேறு தர்மங்களால் ஆவதென்ன?

ये मानवाः पापकृतस्तु सर्वदा
सदा दुराचाररता विमार्गगाः ।
क्रोधाग्निदग्धाः कुटिलाश्च कामिनः
सप्ताहयज्ञेन कलौ पुनन्ति ते ॥ ८४ ॥

अत्र ते कथयिष्याम इतिहासं पुरातनम् ।
यस्य श्रवणमात्रेण पापहानिः प्रजायते ॥ ८५ ॥

---

84. எந்த மானிடர்கள் எப்போதும் பாவமே செய்பவர்களோ, எப்போதும் துராசாரத்தில் பிரியமுடையவர்களோ, கெட்ட வழியில் செல்லுபவர்களோ, கோபத்தீயால் பொசுக்கப்பட்டவர்களோ, கபட ஸ்வபாவமுடையவர்களோ, காம வசப்பட்டவர்களோ, அவர்களும் ஸப்தாஹ யக்ஞத்தால் கலியில் புனிதர்களாகி விடுகிறார்கள்.

85. இது ஸம்பந்தமாக ஒரு பழைய வரலாற்றைக் கூறுவோம். அதைக் கேட்ட மாத்திரத்தில் பாவத்தின் அழிவு ஏற்படும். (முன்னொரு காலத்தில் துங்கபத்ரா நதிக் கரையில் ஆத்மதேவன் என்று குணசாலியான ஒரு பிராம்மணன் இருந்தான். அவன் மனைவி துந்துலீ என்பவள் வீண்பேச்சிலும் கலஹத்திலும் பிரியமுள்ளவள். அவர்களுக்குப் பொருளிருந்தது. ஆனால் பிள்ளையில்லை, வாழ்க்கையில் இன்பமும் இல்லை. அந்தப் பிராம்மணன் ஒரு சமயம் ஒரு ஸந்நியாஸியைச் சந்தித்துத் தன் குறையைக் கூறவே, அவர் ஒரு பழத்தைக் கொடுத்து அதை பிராம்மணரின் பத்தினி சாப்பிட்டு ஒரு வருஷம் ஸத்தியவிரதம், பரிசுத்தம், தயை, தானம், ஒருபோது உணவு என்ற நியமத்துடனிருந்தால் ஸத்புத்திரன் பிறப்பான் என்று கூறினார். பிராம்மணன் மனைவிக்குப் பழத்தைக் கொடுத்துவிட்டு ஏதோ காரியமாக வெளியே போய்விட்டார். துந்துலீ தன் தோழியிடம் 'இந்தப் பழத்தை நான் சாப்பிடப்போவதில்லை. இத்தனை நாட் கழித்து கர்ப்பந் தரித்தால் எவ்வளவு கஷ்டப்படவேண்டியிருக்குமோ ? கடுமையான விரதமும் என்னா லிருக்க முடியாது. மலடியாகவோ விதவையாகவோ இருக்கும் ஸ்திரீயே சுகமடைகிறாள் என்பது என் கருத்து' என்று கூறினாள். அதே சமயம் அவளுடைய தங்கை அங்கு வரவே அவளிடமும் தன் கருத்தைக் கூறினாள். தங்கையானவள் தான் கருவுற்றிருப்பதாயும் தனக்குப் பிறக்கும் குழந்தையை அவளுக்குக் கொடுத்துவிடுவதாயும் அதுவரை அவள் கர்ப்பிணிபோல் வேஷம் போடவேண்டும் என்றும் தன்னுடைய கணவனுக்கு நிறையப் பணம் கொடுத்துவிட்டால் அவரும் சம்மதிப்பார் என்றும் ரகசியத்தை வெளிவிடமாட்டார் என்றும் தனக்குப் பிறந்த குழந்தை இறந்துவிட்டதாகப் பிறருக்குச் சொல்லிவிடுவதாயும் யோசனை கூறி 'அந்தக் குழந்தையை நானே வந்து போஷிக்கிறேன் ; நீ பழத்தைப் பசுமாட்டுக்குக் கொடுத்துவிடு' என்றாள்.

துந்துலீ அப்படியே செய்துவிட்டுக் கணவனிடம் தான் பழத்தைச் சாப்பிட்டதாய்ச் சொல்லிவிட்டாள். கர்ப்பிணியைப்போல் நடிக்க ஆரம்பித்தாள். நாளடைவில் தங்கைக்குப் பிள்ளை பிறந்ததும் அது உடனே மரித்துவிட்ட தாய்க் கூறி ரகஸியமாய்த் தமக்கையிடம் சேர்க்கவே அதைத் தமக்கை தான் பெற்றதாய்ப் பிரகடனம் செய்தாள். ஆனால் முலைப்பால் இல்லை என்று சொல்லிப் பால் கொடுத்து வளர்க்கத் தங்கையைத் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டாள். பிள்ளைக்கு துந்துகாரீ எனப் பெயர் வைக்கப் பட்டது. இதற்குச் சில நாட்களுக்குப் பின் பசுமாடும் ஒரு அழகிய புருஷக் குழந்தையை ஈன்றது. அதற்குக் காது மட்டும் பசுவின் காதுபோலிருந்ததால் கோகர்ணன் என்று பெயரிட்டனர். இந்தக் குழந்தையைக் கண்டு ஊரெல்லாம் அதிசயித்தது.

வருஷங்கள் சென்றன. கோகர்ணன் மகா பண்டிதனாகவும் ஞானியாகவும் விளங்கினான். துந்துகாரி துஷ்டனாகவும், ஆசார அனுஷ்டானம் ஏது மில்லாதவனாகவும் திருடர்களுடனும் வேசிகளுடனும் நேசமுடையவனாகவு மிருந்தான். தனக்கு வீண் செலவுக்கு அப்பப்போது வேண்டிய பணம் கொடுக்காவிட்டால் தாய் தந்தையரை அடிப்பான். அவன் நடத்தையைச் சகிக்காமல் ஆத்மதேவன் கதறியபோது கோகர்ணன் ஆறுதல் கூறி ஞானத்தையும் வைராக்கியத்தையும் போதித்தான். ஆத்மதேவன் வீட்டைவிட்டு வனம் சென்று கிருஷ்ணனைப் பூஜித்து தினந்தோறும் பாகவதம் பத்தாவது ஸ்கந்தத்தைப் பாராயணம் செய்து கிருஷ்ணன் திருவடியை அடைந்தான்.

தந்தை இறந்தபின் துந்துகாரியின் கொட்டம் இன்னும் அதிகமாயிற்று. 'எவ்வளவு பணம் இருக்கிறது ? எங்கே மறைத்து வைத்திருக்கிறாய் ?' என்று தாயாரை இம்சிக்கலானான். இம்சை பொறுக்க மாட்டாமல் அவள் கிணற்றில் விழுந்து உயிர் விட்டாள். கோகர்ணனும் தீர்த்தயாத்திரையாகக் கிளம்பிவிட்டான். துந்துகாரி வேசிகளுடன் கூடி அவர்களை ஆதரிப்பதற்காக எண்ணிலாத் தீச்செயல்கள் புரியலானான். நாளடைவில் வேசிகள் கூடிச் சதி செய்து அவனுடைய பொருளை அபகரித்துக்கொண்டு அவனைக் கொன்று ஒரு படுகுழியில்போட்டு மூடிவிட்டு அவன் எங்கோ ஓடிப்போய் விட்டான் என்ற வதந்தியைப் பரப்பினார்கள். அவன் திரும்பிவாராததால் ஜனங்கள் அவன் இறந்துவிட்டதாகவே கருதினார்கள். துந்துகாரி பிசாசாகிப் பத்து திக்கிலும் அலைந்தான். எங்கும் புகலிடம் காணவில்லை. கோகர்ணனுக்குச் சமாசாரம் எட்டியது. அவன் சகோதரனுக்கு கயையில் சிராத்தம் செய்தான். பின்பு ஊருக்குத் திரும்பினான். வீட்டில் தூங்கும்போது ஒரு பிசாசு தோன்றி உரக்க அழ ஆரம்பித்தது. ஆனால் அதனால் ஏதும் பேச முடியவில்லை. கோகர்ணன் கையில் ஜலமெடுத்து அதன்மேல் தெளிக்கவே, அது 'நான் உன் சகோதரன் துந்துகாரி. வேசிகள் என்னைக் கொன்று விட்டார்கள். நான் பிசாசாக அலைகிறேன். எனக்குக் காற்றுத்தான் ஆகாரம். என்னை இந்த நிலையிலிருந்து விடுவிக்க வேண்டும்' என்று கதறிற்று. கோகர்ணன், 'உனக்கு கயையில் பிண்டம் போட்டேன். அது ஏன் உன்னை விடுவிக்கவில்லை ? எனக்கு வேறு உபாயம் தெரியவில்லை' என்றான். பின்பு சாஸ்திர மறிந்த பெரியவர்களிடம் விசாரித்து அவர்கள் உபதேசப்படி சூரியனை உபாசித்தான். சூரியபகவான் 'ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹத்தால் விடுதலை ஏற்படும்' என்று கூறியருளினார்.

கோகர்ணன் தகுந்த ஏற்பாடு செய்து ஊராரைக் கூட்டித் தானே பாகவதப் பிரவசனம் செய்யலானான். துந்துகாரியின் பிசாசும் அங்கு வந்து ஏழு கணுவுள்ள ஒரு மூங்கிலில் காற்று வடிவில் புகுந்துகொண்டு நிகழ்ச்சியைக் கவலையுடன் கவனிக்க ஆரம்பித்தது. ஒரு நாள் கதை முடிந்ததும் மூங்கிலின் கணுக்களில் ஒன்று வெடித்தது. இரண்டாம் நாள் இரண்டாவது கணு வெடித்தது. ஏழு நாட்களில் ஏழு கணுக்களும் வெடித்தன. அப்போது மஞ்சள் ஆடையும், துளசிமாலையும், கிரீடகுண்டலங்களும் அணிந்து நீலமேக வண்ணனான ஒரு திவ்ய புருஷன் அங்கு தோன்றி கோகர்ணனை வணங்கித் தான் துந்துகாரி என்று தெரிவித்து, 'உன்னால் நான் விடுவிக்கப்பட்டேன்.

अथ ते संप्रवक्ष्यामः सप्ताहश्रवणे विधिम् ।
सहायै-र्वसुभि-श्चैव प्रायः साध्यो विधिः स्मृतः ॥ ८६ ॥

तीर्थे वापि वने वापि गृहे वा श्रवणं मतम् ।
विशाला वसुधा यत्र कर्तव्यं तत्कथास्थलम् ॥ ८७ ॥

कथाविघ्न-विघाताय गणनाथं प्रपूजयेत् ।
पितॄन् संतर्प्य शुद्ध्यर्थं प्रायश्चित्तं समाचरेत् ॥ ८८ ॥

कृष्णमुद्दिश्य मन्त्रेण चरेत्पूजाविधिं क्रमात् ।
प्रदक्षिणनमस्कारान् पूजान्ते स्तुतिमाचरेत् ॥ ८९ ॥

श्रीमद्भागवतस्यापि ततः पूजा प्रयत्नतः ।
कर्तव्या विधिना प्रीत्या धूपदीपसमन्विता ॥ ९० ॥

ஸப்தாஹ சிரவணத்தால் இருதயத்தின் முடிச்சு அவிழ்கின்றது. எல்லா ஸந்தேகங்களும் சேதிக்கப்படுகின்றன. கர்மம் துலேகின்றது என்பதில் ஐயமில்லை' என்று கூறினன். அப்போதே எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கையில் ஒரு தேவ விமானம் வந்திறங்கி துந்துகாரியை அழைத்துச் சென்றது.

86. இனி ஸப்தாஹச்ரவண விதியைக் கூறுவோம். ஒத்துழைப்பவர்களின் உதவியாலும் திரவிய ஸஹாயத்தாலும் பெரும்பாலும் இவ்விதி ஸாதிக்கக் கூடியதாகும்.

87. புண்ணியக்ஷேத்திரத்திலோ, வனத்திலோ, வீட்டிலோ சிரவணம் செய்தல் ஸம்மதம். எங்கு இடம் விஸ்தாரமா யிருக்கிறதோ அங்கு கதைக்கு ஸ்தலம் அமைக்க வேண்டும்.

88. கதைக்கு இடையூறு ஏற்படாம லிருக்க கணபதியைப் பூஜிக்க வேண்டும். பித்ருக்களைத் திருப்தி செய்வித்துப் பரிசுத்திக்காகப் பிராயச்சித்தத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

89. ஸ்ரீகிருஷ்ணனை தியானித்து முறைப்படி மந்திர பூர்வமாகப் பூஜித்துப் பூஜையின் முடிவில் பிரதக்ஷிண நமஸ்காரமும் ஸ்தோத்திரமும் செய்ய வேண்டும்.

90. ஸ்ரீமத் பாகவதத்திற்கும் ஊக்கத்துடனும் பிரீதியுடனும் விதிப்படி தூபம் தீபம் முதலியவற்றுடன் பூஜை செய்யவேண்டும்.

श्रीमद्भागवताख्योऽयं प्रत्यक्षः कृष्ण एव हि।
स्वीकृतोऽसि मया नाथ मुक्त्यर्थं भवसागरे ॥ ९१ ॥

मनोरथो मदीयोऽयं सकलः सर्वथा त्वया।
निर्विघ्नेनैव कर्तव्यो दासोऽहं तव केशव ॥ ९२ ॥

एवं दीनवचः प्रोच्य वक्तारं चाथ पूजयेत्।
संभूष्य वस्त्रभूषाभिः पूजान्ते तं च संस्तवेत् ॥ ९३ ॥

शुकरूप प्रबोधज्ञ सर्वशास्त्र-विशारद।
एतत्कथा-प्रकाशेन मदज्ञानं विनाशय ॥ ९४ ॥

तदग्रे नियमः पश्चात्कर्तव्यः श्रेयसे मुदा।
सप्तरात्रं यथा शक्त्या धारणीयः स एव हि ॥ ९५ ॥

लोकवित्त-धनागार-पुत्रचिन्तां व्युदस्य च।
कथाचित्तः शुद्धमतिः स लभेत्फलमुत्तमम् ॥ ९६ ॥

91-93. ஸ்ரீமத் பாகவதம் என்ற இது பிரத்தியக்ஷமான கிருஷ்ணனே யன்றோ? 'பிறவிக் கடலிலிருந்து முக்தி பெறுவதற்காக உன்னை நான் நாதனாக ஏற்றுக்கொண்டிருக்கின்றேன். என்னுடைய மனோரதங்களெல்லாம் எப்போதும் உன்னால் தடையின்றிப் பூர்த்தி செய்விக்கப்பட வேண்டும். கேசவா! நான் உன் அடிமை' என்றிவ்வாறு பணிவான மொழிகளால் பிரார்த்தித்துப் பின்பு பிரவசனம் செய்பவரையும் வஸ்திரங்களாலும் பூஷணங்களாலும் அலங்கரித்துப் பூஜித்து அதன் முடிவில் அவரைப் பின்வருமாறு துதிக்கவேண்டும்.

94. 'சுகப்பிரம்மஸ்வரூபியே! போதிக்க வல்லவரே! ஸர்வசாஸ்திர விசாரதரே! இந்தக் கதையின் பிரகாசத்தால் என்னுடைய அக்ஞானத்தைப் போக்கி யருளும்.'

95. அதற்குமேல் உயர் நலத்தைக் கருதி மகிழ்ச்சி பொங்கும் மனத்துடன் சில நியமங்களைக் கைக்கொள்ளவேண்டும். ஏழு நாட்களும் சக்திக்குத் தக்கபடி நியமங்களைத் தாங்கவேண்டும்.

96. உலகம், உடைமை, பொருள், வீடு, பிள்ளைகள் முதலியவற்றைப் பற்றிய சிந்தையை விட்டுக் கதையிலேயே சித்தத்தை வைத்துப் பரிசுத்த மனத்தினனாய் இருப்பவனே உத்தமப்பலனை அடைவான்.

आसूर्योदय-मारभ्य सार्धत्रिप्रहरान्तकम् ।
वाचनीया कथा सम्यग्धीरकण्ठं सुधीमता ॥ ९७ ॥

कथा-विरामः कर्तव्यो मध्याह्ने घटिकाद्वयम् ।
तत्कथामनु कार्यं वै कीर्तनं वैष्णवैस्तदा ॥ ९८ ॥

मलमूत्रजयार्थं हि लघ्वाहारः सुखावहः ।
हविष्यान्नेन कर्तव्यो ह्येकवारं कथार्थिना ॥ ९९ ॥

ब्रह्मचर्य-मधः-सुप्तिः पत्रावल्यां च भोजनम् ।
कथासमाप्तौ भुक्तिं च कुर्यान्नित्यं कथाव्रती ॥ १०० ॥

सत्यं शौचं दयां मौन-मार्जवं विनयं तथा ।
उदारमानसं तद्वदेवं कुर्यात्कथाव्रती ॥ १०१ ॥

दरिद्रश्च क्षयी रोगी निर्भाग्यः पापकर्मवान् ।
अनपत्यो मोक्षकामः श्रृणुयाच्च कथामिमाम् ॥ १०२ ॥

97-98. சூரியோதயம் முதல் மூன்றரை ஜாமம் முடிய புத்திமானால் நன்றாக கம்பீரமான குரலில் கதாப் பிரவசனம் செய்யப்பட வேண்டும். மத்யான்னத்தில் இரண்டு நாழிகைப் பொழுது கதையில் இடைக்கால ஒய்வு இருக்கவேண்டும். அப்போது கதைக்குப்பின் தொடர்ந்து விஷ்ணுபக்தர்களால் கீர்த்தனம் செய்யப்பட வேண்டும்.

99. கதையில் நோக்க முடையவர்களால் மலம் மூத்திரம் முதலியவற்றை ஜயிப்பதற்காக சுகமானதும் லகுவானதுமான ஆகாரம் (தேவர்களுக்கு அர்ப்பணம் செய்யும்) ஹவிஷ்ய அன்னத்தால் ஒரே தடவையாக ஏற்படுத்திக்கொள்ளப்பட வேண்டும்.

100. பிரம்மசரியம், தரையில் உறக்கம், இலையில் போஜனம், அதுவும் கதை முடிவில் என்று கதையில் விரதம் பூண்டவன் தினந்தோறும் அனுஷ்டிக்க வேண்டும்.

101. மேலும் ஸத்தியம், பரிசுத்தம், தயை, மௌனம், நேர்மை, விநயம் தாராள குணம் ஆகியவற்றைக் கதையில் விரதம் பூண்டவன் கைக்கொள்ள வேண்டும்.

102. தரித்திரன், இழிவடைந்தவன், நோய்வாய்ப் பட்டவன், பாக்கிய மில்லாதவன், பாவஞ் செய்தவன், பிள்ளை யில்லாதவன், மோக்ஷத்தை விரும்பியவன் ஆகிய எல்லோரும் இக்கதையைக் கேட்கட்டும்.

एवं नगाहयज्ञेऽस्मिन् समाप्ते श्रोतृभिस्तदा ।
पुस्तकस्य च वक्तुश्च पूजा कार्यातिभक्तितः ॥ १०३ ॥

जयशब्दं नमः शब्दं शंखशब्दं च कारयेत् ।
विप्रेभ्यो याचकेभ्यश्च वित्तमन्नं च दीयताम् ॥ १०४ ॥

विरक्तश्चेद्भवेच्छ्रोता गीता वाच्या परेऽहनि ।
गृहस्थश्चेत्तदा होमः कर्तव्यः कर्मशान्तये ॥ १०५ ॥

प्रतिश्लोकं तु जुहुयाद्विधिना दशमस्य च ।
पायसं मधुसर्पिश्च तिलान्नादिकसंयुतम् ॥ १०६ ॥

अथवा हवनं कुर्याद्गायत्र्या सुसमाहितः ।
तन्मयत्वात्पुराणस्य परमस्य च तत्त्वतः ॥ १०७ ॥

होमाशक्तौ बुधो हौम्यं दद्यात्तत्फलसिद्धये ।
नानाच्छिद्र-निरोधार्थं न्यूनताधिकतानयोः ॥ १०८ ॥

---

103. இந்த ஸப்தாஹ யக்ஞம் இவ்வாறு பூர்த்தி யடையும்போது கதை கேட்டவர்களால் பாகவத புஸ்தகமும் பாகவதரும் பக்தியுடன் பூஜிக்கப்பட வேண்டும்.

104. ஜயகோஷமும் நமஸ்கார சப்தமும் சங்கநாதமும் எங்கும் ஒலிக்கும்படி செய்யவேண்டும். பிராம்மணர்களுக்கும் யாசகர்களுக்கும் திரவியதானமும் அன்ன தானமும் செய்யப்பட வேண்டும்.

105. கதை கேட்டவர் உலகப்பற்று அற்றவரானுல் கதை பூர்த்தியான மறு தினம் கீதாபாராயணம் செய்யவேண்டும். கிருஹஸ்தரானுல் அப்போது கர்மசாந்திக்காக ஹோமம் செய்யவேண்டும்.

106. முறைப்படி பத்தாவது ஸ்கந்தத்திலுள்ள ஒவ்வொரு சுலோகத்தாலும் பாயஸம், தேன், நெய், எள் அன்னம் முதலியவற்றுடன் கூடிய ஆஹுதியைச் செய்ய வேண்டும்.

107. அல்லது அலையாத மனத்துடன் காயத்ரியால் ஹோமம் செய்யவேண்டும். ஏனெனில் பரம்பொருளும் புராணமும் உண்மையில் அதன்வடிவே யாகும்.

108. ஹோமம் செய்யச் சக்தி இல்லாவிட்டால் புத்திசாலியானவன் அந்தப் பலம் சித்திக்கவும் குறைதல் கூடுதல் தவறு ஆகியவற்றிற்குப் பிராயச்சித்தமாகவும் ஹோம திரவியத்தை தானம் செய்யவேண்டும்.

दोषयोः प्रशमार्थं च पठेन्नामसहस्रकम् ।
तेन स्यात् सफलं सर्वं नास्त्यस्मादधिकं यतः ॥ १०९ ॥

द्वादश ब्राह्मणान् पश्चाद्भोजयेन्मधुपायसैः ।
दद्यात्सुवर्णं धेनुं च व्रतपूर्णत्वहेतवे ॥ ११० ॥

फलदं स्यात्पुराणं तु श्रीमद्भागवतं शुभम् ।
धर्मकामार्थमोक्षाणां साधनं स्यान्न संशयः ॥ १११ ॥

सूत उवाच—

इत्युक्त्वा ते महात्मानः प्रोचुर्भागवतीं कथाम् ।
सर्वपापहरां पुण्यां भुक्तिमुक्ति-प्रदायिनीम् ॥ ११२ ॥

शृण्वतां सर्वभूतानां सप्ताहं नियतात्मनाम् ।
यथाविधि ततो देवं तुष्टुवुः पुरुषोत्तमम् ॥ ११३ ॥

तदन्ते ज्ञानवैराग्य-भक्तिनां पुष्टता परा ।
तारुण्यं परमं चाभूत्सर्वभूतमनोहरम् ॥ ११४ ॥

---

109. தோஷங்களின் சாந்தியின் பொருட்டு விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணமும் செய்யவேண்டும். அதனால் எல்லாம் ஸபல மாகும். அதைவிடச் சிறந்தது எதுவுமில்லை.

110. அதற்குப் பின் இனிமையான பாயஸத்துடன் பன்னிரண்டு பிராம்மணர்களுக்கு போஜனம் செய்விக்க வேண்டும். விரதம் பூர்ணமெய்த ஸ்வர்ணதானமும் கோதானமும் செய்யவேண்டும்.

111. மங்களமான ஸ்ரீமத் பாகவதபுராணம் (விரும்பிய) பயனை அளிப்பதாகும். அறம் பொருள் இன்பம் வீடு ஆகியவற்றிற்கு ஸாதனமாகும் என்பதில் ஐயமில்லை.

ஸூதர் கூறியது—

112-13. அம் மகாத்மாக்கள் இங்ஙனம் கூறிவிட்டு எல்லாப் பாவத்தையும் போக்குவதும், புண்ணியமானதும், போகத்தையும் முக்தியையும் அளிப்பதும் ஆகிய பாகவதக் கதையை நியமத்துடன் கேட்ட எல்லா ஜீவராசிகளுக்கும் முறைப்படி ஏழு நாட்கள் பிரவசனம் செய்தார்கள். பிறகு புருஷோத்தம தேவனை ஸ்தோத்ரம் செய்தார்கள்.

114. அதன் முடிவில் ஞானம் வைராக்கியம் பக்தி ஆகியோர்க்குச் சிறந்த புஷ்டியும் எல்லோருடைய மனதிற்கும் இன்ப மளிக்கும் உத்தமமான யௌவனப் பருவமும் உண்டாயின.

नारदश्च कृतार्थोऽभूत्सिद्धे स्वीये मनोरथे।
पुलकीकृतसर्वांगः परमानन्दसंभृतः ॥ ११५ ॥

एवं कथां समाकर्ण्य नारदो भगवत्प्रियः।
प्रेमगद्गदया वाचा तानुवाच कृतांजलिः ॥ ११६ ॥

नारद उवाच—

धन्योऽस्म्यनुगृहीतोऽस्मि भवद्भिः करुणापरैः।
अद्य मे भगवाँल्लब्धः सर्वपापहरो हरिः ॥ ११७ ॥

श्रवणं सर्वधर्मेभ्यो वरं मन्ये तपोधनाः।
वैकुण्ठस्थो यतः कृष्णः श्रवणाद्यस्य लभ्यते ॥ ११८ ॥

सूत उवाच—

एवं ब्रुवति वै तत्र नारदे वैष्णवोत्तमे।
परिभ्रमन् समायातः शुको योगेश्वरस्तदा ॥ ११९ ॥

---

115. தன்னுடைய மனோரதம் நிறைவேறிய நாரதரும் கிருதார்த்தரானார். உத்தம மகிழ்ச்சி பொங்கும் மனத்தினராகவும் உடலில் மயிர்க்கூச்சுடையவராகவும் ஆனார்.

116. பகவத் பிரியரான நாரதர் இவ்வாறு கதையைக் கேட்டபின் அன்பினால் நாக்கு தழுதழுக்க குமார ரிஷிகளை நோக்கிக் கை கூப்பிக்கொண்டு பின்வருமாறு சொன்னார்.

நாரதர் கூறியது—

117. கருணை மிக்க தேவரீர்களால் அனுக்கிரஹிக்கப் பெற்று நான் அதிர்ஷ்ட சாலி யானேன். எல்லாப் பாவங்களையும் போக்கும் பகவான் ஹரியானவர் இன்று என்னால் அடையப் பட்டார்.

118. தவச் செல்வர்களே! வைகுண்ட வாசியான கிருஷ்ணன் எந்த சிரவணத்தால் அடையப் படுகிறாரோ அந்த (பாகவத) சிரவணம் தர்மங்கள் அனைத்துள்ளும் சிறந்த தென்று கருதுகின்றேன்.

ஸூதர் கூறியது—

119. விஷ்ணு பக்தர்களில் சிறந்தவரான நாரதர் இங்ஙனம் கூறுகையில் லோக ஸஞ்சாரம் செய்யும் யோகேசுவரராகிய சுகர் அங்கு எழுந்தருளினார்.

श्रीशुक उवाच—

श्रीमद्भागवतं पुराणतिलकं यद्वैष्णवानां धनं
यस्मिन् पारमहंस्यमेव-ममलं ज्ञानं परं गीयते ।
यत्र ज्ञान-विराग-भक्ति-सहितं नैष्कर्म्य-माविष्कृतं
तच्छृण्वन् प्रपठन् विचारण-परो भक्त्या विमुच्येन्नरः ॥ १२० ॥

सूत उवाच—

एवं ब्रुवाणे सति बादरायणौ मध्ये सभायां हरिराविरासीत् ।
प्रह्लाद-बल्युद्धव-फाल्गुनादिभि-र्वृतः सुरर्षि-स्तमपूजयच्च तान् ॥१२१॥

दृष्ट्वा प्रसन्नं महदासने हरिं ते चक्रिरे कीर्तन-मग्रतस्तदा ।
भवो भवान्या कमलासनस्तु तत्रागमत्कीर्तन-दर्शनाय ॥ १२२ ॥

प्रह्लादस्तालधारी तरलगतितया चोद्धवः कांस्यधारी
वीणाधारी सुरर्षिः स्वरकुशलतया रागकर्तार्जुनोऽभूत् ।
इन्द्रोऽवादीन्मृदंगं जयजयसुकराः कीर्तने ते कुमारा
यत्राग्रे भाववक्ता सरस-रचनया व्यासपुत्रो बभूव ॥ १२३ ॥

---

120. ஸ்ரீமத் பாகவதம் புராணங்களுட் சிறந்தது. விஷ்ணுபக்தர்களின் செல்வமாய் விளங்குவது. பரமஹம்ஸர்கள் போற்றும் பரிசுத்தமான பரஞானம் அதில் பாடப்படுகிறது. ஞானம் வைராக்கியம் பக்தியுடன் கூடிய நைஷ்கர்ம்யம் தெளிவாக்கப் படுகிறது. அதை பக்தியுடன் கேட்டாலும் படித்தாலும் ஆராய்ந்தாலும் மானிடன் முக்தி எய்துவான்.

ஸூதர் கூறியது—

121. சுகர் இங்ஙனம் கூறிக்கொண் டிருக்கையில் ஸபை மத்தியில் பிரஹ்லாதர், பலி, உத்தவர், அர்ஜுனன் முதலியோரால் சூழப்பெற்றவராய் ஹரி ஆவிர்ப்பவித்தார். தேவரிஷி நாரதர் பகவானையும் மற்றும் எல்லோரையும் பூஜித்தார்.

122. உயர்ந்த ஆஸனத்தில் எழுந்தருளிய ஹரியைக் கண்டு களித்து அவர்கள் அவர் முன்னிலையில் அப்போது கீர்த்தனம் செய்தார்கள். பவானியுடன் பரமசிவனும் பிரம்மதேவனும் கீர்த்தன வைபவத்தைக் காணவந்தனர்.

123. பிரஹ்லாதர் தாளம் போடுபவராகவும் உத்தவர் சேகண்டியை ஒலிப்பவராகவும், தேவரிஷி நாரதர் வீணை வாசிப்பவராகவும், அர்ஜுனன், இனிய குரலில் ராகம் பாடுபவனாகவும் விளங்கினார்கள். இந்திரன் மிருதங்கம் வாசித்தான். குமார ரிஷிகள் கீர்த்தனத்தைக் கேட்டு 'ஜய ஜய' என்று முழங்கினார்கள். வியாஸபுத்திரராகிய சுகர் அவர்கள் முன்னிலையில் கீர்த்தனையின் பாவனையை எல்லோரும் ரசிக்கும்படி விளக்கிக் கூறுபவராக விளங்கினார்.

ननर्त मध्ये त्रिकमेव तत्र भक्त्यादिकानां नटवत्सुतेजसाम् ।
अलौकिकं कीर्तनमेत-दीक्ष्य हरिः प्रसन्नोऽपि वचोऽब्रवीत्तत् ॥ १२४ ॥

मत्तो वरं भाववृताद् वृणुध्वं प्रीतः कथाकीर्तनतोऽस्मि साम्प्रतम ।
श्रुत्वेति तद्वाक्य-मतिप्रसन्नाः प्रेमार्द्रचित्ता हरिमूचिरे ते ॥ १२५ ॥

नगाहगाथासु च सर्वभक्तै-रेभिस्त्वया भाव्यमिति प्रयत्नात् ।
मनोरथोऽयं परिपूरणीय-स्तथेति चोक्त्वान्तरधीयताच्युतः ॥ १२६ ॥

ततोऽनमत्तच्चरणेषु नारद-स्तथा शुकादीनपि तापसांश्च ।
अथ प्रहृष्टाः परिनष्टमोहाः सर्वे ययुः पीतकथामृतास्ते ॥ १२७ ॥

भक्तिः सुताभ्यां सह रक्षिता सा शास्त्रे स्वकीयेपि तदा शुकेन ।
अतो हरि-र्भागवतस्य सेवना-च्चित्तं समायाति हि वैष्णवानाम्
॥ १२८ ॥

---

124. ஒளி பொருந்திய பக்தி ஞான வைராக்கியமாகிய மூவரும் நடிகர்களைப் போல் அங்கு நர்த்தனம் செய்தார்கள். உலக இயல்பிற்கு மேம்பட்ட இந்தக் கீர்த்தனத்தைப் பார்த்துச் சந்தோஷமடைந்த ஹரியானவர் பின் வருமாறு கூறினார்.

125. 'கதையாலும் கீர்த்தனத்தாலும் இப்போது ப்ரீதி யடைந்து வேண்டிய வரத்தைக் கொடுக்கச் சித்தமா யிருக்கும் என்னிடம் வரத்தைக் கேட்டுக் கொள்ளுங்கள்.' அவ்வார்த்தையைக் கேட்டு மகிழ்ச்சி பொங்கியவர்களும் அன்பினால் உள்ளம் கசிந்தவர்களுமாகிய அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.

126. 'ஸப்தாஹக் கதையால் பகவான் ப்ரீதியடைய வேண்டும் என்பதே இந்த பக்தர்கள் எல்லோருடைய விருப்பமு மாகும். அந்த மனோரதம் பரிபூர்ணமாக வேண்டும்.' 'அங்ஙனமே ஆகுக' என்று கூறி அச்சுதர் (அந்தர்தானமடைந்தார்) அங்கேயே மறைந் தருளினார்.

127. நாரதர் பகவானுடைய திருவடிகளில் வணங்கி அவ்வாறே சுகர் முதலிய தபஸ்விகளையும் வணங்கினார். கதையாகிற அமிருதத்தைப் பானம் செய்து மகிழ்ச்சி யடைந்தவர்களாகவும் மோஹம் சுழன்றவர்களாகவும் எல்லோரும் அங்கிருந்து சென்றனர்.

128. சுகருடைய சாஸ்திரமாகிய பாகவதத்தில் பக்தி தன் குமாரர்களுடன் ரக்ஷித்து வைக்கப்பட்டிருக்கிறாள், அதனால் பாகவத சேவையால் ஹரியானவர் விஷ்ணு பக்தர்களின் சித்தத்தில் எழுந்தருளுகிறார்.

दारिद्र्य-दुःख-ज्वरदाहितानां मायापिशाची-परिमर्दितानाम् ।
संसारसिन्धौ परिपातितानां क्षेमाय वै भागवतं प्रगर्जति ॥ १२९ ॥

असारे संसारे विषयविषसंगाकुलधियः
क्षणार्धं क्षेमार्थं पिबत शुकगाथातुलसुधाम् ।
किमर्थं व्यर्थं भो व्रजत कुपथे कुत्सितकथे
परीक्षित्साक्षी यच्छ्रवणगत-मुक्त्युक्तिकथने ॥ १३० ॥

इति च परमगुह्यं सर्वसिद्धान्तसिद्धं
सपदि निगदितं ते शास्त्रपुंजं विलोक्य ।
जगति शुककथातो निर्मलं नास्ति किंचित्
पिब परसुखहेतो-र्द्वादशस्कन्धसारम् ॥ १३१ ॥

समाप्तमिदं श्रीमद्भागवत-
माहात्म्यम् ॥
॥ हरिः ओं तत्सत् ॥

---

129. ஏழ்மை, துக்கம் ஆகிய தீயால் பொசுக்கப்பட்டவர்களும், மாயை என்னும் பிசாசினால் துன்புறுத்தப் பட்டவர்களும், பிறவிக் கடலில் வீழ்த்தப் பட்டவர்களும் ஆகியவர்களின் நன்மைக்காக பாகவதம் கர்ஜிக்கிறது.

130. ஸாரமில்லாத ஸம்ஸாரத்தில் விஷயமாகிற விஷத்தின் கூட்டுறவால் புத்தி கலங்கிய மக்களே! அரைக் கணமாவது உங்கள் க்ஷேமத்திற்காக சுகருளிய ஒப்புயர்வற்ற கதாமிருத்தைப் பானம் செய்யுங்கள். கெட்ட மார்க்கத்தில், அற்பமான கதைகளில் எதற்காக வீணில் அலைகிறீர்கள்? கேட்ட மாத்திரத்தில் முக்தியளிக்கும் இக்கதை என்பதற்கு பரீக்ஷித்தே ஸாக்ஷி.

131. இங்ஙனம் பரமரகசியமும் ஸகல ஸித்தாந்தங்களாலும் ஸித்திப்பதும் ஆகிய சுகர் கூறிய கதை விரைவில் உமக்குக் கூறப்பட்டது. சாஸ்திரக் கூட்டத்தை நோக்குமிடத்து இவ்வுலகில் இதைக் காட்டிலும் நிர்மலமானது வேறெதுவுமில்லை. பரம சுகத்திற்குக் காரணமான பன்னிரண்டு ஸ்கந்த வடிவான பாகவதஸாரத்தைப் பருகுங்கள்.

இங்ஙனம் ஸ்ரீமத்பாகவத மாஹாத்மியம்
ஸம்பூர்ணம்
ஹரிः ஓம் தத் ஸத்.

அனுபந்தம் 2

பாகவத சுலோகங்களின் முக்கியமான அடிகளின் அகராதி

अ

अकामः सर्वकामो वा	2 3 10
अकिंचनोऽपि सन्तुष्टो	10 52 32
अकोविदः कोविदवाद	5 11 1
अच्युतवेषभूषणः	10 47 2
अग्निरभ्यागतोमूर्तिः	6 7 30
अजातपक्षा इव मातरं	6 11 26
अज्ञानसंज्ञो भवबन्धमोक्षौ	10 14 26
अज्ञानाद्थ वाज्ञानात्	6 2 18
अटत्युन्मत्तवन्नग्नो	4 2 14
अतो भजिष्ये समयेन	3 22 19
अतोऽहमस्य हृदयं प्रवेक्ष्य	8 19 9
अत्र सर्गो विसर्गश्च	2 10 1
अत्रैव नरकः स्वर्गः	3 30 29
अथ सर्वगुणोपेतः	10 3 1
अदृष्टाश्रुतपूर्वत्वात्	7 9 2
अधना अपि ते धन्याः	4 22 10
अधनोऽयं धनं प्राप्य	10 81 20
अधिकं योऽभिमन्येत	7 14 8
अध्रुवेण ध्रुवं गताः	10 72 21
अनाहुता अप्यभियान्ति	4 3 13
अनिच्छन्त्यदां बालां	4 2 13
अनुग्रहं मन्यमानः	1 6 10
अन्तकाले तु पुरुषः	2 1 15
अन्तः पुरुषरूपेण	3 26 18
अन्तर्बहिश्च लोकांस्त्रीन्	1 6 32
अपक्वयोगिनश्चित्तं	10 20 14
अपि स्मरसि चात्मानं	4 28 53
अयं स्वस्त्ययनः पन्थाः	10 84 37
अरणं तमीमहि	8 2 33
अरणं यत्साक्षात्	5 10 19
अर्चादावर्चयेद्यो मां	3 29 9
अर्चादावर्चयेत्तावत्	3 29 25
अर्थेन्द्रियाराम	4 22 23
अवतारा ह्यसंख्येयाः	1 3 26
असंकल्पाज्जयेत्कामं	7 15 22
अस्त्येवमंग भगवान्	5 6 18
अस्पष्टवर्त्मनां पुंसां	10 60 13
अहमुच्चावचैर्द्रव्यैः	3 29 24
अहं पुरा भरतो नाम	5 12 14
अहं पूर्वमहं पूर्वं	8 8 38
अहं ब्रह्मा च शर्वश्च	4 7 50
अहं भक्तपराधीनो	9 4 63
अहं भवान् न चान्यस्त्वं	4 28 62
अहं सर्वेषु भूतेषु	3 29 21
अहो असाधो साधूनां	6 5 36
अहो भाग्यमहो भाग्यं	10 14 32
अहो यूयं स्म पूर्णार्थाः	10 47 23

आ

आचार्यो ब्रह्मणो मूर्तिः	6 7 29
आत्मनश्च परस्यापि	3 29 26
आत्मवत् पुत्रवत् पश्येत्	7 14 9
आत्मारामं कथं द्वेष्टि	4 2 2
आत्मारामाश्च मुनयो	1 7 10
आत्मा ह्येकः स्वयंज्योतिः	10 85 24
आरुह्य कृच्छ्रेण परं	10 2 33
आविरासीद्यथा प्राच्या	10 3 8
आसामहो चरणरेणु	10 47 61
आसिंचदंब वत्सेति	3 22 25
आसीनः पर्यटन्नश्नन्	7 4 38
आसीनः संविशंस्तिष्ठन्	10 2 24
आस्ते योगं समास्थाय	3 33 35
आहूत इव मे शीघ्रं	1 6 34

ई

ईश्वरो जीवकलया	3 29 34

उ

उद्धवो बुद्धिसत्तमः	10 46 1
उभयायिन-मात्मानं	10 13 18

ए

एकं स्वयं ज्योतिरनन्तं	10	70	5
एकेन पाणिना यो वै	10	22	21
एतन्नानावताराणां	1	3	5
एतदर्थं हि नौ जन्म	10	50	14
एतावज्जन्मसाफल्यं	10	22	37
एतावान् हि प्रभोरर्थो	8	7	38
एते चांशांशकलाः	1	3	28
एवमेव खलु महदपचार	5	9	19
एष दैनंदिनः सर्गो	3	11	25
एष वै देवताः सर्वाः	10	74	19
एषा घोरतमा वेला	3	14	22
एषा तवानुजा बाला	10	1	45

ओ - औ

ओं नमो भगवते तस्मै	8	3	2
औपस्थ्य-जैह्व्यकार्पण्य	7	15	18

क

कण्डूयनेन करयोरिव	7	9	45
कथमन्यांस्तु गोपायेत्	1	13	45.
कथं तं विस्मरामहे	10	47	51
कथं सुतायाः पितृगेह	4	3	13
कदपत्यं वरं मन्ये	4	13	46
कर्तृत्वं करणत्वं च	3	26	26
कर्णौ पिधाय निरयाद्	4	4	17
कर्मणा कर्मनिर्हारो यथा	10	84	29
कलौ जनिष्यमाणानां	9	24	61
कस्तं चराचरगुरुं	4	2	2
कात्यायनि महामाये	10	22	4
कामस्तु वासुदेवांशो	10	55	1
कार्यकारण-कर्तृत्वे	3	26	8
काष्ठा यथाऽऽनन्दकरं	10	2	1
किं किं न विस्मरन्तीह	10	14	44
किं दुरापादनं तेषां	3	23	42
किं दुर्मर्षं मुमुक्षूणां	10	72	19
किं दुस्सहं नु साधूनां	10	1	58
किं पुनः श्रद्धया भक्त्या	10	6	36
किं ब्रह्मजन्मभिः	10	47	58
किमनेन कृतं पुण्यं	10	80	25
किं मयाचरितं भद्रं	10	38	3
किं मया हतया मन्द	10	4	12
कुरुतेऽर्चा विडंबनं	3	29	31
कुलदेवियात्रा	10	52	42
कृष्ण कृष्ण महायोगिन्	10	49	11
कृष्णः पादावनेजने	10	75	5
कृष्णस्यासीत् सखा कश्चित्	10	80	6
कृष्णस्तु भगवान् स्वयं	1	3	26
कृष्णाय वासुदेवाय देवकी	1	8	21
कृष्णाय वासुदेवाय हरये	10	73	16
केचित् स्वदेहान्तर्हृदय	2	2	8
कौमार आचरेत् प्राज्ञः	7	6	1
क्रीणीहि भोः फलानीति	10	11	10
क्रूरस्त्वमक्रूर	10	39	21
क्वचाहं कितवः पापो	6	2	34
क्वासौ यदिह सर्वत्र	7	8	13
क्वाहं दरिद्रः पापीयान्	10	81	16
क्वाहं रजः प्रभव ईश	7	9	96
क्षुद्राशा भूरिकर्माणो	10	23	9
क्षेत्रज्ञाय नमस्तुभ्यं	8	3	13

ख

खगा मृगाः पापजीवाः	7	7	54
खट्वांगो नाम राजर्षिः	2	1	13

ग

गाङ्गं हित्वा यथाऽन्यान्	10	84	34
गावश्च कृष्णमुखनिर्गत	10	2.	53
गिरः श्रुतायाः पुष्पिण्या	4	2	25
गुरुर्न स स्यात्	5	5	18
गुरोरनुग्रहेणैव	10	80	46
गृहाश्रमः किन्नु करोत्यवद्यं	5	1	17
गृहेषु कूट-धर्मेषु	4	2	22
गोप्यः कामात्	7	1	30
ग्रामान् पुरः पत्तनानि	4	18	31

छ

छन्दोभ्योऽन्यत्र न ब्रह्मन्	1	7	33

ज

जन्माद्यस्य यतो	1	1	1
जयति तेऽधिकं	10	13	1

जलं मत्वा स्थलेऽपतत् 10 75 37
जानन्त एव जानन्तु 10 14 38
जितं जितं ते जित 3 13 34
जीवन्नपि मृतो हि सः 3 23 56
ज्ञान - मज्ञाततत्त्वाय 4 12 50

त - थ

तत्रे गतोऽस्म्यरणमद्य 10 85 12
तदेव रम्यं रुचिरं नवं 12 12 49
तद्देहः परतः पोषोऽपि 3 33 28
तद्भूरि-भाग्य-मिह्जन्म 10 14 34
तन्तुकृन्तन यत्त्वं 6 5 43
तन्मनस्कास्तदालापाः 10 30 44
तपस्विनो दानपरा 2 4 17
तपः शौचं दया सत्यं 1 17 24
तपो विद्या च विप्राणां 9 4 70
तप्यन्ते लोकतापेन 8 7 44
तमद्भुत बालकमंबुजेक्षणं 10 3 9
तमवज्ञाय मां मर्त्यः 3 29 21
तमोद्वारं योषितां संगि 5 5 2
तव कथामृतं तप्तजीवनं 10 31 9
तं त्वा गताऽहं शरणं 3 25 11
तं द्व्यष्टवर्षं सुकुमारपाद 1 15 26
तयोर्विवाहो मैत्री च 10 60 15
तस्मात् केनाप्युपायेन 7 1 31
तस्मादेकेन मनसा 1 2 14
तस्माद्वैरानुबन्धेन 7 1 28
तस्मै नमः परेशाय 8 3 9
तां देव-मायामिव 10 53 55
तान्येव तेऽभिरूपाणि 3 24 31
तावद्रागादयस्तेनाः 10 14 36
तीर्थी कुर्वन्ति तीर्थानि 1 13 30
ते पुनन्त्युरुकालेन 10 48 31
त्रयाणामेकभावानां 4 7 54
त्रस्तोऽस्म्यहं 7 9 16
त्रिभुवनकमनं 1 9 33
त्रिरात्रान्ते त्रिरात्रान्ते 4 7 72
त्रैवर्गिकायास-विघात 6 11 23
त्वं नः सन्दर्शितो धात्रा 1 1 22
त्वं पर्यटन्नर्क इव त्रि 1 5 7
त्वं हि नः परमं चक्षुः 10 70 45
त्वयैव दत्तं पदमैन्द्रं 8 22 16

द

दर्शनादेव साधवः 10 48 31
दिवमस्पृशद्ध्वनिः 10 46 46
दुराराध्यं समाराध्य 10 48 11
दुर्गेति भद्रकालीति 10 2 11
दृष्ट्वानुयान्तं-मात्मज 1 4 5
देहं च नश्वरमवस्थितं 11 13 36
देहंभृतामियानर्थो 10 38 27
देशः कालः पृथग्द्रव्यं 10 23 47
दैवगुप्तं न बुबुधे 3 33 29
दैवतानि रुदन्तीव 1 14 20
दैवमप्यनृतं वक्ति 10 4 17
द्यूतं पानं स्त्रियः सूना 1 17 38
द्रौण्यस्त्र-विप्लुष्टमिदं 10 1 6
द्वादशैते विजानीमो 6 3 21
द्विषतः परकाये मां 3 29 23
द्वैते ध्रुवार्थ-विश्रंभं 6 15 26

ध

धर्मः कं शरणं गतः 1 1 22
धर्मः प्रोज्झितकैतवो 1 1 2
धर्मः स्वनुष्ठितः 1 2 8
धर्म्यं न्याय्यं सकरुणं 1 7 49
धर्मार्थमपि नेहेत 7 15 15
धिग्जन्मनस्त्रिवृद्विद्यां 10 23 39

न

न कामयेऽहं गतिमीश्वराणां 9 21 12
न खलु गोपिकानन्दनो 10 31 4
न जातु कामः कामानां 9 19 14
न तस्य कश्चिद्दयितः 6 17 22
न दानं न तपो नेज्या 7 7 52
न देवा मृच्छिलामयाः 10 48 31
न नाकपृष्ठं न च पारं 6 11 25
„ 10 16 37
न नु स्वार्थविमूढानां 10 23 44

न पश्यन्ती ब्राह्मणाय	10	53	31
नमः पतन्त्यात्मसमं	1	18	23
न भूयोर्हति शोचितुं	10	51	44
न मतप्रणीतं न परप्रणीतं	7	5	28
न मय्यावेशितधियां	10	22	28
नमः कृष्णाय शुद्धाय	10	49	13
नमः पंकजनाभाय	1	8	22
नमस्ते त्वांबिकाभीक्ष्णं	10	53	4
नमस्ते पुरुषं त्वाद्यं	1	8	18
नमः परमकल्याण	10	10	36
न माता न पिता तस्य	10	96	38
नमो द्विशीर्ष्णे द्विपदे	8	16	31
नमो महद्भ्योऽस्तु	5	13	23
न यद्वचश्चित्रपदं	1	5	10
न यष्टव्यं न दातव्यं	4	14	6
न योजयेत् कर्मसु	5	5	15
नरकस्थोऽपि देहं वै	3	30	5
नर्माण्युदाररुचिर	1	15	18
न लक्ष्यसे मूढदृशां	1	8	19
न वाग्विसर्गो जनताघ	12	12	51
नष्टे लोके द्विपरार्धा	10	3	25
न संरंभेण सिद्ध्यन्ति	8	6	24
न ह्यं मयानि तीर्थानि	10	48	31
न ह्यस्य जन्मनो हेतुः	9	24	57
नाधुनाप्यवमानं ते	4	8	27
नान्तर्बहि-र्दिवा नक्तं	7	3	36
नायं देहो देह-भाजां	5	5	2
नारायण-परा वेदाः	2	5	15
नारायणं नमस्कृत्य	1	2	4
नालं द्विजत्वं देवत्वं	7	7	51
नाविन्दतार्तिं परिकर्शि	4	23	20
निगमकल्पतरोर्गलितं	1	1	3
नित्योत्सवं न ततृपुः	9	24	65
निन्दां भगवतः शृण्वन्	10	74	40
निवृत्ततर्षै-रुपगीय	10	1	4
निष्किंचना वयं	10	60	14
निष्क्रामती निर्विशती	4	4	1
नूनं तपो यस्य न मन्यु	8	8	20
नूनं ह्यदृष्टनिष्ठोन	10	5	30
नेमं विरिंचो लभते	8	26	6
नेह यत्कर्म धर्माय	3	23	56
नोद्धवोऽण्वपि मन्न्यूनो	3	4	31
नैतत् परस्मा आख्येयं	8	17	20
नैमिशेऽनिमिषक्षेत्रे	1	1	4
नैव तुष्येऽर्चितोर्चायां	3	29	24
नैवातिदुःसहा क्षुन्मां	10	1	13
नैष्कर्म्यमच्युत-भाव	12	12	52

प - फ

पतन्त्यधोऽनादृतयुष्म	10	2	33
पतितः स्खलितो	6	2	15
परं सौख्यं हि नैराश्यं	10	47	47
पिबन्त इव चक्षुर्भ्यां	10	73	6
पिबन् वदन् वा विचरन्	10	44	39
पुत्रांश्च शिष्यांश्च	5	5	15
पुनः पुनः स्मारयन्ति	10	47	50
पुरुषं पुरुषसूक्तेन	10	1	20
पूर्णस्य करवाम किं	10	8	3
पौगण्डवयःश्रितौ	10	15	1
पौरोधसं हृष्यति	6	7	36
पौर्णमास्यां सिनीवाल्यां	4	12	49
प्रकृतिस्थोपि पुरुषो	3	27	1
प्रतिश्लोकमबद्धवत्यपि	1	5	11
प्रत्युद्गम-प्रश्रयणा	4	3	22
प्रमत्ताभिमुखं शश्वत्	4	8	45
प्रह्वाभिवादनाश्लेष	1	11	22
प्रागुदीचीं दिशं ययौ	3	33	33
प्रायश्चित्तमथो कथं	6	1	9
प्रायेण देवमुनयः स्वविमु	7	9	44
प्रायेणाल्पायुषः सभ्य	1	1	10
प्रायेण मुनयो राजन्	2	1	7
प्रियः सुहृद्वः खलु	7	10	49

ब

बदरीं प्रयाहीति	3	4	4
बिभ्रद्वेणुं जठरपटयोः	10	13	11
बृन्दावने किमपि गुल्म	10	47	61
ब्रह्मादयः सुरगणाः	7	9	8
ब्रह्मन् यमनुगृह्णामि	8	22	24

ब्रह्महिंसां हितं मेने	10	4	46
ब्रह्मेति परमात्मेति	1	2	11
ब्राह्ममुहूर्ते उत्थाय	10	70	4
ब्रूयुः स्निग्धस्य शिष्यस्य	1	1	8
भ			
भक्तिः परेशानुभवो	11	2	42
भक्तियोगो बहुविधो	3	29	7
भक्तेच्छोपात्तरूपाय	10	59	30
भगवान् भक्तभक्तिमान्	10	86	59
भजतोऽपि न वै केचित्	10	32	19
भण्यता-मन्यवार्ता	10	47	19
भयं द्वितीयाभिनिवेशतः	11	2	37
भयं प्रमत्तस्य वनेष्वपि	5	1	17
भवतीनां वियोगो मे	10	47	29
भवानीव भवं प्रभुं	3	23	1
भवत्सु कुशलप्रश्नः	4	22	14
भस्मन्येव जुहोति सः	3	29	22
भारतव्यपदेशेन	1	4	30
भावाद्वैतं क्रियाद्वैतं	7	15	62
भिक्षां भगवती साक्षात्	8	18	17
भिक्षुचर्यां चरन्ति	10	47	18
भिद्यते हृदयग्रन्थिः	1	2	21
भीमावर्जितं पिण्डं	1	13	22
भीरपि यद्बिभेति	1	8	31
भूतेषु बद्धवैरस्य	3	29	23
भोगेन पुण्यं कुशलेन पापं	7	10	13
भोगैः पुण्यक्षयं कुर्वन्	4	12	13
म			
मत्तं प्रमत्तमुन्मत्तं	1	7	36
मत्तोऽन्यः कोऽग्रभुक्	4	14	28
मन्दं मन्दं जलधराः	10	3	7
मनसः सन्निकर्षार्थं	10	47	34
मन्ये धनाभिजन	7	9	9
मल्लानामशनि-र्नृणां	10	43	17
मनुष्य-दृष्ट्या दुष्प्रज्ञा	10	23	11
मयैवोभयमाम्नातं	1	7	53
मय्यावेश्य मनः कृत्स्नं	10	47	36
महत्सेवां द्वारमाहुर्विमुक्तेः	5	5	2
महदतिक्रमः	10	4	46
महद्विचलनं नृणां	10	8	4
महान् मेऽनुग्रहः कृतः	10	47	27
मां प्रपन्नो जनः कश्चित्	10	51	44
मातृ भक्तिः परस्त्रीषु	4	16	17
मायाशिशुरंघ्रिपानः	3	33	4
मुक्तिं ददाति कर्हिचित्	5	6	18
मुक्तिर्हित्वान्यथा	2	10	6
मुक्तो हि तावद्बिभृयात्	5	1	16
मृत्योर्मूर्ध्नि पदं दत्वा	4	12	30
मृषागिरस्ताह्यसती	12	12	48
य			
यं प्रव्रजन्तमनुपेतं	1	2	2
यं ब्रह्मा वरुणेन्द्र	12	13	1
यं मन्यसे मातुलेयं	1	9	20
यः करोत्यन्तरोदरं	3	29	26
यः पञ्चवर्षो गुरुदार	4	12	42
यः पञ्चहायनो मात्रा	3	2	2
यः स्वानुभावमखिल	1	2	3
यत्कर्मभि-र्यत्तपसा	11	20	32
यत्र धर्मसुतो राजा	1	9	15
यथा गदं वीर्यतमं	6	2	19
यथा तरोर्मूलनिषेचनेन	4	31	14
यथा तत्संगिसंगतः	3	31	35
यथा दूरचरे प्रेष्ठे	10	47	35
यथाधनो लब्धधने विनष्टे	10	32	20
यथा पंकेन पंकांभः	1	8	52
यथा पुमान् न स्वांगेषु	4	7	53
यथार्भकः स्वप्रतिबिम्ब	10	33	17
यथा वैरानुबन्धेन	7	1	26
यथा हि स्कन्धशाखानां	8	5	49
यथा हि पुरुषो भारं	4	29	33
यथोल्मुका विस्फुलिंगा	3	28	40
यद्द्व्यक्षरं नाम	4	4	41
यदा यदेह धर्मस्य क्षयो	9	24	56
यदा देवेषु वेदेषु	7	4	27
यन्मैथुनादि गृहमेधि	7	9	45
ययोरात्मसमं वित्तं	10	60	15

यस्मिन् प्रतिश्लोकमबद्ध 1 5 11
यस्मिन् वैरानुबन्धेन 8 22 6
यस्याहमनुगृह्णामि 10 88 8
युवयोरेव नैवायं 10 46 42
युवां न नः सुतौ साक्षात् 10 85 18
यूयं द्विजाग्रया बत भूरि 12 12 55
यूयं नृलोके बत भूरि 7 10 48
यो दोहनेऽवहनने 10 44 15
योऽन्तः प्रविश्य 4 9 6
योऽनित्येन शरीरेण 10 72 20
योषित् संगात् यथा पुंसः 3 31 35

र - ल

लब्ध्वा सुदुर्लभमिदं 11 9 29
लोके व्यवायामिषमद्यसेवा 11 5 11

व

वत्सान् मुंचन् क्वचिद 10 8 29
वन्दे नन्दव्रजस्त्रीणां 10 47 63
वाणी गुणानुकथने 10 10 38
वासुदेवकथा-प्रश्नः 10 1 16
विजयरथकुटुंब 1 9 39
वित्तैषणां यज्ञदानैः 10 84 38
विद्याबुद्धि-रविद्यायां 4 2 24
विपदः सन्तु नः शश्वत् 1 8 25
विप्राद्द्विषड्गुणयुतात् 7 9 10
विप्रान् स्वलाभसन्तुष्टान् 10 52 33
विरुद्धशीलयोःप्रभ्वोः 10 88 2
विस्रष्टुं नैव शक्नुमः 10 47 50
वृष्णीनां प्रवरो मन्त्री 10 46 1
वैरेण पूतपाप्मानः 7 1 28
व्यालालयद्रुमावेते 4 22 11

श

शापप्रसादयोरीशा 10 88 12
शास्त्रेष्वियानेव 4 22 21
शिवापदेशो ह्यशिवो 4 2 15
शिश्नोदर-कृतोद्यमैः 3 31 32
शुचौ विविक्त आसीनः 2 1 16
शुश्रूषोः श्रद्दधानस्य 1 2 16
शृण्वतां स्वकथां कृष्णः 1 2 17
श्रवणाद्दर्शनाद्ध्यानात् 10 23 33
,, 10 29 7
श्रवणं कीर्तनं विष्णोः 7 5 23
श्रुत्वा गुणान् भुवन 10 52 37

स

सकृद् यद्दर्शितं रूपं 1 6 23
स गोदोहनमात्रं 1 4 8
सङ्गो यः संसृतेर्हेतुः 3 2 55
सत्यव्रतं सत्यपरं 10 2 26
सत्यं विधातुं निजभृत्य 7 8 18
स एव भूतो मे जठरेण 3 33 4
सन्तं समीपे रमणं 11 8 30
सन्निकर्षो हि मर्त्यानां 10 84 31
सपदि सखिवचो निशम्य 1 9 35
सर्वे स्वमुख्य वत्सेन 4 18 26
सर्वं विष्णुमयं जगत् 10 13 19
सर्वं संपद्यते देवि 8 17 20
स वै पुंसां परो धर्मो 1 2 6
सांकेत्यं पारिहास्यं 6 2 14
साक्षान्मन्मथ-मन्मथः 10 32 2
साधवो हृदयं मह्यं 9 4 68
साधूच्छिष्टं हि मे सर्वं 4 22 43
सुराकुंभमिवापगाः 6 1 18
सुलभा युधि विप्रर्षे 8 20 9
स्थानत्रयात् परं 1 18 26
स्नेहपाशमिमं छिन्धि 1 8 41
स्वनिगम-मपहाय 1 9 37
स्वप्ने प्रेतपरिष्वंगः 10 42 30
स्वयोनिषु यथा ज्योतिः 3 28 43
स्वस्त्यस्तु विश्वस्य 5 18 9

ह

हरिश्चन्द्रो रन्तिदेवः 10 72 21
हरिर्हि निर्गुणः साक्षात् 10 88 5
हिमालयं न्यस्तदण्ड 1 13 29
हृदयग्रन्थिमाहुः 5 5 8
हेमन्ते प्रथमे मासि 10 22 1

அனுபந்தம் 3

பாகவத விஷய அனுக்ரமணிகை

அ (அ)

அக்ரூர:	9	24	15
,,	10	38	—
,,	10	48	—
,,	10	57	—
அக்ஷத்யூதம் (ருக்மியும் பலராமரும்)	10	61	27
அகஸ்தியர் (1) புலஸ்தியபுத்ரர்	4	1	36
,,	8	4	10
அகஸ்தியர் (2) கும்பமுனி	6	18	5
அக்னி (1) பிரம்மபுத்திரர்	4	1	60
,, (2) தர்மப்ரஜாபதி புத்திரர்	6	6	13
அக்னிஷ்வாத்தா:	4	1	63
அக்ரபூஜை (ஸ்ரீகிருஷ்ணனுக்கு)	10	74	26
அகாஸுரன்	10	12	13
அங்கிரஸ் (பிரஜாபதி)	3	12	24
,,	4	1	35
,, (ரிஷி, வருண புத்திரர்)	6	6	17
,, (சித்ரகேதுவுக்கு உபதேசம்)	6	16	—
அஜ: (தசரதர் பிதா)	9	10	1
அஜநாபம்	5	7	3
அஜமீட:	9	21	21
அஜாதசத்ரு: (யுதிஷ்டிரர்)	1	13	30
அஜாமிள:	6	1-2	—
அஜ்ஞானம்	5	5	12
அணிமா	11	15	10
அதலம்	5	24	7
,, (வர்ணனை)	2	1	27
அத்ரி: (பிரம்மபுத்திரர்)	3	12	24
,, (புத்திரர் தத்தர் மு.)	4	1	15
,, ,,	9	14	2
அதர்வா (பிரம்ம புத்திரர்)	4	1	42
அதர்வாங்கிரஸ: (அங்கிரஸ புத்ரர்)	6	6	19

அதிதி: (தக்ஷன்புத்ரி)	6	6	25
,, (பயோவ்ரதம்)	8	16	17
அத்வைதப்ரகரணம்	7	9	30
,,	10	3	18
,,	10	14	22
,,	4	7	50
,,	4	9	33
அதர்மாம்சா: (ஸ்மய: ஸங்க:, மத:)	1	17	24
அதிரத: (புத்ர: கர்ண:)	9	23	12
அதோலோகா:	2	5	40
அனமித்ர:	9	24	12
அனஸூயா	3	24	22
,,	4	1	15
அநிருத்த:	10	61	18
,, (உஷாஹரணம்)	10	62	—
அந்தகாலே கர்த்தவ்யம்	2	1	15
அந்தர்யாமிபூஜா	3	29	21
அந்ததாமிஸ்ரம்	3	12	2
,,	3	20	18
,,	5	26	7-9
அன்னதானம்	1	12	9
அன்யதேவதோபாஸகா:	1	2	27
,,	5	9	12
,,	6	16	38
அபசகுனம்	1	14	2-20
,,	3	17	4-14
,,	10	42	27
அபாண்டவேயாஸ்திரம்	1	8	11
அப்ஸரஸ்	1	8	7
,,	3	20	38
அபிஜித் (முஹூர்த்தம்)	3	18	27
அபிமன்யு:	9	22	33
,,	3	3	17
அம்ருதம் (அமிருத மதனம்)	8	5-9	—
அம்ருதரஸகூப:	7	10	62
அம்பரீஷ:(நாபாகபுத்ரர்)	9	4	13
,, (ஸுதர்சன ஸ்துதி:)	9	5	6
,, (மாந்தாதா புத்ரன்)	9	6	38
அம்பாலிகா	9	22	21
அம்சுமான்	9	8	15

அயோமுக:	6	6	30
அரணம் (சரணம்)	8	2	34
அரிஷ்ட: (வ்ருஷபாசுரன்)	10	36	1
அருண: (விநதைமகன்	6	6	22
,, (சூர்யஸாரதி)	5	21	16
அருணு: (ருஷய:)	8	13	35
,,	1	19	11
அருந்ததீ	3	24	23
,, (ஊர்ஜா என்றும் பெயர்)	4	1	40
அர்ச்சா (ப்ரதிமா)	3	29	21
,,	4	8	54
,,	10	84	10
,,	10	86	55
,,	11	2	47
,,	11	11	42
,,	11	27	9
அர்ச்சி: (பிருதுவின் பார்யை)	4	15	2
,,	4	23	19
அர்ஜுன: (கிருஷ்ண ஸ்துதி)	1	7	22
,, (துவாரகாகமனம்)	1	12	36
,, (க்ருஷ்ணவ்ருத்தாந்த கதனம்)	1	15	—
,, (ஸுபத்ராபஹார:)	10	86	3
,, (பிராம்மணசிசு ரக்ஷணம்)	10	89	—
அர்ஜுன வ்ருக்ஷம்	10	10	23
அர்யமா	6	6	39
அலகநந்தா	4	6	24
,,	5	17	5
அலகாபுரீ	4	10	5
அவதாரங்கள் (24)	1	3	5
அவதார ப்ரயோஜனம்	1	1	13
,,	1	8	32
,,	1	10	25
,,	3	2	15
,,	3	5	16
,,	3	17	31
,,	3	24	10
அவதாரானுசரிதம் (புராண லக்ஷணம்)	2	10	5
அவதூத: (24 குருக்கள்)	11	7	24
அவந்தீ	10	45	31
அவித்யா	3	12	2

அவித்யா	3	20	18
,,	1	3	33
,,	2	6	20
அவிபக்வகஷாய:	1	6	22
அவ்யக்தம்	3	5	27
அவ்யாக்ருதம்	3	11	37
அசரீரவாக்(நாரதருக்கு)	1	6	21
,, (பரதருக்கு)	9	20	20
,, (கம்ஸனுக்கு)	10	1	34
,, (ருக்மிக்கு)	10	61	33
அச்மக:	9	9	40
அச்வத்தாமா	1	7	13
அசுவமேத: (யுதிஷ்டிரர்)	1	12	34
,, ,,	3	3	18
,, (பரீக்ஷித்)	3	16	3
,, (ப்ருது)	4	19	—
,, (அம்பரீஷன்)	9	4	13
,, (வசுதேவர்)	10	84	42
,, (மஹாபலி)	8	18	—
,, (ஸகரர்)	9	8	8
அச்வசிரா: (தத்யங் என்னும் பெயர்)	4	1	42
அச்வினிகள்	6	6	40
,, (ச்யவனருக்கு யௌவனம்)	9	3	11
,, (மாத்ரீ புத்ரர்கள்)	9	22	28
அஷ்டாங்கயோகம்	3	28	—
அஷ்டாதசபுராணனி	12	7	23
,, (5 லக்ஷணம், 10 லக்ஷணம்)	12	7	—
அஷ்டாதசஸித்தய:	11	15	—
அஸமஞ்ஜ:	9	8	15
அஸித:	3	1	22
அஸுரா: (நாமங்கள்)	6	10	19
,,	8	10	—
அஹம் (தத்வம்)	3	5	29
,,	6	25	—
,,	6	26	23
,,	2	5	24
அஹல்யா	9	21	34
அஹிர்புத்ன்ய:	6	6	18
அஹோராத்ரமானம்	5	21	4

ஆ (आ)

ஆகாச:	2	5	25
ஆகூதி: (ஸ்வாயம்புவர் புத்ரி)	4	1	1
,,	2	7	2

ஆக்ம:	11	19	17
ஆக்னீத்ர: (ப்ரியவ்ரதர் புத்ரன்)	5	1	25
ஆஜகர:	7	13	11-45
ஆததாயீ	1	7	53
ஆத்யந்திகப்ரலய:	2	4	34
ஆதித்யவ்யூஹ:	12	11	30
ஆதித்யா: (த்வாதச)	6	6	39
ஆதிதைத்ய: (ஹிரண்யாக்ஷ:)	2	7	1
ஆதிராஜ: (ப்ருது)	4	20	32
ஆதிசேஷ:	5	25	1-15
,,	6	16	30
,,	6	34	48
ஆத்யாத்மிகயோக:	3	25	13
ஆனக: (வசுதேவர் சகோதரர்)	9	24	28
ஆனகதுந்துபி: (வசுதேவர்)	9	24	29
ஆனர்த்த:	9	3	27
ஆன்வீக்ஷிகீ (வித்யா)	1	3	11
ஆயு: (ஜீவிதகால:)	1	16	10
,,	1	17	10
,,	2	1	3
,,	7	6	6
ஆயுர்வேத:	2	7	21
,,	3	12	38
,,	8	8	35
,,	9	17	4
ஆர்ஜவம்	1	16	27
ஆர்யாவர்த்த:	9	6	5
ஆவிர்ஹோத்ர: (ரிஷபபுத்திரன்)	5	4	11
,, (நிமிக்கு உபதேசம்)	11	3	43
ஆச்ரமா:	3	12	41
,,	11	18	41
,,	7	11	14
ஆச்ரய: (புராணலக்ஷணம்)	2	10	1
ஆஸனப்ரகாரா:	11	14	32
ஆஸ்திக்யம்	1	16	29
ஆஹுக: (உக்ரஸேனர் தகப்பன்)	9	24	29

இ (इ)

இக்ஷுமதீ (நதீ)	5	10	1
இக்ஷ்வாகு.	8	13	2
,,	9	1	11
இஜ்யா	3	12	37
இடஸ்பதி:	4	1	7
இதிஹாஸ புராணனி	1	4	10
,,	3	12	39
இந்த்ரலோக:	7	4	8
,,	8	15	12
இந்த்ரசத்ரு: (வ்ருத்ர:)	6	11	10
இந்த்ரஸாவர்ணி: (14-வது மனு)	8	13	33
இந்த்ரஸேன: (மஹாபலி)	8	22	13
இந்த்ரியாணி	2	1	29
,,	3	6	12
,,	2	3	20
,, (அபிமானின:)	2	5	30
,, (உத்பத்தி:)	2	1	29
,, (ஜயம்)	5	1	17
இராவான்	9	22	32
இலா (ஸுத்யும்னன்)	9	1	16

ஈ (ई)

ஈசகதா (புராண லக்ஷணம்)	2	10	5
ஈசாவாஸ்யம் (மந்த்ரார்த்தம்)	8	1	9-16
ஈசித்வம் (ஸித்தி:)	11	15	15
ஈச்வராஸ்தித்வம்	4	21	26

उ (உ)

உக்ரஸேன: (கம்ஸன் பிதா)	9	24	21
,,	10	45	12
உச்சை: ச்ரவா:	8	8	3
உதாம்ருதத்வஸ்யேசான:	2	6	17
உத்க்ரமணம்	2	2	19
,,	4	4	25
,,	4	23	13
உத்தம: (ஸுருசி புத்ரன்)	4	8	9
,, ,,	4	10	3
,, (மூன்றாவது மனு)	5	1	28
உத்தமப்ராயச்சித்தம்	6	1	11-
,,	6	2	13-
,,	6	3	24-
உத்தர: (விராடபுத்ரன்)	1	16	2
உத்தரா (விராடபுத்ரீ)	3	3	17
உத்தராயணம்	5	21	3-

உத்தானபாத:	4	1	9
,,	4	8	—
உதங்க:	9	6	22
உத்தவ: (கோகுலம்)	10	46	—
(தத்வோபதேசம்)	11	6	41-
,, (கிருஷ்ணஸ்துதி)	11	29	3
,, (விதுரஸம்வாதம்)	3	2-4	—
,,	3	4	1
,, (பதரிகாகமனம்)	3	4	32
,, ,,	11	29	47
உபரதி: (அலம் புத்தி:)	1	16	27
உபவேதா:	3	12	28
உபஸ்தம்	2	6	8
,,	2	10	26
உருக்ரம: (வாமன:)	6	6	39
,,	6	18	8
உர்வசீ	9	14	16
,,	9	15	1
,,	9	14	36
,,	11	26	14
,,	11	4	15
,,	6	18	5
உஷா (பாணாஸுர புத்ரீ)	10	62	63

ஊ (ऊ)

ஊதய: (புராண லக்ஷணம்)	2	10	4
ஊர்ஜஸ்வதீ (தேவயானியின் தாய்)	5	1	24
,,	5	1	34
ஊர்த்வபாஹு: (ரிஷி)	8	5	3
ஊர்த்வ ரேதஸ: (ஸநகாதியர்)	4	8	1

ஏ (ए)

ஏகாதசம் மன்வந்தரம்	8	13	24
ஏகாதசருத்ரா:	6	6	16
ஏகாந்தின: (பக்தா:)	3	15	18
,,	6	9	48
,,	7	10	11
,,	8	3	20
,,	9	2	11-13
,,	10	16	27
,,	11	20	34
,,	12	10	19

ஐ (ऐ)

ஐராவத:	8	8	4
ஐலகீதா	11	26	—
ஐச்வர்யம் (குண:)	1	16	28
,, (அணிமாதய:)	11	19	27

ஓ (ओ)

ஓஜ: (குண:)	1	16	29
,,	2	5	26
,,	2	10	15
ஓஷத்ய:	3	6	18

ஔ (औ)

ஔத்தரேய:	1	17	40
ஔர்வ:	1	19	10
,,	9	8	8

க (क)

கம்ஸ:	9	24	24
,, (பத்னிகள்)	10	50	1
,, (காலநேமி அம்சம்)	10	51	42
,, (தேவகியைக் கொல்ல முயற்சி)	10	1	35
,, (அக்ரூரன்தூது)	10	36	27
,, (வதம்)	10	44	34
,, ,,	3	3	1
ககுத்ஸ்த:	9	6	12
கக்ஷீவான்	1	9	7
கச: (ப்ருஹஸ்பதி புத்ரன்)	9	18	22
கண்டு: (ரிஷி)	4	30	13
கண்வ:	9	20	6
கத்ரு	6	6	22
கபில:	2	7	3
,,	3	23	—
,, (தத்வோபதேச:)	3	25-33	—
,, (ஸகரபுத்ரர்கள் பஸ்மம்)	9	8	10
கபோததம்பதி கதா	11	7	53
கயாது: (ஹிரண்யகசிபு பார்யை)	6	18	12
,, (நாரத ஆசிரம வாஸம்)	7	7	12
கரபாஜன: (நிமிக்கு உபதேசம்)	11	5	20

க்ருதாதிபதி: (பௌண்ட்ரகோ வாஸுதேவ:)	10	66	1
கர்ண:	9	23	13
கர்த்தம:	3	12	27
,, (தேவஹூதி விவாஹம்)	3	22	15
,, (9 பெண்கள்)	3	23	47
,, (கபிலர் பிறப்பு)	3	24	26
,, (பகவத் ஸ்துதி:)	3	21	13
,,	3	24	27
கர்மநிந்தா	4	25	3
,,	4	29	47
,,	5	5	5
,,	5	24	23
,,	6	5	11
,,	16	16	60
,,	7	7	28
,,	8	24	47
,,	10	23	9
,,	10	40	23
,,	11	5	6
,,	11	14	11
,,	11	18	12
,,	11	20	9
கர்மயோகம்	11	20	—
கலாபக்ராம:	9	12	6
,,	12	2	37
கலி:	1	16	4
,,	1	17	28
,,	1	15	36
,,	12	2	29
,,	1	18	8
,,	12	2	1
,, (யுகதர்மம்)	12	3	30-
,, (ஒருகுணம்)	12	3	51
கல்கி:	12	2	16
கல்ப:	12	4	2
கல்மாஷபாத; (ஸௌதாஸன்)	9	9	18
கச்யப:	4	1	13
,,	6	6	25
காத்யாயனீ வ்ரதம்	10	22	—
காமகிரி:	5	19	16
காமதேனு:	8	8	1
காமருபம் (ஸித்தி)	11	15	21
காலநேமி:	10	51	42
காலாக்னிருத்ர:	2	10	43

காளிந்தீ (க்ருஷ்ண பத்னீ)	10	58	17
,,	10	83	11
காலிய: (நாக:)	2	7	28
,,	3	2	31
,,	10	16	17
காவேரீ (நதீ)	5	19	18
,,	10	79	14
காவ்ய: (சுக்ராசார்யர்)	7	5	1
கிந்நரா:	3	20	45
கிம்புருஷா:	3	20	45
குசேலோபாக்யானம்	10	80-81	—
குடீசக:	3	12	43
குந்தீ	9	22	27
,, (ப்ருதா)	9	24	30
,, (க்ருஷ்ண ஸ்துதி:)	1	8	18-43
,, (அக்ரூரஸம்வாதம்)	10	49	7
,, (வாசுதேவ ஸம்வாதம்)	10	82	19
குபேர:	4	1	36
,,	9	2	33
,,	5	12	2
குமாரா: (ஸநகாதய:)	2	6	11
,,	2	7	5
கும்பகர்ண:	4	1	37
,,	9	10	18
குரா:	5	16	26
குரு:	9	22	4
குருக்ஷேத்ரம்	1	10	34
,,	9	22	4
குலிங்கமிதுன கதா	7	2	50
குவலயாபீட:	10	46	2
கூர்ம: (அவதார:)	1	3	16
,,	2	7	13
,,	5	18	29
,,	8	5	9
க்ருகலாஸ: (ந்ருகஸ்ய ஜன்ம)	10	64	43
க்ருதம் (ப்ரதமம் யுகம்)	12	2	24
,,	12	3	18
க்ருப:	9	21	35
,,	8	13	15
,,	1	16	3
க்ருபீ	9	21	36
,,	1	7	47

க்ருஷ்ண:			
(அவதாரகதா)	1	3	23
,, ,,	2	7	26
,, ,,	3	2-3	—
,, ,,	10	3	1-8
,, (பரீக்ஷித்ரக்ஷணம்)	1	8	14
,, ,,	1	12	7
,, (தத்கதாச்ரவணம்)	1	5	26
,, (த்வாரகாகமனம்)	1	10	7
,, ,,	1	12	36
,, கர்ப்பஸ்துதி:)	10	2	26
,, (வஸுதேவ ஸ்துதி:)	10	3	13
,, (தேவகீஸ்துதி:)	10	3	24
,, (நலகூபரர்)	10	10	28
,, (ப்ரஹ்மஸ்துதி:)	10	24	1
,, (இந்த்ரஸ்துதி:)	10	27	4
,, (அக்ரூரஸ்துதி:)	10	38	40
,, (முசுகுந்தஸ்துதி:)	10	51	46
,, (பூதனாவத:)	10	6	2
,, (சகடாஸுரவத:)	10	7	—
,, (மருத்பக்ஷணம்)	10	8	32
,, (யமலார்ஜுனபங்க:)	10	9	10
,, (பகாஸுரவத:)	10	11	—
,, (அகாஸுரவத:)	10	12	—
,, (வத்ஸாபஹரண கதா)	10	13	—
,, (கோபீவஸ்த்ராபஹரணம்)	10	22	—
,, (யஜ்ஞபத்னீ உபாக்யா)	10	23	—
,, (கோவர்த்தனோத்தரணம்)	10	25	—
,, (ராஸக்ரீடா)	10	29-33	—
,, (அக்ரூராகமனம்)	10	36	—
,, (கம்ஸவத:)	10	44	—
,, (த்வாரகா நிர்மாணம்)	10	50	—
,, (ருக்மிணீ கல்யாணம்)	10	52-54	—
,, (ஸத்யபாமா-ஜாம்பவதீ)	10	56	—
,, (காளிந்தீ)	10	58	—
,, (நரகாஸுரவத:)	10	59	—
,, (கார்ஹஸ்த்யம்)	10	69	—
,, (அக்ரபூஜா)	10	74	—
,, (குசேல:)	10	80-84	—
,, (உத்தவகீதா)	11	6-29	—
,, (வைகுண்ட கமனம்)	1	15	34
,, ,,	3	2	11
,, ,,	4	3	23
,, ,,	11	30	28
,, ,,	11	31	5
க்ருஷ்ணவேணீ (க்ருஷ்ணாநதீ)	5	19	18
கைலாஸ:	5	16	27
,,	4	6	9
கௌசிகீ (நதீ)	5	19	18
கௌஷாரவ: (மைத்ரேய:)	2	10	49
,,	3	4	26
கௌஸ்துப:	8	8	5
க்ரியாத்வைதம்	7	15	64
க்ரியாயோக:	11	27	—
,,	1	5	34
,,	12	11	—
க்ரியா சக்தி:	2	5	24
க்ரோத: (தத்தோஷா:)	1	18	29
,,	4	11	37
,,	4	7	31
க்ஷண: (காலவிசேஷ:)	3	11	7
க்ஷத்ரிய: (தத்வ்ருத்தி:)	7	11	14
,, (லக்ஷணம்)	7	12	—
,, ,,	11	17	—
க்ஷீரஸாகர:	8	5-9	
க்ஷேத்ரஜ்ஞ:	1	13	54
,,	2	2	16

க (ख)

ககோள:	4	9	20
,,	4	12	39
,,	5	20	43
,,	5	21	24
கட்வாங்க:	9	9	41
,,	2	1	13
காண்டவம் (வனம்)	10	58	25
,,	10	71	45
,,	1	15	8

க (ग)

கங்கா (நதீ தேவதா ச)	9	22-	19
,, ,,	4	1	14
,, (பூமாவதரணம்)	5	17	—
,, (மாஹாத்மியம்)	1	8	2
,,	1	18	21
,,	1	19	5-6
,,	3	5	40
,,	3	16	9
,,	4	21	31
,,	8	18	28
,,	8	21	4
,,	9	9	3-5
,,	10	41	15
,,	10	70	44
,, பரீக்ஷித: ப்ராயோப)	1	3	43
,, ,,	1	4	10
,, (ஜாஹ்னவீ)	9	15	3
கங்காத்வாரம்	3	5	1
கங்காஸாகரஸங்கம:	10	79	11
கஜேந்த்ர:	8	4	6
,, (பகவத்ஸ்துதி:)	8	3	—
,, (மோக்ஷணம்)	2	7	15
,, ,,	3	19	35
,, ,,	11	4	18
,, (கதா)	8	1	30
கண்டகீ (நதீ)	10	79	11
கந்தர்வா:	3	10	27
கயா (க்ஷேத்ரம்)	10	79	11
கருட:	6	6	22
,,	10	17	11
,,	3	21	34
,,	8	3	32
கர்க்க:	9	21	1
,,	10	8	1-
கர்ப்ப:	3	31	1
காண்டவம்	1	7	16
,,	1	9	15
,,	1	15	13
காதி:	9	15	4-
,,	9	16	28
காந்தாரீ	1	8	3
,,	1	9	48
கிரிவ்ரஜ: (ராஜதானீ)	10	72	16
குணத்ரய வ்ருத்தய:	11	25	—
குணவைஷம்யம்	3	10	14
குதம்	3	6	20
,,	2	6	9
குரு:	11	3	21
,,	11	7	20
,,	11	9	31
க்ருஹஸ்தாச்ரம:	3	12	42
,,	7	12	11
,,	7	14	2
,,	7	15	—
,,	10	70	4
,,	11	17	38
,,	11	18	43
,,	5	14	32
கோகர்ணம்	10	79	19
கோதானம்	9	4	33
கோதாவரீ	5	19	18
கோபீ (வஸ்த்ராபஹரணம்)	10	22	—
,, (பகவத்ஸ்துதி:)	10	29	31-
,, (உத்தவேன ஸம்வாத:)	10	47	—
,, (க்ருஷ்ண ஜ்ஞானோபதேசம்)	10	82	40
கோபிகாகீதம்	10	31	—
கோலோக:	10	27	1
கோவர்த்தன:	2	7	32
,,	3	2	33
,,	10	25	19-
க்ரீஷ்மருதுவர்ணனம்	10	18	1-

க (घ)

கடோத்கச:	9	22	30
க்ருதாசீ	9	20	3
க்ராணம்	3	6	2
,,	3	26	44

ச (च)

சக்ஷு:	3	6	15
,,	2	6	3
சதுர்த்தசம் மன்வந்தரம்	8	13	33
சதுர்யுக வர்ணம்	3	11	18
சதுர்விதோ லய:	12	4	—
சதுர்விம்சதி குரு கதா	11	7-9	—
சது: ஷஷ்டி கலா:	10	45	36
சந்த்ரபாகா (நதீ)	5	19	18
சாக்ஷுஷ: (மனு:)	8	5	7

சாணூர:	10	43	31
சதுராச்ரமதர்மா:	7	12-	3
,,	11	17	—
சாதுர்வர்ண்யம்	7	11	13
,,	2	1	37
,,	2	5	37
,,	3	6	30
சாதுர்ஹோத்ரம்	3	12	35
சித்ரகூட:	5	19	16
,,	5	20	15
சித்ரகேது:	6	14	28
,,	6	15	27
,,	6	16	28
,,	6	17	4
சித்ரலேகா (உஷாயா: ஸகீ)	10	62	14
சித்ராங்கத:	9	22	20
ச்யவன: (ரிஷி:)	9	3	2-
ச்சாயா (விவஸ்வதோ பார்யா)	6	6	41

ஜ (ज)

ஜடபரத:	5	9	—
,,	5	10-14	—
ஜனக:	9	13	13
ஜனமேஜய:	9	22	35
,,	12	6	16
ஜன்மம்ருத்யுகதனம்	11	22	36
ஜமதக்னி:	9	15	11
,,	9	16	9
,,	9	16	24
ஜம்பூத்வீப:	5	16	19
ஜயவிஜயௌ	3	15	12
,,	7	1	39
ஜயத்ரத:	9	21	22
ஜராஸந்த:	9	22	8
,,	3	3	10
,,	10	72	—
,,	10	50	—
ஜஹ்னு:	9	22	4
ஜாம்பவதீ	10	56	32
,,	10	83	10
ஜாம்பவான்	8	21	8
,,	10	56	14
ஜீவ:	1	3	32
,,	8	5	24
,,	1	7	5
ஜீவ:	2	5	14
,,	2	10	12
,,	3	12	46
,,	11	10	—
,,	3	30	12
ஜைமினி:	1	4	21
,,	12	6	53
ஜ்ஞானசக்தி:	2	5	24
ஜ்ஞானயோக:	11	28	—
ஜ்யேஷ்டா	1	17	32
தக்ஷக: (ஸர்ப்ப:)	12	6	11
தத்வானி (ஸ்ருஷ்டி:)	2	5	22
,,	3	5	26
,,	3	6	2
,,	3	26	20
,,	3	5	38
தப: (மஹிமா)	1	13	50
,,	2	9	22
,,	3	12	18
,,	4	8	71
,,	5	5	1
,,	6	4	13
,,	11	17	37
தம: (குண:)	1	2	23
,,	2	4	5
தம:(அவித்யாஸ்ருஷ்டி:)	3	10	17
தாபத்ரயம்	1	5	32
தாமஸாஹங்கார:	2	5	24
,,	3	5	31
தாம்ரபர்ணீ	4	28	35
,,	5	19	18
,,	10	79	16
தாரா (ப்ருஹஸ்பதேர்-பார்யா)	9	14	4
திதிக்ஷா (குண:)	1	16	27
,,	11	19	36
திலோத்தமா	12	11	43
தீர்த்தயாத்ரா (விதுர:)	3	1	17
,, (பரசுராம:)	9	15	41
,, (பலராம:)	10	78	—
துங்கபத்ரா	5	19	18
தும்புரு:	1	13	37
துலஸீ	1	19	6
,,	2	3	23
த்ருணாவர்த்த:	10	7	18
தைஜஸாஹங்கார:	2	5	24
,,	3	5	30

த்ரஸத்தஸ்யு:	9	7	4
த்ரிகாலஜ்ஞத்வம் (ஸித்தி:)	11	15	28
த்ரிபவித்ராணி	3	13	25
த்ரிபுராஸுரா:	7	10	53
த்ரிவிக்ரம:	8	20	21
,,	2	7	18
த்ரிசங்கு:	9	7	5
த்ரேதாயுகதர்மம்	12	3	20
த்வஷ்டா	6	6	39

த (द)

தக்ஷ: (ஸ்வாயம்புவ மன்வந்தரே)	3	12	13
,,	4	1	11
தக்ஷ: (சாக்ஷுஷ மன்வந்தரே)	4	30	48
,,	6	4-6	—
தக்ஷஸாவர்ணி:	8	13	18
தக்ஷிணா	4	1	3
,,	2	7	2
தத்த: (தத்தாத்ரேய:)	4	1	15
,,	1	3	11
,,	2	7	4
,,	9	15	17
ததீசி: (தத்யங்)	4	1	42
,,	6	9	52
,,	6	10	1
தனு: (கச்யபஸ்ய பார்யா)	6	6	29
தந்தவக்த்ர:	9	24	37
,,	10	77	37
,,	10	78	1
தந்தவக்த்ரமோக்ஷம்	10	78	10
தமகோஷ:	9	24	29
,,	7	1	17
தசப்ரஜாபதய:	3	12	21
தசரத:	9	10	1
,, (புத்ரீ சாந்தா)	9	23	7
தசவித: ஸர்க்க:	3	10	14
தானம்	3	3	27
,,	11	19	37
திதி:	6	6	25
,,	3	14-18	—
திலீப:	9	9	2
தீர்க்கஸத்ரம்	1	1	21
துர்க்கா	10	2	6
துர்யோதனன்	9	22	26
துர்யோதனன்	10	57	26
,,	10	68	—
,,	10	75	—
,,	1	7	13
,,	3	1	14
துர்வாஸா:	4	1	15
,,	8	5	16
,,	9	4	35
துஷ்யந்த:	9	20	7
,,	9	23	17
து:ஸ்வப்னனி	10	42	26
தூரதர்சனம் (ஸித்தி:)	11	15	20
தேவா: (பகவத்ஸ்துதி:)	3	19	30
,,	4	1	56
,,	6	9	21
,,	4	9	9
,,	11	6	7
தேவா: (அஸுரைர் யுத்தம்)	8	10	—
,,	8	15	—
தேவக: (ஆஹுகஸ்ய புத்ர:)	9	24	21
தேவகீ	9	24	23
,,	10	1	—
,,	9	24	54
,,	10	2	4
,,	10	2	18
,,	10	3	24
,,	10	85	29
தேவயானீ	9	18	6
தேவல:	6	6	20
,,	1	7	45
,,	8	4	3
தேவஸர்க்க:	3	10	27
தேவஹூதி:	3	12	55
,,	3	22-33	—
தேவாபி:	9	22	12
,,	12	2	7
தைனந்தின: ஸர்க்க:	3	11	25
தௌஷ்யந்தி:	9	20	27
த்ரவ்யசக்தி:	2	5	24
த்ரவ்யாத்வைத:	7	15	65
த்ருபத:	9	22	2
த்ரோணாசார்ய:	1	7	4
,,	3	3	14
த்ரௌபதி	9	22	2
,,	9	23	28

த்ரௌபதி	1	7	15
,,	1	15	50
,,	10	83	—
த்வாதசாதித்யா:	6	6	39
த்வாபரயுகதர்மா:	12	3	22
த்வாரகா (நிர்மாணம்)	10	—	—
த்விபரார்த்த:	3	11	37
தனஞ்ஜய: (அர்ஜுன:)	1	7	50
,,	1	9	3
,,	1	15	33

த (ध)

தனுர்வேத:	3	12	38
தன்வந்தரி:	8	8	31
,,	1	3	17
,,	9	17	4
தர்ம: (ப்ரஜாபதி:)	3	12	25
,,	4	1	49
,,	8	1	15
,,	6	6	4
தர்ம: (புண்யகர்மாபிமானீ தேவ:)	1	17	24
,,	1	16	18
,,	1	17	17
,,	3	12	35
தாரணா	1	9	31
,,	2	1	18
,,	2	2	8
த்ருதராஷ்ட்ர:	9	22	24
,,	1	13	18
த்ருதி: (ஜிஹ்வோபஸ்தஜய:)	11	19	36
த்ருஷ்டகேது:	9	24	38
த்ருஷ்டத்யும்ன:	9	22	3
தேனுக:	10	15	20
தௌம்ய:	1	9	2
த்யானம்	2	1	19
,,	2	2	8
,,	2	9	16
,,	3	8	23
,,	3	15	38
,,	3	21	9
,,	4	7	20
,,	4	8	44
,,	8	6	3
,,	8	10	54
,,	10	3	9
,,			
த்யானம்	10	21	5
,,	10	23	22
,,	11	11	46
,,	12	9	22
த்யானயோக:	11	14	31
த்ருவ:	4	8	8
த்ருவமண்டலம்	4	9	20
,,	5	23	1

ந (न)

நகுல:	9	22	28
நக்ஷத்ரமண்டலம்	5	22	11
நந்த:	10	5	20
,,	10	8	86
,,	10	26	—
,,	10	28	—
,,	2	7	31
,,	10	34	—
நந்தீச்வர:	4	2	20
,,	4	5	17
நபக:	8	13	2
,,	9	1	12
,,	9	4	1
நமுசி:	6	10	19
,,	8	11	19
நர: (தர்மப்ரஜாபதே: புத்ர:)	1	2	4
,,	2	7	6
,,	4	1	52
நரகா:	3	30	24
,,	5	26	—
நரகாஸுர:	10	59	21
,,	1	10	29
,,	2	7	34
,,	3	3	6
நரநாராயணௌ	1	3	9
,,	2	7	6
,,	4	1	52
,,	12	8	40
நரஸிம்ஹ:	1	3	18
,,	2	7	14
,,	7	8	—
,,	5	18	8
,,	7	9	—
நளகூபரமணிக்ரீவௌ	10	9	23
,,	10	10	—
நவவித: ஸர்க்க:	3	10	13

நவவிதா பக்தி:	7	5	23
நஹுஷ:	7	17	1
„	9	18	1
நாக்னஜிதீ	10	61	13
நாபாக:	9	4	13
நாபி:	5	2	19
„	1	3	13
„	2	7	10
நாரத:	3	12	23
„	1	6	30
„	1	4	32
„	1	5	8
„	1	6	6
„	7	15	69
„	4	8	25
„	4	25	29
„	6	5	5
„	1	13	37
„	7	1	10
„	6	15	27
„	5	19	10
„	10	37	10
„	10	70	37
„	10	1	62
„	10	36	16
நாராயண: (மூலரூபீ)	1	2	26
„	2	10	10
நாராயண: (ப்ராதா நர:)	1	3	9
„	2	7	6
„	11	4	6
நாராயணவர்ம	6	8	—
நாராயணாஷ்டாக்ஷரீ	6	8	6
நாமமகிமை	1	5	11
நிமி:	9	6	4
„	9	13	1
„	11	2	14
நிர்ருதி: (பாபாபிமானீ அஸுர:)	3	12	26
நிர்க்குணம்	2	6	39
„	3	7	2
நிலாயனக்ரீடா (க்ருஷ்ணஸ்ய)	10	37	26
நிவாதகவசா:	5	24	30
ந்ருக:	9	1	12
„	10	64	—
நைமித்திகோ லய:	12	4	1
நைர்க்குண்யம்	2	1	7

ப (பு)

பஞ்சஜன: (அஸுர:)	3	3	2
„	10	45	40
பஞ்சபர்வாணி (அவித்யாயா பாகா:)	3	12	2
பண்டித: (பந்த மோக்ஷவித்)	11	19	41
பதஞ்ஜலி:	6	15	14
பத்மகோசோத்பத்தி:	3	8	14
„	3	10	5
„	3	20	16
பயோவ்ரதம்	8	16	25
பரகாயப்ரவேச:	11	15	23
பரமஹம்ஸா:	1	4	31
„	1	8	20
பரமாணு: (கால:)	3	11	5
பரசுராம:	3	3	20
„	2	7	22
„	9	15-16	—
பரார்த்த:	3	11	33
பராசர:	1	4	14
„	1	19	9
„	2	7	45
பரிக்ரஹ:	11	9	1
பரீக்ஷித்	1	16	2
„	9	22	33
„	1	3	42
„	1	8	14
„	3	3	17
„	3	12	7
„	3	15	38
„	3	16	3
„	3	17	28
„	3	18	24
„	4	6	12
பர்வத: (தேவரிஷி:)	1	9	6
பாகண்ட: (மதவிசேஷ:)	4	19	26
பரஞ்சஜன்ய:	1	11	2
„	4	9	4
பாஞ்சாலீ	1	7	38
பாண்டு:	9	22	25
பாத்மகல்ப:	3	8	11
பாரமஹம்ஸ்யம்	2	9	17
பாரிஜாத:	8	6	—
„	3	5	—
பார்ஷதா; „ (ஜயோ விஜயச்ச)	3	16	2

த்ரௌபதி	1	7	15
,,	1	15	50
,,	10	83	—
த்வாதசாதித்யா:	6	6	39
த்வாபரயுகதர்மா:	12	3	22
த்வாரகா (நிர்மாணம்)	10	—	—
த்விபரார்த்த:	3	11	37
தனஞ்ஜய: (அர்ஜுன:)	1	7	50
,,	1	9	3
,,	1	15	33

த (ध)

தனுர்வேத:	3	12	38
தன்வந்தரி:	8	8	31
,,	1	3	17
,,	9	17	4
தர்ம: (ப்ரஜாபதி:)	3	12	25
,,	4	1	49
,,	8	1	15
,,	6	6	4
தர்ம: (புண்யகர்மாபி-மானீ தேவ:)	1	17	24
,,	1	16	18
,,	1	17	17
,,	3	12	35
தாரணை	1	9	31
,,	2	1	18
,,	2	2	8
த்ருதராஷ்ட்ர:	9	22	24
,,	1	13	18
த்ருதி: (ஜிஹ்வோபஸ்த-ஜய:)	11	19	36
த்ருஷ்டகேது:	9	24	38
த்ருஷ்டத்யும்ன:	9	22	3
தேனுக:	10	15	20
தௌம்ய:	1	9	2
த்யானம்	2	1	19
,,	2	2	8
,,	2	9	16
,,	3	8	23
,,	3	15	38
,,	3	21	9
,,	4	7	20
,,	4	8	44
,,	8	6	3
,,	8	10	54
,,	10	3	9
த்யானம்	10	21	5
,,	10	23	22
,,	11	11	46
,,	12	9	22
த்யானயோக:	11	14	31
த்ருவ:	4	8	8
த்ருவமண்டலம்	4	9	20
,,	5	23	1

ந (न)

நகுல:	9	22	28
நக்ஷத்ரமண்டலம்	5	22	11
நந்த:	10	5	20
,,	10	8	86
,,	10	26	—
,,	10	28	—
,,	2	7	31
,,	10	34	—
நந்தீச்வர:	4	2	20
,,	4	5	17
நபக:	8	13	2
,,	9	1	12
,,	9	4	1
நமுசி:	6	10	19
,,	8	11	19
நர: (தர்மப்ரஜாபதே: புத்ர:)	1	2	4
,,	2	7	6
,,	4	1	52
நரகா:	3	30	24
,,	5	26	—
நரகாஸுர:	10	59	21
,,	1	10	29
,,	2	7	34
,,	3	3	6
நரநாராயணௌ	1	3	9
,,	2	7	6
,,	4	1	52
,,	12	8	40
நரஸிம்ஹ:	1	3	18
,,	2	7	14
,,	7	8	—
,,	5	18	8
,,	7	9	—
நளகூபரமணிக்ரீவௌ	10	9	23
,,	10	10	—
நவவித: ஸர்க்க:	3	10	13

நவவிதா பக்தி:	7	5	23
நஹுஷ:	7	17	1
,,	9	18	1
நாக்னஜிதீ	10	61	13
நாபாக:	9	4	13
நாபி:	5	2	19
,,	1	3	13
,,	2	7	10
நாரத:	3	12	23
,,	1	6	30
,,	1	4	32
,,	1	5	8
,,	1	6	6
,,	7	15	69
,,	4	8	25
,,	4	25	29
,,	6	5	5
,,	1	13	37
,,	7	1	10
,,	6	15	27
,,	5	19	10
,,	10	37	10
,,	10	70	37
,,	10	1	62
,,	10	36	16
நாராயண: (மூலரூபீ)	1	2	26
,,	2	10	10
நாராயண: (ப்ராதா நர:)	1	3	9
,,	2	7	6
,,	11	4	6
நாராயணவர்ம	6	8	—
நாராயணஷ்டாக்ஷரீ	6	8	6
நாமமகிமை	1	5	11
நிமி:	9	6	4
,,	9	13	1
,,	11	2	14
நிர்ருதி: (பாபாபிமானீ அஸுர:)	3	12	26
நிர்க்குணம்	2	6	39
,,	3	7	2
நிலாயனக்ரீடா (க்ருஷ்ணஸ்ய)	10	37	26
நிவாதகவசா:	5	24	30
ந்ருக:	9	1	12
,,	10	64	—
நைமித்திகோ லய:	12	4	1
நைர்க்குண்யம்	2	1	7

ப (प)

பஞ்சஜன: (அஸுர:)	3	3	2
,,	10	45	40
பஞ்சபர்வாணி (அவித்யாயா பாகா:)	3	12	2
பண்டித: (பந்த மோக்ஷவித்)	11	19	41
பதஞ்ஜலி:	6	15	14
பத்மகோசோத்பத்தி:	3	8	14
,,	3	10	5
,,	3	20	16
பயோவ்ரதம்	8	16	25
பரகாயப்ரவேச:	11	15	23
பரமஹம்ஸா:	1	4	31
,,	1	8	20
பரமாணு: (கால:)	3	11	5
பரசுராம:	3	3	20
,,	2	7	22
,,	9	15-16	—
பரார்த்த:	3	11	33
பராசர:	1	4	14
,,	1	19	9
,,	2	7	45
பரிக்ரஹ:	11	9	1
பரீக்ஷித்	1	16	2
,,	9	22	33
,,	1	3	42
,,	1	8	14
,,	3	3	17
,,	3	12	7
,,	3	15	38
,,	3	16	3
,,	3	17	28
,,	3	18	24
,,	4	6	12
பர்வத: (தேவரிஷி:)	1	9	6
பாகண்ட: (மதவிசேஷ:)	4	19	26
பாஞ்சஜன்ய:	1	11	2
,,	4	9	4
பாஞ்சாலீ	1	7	38
பாண்டு:	9	22	25
பாத்மகல்ப:	3	8	11
பாரமஹம்ஸ்யம்	2	9	17
பாரிஜாத:	8	6	—
,,	3	5	—
பார்ஷதா;			
,, (ஜயோ விஜயச்ச)	3	16	2

பார்ஷதா:			
,, (ஸுநந்தநந்தகௌ)	4	12	23
,, (குமுதாதய:)	8	21	15
,, (ருத்ரஸ்ய)	4	4	4
,, ,,	5	13	20
,, ,,	6	6	17
பிங்கலா	11	8	22
பிதர:	3	20	43
,,	6	6	19
பிபாஸா	2	10	17
பிப்பலாத:	1	19	10
,,	2	7	15
பிப்பலாயன:	5	4	11
,,	11	2	21
,,	11	3	35
பிப்பலாயனி:	12	7	2
பிசாசா:	3	20	40
பும்ஸவனவ்ரதம்	9	6	26
புஞ்ஜிகஸ்தலீ	12	8	26
,,	12	11	34
புண்யதேசா:	7	14	27
,,	11	5	38
புரஞ்ஜன:	9	6	12
புரந்தர:	8	13	4
புராணனி	12	7	22
,,	2	10	1
,,	12	13	—
புருகுத்ஸ:	9	6	38
புருஷஸூக்தார்த்த கதனம்	1	3	4
,,	2	6	—
புருஷாவதார:	1	3	1
புரூரவஸ்	9	15	1
,,	11	26	—
புலஹ:	3	12	24
,,	4	1	38
புலஹாச்ரம:	10	79	10
புலஸ்த்ய:	3	12	24
,,	4	1	36
புஷ்பகம்	9	10	45
புஷ்பதந்த: (பார்ஷத:)	8	21	17
பூஜாவிதி:	11	3	49
,,	11	27	—
,,	10	6	2
பூதனா	3	31	9
பூர்வஜாதிஸ்மர:	5	3	—
,,	9	8	16
,,	9	24	30
ப்ருதா (குந்தீ)			

ப்ருது:	4	15	1
,,	2	7	9
ப்ருச்னிகர்ப்ப:	10	3	32
பைல:	1	4	21
,,	12	6	52
போஷணம் (பகவதோனுக்ரஹ:)	2	10	4
பௌண்ட்ரக:	10	66	11
பௌரோஹித்யம்	6	7	34
ப்ரக்ருதி-குண:	1	2	23
ப்ரக்ருதி-புருஷ-விவேக:	3	26	27
,,	11	22	—
ப்ரசேதஸ:	4	24	13
,,	6	4	4
ப்ரஜாபதய:	3	12	22
,,	2	3	2
,,	2	6	28
ப்ரணிதானம்	1	6	20
ப்ரதர்த்தன:	9	17	6
ப்ரதிமா (பூஜா)	3	29	21
,,	4	9	54
,,	7	14	29
,,	9	4	30
,,	10	84	10
,,	10	86	55
,,	11	2	47
,,	11	3	50
,,	11	11	42
,,	11	27	9
ப்ரத்யக்ஷப்ரமாணம்	11	19	17
ப்ரத்யும்ன:	10	55	1
,,	10	56-57	—
ப்ரபாஸ:	3	3	25
,,	11	6	35
,,	1	15	49
ப்ரமாண சதுஷ்டயம்	11	19	17
ப்ரயாக:	10	79	10
ப்ரலய:	3	11	27
,,	8	24	32
,,	12	4	3
,,	12	9	—
ப்ரஸூதி:	4	1	1
ப்ரஹ்லாத:	6	18	12
,,	7	4	30
,,	3	14	44
,,	7	5-8	—
,,	8	23	6
,,	1	3	11

ப்ராக்ருதிகோ லய:	12	4	4
ப்ராக்ருத: ஸர்க்க:	3	10	13
ப்ராணயாம:	11	14	34
,,	2	2	15
,,	4	8	44
ப்ராணோத்க்ரமணம்	2	2	19
,,	4	4	24
,,	3	30	18
ப்ராய: (ப்ராயோபவேசனம்)	1	19	5
ப்ராயச்சித்தம்	3	12	37
,,	6	1	7
ப்ரியவ்ரத:	4	1	1
,,	5	1	11
,,	3	12	55

ப (फ)

பால்குனமாஸ:	12	11	40
பேனபா: (வானப்ரஸ்தாவாந்-தர ப்ரபேத:)	3	12	43

ப (ब)

பக:	10	11	47
பகீ (பூதனா)	3	2	23
பதரீ	11	29	41
பப்ருவாஹன:	9	22	32
பர்ஹிஷத் (ப்ராசீனபர்ஹிஸ்)	4	24-25	
	9	24	46
பலராம: ,, (ஆதிசேஷாவதாரத்வம்)	10	2	5
,, (ரேவத்யா-விவாஹ:)	9	3	36
,,	10	52	25
,, (துர்யோதன-கதா வித்யா)	10	57	26
	10	67	—
,, (த்விவிதவத:)	10	78	11
,, (தீர்த்தயாத்ரா)	11	30	26
,, (தேஹத்யாக:)	6	18	16
பலி: (மஹாபலி:)	8	11	46
,,	8	13-23	
,,	10	85	39
,,	5	24	18
,,	1	3	19
,,	2	7	18
,,			

பஹ்வநாமேகபத்னீ (ப்ரசேதஸாம்)	4	30	16
,,	6	4	16
,, (அக்னிஷ்வாத்தாதி)	4	1	63
,, (த்ரௌபதி)	9	22	27
பாண:	10	63	20
,,	3	3	11
பிந்துஸர:	3	21	35
புத்தாவதார:	1	3	24
,,	2	7	37
ப்ருஹஸ்பதி:	4	1	34
,,	6	7	2
,,	9	20	36
,,	9	14	4
,,	8	13	31
,,	9	18	22
,,	3	3	2
ப்ரஹ்மா	3	8	15
,,	2	6	35
,,	3	9	1
,,	10	2	26
,,	7	8	40
,,	3	12	52
,,	3	13	15
,,	4	6	8
,,	5	1	11
,,	7	3	18
,,	10	13	—
,,	11	6	21
ப்ரஹ்மசாரீ (தத்தர்மா:)	7	12	1
ப்ரஹ்மஹத்யா	6	9	4
,,	6	13	10
,,	12	6	61
ப்ரஹ்மாண்டம்	2	5	34
,,	2	10	10
,,	3	6	1
,,	3	20	14
,,	3	11	39
,,	10	14	11
,,	11	16	39
ப்ராஹ்மண: (மாஹாத்ம்யம்)	3	14	41
,,	3	22	2
,,	4	21	36
,,	4	22	46
,,	5	5	23
,,	5	13	23
,,	7	14	41

ப்ராஹ்மணா:			
(மாஹாத்ம்யம்)	10	52	33
,,	10	64	32
,,	10	89	18
,,	7	11	13
,,	11	17	40
,,	4	2	26
,,	1	7	48

ப (भ)

பக்தி:	1	2	22
,,	2	1	21
,,	3	25	28
,,	7	5	23
,,	4	9	10
,,	2	3	10
பகவான்			
(ஸ்வரூபவர்ணனம்)	1	12	8
,,	2	9	14
,,	3	15	38
,,	4	7	20
,,	8	6	3
,,	10	39	45
,, (தாந்த்ரிகபூஜா)	11	3	49
,, (ஸ்தூலரூபம்)	2	1	24
,, (உபாஸனு)	2	2	8
பகீரத:	9	9	2
பத்ரகாலீ	5	9	12
பரத:			
(துஷ்யந்தஸ்ய புத்ர:)	9	20	7
பரதவர்ஷம்	5	17	11
,,	5	19	7
,,	5	7	3
பரத்வாஜ:	9	20	35
பஸ்மாஸுர:			
(வ்ருகாஸுர:)	10	88	—
பாகவதம்	1	4	14
,, (தசலக்ஷணி)	2	9	43
,, (விஷயானுக்ரமணீ)	12	12	3
,, (தத்ப்ரசம்ஸா)	1	1	2
,, ,,	1	3	40
,, ,,	1	5	8
,, ,,	2	1	8
,, ,,	12	4	40
,, ,,	12	12	57
பாரதம்	1	4	25
பாரதம்	1	5	3
,,	3	5	12
பார்க்கவ: (சௌனக:)	1	10	35
,,	3	10	3
பிக்ஷுகீதா	11	23	—
பீமஸேன:	9	22	29
,,	10	72	44
பீஷ்ம: (தேவவ்ரத:)	9	22	19
,,	1	9	1
பீஷ்மக:	10	52	21
பூ: (பூதேவீ)	10	1	17
,,	3	13	16
,,	10	59	25
,,	1	16	18
,,	1	17	26
பூகோளம்	3	11	39
,,	3	23	43
,,	5	1	30
,,	5	16	4
,,	5	17	—
,,	5	20	—
பூதபிசாசா: (ஸ்ருஷ்டி:)	3	20	40
ப்ருகு:	3	12	23
,,	3	24	23
,,	4	1	43
,,	4	2	27
,,	5	17	—
,,	7	30	—
,,	6	18	4
பௌமஸ்வர்க்க:	5	17	11
ப்ரமரகீதா	10	47	12

ம (म)

மத்ஸ்யாவதார:	1	3	15
,,	1	15	35
,,	2	7	12
,,	8	24	—
மதுரா	9	11	4
,,	1	15	39
,,	10	41	20
மதுரா			
(பாண்ட்ய-ராஜதானீ)	10	79	15
மன:ப்ரஸாத:	2	1	19
மனோஜய:	11	15	21
மந்த்ரம்			
(த்வாதசாக்ஷரீ)	4	8	54
,, (அஷ்டாக்ஷரீ)	6	6	6

மந்த்ரம்(ஷடக்ஷரமந்த்ரம்	6	6	10
,, (ஹயக்ரீவமந்த்ரம்)	5	18	2
,, (ந்ருஸிம்ஹமந்த்ரம்)	5	18	—
,, (ருத்ரமந்த்ரம்)	5	17	17
மந்த்ர:	5	6	11
,,	8	6	33
,,	1	3	16
மன்வந்தராணி	3	11	14
மய:	10	58	27
,,	1	15	8
,,	5	24	16
மரணம்	3	10	12
,,	4	28	15
,,	3	30	19
,,	10	42	27
மரீசி:	3	12	22
,,	4	1	13
மருத:	6	18	23
மலய: (பர்வத:)	5	19	46
,,	10	79	16
மஹாபுருஷ லக்ஷணம்	12	11	1
மஹாமோஹ:	3	12	2
,,	3	20	15
மாண்டவ்ய:	3	5	20
மாத்ரீ (பாண்டுவின் மனைவி)	9	22	28
மாந்தாதா	9	6	25
,,	2	7	44
மார்க்கண்டேய:	4	1	45
,,	12	8-10	
,,	12	9	8
,,	12	10	—
மார்த்தாண்ட:	5	20	44
மித்ரவிந்தா (க்ருஷ்ணபத்னீ)	10	58	30
,, ,,	10	83	15
,, ,,	10	61	16
மித்ராவருணௌ	6	18	5
மிதிலா	9	13	13
முக்தி:	12	10	1
முசுகுந்த:	9	6	38
,,	10	51	14
,,	10	57	46
,,	10	52	4
,,	2	7	44
முர: (நரகாஸுரஸ்ய ஸகா)	10	59	6
,, ,,	3	3	11
முஷ்டிக:	10	44	24
முஸலஸ்ய உற்பத்தி:	11	1	17
ம்ருத்யு: (யம:)	1	16	8
,,	10	1	38
மேனகா	12	11	35
,,	9	20	13
மோக்ஷ:	2	10	6
,,	10	51	20
,,	2	3	10
மோஹின்யவதார:	1	3	17
,,	8	8	41
,,	8	9	17
,,	8	12	—
மௌஸலகதா	3	4	1
,,	11	30	14

ய (य)

யஜ:	1	4	20
,,	12	6	52
,,	12	6	61
யஜ்ஞ:	3	12	34
,,	11	19	39
,,	4	25	7
,,	2	6	22
யஜ்ஞ: (விஷ்ணோரவதார:)	4	1	3
,,	1	3	12
,,	2	7	2
,,	8	1	18
யஜ்ஞபுருஷ:	1	5	38
,,	2	7	11
யஜ்ஞவராஹ:	5	18	35
யதாஸங்கல்பஸித்தி.	11	15	26
யது:	9	18	33
,,	9	23	20
,,	11	7	24
யதுவம்சக்ஷய:	1	15	22
,,	11	1	—
யம:	6	6	40
,, (விதுரத்வேன ஜனனம்)	3	5	20
,, (பகவன்மாஹாத்ம்ய கதனம்)	6	6	12
,, (தத்வோபதேச:)	7	2	27
யமதூதா:	6	1	32
,,	6	3	4
,,	3	30	19

யமலார்ஜுனபங்க:	2	7	27
யமீ (யமுனா)	6	6	40
,,	5	19	18
யயாதி:	9	18	3
,, (தஸ்யவைராக்ய ப்ராப்தி)	9	19	—
யசோதா	10	8	48
,,	10	3	51
,,	10	7	36
யாஜ்ஞவல்க்ய:	12	6	62
யுக்மச்லோககீதம் (கோபீபி:)	10	35	2
யுதிஷ்டிர:	1	8	6
,,	1	9	48
,,	1	8	46
,, (மஹாப்ரஸ்தானம்)	1	15	44
,, (நாரதஸம்வாத:)	7	1	15
,, (க்ருஷ்ணஸ்துதி:)	10	74	2
யோக:	1	13	51
,,	1	15	41
,,	1	18	25
,,	2	1	6
,,	2	2	15
,,	3	25	13
,,	3	27	6
,,	4	4	24
,,	4	8	43
,,	4	9	2
,,	4	12	17
,,	5	6	6
,,	6	2	40
,,	7	15	30
,,	10	87	33
,,	11	9	11
,,	11	14	32
,,	11	20	6
யோகதாரணயா தேஹத்யாக:	4	4	24
,,	4	23	13
யோகமாயா (துர்க்கா)	10	2	6
,,	3	15	26
யௌவனாச்வ:	9	7	1

ர (र)

ரகு:	9	10	1
,,	2	7	44
ரந்திதேவ:	9	21	2
,,	1	12	24
ரந்திதேவ:	2	7	44
ரம்பா	12	11	36
ராஜஸூய:	10	74-	75
,,	1	9	41
,,	3	2	13
ராஜாதிதேவீ (புத்ரௌ விந்தானுவிந்தௌ; புத்ரீ மித்ரவிந்தா)	10	58	31
ராம:	9	10	3
,,	1	3	22
,,	2	7	23
,,	5	19	3
ராவண:	4	1	37
,,	7	1	35
,,	9	15	21
ராஸக்ரீடா	10	30-34	
ராஹு:	6	6	37
,,	8	9	25
ராஹுமண்டலம்	5	24	1
ருக்மவதீ	10	61	18
ருக்மிணீ	10	52	21
,,	10	86	8
,,	10	60-61	
ருக்மீ	10	54	—
ருத்ர:	3	12	6
,,	3	14	23
,,	4	5	10
,,	4	1	65
,,	8	7	21
,, (தன்மாஹாத்ம்யம்)	4	2	2
,, ,,	4	3	11
,, ,,	4	4	11
,, ,,	4	5	10
,, ,,	4	6	32
,, ,,	4	7	14
,, ,,	4	24	17
,, ,,	9	9	19
,, ,,	10	88	3
,, (தன்மந்த்ரம்)	5	17	17
,, (விஷபானம்)	8	7	18
,, (மோஹினீதர்சனம்)	8	12	24
,, ,,	9	4	5
,, (பஸ்மாஸுரகதா)	10	88	14
ருத்ரகீதம்	4	24	19
ருத்ரா: (ஏகாதசருத்ரா:)	6	6	17
ரேணுகா	9	15	12

ரேணுகா	9	16	2
ரேவதீ (பலராமஸ்ய பார்யா)	9	3	36
ரைவத:	5	1	40
ரோமபாத:	9	23	7
ரோமஹர்ஷண:	1	4	22
,,	10	78	22
ரோஹிணீ	9	24	46
ரோஹித:	9	7	9

ல (ள)

லக்ஷ்மண:	9	10	3
லக்ஷ்மணா (க்ருஷ்ண பத்னீ)	10	58	57
,, ,,	10	86	—
லக்ஷ்மணா (துர்யோதன புத்ரீ)	10	68	—
லயசிந்தன-ப்ரகார:	1	15	41
லயப்ரகரணம்	11	24	20
லவ:	9	11	11
லவண:	9	11	14
லுப்தக குலிங்க-மிதுனகதா	7	20	36

வ (வ)

வஜ்ரம் (இந்த்ரஸ்யாயுதம்)	6	10	1
வஜ்ர: (அநிருத்தஸ்யபுத்ர:)	10	90	37
,, (பட்டாபிஷேக:)	1	15	39
வடபத்ரசாயீ	12	9	20
வராஹ:	1	3	7
,,	2	7	1
,,	3	13	18
,,	3	18	19
வராஹகல்ப:	3	11	36
வராஹமந்த்ர:	5	18	35
வருண:	6	18	4
,,	6	18	4
,,	8	13	18
,,	3	17	26
,,	10	28	5
வர்ண:	7	11	—
வர்ஷருதுவர்ணனம்	10	18	4
,,	10	20	3
வஷட்	12	7	38
வஸிஷ்ட: (ப்ரஹ்மபுத்ர:)	3	12	20
வஸிஷ்ட: (ப்ரஹ்மபுத்ர)	4	1	40
,,	4	30	48
த்விதீயம் ,, (ப்ரஹ்மண: யஜ்ஞ குண்டாஜ்ஜாத:) இக்ஷ்வகுவம்ச புரோஹித:) ,, (த்ருதீயம் ஜன்ம கும்பாத். புத்ரா: சக்தி ப்ரப்ருதய:)	6	18	5
வஸு: (வஸவ:)	6	6	11
,,	2	3	3
வஸு: (உபரிசர:)	9	22	5
வஸுதேவ:	9	24	28
,,	10	1	29
,,	10	85	48
,,	10	3	—
,,	10	45	28
,,	10	84	42
,,	11	2	4
வஸோர்த்தாரா	6	6	13
வஸ்த்ராபஹார:	10	22	—
வஹ்னி: (வாகபிமானீ தேவ:)	2	6	1
,,	2	10	19
வாஜஸனீ	12	6	73
வாதாபி:	6	18	15
வானப்ரஸ்த:	3	12	43
,,	7	12	17
,,	11	18	1
வாமன: (அவதார:)	6	18	8
,,	2	7	17
,,	8	18-	19
வாயஸம் தீர்த்தம்	1	5	10
வாருணீ	8	8	30
வார்க்ஷீ	5	30	13
,,	6	4	15
வாலகில்யா: (வானப்ரஸ்த)	3	12	43
,, (ருஷய:)	4	1	39
,, ,,	5	21	17
வால்மீகி:	6	18	5
,,	9	11	10
வாஸுகி:	8	7	1
விசித்ரவீர்ய:	9	22	21
விஜ்ஞானாத்மா	1	13	54

,,	3	5	27
விதுர:	9	22	25
,,	3	5	20
,,	1	13	15
,, (உத்தவேன ஸஹ ஸம்வாத:)	3	1	6
,, (மைத்ரேயேண ஸஹ ஸம்வாத:)	3	5	—
,, (தேஹத்யாக:)	1	15	49
வித்யாதரா:	3	20	44
விநதா	6	6	21
விந்த்யாவலி:	8	20	—
,,	6	18	17
,,	10	63	20
விப்ரசித்தி:	6	6	31
,,	6	18	13
விபீஷண:	4	1	37
,,	9	10	32
,,	2	7	45
விபூதய:	11	16	10
விராட்புருஷ:	3	6	4
,, (த்யானப்ரகார:)	2	1	24
,, (விபூதிகதனம்)	1	3	30
,, ,,	2	6	—
விரோசன:	6	18	16
,,	8	19	14
விவஸ்வான்	6	6	38
,,	8	13	8
விச்ரவா:	4	1	36
,,	9	2	32
விச்வகர்மா	6	6	15
விச்வரூப:	6	6	44
,,	6	7	27
,,	6	9	1
விச்வரூபம்	2	1	23
,,	2	5	35
,,	2	6	1
,,	2	10	13
,,	4	9	13
,,	8	20	21
,,	10	7	36
,,	10	8	37
,,	10	40	13
,,	10	63	35
,,	11	16	10
,,	12	11	5
விச்வாமித்ர:	9	16	28
,,	9	20	13

விச்வே தேவா:	6	6	7
விஷ்ணு தூதா:	6	1	30
,,	6	2	2
விஷ்ணுபார்ஷதா: (ஜயவிஜயாதய:)	8	21	16
,,	2	9	14
விஷ்ணுராத: (பரீக்ஷித்)	1	12	16
விஷ்வக்ஸேந:(அவதார:)	8	13	23
,, (பார்ஷத:)	8	21	16
வீரபத்ர:	4	5	1
வ்ருத்தி:	3	12	42
வ்ருத்ர:	6	9-	14
வ்ருஷபர்வா	6	6	31
வ்ருஷ்ணி:	9	23	29
வேங்கட: (பர்வத:)	10	79	13
வேணுகீதம்	10	21	—
வேத:	3	12	34
,,	1	3	21
,,	1	4	19
,,	12	6	49
வேதவ்யாஸ:	1	3	21
,,	1	4	14
,,	2	7	36
,,	12	6	49
,,	1	5	5
,,	1	7	8
,,	8	13	15
,,	2	4	24
வேதசாகா	1	4	23
வேன:	4	13	18
,,	4	14	2
,,	4	15	1
வைகாரிகாஹங்கார:	2	5	24
,,	3	5	30
வைகாரிக: (அவதார:)	8	5	4
,, (லோக:)	8	5	5
,, ,,	2	9	9
	3	15	72
	10	28	14
	10	88	25
வைவஸ்வத:	1	3	15
வைசம்பாயன:	1	4	21
,,	12	6	52
,,	12	7	5
வைச்வானரமார்க்க:	2	2	24

ச (श)

சகடாஸுரவத:	10	7	4
சகுந்தலா	9	20	13
சக்தி: (வஸிஷ்ட ஸ்ய புத்ர:)	4	1	40
சங்கசூட:	2	7	33
,,	10	34	25
சதரூபா	3	12	53
சதானந்த:	9	21	34
சத்ருக்ன:	9	10	3
சனைச்சர:	6	6	41
,,	5	22	13
சந்தனு:	9	2	12
,,	9	21	36
சபலாச்வா:	6	5	4
சமீக: (தத்புத்ர: ச்ருங்கீ)	1	18	—
சம்பர:	6	6	30
,,	10	55	3
சம்பலக்ராம:	12	2	16
சம்யாப்ராஸ: (ஸரஸ்வத்யா: பச்சிம தீரஸ்த: வ்யாஸாச்ரம பூதோ பதரிகாச்ரம:)	1	7	2
சரத்கால வர்ணனம்	10	20	32
சர்மிஷ்டா	6	6	32
,,	9	18	6
சாந்தா (தசரதஸ்ய புத்ரீ)	9	23	8
சால்வ:	10	77	10
சிபி:	9	23	3
,,	1	12	20
,,	2	7	4
சிசுபால:	9	24	39
,,	10	74	46
,,	7	1	13
சிச்ந:	2	6	8
,,	2	10	26
,,	3	6	19
,,	3	12	26
சீலம்	1	16	29
சுக:	1	2	2
,,	1	4	4
,,	1	19	25
,, (பகவத்ஸ்துதி:)	2	4	12
,, (பாகவதா த்யாபனம்)	1	7	—
,, (ஸ்த்ரீபும்பிதாபாவ:	1	4	5
சுக்ர:(பார்யா ப்ரியவ்ரத புத்ரீ ஊர்ஜஸ்வதீ)	5	22	12
,, (புத்ரௌ சண்டா மர்க்கௌ)	7	5	1
,, (மஹாபலி:)	8	19	30
சுத்த்யசுத்திகதனம்	11	21	10
சுந:சேப:	9	7	21
,,	9	16	30
சூர:	9	24	27
சூர்ப்பணகீ	9	10	4
ச்ருங்கீ	1	18	32
சோணிதபுரம்	10	62	4
சௌசம்	1	16	27
,,	1	17	24
,,	11	19	38
சௌனக:	1	1	4
,,	1	4	1
,,	12	8	3
ச்ராத்த தேவ:	6	6	40
,,	8	13	2
,,	9	1	11
ஸ்ரீ: (மஹாலக்ஷ்மீ:)	4	1	43
,,	3	16	30
,,	8	8	8
,,	3	15	21
,,	5	18	18
ஸ்ரீதாமா	10	15	20
ஸ்ரீரங்கம்	10	79	14
ஸ்ரீசைல:	1	19	16
,,	10	79	13
ச்ருததேவா (தத்புத்ரோ தந்தவக்த்ர:)	9	24	30
ச்ருதிகீதா	10	87	—
ச்வபல்க:	9	24	15

ஷ (ष)

ஷஷ்டம் மன்வந்தரம்	8	5	7
ஷோடசஸஹஸ்ர மஹிஷ்ய:	10	59	33
,,	10	83	40
,,	3	2	7

ஸ (स)

ஸம்ஜ்ஞா (விவஸ்வதோ பார்யா)	6	6	40

,,	8	13	8
ஸந்யாஸ:	11	19	38
ஸந்யாஸிதர்மா:	7	12	6
,,	7	13	1
,,	1	18	22
,,	3	21	31
,,	3	22	19
,,	11	18	12
ஸகர:	9	8	4
,,	5	19	29
,,	2	7	44
ஸங்கர்ஷண: (வ்யூஹ:)	5	17	16
,,	5	16	29
,,	10	39	44
,,	5	25	1
,, (பலராம:)	9	24	54
ஸஞ்ஜய:	3	13	31
ஸதீ	4	1-	4
ஸத்யபாமா	10	56	44
,,	10	83	9
ஸத்யவதீ (வேதவ்யாஸஸ்ய மாதா)	1	3	21
,,	1	4	14
,, ,,	2	7	36
,, (ரிசீகஸ்ய பார்யா)	9	15	5
ஸத்யவ்ரத: (த்ரிசங்கு:)	9	7	5
ஸதியவ்ரத: (ராஜர்ஷி:)	8	24	10
ஸத்ராஜித் (தத்புத்ரீ ஸத்யபாமா)	9	24	12
,,	10	55	1
,,	10	57	3
ஸத்ஸங்கமஹிமா	11	12	26
ஸதஸத்	2	5	5
,,	2	6	41
ஸநக:	3	12	4
,,	4	8	1
,,	3	15	46
,,	7	1	36
,,	11	13	17
ஸநத்குமார: ,, (ப்ருதவே ஞானோபதேச:)	4	22	—
ஸநத்குமார: (பகவதவதார:)	1	3	6
,,	2	7	5
ஸந்த: (தேஷாம் லக்ஷணம்)	3	52	21

ஸந்த்யா	3	20	28
,,	3	14	22
,,	3	18	26
ஸப்தத்வீபா:	7	1	31
ஸப்தர்ஷய:	8	13	5
ஸப்தர்ஷிமண்டலம்	5	22	17
ஸமாதி:	1	5	13
ஸரமா (இந்த்ர தூதி)	5	24	30
ஸரஸ்வதீ	1	4	15
,,	1	7	2
,,	3	21	6
,,	2	9	14
,,	3	1	21
,,	5	20	10
ஸர்க்க:	2	10	—
,, நவவித:	3	10	13
ஸர்ப்ப ஸத்ரம்	12	6	13
ஸாக்ஷாத் பசுயஜ்ஞஸ்ய நிந்தா	7	16	7
ஸாக்ஷிண:	6	1	42
ஸாங்க்யம்	1	3	10
,,	2	1	6
,,	3	25-	28
,,	7	7	22
,,	9	8	14
,,	11	20	22
,,	11	23	12
,,	11	23	48
,,	11	24	2
ஸாங்க்யாயன:	3	8	8
ஸாத்யகி:	9	24	13
,,	1	10	18
ஸாத்வதஸம்ஹிதா	1	7	6
ஸாத்வததந்த்ரம்	1	3	8
ஸாத்வதா:	1	14	28
,,	2	4	14
ஸாந்தீபினி:	10	45	31
,,	3	3	2
ஸாம்ப:	10	61	11
,,	10	68	—
,,	11	1	4
,,	3	1	30
ஸாவர்ணி: (விவஸ்வத: புத்ர:)	6	6	41
,, (அஷ்டமோ மனு:)	8	13	11
ஸீதா	9	13	18
,,	9	10	7

ஸீதா	9	11	10
ஸீரத்வஜ:	9	13	17
ஸுகன்யா	9	3	2
ஸுதபா:	10	3	32
ஸுதர்சனம் (சக்ரம்)	5	24	1
,,	1	8	13
,,	9	5	3
ஸுதாமா (மாலாகார:)	10	41	43
ஸுத்யுமன:	9	1	22
ஸுதர்மா	1	41	34
ஸுநந்த:	2	9	14
,,	4	12	20
ஸுநீதி:	4	8	8
,,	4	12	32
ஸுபத்ரா	9	24	55
,,	9	22	33
,,	10	86	1
,,	1	01	9
ஸுமந்து:	12	6	53
,,	1	4	22
ஸுருசி:	4	8	8
,,	4	10	3
ஸுவர்ணம் (கலிஸ்தானத்வம்)	1	17	38
ஸுஷும்ந	2	2	24
ஸூத:	1	1	6
,,	1	2	2
,,	1	3	—
,,	1	7	12
ஸூர்ய: (ஜடபரத ஸ்தோத்ரம்)	5	7	14
,, (ரதவர்ணனம்)	5	21	13
,, (யாஜ்ஞவல்க்யஸ்து)	12	6	27
,,	12	73-	74
,,	12	11	30
ஸூர்யவம்ச:	9	1	3
ஸூர்யோபராக வர்ணனம்	10	82	—
ஸ்ருஷ்டி:	3	10	—
,,	9	1	8
,,	2	5	21
,,	3	5	23
,,	11	24	—
ஸேது: (ராமஸேது:)	9	10	16
,,	10	79	15
ஸைந்தவ: (ஜயத்ரத:)	1	15	16
ஸோம:	4	1	15

ஸோம:	9	14	2
,,	6	6	23
,,	2	3	9
ஸௌதாஸ:	9	9	18
ஸௌபரி:	12	6	56
,,	9	6	39
,,	10	17	9
,,	2	7	45
ஸ்கந்த:	6	6	14
ஸ்தம்பனம்	11	15	25
ஸ்த்ரீ (தத்ஸங்கினும் நிந்தா)	3	31	32
,,	5	5	2
,,	6	18	29
,,	7	6	17
,,	8	9	9
,,	9	9	50
,,	11	8	7
,, (தத்தர்மா:)	7	11	25
ஸ்ம்ருதி: (குண:)	1	16	28
ஸ்யமந்தக: (மணி:)	10	56	1
ஸ்யமந்தபஞ்சகம்	9	16	19
ஸ்வச்சந்தம்ருத்யு:	11	15	7
ஸ்வாதந்த்ர்யம்	1	16	28
ஸ்வாயம்புவ:	3	12	53
,,	4	8	7
,,	3	12	54
,,	8	1	9

ஹ (ह)

ஹம்ஸ: (பகவதவதார:)	10	2	40
,, (ஸங்க்யாஸாவாந்தர பேத:)	3	12	43
,, (ப்ரஹ்மபுத்ர:)	4	8	1
ஹம்ஸகுஹ்யம்	6	4	22
ஹம்ஸா:	1	5	10
ஹனுமான்	5	19	1
,,	2	7	45
,,	9	10	19
ஹயக்ரீவ:	2	7	11
,,	5	18	2
,,	7	9	37
ஹரி: (பகவதவதார:)	2	7	15
,,	8	1	30
ஹரிச்சந்த்ர:	9	7	7
ஹரிஹரயோரைக்யம்	4	7	50

ஹார்யச்வா:	6	5	3
ஹாஸ்தினபுரம்	9	21	20
,,	9	22	40
,,	10	68	41
ஹிமவான்	5	16	9
,,	4	7	58
ஹிரண்யகசிபு:	3	2	20
,,	3	15	2
,,	7	1-8	—
,,	8	19-	8
ஹிரண்யநாப: (பூர்வம் க்ஷத்ரியோ பூத்வா பச்சாத் ப்ராஹ்மண்யம் ப்ராப்த:)	9	12	3
,,	9	21	28
,,	12	5	77
,,	6	15	15
ஹிரண்யாக்ஷ:	3	17	2
,,	3	15	2
,,	7	1	37
,,	7	2	19
,,	8	19	5
,,	3	17	26
,,	3	18	2
,,	3	13	32
ஹூஹூ:	8	4	3
ஹ்ருதயக்ரந்தி:	1	2	21
ஹ்ருஷீகேசமந்த்ர:	5	18	18

ஆசிரியர் அண்ணா உரை எழுதிய
மற்ற ஸம்ஸ்க்ருத நூல்கள்

நாகரத்திலும் தமிழிலும் மூலம், பதவுரை பொழிப்புரைகளும், விளக்க உரையும், குறிப்புகளும்.

உபநிஷத் ஸாரம்

(i) **ஈச-கேன-கட-உபநிஷதங்கள்**
பக்கம் 150 ரூ. 1-75 காலிகோ ரூ. 2-50

(ii) **ப்ரச்ன-முண்டக-மாண்டூக்ய-ஐதரேய உபநிஷதங்கள்**
பக்கம் 172 ரூ. 1-75 காலிகோ ரூ. 2-50

(iii) **தைத்திரீய உபநிஷத்து**
பக்கம் 92 ரூ. 1-00 காலிகோ ரூ. 1-50

(iv) **சாந்தோக்ய-ப்ருஹதாரண்யக உபநிஷத்துக்களின் ஸாரம்**
பிரம்ம ஸூத்ரத்துடன்
(இரண்டாவது பதிப்பு)
பக்கம் 302 ரூ. 3-00

தைத்திரீய மந்த்ரகோசம் (மூலம்)
தை. உபநிஷத்து, ருத்ரம், சமகம், ஸூக்தங்கள், ஸ்வரத்துடன்
பக்கம் 104 (தேவ நாகரம்) ரூ. 1-00
பக்கம் 150 (தமிழில்) ரூ. 1-50

பூஜாவிதானம் ரூ. 3-50

உபநயனம்
பக்கம் 104 ரூ. 1-00 காலிகோ ரூ. 1-50

ஸந்தியாவந்தனம்
பக்கம் 116 ரூ. 1-25 காலிகோ ரூ. 1-75

ஸ்ரீ ருத்ரம்
பக்கம் 226 ரூ. 2-00 காலிகோ ரூ. 3-00

புருஷ ஸூக்தம்
பக்கம் 80 ரூ. 1-00 காலிகோ ரூ. 1-50

ஸ்ரீமத் பகவத் கீதை
ராமகிருஷ்ண தீபம் என்னும் உரையுடன் கூடியது.
(ஐந்தாவது பதிப்பு)
பக்கம் 426 ரூ. 4-00 காலிகோ ரூ. 5-00

ஸ்ரீமத் பகவத் கீதை (பாராயண கீதை)
தமிழில் பொழிப்புரையுடன்
மூன்றாவது பதிப்பு)
பக்கம் 158 ரூ. 1-25

ஸ்ரீமத் பகவத் கீதை மூலம் (தமிழ்)
பக்கம் 84 ரூ. 0-60

ஸ்ரீமத் பகவத் கீதை வெண்பா
(முத்து ஐயர் இயற்றியது)
பக்கம் 223 ரூ. 2-00 காலிகோ ரூ. 2-50

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாஷ்யம்
(மூன்றும் பதிப்பு)
பக்கம் 190 ரூ. 2-00 காலிகோ ரூ. 2-75

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரம்
(பாராயணத்திற்குரியது)
பக்கம் 112 ரூ. 1-00 காலிகோ ரூ. 1-50

ஸ்ரீ லலிதா த்ரிசதீ பாஷ்யம்
பக்கம் 140 ரூ. 1-50 காலிகோ ரூ. 2-00

ஸ்ரீ லலிதா த்ரிசதீ ஸ்தோத்திரம் ரூ. 0-50

தேவீ மாஹாத்மியம்
பக்கம் 342 ரூ. 4-25

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்
பக்கம் 298 ரூ. 2-75 காலிகோ ரூ. 3-50

ஸௌந்தர்யலஹரீ மூலம்
பக்கம் 36 ரூ. 0-37

ஸௌந்தர்யலஹரீ பாஷ்யம்
பக்கம் 252 ரூ. 2-50 காலிகோ ரூ. 3-25

சிவானந்தலஹரீ பாஷ்யம்
பக்கம் 160 ரூ. 1-75

சிவானந்தலஹரீ மூலம் ரூ. 0-50

சிவ ஸ்தோத்திரங்கள் ரூ. 0-50

ஜபவிதானம் ரூ. 1-00

அஷ்டோத்தரசத நாமாவளிகள் ரூ. 0-60

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

மயிலாப்பூர் ஃ சென்னை-4.